JL
V2ll94:19(ऊM)m,
N39
N42
694C.1

புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலயம்:

பிரசுரம்] 1942-ம் வருஷம் மேய், 16வ. [ந. 95


பிரஸங்கம் XCV.

# தேசிய யுத்த முன்னணி.

## I

(மேன்மை தங்கிய வைஸிராய் ரேடியோ மூலம் செய்த ஒலிபரப்பு.)

இந்தியாவின் ராணுவ பலமும் விமானபலமும் தினம் விருத்தியாகி வருகிறது. ஒப்பற்ற சேனாதிபதியிடம் நம்பிக்கை வைத்து நமது படைகள் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. இணையற்ற முறையில் இவைகள் எதிரியைத்தாக்கும்.

எங்களிடம் ஆயுதம் இல்லையே என்று மீதமுள்ள பொதுமக்கள் கேட்கலாம். நாங்கள் திருப்திகரமாக எவ்விதம் நடந்து கொள்ளமுடியும் என்றும் வினவலாம். ஆனால் பொதுநன்மையை உத்தேசித்து தோளோடு தோள் கொடுத்து உழைத்தால் தான் சரியாக நடந்து கொண்டதாக ஆகும் என்றே நான் சொல்லுவேன்.

"எங்களிடம் ஆயுதமில்லையே நாங்கள் என்ன செய்யக்கூடும். கவர்ன்மெண்டார் ஆயுதத்தைக் கொடுத்தால் இந்தியப் பாதுகாப்பிற்காக முன் வருவோம்" என்றும் சிலர் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன்.

இதற்கு நான் கொடுக்கக் கூடிய பதில் இதுதான்.

1940-ம் வருஷ ஜூன் மாதத்தில் பிரிடனில் ஜனங்களிடம் ஆயுதமிருந்ததா? 1941-ம் வருஷ ஜூன் மாதத்தில் ருஷியர்கள் ஆயுதம் கொண்டிருந்தனரா? பொறுக்க முடியாத நிலைகளில் சைனாவில், சாமானியமானவர்களிடமெல்லாம் ஆயுதமிருந்ததா? இல்லை. எந்ததேசத்திலும் எவ்விதமான நவீன யுத்தத்திலும் பொதுமக்கள் ஆயுதம் தரித்ததில்லை.

எதிரி முன்னேறிக்கொண்டே போகும் போது அவனுக்குப்பின்னால் இருந்து கொண்டு அவனது ஸப்ளை முதலியவைகளைத் தடுக்கலாம். ஆனால் இதற்கும் முன்னாடியே பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

ஆயுதங்கள் கிடைத்ததும் இவ்வித யுத்தமும் செய்யப்படும். அதுவரை கொஞ்சமும் தயக்கமின்றியில் சைனியம் விருத்தி செய்யப்பட்டு வருகிறது. அவ்விதம் தயாராகும் சிப்பாய்களுக்கு எல்லாவித நவீன ஆயுதங்களும் தேவையாக இருக்கிறது.

## ஜனங்களின் உணர்ச்சி.

சரி, ஆயுதமில்லாத நாங்கள் என்ன செய்ய முடியுமென்று கேட்கலாம். இந்த சந்தர்ப்பத்தில் ஜெனரல் வேவல் என்ன சொன்னாரோ அதையே நானும் திரும்ப ஞாபகப்படுத்துகிறேன். நவீன யுத்தத்தில் வெற்றியளிக்கக் கூடிய அம்சங்களில் ஜனங்களின் உறுதியும் கட்டுப்பாடும்தான் முக்கியமானவை.

இது நம்மிருவருடைய பொறுப்பு. அதனால் தான் தேசீய யுத்த முன்னணியில் சேரும்படி அழைக்கிறேன்.

இந்த முயற்சியை எந்தப் பெயரால் அழைத்தாலும் பாதகமில்லை.

அதன் உட்கருத்து நமக்கெல்லோருக்கும் தெரியும். பூர்ணமான ஒற்றுமையும், மதம், அரசியல் வேற்றுமைகளை மறைத்துக்கொள்ளுவதும், நாம் அடையப்போகும் லக்ஷியத்தை முன்னிட்டு யாவரும் ஒன்றுபட்டு நிற்பதும், அவ்வித லக்ஷியத்திற்கு ஒருநாளும் பயமில்லை யென்று நினைப்பதும்தான்.

இந்தியாவில் யுத்த சேவை வேண்டுமென்று சொன்னால் மாத்திரம் போதாது. யாவரும் இணங்கி நடந்து கொள்ளவேண்டும்.

தேசீய யுத்த முன்னணி அடைவதற்கு இரு காரியங்கள் தேவை. ஒன்றுபடும் மனோபாவமும், காரியத்தில் ஈடுபடும் எண்ணமும் தான். இவைகளில் ஒற்றுமை ஏற்படுவதில் ஒரு சிரமமுமில்லை. எதிரிகளின் பிரசாரத்திற்கு உட்படாமல் இருந்தால் நமது லக்ஷியங்கள் மேன்மையானவை என்று யாவரும் நம்புவார்கள்.

### தேசீய யுத்த முன்னணியின் முக்கிய நோக்கங்கள்.

இந்த அணியில் சேருகிறவர்கள் பின்கண்டவைகளை முக்கிய வேலைகளாக வைத்துக்கொள்ள வேண்டும்.

1. பொது ஜனங்களுக்கிடையே கட்டுப் பாட்டை வளர்த்தல்; எதிரியை எதிர்க்கும் சக்தியை வளர்த்தல்.

2. கலவரத்தை உண்டு பண்ணக்கூடிய விதமாக பேசுகிறவர்களையும், எழுதுகிறவர்களையும், இன்னும் இதர ஐந்தாம் படையினரையும் அடக்குவது.

3. ஜனங்களிடையே நம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்த்தல்.

4. நாஜிகளையும், பாஸிஸ்டு கக்ஷியினரையும் உலகில் எந்த பாகத்திலிருந்தாலும் அடியோடு ஒழியும் வரை எதிர்க்கவேண்டுமென்ற எண்ணத்தை உண்டு பண்ணுவதும்தான்.

தங்களுடைய கொள்கைகளுக்கும் லக்ஷியங்களுக்கும் ஒருவித இடைஞ்சலு முன்னணியில் இவ்வேலையில் யாவரும் ஈடுபடலாம்.

### நீங்கள் செய்யக்கூடியது யாது?

"நானென்ன செய்யவேண்டும்"? என்று உண்மையாகவே ஒன்றும் தெரியாமல் சிலர் கேட்கின்றனர்.

இந்த யுத்தகாலத்தில் மனிதன் செய்யக்கூடியதெல்லாம் யுத்தத்திற்கு அ[illegible]த்தானும், சும்மா இருந்தால் கெடுதிதான்.

ராணுவத்தில் சேர விரும்புவோர்க்கு "உடனே ராணுவத்தில் சேருங்கள்" என்று சொல்லுகிறேன்.

மற்றவர்களுக்கு இதர துறைகளில் ஊழியம்செய்ய அவகாசம் இருக்கிறது. பொதுஜன பாதுகாப்புப் படைக்கு வார்டன்கள், டாக்டர்கள், நெருப்பு அணைக்கும் கோஷ்டிகள், நர்ஸ்கள், மற்றும் உதவியளிக்கக்கூடியவர்கள் தேவையாக இருக்கிறது. உள்நாட்டுப் பாதுகாப்புப்படைக்கு ஆட்கள் தேவையாக இருக்கிறது.

V2:1194;N(3M)m,N39 N42

69407



ஆஸ்பத்திரிகளிலும் ஆபீஸ்களிலும், துருப்புகளுக்கு சாமான்கள் அனுப்பவும் ஸ்திரீகள் தேவை. தப்பி ஓடிவருவர்களுக்கும் உதவிபுரியவேண்டியிருக்கிறது.

நமது தினசரி வாழ்க்கையை கவனிப்போம். பொருள், உணவு, உடை, மின்சாரம், பெட்ரோல், நிலக்கரி முதலியவைகளை வீணில் செலவழிக்கிறோம். இப்படிச் செய்தால் வெற்றிக்குத் தடைதான்.

தேவையில்லாத சமயத்தில் நாம் பிரயாணம் செய்து துருப்புகள், யுத்த தளவாடம் இவைகளின் நடமாட்டத்தைக் குறைக்கிறோமா, அப்படிக் குறைக்காவிடில் நமக்குத்தான் கெடுதி.

குடியானவர்கள் அதிகமாக தானியங்களை உண்டுபண்ணமுடியாதா? தொழிற்சாலையில் வேலைசெய்கிறவர்கள் அதிக உற்பத்தியில் கவனம் செலுத்தக்கூடாதா?

வெற்றியை துரிதப்படுத்தும் நோக்கமிருந்தால் பணக்காரன், ஏழை, உத்தியோகஸ்தர், குமாஸ்தா, வியாபாரி, வேலையாள், குடும்ப ஸ்திரீ, யாரானாலும் பொறுப்புடன் நடந்துகொள்ளலாம்.

தினசரி வேலைகளில் ஈடுபடுவதோடு உத்சாகமாக வெற்றியை முன்னிட்டு நடந்துகொள்ளவேண்டும். எதிரிகளின் பயமுறுத்தல்களுக்கு உட்படக்கூடாது.

இந்த யுத்தம் நடக்கும் ஒவ்வொரு நாளும் ஏராள மனிதர்களும், பொருள்களும் நஷ்டமாகும் என்பதை உணரவேண்டும். ஆகவே யுத்தத்தை சீக்கிரம் முடிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

### முன்னேறித் தாக்குதல்.

ஒற்றுமையை வளர்த்துக்கொண்டு முன்னேறிப் போர் நடத்தவேண்டும். தற்காப்புப் போரும், பின்வாங்குவதும் வெற்றியைத் தரா.

பயந்தவர்களையும், பொய் வதந்திகளைப் பரவச்செய்கிறவர்களையும் தாக்குவோம். முன்னேறிப் போர்செய்யவேண்டுமென்ற சிந்தனையிருக்கவேண்டும்.

நாம் நினைப்பவைகளெல்லாம் தர்மமாக இருந்து அவைமிஞ்சியிருந்தாலும், நமது ஆசைகள் குன்றாமல் இருந்தாலும் நமக்கு வெற்றிகிடைப்பதென்பது நிச்சயம். நேசநாடுகளிடமுள்ள சாமான்களைக் கொண்டே இந்த யுத்தத்தை ஜயித்துவிடலாம்.

நாம் வெற்றி பெறுவதற்கும், பெருமலிருப்பதற்கும் நாம்தான் காரணம். ஆகவே இந்தியாவிலும் தேசீய யுத்த முன்னணியை ஆரம்பிப்போம். இன்னும் சமயம் இருக்கிறது. கடைசியாக எனது மனைவி சமீபத்தில் சொன்ன மொழிகளுடன் நான் முடித்துக்கொள்ளுகிறேன் :—

"இந்த யுத்தத்திற்கு நீங்கள் செய்த கைங்கரியம் எப்பேர்ப்பட்டதென்று நீங்களே நினைத்துக்கொண்டு ஆறுதலடையுங்கள்."

## II

## 'தேசீய யுத்த முன்னணியில் யாவரும் இப்பொழுதே சேரவேண்டும்.'

---

இனிமேல் வரப்போகும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள இது தான் தருணம். விவேகமுள்ள மனிதர்களைப்போல் நடந்துகொண்டு உலகின்கண் இந்தியாவிற்கு புதிய புகழைச் சம்பாதித்துக்கொடுக்க இதுவே சமயம்

தேசிய யுத்த முன்னணி என்றால் என்ன?

(1) சந்தா விகிதங்களை ஏற்படுத்திக்கொண்டு வெளிப்படையாக ஸ்தாபிக்கப்படும் ஒரு சங்கமல்ல. ஆனால் மனப்பூர்வமாக மனிதர்கள் ஈடுபட்டு இந்தியாவின் கௌரவத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தி, ஸ்திரீகளையும் குழந்தைகளையும் காப்பாற்றி ஒற்றுமையை ஸ்தாபிக்கும் இயக்கமாகும்.

(2) இது ஒரு அரசியல் ஸ்தாபனமுமல்ல. அரசியலைப்பற்றியோ, அரசாங்க அமைப்பைப்பற்றியோ தனக்கு விருப்பமான எவ்விதமான அபிப்பிராயத்தையும் கொண்டிருக்கலாம். அப்படி இருந்தாலும், தேசபக்தி மாத்திரம் பெற்றிருந்தால் தேசிய யுத்த முன்னணியில் சேர்ந்துகொள்ளலாம்.

(3) இது தேசிய யுத்த சம்பந்தமான முன்னணி, அவரவர்களின் ஜாதிக்கும் மதத்திற்கும் இங்கே ஒருவித சம்பந்தமுமில்லை. இந்தியாவின் மகிமை ஓங்கி, வளமும், ஸ்வதந்திரமும் விளங்கவேண்டுமென்று நினைத்தால் தேசிய யுத்த முன்னணியில் சேர்ந்துகொள்ளலாம்.

(4) இதுவும் ஒரு போர்முனைதான். யுத்த சமயத்தில் தான் அவரவர்களின் தைரியத்தையும் ஊறுதியையும் காண்பிக்கமுடியும். இந்த தேசியப்போர் முனையில் சேர்ந்துகொள்ளுவோருக்கு பயமும், சஞ்சலமும் வேண்டியதில்லை. அவைகளுக்கு எல்லாம் தற்சமயத்தில் தேழ்வையே இல்லை.

(5) பயந்தாங்குள்ளித்தனத்தைப் போக்கடிப்பதும், பயத்தை உண்டுபண்ணும் பிரசாரத்தைப் பரவவிடாமல் தடுப்பதும், பொதுஜனங்களுக்கு தைரியத்தை நிலைநாட்டுவதும் தான் முக்கிய லக்ஷியங்கள்.

சைனாவில் ஜப்பானியர் செய்த காட்டுமிராண்டிச் செய்கைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அது மறுபடி இங்கே நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இது சம்பந்தமாக சயாங் கை ஷேக்கின் மனைவி சொல்லுவதை செவிகொடுத்துக்கேளுங்கள் :—

"எதிரியின் கொடுமைகளை நாம் தெரிந்துகொண்டவுடன் நாமும் சண்டை செய்ய நேர்ந்தது. நாம் தயாராக இல்லாமலிருப்பது என்பது உண்மைதான். யுத்தம் செய்தால் அதோடு இறப்பு முதலிய கெடுதிகள் வருவதென்பதும் நிச்சயம். ஆனால் எதிரிக்குட்பட்டால் உடல், ஆவி இரண்டிற்கும் அவஸ்தையைச் செய்யக்கூடிய அடிமைத்தனம் வரும்."

ஆகவே காட்டுமிராண்டிகளுக்கு இந்தியாவை ஒப்படைக்க நாம் தயாராக இல்லை.

உலகத்தின் கவனமே இந்தியாபேரில் செலுத்தப்பட்டிருக்கிறது. தைரியம் வாய்ந்த பெரிய மனிதர்களுடன் சேர்ந்துகொண்டு சண்டையை நடத்துகிறோம். உதாரணமாக சைனா, ருஷ்யா இவைகளின் தீரத்தைப் பாருங்கள். அந்நாட்டினரைப்போல் நாமும் நடந்துகொள்ளுவோமாக.

இவ்வித இயக்கத்தில் சேர இதுவே தருணம். ஏனென்றால் சண்டை நமது அண்டைக்கு வந்துவிட்டது. அதுதான் ஆபத்து. நாம் உறுதியுடனிருந்தால் நிச்சயம் சமாளித்து வெற்றிபெறுவோம். மார்ஷல் சயாங் கை ஷேக் சொல்லும் விதமாக 'மனித வர்க்கத்தின் வருங்காலம் தற்சமயம்தான் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கிறது.' நாம் தீர்மானத்துடனும் திடமான மனதுடனும் இருக்க வேண்டும்.

பயந்தாங்குள்ளித்தனத்தைப் போக்கடியுங்கள். கலவரத்தைச்செய்யும் திடீர் வதந்திகளை அடக்குங்கள். தாங்கள் தாக்கப்போகும் தேசத்தில் முதலில் பயத்தை உண்டுபண்ணுவதென்பது அச்சு நாட்டினரின் வழக்கம். அதற்கு நாம் இசைந்துவிடக்கூடாது. தோல்வியைப்பற்றி பேசுகிறவர்களை பகிஷ்காரம் செய்யுங்கள்.



வெற்றி பெற்று, பலனை யாவரும் அனுபவியுங்கள். நிச்சயம் நாம் ஜயம் பெறுவோம். ருஷ்யா, சைனா, அமெரிக்கா, பிரிடன், இந்தியா முதலிய நாடுகளின் உதவி நமக்கு இருக்கிறது. மனித உதவியும், சாமான்களின் உதவியும், தொழிற்சாலை உதவியும் இருக்கின்றன. நிச்சயம் நாம் ஜயிப்போம். தேசிய யுத்த முன்னணியில் சேர்ந்துகொண்டு உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்.

## III
## 'காரியாம்சையில் செய்யவேண்டியதுபற்றிய இயக்கம்.'

1. வெற்றியைமுன்னிட்டு சிக்கனமாக இருங்கள்.
2. உணவுப்பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யுங்கள்.
3. துரிதமாகவே செய்யுங்கள்.
4. வெற்றிக்காகப் பாடுபடுங்கள்.
5. யுத்த சேவையைச் செய்ய முன்வாருங்கள்.
6. வதந்திகளை அடக்குங்கள்.
7. உங்களையும் உங்களுக்குப் பக்கத்திலுள்ளோரையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

## IV
## உணவுப் பொருள்களை அதிகப்படுத்தும் இயக்கம்.

(புதுக்கோட்டை தர்பாரவர்களின் பிரஸ் கம்யூனிகே.)

இந்தியாவுக்கு உணவுப்பொருள்களை அனுப்பிவந்த வெளிநாடுகள் எதிரி வசமானதினாலோ, அல்லது கப்பல் போக்குவரத்துக் குறைவினாலோ, அல்லது பிரயாணத்தில் ஏற்படக்கூடிய அபாயத்தால் இனி அந்த நாடுகள் உணவுப் பொருள்களை அனுப்ப முடியாததினாலோ, மேற்படி நாடுகளை எதிர்பாராமல் இந்தியாவில் அதிகமான உணவுப்பொருள்களைப் பயிரிடவேண்டிய அவசியம் யுத்தத்தினால் ஏற்பட்டுவிட்டது.

சில்காலமாக ஸமஸ்தானத்தில் சாகுபடி விஸ்தீர்ணம் குறைந்துவருகிறது. விவசாயிகள் குறைவாக இருப்பதுதான் இதற்கு முக்கிய காரணமென்று தோன்றுகிறது. காலம் சுபிக்ஷமில்லாமலிருந்திருக்கலாம். ஆனால் அப்படி விபரீதமாகயிருக்கவில்லை. காலம் சுபிக்ஷமில்லாமலிருப்பது இங்கு வழக்கந்தான். இப்பொழுது அக்கரை தேசம் சென்றிருந்தவர்களில் பலர் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பி வந்திருப்பதாலும், இலங்கைக்கு கூலிகளை அனுப்புவது நிறுத்தப்பட்டுவிட்டதாலும், இங்கு விவசாயம் செய்யத் தயாராக அதிகமான ஜனங்கள் இருக்கலாம்.

தரிசு நிலங்களை அடமானம் செய்வதற்கு கவர்ன்மெண்டார் குடிஸ்வாமியம் விதிப்பதில்லை. தவிர அடமானம் செய்த முதல் வருஷத்தில் நிலத்தின் தீர்வையில் மூன்றில் ஒரு பங்கும், இரண்டாவது வருஷத்தில் மூன்றில் இரண்டு பங்குமே கவர்ன்மெண்டார் வசூலிக்கிறார்கள். பூராத் தீர்வை மூன்றாம் வருஷத்திற்கு முன் வசூலிப்பதில்லை. காலம் சுபிக்ஷமாயில்லாவிடில் நஞ்சை நிலங்களுக்கு வரி வஜா தாராளமாய் கொடுக்கப்படுகிறதென்பது உங்களுக்குத் தெரிந்ததே. இந்த யுத்தம் முடியும்வரை கவர்ன்மெண்டாரின் உத்தரவு பெற்று நீர்பாய்ச்சி புஞ்சை நிலங்களில் உணவு தான்யங்களைப் பயிரிட்டால் அவைகளுக்கு நீராணிக்கம் விதிக்கப்படமாட்டாது.

விதைகளை வாங்கின விலைக்கு விற்றோ, அல்லது நல்ல விதைகளை வாங்க கடன்கள் கொடுத்தோ விவசாயிகளுக்கு உதவி செய்ய கவர்ன்மெண்டார் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள். உரம் வாங்கவும், கேணிகள் வெட்டவும், உழவு மாடுகள் வாங்கவும், செய்நேர்த்தி செய்யவும் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பார்கள்.

டவுனில், ஓர் விவசாய நிபுணரின் பார்வையில் கவர்ன்மெண்டார் ஓர் விவசாயப் பண்ணை வைத்திருக்கிறார்கள். தவிர சுற்றுப்பிரயாணம் செய்யும் விவசாய போதகர்கள் இருவர் இருக்கின்றனர். விவசாய சம்பந்தமாகத் தேவையாயிருக்கும் யோசனைகளை குடிகளுக்கு அவர்கள் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

இந்த ஸாதனங்களைப் பயன்படுத்திக்கொண்டு இன்னும் அதிகமான நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவரவும், மிக மிக அதிகமாக உணவு தான்யங்கள், காய் கறிகள், பழவகைகள் இவைகளைப் பயிரிடவும் குடிகளுக்கு சந்தர்ப்பம் வாய்ந்து இருக்கிறது.

கடைசியாக கைக்குத்தரிசியைப்பற்றி ஓர் வார்த்தை. ஜனங்கள் மிஷின்களில் அரைத்த அரிசியையே வெகுவாக உபயோகிக்கிறார்கள். கைக்குத்தரிசியே மிகுந்த ஆரோக்கியமானதென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். மிஷின்களில் அரைத்த அரிசி சாப்பிடுவதை நிறுத்தி கைக்குத்தரிசியை உபயோகித்து ஜனங்கள் தங்கள் தேக ஆரோக்கியத்தை விருத்தி செய்துகொள்ளுவார்களென்று ஸ-தர்பார் அவர்கள் நம்புகிறார்கள்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 9—5—42-லிருந்து 15—5—42-வரை.

பர்மா.—லாஷியோ. எதிரி வசமானதிலிருந்து ஜப்பானியப் படைகள் ஸைனுவின் எல்லைப்புறத்தைக் கடந்து வான்டங், செபாங், லுங்லிங் முதலிய பட்டணங்களை நோக்கி முன்னேறிச் சென்றன. இதுவரை யுனான்மாகாணத்தில் லுங்லிங் வரை தான் முன்னேறியிருக்கின்றனர். இது சுங்கிங்கிற்கு வடகிழக்கில் 10 மைல் தூரத்திலும், பர்மா எல்லையிலிருந்து 60 மைல் தூரத்திலும் இருக்கிறது. சின்ட்வின் நதிக்கரையில் யேவு (yeu) வரையிலும் முன்னேறியிருக்கின்றன. ஷைவிபோ தாக்கப்பட்டுள்ளது. ஸால்வீன் முனையில் குங்ஷிலும் தாக்கப்பட்டுள்ளது. யேவுக்கு வடக்கே பிரிடிஷ் படைகள் பின்வாங்கியிருக்கின்றன. குறுக்கு எதிர்ப்புகளைச் செய்து செப்பாங்கையும் மெய்மோவையும் சீனர்கள் பிடித்துள்ளனர். லாஷியோவிற்கும் மாண்டலேக்கும் இடையிலுள்ள இருப்புப்பாதையையும் துண்டித்துள்ளனர். சீனர்களின் தந்திரப்படி தொடர்ந்து தாக்கி எதிரிக்கு சீர்திருத்திக்கொள்ளவும், சிரமப் பரிகாரம் செய்துகொள்ளவும் அவகாசம் கொடுக்காமல் இருப்பது தான் நோக்கம்.

மே மாதம் 10௳ சனிக்கிழமை வெளிவந்த சீன அறிக்கையிலிருந்து இவ்வாரத்திய சண்டைகள் தெரியவருகின்றன.

“லாஷியோவைப் பிடித்துக்கொண்ட பிறகு யுனான் மாகாணத்தை நோக்கி ஒரு ஜப்பானியச் சைனியம் முன்னேறியது. மற்றொன்று லாஷியோ–மாண்டலே ரஸ்தாவை ஆக்கிரமித்துக்கொள்ளச் சென்றது. அதே சமயத்தில் மாண்டலே பிரதேசங்களிலிருந்து சீனப் படைகள் பின்வாங்க முடியாமலும் செய்யப்பட்டது.

“இதற்குள்ளாக ஜப்பானியருக்குப் பின்புறமாக இருந்த சீனப் படைகள், முக்கியமாக டௌங்கியைப் பிடித்த படைகள் சண்டை செய்தன. இப்படைப் பகுதி வடக்கு நோக்கி முன்னேறி மே 6௳ லாஷியோ–மண்டலே இருப்புப்பாதையில் மெய்மியூவைப் பிடித்துக்கொண்டன. இதே சமயத்தில் யுனான் மாகாணத்தில் சீனப் படை செபாங் (Chehfang) கிற்குக்கு வடகிழக்கில் ஜப்பானியரை ஸைனுவிற்குள் பிரவேசிக்கவிடாமல் தாக்கியது.



“மெய்மியோவிலிருந்து சீனப்படை வடக்கே முன்னேறி லாஷியோவிலிருக்கும் ஜப்பானியரைப் பின்புறமாகத் தாக்கப்பார்க்கிறது. இதன் பயனாக ஜப்பானியப் படைகள் அடைபடும்போல் இருக்கிறது. இன்னும் சிலநாட்களில் ஜப்பானியப் படையே கலைக்கப்படலாம்

“பர்மா ரஸ்தாவில் போஷானிலிருந்து கிடைக்கும் தகவல்களைப் பார்த்தால் யுனானில் சீனர்களின் தாக்குதல் வெற்றிகரமாக இருக்கிறது. பர்மா ரஸ்தா வழியாக ஜப்பானியர் முன்னேறும்போது அதிக நஷ்டமடைந்தனர்.

“சீனர்களுக்கு இருபக்கங்களிலும் வந்த ஜப்பானியப் படைகளில் ஒன்று அழிக்கப்பட்டது. மற்றொன்றும் சீனப்படையைப் பிளந்துசெல்ல யத்தனித்த போது சிதறிவிட்டது.

“சீனர்கள் தங்களுடைய தாக்குதலைச் செய்தே வருகின்றனர்”.

கல்கத்தாவிலிருந்து ரெங்கூனுக்கு முன்பு இருந்த விமான மார்க்கத்திலுள்ள அக்யாப்பில் ஜப்பானியப் படைகள் பிரவேசித்தன. இந்த இடம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. ஏனென்றால் அரகான் கடற்கரையில் தனியே நிற்கிறது.

சைனா.—கிழக்குப்பக்கமாக சீனப்படைகள் முன்னேறி ஷாங்கெய், நான்கிங், ஹாங்கௌ, நின்சாங், நின்கோ, அமாய் முதலியவைகளைத் தாக்கினார்கள். தென் கிழக்கு ஸைனுவில் செகியங் மாகாணத்தை ஜப்பானியத் துருப்புகள் தாக்கி வருகின்றன. தெற்கு நோக்கியும், தென்மேற்குப் பக்கத்திலும் ஸயாஷான், ஷொவோஷின் மூலமாக இரண்டு எதிரிப்படைகள் ஒரே சமயத்தில் முன்னேறி வருகின்றன. யாங்ஸி நதியிலுள்ள இசாங் துறைமுகத்தை சீனர்கள் தாக்கினார்கள்.

இந்தியா.—வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் ஜப்பானிய விமானங்களிலிருந்தும் யந்திர பீரங்கிகளைக்கொண்டும் சிட்டகாங்கில் தாக்குதல் செய்யப்பட்டது. சேதம் கொஞ்சம்தான். சிலரே இறந்தனர். வங்காளக்குடாக் கடலில் ஸிலோன் தாக்கப்பட்டபிறகு, சில நீர்மூழ்கி நடமாட்டங்களைத் தவிர வேறு எதிரி கப்பல்களின் நடமாட்டம் இல்லை. கென்யா, உகாண்டா, டங்கனீகா நயாஸாலாண்டு, ஸான்ஸிபார், வட ரொடெஷியா முதலிய இடங்களிலிருந்து உதவிப்படைகள் வந்திருக்கின்றன. அமெரிக்க விமானங்களும் பிரிடிஷ் விமானங்களும் ஏராளமாக வந்திருக்கின்றன. ஏற்கனவே 15 லக்ஷம் துருப்புகள் கொண்ட இந்தியச் சைனியம் மாதம் 50,000 வீதம் விருத்தியாகிக்கொண்டே போகிறது.

பவளக்கடலில் நடந்த கப்பற்சண்டை.—இவ்வாரத்தில் இக்கடலில் நடந்த சண்டையில் அதிக வெற்றி கிடைத்தது. ஜப்பானியப்படையுடன், பிரிடிஷ், அமெரிக்கப் படைகள் ஈடுபட்டன. மே 4-ம் தேதி முதல் பிஸ்மார்க் ஆர்ச்பிலாகோவிற்கு தெற்கிலும், மே 9-ம் தேதியும் இச்சண்டை நடந்தது. இதில் ஜப்பானியருடைய 18 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. நான்கு சேதமாயின. இதன் இரண்டு விமானமேற்றும் கப்பல்கள், ஒரு க்ரூயிஸர், 6 அல்லது 7 நாசகாரிகள் அடங்கியிருக்கின்றன. ஆனால் இச்சண்டையைப்பற்றி ஜப்பானியர் கொடுக்கும் விவரம் நம்ப முடியாதவிதமாக இருக்கிறது. உண்மையாதெனில் இங்கே அடைந்த தோல்வியால் ஜப்பானியர் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியதற்கும் பிரின்ஸ் ஆப்வேல்ஸ், ரிபல்ஸ் என்ற கப்பல்களை அமுக்கியதற்கும் அவர்களுக்குத் தகுந்த பதில் கிடைத்தது. இதனால் ஆஸ்திரேலியாவில் ஜப்பானியரால் சுலபமாக இறங்கமுடியாது. பூராவாக எதிரி தோற்கடிக்கப்படாத போனாலும் இதை ஒரு முக்கிய சம்பவமென்றே சொல்லலாம்.

**லிபியா.**—எப்போதைப்போல் காவல் வேலை நடைபெறுகிறது. மாதக் கணக்கில் செய்த முயற்சிகளால் மத்தியக்கிழக்கின் தற்காப்பையும் போக்கு வரத்தையும் பலப்படுத்த முடிந்தது. ட்ரிபோலிக்கும், ஹைபாவிற்குப் இருப்புப் பாதை போடப்பட்டுள்ளது.

ஸைப்ரஸ், மால்டா, துருக்கி, ஸிரியா, டிரான்ஸ் ஜார்டன், பாலஸ்தினம், எகிப்து, ஸூடான், இரிட்ரியா, எதியோபியா, கிழக்கு ஆபிரிக்கப் பிரதேசங்கள், ஸாடி அரேபியா, ஏடன், இராக், பெர்ஸியா முதலிய இடங்களுக்கு சாமான்களைச் ஸப்ளை செய்ய ஏற்படுத்தப்பட்ட கமிட்டி கெய்ரோவில் கூடுகிறது. மிஸ்டர் கேஸி தலைமை வகிக்கிறார். உணவு ஸப்ளை, கப்பல்கள், உள்நாட்டுத் தொழிற்சாலை முதலியவைகளின் சம்பந்தமான பிரச்னைகள் சிரிச்சை செய்யப்படும்.

**மால்டா.**—ஏராளமான பிரிடிஷ் விமானப்படை வந்ததிலிருந்து மால்டா அதிகமாக பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதனாலேயே சனிக்கிழமையிலும், ஞாயிற்றுக்கிழமையிலும் ஜெர்மன் விமானங்களில் 29 நேசமாயின. 27 அநேகமாகச் சேதமடைந்திருக்கும். 37 சேதமாயின.

**ருஷ்யா.**—மாரிகாலம் ஆரம்பித்ததுமுதல் நாஸிகளின் முன்னேறிப்போர் தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பிரஸ்தாபப்படுகிறது. மர்மான்ஸ் முனையில் ருஷ்யத் தாக்குதல் கடுமையாக இருக்கும் காரணத்தால் ஜெர்மன் விமானங்கள் அங்கிருந்து அழைக்கப்பட்டிருக்கின்றன. இது ருஷ்யர்களுக்கு ஒரு சாதகமான அம்சம். லீப்ரோபெட்ரோவ்ஸ்கிலிருந்து கெர்ச் தீபகற்பம் வரையிலுள்ள 250 மைல் போர்முனையில் 24 கவசமணிந்த நாஸி யந்திரப் படைகள் ஈடுபட்டிருக்கின்றனவாம். கெர்ச் தீபகற்பத்தில் ருஷ்யர்களை எதிர்த்து செய்யப்பட்ட தாக்குதல் கொஞ்சம் வெற்றிகரமாக இருக்கிறதாம். ஆனால் மற்ற இடங்களில் நாஸிகளுக்கு தோல்வி ஏற்பட்டிருக்கிறது. இந்த யுத்தம் கடுமையாகவே நடத்தப்படுகிறது. ஜெர்மன் சைனியங்களுக்கு டாங்கிப்படையும், பாய்ச்சல் பாம்பர்களும் துணையாக வருகின்றன. ஆனால் இது ஒரு பெரிய யுத்தமென்று சொல்லமுடியாது. ஏதோ திடீர் தாக்குதலைச் செய்து நாஸி சைனியங்களுக்குத் திருப்தியளிக்கச் செய்யப்பட்டதாகவே கருதவேண்டும்.

**பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதல்கள்.**—மே 4ஆ கிட்னியா, போலந்து துறைமுகங்கள் முதலிய இடங்களில் கப்பல்களும், துறைமுகக் கட்டடங்களும் தாக்கப்பட்டன. மே 8ஆ வார்னிமான்டி தாக்கப்பட்டது. மே 8ஆ பர்மிங்ஹாமில் ஸர் ஆர்ச்பால்ட் பேசும்போது:—

"முன்னேறித் தாக்குவதை நேசநாடுகள் கையாண்டுவருகின்றன. நாம் முன்னேறி அடிக்கும் தருணம் வந்துவிட்டது. இதிலிருந்து பிரிடிஷ், அமெரிக்கப் படைகள் மேலும் தாக்குமென்று காணப்படுகிறது. அப்போது ஐரோப்பா பேரிலும் தாக்குதல் செய்யப்படும்.

"லுப்ட்வாபிக்கு நாசகாலம் வந்துவிட்டது. ஆகாயத்திலும், தரையிலும், நாஸி விமானப்படை பகுதி தாக்கப்பட்டுவருகிறது. தனது பலம் குன்றி வருகிறதென்பது நாஸிகளுக்குத் தெரியும். இதுதான் நமது சந்தர்ப்பம். முடிவு வரை நாம் தாக்கவேண்டும்.

"மேற்குப் போர்முனையிலும் பிரிடிஷ் விமானப்படை தனது வேலையைச் சரிவரச் செய்துவருகிறது."



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—5—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள்—லெஹாவர் (Lehavre). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்—டினியா (Gdynia) (Poland). | | 7 விமானங்கள். | |
| | இரவில்.—முக்கிய தொழிற்சாலை பிரதேசம்—ஸ்டட்கார்ட் (Stuttgart). | | | |
| | ஸகோடா தொழிற்சாலைகள்.—பில்ஸென் (Pilsen) (Czechoslovakia). | | | |
| | கப்பல் துறைகள்.—நான்டிஸ் (Nantes). | | | |
| | விரோதி விமானதளங்கள்.—பிரான்ஸ் (France). | | | |
| | கப்பல்கள்.—ஹாலந்து (Holland), நார்வே (Norway) கடற்கரைகளுக் கருகாமையில். | | | |
| | விமானநிலயம்.—மான்டால் (Mandal) (Norway). | | 3 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரேனைகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப்போர், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 14 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | விமான நிலயம், துறைமுகம், கப்பல்கள் ராபால் (Rabaul). | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | சாமான்கள் ஏற்றிச்செல்லும் படகுகளின் கூட்டம்.—நார்வே (Norway)க் கருகாமையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **5—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—**(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—ஜெர்மனி ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | 6 பைடர் விமானங்கள். | 4 பைடர் விமானங்கள். |
| | ராணுவ லக்ஷியங்கள்.—ஸிப்ருஜ் (Zeebrugge). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள்—ஸ்டட்கார்ட் (Stuttgart). | | | |
| | மற்ற லக்ஷியங்கள்.—தெற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | விமான நிலயம்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries), வட பிரான்ஸ் (France). | | | |
| | கப்பல் துறைகள்.—நான்டிஸ் (Nantes). | | 4 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)—**(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)—**(*ருஷ்ய விமானங்களால்*). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 6 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—**(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | விமான நிலயம்.—லே (Lae). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-**(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | ரபால் (Rabaul). | | | |
| **6—5—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—**(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | மின்சார உற்பத்திசாலை.—கேயன் (Caen). | | | |
| | லக்ஷியங்கள்.—கலே (Calais). | | | |
| | சாயந்திரம் லக்ஷியங்கள்.—கலே (Calais), பொலாயின் (Boulogne). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள் ஸ்டட்கார்ட் (Stuttgart), தெற்கு ஜெர்மனியின் (Germany) மற்ற இடங்களில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **6—5—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | கப்பல் துறைகள்.—நான்டிஸ் (Nantes). | | | |
| | விரோதி விமான தளங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | 7 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)—**(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia)—**(*ருஷ்ய விமானங்களால்*). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்:—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 7 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—**(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | விமான நிலயங்கள்.—மத்திய பர்மா (Burma). | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்—**(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | ஜப்பானிய யுத்தக் கப்பல்கள்.—பவளக் (Coral) கடலில். | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—**(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—லூயிஸ்டேல் (Louisdale) தீவுகள். | | | |
| **7—5—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—**(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள்—ஆஸ்டெண்டு (Ostend). | | | |
| | மின்சார தொழிற்சாலை.—ஸீப்ருஜ் (Zeebrugge). | | நஷ்டமில்லை. | |
| | இரவில்.—யுத்தக் கப்பல்கள் துணைபுரிந்த 12 கப்பல் கூட்டம்—டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | | 2 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)—**(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | 2 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)—**(*ருஷ்ய விமானங்களால்*). | | | |
| | விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 26 விமானங்கள். | 71 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்-**(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | ஜப்பானியக் கப்பற்படை பகுதிகள்.—பவளக்கடலில் (Coral sea). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 8—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்–டீப்பி (Dieppe). | | | |
| | இரவில்.—பால்டிக் துறைமுகம்—வார்னிமூன்டி (Warnemunde). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | விரோதி விமான தளங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries) வட பிரான்ஸ் (France). | | | |
| | ஒரு பெரிய சப்ளைக் கப்பல்.—நார்வே (Norway) கடற்கரைக்கருகாமையில். | | 19 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.— பெங்காஸி (Benghazi). | ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனேகாவின் (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்கள். | | | 3 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 26 விமானங்கள். | 71 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-தென்மேற்கு பஸிபிக்—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | லூயிஸ்டேல் (Louisdale) தீபகற்பம்.— | | | 4 விமானங்கள். |
| 9—5—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்— ஹாஸிப்ருக் (Hazebruck), ப்ருஜஸ் (Bruges). | | 7 விமானங்கள். | 1 விமானம். |
| | விமான எதிர்ப்புகள்.—கலே (Calais), பொலாயின் (Boulogne) பிரதேசங்களில். | | | 1 விமானம். |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான எதிர்ப்புகள்.— ஸிரெனேகா (Cyrenaica)வில். | | 6 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 18 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—தென்மேற்கு பஸிபிக்—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | லூயிஸ்டேல் (Louisdale) தீபகற்பம். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—மாக்வி (Magwe). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 10—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில் ரோந்து.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) வட பிரான்ஸ். (France). | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 18 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.)** | | | |
| | கப்பல்கள்.—கெஸ்ஸா (Kessa) | இரண்டு சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—மாக்வி (Magwe) | | | |
| | விரோதி போக்குவரத்து—வட பர்மாவில் (Barma). | | | |
| | வேவு பார்த்தல்.—ஆக்கிரமித்த பர்மா (Burma). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 5—5—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | விரோதி விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | வேவு பார்த்தல்.—நியூ கினி (New Guinea) பிரதேசத்தில். | | | |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்–(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | கரிஜிடார் (Corregidor). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 6—5—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம்.—இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரையில். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சொற்ப விமான நடமாட்டம்தான்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 7—5—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஒரு இடம்.—இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்.—இங்கிலாந்தின் (England) தென் கிழக்கு பாகத்தில். | | 2 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 8—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | பகலில்.—ஒரு இடம் இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரையில். | | 1 விமானம். | |
| | இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | | 1 விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 6 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—இந்தியா (India)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிட்டகாங் (Chittagong) பிரதேசத்தில். | | | |
| 9—5—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்குக் கடற்கரை. | | 2 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—5—42. (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 3 விமானங்கள். | |
| 10—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம் ஐர்லாந்தின் (Ireland) வட பாகம். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | 2 விமானங்கள். |
| 11—5—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும்.—விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | 10 ஆம், 11 ஆம் 101 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்திற்கருகாமையில் | | மிகவும் சொற்பச் சேதம். | |
| | தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ஹார்ன் (Horn) தீவு. | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**நமது நிலய சம்பந்தம்.** மேன்மை தங்கிய வைஸிராய் இந்திய மக்களுக்குச் செய்துகொண்ட வேண்டுகோள் இவ்வறிக்கையின் முதலில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் கண்டபடி நமது அறிக்கைக்கு "தேசிய யுத்த முன்னணி அறிக்கை நிலயம், புதுக்கோட்டை" என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. மற்ற விஷயங்களில் ஈடுபடுவதோடு மேன்மை தங்கிய வைஸிராய் ஆரம்பித்திருக்கும் பெரும் நோக்கங்களும் விருத்தி செய்யப்படும். இதன் பெயரில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை கவனிக்கும்படி நமது வாசகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். எல்லாக் கடிதங்களையும் 'காரியதரிசி, தேசிய யுத்த முன்னணி நிலயம், புதுக்கோட்டை' என்று விலாசம் எழுதி அனுப்பவும்.

**பர்மா யுத்தம்.** காப்டன் ஸிரில் பால்ஸ் என்பவர் மே மீ 2-ம் தேதி ஒலிபரப்பியதைப் பார்த்தால் பர்மாவில் சமீபத்தில் நடந்த யுத்தத்தைப்பற்றிய தகவல்கள் தெரியவருகின்றன.

'ரெங்கூனை ஜப்பானியர் பிடித்தபிறகு ஐராவதி, ஸிட்டாங் என்ற இரண்டு நதிகளின் பள்ளத்தாக்குகள் மூலமாக வடக்கே முன்னேறினார்கள். இந்த இரண்டு இடங்களிலும் நல்ல ரஸ்தாக்களிருக்கின்றன. ஜப்பானியர் அதிதுரிதமாக முன்னேறினாலும் நேசதேசங்கள் பின்புறமாகத்தாக்கியும், குறுக்கு எதிர்ப்புகளைச்செய்தும் அவர்களைத்தடுத்தனர். இதனால் ஜப்பானியருக்கு அதிக இடைஞ்சல் ஏற்பட்டது. தேவையானால் ஸால்வீன் நதிவரையிலும், ஸயாம் எல்லைப்புறம் வரையிலும் போர்முனையை அகலப்படுத்திக்கொள்ள ஜப்பானியருக்கு வசதியும் இருந்தது. ஆனால் சிறிதுகாலம்வரை அவர்கள் அப்படிச்செய்யவில்லை. சீனர்களும் ஸயாம் எல்லைப்புறத்தில் கொஞ்சம் படையெடுப்புகளையும் செய்தனர்.

'திடீரென்று ஏப்ரல் மாத மத்தியில் சீனர்களுக்கு இடதுபக்கமாயிருந்த ஜப்பானியர் கரினின் மாகாணத்திலிருந்து வடக்கு நோக்கி முன்னேறினார்கள். அதுவரை அங்கே சிறிய சண்டைகளே நடந்தன. டௌங்கிவரையில் அதிதுரிதமாக முன்னேறினார்கள். இங்குதான் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச்செய்து அந்நகரையும் திரும்பப்பிடித்தனர். ஆனால் இன்றும் கிழக்கு பாகத்தில் சீனர்களின் இடதுபக்கத்திலுள்ள படைகளின் சில துருப்புகளோடுதான் ஜப்பானியர் சண்டைசெய்ய நேர்ந்தது.

'முன்னால் கவசம்பூண்ட வண்டிகள் சென்றுகொண்டே போவதால் ஜப்பானியர் மீண்டும் வடக்கே 75 மைல்கள் ஒரு தடையுமில்லாது முன்னேறினார்கள். வரவர மாண்டலேக்கு அருகிலேயே வந்தனர். இருந்தாலும் மாண்டலேயை விட்டுவிட்டு லாஷியோவை நோக்கி முன்னேறினார்கள்.

'நமது படைகள் ஏராளமான எதிரிப் படைகளை எதிர்த்து நின்றன. முக்கியமாக நமது விமானப்படையே அதிகம் ஈடுபட்டிருந்தது. இந்த சமயத்தில் நிலைமை மிகவும் ஆபாசமாக இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றுதான் விசேஷம். பர்மாவில் தீவிரமாக எதிர்த்து நின்றதால்தான் இந்தியாவில் தற்காப்புச் செய்துகொள்ளவும் அதிக முஸ்தீப்பு செய்துகொள்ளவும் அவகாசம் கிடைத்தது.

'இதனாலேயே, ஜப்பானிய பிரதம மந்திரி தனது மக்களுக்கு எடுத்துச் சொல்லும்போது அதிகமான யுத்தம் இனிதான் போடவேண்டியிருக்குமென்று சொன்னான். ஜப்பான் யுத்தம் சம்பந்தப்பட்டவரையில் நாமும் அவ்விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்'.

வி வி வி வி வி வி வி

**அடுத்தபடியாக.** பர்மாவை ஜப்பான் ஆக்கிரமித்துக்கொண்டதிலிருந்து அடுத்தபடியாக எங்கே பாயும் என்பதைப்பற்றி பல யோசனைகள் சொல்லப்படுகின்றன. சைனாவா, இந்தியாவா, ஆஸ்திரேலியாவா. பர்மா ரஸ்தா வழியாக சீனப் பிரதேசத்திலும் புகுந்திருக்கிறது. இந்தியாவில் சிட்டகாங்கையும் விமான மூலம் தாக்கியிருக்கிறது. பவளக் கடலுக்கு அருகில் கப்பல் சண்டையையும் போட்டிருக்கிறது. உண்மையில் பல இடங்களில் பைத்தியக்காரத்தனமாக சண்டை போட்டதால் ஜப்பான் அலுத்திருப்பதென்பது உண்மை. ஆகவே இன்னும் கொஞ்ச நாள் சும்மா இருக்குமென்றே எதிர்பார்க்கலாம். சமீபத்தில் ஏராளமாக ஸைனியங்களை சேமித்ததில் இருந்து தனது தற்காப்பு நிலைகளையும், பர்மா, மலேயா, டச்சுத் தீவுகள், பிலிப்பைன்ஸ் முதலிய இடங்களையும் காபந்துசெய்ய இருக்கலாம். ஒருக்கால் 5 வருஷ காலமாக நடந்துவரும் சைனா யுத்தத்தை முடிக்கவும் இருக்கலாம். அப்படியானால் சைனா பேரில் பலமாக எதிர்ப்புசெய்து சமாதானத்திற்கு வரும்படி பலாத்காரம் செய்யப்படலாம்.



சுங்கிங்கிலும் இந்த அபிப்பிராயம்தான் சொல்லப்படுகிறது. லாஷியோவிலிருந்து பர்மா ரஸ்தா மூலமாயும், தனக்கு சுவாதீனமாயுள்ள பிரெஞ்சு இந்தோ-சைனாவிலிருந்தும், கடல் மூலமாக காண்டனிலிருந்தும் சுங்கிங்கைத் தாக்கலாம். எல்லா பாகங்களிலும் ஏககாலத்தில் தாக்குதல் நேரும்.

இந்த கஷ்ட நிலையை சீனப்படைகள் தைரியமாகவே சமாளிக்க நினைக்கின்றன. சாமான்கள் தடையில்லாமல் போய்ச்சேருவதாலும், அமெரிக்க சாமான்களின் உற்பத்தி குறையாமல் நடப்பதாலும், சீனர்களின் நம்பிக்கை நிச்சயம் நிறைவேறும். மேலும் அதற்குள் பஸிபிக் நிலைமையும் நேசதேசங்களுக்கு சாதகமாகிவிடும்.

வி வி வி வி வி வி வி

**பதிலுக்குப் பதில் படையெடுப்புகள்.** லூபெக், ரோஸ்டக், கோலோன் முதலிய இடங்களில் பிரிடிஷ் விமானங்கள் குண்டுகளை வீசியதற்கு பதில் செய்யும் விதமாக பாத், எக்ஸிடர், நார்விச், யார்க் முதலிய பிரிடிஷ் பட்டணங்களை ஜெர்மானியர் தாக்கியிருக்கின்றனர்.

இந்த இரண்டு நாடுகளும் தாக்கிய பட்டணங்களை ஒப்பிட்டுப்பார்த்தால், பிரிடிஷ் விமானங்கள் தாக்கியது பூரா ராணுவ நிலயங்கள்தான். ஆனால் ஜெர்மானியர், ராணுவ முக்கியத்துவமே இல்லாத பொதுஜனங்கள் வசிக்கும் இடங்களைத் தாக்கி வீண் பயத்தை உண்டுபண்ணுகின்றனர்.

லூபெக்கும் ரோஸ்டக்கும் இரண்டு துறைமுகங்கள். இவைகள் மூலமாக டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, பால்டிக் முதலிய இடங்களுக்கு சாமான்களை அனுப்புவதற்கு சாதகமாக இருக்கிறது. ரோஸ்டக்கில் விமானங்களும், நீர்மூழ்கிகளும் கட்டப்படுகின்றன. கோலோன் என்பது ரைன்லாந்தில் ஒரு பெரிய தொழிற்சாலை நகரம். லூபெக்கில் வாச யோக்யமான இடங்கள் இருக்கின்றன. கோலோனில் பெரிய மாதா கோவில் இருக்கிறது. இருந்தாலும் பிரிடிஷ் தாக்குதல்கள் உற்பத்தி சாலைகளிலும், எதிரிப் போக்குவரத்துகளிலும் தான் ஏற்பட்டன.

ஆனால் பிரிடிஷ் நகரமான பாத் என்பது மிகப்பிரசித்தமானது. இங்கே ரிடையர் ஆன உத்தியோகஸ்தர்களேதான் வசிப்பது. ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அதுவும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. எக்ஸிடரும், நார்விச்சும் விவசாய நகரங்கள். கோவில்கள் இருக்கின்றன. யார்க் என்பது ஒரு கோட்டை. ஆனால் அது தொழிற்சாலை நகரமில்லை.

இவ்வித பிரிடிஷ் நகரங்களை ஈவிரக்கமில்லாமலும் காட்டுமிராண்டித்தனமாயும் தாக்கிய ஜெர்மானியரின் நோக்கங்கள் மிக அற்பமானவைகளாகவே தானிருக்கவேண்டும். ஜெர்மனியில் ஜனங்களிடையே ஓயாமல் மனஸ்தாபம் ஏற்பட்டு வருகிறது. அந்த மனக்குறையைத் தீர்ப்பதற்காக பிரிடிஷ்காரர்களும் அவஸ்தைப்படுகிறார்களென்று காண்பிக்கவே பிரிடிஷ் நகரங்கள் தாக்கப்படுகின்றன. ஆனால் பதிலுக்குபதில் தாக்குவதற்கு லாயக்காக விமானங்கள் ஜெர்மனியில் இல்லை. அதனால் தான் ஒரு முக்கியத்துவமும் பெறாத பிரிடிஷ் நகரங்களமீது சொற்ப ஜெர்மன் விமானங்கள் வந்து தாக்கின. மேலும் எல்லா பிரிடிஷ் தொழிற்சாலை நகரங்களும் நன்றாகக் காபந்து செய்யப்பட்டிருக்கின்றன என்றும் அங்கே சென்றால் ஆபத்து நேருமென்றும் எதிரிக்குத் தெரியும். கொஞ்சம் பாதுகாப்புள்ள நார்விச்சில் எதிரிகளின் 20 விமானங்களில் 4 நாசமாயின. ஆகவே பொது ஜனங்கள் வசிக்கும் இடமாகப் பார்த்து நாஸிகள் தாக்குகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**மூன்று முக்கிய ருஜுக்கள்.** பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியில் விளைவித்த நஷ்டத்தைத் தெரிவிக்க பதினைந்து நாட்களாக மூன்று ருஜுக்கள் கிடைத்துள்ளன. லூபெக், ரோஸ்டக், கீல், ஹாம்பர்க் போன்ற தொழிற்சாலை நகரங்கள் தாக்கப்பட்டதால் அதற்குப் பிரதியாக பாத் போன்ற பிரிடிஷ் நகரங்கள் தாக்கப்பட்டதே முதல்தரமான ருஜு.

பிரிடிஷ் பாம்பர்களால் தாக்கப்பட்ட ஜெர்மன் நகரிலுள்ள பொதுவான ஞாபகச் சின்னங்களுக்கும், பொதுமக்களுக்கும் சேதமேற்பட்டது. இதைக்கண்டு நாஸிப் பிரசார மந்திரி கோயபெல்ஸ் கவலையுற்றிருக்கிறான். இதுவே இரண்டாவது அத்தாக்ஷியாகும். வெறும் பொதுமக்கள் வசிக்கும் இடங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கவே தாக்கா. ஆகவே ஜெர்மன் தொழிற்சாலைகள் அழிவதைப் பார்த்து கோயபெல்ஸ் உண்மையிலேயே கவலையுற்றிருக்கிறான்.

மூன்றாவது என்னவென்றால் சமீபத்தில் செய்யப்பட்ட ஹிட்லரின் பேச்சுதான். இதில் பிறர்மேல் தோஷாரோபணமும், குறையும், பயமுறுத்தல்களும் காணப்பட்டன. பிரிடனின் கோயில்களின் பேரிலும், ஞாபகசின்னங்கள் பேரிலும் குண்டுகளைப்போட்டு அழிக்கப்போவதாகச் சொன்னான். ஆனால் இவன் செய்யும் பயமுறுத்தல்களுக்கு ஒரு பலனும் கிடைக்காது. 1940-ல் இன்னும் பலமாகவே பயமுறுத்தினான். பிரிடிஷ் மக்களை அடியோடு அழித்துவிடுவதாகவே சொன்னான். பிரயத்னமும் எடுத்துக்கொண்டான். ஆனால் சம்பம் சாயவில்லை. தற்சமயத்திலோவெனில் பிரிடனே எதிர்த்து அடிக்கும் வல்லமை பெற்றிருக்கிறது: வருஷம் பூரா ஜெர்மனியைத் தாக்கப் போவதாக மிஸ்டர் சர்ச்சில் சொல்லுகிறார். ராட்டர்டாம், வார்ஸா, பெல்கிரேட், முதலிய நாட்டு அரசாங்கங்களெல்லாம் தங்களையே குறைகூறவேண்டியதுதான். அவைகள் திரும்ப பலம் பெறும் நாள் வந்துவிடும். எறும் பூரக் கல்லும் தேயும். தெய்வம் நின்று கொல்லும், என்னும் விதமாக ஜெர்மனி அடியோடு அழியும் காலத்தை நேசநாடுகள் உண்டாக்கி வருகின்றன.

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷ் விமானப்படையும் வெற்றியும்.** நாஸிகள் செய்யும் பயமுறுத்தல்களுக்கு மாறாக பிரிடிஷ் விமானப்படை காரியாம்சத்தில் ஈடுபட்டு ஜெர்மனியில் சேதத்தை விளைவித்து வருகிறது. பிரிடிஷ் தாக்குதல்கள் பயனபடாது என்று செய்த ஜெர்மன் பிரசாரம் தான் பயன்படாமல போயிற்று. கடுமையான சீதோஷ்ண நிலைகளிலும் பிரிடிஷ் விமானப்படை மீண்டும் மீண்டும் தாக்கிவருகிறது. லண்டனில் விழுந்த ஜெர்மன் குண்டுகளைவிட அதிகமாகவே ரேஹூல்டு தொழிற்சாலையில் போடப்பட்டன. ஆனால் சிறிய அளவில் ஜெர்மன் பிரதேசங்களில் தாக்குவது போதாது என்றாலும் ஜெர்மன் தொழிற்சாலைகளை அழித்துவிட்டால் அதன் மூலமாக எதிரிக்குக் கெடுதி ஏற்படும். மேலும் ருஷ்யா, லிபியா, மால்டா முதலிய போர்முனைகளிலிருந்து விமானப்படையைப் பிரித்து மேற்கே அனுப்பும் நிர்ப்பந்தமும் ஏற்படும் அதன் மூலமாக ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படைக்கு சேதமேற்படும். பிறகு தாராளமாக ஒன்றன் பின் ஒன்றாக ஜெர்மன் தேசங்களைத் தாக்கி வசப்படுத்த முடியும். இவ்விதம் தான் போலந்திலும் ஹாலந்திலும் ஜெர்மானியர் செய்தனர்.

வி வி வி வி வி வி வி

**உள்நாட்டில் கலகத்தை அடக்க ஜெர்மன் முயற்சிகள்.** சிலவாரங்களாக ஜெர்மனியில் சில சட்டங்கள் அமுல் படுத்தப்படுகின்றன. இவைகளால் ஜெர்மனியிலுள்ள இதர கக்ஷிகளையும் அரசாங்கத்தினரையும் அடக்கி ஆள நாஸிகளுக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மே 21-ட ரீஷ்டாக் சபையின் கூட்டத்தில் ஹிட்லர் விசேஷ அதிகாரங்களைக் கோரியதும் இதற்காகத்தான். மார்ச்சு 21-ட நியாய சபைகளின் வேலைகளை லகுவாக்குவதற்கென்று ஒரு சட்டம் அமுலுக்கு வந்தது. ஆனால் நீதிபதிகளைதான் விரும்பியபோது வேலையிலிருந்து நீக்க ஹிட்லருக்குத்தான் அதிகாரம் கிடைத்தது.

பொதுஜன அரசாக்ஷி முறையிலும் சில கடுமையான திட்டங்கள் பாஸ் செய்யப்பட்டன. மார்ச்சு 26-ட ஒரு சட்டம் பாஸ் செய்யப்பட்டு அதன்படி உத்தியோகஸ்தர்களின் பிரமோஷனோ, நியமனமோ, மாற்றலோ யாவும் நாஸி கவர்னர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனியில் உத்தியோகஸ்தர்கள்



யாவரும் நாஸிக் கக்ஷியைச் சேர்ந்தவர்களாவே இருக்கவேண்டும். இவ்விதமாக தோட்டி முதல் தொண்டமான் வரை ஜெர்மனியில் நாஸிக் கக்ஷியைப் பின்பற்ற வேண்டும்.

மேலும் நாஸிக் கக்ஷித் தலைவர்களுக்கும் விசேஷ அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. பார்மானுக்கு ஸர்வ அதிகாரம் கொடுத்து ஜனவரி 16-ல் ஒரு சட்டம் பாஸ் செய்யப்பட்டிருக்கிறது. பார்மானுக்கு அடுத்தபடியாக ஹிம்லரும் ரகசியப் போலீஸும் இருக்கின்றன. குற்றத் தொழிலைச் செய்யும் உத்தியோகஸ்தர்களைத் தண்டிக்க ஹிம்லருக்கு விசேஷ அதிகாரம் கொடுக்க, ஏப்ரல் 9-ல் ஒரு சட்டம் பாஸ் செய்யப்பட்டது.

இவைகளையெல்லாம் பார்க்கும்போது முன்பைவிடப் பெரிய குழப்பம் ஏற்படுமென்றே யாவரும் நினைக்கின்றனர். இப்படியெல்லாம் கட்டுப்பாட்டு களுக்கு உட்படாமல் போனால் ஜெர்மன் மக்கள் தோற்று நேசநாடுகளின் வசம் ஆகவேண்டிவருமென்று ஜெர்மன் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. ஆனால் சமீபத்தில் ஜெர்மனியில் கலகம் நேராமலிருக்கலாம். ஏனென்றால் வசந்த காலத் தாக்குதலை யாவரும் ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஜெர்மன் ராணுவமும் பூரா அழியவில்லையென்றும் ஏதோ கொஞ்சம் கெடுதல் அடைந்திருக்கிறதென்றும் ஜெர்மனிக்கு வெற்றி கிடைக்குமென்றும் எடுத்துச் சொல்லி கொடிய சட்டதிட்டங்களை அமுல்படுத்துகின்றனர். ஆனால் வெற்றி ஜெர்மானியருக்கு கிட்டுவது மிகவும் சிரமம். ஆகவே ஜெர்மன் மக்களிடம் ஒற்றுமை குலைந்து ஜெர்மனியே அடியோடு அழியும்.

வி வி வி வி வி வி வி

**நாணய ஏமாற்றம்.** பிரான்ஸில் கிராமங்களின் முக்கியத்துவம்.—மார்ஸெயல்ஸில் வெளிவரும் ஸெமபோர் (Semaphore) என்ற பத்திரிகையில் தொடர்ச்சியாகவரும் வியாசங்களைப் பார்த்தால் பிரான்ஸுக்கு உலோக நாணயமே கிடையாதாம். அதற்குப் பதிலாகப் போலிச் சாமான்களைக்கொண்டு, அதாவது, இரும்பு, எஃகு, இன்னும் வியவசாயப் பொருள்களைக்கொண்டு தயாரிக்கப்படுமாம். இப்புதிய நாணயம்தான் எல்லாத் தொழிற்சாலைகளிலும், வியாபாரசாலைகளிலும், வியவசாய இடங்களிலும் உபயோகிக்கப் படும். 50, 10, 5, 1 டன் நிறையைக் குறிக்கும் காகித நோட்டுகளும் கொடுக்கப் படும். இவைகளைத்தான் குடியானவர்கள் சேர்த்து வைத்துக்கொண்டு தேவையானபோது மாற்றிக்கொள்ளலாம். இதுவரையில், வியவசாயப் பொருள்களைக் கொண்டு பாங்கிகளில் மதிப்புப்பெற்று யாவரும் சொத்து வைத்துக்கொண்டிருந்தனர். இனிமேல் போலி டன் நோட்டுகளைக் கொடுத்து பண்டங்களைப்பெறலாம். இந்த ஏற்பாடு பார்ப்பதற்கு தான் நேர்த்திபோல் காணப்படும். ஏனென்றால் வியவசாயிகள் தங்கள் நிலங்களில் அதிகம் பரிசிரமப்பட சந்தர்ப்பம் ஏற்படுவதாக இருக்கிறது. ஆனால் லேவாதேவி ஒன்றும் செய்யமுடியாது. அதெல்லாம் தொழிற்சாலைக்காரர்கள் தான் செய்பலாம்.

இவ்விதமாகச் செய்து பிரெஞ்சுக்காரர்கள் குடியானவர்களாக இருந்து ஜெர்மானிய நில ஸ்வான்தார்களிடம் அடங்கி இருக்கும்படி செய்யப்படுகின்றனர். ஜெர்மானியர் அதன் பிரெஞ்சுக்காரர்களை நிலத்தை சாகுபடி செய்யவிட்டு ஜெர்மானியருக்கு உட்பட்டுத்தானிருக்கவேண்டிவரும். பலன்களை அடைவார்கள். ஜெர்மானியருக்கு உட்பட்டுத்தானிருக்கவேண்டிவரும். ஸ்வதந்திரமாக உலோக நாணயங்களைக் கொடுத்து சாமான்களை வாங்க முடியாததலால் ஜெர்மனியைத் தவிர இதர பாகங்களில் வியாபாரம் செய்யும் உரிமை கிடைக்காது. இப்பழக்கம் நீடித்திருந்தால் பிரான்ஸுக்குத்தான் கெடுதி. சிறிது நாட்களில் நிலங்களெல்லாம் ஜெர்மானியருக்குச் சொந்தமாகிவிடும். வயது வந்த காலத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொத்துவைத்துக்கொள்ளமுடியாது. அடிமைத் தொழில்தான் மிஞ்சும். ஜெர்மன் மாகாணமாகவே ஆகிவிடும்.

வி வி வி வி வி வி வி

**மடகாஸ்கர்.** சமீபத்தில் நிகழ்ந்து வரும் யுத்தச் செய்திகளைத் தொடர்ந்து கவனிப்போருக்கு மடகாஸ்கரை பிரிடிஷ்காரர்கள் வியாபித்துக்கொண்டது ஒரு ஆச்சரியமாக

இராது. இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, மத்தியக்கிழக்கு முதலிய இடங்களுக்கு இடையிலுள்ள போக்குவரத்திற்குச் சாதகமாக் இருக்கும் மெடகாஸ்கரின் முக்கியத்துவத்தைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. மேலும் கேப் டவுன், டர்பான், ஸைமன்ஸ் டவுன் போன்ற முக்கிய தென் ஆபிரிக்கத் துறைமுகங்களுக்கு வெகு அருகிலும் இருக்கிறது. இதை எதிரி பிடித்திருந்தால் ஆபத்தாகவே முடிந்திருக்கும். இந்து மகா சமுத்திரத்திற்குள் எதிரி பிரவேசித்து, கொழும்பைத் தாக்கியதே அதிக ஆபத்தைக் குறித்தன. லவால் அதிகாரத்திற்கு வந்தது இன்னும் இந்த ஆபத்தை அதிகப்படுத்தியது. ஆனால் "நேசநாடுகள் உலகில் எந்தப் பாகத்திலிருந்தாலும் பிரெஞ்சு நாடுகளை அச்சுநாடுகள் ஆக்கிரமித்துக் கொள்ளுவதை நேசநாடுகள் தடுக்குமென்று" ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஏப்ரல் 28உ அறிவித்ததிலிருந்து எதிரியைத் தடுக்க தீவிர முயற்சியுடன் நடந்து கொள்ளப்படுமென்று தெரிகிறது.

வி வி வி வி வி வி வி

**விஷ வாயு.** வேறு விதமாக ஜயம் பெற முடியாததால் விஷ வாயுவைப் பிரயோகித்து எதிரிகளை பயமுறுத்துவதை நாஸிகள் வைத்துக்கொண்டனர். சண்டைகளில் விஷ வாயுப் பிரயோகம் கூடாதென்று 1899-ல் ஹேக்கிலும், 1907-ல் வெர்ஸெய்ல்ஸ் சமாதானத்திலும், 1922-ல் வாஷிங்டனில் செய்து கொண்ட ஐந்து அரசு ஒப்பந்தத்திலும், 1925 பொதுவான ஒப்பந்தத்திலும் யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் நாஸிகளுக்கு சட்ட திட்டங்களேது. உலகிலேயே தன்னிஷ்டப்படி நடக்கும் காட்டுமிருண்டிகளானதலால் நாஸிகளுக்குச் சட்டமே கிடையாது. பதிலுக்குப் பதில் செய்தால் தான் அவர்களுக்குத் தெரியும். இதைப்பற்றி சர்ச்சில் வியக்தமாகச் சொல்லிவிட்டார்:—

"நமது பேரில் உபயோகித்த மாதிரி நமது நேசநாட்டினரான ருஷ்யர்களின் மீது முதலாவதாக நாஸிகள் விஷ வாயுப் பிரயோகம் செய்திருப்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதற்குப் பிரதியாக நாம் தயார் செய்திருக்கும் விமான பலத்தைக் கொண்டு விஷ வாயுவை நாமும் பிரயோகிப்போம். ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை ஸ்தலங்களிலேயே இம்மாதிரி செய்யப்படும்.

"இவ்வித தொந்தரவை விலைக்கு வாங்கிக்கொள்ளவேண்டுமா என்பதைப் பற்றி ஹிட்லர் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது.

---

## சந்தோஷமாகவே சகித்துக்கொள்ளுகின்றனர்.

## பிரிட்டிஷ் வரவு செலவு திட்டத்தைப் பொதுமக்கள் அங்கீகரிக்கின்றனர்.

(ரென்னி ஸ்மித் எழுதியது).

பிரிட்டிஷ் பார்லிமெண்டு நடவடிக்கைகளில் வரவு செலவு திட்டம் தீர்மானிக்கப்படும் தினம் ஒரு முக்கிய தினம். 1912–43-ல் செலவு 5,28,60,00,000 பவுன் என்று உத்தேசமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தைவிட இது 70,00,00,000 பவுன் அதிகமானது. இதன்படி இவ்வருஷத்தில் சென்ற வருஷத்தைவிட தினச்செலவு 20,00,000 அதிகமாகும். மொத்தச் செலவில் வரி செலுத்துகிறவர்கள் 4,50,00,00,000 பவுனைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். விகிதத்தால் 2,40,00,00,000 பவுன் கிடைக்கும். மீதம் 2,10,00,00,000 பவுனை பொதுமக்கள் தாங்களாக மீதம்பிடித்துத் தரவேண்டும்.

இவ்விதமாக தேசத்தின் செலவை பொதுமக்கள் முகமலர்ச்சியுடனே பொறுத்துக்கொள்ளுகின்றனர். இந்த வரவு செலவு திட்டத்தைத் தயாரித்ததற்காக எல்லாக் கக்ஷியினரும் பொக்கிஷ மந்திரியை வாழ்த்துகிறார்கள். லேபர்



கக்ஷித்தலைவர் மிஸ்டர் ஆர்தர் கிரீன்வுட் அந்த சந்தர்ப்பத்தில் பேசும்போது பின்வருமாறு சொன்னார்:—"கள்ளத்தனமான வியாபாரத்தைத் தடுக்கவும், அனாவசியமாக சாமான்களை நாசப்படுத்தாமலும், முடிந்தவரை தொழிற்சாலை சாமான்களைச் சேகரித்துவந்தால் ஜனங்களுக்கு ஒருவித சிரமம் ஏற்படாது" என்றார்."

இதைப்பற்றி பொதுமக்கள் அபிப்பிராயத்தைச் சொல்லும்போது "சந்தோஷமாகவே சிரமத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்" என்கிறார்கள்.

---

# அதிராஜத்வமில்லாத சாம்ராஜ்யம்.

## இங்கிலாந்தைப்பற்றி அமெரிக்க அபிப்பிராயம்.

இங்கிலாந்தில் நடக்கும் விஷயங்களை நிலைக்கண்ணாடி போல் விளங்கச் செய்யும் டைம் பத்திரிகை, இங்கிலாந்தின் குணம், உணர்ச்சி, நோக்கங்கள் முதலியவைகளைப்பற்றி ஒருதடவை அமெரிக்கர்களுக்கு எடுத்துக் காட்டியது. "ஒருவனுடைய இயற்கை குணமே அவனுடைய நன்மை தீமைகளுக்குக் காரணம் என்றால் தற்போதுள்ள இங்கிலாந்தில் இயற்கை குணம் யாது?" என்ற கேள்விக்கு அப்பத்திரிகையில் கொடுக்கப்பட்டிருந்த சில விடைகளை டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகை அச்சிட்டிருந்தது. அவைகளை நாம் கொடுப்போம்.

"இங்கிலாந்திலுள்ளோரின் அபிப்பிராயங்களெல்லாம் இரண்டு வார்த்தைகளைப்பற்றியேதான் இருக்கின்றன. ஒன்று சாம்ராஜ்யத்தை வைத்துக்கொள்ளுவது, மற்றொன்று யாவருக்கும் சமஉரிமை கொடுப்பது. இந்த இரண்டில் பிரிட்டிஷ் மக்கள் சாம்ராஜ்யத்தை வைத்துக்கொள்ள ஆசைப்படவில்லை. ஆகவே சம உரிமையை விரும்பலாம். இருந்தாலும் சாம்ராஜ்யம் இல்லாமலிருந்தால் எப்படி இருக்குமென்பதை அவர்கள் இன்னும் தீர விசாரிக்கவில்லை. மேலும் பணக்கார வர்க்கம் தானாகவே குறைந்துவருகிறது.

"இங்கிலீஷ்காரர்கள் யாவரும் சாம்ராஜ்யத்தை ஆசையுடன் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. தானாக ஏற்பட்டதால் ஒருவிதமான முயற்சியில்லாமலேயே சாம்ராஜ்யம் தானாகவே இருக்குமென்று நம்பியிருக்கிறார்கள். அதற்காக பிரத்தியேக முயற்சி எடுத்துக்கொண்டு சாம்ராஜ்யத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள சண்டைசெய்யப்போவதுமில்லை. சாம்ராஜ்யத்தைப்பற்றிய தீவிர சிந்தனையும் கிடையாது".

### நியாய குணத்தின் பலன்.

"ஆகவே கிரேட் பிரிடன் சண்டைக்கு ஆரம்பித்தபோது குடியேற்ற நாடுகளும் கூடச்சேருமென்று எதிர்பார்க்கவில்லை. குடியேற்ற நாடுகள் தாங்களாகவே முன்வந்து உதவி, யுத்தத்திலீடுபட்டதற்குக் காரணம் என்னவென்றால் பிரிட்டிஷ் ஆட்சியில் அதிராஜத்வமான தன்மையில்லை என்பதுதான். பிரிடன் நியாயமாக நடந்து கொண்டதற்கு குடியேற்ற நாடுகள் நடந்து கொண்டது ஒன்றே போதுமான அத்தாக்ஷியாகும்.

"ஜெர்மானியர், ருஷ்யர், ஜப்பானியர் இவர்களைக் காட்டிலும் இங்கிலீஷ்காரர்களுக்கு உண்மையாக காரியத்தில் ஈடுபடுத்திக்காண்பிக்கும் தன்மையும் முரட்டு சுபாவமும், வெற்றியடைவதற்கான யோக்கியதையும் இருந்துவருகின்றன. முரட்டு சுபாவம் எதற்காக என்று நமக்குத் தெரியாது. இங்கிலீஷ் வாலிபர்களுடன் கலந்து பழகினால்தான் அதற்குத் தகுந்த விடை கிடைக்கும். தன்னைக் காட்டிலும் மேலான புருஷார்த்தம் ஒன்றிருக்கிறதென்பதைத் தெரிந்து நிச்சயித்துக்கொண்டு பிரிட்டிஷ் மக்கள் நடந்துகொள்ளுகின்றனர்."

## வெடிகுண்டுகள் போட்டு முற்றுகை போடுவது.

## பிரிடிஷ் விமானப் படையெடுப்பினால் அதிக பயன்கள் கிடைக்கின்றன.

(விமான உபதலைவர் L. V. பிரேசர் எழுதியது).

பால்டிக் கடலிலுள்ள லூபெக் துறைமுகத்தில் ருஷ்யப் போர்முனைக்கு அனுப்புவதற்காக தொழிற்சாலைகளிலும் துறைமுகத்திலிருக்கும் கப்பல்களிலும் சாமான்கள் ஏற்றி தயாரிலிருந்தன. பனி உருகும் காலம் துவங்கியவுடன் கப்பல்கள் பிரயாணத்திற்குத் தயாராக இருந்தன. கப்பல் பிரயாணத்திற்கு வழி நேராகிவிட்டது. ஆனால் இன்னும் அங்கிருந்த சாமான்களில் பெரும்பாகம் சமுத்திரத்தைத் தாண்டிக்கொண்டு போகமுடியவில்லை. ஏனென்றால் பிரிடிஷ் விமானப்படை குறிக்கிட்டு அவைகளைப் போகவிடாமல் தடுத்துவிட்டது.

யுத்த ஆரம்பத்தில் ஜெர்மானியர்கள் எதிர்பார்த்ததற்குமேல் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதல்கள் ஆரம்பித்துவிட்டன. இந்த வருஷத்திற்கு வசந்த காலத்தில்தான் தாக்குதல் ஆரம்பமாகிறது. ஜெர்மன் நகரங்கள்மீது தாக்குதல்களினால் தீக்கள் பரவியதாகவும், திடீரென்று வெடிகள் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இராக்காலங்களில் லூபெக்மீது தாக்குதல்களில் புகைப்படங்கள் எடுத்ததில் தெரிந்தது மாதிரி மற்ற இடங்களிலும் விசாலமான இடங்களில் தீ பரவியிருந்ததாகப் புகைப்படங்களிலிருந்து தெரிகிறது. தாக்குதல் முடிந்தவுடன் கீழே தீயின் பிரகாசத்தால் புகைப்படங்கள் மங்கலாக எடுக்கப்பட்டிருக்கின்றன. லூபெக்கில் ஏற்பட்ட சேதம்போல் வேறு எந்த ஜெர்மன் நகரத்திலும் ஏற்படவில்லை. ஏக்கர் ஏக்கராக கூறைகள் போன வீடுகள் காணப்பட்டன. அநேக தொழிற்சாலைகள் தீக்கிரையாகின. கப்பல் தங்குமிடங்கள், பண்டகசாலைகள் இவைகள் யாவும் இடிந்து, அழிந்துபோயின.

இதனால் ஜெர்மன் பொதுமக்களின் உணர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி தாக்குதலின் நோக்கம் பிற்பட்டுதான் வெளியிடப்படும். சமுத்திரத்தைக்கடந்து அனுப்பமுடியாமல் அங்கு சாமான்கள் நிறைந்த ஸ்டோர்கள் அநேகம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. திடீரென்று லூபெக்கில் தாக்கினதினால் பின்லிஷ் போர்முனையில் ஜெர்மானியர்களுக்கு சாமான்கள் வரமுடியாமல் போய்விட்டது.

## ஐந்து படைப்பகுதிகளின் யுத்தசாதனங்கள் அழிக்கப்பட்டன.

பிரான்ஸில் ரெனால்ட் தொழிற்சாலைகளிலும், மாட்போர்டு தொழிற்சாலைகளிலும், தாக்குதல்கள் ஏற்பட்டதில் இம்மாதிரி பயன்கள் விளைந்திருக்கிறது. அந்தப் பெரிய யுத்த சாதனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட சேதத்தை புகைப்படங்கள் ரூபிக்கின்றன. ஐந்து ஜெர்மன் படைப்பகுதிகளின் பூரா முஸ்தீப்பு சாதனங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டன. ஆனால் இந்த சேதத்தினால் எங்கேயிருந்த ஐந்து படைப்பகுதிகளுக்குக்கஷ்டம் நேரிட்டதென்று தெரியவில்லை. ருஷ்யாவில் இருப்பவைகளுக்கும் அந்தக் கஷ்டம் ஏற்படலாம். அல்லது லிபியாவில் இருப்பவர்களுக்கும் அம்மாதிரி ஏற்படலாம். அல்லது ஐரோப்பா கண்டத்தில் தற்காப்புக்காக வைத்திருக்கும் படைகளுக்கும் ஏற்படலாம். ரூர் பிரதேசத்திலிருந்து எஃகு ஐரோப்பாவிலுள்ள தொழிற்சாலைகளுக்குப் போகாமல் செய்ததினால் எங்கே இருக்கும் போர் படைகளுக்குப் முதலில் பாதிப்பு ஏற்படுமென்று இப்பொழுது சொல்லமுடியாது. ரூர் பிரதேசத்தில் மேற்குக் கோடியிலிருக்கும் தைஸன் (Thyssen) எஃகு தொழிற்சாலைகளின்மேல் பிரிடிஷ் விமானப்படை வெடிகுண்டுகள் போட்டதினால் கிழக்கு ஜெர்மனியிலிருக்கும் சில தொழிற்சாலைகள் வேலையில்லாமல் இருக்கலாம்.

பிரிடிஷ் விமானப்படையின் வெடிகுண்டு தாக்குதல்களினால் இன்னும் அதிகப் பயன்களும் உண்டு. பிரிடிஷ் கப்பற்படையும், ஆகாய விமானப் படையும் ஒன்றுக்கொன்று அடைந்திருக்கும் ஆயுதங்களின் பலாபலத்தைத் தெரிந்து



கொண்டு அதற்குத் தக்கவாறு ஒத்துழைக்கின்றன. ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு தேவையான டீசெல் (Diesel) யந்திரங்கள் செய்யும் ஹாம்பர்க் தொழிற்சாலையிலோ, ஆக்ஸ்பர்க்கிலுள்ள ஏதாவது ஒரு தொழிற்சாலையிலோ, அல்லது ஜெர்மனியின் பெரிய கப்பல் தளங்களில் ஒன்றிலோ வெடிகுண்டுகள் போட்டால் ஜெர்மனியின் பலம் வெகு ஜாஸ்தியாகக் குறைந்துவிடும். இது தான் வெடிகுண்டு தாக்குதலால் போடக்கூடிய முற்றுகை. யுத்த முயற்சியால் போடப்படும் முற்றுகையைக் காட்டிலும் வேறு எந்த ஆயுதமும் அதிகப்பயன் தரசகூடியதாக இருக்கமாட்டாது. முந்தி நடந்த யுத்தங்களிலேயே இந்த ஆயுதத்தை எந்த சந்தர்ப்பத்தில எப்படி உபயோகிக்கலாம் என்று பிரிடன் தெரிந்துகொண்டிருக்கிறது. புதிய ஆயுதங்களுடன் நூதன முறைகளில் பிரிடன் அம்முற்றுகையை இப்பொழுது உபயோகித்துவருகிறது. சமீபத்தில் பாம்பர் விமானப்படைத்தலைவர் பிரிடனின் வெடிகுண்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு அனுப்பிய செய்தியில், “நீங்கள் வெடிகுண்டுகள் ஏராளமாக உற்பத்தி செய்யுங்கள்; நாங்கள் ஜெர்மன் பிரதேசங்களில் இடைவிடாமல் வீசி சேதத்தை விளைவித்து வருகிறோம்.” என்று தெரிவித்திருக்கிறார்.

## பகல்காலத் தாக்குதல்கள் அதிகரிக்கின்றன.

ஜெர்மனி சண்டை செய்யும் எல்லாப் போர்முனைகளிலும் பிரிடிஷ் விமானப் படை சென்று வெடிகுண்டுகள் போட்டு சேதத்தை உண்டாக்குவதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. பைடர் விமானப்படைப்பகுதியும் பாம்பர் விமானப்படைப் பகுதியும் ஒன்று சேர்ந்து மேற்குப் போர்முனையில் பகற்காலத்தில் முன்னேறித் தாக்கி ஜெர்மனிக்கு உதவியளிக்கும் ஜெர்மன் தொழிற்சாலைகளைத் தகர்த்து வருகின்றன. வசந்த காலத்தில், ஆயிரக்கணக்கான பிரிடிஷ் பைடர் விமானங்கள் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து தினம் சண்டைக்குச் செல்லுகின்றன. அவைகளுடன் வெகு வேகமாய் பறக்கும் போஸ்டன் பாம்பர்களும் செல்லுகின்றன. இந்த பாம்பர்களை ஜெர்மானியர் அலக்ஷியம் செய்ய முடியாது. அவர்களின் மெஷர்ஷிமிட்ஸ் விமானங்களுக்கு நமது பைடர் விமானங்களுடன் சண்டை செய்யவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பகற்காலத்தில் பூராவும் வெடிகுண்டு போடுவதினால் மேற்குப் போர்முனையில் ஜெர்மனிக்குள்ள சாதனங்கள் எல்லாம் குறைந்துகொண்டே போகின்றன. இப்பொழுது சதா காலமும் நேரிடும் விமானப்போரில் ஜெர்மன் பைடர் விமானப்படையின் பலம் குன்றிவருகிறது. அதனால் அவ்விமானங்கள் வேறு போர் விமானங்களுக்குச் சென்று போரில் ஈடுபட முடியாமல் போய்விடுகிறது. இத்துடன் பாம்பர் விமானப்படைப் பகுதியின் இராக்கால தாக்குதலைத் தடுக்க தற்காப்புக்காக 15 லக்ஷம் ஜெர்மானியர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படையில் இராக்காலத்தில் சண்டை செய்யக்கூடிய அதிக பயிற்சி பெற்ற பைடர் விமானப்படை பலமும் சேர்ந்து இருக்கிறது. பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர்களும், பைடர்களும் ஒவ்வொரு பகுதியாக ஐரோப்பா கண்டத்தில் போய் தாக்கி வருவதைத் தடுப்பதற்கு ஜெர்மன் தற்காப்புச் சைனியம் இன்னும் அதிகமாகப் பலப்படுத்திக்கொள்ளவேண்டிவரும். மேலும் ஆங்காங்கு பிரிடிஷ் விமானப் படை அடிக்கடி வருவதினால், ஜெர்மன் அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் ஸ்வதந்திர மக்களுக்கு தைரியம் அதிகரித்து வருகிறது.

---

## அமெரிக்கப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

---

**கிரிஸ்தியன் ஸயன்ஸ் மானிடர் பத்திரிகையில் ரோஸ்கோ டிரம்மண்டு எழுதியது**

**ஏப்ரல் 17ஆ.**—திட்டப்படியே செய்யப்பட்டுவருகிறது. விமானங்கள், டாங்கிகள், தளவாடங்கள் முதலியவைகளின் உற்பத்திக்கணக்கை டிஸம்பர் மாதத்தில்

ரூஸ்வெல்ட் திட்டம் செய்தபடி தற்சமயம் நிறைவேற்றப்படுகிறது. யுத்த சாமான்களின் உற்பத்தி சம்பந்தப்பட்டவரையில் எல்லாம் சாதகமாகவே இருந்து வருகிறது. இன்னும் சில மாதங்களுக்குள் 60,000 விமானங்களும், 45,000 டாங்கி களும், கட்டி முடிவடைந்துவிடும். 20,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளும், 8,00,000 டன் நிறையுள்ள சப்பல்களும் கட்டி முடிவடைந்துவிடும். ஆனால் இத்துடன் இல்லாமல் மேலும் மேலும் ஏராளமாகக் கட்டப்படும்.

**நியூ யார்க் டைம்ஸ் ஏப்ரல் 10௳.**—அமெரிக்க லேபர் சங்கத்திலிருந்தும், நியூ யார்க்கிலுள்ள தொழிற்சாலைக் கூட்டத்திலிருந்தும் பிரதிநிதிகள் வந்து ஜெர்மன்—அமெரிக்க வர்த்தகச் சங்கத்தின் வெற்றிக்கமிட்டியில் சில அறிவிப்பு களைச் செய்தனர். அதாவது "அமெரிக்கா முன்னேறிப் போர் நடத்தி ஹிட்லரை நசுக்கவேண்டுமென்று ஜெர்மன்—அமெரிக்கர்கள் அபிப்பிராயத்தைக் குறிக்க ஒரு பாம்பர் விமானம் கவர்ன்மெண்டிற்குப் பரிசாகக் கொடுக்கப்படும். அமெரிக்காவிலுள்ள ஜெர்மானியர்களான நாங்கள் ஜனநாயகத்தின் வெற்றிக்காக உதவி செய்யவேண்டும்."

**பிராவிடன்ஸ் ஈவினிங் புலிடின் (Providence Evening Bulletin) ஏப்ரல் 18௳.**—1940-ம் வருஷ கோடைகாலத்தில் நடந்த சண்டையில் பிரான்ஸின் அந்தரங்கருணமும், கௌரவமும், தேசிய உணர்ச்சியும், சோபையும் அழியவில்லை. தோல்வியடைந்தாலும் பூரா அழிந்துவிடவில்லை. ஏதோ சிலர் துரோகி களானார்களே தவிர மற்றவர்கள் எதிரி வசப்படவில்லை. ஹிட்லர் முடிந்தவரை பாடுபட்டுப் பார்த்தான். அவனாலேயே முடியவில்லை. தற்சமயம் பியரி லவாலாலும் முடியாது.

---

## வெகுதூரம்வரை செல்லக்கூடிய பாம்பர் விமானங்கள்.
## மூன்று விசேஷ சம்பவங்கள்.
## எவ்விதம் பிரிடன் ருஷ்யாவிற்கு உதவியளிக்கிறது.
## ஹிட்லரின் பின்னணித் தலைவர், லவால்.

(உபதலைவர் ஸர். டக்ளஸ் ப்ரௌன்ரிக் எழுதியது.)

சென்ற ஏப்ரல் மாதம் 23-ம் தேதியுடன் முடிந்தவாரத்தில் வெகு தூலைவரை சென்று தாக்க சக்திவாய்ந்த அமெரிக்க, பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் தூரக் கிழக்கிலும், ஐரோப்பாவிலும் சென்று தாக்கி பல சேதங்களை விளைவித்தன.

மிகவும் கனமான பாம்பர் விமானங்களைக்கொண்டு பிலிப்பைன்ஸிலுள்ள ஜப்பானியர்களை தளகர்த்தர் ரால்ப் ராய்ஸ் (Ralph Royce) தாக்கி வெற்றி யடைந்தார். அப்போரில் பாம்பர் விமானங்கள் மகத்தான சேவை புரிந்தன. உதாரணமாக அவைகள் எதிரிகளை லக்ஷியம் செய்யாமல் அங்கிருந்த 30 பிரயாணி களையும் ஏற்றிக்கொண்டு பத்திரமாக அவைகளின் தளத்திற்கு வந்துசேர்ந்தன. அவ்விமான தளம் எங்கிருக்கிறதென்ற விஷயம் ஒருவருக்கும் தெரியாது. அது படையெடுப்பு நடந்த இடத்திலிருந்து வெகு தூலையில் இருக்கிறதென்று மட்டில் நாம் ஊகிக்கலாம்.

சில நாட்கள் சென்றன. ஆக்ஸ்பர்க்கிலுள்ள ஜெர்மன் தொழிற்சாலையை வெகுதூலைவரை செல்லக்கூடிய பிரிடிஷ் பாம்பர்படை லக்ஷியத்திற்கு வெகு அருகாமையில் பறந்துசென்று வெடிகுண்டுகளை வீசினவென்று செய்திகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்த ஆபத்தான காரியத்தை செய்துமுடிக்க 12 பாம்பர் விமானங்கள் புறப்பட்டன. நடுவழியில் 7 விமானங்கள் அழிந்து போயின. எஞ்சியுள்ள ஐந்து வெடி விமானங்களே லக்ஷியம் இருக்குமிடத்திற்குச் சென்று அதற்கு சேதத்தை விளைவித்துவிட்டு திரும்பிவந்தன. இம்மாதிரி மகத்தான விமானப் படையெடுப்பு இதற்குமுன் எந்த சமயத்திலும் இருந்த



தில்லை. இவ்விமானப்பகுதி அரும், பெரும் தீரச் செயல்களைச் செய்தனவென்றும், அதில் உயிர் துறந்தவர்கள் யாவரும் நல்ல பிரக்யாதி அடைந்துவிட்டார்கள் என்றும் பிரதம மந்திரி தன் தேசத்தார்களின் சார்பாக அதைப் புகழ்ந்து விமானப் படைக்கு ஒரு செய்தி விடுத்தார். இதுதான் இரண்டாவது விமானப் படையெடுப்பு.

### ஜப்பான்மீது படையெடுப்பு.

ஜப்பான் தீவிலுள்ள பல முக்கியமான இடங்களை அமெரிக்க பாம்பர் விமானங்கள் தங்கள் விமானதளத்திலிருந்து வெகுதூலைவரை பறந்துசென்று தாக்கின. இதுதான் மூன்றாவது விமானத் தாக்குதல். அப்பொழுது டோக்கியோ, யோகஹாமா, நாகோயா, கோப் முதலியவைகள் பலமாகத் தாக்கப்பட்டன. இனி அடுத்துவரும் தாக்குதல்கள் மிகவும் கடுமையாக இருக்குமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. படையெடுப்பு பூரா விவரங்களும் நமக்கு இன்னும் தெரிய வில்லை. ஆனால் அதில் விளைந்த பயன்கள் மனதிற்கு அதிக திருப்தியை யளிக்கின்றன. டோக்கியோ நகரத்தில் யாவும் கடுதாசி வீடுகளே. எரிகுண்டுகள் போடுவதற்கு அவைகள் சரியான லக்ஷியம் என்று சொல்லப்படும். அது வாஸ்தவம்தான். ஏன் அங்குள்ள வீடுகள் யாவும் கடுதாசி போன்ற மிகவும் லேசான சாமான்களைக்கொண்டு கட்டப்படவேண்டும்? அந்நாடுகளில் மிகவும் கெட்டியாக வீடுகள் கட்டப்பட்டால், அடிக்கடி பூகம்பங்கள் ஏற்படுவதினால் வீடுகள் அழிந்துவிடும். அது காரணத்தினால் உயிர்ச்சேதம் ஏற்படாமல் தடுப்ப தற்காக இம்மாதிரி லேசான சாமான்களைக்கொண்டு வீடுகள் கட்டப்படுகின்றன. அதனால் பூகம்பத்தால் ஏற்படும் சேதத்தைப்போலவேதான் விமானத் தாக்குதலி லும் சேதம் ஏற்படும். இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் ஜப்பான் விமானத் தாக்குதலுக்கு முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டும். திரும்ப அவர் களுக்கு நேரிடக்கூடியதை எண்ணி அவர்கள் உஷாராகவேண்டும்.

### ஜெர்மனியின் மீது விமானத் தாக்குதல்கள்.

இம்மாதிரி விரோதி பிரதேசங்களில் நேசதேச விமானங்கள் வெகுதூலைவரை சென்று தாக்கிவந்தன. இதை விட பிரான்ஸின்பேரில் அநேகமாக தினசரி விமானப் படையெடுப்பு ஏற்பட்டது. இன்னும் ஜெர்மனியை இரவில் பாம்பர் விமா னங்கள் போய் தாக்கிவருவதும் குறைந்தபாடில்லை. இவ்விரண்டு படையெடுப்பு களின் பயனாக பிரான்ஸிலும், மேற்கு ஜெர்மனியிலும் லுப்ட்வாபியின் பெரும் பகுதியை நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று.

இதைப்போலவே மால்டா தீவினர் ஜெர்மன் விமானப் படையெடுப்புகளை சமாளித்துக்கொண்டு சில மாதங்கள் வரை எதிரியின் விமானப் படைக்கு அலைக்கழிவும், சோர்வும் விளைவித்து ஒரு பெரிய ஜெர்மன் விமானப் பகுதியை அங்கேயே நிறுத்திவிட்டனர். இதன் பயனாக ருஷ்யப் போரில் அப்பகுதி ஈடுபட முடியாமல் போய்விட்டது.

இந்நிலைமையில் பிரிடனும், அதன் சாம்ராஜ்யமும் ஐரோப்பாவில் ஜெர்மனியைத் தாக்க மறு போர்முனையை ஏற்படுத்துவதைக் காட்டிலும் அதிக பயன் கொடுக்கக்கூடிய விதமாக ருஷ்யாவுக்கு உதவியளித்துவருகின்றன. மறு போர்முனை ஏற்படுத்தினால் இப்பொழுது கப்பல்களில் ஏற்றியனுப்பப்படும் யுத்த தளவாடங்கள், இன்னும் முக்கியமான சாமான்கள் இவைகளில் பெரும்பாலும் அங்கு அழிந்துவிட நேரிடும். ஆதலால் நேசநாடுகள் ஒன்றுசேர்ந்து புதிதாக ஏற்படும் போர்முனைகளுக்கு துருப்புகள் ஏற்றிச்செல்லவும், ருஷ்யா, சைனா இவைகளுக்கு யுத்த தளவாடங்கள் ஏற்றிச் செல்லவும் போதுமான கப்பல்களைச் சேகரம் செய்யும்வரை, இப்பொழுதுள்ள நிலைமைக்குத் தக்கபடி நாம் இம்மாதிரி சிக்கனமான முறைகளைக் கையாளுவோம். மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் இது வகைக்கு மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

### லவாலின் நடவடிக்கை.

பிரான்ஸின் அரசியலில் ஏற்பட்ட மாறுதல்களைக் குறித்து சொல்லவேண்டியது அவசியம். ஏனென்றால் இப்பூரா உலகத்திலோ அரசாங்கத்திலோ, ராணுவத்திலோ

ஏற்படும் எந்த மாறுதலும் ஏதேனும் ஒரு ராஜதந்திரத்தை முன்னிட்டுத்தான் இருக்கக்கூடும். பிரான்ஸில் தந்திரமாக லவாலை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தது பூராவும் ஹிட்லரின் முயற்சியேயாகும். தான் கிழக்குப் பிராந்தியத்தில் கவனத்தைச் செலுத்திவரும்பொழுது, பின்னணித் தலைமையை வகிக்க லவாலை நியமிக்க வேண்டுமென்பதே ஹிட்லரின் முக்கிய நோக்கம். ராஜத்துரோக நடவடிக்கைகளைச் செய்ய, பிரெஞ்சுக் கப்பற்படையின் பகுதிகளை இந்த பின்னணித் தலைவன் ஹிட்லருக்கு உதவியாக அனுப்பினால், எதிரிக்கு ராணுவபலம் அதிகரித்து அபாயம் ஏற்படலாம். ஆனால் முக்கியமான பெரிய பிரெஞ்சுக் கப்பல்கள் பழுதுபட்டுப்போய் யுத்தத்திற்கு லாயக்கில்லாமல் கிடக்கின்றன. மேலும் பிற்பட்டு வட ஆபிரிக்கா, பிரான்ஸ் இவைகளிலுள்ள துறைமுகங்களுக்கு அனாவசியமாகச் சென்றதின் பயனாகவும் அவைகள் லாயக்கில்லாமல் கிடக்கின்றன. ஆனால் சிறு யுத்தக் கப்பல்கள் முக்கியமாக நீர்மூழ்கிகள் மத்தியதரைக்கடலில் இருக்கும் அச்சுநாட்டுக் கப்பற்படையுடன் சேர்ந்தால், அதற்கு பலம் அதிகரிக்கும். ஏனென்றால் மத்தியதரைக்கடலில் இதாலிய நீர்மூழ்கிகள் 47-க்குக் குறைவில்லாமல் மூழ்கடிக்கப்பட்டு அதனடியில் கிடக்கின்றன.

---

## வான் பேபன் அங்காராவுக்குத் திரும்பினான்.
## ஜெர்மன் தாக்குதல் எந்த திசையில் ஏற்படும்.
## துருக்கி பிரிட்டனின் சிநேகத்தையே ஆதரிக்கிறது.

(லியோனார்ட் கிரஷான் எழுதியது.)

நாளாக ஆக ஜெர்மனியரின் வசந்த காலத்தாக்குதல் காலம் நெருங்குகிறது. கொஞ்சகாலமாக ஜெர்மானியர்கள் என்ன செய்வார்கள் என்பதைப்பற்றி சொல்லி வந்த ஜோஸியம் பொய்யாகிக்கொண்டே வருகிறது. ராஜீய வட்டாரங்களில் இதைப்பற்றி யோசிப்பதில் ஒன்றும் குறையவில்லை. அமைதி இருப்பது போல் தோன்றுவதில் ஜெர்மானியர்கள் வேறு எங்கேயோ பரபரப்பாக இருக்கிறார்கள். அதற்கு அறிகுறிகள் இருக்கிறதா என்பதை ஆவலுடன் கவனித்து ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன.

### பேபன் துருக்கியைப்பற்றி குறைகூறுகிறான்.

இப்பொழுது பேபன் திரும்பி வந்த பிறகும் துருக்கியின் கொள்கை மாறினதாகத் தெரியவில்லை. வர்த்தக ஒப்பந்தத்திலுள்ள கஷ்டங்களைக் குறித்து துருக்கி அயல்நாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசும்பொழுது பேபன் புகார் செய்ய முயன்றது உண்மை. துருக்கியின் வியாபாரம் உண்மையில் குறைவாகத்தான் இருக்கிறது. வியாபாரம் நடக்கிறதோ என்று கூட சந்தேகமாகத்தானிருக்கிறது. அதற்கு துருக்கியர்கள் தான் ஜவாப்தாரியென்று அவன் பழி சுமத்த எத்தனித்தான்.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான கொள்கைகளின்படிகூட ஜெர்மானியர்கள் நடக்கவில்லையென்பதை வான் பேபனுக்குச் சுட்டிகாட்டப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் முதல் கொள்கையானது முதலில் ஜெர்மானியர்கள் துருக்கிக்கு சாமான்கள் அனுப்பவேண்டும். அவைகள் வந்த பிறகுதான் அந்தப் பொருள்களின் விலைக்குத் தக்கபடி ஜெர்மனிக்குத் துருக்கியிலிருந்து அனுப்புவதற்குப் பொருள்கள் தயாராகயிருக்கும்.

துருக்கியில் ஜெர்மானியர்கள் ஏராளமாக புகையிலை வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் வாங்கிய சாமான்களில் புகையிலைதான் முக்கியமான வஸ்து. ஆனால் அவைகளைக் கப்பலில் ஏற்றிச்செல்ல அவர்களால் முடியவில்லை. அதற்கு மேலே சொல்லப்பட்ட காரணமொன்று. மேலும் கருங்கடல் பாதை சாவதானமில்லை. ஐரோப்பாவுக்கு ரயில்வே போக்குவரத்து வசதியில்லை. ஏனென்றால் ஸிம்பளான்



பாதையிலிருந்த மாரிட்ஸா பாலங்கள் உடைக்கப்பட்டு, இன்றும் அப்படியே கிடக்கின்றன. ஜெர்மனியில் கடைகளுக்கு முன்னால் புகையிலை வாங்க வெகு நேரம் காத்திருந்தும் ஸிகொரட்டுகளுக்காகக் கொடுக்கப்படும் திட்டச்சீட்டுகளிலிருந்து ஐந்து முதல் பத்து ஸிகெரெட்டுகளுக்கு மேல் வாங்க முடியாமல் ஏமாந்துபோய்விடுகிறார்கள்.

### உறுதிமொழி கோரப்படுகிறது.

அதே சந்திப்பில் துருக்கியை ஜெர்மனி தாக்கப்போவதில்லை என்று பேபன் உறுதி சொன்னது மட்டுமல்ல. பல்கேரியாவை துருக்கி தாக்கப்போவதில்லை என்று உறுதி சொல்லும்படி பேபன் பல்கேரியா சார்பாக கேட்டுக்கொண்டானென்று அங்காராவில் விஷயம் தெரிந்த ராஜீய வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

அச்சு நாடுகளுடன் சேர்ந்த சிறு நாடுகளைத் தன்னுடன் சேர்த்து யுத்தம் புரியச் செய்வதில் ஜெர்மானியர்களுக்கு இன்னும் சில கஷ்டங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அந்தச் சிறு நாடுகள் ஜெர்மனியுடன்கூட ஒத்துழைக்க விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஜெர்மனியுடன்தான் அவை இருக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. இது மாதிரியாக பல்கேரியாவை துருக்கி தாக்க எதிர்பார்த்ததாகவே சொல்லி பல்கேரியா பாசாங்கு செய்துவருகிறது. அங்காராவிலிருக்கும் பல்கேரியா மந்திரி சில காலமாக நகரத்தைச் சுற்றிவந்து பல்கேரியாவைத் துருக்கி தாக்காமலிருக்கும்படி உறுதி கேட்டுவருகிறார். ஆனால் அவனுக்குக் கிடைத்த உறுதிப்பாடுகள் அவனுக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆதலால் வான் பேபன் அவனுக்குப் பதிலாக அனுப்பப்பட்டிருக்கிறான்.

சென்ற வாரத்தில் நான் சந்தித்த ராஜீய வாதிகள் எல்லாம் வருகிற வசந்த காலத்திலும், கோடைகாலத்திலும் துருக்கி தாக்கப்பட மாட்டாது என்று நிச்சயமாகச் சொல்லுகிறார்கள். ருமேனியாவிலும் இதே விதமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ருமேனியர்கள் சொல்லும் காரிய காரணங்களில் சில பாகங்கள் திருப்திகரமாக இல்லை.

### வரப்போகும் ஜெர்மன் தாக்குதல்.

ருமேனியாவிலிருந்து சமீபத்தில் வந்திருக்கும் சில வர்த்தகர்கள் ஜெர்மன் தாக்குதல் ருஷ்யாவைக் குறித்தும், விசேஷமாக தெற்கே காகஸஸ் பக்கம்தான் இருக்குமென்று துருக்கியர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். எச்செலவிலும் ருஷ்ய எண்ணெயைக் கைப்பற்ற ஜெர்மானியர்கள் விரும்புகிறார்கள். ருமேனியாவில் உற்பத்தியாகும் எண்ணெய் 54,00,000 டன்களிலிருந்து 60,00,000 டன்கள் வரைதான் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை உத்தியோக முறையில் 1939-ல் சொல்லப்பட்டது. கிணறு தோண்டும் கருவியில்லாததினால் இதற்குமேல் அவர்களால் எண்ணெய் எடுக்க முடியவில்லை.

இப்பொழுது ஜெர்மனிக்கு ஆகாய விமானத்திற்கு வேண்டிய பெட்ரோல் அதிகம் தேவையில்லை. ஆனால் கைத்தொழில் வேலைகளுக்கும், நீர்மூழ்கிகள் செல்லுவதற்கும் வேண்டிய எண்ணெய்தான் மிகவும் முக்கியமாக இருக்கிறது. அத்தகைய எண்ணெய் வேறு வகையில் தயாரிக்க முடியாததினால் அவர்களிடம் இருப்பு குறைந்துகொண்டு வருகிறது. அமெரிக்கக் கப்பல்கள் திட்டம் பூராவும் அமுலுக்கு வரும்பொழுது ஜெர்மானியர்கள் அவர்களின் நீர்மூழ்கிகளைக்கொண்டு தான் அமெரிக்கக் கப்பல்களைத் தாக்கவேண்டும். இந்த நிலைமையில் அவர்களுக்கு எண்ணெய் குறைந்துவிட்டால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. அமெரிக்கக்கப்பற்படை அடுத்த மாரி காலத்திலோ, அல்லது வசந்த காலத்திலோ தயாராகி விடும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆகவே சரத்காலத்திற்கு முன் காகஸஸை அடைந்து வசந்த காலத்திற்கு முன் எண்ணெய்க் கிணறுகளை தயார் செய்வது அவசியமென்று ஜெர்மானியர்கள் அவசரப்படுவதை நாம் பார்த்து வருகிறோம்.

ருஷ்யாமீது படையெடுப்பில் ஜெர்மானியர்களுக்கு அபஜெயம் உண்டானால் தான் இராக்கிலுள்ள எண்ணெய்க் கிணறுகளை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொள்வதற்காக துருக்கிமீது பாய நேரிடுமென்று ருமேனியர்கள் சொல்லி வருகிறார்கள். இப்பொழுது ருஷ்யப் போர்முனையில் ஜெர்மானியத் துருப்புகள் எதிர்த்து முன்னேற முடியாமல் போனால், அவர்கள் சைனியங்கள் முற்றிலும் முறியடிக்கப் பட்டு அடுத்த மாரி காலம் முடியும் வரை காத்திருக்க வேண்டி வரும் என்று அங்காராவிலுள்ள எல்லா துருக்கிய வட்டாரங்களிலும் சொல்லப்படுகிறது. ராணுவ நடவடிக்கை மூலமாகப் பார்த்தாலும் பெரிய யந்திர சாதனப்படைகளை தெற்கு ருஷ்யாவில்தான் அணிவகுப்பதற்கு சாதகமாயிருக்குமென்று தெரிகிறது.

சைபிரஸின் பேரில் கிரீட்டிலிருந்து தாக்குவதற்கு சந்தர்ப்பம் இருப்பதாக சில வட்டாரங்களில் சொல்லப்படுகிறது. இம்மாதிரி நடக்குமா என்று இப்பொழுது சுமார் இரண்டு மாதமாக அங்கு விவாதிக்கப்பட்டு வருகிறது. அப்படி ஜெர்மானியர்கள் ஏதாவது தாக்கினால் அவர்களுக்கு விபரீதங்கள் ஏற்படும். சைபிரஸைத் தாக்குவதில் அவர்களுக்கு ஒருவித பயனும் ஏற்படாது. ஸிரியாவைத் தாக்கினால் அங்கே எதற்கும் தயாராகயிருக்கிற புதிய பிரிடிஷ், நேசதேசத் துருப்புகளை அவர்கள் சந்திக்க நேரிடும். அங்காராவிலுள்ள பிரிடிஷ் ராணுவ வட்டாரங்களில் இப்படி ஜெர்மானியர்கள் தாக்குவதாய் இருந்தால் நேசதேசத்தார்கள் போட்டிருக்கும் திட்டம், ராணுவ கோட்பாட்டின்படி ஒரு தீரச்செயல் என்றும், இதுவரை ஜெர்மனி ஒரு விதமான தீரச்செயலும் செய்ய இறங்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

## துருக்கியின் நடுநிலைமை.

இதன் மத்தியில் துருக்கியின் அரசியல் நிலைமை அமைதியாக இருக்கிறது. வான் பேபனின் பேரில் வெடிகுண்டுபோட முயற்சித்தவர்களுடன் சேர்ந்த குற்றவாளிகளின்பேரில் அங்காராவில் விசாரணையை நாம் கவனித்து வருகிறோம். அந்த விசாரணை முடிய இன்னும் கொஞ்சகாலம் பிடிக்கும், ஏனென்றால் வாரத்திற்கு ஒரு நாள்தான் விசாரணை நடக்கிறது. ஓய்வு நேரங்களில் துருக்கி பாஷையில் எழுதப்பட்டிருக்கும், சாக்ஷி வாக்குமூலங்களும், தஸ்தாவேஜுகளும் எதிரிகளுக்கு அனுகூலமாக இருக்கவேண்டி ருஷ்ய பாஷையில் மொழிபெயர்க்கப் படுகின்றன. அக்குற்றத்தில் சம்பந்தப்பட்ட ருஷ்யர்கள் இவைகளைக்கொண்டு தாங்கள் நிரபராதிகள் என்று ருஜு செய்துகொள்ளக்கூடும்.

இந்த விசாரணையினால் ராஜீயப் போக்கில் பயன் இருக்குமா என்பதைக் குறித்து இப்பொழுது சொல்ல முடியாது. துருக்கியர்கள் இந்தக் கேஸை பாரபக்ஷமின்றியில் பார்த்து வருகிறார்கள். துருக்கி பின் நடுநிலைமைக் கேற்றவாறு இந்த சம்பவத்தில் தனக்கொன்றும் பொறுப்பில்லை என்று காட்டுவதற்காகவே முக்கிய கவனத்தைச் செலுத்துகிறது. இக்கேஸைப்பற்றி ஜெர்மானியர்கள் ருஷ்யர்களுக்கு விரோதமாகவும் ருஷ்யர்கள் ஜெர்மானியர்களுக்கு விரோதமாகவும் இரு கக்ஷியினரும் பிரசாரம் செய்துவருகிறார்கள். ஆனால் துருக்கிப் பத்திரிகைகளில் இதைப்பற்றிய விமர்சனம் ஒன்றும் இல்லை. இதுவரையில் நடந்த விசாரணையில் துருக்கிய எதிரிகள் சொன்ன வாக்கு மூலங்களிலிருந்து ஜெர்மானியர்களுக்குத் திருப்தி ஏற்படுகிறது. இருந்த போதிலும் ருஷ்யர்களுக்கும், துருக்கியர்களுக்கும் உள்ள பாந்தவ்யத்திற்கு யாதொரு குறைவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## கைதிகளை மாற்றிக்கொள்ளுதல்.

துருக்கி முற்றிலும் நடுநிலைமையாக இருப்பதில் பெரிய சாதகம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது செவ்வாய்க்கிழமை தினம் ஒரு பிரிடிஷ் சிகிச்சை வசதியுள்ள கப்பலும், இதாலிய சிகிச்சை வசதியுள்ள கப்பலும் ஸ்மிர்னா துறைமுகத்திற்கு வந்தன. மறுநாள் அவ்விரு கப்பல்களிலிருந்த மிகவும் காயமடைந்த ஸைநிகரும், அவர்களுக்கு பாதுகாப்பாளர்களும் மாற்றிக்கொள்ளப்பட்டனர். இதுதான்



முதல் தடவை. இன்னும் அநேக தடவைகள் இம்மாதிரி நடைபெறும். இந்த யுத்தத்தின் மத்தியில் இத்தகைய நல்ல காரியத்திற்கு கிழக்கு மத்தியதரைக் கடலில் ஸ்விட்ஸர்லாந்துக்கு சமானமாக துருக்கியை பொருக்கி எடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

ஆறு மாதங்களாக துருக்கி அரசாங்கம் மூலமாகவும் சர்வ தேச செஞ்சிலுவை சங்கம் மூலமாகவும் அந்தந்த அரசாங்கங்களுடன் பேச்சு நடைபெற்று வருகிறது. இஸ்தான்புல் 'வாடான்' பத்திரிகைக்கு ஸ்மிரானாவிலிருக்கும் நிருபர், "இந்த நல்ல காரியத்திற்கு துருக்கி நகரமான ஸ்மிர்னா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஸ்மிர்னா வாசிகள் பெருமையடைகிறார்கள்" என்று தன் பத்திரிகைக்கு கேபிள் மூலம் செய்தி அனுப்பினார்.

## வருங்கால நிலைமையைப்பற்றியப் பிரச்னை.

இனி எப்படி சம்பவங்கள் நேரிடுமென்பதை விவரிப்பதோ முன்யோசனையாகச் சொல்வதோ கடினமானது. இது முதல் சர்வதேச சம்பவங்களைக் குறித்துச் சொல்வதைப்பற்றி வெகு ஜாக்ரதையுடன் இருக்கவேண்டும். ஆனால் நமக்கு வேண்டியதென்னவென்றால், துருக்கி யுத்த ஆரம்பகால முதற்கொண்டு அந்நிய நாட்டுக் கொள்கையை மாற்றாமலிருக்கிறதும், இனியும் மாற்றாமலிருக்கப் போவதும்தான். இப்படித்தான் சில நாட்களுக்கு முன் ஒரு ராஜீய நிபுணர் சொன்னார். அடுத்த சில வாரங்களில் உலகம் பூராவும் அங்காராவின்பேரில் கவனத்தைச் செலுத்தும். துருக்கியும் அடுத்த கோடை காலம் முழுவதும் ஒருவித மாறுதலும் இல்லாமல் இருக்கும்போல் தெரிகிறது.

---

# மோட்டார் தொழிற்சாலைகளில் யுத்த சாமான்கள் செய்யப் படுகின்றன.

# டெட்ராயிட்டில் ஏற்பட்ட மாறுதல்.

டெட்ராயிட் என்ற பெரிய அமெரிக்க நகரில் முன்பு மோட்டார்கள் செய்யப் பட்டு வந்தன. தற்போது அங்கே ஏராள யுத்த சாமான்கள் செய்யப்படுகின்றன. இங்கே 10 லக்ஷம் ஆட்கள் வேலைசெய்துவருகின்றனர். ரீடர்ஸ் டைஜெஸ்டு (Reader's Digest) என்ற பத்திரிகையில் "யந்திர உலகத்தில் இது ஒரு விசேஷ சம்பவம்" என்று மார்க்ரோஸ் என்பவரால வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு, ஐந்து வருஷ திட்டங்களைப் போட்டுக்கொண்டு ருஷ்யாவில் நிகழ்ந்த தொழிற்சாலை முன்னேற்றத்தை ஒப்பிடலாம். டெட்ராயிட் நகரில் பலவருஷங்களாக நடந்துவந்த மோட்டார் தொழிற்சாலை சாமான்களை அப்புறப் படுத்திவிட்டு, நுட்பமான யந்திரங்களை யெல்லாம் பிளந்து எறிந்துவிட்டு யுத்த சாமான்களைச் செய்வதற்கு வசதி செய்யப்பட்டது.

மோட்டார் கட்ட உதவும் யந்திரங்கள் வெய்யிலிலும பனியிலும் தூக்கி எறியப்பட்டன. கட்டி முடிக்கப்பட்டு வெளிநாட்டிற்கு ஏற்றிச் செல்லமுடியாத அழகிய மோட்டார்களும் வெளியே கிடக்கின்றன.

### மாறிய தோற்றம்.

முக்கியமாக சகதி முதலியவைகளில் வேகமாகச் செல்லக்கூடிய டாங்கிகள் செய்யப்படுகின்றன. இவைகளுக்குத் தேவையான பீரங்கிகளும் செய்யப்படுகின்றன. தினம் டாங்கிகள் கட்டப்பட்டு தெருவுகளில் ஓட்டம் விட்டுப் பார்ப்பதால் டாங்கிகளின் குணம் மாடுகளுக்குக்கூட பழக்கமாகிவருகிறது.

டெட்ராயிட்டில்தான் சாமான்களின் உற்பத்தியை அதிகமாகச் செய்யக்கூடிய தந்திரமுள்ள நிபுணர்கள் தயாராகின்றனர். புதிய புதிய தந்திரங்களைக் கண்டுபிடிக்கக்கூடிய சாமர்த்தியம் இவர்களுக்கு உண்டு. நேர்த்தியாகவும் துரிதமாகவும் செய்வதுதான் நோக்கம். இவ்வருஷத்திற்குள் 11 லக்ஷக் கோடி டாலர் மதிப்புள்ள யுத்த சாமான்கள் கட்டிமுடிக்கப்படும்.

கஷ்டமான வேலை,

டெட்ராயிட்டிலுள்ள தொழிற்சாலைகளை யுத்த சாமான்களைச் செய்வதற்கு லாயக்காக மாற்றும்போது 50 இஞ்ஜினியர்களும் மானேஜர்களும் ஒரு மாதம் வரை இரவு 12 மணிவரை ஈடுபட்டனர். இதுவரையில் ஜெர்மனியில்கூட காண முடியாத விதமாக ஏராள சாமான்களைச் செய்வதற்கு லாயக்காக தந்திரங்கள் கையாளப்பட்டன. டெட்ராயிட்டில் நடந்ததைப் பார்த்தால் ஜெர்மனியில் நடப்பது ஒரு பெரிய விஷயமல்ல.

டெட்ராயிட்டில் விமான என்ஜின்களும், ராணுவ வண்டிகளும், ஸ்கவுட் மோட்டார்களும், 6 சக்கரமுள்ள கவசம்பூண்ட வண்டிகளும், யந்திர பீரங்கிகளும், தாணுக விமானங்களைச் சுடும் பீரங்கிகளும், கப்பல் யந்திரங்களும் கட்டப்படுகின்றன.

சீக்கிரமாக யாவும் நடைபெறுகின்றன. புதிய தொழிற்சாலைகளில் ஒருபுறம் வேலையாட்கள் உள்ளே வருவதும் மறுபுறம் சாமான்கள் வெளியே போவதுமாக இருக்கிறது. 125 மைல் நீளமுள்ள குழாயில் இரும்பு உருக்கப்பட்டு வெடிகுண்டுகள் செய்யப்படுகின்றன.

125 பாகங்களுள்ள ஒரு பீரங்கி கட்டபோடப்பட்ட திட்டத்திற்கு ஆறு மாதம் முன்னாடியே கட்டி முடிக்கப்பட்டது.

---

## ஐரோப்பிய சிறிய ஸமஸ்தானங்களின் கதி.

"யோனி ஸபா" (Yoni Sabah) பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

நார்வேயில் ஜெர்மனி படையெடுத்த பிறகு க்விஸ்லிங் (Quisling) குக்குக் கெட்ட பெயர் வந்தது. இனிமேல் அவன் தாய் நாட்டுத் துரோகி என்றே பரம்பரையாக அழைக்கப்படுவான். அடிமையாக்கப்பட்ட தன் நாட்டிற்கே அவன் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டதில் தன் கௌரவத்தைத் தானே குறைத்துக்கொண்டான். அவன் ஜெர்மனிக்குச் சாதமாக ருஷ்யப் போர்முனையான கொலைக்களத்திற்கு, நார்வே தேசத்து இளைஞர்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறான். இவ்விஷயத்தைப் பாராட்டி ஜெர்மன் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்விவரத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே ருஷ்யப் போர்முனையிலுள்ள ஜெர்மன் சைனியங்கள் குதூகலிக்கின்றன.

ஐரோப்பா சிற்றரசு நாடுகளிலுள்ள ஜனங்களை அச்சுநாட்டு வல்லரசுகள் கொடுமையாக நடத்துவதற்கு இது சமீபத்தில் ஏற்பட்ட ஒரு உதாரணம். இதைக் கண்டு மற்ற நாடுகள் பாடங்கற்றுக் கொள்ளவேண்டுமென்பது வீண் பேச்சு. ஏனென்றால் இதைக்கண்டு பயனடைவதற்கு ஐரோப்பாவில் வேறு சிறிய ஸமஸ்தானங்களே கிடையாது. ஐரோப்பாவிலுள்ள எல்லா சிற்றரசு நாடுகளும் வெடிகுண்டு பலாத்காரத்தினால் அடிமையாக்கப்பட்டன. இப்பொழுது அவை கஷ்டத்தையும், துன்பத்தையும் அடைந்திருக்கின்றன. அவைகளுக்கு முன் யோசனை இல்லாததும், கோழைத்தனமும் தான் இதற்குக் காரணம்.

யுத்தம் ஆரம்பித்தபொழுது ஐரோப்பிய சிற்றரசு நாடுகளெல்லாம் யுத்தத்தில் சேராமலிருப்பதற்கே வழிபார்த்தன. அது இயற்கையானது தான். மனித யத்தனத்திலும் அது தான் சாத்தியம். பிறர்தேசங்களை வசப்பற்ற ஆசை



கொள்ளாத நாடுகள் யுத்தத்தில், ஈடுபட விரும்பமாட்டா. ஆனால் தாய் நாட்டை காப்பாற்றுவதற்காக யுத்தத்தில் சேரவேண்டியதும் அவசியம். நியாயமும் கூட. ஆனால் யுத்தம் ஆரம்பித்த பொழுது ஐரோப்பிய சிறு நாடுகளையே பரிசுகளாக அச்சுநாட்டு வல்லரசுகள் எண்ணினார்கள் என்று அவைகள் தெரிந்து கொள்ளவில்லை. அப்படித்தெரிந்து கொள்ள இஷ்டப்படவும் இல்லை. என்ன செலவு நேரிட்டாலும் சரி, அவர்கள் ஸ்வதந்திரம் அழிந்து போனாலும் சரி, அவர்கள் சண்டைசெய்ய விரும்பவில்லை. அவர்களுக்கு சண்டை செய்ய பலமுமில்லையென்றும், சிறிய நாடுகளென்றும், இந்த அரக்கர்களுக்குள் நடக்கும் போரில் முதல் தாக்குதலிலேயே தாங்கள் அழிந்து போவது நிச்சயமென்றும் நம்பினார்கள். அவர்களுக்கு சந்தேகமாயிருந்த போதிலும், மூடநம்பிக்கை கொண்டிருந்தார்கள். அதாவது அவர்கள் நடுநிலைமையாக இருந்தால் யுத்தம் என்ற புயல் காற்றில் அகப்படாமல் தப்பலாம் என்று எண்ணியிருந்தார்கள். தங்கள் வயல்கள், வீடுகள், அழியாமலும், உயிர்ச்சேதம் ஏற்படாமலும் தடுத்து விடலாம் என்று எண்ணினார்கள். சுருங்கச்சொல்லில் நல்ல சௌகரியத்துடன் செல்வந்தர்களாக இருக்க விரும்பினார்கள். அவர்கள் வாழ்க்கை எவ்வளவு கேவலமாயிருந்தாலும் சரி, அவர்களுடைய ஸ்வதந்திரமும், உரிமைகளும் அழிந்து போனாலும் சரி, அவர்களுக்குள்ள சந்தோஷமும், வசதியும் குறைவுபடாமல் இருந்தால் அவ்வாழ்க்கையை நடத்தத் தயாராக இருந்தார்கள்.

ஐரோப்பிய சிற்றரசு நாடுகளில் சில நீங்கலாக மற்றவை இந்த வழியைக் கடைப்பிடித்து நடந்துவந்திருக்கின்றன. நடுநிலைமையாக இருக்கவே அவ்வரசாங்கங்கள் எண்ணி கண்களை இறுக மூடிக்கொண்டு வெளியே நடக்கும் விஷயங்களைக் கவனியாமல் நடுநடுங்கிக்கொண்டிருந்தன. ஆனால் அவைகளும் பழாக்கப்பட்டன. முதலில் பொதுமக்கள் தங்கள் உரிமைகளையும் ஸ்வதந்திரத்தையும் இழந்தார்கள். அடுத்தபடியாக சுகமும் போய்விட்டது. இப்பொழுது பசிக்கொடுமையால் வருந்துகிறார்கள். ஏனென்றால் அவர்களின் உணவை அவர் ஜெர்மானியர்களுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. கட்டாயவேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அந்நிய தேசங்களுக்குத் தொழில் செய்ய அனுப்பப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்களை ஜெயித்தவர்களுக்காக ஆயுதங்கள், வெடிமருந்து முதலியவை அதி துரிதமாக உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. இது மாத்திரமல்ல. அவர்கள் ஏற்கனவே யுத்தத்தில் ஈடுபட பயந்துகொண்டிருந்தார்கள். அப்படி பயந்தும் யுத்தம்வராமல் தடுப்பதற்கு முடியவில்லை. யுத்தப் பேய் அவர்களைப் பிடித்துவிட்டது. அதாவது அவர்களுக்கு போரிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அவர்களின் தாய் நாட்டின் ஸ்வதந்திரமும், சுயேச்சை அதிகாரமும். அழியப் பார்த்திருந்த பொழுது அந்த தேசத்தார்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் இருந்தார்கள். ஆனால் அப்பொழுது தங்களை அடிமையாக்கினவர்களின் தேசத்தைக் காப்பாற்றவும் அவர்கள் தலைமையின்கீழ் தூர தேசங்களில் போய் சண்டை செய்து இறக்கவேண்டிய கதி அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

அச்சுநாட்டு வல்லரசுகளுடன் சிநேக முறையிலிருக்க தீர்மானித்திருந்த ஐரோப்பிய சிற்றரசு நாடுகள் ஒவ்வொன்றாகப் போரில் இறங்கும்படியும் ஆயிற்று. இதுவரையில் அச்சுநாட்டின் சார்பாக பல்கேரியாயும், நார்வேயும் சண்டையில் சேர அழைக்கப்படவில்லை. ஆனால் ருஷ்யப் போர்முனையோ பெரும் பூதமாக இருக்கிறது. மனிதர்களை விழுங்கி வருகிறது. ஆதலால் போர்வீரர்களை அக்கொலைகளத்திற்கு அனுப்பவேண்டியிருக்கிறது. இது காரணத்தினால் க்விஸ்லிங் நார்வேயில் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறான். ஜெர்மன் அரசாங்கம் அங்கு இனி அவசியமில்லாததால் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுவிடும். இந்த நார்வே ஒப்பந்தக்காரன் ஜெர்மனி சார்பாக நடக்க ஒப்புக்கொண்டிருக்கிறான். அவனுடைய எஜமானனைத் திருப்தி செய்வதற்காக தன் தேசத்தார்களை ருஷ்யப் போர்முனையில் முன்னணியில் வைக்க ஏற்பாடு செய்துவருகிறான்.

ஆகவே, அச்சுநாட்டினர் கொடுப்பதாகச் சொல்லும் ஸ்வதந்திரம் என்னவென்று இப்பொழுது நன்றாய்த் தெரிகிறது. முதலில் சிநேகிதம் செய்வதாக

உறுதி சொல்லுகிறார்கள், ஸ்தோத்திரம் செய்கிறார்கள், புகழ்கிறார்கள். பிறகு அவர்கள் அந்நாட்டை பலாத்காரமாகக் கைப்பற்றுகிறார்கள். அந்த நாட்டிலுள்ள பொருளாதாரங்களும், தொழிலாளிகளும் அச்சு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ்ப் போய்ச்சேருகின்றன. பிறகு அச்சு நாட்டின் சாதகத்திற்காக வேலை செய்ய அந்த நாடு நிர்ப்பந்திக்கப்படுகிறது. கடைசியாக அந்த நாட்டிலுள்ள ஜனங்களும் போர்முனைக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்களுக்கு ஜெயித்த நாட்டில் ஒரு பகுதியைக் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்படுகிறது. அல்லது அவர்கள் போர் செய்ய வேண்டியிருக்கிறது. அச்சுநாட்டு வல்லரசுகளும் தங்கள் சூழ்ச்சிகளை நேரிலோ, அல்லது தங்கள் அதிகாரத்திற்குட் பட்டுவரும் தேசத்துரோகிகளின் மூலமாகவோ செய்து முடிக்கிறார்கள்.

ஐரோப்பிய சிற்றரசு நாட்டினர் தங்கள் நடுநிலைமையை பாதுகாத்துக் கொள்ளமுடியவில்லை. வெளி நிர்ப்பந்தத்திற்குப் பயப்படாமலிருக்க ஒருவித பரித்தியாகமும் செய்ய அவர்கள் தயாராக இல்லை. தங்கள் தாய் நாட்டையும் ஸ்வதந்திரத்தையும் சுயேச்சை அதிகாரத்தையும் காப்பாற்றிக்கொள்ளச் சக்தியிருப்பதாக அவர்களுக்கு தங்களிடம் நம்பிக்கையில்லை. ஆதியிலேயே எதிரிகளுடன் போர்செய்ய வேண்டிய கடமையைச்செய்யாமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் இழந்த எல்லாப் பயன்களையும் இப்பொழுது அச்சுநாட்டினரிடமிருந்து அடைய எதிர்பார்க்கிறார்கள். இப்படி இருந்தும் அவர்களுக்கு என்ன லாபம் கிடைத்திருக்கிறது? ஒன்றுமில்லை.

---

## ஜப்பான் ஆக்கிரமித்த பிரதேசங்களிலுள்ளவர்களைக் குறித்த தகவல்.

(ஸர்க்காரவர்கள் பிரஸ் கம்யூனிகே *R. C. A.-10,—4128 of 1942*).

பர்மாவிலும் தூரக்கிழக்கிலும் ஜப்பான் ஆக்கிரமித்த பிரதேசங்களில் இருக்கும் பிரிடிஷ் ஆளுகைக்குட்பட்ட ஐரோப்பியர்கள் உள்பட எல்லா பொது மக்களைக்குறித்த தகவல்கள் இந்தியன் ஓவர்ஸீஸ் இலாக்காவில் (Indians Overseas Department) கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். ராணுவப்படை, விமானப்படை, கப்பற்படை இவைகளில் சேர்ந்தவர்களைக் குறித்த தகவல்கள் இந்தியப்பாதுகாப்பு இலாகாவில் (Defence Department) கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

2. ஜப்பான் ஆக்கிரமிக்காத பிரதேசங்களிலுள்ள ராணுவத்தைச் சேராத பொதுமக்கள் சம்பந்தமாக பஸிபிக் வட்டாரத்தில் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலிருக்கும் இந்தியப் பொதுமக்களைக் குறித்த தகவல்கள் இந்தியன் ஓவர்ஸீஸ் இலாகாவில் (Indians Overseas Department) கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். அந்தப்படி பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் சேராத அன்னிய நாடுகளிலிருக்கும் இந்தியப் பொதுமக்களைக் குறித்த தகவல்கள் அயல்நாட்டு விஷய இலாகாவில் (External affairs Department) கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். பஸிபிக் வட்டாரத்தில் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலிருக்கும் இந்தியரல்லாத மற்ற பிரிடிஷ் பிரஜைகளைக் குறித்த தகவல்களையும், அன்னிய நாடுகளிலிருக்கும் மேற்கண்ட பிரிடிஷ் பிரஜைகளைக் குறித்த தகவல்களையும் அயல்நாட்டு விஷய இலாகாவில் (External affairs Department) கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

---




# விளம்பரம்.

---

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த

## ஸிவில் பாதுகாப்பு

என்ற ஒரு யுத்தப் படம்

(தமிழில்)

புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்

மே மீ 22உ முதல் 25உ முடிய காண்பிக்கப்படும்.

இப்படத்தை

புதுக்கோட்டை

தேசிய யுத்த முன்னணி நிலயம்

பொது ஜனங்களுக்கு சிபார்சு

செய்கிறது.

## புதுக்கோட்டை ஸம்ஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942—

### பிரஸங்கம் 95—(2-வது பிரிவு).

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| மே | ...16, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.30 |
| | 17, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் | ... ,, | 6.00 |
| | | குடுமியாமலை | ... ,, | 6.30 |
| | 18, திங்கட்கிழமை ... | கல்லூர் | ... ,, | 6.00 |
| | | மண்டையூர் | ... ,, | 6.30 |
| | 19, செவ்வாய்க்கிழமை | நச்சாந்துபட்டி | ... ,, | 6.00 |
| | | விராச்சிலை | ... ,, | 6.30 |
| | 20, புதன்கிழமை ... | வெங்களூர் | ... ,, | 6.00 |
| | | கோளுபட்டு | ... ,, | 6.30 |
| | 21, வியாழக்கிழமை .. | பனையப்பட்டி | ... ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... ,, | 6.30 |
| | 22, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் | ... ,, | 6.00 |
| | | விராலிமலை | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் 96—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| | 23, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 24, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு | ... ,, | 6.30 |
| | 25, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... ,, | 6.00 |
| | | கிழக்குறிச்சி | ... ,, | 6.30 |
| | 26, செவ்வாய்க்கிழமை. | ராமச்சந்திரபுரம் | ... ,, | 6.00 |
| | | ராயவரம் | ... ,, | 6.30 |
| | 27, புதன்கிழமை ... | மழையூர் | ... ,, | 6.00 |
| | | கரம்பக்குடி | ... ,, | 6.30 |
| | 28, வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... ,, | 6.00 |
| | | எம்பல் | ... ,, | 6.30 |
| | 29, வெள்ளிக்கிழமை... | பொ. புதுப்பட்டி | ... ,, | 6.00 |
| | | வேந்தம்பட்டி | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—16-5-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ மே ௴ 23௳ [ந. 96

## மதராஸ் மாகாண வாசிகளுக்கு மேன்மை தங்கிய வைஸ்ராயின் செய்தி.

"நம்மள் யாவருக்கும் மிகக்கவலையும், ஆவலும் ஏற்படக்கூடிய இந்நாளில் மதராஸ் முதல் ஸ்தானத்திலிருக்கிறது. இம்மாகாணத்தில் கையாளப்பட்டிருக்கும் பிரச்னைகளை நேரில் பார்க்கவும், அப்பிரச்னைகளைக் காரியாம்சையில் செய்து வருவோர்களைப் பார்த்துத் திருப்தி கொள்ளவும் விரும்பினேன். உங்களுக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன். இம்மாகாண வாசிகளுடன் பல வருஷங்களாக இருந்துவரும் நட்பை விருத்திசெய்து கொள்ளவும் விரும்பினேன்.

"எனது பிரயாணத்தை மிகச்சுருக்கமாகச் செய்யவேண்டியிருந்தபோதிலும் கிடைத்த அவகாசத்திற்குள் சென்னை வாசிகள் தைரியமாக நிற்பதைப் பார்க்க மகிழ்கிறேன். அவர்களின் உணர்ச்சியில் எனக்கு நம்பிக்கை யிருக்கிறது. இம் மாகாணப் பாதுகாப்பு விஷயத்தில் அவர்கள் நிச்சயம் சிரமம் எடுத்துக்கொள்வார் களென்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. தேவை ஏற்பட்டவுடன் தகுந்த விதமாயும் நடந்துகொள்ளுவார்கள்.

"இங்கே செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு முறைகளையும் பார்வையிட்டேன். வரவர விருத்தியாகிக் கொண்டும் போகின்றன. அவ்வித முறைகளை விருத்தி செய்து பலப்படுத்த நிச்சயம் உதவியளிக்கப்படும். பொதுஜனப் பாதுகாப்பு முறைகளும், விமானப் பாதுகாப்பு முறைகளும் திட்டமாகவே இருக்கின்றன. பல இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் பட்டாளங்களைப் பார்த்தும் திருப்தி யடைந்தேன். இப்பட்டாளங்கள், யுத்த உணர்ச்சியுடனும், பூர்ண முஸ்தீப்புடனும் இருக்கின்றன. எதிரிக்குத் தகுந்த தடையாகவே இருக்கின்றன."

### இன்னும் செய்யலாம்.

"யுத்த முயற்சிக்காக மதராஸ் மாகாணம் அரிய தொண்டு புரிந்திருக்கிறது. இன்னும் செய்யலாம். அவ்விதம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தேசிய யுத்த முன்னணி என்ற பெரும் கோட்டையை முழுமனதுடன் எழுப்பி எதிரிக்குத் தகுந்த தடையைச் செய்யவேண்டும். அதற்காக நாம் ஒன்று பட்டு நிற்கவேண்டும். இம்மாகாண கவர்னரும் தகுந்த விதமாகத் தலைமை வகித்து வருகிறார். தற்சமயம் உங்களுடைய தேசத்திற்கும், உங்களுடைய வீடு வாசல்களுக்கும் தான் ஆபத்து வந்திருக்கிறது. அதற்காக யாவரும் உடனே முன்வரவேண்டுமென்று அழைக்கப்படுகிறீர்கள். ஒருவர் கூட தயங்கக்கூடாது. ஒற்றுமைபட்டு யாவரும் நிற்போம். இம்மாகாணத்தின் பூர்வ சரித்திரத்திலிருந்து நான் இவ்விதம் கூறிய மொழிகள் பயன்படுமென்றே நினைக்கிறேன்."

# 'தேசிய யுத்த முன்னணி'

## I

## 'வெற்றியடைவதற்கான மனப்பான்மையை உண்டாக்குங்கள்.'

மேமீ 16ஊ தேசிய யுத்த முன்னணியை ஆரம்பிக்கும்போது மேன்மை தங்கிய பம்பாய் கவர்னர் சொன்னதாவது:— "இதுவரை கப்பற்படைக்கும், சைனியத்திற்கும், விமானப்படைக்கும், தொழிற்சாலைகளுக்கும், போக்குவரத்திற்கும் பலத்தை சேகரிப்பது என்பதைப்பற்றி யாவருக்கும் தெரியும். அதைப் போலவே எதிரியின் தோல்விக்காக எல்லா ஜனங்களும் சாதகமான மனப்பான்மையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதும் அவசியம். இவ்விஷயம் மற்றவைகளைப்போல் அத்தியவசியமென்றே சொல்லாம்.

"தேசிய யுத்த முன்னணி அதிகமான வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. மாகாணத்தின் ஒவ்வொரு பாகத்திலும் இதை ஸ்தாபிக்கவேண்டும். இது சம்பந்தமான கூட்டங்களிலும், பத்திரிகைகளைப் பிரசுரிப்பதிலும் யாவரும் ஈடுபட்டு நடத்தவேண்டும்.

"இக்கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை ஒவ்வொருவரும் செல்லுமிடங்களிலெல்லாம் பிரசாரம் செய்யவேண்டும். தொழிற்சாலையோ, சந்தைகூடுமிடமோ, கிராமங்களில் முச்சந்தியோ, மோட்டார், ரயில்வண்டிகளிலோ, ஹோட்டல்களிலோ, தெருக்களிலோ, தனது வீட்டிலோ ஒவ்வொருவரும் பிரசாரம் செய்யவேண்டும். தனி நபர்கள் இவ்விதம் ஈடுபடுவதுதான் மிகவும் சாதகத்தைத்தரும்."

### தைரியம் வேண்டும்.

"தற்போதுள்ள நிலைமை இம்மாகாணத்தில் மீண்டும் இருக்குமென்று நான் வாக்குறுதி கொடுக்கமுடியாது. இருந்தாலும் நமது தைரியத்திற்கு ஒரு நாளும் ஆபத்தில்லாமல் பார்த்துக்கொள்ளலாம். எதிரியை எதிர்த்தடிக்கவேண்டும் என்ற மனப்பான்மையை விருத்தி செய்து கொள்ளுவோம். நேசநாட்டின் பலம் தான் மிஞ்சியிருக்குமென்றும், தர்மமான காரணங்களுக்காகச் சண்டையிடும் நாடுகள் வெற்றி பெறுமென்றும் நிச்சயம் நம்பியிருப்போம்.

"தேசிய யுத்த முன்னணியில் சேருவோருக்கு அதன் நோக்கங்களில் நம்பிக்கைவேண்டும். நாஸிகளையோ, பாஸிஸ்டு கக்ஷியினரையோ கண்டித்துப் பேசாதவர்களுக்கு இங்கே பிரவேசமில்லை. இந்த யுத்தத்தில் யார் வெற்றி பெற்றாலும் பல தலைமுறை வரை அந்நாடுகள்தான் பலம் பெற்றிருக்குமாதலால் நாம் வெற்றிபெறுவதற்காக முயலவேண்டும்."

### எல்லாவிதமான எதிரித் தாக்குதலையும் எதிர்க்கவேண்டும்.

"தனது பக்கத்தில், ஸ்வதந்திரம், கௌரவம், நம்பிக்கை முதலியவைகள் இருப்பதாக நிச்சயப்படுத்திக்கொண்டே தேசிய யுத்த முன்னணி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. யுத்தரங்கத்தில போர்வீரர்கள எதற்காக மடிகிறார்களோ அதைத் தான் பொதுமக்களும் சாதிக்கப்பார்க்கின்றனர்.

"நேசநாடுகள் யாவும் இந்த யுத்த முன்னணிக்கு உதவி செய்கின்றன. நீங்களும் அத்துடன் சேர்ந்துகொண்டு தந்திரமாகவோ, கொடுமையாகவோ, எதிரி செய்யும் தந்திர முயற்சிகளையோ கொடுமைகளையோ எதிர்த்து வெற்றிபெற முன்வாருங்கள்."



## II

## தேசியப் பாதுகாப்பு முன்னணியில் சேருங்கள்.

### எதிரியைத் தாக்கும் நோக்கத்தை விருத்தி செய்யுங்கள்.

1. தேசிய உணர்ச்சி, தேசத்தின் கௌரவம், தேசத்தின் க்ஷேமம் இவைகளுக்காக நீங்கள் யாவரும் உடனேயே தேசிய யுத்த முன்னணியில் சேரவேண்டும்.

2. நாம் உறுதியுடன் இருப்பதும், தாய் நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு நாம் அவஸ்தைப்படுவதும் நமக்குக் கௌரவத்தைத் தரும்.

3. பிரிடன், ருஷ்யா, சைனு முதலிய தேசத்துமக்கள் எதிரியின் பூரா தொந்தரவிற்கு உட்பட்டும், தைரியமாகவே காணப்படுகின்றனர். அவர்களைப் போல் இந்தியரும் நடந்து கொள்ளலாம். பொறுமையுடன் சகித்துக்கொள்ளுவது தான் இந்தியரின் பலமாக இருந்திருக்கிறது.

4. இந்தியாவின் பாதுகாப்பிற்காக சைனு தனது படைகளை அனுப்பி இருக்கிறது. இவ்விதம் இந்தியா தனக்குச் செய்யப்பட்ட கௌரவத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளவேண்டும். ஜப்பானை எதிர்க்கும் விஷயத்தில் சைனுவுடன் கூட இந்தியா சேர்ந்துகொண்டிருக்கிறது.

5. நாஸிகளுக்கோ, பாஸிஸ்டு கக்ஷியினருக்கோ, ஜப்பானியருக்கோ, இந்தியர்கள் தயவு காட்டக்கூடாது. ஆக்கிரமண ஆசைகொண்ட நாடுகளின்மேல் இந்தியா வெறுப்புக் கொண்டிருக்கிறது. உலகத்தின் பத்திரத்திற்காகவும், நீதி வழங்குவதற்கும் இந்தியா பாடுபடுகிறது. தற்போது எவ்வித சிரமங்களிருந்தாலும், நேசநாடுகளான பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, சைனு முடிவில் வெற்றிபெறுமென்றும் இந்தியர்களுக்குத் தெரியும். தனது முன் சரித்திரத்திற்கும், வருங்காலத்திற்கும், தனது கௌரவத்திற்கும், உகந்தவாறு, ஸ்வதந்திரத்திற்காகப் புரியப்படும் இந்த உலக யுத்தத்தில் நடந்துகொள்ளுவதெனத் தீர்மானித்திருக்கிறது.

### கலவரம் வேண்டாம்.

1. தனக்கு உதவி செய்யுமென்று நினைத்து எதிரி கலவரத்தையும் பயத்தைச் செய்யும் பிரசாரத்தையும் செய்கிறான். ஜாக்ரதை. இதைப் பரவச் செய்கிறவர்கள் யாவரும் எதிரியின் ரகசிய ஏஜெண்டுகளாக ஆகிறார்கள். அவைகளுக்கு ஒருவரும் வசமாகவேண்டாம்.

தோல்வி ஏற்படுமோ என்ற சிந்தனையே கலவரத்தைச் செய்யும், எதிரியைத் தாக்கும் எண்ணத்தையும் தளரச் செய்யும்.

1. பொதுமக்களின் ஒற்றுமையைக்கெடுத்து அமைதியின்மையை அதிகப்படுத்தும்.

2. எதிரியைத் தோற்கடிக்கும் முயற்சியைக் கெடுக்கும்.

3. சைனியத்திற்கு அனுப்பப்படும் யுத்த சாமான்களின் ஸப்ளையைத் தடுக்கும்.

ஆகவே கலவரப்படுவதால் பயனே இல்லை. பயத்தைத்தான் உண்டு பண்ணும்.

### தேசந் தற்காப்பிற்கு பின்வருமாறு உதவுங்கள்.

1. எல்லா ஜனங்களிடையே ஒற்றுமையையும் அமைதியையும் விருத்தி செய்யுங்கள்;

2. அரசாங்கத்தாரின் யுத்த முயற்சிக்கு உதவுங்கள்.

3. தைரியத்தையும் நம்பிக்கையையும் நிலைநாட்டிக்கொள்ளுங்கள்.

4 கலவரத்தைப் போக்கடியுங்கள்! பயத்தை உண்டுபண்ணக்கூடிய பேச்சு, நினைப்பு, எழுதுவது, வதந்தி முதலியவைகளைப் போக்கடியுங்கள். எதிரியின் பிரசாரத்தை நம்பக்கூடாது.

5. அரசாங்கத்தாருடன் ஒத்துழையுங்கள். அதை மறுத்தால் அரசாங்கத்தாரின் வேலை அதிக சிரமமாகும். தேசியப் பாதுகாப்பும், தேசத்தின் க்ஷேமமும் தான் முதலாவதான நோக்கங்களாக இருக்கவேண்டும். வெற்றியடையும் வரை இந்நோக்கம் காணப்படவேண்டும். தங்கள் சொந்தக் கொள்கைகளை மாற்றிக்கொள்ளாமலேயே தேசியப் பாதுகாப்பு முன்னணிக்கு உதவி செய்யலாம்.

6. ஐந்தாம் படையினரிடம் வசமாகாமல் ஜாக்ரதையாக இருங்கள். எதிரியுடன் நாம் சண்டை செய்யும்போது நமக்குள் காணப்படும் துரோகிகளையும் நாம் வைத்துக்கொள்ளமுடியாது.

---

பிரஸங்கம் XCVI.

## ஜெர்மனி துருக்கியில் செய்யும் பொய்ப்பிரசாரம்.

ஐரோப்பாவில் சில நாடுகள் நடுநிலை நாடுகளாக விடப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் உண்மையில் நடுநிலையை வகிக்கவில்லை. போர்ச்சுகல், ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, துருக்கி முதலியவைகளைத்தான் நடுநிலை நாடுகள் என்று சொல்லலாம். லிஸ்பன், ஸ்டாக்ஹோம், பெர்னி, அங்காரா என்ற இவைகளில் நான்கு முக்கிய பட்டணங்களில் இருந்து வரும் அச்சு நாட்டுப் பத்திரிகை நிருபர்களும், நேசநாட்டுப் பத்திரிகை நிருபர்களும் அங்கு நடக்கும் விஷயங்களைப்பற்றி சுயேச்சையுடன் தெரியப்படுத்தலாம். அங்குள்ள சில உள்நாட்டு நிருபர்களுக்கும் இச் ஸ்வதந்திரம் உண்டு.

பிரான்ஸ், இதாலி, ஸ்பெயின், வடஆபிரிக்கா இங்கிருந்து கிடைக்கும் செய்திகளுக்கு நேசநாட்டு நிருபர்கள் லிஸ்பனில் இருக்கிறார்கள். லிஸ்பனிலிருந்துதான் வட அமெரிக்கா, பிரிடன், மேற்கு, தெற்கு ஆபிரிக்கா முதலிய இடங்களிலிருந்து கிடைக்கும் செய்திகளை அச்சுநாட்டு நிருபர்கள் அடைகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், அங்கு வரும் பத்திரிகைகளைச் சீக்கிரமாகவே லிஸ்பனில் பெறலாம். அத்துடன் பிரயாணிகளிடமிருந்து சில தகவல்களும் கிடைக்கும். ஜெர்மனிக்கும், ருஷ்யாவுக்கும் ஸ்டாக்ஹோமிலிருந்து தகவல்கள் கிடைக்கின்றன. ஏனென்றால் ஸ்வீடிஷ் பத்திரிகைகளுக்குத்தான் எல்லா அயல் நாடுகளிலும் நிருபர்கள் இருக்கிறார்கள். தற்சமயத்தில் ஸ்வீடனில் கொஞ்சம் பணப்புழக்கம் அதிகமிருப்பதால் அதிகமான சம்பளம் கொடுத்து, கம்பியில்லாத் தந்தி கட்டணங்களைக் கொடுத்தும் நிருபர்களை வைத்துக்கொள்ளமுடிகிறது. இதே விதமாக மத்திய ஐரோப்பியத் தகவல்கள் பெர்னியிலிருந்து வெளிவருகின்றன. ஆனால் இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் அங்காராதான் மிகவும் முக்கியமானது. அத்துடன் இஸ்தான்புல்லையும் நாம் சேர்த்துக்கொள்ளலாம்.

### அரசியல், ராணுவ முக்கியத்துவம்.

அயல்நாட்டு நிருபர்களுக்கு துருக்கி ஏராள வசதியளிக்கிறது. அரசியல் சம்பந்தப்பட்டவரையில் அதன் அமைப்பினால் இந்த யுத்தம் பூராவாக உண்மையான நடுநிலை நாடாக இருந்துவருகிறது. துருக்கியை பலாத்காரமாக சண்டையில் இழுக்க யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகள் முயற்சித்தன. ஆனால் பலாத்காரம் கடுமையாக இல்லை. உலகில் எல்லா நாடுகளுடனும் முக்கியமாக ஐரோப்பிய நாடுகளுடனும் மத்தியக் கிழக்கு நாடுகளுடனும் அரசியல் சம்பந்தத்தை வைத்துக்



கொண்டிருக்கிறது. எல்லா நாடுகளுடனும் வியாபாரம் செய்துவருகிறது. காரியாம்சையில் இல்லாதபோனாலும் வியாபாரிகள் துருக்கிக்கு வந்துபோகிறார்கள் என்றும் தெரிகிறது.

பிரதேச அமைப்பைப் பார்க்கும்பொழுது ஐரோப்பாவின் தென்கிழக்கிலும், டொடிகானீஸ் தீவுகளிலும், மத்தியக் கிழக்கு நாடுகள் பூராவிலும் துருக்கி ஒரு முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. இந்த நாடுகளுடனும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்துடனும்தான் துருக்கிக்குப் பிரத்யேகமான, வியாபார சம்பந்தம் இருந்துவருகிறது.

மற்ற நாடுகளுடன் கம்பியில்லாப் போக்குவரத்தும் இருந்துவருகிறது. அங்காராவில் ரேடியோ நிலயம் ஒன்றுமிருக்கிறது. இவைகளின் உதவியால் அமெரிக்க ஒலிபரப்பு நிலயங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளமுடியும். ஆகவே அங்காராவில் இருந்துகொண்டே பால்கன் சண்டை, கிரீட் சண்டை, இராக் கலகம், ஸிரியா விஷமம், இரான் ஆக்கிரமணம் இவைகளைப்பற்றி சரியான தகவல்களைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

நேசநாட்டு நிருபர்களைப் போலவே அச்சுநாட்டு நிருபர்களுக்கும் துருக்கி உபயோகமாக இருந்தது. மத்தியக் கிழக்கு நாடுகளுக்கும், அச்சு நாடுகளுக்கும் அரசியல் சம்பந்தம் முறிந்ததால் அச்சுநாட்டு நிருபர்கள் துருக்கியிலிருந்து கொண்டுதான் செய்திகளை அனுப்பமுடிந்தது. அச்சுநாட்டு நிருபர்களுக்கும் துருக்கியில் எல்லாவித சௌகரியங்களும் இருந்தன.

### துருக்கியின் ஒழுங்கு.

துருக்கியில் பிரசுரத்தடையே கிடையாது. சில சமயத்தில் துருக்கிக்கு கம்பியில்லாத் தந்தி மூலம் வரும் செய்திகள் தாமதித்து வருகின்றன. பயத்தை விளைவிக்கும் செய்திகள் பரவாமல் செய்யப்படுகின்றன. ஆனால் தேசத்திற்கு எந்தச் செய்திகள் பயத்தை விளைவிக்கும் என்பதைப்பற்றி வெவ்வேறு விதமான அபிப்பிராயங்கள் காணப்படலாம்.' அனுபவத்தில் பார்க்கும்பொழுது துருக்கி அதிகாரிகள் மாறுபாடாக நடந்துகொண்டதில்லை என்று தெரிகிறது. இது சம்பந்தமாக துருக்கியர்களுக்கு சில சிரமங்கள் இருந்தன. துருக்கி மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் தகவல்கள் எவ்வாறு பிரசுரிக்கப்படுகின்றனவென்று முன்னாடியே தெரிந்துகொள்ளமுடியாது. ஆனால் தங்களிடமிருந்து நிருபர்கள் பெற்றுக்கொள்ளும்போது பயத்தை உண்டுபண்ணாத செய்திகள்தான் கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக 'இஸ்தான்புல் முற்றுகை யிடப்பட்டிருக்கிறது' என்று காணப்பட்டால் இத்தகவல் பரவலாமா, கூடாதா என்று நிர்த்தாரணம் செய்ய அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு. இது ரொம்ப சிரமமான வேலையாய் இருந்தாலும், யுத்த நிலைமையில் இந்த சிரமத்தைப் பொறுக்கத்தான் வேண்டும்.

### புது தந்திரம்.

இதுவரை சொன்ன முன்னுரையின் அவசியம் இனிமேல்தான் தெரியவரும். ஏனென்றால் துருக்கியில் ஜெர்மானியரால் செய்யப்படும் பிரசாரம் இரண்டு வழிகளால் வெளி உலகத்திற்கு அனுப்பப்படுகிறது. ஒன்று பத்திரிகைகள் மூலமாயும், மற்றொன்று வியாபாரம், வெளியேற்றம், உல்லாசம் முதலியவைகளுக்காகப் பிரயாணம் செய்யும் மனிதர்கள் மூலமாகவும் பரவுகிறது. பொய்ப்பிரசாரங்கள் பரவாதவண்ணம் துருக்கி அரசாங்கத்தார் செய்துவருகின்றனர். ஆனால் ஒவ்வொரு பத்திரிகை நிருபரும் ஒரு கதையைக் கேட்டதும், அதன் குணதோஷங்களை அறியாமல் அப்படியே பிரசுரித்துவிடுகிறான்.

பிரசாரம் சம்பந்தப்பட்டவரையில் ஜெர்மனி முதல் ஸ்தானத்தை வகிக்கிறது. துருக்கியிலும் அவ்வித பிரசாரத்தை நடத்திவருகிறது. ஏனென்றால் எந்த நாடு முன்னேறிக்கொண்டே செல்லுகிறதோ அந்த நாடு செய்யும் பிரசாரத்திற்குக் கொஞ்சம் செலாவணி இருக்கும். அடுத்தபடியாக ஜெர்மன் பிரசார மந்திரி சபையின் விருப்பப்படிதான் பத்திரிகைகளும் பிரசாரத்தை நடத்துகின்றன.

இங்கிலாந்து முதலிய நேசநாடுகளிலோ பத்திராதிபர்களின் நோக்கங்களுக்கு ஏற்றவாறுதான் அபிப்பிராயங்கள் வெளியிடப்படுகின்றன. இதில் இங்கிலாந்தில் ஒன்றுக்கொன்று போட்டி ஏற்படுவதும் உண்டு.

துருக்கியில் ஜெர்மன் பிரசாரத்திற்கு இரண்டுவிதமான நோக்கங்கள் இருக்கின்றன. துருக்கி பொதுமக்களை ஜெர்மானியர்மேல் பற்றுள்ளவர்களாகச் செய்வது ஒன்று. இரண்டாவதாக பொய் வதந்தியைப் பரவி அவைகளை உண்மையென்று உலகத்தார் யாவரும் நம்பும்படி செய்வது.

## ஏஜென்ஸி அனடோலி.

முதலாவதான துருக்கி பொதுமக்களை வசப்படுத்தும் லக்ஷியம் சம்பந்தப்பட்ட மட்டில் சரியான பலன் கிடைக்கவில்லை. ஏனென்றால் இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் துருக்கி கவர்ன்மெண்டார் போட்ட உத்தரவுப்படி துருக்கி பத்திரிகைகளுக்கு அயல்நாட்டு நிருபர்கள் இருக்கக்கூடாது. இவ்வுத்தரவை எல்லாப்பத்திரிகை ஆசிரியர்களும் ஒப்புக்கொண்டார்கள். அயல்நாட்டுச் செய்திகள் பூராவும் அனடோலு ஏஜென்ஸி (Anadolu Ajansi) என்ற கம்பெனி மூலமாகத்தான் கிடைக்கும். இது தற்சமயத்தில் துருக்கி கவர்ன்மெண்டாரின் மேல் பார்வையில் நடந்து வருகிறது. இக்கம்பெனிக்குத்தான் தேவையிருக்கும்போது அயல்நாடுகளுக்கு நிருபர்களை அனுப்பும் ஸ்வதந்திரம் உண்டு. இதுவரையில் இப்பத்திரிகையின் நிருபர்கள் லண்டன், பெர்லின், கெய்ரோ இம்மூன்று இடங்களிலும் இருக்கிறார்கள். டஹ்ரானுக்கும் கூடிய சீக்கிரத்தில் ஒரு நிருபர் அனுப்பப்படுவார்.

இக்கம்பெனியின் வேலை சுலபமானதல்ல. நேசநாடுகள் மூலமாயும், திருட்டுத்தனமாயும் ஏராளமான செய்திகள் தினம் இவர்களுக்குக் கிடைக்கும். அவைகளில் உண்மையானவைகள் பொறுக்கப்பட்டு பிரசுரிக்கப்படும். வேறுவிதமாகக் கிடைக்கும் அயல் நாட்டுச் செய்திகளை பிரசுரிக்கக்கூடாது. இக்கம்பெனியிலிருந்து கிடைக்காதவரையில் ஒலிபரப்புகளையும் அச்சிடக்கூடாது. ஏனென்றால் பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திற்கும் ஹவாஸ் டெலிமான்டியல் அறிக்கை அதிகாரிகளுக்கும் இக்கம்பெனியுடன் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஹவாஸ் டெலிமான்டியல் அறிக்கைகள் மற்ற பத்திரிகைகள் வெளிவந்தவுடன் காலையில் பிரசுரப்படுத்தப்படுகின்றன. விசேஷ செய்திகளெல்லாம் இவ்வறிக்கையில் பிரசுரிக்கப்படும். இவ்வறிக்கைகளில் காணப்படும் விஷயங்கள்தான் இஸ்தான்புல்லில் மத்தியானத்தில் வெளிவரும். ஆகவே துருக்கிப் பத்திரிகைகளை ஸ்வாதீனப்படுத்த ஜெர்மானியர்களுக்கு அதிக சிரமமாய்விட்டது.

## ஜெர்மன் தந்திரம்.

குறைவான சந்தர்ப்பங்களுக்கு இடையே ஜெர்மானியரும் முடிந்தவரை முயற்சித்துப் பார்க்கின்றனர். பத்திரிகை ஆசிரியர்களுக்கு நேசநாட்டு செய்தியானாலும், அச்சுநாட்டு செய்தியானாலும் ஒரே விதமாகத்தான் பிரசுரிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. உதாரணமாக இஸ்தான்புல்லில் டர்க்கிஷ் போஸ்ட் என்ற ஜெர்மன் பத்திரிகையும், விஷி பிரெஞ்சு பத்திரிகை ஒன்றும் இருக்கின்றன. ஜெர்மன் பத்திரிகையில் ஜெர்மன் செய்திகள் பூராவும் பிரசுரிக்கப்படுகின்றன. ஊர்ஜிதமான பிறகே பிரிடிஷ் நஷ்டங்களும், தோல்விகளும் கொடுக்கப்படுகின்றன. மற்றொரு பத்திரிகையில் ஜெர்மன் செய்திகளுக்கு அதிக பிரதானியம் கொடுக்கப்படுகிறது. இன்னும் சில பத்திரிகைகளுக்கு ஜெர்மன், இதாலியர் இன்னும் இதர அச்சுநாட்டினர் இவர்களின் சந்தாதார்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதாகச் சொல்லி ஜெர்மன் செய்திகளை அதிகம் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இவைகளையெல்லாம் கொண்டு பொதுமக்களை வசப்படுத்த முடியாது. ஏனென்றால் உண்மைகள் இப்பத்திரிகைகள் மூலமாக வெளிவராது. விஷயமறிந்தவர்களுக்கு இப்பத்திரிகைகளில் வருபவைகள் வேடிக்கைகளாகக் காணப்படும். ஆகவே உண்மையைப் பிரசுரிக்கும் வேறு பத்திரிகைகளைத்தான் வாங்குவார்கள்.



ஆகவே துருக்கியில் ரகசியப் பிரசாரத்தையே ஜெர்மானியர் முக்கிய கருவியாக உபயோகித்து வந்தனர். முதலில் எங்கிருந்து பிரசாரம் உற்பத்தியாகிறதென்பதே தெரியாது. ஆனால் சிறிது நாட்களில் உற்பத்தி செய்தவனைப்பற்றிய விவரங்கள் கிடைத்துவிடும். துருக்கியில் முக்கியமாக இஸ்தான்புல், ஸிமிர்னா என்ற இடங்களில்தான் இப்பிரசாரம் அதிகமாகச் செய்யப்படுகிறது. அவை இரண்டும் பெரிய நகரங்கள். வியாபார ஸ்தலங்கள். எல்லா வகைப்பட்ட ஜனங்களும் வசிக்கிறார்கள். அதிகமாக சிறு ஜாதியினரும், லவான்டைன் என்பவர்களும் அதிகம் இருக்கிறார்கள். லவான்டைன் என்பவர்கள் துருக்கியில் பல வருஷங்களாக வசித்துவருகின்றனர். இவர்களுக்குக் கொடுக்கப்படும் காபந்தினாலும், விவாக சம்பந்த உரிமைகளாலும் சில சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. லவான்டைன் என்பவர்கள் ஜெர்மன் புருஷர்களுக்கும், ஸர்க்காஸியன் (Circassian) ஸ்திரீகளுக்கும் பிறந்தவர்களென்று தெரியவருகிறது.

## துருக்கியின் சிறு ஜாதியினர்.

துருக்கியிலுள்ள எல்லா சிறு ஜாதியினருக்கும் துருக்கியர்கள் மேல் மனஸ்தாபம் கிடையாது. அதுபோலவே துருக்கியர்களுக்கும் அவர்கள்மேல் வெறுப்பு கிடையாது. ஆனால் பொருளாதார காரணங்களை முன்னிட்டு சிறு ஜாதியினர் பரஸ்பரம் சண்டையிட்டுக்கொள்ளுகின்றனர். துருக்கியர்களுக்கு விரோதமான ஜாதியினர் ஆர்மீனயப் பிரதேசத்தில் அதிகம் இருக்கின்றனர். இவர்கள் சென்ற யுத்தத்தில் பிரிடிஷ்காரர்களுடன் சேர்ந்திருந்தனர். அந்த சமயத்தில் சமயத்திற்கு ஏற்றவாறு பிரிடிஷ்காரர்களைப்பற்றி அவதூறாகப் பேசியும்வந்தனர்.

இந்த யுத்தத்தில் துருக்கியர் நேசதேசங்களைப் பின்பற்றுவதால் இவர்கள் பிரிடிஷ்காரர்களுக்கு விரோதமாக நடந்துவருகிறார்கள், ஆர்மீனயர் என்பவர்கள் பெரிய வியாபாரிகள். இவர்களுக்கு மத்தியக்கிழக்கு நாடுகளில் சம்பந்தம் உண்டு. இஸ்தான்புல்லில் பிரிடிஷ்காரர்களுக்கு விரோதமான செய்திகளைச் சேகரித்துக்கொண்டு மத்தியக்கிழக்கு நாடுகளுக்குள் பரவவிடுகின்றனர். அதைப் போல அவ்வித செய்திகளை உள்நாட்டிற்குக் கொண்டுவந்து ஜெர்மானியரிடம் கொடுத்து உபயோகிக்கச் செய்கின்றனர். கிரேக்கர்களும் யூதர்களும் பிரிடிஷ்காரர்களுக்கு விரோதமாக நடந்துகொள்ள முடியாது. ஆதலால் அவர்களால் யாதொரு பயமும் கிடையாது.

பொருளாதாரத்தில் சிரமம் ஏற்பட்டால் சிறு ஜாதியாரிடமிருந்து தொந்தரவு ஏற்படும். லாஸேன் ஒப்பந்தத்திற்குப் பிறகு துருக்கியில் பொருளாதார நிலை ஸ்திரமானதால் பெரிய நகரங்களில் ஆர்மீனியர்கள், யூதர்கள், கிரேக்கர்கள் தான் வியாபாரத் தொழில் நடத்துகிறார்கள். ஆர்மீனியரானாலும் சரி, வேறு யாரானாலும்சரி ஒழுங்காக நடந்துகொள்ளும்வரை ஒரு தொந்தரவும் இல்லை. ஆனால் சிறு ஜாதியினர் அதிக ஸ்வதந்திரங்களை உடனே வேண்டுமென்று கேட்கிறார்கள்.

## பயத்தின்மேல் வியாபாரம்.

இவ்விதம் துருக்கியில் பிளவு இருக்கிறதென்பதை ஜெர்மானியர் அறிந்துகொண்டார்கள். ஆர்மீனியரிடம் போய் துருக்கியின் வழியாக எங்களுடைய சைனியம் செல்லவேண்டும், என்று ஜெர்மானியர் சொன்னவுடனேயே ஆர்மீனியர் குதூகலிக்கிறார்கள். இத்தகவலை யூதர்களிடம் பரவச்செய்தவுடன் அவர்கள் கலவரப்பட்டு தங்கம் முதலியவைகளை வாங்கி சேமிக்கிறார்கள், விலைவாசிகள் ஏறிவிடுகின்றன. கிரேக்கர்கள் மனஸ்தாபப்படுகிறார்கள். உடனே இதைப்பற்றி துருக்கியர் விசாரிக்க ஆரம்பிக்கின்றனர். காரியகாரணங்களுடன் வதந்திகள் பல விதமாகவெல்லாம் உலாவுகின்றன. அயல்நாட்டு நிருபர்கள் இவைகளைப்பற்றி பத்திரிகைகளில் அச்சிடும்போது 'தகவல் சரியான இடத்திலிருந்து கிடைத்தது' என்று அச்சடித்துவிடுகிறார்கள். வதந்தி செய்தியாகிவிடுகிறது. போஸ்டன், டிம்பக்டூ முதலிய இடங்களிலிருந்து ஒலிபரப்பவும்படுகிறது. துருக்கியர்கள் நம்புகின்றனர். லவான்டைன் என்பவர்களும் செய்திகளைத் தெரிந்தோ, தெரியாமலோ பரவச் செய்வதில் சமர்த்தர்கள். இதுதான் ஜெர்மானியர் செய்துவரும் பிரசாரத்தின் ஒரு உதாரணம்.

## கட்டுக்கதைகள்.

இவை இரண்டுவிதமாக உண்டாகின்றன. இதன்படி மூன்ருவது நாட்டில் நடக்கும் விஷயத்தைப்பற்றி ஒரு நாடு மற்ருெரு நாட்டுக்கு எடுத்துச் சொல்லுகிறது. உதாரணமாக அனடோலியாவிலுள்ள அனடா என்ற பட்டணத்தில் ஒரு ஜெர்மன் நிருபர் நியமிக்கப்பட்டிருக்கிருன். இவன் மத்தியக்கிழக்கு, இரான், இந்தியா முதலிய நாடுகளைப்பற்றிய செய்திகளைச் சொல்லுகிருன்.

எகிப்தில் கலகம் ஏற்பட்டதாயும், சாம்ராஜ்யப் படைகளுக்குள் கலகங்கள் ஏற்பட்டதாயும், இராக்கில் சூழ்ச்சிகள் நடப்பதாயும், கேபிள் மூலம் செய்தி அனுப்புகிருன். சிறிய சம்பவங்களை பெரிய கலகங்கள் என்று குறிப்பிடுகிருன். உதாரணமாக இரானில் சில கலகக்காரர்களும், குதிரையாட்களும் இருக்கின்றனர். இவர்கள் அங்கிருந்து செய்திகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லுகின்றனர். இவர்களை ஒருவராலும் தடுக்கமுடியாது. டெஹ்ரானில் நடந்த ஒரு விஷயத்தைப்பற்றி இவர்கள் சொல்லும்பொழுது இரானில் ஒரு கலகம் ஏற்பட்டதாகவோ, பிரிடிஷ்காரர்களுக்கும், ருஷ்யர்களுக்கும் சண்டை ஏற்பட்டதாகவும் சொல்லிவிடுகின்றனர். இந்தியாவைப்பற்றியும் இதுவேதான் சொல்லப்படுகின்றது. ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியாவுக்கு வரப்போகிருர் என்ற தகவல் எட்டியவுடன் இந்தியா பூராவிலும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது என்று ஜெர்மானியர் அனடா நகரத்திலிருந்து செய்தி அனுப்புகின்றனர்.

இது மாதிரியான தகவல்கள் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் பரவுகின்றன. இவைகளைக்கொண்டு பிரிடிஷ் சாம்ராஜ்யம் சிதைந்து வருகிறதாகவும், பிரிடிஷார் யுத்தத்தில் தோற்றுவிடுவார்கள் என்றும் பொய்பிரசாரம் செய்யப்படுகிறது. இல்லாவிட்டால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்தைக் குறிப்பிடாமல் இந்தியாவைப்பற்றி மாத்திரம் ருமேனியப் பத்திரிகைகளும் க்ரோட் பத்திரிகைகளிலும் சொல்லக் காரணமில்லை. இம்முறைகளுக்கு ஜெர்மானியர் தங்களுடைய சொந்த நிருபர்களையே உபயோகித்து வருகின்றனர்.

## தந்திர முறைகள்.

முன்பு சொன்னதைக்காட்டிலும் சிரமமான மற்ருெரு முறையையும் ஜெர்மானியர் பின்பற்றுகின்றனர். இம்முறையில் ஏற்படும் வதந்திகளை யார் உண்டாக்கிஞர் என்றும், எப்படி செய்தியாக மாறியது என்றும், நாட்டைவிட்டு எவ்விதம் வெளிச்சென்றதென்றும், வெளிநாடுகளில் அதை ஒருவரும் செவி கொடுத்து கேட்காமல துருக்கியர் மாத்திரம் பரவுவதற்குக் காரணம் என்னவென்றும் கண்டுபிடிப்பது சிரமம். இந்த முறையால், துருக்கியைப் பற்றிய பொய் வதந்திகளை வெளிநாடுகளில் பரவச்செய்வதும், அதே செய்தி மறுபடி துருக்கிக்குத் திரும்பிவரும்பொழுது, அதைப்பற்றிய அசட்டுத் தனத்தை வெளிப்படுத்துவதும்தான் ஸாதியமாக காணப்படுகிறது.

இதைப்பற்றி சமீபத்தில் நடந்த திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். இந்த யுத்தம் ஆரம்பித்தது முதல் துருக்கி தனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு ஜெர்மானியருக்குச் சாதகமாக திரும்பிவிடுமென்று ஜெர்மானியர் சொல்லிவந்தனர். இங்கிலீஷ்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், துருக்கியர்கள் மூவரும் 1939-ம் வருஷம் சரத் காலத்தில் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்து கொண்ட சமயத்திலேயே ஜெர்மானியர் இவ்விதமாக சொல்லிவந்தனர். இவ்வொப்பந்தத்தை ஸர் ஹ்யூ நாட்ச்புல்-ஹூகெஸன் என்ற பிரிடிஷ் பிரதிநிதி, முன் நின்று ரகசியமாக துருக்கி அயல்நாட்டு மந்திரி வீட்டிற்குச் சென்று முடித்து வைத்தார்.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மெதுவாகவோ, உறக்கவோ, சமீபத்தில் சில நாட்கள் வரை இப்பிரசாரம் நடந்து வந்தது. ஆனால் திடீரென்று வழக்கத்தை விட கொஞ்சமாறுபாடு காணப்பட்டது. முதலில் ஆங்கிலேய-துருக்கி ஒப்பந்தம் கெட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டது. பேபன் பெர்லினுக்குச் சென்றதை



வைத்துக்கொண்டும், துருக்கி பிரதிநிதி அங்காராவிற்குத் திரும்பியதை வைத்துக் கொண்டு சில குறிப்புகள் காணப்பட்டன. ஸோபையா வழியாக பேபன் போகும்பொழுது பல்கேரியப் பத்திரிகை நிருபர்களிடம் ஜெர்மன்-துருக்கி சம்பந்தம் சிநேகமாக இருந்து வருகிறதென்றே சொன்ஞன். பொதுவாக ஜெர்மன் அரசாங்கம் அலாஸ்காவில் நடக்கும் ஒரு சிறு சம்பவம் முதல் அமெரிக்காவிற்கு விரோதமாக அல்பேனியா சண்டை செய்கிறது என்ற விஷயம் வரை எல்லா விஷயங்களைப் பற்றியும் பிரத்யேக அபிப்பிராயங்களைக் குறிப்பிடும்பொழுது "வான் பேபன் சீக்கிரம் திரும்பி வருவான் என்று அறியப்படுகிறது" என்று மாத்திரம் வியாக்கியானம் இல்லாமலே சொல்லிற்று. யாவருக்கும் வான் பேபன் திரும்பி வரும் விஷயம் தெரிந்தபொழுது ஏஞே இவ்விஷயத்தை ஜெர்மனி மறுபடியும் சொல்லவேண்டும். ஆனால் விஷயங்கள் இதோடு நிற்பதில்லை. சில ஆர்மீனியர்கள் ஸிரியாவுக்குச் சென்று துருக்கி திட்டத்தில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லுகின்றனர். அவர்களே துருக்கிக்குத் திரும்பி வரும்பொழுது அராபியர்கள் இம்மாறுதலை எதிர்பார்க்கின்றனர் என்றும் சொல்லுகின்றனர். சிறுது நாட்கள் கழித்ததும் "ஜெர்மனி துருக்கியுடன் சிநேகமாகவே இருந்து வருகிறது. அராபியர்கள் இம்மாறுதலுக்குக் காத்துக்கொண்டிருக்கின்றனர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வதந்தி இந்நிலைமையில்தான் மாறுதலடைகிறது. ஜெர்மானியரோ, துருக்கியரோ ஏற்கனவே ஒரு சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தால், ஏன் ஒரு மாறுதலை விரும்பவேண்டும்? இதற்குக் காரணம் என்னவென்ருல் இவ்வொப்பந்தம் ஒருக்கால் ரகசியமாகச் செய்யப்பட்டிருக்கலாம். ரகசியமாகச் செய்யப்படும் ஒப்பந்தங்களை வைத்துக்கொண்டுதான் ஜெர்மன் பிரசாரம் நடந்து வருகிறது.

இந்த ரகசிய ஒப்பந்தங்களைப்பற்றி ஒருவருக்கும் தெரியாது. ஆனால் நூற்றுக்கணக்கான வதந்திகள் மாத்திரம் உலாவும். இன்னும் துருக்கியின் திட்டத்தைப்பற்றி சில ஐரோப்பியர்களுக்கு விவரங்களே தெரியாது. இதுதான் முதல் விதமான ரகசிய வதந்தி.

இவ்வதந்தி மறுபடியும் ரகசியப் பிரசார மூலம் அயல்நாடுகளுக்கு உள்ளாள் மூலமாயும், சம்பள ஆட்கள் மூலமாயும் அனுப்பப்படுகின்றனர். இவர்கள் உள்நாட்டுப் பத்திரிகைகளை முதலில் கெடுக்கப்பார்ப்பார்கள். ஹோட்டல்களில் ஊர் வம்பு அளப்பார்கள். இவர்களுக்கு பலவித பாஷைகள் தெரிவதே ஒரு சாதகம். எப்படியாவது இவ்வதந்தி நடுநிலை நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

## விஷ செய்துவரும் சாதகம்.

அமெரிக்கா இந்த யுத்தத்தில் சேரும்வரை அமெரிக்கப் பத்திரிகைகள் மூலமாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால் தற்போது அது சாத்தியமில்லாததால் விஷியிலுள்ள ஹவாஸ் ஒபி ஏஜென்ஸி, கிளர்மாண்ட் பெராண்ட் ஏஜென்ஸி மூலமாகப் பரவுகிறது. இவைகளின் மூலமாக பொய்வதந்தி கணக்கில்லாமல் பரவுகின்றன.

உதாரணமாக ஜெர்மனி-துருக்கி செய்துகொண்ட ரகசிய ஒப்பந்தம், அராபியர்களை விடுவிப்பது, இந்தியாவை பின்புறமாகவோ, ஆப்கானிஸ்தானம் மூலமாகவே தாக்குவது முதலியவைகளைப்பற்றி செய்திகள் உலாவிவந்தன. முதலில் செய்திகள் DNB ஏஜென்ஸி மூலமாயோ, வேறு கபட ஜெர்மன் ஏஜென்ஸி மூலமாயோ, விஷிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து மற்ற பாகங்களுக்குச் செய்தி செல்லுகிறது. முன்சொன்ன செய்திகளுக்குத் தென் அமெரிக்காவில் பிரயோஜனமில்லை. ஆனால் இந்தோ-சைஞவுக்குச் சென்றவுடன் ஸெய்கோன் ரேடியோவிலிருந்து பிரஞ்சுக்காரர்கள் மூலமாக ஜப்பானியரால் ஒலிபரப்பப்படுகிறது. இப்பிரசாரம் முக்கியமாக துருக்கியை உத்தேசித்தே செய்யப்படுகிறது. துருக்கிக்கு இச்செய்தி மறுபடி வந்ததும் அதிகமான வியாக்கியானங்களுடன்

அச்சிடப்படுகின்றன. அப்போதுதான் இந்த ரகசிய ஒப்பந்தத்தை ஜெர்மானியர் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது தெரியும்.

## கோயபல்ஸின் தந்திரம்.

ஆகவே துருக்கியைப்பற்றி அச்சுநாடுகளின் ஒலிபரப்பைக் கேட்கும்பொழுது வெகு ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

தற்சமயத்தில் ஜெர்மனி வசந்தகாலத் தாக்குதலைப்பற்றிய சிந்தனையிலிருந்து வருகிறது. யாவரும் இதைப்பற்றி அறிய விரும்புகின்றனர். அந்த சந்தர்ப்பத்தில் துருக்கியைப்பற்றி கொஞ்சம் சொல்லுவதும் பொருத்தமாகத்தான் இருக்கும். சாம்ராஜ்யப்படைகள் எங்கேயாவது நகர்ந்துகொண்டே இருக்கவேண்டுமென்பது தான் ஜெர்மானியரின் கருத்து. துருக்கியைப்பற்றி ஏதாவது பிரசாரம் செய்தால் அதனால் ஏதாவது காரியம் சாதகமாகாதா என்றும் ஜெர்மானியர் எதிர்பார்க்கின்றனர்.

துருக்கி அடுத்த லக்ஷியமாக இருக்கக்கூடும் என்பதற்கான காரணங்களிருக்கின்றன. துருக்கி, கிரேட் பிரிடனுக்கு நேசநாடாக இருந்துவருகிறது. மேலும் மத்தியக்கிழக்கு, தெற்கு ருஷ்யா, காகஸஸ் முதலியவைகளைப்பற்றிய அக்கரையும் துருக்கிக்கு இருந்துவருகிறது. துருக்கி மூலமாக மத்தியக்கிழக்கு நாடுகளில் சண்டைசெய்ய சாதகமாயும் இருக்கும். துருக்கியை வேறு யாராவது தாக்கினால் அதைக் காப்பாற்ற பிரிடிஷ் சாம்ராஜ்யம் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. அத்துடன் துருக்கியின் திட்டத்தையும், பிரிடிஷ் துருப்புகளின் நிலைமையும் ஜெர்மனி அறிய விரும்புகிறது.

இவ்விதமாக ஜெர்மன் பிரசாரம் ஆரம்பமாகி மனம்போன போக்கெல்லாம் நடந்துவருகிறது. இதற்கு மாறாக ஏதோ ஒரு இடத்தை ஜெர்மானியர் தாக்கப் போகிறார்களென்றும், ஜெர்மன் பலம் ஓரிடத்தில் குறைந்துவருகிறதென்றும், ஜெர்மானியருக்கு ஏராள நஷ்டமென்றும், ஜெர்மனியில் ஒற்றுமை கெட்டுவிட்டதென்றும், ஜெர்மனியில் ஒற்றுமை இருக்கிறதென்றும், இவ்விதம் பலவிதமான வதந்திகளைக் கிளப்பி, அவர்களே மறுத்தும் வருகின்றனர். எவ்வளவு ஜாக்ரதையாக இருந்தபோதிலும், பத்திரிகைக்காரர்கள் இதைப்பற்றி குறிப்பிடத்தான் வேண்டிவரும். அயல்நாடுகளில் பரவத்தான் பரவும். ஆகவே சாமர்த்தியம் வாய்ந்தவர்கள் இவ்விதம் கிடைக்கும் செய்திகளை ஒப்பிட்டுப் பார்த்து எதுவுண்மை, எது நிஜம் என்று கண்டுபிடித்து வருகின்றனர்.

இந்த சந்தர்ப்பங்களில் உலகத்தில் காணப்படும் எல்லாப் பத்திரிகைகளும் சேர்த்து ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன. ஒரு பத்திரிகையில் இங்கொரு குறிப்பு காணப்படும். மற்றொரு பத்திரிகையில் வேறொரு குறிப்பு காணப்படும். இவைகளைச் சேர்த்துப்பார்ப்பதும், அதிலுள்ள குறைகளைத் தவிர்ப்பதும், அவைகளில் ஏற்படக்கூடிய மாறுதல்களை அடக்குவதும்தான் இவர்களின் வேலையாக இருக்கும். இந்த சந்தர்ப்பங்களில் பிரிடிஷ் பத்திரிகைகள் என்ன செய்கின்றன என்று கவனிப்போம்.

## பிரிடிஷ் பத்திரிகைகள்.

ஜெர்மானியர் பிரசாரத்தை தாராளமாக நடத்தி வரும்பொழுது பிரிடிஷ் பத்திரிகைகள் மிகவும் ஜாக்ரதையாக நடந்துகொள்ளுகின்றன. அச்சுநாட்டு நிருபர்கள் அரசாங்கத்தாரிடமிருந்து சம்பளத்தை வாங்கிக்கொண்டு இவ்வேலையில் ஈடுபடுகின்றனர். ஒரு தடவை பிரிடிஷ் பத்திரிகையில் பொய் சமாசாரத்தைப் பிரசுரித்தால் அதற்கு மறுபடி சிலாவணி ஏற்படுவது சிரமம். ஆகவே துருக்கியைப்பற்றி ஒரு விஷயம் வெளிவந்தால் பிரிடிஷ் பத்திரிகைகளில் வெளிவரும்வரை காத்துக்கொண்டிருப்பது நலம். அது உண்மையாகவே இருக்கும். அப்படிச் செய்யாவிட்டால் உலகிலுள்ள பத்திரிகைகள் எல்லாவற்றையும் வாங்கி, இரவும் பகலுமாக அவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் பிரிடிஷ் பத்திரிகைகளில் சரியான விவரங்கள் கொடுக்கப்படுகின்றன என்று தெரியவரும்.



# வார யுத்தச் செய்திகள்.

## 16—5—42-லிருந்து 22—5—42-வரை.

சைனா.—(1) தாய்லாந்து, இந்தோ-சைனா முதலிய இடங்களிலிருந்து மெகாங் நதி வழியாக முன்னேறிய ஜப்பானியப்படைகள் சைனாவில் புகுந்தன. ஹுங்லிங் கிலிருந்து வரும் படைகளும் முன்னேறிக் கொண்டேபோகின்றன.

(2) ஸால்வீன் நதியைக்கடந்து சென்ற சீன உதவிப்படைகள் எதிரிகளை டெங்சுங், லுங்லிங், மாங்ஷி பிரதேசங்களிலிருந்து விரட்டின. யுனன் இந்தோ-சைனா இருப்புப்பாதைக்கருகில் உள்ள ஜப்பானியப்படைகளை அமெரிக்க மானுமிகள் விரட்டியடித்தனர். ஸால்வீன் நதியின் மேற்குப் பக்கத்திலிருந்து முன்னேறும் ஜப்பானியப்படையும் திருப்பியடிக்கப்பட்டது. பயோஷானைப் பிடிக்கச் சென்ற ஜப்பானியரின் முயற்சி குயிமங், லுங்லிங், மாங்ஷி என்ற இடங்களில் சீனர்களால் தடைப்பட்டது. ஸால்வீன் நதியின் மேற்கு பாகத்தில் எதிரி நடமாட்டமே கிடையாது. யுனனில் ஹுமங்ருஷு என்ற இடத்திலிருந்த ஜப்பானியப்படை டாட்லை என்ற இடத்தை நோக்கி ஓடுகிறது.

3. ஷான் ஸமஸ்தானத்தில் ஜப்பானியர் கெண்டங்கைத் தாக்கி மாங்லன், மாங்கெய், கோங்கும் என்ற இடங்களில் சண்டைசெய்கின்றனர்.

4. செகியாங் என்ற சீனக் கடற்கரைப் பிரதேசத்திலும் சண்டை செய்து சுகி என்ற இடம்வரை முன்னேறியிருக்கின்றனர்.

இது கினஷ்வா என்ற தலைநகருக்கு 50-மைல் தூரத்திலிருக்கிறது. ஷெங் ஷியு என்ற இடத்தில் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்கின்றன.

5. புங்யு என்ற இடத்திலிருந்து ஜப்பானியர் விரட்டப்பட்டனர்.

6. ஹோஸ்ஷின் என்ற இடத்தில் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்கின்றனர். இது காண்கிங்கிற்கு தென்மேற்கில் 25-மைல் தூரத்திலிருக்கிறது.

பர்மா.—சீனப்படைகள் மியிட்கியினா என்ற இடத்திற்கு 25 மைல் தூரத்தில் வந்துவிட்டன. வாண்டிங்கையும் தாக்குகின்றனர்.

(2) ஜெனரல் பிரிடனின் தலைமையின் கீழிருந்த அமெரிக்க விமானங்கள் மெயிட்கியினாவைத்தாக்கின.

(3) மே 10௳ ஜெனரல் அலக்ஸாண்டரின் படைகளை ஷெவிக்யின் என்ற இடத்தில் சூழ்ந்துகொள்ள ஜப்பானியர் பிரயத்தனம் செய்தனர். ஆனல் சாம் ராஜ்யப்படைகள் சின்டுவின் நதியைக்கடந்து ஷவிலேவரை முன்னேறி விட்டன. இன்னும் ஒரு சண்டையும் நேரவில்லை. பிரிடிஷ் சைனியமும் கெடுதி அடையவில்லை. சின்டுவின் நதியைத் தாண்டி கலிவா என்ற இடத்தில் இறங்கி யிருக்கின்றன.

**தைரியமான பின்வாங்குதல்.**—இத்தலையங்கத்துடன் டைம்ஸ் பத்திரிகை அலெக்ஸாண்டரின் படைக்கு ஒரு தகுந்த புகழ்ச்சி செய்திருக்கிறது.

"வெகுதூரம் சீனப்படைகளும், பிரிடிஷ் படைகளும் தற்காப்பு செய்து வந்ததால் இந்தியப் பாதுகாப்பிற்குப் போதுமான அவகாசம் கிடைத்தது.

"ஆரம்பமுதல் கடைசிவரை ஜெனரல் அலெக்ஸாண்டரின் சைனியம் அமைதியாகவே இருந்தது. ஜப்பானியர் துரத்தி வரும்போதெல்லாம் சிதறினாலும் பிறகு ஒற்றுமைப்படுத்திக்கொண்டும், பாலங்கள், கப்பல் தளங்கள், எண்ணெய்க் கிணறுகள் முதலியவைகளை உடைத்துக்கொண்டும் யுத்த சாமான்களை அழித்தும் காடு முதலியவைகளைக் கடந்துவந்தன. இல்லாவிட்டால் அவையாவும் எதிரி வசமாகியிருக்கும்."

இதைப்பற்றி C. R. அட்லி காமன்ஸ் சபையில் செவ்வாய்க்கிழமை பேசும்போது :—

'யுத்தம் வெகு சாமர்த்தியத்துடன் செய்யப்பட்டது. எதிரியை அதிகத் தாமதப்படுத்தி நமது விமானப்படைகளும், கடல், தரைப்படைகளும் வந்து சேர்ந்தன. எதிரிக்கு நமது படைகளும் சீனர்களும் ஏராள நஷ்டத்தை விளைவித்தன.'

இந்தியா.—மே 16வ-யும் 18வ-யும் கிழக்கு அஸ்ஸாமில் எதிரி விமானங்கள் ஒரு நகரில் குண்டுகளை வீசின. சேதம் மிகக் குறைவு.

மே 20வ- பிரிடிஷ் விமானப்படை சலிவாவிற்கு அருகிலுள்ள எதிரி லக்ஷியங்களைத் தாக்கின. மே 19வ- அக்யாப்பும் தாக்கப்பட்டது.

இதைப்பற்றியும் மிஸ்டர் அட்லி காமன்ஸ் சபையில் பேசும்போது சொன்னதாவது :—

'இந்தியத் தற்காப்பிற்காக எங்களால் முடிந்தவரை சைனியங்களைப் பலப்படுத்தி வருகிறோம். டயோகே ஸுரஸ்லைப் பிடித்துக்கொண்ட பிறகு மறுபடி ஜப்பானியத் தாக்குதல் நேருமென்று எதிர்பார்த்து ஸிலோனும் அதிகமாகப் பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறது. இந்து மகாசமுத்திரத்திலும் பலம் செய்யப்பட்டிருக்கிறது.'

தெற்கு பாகத்திலுள்ள சைனியத்தின் தலைமை மாற்றப்பட்டிருப்பதாக நியு டெல்ஹியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு விசேஷ சம்பவம். இத் தலைவர் சுற்றுப் பிரயாணம் செய்து எல்லாம் சரியான நிலையில் இருப்பதாகவே அறிவித்தார். சண்டை நேரக்கூடிய ஸ்தலங்களும் தீர்மானிக்கப்பட்டன. சைனியம் தினம் விருத்தியாகிக் கொண்டேபோகிறது. சீக்கிரத்தில் எந்த இடத்திலும் சண்டை செய்யக்கூடிய தன்மையிலேயே இருக்கிறது. நவீன முறைகளிலும் ஒற்றுமையுடனும் இருக்கிறது. எங்கும் எதிரி இறங்கமுடியாது. பலவித பகுதிகளுக்குள் ஒற்றுமையும் இருக்கிறது.

ஆஸ்திரேலியா.—இவ்வாரத்தில் ஜப்பானியர் டிபோயின் என்றதைப் பிடித்துக்கொண்டனர். மோர்ஸ்பியையும் தாக்கியிருக்கின்றனர். ஆஸ்திரேலிய விமானப்படை கோபாங், லே, ரபால் முதலியவைகளைத் தாக்கியது. அதிகாரத்தை மெக் ஆர்தர் வகித்துவருகிறார். பிரிடிஷ் விமானங்கள் 77 எதிரி விமானங்களை அழித்து 100 விமானங்களைச் சேதப்படுத்தின.

ஆஸ்திரேலிய நிலைமையைப்பற்றி மிஸ்டர் அட்லி மேமீ 19வ- சொல்லும் போது :—

'இந்து மஹா சமுத்திரத்தில் நாம் பலம் செய்திருக்கிறோம். ஆனால் ஜப்பானியப் படைகள் ஆஸ்திரேலியா, நியூஸீலாந்தைத் தாக்கலாம்.

'காலம்தான் முக்கியமானது. ஆஸ்திரேலியாவிலிருந்து துருப்புகளை அனுப்புவது சுலபம். பிரிடனிலிருந்து வருவதானால் காலதாமதம் ஆகும். இவ் விஷயங்கள் அமெரிக்காவுடன் சர்ச்சை செய்யப்பட்டன. ஆஸ்திரேலியாவின் மேற்கிலுள்ள பஸிபிக் பிரதேசம் அமெரிக்கரின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. ஆகவே அமெரிக்கப் படைகளும், கப்பற்படையும் வந்திருக்கின்றன.

'ஆஸ்திரேலியாவில் நமது படைகள் விருத்தியாகி வருகிறது. மெக் ஆர்தர் தலைமை வகிக்கிறார். இங்கே ஜப்பானியர் வந்தால் தோற்றுப்போவார்கள்'.

லிபியா.—பிரிடிஷ் காவல் தொழில் சரியாக நடக்கிறது. எதிரியின் சிறிய டாங்கிப் படைகளும் வண்டிகளும் அழிக்கப்படுகின்றன. மெகிலி, ஸெனகலி, டென்ஜர்டா, பெங்காஸி, ஸோலுக், ம்ஸுஸ் பிரதேசங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கியிருக்கின்றன.



ரெஹ்ரிங், பிஸ்மார்க் என்ற இரண்டு புதிய ஜெர்மன் ஜெனரல்கள் லிபியாவிற்கு வந்துள்ளனர். அங்குள்ள ஜெர்மன் படைகளுக்கும் இதாலியப் படைகளுக்கும், மேலும் உதவி வந்திருக்கிறது. மால்டாவில தாக்குதலை அதிகப்படுத்தி க்ரீட், கிரீஸ், இதாலி முதலிய இடங்களிலிருந்தே இப்படைகள் வந்திருக்கின்றன. அதைப்போல் பிரிடிஷ் விமானப்படையும் அதிகப்பட்டிருக்கிறது. பாலைவனச் சண்டைக்கு லாயக்காக டாங்கிகளும், பீரங்கிப்படையும் இரட்டிப்பு மடங்கு வந்திருக்கின்றன. ஸ்மட்ஸ் இப்போர்முனையை விஜயம் செய்தபோது சைனியம் பூர்ண மூஸ்திப்புடன் இருக்கிறதென்றும், தற்காப்பு ஸ்தலமாக இருப்பதோடு முன்னேற்றப் போர் நடத்தவும் உபயோகமாக இருக்கும் என்று பத்திரிகைகாரர்களுக்குச் சொன்னார். 10 நாட்களில் 2,000 மைல் தூரத்தைக் கடந்து எகிப்து ஸிரெனைகா முதலிய இடங்களைப் பார்வையிட்டார். தினம் 5 சொற்பொழிவுகளையும் செய்தார். சைனியக் கூடாரங்களையும், ஆஸ்பத்திரிகளையும், விமான நிலயங்களையும் பார்வையிட்டார். ஆசின்லக், கேஸி, கிரீஸ் மன்னரான ஜார்ஜ் முதலியோருடன் கலந்து பேசினார்.

ருஷ்யா.—கார்கவ்வில் பெரிய சண்டை நடக்கிறது. ஐந்து நாட்களில் டிமோஷென்கோ 37 மைல் தூரத்தைக் கடந்தார். எதிரியின் முதல் தரமான படைகள் பிளக்கப்பட்டன. ஏராளமான எதிரி டாங்கிகளும், பீரங்கிகளும், லாரிகளும் யுத்த சாமான் கிடங்குகளும் கைப்பற்றப்பட்டன. இதைப்பற்றி அனலிஸ்டு விமர்சகர் சொல்லுவதாவது :—400 கிராமங்களைப் பிடித்தாலும் வெறும் பிரதேச லாபம் மாத்திரம் போதாது. எதிரித் துருப்புகளையும், யுத்த சாமான்களையும் கைப்பற்றுவதும் விசேஷம் என்றார்.

கார்கவ் முனையில் ஏராள பலம் கொண்டிருந்தாலும் ஜெர்மானியர்களால் ருஷ்யரின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக இஸ்யுன், பொர்வென்கோவா முனையில் தாக்கப் பார்க்கின்றனர்.

கெர்ச் அநேகமாக விழுந்ததென்றே சொல்லலாம். இருந்தாலும் ருஷ்யர்கள் யேனிகொபா என்ற கோட்டையில் இருந்து எதிர்த்து வருகின்றனர். இன்னும் யுத்தம் இங்கே நடைபெறுகிறது. தற்சமயத்தில் கெர்ச், கார்கவ் இவைகளைப்பற்றி அதிகத் தகவல்கள் கிடைத்தாலும் லெனின்கிராட், கலினின், ஸ்மொலென்ஸ்க் டோரோகோபுஷ் பிரயான்ஸ்க் முனைகளிலும் 1,000 மைல் தூரத்திற்குச் சண்டை நடக்கிறது.

ருஷ்யர்களுக்குக் குத்தகைக் கடன் மசோதாப்படிக்குச் சாமான்கள் போவதாக ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொன்னார். 1941-ல் 180 லக்ஷம் டாலர் மதிப்புக்குச் சாமான்கள் சென்றதில் தற்சமயம் 5,180 லக்ஷம் டாலர் மதிப்புக்கு போகின்றன. பிரிடிஷார் கொடுக்கும் உதவியைப் பற்றி மிஸ்டர் அட்லி சொன்னதாவது :—

'சொன்னபடி நமது உதவி ருஷ்யாவிற்குப் போகிறது. மர்மான்ஸ்க் கடல் மார்க்கம் மிகவும் சிரமமாகி விட்டது. இதனால் கப்பல்களுக்கும், படைக்கும் அதிகக் கெடுதி ஏற்படுகிறது. என்ன சிரமமிருந்தாலும் முடிந்தவரை அனுப்புவதெனத் தீர்மானித்திருக்கிறோம்.

'மற்றொரு வழியிலும் உதவி செய்யப்படுகிறது. லிபியாவில் ஏராள எதிரிப் படைகளை நாம் தடுத்து வைத்திருக்கிறோம். மால்டா தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளுவதோடு, ஜெர்மன் விமானங்களையும் ஈடுபடுத்தி வருகிறது. மேலும் ஜெர்மனிமேல் நம்மால் செய்யப்படும் தாக்குதலால் ருஷ்யப் போர்முனையிலிருந்து ஜெர்மன் விமானங்களும் பிரிக்கப்படுகின்றன.

பிரிடிஷ் விமானப்படை.—வடக்கு பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி முதலிய இடங்களில் மறுபடி தாக்கி வருகிறது.

பலவகைப்பட்டவை.—(1) மெக்ஸிகோ. மியாமிக்கு அருகில் பெட்ரோ டெல்லானோ என்ற மெக்ஸிகோ எண்ணெய் டாங்கியை அச்சு நாட்டு யு-படகு 13வ- புதன்கிழமை தாக்கி மூழ்கடித்தது. ஆகவே மெக்ஸிகோ அச்சு நாடுகளை நஷ்டஈடுசெய்யும்படி ஸ்வீடன் மூலமாக கேட்டிருக்கிறது.

2. அமெரிக்க—பனமா ஒப்பந்தம்.—இந்த இரு நாடுகளுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு பனமாவின் தற்காப்பிற்காக அமெரிக்கப் படைகள் அனுப்பப்படும்.

3. நேசநாடுகளின் விமான சம்பந்தமான கூட்டம் ஒன்றை செவ்வாய்க்கிழமை ஒட்டாவாவில் கனடா பிரதம மந்திரி மெக்கன்ஸி கிங் திறந்துவைத்தார். அதற்கு 16 நாடுகளின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஏற்கனவே கனடாவில் இருந்துவரும் விமானிகளின் பயிற்சி காலம் இரண்டு வருஷத்திற்கு அதிகப்படுத்தப்பட்டது. இதற்கு மிஸ்டர் ரூஸ்வெல்ட் அனுப்பிய செய்தியில் பின்வருமாறு கூறினார் :—

'கனடாவில் இக்கூட்டம் நடப்பது பொருத்தமானதுதான். ஏனென்றால் கனடா ஜனநாயகத்தின் விமானங்களுக்கு உற்பத்தி ஸ்தலமாக இருக்கிறது. அங்கே இருக்கும் விமானப்பயிற்சி தளங்களில் தயாரான ஏராள மாலுமிகள் பல யுத்தரங்கங்களில் ஈடுபட்டு யுத்தத்தில் வெற்றி பெற்று ஸ்வதந்திரத்தை ஸ்தாபிக்கப் பாடுபடுகின்றனர்.

இக்கூட்டத்தை திறந்துவைக்கும்போது மெக்கென்ஸி கிங் சொன்னதாவது:-

"யுத்தம் நடக்கும் அகண்ட பிரதேசங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்போது கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் போக்குவரத்துகள் அதிகம் இருக்கின்றன. யுத்தப் பிரதேசங்களுக்கு நடுமத்தியில் இந்நாடு இருக்கிறது. விமானச் சண்டையை அதிகமாகச் செய்வதற்கும், அட்லாண்டிக் பஸிபிக் முதலிய இரு கடல்களிலும் வேண்டிய படைகளை அனுப்புவதற்கு வசதியுள்ளது.'

4. அமெரிக்கத் துருப்புகளும், டாங்கிகளும், பீரங்கிப்படையும் அமெரிக்க, பிரிடிஷ் கப்பல்களில் ஏறி, சேதமன்னியில் வட அயர்லாந்தில் இறங்கின. இவைகளை அயர்லாந்தின் தற்காப்பிற்கும், ஐரோப்பாவில் இறங்குவதற்கும் உபயோகித்துக்கொள்ள இருக்கும்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசநேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **11—5—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—பலமாகத் துணைபுரியப்பட்ட விரோதி கப்பல் கூட்டம்-பிரிஷியன் (Frisian) தீவுகளுக்கருகாமையில். | ஒரு விரோதி கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. | 2 விமானங்கள். | 1 விமானம். |
| | இரவில்.—துணைபுரியப்பட்ட விரோதி கப்பல் கூட்டம். நார்வே.—(Norwegian) கடற்கரைக் கருகாமையில். எலிஸண்டு (Aalesund). | மிகப் பெரிய கப்பல் தீப்பற்றியது. | | |
| | **லிபியா (Libya)—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகாவின் (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | **ருஷ்யா (Russia)—**(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—போர்முனை எங்கும். | | 16 விமானங்கள். | 42 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—**(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு விமான நிலயம்.—வட பர்மா (Burma). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—**(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் தெரியவில்லை. | | | |
| | **லிபியா (Libya)—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துருப்பு ஏற்றிச் செல்லும் விரோதி விமானங்கள்-மத்தியதரைக்கடலில் (Mediterranean). | | 1 விமானம். | 15 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia)—**(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்-போர்முனை முழுவதிலும். | | 17 விமானங்கள். | 51 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—**(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—ஆக்கியாப் (Akyab), சைனு (China). | | | |
| | விரோதி ஆக்கிரமித்த விமான நிலயம்—ஹானோய் (Hanoi). | | | 15 விமானங்கள். |
| **13—5—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதிக்குச் சொந்தமான நடுத்திரமான ஸப்ளைக் கப்பல்.—நார்வே (Norway)க்குப் பக்கத்தில், எலிஸண்டு (Aalesund)க்கருகாமையில். | தீப்பற்றியது. | | |
| | ஒரு கப்பல்.—வாக்ஸோ (Vaagso)க் கருகாமையில் நார்வே (Norway). | தகர்க்கப் பட்டது. | | |
| | **லிபியா (Libya)—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.-லிபியா (Libya). | | | |
| | விமான எதிர்ப்புகள்.— ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **ருஷ்யா (Russia)—**(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும். | | 23 விமானங்கள். | 40 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு Far East-பர்மா (Burma)—**(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—ஆக்கியாப் (Akyab). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-**(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், துறைமுகத்திலுள்ள கப்பல்கள்.—ராபால் (Rabaul). | மூன்று பாம்பர் விமானங்கள் தகர்க்கப் பட்டன. | | மற்ற விமானங்கள் சேதமாயின. |
| | **தூரக்கிழக்கு—அம்பாயினு (Amboina)—**(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி கப்பல்கள்.—அம்பாயினு (Amboina). | ஒரு கப்பல் மூழ்கடிக்கப் பட்டது; மற்றும் இரண்டு தாக்குண்டன. | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ்; நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **14—5—42.** (வியாழக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலிலும், இரவிலும் ஏற்பட்ட விமான எதிர்ப்புகளைப்பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| விமான நிலயங்கள்.—மார்டூபா (Martuba), பெனினா (Benina). | | | |
| விமான எதிர்ப்புகள்.— ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | 2 விமானங்கள். | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முகம் முழுவதிலும். | | 11 விமானங்கள். | 25 விமானங்கள். |
| தூரக்கிழக்கு Far East-பர்மா (Burma)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதிக்குச் சொந்தமான படகுகள்.— சின்ட்வின் (Chindwin) நதிக் கரையில். | அநேக படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| டெபாயின் (Deboyne) தீவு—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கடற் விமான தளம்.-டிபாயின் (Deboyne). | | | |
| **15—5—42.** (வெள்ளிக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—3 ஜெர்மன் வெடிகண்ணி யழிக்கும் கப்பல்கள்.—செர்பர்க் (Cherbourgh) சமீபத்தில் டச்சுக் கடற்கரைக் கருகாமையில். | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; ஒன்று சேதமாக்கப்பட்டது. | நஷ்டமில்லை. | |
| இரவில்.—ஜெர்மன் துணைக்கப்பல்கள்.— பிரிஸியன் (Frisian) தீவுகளுக் கருகாமையில். | 3 கப்பல்கள் தீப்பற்றின. | 5 விமானங்கள். | |
| வெடிகண்ணிகள் பாவுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முகம் முழுவதிலும். | | 13 விமானங்கள். | 56 விமானங்கள். |
| தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம், விமானம் பறப்பதற்கு உதவுமிடங்கள், மற்ற கட்டடங்கள்.—லே (Lae). | | | |
| டெப்பாயின் (Deboyne) தீவு—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கடற் விமான தளம்.—டெபாயின் (Deboyne). | | 1 கடல் விமானம். | |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **16—5—42.** (சனிக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—கியாஸ் (Gas) பீப்பாய்கள், கப்பல் துறைமுகங்களில் தண்ணீர் வரும் இடங்கள், இருப்புப்பாதைகள், உள்பட எல்லா லக்ஷியங்களும்.—ஆக்கிரமித்த வட பிரான்ஸ் (France). | | நஷ்டமில்லை. | |
| விமான எதிர்ப்புகள்.—டீப் (Dieppe) நதி பிரதேசத்தில். | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | 3 விமானங்கள். | |
| விமான நிலயம்—பெனினா (Benina). | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 20 விமானங்கள். | 65 விமானங்கள். |
| தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—மிட்கைனா (Myitkyina). | | | |
| தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| வேவுபார்த்தல்.—லே (Lae) பிரதேசத்தில். | | | |
| **17—5—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—கப்பல் துறைகள்—பொலாயின் (Boulogne). | | 8 விமானங்கள். | |
| விமான எதிர்ப்புகள்—ஆக்கிரமித்த பிரான்ஸிலுள்ள (France)-லக்ஷியங்களில். | | | |
| இரவில்.—தகவல் ஒன்றும் இல்லை. | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.—ஸோவியத் போர்முனை எங்கும். | | 21 விமானங்கள். | 64 விமானங்கள். |
| தூரக்கிழக்கு—டிமோர் (Timor) டச்சு (Dutch)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கப்பல்கள்.—கொயபாங் (Koepang). | | | |
| தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| விரோதி விமான நிலயம்.—வட பர்மா (Burma). | | | |
| **18—5—42.** (திங்கட்கிழமை.) | | | |
| தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—ஆக்கியாப் (Akyab). | | | |
| படகுகள், மற்ற லக்ஷியங்கள்.—சின்ட்வின் (Chindwin) நதிக்கரையில். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—5—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—மால்டா (Malta ... | | 7 சுடப்பட்டன ; 7 சேதமாயின. | |
| | இரவில் ... | | 3 விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன. | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 13—5—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) ... | | 1 விமானம். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 2 விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன ; 1 சேதமாயின. | |
| 14—5—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இங்கிலாந்தின் (England) தென்மேற்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) ... | | 8 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம் ... | | 2 விமானங்கள். | |
| 15—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கிழக்குக் கடற்கரை இங்கிலாந்து (England). | | 1 விமானம். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 16—5—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) ... | | 5 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 17—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தின் (England) கிழக்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 16 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு Far East—நியூ கினி (New Guinea)**-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 18—5—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | பகலில்.—தென்கிழக்கு, தெற்கு இங்கிலாந்து (England). | | சிலர் கொல்லப் பட்டனர். சொற்பச் சேதம். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 1 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. 2 சேதமாயின. | |

---

## யுத்தக் குறிப்புகள்.

---

**" இன்னும் கஷ்டநிலை இருக்கிறது."**

மனத்தளர்ச்சியோ, சந்தேகமோ ஏற்படும் சமயங்களில் தைரியம் பெறுவதற்கு மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்லுவதைக் கேட்பதுதான் சரியான மருந்து என்று நாம் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறோம். அவர் வருங்காலத்தைக் குறித்துத் தீர்க்காலோசனை செய்து ஆழ்ந்த அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தும் சொற்களைச் சொல்லுகிறார். மேலும் அவர் திடமனதும்,

வெற்றியைக் குறித்து நிச்சயமான நம்பிக்கையும் கொண்டிருக்கிறார். மேமா 16ஆம் சனிக்கிழமை லீட்ஸ் நகரில் தனது நாட்டு மக்களுக்கு அவர் அறிவித்ததாவது :—

"யுத்தத்தில் நாம் அடைந்து இருக்கும் நிலையைப் பார்த்து கஷ்டநிலைகளை நாம் கடந்துவிட்டோமென்று அவசரப்பட்டுச் சொல்லக்கூடாது. இன்னும் கஷ்டங்கள் இருக்கின்றன.

"நேசநாடுகள் அவ்வித கஷ்ட நிலைமைகளைச் சீக்கிரத்திலேயே தாண்டிவிடும். அப்போதுதான், இந்த உலகில் தீங்கையும் அழிவையும் பரவச்செய்யும் கொடிய சத்துருக்களை நாம் அடியோடு ஒழிக்க சாத்தியமாகும். மேலும் இனி இந்த உலகில் யுத்த சிரமமே ஏற்படாமலும் செய்யப்படும்.

"இருள் அடைந்ததும் பயங்கரமுமான பள்ளத்தாக்குகளைக் கடந்து சூரிய ஒளியை அடைவதுபோல கஷ்ட நிலைகளில் விடாமுயற்சியுடன் இருந்து சமாளித்து வந்தால் ஒருநாளும் அழியாத சௌக்கியத்தை அடைவோம்.

"யுத்தம் ஆரம்பித்து 33 மாதங்கள் ஆவதில் நாம் எதிரியிடம் பல்லைக் காட்டிக்கொண்டு நிற்கவில்லை. அவன் கடுமையாக நடந்துகொண்டால் நாமும் அவ்விதமே நடந்துகொள்வோம். நம்மால் முடிந்தவரை லாபங்களையடைவோம். அதிகமாகவே எதிரியைத் தாக்குவோம்.

"ஆயுதம் தரித்த மனிதர்களுக்கு முன்பாக வெறும் தைரியம் மாத்திரம் போதாது. தீர்மானத்துடனும், மேலான காரணங்களுக்காகவும், ஆயுதங்களை வைத்துக்கொண்டுமே சண்டை செய்வதுதான் பயன்படும்."

வி வி வி வி வி வி வி

**பகீரதப் பிரயத்தனம்.** அருகில் காணப்படும் வெற்றியை மாத்திரம் கவனிக்கும் சாதாரண மனிதர்களால் பர்மாவில் நடந்த தேவாசுர யுத்தத்தினால் நமக்கு நேர்ந்திருக்கும் சாதகங்களை எளிதில் கண்டுகொள்ள முடியாது. பின்வாங்கிக் கொண்டேபோவது ஒரு ராணுவ சம்பந்தமான தந்திரமாகுமே தவிர வியக்தமான ஒரு வெற்றியைத் தெரிவிக்காது. மேன்மை தங்கிய வைஸிராய் சமீபத்தில் சொன்ன விதமாக இவைகளைக்கொண்டு யுத்தத்தை ஜயித்துவிடவும் முடியாது. இருந்தாலும் தற்காலத்திய நடவடிக்கைகளைக் கவனித்தால், சாம்ராஜ்யப் படைகளும், சீனப்படைகளும் மேலான சாதகத்தையடைந்திருக்கின்றனவென்றே சொல்ல முடியும். மூன்று மாத காலமாக இவைகள் ஈடுபட்டு நின்றதும், எதிரிகளின் படைகளைத் தடுத்து நிறுத்தியதும், கடல் வழியாகவும் தரைவழியாகவும் முஸ்தீபைப் பெறும் எதிரியை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தோற்கடிப்பதுமாக இவர்கள் செய்த செயல்கள் சரித்திரத்திலேயே புகழ் அடையும்.

இந்த சந்தர்ப்பத்தில் சீனர்களின் ஐந்தாவது, ஆறாவது படைகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லப்படவேண்டும். இவ்விரண்டு படைகளும் பொட்டல் வெளிகளில் எதிரியின் விமானத் தாக்குதல்களுக்கும், பீரங்கித் தாக்குதல்களுக்கும் உள்ளாயின. இருந்தாலும் எதிரியால் சூழ்ந்துகொள்ளப்படாமல் தப்பிவிட்டன.

பர்மாவிலிருந்த நேச நாட்டுத் துருப்புகள் பர்மாவில் மூன்று லக்ஷியங்களை சாதித்திருக்கின்றன. 1. இந்தியாவிற்கும், சைனாவிற்கும் ஏற்படுத்தப்பட்ட போக்குவரத்து ரஸ்தாக்கள் முடியும்வரை எதிரியைத் தடைசெய்வதும்; 2. இந்தியத் தற்காப்பு முறைகள் முடியும்வரை எதிரியைத் தடுப்பதும்; 3. எதிரியை மின்னல் தாக்குதல் செய்யவிடாமல் சோர்வடையும்படி செய்வதும்தான்.

இவைகளில் முதல் இரண்டு பூர்த்தியாகிவிட்டன. மூன்றாவதும் பாதி கைகூடிவிட்டது. மேலும் முன்னேறும்போதெல்லாம் எதிரிக்கு ஏராள கஷ்டங்கள் விளையும்படிக்கும் செய்யப்பட்டன. இந்தியப் பாதுகாப்பு முறைகளும் தயார் செய்யப்பட்டன. எதிரியும் திடீரென்று முன்னேறமுடியாமல் தடைசெய்யப்பட்டான். அதோடு மழையும் ஏற்பட்டு குளிர் காய்ச்சலும், இதர தொந்தரவும் அவனுக்கு ஏற்படும்.

இவ்விதம் கிடைத்த அவகாசத்தை நேசநாடுகள் நல்லவிதமாக உபயோகித்திருக்கின்றன. அலூஷியன் தீவுகளிலிருந்து அலாஸ்காவிற்கும், அலாஸ்காவிலிருந்து நீயு இனிக்கும், அங்கிருந்து கொழும்பு வழியாக மெடகாஸ்கருக்கும் நேச நாட்டுத் தற்காப்பு திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சமயம் வந்ததும் எதிரியின்மேல் தாக்கப்படும். அதோடு இந்தியா, ஆஸ்திரேலியா, சைனா முதலிய இடங்களிலிருந்து தரை மார்க்கமாயும் எதிரிமேல் தாக்குதல் ஏற்படலாம். போராதற்கு அமெரிக்கக் கப்பற்படையும் தலையை நீட்டி வருகிறது. இவ்வித காரணங்களால் ஜப்பான் ஆக்கிரமண திட்டத்திலிருந்து தற்காப்பு முறைக்கு வந்துவிட்டது. இனிமேல் ஜப்பானால் கபடமாயும், திடீரென்றும் தாக்க முடியாது. இந்த விதமாகக் காலம் நேசநாடுகளுக்கு உதவி செய்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் அமெரிக்காவில் யுத்த சாமான்கள் ஏராளமாகச் செய்யப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**இந்திய-பர்மா எல்லைப்புறம்.** இந்தியாவின் பக்கமாக ஜப்பானியர் வருவதானால் அவர்களுக்குத் தடையாக பர்மாவில் ஐராவதி, சிந்துவின் நதிகளும் அவைகளுக்குச் சரியாக பிரம்மபுத்ரா நதியும் இருக்கின்றன. மேலும் இவைகளுக்கு இடையில் பள்ளத்தாக்குகளும், பெருங்காடுகளடர்ந்த மலைத்தொடர்களும் இருக்கின்றன. போக்குவரத்து சாதனங்களும் கிடையாது. தாத்காலிகமாக பிரிடிஷ் சாமான்கள் போவதற்கும், வெளிநாடுகளிலிருந்து இந்தியர்கள் வருவதற்கும் மாத்திரம் சில ரஸ்தாக்கள் போடப்பட்டன. இவைகளையும் வேண்டாதபோது அடைத்துவிடலாம். கூட்டமாகவோ, சண்டை செய்தோ ஜப்பானியர் இப்பாகங்களில் வரமுடியாது. காடுகளில் அரக்கானர், மாகாஸ், சின்னர்கள், ஷான்கள், காரின்கள், நாகின்கள் முதலியோர் பெரும் முரடர்கள். இவர்களும் எதிரியுடன் சண்டை செய்வார்கள். இப்பாகங்களில் அதிகமான உணவுப்பொருள்களும் எதிரிக்குக் கிடைக்காது. ஏனென்றால் ஒவ்வொரு வருஷமும் காட்டில் ஒரு பாகம் அழிக்கப்பட்டு கொஞ்சம் தான் சாகுபடி செய்யப்படுகிறது.

வி வி வி வி வி வி

**'பொது க்ஷேமம்.'** ஜப்பானியர் வந்து ஆக்கிரமித்துக்கொள்ளுவதற்குள்ளாகவே பொது க்ஷேம திட்டத்தின் கொடிய பலன்களை பர்மியர்கள் அனுபவிக்க ஆரம்பித்துவிட்டனர். மார்ச்சு 21ஆம் ஐராவதிக்கரையிலிருந்து ஏராளமான கோதுமை முதலிய சாமான்களை ஜப்பான் கைப்பற்றியதுபற்றி இதாலிய ரேடியோவில் சந்தோஷமாக வாழ்த்தப்பட்டது. அதற்கு முதல்நாள், ஜப்பானிய மக்களுக்கு சந்தோஷமேற்படும் விதமாக அரிசி, சர்க்கரை முதலியவைகளை ஏற்றிக்கொண்டு இரண்டு கப்பல்கள் ஜப்பானுக்கு பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டன என்று ஸெய்கோன் ரேடியோவில் சொல்லப்பட்டது. 'பர்மாவைச் சுரண்டும் திட்டத்தை ஜப்பானியர் தயாரித்துவருவதாக' பெர்லினில் ஏப்ரல் மாதத்திலேயே சொல்லப்பட்டது.

வி வி வி வி வி வி

**வெளியேற்றம்.** பர்மாவிலிருந்து இந்தியர்கள் தப்பிவரும் விஷயமாக இன்னும் அக்கரையில்லாத வதந்திகள் உலாவி வருகின்றன. அதற்காகப் பின்கண்ட விஷயங்களை கவனிப்பது நலம். பர்மாவில் சுமார் 12 லக்ஷம் இந்தியர்களிருந்ததில் 3 லக்ஷம் பேர் பத்திரமாக வந்து சேர்ந்தனர். இதில் 50,000 பேர்கள் கடல் வழியாகவே வந்தனர். உணவு, வைத்திய உதவி, இடவசதி, ஜலம் முதலியவைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பர்மாவில் டாமுவிலிருந்து இந்தியாவின் அருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் வரையிலும் பாதையில் எல்லாம் இனாமாகவே கொடுக்கப்பட்டது. இந்தியாவில் இந்திய அரசாங்கத்தாரும், பொதுஜனங்களும் தப்பிவருகிறவர்களுக்கு உதவி வருகின்றனர்.

களுக்கு சாப்பாடு, ரயில்வே கட்டணம் முதலியவைகளைக் கொடுத்து பத்திரமாக தங்கள் தங்கள் ஊர்களுக்கு அனுப்பி வந்தனர். தப்பி ஓடிவரும் சிறுவர்களின் படிப்பு வசதிகளும் இங்குள்ள பள்ளிக்கூடங்களில் செய்யப்படுகின்றன. சம்பளம், பென்ஷன், சொத்து, வியாபாரம், முதலியவைகளை பர்மா கவர்ன்மெண்டாரே கவனித்து வருகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியருக்கு கஞ்சா நான்காவது ஆயுதம்.** ஜோஸப் காலன்ஸ் என்பவர், ஜப்பானியர்கள் பொதுமக்களை அழிப்பதற்கு கஞ்சா முதலிய வஸ்துக்களை உபயோகிக்கும் விதத்தைப்பற்றி சில தகவல்களைக் கொடுத்திருக்கிறார்.

'ஜப்பானியர், தரை, கடல், விமானப்படைகளை உபயோகிக்கும் விதமாக அவர்களின் சைனியங்களுக்குப் பின்னால் லாகிரி வஸ்துக்களும் எடுத்துச் செல்லப் படுகின்றன. இவ்வஸ்துக்களைக் கொடுத்து பொதுமக்களை மயக்கி தங்களை எதிர்க்காமல் செய்துவிடுகின்றனர். சுலபமாகக் கிடைக்கக்கூடிய விலைக்கு இச் சாமான்கள் விற்கப்படுகின்றன. இவைகளை விற்கிறவர்கள் ஜப்பானியச் சைனியத்தில் சேர்ந்தவர்கள் தான்.'

மேலும் அவர் சொல்லுவதாவது :—"டின்ஸ்டின் நகரம் கஞ்சா வியாபாரத்திற்குப்பெயர்போனது. தூரக்கிழக்கு நாடுகளில் பூராவிலும் இதன் கிளைக்கடைகள் இருக்கின்றன. இந்த நகரத்திற்கு ஜப்பானியர் விசேஷ சௌகரியங்களைச் செய்திருக்கின்றனர். சீனர்களைத் தளரச்செய்யவும், ஏமாற்றவும் இவ்வஸ்துக்களை உபயோகிப்பதென்பது ஜப்பானியரின் ஒரு முறையென்றே சொல்லப்படுகிறது."

கஞ்சாவால் ஏற்படக்கூடிய பலன் யாவருக்கும் தெரிந்ததுதான். தைரியம் குன்றும். மனம் ஏகாக்ரமாக இராது. தளர்ச்சி ஏற்படும். வேலையில் ஊக்கம் குன்றும். புத்தி மாராட்டம் ஏற்பட்டு எதிரியுடன் சண்டை செய்யும் நோக்கமே ஏற்படாது.

ஆனால் ஜப்பானியச் சிப்பாய்களுக்குப் போடப்பட்டுள்ள உத்தரவைப் பாருங்கள்,—

"ஜப்பானியரைப் போன்ற உயர்ந்த ஜாதியார் லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாது. சீனர்கள், ஐரோப்பியர்கள், மற்றும் சில இந்தியர்களே இவைகளை உபயோகிப்பது. லாகிரி சாப்பிடுகிறவன் ஜப்பானியச் சைனியத்தில் சேரக் கூடாது. யோக்கியதையே போய்விடும். ஜப்பானிய சக்கிரவர்த்திக்கு உட்பட்டவனாக மாட்டான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பிரெஞ்சு குடியேற்ற நாடுகள்.** ஒரு காலத்தில் பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகள் உலகில் இரண்டாவதாக பெரிதாக இருந்தன. ஆனால் பிரான்ஸ் விழுந்ததும் இவைகள் சின்னாபின்னமாகப்போய்விட்டன. அதுவே நேசநாடுகளுக்கு கொஞ்சம் பாதகமாயிற்று. அதனால்தான் எந்த பிரெஞ்சு நாட்டையும் அச்சநாடுகள் ஆக்கிரமித்துக்கொள்ளாமல் ரூஸ்வெல்ட் பார்த்து வருகிறார். ஸிரியாவையும், மெடகாஸ்கரையும் பிரிட்டிஷ்காரர்கள் பிடித்தனர். நியூ கலிடோனியாவைப் பிடித்து, மார்டினிகூவுடன் சமாதானத்தையும் அமெரிக்கா பேசிவருகிறது.

பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகள் 5 லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணம் இருக்கின்றன. இதில் கால்வாசி ஸ்வதந்திர பிரான்ஸுக்கும், நேசநாடுகளுக்கும் உட்பட்டிருக்கிறது. அவை ஆபிரிக்காவில் மத்தியரேகைப் பிராந்தியம், ஸிரியா, லெபானன், பிரெஞ்சு இந்தியா, தென்கடல் தீவுகள், ஸெயின்டு பியரி, மிகாபர் முதலியன.

பாக்கி முக்கால் பங்கு பிரெஞ்சு இந்தோ-சைனா, வடமேற்கு ஆபிரிக்கா, மார்டினிகூ, காடேலோப், பிரெஞ்சு கயானா, ஸோமாலிலாந்து, மெடகாஸ்கர்.



இதில் மெடகாஸ்கரை சமீபத்தில் பிரிட்டிஷ்காரர்கள் பிடித்தனர். இந்தோ-சைனாவை ஜப்பான் பிடித்துக்கொண்டது, போகபாக்கி விஷி ஆதிக்கத்தில் இருக்கிறது. அதாவது, லவால், மார்ஷல் டீட், ஜாகஸ்டோரியாட் மூவரும் கவனித்து வருகின்றனர். இதில் முதலாவதானவன் இந்தோ-சைனாவை ஜப்பானுக்குக் கொடுத்தான். அடுத்தவன் விஷி-ஜப்பான் சிநேகத்தை ஸ்தாபித்தவன். கடைசியானவனுக்கு ஜெர்மானியர் சம்பளம் கொடுத்துவருகின்றனர். ஆங்காங்குள்ள பிரெஞ்சு அதிகாரிகளுக்கு ஸ்தந்திரமே கிடையாது. யாவும் தலைமை அதிகாரிகள் சொற்படிதான் செய்யப்படவேண்டும்.

இந்தப் பிரதேசங்களில் சில நன்றாகத் தற்காப்பு செய்யப்பட்டு கேந்திர ஸ்தானங்களில் இருக்கின்றன. தெற்கு இந்து மகா சமுத்திரத்தில் மெடகாஸ்கர் ஜிப்ரால்டரைப் போல் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது. அமெரிக்காவுடன் போக்குவரத்து செய்யும் ஸ்தலத்தில் டாகர் இருக்கிறது. மெடகாஸ்கரில் இரண்டு சண்டைக் கப்பல்களிருந்தன. ஒன்று போகன்வில்லி, சமீபத்தில் மூழ்கடிக்கப்பட்டது. டாகரில் ரிசல்யூவும், கஸபிளாங்காவில் ஜோன் பார்டியும், மார்டினிகூவில் பீர்னியும் இருக்கின்றன. ஜிபூடியிலிருந்து மெடகாஸ்கருக்கு நீர்மூழ்கிகளும் போய்வருகின்றன. இவைகளை எல்லாம் ஹிட்லரின் சூழ்ச்சிகளுக்கு உட்படுத்தினால் பிரெஞ்சு இந்தோ-சைனாவைப்போல் இவையாவும் நாசமாகவேண்டியதுதான்.

வி வி வி வி வி வி வி

**மார்டினிகூ.** விஷியுடன் இருந்த பழைய சிநேகத்தை ஒட்டி மார்டினிகூ விஷயத்தில் அமெரிக்கா நடந்துகொண்டு வருகிறது. இருந்தாலும் லவால் விஷயத்தில் தயவுகாட்டவில்லை. இதைக்குறித்து அமெரிக்கக் குறிப்பு கூறுவதாவது :—

'ஜெர்மனியிடன் அதிக உறவுடன் நடந்து கொள்ளுவதாக விஷித் தலைவன் சொல்லுவதால் பழைய ஒப்பந்தங்களின்படி அமெரிக்க அரசாங்கம் நடந்து கொள்ள முடியாது. இதன் பயனாக பின்கண்ட ஆறு நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்படுத்தி இருக்கிறது. (1) ஆண்டிலிஸ்ஸில் இருக்கும் சண்டைக் கப்பல்களையும், விமானங்களையும் ஆயுதமில்லாமல் செய்வது, (2) ரேடியோ, தந்தி தபால் முதலியவைகளை வசப்படுத்திக்கொள்ளுவது, (3) வியாபாரத்தையும், பிரயாணிகளையும் மேல் பார்ப்பது, (4) அங்கிருக்கும் வியாபாரக் கப்பல்களை அமெரிக்கா எடுத்துக்கொள்ளுவது, (5) பிரெஞ்சு ராணுவத்தையும் கப்பற்படையையும் கேவலம் போலீஸ் வேலைக்கு மாத்திரம் வைத்துக்கொள்ளுவது, (6) விஷிக்குச் சொந்தமான தங்கத்தையும், அரசாங்கத்தாரின் பொருளையும் கட்டுப்படுத்துவதும்தான்.

விஷியின் சார்பாக லவால் பதிலனுப்பும்போது அமெரிக்காவுடன் சமாதானம் செய்யும் முறையில் நடந்துகொள்ள முடியாதென்றும் இருந்தாலும் கப்பல்களில் ஆயுத பரிஹாரணம் செய்தால் அமெரிக்கா அவைகளை உபயோகிக்கக் கூடாதென்றும் சொல்லிவிட்டான். ஆண்டிலெஸ்ஸிலிருக்கும் அட்மிரல் ராபர்ட்ஸ் மூலமாக செய்யப்படும் நிபந்தனைகளுக்கு விஷி இணங்குமே தவிர நேராடி ராபர்ட்ஸுடன் ஏதாவது சமாதானம் செய்துகொண்டால் அவைகளை விஷி அங்கீகரிக்காதென்றும் சொல்லியிருக்கிறான்.

வி வி வி வி வி வி வி

**ஸால்ஸ்பர்க் சந்திப்பு** ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் ஏப்ரல் 29-ம் தேதி ஏற்பட்டது. இதில் நான்கு விஷயங்கள் சர்ச்சை செய்யப்பட்டனவாம். ருஷ்யாவில் செய்யப்பட்ட மாரிகாலத் தாக்குதலின் பயனும், மத்தியதரை கடல் நிலைமையும், ஜப்பானிய யுத்தமும், வசந்த காலத் தாக்குதலும் சர்ச்சை செய்யப்பட்டன. மால்டாவில் அச்சநாடுகள் செய்த தாக்குதல் தளர்ந்தும், நீர்மூழ்கி யுத்தம் குறைந்தும், ரோட்ஸ், லோவோஸ், பெங்காஸி, டேர்னு, இன்னும் இதாலியத் துறைமுகங்கள் இவைகளில் பிரிட்டிஷ் விமானத் தாக்குதல் அதிகரித்தும், இவர்கள் இருவரும் பரஸ்பரம்

திருப்திகரமாகப் பேசிக்கொண்டார்கள். ருஷ்யாவில் மாரிகாலம் பயன்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இந்த நான்கு காலத்தில் 2,00,000 ஜெர்மானியர் இறந்தனர். 10 லக்ஷம் பேர் காயமடைந்தனர். 3,00,000 மோட்டார் வண்டிகள் நாசமாயின. மேலும் ருஷ்யர்கள் 50 புதிய பகுதிகளை ருஷ்யர்கள் கூட்டிக்கொண்டு தொழிற்சாலைகளைப் பத்திரமான இடத்திற்கு மாற்றிக்கொண்டும் விட்டனர்.

ஜப்பானியரின் வெற்றியைப்பற்றி ஹிட்லர் நிச்சயமாக மேற்கு நாடுகளுக்கும் ஜப்பானியரால் தீங்கு ஏற்படுமென்று சொல்லியிருக்கலாம். வசந்த காலத் தாக்குதலைப்பற்றி சர்ச்சை செய்யும்போது மேலும் இதாலி சைனியங்களையும் ஸப்ளைகளையும் அனுப்ப வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கக் கூடும்.

இச்சந்திப்பின் உண்மை கருத்து முஸோலினிக்கு கொஞ்சம் கௌரவம் காட்டி அதன் மூலம் இதாலியில் கொஞ்ச நாள்கள்வரை கலகங்களேற்படாமல் செய்யவே இருக்கும். சாம்ராஜ்ய நாடுகளை இழந்ததைப் பற்றி இதாலியர்களுக்கு இன்னும் கவலையாகத்தானிருக்கிறது. நைஸ், கார்ஸிகா, ஸாவாய் முதலியவைகளை லவால் விட்டுக் கொடுக்கவும் மாட்டான். ஜெர்மன் ரகசிய போலீஸ் இதாலி பூரா பரவியிருக்கிறது. 'சண்டை போதும், ரகசியப் போலீஸ்போதும்' என்று எங்கும் சப்தமாக இருக்கிறது. ஆகவே முஸோலினியின் நிலைமையை ஸ்தாபிப்பதற்கே இச்சந்திப்பு இருக்கும். இதன் பயனாக முஸோலினி பிரதம நீதிபதியின் அதிகாரங்களைப்பற்றி ராஜத்ரோகம் முதலியவைகளைக் கண்டிக்க சட்ட திட்டங்களை ஹிட்லர் போலவே செய்துவருகிறான்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியில் பிளவு.** ஹிட்லரின் நிலைமையும் ஸ்திரமாக இல்லை, இது டெயிலி ஹெரால்டு பத்திரிகையின் அரசியல் நிருபரான மிஸ்டர் W. N. எவர் என்பவருடைய குறிப்புகளிலிருந்து தெரிகிறது. முன்போலவே ஹிட்லரின் புகழ் அதிகமாகவே காணப்படுகிறது. ருஷ்ய யுத்தத்தில் தோற்றாலும், வாழ்க்கையில் ஏற்படும் சிரமத்தாலும், பிரிடிஷ் விமானப் படையின் தாக்குதலாலும் இப்புகழ் குன்றும். இருந்தாலும் பெரும்பான்மையோர் ஹிட்லர் வெற்றியடைவானென்றே நம்புகின்றனர்.

தொந்தரவுகளெல்லாம் சைனியத்தின் உயர்தர உத்தியோகஸ்தராலும் நாஸிக் கக்ஷித் தலைவர்களாலும் தான் ஏற்படுகிறது. இவர்களுக்கு ஹிட்லரின் ஸ்தாபனங்களில் நம்பிக்கை குன்றிவருகிறது. ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியாதபடி ஏதோ பைத்தியம் பிடித்தவனென்றே நினைக்கின்றனர். அவன் அதிகாரம் குறையக் குறைய, பரஸ்பரம் கலகம் அதிகரிக்கிறது.

ஹிட்லரை ஒரு பொம்மையாகச் செய்துவிடவேண்டுமென்று ஹிம்லர் எண்ணுகிறான். பிறகு தானே தலைவனாகிவிடலாம்.

கோயரிங் சைனியத்தைத் தயார் செய்துகொண்டு நாஸிக் கக்ஷியைத்தாக்க ஏற்பாடு செய்கிறான். சென்ற சரத்காலம் வரை சைனியத் தலைவர்கள் ஹிட்லர் சொன்னபடி நடந்துவந்தனர். அவர்களுடைய வார்த்தையைக் கேளாது மாஸ்கோவைப் படையெடுத்தான். அவர்களும் ஹிட்லரை வசப்படுத்த நினைக்கின்றனர்.

ஹிம்லரும் அவனது ஆட்கள் ஒரு பக்கத்திலும், கோயரிங்கும் அவனுக்குக் கீழுள்ள தலைவர்கள் மற்றொரு பக்கத்திலும் இருந்து அதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கின்றனர். சாமான்களின் உற்பத்தியில் இத்தகராறு நன்றாகத்தெரிகிறது.

இருந்தாலும் யாவரையும் ஹிட்லர் தனது சொற்படி நடக்கவேண்டுமென்று சொல்லி வருகிறான். இப்படிச் செய்யாவிட்டால் மனஸ்தாபங்கள் முற்றிவிடும்.

ஆனால் இதிலிருந்து ஜெர்மனிக்கே யுத்தத்திற்கு ஒரு முடிவுவந்துவிடுமென்று சொல்ல முடியாது. ஆனால் ஜெர்மன் யுத்த முயற்சி பொருளாதாரம், ஒற்றுமை முதலியவைகளுக்கும் கெடுதி ஏற்படும்.



**யுத்தத்திற்கு நார்வே செய்த உதவி.** "நார்வே கப்பற்படையின் சில பகுதிகள் ஆபிரிக்கா, இந்தியா இவைகளுக்கு அருகிலும், அட்லாண்டிக், வடகடல், இங்கிலீஷ் கால்வாய் இங்கும் சஞ்சரிக்கின்றன. பிரிடனின் கடற்கரைப் பாதுகாப்பில் நார்வே விமானங்களும் ஈடுபட்டிருக்கின்றன. நார்வே சைனியம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

"முன்னேறித் தாக்கும் சமயத்தில் மும்மரமாக சண்டை செய்ய லாயக்கான சைனியம் ஒன்று இவர்களால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

"நார்வே கப்பற்படை நமது வசத்திலிருப்பதே நார்வேயால் செய்யப்பட்ட உதவியாக இருக்கிறது.

"யுத்த சாமான்களையும் உணவுகளையும் அனுப்பும் விஷயத்தில் நார்வே வியாபாரக் கப்பல்கள் ஈடுபட்டன. இதில் 30,000 நார்வே மாலுமிகளிருக்கின்றனர். நார்வேயைவிட்டு வந்ததும் இவர்கள் இங்கிலாந்திலிருந்து தங்கள் வேலையைச் செய்துவருகின்றனர்.

---

# ராணுவமும் பொதுமக்களும்.

---

(மிஸ்டர். R. D. டென்னிஸ்டன் எழுதியது).

(மதராஸ் அகில இந்திய ரேடியோ ஒலிபரப்பு.)

நமக்கு ஞாபகப்படுத்திக்கொள்ளக் கூடிய காலம் முதல் மதராஸில் இந்திய, பிரிடிஷ் துருப்புகள் இருக்கின்றனவென்றும், அவைகளால் நமக்கு ஒருவித தீங்கும் ஏற்படவில்லையென்றும் தெரியும். இதற்கு மாறாக ஒரு சம்பவமும் நிகழ்ந்ததில்லை. சமாதான காலங்களில் துருப்புகளைப்பற்றிய சிந்தனை பொதுமக்களுக்கு ஏற்படுவதில்லை. நாம் தற்போது யுத்த நெருக்கடியில் இருக்கும் காரணத்தை முன்னிட்டு மாத்திரம் இந்தத் துருப்புகளால் நமக்கும், நமது சொத்துக்களுக்கும் தீங்கு ஏற்படுமென்று ஏன் நினைக்க வேண்டும். சாதாரண சமயத்தைவிட தற்போது அதிகத் துருப்புகள் இருப்பது உண்மை. ஆனால் அந்தக் காரணத்தைக்கொண்டு நமக்கு அதிக பந்தோபஸ்து ஏற்படுமென்று நினைப்பது தான் சரியானது. எதிரியிடமிருந்து நம்மைக் காப்பாற்றவே இத்துருப்புகள் வந்திருக்கின்றன.

மதராஸுக்கு கொஞ்ச தூரத்தில் 10,000 வேலையாட்களை நியமித்துக்கொண்டு நான் தொழிற்சாலையை நடத்துகிறேன். இதைக் காபந்து செய்ய சில இந்தியத் துருப்புகள் அனுப்பப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

"அப்பா, துருப்புகளா!" என்று எனது வேலையாட்கள் சொல்லிச் சென்றார்கள். ஆனால் அப்படிச் சொல்லிவிட்டு சென்றதன் தாத்பரியம் அவர்களுக்கே தெரியாதிருந்தது. தற்சமயத்தில் ரயில்வே கட்டணங்கள் அதிகமாகிவிட்டதால் அடிக்கடி அயல் ஊர்களுக்குச் செல்ல முடியாததால் ஒவ்வொருவராகத் திரும்பி வருகின்றனர். ஏன் முதலில் செல்ல வேண்டும், பிறகு திரும்பி வர வேண்டும். இந்தத் துருப்புகள் வந்து ஏன் இந்தத் தொழிற்சாலையின் வேலையில் வேலைக்காரர்களை ஈடுபட முடியாமல் செய்யவேண்டும்?

## 'பலாத்கார யுத்தம்'.

அதற்கு இரண்டு காரணங்களிருக்கின்றனவென்று நினைக்கிறேன். 1914-ல் நடந்த யுத்தத்திற்கும் தற்போதிய யுத்தத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. தற்போது ரேடியோ முதலிய வசதிகளிருப்பதால் இவைகளைக்கேட்டுப் பொது மக்கள் சுலபமாகப் பயந்து விடுகின்றனர். எதிரிகள் இவைகளின் மூலம் பிரசாரம் செய்கின்றனர். இதற்குத்தான் பிரசாரம் அல்லது பலாத்கார யுத்தம் என்று சொல்லப்படுகிறது. சிறிய யுத்த சம்பவங்களைக் கொஞ்சம் அதிகமாகச் சொல்லியும், பொய் பிரசாரத்தைச் செய்வதாலும், சண்டைகள் நேராதபோதே சண்டைகள் நடந்ததாகச் சொல்லியும் எதிரி

பொதுமக்களைத் திடுக்கிடும்படி செய்கிறான்.

இந்த யுத்த காலத்தில் பயங்கரமான பலவித பரிபாஷைகள் தோன்றியிருக்கின்றன. உதாரணமாக ஜெர்மானியரை ஹூணர்களென்று சொல்லலாமா என்று ஒருவர் சந்தேகப்பட்டார். ஜெர்மானியர் என்ற பதத்திற்கே கெடுதலான அர்த்தம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே "ஐந்தாம்படை" என்ற வார்த்தையும் கிளம்பியிருக்கிறது. ஐந்தாம் படையென்றால் துரோக கோஷ்டியென்றும், ஐந்தாம் படையினரென்றால் துரோகிகளென்றும் சர்வசாதாரணமாக வழங்கி வருகிறது. இவ்வித முறையைக் கொண்டு பிரிடிஷ், இந்தியச் சைனியங்களுக்கும் பொதுமக்களுக்கும் மனஸ்தாபத்தை உண்டுபண்ணவே எதிரிகள் நினைக்கின்றனர். இவர்களுக்கு உதவியாகச் சில பத்திரிகைகளும் சேர்ந்து கொள்ளுவது போலவும் காணப்படும். ஆனால் உண்மையில் இந்தியத் துருப்புகளும் அவ்விதம் கடும் செய்கைகளைச் செய்வதில்லை. பிரிடிஷ் சிப்பாயும், வேலையில்லாத காலங்களில்கூட தன் இஷ்டப்படி திரிவதில்லை. ஆனால் ஸ்திரீகளுக்கெல்லாம் ஆபத்திருப்பதாக மட்டில் சொல்லப்படுகிறது. இந்த சந்தர்ப்பங்களில், அபிஸீனியா, லிபியா, மலேயா, பர்மா முதலிய இடங்களில் தைரியமாகச் சண்டை செய்ததற்காக இந்தியத் துருப்புகளுக்குச் செய்யப்படும் மரியாதைகளையும் கவனிக்க வேண்டும். டங்கர்க், கிரீட், டொப்ருக், முதலிய இடங்களில் பிரிடிஷ் சிப்பாய்கள் காட்டியுள்ள வீரத்தனத்தை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## சிப்பாயின் வேலை.

சிப்பாயின் வேலை யென்னவென்று கவனிப்போம். எப்படியும் அவன் யுத்தத்திலீடுபட வேண்டியதுதான். அப்போது அவனுக்கு ஒருவித சௌக்கியமும் ஏற்படாதென்பதை கவனிக்க வேண்டும். நம்மவரில் சிலருக்கு சைனியத்தில் சிநேகிதர்கள் இருக்கலாம். சைனியத்தில் சேருவதற்குமுன் அவர்களை மிக சண்யமாக நினைத்திருப்போம். தற்போது சிப்பாயின் உடைகளை அணிந்ததால்மட்டில் அவர்களுக்கு ஏதாவது குறை வந்துவிட்டதா? ஒன்றுமில்லை. இவர்களைப் போலத்தான் மற்றவர்களும். மேலும் யுத்தத்திலீடுபடுகிறவர்களுக்குவிசேஷ கௌரவத்தையே காண்பிக்க வேண்டும். யுத்தத்திலீடுபடா நேரங்களில் சிப்பாய்களுக்கு உள்ள கஷ்டங்களையும் கவனிக்கவேண்டும். நமக்கெல்லாம் ஏதோ சில அலுவல்களிருக்கின்றன. அவை முடிந்ததும் வீட்டிற்குச் செல்லுகிறோம். அவர்களுக்கு அவ்விதம் கிடையாது. மேலும் மே, ஜூன் மாதங்களில் ஒரு சாதாரண கூடாரத்தில் வெய்யலின் அவஸ்தையைப் பொறுத்துக்கொண்டிருப்பதென்பதும் சாதாரணமல்ல. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிறிது ஓய்வைக் குறித்து நாம் பொறாமைப்படக்கூடாது.

அடுத்தபடியாக, தற்சமயத்தில் சைனியத்தில் சேர்ந்திருப்பவர்கள் எப்பேர்ப்பட்டவர்களென்று பார்ப்போம். முன்னிருந்தவர்களுக்கும் இப்போதுள்ளவர்களுக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. இதற்கு முன் சேர்ந்தவர்கள் யாவரும் சைனியத்தையே தகுந்த வாழ்க்கையாக அமைத்துக்கொண்டார்கள். புதிதாகச் சேர்க்கப்பட்ட சைனியத்தில் அப்பேர்ப்பட்டவர்களும் இன்னும் இதர வாழ்க்கையிலிருந்து வந்தவர்களுமிருக்கின்றனர். யுத்தம் முடியும்வரைதான் இவர்கள் சைனியத்திலிருப்பார்கள். இவர்களுக்கு அங்கே ஆதிக்கமும் உண்டு. இவர்கள் சொல்லுவதெல்லாம், "ஹிட்லர் சீக்கிரத்தில் ஒழிந்தால் என் சொந்த வேலையைப் பார்ப்பேன்" என்பதுதான். மதராஸுக்கு அருகிலிருக்கும் ஒரு படையில் வக்கீல்களும், மதசம்பந்தமான படிப்புள்ளவர்களும், கணக்குப்பிள்ளைகளும், பாங்கி குமாஸ்தாக்களும், ஸர்வேயர்களும், சிற்பிகளும், இன்ஜினியர்களும், டிரைவர்களும்(குடியானவர்களும்), தச்சு வேலைக்காரர்களும், கடைக்காரர்களும், வியாபாரிகளும் இருக்கின்றனர். தட்டுக்கெட்டுப்போய் சிப்பாயின் உடைகளை அணிந்ததால் கொள்ளைக்காரர்களாக மாறி பொதுஜனங்களை பயமுறுத்துகிறார்களென்று இவர்களை சொல்லலாமா? இவர்களில் சிலர் பிளிமத்தில்சண்டையிலீடுபட்டவர்கள். அந்த இடத்தில் விமானத் தாக்குதல் அதிகமேற்பட்டதென்பது யாவருக்கும் தெரியும். மற்றொரு படையில் 60



சதவிகிதம் தேயிலைகூட அருந்தாதவர்களிருக்கின்றனர். இவர்களா பொதுமக்களுக்குத் தீங்குவிளைவிப்பார்கள். சட்டதிட்டம் என்பதைத் தெரியாதவர்கள்தான் ராணுவச் சட்டத்தைப்பற்றி தெரிந்துகொள்ளாமல் பேசுவார்கள். ராணுவச் சட்டதிட்டம் மிகக்கடுமையானது. அதுவும் யுத்த சமயத்தில் மிகமிகக் கடுமை. ஒரு தடவை ஒருவன் தவறு செய்தால் மறுபடி அவர்கள் அவ்வாறு செய்யாதவண்ணம் தண்டனை விதிக்கப்படுகிறது. இவைகளைப்பற்றி கதைகளை நாம் பத்திரிகைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சிற்சில சமயங்களில் சில தவறுதல்களும் நேரலாம். ஆனால் சிப்பாய்கள் எல்லாரும் அப்படித்தான் என்றுஎண்ணக்கூடாது.

## சந்தோஷ வீரர்கள்.

இந்திய, பிரிடிஷ் சிப்பாய்களின் படங்களைப் பார்த்திருக்கலாம். அவர்கள் யாவரும் முகமலர்ச்சியுடனே தான் காணப்படுகின்றனர். அதைப் போல் ஜெர்மன், இதாலியச் சிப்பாய்களின் முகங்களில் அவ்விதம் சிரிப்பு கிடையாது. இதாலியர்களுக்கு சந்தோஷ சந்தர்ப்பமே கிடையாது: குழந்தைகளுடனும், பிராணிகளுடனும் பிரிடிஷ் சிப்பாய் உல்லாஸமாக இருப்பான். நான் சொல்லுவதெல்லாம் பொதுவான அம்சங்கள்தான்.

## ராணுவத்திற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆகவே ராணுவத்திலிருப்பவர்களின் பேரில் கொஞ்சம் அதிக தயாள குணமும் பகுத்தறிவும் காட்டவேண்டும். பொதுமக்கள் தான் அதிகத் தொந்தரவு செய்வது. உதாரணமாக விளையாட்டுகளில் நன்றாக நடத்தப்படுகிறவன் மற்ற வாழ்க்கையிலும் அமைதியுடனே காணப்படுகிறான். ஆகவே ஒழுங்கு முறைக்கு அடங்கியவர்கள் எப்போதும் அடக்கமாகவே இருக்கின்றனர். மேலும் நன்றி என்பதை மறக்காமல் நமக்காகப் பாடுபட்டுவரும் பிரிடிஷ் இந்திய சிப்பாய்களுக்கு நன்றியுடன் நாமும் நடக்க வேண்டும் ஏனென்றால் ஜப்பானியர் திடீரென்று இங்கே வந்து விடாமல் இச் சிப்பாய்கள் தான் செய்கின்றனர்.

---

# பிரிடிஷ் மக்கள் என்ன செய்கிறார்கள்?

# குறைதோஷ விசாரகர்களுக்கு ஒரு அமெரிக்கரின் பதில்.

(நியூ யார்க்கிலுள்ள "ஹெரால்ட் டிரிபியூன்" பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர், பெர்ட் ஆண்டிரூஸ் கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

அச்சு நாட்டின் பிரசாரகர்களும், பிடிவாதமுள்ள அமெரிக்க ஆரும் படையைச் சேர்ந்தவர்களும் 'பிரிடிஷ் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்'? என்று கேட்கிறார்கள். இக்கேள்விக்கு பிரிடனிலிருந்து வரும் விஷயங்களிலிருந்து நாம் சரியான பதிலைத் தெரிந்துகொள்ளக்கூடும்.

புதிதாக பிரிடனிலிருந்து வரும் விஷயங்கள் 'எதிர் பிரசாரம்' என்ற தலையங்கத்தின் கீழ் வெளிவருவதில்லை. ஐக்கிய நேசதேசங்களில் இருக்கும், அயல் நாடுகளிலும் உற்பத்தி இலாகாவில் நடக்கும் நடவடிக்கைகள் தெரிந்த அமெரிக்கத் தலைவர்கள் அந்த விஷயங்கள் உண்மை என்று ஆதரிக்கிறார்கள்.

சமீபத்தில் நடந்த நியூ யார்க் பிரசங்கத்தில் பிரிடனின் யுத்த முயற்சியைப் பற்றி ஹாலிபாக்ஸ் பிரபு பேசினார். அவ்விஷயங்களை அவர் அரைகுறையாகச் சொல்லவில்லை என்பதை யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பிரிடிஷ் தீவுகளிலிருந்து சமீபத்தில் வெளியாகியிருக்கும் சில விஷயங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஆனால் பிரிடன், அமெரிக்க விமானங்கள், டாங்கிகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளாமலிருந்திருந்தால் அமெரிக்காவின் படையெடுப்புகளுக்குப் போதுமான விமானங்களும், டாங்கிகளும் இருந்திருக்குமென்று அச்சுநாடுகள் பொய் பிரசாரம் செய்து வருகின்றன. இதற்கு ஹாலிபாக்ஸ் பிரபு தக்கபடி பதிலளிக்கவில்லை என்று தெரிகிறது.

## ஒரு பாம்பர் விமானம் தருவிக்கப்பட்டால் ஐந்து விமானங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1941-ம் வருஷத்தில் பிரிடன் அயல் நாடுகளிலிருந்து வாங்கும் ஒவ்வொரு பாம்பர் அல்லது பைடர் விமானத்துக்கும் தூரக்கிழக்குப் போர்முனைகளான

லியா, ருஷ்யா, இன்னும் மற்ற இடங்களுக்கும் சுமார் ஐந்து விமானங்கள் வீதம் ஏற்றுமதி செய்திருக்கிறது. அப்படி அனுப்பிய வற்றில் டாங்கிகளின் எண்ணிக்கைதான் பாராட்டத்தக்கது. பிரிடிஷ் தீவுகளில் இறக்குமதி செய்யப் படும் ஒவ்வொரு டாங்கிக்கும் 15 வீதம் ஏற்றுமதி செயயப்படுகின்றன. ஜனவரி மாதமுடிவில ருஷ்யாவிற்கு அனுப்புவதாக பிரிடன் ஒப்புக்கொண்ட டாங்கிகளில் ஒன்றுதான குறைந்திருந்தது.

பிரிடிஷ் தொழிற்சாலைகளின் நிலைமை என்ன? ஏன் அவைகளெல்லாம் யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யக்கூடாது? என்று வீண் வதந்தி பேசுகிற வர்கள் வாதிக்கிறார்கள். ஆனால் விஷயங்கள் கீழ்க்கண்ட மாதிரி இருக்கின்றன. யுத்தம் ஆரம்ப முதல் படைகளுக்கு ஸப்ளை செய்யவேண்டிய எல்லாவித பொருள்களின் உற்பத்தியும் மிகவும் அதிகரித்திருக்கிறது. டன்கர்க் சம்பவத் திற்குப் பிறகு உற்பத்தி மும்மடங்கு அதிகரித்திருக்கிறது. ஹிட்லர்படையெடுக்க ஆரம்பித்தபொழுது இருந்ததைக் காட்டிலும் இப்போது பத்துமடங்கு அதி கரித்திருக்கிறது.

## கப்பல் கட்டுமிடங்களில் வேலை எவ்வாறு நடைபெற்று வருகிறது?

யுத்தக் கப்பல்கள்:—ஹிட்லர் யுத்தத்தில் இறங்குவதற்கு முந்திய வருஷத் தில் கடைசி மூன்று மாதங்களில் பிரிடனில் கட்டப்பட்ட கப்பல்களின் எண்ணிக் கையைக் காட்டிலும் நான்மடங்கு அதிகமான கப்பல்கள் 1941-ம் வருஷம் கடைசி மூன்று மாதங்களில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

வியாபாரக் கப்பல்கள்:—யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து வியாபாரக் கப்பல்கள் கட்டுவது இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது. சண்டைக் கப்பல்கள் தயா ரிப்பதற்காகத்தான் வியாபாரக் கப்பல் கட்டுவது குறைக்கப்பட்டது.

ஆகாய விமானங்கள்:—நவீன முறையில் ஆகாய விமானங்கள் தயாரிப்பதில் கஷ்டம் இருந்தபோதிலும், 1939-ம் வருஷம் கட்டப்பட்ட விமானங்களைக் காட் டிலும் 1941-ம் வருஷத்தில் மூன்று மடங்கு அதிகம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

வதந்தி:—"யுத்தத்தில் நேரிடும் எச்செலவிற்கும் அமெரிக்காதான் பணம் கொடுத்து உதவுகிறது. ஆனால் பிரிடன் போதுமான அளவு செலவு செய்கிற தில்லை."

பதில்:—வருஷாந்திர வருமானம் 25 லக்ஷக்கோடி (25 billions) டாலரில் யுத்தத்திற்காக 17 லக்ஷக்கோடி டாலர் வீதம் பிரிடன் செலவு செய்துவருகிறது. யுத்தத்திற்குமுன், 1938-ம் வருஷத்தில் பிரிடன் யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்வதற்காக தேச வருமானத்தில 40 சதவிகிதம் செலவு செய்தது. 1941-ம் வருஷத்தில் போர் சாமான்கள் தயாரிப்புக்காக வருமானத்தில் 60 சதவிகிதம் செலவாகியிருக்கிறது. மீதமுள்ள பெரும் இருப்புத் தொகைகளும் யுத்தப் பிரயத்தனத்திற்காகவே செலவு செய்யப்பட்டு வருகின்றன.

## ஏற்றுமதியின் நிலைமை.

வதந்தி:—"யுத்தம் நடந்துகொண்டிருக்கும் பொழுதுகூட பிரிடன் ஏற்று மதி வியாபாரத்தைக் குறைக்காமல் நடத்தி வருகிறது."

பதில்:—பிரிடனிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதில் பாதியளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. பிரிடனிலுள்ள தொழிலாளிகளில் 100-க்கு 3 பேர் கள்தான் ஏற்றுமதி பொருள்கள் உற்பத்தி செய்வதற்காக வேலையில் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

வதந்தி:—"வழக்கம்போல் பிரிடன் இன்றும் சாதாரணமாக வியாபாரம் செய்து வருகிறது."

பதில்:—1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் மோட்டார்கள் செய்துவந்த பிரிடிஷ் தொழிற்சாலைகளெல்லாம் யுத்த தளவாடங்கள் செய்வதற்கென்று ஒதுக்கப்பட்டுவிட்டன. வருஷத்திற்கு 20,00,000 ரேடியோக்கள் செய்து வந்த ரேடியோ தொழிற்சாலையில் அரசாங்கத்தாரின் உபயோகத்திற்கும், ராணுவ உபயோகத்திற்கும் 1,50,000 ரேடியோக்கள் மட்டும் இப்பொழுது



செய்யப்படுகின்றன. மற்றபடி அத்தொழிற்சாலையில் யுத்த தளவாடங்கள் செய்யப்படுகின்றன. விளையாட்டு சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை களிலுங்கூட 73 சதவிகிதம் யுத்தப் பொருள்கள் செய்வதில் ஈடுபட்டு இருக்கின்றன.

## கப்பற்படையின் வேலை.

வதந்தி:—"பிரிடிஷ் கப்பற்படை என்னவேலை செய்கிறது?"

பதில்:—ஐக்கிய அரசாங்கத்தைச் சேர்ந்த யுத்தக் கப்பல்கள் க்ரூயிஸர்கள், நாசகாரிகள், நீர்மூழ்கிகள் இவைகள் மட்டில் ஜெர்மனி, இதாலி இவைகளைச் சேர்ந்த மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களில் 86 சதவிகிதமும், நீர்மூழ்கிகளில் 89 சதவிகிதமும் அழிந்திருக்கின்றன. மத்தியக் கிழக்குப் போர்முனைக்கு மட்டில் 30,000 யுத்தத்திற்கு வேண்டிய யந்திர சாதனங்களையும், மற்றும் 10,00,000-டன் நிறையுள்ள ஸப்ளைகளையும் கொண்டு செல்வதற்கு பிரிடிஷ் கப்பற்படை பாது காப்பு வேலை புரிந்திருக்கிறது.

வதந்தி:—"அமெரிக்கா பிரிடனுக்கு அநேக விமானங்கள் அனுப்பியிருக்கிறது."

பதில்:—பிரிடிஷ் தீவுகளில் தற்காப்பு வேலையில் ஈடுபட்டிருக்கும் விமா னங்களில் 100-க்கு 89 பிரிடனில் செய்யப்பட்டவை. அயல் நாடுகளில் பிரிட னுக்கு ஜயம் பெற்றுவரும் விமானங்களில் 100-க்கு 75 பிரிடனில் தயாரிக்கப் பட்டவை. பிரிடிஷ் விமானப்படையில் போரில் இறந்தவர்களில் 100-க்கு 75 பேர்கள் ஐக்கிய அரசாங்கத்திலிருந்து வந்தவர்கள்தான்.

---

# பைடர் விமானப்படையின் முக்கிய நோக்கம். "மேலும், மேலும் தாக்குவது தான்."

(விமானப்படைத் தலைவர் L. V. பிரேசர் எழுதியது).

சீதோஷ்ண நிலை சாதகமாக வந்ததால் 1942, வசந்த காலத்தாக்குதலை பிரிடிஷ் பைடர் விமானப்படை ஆரம்பித்துவிட்டது. விமானச் சண்டையிலேயே இதுதான் மிக மும்முரமாக நடைபெற்ற சண்டையாகும். ருஷ்யப் போர ரங்கத்தில் ஜெர்மன் லுப்ட்வாபி படை ஈடுபட்டிருக்கிறது. அதிலிருந்து பாதிப்படையை மேற்கே அனுப்பி பிரிடிஷ் விமானங்களுடன் சண்டை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே ருஷ்யாவிற்கு நேரடி உதவி செய்யவேண்டுமென்ற பிரிடிஷ் பைடர் விமானப்படையின் நோக்கம் கை கூடிவருகிறது.

முன்பு பிரிடன் பேரில் நடந்த விமானப்போரின் போது எதிரிகளால் அனுப்பப்பட்ட விமானங்களைக் காட்டிலும் அதிகமாக ஒரே நாளில் பிரிடிஷ் விமானங்கள் ஈடுபட்டு ஐரோப்பாவில் நாஸி ஆக்கிரமித்த பிரதேசங்களில் படையெடுத்து வருகின்றன. இவ்விதம் செய்வதால் கப்பல்களுக்குக் காபந்து படையெடுத்து வருகின்றன. இவ்விதம் செய்வதால் கப்பல்களுக்குக் காபந்து அளிப்பதிலோ, பிரிடன் பாதுகாப்பிற்கோ குறைவு ஏற்படவில்லை. இதுவே தற்போதுள்ள பைடர் விமானப்படையின் பலமாகும். ருஷ்யாவிற்கு உதவிக்கு அனுப்பாமலிருந்தாலும், கிழக்குப் பிராந்தியங்களில் நடந்த சண்டைகளில் ஈடுபடாமலிருந்தாலும் இன்னும் பிரமாதமான பலம் கொண்டிருக்கும்.

## படையெடுப்புக்கு லாயக்கான சீதோஷ்ண நிலை.

ஏப்ரல் மாதமே படையெடுப்புக்கு லாயக்காக இருந்தது. முதல் 21 நாட் களில் 14 தினங்களில் படையெடுப்புகள் செய்யப்பட்டன. இந்த தினங்கள் பெரும் வகையாக 40 தடவை தாக்குதல்கள் நேர்ந்தன. இவைகளில் 16 தடவை களில் போஸ்டன் விமானங்களும், குண்டுகளேற்றிச் செல்லும் ஹரிகேன் விமா னங்களும் சென்று எதிரி நாட்டில் விமான தளங்களையும், கப்பல் தளங்களையும், தொழிற்சாலைக் கட்டடங்களையும், ரயில்வண்டிகள் நிற்குமிடங்களையும் தாக்கின. இவைகளுக்கு உதவியாக ஸ்பிட் பையர் விமானங்கள் கூடச் சென்றன. "இந்த சந்தர்ப்பங்கள் கனமான குண்டுகளை ஏற்றிச் செல்லும் பெரிய பாம்பர் விமானங் களை ஏன் அனுப்பவில்லை" என்று கேட்கலாம். ஏனென்றால் பாம்பர்கள் வெகு தூரம் சென்று ஜெர்மனியில் உள்ள தொழிற்சாலைகளை இரவு காலங்களில் தாக்கு

-வதற்கு உபயோகமாக இருக்கின்றன. பைடர் விமானங்கள் சிறிய தூரங்களுக்குத் தான் உபயோகமாகும்.

பைடர் விமானங்களில் ஸ்பிட் பையர் விமானங்கள் அதிகமாக ஈடுபட்டிருந்தன. ஆக்கிரமித்த நாடுகளில் லுப்ட்வாபியுடன் சண்டை செய்தே திரும்புகின்றன. இவைகள் திடீரென்று விமானாதிக்கத்தைப் பெற்றுவிடுகின்றன. மார்க்வீஸ் குண்டு தொழிற்சாலையை ஹரிகேன் பாம்பர்கள் தாக்கும்போது "சண்டை நடக்கவில்லை. எதிரி விமானங்களும் சண்டை செய்ய விரும்பவில்லை........" ரூவனுக்கு அருகில் மின்சார யந்திரசாலையின் மேல் போஸ்டன் விமானங்கள் படையெடுக்கும்போது "எங்கள் விமானங்களைப் பார்த்ததும் எதிரி விமானங்கள் ஓடி விட்டன, சண்டையே நேரவில்லை........" அங்கே எல்லாம் எப்போதாவது தான் எதிரிகளுடன் சண்டை நேரும். நமது விமானப்படை எதிர் பார்க்கும் போதெல்லாம் சண்டை நேராது.

பிரிடன் மேல் நடந்த விமானப் போருக்குப் பிற்பட்டு பைடர் படைக்கு அதிக விமான மாலுமிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்சமயம் எதிரி நாட்டில் செய்யப்படும் படையெடுப்புகளால் நமது மாலுமிகளுக்கு நல்ல அனுபவம் ஏற்படுகிறது. ஆகவே மேலும், மேலும், தாக்குவது தான் பைடர் விமானங்களின் லக்ஷியம்.

---

## அமெரிக்காவில் சாமான்களின் உற்பத்தி.

(எட்வேர்டு மாண்ட்கோமரி எழுதியது).

முக்கியமான போர்முனைகளில் முன்னேறிப் போர் நடத்துவதற்கான தந்திரங்களைப்பற்றி அமெரிக்காவில் திட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. அதோடு சாமான்களின் உற்பத்தியைக் குறித்தும் சரியாக திட்டங்கள் யோசிக்கப்பட்டு வருகின்றன. மனித பலத்தைச் சேகரிப்பதும், சாமான்களை அதிகமாக உற்பத்தி செய்வதும்தான் முக்கியமாக கவனிக்கப்பட்டு வருகின்றன.

ஏதோ சில விவரங்களே கிடைத்திருக்கின்றன. இருந்தாலும் மொத்தத்தில் யுத்த சாமான்கள் மிக அதிகமாக செய்யப்பட்டு வருகின்றன. இதைப்பற்றி நியூயார்க்கில் ஒரு உத்தியோகஸ்தர் பேசும்போது, 1942-ல் உள்ள திட்டப்படி 50 விமானங்கள் கட்டப்படவேண்டிய இடத்தில் 84 விமானங்கள் முடிவாகிறதாகச் சொன்னார்.

### செலவு அதிகரிக்கிறது.

ஒரு விஷயத்தில் செலவாகும் பணத்தைக்கொண்டு ஒரு முடிவிற்கும் வர முடியாது. இருந்தாலும் ஏராளமாக சாமான்கள் செய்யப்படுகின்றனவென்று தெரிந்து கொள்ளலாம். ஜூன் மாதத்தோடு முடிவாகும் இவ்வருஷத்திற்குப் போட்ட உத்தேசச் செலவான 26 முதல் 28 லக்ஷக்கோடி டாலருக்கு 2 லக்ஷக் கோடி டாலர் அதிகமாகவே செலவு ஆகும். அடுத்த வருஷத்தில் 14 லக்ஷக் கோடி அதிகமாகும். இக்கணக்கு (உத்தேசக் கணக்கான) 56 முதல் 70 லக்ஷம் டாலருக்கும் அதிகம்.

இவ்விதக் கணக்குகளைக்கொண்டு பார்த்தால் சாமான்களின் உற்பத்தியில் இவ்வருஷம் 8 சத விகிதம் அதிகமாயும் அடுத்த வருஷம் 25 சத விகிதம் அதிகமாயும் காணப்படுகிறது. இந்தக் கணக்குகள் யாவும் மிகத்திருப்திகரமாக இருக்கின்றன. ஆனால் இது போதாது. சில யுத்த சாமான்களை மாத்திரம் ஏராளமாக உற்பத்தி செய்து மற்றவைகளைக் கவனிக்காமலிருப்பது மிகவும் மோசமாகிவிடும்.

### கப்பற் றொழிற்சாலை.

கப்பற் தொழிற்சாலையில் அதிக முன்னேற்றமில்லையென்று ஜனாதிபதி சொல்லியிருக்கிறார். அதிகக் கப்பல்கள் தேவையான இந்த சமயத்தில் இத்தொழிலை கவனிக்காவிடில் அதிகம் பாதிக்கும். அட்லாண்டிக்கில் அதிகக் கப்பல்கள் நஷ்டமாகின்றன. பஸிபிக் யுத்தத்தால் கப்பல் கட்டும் சாமான்களும் கிடைக்கவில்லை. 1940-ல் விமானங்கள் போதாமல் கட்டப்பட்டன. 1941-ல் டாங்கிகள் போதாமல் கட்டப்பட்டன. 1942-ல் கப்பல்கள் போதவில்லை. அவைகளைக் கட்டவேண்டும்.




## விளம்பரம்.

---

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த

# ஸிவில் பாதுகாப்பு

என்ற ஒரு யுத்தப் படம்

(தமிழில்)

புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்

மே ௴ 22௳ முதல் 25௳ முடிய காண்பிக்கப்படும்.

இப்படத்தை

புதுக்கோட்டை

தேசிய யுத்த முன்னணி நிலயம்

பொது ஜனங்களுக்கு பிரசுரம்

செய்கிறது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

### பிரஸங்கம் 96—(3-வது பிரிவு).

1942—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| மே | ...23, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 24, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு | ... ,, | 6.30 |
| | 25, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... ,, | 6.30 |
| | 26, செவ்வாய்க்கிழமை. | ராமச்சந்திரபுரம் | ... ,, | 6.00 |
| | | ராயவரம் | ... ,, | 6.30 |
| | 27, புதன்கிழமை ... | மழையூர் | ... ,, | 6.00 |
| | | காரம்பக்குடி | ... ,, | 6.30 |
| | 28, வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... ,, | 6.00 |
| | | எம்பல் | ... ,, | 6.30 |
| | 29, வெள்ளிக்கிழமை... | பொ. புதுப்பட்டி | ... ,, | 6.00 |
| | | வேந்தம்பட்டி | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் 97—(4-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| | 30, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 31, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி | ... ,, | 6.00 |
| | | ஆவூர் | ... ,, | 6.30 |
| ஜூன் | ... 1, திங்கட்கிழமை ... | காரையூர் | ... ,, | 6.00 |
| | | இடையாத்தூர் | ... ,, | 6.30 |
| | 2, செவ்வாய்க்கிழமை | அண்டக்குளம் | ... ,, | 6.00 |
| | | கிள்ளனூர் | ... ,, | 6.30 |
| | 3, புதன்கிழமை ... | கீரனூர் | ... ,, | 6.00 |
| | | நாஞ்சூர் | ... ,, | 6.30 |
| | 4, வியாழக்கிழமை ... | வடவாளம் | ... ,, | 6.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... ,, | 6.30 |
| | 5, வெள்ளிக்கிழமை ... | நார்த்தாமலை | ... ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—26-5-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ மே ௴ 30௳ [நெ. 97

பிரஸங்கம் XCVII.

## தேசிய யுத்த முன்னணி.

---

I

### சென்னையில் மேன்மை தங்கிய கவர்னர் ஆரம்பம் செய்தார்.

"தேசிய யுத்த முன்னணியை இன்று மதராஸில் ஆரம்பிக்கிறேன். மேன்மை தங்கிய வைஸிராய் ஏற்கனவே சொல்லிய பிரகாரம், இது நாடெங்கும் பரவச் செய்யப்படும். தேசத்திற்கு வந்திருக்கும் பிரகிருத ஆபத்தைத் தவிர்ப்பதற்குத் தயாராக இருக்கும் நல்லெண்ணம் படைத்தயாவரையும் ஒன்று சேர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

"இந்தியாவில் காணப்படும் அரசியல் கட்சிகளுக்குள் பரஸ்பரம் சச்சரவுகளை வைத்துக்கொள்ளாமல், இந்தியாவின் அருகிலேயே வந்து பயமுறுத்தும் ஜப்பானியரின் கொடுமைகளையும் நாஸித் தீங்குகளையும் எதிர்த்துப் போராட வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு தேசாபிமானிக்கும் ஏற்பட வேண்டுமென்றும் அவர்களுடைய ஆதரவு எனக்கு வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இம்மாகாணத்தில், தமிழ் தேசம், ஆந்திர தேசம் முதலிய இடங்களிலுள்ள பலதரப்பட்ட பிரதிநிதிகளையும் நான் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். அரசியல் வாழ்க்கையில் அவர்கள் ஒன்றுபட்டிருந்ததில்லை. ஆனால் தேசாபிமான காரணமாயும், வெற்றி பெறவேண்டுமென்பதை முன்னிட்டும் அவர்கள் இன்று ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

### இதன் நோக்கங்கள்.

"ஜனங்களிடையே யுத்த எதிர்ப்பு சக்தியை வலுவடையச் செய்வதும், பேச்சு, எழுத்து, வதந்தி, இவற்றின் மூலம், நடைபெறும் 5-ம் படை வேலைகளை அறவே களைவதும் இந்த முன்னணியின் முக்கிய நோக்கங்களாகும். ஜனங்களிடையே நம்பிக்கை, தைரியம், பொறுமை முதலிய குணங்களை உண்டாக்கி, நாஸித்துவத்தையும், பாஸிஸ்டு தன்மையையும் எல்லா வழியிலும் எதிர்த்து முடிவாக சர்வாதிகார கொள்கை அழியும்படி செய்வதும் நோக்கமாகும்.

"ஆகவே வெளியேயிருந்து ஏற்படக்கூடிய அபாயத்தை எதிர்த்தும், உள்நாட்டில் தோல்வி மனப்பான்மையை எதிர்த்தும் திடசித்தம் ஏற்படவேண்டுமென்றும் இம்முன்னணி விரும்புகிறது.

"தேசத்தின் யுத்த சக்தியைத் தளரச்செய்யும் பேச்சு, எழுத்து, நடத்தை முதலியவைகளை வெளிப்படுத்திப் போக்கடிக்கவேண்டும். அதோடு முன்னணி மெம்பர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய அன்றாட அலுவல்களில் செய்யும் எழுத்து, பேச்சு முதலியவைகளால் ஜனங்களிடையே வெற்றி உணர்ச்சி ஏற்படும்படி செய்யவேண்டும். சர்வாதிகார நாடுகளின் தோல்விக்காக யாவரும் பாடுபடும்படி துரிதமாகப் பரிசிரமப்படவேண்டும். இவ்வித மனப்பான்மையுள்ளவர்கள்தான் நிஜமான அன்பர்கள் என்பதையும் தெளிவாக்கவேண்டும்".

## இதுதான் பூராவேலை.

"இந்த முன்னணி உத்தியோக பூர்வமான அங்கீகாரம் பெற்று ஆதரிக்கப்பட்டு வந்தாலும் உத்தியோகப் பற்றில்லாதவர்களே இருக்கின்றனர். சுயமதிப்பு, இந்தியாவின் பிற்கால நிலை இவைகளைப் பிரதானமாக வைத்துக்கொண்டு பிரமோஷன், அரசியல், அமைப்பு, உத்தியோகம் முதலியவைகளைக் கவனியாது, பூரா சேவை செய்யக்கூடியவர்களே இதில் இருக்கின்றனர்.

"யுத்த சம்பந்தமான செய்திகளும், அபிப்பிராயங்களும் சரியாகப் பரப்புவதற்கான அக்கறை எடுத்துக்கொள்ளும் ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்களின் உதவியை நாடுவதும் இதில் சேர்ந்தவர்களின் நோக்கமாகும். இப்படிச் செய்வதால் இந்நாட்டில் விஷயம் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள்.

"சேனை, கடற்படை, விமானப்படை, பொதுஜனப்பாதுகாப்பு முதலியவைகளுக்காக ஆட்களைச் சேகரம் செய்யும் முயற்சிக்கு அவர்கள் உதவி செய்வார்கள்.

"போர்வீரனாக இருப்பதாலோ, உத்தியோகம் வகிப்பதாலோ, வியாபாரம், தொழில் முதலியவைகளை நடத்துவதாலோ, இந்த தேசிய முன்னணியைவிட்டு விலகி நிற்கவேண்டியதில்லை".

## உயர்ந்த லக்ஷியம்.

"ஒன்றுபட்டு நிற்பதும், யுத்த உணர்ச்சியை அதிகமாக்கிக்கொள்ளுவதும்தான் இதன் முக்கிய நோக்கங்களாகும். இதுதான் நமது லக்ஷியம். அதனால் நமக்குள் காணப்படும் கட்சிப் பிரதிகட்சி சண்டையை மறந்து தைரியமாகவும், சந்தோஷமாகவும் ஒத்துழைத்து, ஜப்பான் முதலிய நமது சத்துருக்களை எதிர்த்து அடிப்பது சுலபமாகும்.

"இதனால்தான் நான் இம்மாகாணத்தில் தலைமையை வகிக்கிறேன். "இந்தியாவின் வெற்றியை முன்னிட்டு இந்த முன்னணியில் சேருங்கள்" என்றுதான் நான் சொல்லுகிறேன்.

---

# II

## மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர் செய்த சொற்பொழிவு.

"இந்த முன்னணியை ஆரம்பித்ததால் மேன்மை தங்கிய வைஸிராய் பிரபுக்கு சமயத்திற்கு ஒரு திருஷ்டாந்தமாகவே விளங்குகிறார். ஆகவே நானும் இந்த இயக்கத்திற்கு இம்மாகாணத்தில் தலைமை வகிக்கிறேன். இந்த இரண்டு வருஷ காலமாக இம்மாகாண வாசிகளான நாம் செய்துவந்த முயற்சியைப் பற்றி கொஞ்சமும் வெட்கப்படவேண்டியதில்லை. நாம் செய்துவரும் தொண்டுகளைப் பற்றி நாம் மிகவும் கௌரவமாகவே எண்ணிக்கொள்ளலாம். இனி வரப்போகும் ஆபத்துக்களிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக நாம் நம்முடைய விரோதங்களை மறைத்து வைத்துக்கொண்டு நடந்து கொள்ளுவதென்பது ஸ்திரீ, புருஷர்கள் யாவரின் கடமையாகும்.

## இந்தியாவின் வருங்காலம்.

"இந்த தேசத்தின் தன்மையிலும், இந்தியாவின் வருங்காலத்திலும் நம்பிக்கை கொண்ட யாவரும் இதில் சேரலாம். தேசபக்தி கொண்ட யாவரும் தங்களால் முடிந்ததைச் செய்ய முன்வரலாம்.



"ஒவ்வொருவரும் யுத்த முன்னணியில் செய்ய வேண்டிய வேலை இருக்கிறது. நாம் யாவரும் இதில் சேரமுடியாத போதிலும், யுவர்களை இதில் சேர்க்கும் படி பெற்றோர்களைத் தூண்டலாம். இந்த யுத்தம் இன்னும் முடியாததால் திடசரீரம் வாய்ந்த யாவரும் இதில் சேர்ந்து கொள்ளலாம். யுத்தம் முடிவதற்குள் இன்னும் ஏராளப் பேர் தேவையாக இருக்கும்.

"அடுத்த படியாக ஜனங்களை யுத்தத்தைப் பற்றிய சிந்தனை வாய்ந்தவர்களாகச் செய்யவேண்டும். இது சமாதான காலமல்லாததால் ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அநேகம் ஏற்படலாம். சிக்கனமாக அனைவரும் இருந்து சேமிப்பதை யுத்தத்திற்கு உதவவேண்டும். ஏற்கனவே இருந்ததைப் பற்றி மறந்து தற்போதுள்ள நிலைமையைக் கவனித்து வருங்காலத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளுவதுதான் நமது கடமையாகும்".

## உணவுகளை அதிகம் உற்பத்திசெய்யுங்கள்.

"முக்கியமாக எல்லா ஜில்லாக்களிலும் எல்லாவிதமான உணவுப்பண்டங்களையும் அதிகம் உற்பத்திசெய்யவேண்டுமென்று ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். புதிதாக ஒரு ஏக்கரா நிலம் சாகுபடி செய்தாலும் இம்மாகாணத்திற்கு நன்மை யேற்படும்.

"தோல்வி மனப்பான்மையைப் போக்க நம்மாலானதைச் செய்யவேண்டும். இவ்வித மனப்பான்மை ஜப்பானியருக்கு சிநேக பாவத்தைத் தெரிவிக்கும். இதைப்போல் ஆதாரமற்ற வதந்திகளும் ஜனங்களிடையே பரவுவதால் எதிரிக்குத்தான் சாதகமாகும். ஜப்பானியர் இந்த நாட்டை விட்டு வெளியேறுகையில் ஏஜெண்டுகளை இங்கே விட்டுச் சென்றனர் என்பதில் சந்தேகமில்லை. அவர்களே இங்கு பீதியை உண்டாக்கி முடிவில் ஜப்பானியர் வெற்றி பெறுவார் என்று சொல்லிவருகின்றனர். இவ்வதந்திகள் கொடியில் எங்கும் பரவுகின்றன. நாம் அவைகளை அடக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் மூட்டை மூட்டையாகப் பொய் பிரசாரத்தைச் செய்யும் ஜப்பானிய டோக்கியோ ரேடியோவைக் கேட்கவேண்டாம். அகில இந்திய ரேடியோவும், பி. பி. ஸி. யும்தான் உண்மைகளைப் பரப்புகின்றன. ஒன்றையும் மறைப்பதில்லை. அவை நமது மனதிற்கு சுசப்பாகத்தானிருக்கும்.

"தற்போது இங்கே அதிகமாகக் காணப்படுவது தோல்வி மனப்பான்மை. அதாவது இதுவரை ஜப்பானியர் பெரும் வெற்றிகளை அடைந்திருப்பதாகவும், முடிவிலும் அவர் தான் வெற்றிபெருவார் என்றும் நினைக்கப்படுகிறது. அப்படி வெற்றி பெற்றதும் ஜப்பானியர் இந்தியாவுக்கு வந்தால் "நான் உனக்கு விரோதமாக ஒன்றையும் செய்யவில்லை என்று" ஜப்பானியரிடம் சொல்லி நல்ல பேர் வாங்கலாமென்று நினைக்கின்றனர். இவ்வித எண்ணம் வீண் பயங்குள்ளித்தனத்தைத் தெரிவிப்பதாகவே நினைக்கிறேன். தேசாபிமானம் படைத்தவர்கள இப்பேர்ப்பட்ட அபிப்பிராயத்தைப் போக்கடிக்க வேண்டும். எவ்வித கஷ்டம் வந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் :—

"ஜப்பானியர் வெற்றிபெற முடியாது என்றே நான் சொல்லுகிறேன். ஜப்பான், ஜெர்மனி, இதாலி யாவருக்கும் உலகங்களை ஆக்கிரமிக்க வேண்டுமென்றும், அப்படி ஆக்கிரமித்து, அந்த நாடுகளைக் கொள்ளையடிக்க வேண்டுமென்றும் நினைப்பு இருக்கிறது.

"ஆகவே இதுவரை ஆக்கிரமித்த நாடுகளில் செய்வதைப்போலத்தான் இங்கும் செய்வார்கள். ஜப்பானியர் ஜயிப்பார்களென்றும் சொல்லிக்கொண்டால் நமக்கு ஏற்படும் தீங்கை கவனித்துப்பாருங்கள். அவர்கள் சில வெற்றிகளை யடைந்திருப்பதும் உண்மை. நாம் சில தோல்விகளை யடைந்ததும் உண்மை. இருந்தாலும் இந்த யுத்தம் முடிந்தபாடில்லை. அப்போது ஜப்பானியர் தோற்றுப் போவதைப் பார்ப்பீர்கள். முதலில் ஜெர்மனி தோற்றால் மற்ற நாடுகளும் தானாகவே தோல்வியடையும் என்பதில் சந்தேகமில்லை."

## அச்சு நாடுகளை முறியடிக்கப்படும்.

"தற்போதுள்ள நிலைமையிலிருந்து அச்சுநாடுகள் கீழே உருட்டித்தள்ளப்படுமென்ற நம்பிக்கை யிருக்கிறது. இவ்விதம் நினைத்து வரும் நேசநாடுகள் யாவும் ஒன்றுபட்டிருக்கின்றன இந்த தேசிய முன்னணியை ஆரம்பிக்கும்போது அவ்வித ஒற்றுமை வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கிருப்போர் யாவரும் ஒற்றுமைப்பட்டிருங்கள். எதிரியைத் தோற்கடிப்பதற்கான விதமெல்லாம் நடந்துகொள்ளுங்கள்.

"ஏராள பலத்துடன் எல்லா நேசநாடுகள் ஒன்று சேர்ந்திருப்பதால் எதிரிக்கு சீக்கிரம் தோல்வி ஏற்படுவது நிச்சயம். தினமும் நமது பலம் விருத்தியாகிக் கொண்டே போகிறது.

"நமக்குள்ள பலத்தை இன்று நீங்கள் பார்வையிட்டீர்கள். இதற்குமுன் இவ்விதம் பலம் கொண்டதில்லை. இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டு தினமும் முஸ்திப்பு வந்துகுவிகிறது. இனிமேல் தற்காப்பிலேயே இருக்க முடியாது. முன்னேறிப் போர் நடத்தப் போகிறோம். இந்திய மக்களின் உதவியும் நமக்கு இருந்தால் எவ்வளவு நலமென்று யோசியுங்கள். துருப்புகளுக்கும் அதிக உத்ஸாக மளிக்கும்".

## இனி யுத்தமே நேராது.

"இந்த யுத்தம் எப்போது முடியுமென்று தெரியாது. நாம் தினமும் அபிவிருத்தி யடைகிறோம். ஜெர்மனி எல்லா பலத்தையும் திரட்டி விட்டது. இனி அதனால் அதிகம் சேகரிக்க முடியாது. ஏற்கனவே பல தோல்விகளை அடைந்திருந்தாலும் நேசநாடுகளின் பலத்தினாலும் ஒற்றுமையாலும் முடிவான வெற்றியடையப்படும். அப்போதுதான் உலகில் மறுபடி சண்டைகளை நேராமலும், நாஜிகளோ, ஆக்கிரமண ஆசைகொண்ட வேறு நாடுகளோ முன்னேற முடியாமல் செய்யப்படும். பல தலைமுறை வரையிலும் உலகில் யுத்தமே ஏற்படாமல் செய்யப்படும்."

---

# வார யுத்தச் செய்திகள்.

---

### 23—5—42-லிருந்து 29—5—42-வரை.

சைனா.—மேற்கே யூனான் மாகாணத்திலிருந்தும், கிழக்கே செகியாங் மாகாணத்திலிருந்தும் தாக்கப்படுகிறது. இவை இரண்டு பிரதேசங்களுக்கும் 1,300 மைல் தூரமிருக்கிறது.

யூனான் மாகாணத்தில் பர்மா ரஸ்தாவிலுள்ள டாலிபூ (Talifu)-வை நோக்கி தாக்குதல் செய்யப்படுகிறது. இப்பிரதேசம் மலைகளும், நதிகளும் அடர்ந்துள்ளது. எதிரியை களைக்கச் செய்யும் சீன யுத்த தந்திரத்திற்கு இது லாயக்கானது. அதிகமான ஆயுதங்களை உபயோகிக்க முடியாததால் ஜப்பானியர் அமெரிக்க (A. V. G.) படையாலும், சீன விமானப் படையாலும் தாக்கப்படுகின்றனர். பர்மாவில் இருந்தமாதிரி இங்கே ஜப்பானியர்களால் சமாளிக்க முடியாது. பிரதேசமும் வசதியாக இல்லை. மழைகாலம் வந்துவிட்டது. குளிர் ஜ்வரம் பரவிவிடும்.

இவ்வாரத்தில் காரவான் ரஸ்தாவில் கன்லான்ஹூ (Kanlanhu)வை சீனர்கள் பிடித்துக்கொண்டு, டெங்சுங், லுங்லிங் இரண்டையும் தாக்கினார்கள். லாங்கின் வரை ஜப்பானியர் முன்னேறியதாகச் சொல்லப்படுகிறது. சீனர்கள் இவர்களைத் துரத்தி வருகின்றனர்.



செகியாங்கில் கின்ஹ்வாபூ (Kinhwafu)-வை நோக்கி தாக்குதல் நேருகிறது. இதுதான் இம்மாகாணத்திற்குத் தலைநகர். சுகி, ஷென்ஷியன், துங்லு, யீவு கின்டா முதலியவைகளை எதிரி பிடித்திருக்கிறான்.

மேலும் மின்நதி முகத்துவாரத்திலுள்ள சௌனஷி தீவிலும் துருப்புகளை இறக்கியிருக்கிறான். இது புகியாங் மாகாணத்திலிருக்கிறது. பூசௌக்கு (Foochow)த் தெற்கிலுள்ள மேமோய் (Mamoi)-யில் குண்டுகள் போடப்பட்டன.

பார்மோஸாவிற்கு அருகில் போக்குவரத்துக் கப்பல்களும் சண்டைக்கப்பல்களும் சேமிக்கப்பட்டுள்ளன.

பர்மா.—மாண்டலேக்கும், லாஷியோவிற்கும் இடையிலுள்ள நவான்கியோ (Nawngkio) நகரை சீனத்துருப்புகள் தாக்கின. வடக்கு பர்மாவில் மியிட்கியினா, டயாங்ஜூப், இரண்டு நகரங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. 6 தினங்களில் அக்யாப்பில் 7 தடவை குண்டுகள் போடப்பட்டன. மௌங்கிதாங் (Maung-gyithaung), கயான்க்ப்யூ (Kyankpyu), நகரங்களும் தாக்கப்பட்டன. சிந்துவின், கலேவா, மயூ நதிகளில் சென்ற துருப்புகளேற்றிய எதிரி ஸ்டீமர்கள் தாக்கப்பட்டன.

ஜெனரல் வேவலுடன் கலந்து பேசுவதற்காக புது டெல்லிக்கு வந்திருக்கும் ஜெனரல் ஸ்டில்வெல் பின்வருமாறு சொன்னார். பர்மாவைத் திருப்பிப் பிடித்து விடலாம், என்றார். அமெரிக்க (A. V. G) படையை பெரிய விமானப்படையாக மாற்றுவதற்காக அமெரிக்காவிலிருந்து உபரியாக பாம்பர்களும், பைடர்களும் வருவதாகவும் சொன்னார்.

இந்தியா.—பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் ஜெனரல் வேவல் பின்கண்ட செய்தியை தெரியப்படுத்தினார்:—'எல்லாவிதமான ஆயுத முஸ்தீப்பும், விமான எதிர்ப்பு படையினரும் ஏராளமாக பிரிடனிலிருந்து வந்திருக்கிறது. சிங்கப்பூரில் செய்திருந்த முஸ்தீப்பைவிட மிக அதிகமாகவே ஸிலோன், கல்கத்தா முதலிய இடங்களில் செய்யப்பட்டிருக்கின்றன'.

ருஷ்யா.—கார்கவ் யுத்தம் மூன்றாவது கட்டத்தை யடைந்திருப்பதாகச் சொல்லலாம். முதல் கட்டத்தில் ருஷ்யர்கள் வெற்றிகரமாக முன்னேறினர். இரண்டாம் கட்டத்தில் இஸூம்-பர்வென்கோவாவில் ஜெர்மானியர் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்தனர். தற்போதுள்ள மூன்றாவது கட்டத்தில் ருஷ்யர்களின் இடது பக்கத்தில் ஜெர்மன் தாக்குதல் அதிகரித்திருக்கிறது. இஸையும் (Izyum), பர்வென்கோவா பிரதேசங்களுக்கு இடையில் பிரமாத குறுக்கு எதிர்ப்புகள் நேர்ந்திருக்கின்றன. ஏராளமாக டாங்கிகளையும், படைகளையும் ஜெர்மானியர் இறையாக்கி வருகின்றனர். மூன்று ருஷ்யப்படைகளை சூழ்ந்துகொண்டதாக அவர்கள் சொல்லுவது ஊர்ஜிதமாகவில்லை. ஓரிடத்தில் ருஷ்ய முன்னேற்றப்படையைப் பிளந்துகொண்டு போக்குவரத்து நிலைகளுக்கு அப்பால் இருப்பதுதான் உண்மை. ருஷ்யர்களும் ஏற்கனவே பிடித்துள்ள பிரதேசத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள தற்காப்பு நிலையிலிருக்கின்றனர்.

ஸ்மாலென்ஸ்க், ஓரெல் முதலிய இடங்களில் சிறு சண்டைகளும் நடக்கின்றன.

ஜெர்மனி.—இங்கே அதிக சிரமங்கள் காணப்படுகின்றன. ஸ்டாக்ஹோமிலிருந்து கிடைத்த செய்தியின்படி ஹிட்லர் அதிதுரிதமாக பெர்லினை விட்டுப் புறப்பட்டு யுத்தரங்கத்திற்குச் சென்று சைனியத் தலைவர்களுடன் கலந்து பேசினார். ஏனென்றால் இவன் தலைமைப் பதவியை விட்டுவிட வேண்டுமென்று அவர்கள் சொன்னார்களாம். விவசாய மந்திரி (போக்குவரத்து மந்திரி) சரீர அசௌக்கியத்தை முன்னிட்டு பதவி இழந்தனர். ரகசியப் போலீஸ் தலைவன் ஹீட்ரிச் காயம் பட்டிருக்கிறான். ரீஷ்டாக்கில் ஹிட்லர் செய்த சொற்பொழிவிற்குப் பிறகு பெர்லின் கோலோன், ஹனோவர், பிராங்போர்டு முதலிய இடங்களிலுள்ள நீதி மந்திரிகள் கைதிசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடைய அதிகாரத்தைத் தயவுடன் செலுத்தியதுதான் குற்றமாம். மான்ஹீமில் 14 உள்நாட்டு வாசிகளுக்கு கொலைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அயல்நாட்டு ரேடியோக்களைக் கேட்டதும், பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபட்டதும் குற்றமாம்.*

ருஷ்யக் கொள்கைகளை அழிப்பதற்காக ஜெர்மானியர் ஐரோப்பாவை ஒன்று சேர்ப்பதாகச் சொல்லுவது வீண் ஆடம்பரம்தான். ஐரோப்பா பூராவிலும் 3,00,000 பேர்கள்தான் முன்வந்திருக்கின்றனர். இதில் 2,00,000 ருமேனியர்களும், 50,000 ஹங்கேரியர்களும் 40,000 இதாலியர்களும், 10,000 ஸ்லாவாகியர்களும், 5,000 ஸ்பானியர்களும் அடங்கியிருக்கின்றனர். பெல்ஜியம், நார்வே ஹாலந்து முதலிய இடங்களிலிருந்து சொற்பமான ரெக்ரூட்கள்தான் வந்திருக்கின்றனர். டேனிஷ்காரரின் எண்ணிக்கையே தெரியவில்லை.

**லிபியா.**—டெர்னு, டிமிமி, மார்டோபா, ஸிர்டி குடா தாக்கப்பட்டன. காவல் வேலை மீண்டும் நடந்தது.

புதன்கிழமை டாங்கிப்படைகளை இரண்டு பிரிவாகப்பிரித்துக் கொண்டு முன்னேறுகிறான், பிர்ஹாகீமிற்கு வட கிழக்கில் சண்டை நடக்கிறது.

**ஆஸ்திரேலியா.**—லே, ரபால் கோபாங், டெலி, டெபாயினி, அம்பாயினு முதலிய இடங்களிலுள்ள எதிரி தளங்கள் தாக்கப்பட்டன.

**பிரிடிஷ் விமானப்படை.**—ஸெயிண்டு நாஸேரைத் தாக்கி, வடபிரான்ஸிலும் படையெடுப்பு செய்யப்பட்டது. சீதோஷ்ண நிலை சாதகமாக இல்லாததால் வேறு தாக்குதல்கள் செய்யப்படவில்லை. இருந்தாலும் வார்னிமண்டி, மான்ஹீம் முதலியன தாககப்பட்டன. கொடிய சீதோஷ்ண நிலையால் தான் ஜெர்மனியில் குண்டுகள் போடப்படவில்லை. ஆனால் எதிரி கடல்களில் சுரங்க வெடிகள் போடப்பட்டன.

**பலவகைப்பட்டவை.**—1 கப்பல் தினமான மே மாதம் 22-ம் தேதி ஜனாதிபதி ரூஸ்வெல்டு அதிகமான கப்பல்கள் அமெரிக்காவில் கட்டி முடிக்கப்படும் என்று சொன்னார். அதைப்போல் எந்த நாடும் கட்டமுடியாது. 500 சதவிகிதம் கப்பல் தொழில் விருத்தியாகி இருக்கிறது.

2. ஜெர்மன் தொழிற்சாலைகளையும், போக்குவரத்துகளையும், அமெரிக்க விமானங்களும், பிரிடிஷ் விமானங்களும் சீக்கிரத்தில் தாக்கும். விமானத்தில் இரண்டாவது போர்முனை ஆரம்பிக்கப்படும். அமெரிக்கப் பகுதிகள் பிரிடிஷாரின் மேல்பார்வையில் தனிகளாகவே ஈடுபடும்.

3. கனடாவிலிருந்த பிரெஞ்சு பிரதிநிதிகளின் பேரில் சந்தேகம் தோன்றியதால் அவ்வாபீஸ்கள் மூடப்பட்டன. ஆனால் அரசியல் சம்பந்தம் ரத்து செய்யப்படவில்லை.

4. **அமெரிக்க டேக்னிகல் கோஷ்டி** இந்தியாவில் ஐந்து வார காலமாக செய்த முயற்சியின் பயனாக 35 தீர்மானங்களைச் சொல்லியுள்ளார். அதில் ஒன்றின்படி யுத்த கால உற்பத்திக்கு ஏற்றவாறு கவர்ன்மெண்டாரின் ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்படும். அமெரிக்காவிலிருந்து அனுப்பும்படி யந்திர சாமான்கள் கேட்கப்பட்டிருக்கிறது. பல இஞ்ஜினியர்கள் சீக்கிரத்தில் வருவார்கள்.

5, கருங்கடலில் பல்கேரியாவிற்கு அருகில் செபாக் (Chefalk) என்ற துருக்கி ஸ்டீமரை விவரம் தெரியாத ஒரு நீர்மூழ்கி தாக்கியது. ஸ்டீமர் பர்காஸிலிருந்து இஸ்தான்புல்லுக்கு வந்து கொண்டிருந்தது. 5 தினங்களுக்குள் இம்மாதிரி இரண்டு தடவை தாக்குதல்கள் நேர்ந்திருக்கின்றன.

6. பாகோ டி ஓரோ என்ற மெக்ஸிகோ எண்ணெய்க் கப்பல் புதன்கிழமை அமுக்கப்பட்டது. ஆகவே அச்சுநாடுகளின் பேரில் மெக்ஸிகோ சண்டை தொடுத்திருக்கிறது.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **18—5—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி முகாம்கள், மோட்டார் போக்குவரத்து.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.— போர்முனை முழுவதிலும். | | 17 விமானங்கள். | 43 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **19—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | | 3 விமானங்கள். |
| | சாயந்திரம்.—ரயில் போக்குவரத்துகள்.—ஸெயிண்ட் ஓமரு(St. Omer)க்கருகாமையில். | | 4 விமானங்கள். | 1 விமானம். |
| | இரவில்.—பெரிய தொழிற்சாலைகள் உள்பட பல லக்ஷியங்கள்.—மான்ஹீம் (Mannheim). | | | |
| | நீர்மூழ்கி கப்பல் தளம்—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | | 14 விமானங்கள். | |
| | விரோதி விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.-ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—கிரீட் (Crete). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி சாமான் கப்பல்களுக்கு துணை புரியப்பட்ட கப்பல்கள். — மத்திய தரைக்கடல் (Mediterranean). | சாதாரணக் கப்பல் தாக்குண்டது; நாசகாரி ஒன்றும் தாக்குண்டது. | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | 12 விமானங்கள். | 27 விமானங்கள். |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **19—5—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **தூரக்கிழக்கு—டிமோர் (Timor-Portuguese)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம்.—டெலி (Deli). | | | |
| **தூரக்கிழக்கு-டிமோர் (Timor-Dutch)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.-கொயபாங் (Koepang). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. 2 விமானங்கள்சுடப்பட்டன. | | |
| **தூரக்கிழக்கு பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| விமான நிலயம், துறைமுகம்.—ஆக்யாப் (Akyab). | | நஷ்டமில்லை. | 3 விமானங்கள். |
| **20—5—42.** (புதன்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | நஷ்டமில்லை. | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனைமுழுவதிலும். | | 23 விமானங்கள். | 65 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—லே (Lae). | | நஷ்டமில்லை. | 6 விமானங்கள். 2 சேதமாயின. |
| **தூரக்கிழக்கு-பர்மா (Burma)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி போக்குவரத்துகள்.—சிண்ட்வின் (Chindwin) நதியில். | | | |
| சிறு படகுகள்.—ஆக்யாப் (Akyab)க் கருகாமையில்). | | | |
| **21—5—42.** (வியாழக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | 6 விமானங்கள். | |
| இரவில்.-தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி முகாம்கள்.-டிமிமி (Tmimi) பிரதேசத்தில். | | | |
| விமானமிறங்குமிடம் -மார்டுபா (Martuba). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 19 விமானங்கள். | 37 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—ஆக்யாப் (Akyab). | | | |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **22—5—42.** (வெள்ளிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| இரவில்.—விரோதி நீர்மூழ்கி :தளம்.—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | | | |
| வெடிகண்ணிகள் பரவுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி விமான நிலயங்கள்.—டெர்ளு (Derna), மார்டுபா (Martuba). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போராங்கம் முழுவதிலும். | | | |
| **தூரக்கிழக்கு—அம்பாயினு (Amboina)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கப்பல்கள்.—அம்பாயினு (Amboina)விலுள்ள துறைமுகத்தில். | | | |
| **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—லே (Lae). | | நஷ்டமில்லை. | 8 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 2 சேதமாயின. |
| **தூரக்கிழக்கு—நியூ பிரிடன்(New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம், துறைமுகம், கப்பல்கள்.-ராபால் (Rabaul). | 6 விரோதி பாம்பர் விமானங்களும், 1 கப்பலும் பழுது பட்டுப் போயின. | | |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—ஆக்யாப் (Akyab). | | | |
| மாங்-கி-தாங். (Maung'-Gyi-Thaung), ஆக்யாப் (Akyab)க் கருகாமையில். | | | |
| **23—5—42.** (சனிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | 2 விமானங்கள். | 1 விமானம். |
| இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமானமிறங்குமிடங்கள்.—டெர்ளு (Derna). | | | |
| விமானச் சண்டை.—டிமிமி (Tmimi) பிராந்தியத்தில். | | | 1 விமானம். |
| விமான நிலயம்.—மார்டுபா (Martuba). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 23—5—42. (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | விரோதி கப்பல்.—ஸர்டி (Sirte) குடாவில். | தாக்கப்பட்டன. | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள். | | 11 விமானங்கள். | 21 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு–நியூ பிரிடன் (New Britain)–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ராபால் (Rabaul). | அநேக விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், கட்டடங்கள்—ஆக்யாப் (Akyab). | | | |
| | சைனிய வாசஸ்தலங்கள், கட்டடங்கள்.—கியாக்பையு (Kyaukpyu). | | | |
| | விரோதி சமுத்திரங்களில் செல்லும் வியாபாரக் கப்பல்கள்.—சிண்ட்வின் (Chindwin) நதியில். | | | |
| 24—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | சாயந்திரம்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—வெடி கண்ணிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—மார்டுபா (Martuba). | | | |
| | வேவு பார்த்தல்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான நிலயங்கள்.—டெர்ணு (Derna), டிமிமி (Tmimi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—யுத்தப் பிரதேச முழுவதிலும். | | 7 விமானங்கள். | 10 விமானங்கள். |
| 25—5—42. (திங்கட்கிழமை). | | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | துருப்பு ஏற்றிச் செல்லும் நீராவிக் கப்பல்கள், பெரிய யுத்தப்படகுகள்.—சிண்ட்வின் (Chindwin) நதி. | | | |
| | படகுகள்.—பெரிய நீராவிக் கப்பல்—கலேவா (Kalewa) பிரதேசத்தில். | | | |
| | நதியில் செல்லும் படகு.—மாயு (Mayu) நதியில். | | நஷ்டமில்லை. | |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 19—5—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஒரு இடம் இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரை. | நஷ்டமில்லை. ஒருவரும் கொல்லப்படவில்லை. | | |
| | இரவில்.—ஒரு இடம்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதம். | | |
| | மற்றொரு இடம்.—கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 20—5—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல்கள்.—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரை. | சேதமில்லை. | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.–மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்திற்கருகாமையில். | | 4 விமானங்கள். | |
| 21—5—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | இரண்டு பட்டணங்கள்—செகியாங் மாகாணத்தில் (Chekiang). | | | |
| 22—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**23—5—42.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).
பகலில்.—மேந்து, தேந்து பாகங்கள்
இங்கிலாந்தின் (England).

மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).
மால்டா (Malta).

தூரக்கிழக்கு—(Far East)—(ஜப்பானிய விமானங்களால்).
தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**24—5—42.** (ஞாயிற்றுக்கிழமை).

இரவில்.—கடற்கரை ஜில்லாக்கள்—சொற்பச் சேதம்.
இங்கிலாந்தி(England)ன் தெற்கு சிலர் கொல் 1 விமானம்.
பாகத்தில். லப் பட்டனர்

மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).
மால்டா (Malta). 1 விமானம்.

தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்).
வேவு பார்த்தல்.-மோர்ஸ்பி (Moresby)
துறைமுகத்தில்.

**25—5—42.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).
தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).
மால்டா (Malta).

தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)-(ஜப்பானிய விமானங்களால்).
மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்

தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்).
பல பட்டணங்கள்.—யூனன் (Yunan)
மேற்கு பாகத்தில்.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ருஷ்ய நிலைமை.** பொதுவாகச் சொன்னால் ருஷ்யாவில் தற்சமயம் ஸ்மாலென்ஸ்க், வியாஸ்மா, பிரயான்ஸ்க், ஓரெல், கார்கவ் முதலிய பல இடங்களில் சண்டை நடக்கிறது. இவை யாவும் ரயில்வே ஜங்ஷன்கள் ஜெர்மானியர் வசமிருக்கின்றன. இவ்வளவு இடங்களிலும் ருஷ்யர்கள் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மாரிகாலத்தில் ஜெர்மானியர் இங்கெல்லாம் நிலைத்திருக்கப் பிரயத்தனப்பட்டனர். ஆனால் ருஷ்யர்கள் இவர்களைத் துண்டிக்கப் பிரயத்தனப்பட்டனர். இரு கட்சியினருக்கும் வெற்றி என்றுதான் சொல்லலாம். கார்கவ், பிரயான்ஸ்க், ஸ்மாலென்ஸ்க், லெனின் கிராட்டின் சுற்றுப்புறம் இவை ஜெர்மானியரின் வசத்திலிருக்கின்றன. கலினின், மொஜெய்ஸ்க், கலூகா, லோஸோவாயா முதலியவைகளை ருஷ்யர்கள் திரும்பப் பிடித்தனர். ஆகவே இரு கட்சிக்கும் சிரம நிலைகள் இருக்கின்றன. சாதகமாயும் காணப்படுகின்றன.



**கார்கவ்.** இங்கே ருஷ்யர்கள் முன்னேறியது ஒரு சாதாரண சண்டையல்ல. 13 முதல் 37 மைல் நீளம் முன்னேறி 1,000 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள 300 டவுன்களும், கிராமங்களும் விடுவிக்கப்பட்டன. சுமார் 400 ஜெர்மன் டாங்கிகள் அழிக்கப்பட்டன. ஏராளச் சைநிகளும் பிடிபட்டனர்.

வி வி வி வி வி வி வி

**லோஸோவாயா சண்டை.** கார்கவ்விற்குத் தெற்கே லோஸோவாயா என்ற இடத்தில் ருஷ்யர்கள் முஸ்தீப்பு செய்திருக்கின்றனர். நீப்ரோபெட்ரோவ்ஸ்க் வரையிலும் பரவியிருக்கின்றனர். அதனால் கிரிமியாவிலுள்ள ஜெர்மானியருக்கு ஆபத்து விளைந்திருக்கிறது. ஆனால் கார்கவ்விலிருந்து ஜெர்மானியர்கள் தாக்கப்பார்க்கின்றனர். கார்கவ்விற்கு வடக்கிலிருந்து ருஷ்யர்கள் தாக்கப் பார்க்கின்றனர். அதற்குள்ளாக கெர்ச், கார்கவ் முதலிய இடங்களிலிருந்து ஒரே சமயத்தில் முன்னேறி லோஸோவாயா என்ற இடத்திலிருக்கும் ருஷ்யர்களை ஜெர்மானியர் தாக்கப்பார்க்கின்றனர். இதை டிமோஷென்கோ எதிர்பார்த்திருக்கிறார். டிமோஷென்கோ பிரகிருதம் இருக்கும் நிலையில் ஸ்திரமாக இருக்கும்வரை கார்கவ்விலிருந்து ஜெர்மானியரால் முன்னேற முடியாது. அதோடு கிரிமியா, அஸாவ் கடற்கரை முதலிய இடங்களிலும் சமாளிக்க முடியாது.

இதைத் தவிர ருஷ்யாவில் ஹிட்லருக்கு வேறு தொந்தரவுகளுமிருக்கின்றன. லெனின்கிராட் இன்னும் எதிர்த்து நிற்கிறது. அதோடு பால்டிக்கிலுள்ள ஜெர்மானியருக்கு ருஷ்யக் கடற்படையால் பயமேற்படக்கூடியதாகவே இருக்கிறது. பிரிடிஷ், அமெரிக்க ஸப்ளைகளைத் தடுக்க மர்மான்ஸ்கில் முஸ்தீப்பு செய்யவேண்டியதாயும் இருக்கிறது. கோடைகாலம் வருவதால் நேசநாடுகள் ஆர்கேஞ்சலை உபயோகித்துக்கொள்ளலாம்.

வி வி வி வி வி வி வி

**சைனா யுத்தம்** தற்போது சைனாவில் செய்யப்படும் ஜப்பானிய தாக்குதலுக்குக் குறிப்பான லக்ஷியங்கள் காணப்படவில்லை. சுங்கிங்கிலிருந்து மே 23-யில் வெளிவந்த நாஷனல் ஹெரால்டு பத்திரிகையில் ஜப்பானியத் தாக்குதல் உள்நாட்டை நோக்கியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸின்மின் பாவோ என்ற பத்திரிகையில், சைனாவைத் தோற்கடிப்பதும், பிறகு ருஷ்யாவைத் தாக்குவதும், சீன தளங்களை நேசநாடுகள் உபயோகிக்காமல் செய்வதும்தான் ஜப்பானியருக்கு நோக்கமென்று அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க வாலண்டியர் கூட்டத்திற்குத் தலைவரான கிளாரி செனுவால்டு சொல்லும்போது, அமெரிக்கா 2,000 விமானங்களை அனுப்பினால் ஜப்பானிய விமானப்படையே அழிந்துவிடுமென்று சொல்லியிருக்கிறார். ஏராளமாக யுத்த சாமான்கள் உற்பத்தி செய்யப்படும் இந்த சமயத்தில் அவர் சொன்னது ஒரு அசாத்தியமான காரியமல்ல. இன்னும் சில மாதங்களில் ஜப்பான் பேரிலேயே விமானத் தாக்குதல் நேரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. சகியாங்கிலேயோ, வேறு எங்கேயோ எல்லா சீன தளங்களையும் பிடிப்பது ஜப்பானியரால் முடியாது.

பர்மா ரஸ்தா உபயோகமில்லாதபோதிலும் உர்கா, ஸாமர்கண்டு, டாஸ்கண்டு வழியாக சைனா ஸப்ளைகளைப் பெறமுடியுமென்று வில்லியம் ஸிம்ஸ் என்பவர் தெரியப்படுத்தியிருக்கிறார். கழுதைகள், யானைகள் பேரில் சாமான்கள் வந்து சேரும். சொந்த பீரங்கிகளையும் கத்திகளையும் சீனர்களே செய்து கொள்ளுகின்றனர்.

சைனாவில் சண்டை இருபாகங்களில் நடக்கிறது. ஒன்று பர்மா ரஸ்தாவிலும் மற்றொன்று சகியாங் மாகாணத்திலும். பர்மா ரஸ்தாவில் கெங்கு, கென்டங் என்ற இடங்களிலிருந்தும் தாக்குதல்கள் நேருகின்றன. சுங்கிங்கிற்கு அருகில் பர்மா ரஸ்தாவின் குறுக்கே, ஸால்வீன், மெகாங் நதிகளிலிருந்து பல வாய்க்கால்கள் போகின்றன. யூனன் மாகாணத்திலிருக்கும் மலைச்சாரல்களும் குறுக்கிடுகின்றன.

சகியாங் மாகாணத்தில் நான்சாங்கிலிருந்து தலைநகரை நோக்கி எதிரி முன்னேறுகிறான். பின் நதிக்கரையில் பூச்சௌவில் துருப்புகளையும் இறக்கியிருக்கிறான். இவ்விதம் இருந்தாலும் எதிரியின் முன்னேற்றம் பின்னர் படையெடுப்பைப் போல் இருக்கமுடியாது. ஏனென்றால் சகியாங்கிலிருந்து சுங்கிங்கை நோக்கி முன்னேறினால் யாங்ஸி நதியின் வழியாக யந்திரப்படைகள் செல்ல முடியாது.

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டுப் பொய் பிரசாரம்.** ஒரு பக்கம் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதலும், மற்றொரு பக்கம் டிமோஷென்கோ எதிர்ப்பும் ஏற்பட்டவுடன் ஜெர்மன் பிரசாரம் தாறுமாறாக ஏற்பட்டிருக்கிறது.

கெர்ச் சண்டையைப்பற்றி தினம் செய்யப்படும் ரேடியோ ஒலிபரப்பு விநோதமாகவே இருக்கிறது. மேமீ 13உ ருஷ்யப்படைகள் அழிக்கப்பட்டன; 40,000 கைதிகள் பிடிபட்டனர்; மேமீ 14உ விடாமல் ருஷ்யர்கள் துரத்தப்படுகின்றனர்; மேமீ 15உ கெர்ச்சின் வாசலில் ஜெர்மானியர் புகுந்தனர்; மேமீ 16உ நகரமே துளைக்கப்பட்டது; மேமீ 17உ நகரின் கிழக்கில் சண்டை நடக்கிறது; மேமீ 18உ சீக்கிரத்திலேயே ருஷ்யர்கள் அழிக்கப்படுவார்கள்; மேமீ 19உ அழிக்கவும் பட்டார்கள்; மேமீ 20உ 1,49,000 கைதிகள் பிடிபட்டனர்; மேமீ 20உ சண்டை இன்னும் நடக்கிறது.

இதில் கைதிகளைப்பிடித்ததாகச் சொல்லும் எண்ணிக்கையில்தான் அதிகப் பொய் காணப்படுகிறது. மேமீ 13உ 40,000 கைதிகளைப் பிடித்தனராம். மேமீ 20உ 1,49,000 பேர்களைப்பிடித்தனராம். ஆனால் 1,00,000 பேர் கைதியாகியும் கொல்லப்பட்டும் இருக்கலாம். அவர்கள் சொல்லும் கணக்கைப் பார்த்தால் 2½ லக்ஷம் பேர்கள் கெர்ச் யுத்தரங்கத்தில் இருந்திருக்கவேண்டும். 20-மைல் அகலமும் 50 மைல் நீளமுமுள்ள இந்த இடத்தில் இவ்வளவுபேர் இருக்கமுடியாது. ஆனால் இதைப்போல் எவ்வளவோ பொய்களைச் சொல்லியிருக்கின்றனர்.

வி வி வி வி வி. வி வி

**அமெரிக்கக் கப்பல்கள்.** அமெரிக்காவில் கப்பல்கள் குறைந்துவிட்டதாக அச்சு நாடுகள் சொல்லுகின்றன. ஆனால் வாஷிங்டனில் கொடுக்கப்பட்ட அரசாங்கத்தாரின் கணக்கைப் பார்த்தால் அமெரிக்கா சண்டையில் இறங்கியது முதல் ஐந்து மாத காலத்தில் 92 வியாபாரக்கப்பல்கள் சேதமாயின. ஆனால் அதே காலத்தில் புதிதாக 120 கப்பல்கள் கட்டப்பட்டன. நஷ்டத்தை ஈடுசெய்ததோடு அதிகமாகவே மாதம் ஒன்றுக்கு ஆறு கப்பல்கள் வீதம் கட்டப்படுகிறது. மேலும் அமெரிக்க யுத்த சாமான்களின் உற்பத்தியும் அதிகமாகவே விருத்தியாகிக்கொண்டு போகின்றன.

வி வி வி வி வி வி வி

**கர்னல் ஜான்ஸன் அமெரிக்கா திரும்பினார்.** இதை ஆதாரமாகக்கொண்டு பாங்காக் ரேடியோவில் அபாண்ட பிரசாரம் செய்யப்பட்டது. இந்தியாவில் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் முயற்சி பலிக்காததால் இவர் அமெரிக்கா திரும்பியதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அன்னார் இந்தியாவைவிட்டுச் செல்லும்போது சொன்னதை அச்சு நாடுகள்மறந்து விட்டன:—'சீக்கிரத்திலேயே இந்தியாவிற்கு வந்து மறுபடி காரியங்களைத் துவக்கி எதிரியை எதிர்க்கும் திட்டத்தை சாதிக்கலாமென்றே நினைக்கிறேன்.'

வி வி வி வி வி வி வி

**ஆஸ்திரேலியாவில் கலவரம்.** ஆஸ்திரேலியாவில் மனஸ்தாபத்தோடு மட்டுமல்லாது கலவரமே ஏற்பட்டிருப்பதாக அச்சுநாடுகளின் பிரசாரம் நடந்து வருகிறது. இந்தப் பிரசாரத்திற்கு டாக்டர் எவாட் சரியான பதில் சொல்லியிருக்கிறார். பிரிடன்பேரில் நப்ட்வாபி படை வந்து தோற்று ஓடியபோது இங்கிலாந்திலுள்ளோர் இருந்த விதமாகவே தற்சமயத்தில் ஆஸ்திரேலியர் இருப்பதாகச் சொன்னார்.



**உள்நாட்டு நிலைகள்.** சண்டை செய்யும் நாடுகளின் உள்நாட்டு நிலையைப்பற்றி இவ்வாரத்தில் அதிகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன:—

**பிரிடன்.** 14 முதல் 65 வயது வரையில் 2,20,00,000 பேர்கள் சேர்ந்து யந்திரப்படைகளிலும் பொதுஜனப் பாதுகாப்புவேலையிலும், தொழிற்சாலைகளிலும் பிரிடனில் ஈடுபட்டிருப்பதாக மிஸ்டர் எர்னஸ்டு பெவின் அறிவித்தார். இவ்வளவு பேர்களை எந்த நாடும் சேகரித்ததில்லை. அவ்வப்போது சேர்க்கப்படும் எண்ணிக்கையும், விவாகமான ஸ்திரீகள் சில சந்தர்ப்பங்களில் ஈடுபடுவதும், 14 வயதிற்கு மேற்பட்ட மாணாக்கர்களும், சம்பளமில்லாமல் சேவை செய்கிறவர்களின் எண்ணிக்கையும் இதில் சேர்க்கப்படவில்லை. முன்பு தற்காப்பு மந்திரியாக இருந்த சார்லஸ் பால்மர் இங்கிலாந்தில் சிறிது காலம் இருந்துவிட்டு அமெரிக்கா திரும்பி தனது வேலையைப் பற்றி பின்வருமாறு சொன்னார்:—'பிரிடனிலுள்ள ஒவ்வொரு தொழிற்சாலையும், ஈடுபட்டு, கிடைக்கும் பொருளையெல்லாம் செலவழித்து ஸ்திரீ, புருஷர்கள் யாவரும் ஈடுபட்டு பிரிடன் பிரமாதமாக யுத்தம் செய்கிறது. இவ்விதம் செய்தால்தான் வெற்றிகிட்டும். பிரிடன் ஏதோ தயக்கமாக இருப்பதாகச் சொன்னால் பிரிடனின் உள்நிலைமை தெரியாதவர்களாவார்கள்.'

**ஜெர்மனி.** மேமீ 20உ கோயரிங் ஜெர்மனியில் ஏற்பட்டுள்ள சிரமங்களைப்பற்றிச் சொன்னான். 'மாரிகாலச் சண்டை அதிக சிரமமாகிவிட்டது பஞ்ச பூதங்களும் நமக்கு விரோதமாக இருக்கின்றன. சென்ற வருஷம் அறுவடையும் குறைவு. இப்போ மழைகள் தேவையாக இருக்கிறது.'

**இதாலி.** இதாலியிலும் நிலைமை மோசமாக இருக்கிறது. ஸப்ளைகள் குறைவாக இருப்பதால் ஜனங்களுக்கு யுத்த உணர்ச்சியும் குறைந்துவிட்டது. உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும், பாஸிஸ்டு கட்சியைப் பலப்படுத்தவும், எதிரி ஒலிபரப்புகளைக் கேட்கக்கூடாதென்றும் அவசரச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன. யுத்தம் மற்ற நாடுகளுக்குப் பரவியதால் இதாலிக்கு முக்கியத்துவம் குறைந்து வருகிறது. இதாலி யுத்தத்தில் ஈடுபட்டதால் ஜெர்மனிக்கு உள்ளாகிவிட்டது. ஜெர்மனியின் தோல்வி இப்போது காணப்படுகிறது. ஜெர்மனி ஜயிப்பதாகவே வைத்துக்கொண்டாலும் இதாலிக்கு ஒரு சாதகமுமில்லை. 'இங்கிலாந்து ஜயித்தால் நமக்கு நஷ்டம் ஏற்படுமென்றும், ஜெர்மனி ஜயித்தால் அடியோடு அழிந்து விடுவோமென்றும்' இதாலியில் சொல்லிக்கொள்ளுகிறார்களாம்.

வி வி வி வி வி வி வி

**பிரான்ஸ்-இதாலி சம்பந்தம்.** ஒரு நாளும் கெட்டதில்லை. 1860-ல் மூன்றாவது நெபோலியன் என்ற அரசன் ஸவாய், நைஸ் என்ற நகரங்களை பிரான்ஸுடன் சேர்த்துக்கொண்டான். 1881-ல் பிஸ்மார்க் என்பவன் வட ஆபிரிக்காவிலுள்ள டுனிஸ்ஸை பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்தான். அபிஸீனிய யுத்தத்தின் போது சர்வ தேசச் சங்கம் இதாலி மேல் போட்ட நிர்ப்பந்தங்களை லவால் லெகுவாக்கினான். ஆனால் பூர்ண உதவியையும் அளிக்கவில்லை. தன்னை லவால் ஏமாற்றியதாகவே முஸோலினி நினைத்துவருகிறான்.

தற்சமயம் லவால் அதிகாரத்திற்கு வந்ததும், அவன்மேலுள்ள துவேஷத்தை முஸோலினி விருத்தி செய்துகொண்டான். ஹிட்லருக்குத் தன்னைவிட லவால் அதிக நண்பனாகிவிட்டதால் கார்ஸிகா, ஸவாய், இரண்டையும் இதாலி திரும்ப அடைய முடியாதென்றும் நினைக்கிறான். இதாலியால் அச்சுநாடுகளுக்கு சிரமம்தான். ஆகவே ஹிட்லர் தன்னை விட்டுவிட்டு பிரான்ஸுடன் சேர்ந்து விடுவாரோ என்று முஸோலினி பயப்படுகிறான்.

கொடுங்கோல் மன்னர்களுக்கே எப்பவும் ஆபத்துத்தான். தன நிலைமையைச் சாதித்துக்கொள்ள வேண்டுமானல் கார்ஸிகா, டூனிஸ் முதலிய நகரங்களாவது திரும்ப அடையப்படுமென்று முஸோலினி எடுத்துச் சொல்லவேண்டும். இந்த பயத்தினால்தான் சமீபத்தில் ஹிட்லரை சந்தித்துப்பேசினன். சமீபத்தில் கிடைத்த செய்தியின்படி பிரெஞ்சு எல்லையிலுள்ள பீட்மாண்டு நகரிலுள்ள ஆல்பைன் துருப்புகளை விக்டர் எமானுவல் அரசன் சரிபார்த்திருக்கிறன். கார்ஸிகா டூனிஸிலுள்ள படைகளை வாபஸ் செய்து அவைகளை இதாலிக்குக் கொடுத்துவிடும்படி விஷிக்கு முஸோலினி செய்தி அனுப்பி இருக்கிறார்.

ஆனல், ஹிட்லர் வெகு சாமர்த்தியமாக நடந்துகொள்ளுகிறன். கார்ஸிகாவையோ, டூனிஸையோ இதாலிக்குக் கொடுப்பதில் அவனுக்கு அதிக அக்கரை இல்லை. ஆனல் அவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு லவாலிடம் காரியங்களைச் சாதித்துக்கொள்ளுகிறன். ஆனல் பிரெஞ்சு மக்களுக்கு இது விஷயங்களில் திருப்தி இல்லை. பிடேனும் ஜெர்மனி வசமாகிவிட்டான்.

ஆகவே ஜெர்மானியருடன் உறவு கொண்டாடும்போது வெகு ஜாக்ரதையாகவே லவால் நடந்துகொள்ளுகிறன். ஜனங்களைத் தனது வசமாக்கிக்கொள்ளப் பார்க்கிறன். எப்படியானலும் பிரெஞ்சு ஸ்வதந்திரம் அழிந்து, விஷி ஜெர்மனிக்கு உட்பட்டதாக ஆகிவிடும்.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவும் கொரில்லா யுத்தமும்.** லண்டன் நியூஸ் கிரானிகள் பத்திரிகையைச் சார்ந்த மிஸ்டர் பிலிப் ஜார்டன் டெல்லியிலிருந்து சமீபத்தில் ஒலிபரப்பும்போது கொரில்லா சண்டைக்கு இந்தியா வசதியான இடமென்றும், அந்தச் சண்டையில் பழக்கம்பெற்றால் இந்தியர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் என்றும் சொன்னர். இவ்விதச் சண்டையைச் செய்தால் ஜப்பானியர் தோற்றுவிடுவார்கள். மேலும் அவர் சொன்னதாவது:—"கொரில்லா சண்டையைப்பற்றி நீங்களாகத்தான் கற்றுக்கொள்ளவேண்டும். கேவலம் சைனியத்தில் ஈடுபட்டவர்கள் மாத்திரம் செய்யக்கூடியதல்ல. கொரில்லா சண்டையைப் பார்த்தாலே அது பொதுஜனங்களின் சண்டையென்றும் இதற்காக இந்தியர்களாக முன்வந்து பாதுகாப்பு வேலைகளைச் செய்யலாமென்றும் தெரியவரும்."

உணர்ச்சி வாய்ந்த இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்ட கொரில்லா சைனியம் சம்பளம் வாங்கிக்கொண்டு ஈடுபடும் படைகளைக் காட்டிலும் அதிக அக்கரையுடன் ஈடுபடும்.

வி வி வி வி வி வி வி

**ஆயுத ஸப்ளை.** யுத்தத்திற்கு ஆயுதங்கள் தேவையான போதிலும் பயிற்சி காலத்தில் தேவையில்லை. பயிற்சி காலங்களில் தேவையானதெல்லாம் எதிரியை எதிர்க்கக் கூடிய மனப்பான்மையும் ஒற்றுமைப் படவேண்டுமென்ற சிந்தனையும் தான் வேண்டும். தனித்தனியாக சிறு குச்சிகள் கிடந்தால் அவைகளைச் சுலபமாகவே ஒடித்துவிடலாம். எல்லாக் குச்சிகளையும் சேர்த்துக் கட்டினல் மிகுந்த பலசாலியாலும் ஒடிக்க முடியாது. ஆகவே ஒற்றுமை தான் நமக்கு பலமளிக்கும்.

மேலும் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு மாத்திரம் எதிரியைத் தடுத்துவிட முடியாது. ருஷ்யாவில் கத்திகளைக்கொண்டும் விவசாயக்கருவிகளை உபயோகித்தும் எதிரிகளுக்கு அதிகச் சேதம் உண்டாக்கப்பட்டது.

சைனியங்களை முன்னேறும்படி செய்ய ஜனங்கள் தான் முன்வரவேண்டும். அதற்காகக் கொரில்லா படையில் சேரவேண்டிய நிர்ப்பந்தமில்லை. அவ்வித பழக்கமும் இவர்களுக்குக் கிடையாது. தரைப்படைக்கும் விமானப் படைக்கும் அதிக உதவியாக இருக்கும். இப்படையைக்கொண்டே சில சண்டைகளை ஜயித்துவிடலாம்.



**மனிதனின் சொந்த வீடு.** "தனக்குச் சொந்தமான இடத்தை ஸ்வாந்தார் காப்பாற்றிக் கொள்ளுவதை யாரும் தடுக்க முடியாது. எதிரிக்கு எவ்வித சிந்தனையிருந்தாலும் பிறர் நாட்டில் பிரவேசிக்க நினைத்தால் அதை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளத்தான் செய்வான். எதிரி தனது பிரதேசத்தைப் பிடித்துக் கொள்ளட்டுமென்ற அஜாத சத்துருக்கள் இவ்வுலகில் கிடையாது. ஆகவே கொரில்லா தந்திரங்களைக் கற்றுக்கொண்டு எதிரியைத் துரத்தியடித்து தங்களைக் காப்பாற்ற வந்திருக்கும் சைனியத்திற்கு உதவியளிப்பது எவ்வளவு நலமென்று யோசியுங்கள்.

இவ்விஷயத்தில் நாம் ருஷ்யர்களைப் பார்த்து கற்றுக்கொள்ளலாம். அவர்களும் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றுத்தான் வருகின்றனர்".

---

# "லவால்".

## பிரான்ஸ் தேசத்தின் துரோகி.

(பி. பி. ஸி. யின் ஒலிபரப்பு).

### லவால்—தேசத் துரோகி.

சென்ற வாரத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட முக்கிய அரசியல் மாறுதலில் பிரெஞ்சு அரசாங்கத்தில் லவால் மறுபடியும் தோன்றியிருக்கிறன், மார்ஷல் பிடேன் இன்னும் பிரெஞ்சு தேசத்திற்குத் தலைவராகவே இருக்கிறார்.

ஆனலும் பியரி (Pierre) லவால் அரசாங்கத்திற்குத் தலைவனாக வந்திருக்கிறன். அவன் மந்திரி சபையில் முக்கியமான நாலு உத்தியோகங்களைப் பார்த்து வருகிறன். படைகளுக்கு பொறுப்புள்ளவனாக இருக்கும் அட்மிரல் டார்லான், மார்ஷல் பிடேனுக்குத்தான் கட்டுப்பட்டவன். லவால் எப்படி யாருக்குக் கட்டுப்பட்டவன் என்று இப்பொழுது சொல்ல முடியவில்லை. பிடேனும், டார்லானும் வெறுத்து வந்ததாகத் தெரியவந்த லவால், திடீரென்று அதிகாரப் பதவிக்கு வந்ததில் என்ன மர்மம் இருக்கிறதோ தெரியவில்லை.

### குதிரை இல்லாமல் வெறும் சேணம் மட்டில்.

சென்ற வாரத்தில் பிரான்ஸில் ஏற்பட்ட மாறுதல்கள் பிரான்ஸுக்கு மட்டில் அல்ல. இவ்வுலகத்திற்கே முக்கியத்வத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றன. ஆகையினால் அவற்றை அதிகக் கூர்மையாக கவனித்து பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. பிடேனைப் புறக்கணித்து விட்டதில் அவன் பொம்மை மாதிரியாகிவிட்டான். டார்லானுக்கிருந்த அரசியல் அதிகாரமும் பிடுங்கப்பட்டுவிட்டது. லவால் தன் இச்சைப்படி நடப்பதற்கு ஸ்திரப்படுத்திக் கொண்டுவிட்டான். அவனிருப்பிடம் நிலையாக இருந்த போதிலும் அரசாங்கத்தை அவனிஷ்டப்படி நடத்துவதற்கு முடியாமல் இருக்கிறது. ஏனென்றல் அதிகார மட்டிலிருப்பது பிரயோஜனமில்லை. அரசியல் பூராவும் ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருக்கிறது. பிரெஞ்சு அரசாங்கத்தை நடத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறதென்பது லவாலுக்கும் ஜெர்மானியருக்கும் நன்றாகத் தெரியும். லவாலுக்கு ஏற்படக்கூடிய க்ஷேம லாபங்களைக் குறித்து பின்னல் சொல்லப்படும்.

### பிடேன் டார்லான் அரசாட்சி.

லவாலுக்கு அதிகாரம் கிடைத்தற்குள்ள சந்தர்ப்பங்களைக் குறித்து சில வார்த்தைகள் இங்கு சொல்லுவோம். சில காலமாக பிடேன்—டார்லான் அரசாட்சி

யில் ஹிட்லர் மிகவும் அதிருப்தி கொண்டிருந்தான் என்பதில் சந்தேகமில்லை. நமக்கும் அது அதிருப்தியாகத்தான் இருந்துவந்தது. ஜெர்மானியரின் ஆதிக்கத்தின் கீழிருந்தும் கூட விஷி அரசாக்ஷி சாமர்த்தியமாக ஜெர்மானியரின் திருப்திக்காகவாவது, லாபத்துக்காகவாவது நடந்துகொள்ளவில்லை. ஆகையினால் ஹிட்லர் அதிருப்தி அடைந்தான். சமீபத்தில் யுத்த நெருக்கடியான கட்டத்திற்கு வந்துவிடுமென்று உத்தேசித்து மேற்குப்பக்கத்தைப் பாதுகாப்பதற்காக ஹிட்லர் தீர்மானித்தான். அது முதற்கொண்டு என்ன நடக்கும் என்பது யாவருக்கும் தெரிந்ததே. 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரெஞ்சுக் கப்பற்படையும் அப்பொழுது பிரெஞ்சு சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஏராளமான படைகளும் உதவிக்கு இருந்தபொழுதே, ஜெர்மன் ஆக்கிரமிப்பை எதிர்த்துச் சமாளித்து நிற்காமல் போர்டியோ (Bordeaux) வில் சரணடைந்த அந்த விஷி அரசாங்கத்தார் இப்பொழுதும் ஜெர்மானியரின் இஷ்டப்படி நடப்பார்கள் என்பது நிச்சயம். ஆனால் வயது முதிர்ந்த பிடேன், தேசத் துரோகி என்று தெரிந்து அவன் லவால் பேரில் அருவெருப்பு கொண்டிருந்தபோதிலும், இவ்வளவு தூரம் லவாலுக்கு அதிகாரம் கொடுத்ததுதான் அவன் சரணமடைந்ததை நன்றாகக் காண்பிக்கிறது. 1940-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் மிகவும் இழிவாகப் பேசி தள்ளிவிடப்பட்ட லவாலிடமே இப்பொழுது அதிகாரத்தை விட்டுக்கொடுத்ததற்கு என்ன காரணமென்று சில நாட்களுக்குமுன் பிடேன் பிரெஞ்சுப் பொதுமக்களுக்குச் செய்த பிரசங்கத்தில் குறிப்பிடவில்லை.

## ஜெர்மானியரின் வஞ்சக சூழ்ச்சி.

அவ்விதம் குறிப்பிடாததற்கு உண்மையான காரணம் ஜெர்மானியரின் சூழ்ச்சிதான். அதைத் துணிகரமாக சொல்வதற்கு பிடேனுக்கு தைரியமில்லை. லவாலை ஆதரிக்கும்படிக்கும் பிரெஞ்சு மக்களைக் கேட்டுக்கொண்டான். அப்படி கேட்டுக்கொள்ளும்பொழுது பிரெஞ்சு மக்களை பொறுமையாகவும், தைரியத்துடனும் இருக்கும்படிக்கும், புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளும்படிக்கும் வேண்டிக்கொண்டான். நானும் எதிர்பார்ப்பது என்னவென்றால் பிரெஞ்சு மக்களில் பெரும்பான்மையோர் பொறுமை, சாமர்த்தியம், தைரியம் இந்த குணங்களுடன் நடந்துவந்தால், லவாலின் அழிவு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும். அத்துடன் ஜெர்மானியரின் எண்ணங்களும் அடியோடு பாழாய் போய்விடும்.

## டார்லான்.

இந்த சந்தர்ப்பத்தில் டார்லானைக் குறித்து சில வார்த்தைகள்தான் சொல்லலாம். ஜெர்மானியரைத் திருப்தி செய்யமுடியாததால் டார்லானுக்கு இந்த கதி நேரிட்டிருக்கிறது. படைப்பலத்திற்கு அவனைத் தலைவனாகச் செய்திருப்பது உண்மை. அவனை முற்றிலும் குறைவாகப் பேசுவது கூடாது. அவன் லவாலை வெறுக்கிறான். இப்பொழுது லவாலுக்கு அதிகாரம் ஏற்பட்டதில் இன்னும் வெறுப்பு அதிகமாய்விட்டது. மேலும் டார்லான் அதிகார ஆசை பிடித்தவன். அவனுக்கு அதிகாரம் கிடைத்து ருசி ஏற்பட்டதில், இன்னும் அதிகம் கிடைக்கும்வரை அவன் சந்தோஷமாக இருக்கமாட்டான். இப்பொழுது லவால் எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கிறான். இது டார்லானுக்கும் தெரியும்.

## பிரெஞ்சு குடியேற்ற நாடுகள்.

பிரெஞ்சுப் படைகளுக்கு தற்சமயம் டார்லான் விடுத்த உத்தரவில் ஒரு பாகம் குறிப்பிடத்தக்கது. அதாவது பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் தற்காப்பைப்பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் சொல்லியிருப்பதிலிருந்து இப்பொழுது மிஞ்சியிருக்கும் குடியேற்ற நாடுகளை பிறர் வசம் விட்டுவிடாமல் பிரெஞ்சுக்காரர் வசம் இருக்கும்படி செய்யவேண்டியதைக் குறித்து சொல்லியிருக்கலாம். ஆனால் நேசதேசத்தார்கள் கைப்பற்றியிருக்கும் பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளைத் தாக்குவதற்கு திட்டம் போட்டிருப்பதாகவும் கருதலாம். இது விஷயத்தைப் பொறுத்தும் பின்னால் சொல்லப்படும்.



## பிரிடன் பேரில் லவாலின் குற்றச்சாட்டு.

லவால் செய்த ஒலிபரப்பில் ஒவ்வொரு வார்த்தையும் இழிவான தன்மையைக் காட்டுகிறது; கண்டனம் செய்யவேண்டியதாகவும் இருக்கிறது. கிரேட் பிரிடனை அவன் கேவலமாக தூஷித்திருப்பதற்கு சவால் கொடுத்ததாக வைத்துக் கொள்ளலாம். பிரான்ஸுக்கு உதவி தேவையாயிருந்த சமயத்தில் நாம் கைவிட்டுவிட்டதாகவும், இப்பொழுது தற்காப்பு செய்துகொள்ளமுடியாமல் இருக்கும்பொழுது பிரிடன் பிரான்ஸைத் தாக்குவதைக் குறித்தும் அவன் பலவாராக தூஷித்திருக்கிறான். நமது கொள்கையிலும் நாம் செய்யும் தீர்மானத்திலும் அநேக தவறுதல்கள் ஏற்பட்டதாக நாமே ஒப்புக்கொள்ளத் தயாராகயிருக்கிறோம். அதன் காரணமாக நமக்கு நேர்ந்திருக்கும் கஷ்டங்களையும் இப்பொழுது அடைந்துவரும் கஷ்டங்களையும் கடவுள்தான் அறிவார். ஆனால் யுத்தத்திற்குப் போகும்படி பிரான்ஸை நாம் நிர்ப்பந்தித்ததாகவும், பிறகு கைவிட்டதாகவும் சொல்வது அபாண்டமான பொய். பிரான்ஸ் ஒரு ஜனநாயக நாடு. அவ்வரசாங்கத்தின் பூரண அனுமதியின் பேரில்தான் பிரான்ஸ் யுத்தத்தில் இறங்கியது. அப்படி போர் துடங்கியவுடன் எத்தகைய ராணுவ உதவி கிரேட் பிரிடனால் கொடுக்கக்கூடும் என்பதும் பிரான்ஸுக்கு நன்றாகத் தெரியும். நாம் வாக்குறுதி செய்ததற்குமேல் பிரான்ஸுக்கு உதவியாகப் படைவீரர்களும், யுத்தப் பொருள்களும் அனுப்பினோம் என்பது பின்னால் சரித்திர பூர்வமாக நமக்குத் தெரியவரும். மேலும் நாம் கடைசிவரையில் பிரெஞ்சு மக்களிடம் பிரியத்துடன் நடந்துகொண்டோம் என்று இப்பொழுது சிறைச்சாலையிலிருக்கும் மாஜி பிரதம மந்திரி M. பால் ரெயினால்டை கேட்டாலே தெரியும். அவர் அதைப்பற்றி கூறியுமிருக்கிறார். பிரான்ஸுக்கு ஏற்பட்டிருந்த அபாயமான நிலைமையில் நம் வசமிருந்த ஆதாரங்களை எல்லாம் உபயோகித்து நாம் உதவி செய்வதற்குத் தயாராயிருந்தோம் என்பதை அவர் சிறைச்சாலையிலிருந்துகொண்டே மிகவும் தைரியமாகப் பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதம் திருட்டுத்தனமாக வெளிவந்து நமக்கு எட்டியிருக்கிறது.

## லவாலின் கொள்கை.

லவால் என்ன செய்யப்போகிறான் என்பதை அவன் விஸ்தரிக்காமல் ஜாக்கிரதையாக மறைத்து வைத்தபோதிலும் அவன் சொல்லும் வார்த்தைகளிலிருந்தே அவன் திட்டங்களைக் கண்டுகொள்ளலாம். சரியான முறையிலோ அல்லது தப்பான முறையிலோ அச்சு நாடுகளுக்கு ஏராளமாகவும், பூரணமாகவும் உதவியளிப்பதற்கு தன் நாட்டை ஈடுபடச்செய்ய அவன் உத்தேசிக்கிறான். அது மிகவும் கடினமான விஷயம். அப்படிச் செய்வது கடினம் என்பது அவனுக்கும் தெரியும். ஆனால் இனி எப்படி கடினமாக இருக்கப்போகிறது என்பது அவனுக்கே தெரியாதென்று நான் நினைக்கிறேன். ஆனால் ஜயிக்கப்பட்ட தன் ஜனங்களுக்கு வரக்கூடிய லாபத்தைப்பற்றி குறிப்பிட்டும், பயமுறுத்தியும் அவன் பேசியதிலிருந்து அவன் செய்யவேண்டிய வேலை கடினமாக இருக்கிறதென்று தெரியவரும். அவன் ஹிட்லரை பெருந்தன்மை வாய்ந்தவனென்றும், அவனிடம் நம்பிக்கை வைத்தாலும், பிரெஞ்சு மக்கள் அவன் எண்ணத்தை அறிந்து அதன்படி நடந்துகொண்டாலும், புதிய உலக ஏற்பாட்டில் பிரான்ஸுக்கு உன்னத ஸ்தானம் கொடுப்பானென்றும் சொன்னான். மேலும் அம்மாதிரி ஒத்துழையாத குற்றமற்ற பிரெஞ்சுப் பிணையாளிகள் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் ஜெர்மானியரால் சுடப்படுவதையும் குறித்துச் சொன்னான். ஏராளமாக விளைவுள்ள அந்தப் பிரெஞ்சு நாட்டிலிருந்து குறைபோவதினால் உணவுப் பொருள்கள் குறைந்து, ஸ்திரிகளும், குழந்தைகளும் நாளுக்குநாள் பலஹீனமாகப்போய் விடுவதையும் பற்றி குறிப்பிட்டான்.

## பொதுவுடமைக் கொள்கையைக் காட்டிப் பயமுறுத்தல்.

ருஷ்யர்களும், நேசதேசத்தார்களும் ஜயம் பெற்றால் என்ன சம்பவிக்கும் என்று பொதுவுடமைக் கொள்கையை எடுத்து காட்டி தான் சொல்வதைக் கேட்பவர்களுக்கு பயமுண்டாகும்படி எடுத்துச் சொன்னான். அவனுடைய வாதத்தின் சாமர்த்தியத்தை என்னவென்றுதான் சொல்லுவது! "ஜெர்மன்

"அதிகாரத்திற்குக் கீழ்படியுங்கள். அப்படியில்லாமல்போனால் நீங்கள் பொதுவுடமைக் கக்ஷியின் ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு நேரிடும்." என்று லவால் சொல்லி பயமுறுத்துகிறான். ஸ்வதந்திரமுள்ள எந்த பிரெஞ்சுக்காரனும் இதற்கு "வந்தனம். இப்பொழுது உண்மையில் அநுபவித்துவரும் தொல்லையை நீக்கிவரப்போகும் கெடுதல் என்ற தோற்றத்தை அநுபவிக்க நான் சம்மதிக்கிறேன்", என்றுதான் சொல்வான். அதனால் ஹிட்லருடன் ஒத்துழைப்பதற்கு லவால் கட்டுப்பட்டிருக்கிறான் என்று வெளிப்படையாகத் தெரிகிறது.

### லவாலின் சூழ்ச்சி பலிக்காது.

லவால், ஹிட்லர் இஷ்டப்படி நடக்கமுடியுமா என்பது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. அவனால் அதற்குத் தகுந்தபடி நடக்கமுடியாது என்பது தான் பதில். லவாலுக்கு சாதகமாயுள்ள விஷயங்களைக் குறித்து நான் சொல்லவில்லை. அவன் எல்லா முக்கிய ஸ்தானங்களையும் கைப்பற்றிக்கொண்டிருக்கிறான். அரசாங்கத்திற்குத் தலைவனாக இருப்பதுடன், அயல் நாட்டு இலாகா மந்திரியாகவும் இருக்கிறான். அதாவது ஜெர்மனியுடனும், யுனைடெட் ஸ்டேட்ஸுடனும், கிரேட் பிரிட்டனுடனும் பிரான்ஸுக்குள்ள பாந்தவ்யங்கள் அவன் ஆதிக்கத்தில் இருக்கின்றன. அவன் உள்நாட்டு இலாகா மந்திரி. அதனால் பிரான்ஸ் தேசம் பூராவிலும் பாதுகாப்பும், நகரத்தலமும் அவன் ஆதிக்கத்திலிருக்கின்றன. அவன் செய்தி இலாகா மந்திரி. அதனால் அவன் காரியத்திற்குத் தக்கபடி பொய் வதந்திகளைத் தயாரித்து பொதுமக்களை நம்பச் செய்வான். மேலும் அவனைப்போல மட்டமான பேர்வழிகளையே மந்திரிகளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான். அவர்களுக்கும் அவனைப்போல் இழிவான வேலை செய்ய விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். Mr. கிராஸட் என்பவரை ஆரோக்கிய இலாகாவுக்கு மந்திரியாக நியமித்திருப்பதில் எனக்கு உத்ஸாகம் ஏற்படுகிறது. கிராஸட் லவாலின் வெகுநாள் வைத்தியர். லவால் உடலிலிருந்து துப்பாக்கி ரவைகளைத் தோண்டி எடுப்பதற்காகத் தீர்க்க ஆலோசனையின் பேரில்தான் லவால் அவனை வேலைக்கு நியமித்திருக்கவேண்டும். ஏனென்றால் இனிமேல் அடிக்கடி அம்மாதிரி செய்யவேண்டியிருக்கும். இப்பொழுது லவால் பிரான்ஸில் முக்கியஸ்தராக இருப்பதால் அவனுக்கு எதிராக நடக்கக்கூடிய தேசாபிமானமும், தைரியமுள்ள எந்த பிரெஞ்சுக்காரராவது அவன் கையில் சிக்கினால் அவனை அடியோடு அழித்துவிடும்படியான மூர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வான். அவனுக்குப் போதுமான அதிகாரம் கிடைத்துவிட்டதென்று தோன்றின பிறகு தான் அவன் திட்டத்தில் இரண்டாம் பாகமான ஜெர்மனிக்கும் பூரா உதவி செய்வதை அநுஷ்டிப்பான். அப்பொழுதுதான் பிரெஞ்சுப் பொதுமக்கள் என்ன செய்வார்கள் என்று தெரியவரும். சுயநலத்திற்காக ஜெர்மானியருக்குத் தக்கபடி நடப்பதற்கு சில பிரெஞ்சுக்காரர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் திட மனதில்லாததினாலோ அல்லது தோற்றவர்கள் அம்மாதிரிதான் நடக்கவேண்டுமென்ற மூட நம்பிக்கையினாலோ ஜெர்மானியர் சொல்படி நடப்பார்கள். லவாலும் ஜெர்மன் சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல்களுக்கு யுத்தக் கப்பல்களைத் துணை அனுப்பியும், அல்லது விஷி அரசாங்கம் இழந்த பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளைத் திரும்பிப் பிடிக்கத் தாக்கியும், பிரான்ஸையும் யுத்தத்தில் எப்படியாவது ஈடுபடும்படி செய்துவிடுவான். ஹிட்லரிடம் ஏதோ சாதகங்கள் பெற்றதுபோல ஏமாற்றி தன்னையும் பலப்படுத்திக்கொள்ள முயலுவான். ஆனால் லவால் எத்தகைய மனிதன் என்பதும் அவன் என்ன செய்ய எத்தனித்திருக்கிறான் என்பதும் பிரெஞ்சு மக்கள் பெரும்பான்மையோருக்குத் தெரியும். முன் எச்சரிக்கையினால் அவர்கள் பலமடைந்திருக்கிறார்கள். ஸெயின்ட் நாஸேரில் நடந்த தாக்குதலில் தைரியமுள்ள பிரெஞ்சுக்காரர்கள் தெருவில் வந்து நமது படைக்கு உதவியளித்தார்கள். பிரான்ஸில் வசிக்கும் நாஜிகளுக்குத் தொந்திரவு கொடுப்பதற்காக டஜன் கணக்காக பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் உயிர்களை இழந்துவருகிறார்கள். அம்மாதிரி இன்னும் கோடிக்கணக்கான ஜனங்கள் இருக்கிறார்கள். இதைக்கண்டு தான் லவால் பயப்படுகிறான். இது காரணத்தினால்தான் அவனால் பிரெஞ்சு மக்களை அடக்கியாளமுடியாதென்றும் நான் நம்புகிறேன்.



## உண்மையில் நமக்கு அவ்வளவு தைரியம் இருக்கிறதா என்று சந்தேகம் கொண்டிருந்தோம்.

## சீக்கிரத்தில் லண்டன் வாசிகள் ஆகாய விமானத் தாக்குதல்களை அருவெறுப்புக் கொடுக்கும் தொல்லை என்று கருத ஆரம்பித்துவிட்டார்கள்.

## ஆகாய விமானத் தாக்குதலை வெற்றிகரமில்லாமல் செய்ய சாதாரண பொதுமக்களின் சக்தியைப் பொருத்திருக்கிறது

*ஏப்ரல்மீ 27உ திங்கட்கிழமை இரவு 7½-மணிக்கு டெல்ஹி நிலயத்திலிருந்து A. லெவலின் ஸ்மித் A. R. I. B. A., A. R. P. S. ஒலிபரப்பியது.*

[ஸிம்லா மந்திரி இலாகா P. A. D. பகுதியில் லெவலின் ஸ்மித் டைப் இன்ஸ்பெக்டராக இருந்தார். இப்பொழுது இந்திய அரசாங்கம் தொழில் இலாகா A. R. P. தொழிற்சாலையில் விசேஷவேலை பெற்ற உத்தியோகஸ்தராக இருக்கிறார்].

என்னுடைய சொந்த ஊர் லண்டனில் ஒரு சிறிய ஏழ்மையான பாகத்திலிருக்கிறது. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து சமீபத்தில் மூன்று மாதங்களுக்குமுன் இந்தியாவுக்கு வரும்வரை அங்கே வசித்தேன். இங்கிலாந்தில் அடிக்கடி விமானப்படையெடுப்பு ஏற்படும் காலங்களில் எல்லாம், நான் அங்கு இருந்தேன். அதனால் விமானத் தாக்குதல்கள் எனக்கு ரொம்ப சகஜமாய் விட்டது. இப்பொழுது இந்தியாவின் சிலபாகங்களில் விமானப்படையெடுப்பு ஏற்படுமோவென்று அவற்றைப்பற்றி மும்மரமாகப் பேசிவரப்படுகிறது.

லண்டன் மாநகரில் மூன்று மாதம் தொடர்ந்தாற்போல் ஒவ்வொரு இரவிலும் விமானத்தாக்குதல் நேர்ந்தது. அது இரவு பூராவும் நீடித்திருக்கும். அதற்குப் பிற்பட்டு 6 மாதகாலம் வரை அடிக்கடி கடுந்தாக்குதல்கள் நேரிட்டன. எல்லாப் படையெடுப்பு காலங்களிலும் நான் அங்குதான் இருந்தேன். கொஞ்சநாள் கழித்து இப்படையெடுப்புகள் மனதிற்கு அதிருப்தியைக் கொடுக்கக்கூடிய வெறும் தொல்லைகள் என்று கருதப்பட்டன. கொஞ்சம் அநுபவமானவுடன் லண்டன் நகரவாசிகள் படையெடுப்புகளைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யவில்லை.

இதற்குக் காரணம் முக்கியமாக உலகத்தில் எல்லா பாகங்களிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் லண்டன் வாசிகளுக்கு அனுப்பப்பட்ட அநுதாபமும், வியப்பும் நிறம்பின செய்திகள் அவர்களுக்கு உத்ஸாகத்தை மூட்டினதுதான். அவர்கள் விமானத் தாக்குதலினால் கெடுதல் ஏற்படுமென்று பயமடையவில்லை. தாக்குதல்கள் நின்றவுடன் துரிதமாக அவர்கள் வேலைக்குச் செல்வதற்கே முக்கிய நோக்கம் கொண்டிருந்தார்கள். அநுபவத்தினால்தான் இத்தகைய தன்மை அவர்களுக்கு உண்டாயிற்று. ஆரம்பத்தில் அவ்வாறு இல்லை.

### எல்லா விமானத் தாக்குதல்களைக் காட்டிலும் மிகவும் குழப்பம் உண்டாக்கிய சம்பவம்.

1939-ம் வருஷம் செப்டம்பர்மீ 3உ அதிகாலையில் அபாயச் சங்குகள் ஒலித்தன. ஒவ்வொருவருக்கும் வயிற்றில் சங்கடம் உண்டாயிற்று. ஆனால் அப்பொழுது விமானத்தாக்குதலே ஏற்படவில்லை.

அப்பொழுது நடந்த சம்பவம் தான் பிற்பட்டு நடந்த விமானத் தாக்குதல்கள் எல்லாவற்றையும் காட்டிலும் அதிக குழப்பத்தை உண்டாக்கியது. உண்மையில் நமக்கு தைரியம் இருக்கிறதோ என்று கூட சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. மேலும் அரசாங்கத்தில் பாதுகாப்பு முறைகள் ஏற்பாடு செய்திருக்கிறார்களோ என்ற சந்தேகமும் எங்கள் மனதில் குடிகொண்டிருந்தது. ஆனால் அதற்கு ஒரு வருஷம் கழித்து வெடிகுண்டுகள் விழ ஆரம்பித்தன. அப்பொழுது அரசாங்கத்தார்களின் விமானப் பாதுகாப்பு முறைகளைப்பற்றி சந்தேகங் கொள்வதற்கே இடமில்லை.

அவர்களடைந்திருந்த பயத்திற்கும், சுற்றிலும் நடக்கும் கொடுமைகளுக்கும் இடையில் லண்டன் வாசிகள் சாதாரண அறிவுள்ள ஜனங்கள் போல் நடந்துகொண்டதைப் பார்க்க அவர்களுக்கே ஆச்சரியமாயிருந்தது. அவர்கள் பீதிக்கு ஆளாகவில்லை.' பயத்தால் அவர்கள் ஓடவில்லை. இவ்விதம் எதிர்பாராத தைரியம் அவர்களுடைய மனதில் திடீரென்று தோன்றிற்று. இது காரணத்தினால் அவர்கள் போர் வீரர்கள் மாதிரி அவ்வளவு தைரியமடைந்து விட்டார்கள். அரசாங்கத்தார் பாதுகாப்பு முறைகளைப்பற்றி அவர்கள் பொருட்படுத்தவில்லை. உண்மையாக ஏராளமாகப் பாதுகாப்பு திட்டங்கள் வெகு நேர்த்தியாக ஏற்படுத்தப் பட்டிருந்தன.

## பொதுமக்கள்.

ஆகாய விமானத் தாக்குதல்களை வெற்றிகரமில்லாமல் செய்ய பொது மக்களின் சக்தியைப் பொருத்திருக்கிறது.

உண்மையில் விமானத் தாக்குதலில் யாவருக்கும் பயமாகத்தானிருக்கும். ஆனால் தாக்குதல் ஏற்படப்போகிறது என்று காத்துக்கொண்டிருப்பதுதான் மிகவும் சங்கடமானது. தாக்குதல் ஏற்பட்டுவிட்டால் அவர்களுக்கு உண்டான பரபரப்பில் பயம் நீங்கிப் போகிறது.

கிழக்கு லண்டனில் என்னுடைய பழைய சிநேகிதியைப் பற்றி உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவள் வயது முதிர்ந்தவள். மிகவும் ஏழை. நான் அவளிடம் அதிக மரியாதை காட்டிவருகிறேன். ஒரு நாள் சாயந்திரம் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகள் போட்டு அதிகமாக சேதம் விளைவித்து வந்தன. ஆகாய விமான எதிர்ப்பு பீரங்கிகள் கடுமையாகச் சுட்டுக் கொண்டிருந்தன. அப்பொழுது என் சிநேகிதி நல்ல நிலைமையில் இருக்கிறாளா என்று பார்க்கவேண்டிய முயற்சியுடன் நான் தைரியமாகத் தெருக்களைக் கடந்து சென்றேன். 11 அடி அகல நீளமுள்ள அவளுடைய சிறு சமயலறையில் Mr. டலி, அவர் மனைவி, ஆல்பி டலி, நடுவழியில் வந்து தங்கின Mrs. ஜோன்ஸ் இவர்கள் யாவரும் சுற்றிலும் உட்கார்ந்துகொண்டு டீ குடித்துக் கொண்டும், சீட்டு விளையாடிக் கொண்டும் மிகவும் சந்தோஷமாக இருக்கக் கண்டேன். நாய்களும் பூனைகளும் அவர்கள் பக்கம் விளையாடிக் கொண்டிருந்தன. அவர்கள் வீரர்கள் அல்ல. இவர்கள் மட்டும் இம்மாதிரி இருந்துவிடவில்லை. வெடிகுண்டுகளின் விபத்தைக் கண்டு கலவரப்படாமல் மிகவும் அமைதியாக இருந்தார்கள்.

## முதல் கட்டம்; எல்லாவற்றைக் காட்டிலும் அவர்களுக்கு சோதனை காலம்.

இவைதான் நான் விவரித்திருக்கிறபடி ஆகாய விமானத் தாக்குதலைப் பற்றிய முதல் பாகம். இந்தியாவில் சில இடங்களிலுள்ள ஜனங்கள் இப்பொழுது நான் சொல்லப்போகும் முதல் கட்டத்தில் இருக்கிறார்கள். விமானத் தாக்குதலால் என்ன நேரிடுமோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றைக் காட்டிலும் இதுதான் கஷ்டமான சமயம் என்று தோன்றுகிறது. ஆனால் ஆகாய விமானத் தாக்குதல் ஏற்பட்டுவிட்டால் அவைகள் உண்மையில் அவ்வளவு பயங்கரமாகத் தோன்றாது. ஆனால் சாதாரண மனிதன் அவனுக்குச் சொன்னபடி நடக்கவேண்டும் அறிவுள்ளவனாக காட்டிக்கொள்ளவேண்டும். சீனாவிலும் இங்கிலாந்திலும் விமானத் தாக்குதலின்பொழுது எப்படி பொது ஜனங்கள் நடந்து கொண்டார்களோ அப்படியே இந்தியாவிலும் பொதுமக்கள் நடந்துகொள்ளவேண்டும்.

அரசாங்கத்தாரால் என்ன தயாரிப்புகள் செய்யலாமோ அவ்வளவும் செய்திருக்கிறார்கள். என்ன நடக்கிறது என்பதைப்பற்றி உண்மையைத்தான் உங்களுக்கு அறிவிக்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்லும் புத்திமதி என்னவென்றால் 'நீங்கள் அனாவசியமாகக் கவலை கொள்ளவேண்டாம். உங்களைச் செய்யச் சொன்னதை செய்யவும். பொய் வதந்திகளை பரவச்செய்யாதீர்கள். நீங்களும்



அவற்றை நம்பாதீர்கள். இங்கிலாந்தில் எங்களுக்கு ஏற்பட்ட சோதனை நேரத்தில் இந்தியா காட்டின அனுதாபத்திற்கு நான் உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். அதுபோல் இந்தியாவுக்கும் கஷ்டங்கள் நேர்ந்தால் ஆங்கிலேயர்களும் உங்களைப் பற்றி நினைத்துக்கொண்டு உங்களுக்காக பிரார்த்தனை செய்வார்கள்.'

---

# எவ்விதம் ஐரோப்பாவைப் படையெடுக்கக் கூடும்? இவ்வருஷம் படையெடுப்பதா, அல்லது பிற்பட்டா?

(“ஸண்டே டைம்ஸ்” பத்திரிகையின் ஆகாய விமானங்களைப்பற்றி எழுதும் நிருபர் லண்டனிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

ஐரோப்பாவைப் படையெடுக்கவேண்டுமானால் தாக்கும் படைகளுக்கு சாமான்களையும் வசதிகளையும் ஏற்றிச்செல்லும் கப்பல்களைப் பாதுகாக்க முதன் முதலாக ஆகாய விமான பலம் மேன்மையுள்ளதாக இருக்கவேண்டும். அதாவது ஏராளமான பைடர் விமானங்கள் அடங்கிய விமானப்படைப் பகுதி கப்பல்களுக்கு குடைமாதிரி பாதுகாப்பை அளிக்கவேண்டும். அந்த விமானப் பகுதியில் கொஞ்ச தூரம் வரை சென்று தாக்கக் கூடியதும், ஒருவர் மட்டில் ஏறிச் செல்லும் பைடர் விமானங்களைத்தான் உபயோகிக்கலாம். அவ்விமானம் அதன் தளத்திலிருந்து 80 மைல்களுக்குட்பட்ட பிரதேசங்களில்தான் தாக்கக் கூடும். அக்காரணத்தினால் வெற்றிகரமாகப் படையெடுக்கக்கூடிய பிராந்தியம் மிகவும் குறுகியதாகத்தான் இருக்கும்.

இவ்விதம் விமான பலத்தைக்கொண்டு அடியில் கண்டபடி காரியங்கள் செய்து முடிப்பதற்கு சாத்தியமாயிருக்கும்.

**வட பிரான்ஸைப் படையெடுக்க**—ஆகாய விமானங்கள் பாதுகாப்பதற்கும், சேதப்பட்ட விமானங்களுக்குப் பதில் அனுப்புவதற்கும் சுலபம். மேலும் சமுத்திரக்கரை யோரத்தில் செல்லும் சாதாரண கப்பல்களைக் கொண்டே இப்படையெடுப்பை நடத்தலாம்.

**நார்வேயைப் படையெடுக்க**—ஆகாய விமானப் பாதுகாப்பு அளிப்பது கஷ்டம். சேதப்பட்ட விமானங்களுக்கு பதில் அனுப்புவதும் கடினம். கடற்கரையோரமாகச் செல்லும் கப்பல்களைக்கொண்டு படையெடுப்பதும் கஷ்டம்.

**இதாலியைப் படையெடுக்க**—ஆகாய விமானப் பாதுகாப்பு கஷ்டம். சேதமடைந்த விமானங்களுக்கு பதிலளிப்பதும் கஷ்டம் பெரிய கப்பல்களைக்கொண்டு தான் படையெடுக்க முடியும்.

பிரதானமான படையெடுப்பு எங்கு நடந்தாலும் அங்கு தரைப்படை, கப்பற் படை இவைகளுக்கு உதவியாக ஆகாய விமானப்படை தன் முழு பலத்தையும் செலுத்தவேண்டும். இதனால் தாத்காலியமாக மற்றவித தாக்குதல்களை விட்டு விட நேரிடும். ஆகையால் கனமான பாம்பர் விமானங்களின் முக்கிய கடமை என்னவென்றால் யுத்தம் நடக்கும் இடங்களுக்கு சாமான்கள் போய் சேரவிடாமல் போக்குவரத்துகளை வெடிகுண்டுகளால் தாக்கித் துண்டித்துவிடவேண்டியது தான்.

கொஞ்சதூரம் வரை சென்று தாக்கக்கூடிய ஆகாய விமானங்கள் ஏராளமாக போர்ரங்கங்களில் வந்திறங்கி ஆகாய பலத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு தரையில் நடக்கும் நடவடிக்கைகளிலும், கடலில் நடக்கும் நடவடிக்கைகளிலும் அதிகமாகப் பயன் கிடைக்கும் விதமாக ஈடுபடவேண்டும்.

பிரான்ஸைப் படையெடுக்கத் தீர்மானித்தால் டங்கர்க்கிலிருந்து டீயப் (Dieppe) வரையிலும், இத்துடன் சிலமைல்கள் உள்நாட்டிலும் சென்று தாக்குவதற்குப் போதுமான ஆகாய விமான பலம் நமக்கிருக்கிறது. இடைவிடாமல்

அடுத்த கரைக்கு சாமான்கள் கப்பல்களில் ஏற்றியனுப்புவதற்கு ஆகாய விமானப் பாதுகாப்பும் கொடுக்கக்கூடும். மற்றபடி வேறு எந்த இடமாக இருந்தாலும் ஆகாய விமானப்படை போதுமான உதவியளிக்கக் கூடும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது.

இப்பொழுது நாம் அனுஷ்டித்துவரும் கொள்கையைக் காட்டிலும் அம்மாதிரி பிரான்ஸின் பேரில் படையெடுப்பதினால் ருஷ்யாவிற்கு இந்த வருஷத்தில் அதிக உதவி ஏற்படுமா? அவ்வித படையெடுப்பு அதிக எதிரி ஆகாய விமானங்களை மேற்குப்பக்கம் திருப்பிவிடப்படமாட்டா. மேற்குபாகத்தில் ஜெர்மனிக்கு 30, 40 படை பகுதிகள் இருப்பதாகத் தெரிகிறது. அவைகளுக்கு அதிக விமான பலம் இல்லாவிட்டாலும்கூட நாம் கரையில் இறக்கக்கூடிய படைகளைத் தாக்குவதற்கு அந்தப்படை பகுதிகளே போதுமென்று ஜெர்மனி எதிர்பார்க்கிறது. இன்னும் நம்முடைய ஆகாய விமானப்படை பலமும், தரைப்படை பலமும் அதிகமாகும் வரை, நாம் படையெடுப்பை ஒத்தி வைப்பதினால் அநேக சாதகங்கள் அடையலாம். மேலும் ருஷ்யாவிற்கு அந்தப் போர்முனையில் உபயோகப்படும்படி அநேக விமானங்கள் அனுப்பிவருகிறோம். ஆனால் படையெடுக்கக் கப்பல்களில் சாமான்களையும், ஆட்களையும் அனுப்பிக்கொண்டிருந்தால் ருஷ்யாவிற்கு சாமான்கள் அனுப்புவதற்குக் கப்பல்கள் கிடைக்காமல் போய்விடும்.

இவ்வருஷத்தில் மேற்குப் புறத்தில் ஆகாய விமானப் போர் நடத்திவருவது தான் இரண்டாவது போர்முனை. அது முக்கியமானதாகவும், பயன்தரக்கூடியதாகவும் இருக்கிறது. லுப்ட்வாபியைச் சேர்ந்த அநேக விமானங்களை மேற்குப் போர்முனைக்குத் திருப்புவதிலும், நஷ்டம் உண்டாக்குவதிலும், கிழக்கில் ருஷ்யாவிற்கு ஆகாய விமான பலம் அதிகரிக்க சந்தர்ப்பம் ஏற்பட்டு வருகிறது. கைத்தொழிலை அழித்துவருவதில் எதிரியின் யுத்தப் பிரயத்தனமும், பொதுமக்களின் உற்சாகமும் குன்றிவருகிறது.

---

# விமானத் தாக்குதல்களும், ஜப்பானின் யுத்த முயற்சியும்.

(ஜான் மாக்டோனல்டு என்பவரால்).

ஜப்பான் பேரில் விமானங்கள் வீசி சேதத்தை விளைவிப்பதைப்பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அங்குள்ள வீடுகள் யாவும் காய்ந்த மரப் பலகைகளால் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் எளிதில் தீப்பற்றிவிடும். மேலும் அவ்வீடுகள் ஒன்றோடொன்று நெருக்கமாகக் கட்டப்பட்டிருப்பதால், ஒரு வீட்டில் நெருப்புப் பிடித்தால் வரிசையாக அநேக வீடுகள் தீப்பிடித்துவிடும். அதனால் ஒரு பட்டணத்தில் பெரும் பாகத்திலுள்ள வீடுகள் சேதமாய்போய்விடும். அதை அணைப்பதற்கு நல்ல வசதிகள் கிடையாது. அங்கு தண்ணீர் அகப்படுவதே ரொம்ப துர்லபம். மேலும் தண்ணீர் கொண்டுவருவதற்கு வாளிகளைத்தவிர வேறு வசதியும் கிடையாது.

இவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும், நெருப்பை அணைப்பதற்குத் தங்களால் முடிந்த முயற்சிகளை எடுத்துக்கொள்ளுகிறார்கள். நெருப்பு அணைக்கும் கோஷ்டிக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. மேலும் காயமடைந்தவர்களுக்குப் பிரதம சிகிச்சைக்கு வேண்டிய பயிற்சியும், மற்றபடி விமானப்படையெடுப்புப் பாதுகாப்பு வேலைகளுக்கு வேண்டிய பயிற்சியும் சாதாரணமாக எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. நெருப்பு அணைக்கும் கோஷ்டிக்கு அளிக்கப்படும் பயிற்சியைப் பார்ப்பதற்கு விநோதமாக இருக்கும். ஏனென்றால் அதற்குள்ள சாதனங்கள் யாவும் பழமையானவை. கத்தலும், இரைச்சலும் பண்டைகாலத்தைப் போலிருக்கும். இவையெல்லாம் பார்ப்பவர்களுக்கு ரொம்ப விநோதமாகயிருக்கும். ஆனால், ஜப்பானியருக்கு உள்ளூர பயமிருந்துகொண்டேயிருக்கும். அப்படி அவர்கள் பயப்படுவதற்குக் காரணமிருக்கிறது. அவர்கள் வசித்துவரும் வீடுகளும் அவர் நடத்திவரும் தொழில்களும் ஆபத்துக்குள்ளாகியிருக்கின்றன. அவற்றைக்



காட்டிலும் அந்த தேசம் பூராவிலும் உள்ள உற்பத்தி தொழிற்சாலைகளும் தாக்கப்படுகின்றன. உற்பத்தி செய்த பொருள்களை ஏற்றியனுப்புவதும் சாத்தியப்படவில்லை.

## சமுத்திரக்கரையோரமுள்ள இருப்புப்பாதை.

ஜப்பானில் முக்கியமாக இருப்புப்பாதை தெற்கே நாகாஸாகியிலிருந்து வடக்கே டோகியோவரையிலும் சமுத்திரக்கரையோரமாகச் சுற்றி வளைத்துப் போகிறது. இந்த மார்க்கம் ஆகாயத்திலிருந்து தாக்குவதற்கு வெகு சுலபம். அதிலுள்ள பாலங்களையும், கணவாய்களையும் சுலபமாக உடைத்துவிடக்கூடும். டோகியோவிலிருந்து சுமார் 50 மைலிலிருக்கும் டண்ணு (Tanna) கணவாயில் குண்டு போட்டால் வெகுகாலம் அந்த மார்க்கம் துண்டித்துப்போய்விடும். இந்தக் கணவாய் உலகத்திலேயே மிகவும் நீளமானது. அதைக்கட்ட நாலு வருஷம் பிடித்தது. ஒரு வெடிகுண்டு அதைத்தாக்கினால் அதிலுள்ள அநேக உஷ்ண நீர் ஊற்றுகள் வெளிக்கிளம்பிவிடும். அவை வெளிக்கிளம்பினால் அந்தப் பாலம் பூராவும் உடைந்துவிடும். இதைக்கட்டும்பொழுது உஷ்ணமான ஊற்றையும், சகதியையும் அடைக்கப் பிரயத்தனப்பட்டதில் ஆயிரக்கணக்கான வேலைக்காரர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

## கைத்தொழில்கள் சமுத்திரக்கரைக்கருகில்.

ஜப்பானின் பிரதானமான கைத்தொழில்கள் சமுத்திரக்கரைக்கருகாமையிலிருக்கின்றன. கோப், ஒஸாகா முதல் டோகியோ வரையுள்ள இருப்புப் பாதை நெடுகிலும் பெரிய பண்டகசாலைகளும், தொழிற்சாலைகளும் சமுத்திரக் கரையிலிருந்து பத்து மைலுக்குள்ளாகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஜப்பான் பாதுகாப்பில் ஜீவநிலையான இந்த இடங்கள்தான் ஜப்பானைத் தாக்க வரும் படைக்கு முதலில் கண்ணில்படும். இவைதான் முதன்முதலாக தாக்கப்படும்.

ஜப்பானில் கப்பல்கட்டும் பெரிய நகரங்களில் ஒன்றான கோப் என்னுமிடத்தில்தான் காவாஸாகி (Khwasaki) கப்பல் துறைகளும் மிஸுபிஷி (Misubishi) வெடிமருந்து உற்பத்தி சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உற்பத்தி செய்யும் பிராந்தியம் சமுத்திரக்கரையிலிருந்து ஆரம்பித்து 1¾ மைல் அகலமுள்ளதாக இருக்கிறது. அந்த நகரத்திற்குப் பின்புறம் ஒரு கல்லெறி தூரத்தில் 1,000 அடி உயரமுள்ள மலைத்தொடர் இருக்கிறது. முக்கிய கைத்தொழில்களெல்லாம் இந்தக் குறுகலான இடத்தில்தான் இருக்கின்றன. மலைகள் கிழக்கே ஒஸாகா வரையிலும் பரவியிருக்கின்றன. ஒஸாகாவுக்கு சற்று வடகிழக்கே இரண்டு மலைத்தொடர்களுக்கு இடையேயுள்ள பள்ளத்தாக்கில், நாகோயா, கியோட்டோ என்ற பட்டணங்கள் இருக்கின்றன. சமுத்திரத்திலிருந்து அவையும் தாக்கக்கூடும்.

## பெரிய கப்பற்படை தளம்.

இன்னும் கிழக்கே யுத்தப் பொருள்கள் தயாரிக்கக்கூடிய ஜப்பானில் மிகவும் முக்கியமான மூன்று பட்டணங்கள் இருக்கின்றன. அவையாவன: யோகொஸுகா, யோகஹாமா, டோகியோ அவையும் கடலுக்கு சமீபத்தில் இருக்கின்றன. யோகாஸுகா ஜப்பானில் பெரிய கப்பற்படை தளம். இங்கு தான் 42,000 டன் நிறையுள்ள பெரிய யுத்தக் கப்பல்களில் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. யோகஹாமா ஜப்பானில் பெரிய முக்கியமான துறைமுகம். ஆகாய விமானங்களுக்கு மோட்டார் உற்பத்தி செய்யுமிடங்களில் அது ஒன்று. யோகஹாமாவுக்கும் டோகியோவுக்கும் நடுவில் சமுத்திரக்கரையோரமுள்ள ஜில்லாவில் வெடிமருந்து உற்பத்தி சாலைகள் வரிசையாக இருக்கின்றன.

தெற்கே நாகாஸாகிற்கு அருகிலுள்ள ஸாஸியோ என்ற இடத்திலும் மேற்கு சமுத்திரக்கரை யோரமாக இருக்கும் கூரி என்ற இடத்திலும் பிரக்யாதி பெற்ற

கப்பற்படை தளங்கள் இருக்கின்றன. அங்கு அவற்றின் சக்திக்குத் தகுந்தபடி கப்பற்படைக்கு வேண்டிய கப்பல்கள் கட்டப்படுகின்றன. கோபுக்குத் தென் மேற்கில் உள்நாட்டில் கடலோரமாய் இருக்கும் பூஜோ என்ற இடம் நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டுவதற்கு முக்கியமான தளம். இந்தத் துறைமுகம் அநேகத் தீவுகளுக்கு இடையிலிருப்பதால் உலகத்தாருக்கு இதைப்பற்றி அதிகம் தெரியாது. இருந்தபோதிலும் ஜப்பானுக்கு அநேக நீர் மூழ்கிக் கப்பல்கள் இங்கு கட்டப்படுகின்றன.

ஜப்பானின் யுத்த முயற்சிக்கு மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு இடமும் மிகவும் முக்கியமானவை. விமானத் தாக்குதலுக்கு வெகு சுலபமான இலக்காக இருப்பதால் அவைகளுக்கு பெருத்த ஆபத்து ஏற்பட்டுவிடும்.

---

## ஹிட்லர் சொல்லுகிறபடி ஜெர்மனியில் அவ்வளவு 'யு' படகுகள் இல்லை.

(H. C. பெர்ரேபி என்பவர் லண்டனிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

ஜெர்மன் மந்திரி சபையில் ஹிட்லர் பேசியதில் "சென்ற உலக யுத்தத்தில் இருந்த 'யு' படகுகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் இப்பொழுது மிகவும் அதிகமிருக்கிறது", என்று குறிப்பிட்டான். இந்த யுத்தம் ஆரம்பித்த 51 மாதங்களில் அநேக 'யு' படகுகள் கட்டப்பட்டு, மிதக்கவிடப்பட்டிருக்கின்றன. இவைகளின் மொத்தம் 344 அல்லது 345 தான். பிரிடிஷார் சொல்வதற்கும், ஜெர்மானியார் சொல்வதற்கும் எண்ணிக்கையில் ஒரு படகு தான் வித்தியாசம். ஜெர்மனிக்கு வெளியேயிருக்கும் கப்பல் கட்டும் நிபுணர்கள் இந்த யுத்த காலத்தில் மாதத்திற்கு 9 படகுகள் தான் கட்டி முடிக்கப்படுமென்று ஏகமனதாகச் சொல்லுகிறார்கள். இந்தப்படி 30 மாதங்களுக்கு 270 யுத்தப் படகுகள் புதிதாக கட்டிச் சேர்த்திருக்கலாம். சென்ற யுத்தத்தில் 50 மாதங்களில் கட்டிக் கொடுக்கப்பட்டவைகளைக் காட்டிலும் இது மிகவும் குறைவு தான்.

### கப்பற்படை வீரர்கள் சரியானபடி பயிற்சி பெற்றவர்களல்ல.

உத்தியோகமுறையில் வெளிவந்த ஜெர்மன் தேசச் சரித்திரங்களிலிருந்து சென்ற யுத்தத்தில் நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சி சாலையில் 18,000 உத்தியோகஸ்தர்களும், வேலைக்காரர்களும் அவசரமாகப் பயிற்சி பெற்றுக்கொள்ள நேரிட்டது என்றும், அப்படியிருந்தும் ஒவ்வொரு 'யு' படகிலும் சண்டைக்குப் புறப்பட்ட பிறகும் கூட வேலை கற்றுக்கொள்ளவேண்டியவர்கள் 10, 12 பேர்கள் இருந்தார்கள் என்றும் தெரிகிறது. இருந்தபோதிலும் 1914-ம் வருஷ முதல் 1918-ம் வருஷம் வரையில் கப்பல்கள் நிர்மாணிப்பதிலும், அவைகளில் பயிற்சி பெறுவதிலும், ஜெர்மன் கப்பற்படை திறமையற்றது என்று ஒருவரும் சொல்லவில்லை.

இந்நிலைமையில் நாஸிகள் போட்டுள்ள காலவரையில் பாதிக்குள்ளாக கெய்ஸர் 'யூ' படகு மாலுமிகளைப்போல் 1½ மடங்கு அதிகமான மாலுமிகள் தயாரானதாகச் சொல்லுவது நம்ப முடியாததாகும். ஆதலால் ஹிட்லர் ரீஷ்டாக் சபையில் பேசியதில் விஷயம் ஒன்றுமில்லை. ஜெர்மன் நீர்மூழ்கி ஸ்தாபனத்தைப்பற்றி அறிந்து கொண்டவர்களுக்கு அவன் மிகைப் படுத்திச் சொல்லியிருக்கிறான் என்று தெரியும். ஜெர்மானியரில் சிலர் அதைக் கேட்டு சந்தோஷிக்கலாம். ஆனால் உலகத்தார்களை அவ்வார்த்தைகள் ஏமாற்றி விடமுடியாது.



### ஹிட்லரின் தந்திரம்.

பிரிடிஷ் கப்பல் இலாகா அறிக்கைகளில் 400, 500 எண்ணிக்கை கொண்ட படகுகளைப் பற்றி பிரஸ்தாபம் இருப்பதிலிருந்து ஜெர்மானியர்கள் கட்டியிருக்கும் படகுகள் அந்த எண்ணிக்கைக்கு மேலிருக்கும் என்று சிலர் வாதிக்கலாம். அதற்கு சுலபமான பதில் இது தான். ஜெர்மன் கப்பற்படையில் 200 முதல் 300 வரை நம்பர் போட்ட படகுகள் இருந்ததாக ஜெர்மன் அல்லது பிரிடிஷ் அதிகார வர்க்கத்தில் யாதொரு பிரஸ்தாபமே கிடையாது. 1939-ம் வருஷம் சரத் காலத்திற்குப் பிறகு உலகத்தாரை ஏமாற்ற ஜெர்மன் படகுகளுக்கு நம்பர் போடுவதில் 100-க்குப் பிறகு 400-லிருந்து ஆரம்பித்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

இது ஒரு நல்ல தந்திரம் தான். கெய்ஸரின் கப்பற்படையின் பலத்தைக் காட்டிலும் தனக்கு அதிக பலம் இருப்பதாக பிறர் நம்பி விடுவார்கள் என்று ஹிட்லர் எண்ணினான். ஆனால் இதற்கு முன்னாடியே 200-லிருந்து 400-வரை எண்ணிக்கை கொண்ட படகுகளைக் குறித்து ஜெர்மன் கப்பற்படை இலாகா சொல்லாமல் போனது பெரிய தவறு. அப்படிச் சொல்லியிருந்தால் ஜெர்மனி உலகத்தாரை ஒருக்கால் ஏமாற்றியிருக்கலாம்.

---

## ஜெர்மனியின் உற்பத்தி சாதனங்கள் வரவர குறைந்து கொண்டுவருகின்றன.

(வாஷிங்டனிலிருந்து கேபிள் மூலமாய் வந்த செய்தி).

ஜெர்மன் தொழிற்சாலைகளின் உற்பத்தி குறைவுபட்டே வருகிறது. அவ்விதக் குறைவினால் யுத்தத்தில் ஜெர்மனிக்கு பெருத்த தோல்வி ஏற்பட்டுக்கொண்டு வருகிறதென்று "யுனைடெட் ஸ்டேட்ஸ் வாரச்செய்தி பத்திரிகை" கூறுகிறது. மேலும் ஹிட்லரின் புதிய திட்டம் சரியாக நடைபெறவில்லை. ஜெர்மன் ராணுவத்திற்கு வேண்டிய முஸ்தீப்பு யாவும் தயார் செய்து அதன் பலத்திற்கு மூலாதாரமாகயிருந்த தொழிற்சாலைகள் ஒவ்வொன்றாக அழிந்து கொண்டு வருகின்றன.

முதலாவதாக ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகள் ஜெர்மானியருக்கு இதற்கு முன் ஸப்ளை செய்துவந்த பொருள்களில் அதே அளவுப் பொருள்களை இப்பொழுது அனுப்புவதில்லை. இதற்குக் காரணம் ஜெர்மன் அரசாங்கத்திற்கு விரோதமாக நடக்கும்படி அங்கு பிரசாரம் செய்யப்படுகிறது. ஹிட்லர் போட்ட திட்டத்திற்குக் குறைவாக யுத்த தளவாடங்கள் இப்பொழுது செய்யப்படுவதினால் தொழிற்சாலைகளின் தலைவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டோ, அல்லது ஜெயிலில் அடைபட்டோ விடுகின்றனர். இதன் பயனாக ஜெர்மனியின் கைத்தொழிலுக்கு அழிவு காலம் வந்துவிட்டது என்று உடனே சொல்லிவிடமுடியாது. ஆனால் ஹிட்லர் தன்னிஷ்டம்போல் ராணுவ நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

### தொழிலாளிகளின் குறைவு.

நாஸிகளின் வசந்த காலத் தாக்குதலின் திட்டங்களுக்கு தொழிலாளிகளின் குறைவுதான் பெருத்த இடையூறாக இருக்கிறது. ஜெர்மனி இனிமேல் தொழிலாளிகளை ஸப்ளை செய்யமுடியாத நிலைமையிலிருக்கிறது. அதனால் ஆக்கிரமித்த தேசங்களில் இளைஞர்கள், சிறுபெண்கள், வயதுசென்ற ஸ்திரீ, புருஷர்கள் இவர்களைச் சேர்ப்பதற்காக ஹிட்லரின் ஏஜெண்டுகள் எங்கும் சென்று தேடிப்பார்த்து

வருகிறார்கள். ஜெர்மனியில் தொழிலாளிகள், சைனியங்கள் இவைகளின் சங்கியை வரவரகுறைந்துவருகிறது. அங்கு குறைந்த பக்ஷம் 2,40,00,000 தொழிலாளிகள் தான் வேலைசெய்து வருகிறார்கள். ஒரு கோடி போர்வீரர்கள் சண்டையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ருஷ்யப் போர்முனையிலிருந்து ஒவ்வொரு மாரிகாலத்திலும் 20 அல்லது 30 லக்ஷம் துருப்புகள் ஓய்வு எடுத்துக்கொள்ள ஜெர்மனிக்கு வந்து, அங்கு உள்நாட்டுத் தொழிற்சாலைகளில் வேலைசெய்வது வழக்கம். ஆனால் இப்பொழுது ருஷ்யச் சைனியங்கள் வெற்றிக்குமேல் வெற்றியடைந்து வருவதினால் அத்துருப்புகள் முன்போல் ஓய்வு எடுத்துக்கொள்ள வருவதற்கு முடியவில்லை. அதனால் 200 ஜெர்மன் படைப்பகுதிகள் அதாவது மொத்தத்தில் 35.00,000 பேர்கள் கிழக்குப் போர்முனையிலேயே தங்கி விட்டார்கள். நாஸி சைனியத்தில் முதல் தரமான போர்வீரர்களில் சுமார் 10 லக்ஷம் பேர்கள் போர்முனையில் இறந்துவிட்டனர். இன்னும் காயமடைந்தவர்கள், இருப்பிடம் தெரியாமலிருப்பவர்கள் இவர்களின் எண்ணிக்கையை இறந்தவர்களின் எண்ணிக்கையுடன் சேர்த்து கணக்கிட்டுப் பார்த்தால் 25,00,000 ஜனங்களுக்கு மேலாகும்.

மேலும் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து யுத்தத்திற்கு ஆட்கள் சேகரிக்கும் விஷயமாக பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. பால்கன் நாடுகளிலிருந்து ஆட்கள் சேகரிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாகவும், அவைகள் அநேகம் பேர்களை அனுப்புவதாகவும் சொல்லப்படுகிறது. பிரான்ஸில் ருஷ்யப் போருக்காக ஆட்கள் சேகரிப்பதில் 5,000 பேர்கள்தான் சேர்ந்தார்கள். ஸ்பெயினிலிருந்து ருஷ்யப் போர்முனைக்கு ஒரு விசேஷப் பகுதி அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் நாஸிகள் விருப்பத்திற்கு எல்லையில்லை.

## மருந்துகள் தேவை.

மேல்பார்வைக்கு மருந்து முதலிய அத்தியாவசியமான பொருள்கள் விஷயமாக ஜெர்மனியின் நிலைமை கெட்டிருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால் ஜெர்மானியருக்குச் சில மருந்துகளும், மூலிகைகளும் அவசியம் தேவை. ரசாயன முறைப்படி செய்யும் ரப்பர் இருப்பு குறைந்துவருகிறது. ரப்பர் உற்பத்தி செய்யும் இரண்டு தொழிற்சாலைகளில் ஒன்று வெடிகுண்டால் தாக்கப்பட்டது. அவர்களுக்கு பருத்தி, ரோமம், கொழுப்பு, செம்பு, துங்ஸ்தான், நிக்கல், வெடி உப்பு முதலியவை தேவையாக யிருக்கின்றன. ருஷ்ய பூ தகன முறையினால் பிரான்ஸ், செகோஸ்லோவாகியா, போலாந்து இந்நாடுகளிலிருந்து ஜெர்மானியருக்குக் கிடைத்த வண்டிக்கணக்கான கொள்ளைப் பொருள்களைப்போல இப்பொழுது ருஷ்யாவில் கிடைக்கவில்லை.

1942-ம் வருஷத்தில் ஜெர்மனியில் யந்திரத்திற்குப் போடும் எண்ணெயும், மின்சார சக்தியும் குறைவாக இருந்து வருவதினால் தொழிற்சாலைகளின் உற்பத்தியில் குறைவு ஏற்படும்போல் தெரிகிறது. இப்பொழுது எண்ணெய் உற்பத்தியும், அதன் செலவும் ஒன்றுக்கொன்று சமமாக இருந்துவருகிறது. அதன் போக்குவரத்து முறையில் மசகெண்ணெய்க் குறைவினால் பெருத்த இடையூறுகள் நேரிட்டு வருகின்றன. பிரான்ஸ் தோற்றவுடன் அங்கிருந்து 2,50,000 சரக்கேற்றிச் செல்லும் மோட்டார்களையும், இன்னும் 2,500 ரயில் வண்டிகளையும் ஜெர்மானியர் எடுத்துக்கொண்டார்கள். பிற்பட்டு இன்னும் அதிகம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இம்மாதிரி பொருள்கள் குறைந்துவருவதில் ஜெர்மனியின் பொருளாதார நிலைமை குறைந்துகொண்டுவருகிறது. இந்த வருஷத்திலாவது யுத்தத்தில் ஜயிக்க மனிதர்களையும் யந்திரங்களையும் சேர்க்க ஜெர்மனி முழுப் பிரயத்தனத்தையும் எடுத்துக்கொள்ளுகிறது. ஆனால் "இதில் ஏற்படும் பிளவைப்பார்க்க ஜெர்மனி தோன்றுவிடும்போல் தெரிகிறது" என்று அப்பத்திரிகையில் கண்டிருக்கிறது.



# ஆக்கிரமித்த பிரதேசங்களில் ஜப்பானியர் கையாளும் முறை.

(W. A. ஸ்வின்கிளேர் லண்டனிலிருந்து 'லிஸ்னர்' (Listner) என்ற பத்திரிகைக்கு கேபின் மூலம் அனுப்பிய செய்தி.)

ஜப்பானிய பாஷை தெரிந்தவர்களுக்கு அநேக விஷயங்கள் தெரியவரலாம். ஜப்பானியர்கள் உள்நாட்டு ஜனங்களுக்கு ஒலிபரப்புவதைக் கேட்கவும் கூடும். அவர்கள் சொல்வதிலிருந்து ஜப்பானியர்கள் வெற்றியடைந்த நாடுகளிலிருந்து ஈவிரக்கமில்லாமல் ஏராளமாகப் பொருள்களைக் கொள்ளையடிக்கிறார்கள் என்பது வெளியாகும். ஆக்கிரமித்த ஐரோப்பாவில் ஜெர்மானியர் எவ்விதம் நடந்து கொண்டார்களோ அதே மாதிரியாகவே ஜப்பானியர் தாங்கள் ஆக்கிரமித்த ஆசியா நாடுகளிலும் நடந்து வருகிறார்கள். அவர்கள் ஜெர்மானியரை ஒத்தே பிரசாரம் செய்து வருகிறார்கள். அதன் முறை வெகு சுலபம். ஹிட்லரைப் போல் வாக்குறுதி வெகு எளிதில் கொடுக்கிறார்கள். ஆனால் அவைகள் நிறைவேற்றப்படமாட்டா. மேலும் ஜெர்மானியரைப் போலவே ஜப்பானியரும் ஆக்கிரமித்த தேசத்தினருக்கு சாதகமாகவே தாங்கள் வந்திருப்பதாகவும், அதன் பயனாக எங்கும் சுபிக்ஷம் சந்தோஷம், ஸ்வதந்திரம் எல்லோருக்கும் கிடைக்கப் போவதாகவும் சொல்லி வருகிறார்கள்.

## ஜப்பானியர் எதிர்பார்ப்பது.

மௌனமாக ஜப்பானியர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டினரையும், அவர்களுடைய சொத்துக்களையும் கொள்ளையடித்து தங்கள் உபயோகத்திற்கே வைத்துக்கொள்ளுகிறார்கள் என்று கல்வி வாசனையே இல்லாதவர்களுக்கும்கூட இவ்வக்கிரமங்கள் சில காலம் கிரமித்து தெரிந்துவிடக்கூடும். இதை ஜப்பானியர்கள் அறிவார்கள். இருந்த போதிலும் அவர்கள் தெரிந்துகொள்வதற்குள் காரியம் மிஞ்சிப்போகுமென்று ஜப்பானியர்கள் நம்பிவருகிறார்கள். ஆக்கிரமித்த ஐரோப்பாவில் ஜெர்மானியர் கொள்ளையடித்ததை சிலாகித்துச் சொல்வதுபோல, ஜப்பானியர்களும் இனி கொள்ளையடிப்பதற்குப் போட்டிருக்கிற ஏற்பாடுகளைக் குறித்தும், இதுவரை கொள்ளையடித்ததின் பயன்களைக் குறித்தும் சிலாகித்துச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

இவ்விதம் வரிசைக் கிரமமாக கொள்ளையடிப்பதற்கு வெகு வருஷங்களுக்கு முன் முதற்கொண்டே திட்டம் போட்டிருந்தார்கள். வடக்கு ஸெலிபஸ் தீவிலுள்ள மினடோவிலிருந்த ஜப்பானிய ஸ்தானிகர் வசமிருந்த தஸ்தாவேஜுகளை டச்சு போலீஸார் கைப்பற்றி பார்வையிட்டார்கள். அப்பொழுது டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளில் ஜப்பானியர்கள் அரசியல் நிர்வாகத்தை நடத்துவதற்காக போட்டிருக்கும் பூரா திட்டங்களும் அவைகளில் கண்டிருந்தன. நிதி நிர்வாகத்திலும் கூட இம்மாதிரி கொள்ளையடித்து வருகிறார்கள். அதேமாதிரியாகவே தான் அங்குள்ள விளைபொருள்களையும் கொள்ளையடிக்கிறார்கள். ஆக்கிரமித்த பிரதேசங்களில் ஜப்பானியத் தொழிற்சாலைகள் எங்கெங்கு வைக்கக்கூடுமோ ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. சணல் முதல் ரப்பர் சாமான்கள் வரை எல்லாவித சாமான்களும் உற்பத்தி செய்வதற்கு லாயக்காக பாங்காக் பகுதிகளில் ஏராளமாக தொழிற்சாலைகள் ஏற்பட்டிருப்பதைக் குறித்து ஜப்பானியர்கள் சந்தோஷமாக பேசிக்கொள்ளுகிறார்கள்.

## ஜப்பானிய பாஷையைப் பரவச்செய்தல்.

இவ்விதம் ஜப்பானியர்கள் அந்நிய நாடுகளில் பொருள்களை மட்டில் கைப்பற்றிக்கொள்ள பிரயத்தனப்படவில்லை. எங்கும் ஜப்பானிய சாம்ராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காக முயற்சிக்கின்றனர். ஆக்கிரமித்த பிரதேசங்களில் ஜாதி, மதம், பாஷை முதலியவைகளையும் அழிக்கப்பார்க்கிறார்கள். ஜப்பானிய பாஷையை சங்கிரமமாகச் செய்து எல்லோரும் எளிதில் கற்றுக்கொள்வதற்கு ஜப்பானிய

அரசாங்கம் ஏற்பாடு செய்துவருகிறது. அதில் சுலபமான 300 எழுத்துக்களும், சாதாரணமான வார்த்தைகளுமே அடங்கியிருக்கின்றன. சாதாரணமாக பேசிப் புழங்க அது போதுமானவை. இம்மாதிரி ஜப்பானிய பாஷையைப் பரவச் செய்வதற்குப் போட்டிருக்கும் திட்டத்தை துரிதமாக அமுலுக்குக் கொண்டுவருகிறார்கள். மேலும் ஒலிபரப்புகளில் ஜப்பானிய பாஷை பரவி வருகிறதென்று அடிக்கடி சொல்லப்படுகிறது. உதாரணமாக பாங்காக்கில் ஜப்பானிய பாஷை போதிக்கும் பள்ளிக்கூடத்தில் சென்ற வருஷத்தில் இருந்த பையன்களைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமான பையன்கள் இவ்வருஷம் சேர்ந்திருப்பதாக ஒலிபரப்பப்பட்டது.

ஜப்பானின் ஆட்சியைப்பற்றி பெரும்பான்மையாகத்தான் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கு பாகத்தில் எவ்விதம் ஹிட்லர் எல்லா நாடுகளையும் அடிமையாக்க நோக்கம் கொண்டிருக்கின்றானோ, அதேமாதிரியாகவே கிழக்குப் பாகத்திலும் ஜப்பானியர்களின் நோக்கங்கள் இருந்து வருகின்றனவென்று இதைப் பார்த்தாலேயே தெரியவரும்.

---

## ஜனநாயகங்களின் பலமான அம்சங்கள்.

(6—2—42உ இஸ்தான்புல் 'தான்' பத்திரிகையில் இருந்து ஸெக்ரையா ஸெய்நல் என்பவரால்).

யுத்தம் ஆரம்பித்தது முதல் ஜனநாயகங்கள் பலம்குன்றியிருப்பதாகவே தோன்றின. 2½-வருஷங்கள் யுத்தம் நடந்தும் அவை இன்னும் தற்காப்பு முறையிலேயே இருக்கின்றன.

மேலும் இப்பொழுதும்கூட லிபியாவில் அவர்களால் எதிரிகளை எதிர்த்து போராடுவதற்கு முடியவில்லை. தூரக்கிழக்கில் எல்லாக் கப்பற்படை தளங்களையும், விமான நிலயங்களையும், அவைகள் இழந்துவிட்ட போதிலும் வெற்றி நிச்சயமென்று கூறிவருகின்றன. இவ்வளவு நம்பிக்கையை உண்டாக்குவதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது? எந்த ஆதாரத்தைக்கொண்டு அவைகள் இந்த யுத்தத்தில் ஜயம் பெறப்போகின்றன.

ஜனநாயகங்கள் நம்பியிருக்கும் முக்கிய விஷயங்கள் ஆறுவகையாக இதனடியில் காணப்பட்டிருக்கின்றன.

1. இதுவரையிலும் கடலாதிக்கம் பெற்றிருக்கும் வல்லரசு எதுவும் எந்தச் சண்டையிலும் தோற்கடிக்கப்படவில்லை. கடலாதிக்கம் பெறாத நாடுகள் எப்பொழுதும் வெற்றியடைந்ததில்லை. கடலாதிக்கத்தினால்தான் ஜெர்மனிக்கு அயல் நாட்டுப் பொருள்கள் கடல் மார்க்கமாய் வருவதை ஜனநாயகங்கள் தடுத்துவிட்டன. ஆனால் உலகத்தில் முக்கால் பங்கு நாடுகளிலுள்ள பொருள்களை எல்லாம் ஜனநாயகங்கள் பெறக்கூடிய சாதகமிருக்கிறது. பஸிபிக் சமுத்திரத்தில் தாத்காலிகமாக அவைகளின் ஆதிக்கம் பரிக்கப்பட்டாலும் சிறிது காலத்திற்குள் அவைகள் ஆதிக்கத்தைத் திரும்பப்பெறக்கூடும்.

2. ஜெர்மனிக்கு யுத்தப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுள்ள பிராந்தியங்கள் எல்லாம் பிரிடிஷ் விமானப்படை பலத்தினால் வெடிகுண்டு போட்டு தாக்கப்படுகின்றன. ஆனால் அமெரிக்காவிலும், சாம்ராஜ்ய நாடுகளிலும் உள்ள தொழிற்சாலைகளெல்லாம் எதிரி விமானங்கள் தாக்காமல் மறைக்கப் பட்டிருக்கின்றன. ஜனநாயக நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளிற் உற்பத்தி



செய்யும் சக்தியானது ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்படும் சக்தியைக் காட்டிலும் பன் மடங்கு அதிகம்.

3. யுத்தத்திற்காக செய்யப்படும் கைத்தொழில்களில் ஜெர்மனி அதன் உன்னத நிலையை அடைந்துவிட்டது. ஆனால் நேசதேசத்தார்களோ இப்பொழுதுதான் கைத்தொழில் ஆரம்பித்திருக்கிறார்கள். யுத்த ஆரம்பத்தில் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருந்த சாதகம் நாளுக்கு நாள் குறைந்துவருகிறது. இந்த யுத்தத்தில் நேசதேசத்தார்கள் தொஞ்சு கொடுத்து சமாளித்து வருவதாக இருந்தால் நேசதேசத்தார்களுக்கு முன் ஜெர்மானியர்கள் வெகுகாலம் சமாளித்து இருக்க முடியாது.

4. ஜெர்மனி இந்த யுத்தத்தில் ஜயமடைய வேண்டுமானால் ஏற்கனவே இந்த யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்திருக்கவேண்டும். அட்லாண்டிக் சமுத்திரத்தில் நடந்த போரிலாவது கிழக்கு படையெடுப்பிலாவது ஜெர்மனி தீர்மானமாக வெற்றி அடையமுடியாது. ஆனால் இப்பொழுது ஜெர்மனியும் யுத்தத்தை நீடித்து நடத்தும்படி நிர்ப்பந்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது அமெரிக்கா தன்னுடைய டாங்கிகளையும், விமானங்களையும், யுத்ததளவாடங்களையும் படைகளையும் ஐரோப்பாவுக்குக் கொண்டு வருகிறபடியால் ஐரோப்பா கண்டத்தில் தரைமார்க்கமாயும், ஆகாய மார்க்கமாயும் தாக்குதல் ஏற்படக்கூடியதற்கு ஜெர்மனி பயமடைந்திருக்கவேண்டும்.

கிழக்குப் பக்கத்தில் ஜெர்மனி ஜயம் பெற்றும்கூட இந்த யுத்தத்தில் அதற்கு ஏற்படும் தோல்வியைத் தடுக்கமுடியாது.

5. கடுமையான ஆகாயவிமான வெடிகுண்டு தாக்குதல்கள் ஜெர்மனியின் பேரில் துவக்கப்படுகின்றன. அவைகளினால் ஜெர்மன் பொதுமக்களின் உணர்ச்சி குன்றிவிடும். அதன் கைத்தொழில்களும், தொழிற்சாலைகளும், கப்பல் கட்டும் இடங்களும், சதாகாலமும் வெடிகுண்டுகள் வீசப்பட்டுப் பொடி பொடியாக்கப்படும்.

6. முடிவாக ஜனங்களின் மனப்பான்மையில் பயன் எப்படியுள்ளது என்பதையும் கணக்கிடவேண்டும். ஜெர்மன் ஆதிக்கத்திற்கு அடிமையாக்கப்பட்ட ஐரோப்பிய தேசத்தார்கள் எல்லோரும் ஜெர்மனிக்கு எதிரிகளாக இருந்து கொண்டு சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இழந்த ஸ்வதந்திரத்தைத் திரும்பப் பெறுவதற்காக சண்டை செய்யத் தயாராக இருக்கிறார்கள். நேசதேசத்தார்கள் ஐரோப்பா கண்டத்தில் இறங்கினால் இவர்கள் கலகம் செய்வார்கள். இப்பொழுது ஐரோப்பாவின் நிலைமை ஜெர்மனிக்கு பலஹீனமாக இருக்கிறது. ஜனநாயகக் கக்ஷிக்கு பலம் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. இது காரணத்தினால்தான் யுத்தம் நீடித்து நடப்பதில் ஜனநாயகங்கள் வெற்றிகிடைக்கும் என்று நம்பியிருக்கின்றன. நாட்கள் ஆகஆக யுத்தத்தில் அதிர்ஷ்டம் அவர்கள் பக்கம் திரும்பும். இது காரணத்தினால்தான் இந்தப் போர்முனைகளில் அவர்களுக்கு ஏற்பட்ட தோல்விகளைப் பொருட்படுத்தாமல் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நேரிட்டிருக்கும் கஷ்டங்களையும் நிச்சிந்தையாகப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 97—(4-வது பிரிவு).

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| மே | ...30, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை 6.30 |
| | 31, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி | ... | ,, 6.00 |
| | | ஆலூர் | ... | ,, 6.30 |
| ஜூன் | ... 1, திங்கட்கிழமை ... | காரையூர் | ... | ,, 6.00 |
| | | இடையாத்தூர் | ... | ,, 6.30 |
| | 2, செவ்வாய்க்கிழமை | அண்டக்குளம் | ... | ,, 6.00 |
| | | கிள்ளனூர் | ... | ,, 6.30 |
| | 3, புதன்கிழமை ... | ரேகுனார் | ... | ,, 6.00 |
| | | காஞ்சூர் | ... | ,, 6.30 |
| | 4, வியாழக்கிழமை ... | வடவாளம் | ... | ,, 6.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... | ,, 6.30 |
| | 5, வெள்ளிக்கிழமை... | நார்த்தாமலை | ... | ,, 6.00 |
| | | உப்பிலியக்குடி | ... | ,, 6.30 |

### பிரஸங்கம் 98—(5-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| | 6, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை 6.30 |
| | 7, ஞாயிற்றுக்கிழமை, | திருவரங்குளம் | ... | ,, 6.00 |
| | | வம்பன் | ... | ,, 6.30 |
| | 8, திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி | ... | ,, 6.00 |
| | | தொலையானூர் | ... | ,, 6.30 |
| | 9, செவ்வாய்க்கிழமை, | குளவாய்ப்பட்டி | ... | ,, 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, 6.30 |
| | 10, புதன்கிழமை ... | வெள்ளனூர் | ... | ,, 6.00 |
| | | செம்பாட்டூர் | ... | ,, 6.30 |
| | 11, வியாழக்கிழமை ... | புலியூர் | ... | ,, 6.00 |
| | | கண்ணங்குடி | ... | ,, 6.30 |
| | 12, வெள்ளிக்கிழமை... | பள்ளிவாசல், | ... | ,, 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—1-6-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஞு ஜூன் மீ 6உ [ந. 98

பிரஸங்கம் XCVIII.

## ஹிட்லரின் துக்காந்திக நாடகம்.

(ஜேம்ஸ் லாங்டேல் ஹாட்க்ஸன் பி. பி. ஸி. யில் பேசியது).

இவ்வாரத்தில் பிரிடனில் முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்த யுத்தமாகிற நாடகத்தின் மூன்றாவது அங்கம் ஆரம்பமாகியிருக்கிறதென்றே சொல்லலாம். இந்நாடகத்திற்கு முக்கிய ஆசிரியர் மிஸ்டர் ஹிட்லர்தான். இதற்கு மற்றுமொரு அங்கம் இருக்கிறதாவென்பதைத் தற்போது சொல்ல இயலாது. இந்த மூன்றாவது அங்கத்தின் முடிவிலேயே கதையே முடிந்தாலும் முடியலாம். சுருக்கமாக அதன் அமைப்பைக் கவனிப்போம்.

### ஹிட்லர் சொன்னது என்ன.

இந்நாடகத்தின் ஆசிரியரான மிஸ்டர் ஹிட்லர் இன்னும் இந்த யுத்தம் நீடித்திருக்குமென்கிறார். தனக்கு உதவியாக இருக்கிறவர்களையும், அப்படியிருந்தும் நிலைமை சரியாக இல்லாதவர்களையும் பார்த்து இன்னுமொரு மாரிகாலம்வரை சண்டை நீடித்திருக்குமென்றும், இன்னும் இந்த யுத்தத் தொந்தரவு அதிகம் ஏற்படுமென்றும் சொல்லி வருகிறான். அவனுடைய பயமுறுத்தல்களும் பேச்சும் நமக்குத் தெரிந்ததுதான். நாம் அவைகளுக்குப் பழக்கமடைந்திருக்கிறோம். நமக்கு அவை ஆச்சரியத்தையே விளைவிக்கா. அவனுடைய ஆள் ஒருவன் பிப்ரவரி மாதத்தில் பேசும்போது பிரிடனைத் தாக்குவதால் பிரயோஜனமில்லை; அவ்விஷயத்தில் அதிக குண்டுகளை செலவழிக்கமாட்டோமென்றான். மேலும் ஜெர்மன் நகரங்களைப் பிரிடிஷார் தாக்கினாலும் பிரிடன்பேரில் ஜெர்மனி குண்டு வீசாது என்றும் சொன்னான். இது மூன்று மாதங்களுக்கு முன்பு ஆனால் தற்சமயத்தில் பிரிடனிலுள்ள பெரிய கட்டடங்களின் ஸன்னிவேசத்தைக் குறிக்கச்சொல்லியிருக்கிறான். பாம்பர்களை அனுப்பி அவைகளைத் தாக்குவதே தான் நோக்கம்.

### ஹிட்லர் செய்தது என்ன.

ஹிட்லரின் பொதுவான கொள்கைகளைப்பற்றி நமக்கெல்லோருக்கும் தெரிந்ததுதான். அதாவது ஒரு கோவிலையோ, அழகிய கட்டடத்தையோ, ஆஸ்பத்திரியையோ இடித்துத் தள்ளினால் ஒரு சாதகமேற்படுமென்று நினைத்தால் அவ்விதம் செய்யத் தயங்கவேமாட்டான். இத்தகைய நாஸிக் கொள்கை எவ்வளவோ நாட்களுக்கு முன்பு நமக்குத் தெரியுமாதலால் சமீபத்தில் பாத் நகரத்தைத் தாக்கிய போது நாம் ஆச்சரியப்படவில்லை. இதைத்தான் லாண்டார்

கவி கரிந்து (Corinth) நகருக்கு சமமாகச் சொல்லியுள்ளார். யார்க், நார்விச் போன்ற நகரங்களையும் தாக்கியுள்ளான். லூபெக், ராஸ்டக் முதலிய நகரங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கியதால் பதிலுக்கு பதிலாக இந்நகரங்கள் தாக்கப்பட்டிருப்பதாகவும் எதிரி சொல்லிக்கொள்ளுகிறான். மனிதர்கள் காட்டுமிராண்டித் தனத்திலிருந்து மாறி நாகரீகமடைந்திருக்குமின்னாளில் பாத் நகரிலுள்ள கோவிலையோ, இன்னும் இதர ஞாபகச் சின்னங்களையோ அழித்து வருவதில் ஒரு குற்றமும் இல்லையாம். ஆனால் ஜெர்மன் ஹீன்கல் விமானத் தொழிற்சாலையையோ, மியூனிச்சிற்கு அருகில் நீர்மூழ்கிகள் கட்டப்படும் ஆக்ஸ்பர்க் நகரையோ நாம் தாக்கக் கூடாதாம்.

## பிரிடன் பொருத்துக்கொள்ளும்.

ஆகவே மற்ற விஷயங்களைப் பற்றி அவன் தப்பான அபிப்பிராயம் கொடுப்பது போல இவ்விஷயத்திலும் அவன் சொல்லுவது சரியல்ல. பாத், யார்க், நார்விச் முதலிய நகரங்கள் பாழாவதை நாம் விரும்பமுடியாது. காமன்ஸ் சபை, வெஸ்டுமினிஸ்ட்டர் அபி, பக்கிங்ஹாம் அரண்மனை முதலியவைகள் அழிவதோ, தொழிலாளர் அதிகம் வசிக்கும் லண்டன் நகரின் கிழக்கு பாகம் கெட்டுப் போவதோ நமக்குத் திருப்தியைக் கொடுக்கா. இவ்விதம் காட்டுமிராண்டிகள்தான் செய்து வருவார்கள். ஹிட்லர்தான் இந்தச் செய்கைகளை மிக மிக நேர்த்தியாகச் செய்துவருகிறான். 1940-ம் வருஷம் மாரிகாலத்தில் ஜெர்மன் விமானங்கள் 20,50,80 கணக்கில் வந்து இங்கிலாந்தில் குண்டுகளை வீசியபோது நமக்கு அவைகளைப்பற்றிய அனுபவங்கள் கிடைத்தன. ஒரு சமயத்தில் லண்டனில் ஏராள நெருப்புகள் எரிந்து கொண்டேயிருந்தன. அப்போதெல்லாம் நாம் சமாளித்துத்தான் வந்தோம். கஷ்டங்களையெல்லாம் சிரமத்துடனேதான் பொருத்துக்கொண்டோம். ஆகவே எதிரிகளின் எண்ணம் பலிக்காதுபோயிற்று. வாடகை மோட்டார்கள் போய்க்கொண்டு தானிருந்தது. தாமதித்து வெடிக்கும் குண்டுகள் ஆங்காங்கு சப்தித்துக்கொண்டிருக்கும். குண்டுகள் விழுந்த ஆஸ்பத்திரிகளிலிருந்து குழந்தைகளை நர்ஸ்கள் தூக்கிக் கொண்டு சென்றார்கள். "உங்களுக்கு வெளிச்சத்தைக் காண்பிக்கிறோமென்றும் சொல்லுவார்கள்." வெஸ்டு எண்டு தெருவு பாதி எரிந்து பாழான போதிலும், அங்குள்ளவர்கள் இன்னும் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் வேறு இடங்களுக்குச் செல்லுவோமென்பார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் இறக்கும் போதும் அங்குள்ளவர்களுக்கு இவ்வித உணர்ச்சியிருந்தது. பொதுமக்கள் ஆடையை சிப்பாய்கள் அணிந்து கொள்ளுவார்கள். இதையெல்லாம் பார்த்துவிட்டு எதிரி படையெடுப்பு செய்வதை நிறுத்தி விட்டான். ஏதோ தயவு வந்து நிறுத்தவில்லை. தனது லக்ஷியம் கைகூடாததாலேயேதான் மீண்டும் படையெடுப்புச் செய்யவில்லை. மேலும் ருஷ்யர்களுடன் சண்டை செய்யவேண்டியும் எதிரிக்கு நிர்ப்பந்தம் வந்தது. தற்சமயத்தில் மறுபடியும் 11 மாதம் கிரமித்து மறுபடியும் ஆரம்பித்திருக்கின்றான்.

தற்சமயத்தில் லண்டனிலிருப்போரும் 18-மாதங்களுக்கு முன்பு நடந்து கொண்ட மாதிரியே இருந்து வருகின்றனர்.. அழகிய பாத் நகரம் முன்போலக் காணப்படவில்லை. இரண்டு ஜார்ஜ் பிறைச்சந்திர வட்டங்கள் காணப்படவில்லை. சரிகைமாலை சாக்கடையில் கிடப்பது மாதிரி அந்நகரம் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. குண்டுகள் விழுந்ததற்கு அடுத்த நாளே முடக்கு வியாதியுள்ள 25 ஸ்திரீகளும், பெண்களும் தண்ணீர் அறைக்கு வந்து தண்ணீர் குடிக்க வந்தனர். அங்கிருக்கும் பூந்தோட்டத்தில் படுத்திருந்தவர்கள் படுக்கைத் துணிகளைக் கூடாரங்களாகச் செய்துகொண்டனர். கட்டடங்களின் அழகிய மாடிப்படிகள் சில இடங்களில் இடிந்து போயின. "ரோம பாத நகரிலுள் போகும்வழி" என்று எழுதப் பட்டிருந்த இடத்தில் தற்சமயம் 'நீங்கள் இங்கே தங்கியிருக்கலாம், சூடான சாப்பாடு ஒரு ஷில்லிங்' என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஸன்னிவேசம் மாறியிருக்கிறதே தவிர அமைதி குறையவில்லை.

லண்டன், கவன்டிரி, ஷெப்பீல்டு, நார்விச், யார்க், முதலிய எல்லா பட்டணங்களிலும் ஜனங்களுக்கு தைரியம் ஒரே மாதிரியாக இருக்கிறது. நார்விச்சிலிருந்து வெளியே சென்ற வயது சென்றவர்களெல்லாம் மறுபடி திரும்பி வருவோமென்று



சொன்னார்கள். அங்கே அச்சிடப்படும் காலைப்பத்திரிகைகளில் 'காட்டுமிராண்டிகளைப் போல் நாமும் நடந்துகொண்டு பிரதி செய்யமுடியாது. நார்விச்சிலுள்ள மாதாகோவிலை எதிரி நாசப் படுத்தியதற்காக கோலோன் வாசிகளைத் தாக்குவது தர்மமாகாது' என்று அச்சிடப்பட்டிருந்தது. இதுவே இங்கிலீஷ்காரரின் மனப்பான்மையாகும். மேலும் அப்பத்திரிகை கூறுவதென்னவென்றால் இம்மாதிரி எதிரி செய்யும் கொடிய செய்கைகளைப் பார்த்துவிட்டு அவனைக் கூடிய சிக்கிரம் ஒழிக்கவேண்டுமென்பதாம். ஹிட்லரின் நடத்தையைப்பற்றி மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை அபிப்பிராயம் சொல்லும் போது 'உருக்கமும், பிரியமும் ராணுவத்திலுள்ளோரின் மனதிற்குப் படா' என்று சொல்லப்பட்டிருந்தது. ஜெர்மன் தொழிற்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்தளங்கள் முதலியவைகளைத் தாக்குவதென்பதை நாம் வெகு நாளாகக் கையாண்டுவருகிறோம். நமது கட்டடங்களைத் தாக்கியதாலும், ஹிட்லர் ஏதோ உளரினாலும் நாம் கொஞ்சமும் பின்வாங்கமாட்டோம். இப்போதுதான் நம்முடைய தாக்குதலின் தன்மையை எதிரி நாட்டிலுள்ளோர் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

## 'ஒன்றையும் அலக்ஷியம் செய்யாதே'.

ஆலிவர் கிராம்வெல் என்பவர் 'ஒன்றையும் அலக்ஷியம் செய்யாதே' என்று சொல்லுவார். அதை நாங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறோம். முன்பு லண்டன்மேல் குண்டுகள் விழுந்தபோதுள்ள நிலைமை தற்போது இல்லை. நமது விமானங்களும், குண்டுகளும் முன்னைவிட அதிகமாக பலம் பெற்றிருக்கின்றன. ருஷ்யப் போர் முனைக்கு எதிரி சாமான் ஸப்ளைகளைப் பெரும் துறைமுகப் பட்டணமான லூபெக்கை நாம் தாக்கியதுபோல் இங்கிலாந்தில் ஒரு நகரம் கூட தாக்கப்படவில்லை. ஸ்டர்லிங், லங்காஸ்டர், மான்செஸ்ட்டர், ஹாலிபாக்ஸ் முதலிய விமானங்கள் மிகப் பெரியவை. ஜெர்மனி ஏற்றிவந்த பளுவைக் காட்டிலும் அதிக பாரம் ஏற்றிச்செல்லவும் முடியும். ஜெர்மன் ஹீன்கல் விமானங்கள் ஏற்றிவந்ததைக் காட்டிலும் இரண்டு மூன்று மடங்கு அதிகமான குண்டுகளை ஒவ்வொரு விமானமும் ஏற்றிக்கொண்டு செல்லும். ஜெர்மனி இன்னும் அதிகப் பெரிய விமானங்களைக் கட்டி வருவது உண்மையாக இருக்கலாம். அதைத் தடுக்கவே ராஸ்டக் நகரம் தாக்கப்பட்டது. ஒரு வாரத்தில் நான்கு தடவை தாக்கப்பட்டது. ஏப்ரல்மீ 23உ லிருந்து 29உ வரைக்கும் பிரிடனில் விழுந்த ஒரு டன் குண்டுக்கு ஆறு டன் குண்டு வீதம் ஜெர்மனியில் போடப்பட்டிருக்கிறது. இதைக் கண்டுதான் ஹிட்லர் கத்துகிறான். தான் செய்ததற்குத் தகுந்த விதமாகவே எதிரி அநுபவித்து வருகிறான். நம்மால், செய்யப்படும் படையெடுப்புகள் கொஞ்சமும் குறையா.

## மூன்றுவது அங்கம்.

நம்முடைய தாக்குதலைக் கண்டு எதிரி கலங்கிப் போயிருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. ருஷ்யாவை ஒரு விதமாக முடிக்கும் வரை அங்கேயேதான் இருக்கப் போவதாக ஹிட்லர் சொன்னது யாவருக்கும் ஞாபகமிருக்கலாம். மேலும் யாவரையும் தண்டிப்பதற்கான அதிகாரம் தனக்கு இருப்பதாகவும் சொல்லிக் கொண்டான். இந்த அதிகாரம் எப்போதும்தான் அவனுக்கு இருக்கிறது. புதிதாகக் கேட்பதின் தாத்பர்யம் என்னமோ இதெல்லாம் தான் அவன் கொண்டு வரப்போகும் சமாதானம். அவன் செய்யும் குற்றங்களைப்பற்றி யாருக்குத் தான்தெரியாது. ஜெர்மனி பேரில் குண்டுகள் விழாது என்று அவன் சொன்னதற்கு மாறாக பிரமாதமாக குண்டுகள் விழுந்து கொண்டிருக்கின்றன. உதவிப் படைகள் வேண்டுமென்று முஸோலினிக்குச் சொல்லியனுப்புகிறான். அப்படி அதற்கு இணங்கிவரும் இதாலியப் படைகள் லிபியாவில் சண்டை செய்யும் போது ஜெர்மானியர் பேரில் உள்ள வெறுப்பைத் தெரியப்படுத்துகின்றன. ஆகவே ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் பரஸ்பரம் ஒரு அமைதியும் ஏற்படவில்லை. ஜெர்மன் ரகசியப் போலீஸார் வியாபித்துக்கொண்ட இதாலிக்கு முஸோலினி பேருக்கு தலைவனாக இருக்கிறான்.

இவ்விதம் ஆரம்பமான மூன்றுவது வருஷ யுத்தத்தைப்பற்றி ஹிட்லருக்கு திருப்தி ஏற்பட்டிருக்க முடியாது. அவனுடைய சக்திக்கு மீறி விஷயங்கள் நடக்கின்றன. லூபெக், ராஸ்டக், கோலோன், டிராண்ட்ஹீம்,

ஹாம்பர்க், ரூர், கீல் முதலிய பட்டணங்களில் நடந்த பிரிடிஷ் தாக்குதல்கள் அவனுடைய மனதைத் தளரச்செய்கின்றன. இனிமேல் எதிரிக்கு வெற்றி ஆகாசத்திலிருந்து தான் குதிக்கவேண்டும். அதற்குப் பதிலாக நமது குண்டுகள்தான் விழுகின்றன.

### முடிவில் பரதவாக்யத்தை ஹிட்லர் கூற முடியாது.

ஸ்டார்லிங், விட்லி, வெல்லிங்டன், ஹாம்டன், மான்செஸ்டர், போஸ்டன், லங்காஸ்டர் போன்ற விமானங்களைப்பற்றி கவிபாடுவதற்கு கிப்ளிங் போன்ற கவிகள் இருந்தால் நலம். இல்லாவிட்டாலும் பாதகமில்லை. இவ்விமானங்களே இரவில் பல்லாயிரம் மைல் தூரம் கடந்து எதிரி நாட்டில் குண்டுகளைப் போடும் போது ஏற்படும் சப்தமே போதுமானது. "நீங்கள் தான் நாங்கள் உண்டானதற்குக் காரணம். நீங்களே நாங்கள் உண்டான பிரயோஜனத்தையடையுங்கள்" என்று எதிரிகளைப்பார்த்து சொல்லுவதுபோல் இருக்கும். ஹிட்லரின் வீர வார்த்தைகளை இவ்விமானங்களின் சப்தம் அடக்கிவிடும். இந்த யுத்தம் முடிந்ததும் ஹிட்லர் கடைசியாக மிஞ்சியிருந்து சமாதானத்தை வழங்கமுடியாது. நாம் தான் செய்வோம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 30—5—42-லிருந்து 5—6—42-வரை.

லிபியா—யுத்தம் மறுபடியும் ஆரம்பமாகியிருக்கிறது. பல மாதங்களுக்குப் பிறகு இப்போது அங்கே கடும் யுத்தம் நடக்கிறது.

மேமீ 26உ ஜெனரல் ரோமல், அதிக எண்ணிக்கையும், பூர்ண முஸ்திப்பும், பெரும் விமானப் படையும் பிரயோகித்து முன்னேறிப் போர் நடத்துவதாகப் பெருமையாகச் சொல்லிக்கொண்டான். எதிரி வசமிருந்து அடைத்த ரஸ்தா வேஜுகளிலிருந்து டொப்ருக்கைப் பிடிப்பதுதான் லக்ஷியமாகத் தெரிகிறது. ஆனால் முதலில் பிர்ஹகீமைப் பிடிப்பதும், இரண்டாவதாக பிர்ஹகீமை வளைத்துக்கொண்டு, மூன்றாவதாக கஸாலா-கபூஸோ கடற்கரையைப் பிடிப்பதும் எதிரி நோக்கங்களாகத் தெரிகிறது. பிர்ஹகீமைப் பிடிக்க முயன்ற இதாலியப் படை திருப்பி யடிக்கப்பட்டது.

இரண்டாவதான திட்டப்படி பிர்ஹகீமைச் சுற்றிக்கொண்டு மே 26—27 இரவில் எதிரி வந்தும் அக்ரோமா, எல்டூடா, ஸிடிரெஸெக் முதலிய பட்டணங்களை நோக்கிப் போய்விட்டான். சில எதிரி டாங்கிகள் கடற்கரை ரஸ்தாவை யடைந்தன. அங்கேயே இறங்கவும் எதிரி முயன்றான். ஆனால் தரையில் நமது யந்திரப் படைகளாலும், கடலில் நமது கப்பற்படையாலும் துரத்தியடிக்கப் பட்டான்.

மே 27 தனது மூன்றாவது திட்டத்தை பயன்படுத்த நினைத்தான். 28, 29, 30, மூன்று தினங்களிலும் கடும் யுத்தம் வடக்கே அக்ரோமா முதல் தெற்கே பிர்ஹகீம்வரையிலும், கிழக்கே எல்அடம் முதல் மேற்கே பிரிடிஷ் சுரங்க தளங்கள் வரையிலும் உள்ள பிரதேசத்தில் நடந்தது.

ஸப்ளைகளைப் பொராததாலும், நம்மால் துரத்தி யடிக்கப்பட்டும் கபுஸோ ரஸ்தாவிலும் அதற்குத் தெற்கே 10 மைல் தூரத்திலும் பிளந்துகொண்டு ஓடினான். அப்போதும் அவனுக்கு அதிகத் தடையுண்டாக்கப்பட்டது. இருந்தாலும் மே 31உ சில டாங்கிகளையும், ஸப்ளைகளையும் 20 மைல் மேற்கே கொண்டு வந்திருக்கிறான். இன்னும் ஏராள படைகள் பின்னாடியே நின்றுவிட்டன. ஆகவே ஒன்று தப்பி எங்கேயாவது ஓடலாம் அல்லது அப்படியே அழியவேண்டியது தான். மிஸ்டர் சர்ச்சில் சொல்லும் விதமாக சண்டை இன்னும் முடியவில்லை,



'இருந்தாலும் முன்னேறிப் போர் நடத்துவதான ரோமலின் திட்டம் முறிந்தது. எதிரிக்கு ஏராள சாமான்களும் மனிதர்களும் நஷ்டம்' ரோமலின் எண்ணம் நடக்காமல் செய்யப்பட்டது. அவன் நடத்துவதாயிருந்த சண்டையும் தடைபட்டுவிட்டது.

கஸலா அணிவகுப்பு ஓரமான நேசதேச அரங்கப் பிரதேசங்களில் மீண்டும் ரோமல் தாக்கினான். ரோடென்டாஸெகுலியிலிருந்து பிரிடிஷ் படைகள் அவனது ஸப்ளைகளைத் தடுத்து வருகின்றன.

சைனா.—கின்ஹவா (Kinhwa) மே 30உ காலி செய்யப்பட்டது. அன்சிப்பைத் தாக்கி, ஷோசுங், லூங்கியா இரண்டையும் பிடித்திருக்கிறான். பிங்யான்ஷான் (Pingyanshan) என்ற இடத்தில் கடும் சண்டை நடக்கிறது. ஸூசாங், ஷென்க்ஷீன், யூங்கியாங் இவைகளை சீனர்கள் பிடித்து ஹூபே மாகாணத்தில் இசாங்கையும் தாக்கியுள்ளனர். யூனான் மாகாணத்தில் ஸால்வீனை சீனர்கள் கடந்து டெங்சுங், லுங்லிங் இரண்டையும் சூழ்ந்துகொண்டு மிம்சாங்கயல் நகரையும் திரும்பப் பிடித்தனர்.

ஜூன்மீ 1உ சயாங்கெய் ஷெக் ஒலிபரப்பும்போது அமெரிக்காவின் 10 சதவிகிதம் உதவியைக்கொண்டு பூர்ணமாக சீனப்படைகள் சண்டைசெய்யும் என்றார்.

குத்தகைக் கடன் திட்டப்படி சைனாவிற்கு அதிகச் சாமான்களையனுப்ப செவ்வாய்க்கிழமை அமெரிக்காவில் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது. இனிமேல் சைனா அதிகமாகச் சண்டை செய்யமுடியும்.

மிஸ்டர் அட்லி அரசாங்கத்தாரின் சார்பாகப் பேசுகையில் சைனாவிற்கு எல்லாவித உதவியும் கொடுக்கப்படுமென்றார்.

சூஹ்ஸீனும் டச்சுத் துறைமுகமும்.—கின்ஹவாவிற்கு 50 மைல் மேற்கிலுள்ள சூஹ்ஸீனின் விமான தளத்தையும், அலூஷியனில் அமெரிக்க தளமாயிருந்த டச்சுத் துறைமுகத்தையும் ஜப்பானியர் தாக்கினர். ஏழு வாரங்களுக்கு முன் டோகியோவைத் தாக்கியதற்குப் பிரதியாக இருக்கலாம். டோகியோவைத் தாக்கும்போது அமெரிக்க விமானங்கள் இங்கிருந்து பறந்து சூஹ்ஸீனில் இறங்கியிருந்திருக்கலாம்.

தென்மேற்கு பஸிபிக்.—மார்ஸிபியை எதிரி தாக்கினான். இருந்தாலும் ரபால், லே, ஸலா மூவா, ஸாலமன், டில்லி (Dilli), ஹூட்டோ முதலியவைகளை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின, பெரிய ஜப்பானியக் க்ரூயிஸரையும், மற்றும் இரண்டு-கப்பல்களையும் அமெரிக்கர் நீர்மூழ்கிகள் மூழ்கடித்தன; ஸிட்னியில் செய்த அரைகுறைத் தாக்குதலில் எதிரி மூன்று நீர்மூழ்கிகளை இழந்தான். நேசநாடுகளுக்கு நஷ்டம் விசேஷமாக ஒன்றுமில்லை.

ஜூன்மீ 1உ ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி 'அளவு கடந்து ஜப்பான் தெற்கு நோக்கி பாய்ந்திருக்கிறது. முன்னேறித் தாக்கும் போர் அவ்வளவு கடுமையாக செய்யப்படவில்லை. அதன் ஆக்கிரமணமும் நின்றுவிட்டது'.

பர்மா.—வடக்கு, தெற்கு பர்மாவில் பிரிடிஷ் விமானத் தாக்குதல் நேர்ந்தது. ரெங்கூன், மெயிட்கியினா, கலீவா அக்யாப் முக்கியமாய்த் தாக்கப்பட்டன.

இந்தியா.—மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர் இந்தியாமீது ஏற்படக்கூடிய படையெடுப்பைப் பற்றி ஜூன்மீ 1உ பேசுகையில் பின் கண்ட விதமாகச் சொன்னார்:—'ஆறு வாரங்களுக்கு முன் ஆபத்து உண்மையிலிருந்ததுதான். ஆனால் நாம் எதிர்பார்த்தபடி ஜப்பானியர் தாக்கவில்லை. அப்பவும், வடஇந்தியாவையா, தென்னிந்தியாவையா, ஸிலோனையா தாக்குவார்களென்று சொல்ல முடியவில்லை.- தற்சமயத்தில் பாது காப்பு முறைகள் எங்கும் பலமாக இருக்கின்றன. விமானங்களும் தளவாடங்களும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இந்திய கப்பற்படை பலப்படுத்தப்பட்டிருக்கிறது. கடற்கரை நகரங்களின்மீது எதிரி விமானத் தாக்குதல் நேரக்கூடிய ஆபத்துமிருந்தது. ஆகவே ஜனங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.'

**ருஷ்யா.**—இரியம் (Irium)ஐச் சுற்றி சண்டை வலுத்திருக்கிறது. கார்கவ்விற்கு அருகில் ஜெர்மன் முன்னேற்றம் பலிக்கவில்லை. மேமீ 29உ டானெட்ஸ் நதியைக் கடக்கச் செய்த எதிரி முயற்சி பலிக்கவில்லை. கார்கவ்விற்கு அருகில் மூன்று ருஷ்யப் படைகளைச் சூழ்ந்துகொண்டதாகக் கூறும் ஜெர்மன் செய்தி பொய்யானது. 2,000 மைல் போர் முனையில் இன்னும் டிமோஷென்கோ முன்னேற்றப் போர் நடத்தும் நிலையிலிருக்கிறார்.

**பெரும்வகை தாக்குதல்கள்.**—கோலோன், எஸ்ஸன், மேமீ 28உ கிழக்கு பிரஷ்யாவிலும், மேமீ 29உ ரோம்—ரோன் தொழிற்சாலைமீதும், டச்சுக் கடற்கரைக்கு அருகில் ஒரு எதிரித் துணைக்கப்பல் கூட்டமும், வட பிரான்ஸும், தாக்கப்பட்டன. 30உ 1,000 பிரிடிஷ் விமானங்கள் 1½ மணி நேசகாலம் கோலோன் நகரின்மீது பெரும்வகைத் தாக்குதலைச் செய்தன. 3,000 டன் குண்டுகள் போடப்பட்டன. 20,000 பேர் இறந்தனர், 54,000 பேர் காயம் அடைந்தனர். ஜூன்மீ 1உ எஸ்ஸன்மீது 1,036 பிரிடிஷ் விமானங்கள் தாக்கின ஏராள நஷ்டம் விமான நிபுணர்களின் அபிப்பிராயப்படி 'இத்தாக்குதல்கள் அடுத்துவரும் மாதங்களில் யுத்தத்தில் பெரும் மாறுதலைச் செய்யும்'.

ஒவ்வொரு நகரமும் இம்மாதிரி தாக்கப்படுமென்ற சர்ச்சிலின் உறுதிமொழியின்படி இம்மாதிரி செய்யப்பட்டது. விமான மந்திரி ஸர் ஆர்ச்பால்டு ஸின்கிளேர் அபிப்பிராயப்படி "இன்னும் தாக்குதல்கள் பிரமாதமாக இருக்கும்." மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபை முன்பாக ஜூன் 2உ பின்கண்ட விதமாகச் சொல்லியிருக்கிறார்.

"இதேவிதமாக இனி செய்யப்படும் தாக்குதல்களும் இருக்குமென்று சொல்ல முடியாது. சமயத்திற்கேற்றவாறு தந்திரங்கள் மாற்றப்படும்.

"மேலும், இந்த தாக்குதல்கள் பிரிடிஷ் முன்னேற்றப்போரின் தன்மையைத் தெரியப்படுத்துகின்றன. அமெரிக்க விமானப்படை நம்முடன் சேர்ந்துகொண்டதும் இன்னும் அதிகமாகவே தாக்குதல் செய்யப்படும்.

"உண்மையில் இவ்வருஷத்தில் ஜெர்மன் நகரங்களும் துறைமுகங்களும், யுத்த தளவாட தொழிற்சாலைகளும் தாங்கமுடியாத விதமாகத் தாக்கப்படும்."

இவை வீண் வார்த்தைகளல்ல. சனிக்கிழமை கோலோனில் கிளம்பிய தீ திங்கள்வரை எரிந்துகொண்டிருந்தது. விமானப் படையெடுப்புப் பாதுகாப்பு கோஷ்டியை நாஸிகள் ஆரம்பித்திருக்கின்றனர் பயந்தாங்குளித் தனமாக காண்டர்பரி நகரின் மீது நாஸித் தாக்குதலும் செய்யப்பட்டது. அங்கே காட்டுமிராண்டித்தனமானத் தாக்குதல் ஏற்பட்டும் சேதம் குறைவுதான்.

**கிரீஸ்.**—நாஸிக் கொள்ளையின் பயனாக பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்கரின் ரகசிய விபரங்களின் படி ஏராளப்பேர் இருக்கின்றனர். ஏதென்ஸிலும் பிரசூஸிலும் 1,000 பேர் தினம் இறந்தனர். பால் முதலிய தினசரி சாமான்களெல்லாம் ஜெர்மனிக்கு ஏற்றப்படுகின்றன.

**பல்கேரியா-ஹங்கேரி-ருமேனியா.**—இவைகள் மீது சண்டை தொடரவேண்டுமென்று ஜனாதிபதி ருஸ்வெல்டு சொல்லியுள்ளார்.

"இந்நாடுகளின் அரசாங்கங்கள் அமெரிக்காமீது சண்டை தொடுத்திருக்கின்றன. இவையாவும் தாங்களாகச் செய்யவில்லை, ஹிட்லரின் தூண்டுதலின் பேரில் தான் செய்திருக்கின்றன.

"நேசநாட்டு திட்டங்களுக்கு விரோதமாக இவைகள் ராணுவ நடமாட்டங்களும் செய்து வருகின்றன," என்றார்.

**கப்பல்.**—மே 25உ முதல் 30உ வரை நூற்றுக் கணக்கான அச்சு நாட்டு விமானங்களால் தாக்கப்பட்ட பிரிடிஷ் துணைக்கப்பல் கூட்டம் ஒன்று பத்திரமாக வடக்கு ருஷ்யத் துறைமுகத்தையடைந்தது. இதில் 18 கப்பல்களை மூழ்கடித்ததாகச் சொல்லும் அச்சுநாட்டுச் செய்தி முழுப் பொய்யானது.

**பலிவாங்கப் பட்டவை.**—ஆக்கிரமித்த நாடுகளில் ஜெர்மன் ரகசியப் போலீஸ் தலைவருயிருந்த ஹிட்ரிச் இறந்தான்.



## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 25—5—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்லீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—டிமிமி (Tmimi). | | | |
| | போக்குவரத்து வண்டிகள்.—மாரா (Marau) பிரதேசத்தில். | | | |
| | விரோதி விமானமிறங்குமிடங்கள்.—மார்டுபா (Martuba). | | | |
| | மோட்டார் போக்குவரத்து.—டெர்னு (Derna)வுக்கும், பாம்பா (Bomba)வுக்கும் இடையேயுள்ள ரஸ்தாவில். | | | |
| | **ஸிஸிலி (Sicily)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமானமிறங்குமிடம்.—மெஸீனு (Messina). | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போராங்கம் முழுவதிலும். | | 8 விமானங்கள். | 11 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | வெங்கானு (Venkanau) விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—ராபால் (Rabaul). | | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—நியூகினி (Newguinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—லே (Lae). | | 1 விமானம். | 2 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | படகுகள்.—சிண்டுவின் (Chindwin) நதியில். | | | |
| 26—5—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்லீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | வெடிகண்ணி ஒதுக்கும் கப்பல் தீப்பற்றியது. | 1 விமானம். | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—டிமிமி (Tmimi). | | | |
| | விமானமிறங்கும் இடம்.—மார்டுபா (Martuba). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 26—5—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும். | | 23 விமானங்கள். | 82 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானப்போர்.—நியூகினி (New Guinea)யில். | | 1 விமானம். | 3 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | ஸ்பீனா, போக்குவரத்து ஸ்தலங்கள்.—பர்மா-யூனன் (Burma-Yunnan) எல்லைப்புறம் எங்கும். | | | |
| 27—5—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—வெடிகண்ணிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி யந்திர சாதனப்படைகள்.—பிர்ஹாக்ஹீம் (Birhakheim) எலாடம் (El adem) பிரதேசங்களில். | | | |
| | விமான நிலயம்.—டிமிமி (Tmimi). | | | |
| | விமானச் சண்டைகள்.—ஸிரெனிகா (Cyrenaica). | | | |
| | **ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மெஸீனா (Messina) கடேனியா (Catania). | | | |
| | துறைமுகம்.—அகஸ்டா (Augusta). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 13 விமானங்கள். | 60 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள், கட்டடங்கள்.—லே (Lae). | | | |
| | வேவு பார்த்தல்.-ஸலாமா (Salamaua). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பற்சரக்கு இறக்குமிடங்கள்.-கெலிவா (Kalewa)வுக்கு வடக்கே சின்டுவின் (Chindwin) நதியில். | | | |
| | பண்டசாலைகள்.-தாங்கட் (Thaungeut). | | நஷ்டமில்லை. | |
| 28—5—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி விமான தளங்கள் ரயில்வே லக்ஷியங்கள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | விரோதி துணைக்கப்பற்படை.—டச்சுக் (Dutch) கடற்கரைக்கருகாமையில். | 4 கப்பல்கள் தாக்குண்டன. | 1 விமானம். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 28—5—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரேனிகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | விரோதிக்கு சொந்தமான டாங்கிகள், மோட்டார் போக்குவரத்து.—பர்ஹாக்ஹீம் (Birhakheim), ஆக்ரோமா (Acroma) இவைகளுக்கிடையேயுள்ள ரஸ்தாவில். | அநேக டாங்கிகள், வண்டிகள் சேதமாயின. | | |
| | விரோதி விமானங்கள் இறங்குமிடங்கள்.—மார்டுபா (Martuba). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான வண்டிகள்.—பெங்காஸி (Benghazi)க்கும் ஜெடபாயா (Jedabaya)வுக்கும் இடையேயுள்ள ரஸ்தாவில். | 3 விமானிகள் காப்பாற்றப் பட்டார்கள். | 5 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—தரையிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 21 விமானங்கள். | 53 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க; பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், விமான நிலயம்.—ரபால் (Rabaul). | | | |
| 29—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France), | | | |
| | நோம்-ரோம் (Gnome-Rhome) விமான யந்திர தொழிற்சாலை, குட்ரிச் Goodrich) தொழிற்சாலைகள், இன்னும் மற்ற தொழிற்சாலைகள்.—ஜெனிவிலியேர்ஸ் (Gennie villers) (பாரிஸுக்கருகாமையில்). | | | |
| | கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg), டீயப் (Dieppe). | | | |
| | வெடிகண்ணி போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | ரயில்வே போக்குவரத்துகள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | விரோதிக்குச் சொந்தமான துணைக் கப்பற் கூட்டம்.—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கருகாமையில். | | 13 விமானங்கள். | |
| | மற்றொரு துணைக்கப்பற் கூட்டம்.—டச்சுக் (Dutch) கடற்கரைக்கருகாமையில். | 6 கப்பல்கள் தாக்குண்டன. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—5—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—டிமிமி (Tmimi). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi), டெர்ணா (Derna). | | | |
| | விமானமிறங்கும் இடம்.—டெர்ணா (Derna). | | | |
| | விமான எதிர்ப்புகள்.— முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | யந்திர வண்டிகள், டாங்கிகள், மோட்டார் லாரிகள்.—பிர்ஹாக்ஹீம் (Birhak-heim). | 3 விமானிகள் உயிர் தப்பினர். | 14 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 25 விமானங்கள். | 143 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). ஸாலமன் (Solomon) தீவுகள். | | | |
| | கடல் விமானதளம்.—டுளகி (Tulaki). | | | |
| | விமான எதிர்ப்பு பீரங்கள், ஏற்றுமதி, இறக்குமதி துறைகள்.— டானம்போகா (Tanamboga). | | | |
| | டிமோர் (Timior) (Dutch)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—டில்லி (Dilli). | | | |
| | நியூ பிரிடன் (New Britain)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், துறைமுகம்.—ராபால் (Rabaul). | | | |
| 30—5—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்—ராணுவ கட்டடங்கள், தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr), ரைன்லாந்து கொலோன் (Cologne).—(1,000 நேசதேச விமானங்களால்) விமான நிலயங்கள், தரையிலுள்ள விமானங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசங்களில். | பெருத்த சேதம் விளைவிக்கப் பட்டது. | 44 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica)வின் முன் அணிப் பிரதேசங்களில். | | | |
| | விரோதி விமானமிறங்குமிடங்கள்.—மார்டுபா (Martuba). | | | |
| | ராணுவ கட்டடங்கள்.-டிமிமி (Tmimi) பிரதேசத்தில். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போரரங்கம் முழுவதிலும். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 30—5—42. (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு-டிமோர் (Timor-Dutch)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.-கோபாங் (Koepang). | | | |
| | துறைமுகம் பிரதேசம்.—டில்லி (Dilli). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானம் பறப்பதற்கான இடம்.—லே (Lae)ல் கப்பல் துறை பிரதேசத்தில். | தீக்கள் கிளம்பின. | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய படகுகள்.—மாயூ (Mayu) நதியில். | | | |
| 31—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel) வேவு பார்த்தல். | | | |
| | இரவில்.—விமான நிலயங்கள், தரையிலுள்ள விமானங்கள், விமானம் பறப்பதற்கான இடங்கள், இருப்புப் பாதைகள், சாமான் ரயில் வண்டிகள். ஆக்கிரமித்த நாடுகளில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனைகா (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில். | | 4 விமானங்கள்; 3 விமானங்கள் சேதமாயின. | |
| | வழிதப்பிய விமானங்கள்.—டெர்ணா (Derna) பிரதேசத்தில். | | | |
| | விமான நிலயங்கள்.—டிமிமி (Tmimi) மார்டுபா (Martuba). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போரரங்கம் முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | கப்பல் துறைகள், கப்பல்கள்.-ரெங்கூன் (Rangoon). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல் துறைப்பிரதேசம்.—ராபால் (Rabaul). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.—விமானம் பறப்பதற்கான இடங்கள்—லே (Lae) ஸாலாமா (Salamaua). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 26—5—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம் இங்கிலாந்தின் (England) தென்மேற்குக் கடற்கரை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 27—5—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | இரவில்.—ஒரு இடம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglian). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமாங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்திற்கருகாமையில். | | 1 விமானம். | |
| 28—5—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்—ஸிரெனிகா (Cyrenaica). | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 1 விமானம். | 7 விமானங்கள். |
| 29—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கடற்கரைப் பிரதேசங்கள் கிழக்கு, தென்கிழக்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதமட்டில். | 4 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள், ஸப்ளை போக்குவரத்துகள்.-ஸிரெனிகா (Cyrenaica). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி—(Moresby) துறைமுகம். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 30—5—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England) வடகிழக்குக் கரை. | | 7 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி—(Moresby) துறைமுகம் | | 5 விமானங்கள். | |
| 31—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும்—நடந்த விமான படையெடுப்புகளுக்கு தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.-மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 1—6—42. (திங்கட்கிழமை) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.-ஒரு இடம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), தென்கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸிரெனிகா (Cyrenaica). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby)—துறைமுகம். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**அழிக்கப்பட்ட விவரங்கள்.** 'கிடைக்கும் செய்திகள் ஏமாற்றத்தைத் தருகின்றன. அவைகளைப் பொது ஜனங்கள் தெரிந்து கொள்ளுவதால் பிரயோஜனமே இல்லை' என்று கோயபெல்ஸ் 1941, டிஸம்பர் 1உ பெர்லின் மாணவர்களுக்கு எடுத்துச் சொன்னான். இதை அனுசரித்து அச்சு நாட்டு ஒலிபரப்புகளிலெல்லாம் தற்போது அபாண்டமான பொய்களும், கதைகளும் சொல்லப்படுகின்றன. முக்கியமாக பர்மாவிலிருந்து வெளியேறிய ஜெனரல் அலெக்ஸாண்டரைப்பற்றி பல விதமாகச் சொல்லப்படுகின்றன.

ஜெனரல் அலெக்ஸாண்டரின் படைகள் எல்லையைக் கடந்து கொஞ்சமும் சேதப்படாமல் தைரியமாக இந்தியாவிற்கு வந்து விட்டன. ஜெர்மன் ஜெனரல் ரோமல் சில மாதங்களுக்கு முன்னர் ஆச்சின்லக்கினால் துரத்தப்பட்டு ஓடியதில் எவ்வளவு சாமர்த்தியமிருந்ததோ அவ்வளவு கௌரவமும் இவருக்கு உண்டு. ஆனால் ஜெனரல் அலெக்ஸாண்டர் எதிரியின் பளுவு தாங்காது வரவில்லை. மாரிகாலம் உண்டாவதற்குள் ஸப்ளை மார்க்கம் முடிவடையாததால் ஸப்ளைகள் கிடைக்காதென்று நினைத்தே இந்தியாவிற்குள் வந்துவிட்டார். இல்லாவிட்டால் பர்மாவில் இன்னும் எதிர்த்து சண்டை செய்திருப்பார். இப்படி வந்த சைனியத்தை வேவல் பார்வையிட்டு 'சைனியம் சரியான நிலையிலிருக்கிறது' என்றார். 'இப்படி அச்சைனியம் வராவிட்டால் நிலைமை மோசமாகியிருந்திருக்கு மென்றும்' சொன்னார். சைனியத்தில் நாலில் ஐந்து பங்கு வந்து விட்டது. சின்டுவின் நதியில் வெள்ளம் பெருகிவிட்டதால்தான் சில போக்கு வரத்து சாதனங்களையும் சில டாங்கிகளையும் விட்டு வரவேண்டி வந்தது.

நிலைமை இப்படி இருக்கும்போது நேசதேசப்படை அழிக்கப்பட்டதாக பெர்லின், டோகியோ ஒலிபரப்புகளில் பிரமாதமாக கட்டி விடப்படுகின்றது. 'அழிக்கப்பட்டது' என்று ஜெர்மானியர் சொல்லுவதற்கு அர்த்தமே கிடையாது. டங்கர்க்கில் பிரிடிஷாரை அழித்ததாகச் சொன்னார்கள். ஆனால் அப்பேர்ப்பட்ட பிரிடிஷ் படைதான் கோலோனில் 1½ மணி நேரம் குண்டுகளை வீசியது. கடந்த சரத் காலத்திலேயே ருஷ்யர்களை அழித்ததாகச் சொல்லுகின்றனர். அந்த ருஷ்யர்கள்தான் கார்கவ்வில் ஜெர்மானியரை விரட்டியடிக்கின்றனர். இவ்வித பிரசாரத்தில் ஜெர்மனிதான் ஒரு மாத்து அதிகமாகச் செய்து வருகிறது. மேமீ 16உ '2,00,000' பேர் கொண்ட அலெக்ஸாண்டர் படை அழிக்கப் பட்டதாகச் சொல்லப்பட்டது. இதிலுள்ள பிசகைப் பார்த்துக்கொண்டு 20,000 பேர்தான் அழிக்கப்பட்டதாக ஜப்பானியர் 17உ சொன்னார்கள். 18உ ஒரு காரணமுமில்லாமல் 32,000 பேர் என்று ஜெர்மனியில் சொல்லப்பட்டது. ஆனால் அதே தினத்தில் இவ்வெண்ணிக்கை 8,000-க்கு குறைக்கப்பட்டது. மறுபடியும் படேவியாவில் 20,000 என்று சொல்லப்பட்டது. இந்தத்தடவை அழிக்கப்பட்டது என்பதற்குப் பதிலாக தோற்கடிக்கப்பட்டது என்று மாத்தப்பட்டிருந்தது. இதுதான் அச்சு நாட்டுக் கூட்டாளிகளுக்குள் காணப்படும் ஒற்றுமை. மே 16உ பெர்லின் ஒலிபரப்பில் பின் வருமாறு சொல்லப்பட்டது. 'ஜப்பானிய அரசாங்கம் ஜெர்மன் அரசாங்கத்தார் கொடுக்கும் அறிக்கைகளைத்தான் பிரசித்தப் படுத்துவார்கள். அவையாவும் உண்மையானவை' என்று இருந்தது.

வி வி வி வி வி வி வி

**பருவ மழைகள்.** 'இந்தியாவிற்கு ஜப்பானியரை வரவொட்டாமல் பருவ மழைகள் தடை செய்யுமா' என்று கேட்கப்படுகிறது. ஆனால் தற்காலத்திய சண்டைகளில் சீதோஷ்ண நிலைகளை நம்பியிருப்பது தவறான காரியமாகும். குளிர், வெய்யில், சகதி முதலியவைகளால் சண்டை நிற்காது என்பதை லிபியா, ருஷ்யா, மலேயா முதலிய இடங்களில் நடந்த சண்டைகளைப் பார்த்துக்கொள்ளலாம். சீதோஷ்ண முன்னேற்றத்தில் கொஞ்சம் தடையேற்படலாமே தவிர யுத்தமே நின்றுவிடாது. விமானத்தாக்குதலில் கூட சற்று கடுமையாக இருக்க முடியாது. அவ்வளவுதான். கடல்புயல் ஏற்பட்டால் அக்கரைச் சீமைகளுக்கு ஸப்ளை அனுப்பமுடியாததலால் ஆங்காங்குள்ள சைனியங்களை எளிதில் சிதைத்து விடலாம். இம்மாதிரியான பல தடைகளிலிருப்பதால் தற்சமயம் இந்தியாவை ஜப்பான் படையெடுக்காது என்று சுங்கிங் அதிகாரிகள் நினைக்கின்றனர்.

இவ்வளவும் ஜப்பான் படையெடுப்பு செய்யுமென்று வைத்துக்கொண்டு பேசினோம். இந்தியாவிற்கு வந்தால் பெரிய திட்டச் சண்டை செய்யவேண்டியிருக்குமாதலால் ஜப்பான் படையெடுக்காது. இதற்கு முன் இம்மாதிரி சண்டையை ஜப்பான் செய்ததுமில்லை. இந்தியா ஜப்பானுக்கு வெகுதூரத்திலிருக்கிறது. தேசமும் பெரிது. மேலும் நேசநாடுகள் அதிகபலஞ் செய்திருக்கின்றன. தன்னைப் பிறர் தாக்காமல் ஜப்பான் பார்த்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இதொரு பக்கமிருக்க சைனாவில் தற்காப்புப் போரில் ஜப்பான் ஈடுபட்டிருக்கிறது. தனக்கு ஏதோ அபாயம் வந்து விட்டதாகவே எண்ணியிருக்கிறது. ஆகவே சைனாவை ஜயிக்காமல் இந்தியா பக்கம் ஜப்பான் வராது என்றே சொல்லலாம்.



வி வி வி வி வி வி வி

**சைனு எதிர்த்து நிற்கிறது.** சைனாவை சுலபமாகக் கலைத்துவிட முடியாது. ருஷ்யாவை ஜெயித்து விட்டதாக பெர்லின் ரேடியோவில் பலதடவை சொல்லப்பட்ட விதமாக டோகியோ ரேடியோவும் கூறுகிறதே தவிர உண்மையில் ஒன்றுமில்லை. ஏப்ரல் 26உ டோகியோ ரேடியோவில், 'எல்லா விதத்திலும் ஷயாங்கெய்ஷெக்கால் எதிர்த்து நிற்க முடியும்' என்று சொல்லப்பட்டது. மே 2உ கிடைத்த செய்தியின்படி, ஹோனானில் 4,000 ஜப்பானியப்படை திருப்பியடிக்கப்பட்டது. ஷென்ஸியிலிருந்து 5,000 ஜப்பானியர் விரட்டப்பட்டனர். மே 2உ டோகியோவிலிருந்து, 'சுங்கிங் படைகளுக்குள் ஒற்றுமையில்லை. ஆயுதங்கள் கிடைக்கவில்லை' என்றும் சொல்லப்பட்டது. ஆனால் ஹாங்கவ்விற்கு அருகில் 10,000 ஜப்பானியத்துருப்புகள் விரட்டப்பட்டன. யூனானிலும் எதிரியால் முன்னேற முடியவில்லை. பின் நோக்கி ஓடவும் முடியவில்லை.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானிய சட்ட நிர்மாணத்திற்கு உதவும் அரசியல் சங்கம்.** என்ற பெயருடன் ஜப்பானில் ஒரு ஸ்தாபனம் ஆரம்பமாகியிருக்கிறது. இதைக் கொண்டு கிழக்கு ஆசியா நாடுகளில் சண்டையை நடத்தி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுமாம். 'அகில ஆசியா பொது க்ஷேம திட்டம்' உண்டாக்கப்படுமாம். இதைப்பற்றி ஜப்பானிய சபைமுன்பாக மேமீ 20உ பிரஸ்தாபிக்கப்பட்டது. ஜெர்மனியில் செய்யப்படுவதுபோல் உடனேயே அங்கீகரிக்கப்பட்டது. ராணுவ மந்திரிகளையும் கப்பல் இலாகா மந்திரிகளையும் தவிர எல்லா இதர மந்திரிகளும் இதில் அங்கத்தினர்களாக சேர்ந்தனர். 'ஜனங்களுக்கு அரசியல் சம்பந்தமான உணர்ச்சியை மூட்டுவதும்' இதன் நோக்கமென்று சொல்லப்படுகிறது.' ஆனால் உண்மையில் ஜப்பானியர் செய்யும் யுத்தத்திற்கு உள்நாட்டில் ஒருவரும் தடைசெய்யாமல் பார்த்துக்கொள்ளுவதும், உலகத்தாரை ஏமாற்றுவதும்தான் நோக்கம். இவ்வித உட்கருத்து ஜப்பானிய ஒலிபரப்பிலிருந்தே வெளிவந்து விட்டது. அதாவது இவ்விதச் சங்கத்தைக்கொண்டு "ஜப்பானிய முன்னேற்றம், பொது க்ஷேமம்" முதலியவைகளை ஸ்தாபிப்பதற்காகவும் 'தேசிய தொழிற்சாலைகளும், தேசிய விவசாயமும், தேசிய வியாபாரமும் இதர இயக்கங்களும் ஆரம்பிக்கப்படும்' என்றும் சொல்லப்பட்டது. இவையாவும் ஜப்பான் தேசத்தின் நன்மைக்கு என்பதில் சந்தேகமில்லை.

வி வி வி வி வி வி வி

**பொது க்ஷேமம்.** என்பது வெரும் ஏமாற்றம் என்று புலப்படுகிறது. டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து பின் கண்டசெய்தி கிடைத்திருக்கிறது. அதாவது ஜப்பானுக்கு யாவரும் அடங்கியிருப்பதாக பிரமாணம் செய்து கொடுக்கவேண்டும். ஆசியா வாசிகளாக இருந்தால் புருஷர்கள் 100 கில்டர் நாணயமும், ஸ்திரீகள் 50 கில்டர் நாணயமும் வரி கட்டவேண்டும். சிங்கப்பூரின் உபதலைவர் :—'பிரிடிஷாரின் உயிரைக் காப்பதே ஜப்பானியர் அவர்களுக்குச் செய்யும் உதவியாகுமென்பதை உணர வேண்டும்' என்றார்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானின் பொருளாதார நிலை.** ஜப்பானின் ராணுவ முன்னேற்றம் அதன் பொருளாதார நிலையைக் குறைத்து விட்டது. பாதிப் பேருக்குத்தான் விவசாயம் ஜீவனமாக இருக்கிறது. யுத்த சாமான்களைச் செய்யும் தொழிற்சாலைகளைத்தவிர மற்றவைகளுக்கு நிலக்கரி

முதலிய விளைபொருள்கள் கிடைக்காததால் சரிவர வேலை நடைபெற வில்லை. திடசரீரம் வாய்ந்த யாவரும் சைனியம், தொழிற்சாலை முதலியவைகளில் கட்டாய வேலை செய்யவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**கார்கவ் சண்டை.** கார்கவ் சண்டையில் ருஷ்யர்கள் அடைந்த சாதகங்களைப்பற்றி தற்போது சொல்ல முடிகிறது. டெயிலி எக்ஸ் பிரஸ் பத்திரிகை கூறும் விதமாக மார்ஷல் டிமோஷன் கோ முடிவான வெற்றியடையாதபோதிலும், சில லாபங்களையடைந்திருக்கிறார். காகஸைத் தாக்கவிருந்த வான் பாக்கின் சைனியம், 120 மைல் தூரம் சிதறி யடிக்கப்பட்டது. நஷ்டமேராளமிருக்கும் காரணத்தினாலேயே வசந்த கால ஜெர்மன் தாக்குதல் ஒத்திப்போடப்பட்டது. கார்கவ்வைப் பிடிப்பதற்கு லாயக்காக இருந்த இடங்களை ருஷ்யர்கள் பிடித்துக்கொண்டனர். இங்கே தற்காப்பு செய்து கொள்ளுவதற்காக எதிரி மற்ற அரசாங்களிலிருந்து விமானங்களை அழைத்துக் கொண்டிருக்கிறான். நீபருக்கும் இர்கரேவிக்கு இடையிலுள்ள ரயில்வே தாக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து கொண்டுதான் ஜெர்மானியர் காகஸஸைப் படையெடுக்க நினைத்திருந்தனர்.

வி வி வி வி வி வி வி

**காகஸஸ்.** ஜெர்மானியர் இருக்கும் இடத்திற்கு அப்பால் எங்கேயோ இருக்கிறது. 'யூராலும் காகஸஸூம் அவைகளின் விலையுயர்ந்த விளைபொருள்களுடன் நாஸி ஜெர்மனிக்கு உட்பட்டிருந்தால் ஜெர்மனி கொழுத்துவிடும்' என்று ஹிட்லர் மெயின் காம்ப் புஸ்தகத்தில் எழுதியிருந்தான்.

அவன் ஸ்வாதினத்தில் வந்தால் அப்படித்தான். ஆனால் அவைகளின் முக்கியத்வத்தைத் தெரிந்துகொண்டு ருஷ்யர்கள் பிரமாத படைகளை சேமித்து வைத்திருக்கின்றனர். 200 சதுர மைல் பிராந்தியத்திற்கு பாதுகாப்பு முறைகளாகவே இருக்கின்றன. சதுப்பு நிலம், நதி, காடு, மலை முதலியவையாவும் எதிரியின் யந்திரப் படைகளைத் தடுக்கக்கூடியவைகளாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குப் பின்புறம் ருஷ்ய கொரில்லா படைகளும் இருக்கின்றன.

காகஸஸூக்கு இதுவரை எத்தனையோ பேர்கள் படையெடுத்துச் சென்று இருக்கின்றனர். கெய்ஸர் தோற்றதும் இங்கேதான். ஹிட்லரும் இங்கேதான் தோற்கடிக்கப்படுவான். தற்சமயம் ஜெர்மன் டாங்கிகள் கார்கவ்வில் இருக்கின்றன. அங்கிருந்துதான் காகஸஸூக்குச் செல்லவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் துயரம்.** பின்கண்ட விஷயம் ஜெர்மனியின் துயரத்தைத் தெரியப்படுத்துகிறது:—

1. டாஸ்ரீச் பத்திரிகையில் கோயபெல்ஸ் எழுதியது:—'உறைபனிதான் நமது பெரிய சத்துரு. ஸட்லைகளையனுப்ப அவைகளால் ஏற்படும் சிரமம் இவ்வளவு அவ்வளவு அல்ல. லாரியிலுள்ள எண்ணெய் கெட்டியாகிவிடும். குதிரைகள் கீழே விழும், பனியால் இருப்புப் பாதைகள் தடைபடும். ஆகவே விமான மூலம்தான் அனுப்ப முடிந்தது.,

'பல மாதங்கள்வரை குடும்பங்களிடமிருந்து தகவலே கிடைக்காது. சில நாள் உணவே கிடைக்காது போர்முனை வெகுதூரம் எட்டியிருப்பதால் எங்களுக்குத் தெரியாமல் ருஷ்யர்கள் வேலிகளைத் தாண்டி உணவுப் பண்டங்களை தாக்குவார்கள்.'

'பனியால் ஒவ்வொருவரின் முகமும் கருத்து விட்டது. இதுதான் மிகக் கடுமையான பனி காலமாக இருந்தது.'

கோயரிங் வேறு கதையைப் படிக்கிறான். அவன் அழுகை ஜெர்மன் தொழிலைப் பற்றியது. 'நமது ஸ்திரீ புருஷர்களுக்கு எவ்வளவு சிரமமென்று



பாருங்கள். இன்னும் மாரிகாலத் தொந்தரவுகள் நமக்கு இருக்கின்றன. தொழிலாளிகள் இங்குமங்கும் அலைந்து அதிகமணி நேரம் உழைக்க வேண்டியிருக்கிறது. இந்த யுத்தத்தை முடிவுவரை நடத்துவதற்காக கடவுள் யாவருக்கும் அதிக பலத்தைக் கொடுப்பாராக'

அடுத்த படியாக லுப்ட்வாபியைப் பற்றிய அழுகை (ஜெர்மன் ரேடியோ—மே 9).

'இரவு நேரங்களில் விமான மூலம் தாக்கப்படாமல் இருக்க எந்த நாட்டையும் பாதுகாப்பு செய்துகொள்ள முடியாது. நமது ராக்கால விமானங்கள் எதிரி நாட்டில் படையெடுப்பு செய்கின்றன. உங்களைக் காக்கவும் அவைகள் முயலும். கிரமான விமானங்களை நாம் ஈடுபடுத்தியிருக்கிறோம். மாதுமிகளும் சீக்கிரத்திலேயே வேலையைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்'

கடைசியாக நிகரில்லாத ஜெர்மன் சைனியத்தின் ஒப்பாரி (நாஸி மேஜர் ஒடோ ஜாஸ்டார்ப்—மே 12).

'ருஷ்யச் செஞ் சைனியத்தின் ஒற்றுமை அப்படியே இருக்கிறது. 1941-ல் ஜெர்மானியர் தோற்கடித்ததெல்லாம் இரண்டாம் தரமான ருஷ்யச் சைனியத்தைத்தான் வரப்போகும் சண்டைகளுக்காக ருஷ்யர்களுடைய முதல் அணி வகுப்புகள் பத்திரமான நிலைகளுக்குக் கொண்டுபோகப்பட்டன. ஆகவே 1941 விட தற்சமயத்தில்தான் ஜெர்மானியருக்கு அதிக சிரமமிருக்கிறது.'

வி வி வி வி வி வி வி

**'ரகசிய ஆயுதம்'** கெர்ச்சில் அடைந்த வெற்றிக்குக் காரணமாக ஏதோ ரகசிய கருவி உபயோகப்படுத்தப் பட்டதாக மே 1௳ ஜெர்மானியர் சொன்னார்கள். அக்கருவி அதிக உஷ்ணமுள்ள கருவியென்றும், ஒரு படகென்றும், ஆகாய டார்பிடோ வென்றும், குண்டென்றும், சுரங்க வெடிகளைப் போடுகிறதென்றும், சுரங்க வெடியென்றும் பலவாராக வர்ணிக்கப்பட்டது. இவையாவும் பிரசார மந்திரி கோயபெல்ஸின் கல்பனைதான். இதன் தன்மையைத் தெரியப்படுத்த முடியாதென்று தென் ஆபிரிக்கர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. 'இது டாங்கி' என்று பின்லாந்து ரேடியோ சொல்லிற்று. 'சண்டைப் படகு என்று விஷியும் 300 டிகிரி உஷ்ணமுள்ள பெரிய வெடியென்று ஜெர்மானியரும் சொன்னார்கள்.

இவையெல்லாம் நாஸி தந்திரங்கள்தான். ஏதோ விசித்திர சக்தியிருப்பதாகச் சொல்லி பிறரை பிரமிக்கச் செய்து சுலபமாக வெற்றியடையலாமென்பது அவர்களின் கருத்து.

'பிரமிக்கச் செய்வதென்பது யுத்த தந்திரங்களில் ஒன்றுதான். ஆனால் ரகசியக் கருவிகள் அப்படி பிரமாதமாக இருப்பதாகத் தெரியவில்லை. அவைகளும் பயன்படாது. ஏனென்றால் அவைகளுக்கு பிரதியாக மற்றொன்று கண்டுபிடிக்கப்படும். உதாரணமாக சுரங்க வெடிகளைப் பார்த்துக்கொள்ளலாம்.'

வி வி வி வி வி வி வி

**டாரே பதவி யிழந்தான்.** ஜெர்மனியின் விவசாய மந்திரியாயிருந்த ரிச்சர்டு வால்டர் டாரே பதவி யிழந்தான். கடும் குளிரால் சென்ற வருஷம் உருளைக்கிழங்குப் பயிர் சேதமானதும் இவ்வருஷம் பார்லியும், கோதுமையும் சேதமானதும்தான் குற்றம். பாவம் இதற்கு டாரே என்ன செய்வான். வழக்கப்படி வேறு ஒருவனை ஹிட்லர் நியமித்திருக்கிறான். அவன் எவ்வாறு உற்பத்தி செய்வானோ தெரியவில்லை.

ஹிட்லரை அண்டியிருப்போருக்கு இதுதான் கதி. ஒரு சமயம் தலையில் தூக்கிக்கொண்டாடப்படுவார்கள், அடுத்த நிமிஷம் உதறித்தள்ளப்படுவார்கள். ஒரு சமயத்தில் விவசாயிகளுக்கும், ரஸாயனத்திற்கும் புதிதான விஷயங்களைக் கண்டு பிடித்து விவசாயிகளின் நிலையை முன்னுக்குக்கொண்டு வந்தானென்று இவனுக்கு நல்ல பெயர் கிடைத்தது. 'ராணுவ சேவை, ஜன உற்பத்தி, ஆக்கிரமித்த நாடுகளில் அடிமைத்தனம்' முதலியவைகளை இவன்தான் ஆரம்பம் செய்

தது. இப்பேர்ப்பட்டவனுக்கு இந்த சிறிய தண்டனை போதாதுதான். இன்னும் ஹிட்லர் ஆட்சியில் எவ்வளவோ கிடைக்கும்.

வி வி வி வி வி வி வி

**கடல் யுத்தம்.** இவ் வாரத்தில் இரண்டு வருஷக் கொண்டாட்டங்கள் நடந்திருக்கின்றன. ஒன்று மே 22௳. அமெரிக்க கப்பல் தினமும் 24௳ பிரிடிஷ் சாம்ராஜ்யதினமும் கொண்டாடப்பட்டன. மே 26௳, மத்தியதரைக்கடல் அதிகாரத்திலிருந்து மாற்றப்பட்டுள்ள அட்மிரல் கன்னிங்ஹாம் பின் வருமாறு சொன்னார்:—'1940, 41, 42 வருஷங்களில் அடைந்த அநுபவங்களை நாம் மறக்காமலிருந்தால் எதிரியை நாம் ஜயித்து விடலாமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.' மத்தியதரை கடல் நிலையைப்பற்றி அவர் சொல்லும்போது இந்த யுத்தம் நான்கு விதமாக நடக்கிறது என்றார். அதாவது எதிரிமேல் பொருளாதார முற்றுகையிடுவதும், இதாலிக்கு மனக்குறையேற்படுவதும், தாத்காலிக ஜெர்மன் விமான ஆதிக்கமும், பிரகிருத நிலையும்தான். இதாலி சண்டையில் சேருவதற்கு முன்பு பிரிடிஷ் முற்றுகை ஆரம்பமாயிற்று. மத்தியதரைக்கடலை பிரிடிஷார் வியாபித்ததும் இதாலிக்கு மனக்குறையேற்பட்டது. அதன் முடிவுதான் டாரன்டோ சம்பவம். விமானமேற்றிய பிரிடிஷ் கப்பல்கள் வந்ததும் இதாலிய கப்பல் படையின் ஆதிக்கம் போய்விட்டது.

லிபியாவில் இதாலியப் படையை வேவல் தோற்கடித்ததும், அவர்களைக் காப்பாற்ற ஜெர்மன் விமானங்கள் வந்தன. இதன் முடிவுதான் கிரீட் சம்பவம். அதே சமயத்தில் மடபனில் இதாலியருக்கு ஒரு பாடமும் கற்றுக்கொடுக்கப்பட்டது. தூரக் கிழக்கு முதலிய இடங்களுக்குத் தேவையிருந்தபோதிலும் மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் கப்பற்படை ஆதிக்கத்துடனேயிருக்கிறது. மார்ச்சு மாதத்தில் மால்டா மீது கடும் தாக்குதல் நடக்கும்போது ஸர் பிலிப் வியான் தனது கப்பல் கூட்டத்தை அழைத்துச் சென்றார். ஜெர்மன் விமானத் தாக்குதலை லக்ஷியம் செய்யாமல் மால்டா எதிர்த்து நிற்கிறது.

பிரிடிஷ் கப்பல்களின் நஷ்டம் அதிகமாகிக்கொண்டே போவதாக ஹாஹா மாத்திரம் கட்டி விட்டுக்கொண்டு போகிறான். உண்மையில் ஒரு வருஷத்திற்கு முன் இருந்ததைவிட தற்சமயம் நஷ்டம் மிகக் குறைவு. அட்லாண்டிக் வழியாக வட அயர்லாந்திற்கு ஏராள அமெரிக்கப் படைவந்ததே இதற்கு ஒரு அத்தாக்ஷியாகும்.

வி வி வி வி வி வி வி

**மெக்ஸிக்கோ சண்டை தொடுக்கிறது.** இது ஒரு விசேஷ சம்பவம். மெக்ஸிகோ, காடிமாலா, ஹான்டுராஸ், ஸால்வடார், கோஸ்டாரிகா, பனாமா இவை யாவும் பனாமா கால்வாய், காரிபியன் கடல் முதலியவைகளைப் பாதுகாக்கும். காரிபியன் கடலிலுள்ள தளங்கள் அகில அமெரிக்கப் பாதுகாப்பிற்கு மிக அவசியம். இல்லாவிட்டால் அட்லாண்டிக் பக்கமாக பனாமா கால்வாயில் தாக்குதல் நேர்ந்தால் அமெரிக்கப் படையை பஸிபிக் பக்கம் அனுப்ப முடியாது. போர்டோரிகோ, காண்டனமோ, பனாமா, ஸான்டகோ முதலிய துறைமுகங்களில் அமெரிக்க கப்பல்களை விருத்தி செய்யலாம். விராகுரூஸ், லெகுனிடெல்கார்மன், டாம்போ, மெஸட்லான், மன்ஸானிலோ, எஸ்மார்கீடா, அகபுல்கோ முதலிய மெக்ஸிகோ துறைமுகங்களையும் உபயோகித்துக்கொள்ள முடியும். மெக்ஸிகோ நேசதேசப் பக்கம் சேர்ந்ததிலிருந்தே நேசதேசங்கள் சரியான காரணங்களுக்காக சண்டையிடுவதும், வெற்றியில் உள்ள நம்பிக்கையும் யாவருக்கும் தெரியும்.

வி வி வி வி வி வி வி

**கிளாஸ்டர் கோமகனின் சுற்றுப் பிரயாணம்.** மத்தியக் கிழக்கு நாடுகளில் இவர் செய்த சுற்றுப் பிரயாணத்தினால் முஸ்லீம் நாடுகளுக்கு அதிக சிநேகம் ஏற்பட்டது. நாலுவார காலத்தில் மேற்குப் பாலைவனம், இராக், இரான், பாலஸ்தீனம், ஸிரியா,



லெபனன் முதலிய இடங்களைச் சுற்றிப் பார்த்தார்: சென்ற இடங்களிலெல்லாம் இவருக்கு அராபியர் செய்த வரவேற்புகளே ஜனநாயகத்தின் சரியான காரணத்தையும், பாஸிஸ்டு கொடுங்கோல் பேரிலுள்ள வெறுப்பை தெரியப்படுத்தின. எகிப்து வாரப்பத்திரிகை அல்-இட்னீன் பின்கண்ட விதமாக அபிப்பிராயம் கொடுத்திருந்தது. 'எகிப்துக்கு இவர் செய்த விஜயத்தால் ஆங்கிலேய-எகிப்து சம்பந்தம் பலமடைந்தது.' நேசநாடுகளின் பிரியத்தை இவர் பெற்றார்.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாடுகளும், அராபியர்களும்.** இந்த நிலையில் இரண்டு துரோகிகளான ரஷித் அலியும், ஜெருஸலத்துத் தலைவனும் அச்சு நாடுகளின் உதவி பெற்று அராபியா நாடுகளை விடுவிக்கவேண்டுமென்று சொன்னார்களாம். அதற்கு ரிப்பன் டிராப் உதவியளிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறானும். உண்மையில் ஸாடி அராபியா ஏற்கனவேயே ஸ்வதந்திரத்துடன் இருக்கிறது. எகிப்து இன்னும் சண்டையில் ஈடுபடவில்லை. இராக் 1930 வருஷத்திய உடன்படிக்கையின் படி ஸ்வதந்திரமாக இருக்கிறது. ஸிரியாவும், லெபனனும் ஸ்வதந்திரத்திற்கான ஏற்பாட்டில் இருக்கின்றன.

ரிப்பன் டிராப்பின் வாக்குறுதிக்கு யாங்கின், யேனிஸபா பத்திரிகையில் பின்கண்ட கேள்விகளைக் கேட்கிறார்.

'முஸ்லீம் நாடான அல்பேனியாவின் நிலை என்ன?

'செக்கோஸ்லாவியாவிற்கு நேர்ந்தகதி என்ன? போலாந்திற்கு நேர்ந்தது மறக்கப்பட்டதா? முஸ்லீம் நாடுகளுக்கு ஸ்வதந்திரமளிக்கும் அச்சு நாடுகள் லிபியா, டிரிபாலிடானியா முதலிய நாடுகளிலுள்ளோரின் ஸ்வதந்திரத்தை கவனியாதா? டூனிஸ்ஸையும் பிரான்ஸையும் பிடிக்கவே இதாலி சண்டையில் சேரவில்லையா. டூனிஸ்ஸிக்கு ஸ்வதந்திரமளிக்கவா இதாலி விரும்பிற்று.

அராபியர் வாழும் வட ஆப்பிரிக்காவைப் பிடிப்பதற்கு அல்லவா?

அல்ஹவாடித்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"ஆக்கிரமித்த பிரான்ஸிற்கும், ஆக்கிரமிக்காத பிரான்ஸிற்கும் இடையில் எல்லைப்புறத்தைக் கடந்து அராபியரும், யூதர்களும், கருப்பு ஜாதியாரும் செல்லக் கூடாது. அராபியர் இதை எவ்வாறு நினைப்பார்கள். நாஸிகள் இவர்களுக்கு தயவு காட்டுவதாகச் சொல்லிக்கொள்ளுவது சரிதானா?"

ஜெர்மனியைப் பார்த்துவிட்டு ஜப்பானும் முஸ்லீம் நாடுகளில் கடும் திட்டங்களைத் தயார்செய்து வருகிறது. ஆனால் உலகம் இனி ஏமாறாது.

ஜப்பானிய எண்ணங்களைப்பற்றி மத்தியக்கிழக்கு நாட்டு விமர்சனம் என்ற பத்திரிகையில் பின்கண்ட விதமாக எழுதப்பட்டிருந்தது.

வி வி வி வி வி வி வி

**எகிப்து நினைப்பதென்ன.** "இயற்கையாக பிறரை ஜப்பானியர் வெறுக்கின்றனர். தங்கள் மதக் கொள்கைகளைத்தான் கொண்டாடுவார்கள். தற்சமயத்தில் மோசகரமாக முஸ்லீம்களைப்பற்றி சாதகமாக ஒலிபரப்பப்படுகிறது. ஜப்பானிலும், ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளிலும் இஸ்லாம் கொடும் திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

"மற்ற நாடுகளில் செய்வதைப்போல கோரிகளுக்கு ஜப்பானியரும் வரிப் போடுகின்றனர். பல கோரிகள் மூடப்பட்டு ராணுவங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இப்பேர்ப்பட்டவர்களுடன் முஸ்லீம்கள் ஒத்துழைக்கமாட்டார்கள். அவர்களுடைய கொள்கை நமக்குப் பிடிக்காது."

**இராக் நினைப்பது என்ன?** பிரிடிஷ், அமெரிக்க, டச்சு ஆட்சிக்கு உட்பட்டிருப்பதால் அனுபவிக்கும் ஸ்வதந்திரத்தையும், மதத்தையும் எவ்விதம் ஜப்பானிய அரக்கர்களிடம் ஒப்படைப்பது. அவர்களுக்கு கொடுங்கோல், வெறுப்பு, மதக்கொலை முதலியவைதான் கொள்கை.

"மதத்தைத் தழுவுகிறவர்கள் ஜப்பானியருடன் எவ்விதம் ஒத்துழைக்க முடியும். ஜப்பானிய சக்கிரவர்த்தியை எவ்விதம் கடவுளென்று அங்கீகரிக்க முடியும். ஆகவேதான் ஜப்பானியர் முதலியோரை எதிர்க்க எல்லா முஸ்லீம்களும் ஒன்று சேர்ந்திருக்கின்றன.

---

# தேசிய யுத்த முன்னணி.

---

## மெஷினில் அரைத்த அரிசியில் அதிக சேதம் ஏற்படுகிறது:

---

### அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு சென்னை ஸர்க்காரின் புத்திமதி.

மெஷினில் அரைக்கப்படும் நெல்லையெல்லாம் கைகுத்து அரிசியாகத் தயாரித்தால் இம்மாகாணத்தில் அதிகப்படியாக 2,00,000 டன்கள் அரிசி கிடைக்குமென்று மதிப்பிடப்படுகிறது. யந்திரங்களிலேயே அரைகுறையாய் அரைத்த அரிசி அல்லது ஒரு தடவை தீட்டப்பட்ட அரிசியைப் போலவே தான் கைக்குத்து அரிசியும் இருக்குமாதலால், அதன் அனுகூலங்களை வற்புறுத்திச் சென்னை ஸர்க்கார் அபிவிருத்தி இலாகா ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

சமீபகாலத்தில் இந்தியாவுக்குத் தேவையான அரிசியை இந்தியாவிலே உற்பத்தி செய்து கொள்ள முடியவில்லை. அது சென்ற 10 வருஷ காலத்தில் பர்மா, தாய்லாந்து, இந்தோசீனா முதலிய இடங்களிலிருந்து வருஷத்திற்கு இம்மாகாணத்தில் விளையும் அரிசியைத் தவிர 11 லக்ஷம் டன் முதல் 20 லக்ஷம் டன் வரை இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த இறக்குமதியில் 10 சதவிகிதம் அதாவது 5 முதல் 7 லக்ஷம் டன் நிறையுள்ள அரிசி இந்த மாகாணத்திலேயே செலவாகி விடுகிறது.

இப்பொழுது மேற்சொல்லிய இடங்களிலிருந்து இறக்குமதியில்லாமல் போய் விட்டது. ஆனால் யுத்த நெருக்கடியினால் சென்னை இராஜதானியிலிருந்து ஸிலோனுக்கும், மற்ற ஊர்களுக்கும் அரிசி அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் இத்தேசத்தில் உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வது அத்தியாவசியமாக இருக்கிறது ஏப்ரல் மாதம் 6-ம் தேதி நியூ டெல்லியில் கூடிய மகாநாட்டில், மற்ற விஷயங்களோடு கைக்குத்து அரிசியையும் அரை குறையாகத் தீட்டப்பட்ட அரிசியையும், நன்றாகத் தீட்டப்பட்ட அரிசிக்குப் பதிலாக உபயோகப்படுத்தும்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், கைக்குத்து அரிசியிலிருந்து அதிக சத்துள்ள தானியம் கிடைப்பதால் இப்பொழுது இருக்கும் ஸப்ளைகள் அதிக நாட்களுக்கு வருமென்றும், இந்த சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்குப் போதுமான உணவு கிடைக்குமென்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதனால் அரிசித் தட்டால் ஏற்படும் பிரச்னை ஓரளவு குறையும்.

### உபரி ஸப்ளை.

கைக்குத்து அரிசியினால் இரண்டுவித சாதகங்கள் உண்டு. முதலாவது கைக்குத்து அரிசியிலிருந்து அதிக சத்துள்ள தானியம் கிடைக்கிறது. அடுத்தபடியாக இதனால் ஒரு குறிப்பிட்ட இடை நெல்லுக்கு 6 சதம் அதிகமாக அரிசி கிடைக்கிறது.



மேலும் அரிசி சாதம் சாப்பிடுகிறவர்களுக்கு சத்து அதிகப்படுத்த வேண்டுமானால் அந்த உணவில் ஒரு பாகத்தில் அரிசிக்குப் பதிலாக வேறு தானியங்கள், உதாரணமாக சோளம், கம்பு, கேப்பை, தினை முதலிய பொருள்களை உபயோகிக்க வேண்டும். அப்பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டால் அநேகமாக பாதி அளவு அரிசிக்குப் பதிலாக சோளம் முதலிய தானியங்களை உபயோகித்துக் கொள்ளலாம். ஐந்து அவுன்ஸ் அரிசிக்கு பதிலாக ஐந்து அவுன்ஸ் தானியம் சேர்த்துக்கொள்ளலாம். வட ஸர்க்கார் பிரதேசங்களில் சில பாகங்களில் மெஷினில் தயாரித்த அரிசிக்குப் பதிலாக தானியங்கள் உபயோகப்படுத்தியதில் தேகத்திற்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுத்ததுமன்றி பெரிபெரி (Beriberi) அதாவது மகோதரம் போன்ற வியாதியை அதிகம் பரவாமல் தடுத்து விட்டது. ஏனென்றால் யந்திரத்தில் அரைக்கப்படும் அரிசியைக் காட்டிலும் தானியங்களில் B-1 என்ற சத்துப்பொருள்கள் அதிகம் இருக்கின்றன.

---

## இந்தியாவிலும் ஜனங்கள் திடமனதுடன் நடந்து கொண்டால், நன்மை ஏற்படும்.

(கென்னத் பிண்டாப் என்பவர் எழுதியது).

[இதை எழுதியவர் முந்தி லண்டனில் பத்திரிகை ஆசிரியராக இருந்தார் 1940-ல படையெடுப்பு ஏற்படுமென்று பயமிருந்தபொழுது பிரிடிஷ் பொது மக்களுக்கு என்ன உணர்ச்சி இருந்தது என்பதை ஆராய்ந்து அறிந்தவர். அத்தகைய பயமும், சந்தேகமும் இப்பொழுது இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் சமயம் அவர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். தேசத்தின் தற்காப்பு ஆயுதங்களில் தைரியமும், மன உறுதியும் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்கள் என்பதை அவர் நிரூபிக்கிறார்.]

1940-ம் வருஷம் கோடை ஆரம்பமான பொழுது ஜெர்மன் ஆக்கிரமிப்பினால் பிரான்ஸ் அடிமையாக்கப்பட்டும், இங்கிலீஷ் கால்வாயிலுள்ள துறைமுகங்கள் ஜெர்மனி வசமானபொழுதும், இப்பொழுது இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமையைப் போலவே கிரேட் பிரிடனிலும் விரோதிகள் படையெடுப்பார்களோ என்ற பயம் ஏற்பட்டிருந்தது.

கொடுமையாகவும், மூர்க்கத்தனமாகவும் இருக்கும் அந்த எதிரி ஆரம்பத்தில் கிடைத்த வெற்றியினால் வெறிகொண்டு கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் தன் வசத்திலுள்ள முழு பலத்தினாலும் பெரிய படையெடுப்பைச் செய்து பார்த்தாலும் பார்த்து விடுவான் என்று தோன்றிற்று.

அதற்கு பொதுமக்களின் உடன்காலத்தில் செய்த நடவடிக்கை பிரமிப்பைக் கொடுக்கத்தக்கதாக இருந்தது, படையெடுப்பா! முடியாத காரியம். அநேக நூற்றாண்டுகளாகவே பிரிடனின் கடற்கரை இது வரை படையெடுக்கப்படவில்லை. படையெடுப்பா? மூடத்தனம்!

சாதாரண பொது மனிதனுக்கு இது திடீரென்று நேரிட்ட போதிலும் அதற்கு அவன் அரசாங்கத்தைக் குறை கூறாமல் உடனே யோசனை செய்து அப்படி நடக்கவேண்டுமென்பதைத் தீர்மானித்துவிட்டான். அதற்கு அரசாங்கத்தார் மட்டிலும் அல்ல, உத்தியோகஸ்தர்கள் மட்டிலுமல்ல; ஒவ்வொருவரும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அப்படியே நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்.

ஆடம்பரமோ, பீதியோ, இல்லாமல் அமைதியாக கடலிலும், ஆகாயத்திலும், தரையிலும் சண்டையிடுவோர்களுக்கு பூர்ண உதவியை அளிப்பதற்கு பொது மக்கள் தயாராகி விட்டார்கள்.

டன்கர்க்கிலிருந்து பின்வாங்கியபொழுது படகு ஓட்டத் தெரிந்த ஒவ்வொருவரும் உபயோகப்படத்தக்க படகுகளை எடுத்துக்கொண்டு போர் வீரர்களைக் காப்பாற்ற தாமாகவே உதவிசெய்ய முன்வந்தார்கள். பிரான்ஸுக்கு சமீபத்தில்

இங்கிலீஷ் கால்வாயில் டனி உரைந்த, மலைகள் நிறைந்த டோவர் துறைமுகத்தில் நான் இருந்தேன். பிரான்ஸ் அடிமையானதினால் அதிலுள்ள ஜனங்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு வருவதை அந்த இடத்திலிருந்து நான் பார்க்க நேரிட்டது.

சுலபமாய் ஜயித்துவிடலாம் என்ற எண்ணம் பிரிட்டிஷாரின் மனதை விட்டு அகன்றது. இங்கிலீஷ் கால்வாயின் கிழக்குப் பக்கத்திலுள்ள துறைமுகங்கள் எதிரியால் கைப்பற்றப்பட்டு எதிரி கிரேட் பிரிடனின் வாயிலில் இருந்தபொழுது, கிரேட் பிரிடனை எதிரி எவ்வளவு சீக்கிரத்தில் தாக்கப் போகிறான் என்று ஒருவருக்கும் தெரியாது. ராணுவ திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்ததற்குத் தகுந்தவாறு பொதுமக்களும் ஒத்துழைக்கத் தயாராக இருந்தார்கள். எதிரி வந்தால் கடலில் தூக்கி எறிவது, என்ற ஒரு பெரிய நோக்கத்துடன் ஒவ்வொருவரும், ஒன்று சேர்ந்திருந்தார்கள்.

யுத்தம் ஆரம்பித்தால் தடங்கலாய் இருக்கக்கூடிய வயதானவர்களையும், குழந்தைகளையும் முதன் முதலில் அந்தப் பிராந்தியத்தைவிட்டு வெளிக்கடத்தப்பட்டார்கள். ஆங்காங்குள்ள அதிகாரிகள் பிரசுரித்த திட்டப்படி எல்லாம் நடத்தப்பட்டன. நூற்றுக் கணக்காக ரயில் வண்டிகள் அபாயமில்லாத பிரதேசத்திற்கு ஜனங்களை ஏற்றிச்சென்றன. ரயில் சத்தம் கொடுக்க சக்தியற்றவர்களுக்கு இனாமாக டிக்கட்டுகள் கொடுக்கப்பட்டன. ஆனால் அப்படி இனாமாக டிக்கட்டுகள் பெற்றவர்களுக்கு அபாயம் நீங்கினால் திரும்பி வருவதற்கு அம்மாதிரி இனாமாகச் டிக்கட்டுகள் கொடுக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது.

### பின்காட்டி ஓடுவதல்ல.

அந்தந்த ஸ்தானங்களிலேயே இருக்கவேண்டியதாகக் கருதப்பட்ட முக்கியமான ஸ்தானங்களில் வேலைபார்க்கும் வேலைக்காரர்களின் ஜாப்தா பிரசுரிக்கப்பட்டது. ஆங்காங்குள்ள அரசாங்க அதிகாரிகள் புகை, (gas) மின்சாரம், தண்ணீர் ஸப்ளை இலாகைகளில் வேலை செய்பவர்கள், உணவு ஸப்ளை செய்யும் வியாபார ஸ்தலங்களிலுள்ள ஆண், பெண்கள், வைத்தியர்கள், பாங்கி உத்தியோகஸ்தர்கள் வார்டன்கள் மற்றபடி ஆகாய விமானத் தாக்குதல் நடந்தால் அதற்கு உதவி செய்யவேண்டியவர்கள், பாலம், கட்டடம் அழிக்க நியமிக்கப்பட்டவர்கள், இன்னும் பொதுஜன ஸ்தாபனத்திற்கு வேலை செய்வதாக வாக்குறுதி கொடுத்தவர்கள் ஆகிய இவர்களின் பேர்கள் அந்த ஜாப்தாவில் கண்டிருந்தது.

என்ன நேர்ந்தாலும் பின்வாங்கக்கூடாது என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஏனென்றால் துப்பாக்கி சுட தயாராக வைத்திருக்கும் சிப்பாய்கள் என்ன, ஜெர்மனி பாம்பர் விமானங்களைத் தகர்க்கக்கூடிய ஆகாய விமானப்படை வீரர்கள் என்ன, கப்பற்படை வீரர்கள் என்ன இவர்களைப் போலவே முன்னே சொல்லியவர்களும் யுத்தத்தில் முன்னணி வீரர்கள்தான்.

பிரான்ஸில் ரஸ்தாக்களில் நடந்துசென்ற பொது மக்களை எதிரிகள் வெடிகுண்டுகளாலும், யந்திர பீரங்கிகளாலும் சுட்டு, கொல்லப்பட்டு, பிணக்குவியல்கள் கிடந்ததினால் ராணுவ கோஷ்டிகள் முன்னணிக்குச் செல்லமுடியாமல் தடைபட்டிருந்த பிரகாரம் கிரேட் பிரிடனிலும் அவ்வாறு நடக்காமல் முன்னெச்சரிக்கை செய்யப்பட்டது. என்ன நேர்ந்தாலும் அவன் எந்த இடத்தில் இருக்கிறானோ அதைவிட்டு நகரக்கூடாது என்பதுதான அதன் கருத்து.

ஒவ்வொருவரும் பொருள்களை ஏராளமாக சேர்த்து வைத்துக்கொள்ளக் கூடாதென்று தடுக்கப்பட்டார்கள். ஆனால் அங்கு தங்கள் குடும்பத்தார்களுக்கு படையெடுப்பு நேர்ந்தால் அரசாங்கத்தார் உணவு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்வரை தேவையான உணவை கொஞ்சம் சேமித்து வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். அதிகம் அழிவு நேரிடக்கூடிய பிராந்தியங்களில் பொது ஜனங்களுக்கு உணவு அளிக்கும் ஸ்தாபனங்கள் நியமிக்கப்பட்டன.

போருக்கு எல்லாம் ஆயத்தமாய் விட்டார்கள். பிரான்ஸ் அடிமையாக்கப்பட்ட சில தினங்களுக்குள்ளாகவே எல்லாம் தயாராகிவிட்டன. படையெடுப்பு நேர்ந்தால் அதற்குத் தயாராக காத்துக்கொண்டிருந்தார்கள்.



எப்படி படையெடுப்பு நேரிடும்? எங்கே தாக்கப்படும்? அப்படி படையெடுப்பு நேர்ந்தால் பொதுமக்களின் உணர்ச்சி எவ்விதம் மாறுபடும்? இப்பொழுது பொது மக்களுக்கிருக்கும் அமைதியும், நம்பிக்கையுமுள்ள உணர்ச்சி நிலைத்து நிற்குமா? அல்லது எங்கும் கலவரமாக இருக்குமா? ஒரு தேசத்தாரின் கதி இந்தக் கேள்விகளுக்குக் கிடைக்கக்கூடிய பதிலைப் பொருத்திருக்கிறது. உலகம் பூராவும் இப்படித்தான், போர்வீரர்களின் தைரியத்தையும், சாமார்த்தியத்தையும் போலவே பொது மக்களின் உணர்ச்சியும் இருக்கவேண்டும்.

> "விமானப் படையெடுப்பை சமாளிக்க மூன்று முக்கிய விஷயங்கள் தேவை. அதாவது சண்டை விமானமும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளும்; விமான படையெடுப்பு பாதுகாப்புகளும் (A. R. P.); ஜனங்களின் ஊக்கமும், ஒழுங்கு முறையும். இதில் கடைசி விஷயம் மிகவும் முக்கியமானது."
>
> —ஜெனரல் வேவல்.

### முதல் தாக்குதல்:

இப்பொழுது முதல் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலீஷ் கால்வாயில் எதிர் பக்கத்தில் 22 மைல்களுக்கப்பாலுள்ள தளங்களிலிருந்து அந்தத் துறைமுகங்களில் கூடியிருக்கும் கப்பல்கள் போவதற்கு வழி ஏற்படுத்துவதற்காக ஏராளமான பாம்பர் விமானங்கள் முதன் முதலில் தாக்க ஆரம்பித்தன. அல்லும், பகலும் ஆயிரக்கணக்கான டன்கள் நிறைந்த அதிகமாக வெடிக்கும் வெடிகுண்டுகள் நாடு நகரங்களிலெல்லாம் பொழிந்தன. ஆஸ்பத்திரிகள், மாதா கோவில்கள், தெருக்கள், குடியானவர்களின் வீடுகள், நகர விடுதிகள், நாட்டுப்புறத்திலுள்ள குடிசைகள், இவையெல்லாவற்றையும் பொது மக்களின் உணர்ச்சியைக் குறைவுபடுத்துவதற்காக தகுந்த லக்ஷியங்களாக கருதப்பட்டு தாக்கப்பட்டன.

எதிரியினால் முடிந்தவரை கொடூரமாகவும், ஆக்ரோஷமாகவும் தாக்குதல்கள் செய்யப்பட்டன. ஆனால் சாதாரண பொதுமக்களும் திடசித்தத்துடன் இருந்தார்கள். விடுமுறை நாட்களுக்காக தங்குமிடங்களில் வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் ஸ்நானம் செய்யப்போகிறவர்கள் இருந்ததுபோக, இப்பொழுது ஒருவரும் அங்கு போவதில்லை. கீர்த்தியான கட்டடங்கள் இருந்ததெல்லாம் இப்பொழுது எங்குபார்த்தாலும் அவைகள் அழிக்கப்பட்டிருந்தன.

ராம்ஸ் கேட் ஒரு அழகிய சிறு நகரம். அதில் 1,700 வீடுகள் உண்டு. அதன் ஜனத்தொகை சாதாரண காலத்தில் சுமார் 40,000. அப்பொழுது நடந்த ஒரு விமானத் தாக்குதலில் அந்நகரம் பூராவும் பாழாக்கப்பட்டது. அதிக தூரம் சுடக்கூடிய பீரங்கிகளிலிருந்து வெடிகுண்டுகள் டோவர் நகரத்திற்குள்ளே வந்து விழுந்தன. வெடிகுண்டு விமானங்களினாலும் அங்கு அழிவு நேரிட்டது. ஆனால் எங்குபார்த்தாலும் ஜனங்கள் உத்ஸாகத்துடன் இருந்தார்கள். போஜன சாலையில் சாப்பிடவும், ரஸ்தா மூலமாகவும், இருப்புப்பாதை மூலமாகவும் போக்குவரத்து நடந்துகொண்டிருந்தது. சிறிது காலத்திற்கு இளைப்பாற வந்தவர்களுக்குப் படக்காக்ஷிகளும், நர்த்தனங்களும் உண்டு.

நிலங்களில் கதிரறுப்பவர்கள், பெண்களும், வயது முதிர்ந்தவர்களும் ஹிட்லரின் கொடிய செய்கைகளுக்குக் கொஞ்சமும் பயமடைந்து பின்வாங்காமல் உழைத்து, அருமையான தானியத்தைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். தானியங்களை வீடுகளில் கொண்டு சேர்க்கும்பொழுது ஆகாயத்திலிருந்து வெடிகுண்டுகளும், யந்திர பீரங்கிகளிலிருந்து குண்டுகளும் சுற்றிலும் வந்து விழுந்தன.

யுத்த களத்தில் உள்ளவர்களிடம் மாத்திரம் தைரியம் தங்கிவிடவில்லை. ஒவ்வொரு வீடும், வயலும், தோட்டமும் யுத்த களமாக இருந்தது. ஒவ்வொரு மனிதனும் முன்னணி வீரனாக இருந்தான்.

இம்மாதிரி பொதுமக்கள் படையைச்சேர்ந்த மனிதர்களுக்கு தைரியம்தான் ஆயுதம். ஜாதி, நிறம், மதம் என்ற வித்தியாசமே கிடையாது. சொந்த ஊரில் பொது ஜனங்கள் தைரியமாக இருப்பதைப் பார்க்க போர்களத்தில் சிப்பாய்கள் தைரியத்துடன் போர் செய்தார்கள்.

இதன் பயன் யாவரும் அறிந்ததே. ஸ்பிட்பையர் ஹரிகேன் விமானங்கள், கர்வங்கொண்டிருந்த லுப்ட் வாபியைத் தூரத்தி அடித்தன. இங்கிலாந்தை படையெடுக்க சைனியங்களை ஏற்றிவந்த படகுகள் சமுத்திரத்தில் அமுக்கப் பட்டன. ஹிட்லரின் எண்ணங்கள் யாவும் பாழாயின.

இந்த வெற்றி யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களினால் மட்டில் அடைந்த தல்ல. தன் குடும்பத்தையும் வீட்டையும் பாதுகாக்க திடசித்தத்துடன் சாதாரண மனிதன் நிலைத்து நின்றதாலும், அல்லது இதை நோக்கங்களுக்காக இறந்ததி னாலும் இந்த வெற்றி கிடைத்தது.

## Mrs. "ட்ரெவிக்ஸின் மனைவியின் மனோகதி".

ஒரு கொடூரமான தாக்குதலுக்குப் பிறகு பலஹீனமான, வயது முதிர்ந்த கிழவி சொன்ன வார்த்தைகளை இந்த வியாசத்தில் காணவேண்டியது. அத்தியா வசியம்.

ராம்ஸ்கேட்டில் காத்தடித்தால் பறக்கக்கூடிய அவ்வளவு பலஹீனமானவர் களில் Mrs. F. H. ட்ரெவீக்ஸ் என்பவள் ஒருவள். சமீப காலத்தில்தான் அவள் நோயிலிருந்து குணமடைந்தாள். அவள் பாதுகாப்பான இடத்திற்குப் போயிருப்பாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படியல்ல.

Mr. ட்ரெவீக்ஸ் என்பவர் தேசபாதுகாப்புப் படையில் வேலையிலிருந்தார். அவர் பெண்ணும் தேச சேவையில் ஈடுபட்டிருந்தாள். Mrs. ட்ரெவீக்ஸ் வேறு இடத்திற்குப் போய்விட்டால் அவள் தகப்பனாவது, பெண்ணாவது குடும்ப வேலையைப் பார்க்கும்படி நேரிடும். அது காரணத்தினால் யுத்தப் பிரயத்தனத் திற்கு அவர்கள் செய்துவரும் வேலை சற்று குறைந்துவிடும். முதல் நாள் இரவு சுமார் 300 எரிகுண்டுகள் அந்தத் தெருவில் வீசப்பட்டன. மறுநாள் காலை ட்ரெவீக்ஸ் குடும்பத்தார்கள் சோர்வடைந்திருந்ததைக் கண்டதில் வியப்பேற் படாது.

## வேலை செய்ய வேண்டியது அவசியம்.

Mrs. ட்ரெவீக்ஸ் தாக்குதலைப்பற்றி எனக்குச் சொன்னதில் "பாதுகாப்பு அரணில் நீண்டகாலம் நீங்கள் தங்கியிருந்திருக்கவேண்டும்" என்றேன்.

"பாதுகாப்பு அரணா? ஒரு நாளுமில்லை. இரவு பூராவும் என் புருஷன் காவல் புரிந்தார். என் பெண்ணும் நானும் யார் அதிக எரி குண்டுகளை அணைக்கக் கூடுமென்று போட்டி போட்டோம். அநேக குண்டுகள் கூரைகளின்மேல் விழுந்தன. அவற்றை அணைக்க நாங்கள் கூரைகளின்மேல் ஏறவேண்டியிருந்தது. நான்தான் வெற்றியடைந்தேன். நான் 14 குண்டுகளை அணைத்தேன்; பிரேடா பத்து குண்டுகளைத்தான் அணைத்தாள்," என்று அவள் பெருமையாகப் பதில் சொன்னாள். ஆனால் "இந்த குண்டுகள் எல்லாம் உன்னை பயமுறுத்தவில்லையா?" என்று நான் கேட்டேன்.

"ஒரு காலத்தில் அப்படியிருந்தது, அதாவது பெரிய தாக்குதல்கள் ஏற்படுவதற்குமுன் அது அப்படியிருந்தது. வெடிகுண்டு தாக்குதல் ஏற்படப் போகிறது என்று எதிர்பார்ப்பதுதான் உண்மையில் நடந்த தாக்குதலைக்காட்டிலும் அதிக பயத்தைக் கொடுத்தது. ஒரு வெடிகுண்டு விழுந்தால் கொஞ்சதூரம்தான் அழியும். ஏதேனும் ஒரு இடத்தில் வெடிகுண்டு விழுவதும், அதே இடத்தில் நானிருப்பதும், அத்தகைய சதர்ப்பம் ஏற்படுவது வெகு அரிஸயம் அல்லவா?" என்று சொன்னாள்.



## ஸோவியத் ஐக்கிய நாட்டிற்கு அனுப்பும் ஸப்ளைகள் வீணாக மாட்டா.

## மர்மான்ஸ்கிலிருந்து மாஸ்கோ வரையிலும் உள்ள இருப்புப் பாதையில் தோன்றும் காக்ஷிகள்.

## யுத்த தளவாடங்களை கையாளுவது ஒரு ஆச்சரியமான காக்ஷி.

('டெயிலி மெயில்' பத்திரிகையின் விசேஷ நிருபர் நெக்லேபார்ஸன் எழுதியது).

நேசதேசத்தார்கள் வசம் உபரியாக இருக்கும் டாங்கிகள், பீரங்கிகள், விமானங்கள் இவைகளை ருஷ்யர்களுக்குக் கொடுத்து உதவவேண்டும். அவைகளைக் கொண்டு செஞ்சேனை தன் சக்திக்குத் தகுந்தவாறு மிகவும் சாமர்த்தியமாகவும், தீவிரமாகவும் உபயோகப்படுத்திக்கொள்ளும்.

ஸோவியத் ருஷ்யாவில் நேராடி சில மாதங்கள் வரை நான் பார்த்த விஷயங்களிலிருந்து மேலே குறிப்பிட்டபடி அபிப்பிராயப் பட்டேன். ருஷ்யர்கள் கடைசிவரை சண்டையிட எண்ணியிருக்கிறார்கள். அதனால் நாம் அவர்களுக்கு அனுப்பும் யுத்த சாமான்கள் ஒன்றையும் வீணாக்கமாட்டார்கள்.

மாஸ்கோவிலிருந்து இங்கு வரும்பொழுது மர்மான்ஸ்க்குக்கு வருவதற்குள் 10-நாட்கள் பிடித்தன. ஒன்றிரண்டு நாட்களில் ரயில்வண்டி 50 மைல்களுக்கு மேல் செல்லவில்லை. நாங்கள் வண்டிகள் மாறுவதற்காக அதிக காலத்தை வீணாகச் செலவழிக்க வேண்டியதாயிற்று. கப்பலில் பிரயாணஞ் செய்ய அதைப்பிடிக்க முயன்றதில் இடையில் ஏற்பட்ட காலதாமதம் மிகவும் கோபத்தை உண்டாக்க கூடியதாக இருந்தது.

ஆர்க்டிக் சமுத்திரம் வழியாக ருஷ்யாவிற்கு துணைக் கப்பல்கள் உதவியைக் கொண்டு வண்டி, வண்டியாக வந்திருக்கும் யுத்தப் பொருள்களை ரயில் வண்டி களில் ஏற்றி வந்ததினால், நான் ஏறிவந்த வண்டியில் ருஷ்யப்படை வீரர்களும் கப்பற்படை வீரர்களும் இருந்தபோதிலும் அதைப் பொருட் படுத்தாமல் நாங்கள் வந்த வண்டிகளைக் காக்கப்போட்டு விட்டார்கள்.

ஆகாய விமானங்களை பெட்டிகளில் அடைத்தும், டாங்கிகளை கித்தான்களில் சுற்றியும், அவற்றை செய்தவர்கள் பிரிடிஷ்காரர்கள், அமெரிக்கர்கள் என்று காட்ட அவர்கள் பெயர்களை பெட்டிகளில் வரைந்தும் அவைகளை ஏற்றி வண்டி, வண்டியாக வந்த காக்ஷி மிகவும் பயங்கரமாகயிருந்தது.

மாஸ்கோவிற்கும், மர்மான்ஸ்கிற்கும் இடையிலுள்ள ஒரு ஜங்ஷனில் இரண்டு நாட்கள்வரை தங்கவேண்டியிருந்தது. ஏனென்றால் சாமான் வண்டிகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்தன. அவைகளிலிருந்த சாமான்களை கீழே இறக்குவதற்கு ஏராளமான ருஷ்யர்கள் அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் தன் முழுபலத்தையும் உபயோகித்து சாமான்களை இறக்கினார்களே தவிர வேறு யந்திர சாதனங்கள் ஒன்றும் அவர்களிடமில்லை. இருப்புப் பாதைகளில் நிற்கும் வண்டிகளை ஒன்றோடொன்று சேர்ப்பதற்குகூட கைகளினாலே தள்ளி சேர்த்தார் கள். பிரிடனும், அமெரிக்காவும் ருஷ்யாவுக்கு அனுப்பும் ஸப்ளைகளைக் கண்டு ருஷ்யர்கள் வெகு ஆவலாக நடந்துகொண்டது மிகவும் உன்னதமான காக்ஷி.

மர்மான்ஸ்கில் கப்பல்துறை பிராந்தியம் மிகவும் அடசலாக இருந்தது. கடுமையான ஆகாய விமானத் தாக்குதல் ஏற்பட்டபொழுதும்கூட பண்டகசாலை களுக்குப் பாதுகாப்பு வேலையிலிருந்த பெண் காப்பாளர்கள்கூட அவர்கள் ஸ்தானத்தைவிட்டு நகரவில்லை. அங்குமிங்கு பரபரப்பாக வேலை நடக்கிறது. யுத்த தளவாடங்களைக் கைப்பற்றி போர்க்களத்திற்கு கொண்டு போவதற்கு தடையாக இருக்கும்படி ருஷ்யர்கள் ஒன்றையும் அங்கு ஒன்றையும் விடமாட்டார்கள்.

ஒரு தடவை கப்பலில் ஏறி ருஷ்யாவிற்குச் சென்றேன். அக்கப்பலில் ஏராளமான டாங்கிகளும், விமானங்களும் ஏற்றப்பட்டிருந்தன. அவைகள் துறைமுகத்திற்கு வந்ததும், ஏராளமாக ருஷ்ய வேலையாட்கள் அங்கு வந்து கூடினார்கள். அங்கு நடந்த நடவடிக்கையைப் பார்க்க ருஷ்யர்களின் பரபரப்பு சொல்லமுடியாது. இந்த சாமான்கள் வந்து சேர்ந்ததில் ருஷ்யர்கள் கொண்ட திருப்தியைப் பார்த்தவுடன் சாமான்கள் ஏற்றிச் சென்ற கப்பல்களுக்கு அபாயங்கள் நேரிட்டாலும் அவை பாராட்டத்தக்கதென்றே தோன்றிற்று.

இது முக்கியமான விஷயம். ஸப்ளைகளை ருஷ்யாவிற்கு கொண்டு செல்வது சிற்றுண்டியருந்துவதுபோல் அவ்வளவு சுலபமல்ல. அதில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு அதன் சிரமம் தெரியும். ஆனால் ஒரு தடவை ருஷ்யாவுக்கு ஸப்ளை கொண்டுபோனவர், மறுபடியும் ருஷ்யாவுக்குப் போக வெகு ஆவலாக இருப்பார்கள். இம்மாதிரி பிரிடிஷ் கப்பலாளிகள் சாமான்களைக்கொண்டு செல்வது பிரிடிஷ்-ருஷ்ய ஐக்கிய பந்தியத்தில் வெகு நேர்த்தியான அம்ஸம்.

---

# ஜெர்மனிக்குப் பொருளாதாரத் தேவைகளும், விஷி அரசாங்கத்தின் மாறுதல்களும். லவால் உணவுப் பொருள்கள் கொடுக்கிறவனாகவும் போலீஸ்காரனாகவும் இருக்கிறான். ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவின் பொருளாதாரம்.

(டோனல்ட் டேர்மான் பி. பி. ஸி. யில் சமீபத்தில் பேசியது).

ஜெர்மனியில் ராணுவத் தேவைக்காகவும், நேசதேசத்தார்கள் பிரான்ஸைச் சேர்ந்த நாடுகளைத் தாக்கினால் அவைகளின் தற்காப்புக்காகவும், பிரெஞ்சுக் கப்பற் படையின் உதவிக்காகவும் பிரான்ஸில் மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அதேமாதிரி பொருளாதாரத்திலும், கைத்தொழிலிலும், விவசாயத்திலும் ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள ஐரோப்பாவில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நேசதேசத்தார்களால் வெளியிலிருந்து பொருள்கள் வராமல் முற்றுகை போடப்பட்டு இருக்கிறது. உள்நாட்டிலிருந்து பொருள்களையெல்லாம் யுத்தத்திற்காக ஜெர்மானியர் எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

ஆகையால் ஐரோப்பா பூராவிலும் பொருளாதாரம் மிகவும் குறைவு. தொழிலாளிகள், பொருள்கள், யந்திரம், நிலக்கரி, எண்ணெய் போக்குவரத்து சாதனங்கள், உணவுப் பொருள்கள் இவையெல்லாம் ஜெர்மனியுள்பட எல்லா நாடுகளுக்கும் தேவையாக யிருக்கிறது. ஜெர்மனிக்குத்தான் இவை அதிகம் தேவையாக யிருக்கிறது ருஷ்ய யுத்தத்தில் ஏற்பட்ட ஏராளமான செலவு ஐரோப்பாவிலுள்ள இருப்பைக் குறைத்தும், ஐரோப்பா கண்டத்து நாடுகள் உபகரணமாக சாமான்கள் செய்வதைத் தடுத்தும், ஜெர்மனி போட்ட திட்டத்தைக் குலைத்தும் விட்டது.

யுத்தப் பொருள்கள் செய்வதற்கு பெருத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்த வசந்த காலத் தாக்குதலில் உபயோகிக்க அவற்றின் பெரும்பான்மை தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதன் பயனாக வருஷத்திற்கு வேண்டிய மற்ற பொருள்கள் போதாது.

## ஜெர்மனியின் தேவை.

இப்பொழுது ஜெர்மனியில் தொழிலாளிகள் குறைவு என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். கிழக்குப் போர்முனையிலிருந்த ஜெர்மன் படைகள் பலாத்காரமாகச் சேகரிக்கப்பட்டவர்கள். அவர்களை ஜெர்மனியின் நேசதேசத்தார்கள்



என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அயல்நாட்டு யுத்தக் கைதிகளைக்கொண்டு ஜெர்மன் தொழிற்சாலைகளிலும், விவசாய இலாகாக்களிலும் வேலைக்குச் சேர்க்க வேண்டியிருக்கிறது. மற்ற நாடுகளிலிருந்து மாற்றுப்பொருள்களும், கீழ்தரமான உலோகங்களும் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் தொழிலாளிகளில் நிலக்கரியும், கரியும் ஏராளமாகச் செலவாகிறது. சேகரித்து வைக்கப்பட்டிருந்த விளைவு பொருள்களும், உணவுப் பொருள்களும் பெரும்பாலும் செலவாகிவிட்டது. இவ்விதக் குறைவை ஈடுசெய்வதற்கு ஜெர்மனி மற்ற நாடுகளை நம்பி யிருக்கிறது. ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளும், பிரான்ஸும் ஜெர்மனியைக் காட்டிலும் இன்னும் கேடான நிலைமையில் இருக்கின்றன.

உணவுப்பொருள் ஒரு உதாரணம். ஜெர்மனியில் இப்பொழுது தயாரிக்கப் படும் உணவு ஜெர்மனியாருக்குத்தான் போதும். ஐரோப்பாவிலுள்ள மற்ற இடங்களில் விவசாயத்திற்கு உரம், யந்திரம் முதலியவைகளை ஸப்ளை செய்ய ஜெர்மனியால் முடியவில்லை. யந்திரம் ஓட்டுவதற்குத் தேவையான எண்ணெயும், மசகெண்ணெயும் கிடைக்கவில்லை. ஜெர்மனிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு உணவுப் பொருள்கள் கொண்டுபோவதற்கு போக்குவரத்து சாதனங்களும் இல்லை.

இதைக் காட்டிலும் ஜெர்மனியில் தொழிலாளிகள் மிகவும் குறைவு. அதனால் அவர்கள் மற்ற இடங்களிலிருந்து சேகரிக்கப்படுகிறார்கள். ஜெர்மனியிலுள்ள யுத்தக் கைதிகளும், அயல் நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கிற வேலைக்காரர்களும் சேர்ந்து ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசங்களிலுள்ள விவசாயத் தொழிலாளிகளை அதிகரிக்கச் செய்திருக்கிறார்கள்.

## மாறுதலடைந்த நிலைமை.

பிரான்ஸில் விளைபொருள்களும், எண்ணெயும், போக்குவரத்து சாதனங்களும் குறைவு. ஜெர்மானியர்கள் அதிகம் கேட்பதிலிருந்து பிரான்ஸின் நிலைமை மிகவும் கெட்டுப்போயிருக்கிறது. மேற்கு ஐரோப்பாவில் இருக்கும் பெருத்த கைத்தொழில் ஜெர்மானியரின் ஆதிக்கத்திலிருக்கிறது. இரும்பு, எஃகு, நிலக்கரி, பெட்ரோல் எண்ணெய் இன்னும் இறக்குமதி செய்யப்பட்டு இருப்பிலிருக்கும் விளைவு பொருள்களையும் வைத்துக்கொண்டு அவர்கள் அளந்து கொடுக்கிறார்கள்.

பிரான்ஸின் நிலைமை மோசமாக இருக்கிறது. சாதாரண காலங்களில் இரும்பு, எஃகு கைத்தொழிலுக்கு அதிகமாக உபயோகப்படுத்த பிரான்ஸில் போதுமான இரும்பு உலோகம் இருக்கிறது. பிரான்ஸ் எப்பொழுதும் துருப்பிடித்தவைகளை ஏற்றுமதி செய்வது வழக்கம். ஆனால் இப்பொழுது அதன் நிலைமை மாறியிருக்கிறது. பிரான்ஸிலுள்ள பெரிய கைத்தொழில்கள் எல்லாம் ஜெர்மானியரால் ஆக்கிரமிக்கப்பட்ட பாகங்களில் இருக்கின்றன. அங்குள்ள தொழிற்சாலைகள் ஜெர்மானியருக்காக வேலை செய்கின்றன. ஜெர்மானியர் பொதுவாக எல்லாப் பொருள்களிலும் முதலில் பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸிலுள்ளவர்களுக்கும், கொஞ்சம், கொஞ்சம்தான் கொடுக்கப்படுகிறது.

நிலக்கரி ஸப்ளை விஷயமாக நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. யுத்தத்திற்கு முன் பிரான்ஸுக்குத் தேவையான நிலக்கரியில் மூன்றில் ஒரு பாகம் முக்கியமாக பிரிடனிலிருந்து இறக்குமதி செய்து வந்திருக்கிறது. இப்பொழுது அது கிடையாது. பிரான்ஸிலுள்ள நிலக்கரியில் மூன்றில் இரண்டு பாகம், ஆக்கிரமிக்கப்பட்ட பிரெஞ்சு நாடுகளிலும், ஆறில் ஒரு பாகம், ஜெர்மனிக்குத் திரும்பப் போய்ச் சேர்ந்திருக்கும் லோரைனிலும் இருக்கிறது. இது காரணத்தால் பிரான்ஸில் கிடைக்கக்கூடிய நிலக்கரியில் பெரும்பாகம் ஜெர்மானியரின் தேவைக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. ஜெர்மனியின் தேவையோ வரவர அதிகரித்து வருகிறது. பிரெஞ்சுத் தொழிற்சாலைகளுக்கு ஜெர்மானியர் நிலக்கரி அனுப்புவதாக உறுதி சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சம் அனுப்பியும் வருகிறார்கள். ஆனால் அவையெல்லாம் ஜெர்மனியின் வேண்டுகோளின்படி யுத்தப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

## போக்குவரத்தில் கஷ்டங்கள்.

பிரான்ஸில் நிலக்கரியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது சுலபமல்ல. தங்கள் தேவைக்காக ஜெர்மானியர் அங்குள்ள ரயில் வண்டிகளின் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுபோய்விட்டார்கள். ரயில் வண்டிகளுக்கு நிலக்கரி போதவில்லை. ரஸ்தா போக்குவரத்துக்கு பெட்ரோலும், எண்ணெயுமில்லை. மிகவும் குறைவான பெட்ரோலையும், எண்ணெயும் வைத்துக்கொண்டு ஜெர்மனி சமாளித்துவருவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று என்னவென்றால், ஜெர்மனியின் தேவைக்கு அல்லாத மற்ற விஷயங்களுக்கு ஐரோப்பா பூராவிலும் பெட்ரோலும், எண்ணெயும் மிகக்கொஞ்சமாகத் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது.

உற்பத்திப் பொருள்கள், நிலக்கரி, பெட்ரோல், மசகெண்ணெய் இவைகளில் குறைவு ஏற்பட்டதினால் பிரெஞ்சுக் கைத்தொழிலும், விவசாயமும் பிரயோஜனமில்லாமல் போகின்றன. சாமான் உற்பத்தியும் குறைந்து வருகிறது.

பிரான்ஸில் சுரங்கத்திலிருந்து நிலக்கரி வெட்டுவதற்கு வேண்டிய சாதனங்களை பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மானியரிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். அவர்களில் சுரங்க வேலைக்காரர்கள் குறைவு. பிரெஞ்சு சுரங்கத்தில் வேலைசெய்த போலந்துக்காரர்களும், அயல்நாட்டுத் தொழிலாளிகளும் போய்விட்டார்கள். பிரான்ஸில் தேர்ச்சிபெற்ற சுரங்க வேலைக்காரர்களில் அநேகம் பேர்கள் யுத்தக் கைதிகளாக இருந்து ஜெர்மன் நிலக்கரி சுரங்கங்களில் வேலை செய்கிறார்கள். பிரெஞ்சு நிலக்கரி சுரங்கங்களில் வேலை செய்கிறவர்களுக்கு உணவு குறைந்துவிட்டதால் அவர்களின் வேலைத்திறமையும் குறைந்துவிட்டது.

## நிலைமை கேடடைந்து வருகிறது.

வேலை நிறுத்தமும், அதிருப்தியும் அங்கு ஏற்பட்டிருக்கிறது. கடினமான வேலைக்குக் குறைந்த உணவும், நிலக்கரி, பெட்ரோல் குறைவும் பொருத்தமானதல்ல. ஆகையினால் ஜெர்மனியின் பிரச்னைகள் அதிகரிக்க, அதிகரிக்க, பிரான்ஸின் நிலைமை கேடடைந்து வருகிறது. விளைவுபொருள்களும், நிலக்கரியும், எண்ணெயுமில்லாததினால் பிரான்ஸிலுள்ள தொழிற்சாலைகள் மூடப்பட்டு அங்குள்ள வேலைக்காரர்கள் ஜெர்மனிக்கு அனுப்பப்படுகிறார்கள்.

மத்தியதரைக்கடல் மார்க்கமாக உணவும், விளைவுபொருள்களும் கொண்டுவருவதற்குப் போதுமான கப்பல்களில்லை. முதலில் உணவுதான் அத்தியாவசியம். பிரான்ஸில் விவசாயமும், விவசாயிகளும், குதிரைகளும், யந்திரங்களும் குறைந்துபோய்விட்டதால், உணவுப் பொருள்கள் வெளியூரிலிருந்து வருவது அவசியமாக இருக்கிறது. கடல் மார்க்கமாக வரும் விளைபொருள்களும், ஜெர்மனிக்காவது, ஜெர்மனிக்காக வேலை செய்யும் பிரெஞ்சுத் தொழிற்சாலைகளுக்காவது போய்ச்சேருகின்றன.

லவால் அதிகாரத்திற்கு வந்ததற்கு இதுதான் காரணம். ஏதாவது ஒரு வழியில் அவன் நிர்ப்பந்தம் செய்து ஜெர்மனிக்குப் பொருள்கள் கொடுக்கவேண்டியது. பிரெஞ்சுக்காரர்களும் அதற்குச் சம்மதித்திருக்கும்படி செய்யவேண்டியதும் அவன் வேலை. அதனால்தான் அவனை உணவுப்பொருள் ஸப்ளை செய்கிறவனென்றும், போலீஸ்காரனென்றும் சொல்லுகிறார்கள்.

---



# பவளக்கடல் சண்டையின் சில முக்கிய அம்சங்கள்.
# விமானப்படை அதிகம் உதவிற்று.

*(H. C. பெர்ராபி எழுதியது).*

பவளக்கடல் சண்டையைப் பற்றிய தகவல்கள் கிடைப்பதற்குக் கொஞ்சகாலம் பிடித்துவிட்டது. கம்பியில்லாத் தந்தி முதலிய வசதியிருக்கும் இந்நாளில் தகவல்களை உடனே அரசாங்கத்தார் தெரியப்படுத்தாததால் ஏதோ பாதகமாக இருப்பதால் தான் இவ்விதம் தாமதப்படுத்துகிறார்களென்று பொது ஜனங்கள் சந்தேகிக்கலாம்.

ஆனால் ராணுவ தந்திரத்தை முன்னிட்டேதான் வெகுகாலம் மௌனம் சாதிக்கப்பட்டது. அங்கே நேசநாட்டு கப்பற்படைக்கும், ஜப்பானிய கப்பற்படைக்கும் சண்டை நடந்தது. இரு நாடுகளும் ஆரம்பகாலத்தில் ஒன்றிரண்டு அறிக்கைகளை வெளியிட்ட பிறகு இரு நாடுகளும் சும்மா இருந்துவிட்டன.

எதிரிக்குத் தங்களுடைய நோக்கங்களும் நடமாட்டங்களும் தெரியாமல் இருக்கவேண்டுமென்று இரு கக்ஷியினரும் அவ்விதம் செய்தனர். ஆகவே பவளக் கடல் சண்டையென்பது ரிவர் பிளேட் சண்டையைப் போலவோ, மடபன் சண்டையைப்போலவோ ஒரு சிறு சம்பவமல்ல. ஆனால் வெகுநாள் நடந்த பெரிய யுத்தமென்றே நினைக்கலாம்.

அதனால்தான் இன்னும் அதைப்பற்றினப் பூராத் தகவல்களைத் தெரிந்துகொள்ளமுடியவில்லை. இருந்தாலும் கிடைத்துள்ள சில தகவல்களைப் பரிசீலனை செய்து பார்ப்போம்.

### புதிய அம்சம்.

முதலாவதாக நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், மே மாதம் ஆரம்பமான பிறகு விமானங்களில் காவல் செய்யும்போது, ஸாலமன் தீவுகளுக்கு அருகில் ஜப்பானியக் கப்பல்கள் சேமிக்கப்படும் விஷயம் புலப்பட்டது. நமது விமானப்படையின் சக்தியால்தான் இவ்விஷயம் நமக்குத் தெரிந்தது. இல்லாவிட்டால் கடற்படையின் ரகசிய நடமாட்டங்களை, எளிதில் கண்டுகொள்ள முடியாது.

தற்காலத்தில் யுத்தக் கப்பல்களையும், போக்கு வரத்துக் கப்பல்களையும் 500 மைல் தூரத்திற்கு அப்பால் வைத்துக் கொள்ளலாம். ஆனால் முற்காலத்தில் 20 மைல் தூரத்தில்தான் வைத்துக்கொள்ள முடியும். ஆகவே கடற்படைக்கு விமான உதவியிருப்பது ஒரு முக்கிய சாதகம்.

மெடகாஸ்கருக்கு அனுப்பப்பட்ட பிரிடிஷ் கடற்படையும் விமானப்படையும், எட்டு வாரகாலம் சஞ்சாரத்திலேயே இருந்தும் கொஞ்சமும் சேதப்படாமல் சென்றதற்குக் காரணமும் இதுதான்.

அடுத்த விஷயம் என்னவென்றால் ஜப்பானியக் கப்பற்படை நகர்ந்து செல்ல ஆரம்பித்துவிட்டால் பிரிடிஷ் விமானங்களால் சுலபமாகவே டார்பிடோ செய்து அமுக்கப்படும். உதாரணமாக மே மாதம் 4டை வெளிவந்த அமெரிக்கக் கப்பல் இலாகா அறிக்கையின்படி அன்று பூரா நேசநாட்டுத் தாக்குதல் விமானத்தில் இருந்ததாகவென்று தெரிகிறது. வேறு கப்பல் சண்டை முதலியவை ஒன்றும் குறிக்கப்படவில்லை. விமானம் மற்றும் மூன்று கப்பல்களின் நஷ்டம் சொல்லப்பட்டிருந்தது.

அடுத்து இரண்டு நாட்களில் ஒரு சண்டையும் நேரவில்லை. ஆஸ்திரேலியாவிலுள்ள நேசதேசக் கப்பற்படையும், மேமீ 4டையே ஈடுபட்டிருந்தால் ஜப்பானியக் கப்பற்படை உடனேயே தோற்கடிக்கப்பட்டிருக்கும். அச்சண்டைகளுக்கிடையில் அவ்வளவு தாமதமும் நேர்ந்திருக்காது.

### ஜப்பானியரின் கூற்று மறுக்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பங்களில் ஜப்பானியர் பிரமாதமாக வெற்றியடைந்து விட்டதாகச் சொல்லிக்கொண்டனர். ஆனால் அதை ஒருவரும் நம்பவில்லை. ஏனென்றால் வாஸ் ஸ்பைட் வகையைச் சேர்ந்த பிரிடிஷ் யுத்தக் கப்பல் ஒன்றை அமுக்கி விட்டதாக டோகியோவில் சொன்னது 'பொய்யென்று' லண்டன் அதிகாரிகள் சொல்லிவிட்டனர்.

இவ்விதம் நடந்தது முதல் சண்டையைப் பற்றி தெரியப்படுத்திய அறிக்கைகளில் ஒரு வார்த்தைதான குறிப்பாக இருந்தது: ஜெனரல் மெக் ஆர்தரின் தலைமை ஸ்தானத்திலிருந்து கிடைத்த செய்திகளிலும் அது காணப்பட்டது. அதாவது எதிரி "திருப்பியடிக்கப்பட்டான்" என்றிருந்தது. அடுத்தபடி இரண்டு நாட்கள்வரை ஜப்பானியர் வேறு லக்ஷியங்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தாலும் அன்று நடந்த சண்டையில் ஜப்பானியர் திருப்பியடிக்கப்பட்டனர் என்று தெரிந்துகொள்ளலாம்.

### வெகுதூரம் கலைக்கப்பட்டன.

கொஞ்ச நாள் கிரமித்து விஷயங்கள் வெளிப்பட்டதும் ஜப்பானியக் கப்பல்கள் வெகுதூரம் கலைந்து ஓடிவிட்டன என்று தெரிகிறது. ஆகவே அந்த சந்தர்ப்பங்களில் அமெரிக்கக் கப்பற்படையினர் பல சிறு சண்டைகளையும் செய்திருப்பார்கள்.

இவைகளைப் பற்றிய தகவல்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கிடைக்கும். அல்லது ஜப்பானியருக்கு உண்மை தெரியாமலிருப்பதற்காக மௌனமாகவும் இருக்கலாம்.

ஏற்கனவே சொல்லியபடி விமானப் படையை உபயோகித்ததுதான் இதில் முக்கியம். விமானப்படை அதிகமாக ஈடுபட்டு நடந்த கடல் சண்டைகளில் இதுவே முதலாவதாகும்.

---

## மூவகைப் படையின் யுத்தத்தின் பயன்.
## பொருளாதார முற்றுகையினால்தான் வெற்றிகிடைக்கும்.

(மேஜர் ஜெனரல், ஸர். சார்லஸ் க்வின் என்பவர் லண்டனிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி.)

போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்பட்டிருப்பதினாலும், மாரிகாலப் போரினால் ஜெர்மன் துருப்புகள் களைப்படைந்திருப்பதினாலும், ஜெர்மானியர் எதிர்பார்த்தபடி சீக்கிரத்தில் வசந்த காலத் தாக்குதலை ஆரம்பிக்கமுடியாது என்று சொல்லப்படுகிறது. ஜெர்மன் அரசாங்க சபையில் ஹிட்லர் பேசியதிலிருந்து அவன் நினைத்தபடி திட்டங்கள் நடைபெறவில்லையென்று தெரிகிறது.

ருஷ்ய ஆகாய விமானப்படை பலம் வரவர அதிகரித்து வருவது ஹிட்லருக்குக் கலக்கத்தை உண்டாக்கியிருக்கவேண்டும். மேலும் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதல்கள் இப்பொழுது கடுமையாக இருப்பதால் ஜெர்மன் லுப்ட்வாபியின் பெரும் பாகத்தை மேற்குப் பிராந்தியத்தில் தற்காப்பு வேலைக்காகவும், திருப்பித் தாக்குவதற்காகவும் வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இப்பொழுதும் ஒரு போதுமில்லாதபடி ஆகாயச் சண்டையில் கிழக்கிலும், மேற்கிலும் இரண்டு போர் முனைகளிலும் அவன் யுத்தம் புரியவேண்டியிருக்கிறது.



### ஆகாய யுத்தம் மட்டில் போராது.

பிரிடிஷ் விமானப் படையின் தாக்குதல்கள் வெற்றிகரமாகத் தோன்றினாலும் ஆகாய விமானச் சண்டையின் மூலம் முடிவான பயன் கிடைக்கமாட்டாது. விமானத் தாக்குதல்களை அதிகப்படுத்துவதினால் ஜெர்மானியருக்குக் கடற் சண்டை, ஆகாயச் சண்டை, தரைச் சண்டை இவைகளை ஒத்து நடத்துவதில் பொருளாதார நெருக்கடி ஏற்படும்படி செய்வதைக் காண்கிறோம். அது நீண்ட கால யுத்தம். இருதிரப்பார்களுக்கும் மனித பலமும், பொருள் இருப்பும் அதிகம் இருப்பதால் யுத்தம் நீடித்து நடக்கும். அதில் எந்தக் கக்ஷிக்கு பொருளாதாரக் குறைவு ஏற்படுகிறதோ அக்கக்ஷியின் தோல்விக்கு வழி ஏற்படும்.

யுத்தம் ஆரம்பித்தபொழுது ஜெர்மனியின் நிலைமை மிகவும் உன்னதமாக இருந்தது. அதாவது ஜெர்மனியில் ஏராளமாகப் பொருள்கள் இருந்தன. அந்நிய நாடுகளிலிருந்தும் ஏராளமாகப் பொருளகள் வந்துகொண்டிருந்தன. உள்நாட்டிலிருந்தும் ஏராளமாகப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு ஸப்ளைகள் இருந்துவந்தன. பொருளாதார முற்றுகையினால் அயல் நாட்டிலிருந்து வரக்கூடிய பொருள்கள் தான் தடைபட்டன.

ஆகாய விமானத்தாக்குதல்கள் உள்நாட்டிலுள்ள பொருள்களையாவது, உற்பத்தி செய்யும் சக்தியையாவது விசேஷமாகக் குறைக்கவில்லை. ஆனால் ஜெர்மனியின் படையெடுப்புகளின் ஆரம்பத்தில் தரைச் சண்டைக்குத் தேவையான யுத்தப் பொருள்களை ஏராளமாகச் செலவு செய்யும்படி நேரிடவில்லை. ஏனென்றால் அப்பொழுது அதற்குப் பலமான எதிரிகளுடன் சண்டை செய்ய அவசியம் நேரிடவில்லை. இப்பொழுது நேசதேசக் கப்பற்படை பலத்தினால் அயல் நாடுகளிலிருந்து பொருள்கள் ஜெர்மனிக்கு வருவதற்கு கொஞ்சம்கூட வழியில்லை. ஆகாய விமானப்படை பலம் தொழிற்சாலைகளுக்குச் சேதத்தை விளைவித்து உள்நாட்டிலிருக்கும் பொருள்களை உற்பத்தி செய்யவிடாமலும் ஜெர்மன் பொதுமக்களுக்கு உணற்சிக் குறைவும் உண்டாக்கிவருகிறது.

### ருஷ்யாவில் தரைச் சண்டை.

ருஷ்யாவில் நடக்கும் தரைச் சண்டையில்தான் ஜெர்மனியிலுள்ள இருப்புப் பொருள்கள் எல்லாம் துரிதமாக அழிந்து போகின்றன. நேசதேசத்தார்கள் வசமிருக்கும் மூவகைப் படைகளும் இப்பொழுது போர் நடத்திவருகின்றன. ஆதலால் இருப்புப் பொருள்களுக்கும், கைத்தொழிலுக்கும் நெருக்கடி உண்டாகி ஜெர்மனியின் பலம் குறைந்துகொண்டு வருகிறது. இந்த முறை முற்றிலும் சரியென்று சொல்லமுடியாது. ஆனால் இம்முறையினால் அநேகர்கள் எதிர்பார்ப்பதற்கு முன்னாடியே நிச்சயமான வெற்றி கிடைக்குமென்று தெரிகிறது.

இம்மூன்று வகைப் படைகளும் வெற்றிக்குக் காரணமாக இருந்தாலும் அவை மூன்றும் ஒன்று சேர்ந்து போர் நடத்தினால்தான் வெற்றிக்கு வழியுண்டாகும். ஆகாய விமானத் தாக்குதல்களை அதிகரிக்கச் செய்வது மெத்த அவசியம். இதனால் தான் ஹிட்லருக்குத் தன் பிரயத்தனங்கள் அனாவசியம் என்றும், பொருள்களை வீணாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறதென்றும் தெரிந்தபோதிலும், அம்மாதிரி நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியிருக்கிறது. எதிரிகள் பழிக்குப்பழி வாங்குவதில் நமக்கு உயிர்ச் சேதம் ஏற்படுவதையும், பல கட்டடங்கள் அழிவதையும் குறித்து நாம் துக்கப்படவேண்டியிருக்கிறது. இருந்தபோதிலும் இவைகளைத் தவிர்க்க முடியாது. தற்காப்பு முறையிலிருந்த நமக்கு, எதிரிகளை எதிர்த்துப் போராடுவதில் செலவு அதிகம ஏற்படுகிறது. ஆனாலும் அவ்வித முயற்சியில் எதிரியின் படைப் பலத்தை பரவலாகப் பிரித்து வைக்கக்கூடும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 98—(5-வது பிரிவு).

1942—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜூன் | ... 6, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 7, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... | ,, | 6.00 |
| | | வம்பன் | ... | ,, | 6.30 |
| | 8, திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | தொலையானூர் | ... | ,, | 6.30 |
| | 9, செவ்வாய்க்கிழமை. | குளவாய்ப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| | 10, புதன்கிழமை ... | வெள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் | ... | ,, | 6.30 |
| | 11, வியாழக்கிழமை ... | புலியூர் | ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி | ... | ,, | 6.30 |
| | 12, வெள்ளிக்கிழமை... | பள்ளிவாசல் | ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 99—(1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 14, ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | | பூவரசகுடி | ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் | ... | ,, | 6.30 |
| | 15, திங்கட்கிழமை ... | திருமயம் | ... | ,, | 6.00 |
| | | மேலூர் | ... | ,, | 6.30 |
| | 16, செவ்வாய்க்கிழமை | பெருங்களூர் | ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | .... | ,, | 6.30 |
| | 17, புதன்கிழமை ... | அரிமளம் | ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 18, வியாழக்கிழமை ... | உடையாளிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... | ,, | 6.30 |
| | 19, வெள்ளிக்கிழமை... | அம்புக்கோவில் | ... | ,, | 6.00 |
| | | ரெகுநாதபுரம் | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—8-6-42.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] · 1942-ம்௵ ஜூன்௴ 13௳ [ந. 99


பிரஸங்கம் XCIX.

## வெற்றியை முன்னிட்டு பிரிடிஷ் விமானப் படை சண்டையில் ஈடுபடும் விதம்.

பீடர் G. மேஸ்பீல்டு M. A., A. F. R. Ae. S. எழுதியது.

(இல்லஸ்டிரேட்டட் லண்டன் நியூஸ் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

### பிரிடன்மேல் நடந்த கடும் யுத்தத்தால் பலவீனமாக மாறி பலமடைந்தது.

கிரேட் பிரிடன் இதற்குமுன் இருந்ததைவிட தற்சமயம் அதிக பலம் பெற்றிருக்கிறது. அதனுள்ளோர் யாவரும் ஸ்வதந்திரக் கோட்டைக்குள்ளிருப்பது போல் எண்ணிக்கொண்டும், ஒற்றுமையுடனும், எதிரியைத் தோற்கடிப்பதற்கான தீர்மானத்துடனும் இருக்கிறார்கள். பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர்களும், பைடர்களும் இரவும், பகலும் எதிரி நாட்டினுள் புகுந்து வர வரக் கடுமையாகவே தாக்கிவருகின்றன. பிரிடிஷ் விமானப்படை 1940-ம் வருஷத்தில் பிரிடன்மேல் நடந்த விமானச் சண்டையில் பல மாறுதலும், அனுபவமும் பெற்று முழு தைரியத்துடன் மறுபடி முன்னேறித் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது. ஸ்வதந்திரத்தை விரும்பும் மக்களின் ஊக்கம் படைத்திருக்கிறது. அமெரிக்கர்களின் உதவி பூர்ணமாக இருக்கிறது, இவ்வித சந்தர்ப்பங்களில் பிரிடிஷ் விமானப்படை பிரதி தினமும் பலமடைந்து வெற்றியை நோக்கி சண்டை செய்துவருகிறது.

### பிரிடிஷ் விமானப்படையும், ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படையும்.

அக்காலத்திய யுத்த சரித்திரம் எழுதப்படுமேயானால், ஜெர்மன் லுப்ட்வாபியை பிரிடிஷ் விமானப்படை தோற்கடித்ததைப்பற்றி பிரத்தியேகமாக ஒரு அத்தியாயம் எழுதப்படும். ஏனென்றால் அந்த சண்டையில் அடைந்த வெற்றியினால் தான் இங்கிலாந்தின் நிலைமை சாதகமாகி ஸ்வதந்திரத்தை உலகெங்கும் ஸ்தாபிக்க முடிந்தது. அக்கடும் யுத்தத்தில் ஜெர்மன் விமானப்படையின் பலத்தைக் கீழ்ப்படுத்தியதோடுமல்லாமல் விமான ஆதிக்கமே பிரிடிஷார் கைக்கு வந்தது. அந்த பலத்தைக்கொண்டுதான் தற்சமயத்தில் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகள்பேரிலும், ஜெர்மனியின் உள் நாட்டிலும் தாக்குதல்கள் செய்யப்படுகின்றன. முடிவான வெற்றியடையும் வரை இத்தாக்குதலில் கொஞ்சமும் குறைவு ஏற்படாது. யுத்தம் ஆரம்பித்தது முதல் 1941-ம்௵ ஜூன்௴ முடிய 6,041 ஜெர்மன் லுப்ட்வாபி விமானங்களும், 660 இதாலிய விமானங்களும் பிரிடிஷ்

விமானப்படையால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றன. அக்காலவரையில் பிரிடிஷாருக்கு 2,185 விமானங்களே நஷ்டம். அதாவது கிட்டத்தட்ட ஒரு பிரிடிஷ் விமானத்திற்கு 3 எதிரி விமானங்கள் வீதம் நஷ்டமாக்கப்பட்டிருக்கிறது!

### விமான ஆதிக்கம் அடைந்ததற்குக் காரணங்கள்.

நாம் விமான ஆதிக்கம் அடைந்ததற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. நமது விமானப்படையிலுள்ள ஸ்பிட்பைர், ஹரிகேன், வெல்லிங்டன் போன்ற ஒவ்வொரு விமானமும் பிரத்தியேகமான சக்திவாய்ந்தவை. எதிரியின் Me. 109 டார்னியர், யூங்கர்போன்ற விமானங்களுக்குச் சமமானவை. அடுத்தபடியாக பிரிடிஷ் விமான மாலுமிகளுக்கும், விமான ஓட்டிகளுக்கும், தரையிலும், ஆகாயத்திலும் பூர்ண பயிற்சி கொடுக்கப்படுகின்றது. மூன்றாவதாக, விமானப்படை தயாரிக்கும் தந்திர திட்டங்களெல்லாம் தகுந்த அதிகாரிகளால் நடத்தப்படுகின்றன இவ்வித அதிகாரிகளுக்கு பிரிடிஷ் விமான இலாகாவில் தகுந்த அநுபவம் இருக்கிறது. ஜெர்மனியிலோவெனில் 1918-ம் வருஷம் முதல் 1931-ம் வருஷம் வரை விமானிகளுக்கு ஒருவித அநுபவமும் கிடையாது.

### பிரிடன்பேரில் நடந்த விமானச் சண்டை.

நாம் முன் சொன்ன நற்காரணங்களின் பயனாக 1940-ம் வருஷத்தில் ஆகஸ்டு மீ முதல் ஸெப்டம்பர் மீ வரை நடந்த 7 வாரச் சண்டையில் பிரிடிஷ் விமானப்படை மிகவும் திருப்திகரமாக நடந்துகொண்டது. ஜெர்மன் முன்னேற்றம் தடைப்பட்டது. இவ்விதம் நடந்த சண்டையைத்தான் பிரிடன் சண்டை, அல்லது பிரிடன் மேல் நடந்த விமானப்போர் என்கிறார்கள். ஆகஸ்டு மீ 8உ முதல் ஸெப்டம்பர் மீ 27உ வரை ஜெர்மன் லுப்ட்வாபி படையின் 989 பைடர் விமானங்களும், 1,123 பாம்பர் விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன. 573 பிரிடிஷ் பைடர் விமானங்கள்தான் நஷ்டம். 5,261 ஜெர்மன் விமானிகள் நஷ்டம். 290 பிரிடிஷ் விமானிகள் நஷ்டம்.

### நாஜிகளின் பொய்ப் பிரசாரம்.

உண்மை இவ்விதமிருக்க ஜெர்மன் அரசாங்கத்தார் கொடுக்கும் கணக்கு விசித்திரமாகவே இருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் நம்பமுடியாத கணக்குகளையே கொடுக்கிறார்கள். உதாரணமாக, 1940-ம் வருஷம் ஆகஸ்டு மீ 15உ வெளிவந்த ஜெர்மன் கம்யூனிகேயில் 143 பிரிடிஷ் விமானங்கள் நாசமானதாகவும், 32 ஜெர்மன் விமானங்கள் நஷ்டமானதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் 18, ஜெர்மன் விமானங்களும், 34 பிரிடிஷ் பைடர் விமானங்களும் சேதம். அதிலும் 17 பிரிடிஷ் மாலுமிகள் தப்பினர். இதில் ஆச்சரியம் என்னவென்றால், 49 லுப்ட்வாபி விமானங்கள் பிரிடனிலேயே சிதறிக்கிடக்கும்பொழுது 32 விமானங்கள்தான் நஷ்டம் என்று ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்கள். அடுத்தபடியாக அக்டோபர் மீ 15-ம் தேதி இரண்டு இரவுகால பாம்பர்கள் நஷ்டமானதாக ஜெர்மானியர்கள் சொன்னார்கள். இதுவும் முழுப்பொய். ஏனென்றால் நார்விச், பிஷப், ஸ்டாட்போர்டு, புரோம் (Frome) டென்பி இந்த நகரங்களிலேயே நான்கு ஜெர்மன் விமானங்கள் எரிந்துகிடந்தன.

பிரிடிஷார் கொடுக்கும் கணக்குகளெல்லாம் எவ்வித பரிசீலனையிலும் உண்மையாகவே இருக்கும். ஜெர்மானியர் கணக்கு அவ்விதம் இருக்காது. பிரிடன்மேல் நடந்த விமானச் சண்டையின்போது நடந்த பகற்கால சண்டையை எடுத்துக்கொள்ளுவோம்.

### எதிரியின் பகற்கால விமானங்களின் தோல்வி.

பிரான்ஸ் விழுந்ததும் போலந்து, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகளை வசப்படுத்தியதுபோல சுலபமாக யுத்தத்தை முடித்துவிடலாம் என்று ஜெர்மன் அதிகாரிகள் நினைத்தனர். முதலில் ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படை ஸ்தாபனங்களைத் தாக்கி, தரைப்படைகள் உட்புகுவதற்குச் சௌகரியமாகச் செய்வதென்பது சகஜமாக இருந்தது. இம்முறையைக்கொண்டும், அதிக



நம்பிக்கையுடனும் கென்ட் கடற்கரையோரமாக ஜெர்மன் விமானப்படை பிரமாதத் தாக்குதலைச் செய்தன. மூன்று வெற்றிகரமான சண்டைகளையும் செய்தது. அதன் பாய்ச்சல் பாம்பர்களெல்லாம் தீவிரமாகத் தாக்கின.

அவ்விதத் தாக்குதலை பிரிடிஷ் விமானப்படையின் பைடர் விமானங்களே எதிர்த்து நின்றன. ஏராள எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. தென் இங்கிலாந்து பிரதேசம் பூரா எதிரி விமானங்களாகச் சிதறிக்கிடந்தன. அக்டோபர் மாதத்திற்குள் பிரிடிஷாரின் வெற்றி பூர்த்தியாயிற்று.

அவ்விதம் அடைந்த வெற்றிக்குக் காரணமாக மூன்று தினங்களில் யுத்தம் கடுமையாக நடந்தது. ஆகஸ்டு மீ 15-ம் தேதி பிரிடிஷ் விமானப்படை 181 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது. 34 பிரிடிஷ் விமானங்களே நஷ்டம். ஸெப்டம்பர் மீ 15-ம் தேதி பிரிடிஷ் பைடர் விமானங்கள் 185 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. 25 எதிரி விமானங்கள் சேதம். ஸெப்டம்பர் மீ 27-ம் தேதி 133 ஜெர்மன் விமானங்களும், 34 பிரிடிஷ் விமானங்களே சேதம். இதைப்போல் ஆகஸ்டு மீ 11உ முதல் 17உ வரையுள்ள வாரம்தான் மிகவும் விசேஷமானது. அக்காலத்தில் 495 ஜெர்மன் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன. 115 பிரிடிஷ் பைடர் விமானங்கள் நஷ்டம். அதே வாரத்தில் ஜெர்மனிக்கு 1,204 பைடர் விமானங்கள் நஷ்டம். 58 பிரிடிஷ் மாலுமிகளே நஷ்டம்.

### யுத்தத்தின் பயன்கள்.

அப்பொழுது அடைந்த வெற்றியினால் யுத்தத்தின் போக்கே மாறிவிட்டது. அவ்வித வெற்றிக்குக் காரணமாக ஒப்பில்லாத தைரியமும், விமானங்கள், விமானிகள் இவர்களுடைய நுட்பமான சக்தியும்தான் காரணமாயிருந்தன. இந்த யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் Ju. 87 என்ற யூங்கர் விமானங்களை அதிக ஆதாரமாக ஜெர்மானியர் கொண்டிருந்தனர். போலந்து, பிரான்ஸ் முதலிய இடங்களில் வெற்றியையும் அடைந்தனர். ஆனால் நமது பைடர் விமானங்களைக் கொண்டு எதிர்த்தால், யூங்கர் விமானங்களால் சமாளிக்கமுடியாது. உதாரணமாக யூங்கர் அல்லது ஸ்டூகா விமானத்திற்கு மணிக்கு 390 கிலோமீடர்தான் வேகம் உண்டு. ஆனால் பிரிடிஷ் ஹரிகேன் விமானங்களுக்கு 540 கிலோமீடர் வேகமும், ஸ்பிட்பைர் விமானத்திற்கு 590 கிலோமீடர் வேகமும் உண்டு. மேலும் ஸ்டூகா விமானங்களின் சிறகுகளில் நிரந்தரமாக இரண்டு பீரங்கிகளும், பின்னால் நகர்த்தி சுடக்கூடியதாக ஒரு பீரங்கியும் உண்டு. பிரிடிஷ் ஸ்பிட்பைர், ஹரிகேன் போன்ற விமானங்களுக்கு 8 பீரங்கிகள் இருப்பதால் யூங்கர் விமானங்களைச் சுட்டுவீழ்த்துவதில் ஆச்சரியமில்லை.

மெஸர்ஷ்மிட்ஸ் Me 109E போன்ற பைடர் விமானங்களை ஜெர்மானியர் உபயோகித்த காலத்திலும் பிரிடிஷ் பைடர் விமானங்கள் அவைகளுக்கும் மேலான சக்தியுடனேயே இருந்து சண்டை செய்தன. ஏனென்றால் Me. 109E என்ற மெஸர்ஷ்மிட்ஸ் விமானத்தைக் காட்டிலும் 20 கிலோமீடர் அதிக வேகத்துடன் கூடியது. Me 109E விமானத்தில் இரண்டு பீரங்கிகளும், இரண்டு யந்திர பீரங்கிகளும்தான். நிமிஷத்திற்கு 1,580 தடவைகள்தான் சுடமுடியும். ஆனால் ஸ்பிட்பைர் விமானத்தில் சிறகுகளிலேயே 8 யந்திர பீரங்கிகள் இருப்பதால் நிமிஷத்திற்கு 9,600 தடவைகள் சுடமுடியும். நிமிஷத்திற்கு பிரிடிஷ் விமானத்திலிருந்து 136 கிலோகிராம் கனமுள்ள குண்டுகள் போடமுடியும். ஜெர்மன் விமானத்திலிருந்து 82 கிலோகிராம் கனமுள்ள குண்டுகள்தான் போடமுடியும். இவ்விதமாக பிரிடிஷ் விமானங்களுக்கு வேகமும், தாக்கும் சக்தியும் அதிகமாக இருக்கின்றன. மேலும் விசைகளின் அமைப்பிலும் ஒரு சாதகம் இருக்கிறது. பிரிடிஷ் விமானங்களுக்கு பெரும் சிறகுகளும், குறைந்த கனமும் இருப்பதால் சுலபமாகவும், சீக்கிரமாகவும் இங்குமங்கும் திருப்பிக்கொண்டு சாதகமாகச் சண்டை செய்ய முடியும். ஜெர்மன் விமானங்களுக்கு அவ்வித சாதகம் கிடையாது.

### சமீபத்தில் செய்த சில மாறுதல்கள்.

சமீபத்தில் ஸ்பிட்பைர் விமானத்திலும் மெஸர்ஷ்மிட்ஸ் விமானத்திலும் சில புதிய மாறுதல்கள் செய்யப்பட்டன. அப்பொழுதும் ஸ்பிட்பையர் விமா

னத்தில்தான் அதிக சாதகமான அம்சங்கள் காணப்படுகின்றன. ஏனென்றால் அவைகளில் இரண்டு பீரங்கிகளும் நான்கு யந்திர பீரங்கிகளும் பதிக்கப் பட்டிருக்கின்றன. வேகமும் மணிக்கு 650 கிலோமீடருக்கு அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் Me 109F விமானத்திற்கு 620 கிலோமீடர் வேகமும் உயரப்பறக்கும் சக்தியும்தான் அதிகமாகியிருக்கின்றன. தாக்கும் சக்தி அதிகமாக வில்லை. அதில் ஒரு பீரங்கியும் 2 யந்திர பீரங்கிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே எல்லாவிதத்திலும் ஜெர்மன் விமானங்களைக் காட்டிலும் பிரிடிஷ் விமானங் கள் மேலானவை.

பிரிடிஷ் விமானப்படையில் ஸ்பிட்பையர் விமானம் அதிக முன்னேற்றத் துடன் கூடியது. இதைத் தவிர வேறு வகைகளும் இருக்கின்றன. ஹாகர், டார்னடோ, டிபூன் முதலிய ஒரு ஆள் ஏறிச் செல்லக்கூடிய பைடர் விமானங்கள் Me 109F காட்டிலும் மேலானவை. இவைகளின் வேகம் மணிக்கு 670 கிலோ மீடர். அதிக சாமான்களையும் ஏற்றிச் செல்லமுடியும். இவைகளும் பிரிடிஷ் விமானாதிக்கத்திற்குக் காரணம்.

## சாம்ராஜ்யம் பூராவும் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

இதில் ஒரு விசேஷம். கேவலம் விமானங்களை மாத்திரம் அதிக சக்தியுள்ள வைகளாகச் செய்து கொண்டால் போதாது. விமானிகளுக்கும் அதிக சாமர்த்தி யம் வேண்டும். சாம்ராஜ்யம் பூராவும் பயிற்சியளிக்கப்பட்டு புதிய புதிய மாலுமி கள் பிரிடிஷ் விமானப்படையில் சேர்ந்துகொண்டு நூற்றுக்கணக்கான மணி நேரம் விமானங்களிலேயே சஞ்சரித்துப் பெயர் பெற்றிருக்கின்றனர். விமான யுத்த தந்திரங்களிலும் பயிற்சி பெற்றிருக்கின்றனர். ஒவ்வொரு விமான ஓட்டிக்கும் பள்ளிக்கூடத்தில் பாடம் கற்பிப்பதோடு விமான தளங்களிலும் யுத்தரங்கங்களி லும் பயிற்சியளிக்கப்படுகிறது. அந்த இடங்களில் ஏற்கனவே அனுபவம்பெற்ற மாலுமிகள் போதகாசிரியர்களாக இருப்பார்கள்

ஜெர்மனியில் இவ்விதம் கிடையாது. அங்கே முன் பழக்கம் இல்லாமலேயே சண்டைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். பிரிடன்மேல் நடந்த விமானப்போரில் கற்ற பாடங்கள் ஒவ்வொரு பிரிடிஷ் மாலுமிக்கும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அக்காலத்தில் நடந்த போரின் விவரங்கள் படங்கள் மூலம் காண்பிக்கப்படு கின்றன.

## இராக்காலத் தற்காப்பு.

முன் கொடுத்த விவரங்களெல்லாம் பிரிடன்பேரில் நடந்த பகல் காலச் சண்டையில் ஜெர்மன் லுப்ட்வாபி தோற்றதைத் தெரியப்படுத்துகின்றன. பகல்காலத் தாக்குதலில் முன்னேற முடியாமல் ஜெர்மன் விமானங்கள் இராக் காலத் தாக்குதலை ஆரம்பித்தன. பிரிடிஷ் பொதுமக்களின் தைரியத்தைக் கொலைக்கக் கடுமையாக நகரங்கள் தாக்கப்பட்டன. ஆனால் பிரிடிஷ்காரரின் ஊக்கம்தான் அதிகரித்தது. இராக்காலத் தாக்குதலை எதிர்க்கும் பிரிடிஷ் பாம்பர்கள் சண்டைசெய்து ஆதிக்கமடைந்தன.

இந்த வெற்றிக்குக் காரணமாக புதிய தந்திரங்கள் கையாளப்பட்டன. ரேடியோ இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க உதவும் கருவிகளால் எதிரி பாம் பர்களின் வருகை கண்டுகொள்ளப்பட்டது. பிறகு ரேடியோ டெலிபோன் மூல மாக நமது பைடர் விமானங்களுக்கு எதிரி பாம்பர்களின் நிலை சொல்லப்பட்டு கடுமையான இரவுகளிலும் வெற்றிகரமாகச் சண்டை செய்யப்பட்டது.

இவ்விதம் இராக் காலங்களில் அடைந்த வெற்றியைக் கீழ்கண்ட கணக்கு களைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம். 1940-ம் ஆண்டு ஸெப்டம்பர் மாதத்தில் கிரேட் பிரிடனில் 17,569 பேர் காயமடைந்தனர். அதில் 6,951 பேர் இறந்தனர். அதே மாதத்தில் 20 ஜெர்மன் இராக்கால பாம்பர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அதாவது காயமடைந்த 886 பேருக்கு ஒரு எதிரி விமானம் வீதம் தாக்கப் பட்டது. 1941 எப்ரலில் 12,988 பேர் இறந்தனர். இதில் 6,062 கொல்லப் பட்டனர். பாம்பர்களின் நஷ்டம் 87; அதாவது ஒரு விமானத்திற்கு 149 பேர் வீதமாகிறது. மே மாதத்தில் காயமடைந்த 10,575 பேரில் 5,391 பேர்தான்



இறந்தனர். ஆனால் 144 எதிரி இராக்கால பாம்பர்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. ஜூன் மாதத்தில் காயமடைந்த 867-ல் 399 பேர் இறந்தனர். 42 ஜெர்மன் பாம் பர்கள் சுடப்பட்டன. அதாவது 20½ பேருக்கு ஒரு பாம்பர் வீதமாகிறது. மொத்த விகிதத்தைப் பார்த்தால் 73 பேர் காயமடைந்ததற்கு ஒரு எதிரி பாம்பர் நஷ்டமாகியிருக்கிறது. ஒரு ஜெர்மன் மாலுமி இறந்தோ, பிடிபட்டோ போன தற்கு 2 பிரிடிஷ் பொது மக்கள் இறந்திருக்கின்றனர்.

இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் இராக்காலத் தாக்குதலுக்கென்று தனி பிரிடிஷ் விமானப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஜெர்மனிக்கு அவ்வளவு இராக்கால விமானங்கள் கிடையாது. எதிரி நாட்டில் குண்டுபோடச்செல்லு வதனால் பிரிடிஷ் பாம்பர்கள் வெகுதூரம் பறக்கவேண்டும். கிரேட் பிரிடன் மேல் பாய்ந்த எதிரி விமானங்களின் கணக்கைப்போலவே பிரிடிஷ் விமானங்கள் எதிரி நாட்டில் தாக்கிவருகின்றன. அப்படியெல்லாம் இருந்தும் அதிகமான விமான நஷ்டம் 73 தான். அதுவும் மிகக் கடுமையான இரவுகளில் 2 மணி சுமாருக்கு, மேகங்கள் நிறைந்த இரவிலும் தாக்குதல் செய்ததால் ஏற்பட்டது.

பிரிஸ்டல் பியோபைடர்கள், டக்ளஸ் ஹாக்பைடர்கள் ஜெர்மன் Me 110, Ju 88, பைடர்களைக் காட்டிலும் எல்லா விதத்திலும் அதிக சக்திவாய்ந்தவை. ரேடியோ கண்டு பிடிக்கும் கருவிகளால் எதிரிகளின் விமான நடமாட்டத்தைக் கண்டுபிடித்து விடலாம். இனிமேல் இராக்காலங்களில் மேகங்கள் இங்கிலாந் தின் பேரில் மூடிக்கொள்ளுமாதலால் எதிரிகள் சுலபமாக வரமுடியாது. இது நமக்குச் சாதகமான அம்சம்.

## பிரிடிஷ் விமானப்படை ஆரம்பச் சண்டையைச் செய்கிறது.

1940-ம் வருஷம் கோடையிலும், சரத்காலத்திலும் பிரிடிஷ் விமானப் படைத் தற்காப்பிலேயே இருந்து வந்தது. பிரான்ஸை ஜெர்மனி பிடித்துக் கொண்டு அங்கு கடற்கரை ஓரமாயிருந்த தளங்களை வியாபித்துக்கொண்டதும் பிரிடனுக்கு பயம் அதிகரித்தது. இரவும் பகலும் பிரிடன்மேல் தாக்குதலும் செய்யப்பட்டது. சேதமும் அதிகம் ஏற்பட்டது. இருந்தாலும் பிரிடிஷ் விமானப்படை எதிர்த்துப்போராடி எதிரி விமானங்களைச் சிதறடித்து விமானி களையும் கொன்றது.

அது முதல் பிரிடிஷ் விமானப்படைக்கு அதிக விமானங்களும், விமானி களும் சேர்க்கப்பட்டது. ஜெர்மானியர் எதிர்பார்த்தபடி பிரிடிஷ் விமானத் தொழிற்சாலைகள் கெடவில்லை. முன்னைக்காட்டிலும் அதிகம் விருத்தியடைந்தன. அதிகமான விமானங்கள் கட்டி முடிக்கப்பட்டன. அமெரிக்கர்களின் உதவியும் வந்தது. உடனே தற்காப்புப் போர் முன்னேற்றப்போராக மாறிவிட்டது. அது பிரிடிஷ் விமானப்படை தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொண்டது. முதல் ஒரு சண்டையையும் லக்ஷியம் செய்யாது எதிரி நாட்டில் சென்று தாக்கி வருகின்றன.

1940-ம் ஆண்டு சரத்காலத்தில் ஜெர்மானியர் பகல் காலத்திலேயே பிரிடன் மேல் முன்னேற முடியவில்லை. ஆனால் பிரான்ஸிலுள்ள ஜெர்மன் தளங்களை பிரிடிஷ் விமானங்கள் வெற்றிகரமாகத்தாக்கி வருகின்றன. இதற்கு காரணங் களை நாம் ஏற்கனவேயே சொல்லியிருக்கிறோம். எண்ணிக்கைக் குறைவை பிரிடிஷ் விமானங்கள் பொருட்படுத்தவில்லை. பிரிடிஷ் விமானங்கள் சம மாகவோ அதிகமாகவோ இருக்கும் சந்தர்ப்பங்களில் ஜெர்மானியருக்கு அதிக நஷ்டம்தான். சில சந்தர்ப்பங்களில் பிரிடிஷ் விமானங்களுடன் எதிரிகள் சண்டைக்கே வராமலிருந்து விடுகின்றனர். ஆகவே இனிமேல் நாஜிகளுக்கு அதிக நஷ்டம்தான் ஏற்படும். ஏனென்றால் பிரிடிஷ் விமானங்களும் தந்திரங்களும் அதி கமாகிவருகின்றன.

## முன்னேற்றப் படையெடுப்புகள்.

1941-ம் ஆண்டு கோடையில்தான் பிரிடிஷ் விமானப்படை முன்னேறித்தாக்க ஆரம்பித்தது. முதல் ஆறு மாதங்களில் பிரான்ஸின்பேரில் 40 பெரும் வகை யான படையெடுப்புகள் செய்யப்பட்டன. ஜெர்மன் நிலயங்களில் நூற்றுக

கணக்கான டன் எடையுள்ள குண்டுகள் போடப்பட்டன. ஜூனின் பின் பாதிக்குள் 195 ஜெர்மன் பைடர்கள், 112 பாம்பர்களும் சுட்டுத்தள்ளப்பட்டன. 88 பிரிட்டிஷ் பைடர்களும், 5 பாம்பர்களும் நஷ்டம்.

### சக்தி வாய்ந்த யந்திரங்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக பகல்காலத் தாக்குதல்கள் அதிகமாகிக்கொண்டே போயின. பிளன்ஹீம் பாம்பர்கள் மாற்றிக் கட்டப்பட்டு, முன்னைவிட மூன்று மடங்கு குண்டுகள் அதிகமாக ஏற்றப்பட்டு ஜெர்மனியில் போய் குண்டுகளைப் போட்டன. இரவிலும் ஜெர்மனி தாக்கப்பட்டு வருகிறது. பல தடவைகளில் நூற்றுக்கணக்கான விமானங்கள் சென்று தாக்கின. எதிரிக்குள்ளதைக் காட்டிலும் பிரிட்டிஷ் விமானப்படையில் பெரிய பாம்பர்கள் இருக்கின்றன. ஸ்டர்லிங், ஹாண்டிலி பேஜ், ஹாலிபாக்ஸ், போயிங் கோட்டை, லிபரேடர் முதலியவை பல டன் குண்டுகளை ஏற்றிக்கொண்டு பெர்லின் போய் திரும்பிவந்து விடும்.

உதாரணமாக போயிங் கோட்டையை Ju 88-வுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். இது பழைய ரகம்தான். இருந்தாலும் Ju 88-ஐவிட மேலானது. போயிங்கின் வேகம் மணிக்கு 520 கிலோமீடர், Ju 88, 490 கிலோமீடர் வீதம் தான் செல்லும். போயிங்கில் 2,260 கிலோ கிராம் எடையுள்ள குண்டுகளை ஏற்றலாம். 3,200 கிலோமீடர் தூரம்போகலாம், 9,000 மீடர் உயரமும் போகும். Ju 88ல் 1,800 கிலோ கிராம் குண்டுகள்தான் ஏற்ற முடியும். 2,750 கிலோ மீடர் தூரம் போகும், 6,000 மீடர் உயரம்தான் பறக்க முடியும்.

போயிங் விமானம் பறக்கும் உயரத்தில் கீழிருந்து விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுட முடியாது. பைடர் விமானங்களும் தடுக்க முடியாது. பழைய விமானங்களானாலும் புதிய விமானங்களானாலும் ஜெர்மன் விமானங்களைக் காட்டிலும் மேலானவை. 5-வருஷ அநுபவத்தின்பேரில் இவை கட்டப்பட்டுள்ளன. வெல்லிங்டன் விமானம் 1,130 கிலோகிராம் குண்டுகளை ஏற்றிக்கொண்டு, 3,200 கிலோமீடர் போகும். ஆனால் He 111K ஹீங்கல் விமானம் 1,000 கிலோகிராம் குண்டுகளுடன் 1,850 கிலோமீடர்தான் போகும். பிரிடனின் பாதுகாப்புப் போர் விருத்தியாக ஆகத்தான் இவ்வம்சங்கள் சாதகமாகப் புலப்படும்.

### மத்தியக்கிழக்கு யுத்தம்.

இவ்வித விவரங்களுக்கிடையில் மத்தியக்கிழக்கு சண்டையைப்பற்றியும், கடற்படைக்கு உதவிய விமானங்களைப்பற்றியும் நாம் அவசியம் பிரஸ்தாபிக்க வேண்டும். ஸ்பெயின் சண்டையில் வெற்றியடைந்ததற்காக அதிக கர்வத்துடன் திரியும் இதாலிய விமானங்களுக்கு இரண்டுபேர் உட்காரும் பைடர்களும், மூன்று இஞ்ஜினுள்ள பாம்பர்களும், பிரிட்டிஷ் விமானப்படையின் ஹரிகேன் பைடர்களுக்கு முன்னால் நிற்கமுடியவில்லை. பிளன்ஹீம், மேரிலாண்டு பிரிட்டிஷ் பாம்பர்களுக்குச் சமமாகவும் ஆகவில்லை. ஜெர்மானியர் லிபியாவில் புகுந்ததும் இதாலிய விமானங்கள் கொஞ்சம் தலை நீட்டின. 1941-ம் ஞுஸ் ஜூன்மீ முடிவுவரை 1,031 இதாலிய, ஜெர்மன் விமானங்கள் மத்தியகிழக்கில் சுட்டுத் தள்ளப்பட்டன. 273 பிரிட்டிஷ் விமானங்களே நஷ்டம். தரையிலேயே 1,000 அச்சு நாட்டு விமானங்கள் அழிந்துபோயின.

### கடற்படைக்கு உதவும் விமானப்படை.

மத்தியதரைக் கடலில் இப்படை வெகுவாக ஈடுபட்டிருந்தது. தினம் செய்யும் சண்டையைத் தவிர, வேவு பார்க்கும் வேலையிலும் ஈடுபட்டிருந்தது. டார்பீடோ விமானங்களைக்கொண்டே மூன்று பெரும் வெற்றிகள் அடையப்பட்டன. 1940-ம் ஞுஸ் நவம்பர்மீ 11டையில் டாரண்டோவில் 'லிட்டோரியோ' வகையைச் சேர்ந்த பெரும் யுத்தக் கப்பலையும் 'கவோர்' வகையைச் சேர்ந்த இரண்டு யுத்தக் கப்பல்களையும், இரண்டு க்ரூயிஸர்களையும், இரண்டு துணைக் கப்பல்களையும் மூழ்கடித்தன. இவை யாவும் விமானப் புகைப்படமூலமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டன.

மார்ச்சுமீ 28உ மடபான்குடா சண்டையில் ஐந்து இதாலியச் சண்டைக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரே பிரிட்டிஷ் விமானி நஷ்டம். "பிஸ்மார்க்" கப்பல் கண்டுபிடிக்கப்பட்டு தாக்கப்பட்டதும் கப்பற்படை விமானங்களால்தான்.



அடுத்தபடியாக லுப்ட்வாபி பெரிது என்ற வார்த்தையைப் போக்கடிக்க வேண்டும். ருஷ்யாவை ஜெர்மனி தாக்கப் போனபோது போதுமான பாம்பர்கள் இல்லாததால், ஜெர்மனி பிரான்ஸிலிருந்தும் பாம்பர்களை அழைத்துக்கொண்டது. பிறகு பிரிட்டிஷ் விமானப்படையின் தாக்குதல் ஆரம்பமானவுடன் அதைத் தடுக்க முடியாமல் ஜெர்மனி தத்தளித்தது.

### வெற்றி கைமாறிவிட்டது.

யுத்தத்தின் போக்கே 1940-ம் ஞுஸ் சரத்காலம் முதல் மாறிவிட்டது. இதற்குக்காரணம் பிரிட்டிஷ் விமானப்படையின் வளரும் பலம்தான். வெற்றியடைவதானால் எண்ணிக்கையும், தந்திரமும் அதிகம்வேண்டும். அமெரிக்காவின் உதவியால் பிரிட்டிஷ் விமானப்படை இரண்டிலும் பலம் அடைந்துவருகிறது. 1942-ம் ஞுஸ் வசந்தகாலத்திற்குள் பிரிட்டிஷ் விமானப்படையின் எண்ணிக்கை லுப்ட்வாபிக்கு சமமாகிவிடும். அது முதல் விமான ஆதிக்கம் பிரிடனுக்குத்தான். ஜெர்மனிமேரில் தாராளமாகப் படையெடுப்புகள் நேரும்.

இதுவரை இல்லாத புதியவிதமான விமானங்களும் கட்டப்பட்டுவருகின்றன. ஜெர்மனியில் He. 113, பாக்-உல்ப், Me. 109-Eகளைத் தவிர வேறுவிதமே கிடையாது. கட்டுவதற்கு வசதியும் இல்லை. புதிதாக ஏதோ Fw. 190, Do 217, He. 177 போன்ற விமானங்களைக் கட்டுவதாக பிரசாரம் மாத்திரம் செய்கிறார்கள். எது வந்தாலும் பிரிட்டிஷ் விமானங்கள் ஒரு கைபார்க்கும். ஏனென்றால் இந்த விமானங்களைப்பற்றி அதற்கு நன்றாகத் தெரியும்.

### புதியவிதமானவை.

புதியவிதமான டிபூன், ஹாலிபாக்ஸ், மான்செஸ்டர், ஸ்டர்லிங், லைட்னிங், லிபரேடர், வென்ஜன்ஸ், பெர்முடா, கிட்டிஹாக், டார்னேடோ போன்ற பிரிட்டிஷ் விமானங்களைக்கொண்டு விமானாதிக்கம் அடையப்படும். இவை யாவும் ஏராளமாகக் கட்டப்படுகின்றன.

### ஆங்கிலேய—அமெரிக்க உற்பத்தி.

பிரிட்டிஷ் விமானத் தொழிற்சாலைகளும், அமெரிக்க விமானத் தொழிற்சாலைகளும் ஒன்று சேர்ந்து ஹிட்லரை ஒழிக்கும் ஒரே எண்ணத்துடன் வேலை செய்து வருகின்றன. ஜெர்மானியர் என்ன தற்புகழ்ச்சி செய்தாலும் இவர்கள் பயப்படமாட்டார்கள். அடங்கிக்கிடக்கும் நாட்டினரும் நேச நாடுகளுடன் ஒன்று சேர்ந்து, அச்சநாடுகளை ஒழித்து ஐரோப்பாவில் ஸ்வதந்திரத்தை ஸ்தாபிப்பார்கள்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 6—6—42-லிருந்து 12—6—42-வரை.

சீனு.—மத்திய செகியாங்கிலுள்ள விமான தளங்களடங்கிய சுங்க்ஸீன் நகரத்தைக் கைப்பற்ற எதிரி இன்னும் சண்டை செய்கிறான். கியாங், கியாங்ஸி மாகாணங்கள் வழியாகச் செல்லும் இருப்புப்பாதையைக் கைப்பற்றிக்கொள்ள ஜப்பானியர்கள் தாக்கிவருகின்றனர். சீனர்கள் விடாமல் குறுக்கு எதிர்ப்பு செய்து பென்சாங (Fenchang)குக்கு மேற்கேயுள்ள பான்டேவோ (Pantao) கியான்லிங்குக்கு மேற்கேயுள்ள ஸீனுமியோ (Hsiennumiao) நான்சாங்குக்கு மேற்கேயுள்ள உஷான்பு (Wushanpu) ஆகிய இவ்விடங்களை மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால் நான்சாங்குக்கு தென்கிழக்கேயுள்ள டுங்ஸியாங்கை இழந்துவிட்டார்கள்.

ஷான் ஸமஸ்தானங்களில் கெங்டங் (Kengtung) டிங்ஸங் (Tinsung) இவை இரண்டையும் ஜப்பானியர் கைப்பற்றியிருக்கின்றனர்.

பர்மாவுக்கு அனுப்பப்பட்ட சீன வெளிநாட்டுப்படை யூனுனுக்குள் பின் வாங்கியது. ஜப்பானியர் புசிபோ, மெயிஸ்டி, பௌலான் என்ற இடங்களில் தடுக்கவும் பட்டனர். விஷாபிங்குக்கும், சுசாங்குக்கும் இடையில் கடும் சண்டை நடக்கிறது.

சுஹ்ஸீனில் விஷப்புகையை ஜப்பானியர் உபயோகித்ததாகத் தெரிய வருகிறது. இவ்விதம் மீண்டும் செய்தால் ஜப்பானியர் பேரிலும் உபயோகப் படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் எச்சரிக்கை செய்திருக்கிறார். தாங்கள் அவ்விதம் உபயோகிக்க வில்லையென்று ஜப்பானியர் சொல்லிவந்தாலும் பிடிபட்ட ஜப்பானியக் கைதிகளிடமிருந்து பிடுங்கப்பட்ட தஸ்தவேஜுகளின் மூலமாக விஷப்புகையை உபயோகப்படுத்துவதற்கு ஜப்பானிய அரசாங்கத் தாரே அனுமதித்திருப்பதாகத் தெரியவருகிறது. மேலும் எதிரி யுத்தரங்கத்தில் விட்டுப்போன வெடிக்காத குண்டுகளைப் பரிசோதனை செய்து அவைகளில் விஷப்புகை இருப்பதாகவே சீன வைத்தியர்களும் அயல்நாட்டு வைத்தியர்களும் தெரிவிக்கிறார்கள். கடுகுப்புகை கொண்ட 800 குண்டுகள் போடப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரிடிஷ்-அமெரிக்க விமானப் பகுதிகள் சீனாவுக்கு வந்திருக்கின்றன.

**பஸிபிக் யுத்த நிலை.**—வடக்கே டச்சுத் துறைமுகத்தின் பேரிலும் கிழக்கே மிட்வே தீவுகளுக்கருகிலும், தெற்கே ஆஸ்திரேலிய துறைமுகமான ஸிட்னி பேரிலுமாக மூன்று தாக்குதலை ஜப்பானியர் செய்தனர்.

இதில் முதல் தாக்குதல் மூன்றாம் தேதி நடந்தது. அலூஷியன் தீவுகளி லுள்ள டச்சுத் துறைமுகம் இருமுறை தாக்கப்பட்டது. ஜப்பானுக்கும் வட அமெரிக்காவுக்கும் இடையில் இது ஒரு முக்கிய தளம். இங்கு நடந்த தாக்குதலை டோகியோ பேரில் செய்யப்பட்ட அமெரிக்கத் தாக்குதலுக்குப் பதிலாகவும் வேவு பார்க்கும் சமயத்தில் செய்யப்பட்டதென்றும், பின்னுடி நடக்கப்போகும் மிட்வே தீவு தாக்குதலிலிருந்து எதிரியின் கவனத்தை அப்புறப்படுத்துவதற்காக செய்யப்பட்ட தாக்குதலென்றும் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. அலூஷியன் தீவுகளில் சிலவற்றை எதிரி பிடித்திருப்பதாக அச்சுநாட்டு வதந்தி கூறுகிறது. இது ஊர்ஜிதமாகவில்லை. அமெரிக்கர் ஒருவர் இதைப்பற்றி சொல்லும்போது 'எதிரி ஒரு தீவையும் பிடிக்கவில்லை' என்றார்.

இரண்டாவது தாக்குதல் மிட்வே தீவுக்குப் பக்கத்தில் நடந்தது. இது டச்சுத் துறைமுகத்திலிருந்து 1,053 மைல்கள் அப்பாலுள்ளது. இங்கே ஜூன்மீ 4-ம்தேதி சண்டை ஆரம்பமாகி சில நாட்கள் நடந்தது. இத்தடவை 6-வது தாக்குதலாகும். ஆனால் மிகக் கடுமையானது. அமெரிக்கப் போக்குவரவைத் துண்டித்து இத்தீவில் இறங்குவதற்கென்றே ஜப்பானியரால் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இரண்டு மூன்று விமானம் தாக்கும் கப்பல்களும், அவைகளிலுள்ள விமானங்களும் நாசமாகி எதிரி பின்வாங்கினான். அத்துடன் எதிரியும் மற்றும் இரண்டு விமானமேற்றும் கப்பல்களுக்கும் மூன்று சண்டைக் கப்பல்களுக்கும், நான்கு க்ரூயிஸர்களுக்கும், மூன்று போக்குவரத்துக் கப்பல்களுக்கும் சேதம். இதை அமெரிக்கர்களுக்கு ஓர் பெரிய வெற்றி என்றே சொல்லவேண்டும். பேர்ல் துறைமுகத்தில் அடைந்த நஷ்டத்திற்கு எதிரி பேரில் ஓரளவு வஞ்சகமும் தீர்த்துக்கொள்ளப்பட்டது.

ஸிட்னி, நியூகாஸில் இவ்விரண்டு இடங்களிலும் எதிரி நீர்மூழ்கிகளைக் கொண்டு தாக்கினான். அதில் எதிரிக்குத்தான் 8 நீர்மூழ்கிகள் சேதம்.

**பர்மா.**—பிரிடிஷ் விமானப்படை அகியாப், ஆய்ஸ்டர்தீவு, தோமாலின் இவைகளைத் தாக்கின. அமெரிக்க விமானப்பகுதி ரெங்கூனைத் தாக்கியது.

**இந்தியா.**—ஒரு பெரும் துணைக்கப்பல் கூட்டம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தது. இதில் வந்த கப்பல்கள் அதிகமாக இருந்ததினால் இதிலுள்ள சாமான்களை ஒரே துறைமுகத்தில் இறக்க முடியவில்லை. ஸிலோனில் செய்யப்



பட்ட பாதுகாப்புகள் எதிரியின் தாக்குதலைத் தடுப்பதற்கும் முன்னேற்றப் போர் செய்வதற்கும் லாயக்காக இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. விமானப் படையெடுப்புக் காலங்களில் அவஸ்தைப்படுவோருக்குச் சிகிச்சை செய்வதற்காக பிரிடிஷ் குவேக்கர் கூட்டம் சீக்கிரத்தில் வந்துசேரும். யுத்த சாமான்களின் உற்பத்தி, போக்குவரவு, வரவு செலவு, சாமான்களுக்குச் சீட்டுக்கொடுப்பது முதலிய பிரச்னைகளில் ஒத்துழைப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டின் மந்திரி சபையிலிருந்து யுத்த சாமான்கள் சம்பந்தமான கமிட்டி என்ற பெய ருடன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அக்கமிட்டியில கப்பல்களைப் பழுதுபார்ப்பது, புதிதாகக்கட்டுவது முதலிய பிரச்னைகளைக் கவனிப்பதற்காக ஒரு டைரக்டர் ஜெனரல் நியமிக்கப்பட்டிருக்கிறார் 'யுத்தத்திற்குத் தேவையான பலசாமான் களை ஒரு வருஷத்திற்குள் இந்தியா தானாகவே உண்டுபண்ணிக்கொள்ளக்கூடும்' என்று அமெரிக்க டெக்னிகல் சங்கத் தலைவரான டாக்டர் கிராடி அபிப்பிராயப் படுகிறார்.

சமீபத்தில் கிளாஸ்டர் கோமகன் இந்தியா வந்திருக்கிறார். இவர் ராணுவம், பொதுஜனப் பாதுகாப்பு முதலியவைகளைப் பார்வையிடுவார்.

**லிபியா.**—நைட்ஸ்பிரிட்ஜ், பிர்ஹகீம் இவைகளுக்குப் பக்கத்தில் கடும் யுத்தம் நடக்கிறது. டெவில்ஸ்கால்ட்ரன் (Devils Cauldron), ஹெட்ஜ்ஹாக் (Hedge-Hog) முதலிய இடங்களில் சண்டை நடக்கிறது. ஹர்மெட்டைப் பிரிடிஷ் படைகள் பிடித்திருக்கின்றன. நைட்ஸ்பிரிட்ஜிக்கருகில் மாத்திரம் அச்சுநாட்டுப் படைகள் 310 டாங்கிகளை இழந்திருக்கின்றன. பாஸ்ராவில் 20,000 அமெரிக்கத் துருப்புகள் வந்திறங்கியிருக்கின்றன.

**ருஷ்யா**—ஸெபாஸ்டபூலை ஐந்துமாத காலமாக வீணாக முற்றுகையிட்டு, தற்போதுதான் ஜெர்மானியர் விமான மூலம் தாக்கிவருகின்றனர். கெர்ச்சைத் தாண்டி ஜெர்மன் துருப்புகள் டமானில் இறங்கியதாகவும், அனபாவைப் பிடித்த தாயும் சொல்லப்படுகிறது. கார்கவ்வில் புதிய ஜெர்மன் தாக்குதல்செய்யப் பட்டிருக்கிறது.

பால்டிக் கடலில் 10 ஜெர்மன் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

ஹங்கேரியின் துரோக மந்திரியான கல்லே என்பவனுக்கு ஹிட்லர் பேட்டி யளித்தான். பின்லாந்து போர் தலைவரான மானர்ஹீமை சந்தித்து அவனது 75-வது பிறந்த நாள் என்று வாழ்த்து செய்தான். உண்மையில் ருஷ்யப் போர் முனையில் பின்லாந்து அதிகம் ஈடுபடவேண்டுமென்பது ஹிட்லர் நோக்கம். பெர்லினுக்கும் சென்று ஐரோப்பாவின் காலையாளியான ஹீட்ரிச்சின் சவத்திற்கு மரியாதை செய்தான்.

**பிரிடிஷ் விமானப்படை.**—தாக்குதல்கள் எதிரிப்பிரதேசத்தில் ஓயாமல் நடந் தேறின. ப்ரெமன், க்லெ, ட்ரிபோர்ட், செர்பர்க், ஹாவேர். ஆஸ்டெண்ட், டியப், ரூர் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன.

ஸிரகூஸ் சர்வ கலாசாலையில் ஜூன் மாதம் 8-ம் தேதி ஒரு கூட்டத்தின் முன்பாக லார்டு ஹாலிபாக்ஸ் பேசும்போது பின்வருமாறு சொன்னார். 'ஹிட்லர் ஹிரோயிடோ முதலிய நாஸிக்கூட்டத்தை ஒழிப்பதற்கான ஏற்பாட்டில் லுபெக், ராஸ்டாக், கோலோன், எஸ்ஸன் டோகியோ முதலியவைகள் தாக்கப்பட்டது ஆரம்ப கட்டமாகும். உங்களுடைய விமானப்படையும் எங்களுடன சேர்ந்து கொண்டவுடன் ஜெர்மனியின் பேரில் கடும் வகையான தாக்குதல் செய்யப் படும்.

'ஜெர்மனியின் விமானத் தொழிற்சாலை இனி விருத்தியடைய முடியாது. அதன் உச்சநிலை அடையப்பட்டது. இங்கிலாந்திற்கும் ஜெர்மனிக்கும் விமான பலம் சமமாக இருக்கிறது. ஜப்பானில் ஒரு வருஷத்தில் தயாராகும் சாமான்களை அமெரிக்காவில் ஒரு மாதத்தில் செய்யப்படுகின்றன. நமது பலம் தினம் அபிவிருத்தியடைந்து வருகிறது.'

அதே தினத்தில் பிரிடிஷ் விமானப்படை பிரெஞ்சு மக்களுக்குப் பிரெஞ்சு பாஷையில் பின்கண்ட எச்சரிக்கையை அனுப்பியிருக்கிறது.

"பிரிடிஷ் விமானப் படையெடுப்புகள் இனிமேல் மிகக்கடுமையாகச் செய்யப்படுமாதலால் ஆக்கிரமித்த பிரான்ஸின் கடற்கரையோரமாக வசிப்பவர்களுக்கு பிரெஞ்சு பாஷையில் மீண்டும் எச்சரிக்கை கொடுப்பதென நிர்மானிக்கப்பட்டிருக்கிறது.

"இப்பிராந்தியங்களில் பல மனிதர்கள் ஆபத்தான இடங்களில் வசிக்கிறார்கள். ஏற்கனவேயே எவ்வளவோ பேர்கள் இறந்துமிருக்கின்றனர். தங்கள் வீடுகளை விட்டுவிட்டு குடும்பங்களைப் பத்திரமான இடங்களுக்குக் கொண்டு போவதுதான் நல்லது. இது ஒரு சிரமமான காரியம்தான்.

"இவ்வித எச்சரிக்கை லண்டனிலிருந்து சொல்லப்படுகிறது. பிரெஞ்சு பொதுமக்கள் முடிந்த சமயங்களில் யுத்தரங்கங்களை விட்டுவிட்டு செல்வது நலம்.

"இனிமேல் பெல்ஜியம் எல்லையிலிருந்து பிரனீஸ் வரையில் கடுமையான யுத்தம் நேரலாம்.

"ஆனால் எப்பொழுது படையெடுப்பு நேரிடுமென்பதைப்பற்றி முன்னோடியே சொல்லமுடியாது. சரியான சந்தர்ப்பத்திலும் சாதகம் ஏற்படுமென்று தோன்றினாலும் படையெடுப்பு செய்யப்படும்.

"அவ்விதம் படையெடுப்பு நேரும் காலத்தில் பொதுமக்களுக்குத்தான் ஆபத்து ஏற்படும். கடற்கரையோரத்திலுள்ள எல்லாப் பிரெஞ்சு மக்களுக்கும் இவ்வெச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. ஜெர்மானியர் ஆக்கிரமிப்பிலுள்ள எல்லா பட்டணங்களிலிருந்தும் வெளியேறுவதுதான் சரி.

"நாங்கள் தற்சமயமே உங்களை வெளியேறச் செய்வதற்குக் காரணமென்னவென்றால் பிரான்ஸின் விடுதலைக்காகச் செய்யப்படும் சண்டை வெற்றிகரமாக முடியவேண்டும்.

"படையெடுப்பு நேரும்வரை காத்திருக்கவேண்டாம். அந்த சமயத்தில் உங்களால் வெளியேற முடியாது. கூடிய சீக்கிரத்திலேயே அவ்விடத்தை விட்டுச்சென்று விடுங்கள்."

ஆங்கிலேய அமெரிக்க உற்பத்தி கமிட்டி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சாமான்களின் உற்பத்தி சம்பந்தமான திட்டங்கள் இனி அமைக்கப்படும். விளைவு பொருள்கள் உற்பத்தி சம்பந்தமாயும், உணவுப் பொருள்கள் உற்பத்தி சம்பந்தமாயும் இரண்டு போர்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இதாலிய வருஷக் கொண்டாட்டம்.—ஜூன் மீ 10-ம் தேதி முஸோலினி யுத்தத்தை ஆரம்பித்த இரண்டாவது வருஷக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் இதாலிக்கு தற்போது ஏற்பட்டுள்ள பரிதாபகரமான நிலையைப் பரிசீலனை செய்வது பொருத்தமாகும். டெய்லி டெலிகிராபில் அதைப்பற்றி கொடுத்துள்ள வர்ணனையைக் கீழே காணலாம் :—

'முஸோலினி ஒருவித செலவுமில்லாமல் கொள்ளையடிக்கலாமென்று யுத்தத்தில் ஈடுபட்டான். ஆனால் நாளதுவரை பிரான்ஸிடமிருந்தோ, பிரிடனிடமிருந்தோ ஒன்றையுமடையவில்லை.'

யூகோஸ்லோவியாவில் பொம்மை அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுவேதாயும் பிஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் இதாலிய பொம்மை அரசாங்கத்தார் அங்கு அரசாள முடியவில்லை. கிரீஸ் சம்பந்தமாக முஸோலினி அடைந்த அனுபவம் ஒன்றே போதுமானது.



கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள இதாலிய சாம்ராஜ்யம் தொலைந்தது. லிபியாவைக் காப்பாற்றுவதற்காகவே ஜெர்மானியர் உதவி செய்துவருகின்றனர். ஜெர்மன் அதிகாரிகளும், துருப்புகளும் அப்பிரதேசத்தை ஆக்கிரமித்திருக்கின்றனர்.

இதாலியருக்கு வருஷம் பூராவாக உணவு கிடைக்கவில்லை. மாரிகாலத்தில் உடுக்க உடை கிடைக்கவில்லை.

யுத்தத்தின் முதல் வருஷத்தில் 37,000 இதாலியர்கள் இறந்தும் காயமும் பட்டனர். இரண்டாவது வருஷத்தில் இன்னும் ஆயிரக்கணக்கான இதாலியர் இறந்தனர். ஜெர்மானியர் அட்டையைப்போல் இதாலியரின் இரத்தத்தை உறிஞ்சி ருஷ்யப் போர்முனையில் ஈடுபடும்படி செய்கின்றனர்.

இதாலிக்கும் மற்ற ஆக்கிரமித்த நாடுகளுக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால் ஜெர்மனியின் க்ஷேமத்தை முன்னிட்டு இதாலி அவஸ்தைப் படவேண்டியிருக்கிறது. சிறிது காலத்திற்குள் முஸோலினியைப்போல் வேறு எந்த அரசனும் இதாலிக்குத் துன்பத்தை விளைவிக்கவில்லை.

இந்தக் கஷ்டத்தில் ஜெர்மனி தோற்றால்தான் தமக்கு நன்மை கிடைக்குமென்று இதாலியர் நம்பியிருக்கின்றனர். அமெரிக்காவிலுள்ள இதாலியர்கள் கரிபால்டி என்பவனின் உணர்ச்சியுடன் உண்மையாகவே கொடுங்கோலை எதிர்த்து சண்டை செய்கின்றனர் இதாலியிலுள்ள இதாலியரும் அவ்விதம் சண்டை செய்வார்கள்.

பிரிடன்.—பலமுள்ள யுத்தக் கப்பல்களும், நாசகாரிகளும், மற்ற கப்பல்களும் பிரிடிஷ் கப்பல் படையில் சேர்ந்துள்ளன. இதை மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்கள் மூன்றுநாள் பார்வையிட்டார்.

---

## சத்ருவினுடையவும், சத்ருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—6—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—நாலுதரம் விமான எதிர்ப்புகள்—ஆக்கிரமித்த வட பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | 1 விமானி பத்திரமாய் தப்பிவிட்டார். | 9 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | கப்பல்துறைகள்.—ப்ருஜெஸ் (Bruges). | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr), பிரதேசத்தில். | | | |
| | எஸ்ஸன் (Essen) (1,036 பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நிலையங்கள்.—ஜெர்மனி (Germany) ஆக்கிரமித்த பிரான்ஸ் (France), ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | 35 விமானங்கள். | 2 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—6—42. | (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோட்டார் லாரிகள், வெடிமருந்து ஏற்றிச் செல்லும் வண்டிகள், கவசம்பூண்ட மோட்டார்கார்கள். டாங்கிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விமானமிறங்குமிடம்.-டேர்ளு (Derna). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-டிமோர் (Timor-Dutch)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | சைனிய வாஸஸ்தலங்கள், போக்குவரத்துகள்.—ஆடம் போயா (Atam boea). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ரபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கட்டடங்கள்.—துளகி (Tulagi). | | | |
| 2—6—42. | (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள், இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France), கிரவெலின்ஸ் (Gravelines) பிரதேசம். | | | |
| | ரயில்வே லக்ஷியங்கள்.-வட பிரான்ஸ் (France), பாஸ்டி-கலே (Pas-de-Calais) பிரதேசம். | 1 விமானி தப்பினார். | 9 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | கப்பல் துறைகள்—டியப் (Dieppe), வெடிகண்ணிகள் அறிக்கும் 2 கப்பல்கள்.—உஷாண்ட் (Ushant)டுக் கருகாமையில். | | | |
| | இரவில் ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.—எஸ்ஸன் (Essen) உள்பட ரூர் (Ruhr) பிரதேசத்தில். | | | |
| | கப்பல்துறைகள்.—டியப் (Dieppe). | | | |
| | வெடிகண்ணிகள் போடுவது-விரோதி சமுத்திரங்களில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 2—6—42. | (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | விமான தளங்கள், இருப்புப்பாதைகள், தொழிற்சாலைகள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான யந்திரப் படைகள்.—பர்ஹாஷிமு (Birhakheim)க்கு வடக்கே. | | | |
| | விமான எதிர்ப்புகள்.-ஸிரொனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | **ஸார்டினியா (Sardinia)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—பான்டிலேரியா (Pantellaria), காக்லியேரி (Cagliari). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | ஆய்ஸ்டர் (Oyster) தீவு.—ஆக்யாபு (Akyab)க் கருகாமையில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—லே (Lae). | | | |
| 3—6—42. | (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இருப்புப்பாதை—லெட்ரி போர்ட் (Le Treport). | | | |
| | கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg), லெஹாவர் (Lehavre). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வடபிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள்-ப்ரெமன் (Bremen). | | | |
| | கப்பல் துறைகள்.—டியப் (Dieppe). | | | |
| | வெடிகண்ணிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து, பெல்ஜியம் (Lowcountries). | | | 10 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 3—6—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான உதவி.—பிரிட்டிஷ் தரைப்படைகள். | | | |
| | விமான எதிர்ப்புகள்—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—டெர்னா (Derna), டிமிமி (Tmimi). | | | |
| | யந்திரப்படைகள்.—பர்ஹாக்கிம் (Bir-hakheim) பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கோயபாங் (Koepang). | தீக்கள் கிளம்பின. | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | ராணுவ முகாம், கப்பல் துறைகள்.—ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | கடல் விமானம்.—துளகி (Tulagi). | | | |
| 4—6—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்—விமான நிலயம்.—செர்பர்க் (Cherbourg) பிரதேசம். | அநேக எதிரி விமானங்கள் சேதமாயின. | | 1 விமானம். |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | | |
| | கப்பல் துறைகள்.—பொலாயின் (Boulogne). | | | |
| | இரவில்—கப்பல் துறைகள்.—டியப் (Dieppe). | | | |
| | விமான தளங்கள்.—ஆக்கிரமித்த வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | தரைப் படைகளுக்கு உதவும் விமானங்கள்.—ஸிரெனேகா (Cyrenaica) வில். | | | |
| | விரோதியின் சொந்தமான மோட்டார் வண்டிகள், டாங்கிகள், வெடிமருந்து ஏற்றிச் செல்லும் வண்டிகள். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 4—6—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு பெரிய விரோதிக் கப்பல்.—மத்திய தரைக்கடலின் மத்தியபாகத்தில். | | | |
| | **ஸிஸிலி (Sicily)**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | கடேனியா (Catania). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்.) | | | |
| | துறைமுகம் கப்பல் துறைகள்.—ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—விரோதி ஆக்கிரமித்த லே (Lae), ஸலாமாவா (Salamaua). | | | |
| 5—6—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்—மின்சார உற்பத்தி சாலைகள்.-ஆஸ்டெண்டு (Ostend), லெஹாவர் (Lehavre). | | | |
| | விமான நிலயங்கள்.-பிரிட்டானி (Brittany), அபிவில்லி (Abbeville), மோர்லே (Morlai), லானியன் (Lannion). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—கலே—டன்கர்க் (Calais—Dunkirk) பிரதேசத்தில். | | | |
| | இரவில்.-வெடிகண்ணிகள் போடுவது. விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—டெர்னா (Derna), மார்டுபா (Martuba). | | | |
| | தரைச்சண்டைக்கு விமானங்களின் உதவி.-நைட்ஸ் பிரிட்ஜ் (Knight's Bridge)க்கு மேற்கில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 5—6—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு—நியூ பிரிடன் (New Britain)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலையம், துறைமுகம்.—ரபால் (Rabaul). | | | |
| | தூரக்கிழக்கு—மிட்வே (Midway) தீவுகள்—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பற்படை.—மிட்வே (Midway) தீவுகளைத் தாக்கிற்று. | 3 ஜப்பானிய விமானங்களை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன. 4 க்ருயிஸர்கள், 3 துருப்பு ஏற்றும் கப்பல்கள் சேதமாயின. | | |
| 6—6—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ரோந்து—இங்கிலீஷ் கால்வாயி (English Channel)ல். | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள், கப்பற்படை தளம்.—எம்டன் (Emden). | | | |
| | விரோதி விமான தளங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | 9 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடங்கள், தரையிலுள்ள விமானங்கள்.—டெர்ணு (Derna), மார்டுபா (Martuba). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கவசம் பூண்ட வண்டிகளும், ஸப்ளை வண்டிகளும்.—ஸிரனைகா (Cyrenaica) யுத்தரங்கம் முழுவதிலும். | ஏராளமான வண்டிகள் சேதமாக்கப் பட்டன. | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | இதாலி (Italy)—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | துறைமுகம், கப்பல்கள்—நேபிள்ஸ் (Naples). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | தரையிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியத் துருப்புகளின் சேகரம்—சின்ட்வின் (Chindwin) நதிக்குக் கிழக்கேயுள்ள ஹோமலின் (Homalin) பிரதேசம். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—6—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி விமான நிலையங்கள் இன்னும் மற்ற லக்ஷியங்கள் ஹாலந்து (Holland), வடபிரான்ஸ் (France). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கருகாமையில். | 1 கப்பல் தாக்குண்டது. | நஷ்டமில்லை. | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகளின் கூட்டம், ஸப்ளை வண்டிகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | ஸார்டினியா (Sardinia)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கடல் விமானதளம்—காக்ளியாரி (Cagliari). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்—அக்யாப் (Akyab). | ஒரு வியாபாரக் கப்பல் சேதமாயிற்று; ஒரு அலைதாங்கி சேதமாக்கப் பட்டது. | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 2—6—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | அநேக விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 3—6—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | இரவில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | | 1 விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தூரக்கிழக்கு—அலாஸ்கா (Alaska)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டச்சுத் துறைமுகம்.—அலூஷியன் (Aleutian) தீவுகள். | | | |
| 4—6—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம் கிழக்கு ஆங்கிலியா (Anglia). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 5—6—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—பர்ஹாகிம் (Birhakheim) பிரதேசம். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 6—6—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—தென்கிழக்கு இங்கிலாந்தி (England)ல். | சொற்பச் சேதம். | 3 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—ஆஸ்திரேலியா (Australia) வட கரையில், | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—6—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம் தென்மேற்கு இங்கிலாந்தி (England)ல். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 8—6—42. (திங்கட்கிழமை.) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | லே (Lae). | | 2 விமானங்கள். | |
| | சீனு (China)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சீன நகரங்கள்.—சிகியாங் (Chekiang) மாகாணத்தில். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**தேசிய யுத்த முன்னணி.** இம் முன்னணியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விஷயங்களில் உணவுப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்வதும் முக்கியமாக கவனிக்கப்பட்டு வருகிறது. பர்மா, ஸயாம், இந்தோ-சைனா முதலிய இடங்களிலிருந்து இந்தியாவிற்கு வந்து கொண்டிருந்த 13,00,000 டன் அரிசி தற்சமயம் வரவில்லை. ஸிலோனுக்கு இந்தியாவிலிருந்து தான் அரிசி போகவேண்டியிருக்கிறது. இந்தியாவிலுள்ள சைனியத்திற்கு உணவு அளிக்கப்படவேண்டும். மத்தியக்கிழக்கு, சமீபக் கிழக்கு நாடுகளிலும் பெர்ஸியாவிலும் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் அங்கும் அரிசி அனுப்பப்பட வேண்டும். மேலும் மழைத்தட்டு முதலிய தொந்தரவுகளையும் ஈடுசெய்ய வேண்டும். போக்குவரவு சிரமமிருக்கிறது. எதிரித் தாக்குதல் நேர்ந்தால் எல்லாம் தடைபடும். ஆக இவ்வித சந்தர்பங்களில் உணவுப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யச் சொல்லுவது பொருத்தமாகும். குடியானவர்கள் இனி சோம்பல் பிடித்துத் திரியக்கூடாது. பருத்தி, கடலை முதலியவைகளை உற்பத்தி செய்தால் அயல் நாடுகளுக்கு அவைகளை அனுப்ப முடியாததால் உணவுப் பொருள்களை அந்தந்த இடங்களில் சாகுபடி செய்யலாம். 70,00,000 ஏக்கரா நிலம் அதிகமாக சாகுபடி செய்யப்படவேண்டும். இதற்காக அரசாங்கத்தார் போதிய வசதிகள் கொடுக்கின்றனர். மேமீ 25உ இந்தியா கவர்ன்

மெண்டார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் பின்கண்டபடி சொல்லியிருக்கின்றனர். அதாவது உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்து அவைகள் மிஞ்சிப் போனாலும் விலையாகாமல் போனாலும் கவர்ன்மெண்டாரே வாங்கிக் கொள்ளுவார்கள். அதனால் விலைவாசிகள் குறையாமல் செய்யப்படும்.

வி வி வி வி வி வி வி

**இந்தியப் பாதுகாப்பு.** ஒரு பெரிய துணைக்கப்பல் கூட்டம் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு இந்தியாவிற்கு வந்து சேர்ந்துவிட்டது. ஒரு கப்பலாவது, பீரங்கியாவது, மனிதனாவது நஷ்டமாகவில்லை. இதில் வந்த சாமான்கள் ஏராளமாக இருந்ததால் ஒரே துறைமுகத்தில் இறக்கமுடியவில்லை. ஆகவே பல துறைமுகங்களில் இறக்கப்பட்டன. பிரிடிஷ் சைனியத்திலிருந்து, காலாட் படை, பீரங்கிப்படை யந்திரப் படை, துருப்புகள், முதல் தரமான பிரிடிஷ் விமான மாலுமிகள் அமெரிக்க விமானிகள் ஆயிரக்கணக்காக வந்திருக்கின்றனர். இதைத் தவிர விமானங்களும், டாங்கிகளும், எதிரி டாங்கிகளைத் தாக்கும் பீரங்கிகளும், மோட்டார்களும், இதர தளவாடங்களும் எல்லாம் இறக்கப்பட்டன.

ஸிலோன் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. போதுமான யந்திரங்களும், இஞ்ஜினீயர்களும் விருத்தி செய்யப்பட்டுள்ளனர். ஹரிகேன் பைடர் விமானங்களும், வெகுதூரம் பறக்கும் படகுகளும வந்திருக்கின்றன. அமெரிக்காவில் கட்டப்பட்ட கடலினால் பறக்கும் படகுகள் தங்கிய ஒரு பகுதியே வந்திருக்கிறது. இவைதக் கனடா தேசத்தினர் ஓட்டுகின்றனர். ஆகவே கடல் மூலமாயும் ஆகாய மூலமாயும் ஸிலோனைத் தாக்கவரும் எதிரியைத் தடுக்க முடியும்.

இந்தியாவில் சாமான்களின் உற்பத்தி போக்குவரவு, முதலியவைகளைச் சரிவர நடத்த ஒரு யுத்த கால மந்திரி சபை ஏற்படுத்தப்படவேண்டுமென்று அமெரிக்க டெக்னிகல் கோஷ்டியார் சிபார்சு செய்திருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**சைனாவில் நிலைமை.** தற்போதய சண்டையைக் கவனித்தால் ஜப்பானியர், கியாங்ஸியிலுள்ள நான்சாங்கிலிருந்தும், குவாண்டனிலுள்ள காண்டனிலிருந்தும் பின்ஸர் படையெடுப்பு செய்வார்கள் போலிருக்கிறது.

சமீபத்தில் சைனாவிற்கும் பிரிடனுக்கு மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பதாயும் சீனர்களின் எதிர்ப்பு குறைந்துவருவதாயும் அச்சுநாடுகள் விசித்திரமாகக் கட்டிவிடுகின்றனர். இவை இரண்டும் ஆதாரமற்றவை என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. மே மீ 29௳ ஜெனரல் வேவல் சொல்லும்போது பர்மா யுத்தத்தில் ஜெனரல் ஸ்டில்வெல்லுக்கும், ஜெனரல் அலெக்ஸாண்டருக்கும் அதிக ஒற்றுமையிருந்ததாக அறிவித்தார். ஜூன் மீ 3௳ காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஈடன், சைனாவிற்கு நேசநாடுகளின் உதவி தாராளமாகவே இருக்கிறதென்று சொன்னார். மற்ற இடங்களில் ஏற்படக்கூடிய தேவையும் கவனிக்கப்படுகிறது என்றார். சைனாவின் பொருள் நிலை மோசமாக இருக்கிறதென்று ஜப்பான் சொல்லிவருகிறது. ஆனால் சமீபத்தில் தான் கிரேட் பிரிடனுக்கு 500லக்ஷம் பவுன் கடன் கொடுத்து உதவியிருக்கிறது. 50லக்ஷம் பவுன் தனியாகக் கொடுத்து சீன நாணய நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளும்படிக்கும் செய்தது. மேலும் 80லக்ஷம் பவுன் மதிப்புக்கு ராணுவ சாமான்களைக் கடனாகவே கொடுத்து உதவுகிறது.

மேலும் சீனர்களின் எதிர்ப்புக் குறையவுமில்லை. 7 நாட்கள் வரை தீவிர சண்டை செய்த பிறகுதான் கின்ஹ்வா எதிரிவசமாயிற்று. அதில் எதிரிக்கு ஏராள நஷ்டமும் நேர்ந்தது. விஷப்புகையை உபயோகித்ததால் தான் சீனர்



களை விடவேண்டி வந்தது. ஹூனன் மாகாணத்தில் சீனர்கள் டெங்சங—ஹங்லிங்—பயோஷான் முக்கோணத்தில் எதிரிகளைத் தடுத்து ஹூபே, அன்ஹவெய் என்ற இடங்களை மும்மரமாகத் தாக்கிவருகின்றனர்.

லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் சீனர்கள் நடத்திவரும் ஐந்து வருஷ சண்டையைப் பற்றி ஜூன் மீ 6௳ பின்வருமாறு சொல்லப்பட்டிருந்தது.

"இந்த நீண்ட கஷ்டத்தில் சீனர்களின் தைரியம் மட்டில் குறையவில்லை. எதிரி எவ்வளவு பிரதேசங்களைப் பிடித்தாலும் சீனர்களின் ஊக்கத்தைக் குறைக்க முடியாது.

"சைனாவுக்கு உதவியனுப்பவேண்டியது அவசியம். வாஷிங்டனில் தயாராகியிருக்கும் ஒப்பந்தம் சைனாவிற்கு மீண்டும் உதவியனுப்பப்படுமென்ற விஷயத்தைத் தெரியப்படுத்துகிறது.

"மீண்டும் அதற்கு ஒரு அத்தாக்ஷி வேண்டுமானால் இந்தியாவில் சேமிக்கப்படும் பெரிய சைனியமே ஒரு அடையாளமாகும். ஏனென்றால் இந்தச் சைனியம் பர்மாவைத் திரும்பப் பிடிக்கத் தீர்மானித்திருக்கிறது.

வி வி வி வி வி வி வீ

**பஸிபிக் சம்பவங்கள்.** ஸிட்னி, டச்சுத் துறைமுகம், மிட்வே தீவுகள், இவைகளை ஜப்பான் ஏககாலத்தில், தாக்கியது தான் பஸிபிக்கில் நடந்தகப்பல் சண்டைகளாகும். அதிக தூரமுள்ள பல இடங்களைத் தாக்குவதென்பது ஜப்பானியரின் ஒரு தந்திரமாகும். இப்படித் தாக்கி, முக்கியமான லக்ஷியம் எது என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் செய்வார்கள். ஆனால் எந்த இடம் தாக்கப்பட்டாலும் நேசநாடுகள் தயாராக இருக்கின்றனவென்பதும் இதிலிருந்து விளங்குகிறது. ஸிட்னியைத் தாக்க வந்த எதிரி நீர்மூழ்கிகளை ஆஸ்திரேலியர் முறியடித்தனர். டச்சுத் துறைமுகத்தைத் தாக்கியதும் ஒரு சிறிய சம்பவம் தான். டோகியோவை முன்பு தாக்கியதற்குப் பதில் தாக்குதலாக இதைக் கருதலாம். மிட்வே தீவுகளை எதிரிகள் பலமாகவே தாக்கினர். ஆனால் அமெரிக்கக் கப்பற்படை இதற்குத் தயாராக இருந்ததால் எதிரி நஷ்டத்துடன் பின்வாங்கி ஓடநேரிட்டது. அட்மிரல் நிமிட்ஸ் கூறும் விதமாக "பேர்ல் துறைமுகத்தை எதிரி தாக்கியதற்கு ஓரளவு வஞ்சகம் தீர்த்துக் கொள்ளப்பட்டது".

வி வி வி வி வி வி வீ

**லிபியா பாலைவனம்.** ஜெர்மானியரின் திடீர் தாக்குதல் இங்கே தற்சமயம் பலிக்கவில்லை.

ஏப்ரல், மே மாதங்களில் மால்டாவைத் தாக்கியதும், கிரீஸ், கிரீட் இங்கிருந்து புதிய யூங்கர் விமானங்கள் வந்திருப்பதும், நெஷ்ரிங், பிஸ்மார்க் என்ற புதிய தளகர்த்தர்கள் வந்திருப்பதும் இந்த யுத்தத்தை மும்மரமாக நடத்தத்தான். இவ்விஷயங்களை நேசதேச அதிகாரிகளும் உணர்ந்து எங்கே, எப்போ சண்டை நேருமென்பதைத் தெரிந்துகொண்டனர். ஆனதால் தான் அச்சுநாட்டு டாங்கிப் படை முன்னேற முடியவில்லை.

ஆரம்ப காலங்களில் அச்சுநாட்டுப்படைகள் உட்புகுந்தது வாஸ்தவமானாலும் பாலைவனச் சண்டையில் அவர்களால் சமாளிக்க முடியவில்லை. இதுவரை ஐந்து தாக்குதல்கள் நடந்ததில் இரண்டு நேசநாடுகளாலும் மூன்று எதிரிகளாலும் செய்யப்பட்டன. எந்தப் பக்கம் முதலில் முன்னேற்றம் செய்யப்பட்டதோ அந்தப் பக்கம் ஜயத்துடன் கூடியிருந்தது.

பிரிடிஷாரின் குறுக்கு எதிர்ப்புகளை முறியடித்து 2,000 பேர்களையும் ஸர் கோறன் என்பவனையும் கைதி செய்திருப்பதாகச் சொல்லுகின்றனர். ஸர் கோறன் என்பவரே கிடையாது. டொப்ருக்கை எதிரி பிடித்தபாடில்லை. ஜெர்மன் ஆபிரிக்கப்படைத் தலைவனான ஜெனரல் லூட்விக் க்ருவெல் கைதியானான். ஜெர்மன் அணிகள் மேற்கு நோக்கி ஓடுகின்றன. 206 டாங்கிகளையும்; மற்றும் ஏராள

சாமான்களையும் போட்டுச் சென்றனர். ரோமல் தந்திரம் பலிக்கவில்லை. ரோடுண்டா ஸெகுவாலியைப் பிரிடிஷார் பிடித்துள்ளனர்.

நியூஸ் கிரானிகிள் பத்திரிகையின் ராணுவ நிருபர் பின்கண்ட விதமாகச் சொல்லியுள்ளார்: "சீரதிடம் தான் முக்கியமானது. களைத்தால் தோல்விபெற முடியாது. ஜெனரல் ரிட்சி யந்திரப்படையை உபயோகித்தால் ஜெர்மன் டாங்கிகளை அழிக்கலாம்.

'ஸிரெனைகாவில் கோடைகாலம் வந்ததால் சண்டை நின்றுவிடாதென்றும் சிலர் நினைக்கின்றனர். அது உண்மைதான். நாஸிகளைக் கடுமையாகத் தாக்கி, மீண்டும் நாம் அவர்களை துரத்தியடித்தால் ட்ரிபோலி, பெங்காஸி உள்பட நமது வசமாகிவிடும்'.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானின் பலம் குறைந்துவருகிறது.** "ஜப்பானுடைய கடற்படையை இரட்டிப்பாகவும், விமானப்படையை மூன்று மடங்காகவும் அதிகப்படுத்தினாலும் ஜப்பான் வெற்றியடைவது சிரமம். காலத்தை மாத்திரம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் அது அடைந்த வெற்றிகளெல்லாவற்றையும் நாம் தோல்விகளாக மாற்றிவிடலாம்.

சைனியங்களுக்குத் தளவாடம், பீரங்கிகளனுப்புவதும், விமானப்படைக்கு விமானங்களனுப்புவதும், கப்பற்படைக்குக் கப்பல்களனுப்புவதும் ஜப்பானுக்குச் சிரமமாகிவிடும். இதற்கு லாயக்காக சாமான்களின் உற்பத்தியும் ஜப்பானில் மட்டு.

கனிப் பொருள்கள் குறைவானதால் அயல்நாட்டு சாமான்களைப் பிரதீக்ஷிக்கவேண்டும். இனி தன் நாட்டில் கிடைக்கக்கூடியவைகளைத்தான் உபயோகித்துக்கொள்ளமுடியும். இதுவரைப் பிடித்துள்ள பிரதேசங்களில் பெரும் தொழிற்சாலைகளும் கிடையாது. இருந்தவைகளையும் நேசநாடுகள் பூதகன முறைக்கு உட்படுத்திவிட்டன. இன்னும் சில மாதங்களுக்குள் அவைகளை ஜப்பான் உபயோகித்துக்கொள்ள முடியாது. அடுத்தபடியாக கப்பல் சிரமமுமிருக்கிறது. ஜப்பானுக்கு அதிக வியாபாரக் கப்பல்கள்தானுண்டு. நஷ்டமானவைகளைச் சுலபமாக ஈடுசெய்துகொள்ளவும் முடியாது.

அப்படி புதிதாகக் கட்டவேண்டுமானால் எஃகு தேவை. பீரங்கி முதலிய சாமான்களுக்கும் எஃகு தேவை. விமான இஞ்ஜின்களுக்கு எஃகு தேவை. ஆக ஜப்பானுக்கு எஃகு முதலில் தேவையாக இருக்கிறது.

**ஏழ்மையின் எல்லை.** ஜப்பான் யுத்த சாமான்களைச் செய்வதையும், நேசநாடுகள் உற்பத்தி செய்வதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஜப்பானுக்குள்ள குறைவு தெரியவரும். பஸிபிக் பிராந்தியத்திற்கு முக்கியமாக அமெரிக்கா தான் அதிக சமான்களை அனுப்பி வருகிறது. அமெரிக்காவுடன் இவ்விஷயத்தில் ஜப்பானால் போட்டி போடவே முடியாது. உதாரணமாக விமானங்களை எடுத்துக்கொண்டால் ஜப்பான் மாதம் 450 வீதம் உண்டுபண்ணுகிறது. வருஷத்திற்கு இன்னும் அதிகமாகவே சொல்லுவோம், 5,750 ஆகும்.

அமெரிக்காவில் ஒரு வருஷத்திற்கு 60,000 விமானங்கள் கட்டி முடிக்கப்படும். இதில் 45,000 பைடர், பாம்பர், பாய்ச்சல் விமானங்கள்.

**டாங்கி உற்பத்தி.** "ஜப்பானில் தயாரிக்கப்படும் டாங்கிகளின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. வருஷத்திற்கு 750 என்று சொல்லப்படுகிறது. அமெரிக்காவில் இவ்வருஷம் 45,000மும், அடுத்த வருஷம் 75,000-மும் கட்டப்படும். ஆக அமெரிக்கா மாத்திரம் ஜப்பானைக் காட்டிலும் எவ்வளவோ அதிகம் உற்பத்தி செய்கிறது. பிரிடனும் அமெரிக்காவைப்போல சாமான்களை உண்டுபண்ணுகிறது. இதைத் தவிர கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளின் சாமான்களும் உபயோகப்படுத்தப்படும்".



லிபியாவில் இந்தியத் துருப்புகள் மிகவும் சாமர்த்தியமாகச் சண்டை செய்கின்றன. மூன்றுவது இந்திய மோட்டார் படைதான் பிர்ஹகீமிற்குக் கிழக்கில் எதிரித் தாக்குதலைத் தடுத்தது.

இஸியும் (Izyum) டிமோஷன்கோ கார்கவ் தாக்குதலை ஆரம்பித்தபோதே இஸயத்தை ஜெர்மானியர் தாக்குவார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. அதிகத் தீவிரமாக திடீரென்று முன்னேறியதால் ருஷ்ய நிலைகள் பல இடங்களில் பிளக்கப்பட்டன. இருந்தாலும் டானெட்ஸ் நதியைக் கடக்க முடியாமல் எதிரி தடுக்கப்பட்டான். ருஷ்யர்கள் முன்னாடியே கார்கவ்வைத் தாக்கியதால் எதிரி தற்காப்புப் போர் செய்து கொள்ளவே இஸயத்தைத் தாக்கினான். ஆனால் முதல்தாக்குதலை ருஷ்யர்கள் செய்யக்கூடுமென்றும், ஜெர்மன் முன்னேற்றத்தையும் தடுக்கி விடலாமென்றும் இதிலிருந்து தெரிகிறது. ருஷ்ய விமானப்படை அதிகரித்துவருவதால் ஜெர்மன் லுப்ட்வாபி தந்திரங்களை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. சென்ற வருஷம் ஜெர்மன் பாம்பர் தளங்கள் போர்முனைக்கு 500 மைல் பின்னால் இருந்தன. தற்சமயம் யுத்தரங்கத்திலேயே இருக்கின்றன.

எப்படியிருந்தாலும் யூக்ரேனை விட்டு ஜெர்மானியரை விரட்டும் நோக்கத்துடன் ருஷ்யர்கள் இன்னும் சண்டையைச் செய்யவில்லை. ஆனால் எதிரியைக் களைக்கச் செய்து ரிஸர்வ் படைகளையும் உபயோகித்துக் கொள்ளும்படி செய்வது தான் நோக்கம். இஸயத்தைக் காப்பாற்றியதால் காகஸஸை நோக்கி உடனே முன்னேற முடியாமல் எதிரி செய்யப்பட்டான். ஸ்மொலென்ஸ்க், வியாஸ்மா, லெனின்கிராட் முதலிய இடங்களிலும் இம்மாதிரி செய்யப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**கோலோன் படையெடுப்பின் முக்கியத்வம்.** 1,000 விமானங்கள் கோலோனைத் தாக்கின. மற்றும் 250 விமானங்கள் எதிரியின் கவனத்தை அப்புறப்படுத்திக் கொண்டும், எதிரியின் விமான எதிர்ப்பு பீரங்கிகளை வேறு பக்கம் திருப்பிக்கொண்டும் இருந்தன. இதில் 150 பிரிடிஷ் விமானப்பகுதிகள் மிக ஜாக்கிரதையாக ஈடுபட்டிருந்தன. எப்பவும் 200 முதல் 300 வரைதான் விமானங்கள் எதிரி நாட்டுப் படையெடுப்பில் ஈடுபடுவது சகஜம். ஆனால் கோலோன் மீது நடந்த தாக்குதலை லண்டன் நகரத்தில் ஒரு ஜன நடமாட்டம் அதிகமாயுள்ள ஒரு முச்சந்திக்கு ஒப்பிடலாம். ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளாமல் 300 மைல் வேகத்தில் பிரிந்து ஒரு நகரைத் தாக்குவதென்பது சாதாரண காரியமில்லை. இருந்தாலும் வெற்றிகரமாகவே தாக்குதல் செய்யப்பட்டது.

மொத்தம் 3,000 டன் எடையுள்ள குண்டுகள் போடப்பட்டனவென்றால் ஈடுபட்ட விமானங்கள் மிகப்பெரியவைகளாகத் தானிருக்கவேண்டும். ஸ்டர்லிங், அவரோ லங்காஸ்டர், அவரோ மான்செஸ்டர் முதலியன ஈடுபட்டன. (இவை அமெரிக்க விமானங்களைக் காட்டிலும் பெரியவை).

ஒருதடவை 1,000 விமானங்களை உபயோகிப்பதென்றால் மாதம் 2,000 புதிய விமானங்களைக் கட்டினால்தான் சாத்தியமாகும். ருஷ்யா, மத்தியக்கிழக்கு, இந்தியா முதலிய நாடுகளுக்கு அனுப்புவதைத்தவிர அதிகமாக விமானங்கள் கட்டப்படுகின்றனவென்பதும் திருப்திகரமான விஷயம். மற்ற தேவைகளுக்குப் போனதுபோக மிச்ச விமானங்கள்தான் கோலோனைத் தாக்கச்சென்றன.

காமன்ஸ் சபையில் இதைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் சொன்னபோது இது இந்த விமான யுத்தத்தில் ஒரு புதிய கட்டத்தைக் காண்பிக்கிறது என்றார். இது ஒரு ஆரம்பமென்றும் இன்னும் அதிகமாகவே தாக்குதல் நேருமென்றும் கூறினார். "அடுத்தபடியாக இன்னும் கடுமையான தாக்குதல் நேருமென்று" ஸர் ஆர்ச்பால்டு ஸிங்க்ளேர் சொன்னார். அமெரிக்க விமானங்கள் வந்ததும் இன்னும் அதிகமான தாக்குதல் நேரும்.

**ஹிட்லரும் லவாலும்.** மெடகாஸ்கரிலும், மார்டினிகுவிலும் பிரிடிஷாருக்கும் அமெரிக்கர்களுக்கும் லவால் படிந்து நடந்துகொண்ட காரணத்தினால் ஹிட்லர் கோபமடைந்து அவனை பதவியிலிருந்து தள்ள நினைத்திருக்கிறான். ஸால்ஸ்பர்க் சந்திப்பில் ஹிட்லர் கார்ஸிகா, ஸாவாய், டேனிஸியா முதலியவைகளைக் கொடுப்பதாகச் சொன்னபடி நடந்துகொள்ளாததும் ஒரு காரணம். பிரான்ஸை அவமானமாக நடத்தும்போது முஸோலினியுடன் ஹிட்லர் சேர்ந்துகொள்ளுவான். ஆனால், ஹிட்லரின் விருப்பமில்லாமல் மெடகாஸ்கர் மார்டினிகு விஷயத்தில் லவால் அமைதியாக நடந்துகொள்ளுகிறான் என்று சொல்லமுடியாது. ஒருக்கால் லவாலும் இதைப்பற்றி ஏதோ யோசித்துக் கொண்டுதான் இருக்கிறான். 'டிகால் கக்ஷியினரையும்' இங்கிலீஷ்காரர்களின் சிநேகிதர்களையும் அடக்குவதற்கு லவாலுக்கு இன்னும் சமயம் போதவில்லை. பிரிடிஷார் படையெடுத்தபோது ஸெயிண்டு நாஸேரில் உண்டான கலகமும், பாரிஸில் மாணாக்கர்கள் செய்த கலகமும், ஜெர்மானியருக்கு விரோதமாகச்செய்த சூழ்ச்சிகளும், ஜனங்களுக்குள்ள அருவெருப்பைத் தெரியப்படுத்துகின்றன. தனக்கு வேண்டியவர்களை லவால் வடக்கு, மேற்கு ஆபிரிக்காவில் நியமித்துக் கொண்டிருக்கிறான். இருந்தாலும் திடீரென்று ஒன்றும் அவனால் செய்யமுடியாது. கொஞ்சம் கொஞ்சமாக ஏதாவது செய்யலாம். டோராயிட் பத்திரிகையின் ஆசிரியரான கிளமென்டின் கொலை சம்பந்தமாக லவாலையும் சேர்த்து வதந்தி உலாவுகிறது. டோராயிட் பத்திரிகைக்கு செல்வாக்கு குறைந்துவிட்டதால் பெர்லினைத் திருப்திசெய்ய லவால் அவ்விதம் செய்திருக்கலாமென்று நம்பப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**ஹீட்ரிச்.** பொஹிமியா, மொரேவிய இலாகைகளின் உப தலைவரும், போலீஸ் தலைவரும், S. S. பகுதித் தலைவருமான ஹீட்ரிச்சு ஜூன் ௴ 4௳ காயமடைந்து இறந்தார். ஒரு வாரத்திற்கு முன்பே காயமடைந்தார். இவனைக் கொன்றதற்காக ஸ்திரீகள் உள்பட 220 செக்கர்கள் கொலைசெய்யப்பட்டனர். இதுவே கொடுமை அரசாக்ஷிக்கு ஒரு அடையாளமாகும். இவன் நாஸி கொள்கைகளை நன்குணர்ந்தவன். வீமர் ஜனநாயக ஆட்சி காலத்தில் கப்பல் இலாகாவில் வேலைபார்த்தான். ராஜ துரோகத்திற்காக பதவியிழந்தான். நாஸிக் கட்சியின் ஆரம்ப காலத்தில் இவன்பேரில் துரோக குற்றமும், திருட்டு குற்றமும் சாட்டப்பட்டான். இக்குற்றம் செய்தாலும் நாஸிக்கட்சியில் பதவியிருந்தது. 1934-ம் ௵ ஜூன் ௴ 30௳-யில் கிரிகர் ஸ்டிராஸ்ஸர் என்பவனைக் கொன்று ஹிட்லரின் பிரியத்தை நாடினான். போலந்திற்கு வந்ததும் முதல் இரண்டு வருஷங்களில் 82,000 ஸ்திரீ புருஷர்களைக் கொன்றான், யூகோஸ்லாவியாவில் 60,000 பேரையும், பொஹிமியா மொரேவியாவில் 1941-ம் ௵ செப்டம்பரில் 336-ம் கொன்று 1,500 பேரை ரகசியப் போலீஸார் வசம் ஒப்படைத்தான். சென்ற மாதம் பாரிஸுக்கு வந்ததும், 460 பிரெஞ்சுக்காரரைக் கொன்றான்.

---

# ஜெர்மனியில் இரண்டாவது போர்முனை.

## ஹிட்லர் பிரகடனத்தில் தப்பு அர்த்தம் பண்ணிக்கொண்ட வாக்கியம்.

*டோக்ளாஸ் ரீட் என்பவர் எழுதியது.*

ஜெர்மானியர்கள் கிரிமியாவில் தாக்க ஆரம்பித்ததும் ருஷ்யர்கள் கார்கவ்வை நோக்கி முன்னேறுகிறார்கள். இம்மாதிரி யுத்தம் மும்முரமாக முடிவுக்கு வரக் கூடியதாக விருத்தி யடையும்பொழுது, பிரிடனில் அச்சு நாடுகளுக்கு எதிராக இரண்டாவது போர்முனை ஏற்படுத்தும்படி வற்புறுத்தப்படுகிறது. சண்டை



செய்யும் போர்வீரர்களும், பொது மக்களும் அம்மாதிரி நிர்ப்பந்திக்கிறார்கள். லண்டனிலுள்ள ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளின் பிரதிநிதிகள் அதை ஆதரிக்கிறார்கள். லண்டனில் பிரசுரமாகும் ருஷ்யர்கள் கக்ஷியைச் சேர்ந்த பத்திரிகையும், இம்மாதிரி இரண்டாவது போர்முனை ஏற்படுத்தும்படி வாராவாரம் பிரசுரித்து வருகிறது. அமெரிக்கர்களும் இதற்கு அனுகூலமாக இருக்கிறார்கள்.

பிரிடிஷ் அரசாங்கத்தின் தலைமை அதிகாரி இரண்டாவது போர்முனை ஏற்படுத்த சந்தர்ப்பம் சரியாக இல்லை என்று எச்சரிக்கை செய்த போதிலும், தேசத்தார் பூராவும் இம்மாதிரி தாக்குவதற்கு அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக பிரிடிஷ் அரசாங்கத்தாரும் இதை விரும்புகிறார்கள்.

நேசநாடுகள் இப்பொழுதோ, சற்று பிற்பட்டோ ஜெர்மனியைத் தாக்கினாலும் சரி, தாக்காவிட்டாலும் சரி, ஜெர்மனியில் ஏற்கனவே இரண்டாவது போர்முனை ஏற்பட்டுவிட்டது.

ஜெர்மனியிலே ஹிட்லர் ஆட்சிக்கு அடிப்படையான எதிர்ப்பு ஏற்பட்டதின் அறிகுறிகள் தெரிகின்றன. யுத்தத்தில் ஜெர்மனி வெற்றியடையாதென்றும், நீடித்து நடக்கும் யுத்தத்தினால் நஷ்டங்களும், பரிமுதலும் அதிகம் ஏற்படும் என்றும் பயந்து, எல்லாரும் ஒன்று சேர்ந்து ஹிட்லரின் காலை வாரிவிட பிரயத்தனப்படுகிறார்கள். 1918-ம் வருஷத்தில் ஜெர்மனி எந்நிலைமையில் இருந்ததோ இப்பொழும் அப்படியே இருக்கிறது. இந்த வருஷத்தில் பாக்கி மாதங்களிலும் அநேக ஜெர்மானியர்கள் மூண்டுக்கு இரையாவார்கள். ஆனால் ஜெர்மனியில் ஹிட்லரின் நடவடிக்கையை மறுதளிக்கும் காக்ஷிகள் தந்திரமாகத் தோன்றச் செய்யப்படுகின்றன. பேடனின் புதிய இளவரசர் மாக்ஸ் என்பவர் அந்தப் பதவிக்காகத் தயாரிக்கப்படுகிறார்.

சென்ற மாரிகாலத்திலேயே ஹிட்லர் போன பிறகு ஜெர்மனியில் ஆட்சி செய்ய விரும்பிய மனிதர்கள் ஹிட்லரைப் புறக்கணிக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். அதை முன்னிட்டுத்தான் ஹிட்லரை தலைமை அதிகாரத்துக்கு நியமிக்கப்பட்டது. இப்பொழுது நேரிடக்கூடிய அழிவுக்கு அவன்தான் பொருப்பாளி. அவன் சென்ற பிறகு ஜெர்மன் பொதுமக்களுக்கும் மற்ற உலகத்தாருக்கும் "குற்றவாளி தொலைந்து விட்டான். எங்கள்பேரில் நீங்கள் குறை சொல்ல ஒன்றுமிருக்காது" என்று சொல்லப்படும்.

இப்பொழுது ருஷ்யாவை ஹிட்லர் தாக்கும் பொழுது இந்த மனிதர்கள் அவனைக் கீழே தள்ள தயார்செய்து வருகிறார்கள். ஹிட்லருக்கு இந்த சூழ்ச்சி தெரிகிறது. அவனைத் தனியாகவிட்டதில் அவனுக்குப் பயம் உண்டாகிறது. அவர்களின் சூழ்ச்சியைக் கெடுக்க அவன் வழி தேடுகிறான். அவனுடைய முந்திய பிரகடனத்தில் குறிப்பிடத் தக்க வாக்கியம் என்னவென்றால் 'பேர் குறிப்பிடாத சில ஜெர்மானியர்கள் தங்கள் கடமையைச் செய்யத்தவறி, ரஜா அபேக்ஷித்திருப்பதைக் குறித்து ஹிட்லர் புகாராகச் சொன்னதுதான்.' (இந்த வாக்கியம் உலகத்தாரால் தவறுதலாக எண்ணப்பட்டது). "அவர்களுக்கு அந்த ரஜா கொடுக்க முடியாது, இந்த ஒன்பது வருஷகாலத்தில் மூன்று நாள் ரஜா கூட நான் பெற்றுக்கொள்ளவில்லை" என்று ஹிட்லர் சொன்னான். படை வீரர்கள் களைப்புற்று லீவு அபேக்ஷித்ததாக உலகத்தார்கள் தவறுதலாக எண்ணிவிட்டார்கள். ஆனால் வியாதியோ அல்லது களைப்போ ஏற்பட்டிருப்பதாகச் சாக்குச் சொல்லிக்கொண்டு, சில பிரக்யாதிபெற்ற தலைவர்கள் ஹிட்லர் அழிந்து விடுவான் என்று தெரிந்து, பொறுப்பு தங்களை விட்டு விலகவேண்டியதற்காக லீவு அபேக்ஷித்திருப்பதைக் குறித்துத்தான் ஹிட்லர் சொல்லியிருக்கிறான். இதுதான் ஜெர்மனியில் இரண்டாவது போர்முனை.

---

# ஜப்பான், ஸப்ளைகளுக்காக போராடுவது.

(ஜான் மாக்டோனல்ட் எழுதியது).

ஆசியாவை ஜயிக்க பெரிய பிரயத்தனம் செய்து, ஒரு நாளில் அவற்றையெல்லாம் உபயோகப்படுத்துவதற்காக நீண்ட காலமாக ஜப்பான் பொருள்களை சேகரித்து வைத்தது. அது அநேக வருஷங்களாக பீரங்கிகள், வெடி குண்டுகள், கவசத்தகடுகள், வெடிமருந்து, எண்ணெய் இவற்றைதான் பிறநாடுகளை ஆக்கிரமிக்க ஆரம்பிக்கும்பொழுது உபயோகப்படுத்த சேமித்து வைத்தது.

இதுவரையில் ஜப்பானின் யுத்தப் பிரயத்தனத்தில் அதன் கப்பற் படையே பேருதவியளித்து வந்தது. ஆனால் அதன ஸப்ளை பொருள்கள் வரவர குறைந்து போய் அதற்குப் பொருள்கள் தேவையாயிருக்கும் இந்த சமயத்தில் ஜப்பானிய கப்பற்படை எப்படி சமாளிக்கப் போகுமோ என்பது தெரியவில்லை.

ஜப்பானுடைய உற்பத்தி எவ்வளவு என்பது யுனைடெட் ஸ்டேட்ஸ் உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியவரும். ஒரு வருஷத்திற்கு ஜப்பானில் 70,00,000 டன் எஃகு உற்பத்தி செய்யப்படுகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸில் 8,80,00,000 டன் எஃகு உற்பத்தியாகிறது. அலுமினியம் ஜப்பானில் 21,000 டன்களும், யுனைடெட் ஸ்டேட்ஸில் 4,00,000 டன்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஜப்பானில் வருஷத்திற்கு 70,00,000 பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அதற்கு அதைப்போல் 5 அல்லது 6 மடங்கு எண்ணெய் தேவையாக இருக்கிறது.

யுத்தம் நடக்கும் வரை ஜப்பானுக்கு பழைய இரும்பு, எண்ணெய், செம்பு, இரும்பு சம்பந்தப்பட்ட கருப்பு உலோகங்கள், அவைகளைக்கொண்டு சாமான்கள் செய்யும் யந்திரம், ஈயம், தகரம், அலுமினியம், காரீயம், ரஸம், மாங்கனீஸம், பாஸ்வரம், க்ரோம், நிக்கல் இந்த ஸப்ளைகள் கிடைக்காது. பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்து க்ரோமும், இரும்பு உலோகமும்; கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து எண்ணெயும், உப்புகளும், மலேயாவிலிருந்து ரப்பரும், ஈயமும் கிடைத்தாலும் பெரிய திட்டத்தில் அவற்றைத் தயாரிக்க ஜப்பானுக்கு தொழிற்சாலைகளோ, நிபுணர்களோ கிடையாது.

மாதத்திற்கு 400 விமானங்கள் வீதம் ஜப்பானில் செய்யப்படுகிறது. யுத்தத்திற்கு முன் கொஞ்சம் விமானங்கள் ஜெர்மனியிலிருந்தும், இதாலியிலிருந்தும் வாங்கப்பட்டன. யுனைடெட் ஸ்டேட்ஸில் எல்லாவித விமானங்களும் மாதத்திற்கு 3,500-க்கு மேல் தயாரிக்கப்படுகிறது வருஷத்தில் 1,35,000 விமானங்கள் வீதம் நேசதேசங்கள் எல்லாம் சேர்ந்து தயாரிக்கின்றன.

ஆள் பலத்திலும் ஜப்பானில் உள்ளவர்கள் குறைவுதான். ஜப்பான் ஸைனியத்தில் 50,00,000 பேர்கள் தானிருக்கிறார்கள். இருப்புப்படை 30,00,000 பேர்கள் இருக்கிறார்கள். நேசதேசத்தார் வசமிருக்கும் இருப்புப் படையின் எண்ணிக்கை எவ்வளவென்று சொல்லமுடியாது. அச்சுநாடுகளின் ஸைனிய பலம் 1,45,00,000 பேர்கள். நேசதேசத்தார்களின் படைகளோ 1,50 00,000. மேலும் படைப் பலத்தை மதிப்பிடுவதற்கு முன் போர்வீரர்களின் குணம், அவர்களுடைய முஸ்தீப்பு, அவர்களுடைய நிலைமை, ஸப்ளைகள் கிடைக்கக்கூடிய இடத்திற்கு சமீபத்திலிருப்பது, கப்பல் போக்குவரத்துக்கு அதிகாரம் வகிப்பது, பாதுகாக்க வேண்டிய போர்முனையின் விஸ்தீர்ணம், இவைகளைக் கவனிக்கவேண்டும். ஜப்பான் அதன் கூட்டாளியான அச்சுநாட்டுக் கொள்ளைக் கூட்டத்தாருடன் சேர்ந்துவிடாமல் தடுத்துவிட்டால் தன் ஆள் பலத்தையும், உற்பத்தியும்தான் நம்பியிருக்கவேண்டும். ஆனால் நேசதேசத்தார்கள் கூடிய சீக்கிரத்தில் பஸிபிக் யுத்தப் பிராந்தியத்தில் ஜப்பானைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமுள்ள ஸைனியங்களைப் போருக்கு அனுப்பக்கூடும்.

---



# டூலிட்டில் செய்த தாக்குதலும், ஜப்பானின் ஆகாய விமானக் கைத்தொழிலும்.

## யந்திரசாலை மத்திய ஸ்தாபனம் தாக்கப்பட்டது?

அமெரிக்க விமானங்கள் ஜப்பானிய நகரங்களை வெடிகுண்டுகளால் தாக்கியதை தளகர்த்தர் டூலிட்டில் சொன்னதிலிருந்து இன்னும் சில விஷயங்கள் தெரிகின்றன. நடுப்பகலில் பூமிக்கு வெகு சமீபத்திலிருந்து நல்ல சீதோஷ்ண நிலையில் இந்தத் தாக்குதல் நடந்தது என்று சொன்னான். ஜப்பானியர்கள் தாங்கள் தான் திடீரென்று தாக்கக்கூடும் என்று தற்புகழ்ச்சி கொண்டிருந்தார்கள். ஆனால் அமெரிக்கர்கள் அதேமாதிரி திடீரென்று தாக்கியிருக்கிறார்கள். டோகியோவின் தென்புறத்திலுள்ள கப்பல் கட்டுமிடத்தில் புதிய யுத்தக்கப்பல் ஒன்று தாக்கப்பட்டதை கேட்க வெகு ஆச்சரியமாக இருக்கிறது.

ஆனால் அவர் சொன்ன செய்திகளில், "நகோயாவுக்கு அருகில் ஆகாய விமானத் தொழிற்சாலையில கால்மைல் நீளத்திற்கு எரிகுண்டுகள் போடப்பட்டன" என்ற செய்தி மிகவும் முக்கியமானது. இது மிட்ஸுபிஷியிலுள்ள பெரிய யந்திரசாலையாகத்தான் இருக்கவேண்டும். அங்குதான் பைடர்களும், பாம்பர்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

ஜப்பானில் ஆகாய விமானம் உற்பத்தி செய்யும் முறை ஒரு வகைப்பட்டது. அதாவது பல இடங்களில் தயாரிக்கப்பட்ட உருப்புகளைக்கொண்டு முக்கிய தொழிற்சாலையில்தான் விமானங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதனால் விமான பலம் மிகவும் குறையும். முக்கிய தீவான ஜப்பானில் பல இடங்களில் அரசாங்கத்தார் மேல் பார்வையின் கீழ் 21 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வேலை செய்யப்பட்ட பொருள்களான ஆகாய விமானங்களின் உருப்புகள், மோட்டார்கள், சிறகுகள், தரையில இறங்குவதற்கான கருவிகள் வகையராவை நகோயாவுக்கு வெளிப்புறங்களிலுள்ள மிட்ஸுபிஷி யந்திரசாலைக்கு அனுப்புகின்றன.

ஆகையால் இந்த யந்திரசாலைக்கு சேதம் ஏற்பட்டிருந்தால் அது எப்படி பாதகமாக இருக்கும் என்பது தெரியும். இம்மாதிரி சேர்த்துவைக்கப்பட்ட சாமான்களும், சேகரிக்கப்பட்ட தயாரான பொருள்களும் அழிக்கப்பட்டால் தினசரி விமானங்கள் செய்வது தடைபட்டுவிடும். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற இதர நாடுகளைக்காட்டிலும் மெதுவாகத்தான் ஜப்பான் ஆகாய விமானங்கள் உற்பத்தி செய்கின்றது. ஒன்றரை மணிக்கு ஒரு விமானம் செய்கிறதென்பது சரியான மதிப்பாக இருக்கும். ஆனால் யுனைடெட் ஸ்டேட்ஸோ 8½ நிமிஷத்திற்கு ஒரு விமானம் செய்கிறது.

இப்பொழுது அமெரிக்கா தாக்குதலினால் ஜப்பானில் விமான உற்பத்தி இன்னும் குறைந்துவிட்டது

---

# கொரியாவில் ஜப்பானின் புதிய திட்டம்.

(வாஷிங்டனிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

ஜப்பான் அடிமைகளை விடுவிப்பதாகவும், ஜப்பானின் புதிய திட்டத்தில் புகழ்களும், விசேஷதகைகளும் [illegible] அடிக்கடி ஜப்பானிய ரேடியோவில் சொல்லப்படுகிறது. இதே சந்தர்ப்பத்தில் வாஷிங்டனில் ஜப்பான் நடவடிக்கையைக் குறித்து ஆராயப்படுகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலுள்ள ஜனங்

களை அடிமையாக்கி நிர்ப்பந்தப்படுத்தியும், ஜப்பான் செய்துவரும் கொடுமைகளைக்கேட்க டோக்கியோ ரேடியோவில் சொல்லப்படும் வெளிப்படையான பொய்கள் இரண்டு மடங்கு பரிகசிக்கத் தக்கதாக இருக்கின்றன.

கொரியாவில் ஜப்பானியரின் 'புதிய திட்டப்படி' என்னென்ன நேர்ந்தது என்று விவரமாக அமெரிக்காவில் பிரக்யாதிபெற்ற 'ஏஷியா' என்ற பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. அவ்வியாசத்தின் தலையங்கம் 'ஜப்பானின் புதிய திட்டத்தின்படி கொரியாவில் நடைமுறைச் செய்திகள்' என்று கண்டிருந்தது. ஜப்பானிய வெற்றிகளினால் ஜனங்களுக்கு என்ன நேரிடுமென்று கொரியாவை ஜப்பானியர் அடிமையாக்க ஜாக்கிரதையாகப் போட்ட திட்டத்திலிருந்து தெரியவரும். முப்பத்திரண்டு வருஷம் ஜப்பானிய ஆட்சியினால் கொரியா அருவெறுப்பான தேசமாக ஆய்விட்டது.

## வறுமையும், பசிப்பிணியும்.

கொரியா அதன் தேச சரித்திரத்தில் எப்பொழுதும் கண்டிராதபடி வறுமையும், பசிப்பிணியும் அதிகரித்திருக்கிறது. அந்த தேச ஜனங்களின் க்ஷேமத்தைப் புறக்கணித்து அந்த தீபகற்பத்திலுள்ள சம்பத்தெல்லாம் ஜப்பானுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. ஜப்பானியர் வெற்றியடைந்ததில் இப்பொழுது முறைப்படி வீடுவீடாகக் கொள்ளையடித்து வருகின்றனர். இப்பொழுது குடியானவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் பாதித் திட்ட உணவுதான் கொடுக்கப்படுகிறது. ஒரு வாரத்திற்கு ஒரு மனிதனுக்கு இரண்டு முகட்டி அரிசிதான் கொடுக்கப்படும். இதனால் கொஞ்சம் கொஞ்சமாக காலவடைவில் பட்டினியால் உண்டாகும் கெடுதி நேரிடும்.

சாதாரண உரிமைகள்கூட கொரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் வீட்டில்கூட கொரியா பாஷையைப் பேசக்கூடாது. கொரியா ராணுவ கவர்னர் ஜெனரல் அதிகாரத்திற்குட்பட்டது. அவருக்கு ஒரு மனிதன் உயிரை வைக்கவும், எடுக்கவும் பூரண அதிகாரம் உண்டு. அந்த தீபகற்பத்தில் நான்கு லக்ஷம் போலீஸ் வீரர்களும், ஜப்பானிய வீரர்களும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஜனத்தொகையில் கொரியர்களுக்குள்ளேயே வேவு பார்த்துச் சொல்லுவதற்கு இரண்டு லக்ஷம் இழிவான கொரியர்களைச் சேர்த்திருக்கிறார்கள். கொரியர்களை பயமில்லாமல் ஜப்பானியர்கள் கன்னத்தில் அறைகிறார்கள். காலால் உதைக்கிறார்கள்.

## கொரியர்கள் தளர்ச்சியடையவில்லை.

ஜப்பானியர்களுக்குத் தனிப்பள்ளிக்கூடங்கள். கொரியர்களுக்குத் தனிப் பள்ளிக்கூடங்கள். ஜப்பானியரின் ஜனத்தொகையைக் காட்டிலும் அங்கிருக்கும் கொரியர்களின் ஜனத்தொகை ஐம்பது மடங்கு அதிகமாக இருந்தாலும் கொரியர்களின் பள்ளிக்கூடத்திற்கு எவ்வளவு பணம் செலவிடக்கூடுமோ அவ்வளவு பணம் ஜப்பானியர் பள்ளிக்கூடத்திற்கும் செலவு செய்யப்படும். கொரியர்கள் தளர்ச்சியடையாமலும், ஜப்பானியருடன் கலந்துவிடாமலும், கொரியர்கள் விரோத மனப்பான்மையில் இருப்பதினால், ஜப்பானிய ஸைனியத்தில் அவர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள ஜப்பானியர்கள் துணியவில்லை. ஜப்பானியர்கள், அடக்கமான கைதிகளையும், தேசாபிமானிகளையும் கொலைசெய்து வருகிறார்கள். கொரிய தேசாபிமானிகள் முக்கியமான ஜப்பானிய அதிகாரிகளைத் தாக்கி வருவதற்கு அநேக உதாரணங்கள் இருக்கின்றன. இப்பொழுது ஒரு லக்ஷம் கொரியர்களுக்கு மேல் சேகரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ரகசிய சங்கங்களாகக்கூடி வேலை செய்கிறார்கள். பசிபிக் யுத்தத்தில் ஜப்பானுக்கு அருகிலிருக்கும் சமுத்திரத்திலுள்ள ஜப்பானிய கப்பற்படையை ஒழித்துவிட்டால், கொரியாவும் ஜப்பானுக்கு எதிரியாகக் கிளம்பி, பயன்தரக்கூடிய விதமாக கொரியர்கள் ஜப்பானைத் தாக்குவார்கள் என்று கொரிய தேசாபிமானித் தலைவர் கிம்லான் என்பவர் அறிவிக்கிறார்.

---



# ஐந்தொகைக் கணக்கு.

(இஸ்தான்புல் 21—4—42-தேதி "யேனி ஸாபா" பத்திரிகையிலிருந்து;

ஹுஸேயின் காஹிட் யால்ஜின் எழுதியது).

இந்தப் பத்திரிகையை வாசிப்பவர்களில் என் பெயரைக்கண்டு கையெழுத்துப் போட்டு எழுதியிருக்கும் கடிதத்தில் என்னைப் பதில்கொடுக்கும்படி சில கேள்விகள் கேட்டிருக்கிறார். அவையாவன, "முடிவில் பிரிட்டன் வெற்றியடையுமென்று உனக்கு இன்னும் நம்பிக்கை யிருக்கிறதா? அல்லது ஏற்கனவே பிரிட்டனுக்கு வெற்றிகிடைக்குமென்ற அபிப்பிராயம் எப்படியோ உனக்குண்டாகி அதைக் கடைசிவரையில் சாதிக்க வேண்டுமென்று பிரிட்டன் வெற்றியடையும்போல் நம்பிக்கை யிருப்பதாகப் பாசாங்கு செய்கிறாயா?"

இந்தக் கேள்விகள் எனக்கு வியப்பை உண்டாக்கின. இந்த யுத்த ஆரம்பத்தில் சம்பவங்கள் எப்படி நேரிடுமோ என்று தெரியாமலிருக்கும்பொழுதே எனக்கு பிரிட்டன் வெற்றியடையுமென்ற அபிப்பிராயமானது, பிறகு நாளுக்குநாள் நடக்கும் நடவடிக்கைகளிலிருந்து ஊர்ஜிதமாகிக் கொண்டுவருகிறது. என்னுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக சில ஜனங்களுக்காகவாவது அபிப்பிராயம் இருக்குமா என்பது என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் இந்தக் கேள்விகளினால் சிந்தனையும், ஆராய்ச்சியும் வேண்டியிருக்கிறது.

யுத்தம் ஆரம்பித்து இரண்டரை வருஷங்களாயின. இதன் நடுவில் பிரிட்டனுடைய பலம் அதிகரித்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா? இறுதியில் ஜனநாயக நாடுகள் தோல்வியடையுமோ என்று சந்தேகப்படக்கூடியதாக இருந்தால் இந்தக் கேள்விகளின் பதிலைப் பொருத்திருக்கிறது.

முதன் முதலாக யுத்தம் ஆரம்பித்து 2½ வருஷமாகியும் அதற்கு முடிவு எப்பொழுது என்று தெரியாமலிருப்பதிலிருந்தே பிரிட்டனுக்கும் நேசதேசத்தார்களுக்கும் அனுகூலமான பயன் உண்டாகும் என்பதைக் காட்டவில்லையா? மின்னல் போல் வெற்றிகள் கிடைத்திருப்பதாகச் சொல்லிவந்த அச்சுநாடுகள், இப்பொழுது அம்மாதிரி வார்த்தையையே உபயோகிக்கவில்லை என்று சொல்லவில்லையா? ஜெர்மானியர்களுக்கு சீக்கிரம் வெற்றி கிடைத்துவிடுமென்று வாக்குறுதி செய்யப்படவில்லையா? 8 அல்லது 10 மாதங்களுக்குமுன் ருஷ்யா பூராவும் அழித்துவிடப்படும் என்று குறிப்பிடப்படவில்லையா? லண்டனில் எதிரித் துருப்புகள் பிரவேசிப்பதற்கு நாள் வைத்திருந்ததல்லவா?

இப்பொழுது அம்மாதிரி பிரசாரம் அச்சுநாடுகள் சொல்லிவருவதில்லை. வெகு வருஷங்களாக ஜனநாயக அரசுகள் அலக்ஷியமாகவும், ஆயத்தமில்லாமலிருக்கபோதிலும் அநேக வருஷங்களாகத் தயாரித்துவந்த அச்சுநாடுகள் இறுதியான முடிவை அடையத் தவறிவிட்டன. ஜனநாயக அரசுகள் இப்படி ஆயத்தமில்லாமல் இருந்திருக்குமென்று ஒருவராலும் நினைத்திருக்கமுடியாது. நேசதேசத்தார்கள் பலஹீனமாய் இருக்கும்பொழுதே மிக்க பலம் வாய்ந்திருந்த அச்சுநாடுகள் அவர்களை ஜயிக்கமுடியாமல் போனதைப்பார்க்க அச்சுநாடுகளுக்கு வெற்றி தெய்வீகமாக கிடைத்தால்தான்.

1940-ம் வருஷம் கோடைகாலத்தில் ஜனநாயக அரசுகளைப் பிரித்திருப்பதையும், யுத்தகளத்திலிருந்து பிரான்ஸை ஒதுக்கியிருப்பதையும் நாம் மறக்கக்கூடாது. சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு பிரான்ஸ் உலகத்திலேயே மிகுந்த ராணுவ பலம் பொருந்தியதாக பிரசித்தி பெற்றிருந்தது. மாகினோட் அரண் ஜெர்மானியருக்கு உடைக்கமுடியாத தடையாகக் கருதப்பட்டது. தரைச் சண்டையில் ஜனநாயக நாடுகளுக்கு பிரெஞ்சுச் சைனியம் மூலபலமாக இருந்தது. மேற்கிலும் சமீபக் கிழக்கிலும், தூரக்கிழக்கிலும் ஜனநாயகங்களைப் பாதுகாக்க பிரெஞ்சுக்காரர்களையே பொறுப்பாக வைத்திருந்தது. யுத்த ஆரம்பத்தில் தளகர்த்தர் வெய்காண்டின் தலைமையின்கீழ் ஒரு சைனியம் ஸிரியாவிலிருந்து புறப்பட்டு

# ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்திலுள்ள முஸ்லிம்கள்.

# ஹிட்லர் கைவசப்படாமல் தப்பித்துக்கொள்ள அவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது.

ஸோவியத் ஐக்கிய அரசாங்க தற்காப்பில் முஸ்லீம் ஜனங்களும் ஏராளமாக பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். போர்முனையில் எல்லாப் பகுதிகளிலும் அஸர்பைட்ஜான், டர்க்மேனியா, யூஸ்பெகிஸ்தான், காஸாகிஸ்தான், கிட்கிஸியா, டாட்டாரியா, பாஷ்கிரியா, டாகேஸ்தான் இன்னும் மற்ற கிழக்கிலுள்ள ஸோவியத் குடியரசு நாடுகளிலிருக்கும் மனிதர்களைக் காணலாம். அவர்களில் அநேகம் பேர்களுக்கு ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்திலிருந்து ராணுவ கௌரவப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தின் 123-வது விதிப்படி உயர்வு, தாழ்வு, கிடையாது. எல்லோருக்கும் சம உரிமையுண்டு. எல்லா பாஷைகளைப் பேசும் ஜனங்களும் சம பதவியைப் பெற்றிருக்கிறார்கள். குடியரசு நாடுகளில் ராஜாங்க பாஷை ருஷ்ய பாஷையும், அங்கு பெரும்பான்மையாக இருக்கும் ஜனங்களின் பாஷையும்தான். 1941-ம் வருஷம் ஜனவரி மீ 1-ம் தேதி அஸர்பைட்ஜானியன், டார்டார், ஊஸ்பக், டர்க்மேனியன் இன்னும் மற்ற முஸ்லீம் பாஷைகளில் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்களில் 1,69,21,900 மாணவர்கள் இருந்தார்கள். ஆனால் இந்த எண்ணிக்கையில் ஐக்கிய அரசாங்கத்தின் மற்ற பாஷைகளில் பயிற்சி அளிக்கும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் முஸ்லீம்களின் எண்ணிக்கை சேரவில்லை. கிட்கிஸ், டார்டார் இன்னும் அதைப்போல் பாஷைகளில் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் ருஷ்யர்கள், இன்னும் மற்ற ஜாதியார்கள் இவர்களின் எண்ணிக்கையும் அதில் சேரவில்லை.

## சுயேச்சையான தேவாராதனை.

ஸோவியத் அரசாங்கத்தின் 121-வது விதிப்படி எல்லா நகரவாசிகளும் சுயேச்சையாக தங்களிஷ்டம் போல் மதவழிபாடுகள் செய்யலாம். இதனால் வீடுகளில் மதசம்பந்தமான கல்விப் பயிற்சி பெறலாம். ஷியா, ஸன்னி வகுப்பு முஸ்லீம்கள் மசூதிகளுக்கும் போகலாம். ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தில் முஸ்லீம்களுக்கு மத்திய ஸ்தானம் பாஷ்கிரியாவில் ஊஸா என்னும் நகரம்தான். அங்குதான் அவர்களின் மதகுரு இப்பொழுதுள்ள 'முல்லா அப்துல் ரஹ்மான் ரஸுல்லாயேவ்' என்பவரின் ஸ்திர வாஸஸ்தலம்.

ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தில் 1,312 மசூதிகள் இருக்கின்றன. அவைகளில் 8,052 முல்லாக்கள். 232 ஷேக்குகள் 528, இஷாங்கள் ஆகிய இவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஸன்னி, ஷியா, இஸ்மேல் இந்த வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தில் முஸ்லீம் ஜனங்களின் கல்வி பயிற்சி வெகு துரிதத்தில் முன்னேற்ற மடைந்திருக்கிறது. மத்திய ஆசியா குடியரசு நாடுகளான உஸ்பிகிஸ்தான், டர்க்மேனிஸ்டான், டாட்ஜிக்கிஸ்தான், கிட்கிஸியா, காஸாகிஸ்தான் இவைகளில் 1941-ம் வருஷம் ஜனவரி மீ 1-ம் தேதியில் 110 பள்ளிக்கூடங்களிருந்தன. அவற்றில் 103 அந்தந்த ஊர் ஜனங்களின் பாஷையைப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்கள். இந்தக் குடியரசு நாடுகளில் 7,407 வாசக சாலைகள், 8,442 சங்கங்கள், 53 கணகாஷி சாலைகள் இருந்தன.

முஸ்லீம் ஜனங்களின் பாஷைகளும், அவர்களின் பழைய இதிகாசங்களும் புதிப்பிக்கப்பட்டன. ருஷ்ய பாஷையிலும், யூக்ரேனியா பாஷையிலும், இன்னும் அந்நிய பாஷையிலும் புராணங்கள், டர்கோ டார்டார் ஜனங்களின்



பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த முஸ்லீம் குடியரசு நாடு
களில் கல்வி அறிவில்லாதவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1926-ம்
வருஷத்தில் டர்க்மான் குடியரசு நாட்டில் கல்வியறிவு பெற்றவர்களில் ஆண்
களில் 16·5 சதவிகிதமும் பெண்களில் 7·7 சதவிகிதமும், இருந்தார்கள். 1936-ம்
வருஷத்தில் ஆண்கள் 75·3 சதவிகிதமும், ஸ்திரீகள் 60·6 சதவிகிதமும் இருந்தார்
கள்.

## உயர்தரப் படிப்பு.

மற்ற குடியரசு நாடுகளிலும் நிலைமை இம்மாதிரிதான். 1939-ம் வருஷம்
ஜனக்கணித கணக்குப்படி அஸர்பைட்ஜான் குடியரசு நாட்டில் 32,00,000
ஜனத்தொகைக்கு 2,500 பேர்கள்தான் உயர்தர கல்விப் பயிற்சி பெற்றவர்கள்.
டர்க்மான் குடியரசு நாட்டில் 12,54,000 ஜனங்களுக்கு 4,000 பேர்களும்,
காஸாக் குடியரசு நாட்டில் 61,00,000 ஜனங்களுக்கு 28,000 பேர்களும் உயர்தரக்
கல்விப் பயிற்சி பெற்றவர்கள்.

முஸ்லீம் பிராந்தியங்களில் அநேக உயர்தரக் கல்வி ஸ்தாபனங்கள் ஏற்
படுத்தப்பட்டிருக்கின்றன. காஸாகிஸ்தான் தலைநகர் ஆல்மேட்டாவில் 7-ம்,
அஸர்பைட்ஜான் தலைநகர் பாகூவில் அரசாங்க சங்கீத வித்தியாசாலையை விஞ
8-ம், உஸ்பேகிஸ்தான் தலைநகர் டாஷ்கெண்டில் மத்திய ஆசியா ஸர்வகலா
சாலையுடன் சேர்த்து 14-ம் கல்வி ஸ்தாபனங்களிருக்கின்றன. ஸோவியத்
விக்ஞான சாஸ்திர கலாசாலைகள் குடியரசு நாடுகளில் அநேக கிளைஸ்தாபனங்களை
ஏற்படுத்தியிருக்கின்றன. அவைகளில் முஸ்லீம் விக்ஞான சாஸ்திர நிபுணர்கள்
வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் மத்திய ஆசியா, காகேஷியா, வோல்கா அடிவாரம் இவைகளிலுள்ள ஸோவியத் முஸ்லீம்களுக்கு ஹிட்லருக்குக் கைவசப்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் இருந்து வருகிறது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 99—(1-வது பிரிவு).

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜூன் | ...14, ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | | பூவரசகுடி | ... ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் | ... ,, | 6.30 |
| | 15, திங்கட்கிழமை ... | திருமயம் | ... ,, | 6.00 |
| | | மேலூர் | ... ,, | 6.30 |
| | 16, செவ்வாய்க்கிழமை | பெருங்களூர் | ... ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | ... ,, | 6.30 |
| | 17, புதன்கிழமை ... | அரிமளம் | ... ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 6.30 |
| | 18, வியாழக்கிழமை .. | உடையாளிப்பட்டி | ... ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... ,, | 6.30 |
| | 19, வெள்ளிக்கிழமை... | அம்புக்கோவில் | ... ,, | 6.00 |
| | | செருளுதபுரம் | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் 100—(2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 20, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| 21, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் | ... ,, | 6.00 |
| | குடுமியாமலை | ... ,, | 6.30 |
| 22, திங்கட்கிழமை ... | கல்லூர் | ... ,, | 6.00 |
| | மண்டையூர் | ... ,, | 6.30 |
| 23, செவ்வாய்க்கிழமை. | நச்சாந்துபட்டி | ... ,, | 6.00 |
| | விராச்சிலை | ... ,, | 6.30 |
| 24, புதன்கிழமை ... | வெங்களூர் | ... ,, | 6.00 |
| | கோனூபட்டு | ... ,, | 6.30 |
| 25, வியாழக்கிழமை ... | பனையப்பட்டி | ... ,, | 6.00 |
| | ராங்கியம் | ... ,, | 6.30 |
| 26, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் | ... ,, | 6.00 |
| | விராலிமலை | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—16-6-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம௵ ஜூன்மீ 20௳ [ந. 100

## ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலய அறிக்கையின் 100-வது சஞ்சிகைக்கு புதுக்கோட்டை ஸமஸ்தான அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அவர்கள் அனுப்பிய நற்செய்தி.

இந்நிலய அறிக்கையின் 100-வது சஞ்சிகைக்கு ஒரு நற்செய்தி அனுப்புவதை பெரிய கௌரவமென்றே நான் பாவிக்கிறேன்.

இந்த அறிக்கை இந்த நிலயத்தின் சொந்தப் பத்திரிகையாகும். இது இந்நிலயத்திற்கு காரியதரிசியாகயிருந்து தற்சமயம் சென்னை மாகாணத்தின் யுத்தப் பிரசார இலாகா டைரக்டராக வேலைபார்த்துவரும் காப்டன் G. T. B. ஹார்வி துரையால் துவக்கப்பட்டு, அவரது சாமர்த்தியத்தால் இச்சமஸ்தானத்திலும், வெளியிலும் இவ்வறிக்கை பிரபலமாயிற்று. இக் காரியத்தில் ராவ் ஸாஹிப் N. தியாகராஜ அய்யர் அவர்களும் திறமை யுடனும், குறையாத ஊக்கத்துடனும் ஒத்துழைத்துவந்தார். மேலும் இந்நிலயத்தினுடைய இதர அங்கத்தினர்களும் அதிக உத்ஸாகத்துடன் ஒத்துழைத்து இந்த ஸ்தாபனத்தை அபிவிருத்தி செய்தார்கள். இப் பொழுது ஸமஸ்தானத்திலுள்ள முக்கியமான ஊர்களில் எல்லாம் இந் நிலயத்தின் கிளை ஸ்தாபனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. காப்டன் ஹார்வி துரை மதராஸ் சென்ற பிறகு ராவ் ஸாஹிப் தியாகராஜ அய்யரும் மற்ற அங்கத்தினர்களும் ஊக்கம் கொஞ்சமேனும் குறையாவண்ணம் நிலயத்தின் அலுவல்களை நடத்திவருகிறார்கள்.

இவ்வறிக்கை வாரப்பதிப்பாக இங்கிலீஷிலும் தமிழிலும் பிரசுரிக்கப் படுகிறது. மிகவும் முக்கியமான விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. யுத்த சம்பந்தமான உண்மைச் செய்திகளையும், அபிப்பிராயங்களையும் பரவச் செய்கிறது. சரியான விவரங்களைக்கொடுத்து எதிரியின் பொய் பிரசாரத்தை மறுக்கிறது. பொதுஜனங்கள் கலவரமடையாமலும் செய்கிறது.

இந்த அறிக்கையின் 100-வது சஞ்சிகையைப் பிரசுரித்ததற்காக இந் நிலயத்தின் காரியதரிசிகளையும், அங்கத்தினர்களையும், இவ்வேலையில் ஈடு பட்ட மற்றவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் இந்த அறிக்கையைப் படிப்பவர்களுக்கும், மற்ற பொதுமக்களுக்கும் பின்கண்ட வேண்டுகோளைச் செய்துகொள்ளுகிறேன். அதாவது யுத்த முயற்சிக்குத் தகுந்த உதவி செய்வதோடு பொய் வதந்தி களையும், ஐந்தாம்படை நடவடிக்கைகளையும் அடக்கவேண்டும். உணவுப் பயிர்களையும், காய்கறிகளையும் அதிகம் உற்பத்தி பண்ணவேண்டும். அவரவர்கள் சக்திக்கு இயன்றவாறு நேசதேசங்களின் வெற்றிக்காகப் பரி சிரமப்படவேண்டும்.

---

## மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தி அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பிய நற்செய்தி.

---

**(கிளாஸ்டர் கோமகனால் புது டெல்லியிலிருந்து ஜூன் மீ 13உ ஒலிபரப்பப்பட்டது).**

### வெற்றிபெற்ற தேசம்.

"என் தம்பி இந்தியாவுக்கு வந்திருப்பது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது. இந்திய நாட்டிற்கு நான் இதுவரை வராதது எனது துரதிர்ஷ்டம் தான். மீண்டும் சமாதானம் வழங்கிய உடனேயே நான் இந்தியாவுக்கு விஜயம் செய்ய விரும்புகிறேன். நான் எனது தம்பி மூலமாக இந்திய மன்னர்களுக்கும், மக்களுக்கும் நற்செய்தியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"சமாதானம், ஸ்வதந்திரம் முதலியவைகளுக்கு வழிதேட நான் செய்ய விருந்த வேலைகளை இந்த நீண்ட கோர யுத்தம் தடுத்துவிட்டது. இந்த யுத்தத்தை நாமாக ஆரம்பிக்கவில்லை.

"நாம் தர்மமான காரணங்களுடன் சண்டை செய்கிறோம். பாரம்பரையான விசுவாஸத்தை முன்னிட்டு இந்திய மன்னர்களும், பொதுமக்களும் இந்த யுத்தத்திற்காகப் பணம், மனிதர்கள், சரீரப் பிரயாஸை முதலிய உதவிகளைச் செய்ததற்காக நான் பாராட்டுகிறேன்.

"பொதுஜன ஸம்ரக்ஷணையை வைஸிராயும், இதர உபதேசகர்களுமாக இருந்து தைரியமாக நடத்துகின்றனர். இவர்களுக்கு உதவியாக தொழிற்சாலை களும் தொழிலாளிகளும் இருந்துவருகின்றன.

"இருந்தாலும் இன்னும் எவ்வளவோ செய்யப்படவேண்டியிருக்கிறது. காலம் குறைவாக இருப்பதால் தாமதிக்கக்கூடாது. எதிரி நமது வாயிலுக்கு வந்து விட்டான். ஆனால் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் இருந்துவிட்டால் எவ்வித இடையூறுகளிலிருந்தும் சமாளித்துவிடலாம். ஆகவே இவ்விரண்டு வார்த்தைகளை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்".

### இந்தியப் படைகளுக்குப் பாராட்டு.

"இந்திய ராணுவத்தைப்பற்றி அதிகம் சொல்லப்பட வேண்டும். சக்ர வர்த்தி பேரில் அதிக விசுவாஸத்துடனேயே நடந்துகொண்டு வருகின்றனர். இந்தியச் சைனியம் பல அரங்கங்களில் திறமையுடன் சண்டைசெய்து புகழடைந் திருக்கின்றன. எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாவதை இவர்கள் லக்ஷியம் செய்யாது வீரம் குன்றாமல் சண்டை செய்திருக்கின்றனர்.

"இந்தியக் கப்பற்படையும், விமானப்படையும் பாராட்டக்கூடிய வண்ணமாக சண்டையிலீடுபட்டிருக்கின்றன.



"தேசப்பாதுகாப்புப் படையினரும் அவ்விதமே நடந்துகொள்ளுவார்கள்
என்று நம்பியிருக்கிறேன். அவர்களும் ஆபத்தான சமயங்களில் மனம் கலங்
காமல் நடந்துகொள்ளுவார்கள்.

"சக்ரவர்த்தி என்ற முறையில் நான் இந்திய மக்களுடன் சகோதரத்
தன்மையுடன் ஒத்துழைப்பதை பெருமையாகவே நினைத்திருக்கிறேன். நீங்களும்
இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டு ஒன்றுபட்டு நிற்கிறீர்கள்.

"உங்களுக்கு ஏற்பட்டுள்ளது அதிக சிரமம்தான். நாங்கள் போதுமான
உதவியளித்தாலும் உங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துகளும் பலவாறானவைதான்.
அனைத்தையும் மிக்க தைரியத்துடனும், உறுதியுடனும் நிர்வகிப்பீர்கள் என்ற
நம்பிக்கையிருக்கிறது.

"பொதுவாக யாவருக்கும் ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தில் அவநம்பிக்கை
குறைந்து, ஆழ்ந்த நல்லெண்ணம் பரவி, இந்தியாவிற்கு நற்கதி ஏற்பட வேண்டு
மென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

"தற்போது நாம் படும் பரிசிரமத்திற்கெல்லாம் ஆண்டவன் தகுந்த
பயன்களை அளிப்பார். நமது முயற்சிகளால் எதிரி தலைசாய்த்து இந்தியாவிற்கும்
மற்ற நாடுகளுக்கும் சமாதானம் வழங்கும்."

---

பிரஸங்கம் C.

## நேசநாடுகளின் தினம்:

## வெற்றியைப்பற்றிய நம்பிக்கையும் நிச்சயமும்.

**புதுக்கோட்டையில் ஜூன் மீ 14உ நேசநாடுகளின் கொடி விழாவை நடத்தியபோது புதுக்கோட்டை ஸமஸ்தான அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அவர்கள் செய்த சொற்பொழிவு.**

---

### மனிதப் பிரயத்தனத்தில் வெற்றி நம்முடையதுதான்.

உங்களில் யாராவது சிலர் யுத்தத்தைப்பற்றி மனம் தளர்ந்திருந்தால்
அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக இன்றிரவு நான் சில வார்த்தைகளைச்
சொல்ல விரும்புகிறேன். இன்று நேசநாடுகளின் தினம் கொண்டாடப்படுகிறது.
ருஷ்யாவுடன் சமீபத்தில் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கும் காரணத்தி
னால் நேசதேசங்களுக்கு முன்னைவிட அதிக ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. நேசதேசங்
முன்னைவிட வெற்றியும் அதிகம் ஸார்ஜிதமாக்கப்பட்டிருக்கிறது. நேசதேசங்
களுக்கு முடிவான வெற்றி கிடைப்பது என்பதைப்பற்றி உங்களில் யாவருக்கும்
சம்சயம் வேண்டாம். மனிதப் பிரயத்தனத்தில் நிச்சயம் கிடைக்கும்.

### அப்போதும், தற்போதும்.

தற்போதுள்ள பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் நிலையையும், முன்பு பிரான்ஸ்
எதிரி வசமாகி நம்மைத் தனியே விட்டபோது ஜெர்மன் தாக்குதல் பூராவாக
ஏற்படும்போல் காணப்பட்ட நிலையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அந்த சமயத்தில்
யாவரும் பயந்தனர். ஆனால் அஞ்சா நெஞ்சம் படைத்த மிஸ்டர் சர்ச்சில்
கொஞ்சமும் பயப்படவில்லை. மீண்டும் சண்டை செய்யவேண்டுமென்ற
தீர்மானம் கொண்டார். தேசத்தை வெற்றிமார்க்கத்தில் நடத்திச் சென்றார்.

## தீர்க்க திருஷ்டிவேண்டும்.

யுத்தத்தின் போக்கால் இனி நமக்கு கஷ்ட நிலைகளும், தோல்விகளும் ஏற்பட்டாலும் ஏற்படும். எகிப்தை ஜெர்மானியர் எடுத்துக்கொண்டாலும், இது ஒரு நாளும் சம்பவியாது, ஜப்பானியர் இந்தியாவில் இறங்கினாலும், இது நேரவே நேராது, சண்டை அதோடு முடிந்துவிடாது. எதிரிகளும் முடிவான வெற்றியை அடைந்துவிட முடியாது. இதுவே எனது நம்பிக்கை. எப்போதும் தீர்க்காலோசனை செய்வதுதான் நலம். சிறு சண்டைகள் சாதகமாகவும் பாதகமாகவும் ஆவதைப்பற்றியோ, ஒரு கோட்டை, ஒரு கப்பல், இவைகளை இழப்பது, பிடிப்பதைப் பற்றியோ, இங்குமங்கும் முன்னேறுவது, பின்வாங்குவது முதலியதைப் பற்றியோ அதிகம் சிந்திக்கக்கூடாது. ஒரு தடவை ரேடியோ செய்திகளைக் கேட்டுவிட்டு இத்துடன் இந்த யுத்தமே முடிந்துவிட்டதாக சிலர் நினைக்கின்றனர். அது கூடாது. சண்டையில் ஈடுபடாத நாம் சண்டையைச் சாதகமாகவோ பாதகமாகவோ மாற்றிவிட முடியாது. ஆனால் நமது தைரியம் மாத்திரம் குறையக்கூடாது. பிறர் தைரியத்தையும் போக்கடிக்கக்கூடாது.

## ஜப்பான் தோற்கடிக்கப்படும்.

ஜப்பான் சம்பந்தப்பட்டவரையில் தனது சைனியங்களையும், கப்பற்படைகளையும், விமானப் படையையும் வெகுதூரம் கண்மூடித்தனமாக அனுப்பியிருக்கிறது. இவ்வளவு விஸ்தாரமான பிரதேசங்களில் தனது ராணுவங்களைப் பிரித்திருப்பதால் தோல்வியேற்பட்டால் அதனால் சமாளிக்கமுடியாது. நேசநாடுகள் விமான பலத்தையும், கடல் பலத்தையும் ஸ்தாபித்துவிட்டால் ஜப்பான் அடைந்த வெற்றிகளெல்லாம் குத்துப்பட்ட பலூனைப்போல சிதைந்துவிடும். இதற்குக் கொஞ்சகாலம் பிடிக்கலாம். ஆனால் அவ்விதம் நேருமென்று நிச்சயம் சொல்லலாம். ஜப்பான் சம்பந்தப்பட்டவரையில் அதற்குத் தோல்விகாலம் ஆரம்பித்திருக்கிறதென்றே தோன்றுகிறது. ஜோஸ்யம் சொல்லுவதை நான் அதிகம் விரும்புவதில்லை. ஏனென்றால் வேறு விதமாக நடந்தால் ஜோஸ்யம் பொய்யாகிவிடும். இருந்தாலும், ஜப்பானின் ஆக்கிரமண காலம் முடிந்துவிட்டதால் இனி அது பின்வாங்கும் காலம் வந்துவிட்டதென்று மாத்திரம் சொல்லலாம். பவளக்கடல், மிட்வே தீவுகளில் நடந்த சண்டைகளில் அதன் கப்பற்படையும் விமானப்படையும் அதிகமாகக் குறைந்துவிட்டன. சண்டைக் கப்பல்களும், போக்குவரத்துக் கப்பல்களும் போதுமானபடி அதன் வசத்திலில்லை. அமெரிக்காவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஜப்பானின் பலம் மிகக்குறைவானது. ஜப்பான் ஒரு வருஷத்தில் தயாரிக்கக் கூடிய விமானங்களை அமெரிக்கா ஒரு மாதத்தில் கட்டிமுடிக்கிறது. மேலும் சைனா யுத்தத்தில் ஐந்து வருஷகாலமாக அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறது. நாம் எதிர் பார்ப்பதற்கு முன்னமேயே ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டால் ஜப்பான் தானாக சமாதானம் செய்துகொள்ள வேண்டியதுதான். அல்லது ஜப்பான் முதலில் தோற்கடிக்கப்பட்டால் முழு பலத்தையும் ஹிட்லருக்கு எதிராக நாம் உபயோகித்துக்கொள்ளலாம்.

## ஹிட்லரின் தோல்வியும் நிச்சயம்.

ஜெர்மானியருக்கும் ஜப்பானியரைப்போல் ஆரம்பத்தில் நல்ல வெற்றிகள் கிடைத்ததென்பது உண்மைதான். ஜெர்மானியர் சண்டைக்கென்று பல வருஷங்களாகத் தயார் செய்துகொண்டிருந்தனர். நாம் தயாராக இல்லை. இருந்தாலும், தற்சமயம் ஒன்று சேர்ந்திருக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, ருஷ்யா, சைனா இவைகளுடைய பலத்துடன் எவ்வாறு ஜெர்மனி எதிர்த்து நிற்கமுடியுமென்பதை சற்று யோசித்துப் பாருங்கள். ஐரோப்பாவில் இதுவரை நமக்கு கடல் ஆதிக்கம் மாத்திரம் இருந்தது. தற்சமயம் விமானாதிக்கமும் ஏற்பட்டிருக்கிறது. கிழக்கே இரண்டிலும் நமக்கு பலம் இல்லாமலிருந்ததால் ஜப்பானியர் தாத்காலிகமான வெற்றிகளையடைந்தனர். ஜெர்மன் தொழிற்சாலைகளை நாம் தாக்கி வருகிறோம். பெரிய நகரங்களும் தாக்கப்பட்டுவருகின்றன. இதைக்கண்டு, ஆத்திரப்பட்டு, ஹிட்லர், பிரிடிஷ் புண்ய ஸ்தலங்களையும், கோடை வாசஸ்தலங்களையும் தாக்கிவருகிறான். சக்தியிருந்தால் நம்மைப்போல் அவனும் தாக்கட்டும்.



இனி அவனால் அவ்விதம் செய்யமுடியாது. ஏனென்றால் நமது விமானங்களும், கப்பல்களும், டாங்கிகளும், யுத்த தளவாடங்களும் அவனுடைய எண்ணிக்கையைக் காட்டிலும் மிக அதிகமாகிவிட்டன. மேலும் நமது விமானங்களும், விமானிகளும் அதிக சக்தியும் சாமர்த்தியமும் வாய்ந்திருக்கின்றன. போராக்குறைக்கு ருஷ்யாவில் சிக்கிக்கொண்டிருக்கிறான். அங்கே ஏராள நஷ்டமடைந்திருக்கிறான். பின்வாங்கி ஓடவும் முடியாது. அப்படி தோல்வி வந்ததாக ஒப்புக்கொண்டால் உள்நாட்டிலும் கலகம் ஏற்படும். இந்நிலைமையில் அமெரிக்கப் படைகளும், பிரிடிஷ் சைனியங்களுடன் சேர்ந்துகொண்டு மேற்குப் போர் முனையில் ஜெர்மனியை சீக்கிரம் தாக்கப்போகின்றன.

## இதாலி ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டது.

அவனுக்கு உதவியாக இருந்த இதாலி ஒரிடத்திலும் சண்டை செய்யவில்லை. மனித பலமும், மூலப்பொருள்களும் அதிகம் கிடையாது. இந்த சந்தர்ப்பங்களில் தனக்குத் தோல்வி வந்துவிட்டதாகவே ஹிட்லர் நினைத்திருக்கவேண்டும்.

## யுத்தத்தின் போக்கை கவனியுங்கள்.

ஆகவே இந்த யுத்தத்தின் முழு சம்பவங்களையும் பரிசீலனை செய்துபாருங்கள். யுத்தத்தின் போக்கையும் கவனியுங்கள். சிறு சம்பவங்களை மாத்திரம் குறுகிய மனப்பான்மையுடன் கவனியாதீர்கள். யுத்தரங்கத்தில் ஏற்படும் சாதக பாதகங்களை மாத்திரம் கவனிக்காதீர்கள். எப்போதும் யுத்தரங்கங்கள் அப்படித்தான் இருக்கும். அவைகளைக்கொண்டு முடிவை நிர்த்தாரணம் செய்ய முடியாது.

நான் இச்சொற்பொழிவை முடிக்குமுன் தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் காரியதரிசியான ராவ் ஸாஹேப் தியாகராஜ அய்யரைப் பற்றியும், தலைமை ஸ்தாபனத்திலும், கிளை ஸ்தாபனங்களிலும் அவருக்கு உதவியாக இருந்து மனப்பூர்வமாகத் தாங்களாக வேலைசெய்து வருகிறவர்களைப் பற்றியும் நான் சில பாராட்டு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். காப்டன் ஹார்வி வேறு உத்தியோகத்திற்குச் சென்றதும் அவருடைய தூண்டுதலும் உணர்ச்சியும் இல்லாது இந்நிலயம் எவ்வாறு நீடித்திருக்குமென்று நான் சந்தேகித்ததுண்டு. ஆனால் பிரகிருத நிலைமையைப் பார்த்ததும் நான் சந்தேகித்தது தவறென்று புலப்படுகிறது. அடுத்தபடியாக மிஸ்டர் N. சேதுராம அய்யருக்கும், தாலுகாக்களிலும், கிராமங்களிலும் அவருக்கு உதவியாக இருக்கிறவர்களுக்கும் எனது நன்றியைச் செலுத்துகிறேன். கூடிய சீக்கிரத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் இந்த நிலயத்தின் நடவடிக்கைகள் பரவுமென்று நம்புகிறேன். நேற்று காலை அன்னவாசல் கிளை ஸ்தாபனத்திற்குச் சென்று அங்கிருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்து திருப்தி கொண்டேன். மற்ற கிளை ஸ்தாபனங்களையும் போய்ப் பார்வையிடுகிறேன். முடிவில் நமது ஏ. ஆர். பி. ஸ்தாபனம் செய்துவரும் நல்ல வேலையைப்பற்றி பகிரங்கமாக எனது திருப்தியைத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். இந்த ஸ்தாபனத்திற்கு போலீஸ் சூபரின்டென்டெண்டு, மிஸ்டர் கோசலராம நாயுடு, ஏ. ஆர். பி. ஆபீஸர் தலைமை வகிக்கின்றனர். இவர்களுக்கு உதவியாக போலீஸ் உத்தியோகஸ்தர்களும், பல வார்டன்களும், மற்றும் சிலரும் இருந்து வருகின்றனர். இவர்கள் பொதுஜனங்களை ஒழுங்கான திட்டத்திற்கு உட்படுத்தியிருப்பது இருதரப்பினருக்கும் கௌரவத்தையளிக்கிறது.

## லக்ஷியத்தையே கவனியுங்கள்.

நான் முடிவில் திரும்பச் சொல்லுவதென்னவென்றால், தைரியத்தை இழக்காதீர்கள். மனம் தளராதீர்கள். லக்ஷியத்தையே நோக்கமாகக் கொள்ளுங்கள்!

# நேசநாடுகள்—கொடி விழா.

## நற்செய்திகளும் பிரார்த்தனைகளும்.

## (I)
## அமெரிக்க ஜனாதிபதியின் வேண்டுகோள்.

"அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஜனாதிபதியான நான், கொடிவிழா தினமான 1942-ம் வருஷம் ஜூன் 14௳ கிரேட் பிரிட்டன், வட ஐயர்லாந்து, ருஷியா, சைனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, கோஸ்டாரீகா, கூபா, ஜெக்கோஸ்லோவாகியா, டாமினிகன் குடியரசு, எல் ஸால்வடார், கிரீஸ், காடிமலா, ஹெய்டி, ஹாண்டுராஸ், இந்தியா, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, நியூஸிலாந்து, நிகராகுவா, நார்வே, பனமா, போலந்து, தென் ஆபிரிக்கா, யூகோஸ்லாவியா, முதலிய நாடுகளின் மக்களை, இந்நாடுகள் யாவும் ஒன்றுமைப்பட்டிருந்தால் தான் மனித வர்க்கமே ஸ்வதந்திரத்தையும் சமாதானத்தையும் அடைய முடியுமென்ற எண்ணத்துடன் கௌரவிக்கவேண்டுமென்று நான் இதன் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன்."

## (II)
## மிஸ்டர் சர்ச்சிலின் நற்செய்தி.

"அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களுக்கு விடுவித்த சாஸனத்தில் நமது சிநேகிதரான ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பல வருஷங்களாக அமெரிக்காவின் கொடியின் ஞாபகார்த்தமாக ஜூன் மீ 14௳ குறிப்பிடப்பட்டிருப்பதாக நினைப்பு மூட்டினார். அந்தக் கொடி அவர்களின் ஸ்வதந்திரம், பலம், ஒற்றுமை, முதலியவைகளின் அடையாளமாக இருந்து பூலோகத்தில் ஸ்வதந்திரம் பெற்ற நாடு என்பதைத் தெரிவிக்கிறது.

"அமெரிக்கர்கள் தனியாகச் சண்டை செய்யவில்லையென்றும் இதர நேசநாடுகளும் தோளோடுதோள் கொடுத்து சண்டை செய்வதாயும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அறிவிக்கிறார். உலகத்திலுள்ள ஜனங்கள் யாவரும் ஒன்று சேர்ந்திருப்பதாகவே அவர் நினைக்கிறார். ஜூன் மீ 14௳, தங்கள் நாட்டிற்கு அடையாளமான கொடியைக் கொண்டாடுவது போல இதர நேசநாடுகளின் கொடிகளையும் வைத்துக் கொண்டு நேசநாடுகளின் கொடி விழாவைக் கொண்டாடவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

"பிரிட்டனைப்போல் தவிர மற்றும் கௌரவம் வாய்ந்த இதர நாடுகளுமிருக்கின்றன, அமெரிக்கா, ருஷியா, சைனா ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, கோஸ்டாரீகா, கூபா, ஜெக்கோஸ்லோவாகியா, டாமினிகன் நாடுகள், எல்ஸால்வடார், ஸ்வதந்திர பிரான்ஸ், கிரீஸ், காடிமாலா, ஹெய்டி, ஹாண்டுராஸ், இந்தியா, லக்ஸம்பர்க், மெக்ஸிகோ ஹாலந்து, நியூஸிலாந்து, நிகராகுவா, நார்வே, பனமா, போலந்து, தென் ஆபிரிக்கா, யூகோஸ்லாவியா முதலியன.

"இவ்வித நாடுகளை கௌரவிப்பதில் ஜனாதிபதியுடன் நானும் சேர்ந்து கொள்ளுகிறேன். ஏற்கனவே போரில் இறந்தவர்களுக்கு நமது நன்றியைச் செலுத்துவோம். தற்சமயம் சண்டை செய்வோருக்குத் தைரியத்தை ஊட்டுவோம். கொடுங்கோலுக்கு உட்பட்டிருக்கும் நாடுகளில் ஸ்வதந்திரத்தை அடைவதற்காகப் பாடுபடும் ஒவ்வொரு ஸ்திரீயையும், புருஷனையும், குழந்தையையும் சதா நினைப்போம்.

"இந்த விழாவின் போது வெற்றி கிட்டும் வரை நாம் ஒத்துழைக்க சம்மதித்திருப்பதோடு, அகண்ட நோக்கம், தயவு, மனிதனுக்குப் பொதுவான நோக்கம் முதலியவைகளை ஸ்தாபிக்கவும் முயலுவோம். அப்படியிருந்தால் நேசநாடுகள் நிச்சயம் வெற்றிபெறும்."

## (III)
## ஜனாதிபதி ரூஸ்வெல்டின் நற்செய்தி.

"நமது கொடி தினமான இன்றைய தினத்தை நேசநாடுகள் தினமாகவும் கொண்டாடுகிறோம். நமது எதிரிகளை முறியடித்து, மனிதனின் ஸ்வதந்திரத்தை ஆதாரமாகக்கொண்ட உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தவே நேசநாடுகளுக்குள் இந்த ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது.

"இன்று மெக்ஸிகோ குடியரசும், பிலிப்பைன்ஸ் தீவுகளும் நம்முடன் சேர்ந்திருக்கின்றன. ஸ்வதந்திரத்திற்காகப் போர்புரியும் நாம் இவர்களையும் வரவேற்கிறோம்.

"பொதுவாக மனித வர்க்கத்திற்குரிய நான்கு ஸ்வதந்திரங்களும், காற்று, சூரிய ஒளி, உணவு. உப்பு முதலியவைகளைப்போல் அவ்வளவு அத்தியாவசியமானவை. இவைகள் அனைத்தையும் பிடுங்கிவிட்டால் மனிதன் இறக்கவேண்டியதுதான். அவைகளில் ஒரளவைப் பறித்தாலும் அந்த அளவிற்கு மனிதன் வாட வேண்டியதுதான். அந்த ஸ்வதந்திரங்களை மனிதர்கள் ஏராளமாக அடைவாராயின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகும். அதுவே மனித சமூகம் பார்த்ததிற்குள் மகத்தானதாகும்."

"இந்த ஸ்வதந்திரங்கள், மனிதர்கள் எந்த இடத்தில் வசித்தாலும், எந்த ஜாதியைச் சேர்ந்திருந்தாலும், எந்தப் பிரிவை அடைந்திருந்தாலும் அனைவருக்கும் உரியவைகளாகும். இவைகளை நெடுநாட்களுக்கு முன்பே அடைந்திருக்கவேண்டும். ஏதோ தடைபட்டிருந்திருக்கிறது. நேசநாடுகளான நமக்குப் போதுமான சக்தியும் மனித பலமும் இருப்பதால் மனிதர்களுக்கு அந்த ஸ்வதந்திரங்கள் கிடைக்குமாறு செய்வோம்.

"மனித வர்க்கத்தின் நான்கு ஸ்வதந்திரங்களிலும், கடவுள் உருவத்தில் மனிதன் ஸ்வதந்திரத்துடன் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதிலும் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். ஆனால் நமது சத்துருக்கள் அவ்விதம் நினைக்கவில்லை. இதுவே நமக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசம். நாம் கொண்டுள்ள நம்பிக்கையிலேயே நாம் ஒற்றுமைப்பட்டிருக்கிறோம்.

"இதுவே நமக்குள்ள பலத்திற்கும், வெற்றியைப்பற்றிய நிச்சயத்திற்கும் காரணம். நமக்கு ஏற்பட்டுள்ள இந்த நம்பிக்கையை எந்த மனிதனும் எந்த சக்தியும் குலைக்க முடியாதென்பதை நாம் அறிவோம். அடிமைத்தனத்தில் அகப்பட்டுக்கொண்டு மௌனமாக இருக்கும் கோடிக்கணக்கான பேர்களும் இதே நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் என்பதும் நமக்குத் தெரியும்.

## அச்சுநாட்டு மக்களுக்கு சில கேள்விகள்.

இன்று நாஜித் தலைவர்களுக்கு அடங்கிக் கிடக்கும் ஜெர்மன் மக்களைப் பின் கண்ட கேள்வியைக் கேட்போம். அதாவது ஹிட்லரின் புதிய திட்டத்தின் பயனாக ஏற்படக்கூடிய நரக வேதனை தேவையா, அல்லது அதற்குப் பதிலாகப் பேச்சு உரிமை, மத ஸ்வதந்திரம், பஞ்சம், பயமில்லாத வாழ்க்கை இது தேவையா என்று.

"அதுபோல, யுத்த வெறிகொண்ட தலைவர்களின் காலடியில் மிதிபட்டுக் கிடக்கும் ஜப்பானிய மக்களையும் ஒரு கேள்வி கேட்போம். அடிமை, யுத்தம் இந்த சந்தர்ப்பங்களில் இன்னும் அவர்கள் வசிக்க விரும்புகின்றனரா. அல்லது, பேச்சு உரிமை, மத ஸ்வதந்திரம், பஞ்சம் பயமில்லாத வாழ்க்கை இதை விரும்புகின்றனரா என்று.

"இதே மாதிரி அச்சுநாடுகளின் கொள்ளை, அவமானம் முதலியவைகளுக்கு உள்ளான நாடுகளிலுள்ளவர்களையும் இம்மாதிரி கேட்போம். இதற்கு பதில் நாம் அறிவோம். அவர்களும் அறிவார்கள்.

"கடவுள் ஸ்வரூபத்தில் ஸ்வதந்திரமாக வாழவே பிறந்த மனிதர் எப்போதும் கொடியவர்களின் கொடுங்கோல் ஆட்சிக்கு உட்பட்டிருக்கமாட்டார்கள். நேச தேசங்களிலுள்ள மக்கள் அப்பேர்ப்பட்டவர்களின் ஆட்சியைப் பிடுங்கி அக் கொடியவர்களை அடக்குவார்கள். கடும் கொடுங்கோல் ஆட்சிகள் எத்தனையோ இவ்விதமாகக் குலைந்து போயின. ஆனால் மனிதன் மேலும் மேலும் முன்னேற்ற மடைந்துதான் வருகிறான்.

## பிரார்த்தனை.

"நேசதேசங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பிரார்த்தனையை வாசித்து எனது சொற்பொழிவை முடிக்கப் போகிறேன். அதாவது:—

"ஸ்வதந்திர மக்களைக் காக்கும் கடவுளே! மனித வர்க்கத்தின் ஸ்வதந்திரத்திற்காக எங்கள் உயிரையும் மனதையும் அர்ப்பணம் செய்கிறோம். எல்லா நாடுகளையும் அடிமைப்படுத்த நினைத்திருக்கும் கொடுங்கோல் மன்னர்களுடன் புரியப்படும் இந்த யுத்தத்தில் எங்களுக்கு வெற்றி அருள்க. ஸ்வதந்திரத்திற்காகப் போராடும் யாவருக்கும் சகோதரர்கள் என்ற மனோபாவம் ஏற்படும் படியான நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் கொடுத்தருள்க. இந்த யுத்த காலம் மட்டுமின்றி, பிற்காலத்திலும் அவ்வித சகோதரபாவம் ஏற்பட வேண்டுமென்று அனுக்கிரகம் செய்யவும். அந்த சமயத்தில் உலகவாசிகள் யாவரும் நிச்சயம் ஒன்று சேருவார்கள்.

"பெரிய பிரபஞ்சத்தில் இந்த பூமி ஒரு சிறிய நட்சத்திரம்தான். எனினும் நாம் இஷ்டப்பட்டால் இதில் யுத்த மேற்படாமலும், பசி, பயம் முதலிய தொந்தரவில்லாமலும், ஜாதி, மதம், நிறம் முதலியவைகளால் வேற்றுமை ஏற்படாமலும் செய்துகொள்ளலாம்.

"அவ்வேலையை இன்றுமுதல் ஆரம்பிக்க தைரியத்தையும், தீர்க்க திருஷ்டியையும் எங்களுக்கு அளித்து மனிதன் முன்னேற்றத்துடன் கூடியிருக்கிறான் என்று எங்கள் சந்ததியார் கௌரவமாக நினைக்கும்படி செய்யவும்.

"தனது குறுகிய வாழ்நாட்களுக்குள் தனது லக்ஷியத்தை சாதிப்பதற்காகக் கஷ்டங்களை அனுபவிக்கும் மனிதனின் பெருமையைத் தெரிந்து கொள்ளக்கூடிய அறிவைக் கொடுத்தருளும்.

"இவ்விதமான நம்பிக்கையுடன் இறந்துபோன மூதோர்களுக்காக எங்களை கௌரவிக்கவும், அடிமைக்குள்ளாகிய நாடுகளையும், மக்களையும் மீட்டுவதற்காகவும், அவர்களுக்கு க்ஷேமத்தை அளிப்பதற்காகவும் பாடுபடுவோரையும் கௌரவிக்கவேண்டும். தனியே எதிரி நாட்டில் அடைபட்டிருப்போர் விஷயத்தில் பொறுமையையும், துரோகிகளின் பேரில் சயலையும் காட்ட எங்களுக்கு அனுக்கிரஹம்செய்க. கேவலம் சரீர பலத்தினால் மாத்திரம் யாவரையும் அடக்கிவிடலாம் என்ற மூட நம்பிக்கையைக் கொண்டு உலகை ஆக்கிரமித்து வருவோரை ஒழிப்பதற்கான தந்திரத்தையும், தைரியத்தையும் எங்களுக்குக் கொடுத்தருள்க.

## சகோதரத் தன்மையைக் கொடுத்தருள்க.

"வார்த்தையில்மட்டுமல்லாது, செய்கையிலும் சகோதரத் தன்மை வெகு நாள் இருக்குமாறு அருள்க. நாங்கள் யாவரும் பூமிதேவியின் புதல்வர்களென்ற இந்த சிறறிவைக் கொடுத்தருள்க. எங்களுடைய சகோதரர்கள் அவஸ்தைப் பட்டாலும், பட்டினி கிடந்தாலும், அவர்களுடைய ஸ்வதந்திரம் பிடுங்கப்பட்டாலும் அவ்வித அவஸ்தைகள் எங்களுக்கும் உண்டானமாதிரிதான்.

"மனிதன் ஸ்வதந்திரத்துடனும், சமாதானமாகவும் வாழ்வான் என்ற நம்பிக்கையைக் கொடுக்கவும், நியாயம், தர்மம், ஸ்வதந்திரம், பத்திரம், முடிந்தவரை உலகம் பூரா யாவருக்கும் உதவும் சந்தர்ப்பம், முதலியவைகளை மனிதன் நினைக்கும்படிக்கும் செய்யவேண்டும். இவ்வித நம்பிக்கையுடன் நம்மால் சீர்திருத்தப்பட்ட உலகில் நாம் வாழ்வோமாக."



# வார யுத்தச் செய்திகள்.

13—6—42-லிருந்து 19—6—42-வரை.

**லிபியா.**—பிர்ஹாகிம், நைட்ஸ்பிரிட்ஜ், கஸாலா, எல் ஏடம், ஸிடிரெஸெக் இந்த இடங்களிலிருந்து நேசதேசப் படைகள் பின்வாங்கியுள்ளன. டொப்ருக்கிற்குக் கிழக்கே கடற்கரையையும் எதிரி அடைந்துள்ளான்.

சண்டையில் வெற்றியடைவதென்பது ஸப்ளைகளைப் பொருத்திருக்கிறது. ரோமலுக்கு இச்சப்ளை குறைந்துவிட்டது. நேசதேசங்களுக்கு மேலும் உதவி வந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில் கிடைத்த செய்தியிலிருந்து டொப்ருக்கிற்கும், மால்டாவிற்கும் பெரும் ஸப்ளைகள் வந்துவிட்டதாகத் தெரிகிறது. அவைகளை மத்தியதரைக்கடலில் எதிரிகள், கடல் விமானம் மூலம் தாக்கினார்கள். ஆனால் டாரண்டோ வகுப்பைச் சேர்ந்த 10,000 டன் இதாலிய க்ருயிஸரும், மற்றும் இரண்டு நாசகாரிகளும் சேர்ந்து விரட்டப்பட்டன.

டாரண்டோ, பிரகூஸ், பெங்காஸி, பேர்கா, கஸ்டாலி, ஹெராக்ளியான், டிம்பாகி (கிரீட்) முதலிய அச்சுநாட்டு ஸப்ளைத் தளங்களை பிரிடிஷ் விமானப் படை நொருக்கிவிட்டது.

**ருஷ்யா.**—கார்கஸ்ஸில் டமன் தீபகற்பத்திலிருந்து ஜெர்மானியர் பின்வாங்கி விட்டனர்.

தீவிரமாசச் சண்டை செய்தும் ஜெர்மானியர், மே மாதத்தில் டிமோஷென்கோ பிடித்த நிலைகளைப் பிடித்தபாடில்லை. ஆகவே இரண்டாவது கார்கவ் சண்டையும் கலைந்துவிட்டது. ஆனால், கார்கவ் தங்களுடைய லக்ஷியம் இல்லையென்றும், கார்கவ் சண்டை முடிந்துவிட்டதென்றும் ஜெர்மன் தலைவர்கள் ஏமாற்றுகின்றனர்.

ஸெபாஸ்டபூலில் கடும் சண்டை நேர்ந்தாலும் ஜெர்மானியர் முன்னேறினபாடில்லை. ருஷ்யக் கருங்கடல் படை மீண்டும் ருஷ்யர்களின் உதவிக்கு வந்திருக்கிறது.

யால்டா, மரியோபோல் இரண்டிலும் ருஷ்யர்கள் இறங்க முயற்சித்ததை ஜெர்மன் ரேடியோ ஒப்புக்கொள்ளுகிறது.

நான்கு அமெரிக்க டக்ளஸ் பாம்பர் விமானங்கள் ஒடெஸ்ஸா, நிகலாயவ், ருமேனியக் கடற்கரை இப்பிரதேசங்களைத் தாக்கின. திரும்பி வரும்போது ஜெர்மன் படைகளால் துருக்கிக்கு அருகில் பின்தொடரப்பட்டன. ஆகவே ஒரு விமானம் சேதப்பட்டது. மற்ற துருக்கியில் இறங்க நேர்ந்தது. அதில் இறங்கிய விமானிகளைக் கேட்டபோது 'கருங்கடல் மூன்றும் பழுதாகவில்லை. அதில் இறங்கிய விமானிகளைக் கேட்டபோது 'கருங்கடல் தாக்குதலுக்காக' வந்ததாக அறிவித்தனர். எகிப்திலிருந்து இவர்கள் தாக்கச் சென்றதாகத் தெரிகிறது.

**சைனா.**—இரண்டுவாரக் கடுமை சண்டைக்குப் பிறகு விமான தளமான சூஸியன் காலிசெய்யப்பட்டது. நான்சேங், குவாங்பெங், யூஷான் இவைகளை ஜப்பானியர் பிடித்துக்கொண்டனர். செகியாங்-கியாங்ஸி இருப்புப் பாதையை வசப்படுத்த கடும்போர் நடக்கிறது. ஹூபே முனையில் ஜப்பானியத் துருப்புகள் முன்னேறியிருக்கின்றன. ஹோனானில் ஸின்ஹஸியனையும் புகுந்தனர். மஞ்சூரியாவில் ஜப்பானியத் துருப்புகள் சேமிக்கப்பட்டிருப்பதாயும், ஸைபீரியாவிற்கு ஏற்படக்கூடிய பயத்தைப்பற்றி சீன மந்திரிசபை பரிசீலனை செய்யப்போவதாயும் தெரியவருகிறது.

ஹாங்லிங், பென்சாங், ஸின்சான்ஜின் இம்மூன்றிலும் சீனர்கள் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

நான்சாங்கின் தென்மேற்கே குறுக்கு எதிப்புசெய்து ஜப்பானியரை விரட்டி யடித்து அங்கரை முற்றுகையிடுகின்றனர்.

சிகியாங்-கியாங்ஸி சண்டையைப்பற்றி டா கூங் பாவோ என்ற சீனப் பத்திரிகை எழுதும்போது சீனக் கடற்கரையோரமாயுள்ள விமான தளங்களை ஜப்பான் பிடிப்பது அதற்குத்தான் ஆபத்து. உள்நாட்டிற்குள் போகும்போது அதன் போக்குவரத்துகள் தாக்கப்படுகின்றன. கேந்திரமான ஸ்தானங்களைச் சீனர்கள் பிடித்தனர். இனி ஜப்பானியருக்குக் கஷ்டம்தான்.

பஸிபிக்.—மிட்வே சண்டையில் ஜப்பானியரின் 4 விமானம் தாங்கிய கப்பல்களும், 3 பெரிய க்ரூயிஸர்கள், ஒரு சிறிய க்ரூயிஸர், 2 நாசகாரிகள் உள்பட 15 சண்டைக் கப்பல்களும் நஷ்டம்.

அலூஷியன் தீவுகளின் ஓரமாயுள்ள அட்டு தீவிலும், கிஸ்கா துறைமுகத்திலும் இறங்கியிருக்கின்றனர்.

7 வாரங்களுக்குப் பிறகு டார்வினில் மறுபடி ஜப்பானியத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

டெபாங், நியூ அயர்லாந்து, ஸிம்பர் தீவு, லாக், டிமோர் முதலிய இடங்களில் நேசதேசத் தாக்குதல் ஏற்பட்டிருக்கிறது.

பலவகைப்பட்டவை.—1 மேமீ 21உ ஆங்கிலேய-ருஷ்ய ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. யுத்த காலத்திலும், பிறகு 20 வருஷ காலம் வரையிலும் பரஸ்பரம் ஒற்றுமை ஏற்படுத்தப்படும். உலக சீர்திருத்தமும் அட்லாண்டிக் சாஸனத்தின்படி செய்யப்படும். 1942-ம் வருஷத்தில் இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதற்கான பிரச்னை சர்ச்சை செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வொப்பந்தத்தைக் கையெழுத்துச் செய்த மால்டோவ் மேமீ 2உ லண்டனுக்கும், மேமீ 29உ வாஷிங்டனுக்கும் போய் சில நாட்கள் தங்கியிருந்து இவ்விஷயங்களைச் சர்ச்சை செய்தார்.

அமெரிக்க-ருஷ்ய ஒப்பந்தமும் கையெழுத்தாகி ருஷ்யாவிற்கு டாங்கிகளும், விமானங்களும் துரிதமாக அனுப்ப ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. ஹிட்ரிச்சைக் கொலை செய்ததற்காக (Lidica) லிடிகா என்ற ஸெக் கிராமம் ஒன்று அழிக்கப்பட்டுள்ளது. 300 முதல் 400 வரை ஸ்திரீ புருஷர்கள் கொல்லப்பட்டும், ஜெயிலிலும் அடைக்கப்பட்டனர்.

ஸெக்கோஸ்லாவாகியா அயல்நாட்டு மந்திரியான மிஸ்டர் மெஸரிக் அறிவித்தபோது இதற்கு 10 மடங்காக பழிவாங்கப்படுமென்றார். ஸெக் ஜனாதிபதி டாக்டர் பீனஸ் 'ஹிட்லரையும், அவனது உத்தியோகஸ்தர்களையும்தான் நாங்கள் இக்கொடிய செய்கைக்கு மூலகாரணமாக நினைத்திருக்கிறோம்' என்றார்.

அமெரிக்கத் தலைவர்களும் இச்செய்கையை நிந்தித்துப் பேசியுள்ளனர். 'சரித்திரத்திலேயே இது மிகக்கொடிய செய்கையாகும்' என்று கார்டல் ஹல்லும், எதற்காக நீங்கள் சண்டை செய்கிறீர்கள் என்று யாராவது கேட்டால் லிடகா சம்பவத்தைச் சொல்லுவோம்' என்று நாக்ஸும் சொல்லியிருக்கிறார்கள்.

3. அச்சுநாட்டுப் படைகள் கிரீஸில் 18 பணயக்கைதிகளை வைத்துக்கொண்டு ரகசியசூழ்ச்சிக்காரர்கள் 300 பேர்களை ரகசிய சூழ்ச்சிகளை நிறுத்தாவிட்டால் கொன்று விடுவதாயும் பயமுறுத்துகிறார்கள்.

4. 60,000 யூதர்கள் இதுவரை வில்னாவில் யந்திர பீரங்கியால் கொல்லப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

5. ஸ்லோவேனியாவில் குட் பிரைடே பண்டிகை தினத்தில் 250 கைதிகள் 10 தினங்களுக்குள் கொலை செய்யப்பட்டனர்.

6. லக்ஸெம்பெல்ஜானுவில் ரகசிய சூழ்ச்சிக்காரர்களைக் கொலை செய்யும்போது 38 கிராமங்கள் எரிக்கப்பட்டன.



7. பிரான்ஸில் தொழிலாளிகள் சேகரம் செய்யப்படுகிறார்கள். அடிமைகளேற்றிய ரயில்வண்டிகள் ஜெர்மனிக்குப் போய்க்கொண்டே இருக்கின்றன. ஏராள தொழிற்சாலைகளை லவால் மூடிவிட்டதால் ஆயிரக் கணக்கான பேர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர். அவர்களை ஜெர்மானியர் அழைத்துச் செல்லுகின்றனர்.

8. புதன்கிழமை காமன்ஸ் சபையில் யுத்தத்திற்காக 1,00,00,00,000 பவுன் ஒதுக்கப்பட்டது. ஆக யுத்த மொத்தச் செலவு 8,60,00,00,000 பவுன் ஒதுக்கப்பட்டுள்ளது 10,05,00,00,000 பவுன். தினசரிச் செலவு 1,20,00,000 பவுன்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 8—6—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள், தொழிற்சாலை, இருப்புப்பாதை—புருஜெஸ் (Bruges). | | | |
| | பெரிய விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel), விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | 6 விமானங்கள். | |
| | இரவில்.—கப்பல் துறைகள்—டியப் (Dieppe). | | | |
| | விரோதி விமான தளங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | | |
| | ரயில்வே லக்ஷியங்கள்.—வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | 18 விமானங்கள். | |
| | விரோதிக்குச் சொந்தமான கடல் விமானம்.—வட கடல் (North Sea). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | போக்குவரத்து மோட்டார்கள், பீரங்கி, ஸ்தானங்கள்—பிர்ஹாகீம் (Bir hakheim) பிரதேசத்தில். | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 5 விமானங்கள்; இன்னும் அநேகம் சேதமாயின. |
| | விமான நிலயம்.—பார்ஸ் (Barce). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 8—6—42. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ஹெராகிளியான் (Heraklion). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன | 9 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோட்டார் வண்டிகள், கட்டடங்கள்.— எர்மீரா (Ermera). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| 9—6—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி சமுத்திரங்களில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கவசம் பூண்ட வண்டிகள், விரோதி ஸ்தானங்கள், மோட்டார்கள்.—பிர்ஹாகேம் (Birhakheim) பிரதேசத்தில். | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 6 விமானங்கள். |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள், இன்னும் பல ராணுவ லக்ஷியங்கள்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | 2 விமானங்கள். | 13 விமானங்கள். |
| 10—6—42. (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி விமான தளம்—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | | |
| | ஒரு ரயில்வே ஸ்டேஷன், மின்சார உற்பத்திசாலை.—வடபிரான்ஸ் (France). | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரேனைகாவின் (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | விரோதிப் படைகளின் போக்குவரத்து, மோட்டார்கள், பீரங்கி ஸ்தானங்கள்.—ஏராளமான சாமான் ஏற்றிச் செல்லும் வண்டிகள்— பீர்ஹாகேம் (Birhakheim) பிரதேசத்தில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 10—6—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.— கிரீட் (Crete). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி நீர்மூழ்கி.—கடற்கரைக்கருகாமையில். | மூழ்கடிக்கப் பட்டது. | | |
| | நியூ பிரிடன் (New Britain)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—ராபால் (Rabaul). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—6—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia) வின் கடற்கரையில். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும கிடைக்கவில்லை. | | | |
| 10—6—42. (புதன்கிழமை). | | | | |
| | இங்கிலீஷ் கால்வாய் (English Channel).—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் (England) தெற்குக் கடற்கரை. | கப்பல் ஒன்றும் சேதமாகவில்லை. | 3 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 6 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிர்ஹாகிம் (Birhakheim). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை | | | |

# யுத்தக் குறிப்புகள்.

---

**இந்திய சம்பந்தமானது.** இந்த அறிக்கையின் 100-வது சஞ்சிகை இப்போது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. 1940-ம் வருஷ ஜுலையீ முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது முதல் இடையில் வந்த மூன்று கிருஸ்துமஸ் வாரங்களைத் தவிர, மற்ற எல்லா வாரங்களிலும் இவ்வறிக்கை வெளி வந்திருக்கிறது. இந்த சஞ்சிகையின் முதல் பக்கத்தில் நமது அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் துரையவர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் அனுப்பிய நற்செய்தி அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த 100-வது சஞ்சிகையைப் பிரசுரிக்கும் சந்தர்ப்பத்தில் தனது பாராட்டுதலையும், பிரியத்தையும் தெரியப்படுத்தவே அவர் அவ்விதம் செய்திருக்கிறார்.

இவ்விதமாக நமது அறிக்கையும் 100 சஞ்சிகைகளைப் பிரசுரித்திருக்கின்றன. கிரிக்கெட் ஆட்டத்தில் இரு கக்ஷிகள் விளையாடுவது போல் நேசநாடுகளான நமக்கும் அச்சுநாடுகளுக்கும் நடந்துவரும் சண்டையில் நாம் வெற்றி பெற்றிருப்பதாகவே எண்ணலாம். அதாவது கிரிக்கெட் ஆட்டத்தில் 100 ஓட்டம் எடுத்ததற்கு சமமாகும். இந்த யுத்தமாகிற கிரிக்கெட் ஆட்டத்தில் நமது எதிரி ஒழுங்கான முறைகளையும் சட்டதிட்டங்களையும் கவனிக்கவில்லை. உதாரணமாகப் பிரசாரம் சம்பந்தப்பட்ட வரையில் பொய்யான சமாசாரங்களை வெளியிடுவது தான் எதிரியின் வழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் நாம் பிரசுரிப்பதெல்லாம் உண்மை விவரங்களே. இவ்விதம் மீண்டும் நடத்தி வெற்றி பெறுவோம்.

வி வி வி வி வி வி வி

**நமது லக்ஷியம்.** இந்த சந்தர்ப்பத்தில் நமது லக்ஷியங்கள் எவை என்பதைப்பற்றி சற்று விவரிப்போம். உலகத்திற்கே பெரும் ஆபத்தான சண்டையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். சரித்திரத்தின் முக்கியமான சமயமும் இதுவேயாகும். நம்முடைய தாய் நாட்டிற்கு எதிரியின் படையெடுப்பு நேருமோ வென்ற பயமும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பிரிடனின் உதவியால் அது வெகுதூரம் ஒதுக்கப்பட்டுயிருக்கிறது.

இரண்டாவதாக, மிகக் கடுமையாக நடக்கும் இந்த யுத்தத்திற்கு முழுயுத்தம் என்று பெயர். ஏனென்றால் ஒவ்வொரு ஸ்திரீ, புருஷன், குழந்தையும் ஈடுபட்டு யுத்தரங்கத்திலும் உள்நாட்டிலும் நடக்கிறது. தேசத்தின் உணவுப்பொருளைப் பயிரிடும் குடியானவனும், ஆயுதங்களைத் தயாரிக்கும் மெகானிக்கும், யுத்தரங்கத்தில் சிப்பாயும் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த யுத்தத்தின் உள்நாட்டு நிலைமைதான் அதிக முக்கியமானது. இந்த அறிக்கையும் பொதுமக்களின் முன்னணி சிதைந்து விடாமல் செய்கிறது. இது ஒரு கஷ்டமான காரியம் தான். ஏனென்றால் நாம் பொதுமக்களின் மனதைத் திடப்படுத்த நினைக்கிறோம். பொதுமக்கள் கலவரமடையாமல் ஒற்றுமையுடனிருக்க வேண்டுமென்றும் ஜெர்மனி, ஜப்பான், இதாலி முதலியோரின் பொய் பிரசாரத்திற்கு வசமாகக் கூடாதென்றும் நாம் எடுத்துச் சொல்லுகிறோம். இதை பகீரதப் பிரயத்தனம் என்றே சொல்லலாம். இருந்தாலும் நாம் விடாமுயற்சியுடன் இருந்தால் வெற்றி பெறலாம் என்று ஆசை யுடனிருக்கிறோம்.

இந்த ஆசையும் மிக உயர்ந்ததுதான். ஏனென்றால், மதம், சரித்திரம் இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு நமது வேலையைச் செய்து வருகிறோம். உலகத்திற்கு எப்போதாவது அரசியல், ராணுவம் முதலியவைகளால் கெடுதி ஏற்படும்போல் இருந்தால் நல்லெண்ணம், சமாதானம் முதலியவைகளிருந்தால் தான் அமைதி ஏற்படும். நாமும் இந்த இரண்டையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறோம்.

நாம் சரியான காரணத்தைக் கொண்டு சண்டை செய்வதால் நாம் பலம் பெற்றிருக்கிறோம். பலமிருப்பதால் மேலான நம்பிக்கையுமிருக்கிறது.



**நேசநாடுகள்.** நாம் தனிமையாக இல்லை. 30 நாடுகளின் பலம் நம்முடன் இருக்கிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை 30 நாடுகள் ஒன்று சேர்ந்து, இந்தச் சண்டையில் வெற்றி பெறலாம் என்று நிச்சயித்த விஷயம் சரித்திரத்திலேயே விசேஷமானது. இவ்விதமான அரசியல் மாறுதல்களில் தோட்டி முதல தொண்டமான்வரை ஒன்றுசேர்வது சகஜமானாலும், அச்சுநாடுகளை எதிர்க்கும் விஷயத்தில் ஒரே மனப்பான்மையுடன் அன்று காணப்பட்டனர். ஸர்வ தேசங்களையும் ஏகோபித்து அமைக்கும் வேலையிலும் ஈடுபட்டனர்.

இதற்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட ஸர்வ தேசச் சங்கம் மறைந்து போனாலும் இனி ஏற்படப்போகும் ஐக்கியபத்தியம் கெட்டுவிடாது. இது முதலில் அட்லாண்டிக்கில் ரூஸ்வெல்டு-சர்ச்சில் சந்திப்பிலேயே ஆரம்பமாயிற்று. பிறகு மாஸ்கோவிற்கு ஈடன் சென்றபோதும், சைனாவிற்கு வேவல் சென்றபோதும், விஸ்தாரமடைந்தது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட ஒற்றுமையில் தற்சமயம் 30 நாடுகள் சேர்ந்திருக்கின்றன.

இதற்கு மூலகாரணம் பிரிடன்தான். பிறகு இதை ஜனாதிபதி ரூஸ்வெல்டு அபிவிருத்தி செய்தார். ராஜீய ஸகபுண்யத்தை வெளிபபடுத்திக்கொண்டு அமெரிக்கக் கொடி விழா தினத்தின்போது மற்றநாடுகளின் கொடிகளையும் வைத்துக்கொண்டாட வேண்டுமென்று ரூஸ்வெல்டு தீர்மானித்தார்.

இதுவே ஸர்வ தேசங்களின் ஒற்றுமைக்கு ஒரு அடையாளமாகக் காணப்பட்டது. ஆனால் கொலை, கொடுமை முதலியவைகளால் பயத்தை விளைவித்துக் கொண்டு அச்சுநாட்டினரும், "புதுதிட்டம், பொதுக்ஷேமம்" முதலியவைகளை ஸ்தாபிக்கப் பார்க்கிறார்கள். நேசநாடுகள், யாவருடைய ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொண்டு தங்களுடைய லக்ஷியத்தை அடையப்பார்க்கின்றனர் அச்சுநாடுகளோவெனில் பலாத்காரம், ஆக்கிரமணம் முதலியவைகளால் தங்களுடைய லக்ஷியங்களை ஸ்தாபிக்க முயலுகின்றனர். பலாத்காரத்தால் செய்யப்படும் காரியம் சிறிது நாளைக்குத்தான் நிலைத்திருக்கும். பிறகு ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டிலுள்ளோரின் வெறுப்பும், எதிர்ப்பும் ஏற்படும். ஒற்றுமையென்பது ஸ்தாபிக்கப்படுமேயானால் இதற்குமுன் பகைவர்களாக இருந்தாலும் ஒன்றுசேர்ந்து கொள்ளுவார்கள். நாஜிகளின புதுதிட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் குலைந்துவருகிறது. முஸோலினி அச்சுநாட்டு ஒப்பந்தத்தில் இல்லையென்றே சொல்லிவிடலாம். ஜப்பானையும் ஜெர்மனியின் சிநேகிதனென்று சொல்லமுடியாது. ஜெர்மனிக்குப் போட்டியாக ஜப்பான் டச்சுக் கிழக்கிந்திய நாடுகளைப் பிடித்திருக்கிறான். ருமேனியாவும், ஹங்கேரியும் டிரான்ஸல்வேனியாவைப் பிடிப்பதற்காக ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளுகின்றனர்.

தனது நிலைமை இவ்வாறிருக்க பிரிடனைக்கண்டு பொறாமைப்பட்டு, ஒரு பக்கம் அமெரிக்கா வசமும் மற்றொரு பக்கம் ருஷ்யா வசமும் பிரிடன் அகப்பட்டுக் கொண்டிருப்பதாக மட்டில் எதிரிகள் சொல்லுகின்றனர். ஆனால் உலகத்திற்கே தலைமை வகிக்கும்படியான விதத்திற்கு பிரிடன் நடந்துகொண்டுவருகிறது.

வி வி வி வி வி வி

**பஸிபிக் வெற்றி: ஆனால் யாருக்கு?** ஜனவரி 9ல் செய்யப்பட்ட ஒரு ஜப்பானிய ஒலிபரப்பில் 'ஜப்பானியக் கப்பற்படை எங்கே சென்றாலும் அங்கே வெற்றிதான்' என்று சொல்லப்பட்டது உண்மை தான். ஆனால் வெற்றி யாருக்கு? என்று கேட்கவேண்டும். கொழும்பு, பவளக்கடல், மிட்வேதீவு முதலிய இடங்களில் நடந்த சண்டைகளே இந்தக் கேள்விக்கு பதிலைத் தருகின்றன. பேர்ல் துறைமுகத்தில் ஜப்பானியர் செய்த திடீர் தாக்குதல் இனி செய்யமுடியாது. அதைதெரிந்துகொள்ளாமல் கொழும்புபேரில் தாக்குதல் செய்தபோது வெற்றி ஜப்பானுக்கு இல்லையென்று காண்பிக்கப்பட்டது. பவளக் கடலில் நடந்த சண்டையில் ஜப்பானியருக்கு ஒன்றிரண்டு விமானமேற்றிய கப்பல்கள் சேதமாயின. ஸிட்னியில் ஜப்பானியரின் 4 நீர்மூழ்கிகள் நஷ்டம், மிட்வேயில் இரண்டு மூன்று விமானமேற்றும் கப்பல்கள் மூழ்கின. மற்றும்

இரண்டு சேதமாயின. இவைகளைத்தவிர கப்பல்கள் நஷ்டம் இன்னும் அதிகம். மிட்வே தீவில் நடந்த சண்டையில் எதிரிக்கு 'டிராபால்கர்,' சண்டையில் முன்பு பிரெஞ்சுக்காரர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

மிட்வே தீவையும், டச்சுத் துறைமுகத்தையும் எதிரி தாக்கியதற்கு பலகாரணங்களிருக்கலாம். ஆனால் தனது நாட்டைக் காபந்து செய்துகொள்ளவும், ஆஸ்திரேலியாவிற்கு மத்திய பஸிபிக் மூலமாக அமெரிக்க ஸப்ளைகள் போகாதபடி தடுக்கவும்தான் எதிரி அம்மாதிரி செய்திருக்கிறான். மேலும் ஹோனேலூலுவிற்கு அப்பால் அமெரிக்கக் கப்பற்படைச்சென்று வேவுபார்க்கவிடாமல் செய்து தான் ஆஸ்திரேலியாவரை முன்னேறலாமென்றும் நினைத்திருக்கிறான். மிட்வே தீவுக்கு அருகே மூன்று ஜப்பானிய யுத்தக்கப்பல்கள் கொண்டுவரப்பட்டிருந்ததால் ஏதோ பெரும் வகையான தாக்குதல் செய்யலாமென்று ஜப்பான் நினைத்திருந்தது. ஆனால் எதிர்பார்த்தபடி அதற்கு வெற்றிகிட்டவில்லை, முன்னேற்றப் போரைத் தற்காப்புப் போராகமாற்றிக்கொண்டு பயந்துவிரைவாக ஓடிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**அட்லாண்டிக் யுத்தம்.** ருஷ்யத் துணைக்கப்பல் கூட்டம் சேதமில்லாமல் திரும்பி வந்துவிட்டது. இருந்தாலும் அட்லாண்டிக் யுத்தம் முடிந்துவிட்டதாக நினைக்கக்கூடாது. சென்ற வருஷத்தில் ஐஸ்லாந்தை நேசநாடுகள் வியாபித்துக்கொண்டபிறகு பிரிடனுக்கு மேற்குப் பக்கமாக எதிரி நடமாட்டம் செய்யமுடியாமல் கிழக்கிலும் தெற்கிலும் முக்கியமாக கரிபியன் கடல் பக்கமாகத் தாக்குதலை மாற்றிக்கொண்டிருக்கிறான். பிரிடிஷ் கடற்கரை, மத்தியதரைக்கடல், மேற்கு ஆபிரிக்கா, இந்து மஹாசமுத்திரம் முதலிய கடல்மார்க்கங்களில் எதிரி தொந்தரவு இல்லை. ருஷ்யாவிற்குப்போகும் வடக்கு மார்க்கம் அதிகமாகக் காவல்புரியப்பட்டு வருவதால போக்குவரத்து ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மெக்ஸிகோ சண்டையிலீடுபட்டதற்கு கரபியன் கடலிலும் காவல் புரியப்பட்டு வருகிறது. இதன் வழியேதான் வெனிஸுஏலா, மெக்ஸிகே முதலிய நாடுகளின் எண்ணெய் வெளிநாடுகளுக்குச் செல்லுகிறது, அங்கேதான் அட்லாண்டிக்குக்கும் பஸிபிக்குக்கும் இடையிலுளள பனாமா இருக்கிறது. அங்கு காவல் புரியப்படுகிறது. கரிபியன் கடலுக்கு அருகிலுள்ள நடுநிலை நாடுகளுக்கு அருகில் எதிரி நீர்மூழ்கிகள் வந்தால் எளிதில் கண்டுபிடிக்கப்படுகின்றன.

மே மாதத்தில் 7,67,000 டன் கப்பல்களை அமுக்கிவிட்டதாக ஜெர்மானியர் கூறுவது கேவலம் பிரசாரத்திற்காகச் சொல்லப்படும் எண்ணிக்கைதான். ஆனால் இதற்குப் பிரதியாக மே மாதத்தில் அமெரிக்க உற்பத்தி 6,32,000 டன் கப்பலென்றும், பிரிடிஷ் உற்பத்தி 1,00,000 டன் கப்பலென்றும், கனடாவில் 1,00,000 டன் உற்பத்தியென்றும் மொத்தம் 8,32,000 டன் என்றும் நாம் சொல்லுவோம்.

வி வி வி வி வி வி வி

**தரைப்போர் முனைகள்.** கார்கவ்வில் கடுமையான தாக்குதல்களும் குறுக்கு எதிர்ப்புகளும் நடக்கின்றன. மறுபடி டிமோஷென்கோ தாக்குதலை ஆரம்பித்திருக்கிறான். வான்பக் இரண்டாவது கார்கவ் யுத்தத்திற்காக 60 சைனியப் பகுதிகளை ஈடுபடுத்தியிருக்கிறான். முடிவு இன்னும் தெரியவில்லை.

ஸெபாஸ்டாபூல் சண்டையும் மிகக்கடுமையாக நடைபெறுகிறது. ருஷ்யக் கருங்கடல் படை உதவிக்குவந்திருக்கிறது.

லிபியா யுத்தத்திற்கும், கார்கவ், ஸெபாஸ்டாபூல் யுத்தத்திற்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவை இரண்டாலும் மத்தியக் கிழக்கை நோக்கி பின்ஸர் படையெடுப்பு நேருமென்றும் சொல்லப்படுகிறது. எது எப்படியானாலும் தேவாஸுர யுத்தம்போல் நடைபெறுகிறது. இதில் கடற்கரையை அடைவதற்காக ரோமல் பெரும் பாடுபடுகிறான். ஆனால் ரிச்சியின் தீவ்ரயத்தனத்தினால் எதிர்க்கப்படுகிறான்.



சைனாவில் சுஹ்ஸின், பூஷான் இரண்டும் எதிரிவசமாகிவிட்டன. இருந்தாலும் சைனா சண்டை செய்கிறது. சைனாவின் தலைவர் சொல்லும் விதமாக, 'ஆறு வருஷ காலமாகச் சண்டையிலீடுபட்டிருந்தாலும் யுத்தத்தில் அலுப்பு ஏற்படவில்லை. இன்னும் எவ்வளவு தியாகம் தேவையாக இருந்தாலும் சைனா பின்வாங்காது'.

இந்தியா ஏஜெண்டு ஜெனரல் ஸர் ஜப்ருல்லாகான் பின்கண்ட விதமாக அறிவிக்கிறார். 'சீனர்கள் எதிர்த்து நிற்பதற்கு சக்கில் திருஷ்டாந்தமாக இருக்கிறது. ஒற்றுமையாக நிற்பதே வெற்றியடைவதற்கு ஒரு காரணம் என்றும் காண்பித்திருக்கின்றனர். இதைக்கொண்டு முடிவான வெற்றியையும் அடைந்து விடலாம்! கஷ்ட நிலையிலிருந்து சைனா மேன்மையை அடைகிறது. 'குண்டுகள் வீடுவாசல்களைத்தான் கெடுக்க முடியும். ஜனங்களின் உணர்ச்சியைக் கெடுக்க முடியாது'.

வி வி வி வி வி வி வி

**ஆங்கிலேய-ருஷ்ய ஒப்பந்தம்**
இவ்வாரத்தில் ஏற்பட்டிருக்கிறது. இது
ராணுவ விஷயங்களுக்காக ஏற்பட்டிருந்த
போதிலும் சிநேக முறையில் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லலாம். தற்போதய
நிலைமைக்கும், இனி ஏற்படப்போகும் நிலைமைக்கும் ஏற்றவாறு, சென்ற ஜூலை
மாதத்தில் கையெழுத்தான கிரிப்ஸ்-மாலடோவ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளும்
ஈடன், பீவர்ப்ரூக், அவெரெல் ஹாரிமான் மாஸ்கோவில் நடத்திய பேச்சு
வார்த்தைகளின் படிக்கும், சமீபத்தில் லண்டனில் மாலடோவ் செய்த பேச்சு
வார்த்தைகளின் படிக்கும் உதவி செய்யப்படும். 20 வருஷ காலம்வரை இரு
நாடுகளுக்கும் ராணுவம், பொருளாதாரம் இவைகளில் ஒத்துழைப்பு ஏற்படும்.
யுத்தத்திற்குப் பிறகு சமாதானம் ஏற்படுத்துவதில் அட்லாண்டிக் சாஸனத்தின்
படி இருநாடுகளும் சேர்ந்துகொள்ளும். 1942-ல் இரண்டாவது போர்முனையை
ஏற்படுத்தும் விஷயம் பரிசீலனை செய்யப்படும். வெகுகாலமாக எதிர் பார்த்
திருந்த இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது. 'சமாதான காலங்களில்
ஏற்படுத்த முடியாத சிநேகம், யுத்தத்தின் பயனாக ஏற்பட்டுவிட்டது. இவ்வித
ஒற்றுமையில்லாமல் ஐரோப்பாவில் தற்சமயத்திலும் இனியும் பத்திரமே ஏற்
படாது'. என்று மிஸ்டர் ஈடன் சொல்லியுள்ளார்.

இரண்டாவது போர்முனையென்ற அறிவிப்பே எதிரிக்கு பயத்தை உண்டா
க்கியுள்ளது. அதன் பயனாக லுப்ட்வாபியின் விசேஷப்பகுதிகள் பிரிடிஷாரை
இறங்க விடாமல் செய்வதற்கு மர்மான்ஸ்கிற்கு வந்திருக்கின்றன. அட்லாண்டிக்
கின் பக்கமாக நாஸி பீரங்கி நிலயங்கள் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன.
யுத்தக்கப்பல்கள் அணுகாமல் செய்ய தருப்பு ஸ்தாபனங்கள் வைக்கப்பட்டிருக்
கின்றன. கடற்கரைப் பிரதேசத்திற்கு உட்புறத்தில் 3 தற்காப்பு அணிகள்
வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கும் பின்னால் மோட்டார் படைகள்
ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. புதிய பகுதிகளும் கொண்டுவரப்பட்டுள்ளன.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்கா-விஷி.**
அமெரிக்க உணவுகளேற்றிய கப்பல்கள் பிரெ
ஞ்சு மேற்கு ஆபிரிக்கா அனுப்பப்படு
மென்று ஜூன் 12-ம்டை கார்டல் ஹல் அறிவித்ததிலிருந்து விஷி சம்பந்தமாக
அமெரிக்காவின் நோக்கத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிற விஷயம் தெரியவருகிறது.
லவால் அதிகாரத்திற்கு வந்ததும் இவ்வுணவுக் கப்பல்கள் செல்லாமல் அமெரிக்கா
செய்துவிட்டது. லீஹியையும் திரும்ப அழைத்துவிட்டது.

இதற்குக் காரணங்கள் யாவருக்கும் தெரிந்ததுதான். தற்போதுள்ள
யுத்த நிலைமையில் பிரெஞ்சுக் கப்பற்படை ஹிட்லரின் வசம் ஒப்படைக்கப்பட்
டால் அட்லாண்டிக்கில் அதனால் ஏற்படக்கூடிய பாதகமென்னவென்று அமெரிக்
காவிற்குத் தெரியும். மேலும் அமெரிக்காவுடன் விரோதமேற்பட்டால் ஜெர்மனி
யுடன் விஷி சேரவேண்டிய அவசிய மேற்பட்டு அதனால் விஷி குலையவேண்டி

வருமென்றும் அமெரிக்காவிற்குத் தெரியும். ஆனால் சாம்ராஜ்யம் தங்களுக்கு இருப்பதாக இன்னும் பிரெஞ்சுக்காரர்கள் கௌரவமாக நினைத்துக்கொண்டிருப்பதால் வடக்கு மேற்கு ஆபிரிக்காவிலுள்ள நாடுகள் ஹிட்லர் வசமாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டி வந்தது. மேலும் ஸ்பெயின், போர்ச்சுகல், ஸ்விட்ஸர்லாந்து முதலிய நாடுகளுடன் பிடேன் ஒன்று சேர நினைத்திருக்கிறான்.

ஆனால் பிடேனுடன் உறவுகொண்டாட ஹிட்லர் தயங்கவில்லை. பிரிடிஷ் விமானப்படை பாரிஸைத் தாக்கியதும் ஹிட்லர் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பிரான்ஸுக்கும் அமெரிக்காவிற்கும் விரோதத்தை மூட்ட நினைத்தான். ருஷ்யப் பொதுவுடமைக் கக்ஷிக்கு விரோதமான அபிப்பிராயங்களையும் தூண்டிவிட்டான். இருந்தாலும் அமெரிக்காவுடன் பிரான்ஸுக்கு சிநேகம் இருக்கிறது. ஜெர்மனிக்குத் தேவையிருக்கும் வரை பிரெஞ்சுக்காரர்களைத் தனியே ஹிட்லர் விடமாட்டான் என்பது பிடேன் கண்டுகொண்டான். ஜெர்மனிக்குத் தோல்வி ஏற்படுமென்றும் பிடேன் தீர்மானித்திருக்கிறான். ஆகவே பிடேன் கோயரிங் பேச்சு பயன்படவில்லை. பிடேன் ஜெர்மனியை விரோதித்துக்கொள்ள சமயத்தை மாத்திரம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். சமீபத்தில் பிடேன் 'லவாலும் நானும் ஒற்றுமையுடன் நடந்து கொள்ளுகிறோம்; எங்கள் இருவருக்கும் அபிப்பிராய பேதமே இல்லை' என்று சொல்லியிருந்தாலும் இந்த சிநேகம் உண்மையானதல்ல. லவாலைப் பிடேன் வெறுக்கிறான். இருந்தாலும் லவாலைத் தனியே விட்டுவிடவும் முடியவில்லை. வெர்ஸெயல்ஸை ஜெர்மானியரிடமிருந்து மீட்டுவதற்கு லவால் உதவியாக இருப்பான் என்றும் நினைக்கப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாட்டுப் பிரசாரம்: பொய்களும் தற்புகழ்ச்சிகளும்.**

1. மானர்ஹீமை அவனது 75-வது வயது பூர்த்தியானதற்காகக் கொண்டாட ஹிட்லர் பின்லாந்து சென்றான். உண்மைக் காரணம் யாதெனில் பின்லாந்தில் ஏற்பட்டுள்ள மனத்தாங்கலைப் போக்கடிப்பதற்குத்தான்.

2. இந்தியா பூராவும் ராணுவச் சட்டம் அமுலிலிருக்கிறது. இது முழுப் பொய்.

3. ஜப்பானிய வியாபார மந்திரி மிஸ்டர் மிட்ஸுடாகா மோரி பர்மாவில் கிடைக்கும் மூலப் பொருள்கள் 120, 130 வருஷங்களுக்கு தாங்குமென்று ஒலிபரப்பியுள்ளான். இது அதிக ஆசையின் பேரில் சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் அங்கிருந்து விரட்டப்படும். 100, 125 வருஷம் ஒரு நாளும் தாங்காது.

4. ஹீட்ரிச்சின் கொலையில் பிரிடிஷாருக்கும் சம்பந்தமிருப்பதாக பிரேக் போலீஸ் கண்டுபிடித்துவிட்டது 'கொலையாளிகள் குடை விமானத்திலிருந்து போடப்பட்டனர்'.

இது உண்மையானால் 275 ஒன்றுமறியாத செக்கர்களை ஏன் கொல்ல வேண்டும்?

---

## பிரிடிஷ் விமானப்படையில் இந்திய விமான ஓட்டிகள்.

"வாழ்க்கையில் அநேக தீரச்செயல்கள் நிறைந்துள்ளது" என்று கிரேட் பிரிடனிலிருக்கும் பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த இந்திய விமான ஓட்டிகளில் ஒருவர் தன்னுடையவும், இன்னும் தன்னுடைய சகாக்களின் அனுபவங்களையும் எடுத்துச்சொன்னார்.

ஒரு வருஷத்திற்குமுன் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் அச்சாணிபோலுள்ள பிரிடன் தேசம் அபாயத்திற்குட்பட்டிருந்தபொழுது இந்திய ஆகாயப்படை



வாலண்டியர் ரிஸர்வ் பகுதியைச் சேர்ந்தவர்களில் ஒரு கோஷ்டி தங்கள் நாட்டை விட்டு பிரிடிஷ் விமானப்படையில் ஒத்துழைக்கச் சென்றனர். பிரிடன்பேரில் ஜெர்மனி நடத்திய சண்டையில் லுப்ட்வாபியைத் தோற்கடிக்கச்செய்த சாமர்த்தியம் வாய்ந்த பிரிடிஷார்கள் பட்ட கஷ்டத்தில் இவர்களும் பங்கிட்டுக் கொண்டனர். இப்பொழுது இவ்விளைஞர்கள் தங்கள் போர் திறமையையும், பிரயோஜனத்தையும் காட்டிவருகின்றனர். மேலும் பிரிடன் பாதுகாப்பில் பங்கெடுத்துக்கொண்டவர்களில் இவர்கள்தான் முதன்முதலாக உத்தியோகமுறையில் இந்தியப் பிரதிநிதிகளாக இருந்து மிகவும் பெருமையடைந்திருக்கிறார்கள்.

பிரிஸியன் தீவுகளுக்கருகாமையில் சென்றுகொண்டிருந்த எதிரியின் பெரிய கப்பலை விமான உத்தியோகஸ்தர் மிர்ஸாமேடிக்கான் என்பவர் தாக்கி, அழித்ததில் இந்தியர்களின் ஆகாயப் போர் திறமையையும், வீரத்தையும் ஜெர்மானியர்களை உணரச் செய்திருக்கிறார். பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த இந்திய விமான ஓட்டிகளின் பெரும் தீரச்செயல்களில் மேற்சொல்லியது ஒரு திருஷ்டாந்தம்தான்.

கிரேட் பிரிடனில் அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் அவர்களுடைய கூர்மையான புத்தியையும், ஊக்கத்தையும் யாவரும் கண்டு புகழ்ந்திருக்கிறார்கள். ஜெர்மனிக்கு ஏற்பட்ட தாக்குதலினால் பிரிடனைப் பாதுகாத்துவரும் நமது வாலிபர்களுக்குப் பயந்து ஜெர்மனி மீண்டும் படையெடுக்க எத்தனிக்காமலிருப்பதைப் பார்க்க, இந்திய விமான ஓட்டிகள் போருக்குப் போதுமான சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று புகார் செய்கிறார்கள்.

பிரிடிஷ் விமானப்படைப் பகுதியிலிருந்து இந்திய விமானிகளைப்பற்றி உத்தியோகமுறையில் வெளிவரும் அறிக்கைகள் யாவும் படிப்பதற்குத் திருப்திகரமாக இருக்கிறது. இராக் காலத்தில் சண்டை போடுவதில் விசேஷ திறமையை ஒரு விமான ஓட்டி காட்டியிருக்கிறார். நல்ல பைடர் விமானங்களை ஓட்டிச்செல்ல சாமர்த்தியம் வாய்ந்தவர்களாகவும் சிலர் இருக்கிறார்கள். துவி யந்திர பைடர் விமானத்தை நடத்திச்செல்லக்கூடிய உயர்தரப் பயிற்சியும் ஒருவர் பெற்றிருக்கிறார். இன்னும் மற்றவர்கள் 'பாம்பர்' விமானங்களில் வேலை பார்ப்பதற்கான விசேஷ சாமர்த்தியம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். கடைசியில் இந்திய விமானி ஒருவருக்கு ஒரு படைப்பகுதிக்குத் தலைவராக ஆகக்கூடிய திறமை இருப்பதாகவும் அவருடைய போதகாசிரியர்களுக்குத் தோன்றுகிறது.

இந்திய இளைஞர்கள் ஒருவிதத்திலும் சுலபமாகக் காலத்தைக் கழிக்கவில்லை. பிரிடிஷ் விமானப்படையில் பயிற்சிபெறும் அனுபவம் பார்ப்பதற்கு மிகவும் கடோரமாக இருக்கும். எப்படியிருந்தபோதிலும் இந்தியர்களில் பெரும்பாலோர் நல்ல பிரக்யாதிபெற்று, தேர்ச்சியடைந்திருக்கிறார்கள்.

இந்தியாவைவிட்டு பெரிய போருக்குச் சென்ற இந்திய விமான ஓட்டிகளில் 17 பேர்கள் நன்றாகப் பயிற்சியடைந்திருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் பாம்பர், பைடர் விமானப்படைப் பகுதிகளில் வேலைக்கு அமர்ந்திருக்கின்றனர். பயிற்சி பெறுவதிலும், விமானத் தாக்குதலிலும் சில இந்திய விமானிகள் உயிர் துறந்தனர். தங்கள் அருமைத் தோழர்களின் பிரிவுக்காக அவர்கள் துக்கிக்கிறார்கள். இன்னும் மற்றவர்கள் இறுதியில் வெற்றியடையும்வரை தங்கள், தங்கள் விமானப் பகுதியிலேயே இருந்து போர் நடத்திவருகிறார்கள்.

## அட்லாண்டிக்கடல் யுத்தத்தில் இந்திய கப்பல்வேலைக்காரர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

## 40,000 பேர்கள் தங்கள் உயிரையும் இழக்கத் தயாராகயிருக்கிறார்கள்.

(ஸர் ஆர்ச்சிபால்டு ஹர்டு என்பவர் எழுதியது.)

(1914-ம் வருஷ முதல் 1918-ம் வருஷ வரை நடந்த யுத்தத்தில் வியாபாரக் கப்பற்படையைப் பற்றி உத்தியோக முறையில் ஒரு சரித்திரம் இவர் எழுதியுள்ளார்.)

40,000 இந்தியர்கள் இப்பொழுது நடக்கும் அட்லாண்டிக் யுத்தத்தில் தங்களுடைய உயிரையும் தியாகம் செய்துவருகிறார்கள். எதிரிகளின் 'யு' படகுகள், ஆகாய விமானங்கள் இவைகளின் தாக்குதல்களுக்கும், பாம்பர் விமானங்கள் வெடிகுண்டுகள் வீசுவதற்கும், சுரங்க வெடிகளின் அபாயங்களுக்கும் உட்பட்டிருந்து, மிகவும் சாமர்த்தியத்துடன் இந்திய கப்பல் வேலைக்காரர்கள் சமாளித்து வருவது, கடல் யுத்த அபாயங்களில் அடிபட்டவர்களுக்குங்கூட வியப்பை உண்டாக்கி இருக்கிறது.

இவர்கள் வெறும் கப்பல் வேலைக்காரர்கள்தான். இவர்களின் தேக அமைப்பைப் பார்த்தால் வீரர்கள் என்று சொல்வதிற்கில்லை. ஆனால் அவர்கள் முதல்தரமான மாலுமிகள். வடதேசத்திலிருந்து வரும் ஜனங்களால் இந்தக் கடுமையான உஷ்ணகாலத்தில் வேலை செய்யமுடியவில்லை. ஆகையால் கீழ்ப்பிரதேசத்தில் முதல்தரமாக தொழில் நடத்தும் பிரிடிஷ் வர்த்தகக் கம்பெனிகள் வெகு காலமாக இந்தியர்களை வேலைக்கு நியமித்திருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய சௌகரியமும், உணவுக்கு வேண்டிய வசதியும் விசேஷமாக ஏற்பாடு செய்திருக்கின்றன. பி. & ஓ. (P. & O.), பிரிடிஷ் இந்தியா, ஆங்கர், பிபி (Biby), கிளான் அண்டு ஸிடிலைன்ஸ், க்யூனர்டு கம்பெனி இவைகளும் அந்தக் கம்பெனிகளில் அடங்கியுள்ளவை.

### முதல்தரமான மாலுமிகள்.

யுத்தம் ஆரம்பித்தது முதல் கீழ்திசையில் செல்வதும், இந்திய மாலுமிகள் வேலைபார்த்து வருவதுமான கப்பல்களில் அநேகம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் செல்லும்படி திருப்பிவிடப் பட்டிருக்கின்றன. முதலில் இந்தியர்களால் குளிரைத்தாங்க முடியாதென்று பயமுண்டாயிற்று. ஆனால் அவர்களை இப்பொழுது 7 சமுத்திரங்களிலும் பார்க்கக்கூடும். அவர்கள் அதற்குத் தகுந்தவாறு தேகத்தை சரிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் சாமான்களை ஏற்றிக்கொண்டு பிரிடிஷ் வர்த்தகக் கப்பல்கள் எங்கெங்கு செல்லுகின்றனவோ அங்கெல்லாம் இந்தியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். இச்சமயங்களில் அவர்கள் நடத்தையும், திறமையும், சமாளிக்கும் சக்தியும் மிகவும் மேன்மையானதாக ருசுவாகியிருக்கிறது.

சிலவருஷங்களுக்கு முன் வியாபாரக் கப்பல் தலைவன் ஒருவனுடன் கப்பல் வேலைக்காரர்களைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும் பொழுது இந்திய லஸ்கர்கள் மட்டும் இருந்தால் போதுமென்றும், உலகத்தில் வேறு ஊர்களிலிருந்து வருபவர்களைக்காட்டிலும், இவர்கள் கப்பல் வேலைக்குத் தகுதியானவர்கள் என்றும், உத்தரவைக் கீழ்படிவதில் மிகவும் பய்யப்பட்டவர்கள் என்றும் சொன்னார். அவர்கள் எப்பொழுதும் முணுமுணுப்பதில்லை. எத்தகைய வேலையைச் செய்யவும் தயாராக இருந்தார்கள். சொல்வதற்குமுன் அவ்வளவு சீக்கிரத்தில் செய்துமுடித்தார்கள் என்றும் சொன்னார்.



## ஜெர்மனி-ஜப்பான் சிநேகம்-உண்மையா கதையா?

(வாஷிங்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலமாக கிடைத்தது.)

அச்சுநாட்டு சிநேகம் என்பது ஒரு சட்டுக்கதை என்று ஸாடர்டே ஈவினிங் போஸ்டு (Saturday Evening Post) என்ற பத்திரிகையின் பிரசித்த நிருபரான டமார்டி பெஸ் என்பவர் எழுதியுள்ளார். ஜப்பானியர் ஜெர்மானியருக்கு உட்பட்டவர்கள் இல்லையென்றும் தாங்களாகவே ஆக்கிரமண வேலையிலீடுபட்டிருக்கின்றனர் என்றும் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

"அமெரிக்க நாடுகளையும், பிரிடிஷ் பிரதேசங்களையும் ஜப்பான் தாக்கிய போது, தனது லக்ஷியங்களைச் சாதித்துக்கொள்ளவே தனக்கு ஏற்படும் நஷ்டங்களையும் ஜெர்மனிக்கு ஏற்படும் கெடுதலையும் கவனியாது அவ்விதம் நடந்துகொண்டது" என்று அவர் சொல்லுகிறார்.

பஸிபிக்கில் ஜப்பான் செய்த தாக்குதல் ஜெர்மனிக்குப் பாதகமான சந்தர்ப்பத்தில் செய்யப்பட்டது. ஏனென்றால் ருஷ்யச் சைனியங்களை மறுபுறம் தாக்க ஜப்பானியச் சைனியங்களை உபயோகித்துக்கொள்ளலாமென்று ஜெர்மனி நினைத்திருந்தது. ருஷ்யாவை ஜப்பான் தாக்கப்போவதாக ஜப்பான் பயமுறுத்தியிருந்தாலும் ஜெர்மனிக்குச் சாதகமாகயிருந்திருக்கும்.

### ஒத்துழைக்கும் தந்திரமல்ல.

அச்சுநாட்டு அங்கத்தினரைப்போல ஜப்பானியர் ஆரம்பத் தாக்குதல்களைச் செய்யவில்லை. ஆனால் 50 வருஷ காலமாக தாங்களாகத் தயாரித்துக்கொண்டிருந்த முறைகளின்படிதான் நாடுகளைப்பிடிக்க முயற்சித்தனர்.

"அச்சு நாடுகளுக்குள் ஒற்றுமை திடமாக இருக்குமேயானால், ஜூன் முதல் டிஸம்பர் வரை ஜெர்மனியை ருஷ்யாவில் தனியே சண்டைசெய்ய விடவேண்டிய அவசியம் என்ன?" என்று பெஸ் கேட்கிறார்.

ஜப்பானியர் ருஷ்யர்களைத் தனியே விடுவதற்கு இரண்டு நற்காரணங்களிருக்கின்றன. (1) ருஷ்யத் துறைமுகமான வ்ளாடிவாஸ்டாக்கிலிருந்து எளிதில் ஜப்பானியத் தொழிற்சாலை தளங்களையும், கப்பல் தளங்களையும் சேதப்படுத்திவிடலாம்; (2) கிழக்கு ஆசியாவிலும், தெற்கு பஸிபிக்கிலும் தாங்கள் ஊன்றிக்கொண்டால் ஐரோப்பிய நாடுகள் சுலபமாகத் தங்களைக் கலைக்க முடியாதென்று நினைத்து அந்த நாடுகளைப் பிடிப்பதில் ஜப்பான் ஈடுபட்டிருந்தது.

### எதிர்பார்த்திருந்த சமயம்.

ருஷ்யா மேற்கே ஜெர்மனியுடன் பூரா ஈடுபட்டிருந்த சமயத்தையும், பஸிபிக்கிலிருந்த அமெரிக்கக் கப்பற்படை அட்லாண்டிக்கிற்கு சென்றவுடனும் ஜப்பானுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது.

ஜப்பான் பயந்துகொண்டிருந்த நாடுகளெல்லாம் வேறுவிதமாக ஈடுபட்டிருந்தன. தனது காரியத்தில் ஜப்பான் வெற்றிபெற்றால் ஜெர்மனியோ மற்ற ஐரோப்பிய நாடுகளோ அதன் வெற்றியை மாற்றமுடியாது. மற்ற நாடுகளிடமிருந்து பயப்படுவதுபோல ஜெர்மனியிடமிருந்தும் ஜப்பான் பயந்துகொண்டுதான் இருக்கிறது.

### வியக்தமான சின்னங்கள்.

ஜப்பானின் திட்டங்களைப்பற்றி முன்னாடி ஜெர்மானியருக்கு ஒருவித தகவலும் இல்லையென்று ஜெர்மனியில் ஏற்பட்ட அடையாளங்களைக்கொண்டு தெரிகிறது என்று அந்நிருபர் எழுதுகிறார்.

ஜப்பான் சண்டையை ஆரம்பித்ததும் ஹிட்லர் கலவரமடைந்ததாகக் காண்பித்தான். எதிர்பாராத பரபரப்புடன் ஜெர்மன் சைனியங்கள் ருஷ்யாவின்

கிழக்கிலிருந்து பின்வாங்கின. அதில் ஏராள மனித நஷ்டமும் சாமான்களின் நஷ்டமும் ஏற்பட்டது. இதற்குக் காரணமென்னவென்றால் முக்கியமான சமயத்தில் தங்களை ஜப்பானியர் கைவிட்டதாகவே நாஜிகள் எண்ணினார்கள். தனியாகத் தாங்கள் வெற்றியடைய முடியுமோவென்ற சந்தேகமும் அவர்களுக்கு ஏற்பட்டது. ஜப்பானியர் இனி என்னசெய்யப் போகிறார்களோ என்றும் தெரியவில்லை.

### வெளித்தோற்றம் மாத்திரம் இருந்தது.

இருந்தாலும், அச்சுநாடுகளுக்குள் நேசமிருப்பதாகமட்டில் ஹிட்லர் காண்பித்துக்கொண்டான். இந்த நிர்ப்பந்தத்தினால் அமெரிக்காவுடன் சண்டை தொடுக்க நேர்ந்தது.

அச்சுநாடுகள் பலம் பெற்றிருப்பதாகமட்டில் பிரமாதமாகப் பிரசாரம் செய்யப்பட்டுவந்தது. உண்மை யாதெனில் ஜெர்மனியும் ஜப்பானும் பிரத்தியேகமாக தங்களுடைய லக்ஷியங்களைச் சாதிக்க முயற்சித்தன, அதாவது ஒவ்வொன்றிற்கும் சாம்ராஜ்யத்திலும் உலகாக்கிரமணத்திலும் ஆசை இருக்கிறது.

---

## ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ளவர்களுக்கு ஸ்வதந்திரம் கொடுத்திருக்கிறார்கள்.

(வாஷிங்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம்).

பிலிப்பைன்ஸ் வாசிகளுக்குறிய பூர்ண ஸ்வதந்திரத்தை அவர்கள் அடைந்து வருவதாக பிலிப்பைன்ஸ் தீவுகளின் தலைத்தன ராணுவத் தலைவரான தளகர்த்தர் ஹொயாஷி என்பவர் உறுதி சொல்லியிருக்கிறார். இது எவ்வளவு மட்டில் உண்மை என்பதை ஜப்பானிய ராணுவத் தீர்மானங்கள் சிலவற்றைக் குறித்து அமெரிக்க நிபுணர்கள் விமர்சனம் செய்திருப்பதைப் பார்த்தால் தெரியவரும். இந்தத் தீர்மானங்களில் பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள ஜனங்களுக்கு என்ன தகுதி என்பதை ஜப்பானியர்கள் உணர்ந்திருப்பது தெரியவரும்.

பிலிப்பைன்ஸ் தீவுகளைப் பிடித்துக்கொண்ட உடனேயே ஜப்பானியர்கள் அங்குள்ள பாங்கிகளைக் கைப்பற்றிக்கொண்டனர். அங்கு வழங்கிவந்த நாணயங்களை செலாவணியில்லாமல் செய்துவிட்டார்கள். அவைகளுக்குப் பதிலாக ஜப்பானிய ராணுவ நோட்டுகளை வழங்கினார்கள். பழைய பிலிப்பைன்ஸ் நாணயங்களை மணிலா தேசத்தினர் உபயோகப்படுத்தியபொழுது அவர்களுக்குக் கடுமையாக அபராதங்களை விதித்தனர். சட்டப்படி நியமிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் நிர்வாக உத்தியோகஸ்தர் தங்கள் உத்தியோக ஸ்தலங்களில் அதிகாரம் செலுத்த சக்தியற்றவர்களாகப் போய்விட்டார்கள். அவர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் என்று சொல்லுவதற்கே முடியாமல்போய்விட்டது. டைவான் (Taiwan) ஜப்பானிய பாங்கு, யோகஹாமா ஸ்பீஸி பாங்கு இவைகளின் கிளை ஆபீஸ்களை பிலிப்பைன்ஸில் ஸ்தாபிக்க ஏற்பாடாயிற்று.

மேற்சொல்லிய விஷயங்களினால் ஹொயாஷி பிரகடனத்தில் குறிக்கப்பட்ட ஸ்வதந்திரம் பண நிர்வாகத்திற்கு அன்வயிக்கத்தக்கதில்லை என்று தெரியவரும்.

### பிரசுர உரிமை கிடையாது.

ஜனவரி 7-ம் தேதியிலிருந்து பிலிப்பைன்ஸ் தீவினருக்கிருந்த பேர்போன பிரசுர உரிமை, ஜப்பானியர் அத்தீவைக் கைப்பற்றியதிலிருந்து அவர்கள் போட்ட உத்தரவினால் பிடுங்கப்பட்டுவிட்டது. ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் உத்தரவன்னியில் தினசரிப் பத்திரிகை, சஞ்சிகை, துண்டுப்பிரசுரம் மற்றபடி எதுவும் அச்சிடமுடியாது. முந்திய பதிப்புகளை மறு பதிப்புச் செய்ய வேண்டுமானால் அவைகளை ஜப்பானிய குணதோஷ விவேசகன் அனுமதித்தல் வேண்டும். மறு பதிப்பிட்ட பழைய பிரசுரங்களை விற்பனை செய்யக்கூடாது என்று தடைப்படுத்தப்பட்டிருக்கிறது.



ஆகஸ் பேச்சு உரிமையையும், பிரசுர உரிமையையும் பற்றி ஹொயாஷி சிந்திக்கவில்லைபோல் தெரிகிறது.

### குற்ற விசாரணை ராணுவ நியாய இலாகாக்களில்.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஏற்கனவே அவ்வூர் வாசிகளுடைய ஸிவில் கிரிமினல் வியவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு அவர்கள் அரசாங்க விதிகளின்படி நியாய இலாகாக்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்பொழுது அவற்றை விட்டுவிட்டு, ஜப்பானிய ராணுவ நியாய இலாகாக்களில் அவர்களின் வியாஜ்ஜியங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஜனவரி 6-ம் தேதி ஜப்பானியர்கள் பிறப்பித்த கட்டளையாவது:—"ஜப்பானிய சிப்பாய்களுக்கோ, மற்றவர்களுக்கோ, யாரேனும் ஒருவன் காயப்படுத்தினாலோ அல்லது கொல்ல எத்தனித்தாலோ அவன் உடனே சுட்டுக்கொல்லப்படுவான். அப்படிக் காயம் உண்டாக்கினவனோ அல்லது காயம் உண்டாக்க எத்தனித்தவனோ அகப்படாமல் ஓடிவிட்டானானால், அந்த சம்பவம் நடந்த தெருக்களில் வசிக்கும் பிரதானமான மனிதர்களில் 10 பேர்களை பிணையாளிகளாக வைத்துக்கொள்ளுவோம்" என்பதுதான். மேலும் மேற்சொல்லிய உத்தரவினால் ஜப்பானியத் துருப்புகள் என்ன, பொது மக்கள் என்ன, இவர்கள் எவ்வித குற்றம் செய்தாலும் அவர்களுக்குத் தண்டனை கிடையாது. ஆனால் ஜப்பானியர்களுக்கு விரோதமாக நடத்தப்படும் செய்கைகளுக்கு மரண சிக்ஷை விதித்திருக்கும் இந்த உத்தரவினால் இரட்டிப்பு பயம் ஏற்படுகிறது. ஏனென்றால், பிலிப்பைன்ஸிலுள்ள நியாய இலாகாக்கள் ரத்து செய்யப்பட்டன. அதனால் சட்ட ரீதியாக நியமிக்கப்பட்டிருக்கும் அங்குள்ள மாஜிஸ்திரேட்டுகள், தங்கள் உத்தியோகத்தைப் பார்க்கமுடியாமல் தடைப்பட்டிருக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸைப் பிடித்தவுடன் அத்தீவு வாசிகளுக்கு முழு ஸ்வதந்திரமும் அடைந்துவிடுவார்கள் என்று ஜஸ்டிஸ் ஹொயாஷி சொல்லும் பொழுது நியாய இலாகாவில் ஸ்வதந்திரம் வேண்டுமென்பதை அவன் எண்ணியிருந்திருக்கமாட்டான்.

### டெலிபோன், தந்தி சாதகம் இவர்களுக்கு இல்லை.

இப்பொழுது ரேடியோ, டெலிபோன், தந்தி போக்குவரத்து சாதகங்கள் பிலிப்பைன்ஸ் தீவினர்களுக்குக் கிடையாது. ஜப்பான் பிரசாரத்தை ஒலிபரப்பும் நிலயங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளைத்தான் அவர்கள் ரேடியோ மூலம் கேட்க வேண்டும். டெலிபோன், தந்தி இந்த சாதகங்களை பிலிப்பைன்ஸ் வாசிகள் முற்றிலும் உபயோகிக்கமுடியாமல் தடைப்பட்டிருக்கின்றனர்.

ஹொயாஷி குறிப்பிட்ட பூர்ண ஸ்வதந்திரத்தில் இத்தகைய ஸ்வதந்திரங்கள் அடங்கியிருக்கமாட்டா.

மேலும் அந்த உத்தரவினால் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திலுள்ள முக்கிய ஸ்தாபனங்களில ஜப்பானியர் புகுந்துகொண்டிருக்கின்றனர். உத்தியோகம் பார்த்துவரும் கொஞ்சம் பிலிப்பைன்ஸ் வாசிகளும், ஜப்பானியர் வருகிறபடி நடப்பதற்காக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவேயுள்ள சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டது, ஜனங்களின் சௌகரியத்திற்காக சட்ட நிர்மாணம் செய்ய தேர்தலில் வெற்றிபெற்ற பிரதிநிதிகள் அகத்தர்களாகிவிட்டார்கள். அதற்குப் பதிலாக, தலைவர்கள் எல்லாம் ஜப்பானியர்தளின் போதனைக்குட்பட்டிருக்கிறார்கள்.

# ஜப்பானின் கொள்கையைப்பற்றி ஜப்பானிய ராஜ தந்திரியின் அபிப்பிராயம்.

# சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருந்துகொண்டு சந்தேகங்களை அமுக்கவேண்டும்.

(D. J. இவான்ஸ் என்பவர் எழுதியது).

ஜப்பானின் அரசியல் தந்திர முறைகளைப்பற்றி புஸ்தகங்களிலும், வியாசங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை ஹெயாஷிபோலுள்ளவர்கள் எழுதியுள்ளார். ஹெயாஷி சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஜப்பானில் இருந்துவந்த ராஜ தந்திரிகளில் சேர்ந்தவர்.

டோகியோவில் வெளிவரும் பத்திரிகைகளில் ஒன்றில் ஹெயாஷியின் குறிப்புகள் வியாசங்கள் மூலம் பிரசுரிக்கப்பட்டு வந்தன. அதில் குறிக்கப்பட்ட விவரங்கள் அரசாங்கத்திற்கு இழிவாக இருந்தபடியால், அவ்வியாசங்களை அன்னிய நாடுகளில் பிரசுரிக்கவிடாமல் தடுக்க ஜப்பானிய அரசாங்கம் பிரயத்தனப்பட்டது. ஆனால் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்ட அவ்வியாசங்கள் திருட்டுத்தனமாக வெளிநாடுகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டு ஹாங்கேயிலும், லண்டனிலும் பிரசுரிக்கப்பட்டன.

சீனா-ஜப்பான் யுத்தம் முடிந்த கொஞ்ச காலத்திற்குள் ஹெயாஷி 1895-ம் வருஷம் கோடை காலத்திற்குள் எழுதின வியாசங்களை எல்லாம் அவர் சுருக்கமாக குறிப்புகளில் கண்டெழுதினார்.

சீனர்களுக்குச் சொந்தமான லியாதுங் (Liaotung) தீபகற்பத்தை யுத்தத்தில் ஜப்பானியா கைப்பற்றியதை விட்டுவிடும்படி ஐரோப்பிய நாடுகள் ஜப்பானை நிர்ப்பந்தித்தன. அதனால் அப்பிரதேசத்தை விட்டுவிட்டதில் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளும், ராஜ தந்திரிகளும் அவமானம் தாங்கமாட்டாமல் வெகு கோபத்துடன் சொன்ன பிரகடனங்கள் யாவும் அச்சரிலதையில் கண்டிருந்தன. அந்த அவமானத்திற்குப் பிறகு ஜப்பானியர்கள் பழிக்குப்பழி வாங்குவதாகத் திட்டம் போட்டுக்கொண்டிருந்ததாக வியக்தமாகத் தெரிகிறது.

### நல்ல சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருப்பது.

ஜப்பானின் அந்நிய நாட்டு இலாகா உதவி மந்திரி பதவியை ராஜிநாமா கொடுத்த பிறகும், சீனாவிற்கு மந்திரியாக நியமிக்கப்படும் வரை இடையிலுள்ள அவகாசத்தில் ஹெயாஷி, என்பவர் ராணுவப்படை, கப்பற்படை பலத்தை அதிகப்படுத்துவதின் முக்கியத்துவத்தைப்பற்றி விஸ்தாரமாக எழுதியுள்ளார்.

ஏராளமாக புதிய கப்பல்கள் எச்செலவிலும் கட்டவேண்டும் என்றும் ஆதரித்தார். தற்போது ராணுவ நிலைமையை மாறுதலடையச் செய்யவேண்டியதை விரும்பினார். அயல் நாடுகளுக்குப் படைகளை ஏற்றிச்செல்ல போக்குவரத்து சாதனங்கள் ஏற்படுத்துவதற்காக கப்பல் போக்குவரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கோரினார்.

அதில் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க வாக்கியத்தை அவர் சேர்த்திருக்கிறார்:—

"ஜப்பானுக்கு விரோதமாக ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களை அமுக்குவதற்காக இப்பொழுது ஜப்பான் செய்யவேண்டியதென்னவென்றால் அது மௌனமாகக் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அதற்குள் ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் பலத்தை அதிகப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். கிழக்குப் பிரதேசத்தில் நிச்சயமாக சந்தர்ப்பம் ஒரு நாள் வாய்க்கும்.

இவ்வருஷங்களில் ஜப்பான் முற்றிலும் அமைதியாக இருந்துவிடவில்லை. சீனமக்களுக்கு ஜப்பானியர்கள் துன்பத்தை விளைவித்துத்தான் வந்தார்கள்.



1914-ம் வருஷத்தில் ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பே பிரிடிஷ் அமெரிக்க முயற்சிகளுக்கு இணங்கி ஜனநாயகத்தின் பாதுகாப்பிற்குச் சமாதானமாக இருந்துவருவதாக ஜப்பான பாசாங்கு செய்தது.

### சீனாவிற்கு இட்ட கட்டளைகள்.

பெரிய வல்லரசுகள் யாவும் ஐரோப்பாவிலேயே கவனம் செலுத்தி வரும் பொழுது ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் தாங்கள் போட்டிருந்த திட்டங்கள்படி முன்னேற்றமடைய அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் சீனாவுக்கு 21 கட்டளைகளை விதித்தார்கள். அவைகளின்படி நடப்பதாகச் சீனா ஒப்புக்கொண்டிருந்தால் அது ஜப்பானிய ஆதிக்கத்தின்கீழ் வந்துவிட நேரிடும். வஞ்சகமாக ஸைபீரியாவை தன் ஆதிக்கத்திற்குக் கொண்டுவர சூழ்ச்சி செய்தது பயனடையாமல் போனது போல், இந்த சூழ்ச்சியும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டது. சிறிதுகாலம் முற்றிலும் அமைதி என்று சொல்ல முடியாமல் போனாலும், கொஞ்ச அமைதியாகத்தான் ஜப்பானியர்கள் இருந்தார்கள். ஆனால் சீனாவில் ஒற்றுமையும், அபிவிருத்தியும் தலைகாட்ட ஆரம்பித்தவுடன் அதைத் தடுக்க டோகியோவில் திட்டங்கள் போடப்பட்டன.

ஜப்பானின் வஞ்சக சூழ்ச்சியால் சீனா மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிக கஷ்டமடைந்திருக்கிறது. டோக்கியோவிலும், நான்கிங்கிலுமிருந்த ஜப்பானிய ராஜ நீதி நிபுணர்களும், தந்திரிகளும் சீனாவுக்குச் சாதகமாக தேனொழுகும் வார்த்தைகளைப் பேசிவரும்பொழுதே, அவர்கள் சகாக்களான ராணுவ உத்தியோகஸ்தர்களும் கப்பற்படை தலைவர்களும் வஞ்சகமாக பல இடங்களில் தாக்கி வந்தார்கள்.

இரண்டு தேசத்தார்களின் பரஸ்பர சாதகத்திற்காக இருநாடுகளுக்கும் சிநேகபாவமும், ஐக்கிய பக்தியும் உண்டாக்கவேண்டிய விருப்பத்தை முன்னிட்டு ஜப்பானியக் கொள்கை அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக சீனாவிலிருக்கும் ஜப்பானிய அயல்நாட்டு மந்திரிகளும் தூதர்களும் விஸ்தரித்து வந்தார்கள். ஸ்வதந்திர குடியரசு பிராந்தியத்தில் ஜப்பானியத் தலைவர்கள் நடத்திய நடவடிக்கைகள் யாவும் முரட்டுத்தனமாக இருந்தன. அவர்கள் யாவரையும் அடிமையாக்கியும், யாவருக்கும் கோபமூட்டியும், பிளவு உண்டாக்கியும் வந்தார்கள்.

இந்த இரட்டை ஆட்சியின் பயனாக ஜப்பானிய அதிகாரிகள் சீனப் பிராந்தியங்களில் அடிக்கடி படையெடுத்துவந்து அவர்கள் உரிமைகளைக் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆனால் அதே சமயத்தில் ஜப்பானிய ராஜ தந்திரிகளோ இரண்டு தேசங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் வருத்தங்களைத் தீர்த்துக்கொள்ளுவதற்காகப் பிரயத்தனப்படுவதுபோல் பாசாங்கு செய்து ஒப்பந்தம் பேசிவந்தார்கள்.

### மௌனமாய் இருந்திருப்பது.

எப்படியிருந்தாலும் சில சமயங்களில் அவர்கள் உண்மையை மறைக்கப் பிரயத்தனப்படவில்லை. ராணுவ வீரர்களும், அவர்களுடைய ராஜ தந்திரி சகாக்களும் இரண்டு தேச பரஸ்பர நடவடிக்கைகளில் நியாயம், முறை, யோக்கியதை இவற்றுடன் நடந்துகொள்ள அவசியமில்லை என்பதைக் காட்டியிருக்கிறார்கள்.

அவர்களுக்கு என்ன விருப்பமென்பது தெரியும். ஜப்பானியர்கள் தங்களுடைய காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டி சீனாவைக் கசக்கிப் பிழிந்துவிட தீர்மானித்திருக்கிறார்கள். அயல்நாட்டு உத்தியோக இலாகா ஜப்பானிய ராணுவ சகாக்கள் செய்த நடவடிக்கைகள் குற்றச் செய்கைகள் இல்லையென்றும், சீனா நடந்துகொண்ட விதத்தினால்தான் அம்மாதிரி ஏற்பட்டனவென்றும், ஜப்பான் அதற்குப் பாத்திரமில்லையென்றும் வெகு சிரமத்துடன் விவரித்துக் கூறியது.

சுருக்கமாகச் சொன்னால் நிலைப்படைந்த மனிதர்களுக்கு அவர்கள் கருப்பு வர்ணத்தை வெள்ளை அல்லது ஜப்பானிய ராணுவம் தீர்மானிக்கும் வர்ணமோ அதைச் சொல்லி திருப்தி செய்யவேண்டியதாயிற்று.

## 'ஜப்பானின் புதிய திட்டம்.'

## தேச சரித்திரப் பூர்வமாகப் பார்த்தால் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

(மிஸ்டர் V. S. சுவாமிநாதன் M. A. Msc. எழுதியது.)

ஜப்பான் எப்பொழுதும் பிறரிடமிருந்து ஒவ்வொரு விஷயமும் யாசகம் வாங்கியே வந்திருக்கிறது.

மூன்றாவது நூற்றாண்டுக்கும், எட்டாவது நூற்றாண்டுக்கும் நடுவில் சீனாவைப் பார்த்து அதன் சமூக வாழ்க்கையின் குணாதிசயங்களையும், ஸ்தாபனங்களையும், அதன் விவசாய முறைகளையும், கலைகளையும், கல்வி முறைகளையும், சட்டங்களையும், எழுதும் முறைகளையும், பட்டுப்பூச்சி வளர்ப்பதையும், புத்த மதத்தையும், கன்பூஷியன் (Confucian) கோட்பாட்டையும் ஜப்பான் பின்பற்றி நடந்து வந்திருக்கிறது.

பிற்பட்ட காலங்களில் வெடிமருந்து தயாரிக்கவும், துப்பாக்கி முதலிய ஆயுதங்களை உபயோகிக்கவும் போர்ச்சுகீஸார் ஜப்பானியர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். வர்த்தகத்திலும், கைத்தொழிலிலும், கிரேட் பிரிட்டனைப் பின்பற்றி ஜப்பான் நடந்தது. இருப்புப் பாதைகள் போடுவதிலும், சுரங்க வேலைகள் செய்வதிலும் அமெரிக்காவைப் பின்பற்றியது. சட்ட திட்டம் அமைப்பது, பட்டு உற்பத்தி செய்யும் முறைகள், விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சி, ராணுவப் பயிற்சி இவைகளில் பிரான்ஸைப் பின்பற்றியது. பிரான்ஸுக்கும், ஜெர்மனிக்கும் யுத்தம் நடந்தபிறகு ராணுவத் துறையில் ஜெர்மனியை ஜப்பான் பின்பற்றியது.

ஜப்பானியக் கப்பற்படையையே ஸ்தாபிக்க உதவி செய்தது, பிரிடிஷ் கப்பற்படை உத்தியோகஸ்தர்களும், இஞ்சினியர்களும்தான். கப்பல் கட்டும் வித்தையைக் கற்றுக்கொடுத்தவர்கள் ஸ்காத்லாந்து தேசத்தினரே. முடிவாகக் கல்விப் பயிற்சியிலும், வைத்திய சாஸ்திரத்திலும் ஜெர்மனி நவீனமாக ஏற்படுத்தியிருக்கும் முறைகளை ஜப்பான் அனுசரித்துவருகிறது.

உலகத்தில் கல்வித் திறமை, நாகரீகம், அல்லது முன்னேற்றம் இவைகளில் எந்த கலையிலும் சுயமாக ஜப்பானால் யாதொரு முன்னேற்றமும் காட்டமுடியவில்லை. சரித்திரப் பூர்வமாக எழுதுவதற்கும் ஜப்பானில் யாதொரு அபிவிருத்தியும் இல்லை.

### அதன் எண்ணம்போல் செய்கை.

நிச்சயமாக ஜப்பானின் பெயரும் தேசசரித்திரத்தில் இழிவான நாடுகளுடன் சேர்த்து பிரஸ்தாபிக்கப்படும். சீனாவுடன் ஜப்பான் விரோதப்பான்மையுடன் இல்லை. போர் செய்யப்போவதாக எச்சரிக்கை செய்யவுமில்லை. திடீரென்று 1894-ம் வருஷம் ஜூலைமீ 25-ம் தேதியில் சீனத் துருப்புகளை ஏற்றிவந்த கௌஷின் என்ற கப்பலை நனிவா (Naniwa) என்ற ஜப்பானிய க்ரூயிஸர் வெடிகுண்டுகளால் தாக்கிற்று. 1904-ம் வருஷத்தில் ஜப்பான் ருஷ்யா பேரில் போர் தொடங்குவதாக எச்சரிப்பதற்கு முன்னமேயே முரட்டுத்தனமாக ஆர்தர் துறைமுகத்தைத் தாக்கியது.

முந்தி நடந்து கொண்டதைப்போலவே தனக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் விரோதம் ஏற்பட்டுவிட்டதாக உத்தியோக முறையில் வெளிப்படுத்துவதற்கு முன்னமேயே 1941-ம் வருஷம் டிஸம்பர்மீ த்தில் ஜப்பான் துரோக சிந்தையுடன் ஹாவாய் தீவுகளைத் தாக்கிற்று.

---

## நேசநாட்டின் வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கை.

(இஸ்தான்புல்லிலுள்ள 'யேனிசபா' 26—1—42-ம் தேதி பத்திரிகையில் ஹுஸேயின் காஹிட் யால்ஸின் எழுதியது).

நேசநாட்டினருக்குள் வெற்றிகிடைப்பது நிச்சயம் என்ற நம்பிக்கை தோன்றியிருக்கிறது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அதிக உத்சாகத்துடன் இருக்கிறார் என்று



யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து தந்திகள் வந்திருக்கின்றன. அமெரிக்கப் பொது ஸ்தாபனத் தலைவர், ஜெனரல் மார்ஷல் லண்டனில் போய் சந்தித்துவிட்டு பிரிடிஷ் கப்பற் படைத்தலைவர் ஒருவரைக் கூட்டிக்கொண்டு யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு திரும்பி வந்திருப்பது ரூஸ்வெல்டின் உத்சாகத்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கிருந்து ஜனாதிபதி அதிக ஆவலைக் கொடுக்கக்கூடிய செய்தி ஒன்று தெரிந்துகொண்டிருப்பதாகவும், சந்தர்ப்பம் வாய்க்கும் சமயத்தில் வெளியிடப் போவதாகவும் சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் அதிகாரப் பூர்வமான ஸ்தாபனத்திலிருந்து வந்த செய்தியில் ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தப் போக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எந்த ஆதாரங்களின் பேரிலும், எந்த நிகழ்ச்சிகளை முன்னிட்டும் இந்த மாதிரி அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லமுடியவில்லை. இருந்தபோதிலும் நேசதேசத்தார்களின் ஆதிக்கத்தின்கீழுள்ள பிரதேசங்களில் நேசதேசத்தார்களுக்கு வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை உண்டாயிருக்கிறது.

கொஞ்ச காலத்திற்குமுன் ஆஸ்திரேலியா பேராபத்திற்குட்பட்டதாகத் தோன்றிற்று. அந்நியநாட்டுப் போர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் ஆஸ்திரேலியத் துருப்புகள் தங்கள் நாட்டிற்கே திரும்பிவர அவா கொண்டு இருப்பதாகக் காட்டிக்கொண்டார்கள். ஆஸ்திரேலியா ராஜநீதி நிபுணர்கள் பிரிட்டனைத் தங்களுக்கு உடனே உதவி கொடுக்கும்படி வேண்டினார்கள். ஆஸ்திரேலியாவில் இம்மாதிரி நிலைமை ஜப்பானியர்களுக்குத் தைரியத்தை உண்டாக்கிவிட்டது. அவர்கள் ஆஸ்திரேலியர்களை ஏமாற்றிவிடலாம் என்று நம்பினார்கள். ஆஸ்திரேலியா உடனே பிரிட்டனைக் கைவிட்டுவிட்டு, ஜப்பானுடன் சேரவேண்டுமென்று விரோதமான ஏற்பாட்டைக் கோரினார்கள். ஆனால், இப்பொழுது ஆஸ்திரேலியாவிலிருந்து கிடைக்கும் செய்திகளில் பூர்ண நம்பிக்கையும்கொண்டு, சண்டைக்குத் தயாராகயிருக்கும் ஜனங்களின் நடவடிக்கைகளை விவரமாகக் கண்டிருக்கிறது. அந்நிய நாடுகளிலிருந்த ஆஸ்திரேலியப் படைகளை பிரிடிஷ் கப்பல்கள் மீண்டும் ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டுசென்றிருக்கின்றன. பிலிப்பைன்ஸ் சண்டையில் பிரக்யாதி பெற்ற மாக் ஆர்தரை அந்த நாட்டிற்குத் தலைவராக ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மேலும் அமெரிக்கத் துருப்புகளும், பொருள் உதவியும் ஆஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. பெரிய தயாரிப்புகள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஆஸ்திரேலிய விமான நிலயங்களிலிருந்து விமானங்கள் பறந்துசென்று சிறிது நேரம்கூட ஜப்பானியப் படைகளுக்கு ஓய்வு கொடுக்காமல் இடைவிடாமல் தாக்கின. இந்த விவரங்களைப் பார்த்தால் ஆஸ்திரேலியா ஊக்கம் குறைந்த நாடாகத் தோன்றவில்லை.

ஐரோப்பா கண்டத்தில் நடக்கும் சம்பவங்களைக் கவனித்தால் உலக வியவகாரத்திலும், ஆத்ம சக்தியிலும் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதை யாவரும் பார்க்கலாம். பிரிடிஷ் வெடிவிமானங்கள் ஜெர்மன் துறைமுகங்களை வெடிகுண்டுகளால் தாக்கி தவிடு பொடியாக்கிக்கொண்டு வருகின்றன. மேலும் ஜெர்மனியின் உணர்ச்சி குறைந்து மாறுதலடைந்திருப்பதை ஜெர்மனி இனிமேல் மறைத்து வைக்கமுடியாது.

ஐரோப்பா கண்டத்தில் நன்றாய் பயிற்சிபெற்ற பிரிடிஷ் தலைவர்களின் தலைமையின் கீழ் எதிர்பாராதபடி திடீரென்று எதிரிகளின் நாடுகளில் போய் அடிக்கடி தாக்கிவருகிறார்கள். அத்தாக்குதல்கள் ஒருபொழுதும் நிறுத்தப்படமாட்டாதென்று தெரிகிறது. வேடிக்கையாக எடுத்துக்கொள்வதாகத் தோன்றும் இந்த நடவடிக்கைகள், வருங்காலத்தில் உண்மையான பெரிய படையெடுப்பு ஏற்படுவதற்கு வழிகாட்டியாக இருக்கும்.

ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் ஜெர்மன் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் விரோதங்கள் அதிகரித்துவருவதிலிருந்து, ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தப் போக்கு உண்டாகியிருப்பது ஸார்ஜிதமாகத் தெரிகிறது. பிணையாளிகளைக் கொலை செய்வது, ஸெர்பியாவில் தளகர்த்தர் மிகைலோவெயிட்டுக்கு ஆதரவு அளிப்பவர்களுக்குச் சிக்ஷை கொடுப்பது, நார்வேயில் சிறைப்பிடிக்கப்பட்ட 1,000க்கணக்

காளைபேர்களை வடக்கே கல் உடைக்க அனுப்புவது, இவையெல்லாம் ஜெர்மானியர் கள் ஜெயித்த நாடுகளில் அனுதாபம் ஏற்படும்படி செய்யத் தவறிவிட்டதைக் காட்டுகிறது. அச்சு நாடுகளின் மனோபலம் ஏற்கனவேயே முறிந்துபோய் விட்டது என்பதை ஒருவரும் சந்தேகிக்க இடமிருக்காது. ஒன்றுமறியாத பேதைகளைச் சுட்டுக்கொன்று ஒவ்வொருவருக்கும் அதிருப்தியை அளிக்கக் கூடும்.

அச்சுநாட்டினரின் புதிய திட்டம், மிருக பலத்தினால்தான் நிலைநிறுத்தக் கூடும். ஆனால் ஐரோப்பா முழுவதையும் மிருக பலத்தினால் அடக்கியாள ஜெர்மனிக்குப் போதுமான திறமையில்லை. எப்பொழுது ஜெர்மன் ராஜ நீதி நிபுணர்கள் உணர்ச்சி உண்டாக்க முடியாமல் தோல்வியடைகிறார்களோ அப் பொழுதே ஜெர்மன் வீரர்களின் வீரத்தனம் எப்படியிருந்தபோதிலும் யுத்த கல்அவர்கள் தோல்வியடைவது நிச்சயம்.

---

# பிரிடன் நடத்திவரும் வெடிகுண்டு விமானத்தாக்குதலும், அதன் தயாரிப்பு பிரச்னைகளும்.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம்).

ஜெர்மனியின்பேரில் பிரிடிஷ் விமானங்கள் வெடிகுண்டுகள் பிரயோகிப்ப தைப்பற்றி புதிய செய்திகள் 'அப்ஸெர்வர்' என்ற பத்திரிகையின் விமான நிருபர் எழுதியுள்ளார்.

ஒவ்வொரு இரவும் ஜெர்மனிக்கு 1,000 பாம்பர் விமானங்கள் வீதம் அனுப் பக்கூடுமானால், இவ்யுத்தத்தை 'சரத்காலத்திற்குள் வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவந்துவிடலாம் என்று பாம்பர் விமானப்படையின் தலைவரான தளகர்த் தர் A. T. ஹாரிஸ் சொன்னார். இவ்விதம் 1,000 பாம்பர் விமானங்களைக்கொண்டு தாக்குதலை ஆரம்பிப்பதற்குச் சரியான ஸ்தாபனம் ஒன்று தேவையாக இருக்கும். ஆனால் சீதோஷ்ண நிலை அனுகூலமாயில்லாததினால், ஒவ்வொரு இரவும் பாம்பர் படைப் பகுதியை அனுப்புவது முடியாத காரியம். அதனால் சராசரியாக ஒவ்வொரு இரவும் 1,000 விமானங்கள் வீதம் தாக்குதலுக்கு அனுப்பவேண்டு மானால் 3,000 விமானங்களையோ அல்லது இந்த வருஷத்தைப்போல் சீதோஷ்ண நிலை கெடுதலாகவே இருந்தால், அடிக்கடி இன்னும் உபரியாகவே அனுப்ப வேண்டியிருக்கும்.

## பாம்பர் விமானப்படையினர்.

இவ்வித தாக்குதலுக்கு எவ்வித தயாரிப்பும், பிரயத்தனமும் தேவை என்று கவனிப்போம். ஜெர்மனியின்பேரில் படையெடுப்பதற்காக 3,000 விமா னங்களை அனுப்புவதற்கு ஒரு நிலயத்திலிருந்து 2 படைப் பகுதிகள் செல்லக்கூடு மானால், அம்மாதிரி 120 விமான நிலயங்கள் வேண்டியிருக்கின்றன. இதில் ஒன்றும் சிரமமில்லை. லங்காஸ்டர், ஸ்டர்லிங், ஹலிபாக்ஸ் இவைபோன்ற நான்கு யந்திர விமானங்களில் ஒவ்வொன்றிலும் 7 விமானிகள் செல்லக்கூடும். மேலும் வெல்லிங்டன், ஒயிட்லி போன்ற விமானங்களில் ஒவ்வொன் றிலும் 5 விமானிகள்தான் ஏறிச் செல்லக்கூடும். இவ்விதம் கணக்கிட்டால் 3,000 விமானங்களுக்கு மொத்தத்தில் சராசரி 18,000 விமான ஓட்டிகளும், சிப்பந்தி களும் தேவையாயிருக்கும். தாக்கச் செல்லும் நல்ல கனமான பாம்பர் விமா னங்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அந்தந்த விமானத்திலுள்ள ஒவ்வொரு விமானிக்கும் விமான நிலயத்திலிருந்து குறைந்தபக்ஷம் 20 பேர்கள் நேர்முகமாகவோ, மறைவாகவோ உதவி செய்யவேண்டியிருக்கிறது. அநேக விமானங்கள் தாக்கச் செல்லும் சமயங்களில் 3,60,000-த்திலிருந்து 4,00,000 வேலையாட்கள் வரை விமான நிலயங்களில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. கோடை காலத்தில், இராக்காலம் மிகவும் குறைவு. அப்பொழுது மிகப் பெரிய 3,000 பாம்பர் விமானங்களைக்கொண்டு தாக்குதல் செய்ய, விமான நிலயங்களி



லிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்குள்ள வேலை மிகவும் கடினமானது. குறிப் பிட்ட லக்ஷியங்களை சரியான சமயத்தில் அடையும்படி செய்வதற்காக விமானங் களைப் புறப்படச் செய்வதற்கு காலம் நிர்ணயிப்பது, அதைக்காட்டிலும் மிகவும் சிரமமாக இருக்கும்.

---

## ரீஷ்நௌவின் தஸ்தாவேஜு.

## நாஜித்துருப்புகள் எவ்விதம் நடந்துகொள்ள போதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

## ருஷ்ய யுத்தக் கைதிகளை நடத்தும் விதம்.

மாஸ்கோவிற்கு 50 மைல்கள் வடமேற்கேயுள்ள கிளின் நகரத்தை மீண்டும் ருஷ்யர்கள் கைப்பற்றியவுடன், அந்நகரத்தில் ஒரு கட்டடத்தில் வைக்கப்பட்டி ருந்த ஜெர்மன் அந்தரங்க போலீஸாரின் ரகசிய தஸ்தாவேஜுகளை செஞ்சேனை கைப்பற்றிக்கொண்டது. அவைகளை அப்புறப்படுத்தவோ, அழித்துவிடவோ ஜெர்மானியர்களுக்கு அவகாசமில்லாமல் போய்விட்டது.

அங்கு அகப்பட்ட ஏராளமான தஸ்தாவேஜுகளில் 6-வது ஜெர்மன் சைனி யத்திற்குத் தலைவரான தளகர்த்தர் வான் ரீஷ்நௌ கையொப்பமிட்ட உத்தரவும் அகப்பட்டது. அது 1941-ம் வருஷம் அக்டோபர் 10-ம் தேதியில் பிறப் பிக்கப்பட்டது. அதில் கிழக்குப் போர்முனையில் ஜெர்மன் சைனியம் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்ற பூரா விவரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன.

அந்த உத்தரவுடன் மற்றொரு உத்தரவும் சேர்க்கப்பட்டிருந்தது. அதாவது ஜெர்மன் பின்னணி சைனியம் 10[illegible]-வது ந. பிராந்தத்தின் தலைவரின் ஆபீஸி லிருந்து பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவைப் பார்க்க வான் ரீஷ்நௌவின் உத்தரவை ஹிட்லர் ஆமோதித்ததாகத் தெரிகிறது.

இனி வரப்போகும் காலத்தில் இதைத்தான் ரீஷ்நௌ தஸ்தாவேஜு என்று இழிவாகச் சொல்லப்படும். அதில் கண்டதாவது:—

"போல்ஷிவிக் முறையில் துருப்புகளின் தன்மையைக் குறித்த பிரச்னை நன்றாகப் புரியவில்லை. போல்ஷிவிக் அரசாங்கத்தின் பேரில் படையெடுத்ததற்கு முக்கியமான கருத்து என்னவென்றால் அவ்வரசாங்கத்தை அடியோடு அழித்து ஐரோப்பாவின் கல்வித்துறையில் ஆசியாக்காரர்களின் கலப்பே இல்லாமல் செய்யவேண்டுமென்பதுதான். இந்த முறையில் சாதாரணமாக ராணுவம் செய்யவேண்டிய வேலைகளைக் காட்டிலும் அதிகப்படியான வேலை செய்யவேண்டி யிருக்கிறது.

"முதலாவதாக நமது துருப்புகள் சரியானமுறையில் எதிரியை இன்னும் வேட்டையாட முடியவில்லை. வஞ்சகமாகவும், கொடூரமாகவுமுள்ள கொரில்லாப் படைகளை நமது துருப்புகள் இன்னும் கைதிகளாகப் பிடித்து வருகிறார்கள். அவர்கள் சொல்லும் செய்தியை நம்புகிறார்கள். தனிப்பட்ட சிறு காலாட் படையைச் சேர்ந்தவர்கள், பிச்சைக்காரர்கள் இவர்கள் ராணுவ உடுப்போ, பொது மக்கள் போடும் உடுப்போ போட்டிருந்தால் அவர்களைப் போர்வீரர்களாகக் கருதி யுத்தக் கைதிகளின் முகாமுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

### பொதுமக்களுக்கும், கைதிகளுக்கும் உணவில்லை.

"சிறை செய்யப்பட்ட ருஷ்ய உத்தியோகஸ்தர்கள், ருஷ்யப் பிரதிநிதிகள் ஜெர்மன் வீரர்களுக்கு உணவு தயாரிக்கப்படும் சமையல் அறைகளிலிருந்து உணவு சாப்பிடுகிறார்கள்: இம்மாதிரி தெருக்களில் தாராளமாக நடந்து சென்று அவர்களை விட்டுவைப்பது மிகவும் கேவலமான நிலைமை. இப்பொழுது நடக்கும் போரின் தத்துவத்தை துருப்புகளுக்குத் தலைமை அதிகாரி சொல்லவேண்டும்.

அங்கு வசிக்கும் ஜனங்களுக்கும், யுத்தக் கைதிகளுக்கும் உணவு ஸப்ளை செய்வது அனுவசியமாகக் காட்டும் தயாளத்துவம்.

"தாய் நாட்டில் தங்களுக்குக்கூட வைத்துக்கொள்ளாமல் போர்முனைக்கு வெகுசிரமத்துடன் அனுப்பப்படும் உணவை எதிரிக்கு நமது போர்வீரர்கள் கொடுக்கக்கூடாது. கைப்பற்றும் பொருள்களையும்கூட கொடுக்கக்கூடாது. அவைகள்தான் நமது ஸப்ளைகளின் முக்கியமான பாகம்.

"நமது படைப்பகுதிகளில் தங்குவதற்காகக் கருதப்படும் கட்டடங்களில் மட்டும் ஏற்படும் தீக்களை அணைக்க நமது துருப்புகள் அக்கறைகொண்டிருக்க வேண்டும். போல்ஷிவிக் அதிகாரத்தைக் காட்டுவதற்கு அறிகுறியாயுள்ள மற்ற இடங்களையும், கட்டடங்களையும் அழித்து விடவேண்டும். கிழக்குப் பிரதேசத்திலுள்ள சரித்திரப் பிரசித்திபெற்றவைகளோ, சித்திரக்கலையோ நமக்குக் கொஞ்சமும் பொருட்டில்லை.

"விளைபொருள்களையும், ராணுவத்திற்கு அவசியமாயுள்ள தொழிற்சாலையையும் பாதுகாப்பதற்காக இந்த உத்தரவில் விசேஷமான முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

"போர் செய்யும் படைப்பகுதிகளுக்குப் பின்னாலிருக்கும் ஜனங்களை முற்றிலும் நிராயுதபாணிகளாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் போனால் போர்படைகளுக்கு ஸப்ளைகள் வருவதை அவர்கள் தடுக்கக்கூடுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். முடிந்த இடங்களில் கைப்பற்றின பீரங்கிகளையும், வெடிமருந்தையும் மறைத்தோ, பாதுகாத்தோ வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

"போரின் நிலைமை இதற்கு அனுசரணையாக இல்லாமல் போனால் பீரங்கிகளையும், வெடிமருந்தையும் பிரயோஜன மற்றதாகச் செய்யவேண்டும். போரணிகளுக்குப் பின்னால் தனிப்பட்ட கொரில்லாப் படைகள், பீரங்கிகளை உபயோகித்தால் அதற்குத் தகுந்தபடி திண்ணமாகவும் கோரமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

### புருஷர்களை அழிந்து விடுவது.

"கொரில்லாப்படைகளுடன் சேராமல் தடை செய்வதற்காக இம்முறைகளை புருஷர்களின் எண்ணிக்கையைக் குறைக்க உபயோகிக்கவேண்டும். ருஷ்யர்களுக்கு எதிராகவுள்ளவர்களில் எந்தப்பக்கம் சேரலாமென்று தயங்கி இருப்பவர்களுக்கு விஷயங்களை விவரித்துச்சொல்லி ருஷ்யர்களுக்கு எதிராக நடக்கும் போரில் கலந்து கொள்ளும்படி செய்யவேண்டும்.

"இம்மாதிரி செய்ய இஷ்டப்படாததினால் அவர்கள் ருஷ்யர்கள் பேரில் அனுதாபம் உள்ளவர்களென்று நடத்தப்பட்டால் அதற்காகப் புகார் செய்யக்கூடாது. பாக்கியுள்ள போல்ஷிவிக் விஷமிகளின் பயமுறுத்தல்களைக்காட்டிலும் ஜெர்மானியர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளின் பயம், அதிகமாக இருக்கும்படி செய்யவேண்டும்.

"வருங்காலத்தில் ராஜீய பயன்களைப்பற்றி கவனியாமல் படைவீரர்கள் இருவித வேலையைச் செய்து முடிக்கவேண்டும். போல்ஷிவிக் கோட்பாடு, ஸோவியத் அரசாங்கம், அதன் ஆயுதப்படைகள் இவைகளை முற்றிலும் அழிக்கவேண்டும். கபடமாகவும், கோரமாகவுமுள்ள எதிரியைக் கொஞ்சமும் இரக்கமன்னியில் அழித்து, ருஷ்யாவில் இருக்கும் ஜெர்மன் படைப் பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

"இம்மாதிரி செய்தால்தான் ஆசியாவில் யூதர்கள் பயத்திலிருந்து நிரந்தரமாக ஜெர்மானியர்களை விடுவிக்கவேண்டி எடுத்துக்கொண்டிருக்கும் வேலையைச் செய்து முடிக்க முடியும்."



# ருஷ்யாவில் கொரில்லாச் சண்டை.
# ஜெர்மானியரின் முன்னேற்றம் எப்படித் தடைப்பட்டது.

(பிலிப்ஸ் ஜோர்டன் எழுதியது.)

(1942-ம் வருஷம் மே மாதம் 1-ம் தேதி ஆல் இந்தியா ரேடியோ டெல்லி நிலயத்திலிருந்து லண்டன் நியூஸ் குரானிகல் பத்திரிகையைச் சேர்ந்த பிலிப்ஸ் ஜோர்டன் கொரில்லா யுத்த முறையைப்பற்றி ஒலிபரப்பியதின் விவரம் கீழே காட்டப்பட்டிருக்கிறது).

நவீன யுத்தம் முற்றிலும் சிப்பாய்களால் மட்டில் செய்யக்கூடிய யுத்தமல்ல. முற்றிலும் பழைய யுத்தக்கொள்கைகளை கையாண்டு வருபவர்கள்கூட இது விஷயத்தை இன்னும் தெரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நவீன யுத்த முறையில் போர் பயத்திற்குட்பட்ட பிரதேசங்களிலிருக்கும் பொதுமக்களையும் பொருத்திருக்கிறது.

நேசதேசத்தார்களில் ஒன்றாகிய ருஷ்ய ராணுவ ஸ்தாபனம் நவீன யுத்த முறையைக் கையாண்டு, அதனால் நடமுறையில் பல சாதகங்களை அடைந்திருக்கிறது. அதனால் நவீன யுத்தம் எல்லோரையும் பொருந்தது என்று அதற்குத் தெரியுமாதலால் ருஷ்யாவில் ஒரு பெரிய கொரில்லாப் படையைத் ('Partisans' திரட்டி அவர்களுக்குத் தைரியமூட்டி, பயிர்ச்சியும் கொடுத்திருக்கிறது.

இந்த யுத்தத்தில் நடந்த சம்பவங்களில் கொரில்லாப் படையினால் மட்டில் எதிரியைத் தோற்கடிக்க முடியாது. ஆனால் அவர்களுடைய வேலைத் திறமையும், தைரியமும் சேர்ந்து தங்கள் தேசத்தைப் பிடிப்பதற்கான ஜெர்மன் முயற்சிகளைப் பாழ்செய்துவருகின்றன. ஸோவியத் ஐக்கிய நாட்டில் ருஷ்ய-ஜெர்மன் யுத்தம் ஆரம்பமான முதல் ஏழு மாதங்கள் வரை நான் அங்கு இருந்திருக்கிறேன். ருஷ்யாவில் யுத்த முயற்சியைப்பற்றி மாஸ்கோவிற்கு அனுப்பப்பட்டிருக்கும் ஆறு கோஷ்டியைச் சேர்ந்த எந்த நபரும் தெரிந்துகொண்டிருப்பதைக் காட்டிலும் அதிகம் தெரிந்துகொள்ள எனக்கு சந்தர்ப்பங்கள் இருந்தன.

இந்த கொரில்லாப் படைகளைப்பற்றி சில விஷயங்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். அவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்றும், யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் என்ன பயிற்சி கொடுக்கப்பட்டதென்றும் எனக்குத் தெரியாது. மேலும் ஜெர்மன் யுத்த திட்டங்கள் அவர்களினால் எவ்விதம் பாதிக்கப்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது.

ஆனால் அவர்கள் நடவடிக்கையினால் ஒரு முக்கிய பயன் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியும். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் ஜெர்மானியர்கள் ருஷ்யர்களைத் தாக்கினால், ருஷ்யர்கள் அவர்களைத் திரும்பித் தாக்குவதற்குமுன் செம்படை கொஞ்ச தூரம் பின்வாங்கத்தான் வேண்டுமென்று ருஷ்ய ராணுவ ஸ்தாபனத்திற்கு நன்றாய்த் தெரியும்.

அப்பொழுது ஜெர்மானியர்கள் முதலில் தாக்குவார்கள் என்று பயமடைந்திருந்த கிராமங்களிலும், சிறுபட்டணங்களிலும், அவர்கள் போய் கொரில்லாப் படைகளைத் திரட்டினார்கள். ஒவ்வொரு படைக்கும் கிராமத் தலைவனையோ அல்லது அங்குள்ள ஒரு பிரபல கக்ஷித் தலைவனையோ அதிகாரம் வகிக்கும்படி செய்வார்கள். இன்னும் சில இடங்களில் காடு வனாந்திரங்களில் ஏராளமான உணவுப் பொருள்களையும் ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் புதைத்து வைத்தார்கள். "எதிரி வந்தால் அவன் அமைதியாக இருக்க முடியாமல் அவன் வாழ்க்கைக்கு வேண்டிய இடைஞ்சலைச் செய்யுங்கள். எங்களுக்கு அவ்வப்போது நடக்கும் விஷயங்களைத் தெரியக் கொடுங்கள்" என்று சொன்னார்கள்.

பிற்பாடு ஜெர்மானியர்கள் உடனே படையெடுத்து வந்துவிட்டனர். கொரில்லாப் படைகள் காடுகளுக்குள் ஓடிவிட்டார்கள். சிலர் குன்றுகளை அடைந்தனர். அங்கிருந்துகொண்டு ஜெர்மானியருக்கு வேண்டிய இம்சையும், இடையூறுகளையும் செய்தார்கள். எதிரிகளுடன் அவர்கள் நேருக்கு நேர் நின்று போர் செய்ய முடியவில்லை. ஆனால் இராக் காலங்களில் அவர்கள் ஒளிந்துகொண்டிருக்கும் இடங்களிலிருந்து வெளிவந்து ஜெர்மன் டாங்கிகளை நிறுத்தி வைத்திருக்கும் இடங்களையும், சைனியங்கள் தங்கியிருக்கும் பிரதானமான முகாம்களை

யும் தாக்கினார்கள். இதைக் காட்டிலும் ஜெர்மன் போக்குவரத்துகளுக்கு அநேக இடையூறுகளை விளைவித்தார்கள். அடிக்கடி ஜெர்மானியர்களுக்கு ஸப்ளைகள் கொண்டுவரும் ரயில்களை கவிழ்க்கவும் அவர்களால் முடிந்தது.

இரவில் மட்டில் இவ்விதம் அவர்கள் செய்வதோடு நிற்பதில்லை. பகல் நேரங்களிலும், புதர்களிலும் மறைவிடங்களிலும் இருந்துகொண்டு, துப்பாக்கிகளைக் கொண்டு எதிரிகளுடன் சண்டை செய்வார்கள். அநேகமாகத் துப்பாக்கிகள் கிடைக்காத சமயங்களில் அரிவாள், கத்தி அல்லது மனிதனைக் கொல்லக்கூடிய வேறு எந்த ஆயுதத்தைக் கொண்டாவது சண்டை செய்வார்கள்.

பெரும்பாலாகச் சொல்லுமிடத்து ராஜபாட்டைகளைத் தவிர வேறு வழிகள் மூலம் ஸப்ளைகளைக் கொண்டு வரமுடியாதபடி ஜெர்மானியர்களைத் தடுத்து விட்டார்கள். அதனால் செஞ் சைனியத்தைச் சேர்ந்த விமானப்படை ஜெர்மன் ஸப்ளைப் போக்குவரத்தை இடைவிடாமல் தாக்கி அழித்து விடமுடிந்தது. அதுமாதிரி ருஷ்யர்களுக்கு வரும் ஸப்ளை மார்க்கங்களை எதிரிகள் அவ்வளவு வெற்றிகரமாகத் தாக்க முடியவில்லை. இன்னும் அவைகள் அதிகம் செய்தன. போக்குவரத்துக்கு ஜெர்மானியர்கள் ஏற்படுத்தியிருந்த பாதுகாப்பை அதிகப்படுத்தும்படி வேண்டியதாயிற்று. இதற்காக ஒரு சமயம் மூன்று படைப் பகுதிகள் உபரியாக உபயோகப் படுத்தப்பட்டிருக்கலாம். அந்தப் பாதுகாப்புப் படைகள் மாஸ்கோவைப் பிடிக்க ஜெர்மானியர்கள் செய்யும் யுத்தத்தில் முன்னணியில் நின்று போர் செய்வதற்கு தகுந்தவாறு நன்றாக பயிற்சியளிக்கப்பட்ட படைப் பகுதிகள். இப்படைப் பகுதிகள் மாஸ்கோவைப் பிடிப்பதற்கு ஜெர்மானியருக்கு உபயோகப்பட்டிருப்பார்கள். ஆனால் கொரில்லாப் படையினால் இப்பகுதிகளை அவ்விதம் உபயோகிக்க முடியவில்லை.

ஆதலால் ருஷ்யர்களுக்கு எதிரே அதிகப்படைப்பகுதிகள் நின்று சண்டை செய்ய முடியாமல் இந்த கொரில்லாப் படை செய்யமுடிந்தது. இது மாத்திரமல்ல எந்த சமயத்திலும் உனக்குத் தெரியாமல் திடீரென்று உன் முதுகில் கத்தியைச் சொருகக் கூடியதாக இருந்தால் அந்த இடத்தில் வசிப்பது மிகவும் ஆபத்தல்லவா? அம்மாதிரி ருஷ்யாவிற்கு அனுப்பப்பட்ட ஒவ்வொரு ஜெர்மன் போர் வீரனும் இந்த நிலைமையில்தான் உயிர் வாழவேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட ருஷ்யாவில் ஜெர்மன் போர்வீரன் தூங்குவதற்காகக் கீழே படுத்துக்கொண்டால் அவன் உயிருடன் திரும்ப எழுந்திருப்பானோ என்பது அவனுக்கே நிச்சயமில்லை. இரவில் தேசாபிமானம் கொண்ட ஸ்திரீ, புருஷர்கள், ஏன் ருஷ்யச் சிறுவர், சிறுமிகள்கூட இருட்டில் திடீரென்று தோன்றி ஜெர்மானியன் படுத்துக்கொண்டிருக்கும் இடத்தை வெடி குண்டுகளால் அழித்து விடலாம். அவன் தப்ப முயன்றால் கத்தியினால் குத்தலாம்; அல்லது துப்பாக்கியினால் சுடலாம்.

ஆனால் இந்தச் செய்தியை கேட்பவர்களுக்கு அருவெறுப்பை உண்டாக்கக் கூடியதாக இருக்கும். இந்த யுத்தத்தில் இதைவிட கேட்க சகிக்க முடியாத அநேக செய்கைகளைப்பற்றி கேள்விபடுகிறோம். ஆனால் ருஷ்ய கொரில்லாப் படைகள் செய்வது அருவெறுப்பானது என்று எனக்குத் தோன்றவில்லை. ருஷ்யாவிலிருக்கும் ஜெர்மன் கைதிகளிடம் நான் பேசியிருக்கிறேன். இந்த கொரில்லாப் படைகளிடமிருந்து அவர்கள் தப்பினதில் அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டது என்பதை அவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஜெர்மன் சைனியங்களுக்கு நேர்ந்திருப்பதை நினைக்க வருத்தப்படாமலிருப்பது பெரும் கஷ்டமதான்.

கொரில்லாப்படை இன்னும் உபயோகமான வேலையைச் செய்யவும் முடியும். அவர்கள் செய்தும் வருகிறார்கள். அவர்கள் ஒரு சைனியத்திற்குக் காதும் கண்ணும் போல அவ்வளவு முக்கியமானவர்கள். எதிரிகள வசிக்குமிடங்களில் அவர்களும் வசிக்கிறார்கள். அந்த வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு பாதையையும், ஒவ்வொரு மரமும் அவர்களுக்குத் தெரியும். ஆதலால், எதிரிகளின் நடவடிக்கையைத் துப்பறிவதும், அவர்கள தங்கள் சைனியத்துடன் பேசிக்கொள்வதை ஒட்டுக் கேட்பதும், அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதையும் எங்கு போகப் போகிறார்கள் என்பதையும், ஒவ்வொரு இடத்திலும் அவர்களுக்கு எத்தகைய பலம் இருக்கிறதென்பதையும், இன்னும் அநேக விஷயங்களையும் தெரிந்து கொள்ளுவது அவர்களுக்கு மிகவும் சுலபம்.



இந்தச் செய்தியுடன் இன்னும் எதிரி படைப் பகுதிகளின் முகாம்களிலிருந்து தேசப் படங்களையும், தஸ்தாவேஜுகளையும் கொரில்லாப் படைகள் கைபற்றி செம்படை முகாம்களுக்கு தைரியமாகவும், ரகசியமாகவும் கொண்டுபோய் கொடுக்கின்றன. சில கொரில்லாக்களிடம் கையில்கொண்டு போகும் சிறு ரேடியோக்களும் இருக்கின்றன. ரேடியோ மூலமாகவும் சொல்லலாம். இருந்தாலும் அவர்களுக்கு நேரில் போய் சொல்வதில்தான் திருப்தி. இந்த விஷயங்களுக்குத்தான் பையன்களும், பெண்களும் மிக்க உபயோகம். இருட்டில் போரணிகளுக்கு இடையிலே நுழைந்து சென்று செய்திகளையும், பொருள்களையும் கொடுத்துவிட்டு, அவர்களிடம் புதிய யோசனையைக் கேட்டுக்கொண்டும், கைநிறையவோ அல்லது பைநிறையவோ வெடி மருந்துகளுடன் திரும்பி வருகிறார்கள். கேட்பதற்கு இவ்வளவு விஷயங்கள் மிகவும் கஷ்டமாகத் தோன்றினாலும் நடைமுறையில் அவ்வளவு கஷ்டமாக இருக்காது. 'ஏனென்றால் ருஷ்யப் போர்முனை ஆர்க்டிக் சமுத்திரத்திலிருந்து கருங்கடல் வரை துயர்ந்து ஓர் அணியாக வகுக்கப்படவில்லை. அது சிற்சிறுவரிசைகளாக இடையிடையே நாட்டுப் புறங்கள் சேர்ந்து அநேக வரிசைகளிருக்கின்றன. அது காரணத்தால் வெறுப்பும், கோரே ஆட்சியும் கொண்ட ஜெர்மன் பக்கத்திலிருந்து ஸ்வதந்திரத்திற்காக ஆண், பெண் இருபாலர்களும் சேர்ந்து போர் நடத்தும் ருஷ்யர்களிடம் போய்ச் சேர மிகவும் சுலபமாக இருக்கிறது.

சீக்கிரத்தில் ஏதாவது செய்தி கொண்டுபோய் கொடுக்கவேண்டியிருந்தால் இரவில் கூட ஜெர்மன் காவலாளிகள் இருக்குமிடத்திலேயே தைரியமாக கொரில்லாப் படைகள் போய் விடுவார்கள். அவர்கள் போரிட்டு வரும் இடம் பூராவும் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

ருஷ்ய கொரில்லா யுத்த கோட்பாட்டில் முதலாவது ஐட்டம் அவர்கள் சொந்த இடத்திலிருந்து கொண்டே சண்டைசெய்ய வேண்டுமென்பதுதான் சம்பளத்திற்காக போரில் சேர்ந்த வீரர்கள்போல் இங்குமங்கும் அவர்கள் போவது கிடையாது. தங்களிடத்தில் தங்கியிருந்தே அவர்கள் சண்டை செய்வதால்தான் அவர்களுடைய சண்டைக்கு பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் அநேகம் பேர்கள் குடியானவர்கள். ஆயுள் பூராவும் அந்த இடத்திலேயே வசித்தவர்கள். ஆதலால் சுற்றுப் புறமெல்லாம் ஒரு இடம் விடாமல் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஜெர்மானியருக்கோ அவ்விதம் தெரியாது. இதனால்தான் அவர்களைப் பிடிக்க ஜெர்மானியருக்குப் பெருத்த இடையூறாக இருக்கிறது.

அடிக்கடி தன்பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு ருஷ்யப் போர் வீரன் தனிப்பட்டு வர நேர்ந்தால், அந்தப் பகுதியில் மீண்டும் கொண்டுசேர்ப்பதற்கு அவனுக்கு கொரில்லாப் படைகள் உதவி செய்கின்றன. சில சமயங்களில் அவனைத் தங்கள் தலைவனாகவும் வைத்துக்கொள்ளுகிறார்கள்.

ஆனால் கொரில்லாப் படைகள் எதிரிகளுக்கு அதிக பீதியை உண்டாக்குகின்றன. அவர்களைக் கண்டாலேயே ஜெர்மானியருக்கு அதிக பயம் உண்டாகிறது. கொரில்லாப் படைகள் ஜெர்மானியர் பேரில் திடீரென்று எப்பொழுது பாய்ந்து தாக்கி அடியோடு அழித்து விடுவார்களோ என்று அதிக பயமடைந்திருக்கிறார்கள். இந்த கொரில்லாப் படையைச் சேர்ந்தவர்கள் பெருந் தேசாபிமானிகள். அவர்கள் நாடு ஸ்வதந்திர நாடாக இருக்கவேண்டுமென்பதுதான் அவர்கள் எண்ணம். ஆனால் அவர்களுக்குப் பயிற்சி உண்டோ இல்லையோ அவர்கள் அதற்காக சண்டை செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

இதெல்லாம் வேடிக்கையாகச் சொன்னதல்ல. நான் இதை ஒரு காரணத்தை முன்னிட்டுச் சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே பாஸிஸ்டு கக்ஷியினருடன் குடியரசு நாடுகளைச் சேர்ந்த சைனியங்கள் சண்டையிடும் பொழுது நான் ருஷ்யாவிலும், ஸ்பெயினிலும் கொரில்லாப் படைகளைப் பார்த்திருக்கிறேன். அம்மாதிரி பாஸிஸ்டு கக்ஷியினருடன்தான் இப்பொழுது நாமும் சண்டை செய்ய வேண்டியிருக்கிறது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 100—(2-வது பிரிவு).

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜுன் | 20, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 21, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| | 22, திங்கட்கிழமை ... | கல்லூர் ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 23, செவ்வாய்க்கிழமை. | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6:30 |
| | 24, புதன்கிழமை ... | வெங்களூர் ... | ,, | 6.00 |
| | | கோனுபட்டு ... | ,, | 6.30 |
| | 25, வியாழக்கிழமை ... | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 26, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 101—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| | 27, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | ,, | 6.30 |
| | 28, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு ... | ,, | 6.30 |
| | 29, திங்கட்கிழமை ... | அன்னவாசல ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 30, செவ்வாய்க்கிழமை | ராமச்சந்திரபுரம் ... | ,, | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| ஜுலை | 1, புதன்கிழமை ... | மழையூர் ... | ,, | 6 00 |
| | | காரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 2, வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | வம்பல் ... | ,, | 6.30 |
| | 3, வெள்ளிக்கிழமை... | குழிபிறை ... | ,, | 6.00 |
| | | செவலூர் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—22-6-42.

69407

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஜுன்மீ 27உ [ந. 101

N42

பிரஸங்கம் CI.

## ருஷ்யா வாரம்.

### ருஷ்யாவிற்கு வந்தனம்!

ருஷ்ய-ஜெர்மன்
இந்த வாரத்தை ருஷ்யா வாரம் என்று வழங்குகிறோம். ஆங்கிலேய-ருஷ்ய ஒற்றுமை அதி
யுத்தகாரணமாக முன்பு ஜுன் மாதத்தில் தேதியோடு ஒரு வருஷம் ஆகி
விக்கப்பட்டது. இவ்வருஷம் ஜுன் 22-ம் ஜெர்மன் படையெடுப்பின் இரண்டா
விட்டது. இனி மறுபடியும் ருஷ்யாவில்
வது வருஷ ஆரம்பம் ஜோதென்று நம்புவோம்.

### ஏராள எதிரிகள்.

போதே
சென்ற வருஷம் ஜுன்மீ 22உ தனக்கு உதவியாக இருக்கும் கொடுக்காமல்
ருஷ்யாவை ஜெர்மனி தாக்கிற்று. சிநேகிதர்களையும் எச்சரிக்கை ஸங்கல்பத்தின்
தாக்குவதென்பது ஜெர்மனியின் வழக்கம்தான். ஆனால் தெய்வ ருஷ்யாவைத்
படி ஜெர்மனிக்குத்தான் தோல்வி வந்துகொண்டிருக்கிறது. 30 நாடுகள்
தாக்கியதால் ஜெர்மனிக்கு ஏராள எதிரிகள் குவிந்துவிட்டனர். அமெரிக்காவும் ஒரு எதிரி.
ஜெர்மனிக்கு விரோதமாக இருக்கின்றன.

### மின்னல் படையெடுப்பு பலிக்கவில்லை.

மேலான ருஷ்யர்களின்
நாஸி மின்னல் படையெடுப்பு பலிக்கவில்லை. ஜெர்மன் தந்திரங்கள் பலிக்கவில்லை.
பலத்திற்கும்; ஆயுதங்களுக்கும் முன்னால் கதையெல்லாம் போய்விட்டது.
ஜெர்மன் சைனியம் நிகரற்றது என்ற நாஸிகள் சென்றும்
லெனின்கிராட், மாஸ்கோ முதலிய நகரங்களுக்கு முன்னால் வாய்க்கு எட்டாமல்
அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. கைக்கு எட்டியது பனியில்
போய்விட்டது. தற்காப்புப் போர் செய்ய வேண்டியதாயிற்று. எல்லா விதத்திலும்
அதிக அவஸ்தையும் ஏற்பட்டது. ஆயுத பலம், மனித பலம்
ருஷ்யர்களின் ஆதிக்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

### ஒரு புதிய தந்திரம்.

அதாவது 'விஸ்தார யுத்தம்'
புதிய தந்திரத்தையும் ருஷ்யா கையாண்டது. விட்டுக் கொடுத்தாலும்
பின்வாங்குவது, தயக்கம் செய்வது, பிரதேசத்தை தங்களுக்கும்
காலத்தைப் பிரதிகூலிப்பது, புதகன முறை, முதலியவைகளால் இந்த வருஷம் பூரா
நேசநாடுகளுக்கும் பெரும் உதவியாக இருந்து வந்தனர். ஆனால்
எதிரி சண்டையில் ஈடுபடும்படி செய்யப்பட்டான். அசந்தும் போனான்.
நேசநாடுகள் ஏராள சாமான்களை உற்பத்தி செய்துகொள்ள முடிந்தது.

## எதிரி ஒற்றுமை குலைந்தது.

ஜெர்மானியரின் ஒற்றுமையை ருஷ்யர்கள் முறித்துவிட்டனர். ருஷ்யப் போர்முனையில் காயமடைந்த ஜெர்மானியரை ஏற்றிக்கொண்டு ரயில் வண்டிகள் ஜெர்மனிக்கு வந்தன. ஆயிரக்கணக்கான பேர்கள் இறந்தும் போயினர். இவைகளைக் கண்டு ஜெர்மானியர் பயமடைந்திருக்கின்றனர்.

## ருஷ்யாவின் பலம்.

ருஷ்யா பலம் வாய்ந்த நாடு. அதன் ஜனத்தொகை 19,00,00,000. உலகத்தில் ஆறில் ஒரு பங்கு அதன் பிரதேசம் இருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கு அடுத்த படியானது. மனித பலம், தண்ணீர் உதவி, நிலக்கரி, எண்ணெய், உணவு முதலியவை ஏராளமாகக் கிடைக்கும். படித்தவர்களும், வீரர்களும் இருக்கும் நாடு. உதாரணமாக டால்ஸ்டாய், டர்கெனியல், டாஸ்டோயல்ஸ்கி, கார்கி முதலியவர்களும், ஸ்டாலின், மாலடோவ், ஒரோஷிலவ், டிமோஷென்கோ போன்றவர்களும் இருக்கும் நாடு.

## ருஷ்ய வீரன்.

ருஷ்ய வீரர்கள் பெரும் சண்டைகளில் கியாதி பெற்றிருக்கின்றனர். முன்பு நெபோலியனைத் தோற்கடித்தனர். தற்சமயம் ஹிட்லரையும் அவ்விதமே விரட்டியடிக்கப் போகின்றனர். ஏற்கனவேயே துருக்கியருக்கும் ஜப்பானியருக்கும் ருஷ்ய வீரனுடைய பலம் நன்றாகத் தெரியும். டைம்ஸ் பத்திரிகை கூறும் விதமாக 'ருஷ்யவீரன் 25வருஷங்களுக்குமுன் சண்டை செய்த விதமாகவே தற்சமயமும் சண்டை செய்கிறான். ஆனால் அதிக சாதுர்யமும, அதிக முஸ்தீபும் அக்கரையும் பொருந்தியிருக்கிறான்.'

சமீபத்தில் பிரிடனுடனும் அமெரிக்காவுடனும் செய்துகொண்ட உடன்படிக்கைகளால் உலகத்தில் அதிக ஆயுத சக்திவாய்ந்த நாடுகளுடன் சேர்ந்திருக்கிறது. அந்நாடுகளும் உதவத் தயாராக இருக்கின்றன.

இம்மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து அச்சுநாடுகளின் தொந்தரவை அழித்து யுத்தத்திற்குப் பிற்பட்டுச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்.

ஆகவே ஜூன் 22உ ருஷ்ய தினமானதும் உலகத்திற்கே ஒரு விசேஷ தினமாகவே யாவரும் கருதவேண்டும்.

அந்த தினத்தில் நாம் ருஷ்யாவை ஒரு தகுந்த நேச நாடாகக் கருதுகிறோம். அதன் ஒத்துழைப்பால் நாம் வெற்றிபெறுவோம். உலகத்தில் சமாதானமும் ஏற்படும். ஆகவே ஹிட்லர் ருஷ்யாவைப் படையெடுத்தது ஒரு விதத்தில் நேச நாடுகளுக்குச் சாதகம்தான். ஆகவே ஹிட்லரின் முடிவும் சீக்கிரம் ஏற்படும்.

இவ்வாரத்தில் ருஷ்யாவைப்பற்றி வெளிவந்த பிரிடிஷாரின் சில புகழ்ச்சி மொழிகளையும் அவைகளுக்கு ருஷ்யர்கள் அனுப்பிய செய்திகளையும் அச்சிடுகிறோம்.

---

# A.—பிரிடிஷாரின் சந்தோஷமொழிகள்.

I

## மிஸ்டர் சர்ச்சில்.

(பிரதம மந்திரி).

"ருஷ்யா சண்டையிலீடுபட்டு இரண்டாவது வருஷம் ஆரம்பிக்கப்போகிறது. இன்னும் சில மாதங்களில் பிரிடன் யுத்தத்தில் ஈடுபட்டு நான்காவது வருஷம்



ஆரம்பமாகப் போகிறது. இந்த சந்தர்ப்பத்தில் கிரேட் பிரிடனின் பிரதம மந்திரியான நான் ருஷ்யர்களின் தலைவர்களுக்கு எங்களுடைய மகிழ்ச்சியைத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். சென்ற வருஷத்தில் உங்களுடைய யந்திரப் படைகளும் கொரில்லாப் படைகளும், பொதுஜனங்களும் தேசத் தற்காப்பிற்காக அதிகம் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களின் முயற்சிகள் இனி பயன்படுமென்றே நம்பியிருக்கிறேன்.

"நமது இருநாடுகளும், மற்றும் உதவிய நேசநாடுகளும், இவைகளுக்கு உதவியாக இருக்கும் அமெரிக்காவின் சாமான்களும் சேர்ந்து நமது எதிரிகளை நாம் அடக்க முடியும்"

## உதவியை கவனியுங்கள்.

"எங்களால் சாத்தியமான உதவியை நாங்கள் செய்வோம். ஏனென்றால் ஒருவித எச்சரிக்கையும் கொடுக்காமல் உங்கள் நாட்டை ஹிட்லர் படையெடுத்தான். அதனாலேயே நம் இருவருடைய சிநேகம் விருத்தியடைந்திருக்கிறது.

"பிரகிருத நிலைமைக்கு மட்டுமில்லாமல் யுத்தத்திற்குப் பின்னும் உலக அமைப்பை முன்னிட்டும் நாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம். ஆகவே மாலடோவின் வருகைக்கு பிறகு ஏற்பட்ட உடன்படிக்கையை நாங்களும், ருஷ்யர்களும் விரும்பினார்கள்.

"எதிரிகளை மதிமயங்கச் செய்யவே நமக்குள் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. யுத்தம் முடிந்ததும் ஸ்வதந்திரத்தை விரும்பிய யாவருக்கும் சமாதானத்தை வழங்குவோம்."

II

## மிஸ்டர் C. R. அட்லி.

(உதவி பிரதம மந்திரி).

"ருஷ்யாவுக்கு ஸப்ளை போய்க்கொண்டிருக்கிறது. அந்நாட்டுக்கு நாம் மேலும் உதவி புரிவோம். ருஷ்யர் ஜெர்மன் ஆயுதத்தை மழுக்கடித்திருக்கிறார்களேயன்றி அதை இன்னும் அழித்துவிடவில்லை. அவர்கள் தற்போது தற்காப்புப்போர் நடத்திவருகின்றனராயினும், நாளடைவில் முன்னேறித்தாக்கி எதிரிகளை முறியடிப்பது திண்ணம். மாலடோவ்வின் விஜயத்தால் இருநாட்டினருக்கும் அதிக ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது."

III

## ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்.

(காமன்ஸ் சபை லீடர்).

"அமெரிக்காவின் தொழிற்சாலை உதவியும், ருஷ்யாவின் இயற்கைப் பொருள்களின் உதவியும் நமக்குப் பூராவாக ஏற்பட்டவுடன், ஐரோப்பாவின் மேற்கே வெற்றிகரமான தாக்குதலைச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

"நாம் நேசநாடுகளுக்கு வெற்றி தரும்படியான உதவியைச் செய்தால் தான் சாதகமாக இருக்கும். இல்லாவிட்டால் நமது திட்டங்களே பயன்படா. அப்படி ஓர் போர்முனையை ஏற்படுத்திவிட்டால், மிகவும் தீவிரமாகச் சண்டை செய்து பெர்லினையும் பிளந்து செல்லுவோம். அது எப்போது சாத்தியமென்பதை இப்போது சொல்லமுடியாது. ஹிட்லர் எதிர்பார்த்திருக்கும்படி சீக்கிரத்திலேயே இருந்தாலும் இருக்கலாம்.

"நாம் நமது ஏற்பாடுகளைத் தயாரித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அவனும் தயாரித்துக்கொண்டுதானிருப்பான். இவ்விஷயம் ருஷ்ய அயல்நாட்டு மந்திரியான மாலடோவ் இங்கிலாந்துக்கு வந்திருந்தபோது அவருடன் சர்ச்சை செய்யப்பட்டது. அவருக்கு இது நன்றாகவே தெரியும்.

"உலகமும், இந்த இருநாடுகளும் முக்கியமாக மாலடோவ், மெயிஸ்கி, சர்ச்சில், ஈடன் இந்த நான்கு பேர்களுக்கும் அதிகம் கடமைப்பட்டிருக்கின்றன.

"இந்த இருநாடுகளுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தை, யுத்தத்திற்குப் பிறகு உலக அமைப்பிற்காகப் போடப்பட்ட அஸ்திவாரக் கல்லென்றே யாவரும் சொல்லுவார்கள்.

"அப்படி ஏற்படப்போகும் சமாதானத்திற்கு முன்பாக நிச்சயம் வெற்றி கிட்டவேண்டும். அந்த வெற்றியை அடைவதென்றால், நாம் குறையாத ஊக்கத்துடனும், தைரியத்துடனும் இருக்கவேண்டும். மத்திய காலத்தில் ஏற்படக்கூடிய தோல்விகளைக் கவனிக்கக்கூடாது."

### அதிக நம்பிக்கை.

"ஒரு வருஷத்திற்குமுன் இருந்ததைவிட நாம் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் இருக்கிறோம். இருந்தாலும் நமது சத்துருக்கள் வசமுள்ள பலத்தைப்பற்றி நாம் குறைவாக மதித்துவிடக்கூடாது. நம்மால் பூராவாகத் தோற்கடிக்கப்படுமுன் அதிகக் கடுமையாகவும், தீர்மானத்துடனும் எதிரிகள் சண்டை செய்து பார்ப்பார்கள். அவர்களுடைய ராணுவ பலத்தையும், தொழிற்சாலைகளின் அமைப்பையும் அடக்குவதற்கு நமக்கு இன்னும் கொஞ்சம் நாள் தேவையாக இருக்கலாம்.

"பிரிடிஷ் படைகளும், ருஷ்யப் படைகளும் வெவ்வேறு பாகங்களில் இருந்து சண்டை செய்யலாம். ஆனால் ஆபிரிக்காவில் பிரிடிஷ் படைகளுக்கு எவ்வித தைரியம் இருக்கிறதோ அதேவிதமாக கார்கவ், ஸெபாஸ்டோபூல் முதலிய இடங்களிலுள்ள ருஷ்யப்படைகளுக்குமிருக்கிறது.

"இந்த நாட்டில் நமக்கு சிநேகிதர்களாக இருக்கும் சிலரைவிட ருஷ்யர்களே நமது முயற்சியையும், வெகுநாளாக சண்டை செய்வதால் நமது கப்பற்படைக்கும், வியாபாரிகளுக்கும், விமானப்படைக்கும், உலகத்தின் பல பாகங்களில் பிரிந்து சண்டை செய்யும் சிப்பாய்களுக்கும் ஏற்பட்டிருக்கும் சிரமத்தையும் உணர்கிறார்கள். அதைப்போல் நாமும் வெற்றியை முன்னிட்டுப் பாடுபடும் ருஷ்யர்களின் தியாகத்தையும் உணர்கிறோம்."

### நாஸிக்கொடுமை.

"ஆக்கிரமித்த நாடுகளில் நாஸிகளின் கோபம் அதிகரிக்க, அதிகரிக்க அங்குள்ள ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும், குழந்தைகளுக்கும்தான் கஷ்டம் அதிகரித்திருக்கிறது. இவ்விதம் செய்யும் கொடுமைகளுக்கு அவர்கள் ஒருநாள் அவஸ்தைப்படத்தான் வேண்டியிருக்கும். உலகத்தில் நாகரீகம் பரவவேண்டியதற்காகவே இவ்வித காட்டுமிராண்டிச் செய்கைகளை நாம் அடக்கவேண்டும்.

"யுத்த தந்திரத்தைத் தவிர ருஷ்யர்களும், பிரிடிஷார்களும் பரஸ்பரம் தெரிந்துகொள்ளவேண்டியது பல இருக்கின்றன. இவ்விரு நாடுகளின் ஒற்றுமையைக்கொண்டு யுத்தத்திற்குப் பிறகு உலக சீர்திருத்தத்தில் செய்யவேண்டியது பல உள்ளன.

"நம் இருநாடுகளும் வருங்காலத்திலும் ஒற்றுமையுடனேயே இருக்கும். ஐரோப்பாவிலிருந்து நாஸிக் கொடுமையை அகற்றவே முடிவான தீர்மானத்துடனும் நடந்துகொள்ளும்".

## IV
## ஸர் ஆர்ச்பால்டு ஸின்கிளேர்.
(விமான மந்திரி.)

"மிகப் பிரமாதமாகப் புகழடைந்திருக்கும் ருஷ்யர்களை நான் வணங்குகிறேன். வெற்றிவரை யுத்தத்தை நீடித்து நடத்தி பரஸ்பரம் நல்லெண்ணம், நம்பிக்கை முதலியவைகளைக்கொண்டு நாம் யுத்தத்திற்குப் பிறகு உலகத்தை அமைப்போம்."



## V
## ஜெனரல் ஸர் ஆர்ச்பால்டு வேவல்.
(இந்திய தலைமை தளகர்த்தர்).

"ஜெர்மனி உங்கள் நாட்டைப் படையெடுத்த வருஷக்கொண்டாட்டம் இவ்வருஷத்தோடு முடிந்துவிடுமென்று நம்புகிறேன். தரை, கடல், விமானம் முதலியவைகளில் ஈடுபடும் உங்கள் வீரர்களுக்கு என்னுடையவும், இந்தியப்படைகளுடையவும் சந்தோஷத்தைத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

"ருஷ்யர்களின் தைரியத்தையும், பொறுமையையும் பார்த்து உலகத்தார் ஆச்சரியமடைகின்றனர். நாங்கள் உங்களுக்கு வெற்றிவரவேண்டுமென்று விரும்புகிறோம்.

"30 வருஷகாலமாகப் பழகிவந்த ருஷ்ய மக்களுக்கு எனது சொந்த நற்செய்தியையும் கொடுக்க விரும்புகிறேன்".

## VI
## டாக்டர் டெம்பிள்.
(காண்டர்பரி ஆர்ச்பிஷப்.)

"இந்த இருநாடுகளும் பரஸ்பரம் நம்பிக்கையுடனும், கௌரவத்துடனும் சேர்ந்திருந்து வெற்றியடையும் வரை சண்டைசெய்து, தர்மமான மார்க்கத்தையும் நல்லெண்ணத்தையும் ஆதாரமாகக்கொண்டு உலகத்தில் சமாதானத்தை அமைக்கும்".

# B.—ருஷ்யாவின் பதில்.

## I
## கலினின்.

"ருஷ்யர்கள் தற்சமயத்தில் வெற்றியில் பூரண நம்பிக்கையுடன் எதிரிகளை எதிர்த்து வருகின்றனர். இதற்குத் தேவையான ஆயுதங்களை நம் வசத்திலிருக்கின்றன. ஜெர்மானியர் ஆடம்பரமாகச் சொல்லிவந்த வசந்த காலத்தாக்குதல் பயன்படவில்லை. முழுப்போர் முனையிலும் அவர்களால் நிர்வகிக்க முடியவில்லை. முன்னேற்றப் போரை நாம் அவர்களிடமிருந்து பிடுங்கிவிட்டோம்".

## II
## ஸ்டாலின்.

ஸ்வதந்திரத்தை முன்னிட்டு புரியப்படும் இந்த யுத்தத்தில் நாம் தனியாக இல்லை. ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும், ஹிட்லர் ஏஜெண்டுகளுக்கு உட்பட்டிருக்கும் மக்களும்நமது பக்கத்திலிருக்கின்றனர். உலகத்தின் ஸ்வதந்திரத்திற்காகவே நாம் போரிடுகிறோம். ஹிட்லரின் சைனியங்களை எதிர்த்து எல்லா மக்களும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. இந்தக் கருத்தைத்தான் மிஸ்டர் சர்ச்சில் வெளிப்படுத்தி ருஷ்யாவிற்கு உதவுவதாய்ச் சொன்னார். நமக்கு உதவியளிக்கப்படுமென்று அமெரிக்க அரசாங்கத்தினரும் சொன்னார்கள்".

## III
## மார்ஷல் டிமொஷென்கோ.

"நமது சிநேகிதர்களான பிரிடிஷ் மக்களை நான் அன்புடன் வரவேற்கிறேன். வெற்றிகிட்டும்வரை ருஷ்யர்கள் ஜெர்மானியருடன் எதிர்த்து நிற்பார்கள். ஸ்வதந்திரத்தை விரும்பும் நாடுகளுக்கு வெற்றி கிடைக்கவேண்டும்."

# வார யுத்தச் செய்திகள்.

## 20—6—42-லிருந்து 26—6—42-வரை.

**லிபியா.**—டொப்ருக் விழுந்தவரையில் நேர்ந்த சம்பவங்களின் விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. மே மாதத்தில் எதிரித்தாக்குதல் நேருமென்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக நமது 8-ம் படை கஸாலா, பிர்ஹாகீமிற்கு இடையில் எதிரியைத் தடுக்க ஏற்பாடு செய்தது. ஒரு வாரத்திற்கு முன்னமேயே பிரிடிஷ் விமானப்படை குறுக்கு எதிர்ப்புகளை ஆரம்பித்தது. நைட்ஸ்பிரிட்ஜ் எல் அடம் பிரதேசத்தில் கடும் சண்டை நடந்தது. அந்த சமயத்தில் எதிரி நேசதேச சுரங்க தளங்களின் வழியாகப் பிளந்துகொண்டு வந்துவிட்டான். இருந்தாலும் அவன் ஸப்ளைகளைப் பெறமுடியவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் இரு கக்ஷியினரும் களைத்துப்போயினர்.

ஜூன்மீ 3உ சுரங்கதளங்களின் முன்னால் எதிரி நிலைத்தான். ஜூன்மீ 4உ ஜெனரல் ரிச்சி அவனைக் குறுக்கு எதிர்ப்புச்செய்து விரட்டியடித்தான். இதனால் பிர்ஹாகீமை ஜூன் 10உ காலிசெய்ய நேர்ந்தது. மறுபடி உதவிபெற்று ரோமல் நைட்ஸ்பிரிட்ஜ்—எல் அடம் பிரதேசத்தைப் பிளந்து கடற்கரையை நோக்கி ஓடினான். நான்கு நாள் தரை, விமானம் இவைகளில் கடும் சண்டை நடந்தது. ஜூன்மீ 7உ எல் அடம்—எல் டோ—எல் ரெஸக் பிரதேசத்திலிருந்து ரிச்சி பின்வாங்கினான். டொப்ருக்கில் மாத்திரம் ஒருபடை இருந்தது. ஜூன்மீ 20உ டொப்ருக்கினுள் எதிரி பலத்துடன் தென்கிழக்கு வழியாக முன்னேறினான். அதிக ஸ்துகா விமானங்கள் தாக்கியதால் டொப்ருக் விழுந்தது. அங்கிருந்த விமான எதிர்ப்பு பீரங்கிகளும் கெட்டுவிட்டன.

இந்த சந்தர்ப்பத்தை ரோமல் லெகுவாகப் பயன்படுத்திக்கொண்டான். பார்டியாவைக் காலிசெய்ததும் கபுஸோ, ஸிடி ஓமார், ஷெபர்ஸான், மடல்லனா கோட்டை இவைகளை நோக்கி படைகளையும் அனுப்பினான்.

பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் கஸாலா, பெங்காஸி, டிமிமி, முதலியவைகளைப் படையெடுத்தன. டொப்ருக்-கபுஸோ பாதையை தென் ஆபிரிக்க விமானப்படை தாக்கியது.

டொப்ருக் விழுந்ததும், மால்டாமீது எதிரி நடமாட்டம் அதிகமாக இருக்கிறது.

எகிப்து சண்டை ஆரம்பமாயிற்று. காம்பூத், ஸொல்லம், ஸிடி ஓமார் காலி செய்யப்பட்டன. எதிரி ஸிடிபாரானியை நோக்கிப் போகிறான். நேசதேசப் படைகள் எதிர்க்கத் தயாராக இருக்கின்றன.

ஸிடிபிரானி, மர்ஸா மாட்ரு இவைகளின் இடையில் எட்டாம் படை எதிரிகளுடன் சண்டை செய்கிறது.

**ருஷ்யா.**—ஸெபாஸ்டோபூலைத் தாக்கிய ஜெர்மன் படைகள் கோட்டைக்குள் சில இடங்களில் புகுந்தன. அங்கிருப்பவர்கள் அதிக எண்ணிக்கையுள்ள எதிரிகளுடன் பலமாக சண்டை செய்கின்றனர்.

கார்கவ்வில் மறுபடி சண்டை ஆரம்பமாயிருக்கிறது. ஓரிடத்தில் ருஷ்யர்களை விரட்டியதாகவும் சொல்லப்படுகிறது. கார்கவ்வின் கிழக்கே குபியான்ஸ்கை ஜெர்மானியர் பிடித்துள்ளனர்.

ஸ்மொலென்ஸ்கில் ருஷ்யத் துருப்புகள் மறுபடி சண்டையை ஆரம்பித்திருக்கின்றன. பிரயான்ஸ்கில் ருஷ்ய டாங்கிகள் ஓரிடத்தைப் பிடித்துள்ளன? விமானச் சண்டையில் மர்மான்ஸ்கில் 24 ஜெர்மன் விமானங்கள் நாசமாயின. பாரன்ட்ஸ் கடலில் 15,000 டன்னுள்ள எதிரிக்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது,



**சைனு.**—கடைசியாக சுங்கிங்கிலிருந்து கிடைத்த செய்திகளிலிருந்து கின்ஹுவாவிற்குக் கிழக்கே ஜப்பானியர் சில இடங்களை இழந்தனர். கியாங்ஸி மாகாணத்தில் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச்செய்து வருகின்றனர். செகியாங்-கியாங்ஸி இருப்புப்பாதை வழியாக நான்கு ஜப்பானியப் படைகள் முன்னேறுகின்றன. இருந்தாலும் 100 கிலோமீடர் தூரமிருக்கிறது. ஹாங்ஜாவோ, கின்கியில் எதிரி பலம் செய்துவருகிறான். குவிய்கியை சீனர்கள் திரும்பப் பிடித்துள்ளனர். கியாங்ஸி-செகியாங் ரயில்வேயை நோக்கி ஜப்பானியர் அதுவரைதான் முன்னேறியிருக்கின்றனர்.

இதற்குள்ளாக தென்சைனாவில் குவான்டங் போர்முனையில் கான்டன்-ஹாங்கங் இருப்புப்பாதையை நோக்கி முன்னேறும் எதிரிப்படைகள் நிறுத்தப்பட்டன.

**பிரிடிஷ் விமானப்படை.**—எம்டன், பிரெமன், ஹாலந்து, வடக்கு பிரான்ஸ் முக்கியமான லக்ஷியமாக இருந்தன. பர்மாவில் அக்யாப், கலிவா, ஹோமலின், மாக்வி, மிய்டிகியினா முதலியவை தாக்கப்பட்டன.

**பஸிபிக்.**—ரபால், லேயி இரண்டும் ஆஸ்திரேலிய விமானங்களால் தாக்கப்பட்டன. 10,000 டன் நிறையுள்ள ஜப்பானியக் கப்பல் ரபாலுக்கு அருகில் மூழ்கடிக்கப்பட்டது.

அலூஷியன் தீவுகளில் கிஸ்காவை ஜப்பானியர் ஆக்கிரமித்துக்கொண்டனர்.

**பலவகைப்பட்டவை.**—1. ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை செய்ய மிஸ்டர் சர்ச்சில் வாஷிங்டன் சென்றிருக்கிறார். கப்பல்கள் ஸப்ளைகள் சம்பந்தமான பிரச்னைகளும், இரண்டாவது போர்முனையைப் பற்றியும் பேசுவதாகத் தெரிகிறது. அமெரிக்க மந்திரிகளுடனும் பார்லிமெண்டு சபையினருடனும் ஜூன்மீ 25உ பேசினார்.

2. ஒரு நீர்மூழ்கியால் லாங்கு வார் தீவின் கிழக்கு முனை தாக்கப்பட்டது. சில இடங்களில் அதிர்ச்சியால் ஜன்னல்கள் சேதமாயின.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 10—6—42. (புதன்கிழமை). | | | | |
| | இதாலி (Italy)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பற்படை தளம்.— டாரென்டோ (Taranto). | | | |
| 11—6—42. (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.— ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | எதிரி வண்டிகளின் கூட்டங்கள், பீரங்கி ஸ்தானங்கள், ஏராளமான மோட்டார்கள். பிர்ஹாகீம் (Birhakheim) பிரதேசம். | | 3 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 11—6—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | இதாலி (Italy)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பற்படை தளம்—டாரெண்டோ (Taranto). | 2 நாசகாரிகள் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| | கிரீஸ் (Greece)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | பிரேயஸ் (Piraeus). | | | |
| 12—6—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதிக் கப்பல்கள் டச்சுக் (Dutch) கடற்கரைக்கருகாமையில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி கவசம்பூண்ட வண்டிகள், போக்குவரத்து வண்டிகள்.—பிர்ஹாகீம் (Birhakheim) பிரதேசத்தில். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ பிரிடன்(New Britain)-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்) | | | |
| | விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul), காஸ்மாடா (Gasmata). | | | |
| 13—6—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கியாஸ் சேமித்து வைக்கும் இடங்கள் (Gasholders) தொழிற்சாலைகள், விரோதி போக்குவரத்துகள்.—வடபிரான்ஸ் (France). | | | |
| | சாமான் ஏற்றும் ரயில் வண்டி, என்ஜின் ஈடபிள்ஸ் (Etaples). | | | |
| | சாமான் ஏற்றும் ரயில் வண்டி—டியப் (Dieppe). | | | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.-ஸிரெனேகாவின் (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | நாஸிகளின் கவசம் பூண்ட வண்டிகள், போக்குவரத்து வண்டிகள்—பீர்ஹாகீம் (Birhakheim) பிரதேசத்தில். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 14—6—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | | | |
| | மூன்று கப்பல்கள் கொண்ட துணைக் கப்பல் கூட்டம்.—டென்ஹெல்டரு (Denhelder)க்கு மேற்கே. | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | விரோதி விமான நிலயங்கள், மற்ற லக்ஷியங்கள்.-ஆக்கிரமித்த பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | நஷ்டமில்லை. | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனேகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | விரோதி மோட்டார்கள், டாங்கிகள்—ஆக்ரோமாவுக் (Acroma)கருகாமையில். | | | |
| | விமானமிறங்குமிடத்திலிருந்தும் விமானங்கள்—டெர்னு (Derna). | பெருந் தீக்கள் கிளம்பின. | | |
| | கிரீட் (Crete)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | கிரீட்டி(Crete)லுள்ள விமான நிலயங்கள். | | | |
| | இதாலி (Italy)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பற் படை தளம்—டாரெண்டோ (Taranto). | | 4 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | | |
| | தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | அந்தீவிலுள்ள விரோதிக்குச் சொந்தமான ராணுவக் கட்டடங்கள். | | | |
| 15—6—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகளின் கூட்டங்கள்—எலாடம் (Eladem) பிரதேசத்தில். | | | |
| | விரோதிக்குச் சொந்தமான டாங்கிகள், மோட்டார்கள்—பிர்ஹாகீம் (Birhakheim) பிரதேசத்தில். | | | |
| | துறைமுகம், கப்பல்கள்—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான நிலயம்—பெர்கா (Berka). | | | |
| | கிரீட் (Crete)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்-காஸ்டாலி (Kastali). | | | |
| | ஹெராக்லியான் (Heraklion), டிம்பாகி (Tymbaki) | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 15—6—42. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—கொயபாங் (Koepang) சுற்றிலுமுள்ள பிரதேசம். | | | |
| 16—6—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள் ரூர் (Ruhr) ரைன்லாந்து (Rhineland). | | | |
| | சுரங்கவெடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | 8 விமானங்கள். | 1 விமானம். |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான தரைப் படைகள்.—எலாடம் (Eladem) பிரதேசம். | | | |
| | விமான நிலயங்கள்—பெர்க்கா (Berka), டெர்னு (Derna). | | 8 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்—லே (Lae), ஸலாமாவா (Salamavua). | | | |
| 17—6—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் தரைப் படைகளுக்கு உதவும் விமானப்படை.-எலாடம் (Eladem) பிரதேசம். | | | |
| | விரோதி விமானமிறங்கும் இடங்கள்—எல்கஸாலா (El Gazala), டிமிமி (Tmimi). | தீக்களும், வெடிகளும் கிளம்பின. | 4 விமானங்கள். | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்—ஹெராக்ளியான் (Heraklion), காஸ்ட்லி (Kastli). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—லே (Lae). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 18—6—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—லக்ஷியங்கள்—எம்டன் (Emden), ஆஸ்னுப்ரக் (Osnabruck) வடமேற்கு ஜெர்மனி (Germany)யில் ஏதோ ஒரு இடம். | | | |
| | விரோதிக்குச் சொந்தமான விமான தளங்கள்—ஹாலந்து (Holland), ஆஸ்லோ (Oslo). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடம்—கஸாலா (Gazala). | | | |
| | விமான நிலயம்—டிமிமி (Tmimi). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்கள்). | | | |
| | விமான நிலயங்கள்—ஹெராக்ளியான் (Heraklion), டிம்பாக்கி (Tymbaki). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்யா விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், கப்பல்கள்.—ராபால் (Rabaul). | அநேக விமானங்கள் நாசமாக்கப்பட்டன, | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—லே (Lao) பிரதேசத்தில். | | | |
| 19—6—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விமான நிலயங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ரோட்ஸ் (Rhodes)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மாரிட்ஸா (Maritza). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஹெராக்லியான் (Heraklion). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—லே (Lao). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | கலேவா (Kalewa).—சின்ட்வின் (Chindwin) நதிக்கரையில். | | | |
| | விமான நிலயம்.—மிட்கியினு (Mitikyina). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—6—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஒரு இடம்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 13—6—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | ௨ விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டொப்ருக் (Tobruk). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 14—6—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் Britain—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஒரு இடம்.—இங்கிலாந்து (England) தெற்குக் கடற்கரையில். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | ... | 1 விமானம். | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டோப்ருக் (Tobruk). | | | |
| 15—6—42. (திங்கட்கிழமை.) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | ... | 15 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—மெர்ஸா—மாட்ரு (Mersa-Matrub), பூகா (Fuka) பிரதேசங்களில். | | | |
| | தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம் | ... சிலர் கொல்லப் பட்டனர்; சொற்பச் சேதம். | 4 விமானங்கள். | 1 விமானம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 16—6—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—எலாடம் (Eladem) பிரதேசத்தில். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 17—6—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸிடி ரெஸிக் (Sidi Rezegh) பிரதேசம். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | 1 விமானம். | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| 18—6—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸிரெனிகா (Cyrenaica)விலுள்ள யுத்தரங்கத்தில். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | 1 விமானம். | |
| | மால்டா (Malta). | | | |
| 19—6—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | 1 விமானம். | |
| | ஒரு இடம்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் விமான நிலயங்கள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

20—6—42. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).
இரவில்.—இங்கிலாந்தின் (England)
தென் கிழக்குக் கடற்கரை.

லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்).
டோப்ருக் (Tobruk).

மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).
மால்டா (Malta).

தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்).
தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

டோப்ருக்கை ஒரு பரீக்ஷை சம்பவமாகவே கருதவேண்டும். அதாவது உண்மையான தைரியமும் ஒற்றுமையும் இருக்கிறதாவென்று தெரிந்துகொள்ள செய்யப்பட்ட ஒரு பரீக்ஷையாகும். வெற்றியடைந்துவிடலாமென்ற மனப்பான்மையை தைரியமென்று சொல்லமுடியாது. ஆனால் ஏற்படக்கூடிய பயன்களைச் சரிவரத் தெரிந்துகொண்டு அதற்கு அநுகுணமாக நாம் தைரியமாக இருக்கவேண்டும். அதாவது பலாபலன்களைத் தீர விசாரிக்கவேண்டும். விஷயங்களைப் பூராவாகப் பரிசீலனைசெய்து சிறு சம்பவங்கள் யாவையும் ஒன்றுசேர்த்து சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். கடைசியாகப் பார்க்கும்போது ஒற்றுமையென்பது திடீரென்று ஏற்படக்கூடியதல்ல. அதற்கு லாயக்காக தனது புத்தியை முன்னாடியே அமைத்துக்கொள்ளவேண்டும்.

டொப்ருக் சம்பவம் ஒரு பாதகமான அம்சம்தான். சென்ற வருஷத்தில் 250 நாட்கள் எதிர்த்து நின்ற டொப்ருக் ஒரு நாளில் எதிரி வசமாயிற்று. அதனால் மத்தியக் கிழக்கில் நேசநாடுகளின் திட்டம் மாறிவிட்டது. ஏராள மனிதர்களும் சாமான்களும் நஷ்டம். நேசதேசங்களின் ஒரு முக்கிய தளம் எதிரி வசமானதால் எகிப்து எல்லைக்கு அவன் எளிதில் வரமுடியும்.

இது எதிரி வசமானதற்கு உண்டான காரணங்கள் நமக்குத் தெரியும். எதிரி அதிக ஆட்களையும், பீரங்கிகளையும், கவச மோட்டார்களையும் உபயோகித்தான். ஆயுதங்களால்தான் எதிரி வெற்றிபெற்றான். இருந்தாலும் நேசநாடுகள் பிரமாதமாகச் சண்டைசெய்தன. இந்தியர்களுக்கும் அதில் பங்கு உண்டு. மேலும் போக்குவரவு சாதனங்கள் வெகு தூரமாக இருந்தன. கப்பல்கள் போதுமானபடி இல்லை. கிடைத்த லப்ளைகளில் சில ருஷ்யா, ஆஸ்திரேலியா, இந்தியா முதலியவைகளுக்கு அனுப்பப்பட்டன.

ஆனால் டைம்ஸ் பத்திரிகை கூறும்விதமாக ஒரு சண்டையில் தோல்வி வந்ததே தவிர யுத்தமே போய்விடவில்லை. எப்போதும் பாலைவனச் சண்டை இப்படித்தானிருக்கும். திடீரென்று அகண்ட பிரதேசங்கள் ஒரு கைவிட்டு மற்றொரு கைக்கு மாறிவிடும். முதலில் வேவல் லிபியாவில் முன்னேற்றப்போரை துவக்கிய போது ஸிரனைகா பூராவும் அவர் வசத்திலிருந்தது. உடனே டொப்ருக்கின் பேரில் படையெடுப்பு செய்யப்பட்டது. ஆனால் கிரீட் யுத்தத்தை முன்னிட்டு கொஞ்சம் பின்வாங்க நேர்ந்தது. அடுத்த தடவை ஆச்சின்லக் முன்னேற்றப் போரைச் செய்தபோது லிபியாவை நோக்கி எதிரி மறுமுறை விரட்டப்பட்டான்.



எல் அகெய்லா வரை ஓடினான். பிறகு ரோமல் வெகு பாடுபட்டு பாதி
பிரதேசத்தைதான் கைப்பற்றமுடிந்தது. பாலைவனச் சண்டைகளில் பிரதேச
நஷ்டத்தைவிட எதிரிகளுக்கு உண்டாகியிருக்கும் சாமான்களின் நஷ்டம்தான்
அதிகம் கவனிக்கத்தகுந்தது. மேலும் மேலுதவி வருவதையும் பொருத்திருக்
கிறது. மறுபடி நமக்கு உதவிகிடைத்தால் நேசதேசங்களின் நிலைமை சாதகமாக
முடியலாம். பிரகிருதத்தில் ரோமல் தனது லக்ஷியங்களுக்கு எவ்வளவோ
தூரத்திலிருக்கிறான். அவை அலெக்ஸாண்டிரியாவும், கெய்ரோவும்தான்.

தற்போது பிரிடிஷ் படைகள் ரோமலை எகிப்திலுள் செல்லும் ரஸ்தா
விலேயே தடுத்து உட்செல்லவிடாமல் செய்யவேண்டும். 'இது நிச்சயம் செய்ய
முடியும். நிச்சயம் செய்யவும்படும்.'

வி வி வி வி வி வி வி

முடிவான வருஷம். அமெரிக்காவிற்கு மிஸ்டர் சர்ச்சில்
திடீரென்று சென்று 'அவசரத் தீர்மானங்
களை' முடிக்கப்போகிறார். இதிலிருந்து இவ்வருஷத்தில் யுத்தத்தில் சில முடிவான
மாறுதல்கள் நேரலாமென்று தோன்றுகிறது. ரோமல் லிபியாவில் முன்
னேறியதையும், கிரிமியா, கார்கவ்வில் ஜெர்மானியர் முன்னேறியதையும் சைனா
வில் ஜப்பானியர் பலமடைவதையும் பார்த்து இம்மாதிரி அவசரத் தீர்மானத்
திற்கு வந்திருக்கிறார். அச்சு நாடுகள் களைத்திருக்கின்றன. ஜெர்மனி தோற்றால்
தனக்கும் தோல்வி ஏற்படுமென்று ஜப்பானுக்குத் தெரியும். ஜப்பான் அலூஷியன்
தீவில் முன்னேறியதைப் பார்த்தால் ருஷ்யாவைப் பின்புறமாகத் தாக்க இருக்க
லாம். அப்படி இருந்தால் ருஷ்யாவிற்கு நேசநாடுகளின் உதவி அதிகமாகச்
செய்யப்படவேண்டும். ருஷ்ய-பிரிடிஷ் ஒப்பந்தமும் 1942-ல் முடிவான சம்பவங்
கள் நேரலாமென்று தோன்றுகிறது. நேசநாடுகள் தங்களுடைய முழுபலத்தை
யும் சேகரித்து முடிவாக சண்டை செய்வார்கள்.

ஸெபாஸ்டோபூல் டொப்ருக்கைப்போல் காகஸஸில் இருந்துவருகிறது. இவ்
வருஷம் எதிரி தாக்குதல் கோடைகாலம் வந்துவிட்டதால் மிக மும்முரமாக இருக்
கிறது. மூன்று வாரங்கள் வரை எதிர்த்துநின்று மீண்டும் சமாளித்துவருகிறது.
சாதாரண கோட்டையானதால் உதவி சென்றால்தான் இன்னும் நிர்வகிக்கமுடியும்.
இதில் எதிரிக்கு ஏராள நஷ்டம் ஏற்படும். ஆனால் தனது ஆட்களை பலி
கொடுப்பதற்கு ஜெர்மனி பின் வாங்காது.

வி வி வி வி வி வி

அலூஷியன் தீவுகள். இதில் ஜப்பானியர் இரண்டு தீவுகளைப் பிடித்
திருப்பதாகச் சொல்லப்படுகிறது.
பிரிடனுக்குச் சமமான ரேகையில் இருந்தால் இவைகள் மிகக் குளிரும் மூடுபனி
யுடனும் இருக்கும். சீதோஷ்ண நிலைமை சரியாக இல்லாததால்தான் அமெரிக்கர்
கள் ஜப்பானியரைத் தடுக்கமுடியாமல் போய்விட்டது. இருந்தாலும் ஜப்
பானியருக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் மிக அதிகம். ஒரு க்ரூயிஸரும் பல சண்டைக்
கப்பல்களும் நஷ்டம். அலூஷியன் தீவுகள் மிக முக்கியமானவை. அவைகளின்
அமைப்பு மிக வாசலாக இருப்பதால் டோகியோவிற்கும் ஸான்பிரான்ஸிஸ்கோ
விற்கும் சமீபத்தில் இருக்கின்றன. கிஸ்கா என்பது ராட் தீவு கூட்டத்திலுள்ளது.
இது காமசட்காமாகாணத்திலுள்ள ருஷ்ய நகரமான பெட்ரோபளோவ்ஸ்கிற்கு
800 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்நகரம் ஜப்பானியர் வசமானதால்
அமெரிக்காவிற்கும், ஆசியா, ருஷ்யாவிற்கும் ஆபத்துத்தான். நேசதேசங்கள்
வசமிருந்தால் ஜப்பானுக்கு அதிக ஆபத்து.

வி வி வி வி வி வி

சைனா. இங்கு ஜப்பானியரின் நடமாட்டத்தை
சாதாரணமாக நினைக்கக்கூடாது. கடல்
மார்க்கங்கள் சாவதானமாக இல்லாததாலும், கப்பல் நஷ்டம் அதிகமானதாலும்,
ஜப்பான் தனது லப்ளைகளை அனுப்ப தரை மார்க்கத்தைக் கண்டுபிடித்துக்
கொண்டிருக்கிறது. இதற்குமுன் நடந்த செகியாங், கிவாங்ஸி, குவான்டங்

சண்டைகளெல்லாம் ஹாங்சல்—நான்கிங், ஹாங்கல்—கான்டன் இருப்புப்பாதை களைக் கைப்பற்றி மஞ்சூரியாவிலிருந்து சிங்கப்பூர் வரை இந்தோ-சைனு வழியாக தரை மார்க்கத்தை ஸ்தாபிக்கும் நோக்கமிருப்பதாகத் தெரிகிறது.

இந்த நோக்கம் சீனர்களுக்கும் தெரியுமாதலால் ஒவ்வொரு கட்டத்திலும் எதிரிகளை எதிர்த்தடிக்கின்றன. செகியாங்கிலுள்ள சாங்ஷாவைப் பிடித்ததி லிருந்தே சீனர்களின் கொரில்லாப் படைகளின் தீரம் தெரிகிறது. கின்ஹுவாவைச் சுற்றியுள்ள முக்கிய நிலங்களெல்லாம் திரும்பப் பிடிக்கப்பட்டன. கியாங்ஸியை நோக்கி செய்யப்படும் எதிரித் தாக்குதல் திருப்பியடிக்கப்பட்டன. மொத்தத்தில் இங்கே சண்டை சாதாரணமாகத்தானிருக்கிறது.

சைனு சண்டையில் அலுத்து பயந்துவிட்டதென்றும் நேசதேசங்களின் உதவி போய்ச்சேரவில்லையென்றும் எதிரிகள் சொல்லிவருகின்றன. சமீபத்தில் ஜெனரல் சயாங்-கை-ஷேக் பின்வருமாறு சொல்லியுள்ளார்: 'நான் ராணுவத்தை ஆரம்பித்தபோது 2,000 பேர்தானிருந்தனர். தற்சமயம் 30,00,000 பேர்களிருக்கின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து இவைகளின் சிநேக மும் இருக்கிறது.'

ஸர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் 'ஆசியா சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்க்க சைனுவைத்தான் முக்கியமாகக் கருதுகிறேம். இதற்கு இந்தியாவும் சைனுவும் ஒன்றுசேரவேண்டும். நெபோலியன் சொன்னவிதமாக சைனியத்தின் பலத்தில் தைரியம் முக்கால் பங்கு, மனிதர்களும், ஆயுதங்களும் கால் பங்கு என்ருல் சீனர் களின் எதிர்ப்பு மிக மும்மரமாக இருக்கும்' என்று சொல்லியுள்ளார்.

வி வி வி வி வி வி வி

**போய் சொல்லுவதில் திறமை.** அச்சுநாட்டுப் புழுகுகள் மிக மும்மரமாகவே இருந்துவருகின்றன. அதிலும் ஜப்பானிய கப்பற்படையைப்பற்றி ஏராளமாகப் பேசுவதில் மிக மும்மரம். பேர்ல் துறை முகச் சம்பவத்திற்குப் பிற்பட்டு பஸிபிக்கில் அமெரிக்கா ஆதிக்கத்தை இழந்த தென்றும், பவளக்கடல் சண்டைக்குப் பிறகு அதன் நிலைமை கேவலமாகி சுமார் 6 பெரிய கப்பல்களை மாத்திரம் வைத்துக்கொண்டு தனது நாட்டையே காக்கமுடியாத நிலையிருக்கிறதென்றும் சொல்லுகின்றனர். ஜூன்மீ 8உ 'அமெரிக்கப் பாதுகாப்புப்படை அழியும் தருவாயிலிருந்ததாயும் சொல்லு கின்றனர். ஆனுல் ஜூன்மீ 12உ மிட்வே தீவு சண்டையில் ஜப்பானியருக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டது. 'மிட்வே தாக்குதலால் அமெரிக்கக் கப்பற்படை ஏமாற்ற மடைந்து அதன் முன்னேற்றப்போர் தடைபட்டது' என்றும் அவர்கள் சொல்லு கின்றனர். ஜூன்மீ 8உ அமெரிக்கக் கப்பற்படை அழிந்திருந்தால் ஜூன்மீ 12உ அது எவ்விதம் முன்னேற்றப்போரை துவக்கமுடியும்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியக் கப்பற்படையின் நிலைமை.** அமெரிக்கக் கப்பற்படை, கிடைத்த சந்தர்ப்பங் களில் சில சண்டைகளைச் செய்திருக் கின்றது. சென்ற ஆறு மாதங்களில் ஜப்பானியக் கப்பற்படை 8-ல் ஒரு பங்கு அழிக்கப்பட்டது. அதாவது 51 சண்டைக் கப்பல்களாகும். மூன்றில் ஒரு பங்கு சேதமாக்கப்பட்டது. ஆக மொத்தத்தில் 45 சதவிகிதமாகிறது. சண்டையிலீடுபடாத போக்குவரத்து முதலிய கப்பல்களில் 74 மூழ்கடிக்கப்பட்டன. 48 சேதமாயிருக்கின்றன, விமானமேற்றும் 10 கப்பல்களும், 35 க்ருயிஸர்களும் நஷ்டமானதுதான். அதிக மாக பாதிப்பதாக ஜப்பானியர் கருதுகின்றனர். நிலைமை இவ்வாறு இருக்க அமெரிக்கக் கப்பற்படை அழிந்துவிட்டதென்று தைரியமாக ஜப்பானியர் சொல்லுகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்க விமான பலம்.** கடலில் ஆபத்து அதிகமிருப்பதைக் கவனித்து அமெரிக்க விமானங்களை அதிகம் கட்டு வதில் ஈடுபட்டிருக்கிறது. சண்டைகளும், முற்றுகைகளும் ஆங்காங்கு பிரமாத மாக நடந்துகொண்டிருக்கும்போது அமெரிக்க சாமான்களின் உற்பத்தியில் ஊக்கத்துடன் ஈடுபட்டிருக்கும் விஷயம் மிக ஆச்சரியமானது. சண்டை நடக்கும் எல்லா அரங்கங்களிலும் அமெரிக்க விமானங்கள் பிரசன்னமாக இருக் கின்றன—சைனு, பர்மா, இந்தியா, லிபியா, ஆஸ்திரேலியா, ஜெர்மன் பிரதேசங் கள், அட்லாண்டிக், பஸிபிக், மத்தியதரைக்கடல், கருங்கடல் எங்குமிருக்கின்றன. மீண்டும் அமெரிக்க விமானங்கள் உற்பத்தி செய்யப்படுவதைப்பார்த்தால் பெரும் வகையான போர் சீக்கிரத்திலேயே நிகழும் என்று சொல்லலாம். சண்டைக் கப்பல் கட்டுவதையும் நிறுத்திவிட்டு விமானங்களேற்றும் கப்பல்கள் கட்டப் படுகின்றன. டாங்கிகளை எதிர்க்கவும் விமானங்களே உபயோகிக்கப்படும். டோக்கியோவைத் தாக்கியதால்தான் ஜப்பானியர் வங்காளக்குடாக்கடலிலிருந்து ஓடினர்.



வி வி வி வி வி வி வி

**"நாஸிகள் அடக்கு முறையை விசித்திரமாகச் செய்கின்றனர்.** சம உரிமைக்கக்ஷிக்கு விரோதமானவைகளும் இதர கொடிய ஏற்பாடுகளும்" மிக அதிக மாக இருக்கின்றன. வீயன்னுவில் கூட்டம் கூட்டமாகப் பொதுஜனங்கள் கைதி செய்யப்படுகின்றனர். குற்ற வாளிகளின் ஜாபிதா தயாரிக்கப்படுகின்றன. இப்படி கைதி செய்யப்பட்டவர்கள் தொழிலாளிகளின் கூட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர். ரகசியப் போலீஸ் பள்ளிக்கூடங்களில் அடைக்கப்படுகின்றனர். சரியானபடி அதிகாரத்தை செலுத்தாமல் தயவு காட்டியதற்காக 800 மாஜிஸ்திரேட்டுகள் பதவியிழந்தனர். "சம உரிமை கக்ஷிக்கு விரோதமாக இருப்பவர்களை அடக்க ஒரு ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது.

வி வி வி வி வி வி வி

**இதாலியின் இரண்டாம் வருஷ தினம்.** இதாலி யுத்தத்திலீடுபட்டு ஜூன் 10உ இரண் டாவது வருஷ தினம். இந்த சந்தர்ப்பத் தில் கௌபர் கவியின் மொழிகள் ஞாபகத்திற்கு வருகின்றன. 'ரோம் அழிந்து விடும், இம்மொழிகளை ரோமர்கள் சிந்திய ரத்தில் எழுதி குற்றம் செய்தவர்களைப் போல் ரோமர்கள் அழிக்கப்படுகின்றனர். வெறுக்கப்படுகின்றனர்.'

கார்ஸிகா, ஸாவாய், நைஸ், டூனிஸ், எகிப்து, ஸூடன், கெனியா, முதலியவை களை நரிமாதிரி நடந்துகொண்டு பிடித்துவிடலாமென்று இதாலி நினைத்தது.

ஆனுல் இதாலி அடைந்ததென்ன வென்பதை கவனிப்போம்.

1. அபிஸீனிய சாம்ராஜ்யம் நஷ்டமாயிற்று. 2,00,000 பேர்களும் இறந்தனர்,
2. லிபியாவும், 3,00,000 பேர்களும் நஷ்டம்,
3. டாரண்டோ, மடபன் சம்பவங்களில் அவமானமடைந்தது,
4. அல்பானியா, கிரீஸ் இங்கே கேவலமான நிலை ஏற்பட்டது,
5. க்ரோஷியாவில் இதாலிய ராஜ்யத்தின் தலைவனுன ஸ்பாலிடோ மறு படி அங்கேபோக முடியவில்லை,
6. டால்மாடியாவிலிருந்து துரத்தப்பட்டது,
7. ஜெர்மன் ரகசியப் போலீஸ் இதாலியில் ஆதிக்கம் அடைந்திருக்கின் றனர்,
8. இதாலிய தொழிலாளிகள் ஜெர்மனியில் உழைக்க வேண்டி யிருக்கிறது,
9. முஸோலினி பதவியிழந்து,
10. ரோமின் கௌரவமே போய் விட்டது.

**ஜப்பானிய ஆக்கிரமனம்.** உண்மையில் ஜப்பானிய ஆக்கிரமணம் என்ன வென்பதையும் கவனிப்போம்.

முதலாவதாக ஆக்கிரமித்த நாடுகளின் சொத்துக்களை பறிமுதல் செய்வது. ஷாங்காயை ஆக்கிரமித்துக்கொண்டதும் அங்கிருந்த ஒவ்வொரு வியாபாரத்தையும் பிடுங்கிக்கொண்டனர். தொழிற்சாலைகளிலிருந்து ஒன்றையும் எடுத்துப்போகாமல் பாதுகாப்பதாகச் சொல்லி கொஞ்சம் கொஞ்சமாக யாவற்றையும் பறிமுதல் செய்துவிடுகின்றனர்.

அடுத்தபடியாக ஆங்காங்கு உள்ளவர்கள் விரட்டப்படுகின்றனர். இதனால் கைகலந்த சண்டை நேருகிறது. ஜனங்களுக்கு வீடு வாசல்களை விட மனசு வரவில்லை.

மூன்றாவதாக கத்திமுனை ஆட்சிதான் செய்யப்படுகிறது. ஹாங்கவ்வில் ஒரு ஸ்ஞானவிடுதிக்குப் பந்தோபஸ்துக் கொடுப்பதாகச் சொல்லி பிறகு அவன் பல 1,000 டாலர் செலவு செய்து விருத்தி செய்ததும் அதைப் பறிமுதல் செய்து விட்டனர்.

நான்காவதாகக் கைதி செய்வது. ஐந்தாவதாக வியபசாரம். ஹாங்கவ்வில் ஒரு கடையை வியாபித்துக்கொண்டு அதை வியபசாரச் சாலையாக மாற்றினார்கள்.

ஆருவதாக கூட்டு வியாபாரம், ஏழாவது கொள்ளையடிப்பது. ஸ்விடவ்வில் கடைகளிலும், தொழிற்சாலைகளிலும் கூட்டுச் சேர்ந்து 50 சதவிகிதம் லாபத்தைக் கொடுக்கும்படி சொல்லுகின்றனர். பீபிங்கிலுள்ள செழிப்பான நிலங்களைக் கொள்ளையடித்து குடியானவர்கள் ரிக்ஷா வண்டிகளை இழுக்கும்படி செய்யப் பட்டனர்.

எட்டாவது ஆக்கிரமணம், 1938-லிருந்து 1941-வரை 83,873 குடும்பங்கள் வடகிழக்கு மாகாணங்களிலிருந்து விரட்டப்பட்டனர். அது சுமார் 2,47,173 ஏக்கரா விஸ்தீரணமாகிறது.

கடைசியாக கொலை. ஜப்பானிய ஆக்கிரமணத்தை எதிர்த்த சீனர்கள் கொலை செய்யப்பட்டு அவர்களின் நிலம் பிடுங்கப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**மதமென்ற செட்டை.** பிரதேச ஆக்கிரமணம், அரசியல் ஆதிக்கம் முதலியவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமான காரணங்களைக்கொண்டு ஜப்பானியர் ஆதிக்கமடைய விரும்புகின்றனர். அதாவது பயிற்சி, மதம் முதலியவைகளைப் பறிக்கவும் ஆசைப்படுகின்றனர். தனது மதத்தை இழந்து ஷின்டோ கொள்கையைப் பின்பற்றிவரும் ஜப்பான் மதாசாரியரின் ஸ்தானத்தை வகிக்க விரும்புவது விசித்திரமாக இருக்கிறது. ஜூன் 10-ட டானகா யோஷியோ ஒலிபரப்பும்போது ஜப்பானின் பொதுக்ஷேமம் முதலியவைகளைப் பற்றிச் சொன்னான்:—

**பிலிப்பைன்ஸ்.** 'பிலிப்பைன்ஸ் வாசிகள் மேலெழுந்தவாரியான நோக்கமுள்ளவர்கள். அதிக ஆடம்பரமாக அலங்காரம் செய்துகொண்டு தைரியமுள்ளவர்களைப்போல வெளியில் காணப்படுவார்கள். ஆனால் அவர்கள் வீடுவாசல்கள் அதிக ஆபாசமாக இருக்கும். சோம்பல் பிடித்து, புத்தியில்லாமல், அமெரிக்கர்களைப்போல் கெட்டுவிட்டனர்.'

இதற்குப் பரிகாரம் என்ன?

'பிலிப்பைன்ஸ் வாசிகள் அதிக செலவாளிகள். பணம் கிடைத்ததும் அவர்களுடைய தகப்பன்மார்கள் உயிருடன் இருக்கும்போதே விலையுயர்ந்த ஜதையைத் தயாரிக்கின்றனர். இந்த வழக்கம் ஜப்பானியருடையது. பிலிப்பைன்ஸ் பிதிரு பக்தியை நாம் பின்பற்றினால் கௌரவ மக்களாவோம்.'



**தாய்லாந்து.** 'ஜப்பானிய புத்தமதத்திற்கும், தாய்லாந்து புத்தமதத்திற்கும் அதிக ஒற்றுமை இருக்கிறது. அவர்களுடைய மதாசாரியர்களுக்கு ஜனங்களிடையே அதிக செல்வாக்கு இருக்கிறது. ஜனங்களும் அவர்களைப் பக்தியுடன் வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஜப்பானியரான நாம் அவர்களை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டால் தாய்லாந்தை வசப்படுத்தலில் சிரமமே இருக்காது.'

**பர்மா.** 'மதாசாரியர்கள் ஜப்பானிய சாமான்களை வாங்கச்சொன்னால் ஜனங்கள் வாங்கிக் கொள்ளுகின்றன.

'பர்மாவில் ஏராள கோவில்கள் இருக்கின்றன. பர்மிய ஆசாரியர்களை நாம் வசப்படுத்தினால் நமக்கு வெகு சௌகரியமாகிவிடும்.'

**இந்தியா.** 'பர்மாவில் ஏற்பட்ட மதமாறுதல் இந்தியாவை பாதிக்கும். இந்தியாவில் மதப்பற்றுதல் மிக அதிகம். இந்தியர்களின் மத லக்ஷியங்கள் இன்னும் கைகூடவில்லை. தங்களுக்கு உதவியளிப்போரை எதிர்பார்த்துக்கொண்டேதானிருக்கின்றனர். நாம் தாய்லாந்து, பர்மாவைப்போல் இந்தியாவையும் வசப்படுத்தலாம்.'

வி வி வி வி வி வி

**பிச்சம்பிடிப்பது.** இச்சந்நிலைகயில் இந்தியாவில் பிச்சம்பிடிக்க வேண்டிய அவசியத்தையும், பிரிடன் பிச்சம் பிடித்தலரும் விதத்தையும்பற்றி இரண்டு விஷயங்கள் அச்சிடப்பட்டு உள்ளன. பல தந்திரங்களடங்கிய இந்த புத்தகத்தில், பொருள் சம்பந்தமான தந்திரம் மிக முக்கியமானது. இரு விஷயங்களை பிச்சம்பிடிப்பது அதிக சாதகமாக இருக்கிறது. தேசிய பிச்சம்பிடிக்கும் சங்கமென்பது பிரிடிஷாரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தாங்களாகவே இதில் யாவரும் சேர்ந்திருக்கின்றனர். இவர்களுக்குச் சம்பளம் கிடையாது. ஜனநாயகக்கொள்கையுடன் இருக்கிறார்கள். பொக்கிஷ மந்திரி லர் கிங்ஸ்லி சொல்லும்விதமாக இச்சங்கத்தில் ஒருவன் மெம்பராக சேர்ந்தால் வெற்றியைமுன்னிட்டு பிச்சம்பிடிக்கும் ஜனங்களுடன் சேர்ந்தவனாக ஆவான். தெருவில் பிச்சம் பிடிக்கும்படி சொல்லிவரும் கோஷ்டி யும் முக்கியமானது. முதல் சங்கம் 1940-ல் ஆரம்பிக்கப்பட்டது. 10,000 கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன. 40-லக்ஷம் அங்கத்தினர்கள் இருக்கின்றனர். நமது தேசிய யுத்த முன்னணியில் ஈடுபட்டிருப்போருக்கு இவ்விஷயம் முக்கியமானது.

---

## ஜெனரல் டோஜோவின் நகைப்பு.

(ரென்லி ஸ்மித் எழுதியது.)

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள்மூலம் கிடைத்தது.)

இந்தியாவை வசப்படுத்தும் விஷயத்தில் ஜப்பான் மெபிஸ்டோபிலிஸ்ஸைப் போல் நடந்து கொள்ளுகிறது. இந்தியர்களைப்பற்றி ஜப்பானுக்கு விரோதமான எண்ணமே கிடையாதென்று ஜப்பானிய பிரதம மந்திரி டோஜோ சொன்னாலும், இந்த வசீகரமான வார்த்தைகளைச் சொல்லி 48-மணி நேரத்திற்கெல்லாம் சுபாஸ் சந்திரபோஸ் பெர்லின் வந்துவிட்டதாகவும் பிரிடிஷார் கூலியும் தருவாயில் இருப்பதாயும் பெர்லின் ரேடியோவில் சொல்லப்பட்டது.

இந்த இரண்டு சம்பவங்களும் எதிர்ச்சையாக நடந்திருக்கலாம். அதை ஒருவரும் கவனிக்கவில்லையானாலும், ஜப்பானிய பிரதம மந்திரியின் பேச்சுத் திறமையைப்பற்றி கவனிக்க வேண்டியதுதான். ஜப்பானியரின் சிரிப்பு தனிப்பட்டது. அதை நம்பிவிடக்கூடாது. அவர்களைப்போல் ஏமாற்றச் சிரிப்பு வேறொருவரிடத்திலும் காணமுடியாது. அவ்வித கபடச் சிரிப்பை டோஜோ முகத்தில் காணலாம்.

### கபடமானவர்கள்.

அதிக அனுபவம்வாய்ந்த ஒரு ஐரோப்பிய நிபுணர் சொன்னது, எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் சொன்னதாவது உலகிலுள்ளவர்களுக்குள் ஜப்பானியரைப்பற்றிதான் வியக்தமாக ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லையென்று சொன்னார். அதற்கு திருஷ்டாந்தமாக டோஜோவைச் சொல்லலாம். இந்தியர்களென்றால் ஏதோ விசேஷம் என்று மாத்திரம் சொல்லுவான். சீனர்களைப்பற்றி அப்படி சொல்லுவதில்லை.

இதே மாதிரிதான் ஜெர்மானியரும் ஐரோப்பா பூராச் சொல்லி ஏமாற்றினார்கள். 1938-ல் பிரிடிஷ், பிரெஞ்சு, பிரதம மந்திரிகளைப் பார்த்து 'உண்மையான பிறப்புள்ள' ஜெர்மானியர் ஜெர்மனிக்குள் வந்துவிட வேண்டுமென்று மியூனிச்சில் சொன்னான். செக்கர்கள், ஸ்லாவாகியர்களைப்பற்றி அதிகக் கவலை கிடையாது. அவர்களைத் தனியே ஸ்வதந்திரத்துடன் விட்டுவிடுவானாம்.

### ஹிட்லர் எவ்வாறு தனது வார்த்தையை நிறைவேற்றினான்.

முன்சொன்ன வார்த்தையைச் சொன்ன ஆறுமாதங்கள் கழித்து திடீரென்று பிரேக்கில் ஹிட்லர் புகுந்தான், டாக்டர் பெனிஸ் வெளியே சென்றான். 1939-ல் 18-நாள் சண்டையில் போலந்து விழுந்ததும் பிரெஞ்சு மக்கள் மிக சிநேகிதர்களென்று ஜெர்மானியர் சொல்லி பிரிடிஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் விரோதத்தை உண்டுபண்ணினான்.

இதைப்போல் டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், நார்வே முதலிய நாட்டுவாசிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. ஜெர்மானியரைக் காட்டிலும் நார்வேக்காரர்கள் ஒசத்தியாம்.

இந்தப் பிரசாரத்திற்கு பிறகு 9 வாரகாலத்தில் இவையாவும் ஜெர்மனி வசமாயின.

### "ஹிட்ரிச் அரசாங்கம்".

சீனர்கள் சொல்லும் விதமாக டோஜோ சிரிப்பு கபடமானதுதான். 'ஹிட்ரிச்சின்' தன்மைகளெல்லாம் டோஜோவின் முகத்தில் காணப்படுகின்றன. செக்கோஸ்லாவகியாவிலுள்ளோருக்கு ஹிட்ரிச்சின் அரசாக்ஷி முறை நன்றாகத் தெரியும் லண்டனிலுள்ள செக்கோஸ்லாவாகிய அரசாங்கம் பின்வருமாறு ஒலிபரப்பியது. "குடும்பங்களையெல்லாம் ஜெர்மானியர் கொலை செய்தால் அது காட்டுமிராண்டித்தனம்தான். ஹிட்ரிச்சைக் கொலை செய்தது உலகத்தில் ஜெர்மனிக்கு உட்பட்ட நாடுகளின் சார்பாக செய்த பெரும் காரியமாகும்."

"கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை இந்தியத் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளுவார்களென்று ஜப்பான் எதிர்பார்க்கிறது" என்று டோஜோ சொன்னான். சந்தர்ப்பம் விசேஷம்தான். ஆனால் சொல்லுவது ஜப்பானல்லவா. சிரித்து ஏமாற்றும் இந்த மெபிஸ்டோபிலியின் தொழிலை கோயபெல்ஸ்கூட பின்பற்ற முடியாது.

---

## ஜப்பானியரின் கனவு.

ஹாசென் காகிட் யால்ஸின் என்பவர் எழுதியது.

(இஸ்தான்புல்லிலுள்ள 11—5—42-ம தேதி 'யேனி சபா' பத்திரிகையிலிருந்து)

ஜப்பானில் கியோடோ சர்வகலாசாலையின் புரொபஸர் ஸஇனேகிஷி கோமகி என்பவர் சமீபத்தில் முக்கியமான விஷயத்தை யாவருக்கும் திருப்தியளிக்கும்



விதமாக ஒலிபரப்பினார். இவ்வுலகத்திற்கு அவர் விடுத்த செய்தியில் கீழ்க்கண்ட
சில விஷயங்கள் முக்கியமானவை:—

"அமெரிக்கா, கிழக்கு ஆசியாவே தவிர வேறல்ல. ஆஸ்திரேலியாவும்கூட
ஆசியாகண்டத்தைச் சேர்ந்ததுதான். வட ஐரோப்பியர்களும் ஆசியாக்காரர்களைச்
சேர்ந்தவர்கள்தான். முன்னொரு காலத்தில் ஆசியா கண்டத்திலுள்ள பல
ஜாதியினர் உபயோகித்த அநேக ஆயுதங்கள் இப்பொழுது தெற்கு ஐரோப்பா
வில் பல இடங்களில் தோண்டி எடுக்கப்படுகின்றன." மேற்சொல்லியவைகளால்
ஐரோப்பா பூராவும் ஆசியா கண்டத்தைச் சேர்ந்த ஒரு பாகம் என்று சொல்லு
வதற்குப் போதுமான முகாந்திரம் இருக்கிறது.

"பஸிபிக் மஹா சமுத்திரம், ஆசியாவுக்கென்றே ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது.
அத்தகைய பிரஸ்தாபம் புதிய சகாப்தத்துக்கு ஒரு புதிய கருத்தை விளக்குகிறது.
இந்த மஹா சமுத்திரமும் ஆசியா கண்டத்திற்கே ஒதுக்கப்படவேண்டும். இவ்
வுலகத்தில் ஏழு கடல்கள் இருக்கின்றன என்று சொல்லுவதெல்லாம் பிசகு.
ஒரே ஒரு சமுத்திரம்தான் உண்டு. அதுவும் ஜப்பானுக்கேதான் உரியது."

இவ்விஷயங்களை உலகத்தாருக்கு வெளியிட்டவுடன் அவர் கீழ்க்கண்ட
விதமாக அவ்வியாசத்தை முடிவு செய்தார்:—

"இதாலியும், ஜெர்மனியும், ஆசியா கண்டத்திற்கு ஜப்பான்தான் மத்திய
தேசமென்று ஒப்புக்கொண்டிருக்கின்றன. ஏனென்றால் ஜப்பானின் உதவி
யன்னியில் ஐரோப்பாவை புதிமாதிரியாக அமைப்பதற்கு அந்நாடுகளுக்குச் சக்தி
போராது. மேல்நாட்டார்களின் நாகரீகத்திற்கு அடிப்படையாக ஆசியாதான்
இருக்கிறது. ஆசியாவிலுள்ளவர்களைப் பார்த்துத்தான் மேல்நாட்டாரின்
நாகரீகம் அபிவிருத்தியடைய வேண்டியிருக்கிறது."

இவ்வளவு பதவிசாகச் சொன்னதற்காக ஜப்பான் புரொபஸருக்கு நாம்
வந்தனத்தைச் செலுத்துகிறோம். அவருடைய பகல் கனவில் பூலோகத்தில்
இந்த எல்லைக்குள்மட்டில் ஏன் குறைத்துச் சொல்லிக்கொள்ளவேண்டும்?
உலகத்திற்கே ஜப்பான் மத்திய தேசமென்று ஏன் அவர் சொல்லவில்லை? சூரியன்,
சந்திரன், ஆகாயம் இன்னும் மற்ற உலகங்களும் ஜப்பான் ஆதிக்கத்தின் கீழ்தான்
வைத்திருக்கவேண்டுமென்று ஏன் அவர் விரும்பவில்லை? இந்த விஷயம்தான்
நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது.

இத்தகைய பேச்சை ஜெர்மானியரும், இதாலியர்களும் எப்படி எண்ணுவார்
கள்? தூரக்கிழக்கில் மஞ்சள் நிறமுள்ள ஜப்பானியரைவிட மேல்நாட்டில்
கறுப்பு சட்டை தரித்திருக்கும் பாஸிஸ்டு கக்ஷியினருக்கு சாம்ராஜ்ய ஆசை
அதிகம் கிடையாது. அப்படியே இருந்தாலும், அதை வெளிக்காட்டாமல்
பதவிசாக இருந்தார்கள். அப்படியிருந்தும் ரோம் சாம்ராஜ்யத்தை புனருத்
தாரணம் செய்ய அவர்கள் கொண்டிருக்கும் எண்ணம் இகழப்பட்டது. ஆனால்
இப்பொழுது ஜப்பானிய சாம்ராஜ்ய ஆசையைப்பற்றி ஜப்பானிய புரொபஸர்
சொல்லியிருப்பதைப்பார்த்தால், பெர்லினில் ஜப்பானைக் குறித்து அருவெறுப்
பான நோக்கமும் பீதியும் ஏற்பட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஐரோப்பாவில் ஒரே ஒரு பெரிய ராணுவ வல்லரசுதான் இருக்க முடியும்
என்று சொல்லிவரும் அச்சுநாடுகள், ஐரோப்பாவையும் சேர்த்து விழுங்க
விருப்பங்கொண்டிருக்கும் தூரக்கிழக்கு வல்லரசு ஆதிக்கம் செலுத்த எப்படி
சகிக்கும்.

முதன்முதலில் கிடைத்த வெற்றிகளினால் ஜப்பானுக்குண்டான மயக்கத்தில்
ஜப்பானியர்கள் வழக்கத்துக்கு விரோதமாக அஜாக்ரதையாகப் பேச ஆரம்பித்து
விட்டார்கள். புத்தி கூர்மையுள்ளவரும் தீர்க்காலோசனை செய்யக்கூடியவரும்,
மிதவாதியுமாயிருக்கிற ஜப்பானிய புரொபஸரே உலகம் பூராவும் ஜப்பான்
ஆதிக்கத்தின் கீழ்வைக்கவேண்டுமென்று ஆசைப்பட்டால், சாம்ராஜ்ய ஆசை
கொண்டலையும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் எதைத்தான் விரும்பமாட்டார்
கள்."

'தோட்டம் நிலைப்பதற்குள் தென்னம்பிள்ளை வைக்க எண்ணுவதைப்போல' ஜப்பானியர்கள் நடத்தும் முதலாவது நடவடிக்கை அவர்களுடைய ஐரோப்பிய நேசதேசத்தார்கள் செய்துவரும் நடவடிக்கைகளைக் குலைக்கக்கூடியதாக இருக்கிறது. ஐரோப்பாவிலிருந்து ஜெர்மனியும், இதாலியும், ஜப்பானியர்களிடம் உதவியைக் கோருவதிலிருந்து ஜப்பானியர்களின் முக்கியத்வத்தைக் காட்டுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் வெளித்தோற்றத்துக்கு நிச்சந்தேகமாக ஜப்பானியர்கள் எண்ணுவதுபோல் காண்கிறது. சென்ற மூன்று வருஷங்களாக அச்சுநாடுகளின் ஐரோப்பிய கூட்டாளிகள் தங்கள எல்லைக்குமேல் உபரியாக ஒரு அங்குலம்கூட அடைய முடியாமலிருந்தபோதிலும், ஐந்து மாதங்களுக்குள் கிழக்கு ஆசியா பூராவையும் ஜப்பான் வியாபித்துக்கொண்டுவிட்டது.

அநியாயமாய் அடைந்த ஜயத்தினால் வெறியுண்டாகி, அந்த வெறி மயக்கத்தால் அந்த ஜப்பானிய புரொபஸர் பேத்துகிறாரா? அல்லது ஜப்பானியர்கள் மானஸீகமாகக் கொண்டிருக்கும் விருப்பப்படி சொல்லப்பட்ட வார்த்தைகளா? அல்லது ஜப்பானியர்களை ஏமாற்றி, உத்ஸாகப்படுத்தி இன்னும் மேற்கொண்டு பரித்தியாகங்கள் செய்யும்படி தூண்டப்பட்ட வார்த்தைகளா? எந்நிலைமையிலும் ஜப்பான் வெற்றியடைந்தால் உலகம் பூராவுக்கும் என்னவிதமான அபாயம் ஏற்படும் என்பதை அவர் வார்த்தைகளிலிருந்து வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

நாடுகளைக் கைப்பற்ற ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கும் அபரிவிதமான விருப்பத்திற்கு ஒரு முடிவுகட்டி, இனிமேல் மனிதவர்க்கத்திற்கு அபாயம் உண்டாக்க ஜப்பான் பயமுறுத்தாமலிருக்கும்படி செய்யவேண்டியது அவசியமென்பதை அதன் நடவடிக்கைகளே ரூபித்துவிட்டன. ஐரோப்பாவில் சண்டை செய்யும் நாடுகளுக்குள் ராஜியாக சமாதானம் ஏற்படுத்த முடியுமானால் நிச்சந்தேகமாக ஜப்பானியர்களால் ஏற்படக்கூடிய அபாயம் அச்சமாதானத்தைத் துரிதப்படுத்தியிருக்கும். ஏனென்றால் ஐரோப்பாவின் பலம் குன்றி வரும் பொழுது, தூரக்கிழக்கில் ஐரோப்பாவை விழுங்க பெரிய பாம்பு படமெடுத்து வருகிறது என்று ஐரோப்பாவே அறிந்துகொண்டிருக்கிறது.

சரித்திர விசேஷமான காலத்தில் நாம் இருந்துவருகிறோம். யுத்தம் முடியும் காலம்வரை உயிருடனிருந்து பார்க்கக்கூடியவர்கள், அநேக விநோதமான சம்பவங்களைப் பார்க்க நேரிடும்.

இம்மாதிரி உலகம் பூராவும் சேவலமடையக்கூடிய நிலைமை இதற்குமுன் சரித்திரத்தில் ஏற்பட்டதில்லை. ஒரு விஷயத்தில் ஜப்பானிய புரொபஸர் சொன்னது உண்மையே. இனிமேல் உலகத்தில் கண்டங்கள் தனித்தனியாக இருக்கப்போவதில்லை. கடல்களும் வெவ்வேறு பேர்களுக்குச் சொந்தமென்பதில்லை. ஆனால் எல்லாம் ஒன்று சேர்ந்துவிட்டது. எல்லா அங்கங்களும் உறுதியாகவும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவும் சேர்ந்திருக்கின்றன. மனித வர்க்கம் நிலைத்து நிற்கவேண்டுமானால் ஜப்பானியர் கொடி பறக்குமிடத்தில் அம்மாதிரி இருக்கமுடியாது. ஆனால் ஸ்வதந்திரமும், நியாயமும் எங்கும் தங்கும்படி செய்தால்தான் மனித வர்க்கம் நிலைத்திருக்கலாம்.

---

## தங்க முட்டையிட்ட வாத்து.

*டெயிலி டெலிகிராப்பில் W. E. ஹார்டு எழுதியது.*

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம் கிடைத்தது).

பிரிடிஷ் விமானப்படை ஜெர்மன் நகரங்களைத் தாக்கியதின் வெளிப் பலன்களைக் காட்டிலும் உள்ளடங்கிய பலன்கள் அதிகம் இருக்கின்றன. பிரிட்டிஷ் விமானப் படையைத் தடுக்க (R. L. B.) ஜெர்மன் விமானப்படைக்குச் சக்தி



போரவில்லை. R. L. B. படை 1933-ல் ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்ததும் அமைக்கப்பட்டது. அதிலுள்ளவர்களுக்கு ஸ்வஸ்திகா அடையாளங்களுடன் உடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆரம்பம் முதல் விமான மந்திரி கோயரிங் இதை விஸ்தாரப்படுத்துவதற்கு அதிக அக்கரை எடுத்துக்கொண்டான். உதவி ஜெனரல் ரீக்ஸ் என்பவன் தலைவனாக இருந்தான். ரீக்ஸுக்கு மாதச் சம்பளம் 5,000 மார்க். மோட்டார் முதலிய சௌகரியங்கள் இவனுக்கு உண்டு. இதர உத்தியோகஸ்தர்களும் இவனுக்கு உட்பட்டிருந்தனர்.

### கோடிக்கணக்கான மெம்பர்கள்.

மெம்பர்களுக்கும் குறைவே கிடையாது. கோடிக்கணக்கில் இருந்தனர். வருஷத்திற்கு 12 மார்க்ஸ் வீதம் பணம் கட்டினால் இதரவிதமான நிர்ப்பந்தம் அவர்களுக்குக் கிடையாது. SA., SS. அமைப்புகளில் அவர்கள் வேலைபார்க்க வேண்டியதுமில்லை. சீக்கிரத்தில் 1,00,00,000 பேர்கள் சேர்ந்தனர்.

R. L. B. தனியே அமைந்ததும் அதற்கு 12,00,00,000 மார்க்ஸ் வரும்படி கிடைத்தது. இப்படி சேர்ந்தவர்களிடமிருந்து சமயத்திற்கேற்றவாறெல்லாம் பணம் வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

"R. L. B." என்று நீல வர்ணத்தில் எழுதப்பட்டும், ஸ்வஸ்திகா அடையாளமுள்ள வெள்ளி மெடல்களை ஒவ்வொருவனும் விலைக்கு வாங்கவேண்டும். இதனால் 2,00,00,000 மார்க்ஸ் அதிகம் கிடைத்தது. ஒவ்வொரு வார்டனும் தனது வீட்டின் முன் பதித்துவைக்க ஒரு தகடுத் துண்டையும் வாங்கவேண்டும். மெடல்களைவிட இதனால் அதிகப் பணம் கிடைத்தது.

### படையெடுப்புகளை அதிகம் கவனிக்கவில்லை.

இவர்கள் தேசம் பூரா சுற்றுப் பிரயாணம் செய்து, எரிகுண்டுகள் முதலியவைகளைப் பற்றி பிரசாரம் செய்து வந்தனர். ஏ. ஆர். பி. பயிற்சிகளும் செய்யப்பட்டன. எல்லாம் கொஞ்சச் செலவில்தான் செய்யப்படும். சொற்ப சாமான்கள்தான் ஸப்ளை செய்யப்பட்டன. பாதுகாப்பு ஸ்தலங்கள் கட்டப்படவில்லை. R. L. B. யிலுள்ளவர்கள் எதிரி படையெடுப்பு நேருமென்று எதிர்பார்க்கவில்லை.

R. L. B. இயக்கத்தைக்கொண்டு பணம் சம்பாதிக்கவே கோயரிங் நினைத்து வருகிறான். இதைப்போல் இதர ஏற்பாடுகளையும் செய்துவருகிறான். சுவாஸக் கருவிகளை வாங்கவேண்டுமென்று யாவரும் நிர்பந்திக்கப்பட்டு 5 மார்க்ஸ் வசூல் செய்யப்பட்டது. ஆனால் கருவி யாவருக்கும் கொடுக்கப்படுவதில்லை. ஆர் டிரேகர் (Auer and Draeger) கம்பெனியில் தயாரிக்கப்படும் இக்கருவி சரியாக இல்லையென்று யாவரும் சொல்லிவந்தனர். நல்ல மாதிரியை வாங்கவேண்டுமானால் வேறு 50 மார்க்ஸ் பணம் உபரியாகக்கொடுக்கவேண்டும்.

### கோயரிங் வார்த்தை நிலைக்கப்படுகிறது.

ஜெர்மனி பேரில் படையெடுப்புகள் ஆரம்பமானதும் தாத்காலிகமான சில போலி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உண்மையான வேலையிலீடுபட போதுமான சாமான்களும் மனிதர்களும் கிடைக்கவில்லை. பெரும்வகையான விமானத் தாக்குதல் நேர்ந்ததும், விமானத்தாக்குதல் நேராது என்று கோயரிங் சொன்னது யாவருக்கும் நினைப்புக்கு வந்தது.

நெருப்பு அணைக்கும் கோஷ்டி புதிதாக அமைக்கப்பட்டது. போலீஸ்
சிப்பாய்கள் இவர்
காரர்களைப்போலவும் இவர்கள் நடந்து கொள்ளுவார்கள்.

களுக்கு வந்தனம் அளிக்கவேண்டும். நெருப்பு அணைக்கும் கருவிகள் சரியானவைகளாக இல்லை. செக்கோஸ்லாவியாவிலிருந்து வந்தவைகளெல்லாம் மேற்கு பாகங்களுக்கு அனுப்பப்பட்டன. பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதல் காலங்களில் 200மைல் தூரத்திலிருந்தாலும் நெருப்பணைக்கும் போலீஸ் கோஷ்டியினர் அழைக்கப்படுகின்றனர். அதிலிருந்து உள்நாட்டுப் படை பிரயோஜனமில்லை என்று தெரிகிறது.

R. L. B-க்கு ஹிம்லர் தலைவனானான். அதோடு அதற்கு இருந்த கௌரவம் குலைந்தது. அதுவரை அந்த இயக்கத்தை தங்க முட்டையிடும் வாத்தைப்போல் கௌரவமாகவே நினைத்துவந்தனர்.

பொதுஜனங்களிடமிருந்து பணம் வசூலிப்பதற்காகவே R.L.B. ஏற்பட்டது. ஆனால் ஹிம்லர் வந்ததும் அவனது கொடிய முறைகளால் தங்க முட்டைகளை அதிகம் அடையலாமென்று நினைத்து வாத்தைக் கொன்றதைப்போல் ஆயிற்று.

---

## இகழ்வான சம்பவங்கள் நிறைந்த வாரம்.

---

சம்பவங்கள் நிறைந்த வாரங்களில் ஜூன் மீ 6-ம்தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் கடல் யுத்தத்தில் ஆகாயத்திலும், கடலிலும், கடலுக்கடியிலும் ஜப்பானுக்கு ஏராளமான சண்டைகள் நேரிட்டதென்று டெய்லி டெலிகிராப் பத்திரிகை தலையங்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அலாஸ்காவிலிருந்து ஜப்பான் வரையிலுமுள்ள தீவு வரிசைகளில் விமானத்தாக்குதல்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தந்த தாக்குதல்களில் பஸிபிக் சமுத்திரத்தில் மத்திய ஸ்தாபனமான மிட்வே தீவிலும், தாக்குதல் செய்யவேண்டுமென்று கோரப்பட்டிருந்தது. இத்தகைய தீரச்செயல்களுக்காக ஏராளமாக விமானப் படைப்பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. துருப்பேற்றிச்செல்லும் கப்பல்களையும், ஸப்ளைக் கப்பல் கூட்டங்களையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும் ஆஸ்திரேலியாவுக்கு அப்பால் நடமாடச்செய்ததும், ஸிட்னி துறைமுகத்திற்குள் சிறிய நீர்மூழ்கிகளைத் தாக்கச் செய்ததும் ஜப்பானின்பெரிய சூழ்ச்சிகளில் ஒன்று. அவர்களின் சூழ்ச்சிகள் அநேக ஆயிர மைல்களுக்கப்பால் திட்டம் செய்யப்பட்டிருந்தன. இம்மாதிரி நீர்மூழ்கிகளை அனுப்பியதைத்தான் டியேகோஸுயஸ் பகுதிக்கு விசேஷ நீர்மூழ்கிகள் அனுப்பியதாக ஜப்பானில் சொல்லப்படுகிறது.

ஆசைக்கோரளவில்லை. நடந்ததோ கொஞ்சம். ஆஸ்திரேலியாவிலுள்ள நேசதேசப்பாதுகாப்புப்படை ஜப்பானின் கப்பல் கூட்டங்களைத் துண்டித்துவிட்டது. அரை டஜன் நீர்மூழ்கிகளை அழித்துவிட்டது. டியேகோ ஸுயரஸ் பகுதியில் விசேஷ நீர்மூழ்கிகள் வந்து சேர்ந்ததைப் பார்த்தால் மடகாஸ்கரை அச்சு நாடுகளின் தளமாகச் செய்ய ஜப்பான் ஏற்பாடு செய்தது தெரியவரும். அந்த நீர்மூழ்கிகள் ஸப்ளைக் கப்பலிலிருந்து வந்தாலும் அல்லது தனிப்படைப் பகுதியாக வந்தாலும் பிரிடிஷார் மடகாஸ்கரில் இறங்குவதற்குமுன் அவை ஜப்பானிலிருந்து அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அவைகள் வந்துசேருவதற்கு தாமதமாகாமல் போயிருந்தால் அதிகச் சேதம் விளைவித்திருக்கும். இந்த ஒரு தடவையில்தான் ஜப்பானின் யுத்தப்போக்கில் காலதாமதமும், காலப்பிற்பாடும் ஏற்பட்டுவிட்டது.

மிட்வே தீவு திட்டத்திலும், ஏதோ பிசகு நேர்ந்துவிட்டது. சென்ற டிஸம்பர் மாதத்தில் கூவம், வேக் முதலிய எல்லைப்புறத் தீவுகள் ஜப்பானியர்





வசமான பிறகு இந்தச் சிறிய மிட்வே தீவானது ஜப்பானியரை எதிர்த்து வந்தது. இப்பொழுது ஆகாய விமானங்கள் தூக்கிச் செல்லும் கப்பல்களும், யுத்தக்கப்பல்களும், க்ரூயிஸர்களும் உதவியாகக் கொண்டு சண்டைசெய்த பெரிய ஜப்பானியப் படை பலத்தையும் மிட்வே தீவுப்படை தோற்கடித்துவிட்டது. ஜப்பானியர்களுக்கு நேர்ந்த விமான நஷ்டங்களும், படைப்பகுதிகளின் சேதமும் இன்னும் மதிப்பிடக் கூடவில்லை. இருந்தபோதிலும் தங்கள் துறைமுகங்களிலிருந்து 2,000 மைல்களுக்கப்பாலிருக்கும் மிட்வே தீவைக் கைப்பற்றிக் கொண்டு அங்கு தங்கள் கப்பல்களைக் கொண்டுவர எண்ணியே ஜப்பானியர்கள் இந்தப் போரை அவசியமாகக் கருதி சண்டை செய்தார்கள். மிட்வே தீவானது ஆகாய விமான தளம்தான். கப்பற்படை தளமில்லை.

ஆனாலும் அமெரிக்கர்கள் அதை உபயோகிக்காமல் ஜப்பானியர்கள் கைப்பற்றிவிட்டால் அட்மிரல் நிமிட்ஸன் கப்பற்படை பலம் குன்றிவிடும். ஜப்பானிய அரசாங்க ஸ்தாபனமும் பஸிபிக் பிராந்தத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸின் பலம் அதிகரித்து வருவதைப் பரிசோதிக்க விரும்பினார்கள். அமெரிக்க பலத்தை நாலா பக்கமும் சிதறடிக்கவும் விரும்பினார்கள். அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையோரம் தாக்குவதாக பயமுறுத்தினார்கள். கடல் மார்க்கம் ஜப்பானியர்களுக்கு உண்டாகும் வசதியை நம்பியேயிருக்கும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் கொள்கை என்னவென்றால், ஆபிரிக்காவிலிருந்து, ஆஸ்திரேலியா வரையிலும் சமுத்திரத்தில் நேரிட்டு அதிகரித்துவரும் இக்கட்டுகளைத் தடுத்தும், அதுபோல் பவளக் கடலிலிருந்து பேரிங் கடல்வரையிலுமுள்ள சமுத்திரத்திலும் இடையூறுகளைக் குறைத்தும், ஜப்பானியர்களுக்கு எதிராக அதிக பலம் ஓரிடத்தில் திரட்டப்படாமல் இருக்கும்படி செய்யவேண்டியதேயாகும்.

---

## பிரிடன் பொருளாதாரப் பிரச்னைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ளுகிறது.

(நார்மல் கிராம்ப் என்பவர் எழுதியது.)

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலமாகக் கிடைத்தது.)

பிரிடிஷ் கவர்ன்மெண்டின் வரவு செலவு கட்டம் சரியாக இருக்கிறதா அல்லது மோசமாக இருக்கிறதா என்று என்னை சிலர் சிலநாட்களுக்குமுன் கேட்டனர். எனது பதில் என்னவென்றால் சரியான வரவு செலவு திட்டப்படி ருஷ்யா, லிபியா, முதலியவைகளுக்கு டாங்கிகளும், கோலோன், எஸ்ஸன், ஜெர்மன் தொழிற்சாலைகள், இவைகளைத் தாக்க விமானங்களும் கட்டப்படுகின்றன என்றேன். அதிகமாக வரி விகிதங்களைப்போட்டாலும் வேலைக்காரர்களும், முதலாளிகளும் வேலைசெய்ய முடியாது. மிஸ்டர் பெவின் சமீபத்தில் சொன்னபடி யுத்த முயற்சி என்றால் பொதுமக்களைப் பொருக்காமல் எவ்வாறு இருக்குமென்றார். வரவு செலவு திட்டம் சரியாக இல்லாமல் இருந்தால் விலைவாசிகள் அதிகமாகி அதனாலும் ஜனங்களுக்கு அதிருப்தி ஏற்படும். ஆகவே நடுநிலையைக் குறிக்கக்கூடியபடி திட்டத்தைப்போட்டு பொருளாதார பிரச்னைகளை பல வழிகளில் தீர்த்துவந்தனர் இதன் சௌகரியத்தை, பொதுஜனங்கள் வெற்றியை முன்னிட்டு ஈடுபடுவதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

### கோலோன் தாக்குதலும் ஒரு பதில்.

சமீபத்தில் கோலோனை பிரிடிஷ் விமானங்கள் தாக்கியதிலிருந்தும் பிரிடிஷ் பொருளாதார திட்டம் சரியானதென்று தெரிந்துகொள்ளலாம். அதாவது

வேறுவிதமாக இருந்தால் தொழிலாளிகளும், முதலாளிகளும் மனப்பூர்வமாக ஈடுபட்டு கோலோன் தாக்குதலுக்கு லாயக்காக விமானங்களைச் செய்திருக்க முடியாது. மேலும் யுத்த சாமான்களை அதிகம் செய்வதென்றால் வேறு சில்லரை சாமான்களை அதிகம் உற்பத்தி செய்யமுடியாது. வேலை அதிகமாகச்செய்து அதனால் கூலி அதிகம் கிடைக்குமானால் அது வேலைக்காரர்களுக்கு விருப்பம்தான். டாங்கி முதலியவை இரட்டிப்பு மடங்கு செய்யப்பட்டால், துணிமணிகளும் இரட்டிப்பு மடங்கு செய்யப்படுமென்று நினைப்பது தவறாகும்.

இந்த விதமாகத்தான் யுத்தகாலத்தில் பொருளாதார பிரச்னை தீர்க்கப் படுகிறது. இதற்கு சாதகமாக மிச்சம் பிடிக்கும் இயக்கம் இருந்துவருகிறது. வேலைக்காரனுக்கு அதிகமாக பண வெகுமதி கொடுத்து அதன் ஒரு பங்கை யுத்தச் செலவிற்கு கொடுக்கச் செய்வது சாதகமான அம்சம். ஏனென்றால் வேறு சாமான்களின் ஸப்ளை அவ்வளவு அதிகம் இல்லாத இந்த சந்தர்ப்பத்தில் பணத்தை வைத்துக்கொண்டு செய்யப்போவது ஒன்றுமில்லை. பிரிடனில் இந்த ஏற்பாடு எவ்வாறு நடக்கறதென்று பார்ப்போம்.

### கொஞ்சம் மிச்சம்பிடிப்பது.

இதுவரை யுத்தச்செலவு சுமார் 9,00,00,00,000 பவுன். இதில் ஐந்தில் இரண்டு பங்கு வரி விதிதங்களால் கிடைத்தது. 1,50,00,00,000 பவுன அல்லது ஆறில் ஒரு பங்கு கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம் பிடிக்கப்பட்டதிலிருந்து கிடைத்தது. ஒவ்வொரு தெ-ழிறசாலையிலும், ஒவ்வொரு தெருவிலும் இம்மாதிரியான இயக்கம் இருக்கவேண்டும். நூற்றுக்கணக்கான பேர்கள் ஒவ்வொரு வாரத்திலும் மிச்சம் பிடிக்கும் ஸர்டிபிகேட்டுகளைக் கொடுத்தும், இதர விதமான கடன்களுக்காகவும் வசூல் செய்கின்றனர். எவ்வித சோதனை நிலையிலும் இவர்கள் வசூல் செய்யச் சொல்லுவார்கள். எதிரி விமானத்தாக்குதல் நேர்ந்துகொண்டிருக்கும்போதே இவர்கள் போவார்கள். சில சமயங்களில் வேலைக்காரர்கள் வாரச் சம்பளங்களிலிருந்து இதற்குக் கொடுக்கின்றனர்.

மிச்சம் பிடிக்கும் இயக்கம் மிக மும்முரமாக நடந்துவருகிறது. இதனால் வேலைசெய்யத் தகுந்த மனப்பான்மை ஏற்படுவதோடு விலைவாசிகளும் அதிகம் ஏறாது. வருங்காலத்திலும் உசிதமானபடி செலவு செய்யவும் ஜனங்கள் தெரிந்து கொள்ளுகின்றனர்.

### அதிகமாக மிச்சம்பிடிப்பது.

அதிகமாக மிச்சம் பிடிக்கும் விஷயத்தை மறக்கக்கூடாது. கம்பெனிகள் இவ்விஷயத்தில் ஈடுபட்டிருக்கின்றன. கம்பெனிகள் மிச்சப் பணத்தைச் செலவு செய்யமுடியாதென்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் இது சாத்தியமில்லையென்றால் கொஞ்சம் மிச்சம் பிடிப்பதும் சாத்தியமில்லையென்று பிரிடிஷ் கவர்ன்மென்டார் நினைக்கின்றனர். யுத்தம் ஆரம்பித்தது முதல் அதிக மிச்சம் பிடித்து 2,50,00,00,000 பவுன் கடன் கிடைத்திருக்கிறது.

இவைகளுடன் வட்டி விகிதங்களையும் சேர்த்தால் ஐந்தில் நாலு பங்கு கிடைத்துவிட்டது. இதனால் யுத்த முயற்சிக்கு ஒரு குறையும் ஏற்படவில்லை. பாக்கியுள்ள ஐந்தில் ஒரு பங்கு கிடைக்காததால் அதிக பாதகமில்லை.

---



# யுத்தத்தில் இந்தியப் படைகள்.

## முதலாவது பஞ்சாப் ரெஜிமெண்ட்.

## லிபியாவிலும், எரிட்ரியாவிலும் நடந்த சண்டைகளில் ஈடுபட்டிருந்தது.

(ஸர் பாட்ரிக் கேடல், C. S. I., C. I. E., (I. C. S. Retd.) என்பவர் எழுதியது.)

ஆபிரிக்காவில் நடக்கும் போர் முனைகளில் ஈடுபட்ட இந்தியப் பட்டாளங் கள் நல்ல புகழுடன் போரிட்டு வருகின்றன. அவைகளில் முதலாவது பஞ்சாப் ரெஜிமெண்டும் சேர்க்கப்பட்டிருந்தது. அதற்கு கௌரவத் தலைவர் பிரிடிஷ் சேனாதிபதி ஒருவர்.

இப்பட்டாளம் எரிட்ரியாவிலும், ஸிரியாவிலும் போர் புரிந்ததில் தங்கள் போர் திறமையைக் காட்டிற்று. அதனால் புராதனமாக அதற்கிருந்த கியாதியும் அதிகரித்தது.

1940-ம் வரு லிபியன் எல்லைப்புறத்திலிருந்த கிரேஸியானியுடைய அதிக எண்ணிக்கையுள்ள படைகளை நமது போரணி கவலைக்கு இடங்கொடுக்கும் விதமாக அநேக மாதங்கள் வரை மிரட்டித் தடுத்துவந்தது. அந்த அணியில் இந்த ஒரு பகுதியும் சேர்ந்தது. தாக்குதலில் அவை முன்னாலிருந்தன. அப்படி டிஸம்பர் மாதம் 9-ம் தேதி நடந்த தாக்குதலில் எதிரியின் படையை விரட்டி கிம்பிபு, ஸிடிபரானி முதலிய ஊர்களுக்குச் சென்று, அங்கு எதிரிகளைச் சித ரடித்து, சிறையிலகப்படும்படி செய்துவிட்டன.

பிறகு எரிட்டிரியன் எல்லைக்குச் சென்று அங்கு நடக்கும் போரில் கலந்து கொண்டது. எதிரித் துருப்புகளை கஸாலாவிலிருந்து கேரன் வரையிலும், பிரிடிஷ் துருப்புகள் துரத்தியடித்ததில் இப்பகுதியும் பங்கெடுத்துக் கொண்டது. இந்தப் பாய்ச்சலில் அகொர்டாட் (Agordat), பாரெண்டு (Barentu) என்ற இடங்களிலிருந்த பலமான இதாலிய ராணுவ ஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

கேரனில், மலைப்பாங்கான பிரதேசத்தில் அவைகள் சண்டையிட்டன. இந்தியாவின் எல்லைப்புறங்களில் சண்டையிட்டு நல்ல பயிற்சி பெற்றிருந்ததினால் இம்மாதிரி சண்டைக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தார்கள். "பிரி கேடியர் பீக்" என்று சொல்லப்படும் கேரன் பள்ளதாக்கு அருகாமையிலுள்ள அந்தத் தொடரின் உச்சஸ்தானத்தை அவர்கள் துப்பாக்கி முனைகள் கைபீரங்கி கள் இவைகளின் உதவியைக்கொண்டே இருமுறை கைபற்றினார்கள்.

### ஏழுவாரங்கள் ஒரே நிலையாக நின்றார்கள்.

உதவிப்படைகள் சரியான சமயத்தில் வர சாத்தியப்படாமல் போனதை முன்னிட்டு இருமுறை அவர்களுக்கு அதை விட்டுவிடும்படியான நிர்ப்பந்தம் நேரிட்டது. இருந்தாலும் ஆகாய விமானமூலம் அவர்களுக்கு உணவுப் பொருள்கள் ஸப்ளை செய்யவேண்டியிருந்தபோதிலும் அந்தத் தொடரை விட்டு அவர்கள் அகலவில்லை. கடைசியில் 7 வாரங்கள் சண்டைசெய்த பிறகுதான் உதவிப்படைகள் வந்து சேர்ந்தன. அதன் பிறகு அந்த இடத்தை மிக்க பலமாக முற்றுகைபோட்டு கைப்பற்றிக்கொண்டனர்.

ஸிரியாவில் இதைக்காட்டிலும் இன்னும் கடுமையான யுத்தம் நேர்ந்தது. இதாலியர்களைப் போல் விசேஷ பயிற்சி பெற்றவர்களும் அவர்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கைகொண்ட விஷி பிரெஞ்சு படையை அவர்கள் சந்தித்தார்கள்.

# நீங்கள் ஏன் பணத்தை மீதப்படுத்தவேண்டும்?

பணக்கணக்குப் பார்த்தால், நவீன யுத்தங்களினால் மிகவும் செலவு நேரிட்டுக் கொண்டிருக்கிறது என்று யாவருக்கும் தெரியும். இந்த வருஷத்தில் யுத்தப் பிரயத்தனத்துக்கு இந்தியா 133 கோடி ரூபாய் செலவு செய்கிறது. ஆனாலும் யுனைடெட் ஸ்டேட்ஸும் கிரேட் பிரிடனும் செலவழித்த தொகைகள் இதைக் காட்டிலும் இன்னும் வெகு அதிகம்.

நவீன யுத்தங்கள் ஏன் இவ்வளவு செலவு உள்ளதாக இருக்கின்றன? அதற்கு பதில் யாவரும் எளிதில் சொல்லி விடலாம். முன்னணியிலிருக்கும் போர் வீரனுக்கு அதிகச் செலவு செய்து முஸ்தீப்பு கொடுக்க வேண்டியிருக்கிறது. அவனுக்கு உதவியாக ஆகாய விமானங்களும், டாங்கிகளும், பலவகைப்பட்ட பீரங்கிகளும் அனுப்பவேண்டியிருக்கிறது. அவனுக்கு நல்ல உடையும், போர் திறமையுடன் இருப்பதற்கு நல்ல உணவும் கொடுக்கவேண்டியிருக்கிறது. மேலும் அல்லும், பகலும் நடக்கும் இந்த யுத்தத்தில் யுத்தப் பொருள்களின் விரயம் அதிகமாக இருக்கிறது. ஆதலால் அதற்குப் பதிலாக உடனுக்குடன் ஈடுசெய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டு வருகிறது. முன்னணியிலிருக்கும் வீரனுக்குப் பின்னால் அவனுக்கு ஸப்ளைப் பொருள்கள் கொடுப்பதற்கு ஏராளமாக யந்திர சாதனமும் வேண்டியிருக்கிறது. அதற்குப் பின்னால் நவீன சைனியத்திற்குத் தேவையான ஆயிரக்கணக்கான யுத்த தளவாடங்களைத் தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் உற்பத்தி செய்கிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதுவும் பணமும் இப்பொழுதே கொடுக்கவேண்டியிருக்கிறது. போர்வீரனுக்குத் தயாரித்துக் கொடுக்கப்படும் உடைக்கு வேண்டிய பருத்தியை விளைவித்துக்கொடுக்கும் குடியானவனுக்கும், எஃகு துண்டை துப்பாக்கி குழாயாகச் செய்யும் தொழிலாளிக்கும், கப்பற் துறைகளுக்கு இந்தச் சாமான்களை ஏற்றிச்செல்லும் மோட்டார் டிரைவருக்கும், உயிரை லக்ஷியம் செய்யாமல் கப்பலில் வேலை பார்க்கும் மாலுமிக்கும், அவரவர்கள் வேலையைச் சந்தோஷமாகச் செய்து வருவதற்கும் உயிர் வாழ்வதற்கும் அவ்வப்போதே சம்பளம் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. அவர்களுக்குக் கடன் சொல்ல முடியாது. அவர்களுக்குத் தேவையான பணத்தை அதிகத் துரிதமாகத் தேடுவதற்கு என்னென்ன வழிகள் உண்டு?

யுத்தச் செலவுக்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்க நான்கே வழிகள்தான் உண்டு. (1) குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிப்பவர்களின் பேரில் வரி விதிப்பது.

(2) குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள ஜனங்கள் தங்கள் வருமானங்களில் ஒரு பாகத்தை அரசாங்கத்தாருக்குக் கடனாகக் கொடுப்பது.

(3) யுத்தச் செலவுக்குத் தேவையான பணத்தை அரசாங்கத்தார் காகித நாணயமூலம் அச்சிடுவது அதாவது காகித நாணயத்தை அதிகப்படுத்துவது.

(4) மற்றொரு தேசம் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள ஜனங்களுக்கு இனாமாகவோ, கடனாகவோ, அல்லது அதன் சொத்துக்களை கட்டனுக்கு வாங்கிக் கொண்டு தொகையைக் கொடுத்து உதவுவது. இந்தியாவில் நடக்கும் யுத்தச் செலவின் ஒரு பாகத்தை ஐக்கிய அரசாங்கம் செய்து வருகிறது. இன்னும் யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்கத்துடன் செய்துகொண்ட குத்தகைக் கடன் மசோதாப்படி யுத்தப்பொருள்கள் அனுப்பிவருவது.

ராஜீயப் போக்கிலும், நிதி நிர்வாகத்தின் தன்மையிலும் நாலாவது வகைக்கு ஏற்பாடுகள் ஓரளவு மட்டில்தான் செய்யமுடியும். யுத்தச் செலவிற்கு ஒரு



பாகத்தை உள்நாட்டு நிர்வாக நிதியிலிருந்துதான் கொடுக்கவேண்டும். அப்பொழுது எந்த முறையை அனுசரித்தால் நலம் என்பது தோன்றும்.

மேலே மூன்றாவதாகச் சொல்லப்பட்ட முறை சரியல்லவென்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஏன் அப்படி? ஒரு தனிப்பட்ட நபர் வரிவிதிக்கப் பட்டாலோ, அல்லது அவன் அரசாங்கத்தாருக்குக் கடன் கொடுத்துதவும் போதோ, ஏற்கனவே அவன் வாங்கிக் கொண்டிருந்த சாமான்களை அத் தொகையைக் கொண்டு இப்பொழுது வாங்க முடியாமல் போய்விடுகிறது. அரசாங்கத்தில் அப்பணத்தைக் கொடுத்தால் அதையோ அல்லது அதற்கு பதிலாக வேறு சாமன்களையோ அரசாங்கம் வாங்கி உபயோகிக்க ஹேதுகரமாயிருக்கிறது. ஆனால் தனிப்பட்ட நபர் பணம் மீதப்படுத்தாமலும், அல்லது வரி விதிக்கப்படாமலும் இருந்தால், அரசாங்கம் காகித நாணயத்தை அதிகப்படுத்த வேண்டிவரும். அதனால் என்ன பயன் சம்பவிக்கும்? அப்படியானால் அரசாங்கத்தாருக்குத் தேவையான பொருள்களை வாங்க மற்ற சாமான்கள் வாங்குபவர்களுடன் அரசாங்கம் போட்டிபோட வேண்டியிருக்கும். இதன் காரணமாக விலை அதிகப்படுகிறது. முடிவில் வரி வசூலிக்கப்படுவதிலும் அல்லது அரசாங்கத்திற்குக் கடன் கொடுப்பதிலும் தனிப்பட்ட நபர்களுக்கு எவ்விதம் பொருள்களையோ அல்லது மற்ற சாதகங்களையோ அடைய முடியாமல் போய்விடுகிறதோ, அதேமாதிரியாகவே இம்முறையில் பொதுமக்களுக்கு அனுகூலமில்லாமல் போய்விடுகிறது. இவ்விதம் பார்ப்பதால் வித்தியாசம் அதிகமில்லாமல் தோன்றினாலும், உண்மையில் வேறு எல்லாவகையிலும் அதிக வித்தியாசங்கள் இருக்கின்றன. அதனால்தான் காகித நாணய மாற்று முறை யுத்த நிர்வாக நிதிக்கு உகந்ததில்லை என்று சொல்லப்படுகிறது.

முதலாவது நிருதியாக வருமானங்களைக்கொண்டோ அல்லது விலைவாசிகளின் மாறுதலுக்குத் தக்கவாறு வருமானத்தை உபயோகிக்க முடியாமல் இருக்கிறவர்களுக்கும், காகித நாணயமாற்று அநீதியாகவும், மறைமுகமாகவும் வரி விதிப்பது போலாகும். பொருள்கள் வாங்குவதற்கு ஸர்க்காருக்கு ஏராளமான நிதியிருக்கிறது. பொருள்கள் வாங்குவதில் ஸர்க்கார் போட்டி போட்டால் விலை அதிகமாய்விடுகிறது. அப்படி விலைவாசிகள் அதிகமானால் நிருதியாக வருமானமுள்ளவர்கள், அதிக வரி விதிக்கப்பட்டவர்களுக்குப் பணத்தட்டு ஏற்படுவது போலவே, குறைவாகத்தான் தேவையான பொருள்கள் வாங்கக்கூடும். சரியான முறையில் வரி விதிப்பதில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்குக் குறைவான வரி ஏற்படும். அதனால் காகித நாணயமாற்றில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு அபரிமிதமான வரி போட்டதாகும்.

இரண்டாவதாக யுத்த நிதிக்கு காகித நாணய மாற்றும் முறைகளை அனுசரித்தால் அவற்றை வரவர அதிகரிக்கச் செய்யவேண்டிவரும். முதலில் கொஞ்சம் ஏற்படுத்தினால் அதற்குப் பிறகு அதைக்காட்டிலும் அதிகமாக ஏற்படுத்த வேண்டும். அதற்குக் காரணம் சர்வ சாதாரணமானதுதான். அரசாங்கத்தார் மற்றபடி பொருள்கள் வாங்குபவர்களுடன் போட்டி போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். விளைபொருள்களில் பாதியை அரசாங்கத்தார் விலைக்கு வாங்கிக்கொள்வதினால் மற்ற பாதி சாமான்களின் விலை இரண்டு மடங்காகிறது. ஒரு ரூபாய்க்கு விற்ற சாமான் இப்பொழுது இரண்டு ரூபாயாக இருக்கிறது. இன்னும் பாக்கியிருக்கும் பாதியை வாங்குவதாயிருந்தால் முந்தியைக் காட்டிலும் இன்னும் இரண்டு மடங்கு அதிகமாகச் செலவு செய்யவேண்டிவரும். இம்மாதிரியாகவே விலை மறுபடியும் இரட்டித்தால் முந்தின தொகையைக் காட்டிலும் 4 மடங்கு அதிகமான தொகை காகித நாணயங்களாக இருக்கவேண்டும். இம்மாதிரி நிலைமை ஏற்பட்டால் அரசாங்கத்தாருடன் ஜனங்கள் போட்டிபோட முடியாமல் போய்விடும், விலைவாசிகள் அதிகப்பட அதிகப்பட அரசாங்க நிதி நிர்வாக நிலைமையும் அதிகம் சீர்குலைந்துபோய்விடும். ஏனென்றால் இம்மாதிரி நீண்ட

காலம் அதிகச் செலவின்பேரில் யுத்தம் நடந்தால், ஏராளமாக காகித நாணயங்கள் ஏற்படவேண்டும். அதன் பயனாக காகித நாணயத்திற்கே விலை மதிப்பில்லாமல் போய்விடும்.

ஆகையால் இம்மாதிரி அபாய முறையை அனுஷ்டிக்காமல் யுத்தத்திற்கு வேண்டிய பணத்தை அரசாங்கத்தார் வரி விதிப்பதின் மூலமும், கடன வாங்குவதின்மூலமும்தான் தேடவேண்டும்.

இந்த இரண்டு முறைகளிலும் அரசாங்கத்துக்கும், தனிப்பட்ட நபருக்கும் போட்டியில்லை. ஒரு தனிப்பட்ட நபர் வரி விதிக்கப்பட்டாலோ, அல்லது அவன் அரசாங்கத்துக்குக் கடன் கொடுத்தாலோ அவன் தனக்காகச் செலவு செய்து கொள்வதை நிறுத்திக்கொள்ளுகிறான். யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவையான பொருள்களை, அரசாங்கத்தார் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமிருப்பதால், அவற்றை அவன் போட்டியில் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. ஆனால் யுத்தச் செலவு பூராவும் அதிக வரி விதிப்பதின்மூலம் ஏன் ஈடு செய்யக்கூடாது?

சிறிதுகாலம் யுத்தம் நடந்தாலும் அல்லது அதிகச் செலவு நேரிடாமலிருந்தாலும், அச்செலவை வரி வசூலிப்பதின்மூலம் ஈடு செய்யமுடியும். ஆனால் இப்பொழுது நீண்டகாலம் அதிகச் செலவின்பேரில் நடக்கும் இந்த யுத்தத்தில் வரையறும்பில்லாமல் வரியை அதிகரிக்கமுடியாது. அப்படி வரியை அதிகப்படுத்தினால், நூதனமாகத் தொழில் செய்வதோ அல்லது சிக்கன முறையில் தொழில் நடத்துவதோ தடைப்பட்டுவிடும். மேலும் பொதுமக்களின் சக்தியை ஒத்தே வரி போடவேண்டும். ஒரே வகுப்பிலுள்ளவர்களுக்குப் போடப்படும் வரியில் அதிக வித்தியாசம் இருக்கக்கூடாது. அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி வரி விதிக்கவேண்டும். சிக்கன முறையிலும், பரித்யாகம் செய்து சேகரித்து வைத்திருக்கும் பொதுமக்களின் பொருளை கடன் வாங்குவதினால் யுத்த நிர்வாகத்திற்கு வேண்டிய பணத்தை சேகரிக்கமுடியும். எவ்வகையிலும் சாமர்த்தியமுள்ள பொதுமக்கள் வருங்காலத்தில் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் வேண்டிய பொருளை சேமித்துவைத்தும், தங்கள் நிலைமையை அபிவிருத்தி செய்ய விரும்புகிறார்கள். இம்மாதிரி சேமித்துவைத்திருக்கும் பொருள்களைப் பொதுமக்கள் அரசாங்கத்தாருக்கு கடன் கொடுப்பதின் மூலம், யுத்த நிர்வாகத்திற்குத் தேவையான பணத்தை செலவு செய்யக்கூடும். ஆகையால் பொதுமக்கள் பெரும் பொருள்களை மீதப்படுத்துவதால் வருங்காலத்தில் தங்களுடைய நிலைமையை பாதுகாக்கவும், யுத்தப்பிரயத்தனத்தில் உபயோகிக்கவும் ஆக இருவகை சாதனங்கள் உண்டு

இதுமாத்திரம் அல்ல. யுத்தகாலத்தில் அதிகம் செலவு செய்யாமல் ஒருவன் இருந்தால் அப்பணத்தைக்கொண்டு வேறு வழியில் செலவு செய்து கொள்ளலாம். முந்திச் சொன்னபடி நவீன யுத்தங்களுக்கு அரசாங்கத்தாருக்கு எல்லாவித பொருள்களிலும் ஏராளமான ஸப்ளை தேவையாயிருக்கிறது. ஆனால் எல்லாவித ஸப்ளைப் பொருள்கள் மிகவும் குறைவாகயிருக்கிறது. இப்பொழுது ஒருவன் தன் பணத்தைச் செலவு செய்துவிட்டால், பொருள்களின் விலை அதிகமாக இருப்பதால் அதனால் பின்னால் கிடைப்பதைக்காட்டிலும் குறைவான சாமான்களையே அவன் பெறுகிறான். மேலும் அவன் செலவு செய்வதில் அரசாங்கத்தாருக்கும் அதிகம் செலவாகிறது. தானும் பொருள்களைச் சேகரிப்பதில் செலவு அதிகம் செய்யவேண்டியிருக்கிறது. மேலும் விலை உயரும்பொழுது சாமான் வாங்குவது வர்த்தகத் தொழிலுக்குத் உகந்தது அல்ல. இத்துடன் இப்பொழுது செலவு செய்யாமல் அதே பணத்தை வைத்துக்கொண்டு வருங்காலத்தில் வாங்கினால் அதிகமாக சாமான்கள் வாங்கலாம்.

ஏற்கனவே சொன்ன காரணங்களை விட மீதப்படுத்துவதற்கு விசேஷ காரணம் ஒன்று இருக்கிறது. இப்பொழுது காலக்ஷேபத்திற்கு வேண்டிய செலவு அதிகரித்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் அதுபோல் சம்பாத்தியமும் அதிக



மாயிருக்கிறது. யுத்தத்திற்கு முன் இருந்ததைக் காட்டிலும் அனேக ஜனங்கள் நல்ல நிலைமையிலிருக்கிறார்கள். ஆனால் யுத்தம் முடிந்த பிறகு யுத்த நிமித்தமாக நடக்கும் வேலை மும்மரமும், அதற்காக வேலைக்கு அமர்த்தப்படுவதும் குறையக் கூடும். எந்நிலைமையிலும் யுத்தம் முடிந்து சமாதான நிலைமை ஏற்படும் வரையில் வேலையும் சம்பாத்தியமும் குறைந்துவிடும். இப்பொழுது மீதப்படுத்தி வைத்துக்கொண்டால்தான், வரப்போகும் வருமை காலத்திற்கு ஈடுசெய்து கொள்ள முடியும். இப்பொழுது விலை அதிகமாக இருக்கும்பொழுது செலவு செய்வது எப்படி சிக்கனமில்லாததோ அதுபோலவே வருங்காலத்தில் விலை குறைவாக இருக்கும்பொழுது செலவு செய்வது மிகவும் சிக்கனமாக இருக்கும். யுத்த நிலைமை மாறி சமாதானம் ஏற்படும் வரை அக்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஏற்படக்கூடிய கஷ்டத்தைத் தடுக்க இப்பொழுது மீதப்படுத்தி வைத்து அப்பொழுது செலவு செய்வதுதான் யாவரும் விரும்பத்தக்கது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

### பிரஸங்கம் 101—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஜூன் | ...27, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 28, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு | ... ,, | 6.30 |
| | 29, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... ,, | 6.30 |
| | 30, செவ்வாய்க்கிழமை | ராமச்சந்திரபுரம் | ... ,, | 6.00 |
| | | ராயவரம் | ... ,, | 6.30 |
| ஜூலை | ... 1, புதன்கிழமை ... | மழையூர் | ... ,, | 6.00 |
| | | காம்பக்குடி | ... ,, | 6.30 |
| | 2, வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... ,, | 6.00 |
| | | ஏம்பல் | ... ,, | 6.30 |
| | 3, வெள்ளிக்கிழமை ... | குழிபிறை | ... ,, | 6.00 |
| | | செவலூர் | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் 102—(4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 4, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.30 |
| 5, ஞாயிற்றுக்கிழமை. | கீரப்பழனி | ... ,, | 6.00 |
| | ஆவூர் | ... ,, | 6.30 |
| 6, திங்கட்கிழமை ... | காரையூர் | ... ,, | 6.00 |
| | இடையாத்தூர் | ... ,, | 6.30 |
| 7, செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... ,, | 6.00 |
| | கிள்ளனூர் | ... ,, | 6.30 |
| 8, புதன்கிழமை ... | கீரனூர் | ... ,, | 6.00 |
| | காஞ்சூர் | ... ,, | 6.30 |
| 9, வியாழக்கிழமை ... | வடவாளம் | ... ,, | 6.00 |
| | செம்மட்டிவிடுதி | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—30-6-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் ஜூலை 4உ [ந. 102

பிரஸங்கம் CII.

## பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளும், மற்ற உலகமும்.

ஆக்ஸ்போர்டு மாணவர் சங்கத்தின் முன்பாக இந்தியா மந்திரி மிஸ்டர் L. S. அமெரி செய்த பிரசங்கம்.

('19-வது நூற்றாண்டும், அதன் பிறகும்' என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

### எதற்காக நாம் சண்டையிடுகிறோம்.

நமது யுத்த நோக்கங்களைப்பற்றி விஸ்தாரமாகச் சர்ச்சை செய்வதற்கு இது சமயம் அல்ல. வெற்றி கிடைப்பதற்கு முன் பலவிதமான கஷ்டங்களை நாம் அநுபவிக்க வேண்டிவரும். ஆகவே நமது முயற்சிகளெல்லாம் கஷ்டங்களிலிருந்து சமாளித்து வரும் விஷயத்திலேயே ஈடுபட்டிருக்க வேண்டும். இருந்தாலும் சில பொதுவான கேள்விகளை நாமே கேட்டுக்கொண்டு அவைகளுக்குத் தகுந்த மறுமொழிகளையும் கொடுப்போம். எதற்காக நாம் சண்டையிடுகிறோம்? எதை எதிர்த்து நாம் போராடுகிறோம்? இந்த யுத்தம் முடிந்ததும் அதன் முடிவு எவ்வாறு நீடித்திருக்கும்? என்பவை சில பெரும்படியான கேள்விகளாகும்.

### ஸ்வதந்திரத்திற்காகப் போராடுகிறோம்.

பொதுவாகச் சொல்லுகையில் ஸ்வதந்திரம் பெறவேண்டுமென்றும், வலியார்களிடம் வசப்படாமல் அந்தந்த நாடுகளுக்கு ஏற்றவாறு பத்திரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும், நினைப்பது, பேசுவது, அரசியல் திட்டம் முதலியவைகளில் ஸ்வதந்திரம் பெறுவதற்கும், மத சம்பந்தமான ஸ்வதந்திரத்தை அடைவதற்கும் நாம் சண்டைசெய்கிறோம். ஆகவே இவ்வித சண்டையில் நம்முடன் தோளோடு தோள் கொடுத்து ஸ்வதந்திரத்தை விரும்பும் பல நாடுகள் இருக்கின்றன. அதோடு நமது வாழ்க்கையில் அதிகப் பற்றுதல் கொண்டும், இங்கிலாந்து, குடியேற்ற நாடுகள் முதலியவைகளின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தவாறு ஒரு ஸ்வதந்திரத்தையடையவேண்டுமென்றும் நாம் சண்டை செய்கிறோம் என்று சொல்லுவது பொருத்தமானதாகும். இங்கிலாந்து எவ்வித ஸ்வதந்திரத்தைப் பெரிதாக நினைத்துக்கொண்டிருக்கிறதோ அதே ஸ்வதந்திரத்தைத்தான் குடியேற்ற நாடுகளும் கருதுகின்றன. நாம்

விரும்பும் ஸ்வதந்திரம் கேவலம் வாய்மொழிகளில் மாத்திரமல்ல, அல்லது ஸ்வதந்திரத்தை சம்பாதித்துக் கொடுப்பதாகச் சொல்லி ஜனங்களை ஏமாற்றி அவர்களின் ஓட்டுச் சங்கியை எடுப்பதற்காகவுமல்ல. நமது ஸ்வதந்திரம் ஜீவனுடன் கூடியிருக்கிறது. பல நூற்றாண்டுகளாக இருந்துவரும் பழக்கத்தையும், மனப்பான்மையையும் உட்கொண்டிருக்கிறது. எவ்வளவோ நூற்றாண்டுகளுக்குமுன் ஏற்பட்ட நார்மன் சட்ட திட்டங்களை (Norman Law) அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவ்வித சட்ட திட்டங்கள் மாக்னா கார்டா (Magna Charta) என்ற சாஸனத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறபடி ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவே ஏற்பட்டது. இவ்வித சட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு நமது ஸ்வதந்திர அரசாங்கம் விருத்தியடைந்திருக்கிறது. இந்த அரசாங்கம் நாட்டில் வழங்கும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ளும். ஜனங்களின் அனுமதியில்லாமல் அந்த சட்டதிட்டத்தில் ஒருவித மாறுதலையும் செய்யமுடியாது. இவ்வித கொள்கைகளைத்தான் பிரிடிஷ் மக்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்றிருக்கின்றனர். அடிப்படையான அம்சத்தையும், விருத்தியடைந்த அம்சத்தையும் எடுத்துக்கொண்டு அயல் நாடுகளுக்குச் சென்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஸ்வதந்திர அரசாங்கம் இல்லாத சில இடங்களில அடிப்படையான நீதி முறை, ஸ்தாபிக்கப்பட்டும், பின்னாடி விருத்தியடையக்கூடிய சுய ஆட்சியும், பிரதிநிதி ஆட்சியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

## குடியேற்ற நாட்டுக்கொள்கை.

இந்த வியாசத்தின் தலைக்குறிப்பில் 'குடியேற்ற நாடுகள்' என்று போடப்பட்டிருக்கிறது. இவ்வித வார்த்தையைப் போடும்போது 'பிரிடிஷ் சாம்ராஜ்யம்' என்ற அழகிய பழைய வார்த்தையைப் போடுவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு இப்புதிய வார்த்தையை நான் போடவில்லை. ஆனால் 'குடியேற்ற நாடு' என்ற பதம்தான் சாம்ராஜ்யத்திலுள்ள சுய ஆட்சி பொருந்திய நாடுகளின் ஒற்றுமையான அம்சத்தைத் தெரியப்படுத்துகிறது. மேலும் உலகத்தின் வருங்காலத்தைப்பற்றி நமது அபிப்பிராயத்தை நன்றாகத் தெரியப்படுத்துகிறது. மேலும் இங்கிலாந்துக்கும், குடியேற்ற நாடுகளுக்குமுள்ள சம்பந்தத்தைத் தெரியப்படுத்துவதோடு அவ்வித சம்பந்தத்தின் விசேஷ அம்சத்தையும் தெரியப்படுத்துகிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைத் தவிர இதர பாகங்களிலும் சிறிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஸ்வதந்திரத்துடன் இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ராஜரீக முறைகளைத் தள்ளுபடி செய்து ஒரு பொதுவான புதிய அரசாட்சிக்கு உட்பட்டிருக்கின்றன. ஆக இந்த முறை சரியானதென்றே யாவரும் நினைக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த சிறிய நாடுகள் ஒன்றுக்கொன்று சமீபத்தில் இருக்குமிடங்களில் மிகவும் நன்றாகவே நடந்துகொண்டும் வருகின்றன. இவ்வளவு சௌகரியங்களிருந்தாலும், நாடுகள் தூர தூரமாக அமைந்திருந்தாலும், வேறுபட்ட பொருளாதார நிலைமையாலும், அதிகமான தேசீய உணர்ச்சியாலும், பலவித சிருங்கலைகள் உண்டாகின்றன. உதாரணமாக கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளோடு நியூ பவுன்லாந்தும் நியூஸிலாந்தும் சேரவில்லை. என்னுடைய பால்யத்தில் சிலர் எல்லா நாடுகளும் அடங்கிய ஸர்வ சாம்ராஜ்யம் என்ற கொள்கைகளைச் சொல்லியும் வந்தனர். உண்மையில் நாம் ஒரு விதமாக இருந்து வருகிறோம். பல நாடுகளை ஒன்று சேர்த்துக்கொண்டு சக்ரவர்த்திக்கு உட்பட்டு நடந்துவருகிறோம். இதுவே நமது கொள்கைகள், பழக்க வழக்கங்கள் இவைகளின் ஒற்றுமைக்கு அடையாளமாக இருக்கிறது. அப்படியிருந்தும் அவரவர்களின் விருப்பப்படி பந்தங்கள் ஒன்றுமில்லாமல் தினசரி வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறோம். ஆக பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடு என்பது யாவருடைய க்ஷேமத்தை முன்விட்டும் பத்திரத்தை முன்விட்டும் ஒன்று சேர்ந்த ஸ்வதந்திர சங்கமாகும். இவ்வித ஒற்றுமை நீடித்திருக்குமா என்பதும், ஒருவித அரசியல் அமைப்புமில்லாத இத்திட்டம் யுத்த காலத்திலோ, பிறகு சமாதானம் வந்த பிறகோ நிலைத்திருக்குமா என்ற விஷயமும் பின்னாடித்தான் தெரியவரும். அப்ரஹாம்லின்கன் சொன்னபடி இந்தப் பெரும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா பிரிடிஷ் குடியேற்ற நாடுகளும் வெகுகாலம் நீடித்திருக்குமென்று நிச்சயம் சொல்லலாம்.



## எதை எதிர்த்துப் போராடுகிறோம் ?

இந்த பிரிடிஷ் குடியேற்ற நாடுகள் எதை எதிர்த்துப் போராடுகின்றன? ஆக்கிரமணம், அதிகார ஆசை, மிருகத்தன்மை, கொடுமை, கிருஸ்துவ நாகரீகத்திலுள்ள கொள்கைகளை மறுப்பது, மதம், தர்மம், முதலியவைகளினால் விருத்தியடைந்த நாகரீகத்தை ஒழிப்பது, முதலிய விஷயங்களில் ஈடுபட்டவர்களை எதிர்த்துப் போராடுகிறோம். ஆனால் இக்காரியம் சுலபமானதல்ல. அதர்மத்தை மாத்திரம் எதிர்த்து சண்டை செய்தால் நமக்கு இவ்வளவு சிரமம் ஏற்படாது. உலகப் புரட்சியை எதிர்த்து சண்டை செய்கிறோம். இவ்வித புரட்சியானது விசித்திரமாகத் தோன்றி யாவற்றையும் அழிப்பதில் முயற்சி கொண்டிருக்கிறது. ஆங்காங்கு சில புரட்சி ஸ்தலங்கள் ஏற்பட்டு சிற்சில தேசீய நோக்கங்களை மாத்திரம் முக்கியமாகக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் உலகம் பூராவும் பரவிவருகிறது. நாம் எதிர்த்துப் போராடும் இப்புரட்சியை அரசியல் புரட்சியென்றும், கைத்தொழில் புரட்சியென்றும் சொல்லலாம். மற்ற புரட்சிகளைப்போல் அரசியல் புரட்சி என்பது புஸ்தகங்களைத் தானாகப்படித்து அபிப்பிராயம் கொள்ளுவதாலும், சொற்பொழிவுகளைக் கேட்பதாலும் ஏற்படக்கூடியது. கொஞ்சம் கொஞ்சமாக குதர்க்கமான வியாக்யானங்களைச் செய்துகொண்டு சர்வதேசங்களுக்கும் பரவுகின்றது. நான் சொல்லும் இவ்வபிப்பிராயத்தை நன்றாகத் தெரிந்துகொள்வதற்கு 150 வருஷங்களுக்கு முன்பு நடந்த பிரெஞ்சுப் புரட்சியை நினைத்துக்கொள்வது நலம். முதலில் சாவதானமான நிலைமையில் ஆரம்பித்து, பிறகு உக்கிரமான முறைக்கு மாறிவிட்டது. இதற்குக் காரணமாக பிரெஞ்சுக் கவிகளும், நிபுணர்களும் காரணவாதம், (Rationalist) தனிப்பட்ட கொள்கை (Individualist) முதலியவைகளைப்பற்றி விஸ்தாரமான கிரந்தங்களை எழுதியிருந்தார்கள். பிரெஞ்சுப் புரட்சியின் அமளி ஒழிந்ததும், கௌரவமான (Liberalism) பெருந்தன்மையுள்ள கொள்கைகள் ஏற்பட்டன. இந்த சந்தர்ப்பத்தில் காரணவாதம், தனிப்பட்ட கொள்கை இவைகளை எதிர்த்ததால் ஏற்பட்ட மாறுதலாலும் ஹெகல் (Hegel) என்பவரின் வேதாந்த தத்துவங்களாலும், சரித்திரம், சரீரம், இவைகளில் ஏற்படக்கூடிய மாறுதலாலும், சமூகத்தின் தன்மையே புதுவிதமாக அமைந்தது. புராதனமான பழக்க வழக்கங்களில் ஒரு பிராதான்யமும், கோவில், குளம், போன்ற மத அடையாளங்களின் முக்கியத்துவமும், அனுபவத்திற்கெட்டாத வெட்டிப் பேச்சின் பயனற்ற தன்மையும் நன்றாகப் புலப்பட்டன. ஐரோப்பாவில் லிபரல் கொள்கைகளைக் கொண்ட ஜனநாயகங்களுக்கும் சமரச உரிமையைப் பிரதானமாகக் கொண்ட நாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை ஏற்படாததால் ஏகாதிபத்திய ஆட்சிகள் பல கிளம்பின. பலமில்லாதவர்களை அடக்கி, காட்டுமிராண்டிகளில் காணக்கூடிய பலிஷ்டர்களின் ஆட்சி கிளம்பியது. பிரஷ்யா தேசத்து ராணுவ சம்பிரதாயத்தையும் விசித்திரமான ஜாதி, மதக்கொள்கைகளையும் சேர்த்துக்கொண்டு ஏற்கனவேயடைந்த அவமானமான தோல்வியை ஈடுசெய்வதற்கான நோக்கத்துடனும், வேலையில்லாத் திண்டாட்டம் முதலிய தீங்குகளை ஒழிப்பதற்காகவும் ஜெர்மன் புரட்சி ஆரம்பித்தது. இதற்கு மூலகாரணமாக ராபஸ்பீரி (Robespierre) நெபோலியன், இருவர்களையும் ஒன்றாகச் சேர்த்து செய்யப்பட்டவன் போலுள்ள அடால்ப் ஹிட்லர் தான். இந்தப் புரட்சியைப்பற்றி சொல்லும்பொழுது தொழில் சம்பந்தமான புரட்சியையும் சேர்த்துச் சொல்லவேண்டியிருக்கிறது. பிரெஞ்சுப் புரட்சி ஏற்படும்போது சாமான்களின் உற்பத்தி, போக்குவரவு முதலியவைகளில் புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் திசைகாட்டும் கருவியும், அதன் உபயோகத்தினால் அமெரிக்காவும்தான் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்குப் பிறகு (Industrial Revolution) தொழிற்சாலை புரட்சி ஏற்பட்டது. அதன் பயனாக உலகத்தில் பல பாகங்களிலுள்ள மூலப்பொருள்களைக் கப்பல், ரயில்வே முதலியவைகளின் உதவியால் பலவழிகளில் உபயோகப்படுத்த முடிந்தது. இவைகளின் பயனாக சென்ற நூற்றாண்டின் கடைசியில் பணக்கார வியாபாரிகளின் கூட்டம் ஸ்தாபிக்கப்பட்டது. புதிதாக ஏற்பட்ட தொழில் புரட்சியின் பயனாக ஏராளமான சாமான்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன. விமானம், ரேடியோ முதலியவைகளின் உபயோகம் நன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டது. மின்சாரம்

வேண்டுமானால் அதற்காக மூலப்பொருள்களின் உற்பத்தி அதிகம் இருக்கவேண்டும்.
எந்த தேசம் பெரிதாக இருக்கிறதோ அந்த தேசத்திற்குத் தான் சிரமம் குறைவு.
அங்கு வசிப்பவர்களுக்கும் அதிக ஸ்வதந்திரம் கிடைக்கும். உதாரணமாக
அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், அதன் விஸ்தீர்ணமும் விளைபொருள்களின்
உற்பத்தியும் மிக அதிகம். அதனாலேயே அதன் ஸ்வதந்திரத் தன்மையை நிலை
நாட்டிக்கொள்ளமுடிகிறது.

### ஒத்துழைப்பதும், ஆக்கிரமணமும்.

இந்த யுத்தத்திற்கு முன்பு தன்னால் நிலைநாட்டிக்கொள்ள முடியாத சிறு
நாடுகளை ஒன்று சேர்ப்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதற்காக
ஹிட்லரின் புதிய திட்டத்தின் படிக்கும், ஜப்பானின் பொது க்ஷேம திட்டத்தின்
படிக்கும் ஆக்கிரமண முறை கையாளப்படுகிறது. இதைத்தவிர சம அந்தஸ்து
கொடுத்து ஒத்துழைப்பது என்ற மற்றொரு முறையும் இருக்கிறது. பின்னால்
சொல்லப்பட்ட ஒத்துழைப்பு முறையால் ஒரு கட்டுப்பாடான ஒற்றுமையை ஸ்தா
பிக்க முடியும். அல்லது குடியேற்ற நாடு கொள்கையையாவது ஸ்தாபிக்க முடி
யும். அதைத்தான் நாம் ஸ்தாபித்து வந்திருக்கிறோம். யுத்தத்திற்குப் பின்பு
பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் தன்மை தான் மிஞ்சியிருக்கும். வருங்காலத்தில்
அதற்கு ஒரு நாளும் அழிவு கிடையாது.

இவ்விதம் அது நிலைத்திருக்கவேண்டுமானால் அதற்கு சில நிபந்தனைகளை
ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். முதலாவதாக அதில் சேர்ந்துள்ள நாடுகள்
ஒவ்வொன்றும் தன்னுடைய உள்நாட்டு வாழ்க்கையை பலமாக அமைத்துக்கொள்ள
வேண்டும். நாமும் நம்து சமூகம், பொருளாதார வாழ்க்கை இவைகளில் சில
சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் நமது ஸ்வதந்திரத்
துக்கும், தேசிய வாழ்வுக்கும், அதில் சேர்ந்துள்ளோரின் நன்மைக்கும் ஒரு
தீமையும் ஏற்படாது. எல்லாக் குடியேற்ற நாடுகளுக்கும் இதுதான் வழி,
இந்தியாவிற்கும் இதுதான் வழி. இந்தியாவின் வருங்கால பிரச்னைகளின்படி
வாழ்க்கையின் திட்டத்தை உயர்த்திக்கொண்டு சரீர சௌக்யத்தையும் அதிகாரத்
தையும் பெறவேண்டும். நல்ல உணவு, தொழிற்சாலை முன்னேற்றம், விவசாயத்
தில் முன்னேற்றம், படிப்பு இவைகளே யுத்தத்திற்குப் பின்பு கவனிக்கவேண்டிய
விஷயங்களாகவும். இரண்டாவதாக யுத்தத்தில் நாம் தனியாக நிலைத்திருப்
போமேயானால் முன்னிருந்ததைவிட அதிகமான ஸ்வதந்திரத்துடன் ஒத்து
ழைக்கப்படவேண்டும். பாதுகாப்பு, வியாபாரம், மூலப்பொருள்களின் உற்பத்தி
இவைகளில் எல்லாவற்றிலும் யாவரையும் கலந்துகொண்டு ஒரு சகஜமான
ஒத்துழைப்புவேண்டும். அப்படி செய்தால் நமது சாம்ராஜ்யம் மிஞ்சியிருப்ப
தோடு, மேலும், மேலும் ஓங்கி வளரும். உலகத்திற்கு ஒரு திருஷ்டாந்தமாக
விளங்கலாம்.

### மனித வர்க்கத்தின் சேர்க்கை.

இவ்வித சாம்ராஜ்ய கொள்கையை விட்டுவிட்டு, அமெரிக்கா போன்ற ஜன
நாயக நாடுகளுடன் சேர்ந்துகொள்ளலாம் என்று சிலர் சொல்லலாம், இது
சாத்தியமாகாதென்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால் நமது பழக்க வழக்கங்
கள் 160 வருஷ காலமாகவே மாறிக்கொண்டு வருகிறது. அவ்வித சேர்க்கையில்
பிரிடனையும், ஐரோப்பியரடங்கிய குடியேற்ற நாடுகளையும் சேர்த்துக்கொண்டால்
இந்தியாவையும் இதர நாடுகளையும் சேர்ப்பது சிரமமாகும். அதாவது
சாம்ராஜ்யமே முறிந்துவிடும். ஏனென்றால் புராதனமான மதச்சின்னங்களும்,
கொள்கைகொண்ட வெவ்வேறு ஜாதியினருக்கு ஒன்று சேர விருப்ப
மில்லாமல் சண்டை சச்சரவுகள் செய்ய காரணமாகும். இருந்தாலும், யாவரு
டைய க்ஷேமத்தையும் உலக சமாதானத்தையும் முன்னிட்டு அமெரிக்கா
வுடன் சேர்ந்துகொள்வதில் எனக்கு இஷ்டம்தான். ஆனால் அரசியல் ஸ்தாபனங்
களுக்குள் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்துவதைக்காட்டிலும் சம அந்தஸ்துடன்
ஒத்துழைப்பது தான் மேலானது. அப்படி செய்வதால், பிரிடிஷ் சாம்ராஜ்யம்,
இடையிலிருந்து ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் அதிக நட்பை உண்டாக்
கும். ஆசியாவுக்கும், அமெரிக்காவுக்கும் சிநேகிதத்தை உண்டாக்கும். வருங்
காலத்தில் மனித வர்க்கத்தின் ஒற்றுமையையே ஸ்தாபிக்க முடியும்.



### நம்பிக்கையுடன் இருக்கவேண்டும்.

இவ்வித பெரும் லக்ஷியத்தை நாம் சாதிக்கவேண்டுமானால் நமக்குள் ஒரு
நம்பிக்கை இருக்கவேண்டும். நமது கொள்கைகளிலும், முறைகளிலும் நம்பிக்கை
வேண்டும். இப்பொழுதிருக்கிறவர்கள் இதற்கு முன்னிருந்த ரோட்ஸ் (Rhodes),
சேம்பர்லின், கிப்லிங் போன்றவர்களின் ஏகாதிபத்தியத்தைப்பற்றி குறை
கூறுவது சகஜம்தான். அவ்வித அரசாக்ஷிகள் குறுகிய மனோபாவத்துடனும், அகம்
பாவத்துடனும் இருந்திருக்கலாம். இருந்தாலும் அவர்கள் தன் நம்பிக்கையை
இழக்க வில்லை. அவ்வித கொள்கைகளின் தன்மையை லார்டு மில்னர் என்ற
அரசியல் வாதி எடுத்துக் கூறினார். பின்னாடியும் சிலர் அவர் கொள்கைகளை
பயின்றும் வந்தனர். இந்தக் கொடும் யுத்தம் வந்ததால் எல்லா விஷயத்திலும்
நம்பிக்கை குறைந்துவிட்டது. அதற்காக வெறும் பேச்சுக்களைப் பேசாமல்
தியாகம், முயற்சி முதலியவைகளைக் கையாளவேண்டும். கடந்த 50 வருஷ
காலமாக உலகம் துரிதமாக மாறிக்கொண்டே வருகிறது. வருங்காலத்தில்
இன்னும் வேகமாகவே போகும். வருங்காலத்தில் அமைக்கவேண்டிய பொறுப்பு
உங்களுடையது. நம்பிக்கையினால் மலையையும் அசைக்கலாம் என்று சொல்லப்
படுகிறது. அதை ஒட்டி பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையும், உலகத்தையும் உங்
களுடைய நோக்கங்களும், புத்தியும் இடங்கொடுப்பதற்குத் தகுந்த விதமாக
அமைத்துக்கொள்ளலாம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 27—6—42-லிருந்து 3—7—42-வரை.

**எகிப்து.**—27வ சனிக்கிழமை பிற்பகலில் எகிப்து சண்டை ஆரம்பமாகி
விட்டது. மெர்ஸாமாட்ருகிற்குத் தெற்கிலும், மேற்கிலும் இரண்டு பெரிய
சண்டைகளும் நடந்தன. இவைகளை ஒரு தனிச் சண்டைகளென்று சொல்ல
முடியாது. இருபடைகளும் மறுகிச் செல்லுவதிலேயே ஈடுபட்டிருந்தன.
அன்றிரவு நிலா வெளிச்சத்தில் டாங்கிகளுக்கும், டாங்கிகளை எதிர்க்கும் பீரங்கி
களுக்கும் விசித்திரமான சண்டை நடந்தது. டொப்ருக்கில் பிளந்து சென்ற
மாதிரி மெர்ஸாமாட்ருக்கிலும் செய்யலாமென்று எதிரி நினைத்தான். ஆனால்
ஒரு நாள் முன்னதாகவே அது காலி செய்யப்பட்டது. அதோடு அதை வசப்
படுத்திக்கொள்ளவும் நினைக்கவில்லை. அங்கே ஏதோ சண்டை செய்து கைதி
களைப் பிடித்ததாகச் சொல்லும் ஜெர்மன் கூற்று உண்மையல்ல. ஏனென்றால்,
அங்கே பிரிடிஷ் படையே கிடையாது. எகிப்து யுத்தத்தில் இதையே முதல்
சண்டையெனக் கூறலாம்.

மெர்ஸாமாட்ருக்கிற்குக் கிழக்கே கடற்கரைக்கும், குவாடர்ரா பள்ளத்தாக்
குக்குமிடையில் இரண்டாவது சண்டை நடக்கிறது. இது ஒரு பெரிய சண்டை.
இந்தப் பிரதேசம் 100 மைல் அகலத்தில் இருந்து குறுகி 40 மைலுக்கு வருகிறது.
ரோமல் இந்தக் குறுகிய பாகத்தை நோக்கி முன்னேறுகிறான். நேசநாடுகள்
இந்த அகண்ட பிரதேசத்திலேயே எதிர்த்து பல சண்டைகளைச் செய்ய நினைத்
திருக்கின்றன. இவ்விதமாக எதிரியின் முன்னேற்றம் தடைபட்டிருக்கிறது.

பிரிடிஷ் 8-வது படைக்கு ஜெனரல் ஆசின்லக் தலைமை வகிக்கிறார். சமயம்
மிகவும் நெருக்கடியானதுதான். நவம்பர் மாதத்தில் ரோமல் குறுக்கு எதிர்ப்பு
களைச் செய்து, ஜெனரல் கன்னிங்ஹாமை முன்னேறவிடாமல் செய்தபோது
ஆச்சின்லக்கு தலைமை வகித்தார். உடனே ஜடபாயாவை நோக்கி ரோமல்
ஓடினான்.

அலெக்ஸாண்டிரியாவை நோக்கி ரோமல் போகிறான். எல்டாபாவிலிருந்து
எல் அலமீன் வரை வந்திருக்கிறான். பிரதேசம் 30 மைல் அகலம்தான். இங்கே
ஆச்சின்லக் சண்டை செய்வதெனத் தீர்மானித்திருக்கிறார். இந்த உத்தரவையும்
போட்டிருக்கிறார்.

"ஒருமாத காலமாகத் தைரியமாகச் சண்டை செய்திருக்கிறீர்கள். வேறு எவராலும் இவ்விதம் சண்டை செய்திருக்கமுடியாது. இருந்தாலும், நினைத்த படி வெற்றி கிட்டவில்லை. அதற்குக் காரணம் எதிரி அதிகமான யந்திரப் படைகளை உபயோகித்ததுதான்.

"அப்படியிருந்தும் அவனுக்கும் ஏராள நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஸப்ளைகளையும் அவன் எளிதில் பெறமுடியாது.

"நாம் யாவரும் அதிக முயற்சியுடன் சண்டை செய்யவேண்டும். இந்த எகிப்து சண்டையில் எதிரியை முறியடித்துவிடவேண்டும். உங்களால் முடிந்த வரை சண்டை செய்வீர்களென்று எனக்குத் தெரியும்.

"எதிரிக்கு நாம் ஓய்வு தரக்கூடாது. பார்த்த இடங்களிலெல்லாம் அவனைத் தாக்கவேண்டும். அவனை முறியடிக்கும் வரை நாம் சண்டை செய்யவேண்டும்".

எகிப்தின் பாதுகாப்புப் படையில் நியூஸிலாந்து படைகள் சேர்ந்துகொண்டிருக்கின்றன. இந்தியப் படைகளும் கௌரவ ஸ்தானத்தை வகிக்கின்றன.

**ருஷ்யா.**—ஜெர்மானியர் ஸெபாஸ்டோபூலை நோக்கி ரிஸர்வ் படைகளை மீண்டும் அனுப்பிவருகின்றனர். வடகிழக்கு மார்க்கமாக ஒரு வழியையும் உண்டாக்கியிருக்கின்றனர். கைகலந்த சண்டைகள் நடந்துவருகிறது நிலைமை மோசமாகத்தானிருக்கிறது.

குபயான்ஸ்க், கர்ஸ்க் இந்தப் பகுதிகளில் புதிய ஜெர்மன் தாக்குதல்கள் செய்யப்பட்டுள்ளன. இவைதான் ஒருக்கால் கோடைகாலத் தாக்குதல்களாக இருக்கலாம். முதலில் சொல்லிய இடத்தைப் பிடித்து, ரோஸ்டவைப் பிடித்து, காகஸஸைத் துண்டிக்க இருக்கலாம். இரண்டாவதான இடத்தைப் பிடித்து, மாஸ்கோவிலிருந்து டானெட்ஸைப் பிடிக்க ஏற்பாடாக இருக்கலாம். இந்த இரண்டு இடங்களிலும் ஜெர்மன் முன்னேற்றம் அதிகத் திருப்திகரமாக இல்லை. கார்கவ் பகுதியில் சண்டை அநேகமாக நின்றுவிட்டது.

அங்கார்ஸ்ட்ராய் (Angarstroi) என்ற ருஷ்யக் கப்பல் ஜப்பானியக் கடற்கரைக்கு 130 மைலுக்கு அப்பால் ஒரு ஜப்பானிய நீர்மூழ்கியால் அமுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கர்களின் பேரில் ஜப்பான் இப்பழியைப் போடுகிறது.

**சீனா.**—க்வேயாங்கியைப் பிடித்து வின்சவானை நோக்கியும், நான்சங்கை நோக்கியும் ஜப்பானியர் படைகளை அனுப்பிவருகின்றனர். பூகீன் (Fukien) மாகாணத்தை நோக்கி முன்னேற இருக்கலாம். செகியாங்கில் செய்த மாதிரி இங்குள்ள விமானதளங்களை வசப்படுத்த இருக்கலாம். நான்செங்கின் எல்லைப்புறத்தில 87 மைல் தூரத்தில் சண்டை நடக்கிறது. வின்சவினுக்கு அருகிலுள்ள டாய்ஹோ மலைகளைப் பிடிக்கவும் ஒரு சண்டை நடக்கிறது. சியாங்ஸி எல்லையில் யுகானை (Yukan) ஜப்பானியர் பிடித்துள்ளனர். துங்ஸ்தான் (Tungstan) தளங்களைப் பிடிக்கும் நோக்கம் இருக்கலாம்.

110 கிலோமீடர் இடைவெளியுள்ள இருப்புப் பாதையைப் பிடிக்கச் செய்த ஜப்பானியரின் முயற்சி பலிக்கவில்லை. வெனென்ருல், குவெய்கியை சீனர்கள் பிடித்து ஷாங்யாவோவில எதிர்ப்புச் சண்டைகளையும் செய்துவருகின்றனர். பிலிப்பைன்ஸிலுள்ள படைகளை ஜப்பானியர் மீண்டும் பயிற்சி கொடுக்க சீனாவுக்கு அனுப்பியிருக்கின்றனர். அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களும், விமானிகளும் சைனாவிற்கு வந்துவிட்டன.

ஆகவே மத்திய சைனாவிலும், வடகிழக்கு சைனாவிலும் சீனர்களே விமானத்தாக்குதல் செய்யமுடிகிறது. யாங்ஸி நதி ஓரங்களில் ஜப்பானியச் சண்டைக் கப்பல்களை சீன பாம்பர்கள் தாக்கின.

**பர்மா.**—இவ்வாரத்தில் மறுபடியும் அக்யாப் படையெடுக்கப்பட்டது. பர்மாவில் மிஞ்சியிருக்கும் சீனர்கள் கொரில்லாச் சண்டையைச் செய்கின்றனர். இவர்களுக்கு விமானமூலம் ஸப்ளைகள் அனுப்பப்படுகின்றன. பர்மாவிலுள்ள



சீனப்படைகளின் தலைவரான ஜெனரல் லோசோயிங் பர்மாவில் நேசதேசங்களின் குறுக்கு எதிர்ப்புகள் சீக்கிரத்தில் நேருமென்றும், அந்த எதிர்ப்பு 'தரையில் மாத்திரமல்லாது எல்லாப் பகுதிகளிலும் நடக்குமென்றும்' சொன்னார்.

**பஸிபிக்.**—ரபாலிலுள்ள டியாவரா (Diavera) என்ற விமான தளத்தை ஆஸ்திரேலிய விமானப்படை தாக்கி டில்லி (Dilli)யில் பெரும் தீக்களை மூட்டின. பெலகி பேரிலும் குண்டுகள் போடப்பட்டன. வேக் தீவை அமெரிக்க விமானங்கள் தாக்கின. ஸலாமுவாவில் செய்யப்பட்ட தாக்குதலில் 60 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டனர்.

சீனர்கள் செய்யும் கொரில்லாத் தாக்குதலுக்குப் பிரதியாக பிலிப்பைன்ஸிலுள்ள ஸெபு நகரத்தைப் பூராவாக ஜப்பானியர் அழித்தனர்.

**பஸிபிக் யுத்தக் கவுன்ஸில்.**—மறுபடி ஜூன் 25உ கூடிற்று. அந்த சமயத்தில் ஜநாதிபதி ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் உலக நிலைமையைப் பரிசீலனம் செய்தனர். நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, சைனா இவைகளின் ஒற்றுமை நிலைமையையும்பற்றி ஆலோசித்தனர். சீன அயல் நாட்டு மந்திரி மிஸ்டர் ஸுங் என்பவரும் இதற்கு வந்திருந்தார். விமான உதவி வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். இதை அச்சங்கம் அங்கீகரித்தது. டொப்ருக் விழுந்தாலும், எகிப்து சண்டையில் குறைவு இருக்காது என்று மிஸ்டர் சர்ச்சில் வாக்குறுதி கொடுத்தார்.

மிஸ்டர் சர்ச்சில் இங்கிலாந்திற்குத் திரும்பிவிட்டார். லிபியா சண்டையைப்பற்றி நடக்கப்போகும் காமன்ஸ் சபை சர்ச்சையில் கலந்துகொள்ளுவார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 20—6—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பற்படை ஸ்தலம்—எம்டன் (Emden). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | ஒரு கப்பல் தாக்குண்டது. | 7 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—லிபியா (Libya)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—டொப்ருக் (Tobruk)குக் கருகாமையில். | | | |
| | விமான நிலயம்.—டிமிமி (Tmimi). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 20—6—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயத்திலுள்ள விமானங்கள்.—போர்ரங்கம் முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விமான நிலயத்திலுள்ள கட்டடங்கள், விமான நிலயம் தனிப்பட்ட விமானங்கள்.—ஆக்கியாப் (Akyab). | | | |
| | விமான நிலயம்,—மாக்வி (Magwe). | | | |
| | கட்டடங்கள்.—ஹோமலின் (Homalin). | | | |
| | அலூஷியன் தீவுகள் (Aleutians)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.—கிஸ்கா (Kiska) விலுள்ள துறைமுகத்தில். | ஒரு சஞ்சாரியும், சாமான் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| 21—6—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல்துறைகள்—டங்கர்க் (Dunkirk). | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள்போடுவது விரோதி சமுத்திரங்களில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான போக்குவரத்து மோட்டார்கள்.—ஸிடியாஸிஸில் (Sidiaziz) விமானமிறங்குமிடம். | | | |
| | விமானம் இறங்குமிடங்கள்—கஸாலா (Gazala). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி கப்பல் கூட்டம்.—மத்தியதரைக் கடலில் (Mediterranean). | 2 பெரிய கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை எங்கும். | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 22—6—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium) கடற்கரை. | | | |
| | கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான விமான நிலயம்.—வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—கப்பற்படை தளம்— எம்டன் (Emden). | | 6 விமானங்கள். | |
| | விமான தளங்கள்.—வட பிரான்ஸ் (France), ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள், போக்குவரத்து.—லிபியா (Libya). | | | |
| | சைனியங்களுக்குப் பின்னுலுள்ள தளம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விரோதி போக்குவரத்து.— டொப்ருக் (Tobruk)-குக்கும், காபூஸோ (Capuzzo)வுக்கும் இடையேயுள்ள ரஸ்தாவில். | | | |
| | விமான நிலயம்.—பஹீரா (Baheira). | | 2 விமானங்கள். | |
| | கஸா'லா (Gazala), டிமிமி (Tmimi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு-பர்மா (Burma)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கப்பல் சரக்கு இறக்குமிடம்—ஆக்கியாப் (Akyab). | | | |
| | விமான நிலயம்.—மாக்வி (Magwe). | | | |
| 23—6—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—துறைமுக மேடைகள், கப்பல் துறையிலுள்ள கட்டடங்கள்.—டன்கர்க் (Dunkirk). | 1 கப்பல் தாக்கப்பட்டது. | 1 விமானம். | 2 விமானங்கள். |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விரோதி விமான தளங்கள், ரயில்வே லக்ஷியங்கள்.—ஹாலந்து (Holland), வட பிரான்ஸ் (France). | | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—பின்னுலுள்ள பிரதேசங்களில். | | | |
| | போக்குவரத்து வண்டிகள், கவசம் பூண்ட வண்டிகள்.— டொப்ருக் (Tobruk), பார்டியா (Bardia) ரஸ்தா முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—6—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர்முனை எங்கும். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், கட்டடங்கள்.—ஆக்கியாப் (Akyab). | | | |
| | விமான நிலயம்.—மாக்வி (Magwe). | | | |
| **24—6—42.** (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—நீர்மூழ்கி தளம்-ஸென்ட் நாஸேர் (St. Nazaire). | | நஷ்டமில்லை. | |
| | விரோதி விமான ஸ்தலங்கள்.—வட பிரான்ஸ் (France). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான பெரிய மோட்டார் வண்டிகள் டாங்கிகள்.—ஷெவர்ஸன் (Sheferzen). | | | |
| | லக்ஷியங்கள்.—டெர்ரு (Derna), டிமிமி (Tmimi). | | | |
| | கப்பல்.—துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | 4 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர் முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ பிரிடன்(New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள், மற்ற கட்டடங்கள்.-(Rabaul). | | | |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டில்லி (Dilli). | | | |
| **25—6—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள், ராணுவ லக்ஷியங்கள்-ப்ரெமன் (Bremen) (1,000 பிரிடிஷ் விமானங்களால்). | | 52 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | விரோதி விமான ஸ்தலங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | முன்னேறிச் செல்லும் விரோதித் துருப்புகள்.—மெர்ஸாமட்ரூ (Mersa-Matruh). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | இருப்புப்பாதை.—பெங்காஸி (Benghazi)க்குத் தெற்கே. | | | |
| | போக்குவரத்து.—காம்புத் (Gambut) பிரதேசத்தில். | | | |
| | டோப்ருக் (Tobruk). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **25—6—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர்முனை எங்கும். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், நகரம், கட்டடங்கள்.—ஆக்யாப் (Akyab). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| **26—6—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விரோதி விமான தளங்கள், ரயில்வே லக்ஷியங்கள்—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரைக் கருகாமையில். | | 1 விமானம். | |
| | பெரிய கப்பல் கூட்டம், ரயில்வே ஸ்டேஷனில் துருப்பு ஏற்றியிருந்தும் ரயில் வண்டிகள்—வடக்கு ஜெர்மன் பால்டிக் (Baltic) துறைமுகத்தில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான டாங்கிகள், போக்குவரத்து வண்டிகள்—ஸோலம் (Sollum)லிருந்து மெர்ஸாமாட்ருவுக்கு (Mersa Matruh). | | | |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—போரரங்கம் முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | அங்குமிங்குமுள்ள விரோதி மருந்து கிடங்குகள்—விமானஞ்சுடும் பீரங்கி ஸ்தானங்கள்-லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| | தூரக்கிழக்கு-ஸாலமன்(Solomon) தீவுகள்—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டுளகி (Tulagi). | | | |
| **27—6—42.** (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்—தொழிற்சாலைகள்-ப்ரெமன் (Bremen). | | | |
| | விரோதி விமான தளங்கள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | விரோதி கப்பல்கள்—பிரெஞ்சு (French)க் கடற்கரைக்கருகாமையில். | 1 கப்பல் தீ மூட்டப்பட்டது. | 11 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 27—6—42. (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வேவு பார்த்தல்—விரோதி தரைப்படைகள், விமான மிறங்குமிடங்கள். | | | |
| | போக்குவரத்து வண்டிகள்—ஸிடி பாரானி (Sidibarrani) யிலிருந்து மெர்ஸாமாட்ருவுக்கு (Mersa Matruh). | | | |
| | விமான நிலயம்—டெர்ன (Derna). | | | 2 விமானங்கள். |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும். | 384 விரோதி விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன. (20—27-வரை) | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துருப்புகளின் ஸ்தானங்கள்—லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| | தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகப் பிரதேசம்—டுளகி (Tulagi) | | | |
| 28—6—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில் நீர்மூழ்கி தளம்.—ஸென்ட் நாஸேர் (St. Nazaire). | | | |
| | விரோதி விமான தளங்கள் ரயில்வே லக்ஷியங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.-இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்து டாங்கிகள்.—மெர்ஸாமாட்ரு (Mersa Matruh) விலிருந்து ஸோலம் (Sollum) வரை. | பெருந்தீக்கள் கிளம்பின: பெரிய சேதம் விளைவிக்கப் பட்டது. | | |
| | வேவுபார்த்தல்.—முன்னணி பிரதேசங்களில். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi), டொப்ருக் (Tobruk). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்யா விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்.—ஸலாமுவா (Salamaua). | | | |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 21—6—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தில் (England) ன் தென்மேற்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | இரவில்.—சமுத்திரக்கரையிலுள்ள ஒரு ஜில்லா.—தெற்கு இங்கிலாந்தில் (England). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸோலம் (Sollum) க்கருகில் | | | |
| 22—6—42. (திங்கட்கிழமை.) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | எகிப்து கடற்கரை.—ஸிடிபாரானி (Sidibarrani) யிலிருந்து புகா (Fuka) வரையிலும். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | .10 விமானங்கள் ; இன்னும் அநேகம் சேதமாயின. | |
| 23—6—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள். கிழக்கு ஆங்கிலியா (Anglia). | சேதமில்லை. ஒருவரும் காயப்படவில்லை. | 1 விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—லிபியா—எகிப்து (Libya—Egyptian) எல்லைப்புறத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 24—6—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு பட்டணம்—மேற்கு மிட்லாந்து தீவுகள் (Midlands), சில இடங்கள்—தென்மேற்கு இங்கிலாந்து (England). | | 5 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்—எகிப்து (Egyptian) எல்லைப்புறத்தில். | | | |
| 25—6—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | கடற்கரைப் பிரதேசங்கள்—மெர்ஸா மாட்ரு (Mersa, Matruh)க்கருகாமையில். | | | |
| 26—6—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கடற்கரையிலுள்ள ஒரு ஜில்லா-தெற்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதம் ஏற்பட்டது. | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 7 விமானங்கள். | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மெர்ஸா மாட்ரு (Mersa-Matruh). | | | |
| | ஆஸ்திரேலியாவுக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Moresby). | பலத்த சேதமில்லை. | 6 விமானங்கள். | |
| 27—6—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—நார்விச் (Norwich). | சிலர் கொல்லப்பட்டனர்; சொற்பச் சேதம். | 3 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 7 விமானங்கள். | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மெர்ஸாமாட்ரு (Mersa Matruh). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 28—6—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—தென்மேற்கு இங்கிலாந்து (England). | | 2 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்—டாபா (Daba) பிர்எல்அராப் (Bir El Arab). | | | |
| 29—6—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் Britain—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அநேக இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் மேற்கு, தெற்குக் கடற்கரைகளில். | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். | 2 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்-மெர்ஸா மாட்ரு (Mersa Matruh)வைச்சுற்றிலும். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**புதிய சந்தர்ப்பங்கள்.** யுத்த சேவை செய்கிறவனுக்கு பல புதிய வழிகளில் தொண்டு செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எதிரிகளின் பொய் பிரசாரத்தைத் தடுக்கக் கூடியபடி உண்மை விவரங்களைப் பரவச்செய்வதோடு வேறு காரியங்களும் இருக்கின்றன. ஜனங்களின் முன்னேற்றத்தையும் சௌகரியத்தையும் செய்யக் கூடிய துறைகளிலும் ஈடுபடலாம். இவ்வித வேலை யுத்த சேவை செய்கிறவனுக்கு அவனை அறியாமலேயே சுவாதீனமாகும்.

வி வி வி வி வி வி வி

**உணவுப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யவும்.** சில தினங்களில் தனது அழகிய தோட்டத்தில் தானே காய்கறிகளைப் பயிரிட்டு மேன்மை தங்கிய வைஸிராய் ஒரு திருஷ்டாந்தமாக விளங்குவார். அதைப்போல் இந்தியா முழுவதும் செய்யப்படும். தென் இந்தியாவில், சில பெரிய நகரங்களைத் தவிர, ஒவ்வொரு வீட்டிலும் தனியான இடம் இருக்கிறது. இங்கே காய்கறிகளைப் பயிரிடுவது சகஜம். இவ்வழக்கம் மீண்டும் செய்யப்படவேண்டும். வயது கடந்தவர்கள் தோட்ட வேலையைச் செய்வதும், சிறியவர்கள் தண்ணீர் பாய்ச்சுவதும் செய்யலாம். இவ்விஷயத்தில்

பொழுது போக்குக்காக மட்டில் ஈடுபடாமல் யுத்தத்தை முன்னிட்டே ஈடுபட வேண்டும். ஒரு எதிரி பர்மிய எல்லையில் இருக்கிறன். மற்றொருவன் மத்தியக் கிழக்கில் புகுறப் பார்க்கிறன். தனது மக்களுக்கும், சைனியங்களுக்கும், மத்தியக்கிழக்கிலுள்ளோருக்கும், சைனாவிற்கும் உணவை இந்தியா தயாரிக்க வேண்டும். கிழக்குச் சீமைகளை ஜப்பானியர் ஆக்கிரமித்துக்கொண்டதால் இனி அங்கிருந்து ஒன்றும் வந்துசேராது. ஸிலோனுக்கும் உணவை அனுப்பவேண்டும். விலைவாசிகள் உயர்ந்ததாலும், சில சாமான்கள் கிடைக்காததாலும் நமக்கு சில அசௌகரியங்கள் ஏற்பட்டுவருகின்றன. அவைகளை ஈடுசெய்யவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**வீணுக்காதே.** இது. மிக முக்கியமானது. முன்னைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்து குறைவாகச் செலவழிப்போம். ஞாயிற்றுக்கிழமை லண்டனிலிருந்து எண்ணெய் இலாகா மந்திரியான குவிலிம் லாயிட் ஜார்ஜ் ஒலிபரப்பும்போது, கரி, காஸ் (gas) மின்சாரம், எண்ணெய் முதலியவைகளைக் குறைவாகச் செலவழிக்க வேண்டுமென்றும், கடைகளின் ஜன்னல்களில் விளக்கு களேற்றுவது முதலியவை குற்றமாகுமென்றும் அறிவித்தார். அதிலிருந்து நாமும் சிலவற்றைத் தெரிந்துகொள்ளலாம். குளிர் தேசங்களில் உபயோகிப்பது போல் நாம் எண்ணெய் முதலியவைகளை அதிகம் செலவழிக்காத போதிலும், வேறுவழிகளில் குறைவாக உபயோகிக்கலாம். மோட்டார் முதலியவைகளுக்கு பெட்ரோல் கிலக்கரி முதலியவைகளைக் குறைவாகவே உபயோகிக்கவேண்டும். பர்மா எதிரி வசமானதிலிருந்து கிழக்கிந்திய எண்ணெய் வராமல் நின்றுவிட்டது. ஒரு கரி மூட்டையை குறைவாக உபயோகித்தாலும், ஒரு எலெக்டிரிக் விளக்கை தினம் ஏற்றுமல் இருந்தாலும் இதைக்கொண்டு பரம்பரையாக யுத்த சாமான்களை உற்பத்தி செய்வதற்குச் சாதகமாகும். ரயில் வண்டிகளில் பிரயாணிகள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகப் பிரயாணம் செய்கின்றனரோ அவ்வளவுக் கவ்வளவு சிப்பாய்களை அதிகம் ஏற்றி போர்முனைகளுக்கு அனுப்பமுடியும். அல்லது இரவும் பகலுமாக காவல்புரியும் சிப்பாய்களுக்கு ஸப்ளைகளை அனுப்ப இடவசதி ஏற்படும். ஒரு அவுன்ஸ் எண்ணெய் கிடைத்தாலும் விமானம் முதலிய வைகளை உபயோகிக்கமுடியும்.. சிக்கனத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டு நடந்துகொண்டால் சரியானபடி யுத்த சேவை செய்வதாகும். ஒரு கை அரிசியை மிச்சம் பிடித்தாலும் புதிதாக உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது. தினம் வீடுகளில் அநாக்ரதையாக நடப்பதால் வீணாகும் பண்டங்களைக்கொண்டு ஒரு சைனியத்திற்கு உணவைக்கொடுக்கலாம். அதைப் போல் மீதப்பணத்தை யுத்தக் கடன் பத்திரங்களை வாங்க உபயோகித்தால் யுத்த சாமான்களைச் செய்ய சாதகமாகும். அதேவிதமாக சிப்பாய்களாகவோ தொழிற்சாலை ஆட்களாகவோ சேர ஜனங்கள் முன்வந்தால் வெற்றி சீக்கிரத்தில் கிடைக்க ஹேதுவாகும். எதிரியின் பொய் பிரசாரத்தை அடக்கி, ஸ்திரீ புருஷர் களின் தைரியத்தை நிலை நாட்டினாலும் வெற்றியடையலாம்.

முன் சொன்னபடியெல்லாம் ஒத்துழைக்க அரசாங்கத்தார் முன் வந்து கொண்டிருக்கும்போது ஜனநாயகக் கொள்கைகளை அநுபவத்தில் பயன்படுத்திக் கொண்டு பொதுஜனங்களே முன் வருகின்றனர். இங்கிலாந்தில் ஜனங்கள் தனிக் கூட்டங்களாக அமைந்துகொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய லக்ஷியங்களை அடைந்துவருகின்றனர். தாங்களாகவே சில திட்டங்களைப் போட்டுக்கொண்டு அதன்படி தீவிரமாக நடந்துவருகின்றனர். இங்கிலாந்தில் சில பிரதேசங்கள் தாக்குகளாகப் பிரிக்கப்பட்டு உற்பத்தி மந்திரிகளின் மேல் பார்வையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஸர் ஜார்ஜ் ஸ்டாபிளிடனின் திட்டப் படி பொதுப்பண்ணை திட்டமும், பாற்சாலைகளும் நன்குக நடந்துவருகின்றன. உருளைக்கிழங்கு, பச்சை காய்கறி, முதலியன அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. விவசாயிகளின் கூலி இரட்டிப்பு மடங்கு ஆகிவிட்டது. இவ்விதமாக இங்கிலாந்து மிஸ்ட்டர் விளுண்டு கூறியபடி (காரியாம்சையில் ஈடுபட்ட ஜனநாயகம் ஆக மாறி), நேசதேசங்களின் வெற்றியை ஊர்ஜிதப்படுத்தி, பிற்காலத்தில் சமாதானத்தை



நிலைநாட்டக் காரணமாக இருக்கிறது. சமாதான காலத்தில் வீடுகளை அதிகம்
கட்டுவதும், உணவுப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்து பொதுமக்களின்
க்ஷேமத்தைக் கோருவதும் தான் முக்கிய வேலையாக இருக்கும்.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்காவில் சர்ச்சில்-ரூஸ்வெல்டு சந்திப்பு.** இந்த இருவர்களும் தற்சமயம் மூன்றும் தடவையாகச் சந்தித்தனர். முதலாவது, சந்திப்பு அட்லாண்டிக்கின் மத்தியில் பல
சண்டைக் சப்பல்களுக்கு நடுவில் ஏற்பட்டது. இரண்டாவது வாஷிங்டனில்
கிறிஸ்துமஸ் மத்தியில் நடந்தது. இப்போது நடந்ததும் வாஷிங்டனில் தான்.
இவை யாவும் ஒரு வருஷத்திற்குள் ஏற்பட்டன. ஒவ்வொரு சந்திப்பும் முக்கிய
மானவை. முதலாவதான சந்திப்பில் அட்லாண்டிக் சாஸனம் பிறந்தது.
இரண்டாவது சந்திப்பில் பிரிடிஷாரும் அமெரிக்கர்களும் ஒன்று சேர்ந்து சண்டை
செய்வதெனத் தீர்மானித்து அதன் பயனாக நடந்த பவளக்கடல் சண்டையிலும்,
மிட்வே தீவு சண்டையிலும் வெற்றி கிடைத்தது. இந்தியாவிற்கு ஏராள
அமெரிக்க விமானங்களும், சைனியங்களும் வந்து சேர்ந்தன. வடக்கு அயர்
லாந்திலுள்ள பிரிடிஷ் படைகளை அழைத்துக்கொள்ளவும் முடிந்தது. இந்த
மூன்றாவது சந்திப்பும் விசேஷமானது தான். மாலடோவின் விஜயத்தின்
பயனாக ஆங்கிலேய-ருஷ்ய ஒப்பந்தமும், அமெரிக்க-ருஷ்ய ஒப்பந்தமும்
ஏற்பட்டு கப்பல்கள், ஸப்ளைகள், பொதுவான தந்திரம், இரண்டாம் போர்முனை
முதலிய பிரச்னைகள் நன்கு நிர்த்தாரணம் செய்யப்பட்டன. இதுவரை இருந்த
அமெரிக்க-ஆங்கிலேய ஒப்பந்தம், ஆங்கிலேய-அமெரிக்க-ருஷ்ய ஒப்பந்தமாக
மாறிவிட்டது.

வி வி வி வி வி வி

**உற்பத்தியும், போக்குவரவும்.** தற்சமயம் கவனிக்கப்பட வேண்டிய விஷயங் கள்தான் முதலாவதான அம்சத்தைப்
பற்றி ஜூன் 26ல் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொல்லும்போது மாதம் 4,000
விமானங்களும், 1,500 டாங்கிகளும், 1,00,000 விமானங்களும் கட்டப்படுவ
தாகச் சொன்னார். அதே தினத்தில் அமெரிக்க அரசாங்கத்தார் அறிவிக்கும்
போது உலகம் பூரா ராணுவ விமான மார்க்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகச்
சொல்லப்பட்டது.

வி வி வி வி வி வி

**பிரிடிஷாரின் உறுதிமொழிகள்.** பிரிடிஷாரும் ருஷ்யாவிற்கு ராணுவ ஸப்ளைகளை அனுப்புவதாக ஒப்புக்கொண்டனர்
பிரிடனிலும், குடியேற்ற நாடுகளிலும் செய்யப்படும் யுத்த தளவாடங்களை விலை
வாங்காமலேயே கொடுக்கப்படும். ஏற்கனவே ருஷ்யாவிற்குக் கொடுத்த ஒரு
கோடி பவுனோடு மீண்டும் 2 கோடி பவுன் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி

**பண ஆசையில்லை.** அமெரிக்கா பணத்தின்மேல் நடத்திவந்த திட் டங்களையும், தனிப்பட்ட கக்ஷியின் நோக்
கங்களையும் மறந்து விட்டது. அமெரிக்க சபை முன் ஐந்தாவது ரிபோர்ட்டை
சமர்ப்பிக்கும் போது ஜனாதிபதி ரூஸ்வெல்ட் யுத்தத்தின் முடிவில் வரவு செலவு
விஷயங்கள் அதிகம் கவனிக்கப்படமாட்டா என்றார். 'குத்தகைக்கடன்
மசோதாவிற்குப் பதிலாக அந்தந்த நாடுகள் ஜெர்மனியையும் ஜப்பானையும்
எதிர்த்துப்போராடினால் போதுமானது.' இவ்விஷயம் சபையில் அங்கீகாரம்
பெற்றால் அதன்படி நடந்து கொள்ளப்படும்.

இதைப்பற்றி ஜூன் 18ல் வால்டர் லிப்மான் பின்கண்ட அபிப்பிராயத்தைக்
கூறினார்.

"முதலாவதான திட்டத்தின்படி நேசநாடுகளுக்கு அனுப்பப்படும் யுத்த
தளவாடங்களின் கணக்கைக்கொண்டு பிறகு கணக்கு தீர்க்கும் வியவகாரம்

கிடையாது. எதிரியுடன் சண்டை செய்யும் நோக்கத்துடன் ஒரு தேசம் தன்னால் கொடுக்க முடிந்த அளவு பணத்தைக் கொடுத்தால் போதுமானது. அதற்கும் யுத்த சாமான்கள் அனுப்பப்படும்.

"ஆகவே உயிரைக் கொடுத்து மன்றுடிக்கொண்டிருக்கும் நாடுகளுடன் லேவாதேவி வியவகாரம் பேசுவது கொடிய அபிப்பிராயமாகும். சீனர்கள், ருஷ்யர்கள், பிரிடிஷார் போலந்துக்காரர்கள், செக்கர்கள், நார்வேக்காரர்கள், டச்சுக்காரர்கள் யாவருக்கும் பாடான், காரிஜிடார், ஜாவா, பவளக்கடல், மிட்வே, அலூஷியன், மத்தியதரைக்கடல் முதலியவைகளில் நாம் செய்த போர்களைப் போல் சமமான கஷ்ட நிலைகளை அனுபவித்துத்தானிருக்கின்றனர்.

"ஒவ்வொருவரும் செய்த உதவியை சுலபமாகக் கணக்கிட முடியாது. தங்களால் முடிந்ததை யெல்லாம் கொடுக்கும்போது அவைகளுக்கு எவ்வாறு விலை மதிக்க முடியும். பிரிடன் மேல் நடந்த விமானப்போர், மாஸ்கோ தற்காப்பு மால்டா, செக்கோஸ்லாவாகியா இங்கே நடைபெற்ற சண்டைகளை எவ்வாறு ஒருவன் மதிப்பிடமுடியும். இம்மாதிரி கொடிய கணக்கை எங்கும் செய்யமுடியாது.

வி வி வி வி வி வி வி

**எகிப்து எல்லை.** இங்கிருந்தும், சமீபத்தில் கிடைத்த செய்தி அவ்வளவு திருப்திகரமாக இல்லை. நேச நாடுகளின் எட்டாவது சைனியம் இன்னும் கலையாமல் மெர்ஸாமாட்ருவிற்கு கிழக்கே நின்று சண்டை செய்கிறது. அங்கிருக்கும் நிலையில் நமக்கு சந்தோஷத்தை அளிக்கக்கூடியவை ஆச்சின்லக் தலைமை வகிப்பதும், சர்ச்சிலின் தைரியமும், 'பிரமாதமாக சிரமம் ஏற்பட்டாலொழிய பிடித்திருக்கும் ராணுவ நிலை திருப்திகரமாக இருக்கிறதென்று' நஹஸ் பாஷாவின் அறிவிப்பும்தான். கெய்ரோவிலிருக்கும் 'இந்திய சைனிய விமர்சகர்' ஒருவர் பிரிடிஷ் சைனியம் பின் வாங்கியதை ஒரு ராணுவ தந்திரம் என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார். 'எகிப்து சண்டையில் எட்டாவது படை தந்திர நிலைகளை தினம் சுவாதீனப்படுத்திக்கொண்டு வருகிறதாகவும், சொன்னார். மேலும் அவர் சொல்லுவதாவது, 'மெர்ஸாவை ஒரு விசேஷயுத்த அரங்கமாகக் கருதுவதே பிசகு. எதிரியைக் களைக்கச்செய்து குறுக்கு எதிர்ப்பு செய்யும் காரியத்தில் அது ஒரு சம்பவம்தான்.

"எதிரியின் திட்டம் தாமதப்படும் விஷயம் வியக்தமானது. நமது நிலைகளுக்குத் தடையேற்படவில்லை. நமது படைகள் எதிரியை இருபிளவாகப் போகும்படி செய்யப் பார்க்கின்றன. இதுவே அவனது பயம்!

இந்த அபிப்பிராயம் சரியாகவோ அதிக ஆசையுள்ளதாகவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நமது படைகள் வெகுதூரம் சென்று உயிரைக் கொடுத்து சண்டை செய்யும் விஷயத்தைப்பற்றி குறைகூறுவது தவறாகும்."

மிஸ்டர் சர்ச்சிலுக்கு பார்லிமெண்டு அனுபவம் அதிகமிருப்பதால் நம்பிக்கையில்லாத தீர்மானத்திற்கு பதில் கூறும் வழி அவருக்கு நன்றாகத்தெரியும். பார்லிமெண்டும் அவர் சார்பாக வோட்செய்யும். இதற்குள் ஏதாவது ரகசியங்களைச் சொல்லிவிட்டால் எதிரிக்குத்தான், சாதகமாகும். எதிரியோ அமெரிக்க விமானங்களுக்கு சக்தி அதிகம் இல்லையென்றும், டிகால் சைனியம் கூலிக்குப் பிடிக்கப்பட்டதென்றும் சொல்லி வருகிறான். ஜெனரல் ஸ்மட்ஸ் சாம்ராஜ்யத்தின் உண்மை புதல்வரில் ஒருவர். ஜூன் 28௳ சைனியத்திற்கு ஆட்களைச் சேகரிக்கும்போது அவர் சொன்னதாவது:—

'டொப்ருக் எதிரிவசமானதால் ஏற்பட்ட மனித நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டும். போர்முனையிலுள்ளோருக்குத் தகுந்தபடி நாம் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் செய்த சண்டையை நாமும் மீண்டும் நடத்த வேண்டும்.

'அவ்விதம் நாம் செய்யப்போகிறோமா, அல்லது சும்மா இருக்கப் போகிறோமா" டொப்ருக்கைப்பற்றி குறைகூறவோர் அங்கு இறந்த பிரிடிஷ், இந்தியர், தென் ஆபிரிக்கர் இவர்கள்பேரில் ஒன்றும் சொல்லமுடியாது, பிழை எங்கேயோ இருக்கிறது!



**துணைக்கப்பல் சம்பவங்கள்.** மால்டா, 'டொப்ருக்கிற்குச் சென்ற பிரிடிஷ துணைக்கப்பல்களைப்பற்றி பிரமாத நஷ்டமடைந்துவிட்டதாக அச்சு நாடுகள் சொல்லுகின்றன. ஜூன் 17௳ பெர்லின் சொல்லும்போது பிரிடிஷார் 4 க்ரூயிஸர்களையும், 2 நாசகாரிகளையும் இழந்ததாகச் சொல்லிற்று, ஜூன் 19௳ ஜப்பான் சொல்லும்போது பிரிடிஷ் நஷ்டம், ஒரு சண்டைக்கப்பல், 2 விமானமேற்றும் கப்பல், 6 க்ரூயிஸர், 5 நாசகாரிகள், 2 காவல் கப்பல்களென்று சொல்லிறது. வகையே இல்லாத 'ஜிப்ரால்டர் வகை போன்றதென்றும் பொய்யாகச் சொல்லப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் காமன்ஸ் சபையில் அட்லி கொடுத்த விவரங்களைப் பார்ப்போம்.

| பிரிடிஷ் | | எதிரி |
|---|---|---|
| 1 சிறிய க்ரூயிஸர் | (16 அங்குல பீரங்கிகள்) | 1 பெரிய க்ரூயிஸர். |
| | | 8 (அங்குல பீரங்கிகள்). |
| 4 நாசகாரிகள் | | 2 நாசகாரிகள். |
| 2 துணைக்கப்பல்கள் | | 1 யூ படகு. |
| 30 விமானங்கள் | | 65 விமானங்கள். |

நஷ்டமான கப்பல்களின் டன் கணக்கு சமமானதே.

வி வி வி வி வி வி வி

**ஜெனரல் எலியாஸ்.** முன்பு செக்கோஸ்லாவியாவின் பிரதம மந்திரியாக இருந்தவர். ஹிட்ரீச் கொலைசெய்யப்பட்டதில் இவர் சம்பந்தப்பட்டவர் என்ற காரணத்தினால் ஜூன் மீ 16௳ கொலை செய்யப்பட்டார். ஆனால் ஹிட்ரிச் கொலையில் இவர் எவ்விதம் சம்பந்தப்பட்டார் என்று இன்னும் தெரியவில்லை. சுமார் ஒரு வருஷத்திற்கு முன்னே ஜெர்மன் அரசாங்கத்திற்கு விரோதமாக திட்டங்களைப் போட்டதாகவும், பிரஸிடெண்டு பென்ஸுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டார். நாஸிகள் அதிகாரத்தின்கீழ் சுமார் 10 மாதகாலம் கைதிக்கூடத்திலேயே இருந்து வந்தார். உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள் என்றும், அதில் எலியாஸ் சேர்ந்தவரில்லை என்றும், பகிரங்கமாக ஜெர்மானியர்கள் வெளியிட்டும் இருக்கின்றனர். அப்படியிருந்தும் இப்பொழுது ஹிட்ரீச் கொலைக்குற்றத்தில் எலியாஸும் சம்பந்தப்பட்டவர் என்ற காரணத்தை முன்னிட்டு அவரைச் சிறைச்சாலையிலிருந்து நாஸிகள் பிடித்திழுத்து வந்து கொலை செய்ததாக வந்த செய்தி ஆச்சரியமாக இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**கூட்டமாகக் கொள்ளையடிப்பதும், கொலைசெய்வதும்.** ஹிட்ரிச்சைக் கொலைசெய்ததற்காக ஏராளமான பேர்களைக் கொலை செய்வதென நாஸிகள் நினைத்திருக்கின்றனர். ஜூன் 22௳ வரை 72 ஸ்திரீகள் உள்பட 520 பேர் கொல்லப்பட்டுள்ளனர். லாடிஸி, லெஸக்யாப், பிரேக்கிற்கு 60 மைல் தூரத்திலுள்ள மற்றொரு கிராமம் இவைகள் அழிக்கப்பட்டன. குடை விமானக்காரர்களை மறைத்து வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டி 100 பேர்கள் கொல்லப்பட்டனர்.

வி வி வி வி வி வி வி

**லாடிஸி** கிராமத்தை அழித்ததைப்பற்றி செக்கர் ஒருவர் ஜூன் 12௳ பி. பி. ஸியில் பேசியுள்ளார்:—பிரேக்கிலிருந்து மோட்டார் வண்டிகள் செல்லும் முக்கிய ரஸ்தாக்களுக்குப் பக்கத்தில் லாடிஸி என்னும் ஒரு குக்கிராமம் இருக்கிறது. அதை எனக்கு நன்றாகத் தெரியும். அக்கிராம வாசிகளில் சுமார் 500 பேர்கள் கிளாட்னோ—நிலக்கரி சுரங்கத்தில் வேலை பார்க்கிறவர்கள். அவர்களில் சிலர் சிறு குடியானவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு அநேகமாக ஹோராக் அல்லது ஸ்வடபல் என்ற பெயர்கள்தான் இடப்பட்டிருக்கும். இந்தக் கிராமத்தில் நடந்த கொடுஞ்செயலைப்போல் இதுவரை தேச சரித்திரத்திலேயே வேறு எந்த

இடத்திலும் நடந்ததாக எழுதப்படவில்லை. போலந்து, ருஷ்யா, நார்வே முதலிய இடங்களில் ஏராளமாக ஜனங்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் குழந்தைகள்மட்டில் கொலை செய்யப்படாமல் சும்மா விடப்பட்டன. அவர்கள் தாய்மார்களிடமிருந்து அவர்கள் பிரிக்கப்படவில்லை. ஆனால் லாடிஸி என்ற கிராமத்தில் மட்டும் நடந்த சம்பவம் வேறு. புருஷர்கள் யாவரும் கொலை செய்யப்பட்டவுடன் அவர்களுடைய மனைவிமார்களிடமிருந்து குழந்தைகள் யாவும் பிரிக்கப்பட்டன. சமீபத்தில் பிறந்த இளங் குழந்தைகளும் பிரிக்கப்பட்டன. இப்பொழுது ஆடுமாடுகள் ஏற்றியனுப்பப்படும் வண்டிகளில் இக்குழந்தைகளையும் ஏற்றி ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்படுகின்றன. என்ன கொடுமை. எனக்கு Mrs. ஹோராகோவாவைத் தெரியும், அவளுக்கு அப்பொழுது வயது 45. மேலும் அவளுக்கு 4 குழந்தைகள் உண்டு. அவளுடைய புருஷனும், மூத்த பையனும் அவளுக்கு முன்னாலேயே நிறுத்திவைக்கப்பட்டு சுடப்பட்டார்கள். அவளுடைய 17 வயதுள்ள மூத்த மகள், மற்ற 6 வயது, 4 வயதுள்ள சிறு பையன்களுடன் ஏற்றியனுப்பப்பட்டாள். இவர்களின் பிரிவுக்குப் பிறகு அவள் ஒன்றும் புரியாமல் கவலையுடன் வெட்டவெளியில் உற்று நோக்கிய வண்ணம் இருந்தாள். இவளைப்போல் குழந்தைகளைப் பறிகொடுத்து துக்கத்தில் ஆழ்ந்த மற்ற தாய்மார்களுடன் ஒரு சிறு தொட்டியில் உட்கார்ந்திருந்தாள். அவர்களுக்கு, எல்லோருக்குமே ஒரே ஒரு நம்பிக்கைதான ஏற்பட்டிருந்தது. அதுதான் இவர்களுடைய சைனியம். அது மிக்க பலமும், சக்தியும் வாய்ந்தது. ஈவிரக்கமில்லாதது. அது வெற்றிகரமாக என் தேசத்து ஜனங்களின் துயரத்தை அடியோடு நீக்கிவிடும். இதேமாதிரி கதிதான் ஐரோப்பிய ஜாதியார்களுக்கும் கிடைக்கும். ஜெர்மனியிலிருக்கும் பிரதேசங்களில எங்குமுள்ள கைதிக்கூடங்களைத் திறந்துவைத்துவிடும். ஆனால் பண்டைய காலத்தில் செழுமையாயிருந்த அந்த கிராமத்தில் இப்பொழுது எரிந்து, சிதிலித்துப் போன குவியல்கள் ஏராளமாகக் கிடக்கின்றன. இவ்விதம் நடைபெற்ற ஜெர்மன் அட்டூழியங்களைப்பற்றி எழுதப்பட்டு வருங்காலத்தில் அங்கு ஒரு ஞாபகச் சின்னம் தோன்றுகிறது.

கிரேட் பிரிடனிலிருக்கும் செக்கோஸ்லாவியா விமானப்படையைச் சேர்ந்த 2 விமானிகள் இந்த கிராமத்திலிருந்து வந்தவர்கள். இன்று அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சபதம் செய்துகொண்டு நாஜிகளை ஒழிக்க நினைத்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**பாங்காக் சூழ்ச்சிகள்.** இந்தியாவைப்பற்றிய பிரசாரத்தை நடத்த ஜப்பானியர் பாங்காக் ரேடியோவையும் உபயோகித்துக் கொள்ளுகின்றனர். இதற்காக சில இந்தியர்களை வசப்படுத்தியும் இருக்கின்றனர். இவர்களை ஹிட்லர், (கிழக்கிந்திய உபயாசகர்கள் என்று கேலி செய்கிறான்.) பொலிவியாவிலிருந்து, கலகம் செய்த குற்றத்திற்காக விரட்டப்பட்ட எர்னஸ்டு வெண்டலர் என்ற ஜெர்மானியர் தாய்லாந்தில் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளான். அவன் வசத்தில்தான் தாய்லாந்து ரேடியோ இருக்கிறது. இந்திய ஸ்வதந்திரத்தை வெகு ஆடம்பரத்துடன் கொண்டாடுகிறான். கிழக்கு நாட்டிலுள்ள 20 லக்ஷம் இந்தியர்களின் 100 பிரதிநிதிகள் வந்திருந்தனராம். ஜூன் 17ஆ இதைப்பற்றி ஜப்பானிய ரேடியோ அதிகம் எச்சரிக்கை செய்தது. 'இந்தியாவிலிருந்து கிடைத்த செய்தி திருப்திகரமாக இல்லாததால் இக்கூட்டம் சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று' சொல்லிற்று.

இவை யாவும் வீண் ஆடம்பரம் என்பதைப்பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியது இல்லை, வியாபாரத்தில் ஈடுபட்ட சில இந்தியர்கள் ஸயாமில் இருக்கிறார்கள். இவர்களின் ஜீவனம் ஜப்பானியரின் கையில் இருக்கிறது. ஒரு கூட்டத்திற்குப் போ என்றால் இவர்கள் போகத்தான்வேண்டும். ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல் என்றால் பேசத்தான்வேண்டும், அவ்வளவு நிர்பந்தமுமிருக்கிறது.



**ஸாங்கிராம் கழுதை.** ஸயாமும் ஜப்பானின் ஆசைக்கு ஒரு தளமாக இருக்கிறது, ஜப்பானில் ஒரு திட்டத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டது :- தாய்லாந்து நமது வசமாக இருந்தால் பர்மாவைப் பிடிக்கலாம், பர்மாவைப் பிடித்தால் இந்தியாவையும் பிடிக்கலாம், ஸயாம் ஒரு தனிப்பட்ட ஸாங்கிராம் என்பவனின் கொடுங்கோல் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. தாய்லாந்தின் படைகள் ஷான் ஸமஸ்தானத்திலும் அனுப்பப்பட்டன. ரெங்கூனை ஸயாம் சட்டதிட்டப்படி அரசாக்ஷி செய்யப்படுமென்று ஸாங்கிராமிற்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

உடனே கர்வமடைந்து ஜூன் 15ஆ ஒலிபரப்பிவிட்டான், 'இந்தியாவின் பயிற்சியைத் தாய்லாந்து நிலைநாட்டும். இந்தியாவை விடுவிக்க தாய்நாட்டார் பாடுபடுவார்கள். இவர்கள் யாவரும் தாய்லாந்துத் தலைவன் சொற்படி நடக்க வேண்டும்,

முஸோலினியின் உருவப்படத்தை ஸாங்கிராம் பெற்றிருக்கிறான். தன்னை முஸோலினியைப் போல் நினைத்துக்கொண்டும் இருக்கிறான்.

இவனும் கழுதையாக மாறிவிட்டான்.

---

## பிரதம மந்திரி, மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் வாஷிங்டனிலிருந்து லண்டனுக்குத் திரும்பி வந்தவுடன் அவர் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

---

### அதன் விவரம் பின்வருமாறு :—

“யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜனாதிபதியும், பிரிடிஷ் பிரதம மந்திரியும் நேசநாடுகள் ஒவ்வொரு கண்டத்திலும், ஒவ்வொரு கடலிலும் நடத்திவரும் யுத்தத்தைப் பற்றிய முக்கிய பிரச்னைகள் அனைத்தையும்பற்றி ஒரு வாரம்வரை ஆலோசித்தனர்.

“நமக்குள்ள அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் மனதில்கொண்டு அவ்விஷயங்கள் ஆராயப்பட்டன. எதிரிகளின் பலத்தை முற்றிலும் உணர்ந்தே நாங்கள் இவ்வாராய்ச்சியை நடத்தினோம். யுத்தத்திற்காக எல்லாவிதமான தளவாட உற்பத்தி விஷயத்தில் மொத்தத்தில் நிலைமை நம்பிக்கையூட்டுவதாகயிருக்கிறது. மாத உற்பத்தி அளவு ஆரம்ப திட்டப்படி இன்னும் உச்ச நிலையை அடையவில்லை. ஆனால் அந்த அளவு வேகமாகப் பெருகிவருகிறது.

“யுத்தம் உலகின் பல்வேறு பாகங்களுக்குப் பரவி விட்டதால், துருப்புகள், யுத்த தளவாடங்கள் இன்னும் மற்ற பொருள்கள் ஆகிய இவைகளை ஆங்காங்கு கொண்டுபோய்ச் சேர்ப்பதே நமக்கு முக்கிய பிரச்னையாயிருந்து வருகிறது. அச்சுநாட்டு ஸப்மரீன்கள் நமது சாமான் கப்பல்களுக்கு இன்னும் பெருஞ்சேதம் விளைவித்து வருகின்றனவாயினும், புதிய கப்பல் உற்பத்தி மாதத்துக்கு மாதம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இச் சம்பாஷணையில் ஏற்பட்ட முடிவையொட்டி பிரிடிஷ், அமெரிக்கக் கடற்படைகள் ஒன்றுசேர்ந்து நேசநாடுகளுக்கு வரும் சாமான் கப்பல்களுக்கு எதிரிகள் விளைவிக்கும சேதத்தை இன்னும் குறைக்க முயற்சிக்குமென்று நம்பப்படுகிறது. யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கான முறையில் இவ்வளவு பூரணமான அபிப்பிராய ஒற்றுமையும், திட்டங்களும் இதற்கு முன் ஒருபொழுதும் ஏற்பட்டதில்லை”.

## வெகு தீரமான எதிர்ப்பு.

"ஜெர்மனியின் முக்கிய தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் ருஷ்யா எதிர்த்து நிற்கும் முறையைக் கண்டு நாங்கள் பாராட்டுகிறோம். சீனப் படைகள் எதிரிகளை வெகு தீவிரமாக எதிர்த்து நிற்பதைப் பார்க்க எங்கள் சந்தோஷத்திற்கு அளவில்லை.

"ஜப்பானுக்கு விரோதமாகவும், சீனுவுக்கு நிவாரணமளிக்கவும் எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து நாங்கள் எங்களுடைய ராணுவ ஆலோசகர்களுடன் கலந்து பேசினோம். பல காரணங்களை முன்னிட்டு நாங்கள் எங்கள் திட்டங்களை வெளியிடுவதற்கில்லை. ஆனால் வாஷிங்டனில் நாங்களும், எங்கள் ராணுவ ஆலோசகர்களும் கலந்து யோசனை செய்து இனி எடுத்துக் கொள்ளும் நடவடிக்கையின் மூலம், ஜெர்மன் படைப் பலம் ருஷ்யப் போர்முனையினின்றும் வேறு முனைகளுக்குத் திரும்புமென்று சொல்லலாம்.

"பிரதம மந்திரியும், ஜனாதிபதியும் இதற்குமுன் 1941-ம் ௵ ஆகஸ்டு மாதத்திலும், அதற்குப் பிற்பட்டு 1941-ம் ௵ டிஸம்பரிலும் ஆக இருமுறை சந்தித்து யுத்த சம்பந்தமாக கலந்து பேசியிருக்கின்றனர். நாம் வெற்றி பெறுவதற்கு, சென்ற வருஷம், ஆகஸ்டு அல்லது டிஸம்பர் மாதத்தில் இருந்ததைவிட இப்பொழுது மொத்தத்தில் யுத்த நிலைமை அதிக அனுகூலமாயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

---

# பருந்துப் பாய்ச்சல் விமானம்.

விமானப்படைத் தலைவர் L. V. பிரேசர் எழுதியது

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம் கிடைத்தது).

பாய்ச்சல் விமானங்களைக் குறித்து பிரிடிஷ் விமான அதிகாரிகள் எவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் இவ்விமானத்தை அதிகம் நிந்திப்பதாக அவர்கள்பேரில் குற்றம் சாட்டப்படுகிறது. "12 சண்டைகளின் அனுபவத்தை அவர்கள் கவனிக்கவில்லை" என்றும் ஒரு குற்றம் சாட்டப்படுகிறது. எல்லாம் இந்தப் பாய்ச்சல் விமானங்கள் காரணமாக விமான அதிகாரிகளுக்கு எவ்வளவோ நிந்தனை ஏற்பட்டிருக்கிறது.

### ஆனால் உண்மை என்ன?

பாய்ச்சல் விமானங்களைப்பற்றி விமான அதிகாரிகள் ஒரு நாளும் நிந்தித்துப் பேசியதுமில்லை, அதனால் ஏற்படும் சாதகத்தையும் மறைப்பதுமில்லை. பிரிடிஷ் விமானப்படையின் ஒரு அங்கமாக பாய்ச்சல் விமானங்களின் படையும் சேர்ந்திருந்தால, விமான அதிகாரிகளுக்குத் திருப்தியாகவே இருக்கும்.

### முதல் விஷயம் முதலில் கவனிக்கப்படும்.

யுத்தம் ஆரம்பித்ததும் பிரிடிஷ் விமானப் படையைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டிவந்தது. அதைக் கிரமமாக சமயத்திற்கேற்றவாறும் செய்ய வேண்டி வந்தது. அதற்கான சில அம்சங்களும் முக்கியமாக இருந்தன. அதாவது ஒரு பெரிய பைடர்படை முக்கியமானது. இவ்விஷயம் பிரிடன்மேல் நடந்த விமானப்போரிலிருந்து கண்டுகொள்ளப்பட்டது. ஸ்பிட்பையர், ஹரிக்கேன் விமானங்களைப்போல் பருந்துப் பாய்ச்சல் விமானமும் தாக்கமுடியுமா? அடுத்தபடியாக பிரிடனிலிருந்து ஜெர்மனி வரை சென்று தாக்கக்கூடிய பாம்பர்களைப் பலப்படுத்தவேண்டியிருந்தது. பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் பிரான்ஸிலிருந்துதான் ஜெர்மனிக்குச் செல்லமுடியும். ஆனால் பிரான்ஸை பிரிடன் உபயோகித்துக் கொள்ளமுடியவில்லை.



பிறகு விமான அதிகாரிகள் பிரிடனில் செய்யப்படும் உற்பத்தியைக்கொண்டு சமீபத் தேவைகளை ஈடுசெய்துவந்தார்கள். அது மாதிரி நீடித்து நடந்துவருகிறதே ஒழிய வேறு விஷயங்களை விருத்திசெய்ய முடியவில்லை.

### யுத்தத்திற்கு முன்னிருந்த அனுபவங்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் பிரிடிஷ் விமான அதிகாரிகள் பருந்துப் பாய்ச்சல் விமானங்களின் உபயோகத்தைப்பற்றி பரிசீலனை செய்ய ஆரம்பித்தார்கள். யுத்த ஆரம்பத்திற்கு வெகுகாலத்திற்கு முன்பு பிரிடனில் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. ஹார்ட் என்ற விமானத்தைக் கட்டி பாய்ச்சல் விமானமாக உபயோகிக்கப் பார்த்தனர். அது பிரயோஜனப்படவில்லை. உடனே அமெரிக்காவிற்கு பருந்தும் பாய்ச்சல் விமானங்களை அனுப்ப ஆர்டர் கொடுக்கப்பட்டது.

அது 1940-ம் ௵ ஜூலை௴த்தில்தான் காமன்ஸ் சபையில் சமீபத்தில் சொல்லியபடி இப்பொழுதுதான் அவை அங்கிருந்து வந்துகொண்டிருக்கின்றன. ரகசியமாக வைக்கப்பட்ட ஹாலிபாக்ஸ் விமானம் இப்பொழுது பகிரங்கமாகி விட்டது. ஹாலிபாக்ஸ் விமானங்களைச் சேர்த்துக்கொள்ள 19 மாதங்களுக்கு முன்புதான் தீர்மானிக்கப்பட்டது. அதற்குத் திட்டங்கள் 5 வருஷங்களுக்கு முன்னமேயே தயாரிக்கப்பட்டுவிட்டன. புது மாதிரி விமானம் கட்டுவதற்கு மூன்று வருஷங்கள் காகிதத்தில் பிளான்கள் வரைந்திருந்தபடி உற்பத்திக்கு வருவதில் அதிக காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லுவதற்கில்லை. உடனே நேசநாடுகளும், அச்சு நாடுகளும் பருந்துப் பாய்ச்சல் விமானங்களைக் கட்ட ஆரம்பித்துவிட்டன. ஆனால் பருந்துப் பாய்ச்சல் விமானத்தின் சக்தி எவ்வளவு?

### குறிபார்த்து குண்டுபோடுவது.

பருந்துப் பாய்ச்சல் விமானங்களில் திடீரென்று திரும்புவதற்கான கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாய்வதற்குத் தக்கவாறு பிரேக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் உதவியால் 60° கோணவடிவிலும் பாயக்கூடும், ஜெர்மன் ஸ்டூக்கா விமானங்களை உசத்தியாகச் சொல்லுவதுமுண்டு. பிரிடிஷ் விமானப்படையில் இதற்குத் தகுந்த விமானம் இருக்கின்றன. கொஞ்சம் திரும்பித் தாக்கினால் குறியைப் பார்த்துத் தாக்கமுடியும்.

ஹெர்மிஸ் போன்ற விமானமேற்றும் கப்பல் மூழ்கியபிறகும் பிரிடன் ஏன் பருந்துப் பாய்ச்சல் விமானங்களைக் கட்டவில்லை என்று கேட்கிறார்கள். உண்மையில் ஹெர்மிஸ் பருந்துப் பாய்ச்சல் விமானங்களால் மூழ்கடிக்கப்படவில்லை. ஆனால் அதிக உயரம்பறக்கும் பல விமானங்களால் மூழ்கடிக்கப்பட்டது. அவ்வித சந்தர்ப்பங்களில்தான் பாய்ச்சல் விமானங்கள் உபயோகிக்கப்படும். விமான ஆதிக்கம் இருக்கும் சந்தர்ப்பத்தில் வெற்றிகரமாக லக்ஷியத்தைத் தாக்கும். குண்டுகளைப் போடுவதற்குள் கீழிருந்து தன்னை விமான எதிர்ப்பு பீரங்கிகள் தாக்காமலிருக்கும்படி ஒரு நொடியில் பலவிதமாகப் பாய்ந்து லக்ஷியத்தைத் தாக்கும்.

### பாதகமான அம்சம்.

துருப்புகளின் நிலயங்களை பாய்ச்சல் விமானங்கள் தாக்குவதைப்பற்றி அதிகம் சொல்லப்பட்டிருக்கிறது. விமான ஆதிக்கம் இருக்கும் ஸ்தலங்களில் இது சரியான முறைதான். இருந்தாலும் பல பீரங்கிகளுள்ள ஸ்பிட்பையர், ஹரிகேன்களைப்போல் அவ்வளவு கடுமையாக இதனால் தாக்குதல் செய்ய முடியாது. நவீன பைடர் விமானத்தைக்கொண்டு பருந்துப் பாய்ச்சல் விமானத்தைச் சுட்டுத்தள்ளிவிடலாம். பிரிடன்மேல் நடந்த விமானப்போர், மால்டா

முதலியவை இதற்குத் திருஷ்டாந்தமாகும். சிறிய விமான எதிர்ப்பு பீரங்கிகளாலும் இதைச் சுடமுடியும். ஆனால் கீழிருக்கும் மனிதன் விமானமிறங்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். எப்படியிருந்தாலும் விமான ஆதிக்கம் இருந்தால்தான் வெற்றியடைய முடியும். பிரிடிஷ் விமானப் படையும் பல சந்தர்ப்பங்களில் பருந்துப் பாய்ச்சல் விமானங்களைக்கொண்டு வெற்றியடைந்திருக்கிறது. வரவர நிலைமை மாறிக்கொண்டே வருகிறது. தேவைக்குத் தக்கவாறு பருந்துப் பாய்ச்சல் விமானங்களும் உபயோகப்படுத்தப்படும்.

---

## ஜெர்மனியின் உள்நாட்டு நிலை.

## சாமான்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யப்படும் ஏற்பாடுகள்.

(லண்டன் டைம்ஸ் பத்திரிகையிலிருந்து).

ஜெர்மனியின் வசந்தகாலத் தாக்குதல் பலமாகச் செய்யப்பட்டாலும் அதற்குக் கிடைக்கும் பயன் ஜெர்மனியின் உள்நாட்டு நிலையைப் பொறுத்திருக்கிறது. ஜெர்மனியின் யுத்த முஸ்தீப்பு பெரிதாயும், அதிக சிருங்கலையுள்ளதாகவும் இருப்பதால் தவறுதலன்னியில் ஒவ்வொரு அங்கங்களும் சரியாக நடந்துகொண்டால்தான் வெற்றியடையலாம்.

எதிர் பாராதவிதமாக ருஷ்யப் போர்முனையில் ஜெர்மானியர்களுக்கு ஏராள சாமான்களும், மனிதர்களும் நஷ்டம். அதே விதமாக ருஷ்ய ரிஸர்வ் படைகளும் தைரியமாகச் சண்டை செய்தனர். ஆகவே ருஷ்யர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு லாயக்கான படையை முதலில் திரட்டிக்கொண்டு, அதன் பிறகு வசந்த காலத் தாக்குதலை செய்யவேண்டியதில் ஜெர்மனி கவனம் செலுத்த வேண்டியிருந்தது. இதற்காக ஜெர்மனியில் பல வேலைகளில் ஈடுபட்ட பொது மக்களை வயது முதலியவைகளை கவனியாது சைனியத்தில் சேர்க்க ஏற்பாடாயிற்று. நடுநிலை நாடுகளான ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, ஸ்பெயின், போர்ச்சுகல், துருக்கி முதலியவைகளிலிருக்கும் ஜெர்மானியர் அழைத்துக்கொள்ளப்பட்டனர். ஹங்கேரி, ருமேனியா போன்ற நாடுகளிலும் புதிய சைனியங்கள் சேகரித்துக் கொடுக்கப்பட்டன. இவ்விதமாக பல நாடுகளிலிருந்து சேர்க்கப்பட்ட சைனியத்தில் ஜெர்மானியர் மாத்திரம் அடங்கிய சைனியத்தில் இருக்கும் தன்மை காணப்படவில்லை.

### குறைந்த சக்தி.

ஜெர்மனியில் பலவித வேலைகளில் ஈடுபட்டவர்களை வைத்துக்கொண்டதால், தொழிற்சாலைகள் சரிவர நடைபெறவில்லை. இதற்காக வேறு சில தந்திரங்கள் கண்டுபிடிக்கவேண்டியதாயிற்று.

முன்பு பொதுஜனங்களுக்கு உபயோகப்படும் சாமான்களை ஜெர்மன் தொழிற்சாலைகள் 60 சதவிகிதம் உற்பத்தி செய்தன. இப்பொழுது ஐந்தில் ஒரு பகுதிதான் உற்பத்தி செய்யப்படுகிறது.

வெறும் ஆட்டு மந்தைகளைப்போல் சைனியத்தில் ஆட்களைச் சேகரித்து யுத்த சக்தி குறைந்தது போல, தொழிற்சாலைகளிலும் அனுபவமில்லாதவர்களைச் சேர்த்ததினால் சாமான் உற்பத்திவேகமும் குறைந்துவிட்டது. இருந்தாலும்,



முந்தியைவிட அதிக சாமான் உற்பத்தி செய்துவிடலாம் என்று மாத்திரம் சொல்லப்பட்டு வந்தது. சமீபத்தில் ஜெர்மன் தொழில் மந்திரி, "இரண்டு உண்டான இடத்தில் மூன்று" அதாவது 50 சதவிகிதம் அதிகமாக இருக்க வேண்டுமென்று சொல்லிவந்தார்.

### அயல் தேசத்தினரும், ஸ்திரீகளும்.

ஜெர்மனியில் யுத்தத்திற்கு முன்னிருந்ததைவிட அதிக வேலைக்காரர்கள் இருக்கிறார்களா என்பது கவனிப்பது கஷ்டம். ஏத்தாழ்வுகள் இருக்கத்தான் இருக்கும். ஏனென்றால் புருஷர்களை ராணுவ சேவைக்கு அழைத்துக் கொண்டதும், அந்த இடத்திற்கு ஸ்திரீகள் சேர்ந்து கொள்ளுகிறார்கள். பெண்களும், பையன்களும் பள்ளிக்கூடத்தை விட்டு தொழிற்சாலைகளில் சேர்ந்து கொள்ளுகிறார்கள். வயது முதிர்ந்த வேலைக்காரர்கள் இறந்துபோவதால், இதற்காக அயல் நாட்டிலிருந்து தொழிலாளிகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். தற்போது கிடைத்துள்ள கணக்கைப் பார்த்தால் 1939-ஐ விட குறைவாகத்தான் காணப்படுகிறது. அயல் நாட்டுத் தொழிலாளிகள் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். (ஆனால் தோட்டங்களிலும், ரஸ்தா போடுவதிலும் ஈடுபட்டிருக்கும் 20,00,000 கைதிகள் இதில் சேர்க்கப்படவில்லை). ஆகவே எண்ணிக்கை அதிகமும் இல்லை, வேலை நேர்த்தியுமில்லை.

1939-ல் வேலைபார்த்துவந்த ஸ்திரீகளின் எண்ணிக்கை 53,00,000. தற்சமயத்தில் 94,00,000 இருக்கிறார்கள். இந்த 11,00,000 அதிக எண்ணிக்கையில் 7,50,000 ஜெர்மன் ஸ்திரீகள். ஸ்திரீ வேலைக்காரர்களின் எண்ணிக்கை 1,00,00,000 அதிகரிக்கலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது. அந்த எண்ணிக்கை கைகூடினால் 10,00,000 அதிகமான ஜெர்மன் ஸ்திரீகள் புருஷர்களின் வேலைகளில் ஈடுபடலாம்.

பல காரணங்களை முன்னிட்டு அயல்நாட்டு வேலைக்காரர்களை உபயோகித்துக் கொள்ள முடியாது. ஜெர்மன் தொழிற்சாலை வேலைக்காரர்களைப்போல் அயல் நாட்டு வேலைக்காரர்கள் காரியங்களைச் செய்யவில்லை. ஜெர்மன் தொழிலாளிகள் 90,00,000 லிருந்து 1,20,00,000 வரை இருக்கலாம். அயல் நாட்டு தொழிலாளிகளின் எண்ணிக்கை 30,00,000 தான். ஒருக்கால் 40,00,000 வரை அதிகமாகலாம். இவர்களில் யாருக்காவது ஜெர்மனி வெற்றியடைய வேண்டுமென்ற விருப்பமே கிடையாது. சொந்த நாட்டில் வேலையில்லாததால் ஜீவனத்தை முன்னிட்டே ஜெர்மனியில் உழைக்க ஒத்துக்கொண்டார்கள். நாஸிக் கொள்கையை இவர்கள் விரும்பவில்லை, ஜெர்மன் வெற்றியைக் கண்டு சந்தோஷமடையவுமில்லை. போலந்துக்காரர்களும், செக்கர்களும் ஜெர்மன் தோல்விகளில் சந்தோஷமடைகிறார்கள்.

### மனமில்லாத தொழில்காரர்கள்.

ஜெர்மனியிலிருக்கும் அயல்நாட்டு தொழிலாளிகள் பி. பி. ஸி. ஒலிபரப்பை எப்படியோ கேட்டுவிடுகிறார்கள். பிறருக்குப் பரவவும் செய்கிறார்கள். உணவு, வேலை செய்யும் சந்தர்ப்பங்கள் முதலியவைகளைப்பற்றி சதா புகார் செய்து கொண்டே இருக்கிறார்கள். இவர்களை ஜெர்மானியரிடமிருந்து பிரித்தால் தான் தொழில் நன்றாக நடக்கும். இதற்காக முதலில் 6 மாதங்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள். பாஷை, மதம் பழக்கம் முதலியவைகளில் தகராறுகள் ஏற்படுகின்றன. எவ்வளவு கெடுதல் இருந்த போதிலும் மீண்டும் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து வேலைக்காரர்கள் சேகரிக்கப்படுகிறார்கள்.

ஜெர்மானியர்கள் யுத்த சாமான்கள் செய்யவே நியமிக்கப்படுகின்றனர். அயல் நாட்டினர் பொதுமக்களின் தேவைக்கான சாமான்களை செய்கின்றனர். இந்த வருஷம் முதற்கொண்டு ஆக்கிரமித்த நாட்டிலுள்ளோரையும் யுத்த

சர்மான் செய்ய நியமிக்கப்படுகிறது. நிலக்கரிச் செலவு, போக்குவரவு சிரமம் முதலியவை இல்லாமலிருப்பதற்காக சில தொழிற்சாலைகள்தான் நடத்தப்படுகின்றன.

### விசேஷ முறைகள்.

முன்பு இருந்ததைவிட உத்தியோகஸ்தர்களின் முறை குறைந்துவிட்டது. படிப்பு அனுபவம் எல்லாவற்றையும் உபயோகப்படுத்தும்படி சாமான் உற்பத்தி செய்வோருக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஆபீஸ் வேலையைக் குறைப்பதற்காக வேலைக்காரர்களுக்கு மாதம் ஒருமுறை சம்பளம் போடப்படுகிறது. தொழிலாளிகள் ஒரே வயதுள்ளவர்களாகப் பொருக்கப்பட்டு நியமிக்கப்படுகின்றனர். தானாக வேலை செய்யும் யந்திரங்களில் ஒரு அனுபவமுமில்லாதவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

அனுபவத்தில் தினம் 10 மணி நேரம்தான் தொடர்ச்சியாக வேலை செய்ய முடியும். இவ்விதம் வேலை செய்யக் கூடியவர்களை சைனியத்தில் சேர்ப்பதில்லை. ராணுவ சேவைக்காக ஆட்களை அனுப்பும்படி கேட்டால் தொழிற்சாலை எஜமானன் திறமையில்லாதவனைத்தான் அனுப்புவான்.

இவ்விதமான சிரமங்களால் ஜெர்மன் சைனியம் அதிகமான சக்தி வாய்ந்ததாக ஆகவில்லை. மறைவாக ரிஸர்வ் படைகள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. முடிந்தவரை யந்திரங்களையே உபயோகித்துக்கொண்டு மனிதர்கள் ராணுவ சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவைகளின் பயன் என்னவாகும் என்று அச்சு நாட்டினரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

---

## ருன்ஸ்டெட்டின் தலைமைப் பதவி மாறுதலின் பயன்.

## மார்னே சம்பவம்போல் இப்பவும் நேரலாம்.

('அப்ஸேர்வர்' என்ற பத்திரிகையிலிருந்து).

### 1914-ம் வருஷமும்—1942-ம் வருஷமும்.

1914-ம் வருஷ ஸெப்டம்பர் மாதத்திலிருந்த தோற்றத்திற்கும் இந்த வசந்த கால யுத்தத்தோற்றத்திற்கும் மாறுதல் அதிகமிருக்கிறது. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டில் ஒற்றுமை இருக்கிறது. ஐரோப்பா கண்டத்தில் ராஜீய விஷயத்திலும், ராணுவ நடவடிக்கையிலும் சென்ற சில நாட்களாகவே சில முக்கிய சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன.

### மாரிகாலப் போர்.

சென்ற சில நாட்களில் ஜெர்மானியர்கள் எதிர் பார்த்ததற்கு மாறாக மாரி கால யுத்தம் உன்னத நிலையை அடைந்தது. மாஸ்கோ, லெனின்கிராட், ரோஸ்டவ் முதலிய நகரங்களுக்கு வெளிப்புறங்களிலேயே நாஸிகள் நிற்கும்படி தடைபட்டிருக்கிறார்கள். இந்த போராண் நெடுகிலுமுள்ள ஜெர்மானியர்கள் இருக்கும் ஸ்தானங்களின் பலாபலத்தை ருஷ்யத் துருப்புகள் அடிக்கடி பரிசோதித்து வருகிறார்கள். ஜெர்மனியின் பாதுகாப்பு வரிசைகளில் எங்கேனும் ஒரு இடத்தில் ஒரு திறப்பு காணப்பட்டால் ஜெர்மனியின் பூரா பாதுகாப்பு முறைக்கு அழிவுநேரிடும்.



கடுமையான குளிர்காலத்தில் ஜெர்மானியர்கள் கிழக்குப்போர்முனையில் பிரதானமான 100 படைப் பகுதிகளுக்கு மேலேயே உபயோகித்து சமாளித்து வந்தார்கள். ருஷ்யாவில் டிஸம்பர் மாதத்தில் கடுமையான எதிர்ப்புக்காக வரவழைக்கப்பட்ட சைனியங்களான வாபென் (Waffen S. S.) பகுதி, ஆஸ்திரியாவிலிருந்தும், பவேரியாவிலிருந்தும் வந்த ஆல்பைன் துருப்புகள், தளகர்த்தர் ஸ்டுடெண்ட்ஸின் கீழுள்ள குடைப்படைகள் தற்போது தரைச்சண்டை செய்யத் தயாரானவர்கள், குடேரியனுக்குட்பட்ட பான்ஸர் பகுதிகள், இவைகளும் அந்த 100 பகுதிகளில் அடங்கியிருந்தன.

இவ்வீரர்கள் மிக்க துன்பத்தை அடைந்தார்கள். ஆனால் சிற்சில இடங்களில் நினைக்கப்பட்டபடி அவர்களுக்கு அதிகத் துன்பம் நேரிடவில்லை. இருந்தபோதிலும் அவர்களுக்கு நேரிட்ட சேதம் முக்கியமான விஷயமல்ல. ஆனால் ஜெர்மன் ஸ்தாபனம் எதிர் பார்த்ததற்கு மேல் அவர்களுக்கு நஷ்டம் நேர்ந்ததுதான் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. இதிலுள்ள வித்தியாசம் அதிகம்தான்.

### புதிய நாஸித் துருப்புகள்.

முன்னணியிலுள்ள 100 படைப்பகுதிகளுடன் புதிதாகத் கைத்தொழிலிலும், விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த மனிதர்களைக்கொண்டு சேகரிக்கப்பட்ட 80 முதல் 100 படைப்பகுதிகளும் உதவியாகச் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. புதுத் துருப்புகள் என்றால் எல்லா விதத்திலும் அவை புதியவைதான். முந்திய ஜெர்மன் பகுதிகளில் உள்ளவர்களைக் காட்டிலும் இவர்களுக்கு வயது அதிகம். இவர்கள் காலத்தில்தான் நாஸி ஆட்சியை யாதொரு மறுப்பின்றி யாவரும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் நாஸிக் கொள்கையில் மூட நம்பிக்கை கொண்டவர்களல்ல.

இவர்களின் பலக்குறைவை நாஸிகள் அறிந்துள்ளார். யுத்தத்திற்காக அப்புதுத் துருப்புகளைப் பரவச்செய்வதில் ஒரு விசேஷ சிரமம் இருக்கிறது. பிரான்ஸிற்காவது, ஹாலந்திற்காவது அல்லது நார்வேக்காவது அவர்களை அனுப்பத் துணியவில்லை. அவர்கள் கிழக்குப் போர்முனைக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள நல்ல பயிற்சிபெற்ற நாஸித் துருப்புகளுடன் கலந்துகொள்ள வேண்டியது, என்றே ஏற்பாடாயிற்று.

### பிரான்ஸுக்கு ருன்ஸ்டெட் வருவதற்குக் காரணமென்ன?

விஷி அரசாங்கத்தில் நாஸிகள் தாக்கியதும், வான் ருன்ஸ்டெட் பிரான்ஸுக்கு வந்துசேர்ந்தது இவற்றிற்கு ஆதாரமாக வைத்துப்பார்க்க வேண்டும். இதுவரை வான்ருன்ஸ்டெட் திட்டங்களைத் தயாரித்து, உத்தரவிடும் தலைமை அதிகாரியாக இருந்ததில்லை. அதற்கு மாறாக ஜெர்மன் ஸ்தாபனம் போட்ட திட்டங்களை வெற்றிகரமாகக் காகஸஸை நோக்கி முன்னேறிச் செல்ல அவர் ஜெர்மன் சைனியத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். இடீரென்று அவரை வரவழைத்ததில் தலைமை அதிகாரிகளை மாற்றுவது மட்டுமல்ல, அதில் இன்னும் ஒரு விசேஷமிருக்கிறது.

இதுவரை ஜெர்மனி பிரான்ஸில் 20 அல்லது 30 படைப்பகுதிகளை வைத்திருந்தது. ஆனால் அத்துருப்புகள் அதே இடத்திலிருந்துகொண்டு பாதுகாப்பு சேவை செய்துவந்தன. பிரான்ஸில் படையெடுப்பு கோஷ்டிகளும், தாக்குதல்களும் அதிகரித்தவுடன் எதிரிகளின் பாதுகாப்பு நிலையில் பலவந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளைக்கொண்டு தாக்குதலில் கருத்தில்லாத தளகர்த்தர் செய்யக்கூடியதும் ஒன்றுமில்லை. அவரைக்காட்டிலும் இந்தப் படைப் பகுதிகளை வைத்துக்கொண்டு ருன்ஸ்டெட்டும் அதிகம் ஒன்றும் செய்துவிட முடியாது.

## ருஷ்யாவிலிருந்து அவர் வரவழைக்கப்பட்டார்.

வான்ருன்ஸ்டெட் வரும்பொழுது வழக்கமாக அவருடன் ஈடுபட்டிருக்கும் கவசப்படைகளுடனும் அவர் பிரான்ஸுக்கு வந்திருப்பார் என்று நாம் நிச்சயமாக எண்ணலாம். இந்த கவசப்படைகள் கிழக்குப் போர்முனையிலிருந்துதான் வந்திருக்கக்கூடும். தளகர்த்தர் ரோமல் வசம் உபரியான சைனியங்கள் இல்லாததினால் அவர் சைனியங்கள் உதவிக்கனுப்ப முடியாது. பால்கன் தேசத்தார்களிடமும் ரொம்பக் குறைவாகத்தான் கவசப்படைகள் ஸப்ளை செய்யப்பட்டிருக்கின்றன. ஜெர்மனிக்குள் வைக்கப்பட்டிருக்கும் ரிஸர்வ் படைகள் வேறு வழியில்லை என்றாலொழிய வரவழைக்கப்படமாட்டா. அதனால் கேவ், ஸ்மொலென்ஸ்க், நீப்பர் இந்த இடங்களில் சேகரிக்கப்பட்ட பான்ஸர் படைப்பகுதிகளிலிருந்துதான் வரவழைக்கப்படவேண்டும்.

பிரான்ஸ் மறுபடி யுத்தத்தில் புகுந்ததில் சமுத்திரத்தில் நேசதேசத்தார்களுக்கு மோசமான நடவடிக்கைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் தரைச் சண்டையில் அதிக சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தாக்குதல் ஆரம்பமாவதற்குமுன் ருஷ்யர்கள் சமநிலைமையை அடைந்திருப்பதினும், ருஷ்யர்கள் அவர்கள் நாட்டில் ஆகாயச் சண்டையில் ஆதிக்கம் பெற்றிருப்பதினும், நாஸிகள் இப்பொழுது அங்குள்ள தங்கள் படைப் பலத்தைக் குறைத்துவிட்டால், அவர்களுக்குக் கடுமையான சேதம் ஏற்பட்டு மார்னேயில் சென்ற யுத்தத்தில் நடந்ததுபோல் மறுபடியும் ஏற்படும்.

## மார்னேயும், நீபரும்.

அம்மாதிரி நடப்பதற்கு முதல் படியாக பிரெஞ்சுக் கப்பற்படையை அவர்கள் உபயோகித்தார்கள். இதனால் கிழக்குப் போர்முனையில் ஜெர்மனியின் பாதுகாப்பில் பலக்குறைவு ஏற்பட்டு வருவதுபோல் காணப்படுகிறது. இப்பொழுது நேசதேசத்தார்கள் ஒன்றுசேர்ந்து யுத்த தந்திரத்துடன் நடந்துகொண்டால், ருஷ்யாவிற்கு மேற்கேயுள்ள நேசதேசத்தார்கள் உண்மையாகவே ஜெர்மனியின் பலத்தைக் குறைத்துவிடலாம். அப்படி நடந்தால் போரோடினோவிலும், நீப்பரிலும் இதுசமயம் முந்தி மார்னேயில் நடந்த மாதிரிதான், ஏற்படும்.

1914-ம் வருஷத்தில் மார்னேயில் நடந்ததின் பயனாகத்தான் 1918-ம் வருஷத்தில் கெய்ஸர் தோல்வியடைந்தது. ஆனால் 1912-ம் வருஷத்தில் சம்பவங்கள் வெகு துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

---

# ஜப்பான் சீனாவில் ஜயித்த நாடுகளை ஒன்றுபடுத்த விரும்புவது ஏன்?

(ஸர்டோக்ளஸ் பிரௌன்ரிக் என்பவர் எழுதியது).

வெவ்வேறு இடங்களில் அபிவிருத்தியடைந்துவரும் சம்பவங்களினால் சீனாவில் விபரீதமாக நடந்துவருபவைகளை நாம் கவனியாமல் இருந்துவிடக்கூடாது. கருங்கடலிலும், பால்டிக் சமுத்திரத்திலும் ஏற்படும் நிகழ்ச்சிகளைப்பற்றி சிந்திப்பதற்கு முன்னதாகவே சீனாவில் நடந்துவருவதைப்பற்றி, நமது கவனத்தைச் செலுத்தவேண்டியது மிக்க அவசியம்.

சென்ற டிஸம்பர் மீ 7உ பேர்ல் துறைமுகத்தைத் தாக்கி, யுனைடெட் ஸ்டேட்ஸுடன் ஜப்பான் யுத்தத்திலிறங்கியபொழுது தொடர்ந்தாற்போல் நான்கு வருஷங்களாக ஜப்பானியர்களுடன் போர் செய்துவரும் சீனர்களுக்கு ஓய்வு கிடைக்கும்போல் தோன்றிற்று. சீனாவிலிருந்த ஜப்பானியத் துருப்புகளை பிலிப்பைன்ஸ் தீவுகளிலும், மலேயாவிலும் தாக்க அனுப்பப்பட்டிருக்கும் துருப்புகளுடன் சேர்ந்துகொள்ளுவதற்காக வரவழைத்த செய்தி கிடைத்தவுடன் இந்த நோக்கம் ஊர்ஜிதமடைந்தது.



## பின்புறமாக முன்னேறுதல்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஜப்பானியர்களுக்குத் துரிதமாக வெற்றி கிடைத்து, 6 மாத காலத்திற்குள்ளாகவே சீனாவுக்குப் பின்புறமாக லாஷியோவழியாகவும், பர்மா ரஸ்தா வழியாகவும் ஜப்பானியத் துருப்புகள் சீனாவை அடைந்திருக்கின்றன. பிரிடன், அமெரிக்கா இந்த தேசங்களில் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட முக்கியமான பொருள்களை சீனாவுக்குக் கொடுத்து உதவிவந்ததில், ரங்கூனிலிருந்து யூனான் மாகாணம் வரைக்கும், சீனாவுக்கு ஜீவனாடியாகயிருந்த ஸப்ளை மார்க்கம் முழுவதும் இப்பொழுது ஜப்பானியர்களின் ஆதிக்கத்தில் வந்துவிட்டது. இந்த ஸப்ளை மார்க்கம் துண்டிக்கப்பட்டது மட்டுமல்ல, அந்த வழியாகவே பருவக்காற்று ஆரம்பமாவதற்கு முன் பர்மா பூராவும் வியாபித்துக் கொண்ட ஜப்பானியத் துருப்புகள் மேற்கிலிருந்து சீனாவின் உயிர் நிலையான ஸ்தானங்களில் முன்னேறுவதற்கு ஹேதுவாய்விட்டது. தற்சமயம் சுங்கிங்கை நோக்கி இந்த மார்க்கம் வழியாக, ஜப்பானியத் துருப்புகள் முன்னேறி வருகின்றன. இதே சமயத்தில் சிகியாங் மாகாணத்தில் தெற்கு சீனா கடற்பிரதேசத்தில், மற்ற ஜப்பானியத் துருப்புகளும், புதிது புதிதாகத் தாக்குதல்களை நடத்திவருகின்றன. இந்தப் பிரதேசம் ஷாங்கேயிக்கு அடுத்த தென்புறத்தில் இருக்கிறது. வங்காளக் குடாக் கடலிலிருந்து பவளக் கடல் வரைக்கும் எல்லைப்புறத்தில் முன்னேறிச் சென்ற ஜப்பானியத் துருப்புகள் வியாபித்திருக்கும்பொழுதே சீனாவை விழுங்கிவிடவும், ஆஸ்திரேலியாவிலிருந்தாவது, இந்தியாவிலிருந்தாவது அல்லது இரண்டு இடங்களிலிருந்தாவது கண்டிப்பாகத் திரும்பத் தாக்குதல் ஒரு நாள் ஏற்படுமென்று பயந்து தாங்கள் ஜயம்பெற்ற நாடுகளை ஒற்றுமைப்படுத்தவும், ஜப்பானியர்கள் எண்ணங்கொண்டிருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஜப்பான் கொண்டிருக்கும் கருத்தைப் பூர்த்தி செய்ய இது நல்ல முறையாகத்தான் தோன்றும்.

## அதன் சாதகங்கள்.

முதலாவதாக, அதன் கடற்படை பலம் குன்றாமலிருக்கிறது. ஏனென்றால், கடற்படைக்கு அதிக வேலை கொடுக்கப்படவில்லை. இரண்டாவதாக ரங்கூன் முதல் நியூ பிரிடன் வரை அரை வட்டமாக 5,000 மைல் நீளத்திலுள்ள எல்லைப்புற ஸ்தானங்களிலிருந்து ஜப்பானியத் துருப்புகள் வெளியிலிருந்து அயல் தேசத்தார்களின் இடையூறில்லாமல் சீன எதிர்ப்பை அழித்துவரக்கூடும். சென்ற யுத்தத்தில் பள்ளங்கள் வெட்டி நடத்திவந்த யுத்த முறையில், தாக்கும் துருப்புகள் தூரத்திலுள்ள லக்ஷியத்தைக் குறித்து நேராகச் செல்லுவது வழக்கம். அந்தத் துருப்புகளுக்கு உதவியாக வேறு கோஷ்டிகள் தயாரிக்கப்பட்டு, வேகமாக முன்னேறிச் சென்ற ஸ்தானங்களுக்குப் பின்னாலுள்ள எதிர்ப்பை அந்த கோஷ்டிகள் அழித்துவிடும். இப்பொழுது ஜப்பானில் இதே முறையை கையாள எத்தனிப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் ருஷ்யாவிலிருந்து வடக்கே வரும் பாதையை விட வேறு வழியில்லாமல், சீனா அதன் நேசதேசங்களிலிருந்து தாத்காலிகமாகத் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

புத்திசாலித்தனம் வாய்ந்த தலைவன் ஒவ்வொருவரும் ஒரு திட்டமில்லாமல் போனால் மறு திட்டம்போட எண்ணியிருப்பான். ஜப்பான போட்டிருக்கும் திட்டங்களில் ஒன்று கொளும்பு, மடகாஸ்கர் வழியாக ஜப்பானியர்கள் மேற்குப் புறம் முன்னேறிச் சென்று பர்ஸியன் குடாக்கடலில் வரும் ஜெர்மானியர்களுடன் சேர்ந்துகொள்ளப் பிரயத்தனம் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனால் ஐக்கிய தேசங்கள் மடகாஸ்கரை தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவந்துவிட்டவுடன் இந்தத் திட்டம் தவறிவிட்டது. மேலும் ருஷ்யாவின் பேரில் ஹிட்லர் செய்துவரும் தாக்குதலை முன்னேறவிடாமல் காலதாமதம் ஏற்பட்டதினால் ஜப்பானியத் தலைவர்களுக்குப் பெருத்த யோசனை செய்யவேண்டியதாயிற்று. ஆகையால் சாதாரணமாக இப்பேர்ப்பட்ட நிலைமையில் ஜெர்மனியுடன் ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கும் சிநேகத்திற்காக, ஜப்பானுக்குக் கிடைத்திருக்கும் சாதகத்தைப் பரித்தியாகம் செய்வதைக் காட்டிலும் ஜப்பான் தன்னுடைய அவசரத் தேவைகளைக் குறித்து கவனத்தைச் செலுத்துவதுதான் மேலானது.

### இரண்டாவது திட்டம்.

ஆகையால், சமீபத்தில் நடந்த சம்பவங்களினால் ஜப்பானியப் பொது ஸ்தாபனம் போட்டிருந்த இரண்டாவது திட்டம் அதாவது, 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்று சொல்லும் வசனத்தைப்போல ஏற்கனவே ஜயமடைந்தவைகளை நன்றாகப் பலப்படுத்தியும், தன்னுடைய எல்லைப் பிரதேசத்திற்குள்ளிருக்கும் எதிர்ப்புகளை அழிப்பதுமான இந்தத் திட்டத்தை அனுசரித்து நடத்திவருகிறதாகத் தெரிகிறது. இதனால் ஐக்கிய தேசத்தார்கள் எதிரிகளின் மேல் திரும்பத் தாக்குதல் செய்வதற்கு ஆஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும் தங்கள் படைகளைச் சேகரிக்க அவகாசம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இம்மாதிரி படை சேகரிப்பதற்காக ஜப்பானியக் கப்பற்படை முன்னேறுமானால் அதனால் சமாளிக்கமுடியாது. ஜப்பானியக் கப்பற்படை பந்தோபஸ்து கொடுக்காமல் போனால் ஜப்பானியர்கள் வியாபித்திருக்கும் பிரதேசம் பூராவும் ஆபத்துக்குள்ளாகிவிடும்.

என்னுடைய அபிப்பிராயங்கள் சரியானால் ஜப்பானியர்கள் சுயநலம் பாராட்டி நடந்துவருகிறார்களே தவிர பொதுவாக அச்சுநாடுகளின் அக்கறைக்காக இல்லை என்று சொல்லிவிடலாம். ஜப்பானின் உட்கருத்து வெளியாவதற்கு இது ஒரு நல்ல அறிகுறி.

---

## பர்மாவில் இந்திய விமானப்படை.

(ஒன்பது வருஷங்களுக்கு முன்தான் தயாரிக்கப்பட்டாலும் போரில் நன்றாகச் சண்டையிடுகிறது).

இந்திய விமானப்படை சமீபத்தில் ஒன்பது வருஷங்களுக்கு முன்தான் தயாராயிற்று. அது பிரிடிஷ் சாம்ராஜ்ய விமானப்படைகளைக் காட்டிலும் கடைசியாக ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது முதல் தடவையாகப் போரில் ஈடுபட்டிருக்கிறது. அது 1933ஆம் ஏப்ரல் மீ 1-ம் தேதியில் ஏற்பட்டது. அப்படையின் ஒரு பகுதி பர்மாவுக்கு அனுப்பப்பட்டு அதில் ஈடுபட்டவர்கள் யாவரும் புகழுடன் திரும்பினார்கள். இந்திய ஆகாய விமான இலாகா தலைமை உத்தியோகஸ்தர் ரிச்சேர்ட் பீர்ஸ் அவர்கள் வேலையைப்பற்றி புகழ்ந்து பேசினார். இந்திய விமானப்படையின் ஒரு பகுதி போரில் காட்டிய திறமையிலிருந்து மற்ற படைப்பகுதிகளும் போரில் ஈடுபட்டவுடன் இன்னும் மகத்தான வேலைகள் செய்துமுடிக்கும் என்பதில் சந்தேகமில்லை என்றும் சொன்னார். தங்கள் சொந்த நாடு தாக்கப்படுமேயாகில் இந்திய விமானிகள் போருக்கு அழைக்கப்படுவார்கள் என்பதைக்குறித்தே விமான இலாகாத் தலைமை அதிகாரி சொல்லியிருக்கிறார்.

பர்மா யுத்தம் ஆரம்ப காலத்தில் ஸால்வீன், பிலின் நதிக்கரைகளில் போர் நடத்திக்கொண்டிருந்த பிரிடிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் அடங்கிய சைனியங்களுக்கு இந்திய விமானப்பகுதி உதவிப்படையாக அனுப்பப்பட்டிருந்தது. அதே சமயத்தில் பிரிடிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானப்படையும் சேர்ந்து ஜப்பானிய விமான பலத்தை முறியடித்தன. அதனால் விமானப் போரில் நேரிட்ட வெற்றிகள் தரையிலுள்ள நம் படைகளுக்கு உற்சாகமூட்டின.

பிப்ரவரி மீ 4உ புதன்கிழமையன்றுதான் இந்திய விமானப்படையின் பெரிய தாக்குதல் நேரிட்டது. பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர் விமானங்கள் இந்திய விமானப்பகுதியின் தலைவரின்கீழ், தாய்லாந்தில் விரோதி ஆக்கிரமித்த விமான நிலயங்களில் ஒன்றை மிக்க கடுமையாகத் தாக்கின. விமான நிலயத்தைச் சேர்ந்த கட்டடங்கள், நிலயம் தரையிலுள்ள விமானங்கள் யாவும் நம் விமானப்பகுதியின் முக்கிய லக்ஷியங்களாகின. ஆனால் இந்தத் தாக்குதல்களைப்பற்றி உத்தியோக முறையில் பிரிடிஷ் விமானப்படை பர்மாவில் வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தினவென்று வெளியாயிற்று.



### தாய்லாந்திற்குள்.

பிற்பட்டு ரெங்கூனை விட்டுவிட்டு அந்நகரத்திற்கு வடக்கே போராங்கம் ஏற்படுத்திவந்த வாரங்களில் இந்திய விமானப்பகுதி தரைப்படைக்கு உதவியாக அநேக தடவைகள் வந்து, வேண்டிய உதவிகளைச் செய்தது. அநேக சமயங்களில் அதற்கு வேண்டிய சௌகரியத்தையோ இன்னும் அவசியமான பொருள்களையோ அடையமுடியாமல் போய்விட்டது. அவ்விமானிகள் கொசுக்கள் நிறைந்த வயல்களில் தங்கள் விமான இறக்கைகளின்மேல் சாய்ந்துகொண்டு தூங்குவார்கள். சாப்பாடு நிச்சயமாகக் கிடைக்கும் என்று சொல்வதிற்கில்லை. அவர்கள் ஸ்நானம் செய்வதற்குக்கூட அவகாசமில்லாமல் இருந்தது.

அங்கு நடந்த பிரக்யாதிபெற்ற தாக்குதலில் மதராஸிலிருந்து வந்த விமான உத்தியோகஸ்தர் பிரிடிஷ் பாம்பர் படையை நடத்திச்சென்றார். அப்பகுதி இந்திய விமானப்பகுதியுடன் ஒத்துழைத்தது. பல போர்முனைகளில் விமானத் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்த பிரக்யாதிபெற்ற விமானிகளுக்கும், நமது இந்திய விமானிகளுக்கும் பரஸ்பர அந்நியோன்யம் ஏற்பட்டிருந்தது. தாக்குதலில் குறிப்பிட்ட லக்ஷியங்களின் பேரில் விமானிகள் தைரியமாக 500 அடிவரை கீழே இறங்கி குண்டுகள் வீசினார்கள். மோல்மீன், மார்டபான், டெயின்ஸீக், பிலின், இன்னும் பர்மாவிலுள்ள மற்ற விரோதி ஆக்கிரமித்த பிரதேசங்களில் இந்திய விமானிகள் வெற்றிகரமாகத் தாக்கினார்கள். தாய்லாந்திலுள்ள லக்ஷியங்களின் பேரிலேயே அவர்கள் பல தடவைகள் வந்து தாக்கினார்கள்.

சிங்மேயின் பேரில் இந்திய விமானப்படை படையெடுத்தபொழுது அங்கு ஏராளமாக விரோதித் துருப்புகள் இருந்தன. "ஜப்பானியத் துருப்புகளை நோக்கி நம் விமானங்கள் கீழே பாயும்பொழுது, அவர்கள் ஒன்றும் தெரியாமல் திகைப்படைந்துபோய் அங்குமிங்கும் தப்பித்துக்கொள்ள ஓட எத்தனித்தார்கள்" என்று இந்திய விமான உத்தியோகஸ்தர்களில் ஒருவர் அப்படையெடுப்பைப்பற்றி விஸ்தரித்தார். இப்படையெடுப்பு மிகவும் தீர்மானத்துடன் நடத்தப்பட்டது. குண்டுகளை வீசிவிட்டு தங்கள் விமானத் தளங்களுக்கு மீண்டும் திரும்பி வரும்பொழுது, தாக்குதல் ஏற்பட்ட இடத்திலிருந்து 1,000 அடி உயரம் வரை கருப்பும், வெள்ளையும் கலந்த புகை கிளம்பிவருவதைப் பார்த்தார்கள். மெஹாங் ஸோனின் பேரில் ஏற்பட்ட படையெடுப்பில் அங்குள்ள பொதுமக்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். இந்திய விமானப்படையை ஹரிக்கேன் விமானங்கள் பின்தொடர்ந்து சென்றன. அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்த ராணுவதளங்கள் யாவும் கடுமையாகத் தாக்கப்பட்டு தகர்க்கப்பட்டன.

விமானங்களுடன் கீழிறங்கி அங்கிருந்த விமானம் ஒன்றை அழித்துவிட்டார்கள். மற்றொன்றுக்கு பலத்த சேதத்தை விளைவித்தார்கள். ரேடியோ நிலயம் பூராவும் எரிந்துகொண்டிருந்தது. அடுத்தடுத்து ஒவ்வொரு நாளும் இந்தியர்கள் விரோதி பிரதேசத்தைச்சுற்றி வேவுபார்த்து வந்தார்கள். அங்குள்ள முக்கிய லக்ஷியங்களை நேரில் பார்த்ததிலும் புகைப்படங்கள் எடுத்ததிலும் விசேஷ திறமையை காட்டியிருக்கிறார்கள். அவர்களை பர்மாவிலுள்ள ஆகாய விமானப் படைத்தலைவர் புகழ்ந்தார். தளகர்த்தர் ஆர்ச்பால்டு வேவல் ஆகாய விமானிகளையும், விமானங்களிலிருந்து தூரதிருஷ்டி பார்ப்பவர்களையும் அவர்களின் திறமையான வேலைக்குப் புகழ்ந்ததில் அவர்கள் பெருமையடைந்திருந்தார்கள்.

இப்பொழுது அந்தப் படைப்பகுதி யுத்தத்தில் அடுத்த நடவடிக்கையில் பங்கெடுத்துக்கொள்ள ஆவலாக இருக்கிறது. இன்னும் மற்ற படைப்பகுதிகளும் பெரிய தீரச்செயல்களில் கலந்துகொள்ள காத்துக்கொண்டிருக்கின்றன. அந்தப்படை பலம் ஆரம்பித்து ஒன்பது வருஷமானாலும் எதிர்பார்ப்பதற்குமேல் பலமிருப்பதாகத் தெரிகிறது.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

1942— மணி.

### பிரஸ்ங்கம் 102—(4-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஜூலை | ... 4, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.30 |
| | 5, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி | ... ,, | 6.00 |
| | | ஆலூர் | ... ,, | 6.30 |
| | 6, திங்கட்கிழமை ... | காரையூர் | ... ,, | 6.00 |
| | | இடையாத்தூர் | ... ,, | 6.30 |
| | 7, செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... ,, | 6.00 |
| | | கிள்ளனூர் | ... ,, | 6.30 |
| | 8, புதன்கிழமை ... | சேனூர் | ... ,, | 6.00 |
| | | காஞ்சூர் | ... ,, | 6.30 |
| | 9, வியாழக்கிழமை ... | வடவாளம் | ... ,, | 6.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் 103—(5-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 12, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... ,, | 6.00 |
| | வம்பன் | ... ,, | 6.30 |
| 13, திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி | ... ,, | 6.00 |
| | தொலையானூர் | ... ,, | 6.30 |
| 14, செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி | ... ,, | 6.00 |
| | கீழையூர் (தெற்கு) | ... ,, | 6.30 |
| 15, புதன்கிழமை ... | வெள்ளனூர் | ... ,, | 6.00 |
| | செம்பாட்டூர் | ... ,, | 6.30 |
| 16, வியாழக்கிழமை ... | பள்ளிவாசல் | ... ,, | 6.00 |
| | பில்லமங்கலம் | ... ,, | 6.30 |
| 17, வெள்ளிக்கிழமை... | புலியூர் | ... ,, | 6.00 |
| | கண்ணங்குடி | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—7-7-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம௵ ஜூலைமீ 11உ [ந. 103

# புதுக்கோட்டை தேசிய யுத்த முன்னணி தொடக்கம்

1942-ம௵ ஜூலைமீ 10உ.

---

## I

### புதுக்கோட்டை ஸமஸ்தானம் அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அவர்கள் பிரசங்கம்.

இன்று நாம் இங்கு தேசிய யுத்த முன்னணியைத் தொடங்கும் நோக்கத்தாற் கூடியிருக்கிறோம். இம்முன்னணி ஏற்கனவே தன் வேலையைத் தொடங்கி விட்டது. முன்பு யுத்த அறிக்கை நிலயம் என்று இருந்ததை, இப்பொழுது தேசிய யுத்த முன்னணி நிலயம் என்று புதுப்பெயர் புனைந்து அழைக்கிறோம். அதன் கீழ்ப் பத்துக் கிளைகள் உண்டு. இம்முன்னணியின் பணிகளை மேற்கொள்ள ஸமஸ்தானத்துப் பிரதான அதிகாரி ஒருவரும் நகரம் தாலூகா இவைகளுக்கு உரிய உதவியதிகாரிகளும் அவர்களின் கீழே நகரத்தின் பல பகுதிகளுக்கும் கிராமங்களுக்கும் உதவுமாறு பல தலைவர்களும் உதவித்தலைவர்களும் இருக்கிறார்கள். பின்னே குறித்த உழைப்பாளிகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்பது எனக்கு உறுதியாய்த் தெரியாவிட்டாலும் மேலதிகாரிகள் அனுப்பும் தினசரிக் குறிப்பிலிருந்து அதிகமான வேலை நடந்திருப்பதாகவே அறிகிறேன்.

மத்திய நிலயத்தாற் செய்யப்பெற்ற நற்பணியைப் பற்றி நான் நற்சாட்சி யுரைக்க வல்லவனாவேன். பிறிதோரிடத்தில் நான் தெரிவித்தது போலவே காப்டன் ஹார்வியின் ஊக்கத்தையும் உழைப்பையும் இழந்த பிறகு, அவர் இன்றி நமது நிலயம் எங்ஙனம் நிகழுமோ என்ற ஐயம் என்

உள்ளத்தில் எழுந்ததுண்டு. ஆனால் நான் அங்ஙனம் அதைரியம் அடைந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. நமது நிலயத்தால் வாரந்தோறும் வெளியிடப்பெறும் யுத்த அறிக்கைகளை மன்னர் சமக்ஷம் பார்த்திருக்க வேண்டும். சென்னையில் உள்ள ஒரு சிறந்த பத்திராசிரியர் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தில் சமீபகாலத்தில் இந்த அறிக்கைகளின் உன்னத ஸ்திதியைப் பற்றித் தெரிவித்ததை நீங்களே பார்த்தீர்கள். இவ்வழியால் வரும் எல்லாப் பெருமையும் ராவ் சாஹிப் N. தியாகராஜ அய்யருக்குரியதே. பிரதான அதிகாரியாகிய ஸ்ரீ. சேதுராமய்யர் தாம் மேற்கொண்ட பணியிற் சிறந்த ஊக்கமும் உழைப்பும் விளக்குகின்றார். நகர அதிகாரிகளும் தாலூகா அதிகாரிகளும் அவருக்கு உற்ற துணையாக நின்று நன்றாகவே உழைக்கிறார்கள். கிளைகளின் அதிகாரிகள் அங்ஙனமே உழைக்கின்றனர். இவ் வெல்லோருக்கும் அவரவர் செய்து வரும் பணிக்காக இன்று இங்கு நன்றி கூறுகிறேன்.

இப்பணியின் ஒரு சிறந்த அம்சம் என்னவெனில் அது ஊதியம் எதிர்பாரா உழைப்பு என்பதேயாம். பிரயாணச் செலவுக்குமேல், எவரும் இதனால் லாபம் அடைவதில்லை. மத்திய நிலயத்தில் இக்காலத்தில் இப்படி ஊதியம் இன்றிப் பிரசங்கம் செய்வோர் ஒரு நூற்றுவர் இருப்பதாக அறிகிறேன். கிளைகளில் (நானே கேட்டு அறிந்திருப்பதற்கிணங்க, தெளிவாகவும் அழுத்தமாகவும் நன்கு பேசத்தெரிந்த பல பேச்சாளிகள் இருக்கிறார்கள். முன்னணி, உத்தியோக சம்பந்தம் இல்லாததே. தர்பாரின் பார்வையில் இது நிகழ்கின்றது. இதன் செலவு தர்பாரால் வகிக்கப்பெறுகிறது. ஆயினும் இது உத்தியோக சம்பந்தமில்லாத ஸ்வதந்திரச் சேவையேயாகும். இவ்வுண்மையால் புதுக்கோட்டை பெருமிதம் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இங்ஙனம் உழைக்கும் பிரமுகர் எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாம். நம் ஆகாய விபத்து நிவாரண சேவகர்களைப்பற்றி இங்கே சில விஷயங்கள் சொல்லவிரும்புகிறேன்.

ஏ. ஆர். பி. கன்ட்ரோலர் பதவி வகிக்கும் போலீஸ் ஸூபரின்டென்டெண்டு, உத்தியோக சம்பந்தமில்லாத ஏ. ஆர். பி. அதிகாரிகள், உத்தியோக சம்பந்தமுள்ள ஏ. ஆர். பி. அதிகாரிகள் என்போர் வழி காட்டுதலாலும் எண்ணிறந்த வார்டன்கள், தூதர்கள் பிறர் இவர்கள் உதவியாலும், நான் இப்பொழுது மறக்கக்கூடாத போலீசார் ஒத்துழைப்பாலும் ஆகாய விபத்து நிவாரண சேவகர்கள் மிகவும் மதிக்கத்தக்க பயிற்சியும் திறமையும் பெற்றுள்ளார்கள். நமது சுருங்கிய நோக்கங்களுக்கேற்ப இவர்கள் தக்க பயிற்சியும் ஒழுங்கும் அடைந்து பொதுமக்களுக்கு உரிய செய்திகளைத் தக்கவாறு உணர்த்தியிருப்பது நான் எதிர்பார்த்த அளவுக்கு மேல் மிகுந்து விளங்குகிறது. இவ்வினத்தில் நாளெல்லாம் பார்க்கவேண்டிய சில பணிகள் இருப்பதால் இவர் எல்லோரும் சம்பளம் இல்லாச் சேவகர் இல்லை ஆயினும் அவருட் பலர் கௌரவ சேவகரே யாவர். சம்பளம் பெற்றோ பெறாமலோ உழைக்கும் இவர் எல்லோருக்கும் தர்பாரின் சார்பாகவும் பொதுமக்கள் சார்பாகவும் நான் எனது நன்றியை வெளியிட்டுரைக்க விரும்புகிறேன். மன்னர் சமக்ஷம் ஆகாய விபத்துப் பயிற்சியை ஒரு நாள் பார்க்க நேரிடலாம் என்று நம்புகிறேன். நமக்கு ஆலோசனை கூறும் அதிகாரியாகிய மிஸ்டர் மார்டின் இங்கு நடந்துள்ள வேலைகளைக் கண்டு மிகவும் மனமகிழ்ந்தார்.

இப்பொழுது போர் நிகழ்ச்சியைப்பற்றிச் சிறிது பேச விரும்புகிறேன். லிபியாவிலும் ருஷ்யாவிலும் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.



'தோல்வி' என்ற சொல்லுக்கு நான் அஞ்சவில்லை. அது ஒரு சிறு பகுதித் தோல்வியே. நான் சொல்லவிரும்புவதெல்லாம் 'இது ஒரு சிறு விஷயம்' முக்கியத்வம் வாய்ந்த விஷயமே, மிகவும் துக்கம் விளைப்பதே, என்பதுதான். ஆனால் அளவுகடந்து இவ்விஷயங்களைப் பேசல் ஆகாது. போரின் முடிவை இது சிறிது நீட்டிக்கலாம். டோப்ருக், செபாஸ்டபூல் என்ற இரண்டு கோட்டைகளையும் இழந்தது பெரு நஷ்டமேயாயினும் இது போர்முடிவு இல்லை. இந்த கருநாட்களை, முடிபான வெற்றியில் நம்பிக்கையும் ஊக்கமும் தைரியமும் எழுதற்குச் சந்தர்ப்பம் தரும் காலமாகவே நீங்கள் கருத வேண்டும். போரைப் பூரணவுருவத்திலே பார்க்கவேண்டும். இப்பொழுது உள்ள நம் நிலைமையை, பிரான்ஸ் தேசம் தோல்வியுற, நாம் தன்னந் தனியே ஜெர்மனியை எதிர்த்துநின்ற நிலைமையோடு ஒத்துப்பார்க்க வேண்டும். இப்பொழுது நம் கட்சியில் உள்ள வல்லரசுகளின் வலிமையை அறியவேண்டும். பிரிடன், (தோல்விபெறாத) ருஷியா, ஐக்கிய நாடுகள், (ஜப்பானை ஐந்தாண்டுகளாக எதிர்த்து நிற்கும்) சீனா இந்நாடுகள் இப்பொழுது நம் இனமாம். நம் கட்சியில் (பல சிறு நாடுகளைத் தள்ளியே பார்த்தாலும்), நூற்றுமுப்பது கோடி மக்கள் நிறைந்த நாடுகள் உண்டு. ஜெர்மனியின் கட்சியில் இருபத்திரண்டு கோடியே முப்பதுலக்ஷம் மக்கள் உண்டு. இவருள் நாலுகோடியே ஐம்பதுலக்ஷம் தொகையுள்ள இத்தாலியர் உதவியாய் இருப்பதைவிட்டுப் பாரமாகவே இருப்பவர் ஆவர். ஜெர்மனியருக்கு ஏற்பட்ட அளவுகடந்த மனிதச் சேதத்தையும் இயந்திரச் சேதத்தையும் நினைத்துப்பாருங்கள். ருஷியரும் பெரு நஷ்டம் அடைந்திருக்கின்றனர் என்பது உண்மையே. ஆயினும் அந்நாட்டில் ஜனசக்தி ஒரு எல்லையில் அடங்காத பெருமையுள்ளதே. ஐக்கியநாடுகளின் ஜனசக்தியை இன்னும் நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை. பிரிடிஷ் ஏகாதிபத்தியத்துக்கு நேரிட்ட நஷ்டம் மிகவும் சுருக்கமே. பிரிடிஷ், அமெரிக்க ஐக்கிய கடற்படையின் சக்தியைக் கவனியுங்கள். ஐக்கியநாடுகள், ருஷ்யா, பிரிடன் இவைகளின் தொழிற்றிறமையைக் கவனியுங்கள். கருட நோக்கமாக இனிவரும் பயன்களை நன்கு சிந்தித்துப்பாருங்கள். எந்தக் கட்சிக்கு வெற்றிவிளையும் என்பதில் நீங்கள் சிறிதேனும் ஐயம் உற இடமுண்டா?

ஆனால் நான் தேசிய யுத்த முன்னணியை மறக்கக்கூடாது. இதன் போக்கும் நோக்கமும் மன்னர் சமக்ஷத்தால் உங்களுக்கு நன்கு விளக்கப் படும். எல்லாராலும் அவை நன்கு உணரப்பட்டதாகத் தெரியவில்லை. சிலர் இது தலைவர்களுக்கே உரிய பொறுப்பு என்று நினைக்கிறார்கள். ஆனால் அது உண்மையில் தன்னிடம் சேர விரும்பிய எல்லோரையும் சேர்க்கக் கருதியதேயாகும். பிறர் தமக்குள்ள 'பிறகாரியங்களால்' சேர அசக்தராய் இருப்பதாக வருந்துகிறார்கள். இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற சிறு உதவிகளைச் செய்வதைக்காட்டிலும் சிறந்த காரியம் என்ன இருக்கும் என்று எனக்குத்தெரியவில்லை. வெளிப்படையாகவே—பொறுப்பான பதவிகளில் உள்ள—சில பெருமக்கள் நாம் ஈடுபட்டிருக்கும் போரின் கடுமையை உணராமலே தமக்கு உரிய அற்பக்காரியங்களில், நாம் போரில் இறங்காதது போலவே நினைத்துக் கொண்டு—ஊக்கத்தோடு மனம் செலுத்துகிறார்கள். தேசிய யுத்த முன்னணி இத்தகைய மக்கள் இனத்தை விரைவில் நெருங்கி, உரிய உண்மைகளைத் தெளிவுற விளக்கி நன்னெறிக்கு வரும்படி செய்யவேண்டும். நமது சமூகத்தில் பொறுப்பற்ற இவர்களே மிகவும் தீங்கு விளைக்கும் ஆபத்துக்கு இடமான இனங்கள் ஆவர்.

நான் முன்பு தெரிவித்தது போலவே இம் முன்னணி தன்பணியை முன்பே தொடங்கிவிட்டது. முறைப்படி அதனைத் தொடங்கவேண்டும்

என்று கருதப்பெற்றது. இவ்வரும் பணியை மாட்சி தங்கிய மன்னர் பிரானாகிய தங்களைத்தவிர வேறு எவரும் தகுதியாகவும் பயன்படத் தக்க வாறும் ஏற்றுக்கொள்ள வியலாது என நினைக்கப்பட்டது. ஆகவே மன்னர் சமக்ஷம் இம் முன்னணியைத் தொடக்கம் செய்து வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வது எனக்கு வாய்த்த பெரும் பேறாகும்.

---

## II

### புதுக்கோட்டை மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் பிரசங்கம்.

எனது பிறந்த நாளில் என் ஸமஸ்தானமாகிய புதுக்கோட்டையில் தேசிய யுத்த முன்னணியைத் தொடங்கிவைப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்தப் போரை வெல்லுவதற்கு உரிய திடசித்தத்தை இயக்குவதே தேசிய யுத்த முன்னணியாம் என்று சொல்லப்பெறுதல் நல்லதே. இந்த யுத்த முன்னணியிற்சேர்ந்த எல்லோரும் தோல்வி சாத்தியம் என்ற எண்ணத்துக்கு இடங்கொடாது, தோல்வியை அசாத்தியமாக்கி வெற்றியைச் சாத்தியமாக்கவல்ல நல்லுணர்ச்சியைத், தாமும் வளர்த்துக் கொண்டு பிறர் உள்ளத்திலும் வளர்த்து ஊன்றவேண்டும் என்பதே இதன் கருத்தாம். நமது பகைவரை முறியடிக்கத்தக்க முயற்சி எதுவும் செய்யாமலே, நேசதேசத்தார் தோல்வி பெறார் என்று நம்பிக்கையோடு வாய்ப் பேச்சில் சொல்லிக் கொண்டிருப்பதால் பயன் ஒன்றும் விளைந்துவிடாது. தோல்வி விளைந்து விடுமோ என்று எண்ணும் தகுதியற்ற கோழை யெண்ணத்தைப்போலவே, நமது மனத்துக்கு உவப்பாகிய நாட்டத்துக்கு அளவுகடந்த அத்தகைய நம்பிக்கையும் ஆபத்தைத் தருவதே ஆகும்.

வெற்றி நமதேயாகும் என்ற நம்பிக்கையோடு நாம் இருக்கலாமாயினும் அந்த நம்பிக்கை நம்முள் ஒவ்வொருவரும் தத்தமால் இயன்றவளவு வெற்றி விளைத்தற்குவேண்டிய முயற்சியில் ஈடுபடுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். ஆகவே சுதேசத்திலும் ஸமஸ்தானத்திலும் அன்புபூண்ட—அதாவது இங்கு நான் காண்கின்ற ஒவ்வொருவரையும்—தேசிய யுத்த முன்னணியிற் சேர்ந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இம்முன்னணியின் வளர்ச்சி அரசியல் இயக்கமன்று; துரைத்தனத்தார் ஆதரவெல்லாம் பெற்றிருப்பினும் அதிகாரிகள் இயக்கமுமன்று. சிறிதும் இரக்கமற்ற பழியஞ்சாப்பகைவர் கையிலிருந்து நம் நாட்டை காக்கவேண்டு மென்று விரும்புகின்ற ஒவ்வொருவருக்கும் இம் முன்னணியில் இடம் உண்டு. கட்சியுணர்ச்சியையும் அரசியற் கொள்கைகளையும் மறந்து ஒத்த முயற்சிசெய்யும் நினைப்போடும் ஒரே மனவுறுதியோடும் எல்லோரும் இதன் கண் சேரவேண்டும்.

நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பதுபோலவே இக்காலப் போர்கள் படைஞர்களால் நிலத்திலும், நீரிலும், விண்ணிலும் நிகழும். அவ்வளவோடு நிற்பதில்லை. நமது பகைவர்கள் பிரசாரம் என்ற கொடும் படையையும் பயன்படுத்தியுள்ளனர்; இன்னும் பிரயோகித்து வருகின்றனர். முன்னாளில் ராஜத்துரோகிகள் என்ற பெயரால் அழைக்கப்பெற்ற கூட்டத்தார் இந்நாளில் ஐந்தாம்படை என்ற புதுப்பெயர்பூண்டு இதற்குத்துணையாக உள்ளனர். தேசிய யுத்த முன்னணியின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் பகைவர் பிரசாரத்தை எதிர்ப்பதைத் தமது கடமையென்று கருதவேண்டும். துரோகச்செயல் என்று தோன்றும் எதுவும் தலையெடுக்கவொட்டாமல்



அழிக்கவும்வேண்டும். இந்த தேசத்துரோகி, தனது நாட்டிற் பகைவர் படை நுழையாக்காலத்திலே பகைவரை வெல்லமுடியாது என்று விளம்பரம் செய்து ஜப்பானியர் இந்தியாவை ஆக்கிரமிப்பதால் விளையும் நன்மைகளை எடுத்து உரைக்கும் விளம்பரகாரனாக இருக்கலாம். பீதியும் திகிலும் விளைக்கும் வதந்திகளை—அவை பிறந்த வழியைப்பிறர் அறியாவண்ணம் பரப்பும் வேலையிலும் இவன் ஈடுபட்டிருக்கலாம். இத்தகைய பொய் வதந்திகளைக் கண்டித்து உறுதியான அடிப்படையில்லாத வீண்பேச்சுக்களை மதிக்க லாகாது என்ற உண்மையை இம்முன்னணி விளக்குவதோடு, பிற நாடுகளின் துக்ககரமான அனுபவத்திலிருந்து ஜப்பானியர் ஆக்கிரமிப்பாலும் வெற்றியாலும் விளைவதென்னவென்பதைத் தெளிவாகப் புலப்படுத்தவும்வேண்டும். சிலர் உண்மையில் தேசத்துரோகிகள் அல்லராயினும், தமக்கு இயற்கையாகிய கோழைத்தனத்தால், நன்கு சித்தமாயிருக்கும் வலிமைமிக்க ஒரு பெரும் பகையை எதிர்த்து நிற்பது வீணே என்று நினைக்கவும் செய்யலாம். அத்தகையோரைக் கண்டித்து அவர்கள் அதைரியம் உண்மையில் தேச பக்திக்கு விரோதமானதே என்பதை விளக்கிக்காட்டவேண்டும். முன்னணியின் அங்கத்தினர் ஆகாயவாணியின் உதவிகொண்டு பகைவர் பரப்பும் செய்திகள் எல்லாம் நம்பத்தக்கனவல்ல என்பதை எப்பொழுதும் காட்டவல்லவராயிருக்கவேண்டும். அப்படிப் பரப்பிய செய்திகளிற் பெரும்பாலன முழுவதும் பொய்யாகவோ அல்லது வேண்டுமென்றே உண்மையைத்திரித்த புனைசுருட்டாகவோ இருப்பதை அனுபவத்தால் அறிகின்றோம் எனவும் இவர்களே விளக்கவேண்டும். ஆகவே இவர்கள் உண்மையை நன்கு உணர்ந்தவராகவும், தெளிவாகவும், உறுதியாகவும் உண்மைத் துணைகொண்டு வாதம்செய்ய வல்லவராகவும் இருக்கவேண்டும்.

போர்ப்படையிற் சேர்வது என்பது எல்லோருக்கும் இயல்வதன்று. ஆனால் அங்ஙனம் சேரத் தகுதியுள்ளவர்களை ஊக்கம் கொடுத்து அனுப்ப வேண்டும். நேரிலே போரிற் கலந்துகொள்ளாதிருப்பவர் போரில் வெற்றியான முடிவு நேரத்தக்கவாறு உதவி புரியத்தக்க பிறவழிகள் பல உண்டு. உதாரணமாக ஏ. ஆர். பி. வேலை உள்ளது. சமீப காலத்தில் விமானத் தாக்குதலோ படையெடுப்போ நேர்ந்துவிடும் என்ற பயம் சில நாட்களுக்கு முன் இருந்ததுபோல இப்பொழுது இல்லையாயினும், அந்த அச்சம் முழுதும் விலகிவிட்டதாகச் சொல்லவியலாது. இன்னும் நாம் ஆகாய விமானங்களால் தாக்குண்பதற்குச் சந்தர்ப்பம் உண்டாகலாம்; அதுவும் திடீரென்று நேரலாம். அந்த விபத்து நேரும் சமயத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்தவர் பலர் வேண்டும். அவர்கள் தங்கள் மன வமைதியை இழவாமல் தமக்கு ஆபத்து நேரினும், பிறர்க்கு உதவி செய்ய விருப்பமும் ஊக்கமும் உள்ளவராய் இருக்கவேண்டும். யாரும் உதவத் தக்க மற்றொரு வழி, வீணான வழிகளில் பணத்தை அழிக்காமற் செலவுகளைச் சுருக்கி யுத்த சேம நிதியிலும் யுத்தக் கடனிலும் பணங்களைப் போடுவதாகும். மிகுதியான உணவுப் பொருள்களை விளைப்பதும் ஒரு வழியாகும். யுத்த காலத்தில் போதிய வளவு உணவு தருவதென்பது பெரிய பிரச்னையே. இந்த யுத்தத்தில் இன்னும் இது நீண்டு செல்லச்செல்ல இந்த அவஸ்தை மிகுதியாகலாம். இயல்பாகத் தான் பயிரிட்டுத் திரட்டிய தானியத்தைக் காட்டிலும் சிறிதளவேனும் அதிகமாக வளர்த்து எடுக்க வல்ல ஒவ்வொரு குடியானவனும் போர் முயற்சிக்குப் பேருதவி புரிபவனே ஆவான்.

இந்தப் போரின் நடைமுறையால் சிறந்த ஆயுதங்களும் இயந்திர சாதனங்களும் அவசியம் ஆகும் என்பது உறுதியாகின்றது. ஆனால்

இவை இருப்பதே போதுமானதாகாது. எவ்வளவு சிறந்த பீரங்கி இருந்தாலும் அதன் பின் நிற்பவன் திறமையால் அதன் சக்தி அளக்கப்படும். அவனும் தன் முறையே தனக்குப்பின் இருப்போர் துணையும் ஆதரவும் உண்டென்று நன்கு உணர்ந்தாலே நன்கு போர்புரிய வல்லவனாவான். வீரனுக்குப் பின்னின்று உதவும் பெரும்பணி தேசிய யுத்தமுன்னணியைச் சார்ந்ததே. ஆதலால், நீங்கள் எல்லோரும் நாட்டின் பொருட்டுப் போர் புரியும் வீரனுக்கு சிறிதும் யோசியாமல் உங்கள் பூரண ஆதரவையும் தர வேண்டுகிறேன். புதுக்கோட்டை நாட்டின் பூர்வீக சரித்திரத்தை அறிந்திருத்தலால் நீங்கள் விருப்பத்தோடும் அவாவோடும் செய்ய விரும்பும் உதவியையே நான் கேட்கிறேன் என்று துணிந்து கூறுவேன். ஆகவே இந்த தேசிய யுத்த முன்னணியை அது சிறந்த வெற்றிபெறுமாறு நடத்துவீர்களென்று நம்பி உங்களிடம் ஒப்பிக்கிறேன்.

---

# சைன யுத்தத்தின் ஐந்தாவது வருஷக்கொண்டாட்டம். செய்திகள்.

---

## ஜனாதிபதி ரூஸ்வெல்ட்.

"உங்களுடைய ஆயுதங்களும், படைகளும் எதிரியை விரட்டியடிக்கும் சீனமக்களும், அமெரிக்கர்களும், இதர நேசதேசத்தினரும் ஆகிய நாம் வெற்றியை முன்னிட்டு சண்டைசெய்து, சமாதானம், நீதி முதலியவைகளை உலகம் பூரா ஸ்தாபிப்போம்."

## மிஸ்டர் சர்ச்சில்.

"ஐந்து வருஷங்களுக்குமுன் உங்கள் நாட்டில் எதிரி கொடுமையாகத் தாக்கினான். கஷ்டமான அனுபவங்களேற்பட்டும் எதிரியை எதிர்த்து நிற்கிறீர்கள்.

யுத்தரங்கத்தில் நீங்கள் செய்துவரும் முயற்சியையும், புனருத்தாரண வேலையையும் பார்த்து உலகமே மெச்சுகிறது.

சைனாவிற்கும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும் எதிரிகளுடன் எதிர்த்து நிற்கும் விஷயம் நன்றாகத் தெரியும். தற்சமயத்தில் பக்கத்தில் நின்றுகொண்டு நாம் இருவரும் சண்டைசெய்கிறோம். அமெரிக்காவின் பூர்ண உதவி நமக்கு இருக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வேலையைத் தைரியமாகச் செய்யவேண்டும். ஐரோப்பா, மத்தியக்கிழக்கு முதலிய இடங்களில் நடக்கும் சண்டை சைனாவின் பாதுகாப்பிற்காகவும், சீன யுத்தம் பிரிடனின் பாதுகாப்பிற்காகவும்தான் நடைபெறுகின்றன.

சீனமக்களுக்குச் சாமான்கள் முதலிய எல்லாவித உதவியும் நாங்கள் கொடுக்கிறோம். முடிவான வெற்றியையும் நாம் அடைவோம்.

வெற்றி கிடைத்ததும் நமக்கு பரஸ்பரமுள்ள சிநேகத்தின் காரணமாக உலகம் பூரா சமாதானத்தை ஸ்தாபிப்போம்.

## சயாங் கெய் ஷெக்.

"ஆக்கிரமண நாடுகளை எதிர்த்துநிற்கும் நாடுகளின் முன்வரிசையில் நாம் இருக்கிறோம். சர்வதேசங்களின் நியாயத்தையும், தர்மத்தையும் நிலைநாட்டும் விஷயத்தில் நம்மை எல்லா நாடுகளும் கௌரவிக்கின்றன. நமக்கு ஏற்பட்டி



ருக்கும் ஆத்மபலத்தை வேறுபலம் குலைக்கமுடியாது. இதுவே வெற்றியடைவதற்கு ஒரு அடையாளம்.

"யுத்தத்தில் ஒரு ஆபத்தான நிலைமையிலிருக்கிறோம். தேசபக்தியின்படி நாம் அதிக தியாகங்களைச் செய்யவேண்டும். வயது முதலியவைகளைக் கவனியாது வெற்றிவரையில் சண்டைசெய்து ஸ்வதந்திரநாடுகளின் க்ஷேமத்திற்காகப் பாடுபடவேண்டும்."

---

# அமெரிக்க ஸ்வதந்திர தினவிழா.

(ஜூலை 4).

I

## ஜனாதிபதி ரூஸ்வெல்டின் செய்தி.

"பிலடெல்பியாவில் ஆரம்பிக்கப்பட்டது, முதல் இவ்வளவு கடுமையான சந்தர்ப்பங்களில் இந்த விழா நடந்ததில்லை. தற்சமயத்தில் ஸ்வதந்திரக் கொள்கைகள் யாவும் ஆபத்துக்குள்ளாகியிருக்கின்றன. இந்த தினத்தின்போது டாங்கிகளும், விமானங்களும, பீரங்கிகளும, கப்பல்களும் கட்டப்படுகின்றன.

"ஒரு மணிகூட ஓய்வு எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு குண்டுகூட குறைவாகச் செய்யக்கூடாது. ஒரு அடிகூட பின்வாங்கக்கூடாது. இவ்விதம் நாம் இவ்வருஷம் ஈடுபடவேண்டும்.

"ஸ்வதந்திர மக்கள் நவீன நாகரீகத்திலுள்ள அம்சங்களை நிலைநாட்டவே உயிரைக் கொடுத்து சண்டை செய்கின்றனர். இந்த விழாவின் மூலமாக ஸ்வதந்திரத்திற்காகப் போர் புரியும் மக்களுக்கு உத்ஸாகத்தை அளிக்கலாம்."

II

## இந்தியாவில் அமெரிக்காவின் வியவகாரங்களைக் கவனிக்கும் மிஸ்டர் ஜார்ஜ மெர்ரல் செய்த ஒலிபரப்பு.

"இது வரையில் நாம் அடைந்த லக்ஷியங்களைப் பற்றியும், ஸ்வதந்திரத்தைப் பற்றியும் நாம் கௌரவமாக நினைக்கவேண்டும். அப்போதுதான் உண்மையான அமெரிக்கர்களாவோம்.

"மேலும் நமக்குப் பெரியதொரு கௌரவம் என்னவென்றால் நமது ஸ்வதந்திரத்தைக்கொண்டு, அச்சு நாடுகளை எதிர்த்து நிற்கும் மற்ற நாடுகளுக்கும் உதவி செய்வதுதான்.

"இன்று நாம் கொண்டாடும் ஸ்வதந்திர தினவிழாவை வருங்காலத்தில் அதிக சிரத்தையை வைத்தே நடத்துவோம். முன் நடந்தவைகளைப்பற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம். ஏற்கனவே அடைந்த புகழைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை.

"நமது ஸ்வதந்திரம்தான் உண்மையானது. நமது லக்ஷியங்கள் எல்லாம் ஆத்மாவிற்கும் மனதிற்கும் உரியவை. இந்த இரண்டும் ஸ்வதந்திரம் பெற்றால் தான் சமூகத்திற்கு ஸ்வதந்திரம் உண்டு. ஒரு தடவை ஸ்வதந்திரம் பெற்று மறுபடி அதை மறந்துவிட்டால் அது உண்மையான ஸ்வதந்திரம் அடைந்ததாக ஆகாது. நாம் உண்மை ஸ்வதந்திரத்தை அடைந்ததும் நீடித்திருக்கும் விதமான தியாகமும், பக்தியும், அதிக கவனமும் இருக்கவேண்டும்."

# வார யுத்தச் செய்திகள்.

## 4—7—42-லிருந்து 10—7—42-வரை.

**எகிப்து**—ஒரு வாரமாக எல் அலமீனைப் பிளந்து செல்ல ரோமல் செய்த முயற்சி தடையுற்றது. சென்ற வாரத்தில் புதன்கிழமை மூன்று தடவை தாக்கினான். பிர் எல்ஷீன் வழியாகச் செல்லவும் முயற்சித்தான். ஆனால் வியாழக்கிழமை 3, 4 மைல் பின் வாங்கும்படி செய்யப்பட்டான். மறுபடி வெள்ளிக்கிழமை ஒரு புதிய தாக்குதலைச் செய்தான். அதுவும் பலிக்கவில்லை. சனிக்கிழமை 40 மைல் நீளத்திற்கு பீரங்கிச் சண்டை நடந்தது. இதன் முடிவில் எதிரியின் சாமான்கள் மேற்கே பின்வாங்கின. அதே தினத்தில் எல் அலமீன் பிரதேசத்திலிருந்து எதிரிப்படைகள் விரட்டப்பட்டன. ஞாயிற்றுக் கிழமையும், திங்கட்கிழமையும் எல்அலமீனுக்குத் தெற்கில் சண்டை நடந்தது. ஒரு எதிரியின் ஸ்தானம் பிடிபட்டது. தெற்கே நோக்கியும் விரட்டப்பட்டான். திங்கட்கிழமை யன்று எதிரியின் சைனியத்தைச் சுற்றி நமது படை சூழ்ந்து கொள்ளப்பட்டது.

எதிரியின் நிலைமை எல்அலமீனுக்கு தெற்கே 20 மைல் தெற்கிலும், 30 மைல் மேற்கே எல்டாபாவை நோக்கியும் மாறியிருக்கும். 'ட' இந்த உருவத்தில் இருக்கிறது. எதிர் பாராத விதமாக ஒரு நடவடிக்கையும் இல்லாமலிருக்கிறது. சீக்கிரத்தில் சண்டைகள் நேரலாம்.

'எகிப்து சண்டையில் முதல் கட்டம் முடிந்திருக்கிறது. பிரிடிஷ் எட்டாம் படை பலநாட்கள் வரை தீவிரமாக எதிர்த்து நின்று முன்னேற்றப் போரை நடத்தக்கூடியதாக இருக்கிறது.' எதிரியின் முயற்சிகளெல்லாம் தடுக்கப்பட்டன. ஆபிரிக்கப் படைக்குக் கொஞ்சமும் ஓய்வு கொடுக்காமல் தாக்கப்பட்டே வந்தது.

இந்த நிலைமையை 'சூனலிஸ்டு' 6-ம் உ சொல்லும் போது 'எகிப்தின் ராணுவ நிலைமைத் திருப்திகரமாக இருக்கிறது. ஆரம்பம் முதல் எல் அலமீனில் ரோமலால் ஒன்றும் சாதிக்க முடியவில்லை என்பதிலிருந்து நமக்குச் சாதகமான அம்சங்கள் இருக்கிறதென்று தெரியவருகிறது. ரோமலுக்குப் பல பீரங்கிகளும் டாங்கிகளும் நஷ்டம்.

'குவாடரா முனையிலிருந்து பின்வாங்கும்படி எதிரிக்கு நேரிட்டிருக்கிறது. 6உ அறிவிக்கப்பட்டபடி அவனது முக்கிய ஸ்தானங்களை விடவேண்டியிருக்கிறது.

'விமான ஆதிக்கம் நமது வசத்திலிருப்பதால் நமக்கு அதிக சாதகம். முடிவு வரை நம்மால் சண்டை செய்ய முடியும்'.

**ருஷ்யா.**—எட்டு மாதகாலமாக எதிர்த்து நின்ற ஸெபாஸ்டோபூல் சனிக்கிழமை எதிரி வசமாயிற்று. அதில் எதிரிக்கு லக்ஷக்கணக்கான பேர்கள் நஷ்டம். ஸெபாஸ்டோபூல் விழுந்தாலும் கருங்கடலில் ருஷ்யரின் ஆதிக்கம் குறையவில்லை. நோவோரோஸிஸ்க் (Novorossisk), கோஸாடூஸியா (Kossa 'Tusia) போன்ற வேறு நல்ல இடங்களும் இருக்கின்றன.

ஆனால் எதிரி மற்ற பாகங்களைக் கடுமையாக எதிர்க்க முடிகிறது. கோர்ஸ்க் பைலோராட், வால்ஷான்ஸ்க் போன்ற அரங்கங்களில் கடுமையாகத் தாக்கிவருகிறான். இப்படி மாஸ்கோ-ரோஸ்டவ் இருப்புப் பாதையைக் கைப்பற்ற நினைத்திருக்கிறான். குபயான்ஸ்க்கில் புகுந்து வோரோனெஷ் (Vovonej) வரை எதிரி வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கர்ஸ்கிற்கு 120 மைல் கிழக்கிலும் 70 மைல் தெற்கிலும் சண்டை நடக்கிறது. ரோஸ்டவ்விற்குத் தெற்கிலும் காகஸஸ் ரஸ்தாவில் சண்டை நடக்கிறது. டான் நதியைக் கடந்து ருஷ்யரின் சைனியங்களைத் துண்டிக்கவும் யத்தனிக்கின்றனர். வோரோனெஜ், ஸ்டாரி ஓஷோல்



இரண்டு இடங்களிலும் மிகக் கடுமையாகச் சண்டை நடக்கிறது. பைலோகோராட்டிலிருந்து ஸ்டாரி வோரோனெஜ் படைகளுடன் சேர்ந்துகொள்ள எதிரிகள் முயற்சிக்கின்றனர். ஓஷோல் காலி செய்யப்பட்டது. யுத்தம் டான் நதிக்கு மேற்கே நடந்து கொண்டிருந்தாலும் ஜெர்மானியர் டான் நதியைக் கடந்திருக்கிறார்கள். வாரோனேஜுக்குத் தெற்கே 110 மைல் தூரத்தில் ரோஸோக் என்ற இடத்திற்கு அருகில் கடும் சண்டை நடைபெறுகிறது. நிலைமை நெருக்கடியானது.

லெனின்கிராட்டிலிருந்து ரோஸ்டவ்வரை எரிமலைபோல் நிலைமை காணப்படுகிறது. எந்த நேரத்திலும் சண்டை கிளம்பலாம். க்ஸாட்ஸ்க் (Gzhatsk)ல் சென்ற வாரத்தில் நடந்த சண்டையில் எதிரிக்குத் தாத்காலிகமான வெற்றிதான் கிடைத்தது. கலினின், ஸ்மொலென்ஸ்க் இங்கேயும் சண்டை நடைபெறுகிறது. மொத்தத்தில் பிரதேசம் பூரா ஜெர்மன் தாக்குதல் மும்மரமாக இருக்கிறது.

**சைனா.**—ஜப்பானியரின் கோடைகாலத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. இருந்தாலும் நேசநாடுகளின் உதவிவரும்வரை பெரிய சண்டைகளைச் சீனர்கள் செய்யவிடமாட்டார்கள். கியாங்ஸியில் இஹ்வாங் நகரமும், ஹூயனில் லூசன் நகரமும் பிடிபட்டுத் திரும்பப்பிடிபட்டன. டைஹாங் மலைகளுக்கு அருகில் சீனர்களால் குறுக்கு எதிர்ப்புகள் செய்யப்பட்டன. செகியாங்கில் யூங்கா நகரம் திரும்பப்பிடிபட்டது.

• அமெரிக்க விமானங்கள் வெற்றிகரமாகத் தாக்கின. எதிரியின் ஒரு பீரங்கிப் படகும், 10 விமானங்களும் ஹாங்கவ்விலும் நூசாங்கில் 50 கடல் விமானங்களும், கான்டனில் 20 விமானங்களும் தாக்கப்பட்டன. கடைசியாக 5 விமானங்கள் தான் தப்பி ஓடின.

அமெரிக்க வாலன்டியர் படை (A. V. G.) கலைக்கப்பட்டு சைனாவிலுள்ள அமெரிக்கச் சைனியத்துடன் சேர்க்கப்பட்டது.

**பர்மா.**—பிரிடிஷ் விமானப்படை அக்யாபிற்கு அருகில் மாயூ நதியில் இரண்டு தடவை கப்பல்கள் தாக்கப்பட்டன. கலெய்யோவில் எதிர்த் துருப்புகளும் தாக்கப்பட்டன.

அமெரிக்க ஸ்வதந்திர தினத்தன்று குவாஸலீன அமெரிக்க மானுமிகள் தாக்கினார்கள்.

**பஸிபிக்.**—அமெரிக்கச் சைனியமும், கப்பற்படை விமானங்களும் அலூஷியன் தீவுகளைத் தாக்கின. ஜூன் 21, 23-ம் தேதிகளில் கிஸ்காவில் குண்டுகள் போடப்பட்டன. ஜப்பானியப் போக்குவரவுகள் அகட்டு (Agattu) தீவிற்கு அருகில் ஜூலையில் தாக்கப்பட்டன. இது அட்டு தீவிற்கு 35 மைல் தூரத்தில் தென்கிழக்கில் இருக்கிறது. ஸ்வதந்திர தினத்தன்று நேசதேச விமானப்படை தென்மேற்குப் பஸிபிக்கில் லேயி, ஸாலாமூவா இவைகளைத் தாக்கின.

**விமானப் படையெடுப்புகள்.**—ஜெர்மனியில் பெரிய விமான தளமான ப்ரெமென் தாக்கப்பட்டது. பிரிடிஷ் விமானிகளும் அமெரிக்க விமானிகளும் ஒன்று சேர்ந்து ஐரோப்பாவில் தாக்குதலைச் செய்தார்கள். வில்ஹெல்ஸ்பர்க், ஆல்க்மார், ஹாம்ஷெட் முதலியவை பகல்காலத்தில் தாக்கப்பட்டன.

**கப்பல் சண்டை.**—1, ஸப்ளைகள் நிறைந்த பிரிடிஷ் கப்பல் கூட்டம் மால்டாவிற்கு பத்திரமாகப் போய்ச் சேர்ந்தது. எதிரிகளும் மிகக்கடுமையாகத் தாக்கினார்கள். எதிரிக்குத்தான் 20 பாம்பர்களும் ஒரு நீர் மூழ்கியும் சேதம்.

**வான்டர்பிட்ஸ்** என்ற ஜெர்மனியின் பெரிய சண்டைக் கப்பல் டார்பிடோ செய்யப்பட்டது. பாரண்டுகடலுக்கு அருகில் ருஷ்ய நீர்மூழ்கியால் தாக்குண்டது. மறுபடி நார்வே கடற்கரைக்குச் சென்றுவிட்டது.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **29—6—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—ஹாஸிப்ருக் (Hazebrouck). | | 5 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | இரவில்.—ப்ரேமென் (Bremen) வடமேற்கு ஜெர்மனியில் (Germany) மற்ற இடங்கள். | | | |
| | விரோதி விமான ஸ்தலங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில், | | | |
| | ரயில்வே கட்டடங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | கப்பல்கள்.-பிரெஞ்சு (French)க்கடற்கரைக் கருகாமையில். | | 9 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான மோட்டார் கூட்டம் டாங்கிகள்.-மெர்ஸாமாட்ரு (Mersa Matruh)க் கருகாமையில். | | | |
| | துறைமுகப் பிரதேசம்.—டொப்ருக் (Tobruk). | 1 விமானி பத்திரமாக வந்து சேர்ந்தான். | 2 விமானங்கள். | |
| | தரையிலுள்ள விரோதி விமானங்கள், வண்டிகள்.—டொப்ருக் (Tobruk), ஸொல்லும் (Sollum) பிரதேசங்களில். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர்முனை எங்கும். | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **30—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி சைனியங்களின் கூட்டம்.—போராங்கத்தில். | | | |
| | மோட்டார் போக்குவரத்து, விமானமிறங்கும் இடங்கள்.—பூகா (Fuka). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—6—42.** (செவ்வாய்க்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டில்லி (Dilli). | தீக்கள் கிளம்பின. | | |
| | ஸெலிபஸ் (Celebes)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கேந்தாரி (Kendari). | | | |
| | நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | போலீஸ் வாஸஸ்தலங்கள், அணிவகுக்குமிடங்கள், துறைமுகத்திலுள்ள கப்பல்கள்—லே (Lae). | | | |
| | பூசந்தி.—ஸாலாமுவா (Salamaua). | | | |
| | ஸாலமன் (Solomon) தீவுகள்-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துளகி (Tulagi), பொகன்வயில் (Bougainville). | | | |
| **1—7—42.** (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்—ஸிடிபாராணி (SidiBarrani). | இன்னும் 7 விமானங்கள், அநேக விமானங்கள் சேதமாயின. | | |
| | விரோதி டாங்கிகளின் கூட்டம், கவசம் பூண்ட வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்யா விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர் முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(அமெரிக்க பிரிடிஷ் விமானங்களால், | | | |
| | ராணுவக் கட்டடங்கள்.—டில்லி (Dilli). | | | |
| **2—7—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ப்ரேமன் (Bremen) வடமேற்கு ஜெர்மனி (Germany)யில். | | | |
| | விரோதி விமான தளங்கள்.—ஹாலந்து பெல்ஜியம் (Low countries). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.-டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | | 13 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி சைனியங்களின் கூட்டம்.—எல் அலமீந (El-Alamein)க் கருகாமையில் டொப்ருக், (Tobruk). | | | |
| | விரோதிகளுக்குப் பின்னால்.-போராங்கத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 2—7—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.–கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | டில்லி (Dilli). | | | |
| 3—7—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகள், வண்டிகளின் கூட்டங்கள்.—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.— போரரங்கம் முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலையம்—லே (Lae). | | | |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நிலையம்.—கொயபாங் (Koepang). | | | |
| 4—7—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி சமுத்திரங்களில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி டாங்கிகளின் கூட்டம், கவசம் பூண்ட வண்டிகள்—எல் அலமீனு (El Alamein)க்குத் தெற்கே டோப்ருக் (Tobruk). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.— போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலையம், விமானம் பறப்பதற்கு உதவுமிடம்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | 8 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | கொயபாங் (Koepang). | | | |
| | தூரக்கிழக்கு-பர்மா (Burma)-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.— அக்கியாப் (Akyab), நதிக்கருகாமையிலுள்ள மாயு (Mayu). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 5—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் கிடைக்கவில்லை. | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ராணுவ கட்டடங்கள்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | 1 விமானம்; இன்னும் 4 விமானங்களும் சேதமாயின. |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | டில்லி (Dilli). | | | |
| | ஸாலமன்—தீவுகள் (Solomon Islands)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்) | | | |
| | துலாகி (Tulagi). | | | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | டாங்கிகள், கவசமணிந்த மோட்டார் வண்டிகள்.—சண்டை நடக்கும் பிரதேசம். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 30—6—42. (செவ்வாய்க்கிழமை) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்—கிழக்கு மிட்லாந்து (East Midlands). | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria) பிரதேசத்தில். | சேதமொன்றுமில்லை; 20 பேர் கொல்லப்பட்டனர். | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—7—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| | பாலஸ்தீனம் (Palestine)—(ஜெர்மன் விமானங்களால்). ஹெய்வா (Haifa). | | | |
| 2—7—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 8 விமானங்கள். 1-7-42. to 2-7-42. | 7 விமானங்கள். |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). அலெக்ஸாண்டிரியா—(Alexandria) பிரதேசத்தில். | சொற்பச் சேதம். | | |
| 3—7—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). இரவில்.—கடற்கரை ஜில்லாக்கள் கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). பிரிடிஷ் ஸ்தானங்கள்—எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில். | | | |
| 4—7—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). இரவில்.—இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரையில் ஒரு இடம். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| | பாலஸ்தீனம் (Palestine)—(ஜெர்மன் விமானங்களால்). ஹெய்வா (Haifa). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). மோரெஸ்பி துறைமுகம் (Moresby). | | 1 விமானம். | |
| 5—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 6—7—42. (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). அலெக்ஸாண்டிரியா (Alexandria), ஸூயஸ் (Suez) கால்வாயில். | | 5 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). மோரெஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 5—7—42. (திங்கட்கிழமை.) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). மோரெஸ்பி துறைமுகம் (Moresby). | பல வெடி விமானங்கள் சேதமாயின. | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**தேசிய யுத்த முன்னணியின் ஆரம்ப விழா.**

"தேசிய யுத்த முன்னணியை ஆரம்பிப்பதற்காக நாம் இன்று கூடியிருக்கிறோம். இம்முன்னணி ஏற்கனவேயே அலுவல்களைச் செய்துவருகிறது. முன்னிருந்த யுத்த அறிக்கை நிலயம் என்பதற்குத்தான் இப்புதுப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்திற்கு 10 கிளை ஸ்தாபனங்களை அமைத்திருக்கிறோம். இந்த நிலயத்தை ஆரம்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டபோது, மாட்சி தங்கிய தங்களைத் தவிர வேறு எவரும் பொருத்தமாகவும், ஆழ்ந்த கருத்துடனும் ஆரம்பம் செய்ய லாயக்குள்ளவர்கள் காணப்படவில்லை. இம்முன்னணியை ஆரம்பித்துவைக்கவேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்ளுவது எனக்கு ஒரு கௌரவமாகும்".

இந்த மொழிகளுடன் புதுக்கோட்டை ஸமஸ்தான அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் துரையவர்கள், இச்சமஸ்தானத்தில் இம்முன்னணியின் ஆரம்ப விழாவைத் துவக்கிவைத்தார். அன்று டவுன்ஹாலில் ஜனங்கள் பூர்ணமாகக் கூடியிருந்தனர். அதற்கு 1 மணி நேரம் முன்பாக தேசிய யுத்த முன்னணி நிலயத்திலிருந்து புறப்பட்டு, ஒரு பர்லாங்கு நீளமுள்ள பெரிய ஊர்கோலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக டவுன் ஹால் வந்து சேர்ந்தது. இந்த ஊர்கோலத்தின் முன்பாகத்தை ஏ. ஆர். பி. உத்தியோகஸ்தர்களின் கோஷ்டி அலங்காரம் செய்தது. மாட்சி தங்கிய மன்னர்பிரானின் பிறந்த தினத்தன்று இவ்வரிய சந்தர்ப்பம் நடைபெற்றதால் மிகவும் பொருத்தமாகவே இருந்தது.

"தோல்வி என்ற பதத்திற்காக நான் அஞ்சவில்லை. டொப்ருக், ஸெபாஸ்டோபூல், இவை தனிப்பகுதித் தோல்விகளே. இவ்விதம் தோல்வி கிடைத்த கரி நாட்களை முடிவான லக்ஷியத்தின் பொருட்டு அதிக தைரியத்தையும், நம்பிக்கையையும் அடைவதற்கான சந்தர்ப்பங்களென்றே நினையுங்கள். யுத்தத்தைப் பூராவாகப் பரிசீலனை செய்யுங்கள். நமது பக்கம் சேர்ந்துள்ள ராஜ்யங்களைப் பாருங்கள். ருஷ்யாவின் மனித சக்தியைப் பாருங்கள். பிரிடன், அமெரிக்கா இவைகளின் கப்பல், தொழிற்சாலை சக்தியையும் கவனியுங்கள். தீர்க்க திருஷ்டியுடன் விஷயங்களைக் கவனியுங்கள். யுத்தத்தின் போக்கையும் பாருங்கள். இவ்வளவு விஷயங்களையும் கவனித்தும் வெற்றி எந்தப் பக்கம் இருக்கிறது என்பதில் சந்தேகமுண்டா?" என்று ஸர் அலெக்ஸாண்டர் கூறினர்.

முன்னணியைத் திறந்துவைக்கும்போது மாட்சி தங்கிய மன்னர்பிரான் சொன்னதாவது:—"வெற்றிக்கான மனப்பான்மையை அமைத்துக்கொள்ளுவது தான் இந்திய இயக்கத்தின் கருத்து. இது ஒரு அரசியல் இயக்கம் அல்ல. அரசாங்கத்தாரின் ஒத்தாசை இருக்கிறதே தவிர இது ஒரு உத்தியோக முறையான ஸ்தாபனமல்ல. ஐந்தாம் படையினர் யாவரும் சொல்லாலும், நடத்தையாலும் துரோகிகள் தான். இந்நாடு எதிரியின் படையெடுப்பிற்கு உட்படாத காலத்தில் எதிரி அதிக பலம் வாய்ந்தவனென்று அவர்கள் பிரசாரம் செய்வார்கள். ராஜதுரோகத்தையும், வீண் பயத்தையும், தோல்வி மனப்பான்மையையும் நீங்கள் அகற்றுங்கள். சைனியத்தில் சேருங்கள். ஏ. ஆர். பி. படையில் சேருங்கள். உணவுகளை அதிகம் உற்பத்தி செய்யுங்கள். யுத்தத்தில் ஈடுபட்டோருக்கு நம்பிக்கையுடன் உதவுங்கள். புதுக்கோட்டை ஸமஸ்தானத்தின் புராதன சரித்திரத்தைக் கவனிக்கும்போது, நீங்களாக மனப்பூர்வமாக உதவத் தயாராக இருக்கிறீர்களென்ற பூர்ண நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இவ்வித வேண்டுகோளுக்கு புதுக்கோட்டை இணங்கி முன் வருமென்பதில் நமக்குச் சந்தேகமில்லை. புராதன வழக்கப்படியும் நடந்துகொள்ளும். இப்பெரிய யுத்தத்திற்குத் தகுந்த சேவையைச் செய்யும்.

அன்று நடந்த சொற்பொழிவுகள் இவ்வறிக்கையின் மற்றொரு பாகத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. நமது நிலயம் செய்துவரும் வேலைகளைப்பற்றி ஈ-அட்மினிஸ்ட்ரேட்டர் அவர்கள் மெச்சிப் பேசியதற்கு நமது வந்தனத்தை அவருக்குத் தெரியப்படுத்துகிறோம்.

வி வி வி வி வி வி வி

**பிரிடனில் நேசிய யுத்த முன்னணி.** 1. இங்கிலாந்தில் பணக்காரர்கள் 95 சதவிகிதம் வருமானவரி கட்டுகிறார்கள். முக்கியமான சாமான்களை 70 சதவிகிதமும், போக்குவரவை 30 சதவிகிதமும், இதர தேவைகளை 25 சதவிகிதமும், ஒவ்வொருவரும் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். மிஸ்டர் J. H. ஹாட்ஸன் கொடுத்துள்ள விவரங்களைப் பார்த்தால் பிரிடனின் உள்நாட்டு நிலை தெரியவருகிறது.

போன வருஷத்தைவிட இவ்வருஷத்தில் அநேக கப்பல்கள் பழுது பார்க்கப்பட்டன. ஜெர்மானியரால் மூழ்கடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட கப்பல்கள் நடமாட்டத்தில் இருந்துவருகின்றன. சில கப்பல்கள் தான் மூழ்கடிக்கப்பட்டன. சமுத்திரத்தில் 9 மாதகாலமாக அமுங்கிக்கிடந்த கப்பலொன்று வெளியே கொண்டுவரப்பட்டு பழுதும் பார்க்கப்பட்டது.

ஒரு கப்பற் தளத்தில் 10,800 டன் கப்பல் ஐந்து மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டது. சாதாரண நிலைமைகளில் 9 மாதம் பிடிக்கும். மற்றொரு தளத்தில் 12 கப்பல் கட்டக்கூடிய அவகாசத்தில் 16 கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டன. மூன்றாவது தளத்தில் ஒரு நிலக்கரி கப்பலை திட்டத்திற்கு 15 நாள் முன்னதாகவே கட்டி முடிக்கப்பட்டது. நான்காவது தளத்தில் 1910 ஐக் காட்டிலும் 1941-ல் 30 சதவிகிதம் அதிகமாகக் கப்பல்கள் கட்டப்பட்டன. இவ்வருஷம் இன்னும் அதிகமாக இருக்கும்.



எல்லா வேலைக்காரர்களையும் நான் பார்த்ததில் தோட்டக்காரனும், ரொட்டி சுடுபவனும் 19 வருஷம் வேலைபார்த்த ஒருவன் கப்பல் வேலையில் ஈடுபட்டிருந்தான். ஸினிமா வேலைக்காரன் ஒருவன் மின்சார வேலையில் ஈடுபட்டிருந்தான். ஒரு குஸ்தி பழகுகிறவன் கப்பற் தளத்தில் வேலைக்காரனாகவும் இவ்விதமாகப் பலர் பல வேலைகளைச் செய்து வந்தனர். ஸ்திரீகளும் ஈடுபட்டிருந்தனர். சிறு பாரம் தூக்கும் யந்திரங்களையும் பத்தவைக்கும் வேலையிலும், பூச்சு வேலை முதலியவைகளிலும் ஸ்திரீகள் ஈடுபட்டிருந்தனர். புருஷர்கள் தொடர்ந்து 34 நேரம் கூட வேலை செய்திருக்கிறார்கள். ஆனால் முறை போட்டுக்கொண்டு வேலை செய்வது தான் சகஜமாயிருந்தது.

3. இதே விதமாகத் தான் யுத்தக் கப்பல் கட்டும் தொழிலும் நடைபெறுகிறது. பிரிடிஷ் கப்பற் தளத்தில் ரஜா நாட்களிலும் 12 மணி நேரம் வேலை செய்கிறார்கள். இது தவிர நாலு வாரங்களுக்கு ஒரு தடவை ஒவ்வொரு வேலைக்காரனும் 24 மணி நேரம் உள்நாட்டுப்பாதுகாப்பு வேலைகளில் பயிற்சி பெறுகிறான். 8 வாரங்களுக்கு ஒரு நாள் இரவில் நெருப்பு அணைக்கும் வேலையைக் கற்றுக்கொள்வதற்காக 1,000 கணக்கான பேர்கள் முன்வருகிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**பலிக்காத வசந்தகாலத் தாக்குதல்.** இவ்வருஷ ஆரம்பத்தில் கிழக்கே ஜப்பான் வெற்றிமேல் வெற்றியடைந்த சமயத்தில் ஜெர்மனியும் ஐரோப்பாவில் தாக்குதலைச் செய்து நேசநாடுகளின் பலத்தையும், கவனத்தையும் வேறு பக்கங்களில் செலுத்த முடியாமல் செய்ய எத்தனிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வசந்த காலதாக்குதல் பூரணமாக நடைபெறவில்லை. ஹீட்ரிச் கொலை செய்யப்பட்டதும், ரன்ஸ்டெட் விஷிக்கு மாற்றப்பட்டதும், ஹிட்லர் அதிக அதிகாரங்களைப்பெற்றதும், ஜெர்மனிக்குள்ள சிரமங்களைத் தெரியப்படுத்துகின்றன. டென்மார்க்கில் நிலைமை சரியாக இல்லை. ஆக்கிரமித்த நாடுகள் கலகம் செய்கின்றன. ஜெர்மனிக்குச் சொந்தமான அட்லாண்டிக் கடற்கரை ஆபத்துக்குள்ளாகிவிட்டது. தரையிலும், ஆகாயத்திலும் ஆங்கிலேய-அமெரிக்கப் படைகள் குவிகின்றன. போராக்குறைக்கு இரண்டாம் போர்முனையைப் பற்றிய பேச்சும் ஏற்பட்டிருக்கிறது. மாரிகாலத்தின் மத்திய பாகத்தில் கூட ருஷ்யத் தாக்குதல் குறையாமல் நடந்தது. பிரிடிஷ் விமானப் படையின் தாக்குதலும் நிறுத்தப்படவில்லை. வசந்தகாலம் வந்ததும் ருஷ்யர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்தனர். பிரிடிஷார் 1,000கணக்கான விமானங்களைக் கொண்டு ஜெர்மனியைத் தாக்குகின்றனர்.

இவ்விதமாக பலபக்கங்களிலும் தொந்திரவடைந்ததால் துருக்கிபேரில் ஹிட்லர் கொஞ்சம் பலாத்காரத்தைச் செய்ய ஆரம்பித்தான். ஆனால் துருக்கியர்கள் அதற்கிணங்கவில்லை. பிறகு விஷியை வசப்படுத்தப் பார்த்தான். அதுவும் பலிக்கவில்லை. மால்டாவைப் படையெடுத்தான். மால்டா எதிர்த்து நிற்கிறது. மத்தியதரைக்கடலிலும், ஆர்க்டிக் சமுத்திரத்திலும் செல்லும் நேசநாட்டுக்கப்பல்களைத் தடுக்கப்பார்த்தான். அவைகளும் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தன.

இந்த சந்தர்ப்பத்தில் வசந்தகாலம் வரவர ஜப்பானியரும் அதிகமாக அடையக்கூடிய வெற்றி நிலைமையை அடைந்துவிட்டார்கள். இனி அதிலிருந்து திரும்ப வேண்டியதுதான்; கொழும்பு, பவளக்கடல், மிட்வே இங்கு நடந்த சண்டைகளால் ஜப்பானிய முன்னேற்றம் தடைபட்டது. இதுதான் நடைபெறாத வசந்தகால தாக்குதலைப்பற்றிய கதை.

வி வி வி வி வி வி வி

**கோடைகால நிலை.** கோடைகாலம் வந்துவிட்டது. எகிப்திலும், ருஷ்யாவிலும் ஹிட்லர் பெரிய பின்ஸர் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறான். டொப்ருக்கும், ஸெபாஸ்டபூலும் வீழ்ந்துவிட்டன. இவ்வளவிருந்தும் இவை ஒரு பெரிய தாக்குதல் என்று சொல்ல முடியாது. மூன்று வருஷங்களாக யுத்தங்களைச்செய்து ஹிட்லர் ஒரு விதத்திலாவது வெற்றியடையவில்லை. உள்நாட்டு நிலைமைச் சரியாக இல்லாததால்

யுத்தரங்கத்திலாவது ஏதாவது செய்யவேண்டுமென்று முயற்சிக்கிறான். ருஷ்யச் சைனியத்தை இந்தக் கோடைகாலத்தில் விரட்டியடிக்காவிடில் அவன் நிலைமை மோசமாகிவிடும். பிரிடிஷ் பொருளாதார முற்றுகை அவனை அதிகம் நிர்ப்பந்தித்து வருகிறது. இந்த நிர்ப்பந்தத்தை அவன் தீர்த்துக்கொள்ளாவிட்டால் பட்டினிகிடக்க வேண்டியதுதான். காகஸஸை அடையாவிடில் அவன் விமானங்களுக்கு எண்ணெய் கிடைக்காது. ருமேனிய எண்ணெய் தளங்களை எல்லாம் அமெரிக்க விமானங்கள் தாக்கிவருகின்றன.

எகிப்தில் டொப்ருக் வசப்பட்டிருந்தாலும் ஹிட்லரின் நிலைமை மோசமாகயிருக்கிறது. 1940-ம் வருஷத்தில் கிரேஸியானி எகிப்து மேல் படையெடுத்து வந்த நிலைமையைக் காட்டிலும் பிரகிருத நிலைமை மாறுபட்டிருக்கிறது. அந்த சமயத்தில் ரோமலைப்போல் கிரேஸியானியும், முன்னேறியிருந்தால் எகிப்து வரையிலும் வந்திருக்கலாம். ஏனென்றால் 1940-ல் எகிப்தின் பாதுகாப்பு அவ்வளவு சரியாக இல்லை. அத்துடன் பிரிடன் பேரில் செய்யப்பட்ட மின்னல் படையெடுப்பை எதிர்க்க வேண்டியிருந்தது.

இப்பொழுது ரோமலின் படையெடுப்பு கிரேஸியானி படையெடுப்பைவிட பலமாகயிருக்கிறதென்றால் பிரகிருதமுள்ள நேசநாட்டு நிலைமையும் அதேவிதமாக பலமடைந்திருக்கிறது. 1940-ல் ருஷ்ய யுத்தம் ஆரம்பிக்கப்படவில்லை. அமெரிக்க ஸப்ளை மார்க்கங்கள் ஏற்படவில்லை. 30 நாடுகள் ஒன்றுசேரவில்லை. இராக், இரான், பாலஸ்தீனம் முதலிய இடங்களிலிருந்து எகிப்துக்கு உதவி வரவில்லை. இவ்வளவு சாதகங்களும் தற்போது ஏற்பட்டிருக்கின்றன.

நினைத்தபடி பிரிடிஷ் சைனியத்தைப் பலப்படுத்த முடியும். தேவையானால் இந்தியாவுக்கு வந்த அணைக்கப்பல் கூட்டம் போன்ற ஒரு கூட்டத்தை ஆச்சின்லிக்கின் உதவிக்கு அனுப்பமுடியும்.

இப்பொழுது ஹிட்லரின் தோல்வியை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டே பிரிடனின் பலம் விருத்தியாகி வருகிறது. மெடகாஸ்கர் நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பிரிடன் சும்மா இருந்துவிடவில்லை.

டொப்ருக் போன்ற நகரங்கள் எதிரிவசமானதால் பாதகமில்லை. நேசநாடுகளால் மறுபடி அவைகள் திரும்பி அடையப்படும். அதற்குக் கொஞ்சகாலம் பிடிக்கும். தற்சமயத்தில் ஒரு காரியத்தை சாதிக்கவேண்டுமானால் அதற்குத் தகுந்த திட்டங்கள் முன்னாலேயே போடப்பட்டிருக்க வேண்டும். அதேவிதமாக இப்பொழுது திட்டங்கள் போடப்பட்டிருப்பதால், இவர்களின் காரியாம்சையைக் காட்ட கொஞ்சகாலம் பிடிக்கும். பிரிடிஷ் விமானப்படை 1940-ல் கடும் சண்டைசெய்து தன் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியிருந்தது. தற்சமயத்திலோவெனில் முன்னேற்றப் போரை நடத்தி வருகிறது. இதிலிருந்தே நமது பலத்தைக் காணலாம்.

வெற்றியடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் நேசநாட்டு யுத்த தந்திரம் இருந்துவருகிறது. இது ஹிட்லரின் தந்திரத்தைவிட சாமர்த்தியமானது. யுத்த அரங்கங்கள் பலவிடங்களில் இருக்கலாம். இருந்தாலும், யுத்தம் ஒன்றுதான். எம்டன் நகரின் பேரில் ஒரு குண்டுபோட்டாலும் ருஷ்யாவில் ஜெர்மன் முன்னேற்றம் தடைபடும். மடகாஸ்கரில் ஒரு புதிய விமானதளம் ஏற்பட்டாலும் இந்தியாவுக்கு வெகு தூரத்திலேயே ஜப்பானியர்களை நிறுத்த ஹேதுவாகும். மத்தியதரைக்கடலில் அச்சுநாட்டு கப்பல் கூட்டத்தைத் தாக்கினாலும் ரோமல் முன்னேற முடியாது. இந்தக் கஷ்டமிருப்பதினால் ரோமலின் வெற்றிகள் தாத்காலிகமாகத்தான் ஏற்படும்.

கிரேஸியானிக்கு வந்த தோல்வி ரோமலுக்கும் வரும். பரோவின் காலம் முதல் எகிப்துக்குள் சைனியங்கள் வருவதும், போவதும் சகஜம்தான். ஆனால் எதிரிச் சைனியங்கள்தான் அழிந்திருக்கின்றன. படையெடுப்போருக்குச் சேதம் தான்.



**டொப்ருக்.** இங்கு ஏற்பட்ட நஷ்டம் அதிகம். ஆனால் விஷயங்களைப் பூரணமாகப் பரிசீலனை செய்யாமலிருக்கக்கூடாது. அது எதிரி வசமானதால் நமக்கு டாங்கி பலம் குறைந்துவிட்டது. எதிரியின் ஸப்ளை மார்க்கம் சுலபமாகிவிட்டது. பிரிடிஷ் கான்வாய் மார்க்கங்கள் எதிரியின் தாக்குதல்களுக்கு உள்ளாகிவிட்டன. ஸைப்ரஸுக்கும், ஹைபாவுக்கும் போகும் மார்க்கங்கள் ஆபத்துக்குள்ளாகின. ஹிட்லரின் காகஸஸ் தாக்குதலை ஒத்தபடி ரோமலின் தாக்குதல் இருப்பதால் ருஷ்யாவுக்கும் அதிக ஆபத்துதான். நைல், ஸூயஸ் முதலிய பிரதேசங்களுக்கு பயம் ஏற்பட்டிருப்பதால் கிழக்கு, தெற்கு ஆபிரிக்கா பாகங்களுக்கு எதிரிகள் வர முடியும். இதனால் ஜப்பானியர்கள் தரை மார்க்கத்தை உபயோகித்துக்கொள்ள முடிந்துவிட்டது. இது இப்படியிருந்தும் நேசநாடுகளின் நிலைமை மிகவும் பலமுள்ளதாயிற்று. லிபியா, எரிட்ரியா, ஸோமாலிலாந்து, அபிஸீனியா முதலிய இடங்களைத் தனியாக வேவல் சமாளித்த நிலைமையைக் காட்டிலும், பிரகிருத நிலைமை திருப்திகரமானது. நமக்கு ஸப்ளைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. தளங்களுக்குச் சமீபம்வரை ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. விமானம், பீரங்கிகள் இவைகளில் நமக்கு நிச்சயம் ஆதிக்கம் இருக்கிறது. இவைகளைக் கண்டு எதிரி தயங்க வேண்டியதுதான்.

நமது தோல்விகளின் போக்கு மாறியிருக்கிறது. திருப்திகரமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. நிலைமை மோசமானதல்ல. ரோமல் சற்று பின்வாங்கும்படி செய்யப்பட்டிருக்கிறான். பீரங்கிகளும், டாங்கிகளும் அவனுக்குச் சேதமாயின. குவாடரா முனையிலிருந்து விரட்டப்பட்டிருக்கிறான்.

வி வி வி வி வி வி வி

**எகிப்து.** அச்சு நாட்டுப் படைகள் எகிப்திற்குள் புகுந்ததிலிருந்து யுத்தத்தைக் குறித்து எகிப்திற்கு எவ்வித மனப்பான்மை இருக்கிறதென்று யாவரும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். அது நடுநிலைமையை வகிக்கிறது. இருந்தாலும், ஜன நாயகத்திற்கும், பிரிடனுக்கும் அதிக தயவைக்காட்டும். இவ்வபிப்பிராயத்தை எகிப்து அரசியல் சபையில் 185 பேர் அனுசரித்தனர். 5 பேர்தான் பாதகமாகயிருந்தனர். தற்காலம் பிரதம மந்திரியாகயிருக்கும் நஹாஸ் பாஷா பலதடவைகளில் சொல்லியிருக்கிறார். அலி மாகர்பாஷா என்பவன் அச்சு நாடுகளுக்குச் சாதகமாக இருப்பதால் அவனைக் கைதி செய்தபோது நஹாஸ் பாஷா பின்வருமாறு சொன்னான்:—'எகிப்தின் அயல்நாட்டுமுறை யுத்தத்தைத் தவிர்க்கப் பார்க்கிறது. எகிப்தின் ராணுவ நேயநாடான பிரிடனின் க்ஷேமத்திற்குக் குறைவாக நடந்துகொண்டால் தண்டிக்கப்படுவார்கள். ஜன நாயகத்தையும், ஸ்வதந்திரத்தையும் நிலைநாட்ட சண்டையிடும் நாடுகளுக்கு பயத்தை விளைவிக்கக்கூடாது. இதுவே எனது திட்டம். இவ்வபிப்பிராயத்தை பிரிடனும், பிரிடிஷ் சைனியங்களும் அறியலாம்.' நஹாஸ் பாஷாவின் வார்த்தை வாப்து கக்ஷியிலுள்ள குடியானவன், தொழிலாளி, வேலைக்காரன், மிராசுதார், மாணுக்கன், முதலிய யாவருடைய அபிப்பிராயத்தையும் தெரியப்படுத்துகிறது. 264 பிரதிநிதிகள் அடங்கிய சபையில் 216 இவனுடைய கக்ஷியைச் சார்ந்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஆங்கிலேய-எகிப்து ஒப்பந்தம்.** ஒன்று முன்பு அபிஸீனியா படையெடுக்கப்பட்ட சமயத்தில் கையெழுத்தாயிற்று. எகிப்து சண்டையில் ஈடுபடாத போதிலும், 'அதில் சேர்ந்த நாடுகள் சண்டையில் ஈடுபட்டால் மற்ற நாடு சண்டைக்குவரும். எகிப்திலுள்ள துறைமுகங்கள், விமான தளங்கள், போக்குவரவு முதலிய சாதனங்கள் எல்லாம் பிரிடனுடைய உதவிக்குக் கொடுக்கப்படும்.' ஆகவே எகிப்து படைகள் நேர்முகமாக சண்டையில் ஈடுபடாதபோதிலும் எகிப்திலுள்ள இதர உதவியை அங்குள்ள பிரிடிஷ் படைகள் பெறலாம். இவ்வுதவி பரஸ்பரம் இருந்துவருகிறது. எகிப்து அச்சு நாடுகளுடன் அரசியல் சம்பந்தத்தை விட்டுவிட்டது. பிரிடனுடன்

மாத்திரம் உண்மையான நேசத்துடன் இருந்துவருகிறது. பிரிடன் எதிர் பார்ப்பதும் இவ்வளவுதான். எகிப்து சண்டையில் ஈடுபடாமல் இருப்பதுதான் பிரிடனுக்கு அனுகூலம்.

வி வி வி வி வி வி வி

**முற்றுகைச் சண்டை.** ஸெபாஸ்டபூல் இவ்வாரம் எதிரிவசமாயிற்று. இதே விதமாக டொப்ருக்கும், சிங்கப்பூரும் எதிரிவசமான அனுபவத்தைப் பார்த்தால் அரண்களுக்குள்ளிருந்து சண்டை செய்வது ஒருவிதத்தில் நன்மையென்று தெரிகிறது. முற்காலங்களில் ஒரு கோட்டைக்குள்ளிருந்து வருஷக் கணக்கில் எதிரிகளைத் தடுத்து நிற்க முடியும். ஆனால் நவீன பீரங்கி சண்டைகளில் அது பயன்படாது. தரையிலிருந்தும் விமானத்திலிருந்தும் குண்டுகளைப் போடுவதால் அரண்களைப் பிளந்துவிடலாம். இருந்தாலும் சில சாதகங்கள் இருக்கின்றன. அதிகமான எதிரிப் படைகளை ஒரே இடத்தில் சேரவிடாமல் செய்து அழித்துவிடலாம். எதிரியின் முன்னேற்றத்தைத் தடை செய்யலாம். இந்த இரண்டும் ஸெபாஸ்டபூல் சண்டையில் நடைபெற்றன. லக்ஷக்கணக்கான ஜெர்மானியர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான விமானங்களையும், பீரங்கிகளையும் எதிர்த்து சண்டை செய்யப்பட்டது. எதிரியின் வசந்தகாலத் தாக்குதல் தடையுற்றது. காகஸஸை நோக்கி எதிரி முன்னேறிச் செல்லமுடியவில்லை. பாதுகாப்பு முறையில், ஸெபாஸ்டபூல், டொப்ருக், சிங்கப்பூர் இம்மூன்றுக்கும் வித்தியாசம் இருக்கிறது. சிங்கப்பூருக்கு கடல் பாதுகாப்பு மாத்திரம்தான் உண்டு. அது ஒரு திறந்த வெளி. பூமியின் ஜலமட்டம் வெகுசமீபத்தில் இருப்பதால் பாதுகாப்பு பள்ளங்கள்கூட வெட்டிக் கொள்ள முடியாது. மலேயாவில்தான் தரைப் பாதுகாப்பு செய்து கொள்ள முடியும். ஆனால் ஸெபாஸ்டபூலிலும், டொப்ருக்கிலும் இயற்கை வசதிகள் அதிகம் உண்டு. ஸெபாஸ்டபூலைச் சுற்றியுள்ள மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் பாதுகாப்பு ஸ்தலங்களை அமைத்துக்கொள்ளலாம். டொப்ருக்கில் போதுமான வசதி உண்டுபண்ணப்பட்டிருந்தன. 1851-ம் வருஷத்தில் கடல் மூலமாகத் தாக்கப்பட்டு ஸெபாஸ்டபூல் எதிரி வசமாயிற்று. தற்போது தரை வழியாகத் தாக்கப்பட்டு எதிரி வசமாயிற்று. சிங்கப்பூரும் தரைத் தாக்குதலால் எதிரி வசமாயிற்று. மால்டா பிரிடனின் கடலாதிக்க உதவியால் சமாளித்து வருகிறது. ஸெபாஸ்டபூலுக்கு கடல் போக்குவரத்துகள் அதிகமில்லை. இருந்தாலும் பலமாதங்கள் எதிர்த்து நின்றதால் சரித்திரத்திலேயே அதிகக் கியாதியடைந்தது.

வி வி வி வி வி வி வி

**சைனு.** 'யுத்தம் ஆரம்பித்து ஐந்து வருஷங்கள் முடிந்தன. ஜூலை 7-தேதி சைனு யுத்தத்தின் ஐந்தாவது வருஷக்கொண்டாட்டம் நடைபெற்றது. அது வரை நடந்த விஷயங்களைக் கவனித்தால் சைனு தைரியம், ஆத்ம சக்தி முதலியவைகளால் கடுமையான சந்தர்ப்பங்களில் எதிரியை எதிர்த்து நின்றது. எல்லாவித ஆயுதங்களையும் உபயோகிக்கும் கொடுமையான சத்ருவை எதிர்த்து சைனு சமாளித்து வந்திருக்கிறது. அதே சமயத்தில் கல்வி, தொழிற்சாலை சமூகம் முதலியவைகளில் தகுந்த மாறுதல்களைச் செய்துகொண்டிருக்கிறது. எல்லா கௌரவமும் சியாங்கைஷேக்குக்கும் அவருடைய மனைவிக்கும் தான். விமானத் தாக்குதல், கூட்டமாகக் கொலை, பட்டினி, ஸ்திரீ ஹத்தி முதலியவைகளை எதிரி செய்து கொண்டிருக்கும் போதே அவைகளிலெல்லாம் இருந்து இவர்கள் மனமக்களை மீட்டியிருக்கிறார்கள். ஜப்பானிய யுத்தத்தில் 25,00,000 ஜப்பானியர் சேதப்பட்டிருக்கின்றனர். அதில் 10,00,000 கொல்லப்பட்டனர். உலகத்தில் எந்தப் பாகத்தில் சண்டை நடந்தாலும் "ஆக்கிரமண நாடு அழியவேண்டும்." "அச்சு நாடு அழியவேண்டும்" என்ற ஒரேபாட்டு தான். தற்போது சைனு தனியாக சண்டை போடவில்லை. அதற்கு மீண்டும் உதவியளிக்கப்பட்டுவருகிறது. சைனு யுத்தத்தின் ஐந்தாவது வருஷதினத்தன்று சியாங்கைஷேக் அனுப்பிய செய்தியை கவனிக்கவேண்டும்.

"ஆக்கிரமண நாடுகளை எதிர்த்து நிற்பதில் நாம் முன்னணியில் நிற்கிறோம்."
"ஆசியாவில் நடக்கும் சண்டையின் பாரத்தை சைனு வகித்துக்கொள்ளும்."



# புதிய விமானங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

"புதிதாக விமானங்கள் உற்பத்தி செய்வதில் ஏற்கனவேயுள்ள திட்டங்களை இன்னும் அதிகப்படுத்தவேண்டும். அதன் பயனாக 1942-ம் வருஷத்தில் மட்டில் 60,000 விமானங்கள் தயாரித்துவிடலாம். அதாவது சென்ற ஒன்றரை வருஷங்களுக்கு முன் இருந்த விமான உற்பத்தியைக்காட்டிலும் 10,000 விமானங்கள் அதிகமாகக் கட்டிவிடலாம். இவைகளில் 45,000 யுத்த விமானங்கள் அதாவது, பாம்பர் விமானங்கள், பருந்துப்பாய்ச்சல் விமானங்கள், எதிரி விமானத்தைத் துரத்தும் விமானங்கள் அடங்கியுள்ளன. இவ்விதம் விமான உற்பத்தி வரவர அதிகரித்து வரும். அதன் காரணமாக 1943-ம் வருஷத்தில் 1,00,000 போர் விமானங்கள் உள்பட 1,25,000 விமானங்கள் தயாராகிவிடும்."

(பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட், ஜனவரி 6, 1942).

யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கிய பிறகு ஒரு மாதத்திற்குள் மேற்சொல்லிய செய்தியை அமெரிக்கக் காங்கிரஸுக்கு பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு வெளியிட்டார். அப்பொழுது அமெரிக்கக் கைத்தொழிலுக்கு இதற்கு முன் கோரப்படாத பெரிய வேண்டுகோளாகக் கருதப்பட்டது.

அதன் பயனாக இப்பொழுது, ஜனாதிபதி செய்தியை விடுவித்த ஒரு சில மாதங்களுக்குள் அங்கு ஏராளமாக விமானங்கள் கட்ட ஏற்பாடாயிற்று. தேவைக்குத் தகுந்தபடி உற்பத்தி நின்றுவிடவில்லை. இன்னும் அதிகமாகவே விமானங்கள் கட்டப்பட்டன. 1942-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் விமான தொழிற்சாலை 1941-ம் வருஷத்திலிருந்த விமான உற்பத்தியைக் காட்டிலும் நாலு மடங்கு அதிகமான விமானங்களை உற்பத்தி செய்தது.

அமெரிக்க ஆகாய விமானக் கைத்தொழில் எவ்வகைப்பட்டது? சமுத்திரத்தைத்தாண்டி பல இடங்களிலிருந்தும் வந்து அமெரிக்கா கண்டத்தில் பரவியிருக்கும் பலவகைப்பட்ட பெரிய ஆகாய விமான உற்பத்தி நடவடிக்கைகள் எவ்விதமானவை?

## 10 லக்ஷம் பயிற்சிபெற்ற தொழிலாளிகள்.

நூற்றுக்கணக்கான மைல்கள் நீளமுள்ள ஏராளமான அமெரிக்கத் தொழிற்சாலைகளில் 10 லக்ஷம் பயிற்சிபெற்ற தொழிலாளிகள் அல்லும் பகலுமாக விமான உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அதே மாதிரியாகவே யந்திரங்கள் செய்யும் தொழிற்சாலைகளில் மற்றொரு 10 லக்ஷம் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அங்கு வெடிகுண்டு போட குறி பார்க்கும் கருவிகள், விமானத்தைச் செலுத்தும் கருவிகள், பீரங்கிகள், கவசங்கள் தேய்வுறும் யந்திர பாகங்கள், பலகைகள், அலுமனியம், எஃகு முதலியவைகள் தயாராகின்றன.

அலுமனியம் உற்பத்தி தொழிற்சாலைகளில் மின்சார சக்தியால் அதிகப் பிரகாசமாய் எரியும் அடுப்புகள், இருக்கின்றன. அங்கு உலைகளில் எஃகை உருவாக்கும்பொழுது ஏற்படும் பெரிய சப்தமும், பாம்பர் விமானத்தின் மேல் கவசத்தைப்போட்டு முடிக்கும் சப்தமும், எப்பொழுதும் கேட்ட மணியமாக இருக்கும். விமான பாகங்களை ஒன்றுசேர்க்க செம்மட்டியால் அடிக்கும்பொழுது நெருப்புப் பொறிகள் கிளம்பும்.

இவ்வளவையும் செய்து முடிக்க அமெரிக்கத் தொழிலாளிகளின் சக்தியைப் பொறுத்திருக்கிறது. நியூ இங்கிலாந்திலிருந்து கலிபோர்னியா வரையிலும்முள்ள தொழிற்சாலைப் பிரதேசங்களில், யந்திர சாமான்களை மிகவும் சாமர்த்தியமாகத் தயாரிக்கும் சக்தி வாய்ந்த ஏராளமான தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

## டெட்ராயிட் மோட்டார் தொழிற்சாலை இப்பொழுது யுத்த தளவாட உற்பத்தி சாலையாக மாறிவிட்டது.

உலகத்தில் சமாதான காலத்தில் மோட்டார் உற்பத்திசாலைக்கு தலை நகரமான மிச்சிகனிலுள்ள டெட்ராயிட் என்ற இடம் இப்பொழுது அமெரிக்க யுத்தப் பிரயத்தனத்துக்கு அச்சாணி போல் இருக்கிறது. சொந்த உபயோகத்திற்கு மோட்டார்கள் உற்பத்தி செய்வது இப்பொழுது நின்று விட்டது. யுத்தப் பொருள்கள் தயாரிப்பதற்கு வேண்டிய மாறுதல்கள் பூராவும் முடிவாகிவிட்டது.

பொதுமக்கள் உபயோகத்திற்காக தயாரிப்பதை நிறுத்துவதற்கு முன் 1,00,45,527 மோட்டார்கள் தயாரித்த ஹென்றி போர்டின் பெரிய யந்திரசாலைகளும் இம்மாதிரி மாறிவிட்டது உண்மை. கடைசிமோட்டார் வேலை பூர்த்தியாகி கொட்டகைகளிலிருந்து வெளியேவந்தவுடன், யுத்தத்திற்குத் தேவையான யந்திரமும் தயாரிக்கப்பட்டு பின்னால் வெளியே அனுப்பப்பட்டது. நூற்றுக் கணக்கான ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள புதிய போர்ட் யந்திரசாலையில் ஒரே இடத்தில் 65,000 தொழிலாளிகள் கனமான பாம்பர்கள் கட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இங்கு பெட்டிமாதிரியுள்ள மோட்டார் வண்டியின் பரிமாணத்திற்குத் தக்கபடி இருக்கும் அலுமினியத் தகடுகளை பெரிய அச்சுக்களில் கொடுத்து பாம்பர் விமானம் கட்டுவதற்கு தகுந்தபடி அடிக்கப்படுகின்றன. ஓய்வில்லாமல் வரிசை வரிசையாக, அரைகுறையாகக் கட்டப்பட்ட பாம்பர்கள், தங்கள் தங்களுக்கு குறித்த வேலையைச்செய்ய தொழிலாளிகள் காத்திருக்கும் சந்துவழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

### உருவாக்குதல்.

அந்த விமானங்களுக்கு இறக்கைகள் சேர்க்கப்படுகின்றன. அதன்மேல் அவை விமானங்கள்போல தோன்ற ஆரம்பிக்கின்றன. பிறகு அந்த விமானங்களில் பெரிய மோட்டார்கள் பொருதப்படுகின்றன. மேலும் சரியான ஸ்தானத்தில் நாலு பெரியதுப்பாக்கிகள் சேர்க்கப்படுகின்றன, பிறகு பாம்பர் விமானங்களுக்கு யுத்த தந்திரத்திற்கேற்றவாறு பல வர்ணங்கள் பூசப்படுகின்றன. பிற்பட்டு தொழிற்சாலைகளிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாய் ஏராளமான விமானங்கள் வெளியே செய்து அனுப்பப்படுகின்றன. பிறகு அவைகள் பரிசோதிக்கப்பட்டு, பறக்க விடப்படுகின்றன.

இது ஒரு யந்திரசாலையைப்பற்றிய வர்ணனை. இன்னும் மற்ற இடங்களில் பெரிய புதிய ஆகாயவிமான உற்பத்தி யந்திரசாலைகள் இருக்கின்றன. அங்கு ஏற்கனவே உள்ளதைவிட இரண்டு மடங்கு அதிகமான விமானங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆமாம். அவ்விமானங்கள் வந்துகொண்டிருக்கின்றன. விமானங்கள் அதிசீக்கிரத்திலே கட்டப்பட்டுவருகிறதுபோல் அவற்றை ஓட்டுவதற்கு விமானிகளும் துரிதமாகவும், செவ்வையாகவும், கணக்கில்லாமலும் பயிற்சியளிக்கப்படுகிறார்கள்.

அமெரிக்காவில் விமானப்படையை நடத்துவதற்கு அமெரிக்க ஆகாய விமானப்படையில் நார்வேயின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் மூன்று பங்குக்கு சமானமான 20 லக்ஷம் பேர்கள் இருப்பார்கள். குறைந்த பக்ஷம் 1,50,000 பேர்கள் சண்டைசெய்யத் திறமையுள்ள விமான ஓட்டிகளாக இருப்பார்கள். அவர்களில் பாதிப்பேர் 1942-ம் வருஷம் முடிவதற்குள் போருக்கு சித்தமாகயிருப்பார்கள். மேலும் அமெரிக்கக் கப்பற்படை வருஷா வருஷம் 30,000 கப்பற்படை ஆகாய விமானிகளுக்குப் பயிற்சியளிக்க திட்டம்போட்டிருக்கிறது.



### பலர் முன்வந்தனர்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் தாக்கப்பட்ட சில மணிகளுக்கு அப்பால் ஒரு நகரத்தில்மட்டும் 700 பேர்கள் தரைப்படை, ஆகாய விமானப் பகுதிகளில் சேர்த்துக்கொள்ளும்படி மனுக்கொடுத்தார்கள். அந்த நாட்டில் பூராவும் இப்படியேயிருந்தது. எல்லாத்தொழில் பார்த்தவர்களும், விவசாயத்திலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும், எல்லாவித சமூகத்திலிருந்தும் வந்து சேர்ந்தார்கள். அமெரிக்கப் பொதுமக்களுக்கு மோட்டார் ஆகாய விமானம் ஓட்டக்கூடிய யந்திர சக்தி பொருந்தினவர்களும் வந்தார்கள்.

அநேக வருஷங்களாக இவர்கள் தாங்களே விமானங்கள் கட்டியும் அவைகளுக்குவேண்டிய எஞ்ஜின்களைச் செய்தும் பறக்கவிட்டுவந்தார்கள். ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் மோட்டார் எஞ்ஜினைப்பற்றியும், தேசப்படங்களைப்பற்றியும் நன்றாய்த் தெரியும். அமெரிக்கர்கள் சுறுசுறுப்பான வர்கள். தேகப்பயிற்சி பெற்றவர்கள். துணிவுள்ளவர்கள், தீரச்செயல்கள் செய்யக்கூடியவர்கள். இவர்கள் ஆகாய விமானத்தில் செல்வதற்கு ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள்தான் இந்த தேசத்தின் ஆகாய விமானப் படையில் சேர்ந்திருக்கிறார்கள்.

யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு வேண்டிய விமானங்கள் இருக்கின்றன. அதைப் பறக்கவிடுவதற்குப் போதுமான மாலுமிகளுமிருக்கிறாகள். நேசதேசத்தார்கள் ஆகாய விமானத்தில் ஆதிக்கம் பெற்று ஸ்வதந்திரம் பெறுவதற்காக இவர்கள் பேருதவிசெய்து வருகிறார்கள்.

---

## ஹிட்லர் பேரில் ஜெர்மானியருக்கு நம்பிக்கை குறைகிறது.

(ஒரு அமெரிக்கர் ஜெர்மனியிலிருந்து எழுதியது).

ஜெர்மனி பூராவும் தற்சமயத்தில் சந்தேகம் பரவிவருகிறது. நாஸி அரசாட்சிக்கு எங்கும் செல்வாக்கு இல்லை. ஜனங்களின் மூணுமுணுப்பு அதிகமாகிவருவதால் பெரிய நகரங்களிலுள்ள உபாத்தியாயர்கள், நகரசபைத் தலைவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவர்களுடைய ஸ்தானத்தையும், ஏ. ஆர். பி. ஸ்தாபனங்களையும் ராணுவ அதிகாரிகள் வசப்படுத்திவருகின்றனர். இவ்விதமாக ஜனங்கள் வசப்படாமல்போய்விடுவார்களோ என்று பயந்து, ஹிட்லர் ராணுவத்திற்குப் பிராபல்யம் கொடுத்துவருகிறான்.

ஹிட்லருக்கு ரொம்ப விருப்பமான மூனிச் நகரத்தில்கூட இவ்வித நிலைமை ஏற்பட்டுவருகிறது. சண்டையிலிருந்த ஒரு குஷி குன்றிவிட்டது. யுத்தம் சீக்கிரத்தில் முடியுமென்று வாயால் சொல்லப்படுகிறதே தவிர முடியவில்லை. அதற்கென்ன காரணமென்று ஜனங்கள் அறிய விரும்புகின்றனர்.

இதற்குப் பதில் சொல்லாமல் ஹிட்லர் ருஷ்யாவுக்குச் சென்று 1942-ம் வருஷத்தில் நிலைமை சரியாக இருக்கிறதாகச் சொல்லுகிறான்.

"யுத்தம் தோற்று வருகிறது. எங்களுடைய பிள்ளைகளையும், பெண்களையும் சைனியங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் அனுப்பிவிட்டோம். எங்களுடைய சொத்துக்களைப் பிடுங்கிக்கொண்டனர். எங்களுடைய வீடுகள் எரிகின்றன. நாங்கள் விமானப் பாதுகாப்பு ஸ்தலங்களில் மறைந்துகொண்டு கிடக்கிறோம்" என்று ஒரு பெரிய ஜெர்மன் வியாபாரி என்னிடம் சொன்னான்.

நான் அதன் உண்மையைக் கண்டுகொண்டேன்.

"ஆனால் நீங்களடைந்த லாபங்கள் அதிகமாக இருக்குமே? ஐரோப்பா பூராவும் வியாபித்திருக்கிறீர்களே" என்று சொன்னேன்.

"நாங்களாகத்தான் நாசத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். ஹிட்லர் உண்டாக்கி இருக்கிறான் என்று சொல்லுவது பொருத்தமாகும். தேசத்திற்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்த்து ஜனங்கள் கவலைப்படுகின்றனர். நகர சபைகளின் தலைவர்களில் 80 சதவிகிதம் தள்ளப்பட்டு, ராணுவ அதிகாரிகள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். பள்ளிக்கூடங்களிலும் அவ்விதம்தான். உபாத்தியாயர்களுக்குப் பதிலாக ராணுவ அதிகாரிகள் இருக்கிறார்கள்" என்று அவன் பதில் சொன்னான்.

இதை நான் கவனமாகக் கேட்டேன். இதிலிருந்துதான் முனிச், கோலோன், பெர்லின் முதலிய நகரங்கள் துக்கரமாகக் காணப்படுவதற்குக் காரணத்தைத் தெரிந்துகொண்டேன்.

"ராணுவத் தலைவர்களுக்குப் பள்ளிக்கூடங்களைப்பற்றி என்ன தெரியும்" என்று கேட்டேன்.

"உண்மைதான். நாஸி ஆட்சியில் சைனியத்திற்கு அடுத்தபடிதான் படிப்பு. பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் நாஸிகளுடையும் வெற்றிகளைப் பற்றி அதிகம் சொல்லாததால், பையன்களுக்குப் பொய்யான கதைகளையெல்லாம் சொல்லி உத்ஸாகத்தை மூட்டவே ராணுவத் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று நான் சொன்னதை ஒப்புக்கொண்டு பதில் சொன்னான். ஆச்சரியத்துடன் நான் தலையை அசக்கினேன்.

"நகரசபைத் தலைவர்களை மாற்றியதற்கு என்ன காரணம்" என்று கேட்டேன்.

"அதுவும் அவ்விதம்தான். ஜனங்கள் நம்பியிருந்தபடி யுத்தம் முடிந்து விடும் என்று இவர்களும் நினைத்தார்கள். ஜனங்களுடைய அபிப்பிராயத்தையும் வெளியிட்டனர். அதன் பயனாகத்தான் பதவியை இழந்தார்கள்" என்று சொன்னான்.

### பெர்லின் மேயர் மறைகிறார்.

சில நாட்கள் கழித்து ஒரு காரியமாக பெர்லின் சென்றேன். எல்லாவற்றையும் ராணுவ அதிகாரிகள்தான் நடத்துகிறார்கள். மேயர் எங்கு சென்றான் என்று ஒருவருக்கும் தெரியாது. நாஸி வெற்றியைப்பற்றி அதிகம் சொல்லிக் கொடுக்காத உபாத்தியாயரை சைனியத்தில் சேர்த்து அதற்குப் பதிலாக ராணுவத் தலைவர்கள் இருக்கிறார்கள்.

"இது சரிதான். உமது பையன் பள்ளிக்கூடத்தில் எவ்வாறு படித்து வருகிறான்" என்று ஒருவரைக் கேட்டதற்கு, "வரவர கீழ் நோக்கிப் போகிறான். படிப்பு ஏறவில்லை. பாடங்களும் நடக்கவில்லை. சைனியத்தில் உள்ளோரைப் போல் கசரத்துதான் செய்யப்படுகிறது. யுத்த சம்பந்தமான தந்திரங்களும், படமெழுதவும் கற்றுக்கொள்ளப்படுகிறது. உறக்கப் பேசவும் கூடாது."

இதுதான் சரியான உண்மை, ஜெர்மானியரே இதை ஒப்புக்கொள்ளுவது ஒரு விசேஷ விஷயம். ஒரு காலத்தில் நமக்கு நன்மை ஏற்படும்படி நம்பி நாஸிகள் சொற்படி ஜனங்கள் நடந்துகொண்டார்கள். இப்பொழுது நன்மை ஏற்படாததால் முணுமுணுக்கிறார்கள்.

ஹைஸ்கூல் உபாத்தியாயராக ஒருவனிருந்து ஒரு சிறு பிழை செய்தால் போதுமானது. உடனே வேலையிலிருந்து நீக்கப்படுவான். கடைசி வரையில் அவனுக்கு நல்ல கதியே கிடையாது. ரகசியப் போலீஸார் அவனைக் கவனித்து வருவார்கள். குற்றத்தைப் புதிதாகச் சாற்றுவார்கள். அவனுக்கு எவ்வளவு சாக்ஷிகள் இருந்தாலும் பிரயோசனப்படாது. ராணுவத்திலுள்ளோர் வார்த்தைகள்தான் ஏற்படும்.



### சரியான திருஷ்டாந்தம்.

அண்டர்டன் லிண்டன் என்ற இடத்திற்குச் சமீபத்தில் நானும் ஒரு ஜெர்மானியரும் நின்றுகொண்டிருக்கும்போது ஒருவனைச் சுட்டிக்காட்டி, "அவனுடைய கதியைப்பார்; அவன் ஒரு பெரிய மனிதன். ஏழைகளுக்கு எத்தனையோ தர்மம் செய்திருக்கிறான். தற்சமயத்தில் அவன் நாலுபேர்களுடைய உதவியை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது" என்று காண்பித்தான்.

நான் இந்தப் பக்கமாக திரும்பிப் பார்த்தேன். கிழிந்த ஆடை அணிந்துகொண்டு மார்வரையில் தொங்கும் மீசையோடு இளைத்துப்போன அவன் அன்று என்னைப் பார்த்த பார்வை இன்னும் ஞாபகமிருக்கிறது

அவன் என் பக்கமாகச் சென்றதும், மீண்டும் நாங்கள் பேசத் தொடங்கினோம்.

அவன் ஒரு வைத்திய கலாசாலையில் போதகனாக இருந்தான். நாஸிக் கொள்கைகளைச் சொல்லிக்கொடுக்காததினால் அவனுக்கு ஒருதடவை எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. மீண்டும் அவர் உட்படாததால் பதவியை இழந்தான். பிறகு ஜெயிலில் அடைக்கப்பட்டான். மறுபடி அவன் நல்ல நிலைமைக்கு வர முடியாதபடி நாஸிகள் செய்துவிடுவார்கள்" என்று என் சிநேகிதன் சொன்னான்.

"அது சரி. அவனுடைய ஸ்தானத்திற்கு நாஸிக் கொள்கைகளுடன் மற்றொருவனை நியமித்தார்களா" என்று கேட்டேன். என் சிநேகிதன் வெறுப்புடன் ஒரு சிரிப்பு சிரித்தான்.

"வைத்திய கல்லூரி மாணவர்களுக்கு ராணுவ உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டார். ரொட்டியையே சரியாக வெட்டத் தெரியாத அவன் ரண வைத்தியத்தை எவ்வாறு செய்யப்போகிறான். இப்போதுள்ள ஜெர்மன் வைத்தியர்கள் எல்லாம் இப்படித்தான்".

ஐரோப்பாவில் ஹிட்லர் நடத்திவரும் சண்டையைப்பற்றி பெரிய ஜெர்மன் நகரங்களிலுள்ள பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்பட்டுவருகிறது. பெர்லினுள்ளோருக்கு ஜீவனமே கஷ்டமாகயிருக்கிறது.

நான் சொல்லுவது என்னவென்றால், ஜனங்கள் இவ்வாறு முணுமுணுப்பது ஹிட்லருக்குத் தெரியும். அதற்காகவேதான் பெரிய ஸ்தானங்களில் நாஸி ராணுவத் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக்கொண்டு அடக்கி விடலாம் என்று நினைத்திருக்கின்றனர்.

இவ்விதமாக கோபமடைந்த ஜனங்களை அடக்குவதில் ராணுவத் தலைவர்கள் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் ஹிட்லரும், அவனுடைய சகாக்களும் ஆக்கிரமணத்தில் ஈடுபடுவார்கள். ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்துபோல நாடுகள்தான் இன்னும் பாக்கியிருக்கின்றனவே!

---

## ஜப்பானின் விமான யுத்த தந்திரம். நாஸி முறைகளுடன் ஒப்பிடமுடியாது.

(கென்னத் பிஸ்டாப் எழுதியது).

### குண்டுகளைப்போடும் முறைதான் முக்கியமானது.

உலகத்தில் எல்லாவிடங்களிலும் உள்ள வெடிகுண்டுகள் யாவும் ஒரேமாதிரிதான். ஆனால் அவற்றைப் போடும் மாதிரி அந்தந்த தேசத்தார்களுக்குத் தகுந்தபடி அநேக விதமாக மாறியிருக்கிறது. இது விவரத்தை நான் பிரிட்டன் பேரில் விமானத் தாக்குதலை கேட்டதிலும், பிற்பட்டு சிங்கப்பூரைப் பிடிப்பதற்காக மலேயாவில் யுத்தம் நடந்தபொழுதும் கண்டுபிடித்தேன்.

ஜப்பானியர்கள் பிறர்களைப் பார்த்து காப்பியடிப்பதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள் என்று சொல்லுவதுண்டு. ஆனால், இப்பொழுது அவர்கள் நடத்திவரும் விமானத் தாக்குதல்களில், அலாதியாகப் பிறருக்குத் தெரியாத தங்கள் வல்லமையைக் காட்டிவருகிறார்கள். மேலும் இந்த பஸிபிக் யுத்தத்தில் அவர்கள் உபயோகித்த தந்திரங்களிலும், முன் யோசனைகளிலும் அவர்களின் விமானத் தாக்குதல் ஒரு நூதன முறையென்பதற்குப் போதுமான ருஜு இருக்கிறது.

விமான யுத்த தந்திரத்தைக் கவனித்தால் அதை நாலு வகையாகப் பிரிக்கலாம். (1) லக்ஷியத்தைத் தீர்மானிப்பது; (2) தாக்கும் முறை; (3) உபயோகப்படுத்தும் விமானங்களை அமைக்கும் விதம்; (4) காலம் (பகல் அல்லது இரவு).

லக்ஷியத்தைப் பொருக்குவதில் விமானப்படைத் தலைவர் மூன்றுவித முறைகளைக் கையாளலாம். முற்றிலும் ராணுவத் தன்மையுள்ள லக்ஷியங்கள், அதாவது பீரங்கிகள், கோட்டைகள், யுத்தக் கப்பல்கள், விமானத் தளங்கள் வகையராமட்டில் தாக்குவதாக வைத்துக்கொள்ளலாம், மற்றபடி மறைமுகமாகப் பொதுமக்களைத் தாக்குவதற்காகப் போக்குவரத்து சாதனங்களையும், உணவுப்பொருள், ஸப்ளை மார்க்கங்களையும், புகை, தண்ணீர், மின்சாரம் வசதிகளையும், இன்னும் மற்ற உயர் நிலையுள்ள ஸாதனங்களையும் அழிக்கலாம்; அல்லது கண்மூடித்தனமாகப் பொதுமக்கள்பேரில் வெடிகுண்டுபோட்டு, பீதி உண்டாக்கி, உணர்ச்சியைக் குறையச்செய்து நேராடியே தாக்கிவிடலாம்.

ஆகாய விமானத் தாக்குதல் தந்திரத்தில் ஜெர்மன் முறைகளையும், ஜப்பானிய முறைகளையும் ஒப்பிட முடியாது.

யுத்த ஆரம்பகாலமுதல் லுப்ட்வாபி பிரிடனைத் தாக்கிவந்தபொழுது நாஸி விமானிகள் எதிர்ப்பு வரமுடியாத இடங்களான ஜனங்கள் வசிக்கும் ஜில்லாக்கள், ஆஸ்பத்திரிகள், மாதாக்கோவில்கள் இவைகளைப் பார்த்துத் தாக்கினார்கள். ராணுவ லக்ஷியங்கள்பேரில் தாக்கினால் தரையெதிர்ப்பு ஏற்படுமென்று எதிர்பார்த்து அங்கு தாக்கவில்லை.

இதற்கு மாறாக ஜப்பானியர்கள் முக்கியத் தன்மைவாய்ந்த லக்ஷியங்களை எவ்வளவு பலமான தரையெதிர்ப்பு இருந்தபோதிலும், அதை கவனியாமல் அதிகப் பிடிவாதத்துடன் தாக்கிவருகிறார்கள்.

சிங்கப்பூர் தீவுக்குமேல் வரிசைக் கிரமமாக வந்த கூட்டத்திலுள்ள ஒரு பாம்பர் விமானத்தை நல்ல இடத்தில் வைக்கப்பட்டிருந்த விமான எதிர்ப்பு பீரங்கி குறிபார்த்து நேராகத் தாக்கியதை நான் கண்டேன். இந்த பீரங்கி வெடியானது அந்த பாம்பரில் வெடிகுண்டு வைத்திருக்கும் தட்டில் தாக்கியிருக்கவேண்டும். ஏனென்றால், பீரங்கிக்குண்டுபட்ட விமானமும், அதற்கு இரு பக்கங்களிலுமுள்ள இரண்டு கனமான விமானங்களும் தீப்பற்றிக்கொண்டு, கண் குருடுபடும்படியான பிரகாசத்துடன் எரிந்தன. அந்த வெடியின் அதிர்ச்சியினால் பாக்கி விமானங்கள் புயல் காற்றில் அகப்பட்ட கப்பல்கள்போல் அலைசந்தாடின. ஆனால் உடனே இடைவெளியில்லாமல் அவைகள் ஒன்று சேர்ந்து தங்கள் லக்ஷியத்தைத் தாக்க பறந்து சென்றன.

### உயரமும், எண்ணிக்கையும்.

பிரிடன்பேரில் ஜெர்மானியர்கள தாக்கும்பொழுது 14,000 அடி உயரத்திலிருந்து தாக்கினார்கள். ஆனால் ஜப்பானியர்கள் தாங்கள் வெடிகுண்டு போடுவதில் நம்பிக்கைகொண்டு இன்னும் அதிக உயரத்திலிருந்து தாக்குகிறார்கள். மலேயாவில் போட்ட வெடிகுண்டுகள் 22,000 அடி அல்லது அதற்கு மேலும் உயரமாக இருந்து போடப்பட்டன.

ஒரு சமயத்தில் ஒரு லக்ஷியத்தின்பேரில் பாய்ச்சல் விமானங்களுடன் ஜெர்மானியர்கள் ஏராளமான விமானங்களை, அல்லது 60 முதல் 80 விமானங்கள் வரை அனுப்பினார்கள். ஜப்பானியர்களோ விமானங்களைப் பரவலாக அனுப்பும்



கொள்கையை ஆதரிக்கிறார்கள். அவர்கள் பாய்ச்சல் விமானங்களை ஒன்றாகவோ, இரண்டாகவோ அனுப்பி தரையிலுள்ள லக்ஷியங்களை ஒரே சமயத்தில் அநேக இடங்களில் தாக்கும்படிக்கும், விமான எதிர்ப்புக்காரர்களைச் சோர்வடையச் செய்யலாம் என்ற நம்பிக்கையுடனும் மாறி மாறி விமானங்களை அனுப்புகிறார்கள்.

விமான கோஷ்டிகளை நியமிப்பதிலும், ஜப்பானியர்கள் தங்கள் சாதனங்களைப் பரவச்செய்யும் கொள்கையையே காட்டியிருப்பது தெளிவாக விளங்கும். மலேயாவில் ஆகாய விமான எச்சரிக்கை ஒலித்தபொழுது 9 விமானங்கள் கொண்ட பாம்பர் கோஷ்டிகள் அநேக வரிசைகளாக வந்தன.

அதிக எண்ணிக்கைகொண்ட விமானங்களை அனுப்புவதில் ஜெர்மானியர்கள் அதிக சாதகமடைந்தார்கள். ஒரு திசையில் எவ்வளவு அதிகமான விமானங்கள் அனுப்பக்கூடுமோ அவ்வளவு விமானங்களை அனுப்புவதற்கு ஜெர்மானியர்கள் எப்பொழுதும் பிரயத்தனப்பட்டார்கள். ஒருக்கால் இம்மாதிரி ஆகாய விமானக் கூட்டங்களைக்கண்டு தெருவில் போகும் பிரிடிஷ்காரரைப் பயப்படச் செய்ய எதிர்பார்த்தார் போலும். ஒரு தாக்குதலில் நூற்றுக்கணக்கான நாஸி விமானங்களைப் பார்ப்பது, நேர்த்தியான காக்ஷியில்லை என்றே ஒப்புக்கொள்ளவேண்டும். ஒரு நாஸியைப் பார்க்கக்கூட பிடிக்கவில்லை.

### காலக்கிரமம்.

ஜெர்மன் முறைகளுக்கும், ஜப்பானிய முறைகளுக்கும் காலக்கிரமத்தைப் பார்த்தாலும் ஒவ்வாமை இருப்பது தெரியும்.

முதல் முதலில் பிரிடனை நோக்கி ஹிட்லரின் விமானங்கள் பறந்துவந்தபொழுது, அவைகள் நீல நிறமுள்ள பிரகாசமான ஆகாயத்தில் சிறு வெள்ளி நிறமுள்ள நக்ஷத்திரங்கள்போல் காணப்பட்டன. அதிர்ஷ்ட வசமாக அவற்றைக் காட்டிலும் அதிகப் பிரகாசமாகவும், அதிகத் திறமையுமுள்ள நக்ஷத்திரங்கள் அவைகளுக்காகக் காத்துக்கொண்டிருந்தன. உடனே நாஸி விமானங்களும் அவர்கள் அரசியலில் உள்ள மற்ற தலைவர்கள்போல் இருட்டில் மறைந்துவிட்டார்கள்.

மலேயாவில் நடந்த போரில் முதல் சில வாரங்களில் ஜப்பானியர்கள் சிங்கப்பூருக்கு இராக்காலத்தில்தான் வந்தார்கள். தாத்காலிகமாகத் தங்களுக்கு விமான பலம் அதிகமென்றும், தாங்கள் அதில் ஆதிக்கம் செலுத்தலாமென்றும் அவர்கள் திருப்தியடையும்வரை அவர்கள் பகற்காலத் தாக்குதலுக்குத் துணியவில்லை. இது ஒரு விஷயத்தில்தான் நாஸிகளுக்கும், ஜப்பானியர்களுக்கும் ஒற்றுமையாயிற்று. அதாவது நேச தேசத்தார்களின் ஸ்பிட்பையர் விமானங்களுக்கும் ஜெர்மானியரைப் போல ஜப்பானியர்களும் பயமடைந்தார்கள். கொழும்பு சம்பவத்திற்குப் பிறகு இந்த பயம் இன்னும் அதிகரித்திருக்கிறது. இந்த தேசத்தில் இனி பகற்காலத்தில் தாக்குதல்கள் நேரிடுமானால் அதிக எச்சரிக்கையின் பேரில்தான் நடத்துவார்கள்.

இந்தியா நேர்முகமாகத் தாக்கப்பட்டால், ஆகாய விமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் வேலையிலிருப்பவர்களுக்கும், விமானப் பாதுகாப்பு வேலையிலிருப்பவர்களுக்கும் இந்த மாறுதல்களைத் தெரிந்துகொள்ளுவது அவசியமானது. இந்தியாவில் பாதுகாப்பு முறைகள் பெரும்பாலும் லண்டன் சம்பவங்களிலிருந்து தெரிந்துகொண்டதாக எனக்குத் தெரிகிறது. இந்த முறைகளைக் கற்றுக்கொள்ளுவதற்குத் திறமையான வழி எப்பொழுது இல்லையோ அப்பொழுது பற்பல விரோதிகளுக்குப் பற்பல மாறுதலுள்ள பாதுகாப்பு முறைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

---

# தன் பேரில் குற்றஞ்சாட்டுவோருக்கு மிஸ்டர் சர்ச்சிலின் மறுமொழி.

[“யுத்தத்தை நடத்துவதின் முக்கிய பொறுப்பை வகிக்கும் நான் யுத்த முயற்சியிலோ, யுத்தத்தை நடத்துவதிலோ கொஞ்சமும் பின்வாங்கவில்லை யென்று என்னால் உறுதிகூற முடியும்.

“ஆசியாவில் அதிக நஷ்டமடைந்தாலும், லிபியாவில் தோல்வியடைந்தாலும், அமெரிக்காவுக்கு அருகில்பல கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டாலும் நேசநாடுகளின் நிலைமை திருப்திகரமாகவே இருந்துவருகிறதென்று சொல்லலாம்.]

### கட்டுப்படுத்தப்படாத ஜனநாயக ஸ்வதந்திரம்.

யுத்த சமயத்திலும் நமது பார்லிமெண்டு ஸ்தாபனங்களுக்கு இருக்கும் ஸ்வதந்திரத்திற்கு இது எவ்வளவு சிறந்த உதாரணமென்று பாருங்கள். ஸர்க்காரிடமுள்ள நம்பிக்கையைக் குறைப்பதற்கு மனதில் தோன்றியதெல்லாம் சொல்லப்படுகின்றன. மந்திரிகள் திறமையற்றவர்களென்றும், தங்கள் தங்கள் இடங்களில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் கெடுக்கவும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவில் சைனியத்திற்கு அவநம்பிக்கை உண்டாக்கவும், சிரமப்பட்டுத் தயாரிக்கப்படும் ஆயுதங்களில் தொழிலாளர்களுக்கு அவநம்பிக்கையைச் செய்யவும், மந்திரிகள் யாவரும் பொம்மைகள் என்றும், அவர்களைப் பிரதம மந்திரி ஆட்டிவைக்கிறார் என்றும், அப்பேர்ப்பட்டவரை உலகத்தின் முன்னால் அவமானப்படுத்தவும் பல விதமாக சொல்லப்படுகின்றன.

இது யாவும் தந்தி, ரேடியோ மூலமாக உலகம் பூராவும் பரப்பப்படுகின்றன. நமது நண்பர்கள் மனக்கிலேசமடைகின்றனர். இந்த மிகப் பெரிய ஆபத்துக் காலத்தில் வேறு எந்த தேசமோ, எந்த சபையோ தைரியமாக உபயோகிக்காத இந்த ஸ்வதந்திரத்திற்கு நான் பூரண ஆதரவை அளிக்கிறேன்.

இப்பொழுது எகிப்தில் நடந்துவரும் மகத்தானதும், அதிக நெருக்கடியானதுமான போராட்டத்திலிருந்து என் கவனத்தை ஆகர்ஷித்து இந்த விவாதத்தில் பூரணமாகச் செலுத்துவது கஷ்டமாக இருக்கிறதென்று சொல்லுகிறேன்' எந்த நிமிஷத்திலும் மிகவும் முக்கியமான செய்தி வரக்கூடும்.

நான் தவறான அறிக்கைகளை வெளியிடுவதாக மிஸ்டர் ஹோர் பலிஷா என்மீது குற்றம் சாட்டுகிறார். 8 மாதங்களுக்கு முன் லிபியாவில் துவக்கப்பட்ட தாக்குதலையே அவர் முக்கியமாகக் குறிப்பிட்டார். இத்தாக்குதல் தோல்வியடையவில்லை. நமது சைனியங்கள் 40,000 எதிரிகளைப் பிடித்து 400 மைல் தூரம் எதிரிகளை விரட்டியடித்தன. நிப்வெடுத்துக்கொண்டு எதிரிகளால் அரண் செய்யப்பட்ட நிலயங்களை நமது சைனியங்கள் பிடித்தன. ஸிரேனேகா கோடி வரையில் எதிரிகள் விரட்டப்பட்டனர். அந்தப் போரில் அவர்களுடைய டாங்கிகள் 70, 80-க்கு வந்ததும் 150 மைல் மேற்கே பின்வாங்கினர்.

10,000 ஜெர்மானியர் சிறை பிடிக்கப்பட்டனர்.

இந்த விஷயமானது நமக்கும் அங்குள்ள சைனியத்திற்கும் அதிக கௌரவத்தைக் கொடுக்கிறது.

### மால்டா நிலைமை.

சென்ற 15 தினங்களில் ஸிரேனேகாவிலும், எகிப்திலும் ஏற்பட்ட ராணுவ துரதிர்ஷ்டங்களால் அந்தப் பிரதேசத்தில் மட்டுமன்றி மத்தியதரைக்கடல் பூராவிலும் நிலைமையே மாறியிருக்கிறது.



நாம் 50,000 பேர்களுக்கு மேல் இழந்தோம். அவர்களில் பெரும்பான்மையோர் கைதிகள் ஆனார்கள் எவ்வளவோ தளவாடங்கள் அழிக்கப்பட்டும், இன்னும் ஏராளமானவை எதிரி வசமாய்விட்டன. துருக்கி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரெஞ்சு வட ஆபிரிக்கா ஆகிய இடங்களில் ஜெனரல் ரோமலின் முன்னேற்றத்தின் பயனாக எவ்வளவு கெடுதலான விளைவுகள் ஏற்படுமென்று இன்னும் அளவிடுவதற்கில்லை.

மத்தியதரைக்கடலிலும், மத்தியக்கிழக்கிலும் நமது நம்பிக்கையும், எதிர்காலத்தையும் எந்த நிமிஷத்திலும் எதிர்க்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை பிரான்ஸ் விழுந்ததிலிருந்து இப்பொழுதுதான் ஏற்பட்டிருக்கிறது.

### டொப்ருக்.

டொப்ருக் பிடிபடுவதற்கு முன் ஆச்சின்லக்கிடமிருந்து ஓர் தந்தி வந்தது. அதன்படி போதியபடை அங்கு வைக்கப்பட்டிருப்பதாயும், பாதுகாப்பு அரண்கள் நல்ல ஸ்திதியில் இருப்பதாகவும், துருப்புகளுக்கு 90 நாட்களுக்குப் போதுமான ஸப்ளைகள் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருந்தது.

ஸொல்லம், ஹல்பாயா முதலிய இடங்களிலிருந்து நமது நிலைகளைப் பலப்படுத்திக்கொள்ளலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

அதிக உதவிப்படைகள் வந்ததும் தனது நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம் என்றும் ஆச்சின்லக் நினைத்திருந்தான். இத்தீர்மானத்தை ஆச்சின்லக்குத்தான் செய்தார். இதை இந்த மந்திரி சபை அங்கீகரித்தது.

எல்லா சந்தர்ப்பங்களிலும் யுத்தரங்கத்தில் தனது சைனியத் தலைவனின் தீர்மானந்தான் முடிவானது. அவனுடைய தீர்மானத்தை நாம் தப்பென்று நினைத்தால் நாமும் தவறுதல் செய்வதாக ஆகும். அரசாங்க சம்பந்தமாக எல்லா பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராகயிருக்கிறேன்.

### தளகர்த்தரின் தீர்மானம்.

டொப்ருக் பணிய வேண்டுமென முடிவு செய்தது அக்கோட்டையின் தளகர்த்தர். அது சிறிதும் எதிர்பாராதது.

பிரிட்டனிலிருந்து ஒரு பெரிய தூரத்தை மேற்கொண்டு சென்ற தலைவர் எவரும் என்னைப்போல் தாய் நாட்டிலேயே இவ்வளவு தூரம் அபவாதத்திற்குள்ளானதில்லை. எனக்கும் பிரிடிஷ் மக்களுக்குமுள்ள பந்தமும், அசைக்கமுடியாத நம்பிக்கையும்தான் கஷ்டம் நிறைந்த அந்த நாட்களில் எனக்கு நிம்மதியளித்தது.

### வாஷிங்டன் பேச்சுகள்.

துருப்புகள் நடமாட்டம், கப்பல்கள், பீரங்கிகள், விமானங்கள், கப்பல் நஷ்டங்களைச் சமாளிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது ஆகிய விஷயங்களைப் பற்றியே அமெரிக்க தூதின்போது நாங்கள் பேசினோம்.

ஆங்கிலம் பேசும் இருநாடுகள் இப்பொழுதுபோல் எக்காலத்திலும் இவ்வளவு நெருங்கிய உறவு கொண்டதில்லை. இந்த இருநாடுகளும் எதிரியைத் தோற்கடிக்கும் விஷயத்திலும் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் பொறுத்துக்கொள்வதிலும், எல்லாவித தியாகங்களைச் செய்வதிலும், அதிக ஒற்றுமையைக் காண்பித்தன.

கப்பல் நஷ்டத்தைக் குறைப்பதற்காக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலும், அமெரிக்காவிலும் கட்டப்படும் கப்பல்களின் எண்ணிக்கையைக்கொண்டு 1943-ல் அதிகக் கப்பல்கள் நமது வசமிருக்கும்.

### டொப்ருக் வீழ்ச்சி.

நமது யுக்தி வாதங்களால் போர்முகத்திலுள்ள தளகர்த்தர்கள் மீது அவநம்பிக்கை ஏற்படாமலிருப்பதற்காக சில உண்மை விவரங்களைக் கொடுக்கிறேன்.

யுனைடெட் ஸ்டேட்ஸுக்குப்போய் ஜுன்மீ 21-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நான் ஜனாதிபதியின் அறைக்குச் சென்றபோது டொப்ருக் விழுந்தது என்ற செய்தியைக் கேட்டு நான் திடுக்கிட்டேன்.

அது எனக்கு எத்தனை மனோவேதனையை அளித்ததென்பதை சபையினரே உணர்ந்து கொள்வார்கள்.

வெற்றி பெறுவோமென்று எதிர்பார்க்க நல்ல நியாயமான நிலைமைகளிருந்த போது ஆரம்ப கட்டங்களிலேயே நாம் தோற்கடிக்கப்பட்டோமென்பதுதான் இப்போரில் அதிக மனோவேதனை அளிக்கக்கூடிய அம்சமாகும்.

## மால்டா.

இரண்டு மூன்று விமான தளங்களைக்கொண்டு மால்டாவைப்போல் வேறெந்த நாடும் எதிரியை எதிர்த்து நிற்கவில்லை. 12 விமானங்கள் இருந்த போதிலும் களைக்காமல் சண்டை செய்தது.

மால்டாவில் இப்பொழுது விமானபலம் முன்னைவிட அதிகமிருக்கிறது. எதிரிகள் மால்டாவைப்பிடிக்கவில்லை. ஆபிரிக்காவுக்கு ஏராளமாக சாதனங்களை அனுப்ப அவர்களால் முடிந்தது.

## லிபியா யுத்தம்.

இந்தப் பிரதேசத்தில் நேசதேசச் சைனியத்திற்குப் பீரங்கிகளும், டாங்கிகளும், அதிகமாக இருந்தன. இவைகளில் ஹாவிட்ஸர் என்ற பீரங்கிப்படையும் இருந்தது.

விமான ஆதிக்கம் எப்பொழுதும் குறையவில்லை. எதிரி முதலில் சண்டை ஆரம்பிக்காமலிருந்தால் ஜுன் மாதம் ஆரம்பத்திலேயே நாம் முன்னேற்றப் போரைத் துவக்கியிருப்போம்.

அவன் சண்டையை ஆரம்பித்தால் நமது அரண்களிலிருந்து எதிர்ப்பது நலம் என்று தீர்மானிக்கப்பட்டது. பலமான குறைக்கு எதிர்ப்புகளைச் செய்து அவனைத் தடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது மேமீ 26-ம்டை இருந்த நிலைமை. யுத்தத்தின் நிலைமையை பற்றி இன்னும் பூராவும் சொல்லமுடியாது. அவசரமான முடிவுக்கு வருவது தவறாகும். முக்கிய அம்சங்களைமாத்திரம் ஊகித்துக்கொள்ளலாம் முதல் சில தினங்களில் டொப்ருக்கைப் பிடித்துவிடலாமென ரோமல் எதிர்பார்த்தார். ஆனால் அவருக்கு எதிர்ப்பு தீவிரமாகவிருந்ததால் அவருடைய திட்டங்கள் சீர்குலைந்து போய் இரு தரப்பிலும் டாங்கிகளின் நஷ்டம் வெகுவாக ஏற்பட்டது. இருந்தாலும் தான் உட்புகுந்த இடங்களில் அவர் விடாப்பிடியாக நின்று நம்மைத் தாக்கிச் சிதைத்ததால் பலன்தரத்தக்க முறையில் எதிர்க்க முடியவில்லை.

ஜுன்மீ 4-ம்டை மறுபடி ஒரு பிரயத்தனம் செய்யப்பட்டது, இதிலும் நஷ்டம் ஏற்பட்டது. அடுத்தபடியாக பிர்ஹாகீமைச் சுற்றி சண்டை முற்றியது. அங்கிருந்தும் பின்வாங்கத் தீர்மானிக்கப்பட்டது.

## துரதிர்ஷ்டமான நாள்.

இதுதான் நிலைமையை மாற்றியது. ரோமலும், அவனுடைய படையும் தினம் முன்னேறிக்கொண்டே வந்தன. நைட்ஸ்பிரிட்ஜ், அக்ரோமாவைச் சுற்றி சண்டை நடந்தது. ஜுன்மீ 13-ந்தேதி வரை போர் சரிசமமான நிலையிலிருந்தது. ஆனால் ஜுன்மீ 13-ந்தேதி ஒரு மாறுதலேற்பட்டது.

அன்று காலையில் நம்மிடம் 300 டாங்கிகளிருந்தன. அன்று சாயங்காலத்திற்குள் 70 டாங்கிகளுக்கு மேல் நம்மிடமில்லை. இதற்குச் சரி சமானமான நஷ்டத்தை எதிரிக்கு விளைவிக்காமல் நாம் இவற்றை இழக்க நேரிட்டது.



அன்றைய போரில் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. தகவல்களைக் கொடுப்பதற்கு மட்டுமே நான் ஜவாப்தாரி. பிரிடிஷ் ஸர்க்காரால் இவ்விளைவுகள் ஏற்பட்டனவா என்பது பற்றி முடிவுசெய்யவேண்டியது சபையைச் சார்ந்ததாகும்

இவ்விதம் நமது டாங்கிகள் நாசம் செய்யப்படவே ரோமலின் பலம் நிர்மானமாக அதிகரித்தது.

கஸாலா நிலைமையிலிருந்தும், பின்வாங்கி ஹல்பாயா, கபுஸோ, ஸொல்லம் இந்நிலைகளுக்குப் போவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## மெர்ஸாமெட்ரு.

டொப்ருக் வீழ்ச்சியைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். டொப்ருக் விழுந்ததினால் மெர்ஸா மெட்ருவுக்கு வாபஸாக வேண்டியதாயிற்று. நடுவில் 125 மைல தண்ணீர் அகப்படாத பாலைவனப்பிரதேசம்.

இடையில் 15 நாள் அவகாசம்" கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜுன்மீ 26-ம்டை யனறே ரோமல் யந்திரப்படைகளுடன் முன் தோன்றினான். 27-ம்டை நமது படைகளுக்கும், அவன் சைனியத்திறகும் சண்டை நடந்தது. எதிரிக்கு அதிக நஷ்டம் உண்டாக்கப்பட்டதென்றே சொல்லலாம்.

ஜெர்மனியின் பானஸர்படையைச் சார்ந்த 100 முதல் 1 0 வரையுள்ள டாங்கிகள் எதிர்த்து வந்ததால் நாம் கொஞ்சம் பின்வாங்கவேண்டிவந்தது. நமது சைனியத்திற்குப் போயுள்ள அல்லது போய்க்கொண்டிருக்கும் உதவிப்படைகளைப்பற்றி நான் சபைக்கு எடுத்துக்கூறும நிலைமையிலலை. அவை ஏராளமாக அனுப்பப்படுகின்றனவென்றுமட்டும் நான் சொல்லுவேன். ஆனால் போர் முடிந்துவிட்டதாக நாங்கள் கருதவில்லையென்றே நான் சொல்லுவேன்.

## இந்தியாவுக்குள்ள ஆபத்து.

சிறிதுகாலத்திற்கு முன் படையெடுப்பு பயம் இருந்துவந்த இந்தியாவுக்கு பல முககியமான பிரிடிஷ் படைகள் போகவேண்டியிருந்தது. மத்தியக் கிழக்குக்குப் போகவிருந்த இந்தியாவிலுள்ள இதரப்படைகளை அங்கேயே வைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. மத்தியக்கிழக்கில் சைனியத்தைப் பலப்படுத்தச் சென்ற இரண்டு வருஷங்களாக பிரிடிஷ் ஸர்க்கார் மிகவும் பாடுபட்டிருக்கிறது. 9,50,000 சிப்பாய்கள், 4,500, டாங்கிகள், 6,000 விமானங்கள், 5,000 பீரங்கிகள், 50,000 யந்திர பீரங்கிகள், 1,00,000 யந்திர சாதன வாகனங்கள், முதலியன போயிருக்கின்றன. பிரிடனில் ஆயிரக்கணக்கான கவசம் பூண்ட வண்டிகளை வைத்துக்கொண்டு எதிரியைத் தடுக்கவேண்டிருக்கிறது. முதலில் செய்யப்பட்ட சிறிய டாங்கிகளில சிலவற்றைப் பழுதுபார்க்க வேண்டிவந்தது. மாட்டில்டா, வாலன்டைன் போன்ற டாங்கிகளும் உபயோகமாகயிருந்தன. ருஷ்யாவில் வாலன்டைன் டாங்கிகள் உபயோகமாக இருந்தன. நைல் நதி தீரத்திற்கு 4,500 டாங்கிகளும், ருஷ்யாவிற்கு 20,000 டாங்கிகளும் அனுப்பப்பட்டன.

## பாய்ச்சல் விமானங்கள்.

பாய்ச்சல் விமானங்களைப்பற்றி விமானிகளுக்கு அவ்வளவு கௌரவ அபிப்பிராயம் கிடையாது. அவ்வபிப்பிராயத்தை நாமும் கவனிக்க வேண்டியதுதான். அவைகளைப் பார்த்துத்தான் 8 பீரங்கிகள் கொண்ட பைடர் விமானங்கள் செய்யப்பட்டன. இவைகள் பிரிடன் போரில் நடந்த விமானப்போரில் அதிகம் ஈடுபட்டன.

சைனியத்தின் உதவிக்கு பாய்ச்சல் விமானங்களும் தேவையென்று அறிந்து அவைகளைச் செய்வதற்கு இரண்டு வருஷங்களுக்குமுன்பே ஆர்டர் அனுப்பப்பட்டது. இன்னும் பூர்த்தியாகவில்லை. இந்த பாம்பர்களைப்பற்றி குறைகூறுவது தவறு. ஜெர்மனியோரில் செய்யப்படும் போருக்கு அதிக உதவியாக இருக்கின்றன.

மின்னல் படையெடுப்பு காலங்களில் மாத்திரம் இவைகள் பிரயோஜனப் படமாட்டா. நமது தாக்குதல்களின் வேகம் குறையாதென்பது ஜெர்மானியருக்கும் தெரியும். இவ்வித தாக்குதல்களால் ஜெர்மனியின் கப்பல் தளங்களும் ஆயுதசாலைகளும் அழிக்கப்படும்.

### தலையிடுவதில்லை

எதிரியுடன் செய்யும் சண்டைகளில் உபயோகிக்கும் ஸைனியங்களில் நான் தலையிடுவதில்லை.

சண்டை ஆரம்பிக்கும் முன் ஜெனரல் ஆசின்லக்கையே தலைமை வகிக்கும்படி நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இருந்தாலும், அவர் தலைமை வகிக்காமலிருப்பதற்குத் தகுந்த முகாந்தரங்களைச் சொல்லி, ரிச்சியை சண்டைசெய்ய அனுமதித்தான். ஆனால் ஜூன் மீ 25உ ஆச்சின்லக் தாமே தலைமைப் பதவியை வகித்தார். அரசாங்கம் இதை அங்கீகரித்தது. போர்அரங்கத்தில் தலைமை வகிப்போருக்குத்தான் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்பது தெரியும்.

அரசாங்கம் நமது சார்பாக இருக்கிறதென்பது ஊர்ஜிதமானால்தான் ஜெனரல்கள் துணிச்சலான காரியங்களைச் செய்வார்கள். இங்கிலாந்தில். என்ன நடக்கிறதென்பதைப்பற்றி அவர்கள் அதிகம் கவலைப்படாமலிருக்கவும் முடியும். அரசாங்கம் துணிகரமாக நடக்க வேண்டுமானால் சபை அங்கத்தினர்களின் உதவியிருக்கவேண்டும்."

### ஆச்சின்லக்கை நம்புங்கள்.

ஆசின்லக்தான் பூராத்தலைமை வகிக்கிறார். சண்டை அதிக மும்முரமாக நடக்கிறது. நமது உதவி இருப்பதாக அவருக்குத் தைரியம் கூறியிருக்கிறேன். அந்த நம்பிக்கைக்குத் தகுந்தவாறு அவர் நடந்து கொள்ளுவார்.

நான் சபையை ஏமாற்றுவதாகச் சொல்லப்படும் கூற்றை நான் மறுக்கிறேன். நடக்கும் விஷயங்களைத் தைரியமாகக் கவனிக்க வேண்டுமென்று மாத்திரம் இச்சபையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த யுத்தம் சீக்கிரத்தில் முடிந்துவிடுமென்ற அபிப்பிராயம் எனக்குக் கிடையாது; நீண்டகால யுத்தமாகத்தானிருக்கும். வெற்றியோ, தோல்வியோ வருவதாகக் காணப்பட்டதும் இந்த யுத்தம் முடியாது. முடிவுவரை சண்டை செய்துதான் ஆகவேண்டும்."

### ருஷ்யா எதிர்ப்பு.

ருஷ்யர்கள் எதிரிகளை எதிர்த்து நிற்பதுதான் ஒரு விசேஷம். பாதி கோடைகாலம் வந்துவிட்டாலும் இன்னும் ஒரு பெரிய ஜெர்மன் தாக்குதலும் ஆரம்பிக்கப்படவில்லை. தற்சமயம் கார்கவிலும், கர்ஸ்கிலும் நடக்கும் சண்டையை வேண்டுமென்றால் பெரிய தாக்குதல் என்று அவர்கள் சொல்லலாம்.

ருஷ்ய அரசாங்கமும், ஜனங்களும் ஜனநாயகங்களுடன் அதிக பாந்தவ்யத்தைக் கொண்டாடுகின்றன. தீவிரமாக மேலும் சண்டையைச் செய்வார்கள்.

ருஷ்யர்கள் ஹிட்லருக்கு ஆச்சரியத்தை விளைவித்திருக்கின்றனர். வெற்றியோ, மரணமோ இரண்டில் ஒன்றையடையும்வரை சண்டை செய்வார்கள்.

இந்த விஷயம் மிகவும் முக்கியமானது. அடுத்தபடியாக நேசநாடுகளின் பலம் விருத்தியடைந்துகொண்டேபோகிறது.



ஆகாய விமானங்களாகிற அஸுரனுடன் ஹிட்லர் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டான். அந்த அஸுரனுக்குக் கொடுக்கவேண்டிய பலி ஓடிவிட்டதால் ஹிட்லருக்கும் அஸுரனுக்கும் சண்டை உண்டாகிவிட்டது. விமான பலம் ஹிட்லரின் எதிரிகளின் பக்கம் போய்விட்டது என்று கருத்து.

### தூரக்கிழக்கு.

கடந்த ஆறு மாதகாலமாக தூரக்கிழக்கிற்கு நமது ஸப்ளைகள் போய்க் கொண்டேயிருக்கின்றன. மாதம் 60,000 பேர்கள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள்.

சில நாட்களுக்குமுன் ஆஸ்திரேலியாவில் படையெடுப்பு நேருமென்று யாவரும் பயந்தனர். பிரிடிஷ் படைகளும் அங்கே போக சித்தமாக இருந்தன. ஆனால் ஜப்பான அதைப் படையெடுக்காது என்றே நினைத்தேன். ஏனென்றால் அமெரிக்கச் சைனியம் ஒன்று இருக்கிறது. அதை எதிர்த்தால் ஜப்பானுக்குத்தான் ஆபத்து.

தற்போது தென்மேற்கு பஸிபிக்கில் 'தாக்குவது' என்பதையே குறிப்பாகக் கொண்டுள்ளன.

இந்தியா பலமாகத் தற்காப்பு செய்யப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் மக்களும் இந்தியர்களும் அடங்கிய சைனியம் வேவலின் கீழிருக்கிறது. அதிக ஆபத்துக்குள்ளாக இருந்த ஸிலோன், கப்பல், விமானம், சைனியம் இவைகளால் பாது காக்கப்பட்டிருக்கிறது.

மெடகாஸ்கரில் ஒரு பாதுகாப்பு ஸ்தலம் கிடைத்திருக்கிறது. பஸிபிக்கில் கப்பல் பலம் நமது வசத்தில்தானிருக்கிறது."

### ரோமலை அழிக்க.

இந்தியப் பாதுகாப்புகளில் சண்டையில்லாததால் எகிப்திற்குச் சைனியங்களை அனுப்ப முடிகிறது.

இந்த உதவியினாலும், சீதோஷ்ண நிலையாலும் ரோமலின் சைனியத்தை சீக்கிரத்தில் அழித்துவிடமுடியும்.

இந்த நிமிஷத்தில் எகிப்து நிலை மிக நெருக்கடியாக இருக்கிறது. திராசின் முனைபோல் இருக்கிறது. ஆகவே மிகவும் முக்கியமானது.

நமக்கு இருக்கும் லக்ஷியமென்னவென்றால் எதிரிகளின் படைகளை அடியோடு அழிக்கவேண்டியதுதான். பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் உதவி போய்க்கொண்டிருக்கின்றன".

### மத்தியமமான வழி கிடையாது.

நமது பிராணன்களைக் காக்கவே சண்டை செய்கிறோம். வெற்றி நிச்சயம் என்பதை இப்போதே நிச்சயம் செய்யமுடியாது. நமது கடமைகளைச் சரிவரச் செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

நமது சபையின் எல்லா அங்கத்தினர்களின் அபிப்பிராயமும் ஒன்று சேரவேண்டும், பயந்தவர்கள் அரசாங்கத்தை நடத்தவேண்டாம்.

என்னை இந்த யுத்தத்தை நடத்தவொட்டாமல் தடுப்பதென சிலர் நினைக்கின்றனர். நான் உங்களுடைய சேவகன். என்னைத் தள்ளுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. கடுமையான அதிகாரத்தைச் செலுத்தி சண்டையை நடத்துவதற்கான அக்கரையுடன் என்னை வைத்துக்கொள்ளுங்கள். இல்லையேல் வேண்டாம்.

## கொடுங்கோல்?

பாதுகாப்பு மந்திரி பதவியை ஒரு ராணுவத் தலைவனிடம் ஒப்படைத்து சிப்பந்திகளை நியமிப்பதோ, போர்த் தலைவர்களை நியமிப்பதோ, எல்லாம் அவனிடம் கொடுத்துவிட்டு என்னைத் தள்ளும்படி செய்யவேண்டுமென்று ஸர் ஜான் வார்டுலா மில்னி நினைக்கிறார். அவ்வித ராணுவ மந்திரியே சர்வ ஸ்வதந்திரத்துடன் இருக்கவேண்டுமென்றும் அவருக்குக் கீழ் ஒரு ராஜகுமாரனைப் போட்டு சைனியங்களை ஒப்படைத்தால் போதுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்.

இந்தத் திட்டம் நமது பார்லிமெண்டு திட்டத்திற்கு உரியதல்ல. இதனால் கொடுங்கோல் ஆட்சி ஏற்படலாம்.

அவ்வித ஆட்சியில் எனக்குப் பதவி வேண்டியதில்லை. ஆகவே நமது தேசிய அரசாங்கத்தின் பேரில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றால்தான் பிரிடனுக்கு க்ஷேமம். யாவரும் நன்றாக உழைப்பார்கள். எதிரிகளையும் அடக்கமுடியும்."

[குறிப்பு:—ஸர்ஜான் வார்டுலா மில்னி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு சாதகமாக 25 பேரும், பாதகமாக 475 பேரும் ஓட் செய்ததால் தீர்மானம் தோற்றது.]

---

# விமானப் படையெடுப்புப் பாதுகாப்புப்படை (ஏ. ஆர். பி.)யில் சேர்ந்துகொள்.

---

ஒரு கட்டடத்தின் பேரில் குண்டுகள் விழுந்து அக்கட்டடம் மட்டில் சேதமாவதற்கு பதிலாக, முன் எச்சரிக்கை எடுத்துக்கொள்ளாமல் அஜாக்கிரதையாக இருந்ததால் அருகிலுள்ள மூன்று கட்டடங்களும் சேதமாகின்றன.

இதைப்போலத்தான் பல நகரங்களில் நடக்கிறது. குண்டுகள் விழுந்ததும் தீ உண்டாகிப் பரவுகிறது. ஒரு கட்டடத்தில் கிளம்பிய தீ நகரம் பூராவும் அழிவதற்குக் காரணமாகிறது.

குண்டுகளால் ஏற்பட்ட நெருப்புகளைச் சாதாரண சமயங்களுக்காக ஏற்பட்டிருக்கும் நெருப்பு அணைக்கும் கோஷ்டியினரால் அணைத்துவிட முடியாது. ஆனால் அதற்கென்று பயிற்சி பெற்ற ஏ. ஆர். பி. வேலைக்காரர்களைக்கொண்டு சேதத்தைக் குறைத்துக்கொள்ளலாம். தீ பரவாமல் ஓரிடத்திலேயே அணைத்தும் விடலாம். தீ பிடித்த வீடுகளிலுள்ளோரை ஏ. ஆர். பி. கோஷ்டியினர் மீட்கிறார்கள். காயமடைந்தோருக்கு சிகிச்சை செய்யப்படுகிறது. விரிந்த கட்டடங்களையும், இடிந்த கட்டடங்களையும் அப்புறப்படுத்தி போக்குவரவு, அமைதி முதலியன மறுபடி ஏற்படுத்தப்படுகின்றன.

தங்கள் நகரங்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் பொதுமக்களுக்கும் அக்கறையிருக்கவேண்டும். அனுதையான அண்டை வீட்டுக்காரர்களுக்கு ஒத்தாசை செய்வதும், துன்பத்தை நீக்கி உயிர்களைக் காப்பாற்றுவதும் ஒவ்வொருவரின் கடமையாகும். இவ்வித வேலைகளில் தற்சமயம் பயிற்சி பெறுவதால், அவரவர்களுடைய வீடு, வாசல், சொத்து முதலியவைகளுக்கு படையெடுப்பு காலங்களில் அழிவு ஏற்படாமல் செய்வதற்கு சாத்தியமாகுமென்பதை, யாவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.



மற்ற நகரங்களுக்கு நேர்ந்த விபத்து இங்கும் நேரலாமாதலால் ஏ. ஆர். பி. படையில் சேர்ந்துகொள்ளுங்கள்.

## சேதம் ஒரே இடத்தில் நேருகிறதா, அல்லது எங்கும் வியாபிக்கிறதா?

இதற்குத் தகுந்த பதிலை ஏ. ஆர். பி. படையினர்தான் சொல்ல முடியும். சாதாரணமான நெருப்பு அணைக்கும் கோஷ்டியினரால் அணைக்க முடியாத தீக்களை ஏ. ஆர். பி. படையினர் அடக்கி அணைத்துவிடுவார்கள். தீயைப் பரவாமல் செய்து சேதத்தைக் குறைப்பார்கள். இடிந்த வீடுகளுக்குள்ளும் தீ பரவிய வீட்டினுள்ளும் இருக்கிற ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் முதலியோரை மீட்டுவார்கள். காயமடைந்தோருக்கு வைத்தியம் செய்வார்கள். முக்கியமான போக்குவரவு தடைபடாமல், தெருக்களை சுத்தப்படுத்துவார்கள். இடிந்த செங்கல் முதலியவைகளை அப்புறப்படுத்தி அமைதியை ஸ்தாபிப்பார்கள்.

ஆனால் இந்த அனுபவத்தை சில பட்டணங்களில் சுலபமாகப் பெறவில்லை.

ஒரு குண்டு விழுந்து தீ உண்டானால் பக்கத்திலுள்ள வீடுகளுக்கும் பரவும். சில சமயங்களில் நகரம் முழுவதுமே அழியக் காரணமாகலாம். இவ்வித அழிவுக்குள்ளாகாமல் இருப்பது ஒவ்வொரு பொதுமக்களின் கடமையாகும். ஆபத்திலுள்ள அயலார்களை மீட்டி, அவர்களின் பிராணன்களைக் காப்பாற்றுவது ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ள அக்கறைதான். பிறருக்கு உதவி செய்வதால் தங்களுக்கும் உதவி செய்துகொண்ட மாதிரிதான். முன்னாடியே ஏ. ஆர். பி. பயிற்சி பெற்றிருந்தால் படையெடுப்பு நேரங்களில் பிராணன், சொத்து, குடும்பம் முதலியவைகளுக்கு ஆபத்து இல்லாமல் செய்துகொள்ளலாம்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| | **பிரஸங்கம் 103—(5-வது பிரிவு).** | | | |
| ஜூலை | ...12, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் ... | மாலை | 6.00 |
| | | வம்பன் ... | „ | 6.30 |
| | 13, திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி ... | „ | 6.00 |
| | | தொலையானூர் ... | „ | 6.30 |
| | 14, செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி ... | „ | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | „ | 6.30 |
| | 15, புதன்கிழமை ... | வெள்ளனூர் ... | „ | 6.00 |
| | | செம்பாட்டூர் ... | „ | 6.30 |
| | 16, வியாழக்கிழமை ... | பள்ளிவாசல் ... | „ | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | „ | 6.30 |
| | 17, வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | „ | 6.00 |
| | | கண்ணங்குடி ... | „ | 6.30 |
| | **பிரஸங்கம் 104—(1-வது பிரிவு).** | | | |
| | 18, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | „ | 6.45 |
| | 19, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | „ | 5.30 |
| | | பூவரசகுடி ... | „ | 6.00 |
| | | வெங்கடக்குளம் ... | „ | 6.30 |
| | 20, திங்கட்கிழமை ... | திருமயம் ... | „ | 6.00 |
| | | மேலூர் ... | „ | 6.30 |
| | 21, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | „ | 6.30 |
| | 22, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | காலேஜ் தமிழ் „ (பிராஞ்சு ஸ்கூல்) | „ | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | „ | 10.15 |
| | | அரிமளம் ... | மாலை | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை... | „ | 6.30 |
| | 23, வியாழக்கிழமை ... | உடையாளிப்பட்டி ... | „ | 6.00 |
| | | கிள்ளுக்கோட்டை ... | „ | 6.30 |
| | 24, வெள்ளிக்கிழமை... | மலம்பட்டி ... | „ | 6.00 |
| | | பாம்பூர் ... | „ | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—14-7-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஜூலை ௴ 18௳ [நெ. 104

பிரஸங்கம் CIV.

## "சரித்திரத்திற்கே புதிதான கோர சம்பவம்".

### யூதர்களுக்கு நேர்ந்த வதை.

*மறக்கமுடியாதது.*

பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தின் முன்பு இவ்வாரத்தில் செய்தி இலாகா மந்திரி மிஸ்டர் பிரெண்டன் பிராகன் பேசியது:—

"பூரா விவரமும் வெளிவந்தபொழுது அங்கு நடந்த அட்டூழியங்களைப் போல் தேச சரித்திரத்தில் இதுவரை காணப்படவில்லை என்று தெரியவரும்.

"மொத்தத்தில் 7 லக்ஷம் யூதர்கள் மட்டில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவ்வித கோரச் செய்கை இதற்குமுன் நடந்ததாகத் தெரியவில்லை. அதனால் ஜெர்மானியர்கள் தங்கள் கொடிய நடத்தையால், மிருகத்தன்மை வாய்ந்தவர்கள் என்று பெயரெடுத்துவிட்டார்கள். இம்மாதிரி வேறு எந்த ஜாதியினரும் இழிவாக நடந்து கொள்ளவில்லை.

"இவ்வித அட்டூழியங்களைச் செய்தவர்களுக்குச் சட்டப்படிக்கு தகுந்த தண்டனை விதிக்கப்படுமென்று கவர்ன்மெண்டு மெம்பராகிய நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இவர்கள் யாவரும் கொலைசெய்த குற்றவாளிகளைப் போலவே நடத்தப்படுவார்கள்.

"இவ்விதக் குற்றச் செய்கைகளுக்குப் பொறுப்பாளிகளின் பெயர்களைக் குறித்துக்கொண்டு, அவர்களுக்குச் சட்டப்படிக்குள்ள கடுமையான தண்டனையை விதிக்கவேண்டுமென்று யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிடன், நேசநாடுகள் இவைகளின் அரசாங்கங்கள் ஏகோபித்து ஒப்புக்கொண்டன.

"போலந்திலும், இன்னும் மற்ற எதிரி ஆக்கிரமித்த நாடுகளிலும் அட்டூழியங்களை நடத்திவரும் மிருகத் தன்மைவாய்ந்தவர்கள் மேற்சொல்லிய விஷயத்தை உணர்ந்துகொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்".

இது சரியான சமயத்தில் செய்யப்பட்ட ஒரு எச்சரிக்கையாகும். ஹிட்லரின் ஆதிக்கம் ஐரோப்பாவில் பரவப் பரவ யூதர்களை வதை செய்வது சம்பந்தமான விவரங்கள் நமக்குத் தினம் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. அச்செய்தி மிகப் பயங்கரமானது. ஆஸ்திரியா, போலந்து, செக்கோஸ்லாவாகியா, ருமேனியா பல்கேரியா, ஹங்கேரி, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய பாகங்களிலிருந்து யூதர்கள் துரத்தப்படுவதோடு கொலையும் செய்யப்படுகின்றனர். அடியோடு அழிக்கவும் படுகின்றனர். யூதர்களுக்குச் சொந்தமான நிலம்பலன்களெல்லாம் பிடுங்கப் பட்டதால், வீடுவாசல் முதலியவை இல்லாமல் துரத்தப்பட்டனர். தற்சமயத்தில் ஹிட்லரின் கொலைக்களத்தில் நேரும் சிரமங்களைக் கவனிக்கும்கால், பண்டைகாலத்தில் யூதர்களுக்கு ஏற்பட்ட துன்பம் பெரிதாக ஆகாது. ஹைலக் என்ற யூதனையாவரும் நிந்தித்து, நாய்களை விட்டுத் துரத்தி அடித்ததுகூட சின்ன விஷயம்தான்.

யூதர்கள் பண்டை காலத்திய ஐரோப்பிய நாகரீகத்தையுடையவர்கள். புராதனமான பழக்கமும், பயிற்சியும் கொண்டவர்கள். தைரியமான உணர்ச்சி பொருந்தியவர்கள். அதனால் முகம்மதிய பரோக்கியர்களின் (Pharoahs) துன்பம் தாங்காது வெளியேறினார்கள். எப்போதும் இவர்களுக்குத் துன்பம் தான் அநுபவமாக இருக்கிறது. பிறருக்குள்ள சௌக்கியம இவர்களுக்குக் கிடையாது. இருந்தாலும் மற்ற நகரவாசிகளுக்குள்ள ஸ்வதந்திரத்தை அடைந்திருக்கின்றனர். தொழிற்சாலைகளையும், லேவாதேவித் தொழிலையும் நடத்திவருகின்றனர். கல்பனு சக்தி நிறைந்த ரஸாயன சாஸ்திரிகளாகவும், நூதன சாமான்களைக் கண்டுபிடிக்கிறவர்களாகவும் இருந்து பெரும் கௌரவத்தையடைந்திருக்கின்றனர். பல இடங்களில் குடியேறி தற்சமயம் 100 லக்ஷம் யூதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் யாவருக்கும் பொதுப்படையான சம்பந்தமும் இருக்கிறது. யூதர்களின் ஜியோன் (Zion) கொள்கையை ஒரு நாளும் குலைக்கமுடியாது. இப்பேர்ப்பட்டவர்களை ஐரோப்பிய தொந்தரவுகளுக்குக் காரணமாக ஹிட்லர் கருதுகிறான். காட்டுமிராண்டியின் தன்மையுடன் யூதர்களை நடத்திவருகிறான். இவனுடைய கொடிய தொழில், மேலும் மேலும் விருத்தியாகுமோவென்ற பயம் இருக்கிறது. கொஞ்ச நாள் கழித்து இந்தக் கொடுமைகள் நீங்கினாலும், மனதில் எப்போதும் இருக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. மறந்துபோகாமல் இருக்கும்படிக்கு மிஸ்டர் பிரென்டன் பிராகன் நினைவு மூட்டியிருக்கிறார். மனிதவர்க்கத்திற்கு விரோதமான செய்கைகளைச் செய்யும் நாஸிகளுக்குச் சமீபத்திலேயே கடுமையான தண்டனை ஏற்படும்.

யூதர்களை வதை செய்யும் கதைகளைப்பற்றி இரண்டு பத்திரிகைகளிலிருந்து எடுத்து சிலவிவரங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன.

## ஸெக்ஷன் A.

## ருமேனியா.

## "கொடுமை முறை".

(மிஸ்டர் ரால்ப் பார்க்கர் எழுதியது).

('19-வது நூற்றாண்டும், அதன் பிறகும்' என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

### ருமேனியா.

ருமேனியாவில் சைனிய ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது முதல் யூதர்களின் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. அதற்கு முன்பும், பெஸரேபியா, வடபுகோவின் இலைகளை ருஷ்யாவிற்குக் கொடுத்ததால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு யூதர்கள் அதிகமான பணத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது. ருமேனிய சைனியம் திரும்பிப் போகும்போது யூத மக்களால் அவமதிக்கப்பட்டது என்ற பொய்க் காரணத்தை வைத்துக்கொண்டு யாஸி (Yassy), டோரோஹோய் (Dorohoi), கலாடி (Galati) முதலிய இடங்களில் டோரோஹோயில் 215 பேரும், புகோவினில் 350 பேரும், ஹூஸியில் 100 பேரும் கொலை செய்யப்பட்டனர்.



சைனிய ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்தும் திட்டமான கொலை நடந்தேறியது. யூதர்களின் சொத்து பறிக்கப்பட்டது. சில நகரங்களிலிருந்தும் துரத்தப்பட்டனர். பான்ஸியு (Papciu) என்ற நகரிலிருந்த 150 யூதர் குடும்பங்கள் 24 மணி நேரத்தில் காலி செய்து வீடுவாசல்களை விட்டு ஓடும்படி செய்யப்பட்டன. இதற்கு சில வாரங்கள் கழித்து இந்நகரம் பூகம்பத்தில் அழிந்தது. அப்போது அங்கே ஒரு யூதர்கூட இல்லை. புஸாவு (Buzau) என்ற நகரிலிருந்த யூத வாலிபர்களும் (Zion) ஜியன் சங்கத்தைச் சார்ந்த தலைவர்களும் கைதியாக்கப்பட்டு ஜெயிலில் துன்புறுத்தப்பட்டனர். வாஸ்லூயி (Vaslui) என்ற இடத்திலும் இவ்விதம் தான் நேர்ந்தது. காம்புலங் (Campulung) என்ற இடத்தில் யாம் கிபூர் யூத உத்ஸவத்தின்போது யூதச்சங்கத்தின் தலைவன் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, ஒரு வண்டியில் கட்டப்பட்டு அவனுடைய சொந்த பிள்ளையால் தெருக்களில் ஓட்டப்பட்டான்.

### கான்ஸ்டான்ஸா.

கான்ஸ்டான்ஸா யூதர்களுக்கு 50 லக்ஷம் லியர் நாணயமும் யாஸியிலுள்ளோருக்கு 60 லக்ஷமும் அபராதம் விதிக்கப்பட்டது. யூத வியாபாரிகளின் சொத்துக்களுக்கு குத்துமதிப்பாக ஒரு விலையை வைத்து ஜெர்மானியர் கொண்டுபோகின்றனர். இதை 'ருமேனியப் பழக்கம்' என்று ராணுவ ஆட்சிக்காரர்கள் சொல்லுகின்றனர். தங்களை ரயில் வண்டிகளிலேயே கொன்றுவிடுவார்களென்றும், அல்லது வெளியில் எறிந்துவிடுவார்களோ என்றும் பயந்து யூத வியாபாரிகள் பிரயாணமே செய்வதில்லை. ருமேனியக் குடியானவர்கள் ஒரு ராணுவத் தலைவனை ஓபார் (Obor) நகரத்தின் சந்தையில் கொலை செய்ததற்காக யூதர்கள் அவஸ்தைப் படவேண்டியிருந்தது. கொலையாளியைக் கண்டு பிடிப்பதற்காகப் புறப்பட்ட போலீஸ்காரர்கள் யூதர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையிட்டனர். தாங்கள் தான் காரணம் என்று பலாத்காரத்தினால் சொல்லச் சொல்லி ஜேகப் க்ரோப்பர், பால்புலாஸிரியனல் என்ற யூத கவிகளும், ஸில்வியோ டாமயோ, என்ற தலைவனும் நிர்ப்பந்திக்கப்பட்டு கொல்லவும்பட்டனர். கம்யூனிஸ்டு கக்ஷியைச் சேராமலிருந்தும் ஜியன் பத்திரிகை ஒன்று எல்பிம் என்பவன் பெயரால் இருப்பதாகக் குற்றம் சாட்டி அவனுக்கு 50 அடிகள் கொடுக்கப்பட்டன. பாகௌவில் (Becau) இருக்கும் பணக்காரர்களான பீல்டர்மான் சகோதரர்கள் கைதி செய்யப்பட்டு துன்பப்படுத்தப்பட்டனர். க்ளீன் (Klein) என்பவனும் கைதியாகி கொலை செய்யப்பட்டான். அவனுடைய பிரேதத்தை அவனது குடும்பத்தார்களாகத் தேடி எடுத்துச் செல்லவேண்டி வந்தது.

யூத வக்கீல்களும், வைத்தியர்களும் யூத மக்களிடம் தான் கேஸுகளை வைத்துக்கொள்ளலாம். ஆயிரக்கணக்கான வேலைக்காரர்கள் முன்னெச்சரிக்கையில்லாமலே விரட்டப்பட்டனர். ஜீவனத்திற்கு வேறு வழியில்லை. தொழிற்சாலைகளில் யூதர்களுக்கு ஸ்தானமே கிடையாது. யூத மக்களுக்கு ஏற்பட்டுள்ள கவலையும், ஆபத்தும் சொல்ல முடியாதபடி அதிகரித்துக்கொண்டே போகின்றன. இந்த நிலைமையைப் பரிசீலனம் செய்வதற்கு யூத ஸ்தாபனங்களுக்கு சக்தி கிடையாது. கூட்டம் கூட்டமாகத் தனியே வசிக்கவேண்டியதுதான். மார்க்கங்களிலுள்ள ஆபத்துகளால் பிரயாணம் செய்யமுடியாது. எங்கும் இந்த கலவர நிலைமை இருக்கிறது. கூட்டமாக தேசத்தை விட்டுச் செல்லலாமென்றும் யோசிக்கப்பட்டது. ஆனால் பாலஸ்தீனத்திற்கு அனுமதிச் சீட்டு பெற்றவர்கள் தான் வெளியேற முடியும்.

### கொலை.

வெளிப்படையாக கலகம் ஏற்படுவதற்கு முன்பும், ஜெனரல் அன்டோனெஸ்குவுடன் ஹோரியாஸிமா ஒத்துழைத்து வந்த சமயத்தில் நூற்றுக்கணக்கான யூதர்கள் கைதி செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷன்களுக்குக் கொண்டு போகப்பட்டனர். வெளிப்படையாக ஏற்பட்ட கலகத்தை அடக்குவதற்கு

முன்னமேயும், 10, 20 பேர்களடங்கிய கூட்டத்தினர் யூதர்களின் வீடுகளில் புகுந்து சொத்துக்களையும், நகைகளையும் கொள்ளையடித்துத் தொந்தரவு செய்தனர். அப்படி கைதி செய்யப்பட்டவர்களில் டாக்டர்களும், வக்கீல்களும், சில வியாபாரிகளும், ஐரோப்பாவிலிருந்து ஓடிவந்த சிலரும் சேர்ந்துள்ளனர். பலவழிகளில் இவர்களைக் கொலைசெய்யப்பட்டது. கைதி செய்யப்பட்டுள்ள இடங்களிலேயே 11 யூதர்கள் சுடப்பட்டனர். நூற்றுக்கணக்கான பேர்கள் ஜிலாவா காடுகளில் வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய் 5, 6 பேர்களாக நிறுத்தி வைக்கப்பட்டு, யந்திர பீரங்கிளால் சுடப்பட்டனர். பனீஸா (Bancasa) காடுகளிலும் இதேவிதமாக நடந்தது. மற்றொரு சமயத்தில் சில லகதிகள் ஆடுமாடுகளைக் கொலைசெய்யும் ஆயுதங்களால் கொல்லப்பட்டனர். பிறகு இவர்களின் பிரேதங்களை எடுத்துச்செல்ல அவர்களின் குடும்பத்தினருக்கே சொல்லி அனுப்பப்பட்டது. அதற்குமுன் இவர்களின் பிணங்கள் மாமிசத்தைத் தொங்கவிடும் கம்பிகளில் தொங்கிக்கொண்டிருந்தன. சில இடங்களில் பூரா குடும்பங்களும் அழிக்கப்பட்டன. பாட்டன், தகப்பன், பிள்ளை ஆகிய மூன்று தலைமுறைகள் ஒரே சமயத்தில் அழிக்கப்பட்டன. ஸருலெஸ்டியில் ஹோரியா, ஸிமாவின் தோட்டத்தில் பெர்ன் ஹார்டு காப்மான் என்பவனும், அவன் மகனும் கொல்லப்பட்டனர். இவர்கள்தான் ருமேனியப் பஞ்சு யந்திர சாலைகளை ஸ்தாபித்தவர்கள். அதே விதமாக உலோக சாமான்களைச் செய்யும் தொழிற்சாலைகளின் சொந்தக்காரனான கட்மான் மார்கஸ் என்பவனும் அவனுடைய மருமகனும், இரண்டு பிள்ளைகளும் சுடப்பட்டனர் ஒரே சமயத்தில் 300 யூதப் பிணங்கள் தொங்கிக் கிடந்ததை நான் நேரிலேயே கண்டேன். யூத புதைகுழியில் புதிதாக 800 பேர்கள் புதைந்து கிடந்ததை நான் கண்டேன். இன்றும் ஆயிரக்கணக்கான யூதர்களின் அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லை.

ஜெனரல் அன்டோனெஸ்கு மிக ஆடம்பரத்துடன் பேசும் சமயங்களில் இவ்வித மிகக்கொடிய சம்பவங்களைப்பற்றி ஒன்றுமே சொல்லுவதில்லை. திருடு, கொள்ளை முதலியவைகளைப்பற்றிச் சொல்லுவானே தவிர கொலைகளைப்பற்றி மௌனம் சாதிக்கிறான்.

### கொள்ளை.

யூதர்களை ஒழிக்க நினைப்பது ஜெர்மானியரின் முறைதான். ஜெர்மனிக்கு உட்பட்ட மத்திய, தென் கிழக்கு ஐரோப்பிய பாகங்களில் தொழிற்சாலைகளை நடத்தும் யூதர்களும், யூதர்களின் சம்பந்தம் இருக்கிறவர்களும் உடனே ஜெர்மன் கமிஷனர் ஒருவரிடம் தன்னைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும். இவர்களுக்கு மறுபடி தொழில் கொடுக்கப்படுகிறது. ஆனால் கொஞ்ச நாள் ஆனதும் ஜெர்மனியின் நன்மைக்கோ, அல்லது அந்தக் கமிஷனரின் நன்மைக்கோ உபயோகப்படுத்தப்படும். ஹிட்லரின் புதுத்திட்டத்தின் கீழ் ஆக்கிரமித்த நாடுகளின் சொத்தைக்கொண்டே நரிபோன்ற இந்தக் கமிஷனர்கள் பிழைக்கின்றனர்.

### திருடனுக்கும் திருடன்.

சில சந்தர்ப்பங்களில் யூதர்களுக்கு நியாய விசாரணை ஏற்பட்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது. அதற்கும் ஜெர்மானியர் ஏதோ ஒரு லக்ஷியத்தைக்கொண்டுதான் ஏற்படுத்தியிருக்கின்றனர். வீனர் நாஸ்டாட் (Wiener Neustadt) என்ற இடத்திலுள்ள மாஜிஸ்திரேட் ஒரு விசித்திரமான தீர்ப்பு சொல்லியிருந்தான். பிரான்ஸ் லென்ஹார்டு (Franz Lenhardt) என்ற ஒருவன் இரண்டு யூதர்களின் கடைகளைக் கொள்ளையடித்ததற்காக எட்டுமாதம் ஜெயிலில் உழைக்கும்படி தண்டிக்கப்பட்டான். இந்த சம்பவம் 1938-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஆஸ்திரியாவை ஹிட்லர் அபகரித்த பிறகு சேர்ந்தது. மாஜிஸ்திரேட் செய்ததைப் பார்த்தால் யூதர்களுக்கும் சட்டம் பந்தோபஸ்து அளிக்கிறதாகவே சொல்லலாம். ஆனால் நியூஸ்வீனர் டாஜ்பிளாட் (News Wiener Tageblatt) என்ற பத்திரிகை ஒரு கதையையும் சேர்த்து இந்த விஷயத்தைப் பிரசுரித்தது. லென் ஹார்டு ஒரு 'திருடனுக்கும் திருடனும்'. யூதர்கள் திருடர்களாம். ஆகவே இவனைப்போன்ற கூட்டத்தினர்கள் கொள்ளைத் தொழிலைச்செய்து ஹிட்லரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறார்கள்.



## ஸெக்ஷன் B.

## போலந்து.

## "17,000 யூதர்கள் கொலை செய்யப்பட்டனர்".

(மிஸ்ட்டர் நெக்ளி பார்ஸன் எழுதியது).

### ஜூடிபேதம்.

ஜெர்மனியிலுள்ள யூதர்களுக்கு ஜெர்மானியர்கள் செய்யும் கொடும் செய்கைகளைக் காட்டிலும் இன்னும் அதிகக் கொடுமையாக, போலந்தில் அவர்களால் நடத்த முடியாதுபோல் தோன்றும். உண்மையில் அங்கு அப்படி ஒன்றும் கொடுமை செய்யாமல் இருந்ததாகவும் காணப்படவில்லை. ஆனால் ஜெர்மனியில் மொத்த ஜனத்தொகையில் யூதர்கள் 100-க்கு 1-பங்குதான் இருக்கிறார்கள். ஜெர்மன் ஆக்கிரமித்த போலந்தில், அவர்கள் மொத்த ஜனத்தொகையில் பத்து சதவிகிதம் இருக்கிறார்கள். அவர்கள் யூதர்கள்மேல் கொண்டிருக்கும் அருவருப்புக்கு இது ஒரு புதிய பிரச்னையாக இருக்கிறது. மேலும் போலந்திலுள்ள யூதர்களும், இன்னும் அங்குள்ள இதர பிரஜைகள் கொண்டிருக்கும் பொதுவான நோக்கமான நேசநாட்டினருக்கு வெற்றியும், போலந்துக்கு ஸ்வதந்திரமும் கிடைக்கவேண்டுமென்ற விருப்பத்திற்கு இணங்கியிருக்கிறார்கள்.

போலந்தில் யூதர்களையும், இதர பிரஜைகளையும் தனியாகப் பிரித்துவைக்க ஜெர்மன் அதிகாரிகள் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் முடியவில்லை. நாஸிகள் எவ்வளவு கொடுமையாக நடத்தினாலும்கூட பிரிவினை சாத்தியப்படவில்லை.

ஜெர்மானியர்கள் ஒன்றும் செய்யமுடியாமல் திகைத்தார்கள். லாட்ஸிலிருந்து 1940, மார்ச்சு, 8-ம் தேதியில் வந்த அறிக்கையில் 'ஜெர்மன் ரகசிய போலீஸ் பிரதிநிதிகள், ஏராளமான யூதர்களைப் பிடித்து, கைகளைக்கட்டி, தெருவின் குறுக்கே உயரமாக அப் பரிதாபகரமான யூதர்களின் கால்கள் தரையில் பாவாதவிதமாகத் தோரணங்களாகக் கட்டித் தொங்கவிட்டார்கள், என்று கண்டிருக்கிறது.

அம்மாதிரி தொங்கவிடப்பட்ட மனிதன் வெகுகாலம் ஜீவித்திருக்கமுடியாது. ருஷ்யப்படை வீரர்களில் கீழ்தரத்தில் இருந்தவர்கள்கூட இந்தக் காக்ஷியைக் கண்டு அருவருப்புக்கொண்டு கலகம் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த மிருகத்தன்மையான கொடுமைகளின் பயனாக, ஜெர்மன் போர் வீரர்களில் சிலர் தற்கொலை செய்துகொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

### நாடோடிகள்.

தற்சமயத்தில் ஜெர்மன் ஆக்கிரமிக்கப்பட்ட போலந்திலுள்ள 20 லக்ஷம் யூதர்களும், நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டவர்களின் ஸ்திதியில் இருக்கிறார்கள். ஜெர்மன் ரகசியப் போலீ யாரும் அவர்களைத் தாராளமாகக் கொலை செய்யலாம். ஜெர்மன் ரகசியப் போலீஸார் மட்டுமல்ல, மற்ற போலந்திலுள்ள எந்த ஜெர்மானியனும் அவர்களைக் கொல்லலாம். அவர்கள் மானிட ரூபம்கொண்ட தொத்து நோய் பரவச்செய்யும் புழுவாகக் கருதப்படுகிறார்கள். அதனால் தண்டனைக்குட்படாமல் யூதர்களைத் துரத்தலாம். போலந்து தேசத்தார்களுக்குத் தோன்றும்படி ஜெர்மானியர்கள் கொண்ட அடிப்படையான எண்ணம், போலந்துக்காரர்களிடமிருந்த நாஸ்திகக் கொள்கையைக் குறைத்துவருகிறது. போலந்துக்காரர்களும் யூதர்களுடன் சேர்ந்து கஷ்டப்படுவதினால், அவர்களுக்கு உண்மையான கிருஸ்துவ மதப் பற்று வளர்ந்துவருகிறது. அவர்களைக் காட்டிலும் இன்னும் அதிகக் கஷ்டம் அனுபவிக்கும் ஜனங்களிடம் அவர்களுக்கு அதிக அனுதாபம் ஏற்படுகிறது. இதெல்லாம் ஜெர்மானியர்கள் அவர்களிடம் நடந்துகொள்ளத் தெரியாமல் நடந்துகொண்டதினால் உண்டானது.

## அடிமைத்தனத்தின் சின்னம்.

போலந்தில் யூதர்களுக்கு எதிரியாக ஜெர்மானியர்கள் கொண்டிருக்கும் கொள்கையானது உண்மையில் குழப்பத்தை உண்டாக்கியிருப்பதாகத் தோன்றுகிறது. எல்லாவற்றையும் அனுசரித்து நடக்கும் முறையில் ஒன்றும் ஒழுங்குபடுத்தப்படவில்லை. போலந்திலுள்ள மஞ்சள் நிற முக்கோட்டுச் சின்னத்தை யூதர்கள் அணிந்துகொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. 1939-ம் ௵ டிஸம்பர் ௴ 1-ம் தேதி முதல் வாரிஸா கிராக்கோ, லெஸ்டோசோவா இந்த ஊர்களில் உள்ள யூதர்கள் இச்சின்னத்தை அணிந்துகொள்ளவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டது. ஆனால் அதில் வெள்ளைக் குஞ்சமும், நடுவில் டேவிட்டின் நீல நக்ஷத்திரம்போல் அடையாளமும் இருக்க வேண்டுமென்றும் கண்டிருந்தது. லோட்ஸ், லாக்லாவக், (Wloclawek) லப்லின் இந்த இடங்களில் நவம்பர் ௴ 12உ முதல் யூதர்கள் மஞ்சள்நிற சின்னத்தைத் தரித்துக்கொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டார்கள். வேறு சில நகரங்களில் யூதர்கள் வழக்கப்படி மஞ்சள் நிறச் சின்னத்தையும், முதுகில் மஞ்சள் பட்டையையும் தரித்துக்கொள்ளும்படி ஜெர்மன் அதிகாரிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

நமக்கு இத்தகைய வித்தியாசங்களில் யாதொரு பொருட்டுமில்லையென்று தோன்றியபோதிலும், யூதர்களுக்கு அவை மிகவும் அவமானத்தை உண்டாக்குகின்றன. இதனால் நாஸிக் கொள்கையில் ஒற்றுமையில்லை என்பது தெரியவரும்.

யூதர்களின் கடைகளும் வித்தியாசத்தைக் காட்டக்கூடிய யூதர்களின் அடையாளங்களைக் காட்டும்படி கட்டளையிடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக வெள்ளைத்துணியில் டேவிட்டின் நீலநிற நக்ஷத்திரம் இருக்கவேண்டும். இந்த த்தரவைப் பிறப்பிக்கும்பொழுது, வார்ஸாவிலிருக்கும் ஜெர்மன் ஜில்லாத் லைவன் ஒரு யூதனின் குணாதிசயத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். அந்த மர்சனமானது ஜெர்மனியில் வழங்கப்படும் சட்ட திட்டங்களுக்கும், ஜாதி ஆசாரங்களுக்கும் நேர்மாறானது. அதைப்பற்றி டாக்டர் பிஷ்ஷர் சொல்லுவதாவது:—

"1939-ம் ௵ அக்டோபர் ௴ 1-ம் தேதியில் யூதர்களின் ஜாதியில் சேராத நகரவாசிகள் எல்லாம் யூதர்களாகக் கருதப்படமாட்டார்கள்" என்றார்.

## வம்ச பரம்பரை.

ஜெர்மனியில் டாக்டர் கோயபல்ஸ் மூதாதையர்களின் வம்ச பரம்பரையைப்பற்றி கிளறிக்கொண்டிருப்பது உலகத்தில் யாவருக்கும் தெரியும். யூதர்களின் இரத்தக் கலப்பு இருக்கிறதாவென்று வெகுவாக ஆராய்ச்சி செய்யப்படுகிறது. யார் யூதன் என்று கண்டுபிடிப்பதற்காக நாஸிகள் போலந்தில் கையாண்டு வரும் முறையிலிருக்கும் வித்தியாசத்தை இதிலிருந்து கண்டுகொள்ளக்கூடும். ஆனால் அவர்கள் யூதர்களின்பேரில் தாங்கள் கொண்டிருக்கும் பக்ஷம், பிரியம் அதிகமாகிறதென்பதைக் காட்டவில்லை. இக்கொள்கை ஏதோ பெரிய பிரச்னையை நாஸிகள் கிளப்புகிறார்கள் என்பதைமட்டில் காட்டுகிறது.

இந்தப் பிரச்னையில் நானே ஒரு உதாரணம் கொடுக்கக்கூடும். 1933-ம் ௵ ஹார்ஸ மலைகளில் ஒரு ஜெர்மன் 'யூ' படகுத் தலைவனை சந்தித்தேன். அவன் முதல்தரமான ஜெர்மானியன். நாஸிக்கொள்கையில் ஆர்வமான பற்றுக் கொண்டவன். "மூழ்கின கப்பற்படை", அதாவது ஸ்கேப்பாப்ளோ (Scapa Flow)-வில் சரணடைந்த ஜெர்மன் கப்பற்படையை எப்படி ஜெர்மானியர்கள் மூழ்கடித்தார்கள் என்ற கதையை எழுதினவன். நான் பார்த்தபொழுது அவனிடம் ஒரு பைசாகூட கிடையாது. அவன் ஒரு வேடுவன் குடிசையில் வசித்துவந்தான். கோடைகாலத்தில் பனிமிருந்த பிரயாணிகள் வரும்பொழுது அவனும் அவன் குடும்பத்தாரும் அக்குடிசையைக் காலிசெய்யவேண்டும். தீரச்செயல் செய்யக்கூடிய 'யூ' படகுத் தலைவனுக்குள்ள எல்லா கௌரவச் சின்னங்களும் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் அவனுடைய மகளாவது, அவனுடைய



அழகுள்ள மகளாவது ஜெர்மன் பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடாது. ஹிட்லர் இளைஞர் கிளர்ச்சியிலும் அவர்கள் சேரக்கூடாது. அவர்கள் பறையர்கள். ஏன்? அவர்களின் தாயார் யூதனுக்கும், யூதனில்லாதவனுக்கும் பிறந்தவள்.

## கட்டாய வேலை.

14 வயதிலிருந்து 60 வயதுக்குட்பட்ட போலந்திலுள்ள எல்லா யூதர்களும் கட்டாயவேலை செய்யக் கடமைபட்டவர்கள்.

## ஊரைவிட்டுக் காலி செய்வது.

3-வது ரீச்சுடன் இணைக்கப்பட்ட போலந்து பிராந்தத்திலிருக்கும் யூதர்களுக்குத்தான் கேவலமான கதி ஏற்பட்டிருக்கிறது. லோட்ஸ் நகரத்தில் 60 லக்ஷம் ஜனங்கள் உண்டு. அதில் 20 லக்ஷம் பேர்கள் யூதர்கள். 1940-ம் ௵ ஜனவரி ௴ 13உக்குள் எல்லா யூதர்களும் லோட்ஸ் நகரைவிட்டு வெளிச் செல்லவேண்டுமென்று ஜெர்மானியர்கள் கட்டளையிட்டார்கள். இம்மாதிரி கூட்டங்களாக வெளியே செல்லவேண்டிய ஏற்பாட்டை யூதர்களே செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டார்கள். ஜெர்மன் ரகசியப் போலீஸார் கைக்குத் தப்பும்படி குறிப்பிட்ட காலத்திற்குள் இம்மாதிரி வெளியே செல்வது அசாத்தியமாக இருக்குமோவென்று யூதர்கள் பயந்தார்கள். தினசரி 1,700 பேர்கள் வீதம் வெளிக் கடத்தப்பட்டார்கள். வார்ஸாவை நோக்கி கால் நடைகள் ஏற்றிச்செல்லும் வண்டிகளில் அவர்கள் அனுப்பப்பட்டார்கள். ரயில்வே ஜங்கிஷன்களில் கூட்டம் அதிகமாய் விட்டது. வண்டிக்காக ஆண், பெண், சிசுக்களும், நோயடைந்தவர்களும், 4, 5 நாள் அன்னம், தண்ணீர் இல்லாமல் இருந்தார்கள். லோட்ஸிலிருந்து வார்ஸா வரையிலும் 90 மைல்கள் செல்வதற்கு ஒரு வாரம் பிரயாணம் செய்த ரயில் வண்டிகளில் ஒன்றில் 8 இறந்த குழந்தைகளின் சவங்கள் வெளியே எடுக்கப்பட்டது.

## அயோக்கியத்தனம்.

யூதர்களின் கோவில்களை ஜெர்மானியர்கள் தீ வைத்தார்கள். யூதர்களே அவற்றைக் கொளுத்தினதாகச் சொன்னார்கள். குரோஜக் என்ற இடத்தில் யூதர்களையே அவர்களின் கோவிலுக்கு தீ மூட்டும்படி ஜெர்மானியர் நிர்ப்பந்தித்தார்கள். லக்லாவக்கில் (Wloclawek) பெரிய கோவிலை நெருப்பு வைத்துவிட்டு பொதுக் கட்டடங்கள் அழிந்ததற்காக அந்த யூத ஜாதியார்கள் பூராவும் 60 லக்ஷம் (Zlotys) நாணயங்கள் அபராதம் கொடுக்கும்படி தண்டனை விதித்தார்கள்.

## கொலை.

அங்கு படுகொலைகள் நடந்தன. வார்ஸாவில் நெலுவிக்கித் தெருவில் 9-ம் ந. வீட்டில் 22—11—39-ல் 55 யூதர்கள் கொலை செய்யப்பட்டார்கள். செல்மிலிருந்து ருபியஸ்லோ என்ற இடம் வரையிலுள்ள ஜெர்மன்-ஸோவியத் மார்க்கத்தில் அவர்கள் வேகமாக ஓடாத காரணத்திற்காக, ஏற்றிச்சென்ற 85 யூதர்கள் சுடப்பட்டார்கள். டிஸம்பர் ௴ 15உக்கு முன் ஆயுதங்கள் வைத்துக் கொண்டிருக்கும் குற்றச் சாட்டுக்காக லோட்ஸில் 41 யூதர்களும், கீல்ஸில் 4 பேரும், ஸின்டோசோவாவில் 9 பேரும், கிராக்கோவில் 3 பேரும், லஸராடோவில் 2 பேரும், காடோவிஸில் 5 பேரும், கொலை செய்யப்பட்டார்கள். கிராக்கோவில் புராதனமாக யூதர்கள் தங்கியிருக்கும் காஸிமிர்ஸில் ஜெர்மானியர் 3 நாட்கள் வேட்டையாடினார்கள். டிஸம்பர் ௴ 18, 19, 20 தேதிகளில் 180 யூதர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

போலந்தில் ஆக்கிரமித்திருக்கும் ஜெர்மானியர்கள் வெறிகொண்டிருப்பவர்கள்போல கொடுமைகள் செய்கிறார்கள் என்று ஒரு போலந்துக்காரன் சொன்னதில் ஆச்சரியமில்லை.

இந்த யூதர்கள் இறந்ததினால் மட்டும் மனதிற்குக் கிளர்ச்சி உண்டாக்காது என்று நினைக்கிறேன். ஏனென்றால் ஜெர்மானியர்கள் யூதர்களைக் கொலை செய்வது பழக்கமாகிவிட்டது. இந்தக் கொலைகளைப்பற்றிச் சொல்வதில் ஒரு வலிப்பு வருகிற மாதிரி தோன்றுகிறது. இப்படி ஜெர்மானியர்கள் போலந்துக்காரர்களையும், யூதர்களையும் திரள் திரளாகக் கொலைசெய்வது பித்துப் பிடித்ததினால் இல்லாமல்போனாலும் அவர்கள் கொண்டிருக்கும் நுக்கத்தின் வெறியினால் தான் இருக்கும். இவ்விதமாக ஜனங்களைச் சுடுவதும், குத்துவதும், கழியினால் அடித்துக் கொல்வதும் ஒரு கோரமான காக்ஷி. இம்மாதிரி உலகத்தார்களுக்கு அருவருப்பு வரக்கூடிய விதமாக அக்கிரமங்களை ஜெர்மானியர்கள் செய்து வருகிறார்கள்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 11—7—42-லிருந்து 17—7—42-வரை.

எகிப்து.—இவ்வாரத்தில் வெள்ளிக்கிழமையன்று எல்அலமீனுக்கு வடக்கே டெல்-எலீஸாவை நோக்கி ஆச்சின்லெக் முன்னேறியதும் சண்டை ஆரம்பமாயிற்று. இது இருப்புப்பாதையை ஒட்டியிருக்கிறது. இங்கே 2,000 கைதிகள் பிடிக்கப்பட்டு 18 டாங்கிகள் அழிக்கப்பட்டன. இது ஒரு சிறு சண்டையென்று சொல்லப்படுகிறது.

அதற்குச் சற்று பிறகு குவொடாரா பள்ளத்தாக்கில் பிரிடிஷ் நிலை ஒன்றை எதிரி பிடித்துக்கொண்டான். ஆனால் அங்கிருந்து மறுபடி விரட்டப்பட்டான்.

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமைகளில் எதிரி மறுபடியும் டெல் எலிஸாவைப் பிடிக்க முயற்சித்தான். ஆனால் அது முடியவில்லை. செவ்வாய்க்கிழமை சண்டை நடக்கவில்லை.

தெற்கு முனையில் எதிரி முன்னேறவில்லை.

மத்தியதரைக்கடலில் எதிரிக்கு அதிக சேதத்தை பிரிடிஷ் நீர்மூழ்கிகள் விளைவிக்கின்றன. சனிக்கிழமை மெர்ஸாமட்ரு தாக்கப்பட்டது. நேசதேச விமானங்கள் எதிரி போர்முனையிலும், எதிரி அணிவகுப்பிலும், மெர்ஸா மட்ரு, டொப்ருக், பெங்காஸி முதலியவைகளிலும் தாக்குதல் செய்தன.

மொத்தத்தில் பிரிடிஷ் படைகள் நிலைமையை சமாளித்து வருகின்றன. பிரிடனுக்கும், எகிப்துக்கும் ரகசிய தூதனான அமீன் ஆஸ்மான்பாஷா ஜூலை 11-ல் செய்தி திருப்திகரமாக இருக்கிறதென்று சொன்னான்.

ருஷ்யா.—ரொஷாக்கை ஜெர்மானியர் பிடித்து, டான் நதியைக் கடந்து, மாஸ்கோ-ரோஸ்டக் ரயில்வேயைத் துண்டித்துவிட்டனர். கார்கவ் முனையில் காண்டிமிரோவ்கா (Kantemirovka), லிஸாசான்ஸ்க் (Lisichansk) பொகுசார், மில்லிரோவோ இவைகளைப் பிடித்தனர். பெறுசிக்கும், பொகுசெருக்கும் இடையில் பெரிய சண்டை நடக்கிறது. இருந்தாலும் வாரனேஷுக்கு அருகில் தான் கடும் சண்டை நடக்கிறது. இதைத் தவிர ஸ்டாலின்கிராடை நோக்கி மூன்று பக்கங்களிலும், டாக்கன்ராக்கிலிருந்து ரோஸ்டவை நோக்கியும் இரண்டு தாக்குதல்கள் செய்யப்படுகின்றன.

காகஸஸைப் பிடிக்க ஹிட்லர் கடும் பிரயத்தனம் செய்துவருகிறான். இரு பக்கங்களிலும் 20 லக்ஷம் சைனியங்கள் உயிருக்காகப் போர் புரிகின்றனர்.

கலினின் முனையில் ஜெர்மன் முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டது. மர்மான்ஸ்கிலும், கோலா தீபகற்பத்திலும் ருஷ்ய விமானங்கள் கடுமையாகத் தாக்குகின்றன. சென்ற வாரத்தில் ஆர்க்டிக்கிலும், பால்டிக்கிலும் ருஷ்ய நீர்மூழ்கிகள் 70,000 டன் உள்ள எதிரி கப்பல்களை மூழ்கடித்தன.



ருஷ்யர்கள் தீவிரமாக எதிர்த்து வருகின்றனர். செவ்வாய்க்கிழமை லாஸோவிஸ்கி பத்திரிகை நிருபரிடம் பின்வருமாறு சொன்னான். ருஷ்ய-ஜெர்மன் யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜெர்மானியர் முன்னேறினார்கள். அடுத்தபடி 1941-ம் ஸு டிஸம்பர் மீ முதல் 1942-ம் ஸு மே மீ வரையுள்ள காலத்தில் ருஷ்யர்கள் முன்னேறினார்கள். இப்பொழுது ஜெர்மானியர்கள் முன்னேறுகிறார்கள். அடுத்த தடவை ஜெர்மானியர் கட்டாயம் தோற்கடிக்கப்படுவார்கள்.

சைனா.—நான்செங்கைப் பிடித்ததும், லின்ச்வானை நோக்கி சீனர்கள் முன்னேறுகின்றனர். போயாங்கையும் பிடித்தனர். டெய்கன் மலைகளில் ஜப்பானியர் தடைப்பட்டனர். லிஷுயி, ஸின்கிரான், டெங்ஷூ முதலிய இடங்களிலிருந்தும் எதிரி துரத்தப்பட்டான்.

லிஷுவிலிருந்து தென்மேற்கில் எதிரிகள் முன்னேறி ஸிங்டீன் (Tsingtien)ஐப் பிடித்தனர். ஜூயியனிலிருந்த ஜப்பானியத் துருப்புகள் புடௌனை (Futuon)ப் பிடித்து வான்சவ்வை நோக்கி முன்னேறுகின்றனர். ஸிஸிங்ஷான் எதிரி வசமாயிற்று.

சைனாவிலுள்ள அமெரிக்க விமானங்கள் நான்சாங்கைத் தாக்கி 10 எதிரி விமானங்களையும், போக்குவரவையும் அழித்தன. ஜூலை 1-ம் தேதி நேசதேச விமானங்கள் ஹாங்கௌவுக்கருகில் யாங்ஸி நதிக்கரையிலுள்ள ராணுவக் கட்டடங்களையும், ஷிஷுயங், ஹூவாங்சவ், யேன்பெங் இவைகளையும் தாக்கின. இச்செய்தி தாமதித்து கிடைத்திருக்கிறது. லண்டனிலுள்ள விமர்சகர்களின் அபிப்பிராயப்படி ஜப்பானுக்கு இரண்டு நோக்கங்கள் இருக்கின்றன. கிழக்குச் சைனாவை வசப்படுத்தவும், வடக்கே சைனியங்களை அனுப்பி ருஷ்யாவைத் தாக்குவதும்.

பர்மா.—கடந்த வாரத்தில் இந்தியாவிலுள்ள அமெரிக்க விமானங்கள் மியிட்கியானா விமான தளத்தைத்தாக்கி கப்பல்களைப் பழுதுபார்க்கவிடாமல் செய்தன. சின்ட்வின் நதிக்கு மேற்கேயுள்ள கலுமியோவில் 7, 8 தேதிகளில் பிரிடிஷ் பாம்பர்கள் தாக்கின.

பஸிபிக்.—அமெரிக்க விமானங்களோடு, அமெரிக்கத் துருப்புகளும் நியூ கினியிலுள்ள மோர்ஸ்பியைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. இரண்டு எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன. நியூ கினியின் வடகிழக்கிலுள்ள பூனு (Buna) என்ற இடத்தில் ஒரு பைடர் விமானமும் அழிக்கப்பட்டது. டிமோர் தீவின் வடமேற்குக்கருகிலுள்ள அலார் தீவிலுள்ள கலபாகி என்ற இடத்திலுள்ள கப்பல் துறைகள் தாக்கப்பட்டன.

பிரிடிஷ் விமானப்படை.—வில்ஹெல்ம்ஷேவன், அமாவில்லி, டான்ஸிக், பிளன்ஸ்பர்க், லேஸ்பர்க் இவைகளைத் தாக்கியது. டான்ஸிக் என்பது இங்கிலாந்து கடற்கரையிலிருந்து 800 மைல் தூரத்திலிருக்கின்றது. அங்கே கப்பல் தளமும் விமான தளமும் இருக்கின்றன. தாக்குதல் பகல் நேரத்தில் நடந்தது. பிளன்ஸ்பர்க்கில் கப்பல் கட்டும் தளங்களும், அச்சு சாலைகளும் இருக்கின்றன.

பல்வகைப்பட்டவை.—(1) இவ்வாரத்தில் ருஷ்யாவுக்கும், நெதர்லாந்துக்கும் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இருநாடுகளுக்கும் அரசியல் சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

(2) குத்தகைக் கடன் மசோதாப்படிக்கு நார்வே வியாபாரக் கப்பல்களைப் பழுதுபார்க்க அமெரிக்கா ஒப்புக்கொண்டிருக்கிறது. இழந்த கப்பல்களைப் பூர்த்திசெய்ய நார்வே அரசாங்கத்திற்கு அமெரிக்கா உதவும்.

(3) குத்தகைக் கடன் மசோதாப்படி அமெரிக்காதான் மற்ற நாடுகளுக்கு உதவவேண்டுமென்பது அல்ல. ரேடியோ லொகேஷன் முறையை பிரிடன், அமெரிக்காவிற்குக் கொடுத்திருக்கிறது.

(4) துருக்கி பிரதம மந்திரி டாக்டர் ரபிக் ஸய்தாம் ஜூலை 7-ல இறந்தார். எங்கும் இதைப்பற்றி அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது. அவர்

அரசியல் அனுபவம் வாய்ந்தவர், தந்திரசாலி. இங்கிலீஷ்காரர்களுக்கு நேயர். இவர் ஸ்தானத்திற்கு லாரேஜாகுலு வந்திருக்கிறார். இதற்கு முந்தி இவர் அயல் நாட்டு மந்திரியாக இருந்தார். நியாயம், பொருளாதாரம், அரசியல் இவைகளில் நிபுணர். தனது அரசியல் அனுபவத்தால் துருக்கி நடுநிலை வகிக்கும்படி செய்துவந்திருக்கிறார். அச்சு நாட்டுத் தந்திரம், பிரசாரம் இவைகளுக்கு துருக்கி உட்படவுமில்லை.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—7—42.** (புதன்கிழமை). | | | | |
| | சைனா (China)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானங்கள் வைக்குமிடங்கள், அவைகள் பறப்பதற்கான உதவும் இடங்கள், தரையிலுள்ள விமானங்கள்.—ஹான்கோ (Hankow) விமான நிலயத்தில். | | | |
| **2—7—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | சைனா (China)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—நான்செங் (Nanchang). | | | 3 விமானங்கள். |
| **4—7—42.** (சனிக்கிழமை). | | | | |
| | சைனா (China)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—காண்டன் (Canton). | | நஷ்டமில்லை. | 6 விமானங்கள். |
| **6—7—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான மிறங்குமிடம்.—எல்டாபா (El Daba) பிரதேசத்தில். | | | |
| | விரோதிக்குச் செல்லும் ஸப்ளைகள்.—மெர்ஸா மாட்ரு (Mersa-Matruh) விலிருந்து, டொப்ருக் (Tobruk) வரையிலும். | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர்முனை முழுவதிலும். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **6—7—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி துருப்புகளின் கூட்டம்.—காலிமியோ (Kalemyo) வட பர்மா (Burma)வில். | | | |
| | சைனா (China)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான தளம்.—காண்டன் (Canton). | | | |
| | நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| **7—7—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகள் கூட்டம், யுத்த தளவாட துவியல்களும்.—முன்னணிகளுக்குப் பின்னால். | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | இரண்டு விரோதிப் படகுகள்.—ஸிடி பாரானிக் (Sidi Barrani) கருகாமையில். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை எங்கும். | | | |
| | தூரக்கிழக்கு-பர்மா (Burma)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ரயில்வே ஸ்டேஷன்கள்.—ஹூபின் (Hupin), பின்பா (Pinbau), டாங்கி (Taungni), நாம்டி (Namti). | | | |
| | விமான நிலயம்.—மிட்கினா (Myit-kyina). | | | |
| **8—7—42.** (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஜெர்மனிக் (Germany)குச் சொந்தமான கப்பற்படை தளம், நீர்மூழ்கிகள் கட்டும் இடம்—வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmshaven) | | | |
| | விரோதி விமான நிலயங்கள், மற்ற ராணுவ லக்ஷியங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | ரயில்வே ஸ்டேஷன்.—அபிவில்லி (Abbeville). | | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **8—7—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி டாங்கிகள் மோட்டார் லாரிகளின் கூட்டம்.—முன்னணிகளுக்குப் பின்புறம். | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேச முழுவதிலும். | | | |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| சைனிய வாசஸ்தலங்கள், கட்டடங்கள்.—கலிமியோ (Kalemyo), பாலேட்வா (Paletwa) கலடான் (Kaladan) நதிக்கரையில். | | நஷ்டமில்லை. | |
| **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதிச் சைனிய வாசஸ்தலங்கள்.—ஸலாமுவா (Salamaua). | | | |
| **9—7—42.** (வியாழக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| இரவில்.—கண்ணிவெடிகள் போடுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | 2 விமானங்கள். | |
| வேவு பார்த்தல்—வடகடல் (North Sea) பூராவிலும். | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதிக் கூட்டங்கள்.—எல் அலமீன் (El Alamein) பிரதேசத்திற்கருகாமையிலுள்ள முன்னணிகளுக்குப் பின்புறம். | | | |
| விரோதி போக்குவரத்து சாதனம்.—எல் டாபா (El Daba)வுக்கு அருகாமையில். | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| சின்ட்வின் (Chindwin) நதியில் வேவு பார்த்தல். | | | |
| **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள் (Nanchang) நான்செங். | | | 10 விமானங்கள். |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **10—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான பிறங்குமிடங்கள்.—எல் டாபா (El Daba). | | | 2 விமானங்கள். |
| துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | | |
| அச்சு நாட்டின் போக்குவரத்து.—யுத்தரங்கத்தில். | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச்சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போரரங்கம் முழுவதிலும். | | | |
| **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான தளம், நான்செங் (Nanchang). | | | |
| ஜப்பானிய ராணுவத் தலைமை ஸ்தானம்—லின்ச்வான் (Linchwan). | | | |
| **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமானப்போர்.—புனு (Buna). | | | 2 விமானங்கள். |
| **11—7—42.** (சனிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| நீர்மூழ்கிகள் கட்டும் இடங்கள்.—டான்ஸிக் (Danzig) பிளென்ஸ்பர்க் (Flensburg) பால்டிக் கரையில். | மிகவும் பலத்த சேதம். | 3 விமானங்கள். | |
| இரவில்.—கண்ணி வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதிக்குச் சொந்தமான கவசம் பூண்ட வண்டிகள், டாங்கிகள்.—எல் அலமீனு (El Alamein)க்கருகாமையில், முன்னணிகளுக்குப் பின்புறம். | | | |
| துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| கப்பல் துறைகள்.—மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| விரோதியின் சிறு கப்பல்கள்.—டொப்ருக்கி (Tobruk) லிருந்து மெர்ஸா மாட்ரு (Mersa Matruh) வரை. | | 3 விமானங்கள். | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| **தூரக்கிழக்கு—தென்மேற்கு பஸிபிக்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| வேவு பார்த்தல்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விமான நிலயம்—அபிவில்லி (Abbeville). | | | |
| | கண்ணி வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பெரிய விரோதி துருப்புக்கூட்டம்.—போராங்கத்திற்கருகாமையில். | | | |
| | துறைமுகம், மற்று ராணுவ லக்ஷியங்கள்.—டொப்ருக் (Tobruk). | பெருந்தீக்கள் ளேம்பின. | | |
| | அச்சு நாடுகளின் சப்ளை போக்குவரத்து டொப்ருக் (Tobruk)கிலிருந்து மெர்ஸா மாட்ரு (Mersa Matruh) வரையிலும். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமானநிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | துருப்புகள்—வட பர்மாவி (Burma) லுள்ள கலிவா (Kalewa) பிரதேசத்தில். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—7—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கடற்கரைப்பிரதேசம்; வட கிழக்கு இங்கிலாந்து (England)-ம் தெற்கு வேல்ஸ் (Wales) கடற்கரையும். | | 4 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 9 விமானங்கள். | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டெல்டா பிரதேசம்.-ஸூயஸு (Suez)க்கு அருகாமையில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 8—7—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 பைடர், 3 பாம்பர் விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 9—7—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 9 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ஹார்ன் தீவு (Horn Island). விமான நிலயம்—தீவில். | | | |
| 10—7—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.— ஒரு இடம்— இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 2 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Moresby). | | 2 விமானங்கள். | |
| 11—7—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம் இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில். | | | 1 விமானம். |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | | |
| | பாலஸ்தீனம் (Palestine)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஹெய்பா (Haifa). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | 3 விமானங்கள் பழுதுபட்டன. | 4 விமானங்கள். | 2 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் தேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | சாயந்திரம் ஒரு இடம்—தென்மேற்குக் கடற்கரை. | | | |
| | ஆகாயச் சண்டை.—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel). | | 1 விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria) பிரதேசம். | சேதமில்லை. | | |
| 13—7—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ருஷ்ய நிலைமை.** இவ்வாரத்தில் காகஸஸைக் குறித்து செய்யப்படும் ஜெர்மன் முன்னேற்றம் பயங்கரமாகக் காணப்பட்டாலும், ருஷ்யச் சைனியங்களுக்கு ரயில்வே போக்குவரவு ஏற்படக்கூடிய வாரனேஷ் என்ற இடம் ஆபத்துக்குள்ளானதாக இருந்தாலும் பொதுவான தோற்றம் அவ்வளவு அதைரியத்தை உண்டுபண்ணக்கூடியதாக இல்லை. இது சம்பந்தமாக 10 விஷயங்களைக் கவனிப்பது நலம்:-(1) இரண்டு மாதங்களுக்கு முன்செய்யப்பட்ட ஜெர்மன் முன்னேற்றம் கெர்ச்சிலும், ஸெபாஸ்டபூலிலும் பலவாரங்கள் தடைபட்டது. (2) ரோஸ்டாக்கை 21-மணி நேரத்திற்குள் பிடித்துவிடலாமென்று ஜெர்மனியர் நினைத்தது முடியாமல் ஒருவாரம் பிடித்தது. (3) சென்ற வருஷமே அழிக்கப்பட்டதாகச் சொன்ன ருஷ்யச் சைனியம் புதுப்பிக்கப்பட்டு, சேர்பட்டு, ஒவ்வொரு அங்குல பிரதேசத்திற்கும் வெகுபாடுபட்டு சண்டை செய்கிறது. (4) ஜூலை 7ல் பிடிபட்டதாக ஜெர்மானியர் சொல்லியும் வாரனேஷ் இன்னும் எதிர்த்து நிற்கிறது. (5) தற்காலம் செய்யப்படும் ஜெர்மன் தாக்குதல்கள் குறுகிய போர்முனைகளில் செய்யப்படுகின்றன. (6) இவ்விதத் தாக்குதல்களைச் செய்து மாரிகாலத்தில் ருஷ்யர்களால் பிடிக்கப்பட்ட ஸ்தலங்களைத் திரும்பப் பிடிக்கப் பார்க்கின்றனர். (7) வாரனேஷைத் தவிர மாஸ்கோவிற்கு தெற்கேயிருந்து மற்றொரு மார்க்கம் இருக்கிறது. (8) ஜப்பானை ருஷ்யாவின் பின்புறம் தாக்கும்படி தூண்டுவதிலிருந்தே பிரகிருதத்தில் நாஜிகளின் நிலைமை அவ்வளவு பிரமாதமாக இல்லையென்று தெரிகிறது. ஆனால் தனக்கு ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்களை



முன்னிட்டு ஜப்பான் அவ்விதம் செய்யத் துணியவில்லை. (9) ஹிட்லர் மீண்டும் முன்னேறுவதாக வைத்துக்கொண்டாலும் மறுபடி மாரிகாலம் வந்துவிடும். காகஸஸின் மாரிகாலம் மாஸ்கோ, லெனின்கிராட் பிரதேசங்களைக் காட்டிலும் கொடுமையாக இருக்கும். பள்ளத்தாக்குகளை விட மலைகளில்தான் குளிர் ஜாஸ்தி. (10) ஐரோப்பாவில் இரண்டாவது யுத்த முன்னணி ஏற்படுமென்ற பயம்.

வி வி வி வி வி வி வி

**எகிப்து.** எகிப்து சண்டை ஜயித்தபாடுமில்லை தோற்றபாடுமில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம், எதிரியின் வேகம் தணிக்கப்பட்டுள்ளது. எதிரியும் முன்னேற்றப் போர் செய்ய முடியவில்லை. முயற்சி 'தடைபட்டதாகவே' அச்சு நாடுகளும் ஒப்புக்கொள்ளுகின்றன. 9 நாட்களாக விடாமுயற்சி செய்தும் ரோமல் எல் அலமீனில் தானிருக்கிறான். முன்னேற முடியவில்லை. ஆனால் வெகுதூரம் முன்னேறியதால் ரோமல் களைப்பாறுவதாக அச்சு நாட்டுப் பிரசாரகர்கள் சொல்லி வருகின்றனர், உண்மையில் ரோமல் சும்மாயில்லை. அலைமேல் அலையாக வந்து எல் அலமீனை எதிரி தாக்கினான். ஆனால் அதே வேகத்துடன் பின்வாங்கும்படி செய்யப்பட்டான். 600 கைதிகளும், 44 பீரங்கிகளும், 20 டாங்கிகளும் பிடி பட்டன. தாற்காலிகமாகப் பிடித்திருந்த முனையிலிருந்து விரட்டவும்பட்டான். எல் டரிபா வரையில் போர்முனை நீண்டிருக்கிறது. வடக்கு முனையிலும் விரட்டப் பட்டுள்ளான். பிரிடிஷ் விமானப்படை கடுமையாகவே தாக்கி வருகிறது. எல் டாபா, மெர்஬ாமெட்ரு, டொப்ருக், பெங்காஸி முதலியனவைகளும் தாக்கப் பட்டன. சேனாடுகளுக்கு எண்ணிக்கை அதிகம் ஏற்பட்டிருக்கிறது. வைட்வாபி படையையும் மீறிவிட்டது.

ஸப்ளைகள் எகிப்திற்குச் செல்லவில்லை என்ற அச்சு நாட்டுக் கூற்று பொய்யானது. மிஸ்டர் சர்ச்சில் சமீபத்தில் சொன்னபோது 9,50,000 மனிதர்களும், 1,00,000 யந்திரவண்டிகளும், 50,000 யந்திரங்களும், 6,000 விமானங்களும், 5,000 பீரங்கிகளும், 4,500 டாங்கிகளும் பிரிடன், அமெரிக்கா, சாம்ராஜ்யம் முதலிய இடங்களிலிருந்து எகிப்திற்கு சென்றிருக்கின்றன என்றார்.

எகிப்திற்கு ஸ்வதந்திரம் கொடுப்பதாகவும், எகிப்து எகிப்தினருக்குத்தான் என்றும் அச்சு நாட்டினர் கூறுவது வீண் பிரசாரம்தான். எகிப்தில் நிலைமை அமைதியாக இருக்கிறது, பிரிடிஷார் கொடுக்கும் உதவியில் நம்பிக்கை இருக்கிறது. சமீபத்தில் அச்சுநாட்டு நடவடிக்கைகளுக்கு முஸ்லீம்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையைப்பற்றி அருக்கி பத்திரிக்கை கூறுவதாவது:- 'அச்சுநாடுகளின் மொழிகளை எகிப்தும் மத்தியகிழக்கு நாடுகளும் நம்பமாட்டா'.

வி வி வி வி வி வி வி

**டோஜோ அதைரியப்படுகிறன்.** ஜூலை 7ல் டோஜோ ஒலிபரப்பும்போது பின் காணப்பட்டிருக்கும் விதமாக அவன் தனது கவலையைத் தெரிவித்திருக்கிறான். 'தற்சமயத்தில் நாம் மனம் தளர்ந்தால் ஐந்து வருஷங்களாக சைனாவில் செய்யப்பட்ட நமது முயற்சி வீணாகும்.' இவ்விதம் அவன் கவலைப்படுவதற்கான காரணங்கள் இருக்கின்றன. ஜப்பானுக்கும் தோல்விகள் ஏற்பட்டுவருகின்றன.

1. ஹூனானில் ஸால்வீன் நதிக்கரையில் ஜப்பானிய முயற்சி தடைபட்டது. மே மாதம் முதல் இந்நதியைக் கடக்க அவர்களால் முடியவில்லை. இந்தோ-சைனாவிலிருந்து செய்யப்பட்ட முன்னேற்றமும் ஜூன் 20ல் முதல் 50 மைல்களுக்குமேல் செல்ல முடியவில்லை, ஜப்பானிய வெளிநாட்டுப் படை சீனப்படைக்கும் பிரிடிஷ் படைக்கும், இடையில் அகப்பட்டுக்கொண்டது. பிரிடிஷ் படை இந்திய எல்லையிலிருக்கிறது. ரெங்கூனுக்குச் செல்லும் ஜப்பானியக் கப்பல்கள் மலாகா ஜலசந்தியில் தாக்கப்படுகின்றன.

கிழக்கு சைனாவில் காண்டன்-செகியாங் இருப்புப்பாதையைப் பிடிப்பதற்கு ஜப்பானியரால் முடியவில்லை. காண்டனுக்கு வெளிப்பக்கங்களில் சீனர்கள்

புகுந்திருப்பதாகவும் தெரிகிறது. செகியாங்—கியாங்ஸி இருப்புப் பாதையிலுள்ள 50 மைல் இடைவெளியை ஜூன் 19உ முதல் பிடித்த பாடில்லை. தற்சமயம் அது 70 மைலுக்கு நீண்டிருக்கிறது.

சீனத்துருப்புகளைத் தோற்கடிக்காமல் இருப்புப்பாதைகளையும் ஸ்தலங்களையும் ஜப்பானியர் பிடிக்க முயலுவதால் கொரில்லாச் சண்டை செய்வதற்கு சீனர்களுக்குச் சௌகரியமாக இருக்கிறது.

சீன விமான தளங்கள் ஏராளமாக இருப்பதால் அவைகளெல்லாவற்றையும் பிடிப்பதற்கு ஜப்பானியரால் முடியாது.

அச்சுநாட்டுத் தேவைகளுக்கு இணங்கவேண்டியிருப்பதால் சைனாவிலுள்ள ஜப்பானியப்படைகள் ஸைபீரிய எல்லைக்குள் சேமிக்கப்பட்டுள்ளன. சீனச் சண்டையும் கொஞ்சம் நிறுத்தப்பட்டுள்ளது.

அலூஷியனில் சில தீவுகளை ஜப்பானியர் பிடித்தது ஒரு முன்னேற்றமாகாது. வடக்கேயிருந்து அமெரிக்க—ருஷ்யத் தாக்குதல் நேராமல் செய்யவே இம் முயற்சி ஜப்பானால் செய்யப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் சிங்கப்பூருக்கு ஒரு இருப்புப் பாதையைப் போடுவதாகச் சொல்லப்படும் பிரசாரம் சந்தேகத்திற்கு இடமானதுதான். இது வரைப்பிடித்துள்ள நாடுகளுக்குள் தரை மார்க்கத்தை விருத்தி செய்யும் நோக்கம் ஜப்பானுக்கு இருக்கலாம். ஏனென்றால் மிட்வே, பவளத்தீவு, சண்டைகளுக்குப் பிறகு கடல் போக்குவரவு சாவதானமில்லாதது என்றே நினைத்திருக்கலாம். ஹாங்காய்க்கும் காண்டனுக்கும் இடையிலுள்ள 800 மைல் இடைவழியையும் சேர்த்து, கொரியா, மஞ்சூரியா, சைனா, இந்தோ-சைனா, ஸயாம், மலேயா இவைகளை ஒன்று சேர்க்கும் நோக்கமிருக்கலாம். இந்த திட்டம் முடிவடைந்தால் உலகிலேயே நீண்ட இருப்புப்பாதை ஏற்படும். அதன நீளம் சுமார் 4,000 மைல் ஆகும். புதிதாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு ஒரு தலையாக ஆகும். ஆனால் இது வீண் கற்பனைதானே. ஏனென்றால் அதற்குத் தகுந்த எஃகும் இதர பொருளும் ஜப்பான் வசத்தில் கிடையாது. ரயில்வே இஞ்சின்களும், மற்ற சாமான்களும் கிடையாது. சீன கொரில்லாப் படைகள் அதைப் பூர்த்தியடைய விடமாட்டா. நேசநாடுகளும் அது பூர்த்தியாகும்வரை கையைக் கட்டிக்கொண்டு பார்த்திருக்கமாட்டா.

வி வி வி வி வி வி வி

**கப்பல்களின் நிலைமை.** லண்டனில் இரண்டு நாள் நடந்த காமன்ஸ் சபையின் ரகசியச் சர்ச்சையில் பிரகிருதமுள்ள கப்பல் நிலைமையும் சென்ற யுத்தத்தின்போது இருந்த நிலைமையும் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. இந்த யுத்த ஆரம்பத்தில் 1914-ஐ விட பிரிட்டனிடம் குறைவான கப்பல்கள்தானிருந்தன. எதிரி ஐரோப்பாவின் மேற்கு பாகத்தைப் பிடித்துக்கொண்டதால் உணவுப்பொருள்களும், இதர சாமான்களும் வெகுதூரத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. இவைதவிர பல யுத்தரங்கங்களுக்கு யந்திர சமான்களை அனுப்ப வேண்டியிருக்கிறது. இந்து மஹாசமுத்திரம், மத்தியதரைக் கடல், பஸிபிக் முதலியவை சென்ற யுத்தத்தில் நேசநாடுகளின் வசத்திலிருந்தன. இப்போது அங்கே எதிரி பயம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் கப்பல்கள் கடல் மட்டத்திலிருந்தும், நீர்மூழ்கிகளாலும் தாக்கப்பட்டன. தற்போது விமானங்களிலிருந்தும் தாக்கப்படுகின்றன. அமெரிக்கக் கப்பற்படை முதலில் தூரதேசச் சண்டைகளுக்குக்கென்று தயார் செய்யப்பட்டிருந்தது. தற்சமயத்தில்தான் கடற்கரைப் பாதுகாப்பிற்காகவும் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதோடு ஜெர்மனியில் நீர்மூழ்கிகள் அதிகமாகவே கட்டப்படுகின்றன. நேசதேசங்களிலோ கப்பல் நஷ்டத்திற்குத் தகுந்த விதமாகப் புதிய கப்பல்கள் கட்டப்படவில்லை. ஆகவே நேசதேசங்களுக்குக் கப்பல்களின் நிலைமை கவலைக்கத்தக்கது தான். ஜனவரி 14ம்-தேதியிலிருந்து அட்லாண்டிக்கில் 350 அமெரிக்கக் கப்பல்கள் அமுக்கப்பட்டன. அதிகம் காரிபியன் கடலில் தான். கப்பல்களை வேண்டுமானால் புதிதாகக் கட்டிவிடலாம். மாலுமிகளை எவ்வாறு அந்த அனுபவத்துடன் அமைக்க முடியும்?



இவ்வளவு இருந்தாலும், இந்த சிரமம் சமாளிக்கப்பட்டு வருகிறது. ஜூலை 2உ மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபைமுன் அறிவித்தபோது, ரூஸ்வெல்ட்டுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக முதலில் கப்பல் சேதத்தைக் குறைப்பதும், அதிகக் கப்பல்கள் கட்டுவதும் முக்கியமாகக் கவனிக்கப்படும் என்றார்.

மே மாதத்தில் அமெரிக்கக் கப்பல் தளங்களில் 6,32,000 டன் நிறையுள்ள 58 புதிய கப்பல்களும், ஜூன் மாதத்தில் 66 எண்ணெய் கப்பல்களும், சாமான் படகுகளும் கட்டப்பட்டன. இந்த திட்டத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் போட்டுள்ள திட்டம் அதாவது 1942-ல் 80,00,000 டன் கப்பல்கள் கட்டிமுடிக்கப்படும். ஒரு வருஷத்திற்கு முன்பு அமெரிக்காவில் மாதம் 2,00,000 டன் தான் கட்டப்பட்டது. தற்போது 7,00,000 டன் வீதம் ஆகிறது.

கடலில் ஆபத்தைக் குறைப்பதற்கான கப்பற்படையும் விஸ்தாரப்படுத்தப்படுகிறது. காரிபியன் கடல், மெக்ஸிகோ குடா, அட்லாண்டாக், முதலிய இடங்களில் அடைந்த அனுபவங்களைப் பார்த்தால் நாசகாரிகளும் துணைக்கப்பல்களும் தேவையென்று தெரிகிறது. இதற்காக 85,000 லக்ஷம் டாலர் மொத்தச் செலவில் 47 சத விகிதம் செலவு செய்து 9,00,000 டன் யுத்தக் கப்பல்கள் கட்டுவதென அமெரிக்க சபை தீர்மானித்திருக்கிறது. பாக்கியுள்ள 53 சத வீதம் விமானமேற்றும் கப்பல்களும், க்ரூயிஸர்களும் கட்டப்படும். இவைகளின் நிறை 5,00,000 டன் ஆகும். 1,00,00,000 சதுர மைலுள்ள பஸிபிக்கில் வெகுதூரம் செல்லும் க்ரூயிஸர்களும், விமான மேற்றிய கப்பல்களும் அதிகத்தேவை. இவைகளைத் தவிர 45,000 டன் எடையுள்ள 12 புதிய சண்டைக் கப்பல்களும் அமெரிக்காவில் கட்டப்படுகின்றன. பேர்ல் துறைமுக அனுபவத்தைப் பார்த்தால் பெரிய கப்பல்களுக்குத்தான் தேவையிருக்கிறது. அதிலும் விமானமேற்றிய கப்பல்களுக்குத்தான். இன்னும் 2 வருஷத்தில் 12 கப்பல்கள் மிதக்கவிடப்படும்.

வி வி வி வி வி வி வி

**லாடிஸி.** செக்கோஸ்லாவியாவில் லாடிஸி என்ற கிராமத்தை நாஜிகள் கொலையாளியான ஹீட்ரிச் கொல்லப்பட்ட காரணத்தை முன்னிட்டு, அடியோடு அழித்துவிட்டனர். இங்கு இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக அமெரிக்காவில் இல்லினாய்ஸில் (Illinois) ஜோலியட் என்ற கிராமத்திற்கு லாடிஸி என்று புதுப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்புதுப்பெயர் வழங்கப்பட்ட தினத்தன்று 50,000 பேர்கள் கூடியிருந்தனர். வெண்டல் வில்கி அன்று அக்கிராசனம் வகித்தார். பண்டைக் காலத்தில் தேசாந்திரத்திற்குச் சென்று குடியேறிய பாதிரிமார்கள் (Pilgrim Fathers) சொந்த ஊர் பெயர்களையே புதிதாகக் குடியேறிய நாடுகளுக்கும் வைத்தார்கள். அந்த வழக்கத்தை ஞாபகப்படுத்தி தற்போதும் லாடிஸி என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

இப்புதுப்பெயர் கொடுக்கப்பட்ட தினத்தன்று ஒரு ஞாபக ஸ்தம்பம் ஒன்று நடப்பட்டது. அதில் 'அரக்கனால் அழிக்கப்பட்டபோதிலும், ஸ்வதந்திரத்தை விரும்பும் ஒவ்வொருவரின் மனதிலும் இருக்கும் (செக்கோஸ்லாவியா) லாடிஸி கிராம வாசிகளின் ஞாபகார்த்தமாக (இல்லினாய்ஸ்) லாடிஸி வாசிகளால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது' என்றும் எழுதப்பட்டிருந்தது. அதேதினத்தில் 'ஸ்வதந்திரதீபம்' என்ற பெயருடன் தூண்டாமணி விளக்கு ஒன்று ஏற்றப்பட்டது. இதனால் ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவிற்குமுள்ள நெருங்கிய ஒற்றுமை தெரிகிறது.

அந்த சமயத்தில் வெண்டல் வில்கி ஒரு சபதம் செய்துகொண்டார்.

"பொஹிமியாவில் உள்ள அச்சிறு கிராம வாசிகளின் ஞாபகத்தை எந்நாளும் நாம் வைத்துக்கொள்ளுவோம். அந்த கிராமத்திற்குப் பதிலாக இல்லினாய்ஸில் ஒரு கிராமம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. யுத்தம் முடியும்வரை நமக்கு இந்த தீவிர உணர்ச்சி குறையாமல் இருக்கவேண்டும். உலகிலிருந்து வெறிகொண்ட அரக்கர்கள் அழியவேண்டும்."

அந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அனுப்பிய செய்தி பின்வருமாறு:—

“பல ஏரிகளும், மிஸிஸிபி நதியும் இருக்குமிடத்தில் இருக்கும் புதிய லாடிஸி கிராமம் அமெரிக்காவின் ஞாபகத்தில் எப்போதும் இருக்கும். நாஜிகளால் மனித ஸ்வதந்திரத்தைக் கெடுக்கமுடியாது”.

வி வி வி வி வி வி வி

**பிரான்ஸ் இன்னும் இருக்கிறது.** ஸ்வதந்திர உணர்ச்சியுடனும், சண்டை செய்யும் நோக்கத்துடனும் இருக்கிறது. இதைப் பற்றி டிகால் ஸ்வதந்திரம் கிடைக்கும் நாளை துரிதமாகவே கவனித்து தன்னால் முடிந்தவரை முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். ‘சண்டை செய்யும் பிரான்ஸ்’ என்று மிஸ்டர் சர்ச்சில் பிர்ஹாகிமில் சண்டை செய்த பிரெஞ்சுப் படையைப் பற்றி சொன்னார். அதையே டிகால் தனது இயக்கத்தின் பெயராகக் கொண்டிருக்கிறார். இனிமேல் அப்பெயருடன் அது வழங்கப்படும்.

பாஸ்டைல் (Bastille) தினத்தைக் கொண்டாடுவதற்குத் தனது மக்களுக்கு அறிவித்துவிட்டு திங்கட்கிழமை டிகால் ரேடியோவில் ஒலிபரப்பியதாவது:—

‘பிரான்ஸ் இன்னும் ஜீவனுடன் கூடியிருக்கிறது. கஷ்டங்கள் அதைக் குலைக்கவில்லை, ரகசியமாக பலம் பெற்று வருகிறது. ஜெர்மானியர் பின்வாங்கி, நேசநாடுகள் பிரான்ஸில் புகுந்து எதிரிகளை ஒழித்ததும் பூராநாடும் எதிரியைச் சிதைக்க முயலும்.’

வி வி வி வி வி வி வி

**மதத்தைக் கெடுப்பது.** எட்டாவது நூற்றாண்டைச் சார்ந்த ஜப்பானிய புத்த சன்யாசியின் சிலையை நான்கிங்கில் ஜப்பானியர் திறந்துவைத்தனர். தாய்லாந்திலும், பர்மாவிலும் புத்த மதத்தின் ‘ஹீனயானக்’ கொள்கைகளைத்தான் தழுவுவது. ஜப்பான் இதைத் தள்ளும்படி செய்துவிட்டது. சென்ற வருஷம் மே மாதத்தில்தான் ஹீனயான வகுப்பின் வேஸக் (Vesak) கொண்டாட்டத்தை ஜப்பான் கொண்டாடியது. இக்கொண்டாட்டம் ஸிலோன், பிரெஞ்சு இந்தோ-சைனா, பர்மா, தாய்லாந்து முதலிய இடங்களில் சகஜம். தற்சமயம் இது ஸர்வதேச புத்தமதச் சங்கத்தினிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. சைனா, தாய்லாந்து, பிரெஞ்சு இந்தோ-சைனா முதலிய இடங்களில் புத்தமதப் பிரசாரம் ஜப்பானிய அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டு ஜப்பானிய புத்தமதச் சங்கத்தினிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. படிப்பு இலாகா, யுத்த இலாகா, அயல் நாட்டு இலாகா மந்திரிகளுக்கு புத்த சன்யாசிகளின் செய்கைகளைக் கண்டிக்கும் அதிகாரம் இருக்கிறது. 1939-ல் அமுலுக்கு வந்த மதக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி படிப்பு இலாகா மந்திரிக்குத்தான் மேல் பார்க்கும் அதிகாரம். ஸா. ஜப்பானிய புத்தமதச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு ஹியகசல், அமாய், நான்கிங் இங்கிருக்கும் சைனியத்தின் ஒரு பகுதிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே புத்தமதப் பிரசாரம் என்பது அரசியல் பிரசாரமாகிவிட்டது.

இதோடுமட்டுமில்லை. இஸ்லாம் மதத்தைக் காப்பதாகவும் ஜப்பான் சொல்லி வருகிறது. கிழக்கு மெக்காவாக டோக்கியோவைச் செய்யவும் நினைத்திருக்கிறது. மத்திய சைனா, தெற்குக் கடல்கள் இங்கெல்லாம் முகம்மதிய மதத்தைப் பிரசாரம் செய்கிறது. 1938-ன் ஆரம்பத்தில் பெகிங் நகரில் அகில சைனா முகம்மதிய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. சைனா, மஞ்சுகோ, ஜப்பான் முதலிய நாடுகளை ஒன்று சேர்ப்பதுதான் அதன் நோக்கம். அதுவும் ஜப்பானிய சைனியத்தின் முயற்சி தான்.

இஸ்லாம் மதத்திற்கும் ஜப்பானுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. அரசியல் நோக்கங்களுக்காக மதத்தை உபயோகித்து வருகிறது. ஜப்பானுக்குச் சாதகமாக ஐந்தாம்படையினரை உண்டுபண்ணுவதுதான் கருத்து.



**துர்வாஸிகளின் ஆட்சி.** ஜெர்மனியில் இப்பொழுதுள்ள நிலைமையைப் போல் அத்தேச சரித்திரத்தில் இதுவரையிருந்ததில்லை. ஹிட்லர் ஆட்சியில் அவனுடைய சிநேகிதர்கள், போதகர்கள், அவன் கீழுள்ளவர்கள் யாவரும் நேர்மையான முறைப்படி நடக்காதவர்கள் தான். இந்த யுத்த சமயத்தைத் தவிர மற்ற வேறெந்த சந்தர்ப்பத்திலும் அவர்கள் ஜன சமூகத்திலிருந்தே விலக்கப்படுவார்கள்.

இதற்கு சில உதாரணங்கள் இங்கு குறிப்பிடுவோம்:—ஜெர்மன் அரசாங்கத்தில் ஹாம்பர்க்கில் இப்பொழுதுள்ள முக்கிய உத்தியோகஸ்தரான காப்மான் (Kaufmann) என்பவன் இதற்கு முன் திருடனாயிருந்தவன். நார்வேயின் முக்கிய உத்தியோகஸ்தரான டெர்போவன் என்பவன் ஒரு பெரும் காமி. அவன் ஒரு சமயம் பள்ளியில் படிக்கும் ஒரு பெண்ணை தன்னுடைய சிநேகிதனின் மகள் என்றும் பாராமல் மானபங்கம் செய்தான். பவேரியாவின் உள்நாட்டு மந்திரியான அடால்ப் வாக்னர் (Adolf Wagner) என்பவன் ஒரு பெரிய குடிகாரன். சென்ற யுத்தத்தில் அவன் தலையில் ஒரு சிறு குண்டு தைத்தது. அது இன்னும் எடுக்கப்படவில்லை. ஹிட்ரீச் லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவன். கோயரிங் சதாகாலமும் மருந்து சாப்பிட்டுக்கொண்டே இருப்பான். ருமேனியாவிலுள்ள ஜெர்மன் மந்திரி, கில்லிங்கர் ஏராளமாகக் கொலை செய்யத் தூண்டியோ, அல்லது நடத்தியோ வந்ததில் முதல்தரமானவன். ரோயம் ஹீனஸ், இன்னும் அவனைப்போல் அநேக உத்தியோகஸ்தர்கள் யாவரும் காம விகாரம் பூண்டவர்கள். போலந்து கவர்னர் பிராங்க் (Frank)கும், டாக்டர் வொண்டலரும் ஏற்கனவே வக்கீல்களாக இருந்தவர்கள். அவர்கள் அத்தொழிலில் அயோக்யத்தனமாக நடந்து கொண்டதால் வக்கீல்கள் சங்கத்திலேயே இவர்கள் இகழப்பட்டார்கள். பிராங்க் (Frank)குக்கு அவன் தகப்பனார் வேலைபண்ணி வைத்தான். அவன் இதற்குமுன் வக்கீல் தொழிலில் அவனிடம் ஒப்புவித்த பணங்களைத்திருடிய குற்றத்திற்காக அத்தொழிலிலிருந்து நீக்கப்பட்டவன். இப்பொழுது போலந்தில் உயர்ந்த உத்தியோகஸ்தரான ஹூல்வெய்ஸ்லிபேன் இதற்குமுன் மூனிச்சில் பொய் நாணயங்களைக் கையாளுபவன் என்ற கெட்ட பெயர் அவனுக்கு உண்டு. அவனுடைய முன்னோர்கள் பிரஷ்ய சைனியத்தில் சேர்ந்தவர்கள். வில்ஹெம்க்ரூப் பிராண்டன்பர்க்கிற்கு தலைவனாக இருந்தான், ஸர்க்கார் பணத்தை கொள்ளையடித்த குற்றத்திற்காக அவன் தன்னுடைய வேலையை ராஜினாமா கொடுக்க நேர்ந்தது. ஆஸ்லண்டிலுள்ள பெரிய உத்தியோகஸ்தரான ஷூரிசிலோஸ் ஒரு பெரிய குற்றம் செய்தவன். நாஜி ஜெர்மனியின் வாழ்த்தை பாடிய ஹார்ஸ்ட் வெஸல் (Horst Wessel) என்பவன் இதற்குமுன் ஹீனமான தொழிலை நடத்தியவன்.

---

## இந்திய ஆகாய விமானப் படைக்கு கிளாஸ்டர் கோமகனின் பாராட்டு.

---

### அதற்கு கௌரவச் சின்னங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

இந்திய ஆகாய விமான சட்டப் பிரகாரம் இந்திய ஆகாய விமான ஸ்தாபனம் முதன்முதலாக 1933-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் இந்தியா இந்தியப் படைப்பகுதிகளின் பொறுப்பேயாகும். இந்திய விமானப் படை தயாராகி 10 வருஷங்களே யாகினும், அதிகப் பிரக்யாதி யடைந்துவிட்டது. பிரிடிஷ் விமானப் படையின் ஆதரவின்கீழ் ஆரம்பத்தில் ஒரு படைப் பகுதியாயிருந்து இப்பொழுது ஏராளமான படைப் பகுதிகள் தயாராகிவிட்டன. 1937-ம் வருஷத்தில் வாஸிரிஸ்டான் என்ற இடத்தில்தான் முதன் முதலில் நடவடிக்கைகளில் கலந்து கொண்டது. இப்பொழுது நடக்கும்

யுத்தத்தில் இந்தியாவைச் சுற்றியுமுள்ள கடற்கரைகளையும், வடமேற்கு எல்லைப் புறப் பிரதேசங்களையும் அது பாதுகாத்துவருவதுமன்றி பர்மாவில் நடந்த போரில் அரும் பெரும் சேவை புரிந்தது.

சென்ற ஜூலைமீ 12ல ஞாயிற்றுக்கிழமை யன்று க்ளாஸ்டர் கோமகன் இவ் விமானப் படையைப் பார்வையிட்ட பொழுது, அப்பகுதிக்கு மிகவும் கௌரவம் வாய்ந்த சின்னங்களைப் பரிசாக அளித்துவிட்டு அடியில் கண்டவிதமாக புகழ்ந்து பேசினார் :—

“இந்திய விமானப் படையின் கௌரவச் சின்னங்களை வழங்குவதற்கு எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் குறித்து நான் சந்தோஷமடைகிறேன். உங்களுடைய ஆகாய விமானப் படையின் சரித்திரம் சுருக்கமானதுதான். ஆனால் வடமேற்கு எல்லைப்புறத்திலும், பர்மாவிலும் உங்களுடைய நடவடிக்கைகள் மற்ற தேசதேச ஆகாய விமானப் படையின் நடவடிக்கைகள் போல் மகத்தானவையாக இருக்கிறது. நமது கப்பல் போக்குவரத்துக்குத் துணையாகவும், எதிரிப் படைகளையும், எதிரியின் நீர்மூழ்கிக் கப்பல்களையும் வேவு பார்த்து வரும் சேவைகளிலும் உங்கள் சமுத்திரக்கரைப் பாதுகாப்புப் படை அரும் பெரும் வேலை செய்திருக்கிறது.

“இப்பொழுது உங்கள் படைப் பகுதிகள் விஸ்தரிக்கப்படும் நிலைமையிலும், மறுபடியும் புதிய விமானங்களுடன் பூர்ண முஸ்தீப்பும் பெரும் நிலைமையிலும் இருக்கின்றன. உங்களோடு மற்ற தேசதேச விமானப் படை பகுதிகளும் சேர்க் கப்படப்போவதும் நானறிவேன். இந்தியத் தரைப்படை எப்படி அதன் நீண்ட கால தேசசரித்திரத்தில் அடிக்கடி புகழ் பெற்றிருக்கிறதோ அதைப்போல் நீங்களும் கௌரவமாகவும் பெருந்தன்மையாகவும் நடந்துகொள்வீர்கள். இந்த கௌரவச் சின்னங்களை உங்களிடம் கொடுத்து, அவைகளை வைத்துக்கொள்ளும்படி செய்வதில் இந்திய விமானப்படைபலத்தின் உணர்ச்சிக்கும், எனது சகோதரரான, மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியும், இந்தியாவும் உங்களிடத்தில் வைத்திருக் கும் நம்பிக்கைக்கும் தகுந்தவாறு நீங்கள் நடப்பீர்கள் என்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது.”

## ஸ்வதந்திரத்தில் கூட்டுறவு.

### இந்தியா, பிரிடிஷ் சாம்ராஜ்யம் இவைகளைப்பற்றி Mr. அமெரி.

இந்தியாவை அரசாளும் விஷயத்தில் பிரிடன் பொதுவாகக் கொண்டுள்ள லக்ஷியங்களுக்காக முயற்சிக்கவில்லை என்று ஒரு குறைகூறப்படுகிறது. இதை பிரிடிஷ் மக்களும் பலர் நம்பியிருக்கின்றனர். அடுத்தபடியாக ஐரோப்பாவில் ஸ்வதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்காக நாம் சண்டை செய்தும் அவ்விரண்டையும் இந்தியாவுக்கு அளிக்க மறுப்பதாயும் சொல்லப்படு கிறது. மேலும் ஜெர்மனி ஜப்பான் இவைகளின் ஆக்கிரமணத்தை அடக்க நாம் முயற்சியெடுத்துக்கொண்டும், இந்தியாவிலுள்ள நமது ஆளுகையை எடுக்க மறுப்பதாயும் சொல்லப்படுகிறது. இவையாவும் பிரிடன் பேரில் சாட்டப்படும் ஒரு குற்றமாகும்.

அடுத்தபடியாக மற்றொரு குறை சொல்லப்படுகிறது. இந்தியாவுக்கு தற்சமயத்தில் பூரண ஸ்வதந்திரத்தைக் கொடுக்க நாம் விரும்புவதாகச் சொல்வோம். அப்படிச் சொன்னால் கொஞ்ச காலத்திற்கு முன்னே ஸ்வதந்திரம் கொடுக்கவேண்டியிருந்தும் அப் பிசகை இப்பொழுதுதான் நாம் உணர்ந்திருப்ப தாகவும், அல்லது இந்தியாவை அரசாளுவதற்கோ, பாதுகாப்பு செய்வதற்கோ, முடியாமலிருப்பதால் நாம் இந்தியாவுக்கு ஸ்வதந்திரம் கொடுக்க சித்தமாய்



இருப்பதாயும், அல்லது இந்தியாவை அணுகியிருக்கும் ஆபத்தை முன்னிட்டு அதற்கு ஸ்வதந்திரத்தைக் கொடுத்துவிடலாம் என்று நாம் நினைப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவையாவும் நமது கௌரவத்திற்கு ஹானி விளைவிக்கும் அபிப்பிராயங்களேயாகும்.

இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் ஸ்வதந்திரத்தைக் கொடுக்காத போதிலும், ஸ்வதந்திரத்தை அடைவதற்கான சந்தர்ப்பத்தை அளிக்காமலிருந் தாலும், அராஜரீக முறை இல்லாதபடி செய்யப்பட்டிருக்கிறது.

### சட்ட முறை.

இந்தியா எக்கண்டத்திலும் சமாதானம், அமைதி ஏற்படும்படியாகச் செய்யப் பட்டிருக்கிறது. ஸ்வதந்திரத்திற்கு இவை அடிப்படையான அம்சங்களாகும்.

இதைக் காட்டிலும் ஸ்வதந்திரத்தை பெறவேண்டுமென்ற உணர்ச்சி இந்தியா வில் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது, நாம் அவ்வித ஸ்வதந்திரத்தை சந்தோஷத் துடனேயே கொடுப்போம். அப்படிச் செய்வதில் ஸ்வதந்திரத்திற்கு அடிப்படை யான அம்சங்களைக் கெடுக்காமலும், அமைதி கெடாமலும் இருப்பதற்குத் தகுந்த படி ஒரு அரசாங்க முறை கொடுக்கப்படும். அதைக் கொண்டு தேசிய வாழ்க்கையை நன்கு அமைத்துக்கொள்ளலாம். இது எப்பொழுது சாத்தியமென்பதுதான் பிரச்னை. திடீரென்று கொடுத்துவிடுவது கூடாது, அதற்குத் தகுந்தபடி அரசாங்க ஸௌபுண்யமும், நல்லெண்ணமும் ஏற்பட்டவுடன் இவ்விதம் ஸ்தாபிக்கப் படும்.

### அஸ்திவாரம் ஏற்கனவேயே போடப்பட்டது.

ஒரு தலைமுறையாகவே நாம் நம்மாலானதைச் செய்துவருகிறோம். இனி இந்தியர்கள்தான் முன் வரவேண்டும்.

அஸ்திவாரத்தை நாம் போட்டுவிட்டோம். அவர்களுக்குத் தகுந்தபடி திட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்தியர்களுடையது.

இந்த முறைகளை அமைக்கும்பொழுது நாம் நமது இயற்கை குணங்களான அமைதி, சட்டதிட்டத்திற்கு அடங்கியிருப்பது, ஸ்வதந்திரத்தில் நம்பிக்கை, வாஸ்தவமான சம்பவங்களின் அநுபவம் இவைகளுக்குத் தகுந்தபடி நாம் நடந்து கொண்டிருக்கிறோம். இந்தியாவுக்கு நாம் இதுவரை செய்திருக்கும் தன்மையைப் பற்றியும், இனி செய்யப் போவதாயிருப்பதைப் பற்றியும், இந்தியா வின் உதவியைக்கொண்டு இந்த யுத்தத்தில் வெற்றிபெற்று அதன் மூலம் இந்தி யாவுக்கு ஸ்வதந்திரத்தைக் கொடுத்து அதன் நட்பை அடையும் விஷயத்திலும் நமக்கு அதிக கௌரவம் ஏற்படுகிறது. எப்படியிருந்தாலும் நாம் ஏற்கனவே யுத்தத்தில் ஸ்வதந்திரம் கொடுக்காமல் தவறுதல் செய்துவிட்டதாகவும், தோற்றுவிடுவோம் என்றும் நாம் குறைகூறிக்கொள்ள வேண்டாம். ஆனால் பிரகிருதமுள்ள இந்தியர்களின் முன்னேற்றமும், ஸ்வதந்திர மக்கள் நிரம்பிய பிரிடிஷ் சாம்ராஜ்யமும் ஒன்றுசேர்ந்து, ஸ்வதந்திரத்தை எங்கும் ஸ்தாபிப்ப தற்கான முறையில் நடந்துகொள்ளுவோம். இருநாடுகளுக்கும் அதிக ஒற்றுமை ஸ்தாபிக்கப்படும்.

## சிலோன் ஜாக்கிரதையாகவே இருக்கிறது. தாக்கப்பட்டால், அது மால்டா தீவைப்போலவே சமாளித்து நிற்கும்.

(இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியா பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

ஏற்கனவே சிலோன் சுறுசுறுப்பில்லாமல் தூங்கி விழுந்துகொண்டிருந்தது. பிரயாணக் கப்பல்கள் வந்தால் நிலக்கரி எடுத்துப்போவதற்குமட்டும் அவைகள் அங்கு தங்கும். மேலும் அங்கு தேயிலை, ரப்பர் வியாபாரம் மிகவும் மழமழப் பாக நடந்துவரும். ஆனால் ஜப்பானியர்கள் அதைக் கைப்பற்ற நோக்கம்

கொண்டதினால் உலகச் செய்திகளில் சிலோனின் பெயர் திடீரென்று வெளி வந்தது. இப்பொழுது நேசதேசத்தார்களின் கிழக்குப்பக்கம் தாக்குதலுக்கு இதைத் தளமாக வைத்துக்கொள்ள வேண்டுமாதலால் அது மர்ம ஸ்தானமாகக் கருதப்படுகிறது. அதன் பொருளாதார முக்கியத்வமும் திடீரென்று தெரிந்து கொள்ளப்பட்டது. தினசரி பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் அதன் பெயர் வருவதிலிருந்தே அதன் முக்கியத்வம் தெரியவரும். அங்கு பழைய பழக்க வழக்கங்களெல்லாம் மாறிவிட்டது. தற்போது ஒரு புதிய உணர்ச்சி சிலோனில் ததும்புகிறது. முந்திய வருஷங்களிலிருந்த ஓய்வும், வேலையின்மையும் போய் விட்டது.

முழுபலத்துடன் ஜப்பான் படையெடுத்தால் சிலோன் எவ்விதம் சமாளிக்க முடியும்? இரண்டு வருஷத்திற்கு முன்னால் சமாளிப்பதற்கு ஒருவித சந்தர்ப்பமுமில்லை. ஒரு வருஷத்திற்கு முன்னால், அப்பொழுதும் ஒன்றுமில்லை. ஆனால் இப்பொழுது எல்லா சந்தர்ப்பங்களுமிருக்கின்றன. வெள்ளைக்கலைக்காக மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ராணுவ முஸ்தீப்பே இல்லாதிருந்த நிலைமையில் இமர் என்று பூராவும் தற்காப்புள்ள நாடாக ஆய்விட்டது.

விமான எதிர்ப்பு பீரங்கிகள் அங்கு வைக்கப்பட்டிருப்பது அடிக்கடி ஞாபகம் மூட்டப்படுகிறது. அநேக நாட்களில் காலை நேரங்களில் விமான எதிர்ப்பு பீரங்கிகள் வெடிப்பதைக் கேட்கலாம். இந்தப் பயிற்சிகளில் ஏற்படும் சப்தம்கூட பயங்கரமானது. கனமான பீரங்கிகளும், லேசான பீரங்கிகளும், சாதாரண யந்திரத் துப்பாக்கிகளும், சிறு துப்பாக்கிகளும் எல்லாம் சேர்ந்து இடி போன்ற சப்தத்தை உண்டாக்குகின்றன.

## பாம்பர்களும், பைடர்களும்.

பாம்பர் படைப்பகுதிகளும், பைடர் படைப்பகுதிகளும் அங்கு இருக்கின்றன. ராணுவ வீரர்களை ஏற்றிச் செல்லும் லாரிகள் ரஸ்தாவில் போய்க் கொண்டிருக்கின்றன. அவை எங்கேயிருந்து வருகின்றன, எப்படிப் போகின்றன என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனால் இங்கு விமானங்கள் இருக்கின்றன. லாரிகளும் உண்டு. இவற்றை உபயோகப்படுத்த பொறுக்கியெடுத்த மனிதர்களும் இருக்கிறார்கள். இவ்விஷயங்கள் தெரிந்தவருக்கு ஒருவித மனோ வேதனையுமில்லை.

இவ்வித மாறுதலை ஆரம்பித்தவர் இன்ஸ்கிப் என்பவர். ஆரம்பகாலத்தில் அவருக்கு ஆதாரமாக அவரிடம் ஆங்காங்குள்ள சுதாயாகச் சேர்ந்த படைவீரர்கள் கூட்டமும், பிரிடிஷ் வீரர்கள் கூட்டமும்தான் இருந்தன. ஆனால் இந்தியாவிலுள்ள ரிஸர்வ் படைகளே அவர்களுக்கு அநுகூலமாகயிருந்தன. ஏற்கனவே நிலையாகவுள்ள தற்காப்பு இடங்கள் நவீன முறையில் அபிவிருத்தியடைந்தன. ஸப்ளை, போக்குவரத்து பிரச்னைகளைக் குறித்து விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. ரஸ்தாக்கள் வழியாக முதன்முதலாக அனுப்பப்பட்ட டிராக்குகள், லாரிகள் யாவும் வந்துசேர்ந்தன.

ஆகாய விமான தற்காப்புகளும் கவனிக்கப்படாமல் இல்லை. இதுவரையில் பிரிடிஷ் விமானப்படை சிலோனை எப்பொழுதாவது வந்து தங்கிப்போகக்கூடிய தளமாகக் கருதி வந்தது. ஆனால் இவையெல்லாம் சீக்கிரம் மாறிவிட்டது. முதன்முதலாக பைடர்களும், பாம்பர்களும் வரும்படி நேரிட்டது. விமான நிலையங்கள், விமானமிறங்குமிடங்கள், அவசரத்திற்கு இறங்கவேண்டிய இடங்கள் இவைகள் யாவும் வெகுதுரிதமாகக் கட்டப்பட்டன. தொழிலாளிகளின் கூட்டங்கள் அல்லும் பகலும் வேலை செய்தன.

மலேயாவிலும், ஜாவாவிலும், பர்மாவிலும் யுத்தம் நடந்ததால் கஷ்டகாலம் வர நேரிட்டது. மூன்றுவித படைகளின் ஒத்துழைப்பினால் ஏற்படக்கூடிய பயன்களைச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. விமானப்படை, தரைப்படை, கப்பற்படை இம்மூன்றுக்கும் கட்டளையிடக்கூடிய மேலான தலைவர் ஒருவர் அவசியமென்பது அப்பொழுதுதான் தோன்றிற்று. ஸர் ஜாப்ரே லெயிட்டன் என்பவரைத் தலைவராக நியமிக்கப்பட்டது எதிர்பார்த்ததுதான். சிலோன் வாசிகளுக்கு அவரைத்



தெரியாது. ஆனால் இன்ஸ்கிப்பின் புகழத்தக்க வேலையினால் அவர் வந்திருப்பது எல்லோருக்கும் தெரியவந்தது.

அதிகார தோரணைகளுக்கு இடங்கொடுக்காமல் கப்பற்படை, தரைப்படை, ஆகாயப்படை இவைகளை விஸ்தரிக்கச்செய்ய அவர் உணர்ச்சி காட்டியதால் அந்தப் புதிய தலைவர்பேரில் யாவருக்கும் அதிக நம்பிக்கை ஏற்பட்டது. சாமான்கள் வந்துகுவிய ஆரம்பித்தன. முந்தின கோட்டையைக் காக்க இருந்த படைகளுடன் கனடியர்களும், இந்தியர்களும், ஆபிரிக்கர்களும்கூட வந்துசேர்ந்தார்கள். எல்லா விஷயங்களும் அதிவேகத்துடன் செய்யப்பட்டன. இடவசதிகளும், போக்குவரத்து சாதனங்களும் தேடப்பட்டன. இதற்குமுன் இங்கிலாந்தைத் தவிர கோட்டைபோல் இருக்கும் தீவு வேறு ஒன்று கிடையாதென்று எண்ணினார்கள். இப்பொழுது தூங்கிக்கொண்டிருந்த சிலோன் தீவு ஒரு பெரிய கோட்டையாக மாறி விட்டது. அங்கு யுத்த வீரர்களும், யந்திர சாதனப்படையும் குழுமியிருக்கிறார்கள்.

## சோதனை நேரம் வந்தால்?

சோதனை? ஞாயிற்றுக்கிழமை ஏப்ரல் 5-ம் தேதி கொழும்பில் ஜப்பானிய விமானத் தாக்குதல்கள் ஏற்பட்டது. 25 எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன. வியாழக்கிழமை ஏப்ரல் 9உ திரிகோணமலையில் ஜப்பானிய விமானத்தாக்குதல். 21 எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன.

சிலோனுக்கு இயற்கையாகத் தற்காப்பு சாதனங்கள் இல்லை. சமுத்திரக் கரையோரத்தில் குன்றுகள் கிடையாது. எதிரிகளை வஞ்சிக்கக்கூடிய சதுப்பு நிலங்கள் இல்லை. சாதாரண சமயங்களில் சமுத்திரக்கரையில் எந்த இடத்திலும் கப்பல்கள் வந்திறங்கலாம். ஆனால் சாதாரண சமயங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுதோ எதிரி கோஷ்டி எங்கே வந்தாலும் அதற்குத் தக்க கடூரமான தாக்குதல் ஏற்படும்.

ஜப்பானியர்கள் தனித்து மேற்றிசைக் கப்பற்படையையும், கிழக்கிந்தியத் தீவு கப்பற்படையையும் எதிர்த்து, ஏதாவது காட்டுப்புறத்தில் வந்திறங்குவார்கள் என்று விவகாரத்திற்காக நாம் நினைத்தாலும், முக்கியமான பட்டணங்களை அவர்கள் ஆக்கிரமிப்பதினால் ஏராளமாகவும், கடுமையாகவுமுள்ள கஷ்டங்களுக்கு ஜப்பானியர்கள் உள்ளாகாமலிருக்க முடியாது.

பர்மாவிலும், மலேயாவிலும் போலில்லாமல் இங்கு ஐந்தாம் படையினர்களும், அவரவர்களுக்குத் துணைகாட்டிகளும், மொழிபெயர்ப்பவர்களும் கிடைக்கமாட்டார்கள். சிலோன் நாட்டுவாசிகள் நிற்சந்தேகமான தேசபக்தியுள்ளவர்கள். ஆகையால் ஜப்பானியர்களுக்கு வழிகாட்டிகள் கிடைக்கமாட்டார்கள். நாடு விவரம் தெரியாமல் தத்தளிக்கும் எதிரிகள் அந்த நாட்டை நன்றாகத் தெரிந்திருக்கக்கூடிய யந்திர சாதனப்படை வீரர்களுக்கு சுலபமாக இரையாவார்கள்.

படைகளுக்கு ஆள்சேர்க்கும் சாலைகளில் தினசரி கூட்டம் அதிகம். சிங்களவர்கள், தமிழர்கள், (Burghers) பர்க்கியர்கள், மலேயாக்காரர்கள் எல்லோரும் இந்தப் பொதுவான சண்டைக்காகத் தானாகவே வந்து போர்செய்கிறார்கள். சில இடங்களில் குடும்பங்கள் பூராவுமே யுத்தத்தில் சேர்ந்திருக்கின்றன. சிலோனுக்குக் கட்டாயமாக ஆள்சேர்ப்பதில்லை. மிக்கத் திறமை வாய்ந்த விமான பாதுகாப்பு ஸ்தாபனம், பொதுமக்கள் தற்காப்பு முறையை போதுமான அளவு பார்த்துவருகிறது. இன்னும் ஒன்றும் தேவையில்லை. விமானங்கள் தயார், பீரங்கிகள் தயார், மனிதர்களும் தயார்.

இந்த விஷயங்களைப் பார்ப்பதில் உண்டாகும் தோற்றங்களை விட்டுவிட்டு விஷயத்தை மட்டும் ஆராய்ந்து பாருங்கள். ஆங்காங்குள்ள தண்டு துறைகளெல்லாம் நிலை நிற்க ஆரம்பித்துவிட்டன. அந்தத் தீவிலுள்ளவர்கள் ஒற்றுமையாகவும், தடையின்றியும், வெற்றிகரமாகவும் போர் செய்யத் தயாராக இருக்கிறார்கள். சிலோனைவிடாமல் உயிருள்ளவரை பாதுகாக்கவேண்டியது அவசியம். ஆமாம். கடைசி வரையில் அவர்கள் அசைவிடாமல் போர் செய்வார்கள்.

# ஹிட்லரின் முடிவான முயற்சி.

(விகாம்ஸ்டீட் எழுதியது).

இப்போது நடக்கும் யுத்தத்தையும் கடந்த மகா யுத்தத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து பல ஜோஸியங்கள் சொல்லப்பட்டன. அவையாவும் தப்பானதாகவே காணப்படும். உபமானமாகச் சொல்லுவதைக் காட்டிலும் ஒரேவிதமான சம்பவங்கள் நடக்கிறதாகவே சொல்லலாம். அதாவது வட ஆபிரிக்காவிலும், ருஷ்யாவிலும் தற்சமயம் செய்யப்பட்ட ஜெர்மன் தாக்குதலும் 1918-ம் வருஷம் மார்ச்சுமீ முடிவில் லுடன்டார்ப் செய்த பெரிய தாக்குதலும் ஒரு மாதிரிதான். ஏனென்றால் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஜெர்மானியர் முடிவாக ஒரு முயற்சிசெய்து பார்த்துவிட வேண்டுமென்று நினைத்தனர்.

பிரான்ஸிலுள்ள பிரிடிஷ் அணிவகுப்பினுள் லுடன்டார்ப் புகுந்து பாரிஸுக்கு 60 மைல் அருகிலும் வந்தான்.

1918-ம் ௵ ஜூலைக்குள் பாக் (Foch) வெற்றிகரமாகக் குறுக்கு எதிர்ப்பைச் செய்ய முடியவில்லை. இதற்கு ஆறு வாரங்கள் கழித்து லுடன்டார்ப்பும் ஹின்டன்பர்க்கும் சமாதானத்தைக் கோரினார்கள்.

ஆனால் சென்ற யுத்தத்தைப்போல் இந்த யுத்தத்தில் சம்பவங்கள் துரிதமாக நடைபெறா. இருந்தாலும், ஒரே பக்கமாகவும் அதே காரணத்தை முன்னிட்டும் நடக்கும். அந்த யுத்தத்தில் ஐரோப்பாவில் அமெரிக்கர்களின் பலம் விருத்தியடைந்ததால் தான் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டது. இந்த யுத்தத்திலும் ஜெர்மனியின் ஆசைகளை அழித்து அமெரிக்கா இன்னும் அதிகமாகவே பலம் அடைந்திருக்கிறது. வெற்றியும் ஹிட்லரின் கைக்கு எட்டாதபடி செய்யப்பட்டிருக்கிறது. ருஷ்யாவிலும், ஆபிரிக்காவிலும் நமக்குக் கிடைக்கும் தோல்விகளால் எதிரியின் முடிவான தோல்வி கொஞ்சம் தாமதப்படுகிறது. அவ்வளவுதான். மற்றபடி சிறு தோல்விகளால் பாதகமில்லை.

ஹிட்லருக்குத் தற்சமயத்தில் எல்லாம் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. இரண்டாவது ருஷ்ய மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு இன்னும் மூன்று மாதங்கள் தான் இருக்கின்றன. மத்தியகிழக்கு, காகஸஸ் இவைகளை நோக்கி செய்யப்பட்டிருக்கும் பின்ஸர் படையெடுப்பு பலிக்கவேண்டுமானால் தற்சமயத்திலும் இனிமேலும், அவன் வெகுபாடுபடவேண்டும்.

அவனுக்கு ஆட்களின் தேவை மிக அதிகமாக இருக்கிறது. பிரெஞ்சு வேலைக்காரர்களை ஜெர்மன் தொழிற்சாலைகளில் நியமித்து அங்கிருக்கும் ஜெர்மானியரை அழைத்துச்செல்ல நினைத்திருக்கிறார்கள். ஸெபாஸ்டபூல், கார்கவ், லிபியா, எகிப்து முதலிய இடங்களில், அடைந்த மனித நஷ்டத்தை ஈடுசெய்வதற்கான சாதகம் ஏற்படவில்லை.

மீதமுள்ள தனது படைகளெல்லாவற்றையும் கிழக்கே சேகரிக்கவும் இனி முடியாமல் போகும். மேற்கேயோ பலமான தாக்குதல்கள் நம்மால் செய்யப்படும்.

---

# ஐரோப்பாவிலுள்ள ரகசியப் பத்திரிகைகள்.

நாஸிகளின் கொடுங்கோல் ஏற்பட்டு இரண்டு வருஷங்களானாலும் ஆங்காங்கு இருப்பவர்களின் ரகசிய எதிர்ப்புகள் அடக்கப்படவில்லை. வரவர அதிகமாகிக்கொண்டே போகிறது.

ஐரோப்பாவிலிருந்து ரகசியமாக வரும் பத்திரிகைகளிலிருந்தும் இவ்விஷயம் புலப்படுகிறது. அப்படி வரும் பத்திரிகைகள் யாவும் அநுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் நன்றாக எழுதப்பட்டி



ருக்கின்றன. சிறிய பையன்கள் மூலமாக இப்பத்திரிகைகள், ஜெர்மன் ரகசியப் போலீஸார் வசம் அகப்படாமல் கொண்டுவரப்படுகின்றன. ரகசியமாகத் தபால் பெட்டிகளில் போடப்பட்டு வெளிநாடுகளுக்கு வந்து சேருகின்றன.

## பிரான்ஸ்.

பிரான்ஸில் ரகசியப் பத்திரிகைகள் திட்டமாகவே பிரசுரிக்கப்படுகின்றன. பாண்டாக்ருயல் (Pantagruel) என்பது ஒன்று. "இது விலைக்காக ஏற்பட்டதல்ல. காசு கொடுத்து இதை ஒருவரும் வாங்கக்கூடாது" என்று அதன்மேல் எழுதப்பட்டிருக்கும். பிரிடிஷாருக்குச் சாதகமான விஷயங்கள்தான் அச்சிடப்படும். ஜெர்மானியர் படையெடுத்ததால் நேர்ந்த பயன்களைச் சரியான விவரங்களைக் கொடுத்து நிரூபிக்கிறது.

மனதைக் கவரும் தலையங்கங்களும் அச்சிடப்படுகின்றன. "ஹிட்லரின் 1941 வஸந்த காலத் தாக்குதல் பெல்கிரேடை நோக்கி செய்யப்பட்டிருக்கிறது. பெல்கிரேட் என்பது ஐரோப்பாவிலல்லவா இருக்கிறது! இங்கிலாந்தின் தலைநகரமல்ல! ஹிட்லரின் புதிய திட்டத்திற்கு மீண்டும் தடை! பெல்கிரேட்டிற்கும், ஏதென்ஸுக்கும் ஜெர்மானியர் போவது நலம். லண்டனுக்குப் போகக்கூடாது!" என்றெல்லாம் அப்பத்திரிகையில் காணப்படும். பெர்லினில் பாதுகாப்பு ஸ்தலத்தில் அமைக்கப்பட்டுள்ள படுக்கை வசதிகளைப்பற்றி பெர்லின் பத்திரிகையில் காணப்பட்ட தகவலைப்பற்றி "ஜெர்மானியர் சுரங்க அறைக்குள் ஏன் இருக்கவேண்டியிருக்கிறதோ நமக்குத் தெரியவில்லை!" என்னும் பரிகாசமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரதியிலும் "விழித்துக்கொள்ளுங்கள்! ஸ்வதந்திரம் நீடூழி வாழ்க, ஸ்வதந்திர பிரான்ஸ் நீடூழி வாழ்க!" என்று காணப்படும். வால்மி என்ற மற்றொரு பத்திரிகை அச்சிடும் வசதி இல்லாததால், டைப் அடிக்கப் (Sten cilled) பட்டிருக்கிறது. "நமது நாட்டில் படையெடுத்த எதிரி இன்னும் இருக்கிறான்" என்று எடுத்துச் சொல்லும். எதிரியுடன் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைச் சில வெண்பாக்களில் எடுத்துக் காண்பிக்கும். எதிரியையும், துரோகி பிரெஞ்சுக்காரர்களையும் வெறுக்கும். "பி. பி. ஸி. ஒலிபரப்பை நீங்கள் தினம் கேட்க வேண்டும். ஜெர்மானியருக்குச் சாதகமான பாரிஸ் ரேடியோவைக் கேட்கக்கூடாது. டி காலுடன் சேர்ந்துகொண்டு எதிரிகளுடன் சண்டை செய்யவேண்டும். விஷியாட்களையும், அவர்களுடைய அவமானகரமான சட்டங்களையும் மதிக்கக்கூடாது. லவால், டீட் போன்றவர்களைத் தண்டித்து, அவர்கள் அழிந்தபிறகுதான் நமக்கு சௌக்கியம் ஏற்படும்" என்று ஒரு சஞ்சிகையில் இருந்தது. வால்மியின் மற்றொரு சஞ்சிகையில் "இங்கிலாந்து முதலிய நாடுகளெல்லாம் கொடுங்கோலை ஒழித்து, புதிய உலகத்தையே நிர்மாணம் செய்வதெனத் தீர்மானித்திருக்கின்றன" என்றும் இருந்தது.

லா வாக் டி பாரிஸ் என்ற கம்யூனிஸ்டு கக்ஷியைச் சேர்ந்த பத்திரிகை 1941-ம் ௵ ஜனவரி மீ முதற்கொண்டு ருஷ்யாவுடன் ஒத்துழைக்கும்படி யாவரையும் கேட்டுக்கொண்டது. "1917 முதல் ருஷ்யா வெற்றியடைந்திருக்கிறது. ருஷ்யாவில்தான் உண்மையான ஜனநாயகம் ஏற்பட்டு, வேலையில்லாத் திண்டாட்டம், கவலை முதலியன ஒழிக்கப்பட்டுள்ளன" என்று காணப்பட்டது. ஜீன் ஜாரிஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஹுமனைட் என்ற பத்திரிகை ஹிட்லரைப்பற்றியும் அவனுடைய சகாக்களைப்பற்றியும் கோரமான படங்களை எழுதிப் பிரசித்தப்படுத்துகிறது. பிரான்ஸ் படையெடுக்கப்பட்ட தினத்தன்றே இப்பத்திரிகைக்குப் பிரசுரத் தடை ஏற்பட்டது. "பிரான்ஸின் மக்கள்" என்று தன்னைச் சொல்லிக்கொண்டு, மற்றொரு பத்திரிகை பொதுவான அரசாங்கம் தேவையென்று பகிரங்கமாக அச்சிடப்பட்டே பரவுகிறது. லவால், டோராயிட், டிலாரோகே போன்றவர்களின் ஆட்சியை நிந்திக்கிறது. இது பிரெஞ்சு கம்யூனிஸ்டு கக்ஷியின் மத்திய கமிட்டியின் சார்பாக மாரிஸ் தோரெஸ், ஜாக்ஸ்டுலோஸ் என்பவர்களால் பிரசுரிக்கப்படுகிறது. இப்பத்திரிகைகள் யாவும் பிரெஞ்சு மக்களின் மனப்பான்மையை நன்றாகத் தெரிவிக்கின்றன. ரகசியப் போலீஸார் அடக்கமுடியவில்லை. ஆக்கிரமண நாடுகளை எதிர்த்தே இவைகளின் பிரசாரம் நடந்து வருகிறது.

பெல்ஜியம்.

1914—1918-ல் ஜோதி வாய்ந்த வாலிபர் பெல்ஜிக் என்ற பத்திரிகை மறுபடி கிளம்பியிருக்கிறது. அப்போது பெல்ஜியத்தைப் படையெடுத்தவர்களைக் கண்டித்து விஷயங்களை எழுதிய மாதிரி தற்போதும் நாஸிகளுக்கு விரோதமாகவே எழுதி வருகிறது. இதன் பத்திரிகை ஆசிரியர் பீடர்பான் ஜார்டின்டி எச்மாண்டு, பிரஸ்ஸல்ஸ் என்று தனது விலாசத்தைச் சொல்லிக்கொள்ளுகிறான். நாஸிகளின் மேற், பார்வையின் அடையாளம் சில சஞ்சிகைகளில் காணப்படுகிறது. வெளிநாடுகளில் நடக்கும் பல விஷயங்கள் வியாக்கியானத்துடனேயே காணப்படுகின்றன. ஜெர்மனியில் பிரிடிஷ் விமானங்கள் உண்டாக்கிய சேதத்தின் விவரங்கள் படங்களின் மூலமாக நன்றாகக் காண்பிக்கப்படுகின்றன. மியூனிச் பாதிரியார், கார்டினல் பால்ஹபர், வான் காலன், வும் முதலியோரின் மொழிகள் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்படுகின்றன. பெல்ஜிய துரோகிகளின் செய்கைகள் கண்டிக்கப்படுகின்றன. சமீபத்தில் வெளிவந்த ஒரு சஞ்சிகையில் பிரிடிஷ் வீரர்களின் புதைகுழிகளின் படங்கள் போடப்பட்டு, பின வருமாறு எழுதப்பட்டிருந்தது. "இவர்களின் செயல்கள் மறக்கப்படவில்லை. இவர்களுக்கு அலங்காரம் முதலியன நன்றாகச் செய்யப்பட்டன. ஜூன் மீ 21ட இவர்களின் புதைகுழியின்பேரில் மூன்று வர்ணமுள்ள விகொடி பிடிக்கப்பட்டு மரியாதையும் செய்யப்பட்டது".

லே லெஸ்ரி என்பது மற்றொரு ரகசியப் பத்திரிகை. இது மாதம் ஒரு முறை வெளிவரும் "Ad Augusta per Augusta" என்ற பழமொழியை பிரதானமாகக்கொண்டு, தேசாபிமானச் சங்கத்தாரால் பிரசுரிக்கப்படுகிறது "பிரிடயர்க்குச் சாதகமாக இதுவரை நிலைமையில்லாதபோதிலும், முடிவான வெற்றி கிடைப்பது மாத்திரம் நிச்சயம். சரித்திர அனுபவத்தைப் பார்த்தால் அயோக்கியர்களுக்குத்தான் காலம்போல் காணப்படும். ஆனால், நேசநாடுகள் யோக்கியமான தன்மையைக் கொண்டும், தைவிய உதவியைக் கொண்டும் வெற்றியடைவார்கள்" என்று ஒரு தலையங்கத்தில் இருந்தது.

நெதர்லாந்து.

இங்கே மூன்று பத்திரிகைகள் வெளிவருகின்றன. எட்டு வருஷச் சண்டை முதல் ஜோதி வாய்ந்த டி கெஸ் என்பது ஒன்று. லெய்டன் ஸர்வகலாசாலை மாணவர்களால் நடத்தப்படுகிறது. விரிஜி நெதர்லாந்து, உட்டிவோஸ்டிஜின் எனபவை மற்றவை. அச்சிடப்பட்டும், டைப் அடிக்கப்பட்டும், கையினால் எழுதப்பட்டும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. லண்டன் ஒலிபரப்பு விஷயங்களும், எதிரிகளை எதிர்ப்பதற்கான புதிய வழிகளும் குறிக்கப்பட்டிருந்தன. ஜெர்மன் பாதிரிகளின் ஆபர்கவிகளும் நாஸிகளை பல இடங்களில் எதிர்க்கும் வழிகளும் இருந்தன.

செக்கோஸ்லாவியா.

ஜோஸப் ஸ்கால்டா என்பவர் மூன்று திருட்டுப்பத்திரிகைகளைப் பிரசுரப்படுத்தினார். அவரை நாஸிகள் பிடித்து ஜெர்மனிக்குக் கொண்டுவந்து தூக்கிலிட்டனர். இப்படிச் செய்து ரகசியப் பிரசாரத்தை அடக்கலாமென்று நாஸிகள் நினைத்தனர். அதற்கு மாறாக பல பத்திரிகைகள் கிளம்பின. (மீண்டும் சண்டை செய்யுங்கள்) விபாரு என்ற பத்திரிகையும் 'தேசிய விடுதலையை முன்னிட்டு வெளிவரும் செய்தி' என்ற பத்திரிகையும் முக்கியமானவை. திருட்டுத்தனமாகத்தான் இவைகள் வெளிநாடுகளுக்குப் போகின்றன.

நார்வே.

(எங்களுடைய நாடு எங்களுக்கு வேண்டும்) வி வில் ஆல என்ற பத்திரிகையை, கங்ஸ் போஸ்டன், வி-போஸ்டன், லைடன்ஸ் டென், ஸ்வதந்திர வியாபார இயக்கம் முதலிய பெயருடன் வெளிவரும் பத்திரிகைகளும் முக்கியமானவை. லைடன்ஸ் டென் என்பது ஆஸ்லோவில் முன்பு வெளிவந்த பத்திரிகைகளில் ஒன்றாகும். நாஸிகளுக்கு உட்படாததால் அச்சமயம் நின்றுவிட்டது. பிறர் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டுமென்றே பலவிதப் பெயர்களுடன் பிரசுரிக்கப்படுகின்றன. இப்பத்திரிகைகளை அச்சிட்டு அனுப்பும் விஷயத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒத்தாசை செய்கின்றனர். இவர்களை ரகசியப் போலீஸார் கண்டுபிடிக்க முடியவில்லை. ருஷ்யப் போர்முனைக்கு நார்வேகாரர்களை



சேர்க்க முடியாததற்கு நார்வேப் பத்திரிகைகள்தான் காரணம். நாஸிகளை எதிர்த்து நார்வே பாதிரிமார்கள் போராடியதற்கும், பிஷப் பெர் கிரேவ் ராஜீனாமா செய்ததற்கும் நார்வே பத்திரிகைகள்தான் காரணம்.

டென்மார்க்.

டென்மார்க்கில் ரகசியப் பத்திரிகைகள் அதிகம் இல்லை. துண்டுக்காகிதங்களும் கையினால் எழுதப்பட்டவைகளும்தான் அதிகம். நாஸிகள் கூடும் கூட்டங்களில கலகம் செய்யும்படி இவைகள் தூண்டும். இதன் பயனாக தேசாபிமானக் கக்ஷிக்கும், டென்மார்க் நாஸிகளுக்கும் சச்சரவு ஏற்பட்டு டென்மார்க் நாஸிகள் சத்துருக்களாக பாவிக்கப்படுகின்றனர். நாஸி ஆக்கிரமணத்தை எதிர்த்து பிரசாரம் செய்வோர் கைதி செய்யப்படுகின்றனர். ஜெர்மனிக்கும் அனுப்பப்படுகின்றனர். மூன்று தடவைகள் டென்மார்க் சரித்திர ஆசிரியர் டாக்டர் லாகோர் கைதி செய்யப்பட்டார். இவனை ஜெர்மனிக்கு அனுப்பி விசாரணை செய்வது மறுக்கப்பட்டது. அனுபபியிருந்தால் கொலை செய்யப்பட்டிருப்பான்.

அரியநோல்டு.

சுருங்கச் சொல்லில் ரகசியப் பத்திரிகைகள் அரிய சேவையைச் செய்து வருகின்றன. தங்களுடைய பிராணனுக்கு வரும் ஆபத்தைக்கூட கவனியாது இவைகள் தைரியமாக தங்களுடைய வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தப் பத்திரிகைகள் இருந்து வரும் சந்தர்ப்பத்தையும் நாம் கவனிக்கவேண்டும். இவைகளின் உண்மை வெளிவந்தால் திடீரென்று இருக்குமிடத்தை விட்டு ஓடவேண்டியதுதான். எதிரிகளின் வசமாகாமலும் கைதியாகாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். ஜனங்களின் விருப்பப்படிக்கும் நடக்கவேண்டும். அதாவது எதிரிகளிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு தங்களை ஒருவரும் காட்டிக் கொடுக்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்விதமாய் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளின உணர்ச்சியை இப்பத்திரிகைகள் வெளிப்படுத்துகின்றன. வால்பி என்ற பிரெஞ்சுப் பத்திரிகை கூறும் விதமாக தங்களுக்கு "நிச்சயம்" விடிமோக்ஷம் கிடைக்குமென்று நினைத்திருக்கின்றன. ஜனநாயகம் இறக்கவில்லை. இனிமேல் அதை அழிக்கவும் முடியாது. ஏனென்றால் பலமுள்ள நாடுகள் தற்சமயம் சேர்ந்து கொண்டிருக்கின்றன.

---

## ஜெர்மனியில் உள்நாட்டுப் பிரச்னைகள்.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம்.)

ருஷ்யப்போர் தொடங்கியதிலிருந்து வாரத்துக்கு வாரம் யுத்தப் போக்கு மாறுபட்டு வருகிறது. அதே போலவே ஜெர்மனிக்கு வெற்றியும், தோல்வியும் மாறிமாறி வருகின்றன. எப்படியிருந்தாலும் அதன் முடிவைப்பற்றி ஏற்கனவே தீர்மானித்ததுதான்.

1942-ம் ஹூலக்கின் உபயோகத்திற்காக ஆயுதங்கள், மற்றுமுள்ள போர் சாமான்கள் உற்பத்தி செய்வதைக் குறித்து மாரிகாலம் பூராவும் ஜெர்மானியர் கூடி ஆலோசித்து வந்தார்கள். தொழிற்சாலைகளில் அதிக அவசரமாகத் தேவையில்லாதவர்களையும், பொருள்களையும் எடுத்து எங்கெங்கு சைனியங்களும், யுத்தப் பொருள்களும் குறைவாக இருக்கின்றனவோ அங்கு அனுப்பப்படுகின்றன, அவ்வித தந்திரம் அடுத்த 6 மாதங்களுக்குள் நேசநாட்டினர் தங்களுடைய முழுபலத்தையும், முயற்சியையும் உபயோகித்து ஜெர்மனியை ஒரே அடியாகத் தாக்கும்போது பலிக்காமல் போய்விடும்.

இதன் பயன்கள் மூன்று வகைகளில் தெரியலாம். உணவு, உடை, உணவு தயாரிக்கவேண்டிய நிலக்கரி வகையராவும், வசிக்கக்கூடிய நிலைமையில் குறைவு போக்குவரத்துஉள்பட முக்கியமான கைத்தொழிலின் குறைவு, கைத்தொழில் ஸ்தாபன முறையில் குறைவு. அதாவது விளைபொருள்களும் அரைகுறையாக

வேலைசெய்யப்பட்ட பொருள்களும் வரிசைக்கிரமமாக அநேக மாறுதல்கள் அடைந்தது. யுத்தப்பொருள்கள் தயாரிக்கும் யந்திரசாலைக்குள் போகமுடியாமல் தடைபடுவது.

### சண்டைசெய்யும் வீரர்களுக்கு இதனால் ஏற்படும் பயன்.

இந்த மூன்று பயன்களில் ஏதாவது ஒன்று அதிகமாகப் போய்விட்டால் யுத்தப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில்லாமல் போனால் என்ன கஷ்டம் நேரிடுமோ அத்தகைய கஷ்டம் போர் படைகளுக்கும் ஏற்பட்டுவிடும். ஏனென்றால் சண்டை செய்யும் சக்தியும், ஜயிக்க வேண்டுமென்ற நோக்கமும் ஒரே சமயத்தில் குன்றிவிடும். இத்தகைய உணர்ச்சி பொதுமக்களுக்கும் ஏற்படும். தலைவர்களுக்கும் ஏற்படும். ஏற்கனவே தொழில் குறைவு, விலை பொருள்களில் குறைவு, ஒரு பொருளுக்குப்பதிலாக மற்றொரு பொருளைக்கொண்டு ஈடுசெய்வது, கைத்தொழிலில் சோர்வு அதிகரிப்பது இவைகளினால் ஜெர்மன் தொழிலினால் உற்பத்தி செய்யும் சக்தி முற்றிலும் குறைந்துவருகிறது. யுத்த தளவாடங்கள் தயாரிப்பதில் குறுகிய காலதிட்டத்தை அனுசரிப்பதால் இதன் பயன்கள் சிறிது காலம் கழித்துத்தான் தெரியவரும். இப்பொழுது ஜெர்மனிக்குக் கிடைத்திருக்கும் ஓய்வு நேரத்தை யுத்தத்தை ஜயிக்க உபயோகப் படுத்துவதா அல்லது நீண்ட காலத்திற்குள் அதற்குக் கடுமையான பாதகம் உண்டாக்கக்கூடிய மேலே சொன்ன சந்தர்ப்பங்களைத் தவிர்க்க உபயோகப் படுத்துவதா என்ற பிரச்னை ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கிறது.

ருஷ்ய எதிர்ப்பை தவிர்ப்பதற்கு உடனே கைத்தொழில், யந்திரசாலைகளை அதிகரிக்கச் செய்யவேண்டும். அதற்கு வேலையாட்களும் தடங்காமல் வேலை செய்வதற்கு வேண்டிய விலைபொருள்களும் வேண்டும். அப்படிச் செய்வதற்கு குறுகிய கால திட்டத்தை மாற்றினாலொழிய வேறு வழியில்லை. 1913-ம் வருஷத்தில் ஜெர்மனி மீது படையெடுக்க நேசதேசத்தார்கள் உத்தேசித்திருப்பதையும், அப்படிபடையெடுக்க இப்பொழுதே அறிகுறிகள் காணுவதினாலும், அதற்குள் ஜெர்மனி அதன் பயன்களை மாற்ற முடியுமா என்பது இதற்குள் சொல்லிவிட முடியாது. ஆனால் ருஷ்ய எதிர்ப்பை அழிப்பதற்கு ஜெர்மானியர்கள் சென்ற மாரிகாலத்தில் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது முன்னேறி விடவில்லை.

மாரிகால உறைபனியினால் உண்டான நஷ்டத்தை ஈடுசெய்ய வசந்த காலத்தில் விசாலமான பிரதேசங்களில் விதைத்து பலனடையப் பார்ப்பதில் ஜெர்மானியர்களுக்குப் பெருத்த கஷ்டங்கள் நேர்ந்திருக்கிறது. முக்கியமாக தொழிலாளிகள் குறைவு. ஒரு ஜெர்மன் தொழிலாளிக்கு மூன்று அல்லது நாலு அந்நிய நாட்டு தொழிலாளிகள் வீதம் விவசாயத்தில் சேர்க்கப்பட்டு வேலை செய்து வருகிறார்கள். இவர்களில் சாகுபடி குடியானவர்கள் தவிர கூலிக்கு நியமிக்கப்பட்டவர்களைக் குறித்துதான் சொல்லப்பட்டது. அயல் நாட்டுத் தொழிலாளியின் வேலைத்திறமைக் குறைவைப்பற்றி ஜெர்மன் பத்திரிகைகளில் பலமாகக் கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது. வேலைக்காரர்களின் குணதோஷத்தினால் கைத்தொழிலைக் காட்டிலும் விவசாயத்தில் அதிக கஷ்டமிருப்பதாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. விதைகளும் உரங்களும் குறைவாகயிருக்கிறது. உறைபனி சேதத்தினாலும் அதிகத் தேவையிருப்பதினாலும் விதைகளுக்குத்தட்டு ஏற்பட்டிருக்கிறது. போக்குவரத்து நெருக்கடியினால் உரங்களுக்குத் தட்டு ஏற்பட்டிருக்கிறது. ஐரோப்பா கண்டத்தில் பெரும்பான்மையான இடங்களில் பஞ்சம் ஏற்பட்டதினால் பயிர் விளைச்சலும், புல் உற்பத்தியும் குறைந்து விட்டது.

### ரயில்வே போக்குவரத்துகளின் சிக்கல்.

ஜெர்மனியில் பிரயாணிகளின் ரயில் பிரயாணம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஹிட்லர் பிரகடனத்தில் ரயில்களை நடத்துவதில் பெருத்த கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிடப்பட்டது. அநேக ரயில் வண்டிகள் கோபிலிக்ஸ் பர்க், ஸ்மொலன்ஸ்க் இவைகளுக்கருகில் பழுது பார்ப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது.



என்ஜின்கள் தான் அதிகம் சேதமடைந்திருப்பதாகத் தோன்றுகிறது. ஜெர்மன் ரயில்வேக்களில் ரயில் போக்குவரத்தின் தன்மை பொதுவாகக் குறைந்து வருகிறது. ஆனால் ஸ்விட்ஸர்லாந்துக்கு வழக்கப்படி நிலக்கரி ஸப்ளை செய்யப்படுவது பாதிக்கப்படும் அளவுக்கு ரயில் போக்குவரத்து குறைந்து விட்டது.

மாரிகாலப் படையெடுப்பில் உண்டான காலதாமதமும் தடங்கல்களும் அதிகரித்துவிட்டது. லங்காஸ்டர், ஸ்டர்லிங் அல்லது ஹலிபாக்ஸ் விமானம் தூக்கிச் செல்லக்கூடிய வெடிகுண்டு எத்தன்மையது என்று சொல்லக்கூடாது. ஆனால் பிளன்ஹீம் விமானப்படைப்பகுதி பூராவும் கொண்டு செல்லக்கூடிய வெடிகுண்டுகள் அவ்வளவையும் ஒரு ஸ்டர்லிங் விமானம் எடுத்துச் செல்லுமென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

ஜெர்மனியைத் தாக்குவதற்கு அனுப்பப்படும் பாம்பர் விமானங்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பது அவ்வளவு முக்கியமில்லை. அவைகள் போடக்கூடிய வெடிகுண்டுகளின் டன் நிறை அதிகமாக இருக்கவேண்டியதுதான் முக்கியமானது. சில மாதங்களுக்கு முன் இரண்டு விமானங்களும் போடக்கூடிய வெடிகுண்டுகள் அளவுக்கு ஒரு விமானமும் ஒரு விமானியும் போடக்கூடுமானால் பின்னால் சொல்லப்பட்டதே மேலாகயிருக்கும். ஏனென்றால் இரண்டு இரட்டை என்ஜின் கொண்ட பாம்பர் விமானங்களைச் செலுத்த 10 விமானிகளும், தரைஸ்தாபனத்தில் 10 பேர்களும் வேண்டும். ஆனால் நாலு என்ஜின்கொண்ட ஒரு விமானத்திற்கு 7 விமானிகளும், தரை ஸ்தாபனத்தில் 7 பேர்களும்தான் தேவை. அந்தந்த விமானங்கள் கொண்டு செல்லக்கூடிய வெடிகுண்டுகளின் கனமானது, பாம்பர் நிலயத்திலிருந்து லக்ஷியம் இருக்கும் தூரத்தைப் பொருத்ததேயாகும்.

### விகிதம்.

நாலு என்ஜின் விமானங்களுக்கும், இரண்டு என்ஜின் விமானங்களுக்குமுள்ள விகிதத்தைப் பார்த்தால் ஒரு விமானத்திலிருந்து 2 டன்னுக்குக் கொஞ்சம் குறைவாக உள்ள வெடிகுண்டைப் போடுவதாக நாம் எண்ணிக்கொள்ளலாம். இந்தப்படி 3,000 பாம்பர்கள் ஒரு இரவில் ஜெர்மனியில் 5,500 டன்கள் நிறையுள்ள வெடிகுண்டுகளையும், தீக்குண்டுகளையும் போடக்கூடும்.

நம் தேசத்தில் எதிரி கடுமையாகத் தாக்கின இரவில்கூட 600 டன்களுக்கு மேல் போடவில்லையென்று ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் பிரிடிஷ் பாம்பர்களால் போடக்கூடிய அதிக கனமுள்ள வெடிகுண்டுகளினால் உண்டாகும் பயன் எப்படியிருக்குமென்பதை யோசித்துப் பார்க்கலாம்.

---

## "ஹிட்லரை இவ்வருஷத்தில் முறியடித்து விடுவோம்."

ருஷ்யாவின் பிரஸிடெண்டு மைகேல் கலினின் எழுதியது.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம் கிடைத்தது.)

ஒரு வருஷத்திற்குமுன்பு ருஷ்யாவைப் படையெடுக்கப் போவதாக ரேடியோவில் நாஸிகள் சொன்னார்கள். உடனே படையெடுப்பு ஆரம்பமாயிற்று. இந்த ஒரு வருஷகாலமாக நாஸிகள் செய்த கொடிய யுத்தத்திலிருந்து அவர்களுக்கு ராணுவ சம்பந்தமான அறிவே இல்லை என்று காண்பித்துக்கொண்டார்கள்.

அவர்கள் போட்ட திட்டப்படி ருஷ்யா மூன்று, நான்கு மாதங்களுக்குள்ளோ, மாரிகாலத்திற்குமுன்னமேயோ தோற்கடிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆரம்ப காலத்தில் ஜெர்மானியர் வேகமாகவே முன்னேறினார்கள். அவர்களின் வெற்றிகளைப்பற்றி உலகம் பூரா அறிவித்துக்கொண்டும் இருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் லியோ டால்ஸ்டாய் எழுதிய சிறு கதையொன்று ஞாபகத்திற்கு வருகிறது. "ஒரு மனிதனுக்கு எவ்வளவு விஸ்தாரமான பூமி வேண்டும்?". அதாவது கொஞ்சம் பணம் கொடுத்தால், காலை முதல் மாலைவரை ஓடி சுற்றிவந்தால் கவரக்கூடிய பிரதேசம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஒருவன் களைக்கும்வரை

வேகமாக ஓடி ஆரம்ப ஸ்தலத்திற்கு வந்தான். ஆனால் அங்கே வந்ததும் களைப்புத் தாங்காமல் இறந்துவிட்டான். கடைசியாக அவனைப் புதைப்பதற்கு ஆறு அடி பூமிதான் தேவையாக இருந்தது.

அதே விதமாக ஹிட்லரின் படைகளுக்கு ருஷ்யாவில் இடம் கிடைத்திருக்கிறது. ருஷ்யப் பிரதேசத்தில் லக்ஷக்கணக்கான பேர்களுக்கு இந்த இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## கடுமையான எதிர்ப்பு.

ருஷ்ய மக்கள் தலைவரின் அழைப்பிற்கு இணங்கி எதிரியைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். நாஸிகள் சில ருஷ்யப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்ட காலத்தில் ருஷ்ய ரயில்வே தொழிலாளர்கள் எஞ்ஜின்களையும், வண்டிகளையும் அப்புறப்படுத்திவிட்டனர். தொழிற்சாலை சாமான்களும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. கூட்டுப் பண்ணையிலிருந்த ஆடு மாடுகளும் மாற்றப்பட்டன. இவ்விதம் எடுத்துச் செல்ல முடியாத சாமான்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பேர்கள் கொரில்லாப் படைகளில் சேர்ந்துள்ளனர்.

மாஸ்கோ சபைமுன்பாக 1941-ம் வருஷம் நவம்பர் மீ 6உ ஸ்டாலின் பேசுகையில் "நமது சைனியத்திற்கும், கப்பற்படைக்கும் தேசத்தின் பூரா உதவியும் இருக்கவேண்டும். தொழிற்சாலைகளில் யாவரும் ஓயாமல் ஈடுபட வேண்டும். அதிகமான டாங்கிகளும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும், விமானங்களும், பீரங்கிகளும், சுரங்க வெடிகளைப் பாவுகிறவர்களும், யந்திர பீரங்கிகளும், துப்பாக்கிகளும், யுத்த சாமான்களும் தொழிற்சாலைகளில் செய்யப்படவேண்டும். தானியங்களையும் மாமிசத்தையும் கூட்டுத் தோட்டங்களில் செய்து போர்முனைக்கு அனுப்பவேண்டும். தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களைச் செய்து அனுப்பவேண்டும். தேசத்தின் மக்கள் பூராவும் சைனியத்திலும், கப்பற்படையிலும் சேர்ந்து தேசத்தின் கௌரவத்தையும், ஸ்வதந்திரத்தையும் காக்கவேண்டும். எதிரிகளையும் அழிக்கவேண்டும்."

## ருஷ்ய செஞ்சேனை முன்னேற்றப்போரைச் செய்கிறது.

அது முதல் ருஷ்யச் சைனியம் முன்னேற்றப்போரை நடத்திவருகிறது. மாஸ்கோவைப் பிடிக்கும் நோக்கத்தை எதிரிகள் இன்னும் விடாத போதிலும் ரோஸ்டவ், டிக்வின் இவைகளுக்கு அருகில் அடைந்த தோல்விகளால் ஹிட்லரின் படைகள் வெகுதூரம் ஓட வேண்டி வந்தது. ஜெர்மன் சைனியத்தில் பலர் இறந்தனர். சாமான்களும் சேதமும் அதிகம். மேற்கு நோக்கி ஓட்டம் பிடித்தனர். அவர்களுக்கு வெற்றியில் நம்பிக்கை போய்விட்டது. செஞ்சேனை தற்காப்புப் போரை முன்னேற்றப்போராக மாற்றிக்கொண்டு ஜெர்மானியரை விரட்டியது.

மே 1உ போட்ட உத்தரவில் ஸ்டாலின் ருஷ்ய மக்களை 1942-ல் "ருஷ்ய யுத்தத்தை முடித்து ருஷ்யாவை விடுவிக்கவேண்டுமென்று" சொன்னார். அவர் சொன்னதாவது "இவ்வித லக்ஷியத்தை அடைவதற்குப் போதுமான சாதனங்கள் இருக்கின்றன. ஒன்று மாத்திரம் குறைவாக இருக்கிறது. கிடைக்கும் சாமான்களெல்லாவற்றையும் எதிரிக்கு விரோதமாக உபயோகிக்க முடியவில்லை. ஆகவே ருஷ்யக் காலாட்படை, பீரங்கிப்படை, யந்திர பீரங்கிப்படை, மோட்டார் ஓட்டிகள், டாங்கி ஆட்கள், விமானிகள், குதிரைப்படை யாவும் யுத்த தந்திரத்தை நன்றாகக் கற்றுக்கொண்டு, சாமார்த்தியத்தைப்பெற்று எதிரிகளைத் தாக்கவேண்டும். அப்பொழுதுதான் எதிரியைத் தோற்கடிக்க முடியும்."

## ஜெர்மன் சைனியம் முன்போல் இல்லை.

ராணுவ நிலைமையைப் பார்த்தால் பூராப் போர்முனையிலும் ஜெர்மானியரால் சமாளிக்க முடியவில்லையென்று தெரிகிறது. யுத்தம் ஆரம்பித்த காலத்தில் இருந்தமாதிரி இப்போது இல்லை. சக்தி குறைந்துவருகிறது. ருஷ்ய-ஜெர்மன் யுத்த அரங்கம் பூராவும் தனிப்பட்ட பிரதேசங்களில்தான் ஜெர்மானியர் சண்டை செய்யமுடியும். ஆனால் அவர்களுக்கு அதிகச் சேதம் ஏற்படும்.



ஓரிடத்தில் சிறிது வெற்றிபெற்றதும் அதை வைத்துக்கொண்டு பிரமாதமாகப் பிரசாரம்செய்து ஏமாற்றிவந்தனர். ஹங்கேரி, ருமேனியா, இதாலி முதலிய நாட்டுப்படைகளை அகற்றிவிட்டால் ஜெர்மனியின் நிலைமை மோசமாகிவிடும். மூலப்பொருள்கள், உணவு முதலியவைகளை அடைவதற்காகவே ஜெர்மனி இந்நாடுகளுடன் உறவு கொண்டாடுகிறது. 1941-லிருந்த மாதிரி ஜெர்மன் சைனியம் இல்லை. பலர் அடங்கிய சைனியமாக இருக்கிறது.

ஜெர்மனி அடைந்துவரும் தோல்வியின் காரணமாக ஜெர்மன் மக்களுடைய தைரியம் குறைந்துவருகிறது. யுத்தத்தைப்பற்றிய அக்கறையும் குறைந்து வருகிறது.

## ஆபத்து பின்புறம்.

ஆக்கிரமித்த நாடுகளில் கொள்ளையடிப்பதாலும் ருஷ்யப் படையின் தாக்குதல் ஏற்படுவதாலும் ஆங்காங்குள்ள தேசபக்தர்களுக்கு உணர்ச்சி அதிகரிக்கிறது. இதனால் ஐரோப்பாவில் ஜெர்மனிக்கு ஆபத்துதான். இதைத் தவிர்க்க அதிகமான போலீஸ் படைகளை நாஸிகள் நியமித்துவருகின்றனர்.

நாஸி வசப்பட்ட ருஷ்யாவில் கொரில்லாப்படை அதிகம் உண்டாகி தினம் நாஸிகளைத் தாக்குகின்றன. "கொரில்லாத் தாக்குதல்களின்பேரில் அதிக வெற்றி கிடைத்ததாகவே" ஜெர்மானியரும் சொல்லுகின்றனர், அதாவது கொரில்லாப் படையிடமிருந்து சில 10, 15 ஸ்தலங்களைப் பிடித்ததாகப் பெருமைப்படுத்திக் கொள்ளுவார்கள். ஆனால் தங்களை பலமாகத்தாக்கி நகரங்களிலிருந்து விரட்டு வதைப்பற்றிச் சொல்லமாட்டார்கள். சண்டை போகப்போக கொரில்லாத் தாக்குதல் கடுமையாகிவிடும். ஜெர்மன் துருப்புகளேற்றப்பட்ட பல ரயில் வண்டிகள் கவிழ்க்கப்பட்டிருக்கின்றன. தினச்சண்டைகளில் பல நாஸிப்படைகளும் அழிக்கப்பட்டிருக்கின்றன.

## செஞ்சேனையின் உணர்ச்சி.

பொதுமக்களின் உணர்ச்சிக்குத் தகுந்தவாறு சேனையும் நடந்துகொள்ளுகிறது. ஏனென்றால் தாய்நாட்டின் கௌரவத்தை ஒவ்வொரு சிப்பாயும் அறிந்திருக்கிறான். இந்த பலத்துடன் எதிரியை எதிர்க்கமுடிகிறது.

நமது தொழிற்சாலைகளில் சாமான்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. யுத்த சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளப்படுகிறது. சைனியத்திற்கு சாமான்களின் உதவி அதிகரித்து வரும் விஷயம் நமக்குத் திருப்தியளிக்கிறது. யுத்தகால சிரமங்களிருந்தபோதிலும் அதிக பாகம் உழுது 'பயிரிடப்பட்டிருக்கிறது.' குடியானவர்களும் சமயத்திற்கேற்றவாறு நடந்து கொண்டிருக்கின்றனர்.

## சரியான பொருளாதார திட்டம்.

நமது தேசத்தின் பொருளாதாரத் திட்டம் சரியான அஸ்திவாரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஜனங்களும் தைரியமாக இருக்கின்றனர். எதிரியை எப்படியாவது துரத்தவேண்டுமென்று நினைத்திருக்கின்றனர்.

அயல்நாட்டு சம்பந்தமும் திடமாக இருக்கிறது. ஜெர்மன் படையெடுப்பு ஆரம்பமானது முதல் பிரிடனும், அமெரிக்காவும் ருஷ்யாவிற்கு உதவுவதாகச் சொல்லின. சமீபத்தில் பிரிடனுடன் ஒரு ஒப்பந்தமும் கையெழுத்தாகி இருக்கிறது. அமெரிக்கா சண்டையில் ஈடுபட்டிருக்கிறது. அமெரிக்காவுடனும் ஒரு சிநேக ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நாடுகள் நமக்குக் கொடுக்கும் உதவியை அதிகமாகவே செய்யும்.

வெற்றி நிச்சயம் கிடைக்குமென்று ருஷ்ய மக்களும் நினைத்திருக்கின்றனர். எதிரி இன்னும் தோற்கடிக்கப்படவில்லை. அவனுக்கு இன்னும் உதவி இருக்கிறது. நிலைமை மோசமாகிப் போகப்போக தீவிரமான பிரயத்னத்தைச் செய்வார்கள்.

ஹிட்லர் தோற்கடிக்கப்படுவது நிச்சயம். இதற்காக ருஷ்யர்கள் எல்லா இடங்களிலும், போர் அரங்கத்திலும், உள்நாட்டிலும் எல்லாவித முயற்சிகளையும் செய்யவேண்டும். சிரமங்களைக் கண்டு களைக்க மாட்டார்கள். எதிரியைச் சீக்கிரம் தோற்கடிக்க முயற்சிக்கவேண்டும்.

# மார்டின் மார்ஸ்.

(*With acknowledgments to the Illustrated Weekly of India*).

## யுத்தம் பூராவும் விமானப் படை பலத்தின் உதவியால்தான் ஜயமடையவேண்டும்.

ஸியாவிலும், பஸிபிக் யுத்தப்பிராந்தியங்களிலும் தற்சமயத்தில் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதுதான் மெத்த அவசியமாகத் தெரிகிறது. துருப்புகளையும், யுத்தப்பொருள்களையும் இன்னும் தபால் முதலியவைகளையும், அமெரிக்காவுக்குச் சொந்தமான இவ்வுலகத்திலுள்ள பல எல்லைப்புற ஸ்தலங்களுக்கும் ஆகாய மார்க்கமாக அனுப்ப ராக்ஷஸ ஆகாயப் போக்குவரத்துத் திட்டம் இப்பொழுது தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினால் சமீபகாலத்தில் சமுத்திரத்தில் அதிகமாக நேரிட்டு வந்த நஷ்டங்கள் தடுக்கப்படும். நீராவிக் கப்பல்கள் கட்டுவதைக் காட்டிலும் ஆகாய விமானங்களைச் சுலபமாகவும், வெகு சீக்கிரத்திலும் கட்டி முடித்துவிடலாம். "தரையிலும், சமுத்திரத்திலும் ஊர்வது போல் மெதுவாகச் செல்லும் யுத்த தளவாடங்களின் உற்பத்தியைக் குறைத்து, எல்லாவற்றையும் ஆகாய விமானங்கள் கட்டுவதில் செலவு செய்வோம்" என்று பிரக்யாதிபெற்ற விமானியும், விமானங்கள் உற்பத்தி செய்கிறவருமான மிஸ்டர் கௌன் மார்டின் சொன்னார்.

புதிய வேவுபார்க்கும் விமானத்திற்கு மார்டின் மார்ஸ் என்று சொல்லப்படுகிறது. அதையே அமெரிக்கக் கப்பற்படையின் ஆகாய யுத்தக் கப்பல் என்றும் சொல்லப்படுகிறது. அவ்வளவு பெரிய விமானம் இதுவரை கட்டப்படவில்லை.

1937-ம் வருஷத்தில் அமெரிக்கக் கப்பற்படை இலாகா உலகத்திலுள்ள விமானங்களைக்காட்டிலும் மிகப்பெரிய விமானமொன்றை கட்டவேண்டுமென்று பிரசுரித்தபொழுது, மார்டின் விமானமே பரிசுபெற்றது. மிகவும் திறமையுள்ள விமான எஞ்ஜினியர்களின் ஒரு பகுதி இந்த வேலையை ஒப்புக்கொண்டு அதற்கு நூதன முறைகளைக் கண்டுபிடித்தார்கள். அதிலுள்ள பல உறுப்புகளுக்கு 12,600 படங்கள் வரையப்பட்டன.

1940-ம் வருஷ ஆகஸ்டு மாதத்தில் மார்ஸ் என்ற கப்பலின் அடிபாகம் கட்டப்பட்டது. அதற்கு அமெரிக்கக் கப்பற்படை இலாகா ஆதரவளித்தது. அது கப்பற்படை சங்கக்கட்டடத்தில் கட்டப்பட்டது. 1941-ம் வருஷ ஜுலை மாதத்தில் 20,000 பவுண்டு நிறையுள்ள இறக்கைகள் அவ்விமானத்தில் பொருதப்பட்டன.

பலத்தின் பரிசோதனை.

ஸெப்டம்பர் மீ 8-ம் தேதி எஞ்ஜினியர்களின் ஸ்தாபனம் அவ்விமானம் தரையிலிருக்கும் ஸ்திதியிலேயே, அதன் இறக்கைகள், யந்திரம் இவற்றின் பலத்தை ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட காலமாகத் தயாரிக்கப்பட்ட கருவியின் உதவியினால் பரிசோதித்தது. அந்த இறக்கைகளின் பேரில் 5 லக்ஷம் பவுண்டு கனத்திற்கு மேல் ஏற்றிவைக்கப்பட்டதை அவைகள் தாங்கின. இவ்விதம் பரிக்ஷை செய்துமுடிக்க 5 நாட்கள் பிடித்தன.

இந்த பறவைக்கப்பல் 170 அடி நீளமுள்ளது. அதன் இறக்கைகள் 200 அடி வரை விஸ்தாரமுள்ளது. அது நிலையிருக்கும் பொழுது அதன் இறக்கைகள் 20 மாடிகள்கொண்ட பெரிய கட்டடம் போல் அவ்வளவு உயரமாக இருக்கும். இறக்கைகளின் மத்தியபாகங்களில் விமானிகள் தாராளமாக நடந்து செல்லக்கூடும். பறந்துகொண்டிருக்கும் பொழுதே அங்கிருந்து கொண்டு யந்திரங்களில் பழுது பார்க்கவும் கூடும்.

இந்த பறவைக்கப்பல் 8,000 H. P. கொண்டது. மின்சார டீஸல் எஞ்ஜின்கள் இரண்டின் சக்தியைப்போல் இரண்டுமடங்கு அதிகமுள்ளது. விமானத்தை ஓட்டும் யந்திரமானது இதுவரையில் கட்டப்பட்ட எந்த விமானத்தைக் காட்டிலும் மிகப்பெரிதானது.

அக்கப்பலில் முக்கிய உத்தியோகஸ்தர்கள் தங்குவதற்கு ஒரு அறையும், பிரயாணிகள் இளைப்பாற வசதியுள்ள இடமும் இருக்கின்றன. தலைமை உத்தியோகஸ்தர் இருக்கும்படியான உயர்வான இடமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவருக்குத் தனி அறையும் உண்டு.



அதில் இரண்டு போஜன அறைகளும், இரண்டு ஸ்நான அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சராசரியாக அதில் 11 மாலுமிகள் செல்வார்கள். 150 சிப்பாய்கள் அவர்களுடைய ஆயுதங்களுடன் அதில் ஏறிச்செல்லக்கூடும். ஒரு மோட்டார் படகைத் தூக்கிச் செல்லக்கூடிய விமானம் இதுவே.

'மார்ஸ்' என்ற விமானம் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு ஒரு இடத்திலும் தங்காமல் போய் திரும்பிவரக்கூடிய சக்தி வாய்ந்தது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின். பிரஸங்க நிகழ்ச்சி முறை.

மணி.

1942—

### பிரஸங்கம் 104—(1-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஜுலை | ...18, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை | 6.45 |
| | 19, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| | 20, திங்கட்கிழமை ... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | மேலூர் ... | ,, | 6.30 |
| | 21, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 22, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | காலேஜ் தமிழ் (பிராஞ்சு ஸ்கூல்) | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | அரிமளம் ... | மாலை | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை... | ,, | 6.30 |
| | 23, வியாழக்கிழமை ... | உடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| | 24, வெள்ளிக்கிழமை... | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பரம்பூர் ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 105—(2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 25, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 26, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் ... | ,, | 5.30 |
| | வயலோகம் ... | ,, | 6.00 |
| | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| 27, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | விராச்சிலை ... | ,, | 6.30 |
| 28, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | நல்லூர் ... | மாலை | 6.00 |
| | மண்டையூர் ... | ,, | 6.30 |
| 29, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | வெங்களூர் ... | மாலை | 6.00 |
| | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| 30, வியாழக்கிழமை ... | பனையபட்டி ... | ,, | 6.00 |
| | ராங்கியம் ... | ,, | 6.30 |
| 31, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | விராலிமலை ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 18— 7—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 19— 7—42 | ... | கொடும்பாளூர். |
| திங்கட்கிழமை | ... | 20— 7—42 | ... | கீரனூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 21— 7—42 | ... | குடுமியாமலை. |
| புதன்கிழமை | ... | 22— 7—42 | ... | காரம்பக்குடி. |
| வியாழக்கிழமை | ... | 23— 7—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 24— 7—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 25— 7—42 | ... | விராச்சிலை. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 26— 7—42 | ... | ஏம்பல். |
| திங்கட்கிழமை | ... | 27— 7—42 | ... | அரிமளம். |
| செவ்வாய்க்கிழமை | ... | 28— 7—42 | ... | கோனாபட்டு. |
| புதன்கிழமை | ... | 29— 7—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 30— 7—42 | ... | குழிபிறை. |
| வெள்ளிக்கிழமை | ... | 31— 7—42 | ... | புதுப்பட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—19-7-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஞு ஜூலைமீ 25உ [ந. 105

பிரஸங்கம் CV.

## லத்தீன் அமெரிக்கா.

லத்தீன் அமெரிக்கா நேர்முகமாக இந்த யுத்தத்தில் ஈடுபடாதபோதிலும், நேசநாடுகளைப்போல் அதுவும் சிரமத்துக்குள்ளாகி இருக்கிறது. இப்பாகம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அருகில் இருக்கிறது. ஆபிரிக்காவிலுள்ள டாகர் துறைமுகத்திலிருந்து அட்லாண்டிக் வழியாக அச்சுநாட்டினர் எளிதில் வரக்கூடிய இடத்தில் இருக்கிறது. அட்லாண்டிக்கிலுள்ள பிரிடிஷ் கப்பற்படை லத்தீன் அமெரிக்காவைப் பாதுகாத்து வருகிறது. ராஜ்ய வியவகாரங்களைப் பார்க்குங்கால் ஐரோப்பிய நாடுகளின் சம்பந்தம் அமெரிக்காவிலும் இருக்கிறது.

பொருளாதார சம்பந்தமாக இந்த யுத்தம் லத்தீன் அமெரிக்காவை அதிகம் பாதித்திருக்கிறது. ஐரோப்பா மாத்திரம் முற்றுகைக்குள்ளாகி இருப்பதாக நினைக்கவேண்டாம். லத்தீன் அமெரிக்காவிற்கும் சில தடையேற்பட்டிருக்கிறது. ஏனென்றால் சாமான்களை ஐரோப்பாவில் இறக்குமதி செய்ய முடியாத காலத்தில் அமெரிக்க சாமான்களை, பிரான்ஸ், ஸ்காண்டிநேவியா, பால்கன் நாடுகள் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யமுடியாது. ஜெர்மனியுடன் பூரா வியாபாரம் நிறுத்தப்பட்டுள்ளது. கப்பல்கள் குறைவாக இருப்பதால் பிரிடனும் அதிகம் சாமான்களை வாங்குவதில்லை. லத்தீன் அமெரிக்க நாடுகள் பூராவும் காப்பிக்கொட்டை, தகரம், எண்ணெய், நைட்ரேட், தாமிரம், முதலிய சாமான்களின் ஏற்றுமதியால் பிழைக்கவேண்டியிருப்பதால் இச்சாமான்களை ஏற்றுமதி செய்ய முடியாத காரணத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

லத்தீன் அமெரிக்காவில் ஐந்தாம்படை, ரகசிய சூழ்ச்சி, கிருத்திருமமான பிரசாரம் முதலியவைகளில் ஈடுபட்டவர்கள் இருக்கின்றனர். அத்தேசமெங்கிலும் ஜெர்மன் பள்ளிக்கூடங்களும், இளைஞர் சங்கங்களும், படைப்பகுதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஜெர்மானியருக்குச் சொந்தமாயும் உட்பட்டதுமாக சில பத்திரிகைகளும் இருக்கின்றன. ரகசியமான ரேடியோ நிலயங்களும் உண்டு. ஒவ்வொரு பாகத்திலும் அரசாங்கத்தாருக்கு எதிரிடையான கக்ஷி ஏற்பட்டிருக்கிறது. இக்கக்ஷிகளுக்கு ஜெர்மானியர் பொருளுதவி செய்கின்றனர். அச்சுநாட்டு விமான மார்க்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவைகளின் வழியாகத்தான் ஐந்தாம்படை வேலைகள் நடைபெறுகின்றன. L. A. T. I. என்பது முக்கியமான மார்க்கம். இது [பெர்லின்-ரோம், டாகர், நேடால் (பிரஸீல்)] இடங்களுக்குப்போகிறது. மற்றொன்று கோண்டார் (Condor) இது டியூட்ஸி லுப்தான்ஸா (Dutsche lufthansa)வினால் நடத்தப்படுகிறது. பிராங்கோஸ் பெயினில் வெற்றி பெற்றதிலிருந்து பெலாங்கியர்களின் (Falangist) நடமாட்டமும் இருந்து வருகிறது.

அமெரிக்கா சண்டையிலீடுபட்டதும் நிலைமை அதிக சிக்கலையாகி விட்டது. ஏனென்றால் தூரக்கிழக்கை ஜப்பான் வியாபித்துக்கொண்டதால் அமெரிக்காவிற்கு வரவேண்டிய ஸப்ளைகள் லத்தீன் அமெரிக்காவிலிருந்து பெறவேண்டியதாயிற்று. இவையாவும் பனாமா வழியாகத்தான் வரலாம். காரிபியன் கடலில் நீர்மூழ்கிகளின் தாக்குதல்கள் பலிக்காததால் அச்சு நாட்டினர் லத்தீன் அமெரிக்கக் கடலில் சஞ்சரிக்கிறார்கள்.

இவ்விதமாக உலகின் மற்ற பாகங்களைக் கவர்ந்து வரும் இந்த யுத்தம் லத்தீன் அமெரிக்காவையும் வியாபித்து வருகிறது. இருட்டு தேசம் என்று இது வரை கூறப்பட்ட இப்பாகத்தைப்பற்றி சில விவரங்கள் கொடுக்கப்படுகின்றன.

## அமைப்பு.

லத்தீன் அமெரிக்கா என்பது மத்திய, தென் அமெரிக்க பாகங்களில் இருக்கும் இருபது நாடுகள் ஒன்று சேர்ந்த பிரதேசமாகும். இவைகளில் பிரஸீல் என்பது மிகப் பெரியது. ஐக்கிய நாடுகளைக் காட்டிலும் பெரிது. அர்ஜென்டைனா என்பது மிகப் பணக்கார நாடு. பிரான்ஸைப்போல் ஐந்து மடங்குள்ளது. மிகச்சிறியது பெரு. இருந்தாலும் தென்ஆபிரிக்க நாடுகளைக் காட்டிலும் பெரிது. மெக்ஸிகோ உள்பட அடங்கிய மத்திய அமெரிக்க பாகம் ஸ்பெயினைவிடப் பெரியது. இவ்வளவு நாடுகளும் லத்தீன் அமெரிக்காவில் அடங்கியிருக்கின்றன.

இவ்வளவு நாடுகளும் நாம் நினைக்கும் விதமாக ஐரோப்பா, ஆபிரிக்காவிற்கு வெகு தூரத்தில் இல்லை. கிழக்கே நீட்டியிருக்கும் பாகம் ஆபிரிக்காவிலிருந்து 2,000 மைல் தூரம்தானிருக்கிறது. ரயோ டி ஜெனிரோ, போனஸ் அயர்ஸ் இவை இரண்டும் நியூயார்க்கைவிட லிஸ்பனுக்குத்தான் சமீபத்தில் இருக்கின்றன. மேற்கே அன்டிஸ் மலைகளால் சூழப்பட்டு டியரா டெல் புயிகோ முதல் காரிபியன் கடல்வரை பரவியிருக்கின்றன. அமெஸான் நதி பாயும் உள்நாட்டுப் பிரதேசமும் பெரியது. லத்தீன் அமெரிக்காவில் தரை மார்க்கத்தைவிட விமான மார்க்கம் சுலபமானது.

## ஆக்கிரமணமும் குடியேற்றமும்.

இப்பாகத்தில் ஸ்பெயின் தேசத்தினர்தான் முதலில் குடியேறியது. இவர்களுக்கும் மெக்ஸிகோ, பெரு முதலிய நாட்டு வாசிகளுக்கும் சண்டை நடந்ததில் நவீன யுத்த முறையைக்கையாளும் ஸ்பெயின் தேசத்தினருடன் எதிர்த்துச் சண்டை செய்ய முடியவில்லை. ஆகவே குடியேற்றத்திற்குத் தடை ஏற்படவில்லை. அங்குள்ள இந்தியர்கள் சுரங்க கூலிவேலைகளில் நியமிக்கப்பட்டார்கள். பிறகு போர்ச்சுகீஸ்காரர்கள் பிரஸிலில் குடியேறினார்கள். அதன் பிறகு இதாலியர்களும் ஜெர்மானியரும் சென்றனர். அர்ஜென்டைனாவில் 30 சதவிகிதம் இதாலியரும், பிரஸிலில் 7,50,000 பேர்கள் ஜெர்மானியரும் இருக்கின்றனர். ஆசிய வாசிகள் இருபதாவது நூற்றாண்டில்தான் சென்றார்கள். பிரஸிலில் 2,00,000 ஜப்பானியர் இருக்கிறார்கள். இவர்கள் திட்டமாகக் குடியேறியவர்கள்.

## பிரிவினையும் ஒற்றுமை.

இவ்விதமாகச் சேர்ந்துள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குள், சமூகம், அரசியல் முன்னேற்றம், அமைப்பு, ஜாதி, ஜனத்தொகை முதலியவைகளில் வித்தியாசம் இருக்கிறது. லத்தீன் அமெரிக்கர் என்று தனிப்படையாக ஒருவரையும் சொல்ல முடியாது. ஒன்று பிரஸில், அல்லது மெக்ஸிகோ நாடுகளைச் சார்ந்தவர்களாகச் சொல்லலாம். இருந்தாலும் அமெரிக்காவைச் சார்ந்தவன் என்ற உணர்ச்சி மாத்திரம் இருக்கிறது. புதிதாக அடையப்பட்ட ஸ்வதந்திரத்தின் பயனாகவேதான் இது ஏற்பட்டிருக்கிறது. இதனால் பொதுவான அக்கரைகள், லக்ஷியங்கள் இவைகளைப்பற்றிய நினைப்பு ஏற்பட்டிருக்கிறது.



## ஸ்பெயின் சாம்ராஜ்யம்.

அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்பெயின் சாம்ராஜ்யம் மூன்று நூற்றாண்டுகள் நீடித்திருந்தது. அதிகப் பெரிய ஆடம்பரத்துடன் ஆரம்பமான இந்த சாம்ராஜ்யம் ஒரு சமயத்தில் கலிபோர்னியாவிலிருந்து கேப் ஹார்ன் வரையிலும் பரவியிருந்தது. அதில் போர்ச்சுகீஸ் பிரஸீல் உட்படவில்லை. வட அமெரிக்காவில் பிரிடிஷாரின் குடியேற்றம் 19-வது நூற்றாண்டில்தான் ஏற்பட்டது. ஆனால் தென் அமெரிக்காவில் ஸ்பெயின் தேசத்தினரின் 16-வது நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. ஸ்பெயினிலிருந்த மத்திய அரசாங்கத்தினால்தான் அரசாட்சி செய்யப்பட்டது. சட்டதிட்டங்கள் அதிக தாக்ஷிண்யமுள்ளவைகளாக இல்லாத போதிலும் மீறப்படவில்லை. வட அமெரிக்காவில் குடியேறிய இங்கிலீஷ்காரர்கள் சுய ஆட்சியைப்பயின்றதும் லத்தீன் அமெரிக்க வாசிகள் அரசாங்க சம்பந்தத்திலிருந்து விலக்கப்பட்டனர்.

## குபேர உலகம்.

பல வருஷங்களில் ஸ்பெயின் சாம்ராஜ்யமானது மிகப்பெரிய பணக்கார நாடாகி விட்டது. ஏனென்றால் உலகின் பல பாகங்களுக்கு ஸப்ளை சாமான்கள் அங்கிருந்து அனுப்பப்பட்டன.

## ஸ்வதந்திரம்.

டிரபால்கர் சண்டையில் பிரிடிஷாரின் கடலாதிக்கம் ஊர்ஜிதமானதாலும், ஸ்பெயினை நெபோலியன் படையெடுத்ததாலும், தெற்கு நோக்கி அமெரிக்க ஐக்கிய நாடுகள் முன்னேறியதாலும் ஸ்பானிஷ் அமெரிக்கப் புரட்சி உண்டாயிற்று. இது ஸ்பெயினின் ஆதிக்கத்தை மீறுவதிலேயே நோக்கமாக முடிந்தது. அதனாலேயே ஒரு முக்கிய சகாப்தமாயிற்று. புதிய உலகமே நிர்மாணமாயிற்று. மார்டின், பொலீவர் போன்றவர்களின் பெயர்கள் முன்னால் வந்தன. இவர்களுக்குச் சாதகமாக லார்டு கோக்ரேய்ன், ப்ரௌன் போன்ற பிரிடிஷ்காரர்களும் உதவினார்கள். பிரிடிஷாரின் உதவி அந்த புரட்சிக்கு அதிகம் இருந்தது. இதர ஐரோப்பியர் அதில் தலையிட முடியாதபடி பிரிடிஷ் கப்பற்படை செய்தது. காஸில்ரே பிரபுவும், ஜார்ஜ் கானிங் இவர்கள்தான் அந்த ஏற்பாட்டைத் தயாரித்தது. இவர்கள் பிரிடிஷ்காரர்கள். அந்தச் சமயத்தில்தான் ஜனாதிபதி மன்ரோ தனது பிரசித்தத் திட்டத்தை வழங்கினான். அதாவது அமெரிக்க நாடுகளை ஐரோப்பியருக்கு உட்பட்ட குடியேற்ற நாடுகளாக நினைக்கக்கூடாது என்பதுதான்.

## யாவருக்கும் பிரவேசம்.

அமெரிக்கப் புரட்சியையும், பிரெஞ்சுப் புரட்சியையும், அனுசரித்திருந்த லத்தீன் அமெரிக்காவின் ஸ்வதந்திர இயக்கம் நவீன சரித்திரத்திலேயே ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. புதிதாக ஒரு தேசமே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் பிரிடிஷ்காரர்கள் அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் ஒன்று சேர்ப்பதிலேயே ஈடுபட்டிருந்தனர். அமெரிக்கர்கள் பிரிவினையையே விரும்பினார்கள். இவைகளின் பயனாக யாவருக்கும் சில உரிமைகள் கிடைத்தன. லத்தீன் அமெரிக்கா சம்பந்தப்பட்ட வரையில் ஐரோப்பியர்களின் மனஸ்தாபம் இல்லாமல் செய்ய முடியாத போயினும், யாவருக்கும் வியாபாரம், லேவாதேவி, குடியேற்றம் முதலிய ஸ்வதந்திரம் கிடைத்தது. ஜெர்மானியர் ஏராளமாகக் குடியேறினர். பிரிடிஷ், பிரெஞ்சு, ஜெர்மன் முதல்கள் போடப்பட்டன. பொது ஜனங்களுக்கு அதிகம் கடனாகவே கொடுக்கப்பட்டது.

## லத்தீன் அமெரிக்கா இதர தேசங்களோடு சேருகிறது.

அயல் தேசத்தினர் குடியேறியதாலும், அயல் நாட்டு முதல் உபயோகிக்கப்பட்டதாலும், இதர நாடுகளுடன் புதிய உடன்படிக்கைகள் செய்துகொள்ள வேண்டியிருந்ததாலும், லத்தீன் அமெரிக்க நாடுகள் இதர தேசங்களுடன் அதிகம் நெருங்கிப்பழக ஆரம்பித்தன. கப்பல் துறைமுகங்களும் இதர பொதுஜன சௌகரியங்களும் உண்டாக்கப்பட்டன. இதிலுள்ள எல்லா நாடுகளும் ஜன

நாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கின்றன. அச்சுநாட்டு ஏகாதிபத்தியக் கொள்கைகளை வெறுக்கின்றன. பொருளாதார முன்னேற்றத்தினால் தொழிலாளிகளின் கக்ஷி வலுத்திருக்கிறது. இவைகளின் பயனால் சில சமஉரிமைக் கொள்கைகளின் அம்சங்களும் தலைகாட்டி வருகின்றன. லாநேஸியன், லாபிரம்ஸா என்பவை பிரசித்த பத்திரிகைகள். மான்டிவிடியோ என்பது ஜெனிவாவிற்கு சமமாக பாவிக்கப்பட்டு ஸர்வதேசக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அமெரிக்கப் புதிய சட்டம் (New Deal) முதல் முதலாக உருகுவேயில்தான் வழங்கப்பட்டது. இதன் வியாபாரமும் ஜனத்தொகையும் இரட்டிப்பு மடங்காக ஆகியிருக்கிறது. பிரஸீலில் அரசனுக்கு அடங்கிய ஜனநாயகம் விளங்கிற்று. அதிகம் படித்தவரான இரண்டாவது பீட்ரோ சக்கிரவர்த்தியின் காலத்தில் பிரஸீல் நன்றாகக் கியாதியடைந்தது. தற்சமயத்தில் ஜனாதிபதி வார்கஸ் என்பவரின் கீழ் இருக்கிறது. இவர் ஏகாதிபத்தியக் கொள்கையின்படி (Totalitarianism) நடந்துகொண்டாலும் ஐரோப்பாவில் காணப்படும் நாஸிக்கொள்கைகளின் கெடுதிகள் இங்கே இல்லை. பிரஸீலின் சமூகம், பொருளாதாரம் இவைகளைச் சீர்படுத்தவே அதன் விளைபொருள்கள் உபயோகிக்கப்படுகின்றன.

அரசியல், சமூகம், ஜாதி, பொருளாதாரம் இவைகள் சம்பந்தமான பரீக்ஷைகளை நடத்துவதற்கு லத்தீன் அமெரிக்கா தகுந்த இடமாகக் காணப்படுகிறது. சில்லியில் சமூக சீர்திருத்த சம்பந்தமான இயக்கம் இருக்கிறது. உருகுவேயில் அரசியல், சமூகம் இவை சம்பந்தமான புதிய கல்பனைகள் செய்யப்படுகின்றன. பொலீவியாவிலும் பெருவிலும் அங்கிருந்த இந்தியர்கள் முன்னேற்றத்தையடைந்து வருகிறார்கள். மெக்ஸிகோவில் சமூக சம்பந்தமான உண்மை மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கு நடந்த புரட்சியானது குடியானவனுக்கும் தொழிலாளிக்கும் நன்மையைச் செய்யும் நோக்கத்துடன் நடந்தேறியது. ருஷ்யப் பொதுவுடமைப் புரட்சிக்கும் ஏழுவருடங்கள் முன்னதாகவே இது நடந்தது. ருஷ்யப் புரட்சியைக்காட்டிலும் வேறுபட்டது. ஏனென்றால் ஜனாதிபதி வார்காஸ் தயாரித்த 'எஸ்டாடோ நோவோ' என்பது இதாலிய பாஸிஸ்டு கொள்கையை ஒத்தது. மெக்ஸிகோவில் பிரத்தியேகமான பொருளாதார நிலையிருக்கிறது. ஜனநாயக தேசமாகவும் இருக்கிறது. 1940-ல் அவிலா கமாஷோ ஜனாதிபதியானது முதல் மெக்ஸிகோவில் மெக்ஸிகோவாஸிகளுக்குப் பிராதான்யம் கொடுக்கும் இயக்கம் ஏற்பட்டிருக்கிறது.

## பொருளாதார முன்னேற்றம்.

இவ்வுலகத்தில் லத்தீன் அமெரிக்காவில் தான் அதிக மூலப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பொலீவியாவில் தகரமும், வெனிஜுவேலாவில் எண்ணெயும், மெக்ஸிகோவில் உலோகமும், எண்ணெயும், சில்லியில் நைட்ரேட்டும், தாமிரமும், கொலம்பியாவில் காப்பிகொட்டையும், பிரஸீலில் சர்க்கரை, காப்பிக்கொட்டை, ரப்பர், பருத்தி முதலியவைகளும் உண்டுபண்ணப்பட்டு வியாபாரம் நடக்கிறது. அர்ஜென்டைனாவில் தானியமும், மாட்டு இறைச்சியும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பொதுவாக இங்கே ஏற்றுமதியானதில் 40 சதவிகிதம் ஐரோப்பாவிற்குச் செல்லுகின்றன. இருந்தாலும் பிரஸீலுக்கு வடக்கிலுள்ள பாகத்திற்கும் தெற்கிலுள்ள பாகத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. கரீபியன் கடலுக்கு அருகிலுள்ள நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் வியாபார சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கின்றன. தெற்கிலுள்ள நாடுகள் ஐரோப்பாவுடன் வியாபாரம் செய்துவருகின்றன.

## லத்தின் அமெரிக்காவிற்குப் பொருளாதார ஸ்வதந்திரம்.

இந்த யுத்தம் ஆரம்பமானதும் லத்தீன் அமெரிக்க வியாபாரம் தடைப்பட்டது. ஏனென்றால் ஐரோப்பிய நாடுகளுடன் வியாபாரம் செய்ய முடியவில்லை. இதனால் அங்கு ஏராளமாக மிஞ்சிப்போகும் சாமான்களை அனுப்பும் பிரச்னை உண்டாயிற்று. உடனே பொருளாதார ஸ்வதந்திரத்தைக் கொண்டாடியது. இதற்காக அயல் நாடுகளுக்குத் தேவையான சாமான்களைச் செய்யத் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன.



## அமெரிக்க நாடுகளை ஒன்று சேர்ப்பது.

தங்கள் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளும் சக்தி ஏற்பட்டதும் எல்லா அமெரிக்க நாடுகளையும் ஒன்று சேர்க்கும் உணர்ச்சி பரவி வருகிறது. இது 1826-ல் பனாமா மகாநாட்டில் பொலீவர் ஆரம்பித்தார். கொஞ்சம் கொஞ்சமாக, 1889-க்கும் 1928-க்கும் இடையில் நடந்த மகாநாடுகளில் அபிவிருத்தியடைந்தது. இந்த யுத்தத்தில் அமெரிக்கா சேர்ந்ததும் சில நாடுகள் அதன்படி நடக்க ஆரம்பித்தன. சில நாடுகள் ஜெர்மனியுடன் ராஜ்ய நட்பை முறித்துக்கொண்டன.

ஜனாதிபதி ரூஸ்வெல்டு தனது தீர்க்கத் திருஷ்டிக்குத் தகுந்தாற்போல் 'அயலார்களுடன் நட்பு' என்ற திட்டத்தை அறிவித்தார். இதன்படி மற்ற நாட்டு அரசாங்கங்களுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படும். மற்ற நாடுகளில் நிறுத்தப்பட்டிருக்கும் அமெரிக்க சைனியத்தை திருப்பியழைத்துக்கொள்ளப்படும். இந்தத் திட்டங்களுக்கு நல்ல பலன் கிடைத்தது. 1940-ல் அச்சுநாட்டு பயத்தைத் தடுப்பதற்கான திட்டத்தை லத்தீன் அமெரிக்கா ஒப்புக்கொண்டது. அமெரிக்க நாடுகளை பிறர் அடையாமலிருப்பதற்கான ஏற்பாட்டையும் அங்கீகரித்தது. இதற்குத் தகுந்த தந்திர முறைகள் கையாளப்படுகின்றன. 'அமெரிக்கப் பாதுகாப்பு' சம்பந்தமாக எல்லா நாடுகளின் பொருளாதாரம், ராணுவம், கப்பல் படை இவைகளை ஒன்றுசேர்க்க ஒப்புக்கொண்டன.

கடந்த டிஸம்பர் மாதத்தில் ரியோ டி ஜெனிரோவில் கூடிய 21 நாடுகள் பின்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றின. முதலாவதாக இதில் சேர்ந்துள்ள எந்த நாட்டை ஆக்கிரமணம் செய்தாலும் மற்ற நாடுகளையும் செய்த மாதிரிதான். இரண்டாவதாக ஒவ்வொருவருடைய பத்திரத்தை முன்னிட்டு பரஸ்பரம் உள்ள நட்பு அதிகமாகப் பாவிக்கப்படும். மூன்றாவதாக அந்த நாடுகளின் உள்நாட்டு சட்டதிட்டங்களுக்குத் தகுந்த விதமாக நடந்துகொண்டு ஜப்பான், இதாலி, ஜெர்மனி இவைகளுடன் உறவை ரத்துச்செய்து கொள்ளவேண்டும். நான்காவதாக மறுபடி சிநேகம் ஏற்படுத்திக்கொள்ளும்போது இதர நாடுகளையும் கலந்து கொள்ளவேண்டும்.

இவ்விதமாக லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்காவிற்கு நெருங்கியிருக்கும் ஆபத்தைத் தவிர்த்து, வெற்றியை முன்னிட்டு ஒன்று சேர்ந்திருக்கின்றன.

கடைசியாக கப்பல் தினக்கொண்டாட்டத்தின்போது லத்தீன் அமெரிக்காவிற்கு வந்துள்ள நாஸி பயத்தைப்பற்றி ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொன்ன மொழிகளுடன் முடிப்போம்:—

'அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் தனக்கு ஆக்கிரமண ஆசை கிடையாதென்று ஹிட்லர் பல தடவை சொல்லியிருக்கிறான். ஆனால் அவனது நீர்மூழ்கிகளும் விமானங்களும் மாறுபாடாக நடந்துகொள்ளுகின்றன. நாஸிப் புது திட்டமே இப்படித்தான்.

'ஹிட்லரின் அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட ரகசியப் படம் ஒன்று என் வசத்திலிருக்கிறது. அதில் மத்திய அமெரிக்காவின் ஒரு பாகத்தையும் தென் அமெரிக்காவையும் ஹிட்லர் சீர்திருத்தப்போகிறானாம்.

'இந்த பாகத்தில் தற்போது 14 நாடுகள் இருக்கின்றன. பெர்லின் பூகோள சாஸ்திரிகள் தென் அமெரிக்க எல்லைப் பிரிவினைகளைப் போக்கடித்து தென் அமெரிக்காவை 5 சிறிய நாடுகளாகப் பிரித்து தங்களது ஆளுகைக்குட்படுத்தியிருக்கின்றனர். இதோடு பனாமா ஜனநாயகத்தையும், பனாமா கால்வாயையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

'நாம் எவ்வளவோ நாடுகளை எதிர்த்து நின்றிருக்கிறோம். அதாவது கடல், காடு, பாலைவனம், சமவெளிகள், பொட்டல்கள், சமூகம், பொருளாதாரம், அமைப்பு முதலியவைகள் சம்பந்தமாகப் பலவிதக் கஷ்டங்களையனுபவித்து இருக்கிறோம்.

'தற்சமயத்தில் நம்மைப்பற்றி செய்துள்ள எதிரியின் முயற்சிக்குத் தகுந்தபடி நாம் நமது யுத்த நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.'

# வார யுத்தச் செய்திகள்.

## 18—7—42-லிருந்து 24—7—42-வரை.

**எகிப்து.**—எல் அலமீனுக்கு மேற்கே மத்திய முனையில் சண்டை செய்து கொண்டிருந்த பிரிடிஷ் துருப்புகள் எதிரி வரிசைகளைப் பிளந்துகொண்டும், எதிரிகளைப் பின்புறமாகத் தள்ளிக்கொண்டும் முன்னேறின. இவ்விஷயத்தை இதாலிய ஸர்க்கார் அறிக்கையே ஒப்புக்கொள்ளுகிறது. வியாழனன்று 7 மைல் முன்னேறின. ருவிஃஸெப் பீடபூமியுள்ள நிலயங்களைத் தாக்கிய எதிரிகள் விரட்டியடிக்கப்பட்டனர். அதனால் நேசதேசத் துருப்புகள் சொற்ப தூரம் முன்னேற முடிந்தது.

வடக்குப் போர்முனையில் சண்டை பிரமாதமாயிற்று. டெல்எலிஸாவை எதிரி மாறி மாறி பிடிப்பதும், விட்டுவிடுவதுமாக இருந்தான். இப்பொழுது அது நம் வசத்திலிருக்கிறது. மேலும் எல் மாக்ராட் (El Makhrhad), ருயன் (Ruin) இவைகளையும் எதிரி தாக்கினான். அவைகள் இப்பொழுது நேசதேசத்தார் வசத்தில் இருக்கின்றன.

சென்ற ஞாயிற்றுக்கிழமையிலும், திங்கட்கிழமையிலும் சண்டையில் ஓய்வு ஏற்பட்டிருந்தது. இருதரப்பார்களும் கடும்போருக்குத் தயாரித்துக்கொண்டிருந்தார்கள். மண் மாறி பெய்ததால் ஆகாய விமானங்களின் நடமாட்டமில்லை. செவ்வாய்க்கிழமை பொழுது போகும் நேரத்தில் புதிய யுத்தம் ஆரம்பித்தது. எல்லாப் பகுதிகளிலும் தளகர்த்தர் ஆசின்லெக் டாங்கிகளைக்கொண்டு தாக்கினார். வடக்குப் பகுதியில் அவர் முன்னேறியதின் பயனாக டெல் எல்லிஸா பாலம் பூராவும் இப்பொழுது பிரிடிஷார் கைவசமாகிவிட்டது. தெற்குப் பகுதியிலும் சில பாகத்தில் நமக்கு அனுகூலம் கிடைத்திருக்கிறது. எதிரி நம்பிக்கை இழந்து ஆக்கிரமிப்பைத் தடுத்து வருகிறான்.

ஆகாயத்திலும், சமுத்திரத்திலும் தாக்குதல்கள் அதிகரிப்பதினால் எதிரி ஸப்ளைகளை பெங்காஸி, டொப்ருக், பார்டியா, பாம்பா, மெர்ஸாமாட்ரு, பூகா (Fuka) கிரீட்டின் சமீபத்திலுள்ள ஸுடாசக்கடல் முதலிய இடங்களுக்குக் கொண்டு சேர்க்கமுடியவில்லை. ஆபிரிக்கக் கடற்கரைக்கு வந்து கொண்டிருந்த அச்சு நாட்டு சாமான் கப்பல்கள் மீது அமெரிக்க விமானங்கள் 21 தடவைகள் தாக்கின.

**ருஷ்யா.**—(a) வாரனேஷைக் கைப்பற்றவோ, அல்லது வளைத்துக்கொள்ளவோ, அல்லது அதைக் கடந்து செல்லவோ நாஸிகள் செய்த முயற்சி பலிக்கவில்லை. தற்காப்புப் பள்ளங்களை வெட்ட எத்தனித்தும் முடியவில்லை. அதற்கு அருகாமையிலுள்ள இரண்டு கிராமங்களிலிருந்தும் ஜெர்மானியர் வெளியேறும்படி செய்யப்பட்டார்கள். நதியைக் கடப்பதற்கான முக்கிய ஸ்தா னம் பிடிக்கப்பட்டது. வாரனேஷுக்கு வடமேற்கில் ஒரு இடத்தில் ஸோவியத் துருப்புகள் எதிரி வரிசைகளைப் பிளந்துகொண்டு; சென்றதாகவும் சொல்லப்படுகிறது. இருந்தாலும், இங்கு நிலைமை மிகவும் நெருக்கடியாகயிருக்கிறது என்றும், எதிரிகளுக்குக் கஷ்டம் அதிகரித்துவருகிறதென்றும் சமீபத்தில் வெளிவந்த மாஸ்கோ அறிக்கை கூறுகிறது.

**டான்நதி தீரத்தில்** கோரமான யுத்தம் நடக்கிறது. ருஷ்யர்கள் வெற்றிகரமாக வாபஸ் வாங்கமுடியாதபடி, நாஸிகள் கிரீட்டில் நடந்துகொண்டதுமாதிரி பாராசூட்கள் மூலமாக அங்கு துருப்புகளை ஏற்றி அனுப்புகின்றனர். பின் பக்கத்தில் சண்டையிடும் ருஷ்யத் துருப்புகள் தங்கள் தற்காப்பு ஸ்தலத்திற்குப் பின் வாங்குகின்றனர், மில்லிரோவோ, வோரோஷிலோவ்கிராட் இவ்விரண்டு இடங்களையும் ருஷ்யர்கள் காலி செய்துவிட்டனர். ரோஸ்டாவ் வரையில் எதிரி முன்னேறியிருக்கிறான். ரோஸ்டாவுக்கு கிழக்கு, வடகிழக்கு திசையிலுள்ள 120 மைல் தூரத்திலுள்ள ஸைமில்யான்ஸ்காயா (Tsymlyanskaya) என்ற இடத்திலும்,



ரோஸ்டாவுக்கு வடக்கே 20 மைல் தூரத்திலுள்ள நோவோசெர்ஹாஸ்க் என்ற இடத்திலும் கொடிய யுத்தம் நடப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தற்போது நடக்கும் போரில் ருஷ்யாவின் ஜீவநாடியான மார்க்கங்களைப் பாதுகாப்பதுதான் முக்கிய பிரச்னையாக இருக்கிறது. மாஸ்கோவிலிருந்து ஆஸ்ட்ரகான் வரையிலும் ஒரு இருப்புப் பாதையும், மற்றொன்று மாஸ்கோவிலிருந்து ஸ்டாலின்கிராடுக்கும், காஸ்பியன் கடற்கரைக்கும் செல்லுகின்றன. ஜீவநாடி போன்ற இம்மார்க்கங்கள் நாஸி விமானங்களுக்கு இலக்காக இருக்கின்றன. வோரோஷிலோவ்கிராடுக்கு தெற்கேயுள்ள யுத்தப் பிரதேசத்தில் சண்டை வரவர விஸ்தாரமாகிக்கொண்டுவருகிறது.

பால்டிக் கடலிலும், பாரன்ட்ஸ் கடலிலும் ஸோவியத் நீர்மூழ்கிகளும், விமானங்களும் ஜெர்மனியின் சாமான் கப்பல்களைத் தாக்கிவருவதால், அங்கு எதிரிக்கு துணைக்கப்பல்கள் அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வாரத்தில் எதிரிக்குச் சொந்தமான 5,000 டன், 8,000டன் நிறையுள்ள இரண்டு துருப்பேற்றிக் கப்பல்கள், 3 பீரங்கி படகுகளும், ஒரு கவசம்பூண்ட படகும் மூழ்கடிக்கப்பட்டது.

கொயனீக்ஸ்பர்க் (கிழக்குப் பிரஷ்யாவில்) என்ற நகரம் இந்த வாரத்தில் ருஷ்ய வெடி விமானங்களால் இருமுறை தாக்கப்பட்டது.

**சைனா.**—சீனர்கள் கிழக்கு கியாங்கியிலுள்ள டிஸிங்டன், ஜுயான், ஹெங்பெங், இவைகளை மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர். இன்னும் கியாங்ஸியின் கிழக்குப் பாகத்திலுள்ள ஸ்யோடன் (Tsaoton), ஸின்யுங் (Tsinung), ஸாடுவான் (Satuan) முதலிய இடங்களையும் எதிரிகளிடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். இந்த வாரத்தில் கிங்கி (Kinki), லென்சாங்கியாண்கிங்சௌ வின்ச்வான் முதலிய இடங்களைச் சீனர்கள் திரும்பப் பிடித்துக்கொண்டதாக தகவல் கிடைத்திருக்கிறது. சீனர்கள் திரும்பப் பிடித்துக்கொண்ட வின்ச்சௌவை (Wenchow) ஜப்பானியர் மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர். சைனாவிலுள்ள அமெரிக்க விமானங்கள் பூச்சௌ (Foochow)வுக்கு அருகாமையில் சென்றுகொண்டிருந்த சுமார் 2,000-டன் நிறையுள்ள 2 எதிரிக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்தன. காண்டன், ஹாங்கௌ இவ்விடங்கள் மீதும் குண்டுகள் வீசின. ஜப்பானிய தளங்கள் மீது விமானத் தாக்குதல்கள் கூடிய சீக்கிரத்தில் அதிகரிக்குமென்று அமெரிக்கச் சைனியத்திற்கு உதவியாக சைனாவில் வந்திருக்கும் விமானப் படையின் தலைவர், ஜெனரல் ஹெயின்ஸ் சொன்னார். தற்சமயம் நடந்துவரும் விமானப் போரில் இனிமேல் ஜப்பானிய விமானங்கள் முன்னேறித்தாக்க முடியாமல் போய்விட்டதென்றும், தற்காப்பு செய்து கொள்வதில்தான் ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதென்றும் பிரிடிஷ் விமானப்படைத் தலைவர், ஜெனரல் ஷெனால்ட் அபிப்பிராயப்பட்டார்.

**பர்மாவில்** விஸ்தாரமான பல வேறு இடங்களில் தாக்குதல்கள் நடந்தன. முக்கியமாக மாயூகுடாவிலுள்ள பாலெட்வா, க்வாஸான் முதலிய இடங்கள்மீது வெடிகுண்டுகள் வீசப்பட்டன. சின்ட்வின் நதிக்கரையில், கலேவா தளத்தில் பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. மேலும் மியிட்டா நதிக்கரையிலிருக்கும் கியிகான் (Kyigon), கலாடின் நதிக்கரையிலுள்ள ஸெபாட்டா டாக்கான், டோமா மியாங்க் (Htoma Myauk), ஆயிஸ்டர் தீவு முதலிய இடங்களும் தாக்கப்பட்டன. அக்கியாபிலேயே முக்கிய ராணுவ லக்ஷியங்கள் வெடிகுண்டுகளுக்கு இலக்காகின. அக்கியாப்புக்குத் தெற்கே, கியான்க்பியூ என்னுமிடத்திலுள்ள கப்பல்கள் வெடிகுண்டுகளாலும் யந்திர பீரங்கிகளாலும் தாக்குண்டன.

**பஸிபிக்.**—அலூஷியன் தீவுகளில் பாதுகாப்பில்லாத தீவுகளான அட்டுவாக் (Attuag), அகெட்டு (Agattu) இவ்விரண்டிலும் ஜப்பானியர்கள் வியாபித்துக் கொண்டு, டச்சுத் துறைமுகத்தையும், கிளன்கோட்டையையும் விமானங்களைக் கொண்டு தாக்கினார்கள். அமெரிக்க விமானங்கள் கிஸ்கா என்னுமிடத்திலுள்ள கட்டடங்களைத் தாக்கித் தகர்த்தன. அமெரிக்க நீர்மூழ்கிகள் மூன்று ஜப்பானிய நாசகாரிகளைக் கிஸ்காவுக்கு அருகாமையில் மூழ்கடித்தன.

பாபுவா வட சமுத்திரக்கரையிலிருக்கும் பர்னா என்ற இடத்தில் 1,500 முதல் 2,500 வரை படைத்துருப்புகளை ஜப்பானியர் இறக்கியிருக்கிறார்கள். தெற்கே 125 மைல்களுக்கு அப்பாலிருக்கும் மோர்ஸ்பி துறைமுகத்திற்கு இதனால் புதிதாக அபாயம் ஏற்பட்டிருப்பதாகத்தோன்றுகிறது. துருப்புகளை இறக்கும் பொழுது ஆஸ்திரேலியர்கள் எதிரிகளுக்கு பெருத்த சேதம் விளைவித்திருக்கிறார்கள். எதிரியின் துருப்பேற்றிக்கப்பல் ஒன்றும், படகு ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டன.

பிரிட்டிஷ் விமானப்படை.—வடமேற்கு ஜெர்மனி, ஹாலந்து, பிரெஞ்சுக் கடற்கரை பெல்ஜியம் இவைகளிலுள்ள முக்கிய இடங்களான ஹாபெக்பிளன்ஸ்பெர்க், எம்டன், செர்பர்க் முதலியவைகளை இடைவிடாது தாக்கியது.

1. கப்பற்படை.—ஸ்வீடிஷ் செஞ்சிலுவை சங்கத்தாரால் அமர்த்தப்பட்ட 1,584 டன் நிறையுள்ள ஸ்ட்ராபார்க் என்ற கப்பல் மத்தியதரைக்கடலில் சென்று கொண்டிருக்கும்பொழுது விமானத்தாக்குதலினால் மூழ்கடிக்கப்பட்டது. அக்கப்பல் 3,000 டன் நிறையுள்ள கோதுமையை கிரீஸுக்கு ஏற்றிச்சென்றது. அது திரும்பிவரும்பொழுது வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. ஜெர்மனி, இதாலி இவ்வரசாங்கங்கள் அதைப் பாதுகாப்பதாக உறுதி சொல்லியும்கூட அக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

2. துருக்கிக்குச் சொந்தமான 1,200 டன் நிறையுள்ள மிகவும் பெரிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று சனக் (Chanak)குக்கு அருகாமையில் ஏதோ காரணத்தால் மூழ்கடிக்கப்பட்டது.

1. நாஜி புதுதிட்டம்.—ஹாலந்தில் ரகசிய கலகங்கள் மீண்டும் நடந்தால் பிணையாளிகளின் உயிரை வாங்கப்படுமென்று ஜெர்மன் கமாண்டர் சொல்லியிருக்கிறான். ஆடன்வான் ஹேகர்டன் என்பவன் ஹாலந்து தேசத்தில் ஒரு கவி பாட்டுக்களும் பாடுவான். அவன் கிப்ளிங்கைப்போலுள்ளவன். அவன் உயிரையும் வாங்கப் படுவதாகப் பயமுறுத்தப்பட்டிருக்கிறான்.

2. யூகோஸ்லாவியாவில் ஜெர்மன் படைகளும், ஹங்கேரியப்படைகளும் ஜெனரல் மிஹயலோவிட்சியின் கலகத்தை அடக்க அனுப்பப்பட்டது. இக்கலகம் டான்யூப் பூராவிலும் பரவியிருக்கிறது. யூகோஸ்லாவிய கொரில்லாப் படைகள் கான்ஜிகா (Konjica) நகரினுள் பிரவேசித்துள்ளன. ஸரஜெவோ (Sarajovo), மாஸ்டல் (Mostal) இந்நகரங்களிலிருந்து ஜெர்மானியர் விரட்டப்பட்டனர். இவை இரண்டுக்கும் இடையில் 12-மைலுக்கு இருப்புப்பாதை அகற்றப்பட்டது.

3. ஜ்ரீர்ஜ் (Zrierz) என்ற இடத்தில் ரகசியப் போலீஸ் ஏஜெண்டுகளைக் கொலை செய்ததற்காக 7,000 போலந்துகாரர்கள் பிடிக்கப்பட்டு, 100 பேர்கள் கொல்லப்பட்டனர். இதில் 96 பேர் புருஷர்கள், நாலு ஸ்திரீகள். இதில் வைத்தியர்களும், பத்திரிகை நிருபர்களும், இரண்டு பாதிரிமார்களும் அடங்கியிருக்கின்றனர்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிட்டிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 13—7—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு பெரிய துறைமுகம்—டூயிஸ்பர்க் (Duisberg). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 13—7—42. (திங்கட்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்—எல்டாபா (Eldaba). | | | |
| | டாங்கிகளின் கூட்டம்—ஏராளமான வண்டிகள்—எல்டாபா (Eldaba)விலிருந்து எல் அலமீன் (El Alamein) பிரதேசம் வரையிலுள்ள பிரதேசத்தில் | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு-அலோர் தீவுகள் (Alor Islands)-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல் துறையிலுள்ள கட்டடங்கள், கப்பல்கள்—கலாபாகி (Kalabahi). | ஒரு சிறு கப்பல் மூழ்கிற்று. | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ஸலாமூவா (Salamaua). | | | |
| 14—7—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதிக் கடல்களில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | ஏராளமான எதிரி டாங்கிகளும், துருப்புகளும்—எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில். | | | |
| | டோப்ருக்—(Tobruk). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—போர்முகம் முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—ஸலாமூவா (Salamaua). | | | |
| 15—7—42. (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஜெர்மானியர் முகாம்கள் பீரங்கி ஸ்தானங்கள், துருப்புகள், மற்ற லக்ஷியங்கள்.—டியப் (Dieppe) பிலிருந்து எடபிள்ஸ் (Etables) வரையுள்ள பிரான்ஸின் கடற்கரை. | | | |
| | விமான எதிர்ப்புகள்.—செர்பர்க் (Cherbourg), பொலாயின் (Boulogne) பிரதேசங்களில். | | 4 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **15—7—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கப்பல் துறைகளிலுள்ள கட்டடங்கள், கப்பல்கள்—பெங்காஸி (Benghazi) துறைமுகம். | பெருந்தீக்கள் கிளம்பின. | 1 விமானம். | 7 விமானங்கள். |
| விரோதி டாங்கிகள், கவசம் பூண்ட வண்டிகள்—விரோதியின் முன்னணி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். | | | |
| தூரக்கிழக்கு (Far East)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கலேவா (Kalewa) மியிட்டா (Myittha). | | | |
| படகுகள்—கெலிமியோ (Kalemyo). | | | |
| **16—7—42.** (வியாழக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—தொழிற்சாலைகள், ராணுவ லக்ஷியங்கள்—ரூர் (Ruhr) வடமேற்கு ஜெர்மனி (Germany) ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள் முதலும் மற்ற லக்ஷியங்கள்—பிரெஞ்சுக் கடற்கரையில். | | 1 விமானம். | |
| சாயந்திரம்—நீர்மூழ்கி கட்டுமிடங்கள்—லூபெக் (Lubeck). கப்பல் கட்டுமிடங்கள்—பிளென்ஸ் பர்க் (Flensburg). | | 2 விமானங்கள். | |
| இரவில்—சுரங்கவெடிகள் போடுவது—விரோதிக் கடல்களில். | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| ராணுவ லக்ஷியங்கள்—விரோதி சைனியங்களுக்குப் பின்புறம். | | | |
| போக்குவரத்து வண்டிகளின் கூட்டம்—எல்டாபா (El Daba) பிரதேசத்தில். | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்)- | | | |
| கப்பல் துறையிலுள்ள கட்டடங்கள், கப்பல்கள்—ரபால் (Rabaul) துறைமுகம். | | | |
| தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| வேவுபார்த்தல்.—தீவிலுள்ள ராணுவ லக்ஷியங்களின்மேல். | | | |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **16—7—42.** (வியாழக்கிழமை).—தொடர்ச்சி. | | | |
| தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| விமான நிலயம்—ஆக்கியாப் (Akyab). | | | |
| ஆய்ஸ்டர் தீவு (Oyster Islands). | | | |
| **17—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| இரவில்.—சுரங்க வெடி போடுவது—விரோதிக் கடல்களில். | | | |
| விமான நிலயங்கள்—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| கப்பல்கள்.—பாம்பா (Bomba) குடாவிலும், பார்டியா (Bardia)விலும். | | | |
| பெட்ரோல் கிடங்குகள்.—மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| விரோதிக் கூட்டங்கள்—எல் ஆலமீன் (El Alamein) பிரதேசத்தில் முன்னணிகளுக்குப் பின்புறம். | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள்—போர்முனை எங்கும். | | | |
| தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—கீடா (Kieta). | | | |
| தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| வேவு பார்த்தல்—விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| சைனா (China)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| ஜப்பானியக் கப்பல்கள்—ஹான்கௌ (Hankow). | | | |
| **18—7—42.** (சனிக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—ராணுவ லக்ஷியங்கள்—ரூர், வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| விரோதி துணைக்கப்பல் கூட்டம்—சேர்பர்க் (Cherbourg) தீபகற்பத்திற் கருகாமையில். | 1 கப்பல் மூழ்கிற்று. | | |
| இரவில்—சுரங்க வெடிகள் போடுவது—விரோதிக் கடல்களில். | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான எதிர்ப்புகள்.—முன்னணிப் பிரதேசங்களில்—டொப்ருக் (Tobruk). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்தரங்கம் முழுவதிலும். | இவ்வாரத்தில் ஜுலை 11-18 வரை நேர்ந்த நஷ்டம். | 137 விமானங்கள். | 211 விமானங்கள். |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **18—7—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| தூரக்கிழக்கு—(Far East)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| வேவு பார்த்தல்.—தென்மேற்கு பஸிபிக் பிரதேசங்களில். | | | |
| **19—7—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—கவசம்பூண்ட சாமான் ஏற்றும் கப்பல், சுரங்கவேடி வாரும் கப்பல்.—நார்வே (Norway) கரைக்கருகாமையில். | | | |
| இரண்டு கப்பல்களும் கடற் தாக்குண்டன. | | | |
| மின்சார உற்பத்திசாலைகள்.—சொக்யூஸ் (Chocques), மாஸின்கார்ப் (Mazingarbe). | | | |
| இதர தொழிற்சாலைகள்.—ஆக்கிரமித்த பிரான்ஸில் (France) உள்ள லில்லி பெதூன் (Lille Bethune) பிரதேசம். | | | |
| விமான எதிர்ப்புகள்.— பாஸ்டி கலே (Pas de Calais) பிரதேசத்திற்கு அருகாமையிலுள்ள கடற்கரை ஜில்லாக்களில். | | | 1 விமானம். |
| இரவில்.—விஜிஸாக் (Vegesack). | | | |
| லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கப்பல்துறை பிரதேசம், கப்பல்கட்டு மிடங்கள், துறைமுகம்.—டொப்ருக் (Tobruk). | | | |
| மெர்ஸா மாட்ரு (Mersa Matruh) விரோதி டாங்கிகள் போக்குவரத்து.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| எதிர்ப்பதும், வேவு பார்ப்பதும்.—எல் அலமீனி (El Alamein)ல் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலையங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| தூரக்கிழக்கு—சைநா (China)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| ஜப்பானிய சைனியத் தலைமை ஸ்தானம்.—லின்ச்வான் (Linchwan). | | | |
| தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **20—7—42.** (திங்கட்கிழமை.) | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—பற்பல ரயில்வே லைன்களுக்கு—ஆக்டிவில்லி (Octeville)க்கும், லிட்ரிபோர்ட் (Letreport)டுக்கும் இடையே. | | | |
| கப்பலை எதிர்த்தாக்கும் கவசம்பூண்ட சிறு யந்திரம்.—ஸோம் (Somme) குடாவில். | | | |
| ரயில்வே ஸ்டேஷன்.—டியப் (Dieppa) புக்கு வடக்கே. | | | 1 விமானம். |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|
| **14—7—42.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| மால்டா (Malta) | | 3 விமானங்கள். | |
| தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **15—7—42.** (புதன்கிழமை). | | | |
| பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| மால்டா (Malta). | | | |
| எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| பிரிடிஷ் ஸ்தானங்கள்—எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில். | | | |
| **16—7—42.** (வியாழக்கிழமை). | | | |
| பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| மால்டா (Malta). | | | |
| **17—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | |
| பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை லண்டன் (London) பிரதேசத்தில் ஒரு இடம். | | 1 விமானம். | |
| மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டை—டோலகி (Tulagi). | | 2 விமானங்கள். | |
| **18—7—42.** (சனிக்கிழமை). | | | |
| பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| மால்டா (Malta) | | | |
| எகிப்து (Egypt)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| நேச நாடு விமானங்கள் இறங்குமிடம்—பொரல் ஆரப் (Berel Arab) பிரதேசத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு கள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 19—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| 20—7—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta) | | 1 விமானம். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(ஜப்பானிய விமானங்களால்). மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**தேசீய யுத்த முன்னணி. லாபம் சம்பாதிப்பது.**

யுத்த முன்னணியில் எல்லாவித விஷயங்களும் கவனிக்கப்படவேண்டும். முக்கியமாக வியாபாரிகள் அதிகலாபம் அடையாமல் செய்வதே யுத்த சேவை செய்கிறவன் கவனிக்கவேண்டிய விஷயமாகும். விலை வாசிகளைக் குறைத்து விற்கும்படி செய்து பொதுமக்கள் கலவரமடையாமல் செய்வதே ஒரு பெரிய காரியமாகும். உணவுப் பண்டங்களுக்கும் இதர முக்கிய சாமான்களுக்கும் அதிகம் விலை கொடுக்கவேண்டியிருப்பதாலேதான் யுத்தத்தின் பளுவைப் பொதுமக்கள் பொறுக்கவேண்டியிருக்கிறது. இதனால் யுத்தத்தை முதலில் நிந்திக்கிறார்கள். அடுத்தபடியாக வியாபாரிகளை நிந்திக்கிறார்கள். ஏதோ தங்களுக்குப் பரிதாபகர நிலை வந்து, தத்தளிக்கிறதாக எண்ணுகின்றனர். இந்த நிலையில் அதிக லாபமடையும் முறை நின்றால், பொது மக்களின் கலவர நிலை மீளும். எதிரியை எதிர்க்கும் உணர்ச்சியும் சக்தியும் அதிகரிக்கும்.

இவ்விதம் செய்யவேண்டுமென வாயால் சொல்லுவது சுலபம். காரியத்தில் செய்வது சிரமம். அரசாங்கத்தார் அநேகமான முயற்சிகளை எடுத்துவந்த போதிலும் நிலைமை அதிகரித்துக்கொண்டேபோகிறது. இதைத்தவிர சாமான்களைச் சேமிப்பது, போக்குவரவு, வசதி முதலிய பிரச்னைகள் இருக்கின்றன. வியாபாரி மிகவும் கெட்டிக்காரத்தனமாக நடந்துகொள்ளுவான். பொய்யான இன்வாய்ஸ்களைக் காண்பிப்பான். கொடுக்கும் பணத்திற்கு ரசீது கொடுக்க மறுப்பான். அரசாங்கத்தார் நிர்ணயித்திருக்கும் விலைக்குத்தான் சாமான்களை விற்கவேண்டுமென்று பொதுமக்கள் நிர்ப்பந்தித்தால் 'தன்னிடம் சாமானே இல்லை, அடுத்த கடைக்குப்போ' என்பான். அல்லது மட்டமான சாமான்களையும், கலப்பான சாமான்களையும் விற்கத்தோன்றும். வியாபாரிகளாகச் சேர்ந்து பொதுவாக ஒரு விலையை வைத்துக்கொண்டாலும் பொதுஜனங்கள் அதிக விலையைத்தான் கொடுக்க நேரும். இனி கொஞ்ச நாட்களில் விலை அதிகரிக்கும் என்று பிரஸ்தாபம், வந்தாலே போதும். இப்போதே வியாபாரிகள் விலைகளை உயர்த்திவிடுவார்கள். இந்த சந்தர்ப்பத்தில், நமது உணவுப்பொருள் உள்நாட்டிலேயே பயிரிடப்படுகின்றன. அவைகளுக்கும் அயல்நாட்டு நிலைமைக்கும் அதிக சம்பந்தமில்லை என்பதை உணரவேண்டும்.



அடுத்தபடியாக இதர சாமான்களெல்லாம் யுத்தகாலத்தில் விலை உயர்ந்ததால் உணவுப்பண்டங்களின் விலையும் உயர்ந்துவிட்டதாக வியாபாரிகள் சொல்லுகிறார்கள். உண்மையாதெனில் எல்லாவற்றிற்கும் வியாபாரிதான் காரணம். பர்மா, இந்தோ-சைனா நஷ்டமானதும், மத்தியக்கிழக்கு நாடுகளுக்கு சாமான்களை அனுப்பவேண்டியிருப்பதும், முக்கிய காரணங்களாக இருந்தாலும், சாமான்களைச் சேமித்துவைக்கவேண்டுமென்று நினைப்பதும் விலைகள் உயர்ந்ததற்கு ஒரு காரணம். தன்னிடம் சாமான்கள் இல்லையென்று காண்பிக்க ஒருவருக்கும் தெரியாத இடத்தில் கொண்டு பத்திரம் செய்து விடுகின்றனர். சாமான்கள் கிடைக்கவில்லையென்று சொல்லுவதற்கு பெரிய வியாபாரிகள் காரணம். அதேவிதமாக சிறுகடைக்காரர்கள் ஏழைமக்களின் கஷ்டங்களைத் தெரிந்துகொள்ளாமல், வாய்த்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். பெரிய முதலாளி மூட்டைக்கு சில அணுக்களை உயர்த்தினால் சிறு கடைக்காரன் ஒரு அணுவிற்கு காலணு வீதம் உயர்த்திவிடுகிறான்.

இவ்விதம் நடப்பதைத் தடுக்கவேண்டுமென்று சொல்லுவது மாத்திரம் போதாது. உண்மையிலேயே அதைத் தடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

சாதாரண சமயங்களில், ஏராளமாக சாமான்களை உற்பத்தி செய்தாலும், போட்டியிருந்தாலும், விலை வாசிகள் சகாயமாகும். யுத்த சமயங்களில் வியாபாரிகள் ஒன்று சேர்ந்துகொண்டு விலைகளை உயர்த்துவதால் போட்டிக் கடைகள் ஏற்பட்டால் தான் பொதுஜனங்களுக்கு சாதகமேற்படும். உணவுப்பொருள்களை அதிகம் உற்பத்தி செய்யும் திட்டம் கொஞ்ச நாள் சிரமித்துத் தான் பலனளிக்கும். அதிகவிலை கொடுக்க மறுக்கும் படி பொதுஜனங்களைச் சொல்லுவதும் அசாத்தியமான காரியமாக இருக்கிறது. ஏனென்றால் உண்க உணவும், உடுக்க உடையும் அத்யாவசியமாகவே இருக்கின்றன. கடைகளையும், ஸ்டோர்களையும் வைத்து நடத்தும் படி அரசாங்கத்தாரை வேண்டப்படுகிறது. வியாபாரம் என்பது தந்திரமான தொழில். அதிகப் பழக்கம் இருக்கவேண்டும். பிறரை ஏமாற்றுவதிலேயே தான் கருத்து. அரசாங்கத்தாருக்கு அவ்வளவு பழக்கம் இருக்காது. ஆகையால் இடையிலுள்ளவர்கள் ஏமாற்றாதபடி ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். ஆனால் இதில் ஒரு விசேஷம், ஏழைகளுக்குக் கடன் கொடுக்கமுடியாது. இந்த சிரமத்தைத் தீர்ப்பதற்குப் பொதுமக்களே ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களாக அமைத்துக்கொண்டால் சாதகமான பலன் கிடைக்கும். இதிலும் எல்லாப் பொதுமக்களுக்கும் வியாபாரத் தோது தெரியாது. ராஷ்டேல் கிராமத்தில் முன்வந்தமாதிரி எல்லா கிராமத்திலும் முன்வரமாட்டார்கள். இருந்தாலும் யுத்த காலத்திலும், பிற்பட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருந்தால் தான் நன்மையேற்படும். கிராமங்களில் சில்லறை வியாபாரிகளின் கொடுமை நீங்கும். கொள்ளையடிக்கமுடியாது. ஜனநாயக தேசிய வாழ்க்கையை அமைக்க ஹேதுவாகும். ஆத்மசக்தியும், கௌரவமும் ஓங்கிவளரும்.

தேசிய யுத்த முன்னணியில் சேவை செய்கிறவர்கள் இந்த பலவித அம்சங்களை எடுத்துரைத்து அதிக லாபம் அடிப்பதைத் தடுக்கவேண்டும். கசக்கி வாங்குவதையும் தடுக்கவேண்டும். பெரிய வியாபாரிகள், தேசாபிமானத்துடன் நடந்து கொள்ளவேண்டும். இது நடக்காத இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த முயலவேண்டும். அல்லது ஏற்கனவே இருக்கும் சங்கங்களைப் புதிய நிலைகளுக்குத் தக்கவாறு நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். தனக்குப் பழக்கமான இடங்களில் சமாதான முறையிலேயே பிரசாரம் செய்து காரியங்களைச் சாதிக்கவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**ருஷ்ய நிலைமை**

கவலைக்கிடமான தாக இருந்தாலும் இடை இடையில் திருப்திகரமான செய்திகளும் கிடைக்கின்றன. ஜெர்மானியரின் தந்திரங்கள் பின் கண்டவிதமாகக் காணப்படுகின்றன. முதலில் யூக்ரேனின் கீழ் பாகங்களைப் பிடிக்கவே நாஸிகள் முயற்சித்தனர். அடுத்தபடியாக வால்காவை நோக்கி முன்னேறி காகஸஸிலிருக்கும் ருஷ்யப் படைகளைப் பிளந்து செல்லும் எண்ணம் இருக்கிறது. இதன்மத்தியில்

வாரனேஷ் இருக்கிறது. பிரயான்ஸ்க், மாஸ்கோ, கலினின் பிரதேசங்களில் நடக்கும் சண்டைகள் மும்முரமாக இல்லை. முக்கியமாக ருஷ்யப் படைகளை வடக்கில் ஈடுபடுத்தவே இப்பிரதேசங்களில் சண்டை நடத்தப்படுகிறது. வாரனேஷுக்குத் தெற்கில் 5 எதிரிப்படைகள் இருக்கின்றன. ஒன்று கர்ஸ்கிலிருந்து ஸரடாவை நோக்கி வந்து வாரனேஷில் தடுக்கப்பட்டது. இரண்டாவது பொகுசரிலிருந்து (Boguchar) டான் நதிவழியாக முன்னேறுகிறது. மூன்றாவது கன்டமிராங்காவிலிருந்து டான் பிரதேசத்தை நோக்கிவருகிறது. நான்காவது மில்லரோவோவிலிருந்து ஸ்டாலின்கிராட்டை நோக்கி வால்சாவழியாக வருகிறது. இது டானிலிருந்து 50 மைல் தூரத்திலிருக்கிறது. ஐந்தாவது மில்லரோவோவிலிருந்து ரோஸ்டவ்வை நோக்கியும் போகிறது.

இவ்விதமாக வாரனேஷுக்கு வடக்கில் சிறிய சண்டையே நடக்கிறது. தெற்கில் பெரிய எதிர்ப்புகள் நடைபெறுகின்றன. ஜெர்மன் சைனியங்கள் டான் நதியின் கரையிலும் டானெட்ஸ் குடாவில் உள்ள ஸ்டாலின்கிராட், ரோஸ்டவ் நகரங்களைக் கைப்பற்றவும் சண்டை செய்கின்றன.

இதில் ஒரு விசேஷமென்னவென்றால் வாரனேஷில் நடக்கும் பெரிய எதிர்ப்புதான். வாரனேஷைப் பிடித்ததாக ஜெர்மன் கூற்று பொய்யானது. இரண்டு வாரகாலமாக வீணாக எதிர்த்து நின்றும் பலிக்கவில்லை. இதனால் அதன் சுற்றுப்புறங்களெல்லாம் நரகலோகத்திற்குச் சமமாகச் செய்யப்பட்டது. மாஸ்கோவிலிருந்து காகஸஸுக்குப்போகும் மார்க்கம் தடைபட்டிருக்கிறது. வாரனேஷுக்குத் தெற்கில் டான் நதியைக்கடந்தும் ருஷ்யர்கள் மேற்கே வந்திருக்கின்றனர்.

அடுத்தபடியாகத் திருப்திகரமான விஷயம் என்னவென்றால் தெற்கிலுள்ள ருஷ்யப் படைகள் அமைதியுடனே பின்னிலைகளுக்குப் போகின்றன. அங்கே சாதகமான இடங்களை அமைத்துக்கொண்டு எதிர்ப்பார்கள். ருஷ்யச் சைனியங்கள் பிளவுபடவுமில்லை. பிரிக்கப்படவுமில்லை. ருஷ்யர்கள் ஒற்றுமையுடனேயே இருக்கின்றனர். ருஷ்யா எதிரிகளை எதிர்த்தடிக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடனிருக்கிறது. குயிபிஷெவ்விலிருந்து மாரிஸ் ஹின்டஸ் என்பவர் சொல்லும் விதமாக 'ருஷ்யா அதைரியம் கொள்ளவில்லை. பிரதேசங்களை எதிரி பிடித்ததாலும் பாதகமில்லை. ஏனென்றால் ஆகாசங்கு எதிரிக்குப் பிரமாதமான நஷ்டம் விளைந்திருக்கிறது. எதிரி முறியடிக்கப்படும் காலத்தையே பிரதீக்ஷித்திருக்கவேண்டும். சென்ற மாரிகாலத்தில் டுலாவைப் பிடிக்கமுடியாமல் மாஸ்கோவிற்குச் சென்றதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மறுபடி அங்கிருந்தும் விரட்டப்பட்டான்.'

மனித சக்தியில் ருஷ்யாவில் நிச்சயமான ஆதிக்கம் இருக்கிறது. யூக்ரேன் நஷ்டமானாலும், விவசாய நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. ஏனென்றால் டான், டானெட்ஸ் பிரதேசத்தில் எதிரியின் தொந்தரவுக்கிடையிலேயே தானிய அறுவடை செய்யப்பட்டது.

வழக்கப்படி ஜெர்மன் ஒலிபரப்பு அராபிய பாஷையில் பொய்யான விஷயங்களைத்தான் சொல்லிவருகின்றன: 'குறைக்கு எதிர்ப்புகளைச் செய்ய ருஷ்யர்களுக்குச் சக்தியில்லை.' ஆனால் உண்மை யாதெனில் 1912 வருஷம் மே மாதத்தில் 1911 ஜூனைவிட 100 சதவிகிதம் அதிகமாகவே ருஷ்யாவில் யுத்த சாமான்கள் உற்பத்தி செய்யப்பட்டன. யூராலுக்குப் பக்கத்தில் நிலக்கரி, உலோகங்களை உற்பத்தி செய்யவேண்டுமென்று ஸ்டாலின் சொன்னபடி நடைபெறுகிறது. உதாரணமாக விஸ்ரா—பாஷ்கிரியா என்ற இடத்திலும், மத்திய ஆசியாவிலும் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் 70 லக்ஷம் டன், இது காகஸஸில் உற்பத்தி செய்யப்படுவதைக் காட்டிலும் அதிகம்.

இதே வாரத்தில் ஜப்பான் ஒலிபரப்பானது பின்கண்ட விதமாகச் சொல்லப்பட்டது. ருஷ்யர்களுக்கும் பிரிட்டிஷ்காரர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு ஆறு வாரகாலமாகியும் ஒரு உதவியும் ருஷ்யாவிற்குச் செல்லவில்லையாம். இது பொய்யானதென்று உற்பத்தி இலாகா மந்திரி காப்டன் ஆலிவர் லிட்டில்டன் சொல்லி



யிருக்கிறார். ஆல்டர்ஷாட் நகரில் சனிக்கிழமையன்று அவர் சொன்னதாவது:— "ஏற்கனவேயே 2,000 டாங்கிகள் அனுப்பப்பட்டிருக்கும், மத்தியக்கிழக்கு முதலிய இடங்களுக்குத் தேவைக்குத் தக்கவாறு அனுப்பியும் சராசரியாக வாரத்திற்கு 50 டாங்கிகள் வீதம் செல்லுகின்றன. ஜூன் வரை அனுப்புவதாகச் சொல்லப்பட்டதைவிட 11 சதவிகிதம் அதிகமாக மே மாதத்திலேயே அனுப்பப்பட்டிருக்கிறது. 'ருஷ்யாவிற்கு அனுப்பப்படும் உதவி, திட்டத்தைவிட அதிகமாகவே' இருக்கிறது என்று ஒருவர் சொன்னார்.

ஜூலை 9ல் ஜெர்மன் ரேடியோவில் நேசதேசத் துணைக்கப்பல் கூட்டத்திலிருந்த 32 கப்பல்களை அழித்ததாயும், அவைகளில் டாங்கிகளும், விமானங்களும் உணவுப்பொருள்கள் இருந்ததாயும் சொல்லப்பட்டது. ஆர்டிக்கில் சஞ்சரித்து வரும் டர்பிட்ஸ் என்ற ஜெர்மன் சண்டைக் கப்பலும் இதில் ஈடுபட்டிருந்ததாயும் சொல்லப்பட்டது. உண்மை யாதெனில் ஜெர்மன் யூ படகுகளும், பாய்ச்சல் விமானங்களும் இருக்கும்போதே இக்கப்பல் கூட்டம் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தது. இந்த விவரம் நியூயார்க் ரேடியோவிலும் பிரவ்தாவ் பத்திரிகையிலும் சொல்லப்பட்டுள்ளது. வான் டர்பிட்ஸ் தாக்கப்பட்டதினால் அவமானத்தைப் போக்கடிக்கவே இம்மாதிரி ஜெர்மன் பிரசாரம் செய்யப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**தூரக்கிழக்கு.** பிலிப்பைன்ஸ், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், ஸயாம், மலேயா, பர்மா முதலியவைகளை ஜப்பான் வியாபித்துக் கொண்டதிலிருந்து அவைகளைப் பாதுகாக்கும் வேலையில் தற்போது ஈடுபடவேண்டியிருக்கிறது. முக்கியமாக நேசதேச விமானத் தாக்குதலிலிருந்து பாதுகாக்கவேண்டியிருக்கிறது. இதற்காக சைனா யுத்தத்தை சீக்கிரம் முடிக்கப்பார்க்கிறது. அதன் விமான தளங்களையும், கப்பற் துறைகளையும் ஆக்கிரமித்துக்கொண்டு வருகிறது. நேசதேச தளங்களைப் பிடிப்பதற்கும் சித்தமாக இருக்கிறது. விளாடிவாஸ்டக் உட்பட ருஷ்யக் கடற்கரையைக் கைப்பற்றவும் தயார். ஏனென்றால் இந்த இடங்களிலிருந்து தான் தனக்கு ஆபத்து என்று கண்டுகொண்டிருக்கிறது. இந்த பயத்திற்காக மஞ்சுகோவில் ஏராள படைகள் திரட்டப்படுகின்றன. அலுஷியனிலும் விமான தளத்தைத் தயார் செய்து வருகிறது. ருஷ்யாவிற்குச் செல்லும் அமெரிக்க தளவாடங்களையும் தடுத்துவிடலாம். ஜெர்மனி வெற்றிபெறும் போல் காணப்பட்டாலும் ருஷ்யாவையும் தாக்கலாம். மேலும் தனக்கு லாபம் கிடைக்கும் போல் காணப்பட்டால் மற்ற பகுதிகளில் எதையாவது தாக்கும். இவ்விதமாக ஜப்பானின் செய்கை தன்னலம் கருதியதாகவே இருக்கிறது.

வி வி வி வி, வி வி வி

**எகிப்து.** இவ்விடத்தில் நடந்த சண்டையை கவனிக்குங்கால் ஜெனரல், ஆகின்லக்கிற்கு, சிறிய வெற்றிகிடைத்ததாகவே சொல்லலாம். எல் அலமீனுக்கு அருகில் கடலுக்கும், பாலைவனத்திற்கும் இடையில் யுத்தரங்கம் அமைந்தது தான் காரணம். இதை எளிதில் சூழ்ந்து கொள்ளவும் முடியாது. விட்டுவிட்டுப் போகவும் முடியாது. சரியான சமயத்தில் புதிய படைகளும், டாங்கிகளும், பீரங்கிகளும் வந்துசேர்ந்தன. ஆகின்லக்கின் கீழ் பிரிட்டிஷ், இந்தியர், தென் ஆப்பிரிக்கர், ஆஸ்திரேலியர், நியூஸிலாந்தினர் ஆக சாம்ராஜ்யத்தின் பல பாகத்தினர் சண்டை செய்கின்றன.

ஆகின்லக்கின் படைக்கு ஜெனரல் லீ டாங்கிகளும், (Honeys') என்ற அமெரிக்க ஜெனரல் ஸ்டூவர்டு டாங்கிகளும், பிரிட்டிஷ் வாலண்டைன் டாங்கிகளும், 25 பவுண்டு பீரங்கிகளும் நவீன முறையான மற்ற ஆயுதங்களும் வந்திருக்கின்றன. அமெரிக்க பெரிய விமானங்கள் எதிரி நிலயங்களையும், போக்குவரத்துகளையும், கான்வாய் கப்பல்களையும் தாக்கிவருகின்றன. அமெரிக்க விமானப் படைத்தலைவரான ஜெனரல் ப்ரரிடன் புது டெல்லியிலிருந்து கெய்ரோவிற்கு மாற்றப்பட்டார்.

எல் அலமீனுக்கு மேற்கே 6 மைல் தூரத்திற்கு நேசதேசப்படை முன்னேறி டெல் எலிஸாவில் 2,000 கைதிகளைப் பிடித்தது. இவைகளுக்குப் பிரதியாக ரோமல் தீவிர முயற்சி செய்தான். முதல்நாள் மத்தியபாகத்தில் தாக்கி 20 டாங்கிகளை இழந்தான். இரண்டாம்நாள் வடக்கே டெல் எலிஸாவைத் தாக்கினான். பயனொன்றுமில்லை. மூன்றாம்நாள் டெல் எலிஸாவை மறுபடி தாக்கி சிறிதளவு இடத்தையும் பிடித்தான். ஆனால் உடனே விட்டுவிட்டான். அதே காலத்தில் ருவீஸ்டு பிரதேசத்தை நேசதேசங்கள் பிடித்தன. நான்காம்நாள் ருவீஸ்டை மறுபடி எதிரி தாக்கினான். ஐந்தாம்நாள் ருவீஸ்டைத் தாக்கியும் பலிக்கவில்லை. ஆகவே சண்டை முன்னும் பின்னுமாக நடக்கிறது. எகிப்திலிருந்து அவனை விரட்டும் வரை நாம் திருப்திகொள்ளக்கூடாது.

வி வி வி வி வி வி வி

**அலெக்ஸாண்டிரியாவில் பிரெஞ்சு யுத்தக் கப்பல்கள்.** இரண்டு வாரங்களுக்கு முன் ரோமல் வெகுவேகமாக முன்னேறி எகிப்து எல்லைக்கு அருகில் வந்ததும், அலெக்ஸாண்டிரியாவில் அடைக்கப்பட்டிருக்கும் பிரெஞ்சுக் கப்பல்களைப்பற்றிய பிரச்னையை சீக்கிரம் கவனிக்க வேண்டியதாயிற்று. அவைகளில் ஆயுத பரிகரணம் செய்யப்பட்டிருந்தாலும் தனியே சஞ்சரிக்கும் சக்தியுடன் இருக்கின்றன. எதிரி வசத்தில் சென்றால் ஆபத்தாக முடியும். இது சம்பந்தமான விஷயத்தை பிரிட்டனுடன் கலந்துகொண்டு அமெரிக்கா பிடேனுக்கு அறிவித்தது. ஸூயஸ் கால்வாய் வழியாக ஒரு அமெரிக்கத் துறைமுகத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்றும், இல்லாவிட்டால் பிரிடன் அழித்துவிடுமென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டது. அடுத்தப்படியாக மார்டினிக்கிற்கு அனுப்பலாமென்றும் சொல்லப்பட்டது.

ஆனால் விஷி இரண்டு விதமாயும் செய்ய மறுத்துவிட்டதாகச் செய்திகிடைத்திருக்கிறது. 'பிரான்ஸின் கௌரவத்திற்கே கெடுதல்' என்று விஷி குறிப்பில் இருக்கிறதாம். அப்படி ஏதாவது கெடுதி நேர்ந்தால் அமெரிக்கா பாத்தியப்படுமென்று லவால் எச்சரிக்கை செய்திருக்கிறான்.

தற்சமயத்திலும் ஆங்கிலேய—அமெரிக்க நோக்கம் தயவுள்ளதாகவே இருக்கிறது. இன்றும் சிநேகமாகவே நடந்துகொள்ள இந்த இருநாடுகளும் விரும்புகின்றன. அந்தரங்கத்தில் லவாலை யாவரும் துவேஷிக்கின்றனர். இருந்தாலும் பிடேனின் குணத்திற்காக நட்பு பாராட்டப்படுகிறது.

இவ்விதம் ஆங்கிலேய—அமெரிக்க நடவடிக்கை இருப்பதால் அச்சநாட்டு திட்டத்திற்கு தடங்கலேற்பட்டிருக்கிறது. எவ்வளவு குற்றங்களைச் செய்தாலும் பிரான்ஸின் பேரில் இங்கிலாந்திற்கும், அமெரிக்காவிற்கும் பிரியம் இருக்கிறது. ஆனால் லவாலை வெறுக்கின்றன. பிரான்ஸுடன் சண்டை செய்ய நேர்ந்தாலும் சண்டை செய்யும். 'நாங்கள் உங்களை விடுவிக்கவே முன் வருகிறோம்' என்று இந்நாடுகள் உண்மையைச்சொல்லும்.

இதில் ஒரு விசேஷமென்னவென்றால் ஜெர்மனிக்கு விரோதமாக நாடுகளை ஒன்றுசேர்ப்பதுதான் கருத்து. யுத்தம் முடிவதற்கு முன்பே அது சாத்யமானால் வெற்றி கிடைத்திருக்கும்.

வி வி வி வி வி வி வி

**கிளாஸ்டர் கோமகனின் விஜயம்.** இப்பத்திரிகையின் மற்றொரு பக்கத்தில் கிளாஸ்டர் கோமகன் இந்திய மக்களுக்கு விடுவித்த செய்தி அச்சிடப்பட்டிருக்கிறது. அச்செய்தி அமைதியை உண்டு பண்ணுகிறதாயும், வெற்றியை ஊர்ஜிதப்படுத்துகிறதாயும் இருக்கிறது. இவைகளைக்காட்டிலும் அச்செய்தியிலிருந்து இந்தியா அறியவேண்டிய சில நுட்பமான பாகமும் இருக்கிறது. "இந்தியா இயற்கையாகவே ஒன்றுசேர அமைந்திருக்கிறது. வேற்றுமைகளிருந்தால் இந்தியா பலஹீனமடையும். ஒற்றுமையிருந்தால் அளவு கடந்த பலம் பெறும்."



ஜூன் 9உ முதல், ஜூலை 19உ வரை இங்கேயிருந்தார்: 52 மணி நேரத்தில் சஞ்சரிக்கக்கூடிய 7 695 மைல்கள் விமான மூலமாகவே சஞ்சரித்தார். 1,500 மைல்கள் ரயில் பிரயாணம் செய்தார். 7 மாகாணங்களையும், 3 ஸமஸ்தானங்களையும் சுற்றிப்பார்த்தார். 9 ஏ. ஆர். பி. ஸ்தாபனங்களையும், 15 ராணுவ ஆஸ்பத்திரிகளையும், பலசைனிய ஸ்தாபனங்களையும் பார்வையிட்டார். எல்லாவற்றையும் சிறிது காலத்தில் முடித்திருந்தாலும் பலவிதமான பேர்களைக்கண்டு பேசினார். இருக்கும் நிலைமையைச் சரிவர அறிந்தார். இந்நாட்டின் பாதுகாப்பின் பொருட்டு செய்யப்பட்ட ராணுவ ஏற்பாடுகளை நேரில் பார்த்தார்.
கடைசியாக ஜெனரல் வேவலுக்கு அவர் அனுப்பிய செய்தியாவது:—

"இந்தியா, ஸிலோன் முதலியவைகளை நான் சுற்றிப்பார்க்கும்போது
இங்கே செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளும், சந்தோஷ உணர்ச்சியும் எனக்குத் திருப்தியை அளிக்கின்றன. யுத்தகாலத்தில் இப்படைகள் தங்களுடைய புராதன கியாதிக்குத் தக்கவாறு நடந்துகொள்ளும்.

"பொதுவான காரணங்களான நியாயம், சத்தியம், இறக்கம் முதலியவைகளில் நம்பிக்கைவைத்தே நாம் யாவரும் சண்டையிலீடுபட்டிருக்கிறோம். இவைகள் தான் முடிவில் எஞ்சியிருக்கும். இவைகளைக்கொண்டுதான் நாம் சமாதானமாக வாழ முடியும்.

"எல்லாவித வகுப்பினருக்கும் எனது நன்றியைச் செலுத்துகிறேன். அவர்களின் தைரியம், பழக்கம், பொறுமை முதலியவைகளால் முடிவான வெற்றியும் கிடைக்குமென்று நம்புகிறேன்."

வி வி வி வி வி வி

**ரத்த பாங்கிகள்.**
இதைப்பற்றி சில விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும். நவீன யுத்த முறைகள்
கொடுமையாக ஆக, ஜனங்களின் மேலுள்ள விசுவாசத்தாலும், நூதன
ரஸாயன சாஸ்திர முறைகளாலும் யுத்தரங்கத்திலும், குண்டுகள்பட்டதால்
காயமடைந்தவர்களுக்கு ரத்தக்குறைவினால் உயிர்போகும் தறுவாயில் இருந்தால்
புதிய ரத்தத்தை உட்செலுத்தி பிழைப்பூட்டப்படுகிறது. ஆரம்ப காலங்களில்
அப்போது அருகிலுள்ளவர்களின் ரத்தத்தைப் புகட்டுவது சகஜமாக இருந்து
வந்தது. ஆனால் பிறகு நூதன முறைகளால் ரத்தத்தைப் பவுடராக மாற்றி
டப்பிகளில் அடைத்து வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. இவைகளுக்கு
ரத்த பாங்கிகள் என்று பெயர். செஞ்சிலுவை கோஷ்டியினர் இவ்வேலையில்
அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து 100-காலன்
ரத்தம் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. இங்கிலாந்திலும் தயார் செய்யப்
படுகிறது. இந்தியாவில் கிண்டியில் (Guindy) நடந்துவருகிறது. மதுரையில்
தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த முயற்சி, தற்செயலாகக்
காயங்கள் நேர்ந்த சமயத்திலும், ரத்தக் குறைவினால் ஏற்பட்ட வியாதிகளுக்கும்
உதவும். யுத்த காலத்தில் மிகவும் முக்கியம். எதிரித் தாக்குதல் ஏற்படும்போல்
காணப்படும் இந்த சமயத்தில் இங்கு மெத்த அவசியம். இதற்கு இணங்கி தானது
ரத்தத்தைக் கொடுக்க அதிகம் பேர் முன்வரவேண்டும். திடபலம் வாய்ந்தவர்கள்
வாரம் 10 அவுன்ஸ் ரத்தம் கொடுக்கலாம். இவ்விதம் ஏற்படும் ரத்தக் குறைவிற்கு
சாதாரணமான ஆகாரம் உட்கொண்டாலே போதுமானது. வலியேற்படாமல்
முழங்கைக்கு அருகிலிருந்து ரத்தம் எடுக்கப்படுகிறது. இதனால் களைப்பு
பிராணுபாயம் முதலியவை ஏற்படாமலும் செய்யப்படுகிறது.

---

# இந்திய மக்களுக்கு கிளாஸ்டர் கோமகன் செய்துள்ள வேண்டுகோள்.

(ஜூலை 10உ ஒலிபரப்பப்பட்டது).

**ஒற்றுமையின்பொருட்டு இந்தியா அமைக்கப்பட்டது.**

முதலாவதாக எனக்குத் தோன்றியதென்னவென்றால் ஒற்றுமைப்பட்டிருப்பதற்காகவே இந்தியா இயற்கையாக அமைந்திருக்கிறதென்பது.

பிளவு பட்டிருந்தால் இந்தியா பலஹீனமாகிவிடும். ஒற்றுமையுடனிருந்தால் அளவிற்கு மிஞ்சி ஒரு புகழ்பெற்ற நாடாகலாம்.

இவ்வளவு பெரிய தேசத்தில் ஒரேவிதமான தன்மை என்பது எதிர்பார்க்கப் படமுடியாதாயினும், மதம், பாஷை, ஜாதி, பழக்கம் முதலியவைகளில் வேற்றுமையிருப்பதால் ஒற்றுமையென்பது மெத்த அவசியம். பலவித வேற்றுமைகளைப் புறக்கணித்து தேசத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உண்டாகி இருப்பதைக் காண்கிறேன். இதற்கு முக்கியமாக யுத்தமே ஒரு காரணமாக இருக்கிறது.

### வெற்றியில் நிர்மானம்.

இதிலும் இந்தியாவில் ஒரேவிதமான மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலும், ஸிலோனிலும் நான் சென்ற இடங்களில் பார்த்த மனிதர்களிடையிலும், எனக்குக் கிடைத்த கடிதங்களிலும் வெற்றியில் ஒரு நம்பிக்கையும், நாம் வெற்றி பெறுவோமென்ற நிச்சயமும் காணப்பட்டது. இந்த அபிப்பிராயம் வியக்தமாக காணப்படாத போதிலும், அந்தரங்கமாக இருக்கிறது.

பயப்படும் சிலரே வெளிப்படையாகப் பேசிவருகின்றனர். யுத்த முயற்சியில் பூரா ஈடுபட்ட பலர் மௌனமாகவே தங்களது வேலைகளைக் கவனித்து வருகின்றனர்.

பின்னுடி சொல்லப்பட்டவர்களுடன்தான் நான் கண்டு பேசி தைரியம் கூற வந்தேன். இவர்கள் யாவரும் தேசிய யுத்த முன்னணியில் ஒத்துழைப்பைக் காண்பித்துவருகின்றனர். இம்முன்னணி இந்தியாவிற்கு அரும் சேவையைச் செய்து வருகிறது. இது சம்பந்தமாக விச்வாசம் வாய்ந்த இந்திய மக்களின் மொழிகள் நன்கு கவனிக்கப்படும்.

எனக்குத் தெரியப்படுத்திய பிரகாரம் மற்ற உலகிற்கும் பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, சைனு, இதர நேசநாடுகள், இந்நாடுகளின் வாசிகளைப் போல் இந்தியர்களும் தைரியம் வாய்ந்தவர்களென்று தெரியப்படுத்தவேண்டும். முன் சொல்லப்பட்ட நாடுகளுக்குள் பெரிய ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது.

### இந்தியாவின் ராணுவ சக்தி.

மூன்றாவதாக நான் தெரிந்துகொண்டது, இந்தியா, ஸிலோன் இவைகளுடைய பெரிய ராணுவ சக்தி பிரிடிஷாரின் சம்பந்தம் ஏற்படும் காலத்தில் இருந்ததைவிட தற்போது பலமான சைனியங்கள் இந்தியாவில் இருக்கிறதாக மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் கூறியதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். நானும் இப்படைகளை இந்தியாவிலும் ஸிலோனிலும் பார்வையிட்டேன். அவைகளின் உணர்ச்சியையும், தன்மையையும், அவைகள் செய்துவரும் பாதுகாப்புவேலைகளையும், ஸிவில் பாதுகாப்புவேலைகளையும் பார்த்தேன்.

நவீன யுத்த முறைகளில் எந்த தேசமும் பத்திரமாக இருக்கிறதாகச் சொல்லமுடியாது. ஆயினும் இந்தியா, ஸிலோன் இவைகளை நோக்கி எதிரி வருவானாயின் அவனுக்குத்தான் சிரமம்.

இதில் விசேஷமென்னவென்றால் சரியான சமயம் வாய்த்ததும் நமது படைகள் எதிரியிருக்கும் இடத்தைத் தேடிப்போய் முன்னேற்றப்போர்செய்து எதிரியைத் தோற்கடிக்கும்.

இந்த அபிப்பிராயத்தை நானாகக்கொடுக்கவில்லை. ஜப்பானியருடன் சண்டை செய்தவர்களுடன் கலந்து பேசியே இவ்வபிப்பிராயத்தைக் கொடுக்கிறேன். அவர்களுக்கு இந்தத் தந்திரங்களெல்லாம் நன்றாகத்தெரியும். தங்களுக்குச் சமமாகவே ஜப்பானியரையும் கருதுவதால் நிச்சயம் தோற்கடிப்பார்கள். ஜப்பானியருக்கு நேரும் விதமாகத்தான் ஜெர்மானியருக்கும், இடாலியருக்கும் நேரும்.



இந்தியாவிலும், ஸிலோனிலும் உள்ள கப்பல், ராணுவம், விமானம் முதலியவைகளின் பலம் மிக அதிகமாக இருக்கிறது. பிரிடிஷ் படைகளும், இதர ஸாம்ராஜ்யப் படைகளும், இந்தியா எங்கிலும் திரட்டப்பட்ட சைனியமும், பிரிடனின் நேச ராஜ்யமான நேபாளதேசத்து படைகளும் இங்கே இருக்கின்றன. இவைகள் யாவும் எல்லா வகுப்பிலிருந்தும் திரட்டப்பட்டவை. ஏற்கனவே செய்த சண்டைகளில் இவைகள் கியாதி யடைந்திருக்கின்றன.

ஆகவே இந்த சைனியங்கள் வெற்றிபெரும் என்ற நம்பிக்கையுடனிருங்கள். உங்களுடைய சக்தியிலும் நம்பிக்கை வையுங்கள்.

ஒரு மாதத்திற்குமுன் நான் கொண்டுவந்த எனது சகோதரனின் செய்தியில் நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் வேண்டுமென்று கோரப்பட்டிருந்தது. அவை இரண்டும் இந்தியாவில் இருக்கின்றன. இங்கிருப்பதைக்காட்டிலும் அதிகமாக உலகின் மற்ற பாகங்களில் காணமுடியாது. வெற்றி சீக்கிரம் கிடைத்தாலும் இங்கிருப்பதைக்காட்டிலும் அதிகமான நம்பிக்கையும், தைரியமும், தீர்மானமும் மற்ற இடங்களில் இருக்கமாட்டா.

நான் ஹைதராபாத்திற்குச் சென்றபோது உருதுபாஷையில் ஜெர்மானியருக்கு எழுதப்பட்ட ஒரு பாடலில் பின்கண்ட மூன்று நல்ல அபிப்பிராயங்கள் காணப்பட்டன.

1. கடந்த மகாயுத்தத்தை மறந்தீர்களா?
2. அதிகம் ஆசைப்பட ஆசைப்பட நீங்கள் கீழே விழுகிறீர்கள்.
3. அப்போது உங்களை நாங்கள் தோற்கடித்த விதத்தை ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா?

### நான்கு நிச்சயங்கள்.

இதுதான் சரியான உணர்ச்சி. இவ்வுணர்ச்சி இந்தியாவில் பூராவும் இருக்க வேண்டும். காரியங்கள் அதிக சாதகமாக இல்லாத சமயத்திலும், சந்தேகமும் நிச்சயமற்ற தன்மைகளும் ஏற்படும்பொழுதும் இந்த யுத்தத்தில் நிச்சயமான அம்சங்களை கவனிப்பது நலம். நேசநாடுகளின் படியாத உணர்ச்சி, டங்கர்க் வீரர்கள், பிரிடனை பாதுகாக்கிறவர்கள், இது முதலாவதான நிச்சயம். ருஷ்யா சைனு, சைனியங்களின் தீரமான எதிர்ப்பு இவைகள் இரண்டாவது நிச்சயம். அமெரிக்காவின் குறையாத சாமான்கள், மேலான தைரியம், இது ஒரு நிச்சயமான அம்சம். கடைசியாக வெற்றியைப்பற்றிய நிச்சயம்.

இந்த நிச்சயாம்சங்களை இந்தியாவிலும் ஸிலோனிலும் உள்ள நீங்கள், உங்களால் முடிந்த சக்தியுடன் உதவினால் வெற்றி நமக்கு சீக்கிரம் கிடைக்கும்.

இந்த யுத்தத்தை ஒருமணிநேரம் குறைவாகச் செய்தாலும், ஏராளமான பேர்கள் பிழைப்பார்கள். லக்ஷகணக்கான ஜனங்களுக்கு ஹிம்ஸையும் இல்லை.

### இது உங்களுடைய யுத்தமே.

“இது யாருடைய யுத்தமோ, நமக்கு ஒரு சம்பந்தமுமில்லை” என்று ஒருவரும் நினைக்கமுடியாது. எல்லா அம்சத்திலும் இது உலக யுத்தம். இந்த யுத்தத்தை விரும்பியோ, விரும்பாமலோ, இதனால் தீண்டப்படாத தேசமே கிடையாது. இதன் தன்மைகளை அனுபவிக்காத குழந்தையோ, ஸ்திரீ புருஷனோ கிடையாது. இனி உண்டாகப்போகும் சந்ததிக்கும் இதனால் பாதகம் ஏற்படும். பிரயத்தனம் எடுத்துக்கொள்ளாமல் கையைக்கட்டிக்கொண்டு யுத்தத்தின் போக்கைப் பார்த்துக்கொண்டு ஒருவரும் இருக்கமுடியாது. இந்த யுத்தம் முன்னேற்றம், நாகரீகம், கலை முதலியவைகளுக்கும், பின் போக்கு, காட்டுமிராண்டித்தனம், அஞ்ஞானம் முதலியவைகளுக்கும் நடக்கிறது.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள புராதன பழக்கமும், வேதாந்தம், கலை, பயிற்சி முதலியவைகளின் தன்மையுடனும் கூடிய இந்தியாவும், ஸிலோனும் எந்தப் பக்கம் சேருமென்பதில் சந்தேகமில்லை.

### மாறுபாடுகளைக் கவனிக்காதீர்கள்.

உங்களுக்குக் காணப்படும் வித்யாசங்களை மறந்து ஒரு மனிதனைப் போலிருந்து நேசநாடுகளின் பக்கம் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுடைய வீடு வாசல்களுக்காகவும், பயிற்சிக்காகவும், சந்ததி சௌரவத்திற்காகவும் சண்டை செய்யுங்கள். நாம் முழுவெற்றியடைந்தால்தான் இந்த கொடிய யுத்தம் முடியும்.

பாஸிஸ்டு கொள்கை, நாஸிக் கொள்கை, ஜப்பானிய அதிகார ஆசை இவைகளை படுகுழிகளில் புதைத்து, மறுபடி கிளம்பி உலகத்திற்குத் தீங்கு விளைவிக்காதபடி செய்யவேண்டும்.

நம்மனில் எவ்வளவு அதிகமான பேர்கள் இதில் ஈடுபடுகிறோமோ, அவ்வளவு சீக்கிரத்தில் அவைகளை ஒழிக்கலாம்.

### புது உலகத்தை அமையுங்கள்.

இந்த யுத்தம் முடிந்ததும் நமக்குள் இருக்கும் நல்லெண்ணம், ஒத்துழைப்பு இவைகளைக்கொண்டு நாம் யாவரும் புது உலகத்தை சிருஷ்டித்து, பரஸ்பரம் காணப்படும் சிநேக பந்தத்தை புதுப்பித்துக்கொண்டு, பொது முயற்சி, தியாகம் முதலியவைகளால் அழியாத நட்பை உண்டு பண்ணுவோம்.

எல்லோருக்கும் வந்தனம். உங்கள் யாவருக்கும் நல்ல அதிர்ஷ்டம் உண்டாகுக.

---

## பெல்ஜிய தேசீய தின விழா (ஜூலை 21).

### செய்திகள்.

I

### பெல்ஜிய அயல்நாட்டு மந்திரி மிஸ்டர் ஸ்பாக்.

"1940 வருஷத்தை ஜெர்மனி பயன்படுத்திக்கொள்ளாதபோது மறுபடி அந்த சந்தர்ப்பம் ஜெர்மனிக்குக் கிடைக்காது. முஸ்தீப்பு பெருமல், தனியாக இருந்த சமயத்தில் இங்கிலாந்தை ஜயிக்க முடியாதபோது சரியாக பலம்பெற்று, ருஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளின் பலமும் இருப்பதால் தற்சமயத்தில் தோற்கடிக்கவே முடியாது.

"தைரியத்துடன் இருங்கள். நேசநாடுகளைவிட்டு வெற்றி ஒரு நாளும் போகாது. நேசநாடுகளின் வெற்றியாவது பெல்ஜியத்தின் விடுதலைதான்.

"மறுபடி பெல்ஜியம் தனது நாட்டை அடையுமென்பதைக் குறிக்கும் பழமொழியைக் கூறுவோம். "பெல்ஜியமும் பெல்ஜிய மன்னரும் நீடூழி வாழ்க".

II

### பெல்ஜியத் தற்காப்பு மந்திரி மிஸ்டர் காமில்லே.

"ஒரு வருஷத்திற்கு முன்பு எல்லாம் பயங்கரமாகத் தோன்றியது. இருந்தாலும் வெற்றியில் நம்பிக்கையிருந்தது. தற்சமயத்தில் வெற்றி நெருங்கி வருவதைக் காண்கிறோம்.

"அதிக கஷ்டத்தின்பேரில் ஏராளமான இடத்தை ஜெர்மனி கைப்பற்றியிருந்தாலும் ஆக்கிரமித்த இடங்கள் வசப்படவில்லை. தற்சமயத்தில் அவைகளை ஸ்வாதீனப்படுத்தாவிடில் இனிமேல் முடியவே முடியாது. ஏனென்றால் அமெரிக்கா சண்டையில் ஈடுபட்டு சாமான்களையும், துருப்புகளையும் அனுப்புகிறது.

"மற்ற தினங்களைக் காட்டிலும் விசேஷமான நமது பாதுகாப்பு தினத்தில், நமது எண்ணங்களெல்லாம் சின்னாபின்னமாக்கப்பட்டதும், தற்சமயம் தேசாபிமானமே ஒரு குற்றமாகக் கருதப்படுவதுமான நமது நாட்டைப்பற்றியும், நமது



நாட்டை பரம் பரையாகக் காப்பாற்றும் அரசரைப் பற்றியும், எதிரியின் கொலைகளை எதிர்த்துப் போராடும் நமது நாட்டினரைப் பற்றியுமே உண்டாகின்றன.

"யாவருக்கும் நமது சைனியம் சொல்லுவது யாதெனில்: 'கஷ்ட தினங்கள் போய்விட்டன. இனி தைரியம்தான் தேவை'. நமக்கு நல்ல காலம் வந்ததும் ஜெர்மானியர் பயந்து ஓடுவதையும் நாம் மறுபடி ராஜ்யத்தைப் பிடிப்பதையும் பார்ப்பீர்கள்".

---

## தேசிய யுத்த முன்னணி.

## ஐக்கிய பத்தியம் அடைவது.

(ஸர் ராபர்ட் டெனிஸ்டன் ஆல் இந்தியா ரேடியோவில் ஒலிபரப்பியது).

### கடவுளைப் பழித்தல்.

பொய் சொல்வதில் ஏற்படக்கூடிய பயனானது அந்தப் பொய்யின் தன்மையைப் பொருத்திருக்கிறது. இந்த வகையில் அதற்குத் தக்கபடி ஜெர்மானியர் நடந்து வருகிறார்கள். ஜெர்மன் ஒலிபரப்பில் தயக்க மன்னியில சிறிது முதல் பெரிதுவரை பொய் சொல்லி வருவதைக்கேட்டிருக்கிறோம். பொய் சொல்வதற்குப் பரிசு கொடுப்பதாய் இருந்தால் ஜெர்மன் ஒலிபரப்புவருக்குத்தான் கொடுக்கவேண்டும். "ஜெர்மானியர் எந்த தேசத்தில் செல்லுவார்களோ அந்த தேசமானது கடவுளின் சோலையாக ஆகி விடுகிறது" என்று அவன் சொல்லுகிறான்.

இந்த வாக்கியத்தைப்பற்றி விசாரித்துப் பார்ப்போம். போலந்தில் நிரபராதியான மக்களை தூக்கில் போட்டும், அவ்விதம் தொங்கிக்கொண்டிருக்கும் போலிஷ் நகரவாசிகளின் படங்களையும் தங்களுடைய புதை குழிகளைத் தாங்களே வெட்டிக்கொண்டிருக்கும் போலந்துக்காரர்களின் படங்களையும் நீங்கள் பார்த்து இருக்கிறீர்கள். ருஷ்யாவில் ஜெர்மானியர் செய்த நம்பத்தகாத அக்கிரமங்களைப் பற்றி மிஸ்டர் மாலடோவின் குற்றச் சாட்டுகளைப் படித்திருக்கிறீர்கள். மேலும் ஹிட்லரின் ஏஜெண்டான ஹீட்ரிச்சைக் கொலை செய்ததற்காக எவ்வளவோ நூற்றுக்கணக்கான செக்கர்கள் கொலை செய்யப்பட்டதைப் பற்றியும் படித்திருக்கிறீர்கள். ஜெர்மன் ஆகாயப் படையால், ஹாலந்தும், பெல்ஜியமும் அழிக்கப்பட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஜெர்மனியிலுள்ள பைத்தியக்காரனின் செய்கையால் இன்னும கோடிக்கணக்கான ஏழை மக்கள் பசிப்பிணியால் வருந்துவதையும் நீங்கள் மறக்கமாட்டீர்கள். இப்பொழுது ஜெர்மனியில் 22,50,000 அந்நிய வேலைக்காரர்களைக் கட்டாய வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இன்னும் சரியாக 12,50,000 கைதிகளும் ஜெர்மனிக்காக வேலை செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். நார்வேயில் 10 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பிணையாளிகளாகச் சமீபத்தில் கொண்டுபோகப்பட்டிருக்கிறார்கள். பிரான்ஸில் பெற்றோர்கள் செய்த குற்றத்திற்காக அவைகளின் குழந்தைகள் கைதிகள் சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களில் கொண்டு போகப்பட்டார்கள். இவ்விதமாக நாஸிகள் செய்து வரும் அட்டூழியங்களை மனதிலும் எண்ணுவதற்கு முடியாது.

இதையெல்லாம் பார்த்த பிறகு ஜெர்மன் ஒலிபரப்புவன் அலக்ஷியமாகப் பேசுவதற்கும் இழிவான குணத்திற்கும் கடவுள் சிருஷ்டியைப் பழிப்பதற்கும் அவனுக்குப் பரிசு கொடுப்பதற்கு நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள்.

கிழக்கு அர்த்த கோளத்தைப் பார்க்கையில் தாத்காலிகமாக ஜப்பானியர் ஆக்கிரமித்த நாடுகளிலும் வாழ்க்கை இதைக் காட்டிலும் மேன்மையாக இருக்கிறதா? ஜப்பானியர் சொல்படி நடக்கும் ஸயாம் தலைவர், மார்ஷல் ஸாங்கராம் கண்ணீர் விட்டுக்கொண்டு மிகவும் வருத்தத்துடன் ஒலிபரப்பியதில் சில வாக்கியங்களை மட்டில் இங்கு சொல்லுகிறேன்..

"நீங்கள் பேச்சுரிமையை இழக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்திற்கு நீங்களெல்லோரும் ஏகோபித்து ஆமோதிப்பீர்களென்று நான் நம்புகிறேன்", என்று நடுநடுங்கும் குரலுடன் பேசினான். மேலும் "மிகவும் நெருக்கடியான காலத்தில் நீங்கள் உங்கள் உணவைத்" தயார் செய்து கொள்ளாமல் போனால் நிச்சயமாக நீங்கள் பட்டினியாயிருந்து சாகவேண்டியது தான். அதனால் வருங்காலத்தில் சந்தோஷமாய் வாழ விரும்பினால் உங்களால் முடிந்தவரையில் வேலை செய்யுங்கள் என்று நான் கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் தைரியமாய் இருக்கவேண்டும். பூமியில் பிறந்தவர்களுக்கு எப்பொழுதிருந்தாலும் இறப்பது நிச்சயமே. அதனால் உயிர் விடுவதிலும் ஒற்றுமையாக இருப்பது நலம் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்" என்று சொன்னான். ஸயாமையும் கடவுளுக்காக சேவையாகச் செய்து விட்டதாக ஜப்பானியர் சொல்லிவரலாம். ஆனால் இந்தத் தடவையில் அது ஜப்பானியரின் சேவையாக மாறிவிட்டது. மேலும் அவர்கள் மஞ்சூரியாவை எவ்விதம் தங்களுக்கு அனுகூலமாகச் செய்துகொண்டார்கள் என்று சிலர்கள் விவரித்துச் சொல்லக்கூடும்.

ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளில் ஜப்பானியர் எவ்விதம் நடந்துகொண்டார்கள் என்று ஜப்பானிய அட்டூழியங்களைப் பற்றிய கதைகளைப் படித்திருப்பீர்கள். உண்மையாக நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன். பர்மாவிலிருந்த பிரிடிஷ் உத்தியோகஸ்தர் ஒருவரை ஜப்பானியர் கைப்பற்றிக்கொண்டார்கள். பிற்பாடு அவர் தப்பி ஓடிவிட்டார். மீண்டும் அவர் கைப்பற்றப்பட்டார். அதன் பேரில் அவர் கணுக்கால்கள் இரண்டும் துண்டிக்கப்பட்டன. இதில் முக்கியமாகக் கவனிக்கத் தகுந்த விஷயம் என்னவென்றால், கால்கள் முடமாகியும் அவ்வுத்தியோகஸ்தர் மறுபடியும் எதிரி வசமிருந்து வெகு தந்திரமாக தப்பி வந்துவிட்டார். எதிரி ஆக்கிரமிப்பினால் ஏற்படக்கூடிய கொடுமைகளை நாம் அநுபவிக்காமல் இப்பொழுதே நம்மைத் தயார் செய்து கொள்ளவேண்டியது அவசியம். இந்தக் காலங்களில் ஓட்டைப் பாத்திரத்திலிருந்து நீராவி எப்படி குப், குப் என்று வெளியே வருமோ அம்மாதிரி ஒவ்வொருவரும் பேசப் பேசுகிறார்கள். அவர்கள் சொல்வதில் பெரும்பாலும் பிரயோஜனமற்றது. சொன்னதையே திருப்பச் சொல்லப்படுகிறது. கேட்க அருவெறுப்புக் கொடுக்கக்கூடிய விஷயம் அதில் அதிகம். இருந்தபோதிலும் ஏதாவது ஒரு சமயத்தில் குறிப்பான ஒரு வாக்கியமோ, வார்த்தையோ அதில் இருக்கும். Mr. ஸம்பீர்ஸிங் ஜோஷ் பிரகடனத்திலிருந்து நான் சொல்லுகிறேன். "நமக்கும் ஜப்பானிய பாஸிஸ்டு கூலியாருக்கும் பொதுவான ஸ்தலம் யுத்தரங்கம்தான். அவர்கள் நம் நாட்டை ஜயித்து நம் ஜனங்களை அடிமையாக்கி வருகிறார்கள். நாம் அவர்களுக்கு பூமியை விட்டுக் கொடுப்போம். அதாவது இந்தியாவில் அடிவைக்கும் ஒவ்வொரு ஜன்னனுக்கும் புதைகுழிக்காக 4½ அடி இடம் கொடுப்போம்" என்று சொன்னார். இது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. நீயும் அதை விரும்பமாட்டாயா? அதில் வீரம் இருக்கிறது.

## தேசிய யுத்த முன்னணி.

எதிரிகளை விவரிப்பதற்கு வார்த்தைகளைப் பொறுக்குவதில் நமக்குத் திருப்தி கொடுத்தாலும் அந்த வார்த்தைகள் ரேடியோவில் பேசுவதற்கு உகந்ததாக இல்லாமலிருப்பது பரிதாபமாக இருக்கிறது. அந்த வார்த்தையினால் ஒரு பிரயோஜனமுமில்லை. பேயர் புத்தகத்தில் 'பேர்களினால் க்ருஜனைக் கொல்லுகிறோம்,' என்று கிப்ளிங் விவரித்தார். அதைக் காட்டிலும் மேலானதை நாம் விரும்புகிறோம். அதைக் காட்டிலும் மேலான வார்த்தையும் இருக்கிறது. அதற்குத் தான் தேசிய யுத்த முன்னணி என்று பெயர்.

அது என்ன? முதன் முதலாக அதன் நோக்கம் என்னவென்றால் வல்லரசுகள் செய்யக்கூடிய கெட்ட செய்கைகள் பூராவையும் முற்றிலும் அழித்துவிடவேண்டும் என்பதுதான். ஏனெனில் நாஸிக் கொள்கை, பாஸிஸ்டு கொள்கை, இன்னும் ஜப்பான் ஆதரிக்கும் எத்தகைய கொள்கையும் இருக்கும் வரையில் உலகத்தில் அக்கிரமம்தான் மேடிக்கும். நல்ல எண்ணங்கொண்ட ஒவ்வொரு ஆணும், பெண்ணும் இவ்



உலகத்தில் பெரியவன், சிறியவன் வரை தேசிய யுத்த முன்னணியில் மெம்பராக இருக்கலாம். நீ அதில் சேர்ந்தால் மேன்மை தங்கிய கவர்னர் 'ஒற்றுமைப் படுத்துவது,' என்று சந்தோஷகரமான வார்த்தையைக் கண்டுபிடித்துச் சொன்னபடி ஒற்றுமையை அடையப் பிரயத்தனப்படும் ஸ்தாபனத்தில் மெம்பராகிறாய். இந்த ஸ்தாபனத்தில் ஆக்கிரமிப்புக்காரர்களின் கொள்கையில் வெறுப்புக் கொள்கிறவர்களுக்கும், காட்டுமிராண்டிகளின் முறைகளுக்கும், காட்டில் வசிக்கும் மிருகங்களுக்கு மேலாக மனித வர்க்கத்தாரின் நெறிமுறைகள் இருக்கவேண்டுமென்று நம்பிக்கை கொள்ளுகிறவர்களுக்கும் இடமுண்டு. அதில் சேருகிறவர்கள் ஜாதி, மதம், குலம், கோத்திரம், ராஜீய அபிப்பிராயங்கள் இவைகளில் வித்தியாசம் பார்ப்பதில்லை. உலகத்தில் ஏற்பட்டிருக்கும் அட்டூழியத்தைப் போக்க விரும்புகிற ஆண், பெண்களே அதில் மெம்பர்கள்.

## எதிர்ப்பே தவிர தற்காப்பில்லை.

வாக்குறுதி கொடுப்பதில் எனக்கு அதிக விருப்பமுண்டு. ஆனால் இப்பொழுது எனக்கு நம்பிக்கையில்லை. ஏனென்றால் அது ஆடம்பரத்திற்காக மட்டில் செய்யப்படுகிறது என்று எண்ணவேண்டியிருக்கிறது. ஆனால் தேசிய யுத்த முன்னணிக்கு ஒரு திண்ணமான நோக்கமிருக்கிறது. அந்தக் கருத்தை வார்த்தைகளைக்கொண்டு வெளியிடுவது சாவதானமானது. அதில் ஒவ்வொருவரும் பின்வருமாறு உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும்.

"இந்தியா வாஸியாக இருப்பதில் எனக்குப் பெருமையிருக்கிறது. அதனால் தோற்று விடுவோம் என்ற பீதியை ஒழித்துவிடவும், திகில் உண்டாக்கும் வதந்திகளை அமுக்குவதற்கும் நான் பிரயத்தனப்படுவதாக வாக்குறுதி கொடுக்கிறேன். இந்தியா தேசத்தின் கௌரவத்தையும், பாதுகாப்பையும் குறைக்க நேரிடும் ஒவ்வொரு அபிப்பிராயத்தையும் நான் எதிர்த்துப் போராடுகிறேன். நாளுக்குநாள் நிச்சயமாக வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் வேலை செய்கிறேன்."

இவ்வளவுதான். இது சரியானது அல்லவா? இந்த உறுதி மொழியில் எதிர்ப்பு என்ற வார்த்தையை மனதில் பதிய வைத்துக்கொள்ளும்படி விரும்புகிறேன். பாதுகாப்பு என்ற வார்த்தை சமீப காலத்தில் தான் அடிக்கடி நமது காதில் விழுகிறது. ஆனால் இந்த உறுதிமொழியில் அந்த வார்த்தை தோன்றவில்லை. ஆகையினால் தேசிய யுத்த முன்னணியின் கொள்கை என்னவென்றால் எதிர்ப்பு, தாக்குதல், விரட்டுதல் என்பதேயாம். ஆமாம், இந்த வார்த்தைகள் எல்லாம் வெகு நன்றாகத்தானிருக்கிறது. இவைகளெல்லாம் படைகளுக்கு அதாவது சண்டையிடும் மனிதர்களுக்குத்தான் அன்வயிக்கும் என்று நீ சொல்வாய்? சென்ற யுத்தத்தில் மார்ஷல் போக் (Foch) என்பவரை ஞாபகமிருக்கிறதா? பொதுமக்கள் மட்டில் சமாளித்திருந்தால் அவர் ஜயிக்கக்கூடுமென்று சொன்னார். சென்ற யுத்தத்தைக் காட்டிலும் இந்த யுத்தத்தில் பொதுமக்களின் உணர்ச்சிதான் மிகவும் முக்கியமானது. ஜெர்மானியரின், வெற்றி மேலெழுந்தவாரியாக இருந்தபோதிலும், பொதுமக்கள் பேரில் யுத்தம் தொடுக்கும் ஆபாசமான யுத்த தந்திரத்தினால்தான் அது கிடைத்தது. மற்றவைகளைக் காட்டிலும் பொதுமக்களின் உணர்ச்சிக் குறைவால்தான் பிரான்ஸ் வீழ்ந்ததற்குக் காரணம். 20 வருஷங்களுக்கு முன்னால் வெர்டூனி (Verdun)ல் ஜெர்மானியர் நிற்கக்கூடாது என்று வயது முதிர்ந்த வீரன் சொன்னது நம்பப்படவில்லை. பிரான்ஸும் அப்படியே நினைத்தது. நமது எதிரிகள் பொதுமக்களையே தாக்கி அவர்கள் உணர்ச்சி குறையும்படி செய்தார்கள்.

உலகத்தில் இந்த பாகத்தில் பொதுமக்கள் உணர்ச்சி குறையும்படி செய்து எதிரியின் தாக்குதல் இப்பொழுது எவ்வளவு தூரம் பலித்திருக்கிறது. மலேயாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் திரும்பி வருபவர்கள் சொல்வதை நம்பினால் இந்தத் தந்திரம் பலித்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். முக்கிய வேலைகளெல்லாம் ஒழுங்கீனமாக்கப்பட்டன. நிர்ப்பந்தத்தினால் பொதுமக்கள் ஒரு இடத்தில் நிலைத்துநிற்க முடியவில்லை. நான் பெரும்பாலாகத்தான் சொல்லுகிறேன்.

தனிப்பட்ட நபர்கள் அதிக தைரியத்துடன் இருந்திருக்கலாம். கடமையைத் தவிரவிடாமல் அநேகம் பேர்கள் செய்திருக்கலாம். ஆனால் எதிரி எதிர்பார்த்த படி சாதாரண ஜனங்கள் நெறிமுறையைத் தவறினதினால்தான் அங்கு பாதகம் உண்டாயிற்று.

## இந்தக் கொடிய வார்த்தை.

விஸ்தாரமாக நான் சொன்ன தேசிய யுத்த முன்னணியின் வாக்குறுதியைப் பரிசோதிப்போம். "தோல்வி ஏற்படும் என்ற பயத்தை அடியோடு அழிக்கவும் பீதி உண்டாக்கும் வதந்திகளை அமுக்கி விடவும்," என்று நான் உறுதி கூறுகிறேன். ஆனால் ஏதோ நாம் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இந்த யுத்தத்தில் அநேக நூதன வார்த்தைகள் உண்டாகியிருப்பதில் இது எல்லாவற்றைக் காட்டிலும் கொடிதானது. ஏனென்றால் இம்மாதிரி உறுதி கூறுகிறவர்கள் ஜயம் பெறுவார்கள் என்பது நிச்சயமில்லை. இதை நினைத்தாலே இந்த வார்த்தை மிகவும் அபாயகரமாகத் தோன்றுகிறது. நாம் இந்த யுத்தத்தில் தோல்வியடைய மாட்டோம் என்றே நினைத்துக்கொள்வோம். ஆனால் மனித சுபாவத்தில் செய்தி சொல்வதில் சந்தோஷமடைகிறோம். அந்தச் செய்தி கெட்டதாக இருந்தாலும், அதைச்சொல்ல நமக்குத் தெரிந்ததற்காக ஒருவித அருவெறுப்பான திருப்தியும் ஏற்படுகிறது. ரகசியமாகவும், பீதி உண்டாக்கும் விதமாகவும் நீ இதை கேட்டாய் என்று சொல்லிக்கொண்டு வரும் மனிதனிடத்தில் நீ உஷாராக இருக்கவேண்டும். அவன் சொல்லும் செய்தி கெட்டதாக இருந்தால் அதற்கு மூலாதாரத்தைக் கேள். 10 செய்திகளில் 9 செய்திகளுக்கு அவனால் ஆதாரம் சொல்லமுடியாது. அப்பேர்ப்பட்டவனை கோயபல்ஸுக்கு உதவி செய்கிறவன் என்று அவனைச் சொல்லலாம். அவன் அதை விரும்பமாட்டான். ஆனால் அது உண்மையே.

## இருந்த இடத்திலேயே இருப்பது.

இந்தியாவின் கௌரவத்தையும் பாதுகாப்பையும் குறைக்கவிருக்கும் ஒவ்வொரு அபாயத்தையும் எதிர்த்துத் தடுக்கிறேன் என்று வாக்குறுதி செய்த பொழுது நாம் இடத்தை விட்டு அகலாமலே இருக்கிறோமென்ற உறுதி மொழியையும் கூறுகிறோம். ஏனென்றால் அபாயம் இருக்கும் பிராந்தியத்தை விட்டு நாம் வெளியேசென்று விட்டால் அபாயங்களைக்கண்டு நாம் சமாளிக்க முடியாது. நமக்கு எப்பொழுதும் ஏற்பட்டிருக்கும் அபாயங்களைக் காட்டிலும் போரபத்துக்கு உட்பட்டிருக்கும் ஜனங்கள் கோடிக்கணக்காக இருக்கிறார்கள் என்பதை ஞாபகமூட்டிக்கொள்ளவேண்டும். ஆகையால் நம்முடைய வேலைகளை நாம் செய்யத் தவறினால் யுத்தப் பிரயத்தனத்தை நாம் குறைவுபடுத்துகிறோம் என்ற அறிவிலேயே நாம் நம் வேலைகளைச் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் யுத்தப் பிரத்தனத்திற்கு உதவியளிக்கலாம் என்பதை Mr. A. A. மில்னே என்பவர் எழுதியிருக்கும் கவியில் வெகுநேர்த்தியாக தீட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கவியின் சுருக்கம் பின்வருமாறு :

"நீ தேசிய யுத்த முன்னணியில் சேருகிறாயா?"

நன்மைக்கும், தீமைக்கும் இந்த யுத்தம் நடைபெறுகிறது. கடவுளுக்கும் சைத்தானுக்கும் இந்த யுத்தம் நடக்கிறது. நீ எந்த பக்கத்தில் இருக்கிறாய்? எந்த திரப்பை நீ பெருக்கியிருக்கிறாய்? போர் செய்யும் வீரர்களை வாழ்த்திவிட்டு வேறு பக்கம் போவது போதுமா? ஸ்திரீகள் அழுதுவிட்டு குற்றமற்றவர்கள் இறக்கும் பொழுது "பரிதாபப்படக்கூடியவர்கள், ஐயோ பாவம், என்று சொன்னால் மட்டும் போதுமா? உங்கள் பிரார்த்தனைகளைச் செய்துவிட்டு உங்கள் சொந்த ஜோலியாகப்போனால் போதுமா? ஏதோ அபூர்வம் என்று நீ கருதுகிறாயோ அதற்காகத்தான் இந்தப் போர் நடக்கிறது. எதைப்போர் செய்து நீ அடைந்தாயோ அதற்காகத்தான் இந்தச் சண்டை நடக்கிறது. யுத்தமோ நடந்து வருகிறது. அதில் வரக்கூடியது என்னதென்று தெளிவாகயிருக்கிறது. நன்மை, அல்லது தீமை; கடவுள் அல்லது சைத்தான். நீ இதில் சேருகிறாயா?"



# சமயத்திற்கேற்ற சம்பந்தம்.

(ஜான் மாக்டோனல்ட் என்பவர் எழுதியது.)

ஜப்பானும், ஜெர்மனியும் ஒன்றுக்கொன்று அனுதாபம் காட்டியும், தங்களால் முடிந்தவரையில் உதவிசெய்தும் வருகின்றன என்பதற்கு போதுமான சாக்ஷியமிருக்கிறது. ஆனால் இவ்வாறு அச்சு நாடுகளின் நோக்கங்கள் ஒற்றுமையாயில்லை என்பதற்கும் வேண்டிய சாக்ஷியமும் இருக்கிறது. உண்மையில் அவ்விரு நாடுகளும் தத்தம் சுயநலத்திற்காகத் தனித்தனியே பாடுபட்டுவருகின்றன. ஜப்பானியர்கள் நாஸிகளால் ஆட்டிவைக்கும் வெறும் பொம்மைகள் அல்ல. தங்கள் சாம்ராஜ்யத்தை அதிகப்படுத்தவே இந்த யுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜப்பான் யுனைடெட் ஸ்டேட்ஸையும், பிரிட்டனையும் ஏக காலத்தில் தாக்கியபொழுது, தனக்குக் கூட்டாளி என்று சொல்லக்கூடிய ஜெர்மனியையும் சேர்த்து எல்லாவற்றையும் ஆபத்துக்குள்ளாக்கிக்கொண்டு அது தன் சுய நலத்திற்காகவே போர் தொடங்கிற்று.

பேர்ல் துறைமுகத்தையும், மலேயாவையும் தாக்கியபொழுது அதன் நேச நாடான ஜெர்மனியிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய யுத்த தந்திரத்தைக்கூட ஜப்பானியர்கள் புறக்கணித்துவிட்டார்கள். அதேபோலவே ருஷ்யப் போர் முனையில் ஜெர்மன் சைனியங்களுக்கு ருஷ்யர்கள் கொடுத்துவரும் நிர்ப்பந்தத்தைக் குறைக்கவும் ஜப்பானியர்கள் பிரயத்தனப்படவில்லை. மேலும் ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை நிறைந்த பிரதேசங்களை முறைதவறாமல் பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் தாக்கிவருவதைத் திருப்பிவிடவும் ஜப்பான் பிரயத்தனப்படவில்லை. இதற்கு மாறாக சென்ற 30 வருஷ காலமாக அவர்கள் போட்ட வேலைத் திட்டப்படி நாடுகளைக் கைப்பற்றுவதையேக் கருதி நடத்திவந்தார்கள்.

## ருஷ்யாவுடன் ஒப்பந்தம்.

இவ்விரு அச்சு நாடுகளுக்குள் இதற்குமுன் ஒற்றுமையான நெருங்கிய சிநேகிதம் இருந்தது என்று சொல்லுவதற்கில்லை. அவ்விதம் இருக்கும்பக்ஷத்தில் பிறர் உதவியன்னியில் ஜெர்மனி 1941-ம்௵ ஜூன்௴ ருஷ்யாவுடன் போர் துவக்கி தனிமையில் யுத்தம் செய்துவரும்பொழுது, அதுமுதல் டிஸம்பர் மாதம் வரை ஜப்பான் யுத்தத்திலிறங்காமல் ஏன் காத்திருக்கவேண்டும்?

இதற்கு நேர் விரோதமாக விஷயங்கள் நடந்துவிட்டன. ஜப்பான் ருஷ்யாவுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி ஒன்று மற்றொன்றுடன் போர் துவக்கக்கூடாதென்ற நிபந்தனையும் ஏற்பட்டது. பொதுவாக அச்சுநாட்டு வல்லரசுகள் இதற்குமுன் வேறெந்த நாடுகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளையோ, ஒப்பந்தங்களையோ, முற்றிலும் புறக்கணித்து விடுமென்பது யாவருக்கும் தெரிந்தது. ஆனால் தாத்காலிகமாக ருஷ்யாவுடன் ஜப்பான் ஏற்கனவே செய்துகொண்ட உடன்படிக்கையை நிலை நிறுத்திவைப்பதற்கு அறிகுறிகளை ஜப்பான் காட்டிவருகிறது.

ஜப்பான் ருஷ்யாவுடன் சமாதானத்துடன் இருப்பதாக செய்துகொண்ட ஒப்பந்தம் ஒருபுறமிருக்க, ருஷ்யர்களுடன் தலையிடாமல் இருப்பதற்கு வேறு இரண்டு காரணங்களுமுண்டு. அவையாவன:—(1) விளாடிவாஸ்டாக் துறைமுகத்திலிருந்து ருஷ்யாவின் பாம்பர் விமானங்கள் ஜப்பானிய முக்கிய தொழிற்சாலைப் பிரதேசங்களுக்கும், கப்பற்படை தளங்களுக்கும் பறந்து சென்று வெடிகுண்டுகளை வருஷித்து அதிக சேதம் விளைவிக்கக்கூடும். (2) அடுத்தபடியாக கிழக்கு ஆசியாவிலும், தெற்கு பஸிபிக் பிராந்தியத்திலும் ஆதிக்கம் அடையவேண்டுமென்று அநேக வருஷங்களாக ஜப்பான் திட்டம்போட்டு வருகிறது. அவ்விதம் ஆதிக்கம்பெற்றால் யுத்தம் முடிந்தபிறகு மேற்கு பாகத்திலுள்ள வல்லரசுகள் ஜப்பானிய சாம்ராஜ்யத்தை குலைக்கவேமுடியாது. சாம்ராஜ்ய ஆசையினால் ஜப்பான் ருஷ்யாவுடன் சமாதானமாக இருக்கவேண்டியிருக்கிறது.

### நல்ல சந்தர்ப்பம்.

மேற்குப் போர்முனையில் ஜெர்மனியுடன் ருஷ்யா யுத்தத்திற்கு இறங்கியதும், யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பற்படையில் பெரும்பாகம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் வந்ததும், அநேக வருஷங்களாக ஜப்பானியர்கள் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் வாய்த்தது.

அவ்வித சந்தர்ப்பத்தை ஜப்பான் உடனே உபயோகித்துக்கொண்டது. மேலும் இதற்கு அனுகூலமாக ஜப்பான் கண்டு பயப்படும் பெரிய வல்லரசுகள் வேறுவிதமாக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுதே ஜப்பானியர்கள் தங்கள் முழுபலத்துடன் யுத்தத்தில் இறங்கிவிட்டார்கள். அவர்கள் ஜயம்பெற்றால், இதற்குப்பின்னால் தாங்கள் ஸ்தாபித்த தூரக்கிழக்குச் சாம்ராஜ்யத்தை, ஜெர்மனியாவது, அல்லது பிரிடன் போன்ற மற்ற வல்லரசுகளாவது படையெடுக்க முடியாமல் பாதுகாப்பு செய்துகொள்ளமுடியும் என்று நம்பினார்கள். நேசநாடுகளில் ஏதேனும் ஒன்று தன்னை எதிர்க்கக்கூடும் என்று ஜப்பான் எண்ணியது போலவே ஜெர்மனியும் யுத்தத்தில் ஒருக்கால் வெற்றியடைந்தாலும் தன்னைத் தாக்கும் என்று எண்ணிற்று. உண்மையில் அது ஜெர்மனியின் நோக்கத்தைத் தெரிந்துகொண்டு விட்டது.

ஜப்பானிய திட்டங்கள் என்னவென்பது முன்னாலேயே ஹிட்லருக்குத் தெரியவில்லை. ஜப்பான் தாக்குதல் ஆரம்பித்தபிறகு அதனால் ஜெர்மனியில் ஏற்பட்ட குழப்பத்திலிருந்து இந்த விஷயம் வெளியாகிறது. ஹிட்லருக்கு பீதி உண்டாகியிருந்ததை அவன் வெளிப்படையாகக் காட்டினான். ஹிட்லரின் உணர்ச்சி எப்படியிருந்தபோதிலும் அச்சுநாட்டினர் அசைக்கமுடியாதவர்கள் போல் வெளித்தோற்றம் இருக்கும்படி அவன் காட்டவேண்டியிருந்தது. இதனால்தான் ஐரோப்பாவில் உள்ள அச்சுநாட்டுக் கூட்டாளிகள் யுனைடெட் ஸ்டேட்ஸின் பேரில் போர் தொடுக்கவேண்டிய அவசியமான நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால் ஜெர்மன் பிரசார இலாகா, அச்சுநாடுகள் ஏகோபித்து வேலைசெய்து வருகின்றனவென்றும், ஒருநாடு மற்றொரு நாட்டுடன் நம்பிக்கொண்டிருக்கிறதென்றும் வாதித்துவருகிறது. அச்சுநாடுகள் அசைக்கமுடியாமல் இருக்கின்றன என்றும், அதன் கூட்டாளிகள் பரஸ்பர நம்பிக்கையுடன் ஏகோபித்து நடக்கின்றன என்றும், ஜெர்மன் பிரசாரத்தில் விவரிக்கப்படுகிறது. ஆனால் உண்மையென்னவென்றால் ஜெர்மனியும், ஜப்பானும் தனித்தனியான லக்ஷியங்களைக் குறித்து அதாவது உலகம்பூராவும் தன் ஆதிக்கத்திற்கு வரக்கூடிய சாம்ராஜ்யம் வேண்டுமென்று ஒவ்வொரு நாடும் வீணான எண்ணங்கள்கொண்டு தனிப்பட்ட ஓநாய்கள் மாதிரி சுயநலம் பாராட்டி வேலைசெய்கின்றன.

---

## சைனாவின் ஐந்து வருஷச் சோதனை.

(ஜான் மாக்டோனல்டு எழுதியது.)

இனிமேல் ஜப்பானியரிடமிருந்து சமாதானத்தைக்கோரி யாராவது வந்தால் அவன் கொலை செய்யப்படுவான் என்று சியாங்கை-ஷெக் சொன்னார். இதுவே சீனரின் உணர்ச்சியைத் தெரிவிக்கிறது. "சைனாவிலிருந்து எல்லா ஜப்பானிய சிப்பாய்களும் விரட்டப்படும்வரை சமாதானம் கிடையாது" என்றும் யுத்தத்தின் ஆறுவது வருஷ ஆரம்பத்தில் சேனைத்தலைவர் சொன்னார்.

1937-ல் ஒரு எச்சரிக்கையும் இல்லாமல் சைனா-ஜப்பானிய யுத்தம் ஆரம்பமானதும் சைனாவின் கிழக்கு பாகங்களையும், வடக்கு பாகங்களையும் ஜப்பானியர் பிடித்துக்கொண்டுவந்தனர். பீபிங், டீன்ட்ஸின், ஷாங்காய், நான்கிங் போன்ற நகரங்கள் அவ்வருஷம் டிஸம்பர் மாதத்திலுள் எதிரி வசப்பட்டன. அதற்கு அடுத்த வருஷத்தில் தெற்கு பாகமும், கடற்கரை நகரங்களும் எதிரி வசமாயின. ஆனால்



இந்த சமயங்களிலெல்லாம் கடுமையான யுத்தமும் நேர்ந்தது. எதிரி அதிக எண்ணிக்கையையும், முஸ்தீப்பையும் கொண்டிருந்தான். சீனர்கள் அப்பேர்ப்பட்டவர்களை எதிர்த்துச் சண்டை செய்தனர்.

### முதல் சமாதான பிரஸ்தாபம்.

1937 டிஸம்பர் 13-ல் நான்கிங் நகரைப் பிடித்துக்கொண்டதும் முதல்தடவை ஜப்பானியர் சமாதானப்பேச்சைத் துவக்கினார்கள். ஆனால் அது சீனர்களால் மறுதளிக்கப்பட்டது. நான்கிங் நகரில் ஏராள ஜப்பானியத் துருப்புகள் இருந்தது சீனர்களுக்குப் பிடிக்கவில்லை. இத்துருப்புகளை விரட்டவேண்டுமென்றே சீனர்கள் நினைத்தனர்.

1938 அக்டோபரில் காண்டனைப்பிடித்தபிறகு ஜப்பானியரின் முன்னேற்றம் மும்முரமாக இல்லை. சைனாவின் பல பாகங்கள் ஜப்பானியரின் வசமிருந்தாலும், அங்கெல்லாம் முக்கிய நகரங்களையும், இருப்புப்பாதைகளையும்தான் வசப்படுத்தி வைத்திருந்தனர். மற்ற பாகங்களிலிருந்து சீனர்கள் கொரில்லாச்சண்டையைச் செய்துவந்தனர். இவ்விதச் சண்டையில் சீனர்கள் சமர்த்தர்கள். போக்குவரவு ரஸ்தாக்களும், ரயில்வே மார்க்கங்களும், ரயில் வண்டிகளும் தாக்கப்பட்டன. சாமான்களேற்றப்பட்ட வண்டிகள் பிடிக்கப்பட்டன.

எதிரியின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் சமயங்களில் சீனர்கள் எதிர்த்துச் சண்டை செய்யாமல் எதிரியின் பலக் குறைவான நிலைகளைப்பார்த்துத் தாக்குவார்கள். பின்வாங்கவேண்டியிருந்தால் மிகவும் மெதுவாகப் பின்வாங்குவார்கள். எதிரி மற்றொரு பகுதியில் பலப்படுத்தும்போது, குறைந்த பலமுள்ள பிரதேசங்களை சீனர்கள் தாக்குவார்கள். இவ்விதமாகத்தான் சீனர்கள் எதிரிகளிடமிருந்து நகரங்களைப் பிடிப்பது.

### எதிரி தடையுற்றான்.

இம்மாதிரியான சீனத்தந்திரங்களால் எதிரியின் முன்னேற்றம் தடைபெற்றிருக்கிறது. தங்களுடைய சைனியங்களை அந்த அவகாசத்திலுள் சீனர்கள் பலப்படுத்திக்கொள்ளுகின்றனர். யுத்தம் ஆரம்பித்தகாலத்தில் இருந்ததைவிட தற்சமயத்தில் சீனர்களின் பலம் அதிகமாகவேயிருக்கிறது. நேசநாடுகளிடமிருந்து கிடைக்கும் ஆயுத உதவியால் மேலும் சைனியத்திற்குப் பலம் செய்யப்படுகிறது.

ஐந்து வருஷ காலமாக சைனா இதர நாடுகளிடமிருந்து பலவிதமான உதவியைப் பெற்றிருந்தாலும் யுத்தரங்கத்தில் ரத்தத்தைச்சிந்தி சண்டையிடுவது சீனர்கள்தான். 1941 டிஸம்பர் மாதத்திற்குமுன் நேசநாடுகள் கடன்கொடுத்தும், குத்தகைக்கடன் மசோதாப்படிக்கு யுத்த சாமான்களை அனுப்பியும் வந்தன. சைனாவிலேயே பல யுத்த சாமான்களைச் செய்யும் தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்றன. அவைகளைக்கொண்டு சிறிதளவு ஆயுதங்களைச்செய்து சைனியத்திற்கு முஸ்தீப்பு கொடுக்கப்படுகிறது.

சைனாவின் துறைமுகங்களெல்லாம் எதிரிவசமடைந்திருப்பதால் வெளிநாட்டு ஸப்ளைகளை வேறு மார்க்கங்களில் பெறவேண்டிவந்தது. முதலாவதான மார்க்கம் பர்மா ரஸ்தா. ஜப்பானியர் பர்மாவை ஆக்கிரமித்துக்கொண்டதால் நேசநாடுகள் இந்த ரஸ்தாவை உபயோகிக்க முடியவில்லை. திபேத், ஸாமர்கண்டு மார்க்கங்கள் மற்றவை. சென்ற வருஷத்தில் 35,000 டன் சாமான்கள் ருஷ்யாவிலிருந்து கன்ஸூ, ஷென்ஸி மாகாணங்களின் வழியாக சைனாவிற்கு வந்தன. இவைகளெல்லாவற்றிலும் விமான மார்க்கம்தான் மிக உபயோகமுள்ளதாக இருக்கிறது. சுமார் 7-டன் இடையுள்ள சைனிய சாமான்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்க போக்குவரவு விமானங்கள் இந்தியாவிலிருந்து குன்மிங்கிற்கு சிலமணி நேரங்களில் சென்றுவிடும்.

### நேச நாடுகளுக்கு உதவி.

1941 டிஸம்பரில் பிரிடனும் அமெரிக்காவும் ஜப்பான் பேரில் சண்டையைத் துவக்கியதும் சைனா கொஞ்சமும் தயங்காமல் தனது படைகளை நேசதேசங்களின் உதவிக்குக் கொடுத்தது. பேர்ல் துறைமுகத்தையும், மலேயாவையும் ஜப்பானியர் தாக்கியதால் ஹாங்காங் தனியே பிரிக்கப்பட்டது. ஏராளமான சிரமங்களிருந்த போதிலும் ஹாங்காங்கிலிருக்கும் நேசதேசப்படைகளின் உதவிக்கு சீனத் துருப்புகள் சென்றன. பிறகு பர்மா சண்டையின் போதும், பிரிடிஷ் துருப்புகளுடனும், இந்தியத் துருப்புகளுடனும் சீனர்கள் சேர்ந்துநின்று சண்டை செய்தனர்.

(A. V. G.) அமெரிக்க வாலண்டியர் (குரூப்) படை இந்தச் சந்தர்ப்பங்களில் தோன்றியது ஒரு விசேஷம். இது இந்தியாவில் இருக்கும் அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்தது. இவைகளுக்கு "பறக்கும் புலிகள்" என்று பெயர். பர்மா ரஸ்தாவை இவர்கள் காப்பாற்றும்போது தங்களுக்கு ஒரு விமான நஷ்டம் ஏற்பட்டபோது, ஜப்பானியரின் 22 விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.

சீன நகரங்களைத் தாக்கும்போது ஜப்பானியர்கள் 70,000 சீன மக்களைக் கொன்றனர். 1,00,000 பேர்கள் காயமடைந்தனர். 1939-ல் தான் கடுமையான தாக்குதல் நேர்ந்தது. அதில் 2,613 தாக்குதல்கள் செய்யப்பட்டன. 28,181 பேர் இறந்தனர். 31,091 பேர் காயமடைந்தனர். சுங்கிங்கில் முதல் தாக்குதல் 1939 மே 3, 4 தேதிகளில் நடைபெற்றது. அதில் 10,000 பேர் இறந்தனர். அதற்குப்பிறகு இரண்டு வருஷங்கள் கழித்து நடந்த தாக்குதலில் முன்போலவே ஜப்பானிய விமானங்கள் வந்து தாக்கியதில் ஐந்துபேர்தான் பொதுமக்கள் இறந்தனர். இடைக்காலத்தில் சுங்கிங்கில் பாதுகாப்பு ஸ்தலங்கள் சுரங்கங்களிலும், மலைகளிலும் செய்யப்பட்டன. ஆகவே சுங்கிங் ஒரு பத்திரமான இடமென்று சொல்லலாம். இருந்தாலும் அங்கே அமைதிக்குறைவும் இருக்கிறது.

20-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தமாதிரி தற்போதைய சைனா இல்லை. ஆக்கிரமணக்காரர்களை எதிர்த்து நிற்பதில் சைனா முதலில் இருக்கிறது. சைனாவிற்கு ஒரு தலைவர்தான், ஒரு அரசாங்கம்தான், ஒரு உணர்ச்சிதான், ஒரு லக்ஷியம்தான்—ஜப்பானியரை விரட்டவேண்டுமென்பதுதான். பிறகு புனருத்தாரண வேலை துவங்கும்.

---

## மத்தியக் கிழக்குக்கு ஹிட்லர் பாய எத்தனிப்பது.

## இறுதியில் பிரிடன் வெற்றியடையும் என்ற நம்பிக்கையால் துருக்கி நடுநிலைமை வகிக்கிறது.

(லியோனார்ட் மிர்ஷெல் என்பவர் எழுதியது).

நவீன பத்திரிகையின் நிருபர் ஒரு சமயம் ஒரு விஷயத்தைப்பற்றி எழுதி அதை தபாலில் சேர்த்து விடுகிறார். அது தலைமை காரியாலயத்திற்கு சேரும் அவகாசத்திற்குள் நிலைமை முற்றிலும் மாறி விடுகிறது. அதனால் அவர் எழுத ஆரம்பித்த சமயத்தில் இருந்த நிலைமை, அதுபோய் சேர்ந்தவுடன் தான் நினைத்த படி முடிந்திருக்குமாகாதா என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. இவ்விதமாக அநேக தபால்கள் மூலம் அனுப்பிய விஷயங்கள் எதிர் பார்த்ததற்கு விரோதமாக நடந்திருக்கின்றன.



லிபியா யுத்த நிலைமையைப்பற்றி நான் என் துருக்கி சிநேகிதர்களுடன் கலந்து பேசிக்கொண்டிருந்தேன். இப்பொழுது துருக்கியின் நிலைமையைப்பற்றி எழுதிய பொழுது அவர்கள் நான் விவாதித்த விஷயத்தைப்பற்றி நினைப்பார்களா என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தேன். லிபியாவிலிருந்து துக்ககரமான செய்தி அங்காராவுக்கு வந்ததும், எங்களுக்கு உண்மையில் வருத்தம் ஏற்பட்டது. துருக்கியின் நிலைமையைப்பற்றி தெரிந்துகொள்ள இன்று நான் தினசரி பத்திரிகையை படிக்கும்பொழுது லிபியாவைப்பற்றி B. பேலி ரிஃப்கி அடே (Falih Rifki Atay) என்பவர் எழுதிய வியாசத்தின் தலையங்கத்தைப் பார்த்தேன். அது பின்வருமாறு:

"பிரிடிஷ் மக்கள் தலைமுறை தத்துவமாகக் கொண்டிருக்கும் கொள்கை என்னவென்றால், தோல்வியை மறைக்க எத்தனிக்காதே. எவ்வளவு ஆபத்தான நிலையை அடைந்தாலும் தைரியத்தைக் கைவிடாதே," என்பதுதான்.

### டொப்ருக் வீழ்ச்சி.

சென்ற வாரத்தில் ஜெர்மனி ஆக்கிரமித்த பால்கன் நாடுகளிலிருந்து வந்த ஒருவரை சந்தித்தேன். அவர் அப்பொழுதுதான் வந்திறங்கினார். யுத்தத்தில் அச்சு நாடுகள் இறுதியில் தோல்வியேதான் அடையும் என்று என்னிடம் சொன்னார். இதற்குமுன் அவர் ஒரு அரசியல் வாதி. அவ்வளவு பெரிய மனுஷர் சொன்ன வார்த்தைகள் என்மனதில் உண்மையென்று பதிந்தது. துர் அதிர்ஷ்ட வசமாக டொப்ருக் வீழ்ந்தது. நாங்கள் இருவரும் சாப்பாட்டுக் கிளப்பில் ஒரு அறையில் பி. பி. ஸி. ஒலிபரப்பில் டொப்ருக் முடிவைப்பற்றிக் கேட்டோம். ஒரு நிமிஷம்வரை பிரமித்துப்போய் வாய்பேசாமல் நின்றோம். பிறகு நான் ரேடியோவை நிறுத்திவிட்டு என் சிநேகிதனிடம் இச்செய்தியை எப்படி வெளியிடுவது என்று சற்று ஆலோசித்துக்கொண்டிருந்தேன். நான் விஷயத்தை வெளியிடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. என் அறையில் ஏராளமான யுத்தப் படங்கள் தொங்கவிட்டிருந்தேன். அதில் ஒன்றை அவர் வெகு கூர்மையாக கவனித்து வந்தார். சிறிது நேரம் கழித்து, "பிரிடிஷ் சாம்ராஜ்யம், யுனைடெட் ஸ்டேட்ஸ், ருஷ்யா இன்னும் மற்ற நடுநிலை நாடுகள் இவைகளின் விஸ்தீர்ணத்தையும், மூன்று அச்சு நாட்டு வல்லரசுகளின் நாடுகள், அவர்கள் தாத்காலிகமாக ஆக்கிரமித்த பிரதேசங்கள் இவைகளின் விஸ்தீர்ணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அச்சு நாடுகள் மிக மிகச் சிறியவையேயாகும். அதனால் அந்நிய நாட்டு ஒலிபரப்புகளைக் கேட்கவேண்டாம் என்று பிரிடிஷ் அரசாங்கம் வற்புறுத்தி வருவது நியாயம்தான் என்று புலப்படுகிறது. நீ இச்செய்தியைக் கேட்டு கலவரமடைந்தாற்போல் தோன்றுகிறது. எனக்கு மனம் நிம்மதியாக இருக்கிறது. இவ்வித தோல்வியெல்லாம் தாத்காலிகமானவைதான். ஏனென்றால் ஜெர்மானியரும் அவர்கள் சகாக்களும் நிச்சயமாக இந்த யுத்தத்தில் தோல்வியடைவார்கள்" என்று சொன்னார். அது முதற்கொண்டு என் மனது நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

துருக்கியில் சாதாரண மனிதனுக்கும் இச்செய்தி திடுக்கிடச்செய்திருக்கும். சென்ற ஒரு வருஷகாலமாக டொப்ருக் அதிக பலமானகோட்டை, அதற்கு அழிவே கிடையாதென்று அவன் நம்பியிருந்தான். 48 மணி நேரத்திற்குள் அப்பட்டணம் எதிரி வசமாய் விட்டது என்ற செய்தி அவனுக்குப் பிரமையை உண்டாக்கி விட்டது. இப்பொழுது அவன் கொஞ்சம், கொஞ்சமாக மனதை தைரியப்படுத்திக்கொண்டு வருகிறான். பால்கன் நாடுகளிலிருந்து வந்த என்னுடைய சிநேகிதனைப்போலவும், பேலி ரிஃப்கி அடே என்பவனைப்போலவும் இப்பொழுது அபிப்பிராயங்கொண்டு வருகிறான்.

### பிரிடன் நிச்சயமாக வெற்றியடையும்.

ரோமல் இன்னும் எகிப்தைக் கைப்பற்றிக்கொள்ள முடியவில்லை. எகிப்தின் உள் நாட்டில் அநேக மர்மஸ்தானங்கள் இருக்கின்றன. அவைகள் இதுவரை

தாக்கப்படவேயில்லை. இன்னும் அவ்விடங்களைப் பலப்படுத்திக்கொள்ள போதுமான அவகாசம் இருக்கிறது. பெர்லினில் ராணுவ கலாசாலையில் யுத்த தந்திர போதகராயிருந்த ரோமலுக்கும்கூட அவ்விடங்களை வெகு சுலபமாகத் தாக்கிவிட முடியாது. டொப்ருக் விழுவதற்குமுன் துருக்கி மந்திரி சபையில் ஒரு மெம்பருடன் நான் சம்பாஷித்தேன் அப்பொழுது லிபியா யுத்தத்தைப்பற்றி விவாதம் ஏற்பட்டது. அப்படையெடுப்பில் நேசநாடுகள் வெற்றியடைவதைப் பற்றி ஏதாவது சந்தேகமிருக்கிறதாவென்றும், எகிப்து ஆபத்துக்குள்ளாகி யிருப்பதாக அவர் எண்ணியிருக்கிறாரா என்றும் நான் அம்மந்திரியைக் கேட்டேன். "துருக்கி நிருபர்கள் அனுப்பும் செய்திகளிலிருந்து நாம் பயப்படவேண்டிய அவசியமே கிடையாதென்று தெரிகிறது. யார் அதிக விஸ்தீரணமுள்ள மணல் பிரதேசத்தைக் கைப்பற்றினால்தான் என்னவாயிற்று? முக்கிய மர்மஸ்தானங்கள் தாக்கப்படாமல் பலமாக காபந்து செய்யப்படும் வரையில் யாதொரு பயமும் வேண்டியதில்லை," என்று சொன்னார். மேலும் ஜெர்மானியர் ஒருநாளும் ஸூயஸ் கால்வாயை அடையப்போவதில்லை என்றும் பூர்ண நம்பிக்கையுடன் வெளியிட்டார்.

யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கும்பொழுது வெற்றி, தோல்வியைப்பற்றி நிர்ணயிப்பது முடியாத காரியம். ஏதேனும் ஒரு போர்முனையில் மட்டில் கெடுதலான சம்பவங்கள் நேரிட்டு நேசநாடுகளுக்குத் தோல்வி ஏற்படலாம். இதைவிட எவ்வளவு மோசமான சம்பவம் ஏற்பட்டபோதிலும், துருக்கி ஜனங்கள் மனம் அதைரியப்பட மாட்டார்கள் என்பது திண்ணம். "பிரான்ஸ் தோல்வியடைந்து, ருஷ்யா யுத்தத்தில் சேராமல் பிரிடன் மட்டில் தனிமையில் யுத்தம் புரிந்து வந்ததில் அதற்கு தோல்விகள் நேரிட்டு, கவலைக்கிடமான சந்தர்ப்பங்களிலும் பிரிடன் இறுதியில் வெற்றிபெற சக்தி வாய்ந்திருக்கிறது என்பதில் நாங்கள் சந்தேகம் கொள்ளவில்லை. நாஸி யுத்த யந்திரத்தை எதிர்த்து அப்பொழுது பிரிடன் தனிமையில் நின்று கடும்போர் புரிந்தது. ஆனால் இப்பொழுது நேசநாடுகளின் உதவி பெற்றிருக்கும் பிரிடனுக்கு இறுதியில் ஏற்படக்கூடிய வெற்றியைப்பற்றி நாம் ஏன் சந்தேகிக்கவேண்டும்?" என்று அங்குள்ள ஒரு உத்தியோகஸ்தர் என்னிடம் சொன்னார்.

இவ்விஷயத்தைப் பற்றி சுருக்கமாக மேலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதற்குமுன் ஒரு வருஷகாலத்திற்கு மேலேயே தனிமையில் நின்று கடும்போர் புரிந்த பிரிடனின் பலத்தை துருக்கியர்கள் ஒருக்காலும் குறைத்து மதிப்பிட முடியாது. இறுதியில் ஏற்படும் முடிவைப்பற்றி இப்பொழுது ஏன் சந்தேகிக்க வேண்டும்?.



# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

## பிரஸங்கம் 105—(2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஜூலை | ...25, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 26, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் ... | ,, | 5.30 |
| | | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| | 27, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 28, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | கல்லூர் ... | மாலை | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 29, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | வெங்களூர் ... | மாலை | 6.00 |
| | | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| | 30, வியாழக்கிழமை ... | பனையபட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 31, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 106—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ... 1, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 2, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு ... | ,, | 6.30 |
| | 3, திங்கட்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 4, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் ... | மாலை | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 5, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் (பிராஞ்சு ஸ்கூல்) | ,, | 10.15 |
| | | பொ. புதுப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |
| | 6, வியாழக்கிழமை ... | மழையூர் ... | ,, | 6.00 |
| | | காரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 7, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 25— 7—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 26— 7—42 | ... | வம்பல். |
| திங்கட்கிழமை | ... | 27— 7—42 | ... | அரிமளம். |
| செவ்வாய்க்கிழமை | ... | 28— 7—42 | ... | சோளுபட்டி. |
| புதன்கிழமை | ... | 29— 7—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 30— 7—42 | ... | குழிபிறை. |
| வெள்ளிக்கிழமை | ... | 31— 7—42 | ... | பாப்பாபட்டி. |
| சனிக்கிழமை | ... | 1— 8—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 2— 8—42 | ... | மருதனகோன்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 3— 8—42 | ... | விராலிமலை. |
| செவ்வாய்க்கிழமை | ... | 4— 8—42 | ... | வடகாடு. |
| வியாழக்கிழமை | ... | 6— 8—42 | ... | கீழாநிலை. |
| வெள்ளிக்கிழமை | ... | 7— 8—42 | ... | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—26-7-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஆகஸ்டு ௴ 1௳ [நெ. 106

# தேசிய யுத்த முன்னணி.

## அராஜகமா, வெற்றியா?

### விபத்தின் மத்தியிலா விளையாட்டு.

I

**சட்ட மறுப்பு இயக்கத்தினால் விளையும் தீங்கு.**

(தேசிய யுத்த முன்னணியின் மத்திய ஸ்தாபனம், புதிய டெல்லி, ஜூலை 21.)

தேசிய யுத்த முன்னணி என்பது அரசாங்க விஷயத்தில் ஈடுபடும் ஸ்தாபனமில்லை. ஆகவே அரசாங்கத்தாருக்கும், பொதுமக்களுக்கும் இடையிலுள்ள சச்சரவுகளைப்பற்றி அதிக அக்கரை எடுத்துக்கொள்ளாது. யார் என்ன பேசினாலும், எழுதினாலும், என்ன செய்தாலும் எதிரிக்கு உதவுகிறதா, இந்தியாவின் ஆபத்தை அதிகரிக்கிறதா? என்று மாத்திரம் கவனிக்கும்.

இந்தக் கேள்விகளைச் சமீபத்தில் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப்பற்றி கேட்டால் விபரீதமான முடிவு ஏற்படுகிறது.

காங்கிரஸ் தீர்மானத்தின் சரித்திரம், அரசியல் முதலிய சம்பந்தங்களை விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால்,

1. நமது சிப்பாய்களின் நிலைமை;
2. நமது நேசநாடுகள்;
3. இந்தியா;

இவைகளில் எவ்வித மாறுதலைச் செய்யுமென்று மாத்திரம் கவனிப்போம்.

ஒவ்வொரு வகையிலும் அக்கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில் விபரீதமானது தான்.

1. நமது சிப்பாய்கள்.—காங்கிரஸ் திட்டப்படி தற்போதுள்ள ஸர்க்கார் உடனே வாபஸ் வாங்கவேண்டும். இடைகாலத்தில் இந்தியாவில் அரசாங்கமே இல்லை. * ஆகவே சைனியமும் இருக்க முடியாது என்பது.

இந்த நிலைமையைப்பற்றி 1942 ஜுன் 14ல் ஹரிஜன் பத்திரிகையில் மிஸ்டர் காந்தி எழுதியுள்ளார் "இதன் பிரகாரம் பிரிடிஷ் ஸர்க்கார் வாபஸ் வாங்கியதிலிருந்து இந்தியச் சைனியம் கலைக்கப்படும்."

முன்பைக்காட்டிலும் தற்போது இந்தியப் பாதுகாப்பு அத்யாவசியமாக இருப்பதால் சைனியத்தைக் கலைக்கவேண்டுமென்று சொல்லப்படும் தீர்மானத்தைப்பற்றி அதிக வியாக்யானமே தேவையில்லை. நமது இந்தியப் படைகள் செய்துள்ள வீரச் செயல்களுக்கு இது தகுந்த வெகுமதியாகாது.

ஒருக்கால் காங்கிரஸ் கமிட்டி தனது நோக்கத்தைத் திருத்திக்கொண்டு சைனியம் நீடித்திருக்கலாமென்று அபிப்பிராயப்பட்டாலும் இதுவரை பெற்று வரும் ஸப்ளைகளை இனி பெற்று சண்டையில் ஈடுபட முடியாது. ஏனென்றால் ஸப்ளைகளைச் செய்ய அரசாங்கம்தான் இல்லையே. ஆகவே இந்தியச் சைனியத்திற்குப் பின்புறம் ஒரு குத்துக் குத்திய மாதிரிதான். சைனியத்தின் செயல்களை நிந்தித்த மாதிரி ஆகிறது.

சைனாவிற்கும் உதவியில்லை.

2. **நமது நேசநாடுகள்.**—கடந்த ஐந்து வருஷ காலமாக சைனாவை வீரச் சண்டைகளில் இந்தியா உத்ஸாகப்படுத்தி வந்திருக்கிறது. சைனாவின் உதவிக்குப் போகவில்லையென்று பிரிட்டனைப்பற்றி காங்கிரஸ் தலைவர்கள் குறைகூறியுமிருக்கிறார்கள். கடைசியாக இந்தியாவில் எல்லா முஸ்தீப்புகளுடனும் ஒரு பெரிய சைனியம் தயாராகி இருக்கிறது. இது ஜப்பானை எதிர்த்துப்போராட லாயக்காகவும் இருக்கிறது. அப்படி சண்டை செய்தால் சைனாவிற்கு நிச்சயம் உதவலாம்.

காங்கிரஸ் தீர்மானத்தைப் பார்த்தால் சைனாவிற்கு ஏற்படும் உதவியை காங்கிரஸ் கமிட்டி வேண்டாமென்ற மாதிரி ஆகிறது.

3. **இந்தியா.**—காங்கிரஸ் தீர்மானத்தைச் சரியாக அர்த்தப்படுத்திக் கொண்டால் இந்தியாவிற்குள்ள ஆபத்துத்தான் அதிகரிக்கிறது.

தாக்கப்போகும் நாடுகளில் ஏற்படும் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் அச்சு நாடுகள் கைதேர்ந்தவை. இந்தக் காங்கிரஸ் தீர்மானத்தை ஜப்பானியர் அசதி மறதியாக விட்டுவிடமாட்டார்கள். மாரி காலம் வரவர தாக்குதல் பயமும் இருக்கிறதால் அதோடு சட்ட மறுப்பு இயக்கமும் ஏற்படுவது திருப்திகரமான விஷயமில்லை.

ஜப்பானியரின் முன்பாக நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவது காங்கிரஸுக்குத் திருப்தியாக இருக்கலாம். ஆனால் பொதுஜனங்கள் அதை விரும்பவில்லை.

காங்கிரஸ் தீர்மானப்படி இந்தியத் துருப்புகளுக்கும், நேசநாடுகளுக்கும், இந்தியாவிற்கும் ஆபத்துதான். ஆகவே தேசிய யுத்த முன்னணியில் சேருவோர் இவ்விஷயத்தை நன்கறிந்து பொதுமக்களைக் காங்கிரஸ் தீர்மானத்தில் அதிருப்தி கொள்ளும்படி செய்யவேண்டும்.

## II

## காங்கிரஸுக்கு பகிரங்கமான எச்சரிக்கை.

(டெயிலி ஹெரால்டு, ஜுலை 21.)

இந்திய நேயர்களே, நீங்கள் எங்களைக் கைவிடுகிறீர்கள். பிரிடிஷ் தொழிலாளர் கக்ஷியினால் நெருக்கடியில் அடைந்த கௌரவமான நோக்கத்தினால் அடைந்த நன்மைகளைப் புறக்கணிக்கிறீர்கள். இந்தியா, ஜனநாயகம், நாகரீகம் யாவைக்கும் நீங்கள் தீமை விளைவிக்கிறீர்கள்.

பிரிடிஷ் லேபர் கட்சிக்கும், இந்திய காங்கிரஸ் நண்பர்களுக்கும் வார்தா தீர்மானம் அதிக குழப்பத்தைச் செய்கிறது. காங்கிரஸ் தலைவர்களே அவ்விதம்



சொல்லியிருக்கும் போது நாங்கள் என்ன செய்யலாம்? பிரிடிஷாரின் முன்பாக வெகுகாலமாக கௌரவம் பெற்ற மிஸ்டர் காந்தியைப் பற்றிதான் நாங்கள் எவ்வாறு நடந்து கொள்ள முடியும்?

மிஸ்டர் காந்தியின் செய்தியில் அதிகமாக 'அப்படியாகில்' என்ற பாவனைகள் காணப்படுகின்றன. ஜோஸியம் சொல்லுகிறவன்கூட இவ்வளவு கன்டிஷன்களை உபயோகிக்கமாட்டான்.

உங்களுடைய திட்டங்கள் தப்பானவை என்று நாங்கள் நினைக்கிறோம் கஷ்டப்படும் இந்தியப் பொதுமக்களின் அபிப்பிராயங்களை நீங்கள் சொல்லவில்லை யென்றும் நினைக்கிறோம். தற்சமயத்தில் கொடுப்பதற்குச் சாத்தியமில்லாத திட்டங்களை நீங்கள் விரும்பினால் உங்களுடைய காரணமே முறிந்துவிடும். உங்கள் விஷயங்களைப்பற்றி எடுத்துரைக்கும் எங்களது செல்வாக்கையும் கெடுக்கிறீர்கள்.

இன்னும் அதிகமான தீங்கையே உண்டுபண்ணிக்கொள்ளுவீர்கள். நேசநாடுகளின் லக்ஷியங்களுக்கும், தேசிய வாதங்களின் நிலைகளுக்குமுள்ள வித்தியாசத்தை இந்தியத் தலைவர்கள் அறிய முடியவில்லை' என்று உலகம் நினைக்கும். ஸ்வதந்திரம், ஸமதை, முதலியவைகளுடன் ஜனங்கள் முன்னேற்றமடைவதைவிட அரசியல் தந்திரமே மேலானதென்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

## III

## அமெரிக்காவிற்கு ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் எடுத்துரைத்தது.

(ஜுலை 26).

### "இந்தியாவை விட்டகலு" என்ற இயக்கம்.

இந்தியாவில் வேரூன்றிய மதவேற்றுமைகளிருக்கும்போதும், சட்டத்திற்குட்பட்ட அரசாங்கம் ஏற்படாமலிருக்கும்போதும் நாம் இந்தியாவை விட்டு வெளியேறவேண்டுமென்று மிஸ்டர் காந்தி விரும்புகிறார். பொறுப்புள்ள எந்த அரசாங்கமும் அப்படிச் செய்யாது, அதுவும் யுத்த காலத்தில் செய்யவே செய்யாது.

மிஸ்டர் காந்தியே பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—'அதனால் வீண் கலவரம்தான் ஏற்படும்.'

தற்சமயத்தில் இந்தியா அச்சுநாடுகளை எதிர்க்கும் முன் அரங்கத்தில் இருக்கிறது. ஜப்பானை எதிர்த்து இந்தியர்களைப்போல் பிரிடிஷ், அமெரிக்கர், சீனர் யாவரும் சண்டை செய்கின்றனர். அமெரிக்கர்களுக்கும், சீனர்களுக்கும் பிரிடிஷ் அரசாங்கம் கொடுத்துள்ள வாய்மொழிகளை ஊர்ஜிதப்படுத்தவேண்டுமானால் இந்தியாவை பத்திரமான தளமாக அமைக்கவேண்டும். அங்கிருந்துதான் ஜப்பானியரை எதிர்க்கமுடியும். இந்தியாவிற்குள் எதிரிகள் புகுந்து நேசதேசச் சைனியங்களுக்கு இடைஞ்சலேற்படும்படி எந்த அரசியல் கட்சியையும், தலைவனையும் செய்யவிடக்கூடாது.

### நேசநேசங்களுக்குள்ள பந்தகங்கள்.

நாம் அமெரிக்கர்களுக்கும் "பிரிடிஷ்காரர்களுக்கும் மாத்திரம் கட்டுப்பட்டிருக்கோமென்பது அல்ல, இந்தியர்களுக்கும் கட்டுப்பட்டிருக்கிறோம். இதனால்தான் இந்திய நிலைமையைக்கண்டு நமது நாடு அதிக கவலை எடுத்திருக்கிறது.

உங்கள் மக்களும், எங்கள் மக்களும் இந்தியாவைப் பாதுகாக்க ஈடுபட்டிருக்கின்றனர். நம்மிருவருடைய திட்டம் இந்தியாவைப் பாதுகாப்பதுதான். ஆனால் மிஸ்டர் காந்தியும் காங்கிரஸும் வேறுவிதமாக நினைக்கிறார்கள்.

மிஸ்டர் காந்தி தாமதிக்கப்போவதில்லை, ஸ்வதந்திரத்தையும் நேச நாடுகளின் புனித காரணங்களையும் கெடுத்துவிடுவார்.

தனது கட்சிக்கு அதிகமான அரசாங்க அதிகாரத்தைப் பெறவே இவ்விதம் பயமுறுத்துகிறார். ஆனால் மற்ற பெரிய கட்சிகள் மிஸ்டர் காந்தியின் திட்டங்களுக்கு விரோதமாக இருக்கின்றன என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

## இந்தியாவின் க்ஷேமம்.

அவர் இவ்வித முடிவிற்கு வந்ததுபற்றி நான் கவலைகொள்ளுகிறேன். இந்தியர்கள் யாவரும் அவரைப் பின்பற்றவில்லை. சட்ட மறுப்பு இயக்கத்திற்குச் சிறிதளவு உதவி ஏற்படுமென்று அவர் நினைக்கலாம். ஆனால் நேசநாடுகளின் சார்பாக நாம் இந்தியாவை ஒரு பத்திரமான தளமாகச் செய்துகொண்டு ஜப்பானியரை எதிர்க்கவேண்டும். எவ்வித நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமானாலும் நாம் பயமின்றி எடுக்கவேண்டும்.

வெற்றி கிடைத்த பின்பே இந்தியா ஸ்வதந்திரம் பெற்று தனது சுய ஆட்சிக்கு லாயக்கான அரசாங்கத்தை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த வெற்றி அடையப்படவேண்டும். எவ்வளவு முன் யோசனையுடனிருந்தாலும் கிழக்கே நேசநாடுகள் வெற்றி பெறுவதைத் தடுத்துச் செய்யப்படும் நடவடிக்கைகளை நாம் அடக்கவேண்டும்.

உலகத்திற்கே இவைகள் மிக முக்கியமானவை. அமெரிக்கர், சீனர், இந்தியர், பிரிட்டிஷார் யாவரும் உலகத்தின் விடுதலைக்காக தைரியமாகச் சண்டையிடும்போது இந்தியாவிலோ, மற்ற நாடுகளிலோ ஒரு சாரியினர் மாத்திரம் தடை செய்வதை நாம் விட்டுவிடக்கூடாது. இது இந்தியாவின் அக்கறை மட்டுமில்லாது சீனா, பிரிட்டன், அமெரிக்கா யாவருடைய அக்கறையுமாகும்.

---

# ஸர்வதேச சமுதாயத்தை நாம் அமைக்கவேண்டும். இல்லாவிடில் நாம் அழிந்து போவோம்.

அந்நிய நாட்டு மந்திரி, மிஸ்டர் ஈடன் பிரசங்கம்.

[illegible], ஜூலை 23.

"இன்று இந்த நிமிஷத்தில் யுத்தம் உச்ச நிலையை அடைந்துவருகிறது. ருஷ்யாவிலும், எகிப்திலும் நமது நேசர்களின் [illegible], பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் படைகளும் ஒரே போர்முனையில் ஒன்றுபட்டு வேலை செய்கின்றன. யுத்தம் எவ்வளவு காலம் நடக்கும் என்பதை இதன் விளைவு வெளியாக நிச்சயிக்கும்.

"ருஷ்யர்கள் தங்கள் தேசத்தைக் காப்பாற்றுவதற்காக உக்கிரமாகவும், வெகு திடத்துடனும், [illegible] எதிரிகளை எதிர்த்துப் போராடுகின்றனர்.

"இந்த யுத்தம் நீண்டகாலம் நடக்கலாம் அல்லது வெகு சீக்கிரத்தில் முடிவடைந்தாலும் சரி, நாங்கள் எங்களுடைய நேசர்களுடன் சேர்ந்து இப்போதைய வெற்றிகரமான முறையில் கொண்டுசெல்லப்போகிறோம் என்பதில் எதிரிகளுக்குச் சிறிதும் சந்தேகம் வேண்டியதில்லை.

"ஜெர்மனியில் தற்காலமுள்ள [illegible], அல்லது [illegible], அல்லது [illegible] [illegible] கட்டுப்பாட்டை [illegible] நடந்துகொண்டுவரும் [illegible] இல்லாமல் பாதுகாப்பு [illegible] நாங்கள் [illegible] எண்ணியிருக்கிறோம்.



"ஏனென்றால் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் சமீபத்தில் நடந்த ஜெர்மன் அட்டூழியங்கள் இவ்வுலகத்தையே திடுக்கிடச் செய்துவிட்டது. காட்டுமிராண்டித்தனமுள்ள தனிப்பட்ட நாஸி சிப்பாய்களோ அல்லது உத்தியோகஸ்தர்களோ இச்செய்கைகளை நடத்தினார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஜெர்மன் ஸர்க்காரின் கொள்கையை இவை நிரூபிக்கின்றன. அதன் ஆட்சியும் கொடுங்கோன்மைதான்.

"இக் கொடுங்கோல் ஆட்சியினால் விளையக்கூடிய பயன்களை நாஸிகள் நன்குணர்ந்திருக்கின்றனர்.

"ஜெர்மனியின் அட்டூழியச் செய்கைகளினால் இவ்வுலகத்தார்களின் அனுதாபத்தை அது முற்றிலும் இழந்துவிட்டது. கோயபெல்ஸ் ஜூன் மீ 15உ பெர்லினில் பேசுகையில் இவ்விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறான். ஜெர்மனியை ஆளுபவர்கள் மனிதவர்க்கத்திலிருந்து துண்டித்துக்கொண்டுவிட்டார்கள். அதனால் அவர்கள் மீதுள்ள உலகத்தாரின் அனுதாபமும் அற்றுப் போய்விட்டது.

## முயற்சி பலிக்கவில்லை.

"இவ்விதம் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டதில் நாஸிகளின் நோக்கம் நிறைவேறவில்லை. அவர்களின் கொடிய செய்கைகளினால் நேச தேசத்தார்களின் பலத்தைக் குலைக்க முடியவில்லை. உண்மையில் நேசநாடுகள் ஒன்று சேர்ந்து நாஸிக்கொள்கையை அழிக்க பலமாக எதிர்த்துவருகின்றன.

"அதனால் நேசநாடுகளின் சேர்க்கை இன்னும் பலப்படுத்தப்பட்டது. எங்களில் யாருக்காகிலும் நாஸிகள் கெடுதல் விளைவித்தால், அது எல்லோருக்கும் நேர்ந்ததாகக் கருதப்படுகிறது. நாங்கள் ஒன்று சேர்ந்து சரியான சமயம் வாய்க்கும் பொழுது எச்செலவிலும் எதிரிகளுக்குத் தகுந்த தண்டனை விதிப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம்.

"இவ் யுத்தத்தில் வெற்றிக்காகவும் அதன் பின் வேண்டிய ஏற்பாடுகளுக்காகவும் நாம் ஒன்று சேர்ந்து முயற்சித்து வருகிறோம். பயம், பசிப்பிணி, நம்பிக்கையின்மை முதலியவை நிறைந்த உலகத்திற்கே மீண்டும் வருவதற்காக இவ்வளவு வருஷங்கள் வரை நாம் போராடவில்லை.

"பயம், தயவு, தாக்ஷிண்யம் இல்லாமல் ஒவ்வொரு தேசமும் ஸ்வதந்திரமாய் வாழ்ந்து, தாராளமாய் வேலை செய்யக்கூடிய ஒழுங்கான சட்டதிட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் ஸர்வதேச சமுதாயத்தை நாம் அமைக்கவேண்டும். இல்லாவிடில் காட்டுமிராண்டித்தனமான சண்டையில் நாம் அழிந்து போவோம்.

"இத்தருணத்தை நாம் இழப்போமானால் வேறொரு சந்தர்ப்பம் வாய்ப்பது அரிது. யுத்தம் முடிந்த பிறகு [illegible] மட்டில் ஆக்கிரமித்த நாடுகளை வசப்படுத்திக்கொண்டு மற்ற நாடுகளை அடிமையாக்கிக்கொள்வார்கள் என்று நாம் எண்ணுவது தவறு.

"உலகம் பூராவுமே விழித்துக்கொண்டுவிட்டது. நிறம், ஜாதி, மதம் முதலிய வித்தியாசமின்றி ஜனங்கள் அணிவகுத்துச் செல்லுகின்றனர். யந்திரத் தொழில் அதிகம் அபிவிருத்தியாகிவிட்டது. அதனால் இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் போதிய உணவும், நாகரீகமாக வாழ்வதற்கான வசதியும் ஏற்பட்டுவிடும்.

"பரிபூரணமான உற்பத்தியையும், நேர்மையான விநியோகத்தையும் நிர்ணயித்து ஒழுங்குபடுத்துவதே இப்போதைய பிரச்னையாகும். நன்றாகச் சாப்பிட்டு ஆரோக்யமாயுள்ள ஜனங்களே ஒரு சிறந்த உலகத்திற்குப் பலமாகத் தக்க முறையில் வேலைசெய்ய முடியும். இது சொற்பகாலத்திற்குள்ளோ, தனியாகவோ செய்து முடிக்கக்கூடிய காரியமில்லை. இதற்கு எல்லா தேசங்களின் ஒத்துழைப்பு அவசியம் வேண்டும். அவைகளின் சக்திக்கும், அனுபோகத்திற்கும் தகுந்தவிதமாகத்தான் உலக சீர்திருத்தம் ஏற்படும்.

"யுத்தத்தை ஜயிப்பது எவ்வளவு கஷ்டமோ, அவ்வளவு கஷ்டம் சமாதானத்தை அடைவது. தேசிய ஒற்றுமை நமக்கு அவசியம். நம் சுயநலம் பாராட்டாமலும், தியாகம் செய்யத் தயாராகவும் இருப்பது அவசியம்.

### ஆங்கிலோ-அமெரிக்க நட்பு.

பொரிடும் தேசநாடுகளுக்குள் உண்மையான சிநேகம் இருக்கவேண்டியது அவசியம். எல்லோருக்கும் நன்மை ஏற்படும்வகையில் நன்றுடைய வாழ்க்கையையும், சாதனங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு ஒவ்வொரு தேசத்திற்கும் சந்தர்ப்ப மளிக்க நாங்கள் உறுதிகொண்டிருப்பதாக ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், இதர ராஜீய வாதிகளும் கூறியிருப்பது மிகவும் உத்ஸாகத்தைத் தருகிறது.

"அவர்களுடன் சேர்ந்து வேலைசெய்ய நாம் தயார்.

"யுத்தத்தில் காட்டிய ஊக்கத்துடன் சமாதானத்திற்காக வேலை செய்ய தேசங்கள் தவறிவிட்டதால் நாம் சமாதானத்தை இழந்தோம். அதே தவறுதலை நாம் இனியும் செய்யக்கூடாது. மீண்டும் ஜெர்மனியுடன் போர் தொடுக்க வேண்டிய அவசியமும் கூடாது.

"வெற்றிக்குப் பின் வருவில் போர் தொடுக்கும் நாடுகளின் ஆயுத பரிஹாரணம் பரிபூர்ணமாக யிருக்கவேண்டும். பட்டினிகிடக்கும் ஜனங்களுக்கு உணவளிப்பதே முதல் வேலை. இது சம்பந்தமாக ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

"அழிக்கப்பட்டுப் போன தேசங்களிலும், கைத்தொழிலையும், விவசாயத்தையும் மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய மற்றொரு பிரச்னையும் இருக்கிறது. பொருளாதார உதவியும், பண உதவியும் ஒரு தேசம் அடைவதினால் மட்டில் அது தன் ஸ்வதந்திரத்தை இழந்து விடக்கூடாது.

"சுய ஆட்சிக்கு வேண்டிய சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்கு அதில் அநுபவமில்லாத ஒவ்வொரு தேசத்திற்கும் வேண்டிய உதவி அளிக்கப்படும். அது முன்னேற்றம் அடைவதற்கான ஏற்பாடும் எடுத்துக்கொள்ளப்படும்.

### எதிர்கால உலகப்போக்கு.

"தீர்க்காலோசனையின் பேரில் அரசியல் திட்டத்தை எதிர் பார்த்து அமைப்பதைப் பொறுத்து யுத்தத்திற்குப் பிறகு உலகத்தின் எதிர்கால நிலைமை இருக்கும்.

"வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழிக்க வேண்டும். ஒருவர் அதிக பணக்காரராகவும், மற்றொருவர் அதிக ஏழையாகவும் செய்துவிடக்கூடாது. அநேகர்களுக்கு முன்னேற்றமடைய போதிய சந்தர்ப்பங்கள் கிடைக்காமல் இருக்கும் படிக்கும், ஊழல்கள் நிறைந்திருக்கும் படிக்கும் செய்துவிடக்கூடாது.

"இதற்கெல்லாம் மற்ற நாடுகளுடன் நாம் வியாபாரம் செய்யும் சக்தியைப் பொறுத்து இருக்கிறது. பரஸ்பர நேசப் பான்மையை அடிப்படையாகக் கொண்டு பல தேசத்தார்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளவேண்டும். நமது தேசத்தில் ஆரம்பித்தும், நமது அண்டை நாடாகிய அமெரிக்காவிலும் அத்தகைய உணர்ச்சியுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளும்படி விசேஷ சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்திருப்பது நமது அதிர்ஷ்டம் தான்.

"இப்பொழுது பிரிட்டனில் அமெரிக்கத் துருப்புகள் ஏராளமாக வந்து இறங்கியது முதல், நமக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஒரு புது மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்கர்களுக்கும் நமக்கும், யுத்த காலத்தில் மனப்பூர்வமாக ஏற்படும் சகோதரத்வம், யுத்தத்திற்குப் பிறகு சமாதானம் ஏற்படும் பொழுதுகூட நீடித்திருக்க வேண்டும்.



"பொது மனிதனுக்கு அரிய சந்தர்ப்பமும், சுயமரியாதையும், கௌரவமும், ஸ்வதந்திரமும் முதலிய மூலப்பொருள்கள் எல்லோருக்கும் சமம் என்று நாமும், அமெரிக்கர்களும் பார்ப்பதாகத் தோன்றினால்தான் நமக்கும், அவர்களுக்கு மிருக்கும் சகோதரத்வம் நீடித்திருக்கும்.

"ஆங்கிலோ-அமெரிக்க நட்பின் எதிர்காலம் இத்தேசமக்களின் கையிலேயே முதன் முதலாக வந்திருக்கிறது. தற்செயலாய் ஏற்பட்ட இந்த யுத்தத்தினால் சமாதானத்திற்கு நிரந்தரமான அனுகூலம் வரவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்."

---

**பிரஸங்கம் CVI.**

# பார்மோஸா.

(அல்லிங்டன் கெனார்டு எழுதியது).

---

### ஆக்கிரமணத்திற்கு முதல் பலி.

பார்மோஸா ஜப்பானுக்கு அடங்கிய பழமையான குடியேற்ற நாடு. ஜப்பான் குடியேற்ற நாட்டை நடத்தும் விதத்திற்கு இது ஒரு முக்கிய உதாரணமாகும். ஆசியா வாசிகளையும், ஆசியா நாடுகளையும் ஜப்பான் நடத்தும் விதத்திற்கு ஜப்பானிய சாம்ராஜ்யத்தில் பார்மோஸாவில் முதலில் ஜப்பானிய புது திட்டம் அமுலுக்கு வந்தது. இப்புது திட்டம் கொரியா, மஞ்சூரியா, இன்னும் சைனாவில் ஐந்து வருஷகாலமாகப் பிடித்து வந்த நாடுகள் இவைகளில் சிற்சில மாறுதல்களுடன் அமுலிலிருந்து வருகிறது. ஆனால் பலாத்காரமென்பது எங்கும் ஒரு மாதிரிதான். இவைகளில் பார்மோஸா ஜப்பானிய சாம்ராஜ்ய ஆசையினால் பிடிக்கப்பட்ட நாடு. அதைப் பிடிக்கும்பொழுது ஜப்பானில் தொழிற்சாலை விருத்தியினால் ஏற்பட்ட அதிக சாமான்களை விற்கும் அவசியமோ, அல்லது ஜனத்தொகையின் அதிகத்திற்காக வேறொரு நாட்டைப் பிடிக்கும் அவசியமோ கிடையாது.

### பிரதேசத்தின் அழகும், எஜமானனும்.

1895-ல் ஜப்பான் பார்மோஸாவைக் கைப்பற்றியது. அதாவது அவ்வருஷத்தில்தான் ஷிமோனோஸெகி என்ற இடத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையின் படி சைனா பார்மோஸாவை விட்டது. ஆனால் சைனா அரசாங்கம் கைவிட்ட போதிலும் அத்தீவிலிருந்தோர் தனி அரசாங்கத்தை நடத்தியதால் அவர்களைத் தவியே தோற்கடித்த பிறகுதான் ஜப்பானுக்குப் பூரா ஆக்கிரமணமும் பலித்தது. 57½ லக்ஷம் கொண்ட பார்மோஸா ஜனத்தொகையில் 90 சதவிகிதம் சீனர்கள். ஆசியா கடற்கரையிலிருந்து சுமார் 100 மைல் தூரத்தில் பார்மோஸா தீவு இருக்கிறது. சீனர்கள் இங்கு வெகுகாலத்திற்கு முன்பு குடியேறியிருக்கிறார்கள். 17-வது நூற்றாண்டில் சீன வீரனான கோக்ஸிங்கா என்பவன் டச்சுக்காரர்களை விரட்டி ஸ்வாதீனப்படுத்திக்கொண்டான். புகீன், குவான்டங் மாகாணங்களிலிருந்துதான் பார்மோஸாவுக்கு அதிகச் சீனர்கள் குடியேறினார்கள். இவர்களைத்தான் ஜப்பான் அத்தீவு வாசிகள் என்று அங்கீகரித்திருக்கிறது. சீனர்களுக்குமுன் அங்கிருந்த புராதன வாசிகள் 1,60,000. இவர்களையும் தவிர 50,000 அயல்நாட்டினரும் இருக்கின்றார்கள். சைனியத்தில் சேர்ந்த வாசிகளைத் தவிர 3,00,000 ஜப்பானியர்கள் இருக்கிறார்கள். இவர்கள்தான் அரசாங்கம், வியாபாரம் முதலியவைகளை நடத்தி வருகிறார்கள்.

### "அழகிய தீவு."

"யால்ஹா பார்மோஸா, அழகிய தீவு" என்று 16-வது நூற்றாண்டில் சென்ற ஸ்பெயின் தேசத்தினரும், போர்ச்சுகீஸாரும் பெயர் வைத்தார்கள். இவர்கள் மார்க்கோ போலோ என்று புராணத்தில் சொல்லப்பட்ட தங்கத் தீவுகளைக் கண்டு பிடிக்கச்சென்ற பொழுது பார்மோஸாவைக் கண்டுபிடித்தார்கள். இதன்

கடற்கரையில், ஹார்க்கா செம்படவர் வசித்துவந்தார்கள். மலைகளில் மலேயாவிலுள்ளோரின் இனத்தினர் வேட்டையாடி வந்தனர். காடுகளில் கற்பூர மரங்கள் அதிகம். உலகத்தின் கற்பூர சப்ளையில் 70 சதவிகிதம் பார்மோஸாவிலிருந்து கிடைக்கிறது.

## அபூர்வமான தீவு.

ஜப்பானியரைத் தவிர மற்றவர்களுக்கு அத்தீவில் வியாபார சம்பந்தமில்லாததாலும், பாதிரிமார்களின் நடவடிக்கைகள் கடுமையாக அடக்கப்பட்டிருந்ததாலும் ஜப்பானியருக்கு அதிக சாதகமாக இருந்தது. ஜப்பானிய ஆட்சியைப் பற்றி வெளிநாடுகளுக்கு ஒரு தகவலும் கிடைப்பதில்லை. தங்கள் இஷ்டப்படி அரசாங்கம் நடத்தப்படுகிறது. சில வருஷங்களாகத்தான் ஜப்பானிலுள்ள இங்கிலீஷ் பத்திரிகைகள் கொஞ்சம், கொஞ்சமாக விஷயங்களைத் தெரியப்படுத்துகின்றன. பார்மோஸா வாசிகளைக் கூட்டமாகக் கொலைசெய்வது முதலியவைகளைப் பற்றிய விஷயங்களை ஜப்பானியப் பத்திரிகைகளும் வெளிப்படுத்துகின்றன. ஆனால் ஜப்பானிய சாம்ராஜ்ய முறைப்படி நடந்ததாக மட்டில் சொல்லிக்கொள்ளும். ஜப்பானில் தேசிய உணர்ச்சி அதிகமாக உண்டானதாலும், 1937-ல் பார்மோஸாவில் ராணுவ ஆட்சி ஏற்பட்டதாலும், பத்திரிகைகளுக்கு கடுமையான பிரசாரத்தடை ஏற்பட்டதாலும், ஆங்கிலேயோ-அமெரிக்கப் பத்திரிகைகள் மறைந்ததாலும் பார்மோஸாவைப் பற்றிய தகவலே வெளிநாடுகளுக்குக் கிடைப்பதில்லை.

இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் அந்நிலைபற்றிய சில உண்மை விவரங்கள் கிடைத்தன. 1902-ல் பார்மோஸாவில் பிரசாரத் தடை பலப்பட்டது. பார்மோஸா அரசாங்கத்தை ஜப்பானிய மூல அரசாங்கம் மேல்பார்த்து வந்தது. அந்த மந்திரி சபை பேருக்கு மட்டில் அரசாங்க விஷயங்களைக் கவனித்து வந்தது. உண்மையில் அவ்விஷயங்களில் தலையிடுகிறது கிடையாது. ஏனென்றால் தேசப்பற்றேயில்லை என்ற கண்டனத்திலும், உள்நாட்டிலுள்ள விஷயங்களை விஸ்தாரமாக விவாதிப்பதற்குப் போதுமான அவகாசம் இல்லாததினாலும் தலையிடுகிறதில்லை. ஜப்பானிய மந்திரி சபை வருஷத்தில் மூன்று மாதங்களில்தான் கூடுகிறது. இன்னும் எல்லாவற்றைக் காட்டிலும் பெருத்த தடை என்னவென்றால் பார்மோஸாவானது கப்பற்படையைச் சேர்ந்தவோ, அல்லது தரைப்படையைச் சேர்ந்தவோ, ராஜப்பிரதிநிதியால் ஆளப்பட்டு வருகிறது. அது தேசசரித்திரத்தில் பெரும்பான்மையான காலத்தில், அதாவது முதல் 21-வருஷங்களுக்கும், மறுபடியும் 1936-ம் வருஷம் முதலும், ராணுவத் தலைவரால் அரசாளப்பட்டு வருகிறது. அதனால் ஜப்பானில் தரைப்படைத் தலைவர்களைப் பற்றியோ, கப்பற்படைத் தலைவர்களைப் பற்றியோ கண்டனம் செய்வது பொதுவாக லாபகரமானதல்ல. எப்பொழுதும் பலிப்பதில்லை.

## ஜப்பானியருக்குள்ள ஆனந்தம்.

ஜப்பானில் போலீஸ் ஸ்டேஷனில் ஏராளமாகக் கொலைகள் நடப்பது சர்வ சாதாரணமானது. ஜப்பானிலும்கூட வீடுகளில் குடும்ப ஸ்திரீகள் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்கிறார்களா என்று அடிக்கடி போலீஸ் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் பார்ப்பதுண்டு. குடியேற்ற நாடுகளிலிருக்கும் போலீஸார் தாழ்ந்த ஜாதியிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு அந்தந்தவூர் ஜனங்களைப் பாதுகாப்பதற்கான அதிகாரம் கொடுத்ததும், நரிக்கு மலியம் கிடைத்தமாதிரி ரொம்பவும்கேவலமாக நடந்துகொள்ளுகிறார்கள். பார்மோஸாவில் கைதியை விடுவிக்கிற சட்டம் அமுலில்லை. அங்கு போலீஸார் யாதொரு காரணமும் சொல்லாமல் ஒருவரை கைது செய்யக்கூடும். கைதியை விசாரணைக்காக ஆஜர்படுத்த வேண்டிய தேவையுமில்லை. குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முறை மிகவும் கொடூரமாயிருக்கும். 100 நிரபராதிகளை அவஸ்தைப்படுத்தியாவது ஒரு குற்றவாளியைத் தப்பவிடாமல் செய்கிறார்கள். எரிக்கப்பட்ட சவத்தைப் பெற்றுப்போகும்படி போலீஸ் ஸ்டேஷனுக்குத் தருவிக்கப்பட்ட பந்துக்கள், விவரம் கேட்காமல் போவதே மேல் என்று



அறிந்திருக்கிறார்கள். போலீஸாரின் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. சவுக்கடி முதல், தண்ணீரில் அமுக்கி வயிறு வெடிக்கும்வரை பலாத்காரம் செய்வார்கள். இதைத் தவிர, மிகவும் சாமர்த்தியமுள்ள வக்கீல்கூட குறுக்கு விசாரணையின் மூலம் அவனிடமிருந்து அவனுக்கு விரோதமாக வாக்கு மூலம் வாங்கும் சிரமமில்லாமல், தீப்பற்றிய சுருட்டை அவன் மூக்கில் திணித்து ஒப்புதல் வாங்குவார்கள். சில சமயங்களில் நகங்களுக்குள் ஊசி ஏற்றுவதும், மணிக்கட்டுகளில் கட்டி கூரைகளிலிருந்து கைதிகளைத் தொங்கவிடுவதும் அவர்களின் சாதாரண முறைகள்.

சதியாலோசனை விசாரணைகளில் ஒரு கேஸ் நடக்கும்பொழுது பேர் தெரிவிக்காத பார்மோஸான் ஒருவன் டோக்கியோ நியாயவாதிகள் சங்கத்திற்கு எழுதியதில் பின்வருமாறு கண்டிக்கிறான்:—

"நீதிபதிகளுக்கு முன் கொண்டுவருவதற்குள் கைதிகளுக்குப் பெருத்த தண்டனை விதிக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான பேர்கள் சந்தேகத்திற்காகக் கைது செய்யப்படுகிறார்கள். அவர்களில் பத்தில் ஒரு பங்குதான், ஏதாவது ஒரு பங்குதான் ஏதாவது குற்றம் செய்திருப்பார்கள் என்று எனக்கு அறிவிக்கப்படுகிறது. பாக்கிப் பேர்களையும் நிர்ப்பந்திக்காமல் இருப்பதற்காகக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி பலவந்திக்கப்படுகிறார்கள். ஏற்கனவே இந்த துர் அதிர்ஷ்ட சாலிகளில் நாலைந்து பேர்கள் நிர்பந்தத்தினால் கொல்லப்பட்டார்கள். பத்து கைதிகளில் 8, 9 பேர்களுக்கு இந்த முறையில் காயமுண்டாகிறது. ஜனங்களின் ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்தக் கூடியவர்களான நியாயவாதிகள் கைதிகளின் கட்சியை எடுத்துப்பேச அனுமதிக்கப்படவில்லையென்று எனக்குத் தெரிகிறது."

## கொள்ளை.

பார்மோஸாவைப் பற்றிய விஷயங்களைப் பிரசுரிக்கும் ஜப்பானியப் பத்திரிகைகளில் உண்மையான விவரங்கள் மறைக்கப்படுகின்றன. அவைகளுக்குப் பதிலாக பார்மோஸாவில் காணப்படும், விவசாயம், தொழிற்சாலை இவைகளின் முன்னேற்றத்தைப்பற்றிய கணக்குகள் கொடுக்கப்படுகின்றன. 40 வருஷகாலத்தில் அரிசி உற்பத்தி 500 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. அயல்நாட்டு வியாபாரம் 30 மடங்கு அதிகரித்திருக்கிறது. 5,10,00,000 பவுன் மதிப்பு ஏற்றுமதியிலும், 3,50,00,000 பவுன் மதிப்பு இறக்குமதியிலும் வியாபாரம் நடந்திருக்கிறது. இவ்வித முன்னேற்றம் ஜப்பானின் கொள்ளையடிக்கும் சிந்தனையினால் ஏற்பட்டதுதான். ஏனென்றால் ஏற்றுமதி, இறக்குமதிகளில் 90 சதவிகிதம் ஜப்பானுடன் நடைபெறுகிறது. எல்லாத் தொழிற்சாலைகளும் ஜப்பானால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. கற்பூரம், உப்பு, புகையிலை, சாராயம் முதலியவை அரசாங்கத்தாருக்கு உட்பட்டவை. எல்லா காடுகளும் அரசாங்கத்தார் வசமிருக்கின்றன. எல்லா தேக்குமரக் காடுகளையும், அரசாங்கத்தாரே வைத்துக்கொண்டிருக்கின்றனர். கைத்தொழில் பார்மோஸா முன்னேற்றக் கம்பெனியின் வசத்திலிருக்கிறது. சர்க்கரை மில் போன்ற விவசாயக் கைத்தொழில்கள் 90 சதவிகிதம் இருக்கின்றன. இவைகள் யாவும் ஜப்பானிலுள்ள முதலாளிகளின் பேரைவைத்து அவர்களுடைய அக்கரைக்காக நடத்தப்படுகின்றன.

## தெற்கு நோக்கிய முன்னேற்றம்.

1936-ல் பார்மோஸா ஒரு புதிய நிலையை அடைந்தது. ஜப்பானியரின் தெற்கு நோக்கிய முன்னேற்றத்திற்கு இது மூல ஸ்தானமாக ஆயிற்று. ஜப்பானியரின் கடற்படை திட்டத்தில் தென்மேற்கு ஆசியாவை நோக்கி முன்னேறுவதென்பது காணப்பட்டது. 1931ஆம் முதல் ஜப்பானியக் கப்பற்படை புதிய நாடுகளைக் கைப்பற்ற ஆசை கொண்டது. தெற்கு சைனா, பிலிப்பைன்ஸ் தீவுகள், இந்தியா ஆசியா, மலேயா, முதலியவைகளை ஆக்கிரமிக்க நினைத்தது. இதற்காக 1936-ஆம், ஜூலை மாதத்தில் ஜப்பானியச் சட்டமொன்று அமுலுக்கு வந்து பார்மோஸா முன்னேற்றக் கம்பெனிக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. இது ஒரு பொருளாதார இயக்கத்தை நடத்தியது. இதற்காக பார்மோஸா அரசாங்கம்

பாதி முதலும், மீதிப்பணத்தை பார்மோஸா சர்க்கார் கம்பெனியும், ஜப்பானியப் பொதுமக்களும் போட்டிருக்கின்றனர். 80 பேர்களடங்கிய அக்கமிட்டியில் குடியேற்ற நாட்டு மந்திரியான கவுண்ட் கோடாமாவும், அயல்நாட்டு மந்திரி சபை, யுத்த மந்திரி சபை, கப்பற்படை மந்திரி சபை, இவைகளின் பிரதிநிதிகளும், பார்மோஸாவில் அதிக அக்கறையுள்ள ஜப்பானியக் கம்பெனிகளின் பிரதிநிதிகளும் சேர்ந்திருந்தனர். இந்த பார்மோஸா முன்னேற்றக் கம்பெனிக்கு அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டு அயல்நாடுகளில் பல உதவிகொடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தது. ஒரு வருஷம் சிரமித்ததும் இதன் நோக்கங்கள் வெளிப்படையாகத் தெரிந்தன. ரகசியமாகச் சாராயம், எண்ணெய், ரஸ்தாக்கள் போடுவது, விமான மார்க்கங்களை ஏற்படுத்துவது, துறைமுக வசதிகளைச் செய்துகொள்வது, முதலியவைகளும் செய்யப்பட்டுவந்தன. ஹாங்கேங், மலேயா டச்சு முதலிய பாஷைகளில் ஒலிபரப்புவது, பிரசாரம் முதலிய வேலைகளில் ஈடுபட்டிருந்தது. இவைகளே தெற்குநோக்கிய முன்னேற்றத்தின் ஆரம்ப ஏற்பாடுகளாகும்.

சுருக்கமாகச் சொல்லும் பொழுது ரகசியமான எல்லா ஏற்பாடுகளிலும் பார்மோஸா முன்னேற்றக் கம்பெனிக்கு ஒரு பங்கு இருந்தது. அரிசி உற்பத்தி திட்டத்திலிருந்து விமான தளங்களை உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு மாறிக் கொண்டதிலிருந்தே யுத்த வேலையில் இது ஈடுபட்டுவருகிறது என்பது வியக்தமான விஷயம். ஆனால் சமீபத்தில் வெளிவந்த ஜப்பானிய அரசாங்க புஸ்தகத்தில்கூட அவ்வித அபிப்பிராயம் இருப்பதாகக் காணப்படவில்லை.

## படையெடுப்புக்கு மூலஸ்தானம்.

1937-ல் ஷாங்காயையும், நான்கிங்கையும் தாக்கிய கப்பற்படை பார்மோஸாவிலிருந்து கிளம்பியது. சீனக் கடற்கரையை முற்றுகையிடுவதற்கும், தெற்கு சைனா, ஹைனான் முதலிய இடங்களை ஆக்கிரமிப்பதற்கும் லாயக்கான கப்பற்படை பார்மோஸாவிலிருந்து புறப்பட்டது. பார்மோஸா முன்னேற்றக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு 2 வருஷங்களுக்குள்ளாகவே தெற்கு நோக்கிய முன்னேற்றமும் பார்மோஸாவிலிருந்து செய்யப்பட்டது. இதுவே பிரிட்டன் பேரிலும், அமெரிக்கா பேரிலும், செய்யப்பட்ட திடீர் யுத்தமாகும். “பார்மோஸாவை விமானமேற்றும் கப்பலாகவும், தெற்கு நோக்கிய படையெடுப்புக்கு தாய் கப்பலாகவும் சொல்லலாம்” என்று 1941-௵ நவம்பர் 11உ டோக்கியோ ரேடியோவில் சொல்லப்பட்டது.

## மீண்டும், மீண்டும் அபகரிப்பது.

பார்மோஸாவில் ஜப்பானியருக்குச் சொந்தமான நிலங்களின் விஸ்தீரணத்திற்கு கணக்கே கிடையாது. ஆனால் அந்நிலங்கள் எவ்விதமாக வசப்பட்டது என்பதற்கு மாத்திரம் பலவித விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

ஒரே தடவையில் பிரதேசத்தின் 60 சதவிகிதத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டனர். ஏதோ சொந்த பாத்தியமிருப்பது போல கற்பூரக்காடுகள் உட்பட எல்லாக் காடுகளையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டனர். பிறகு கொஞ்சகாலம் சிரமித்ததும் சொந்தக்காரர்கள் யாவரும் தங்கள் நிலங்களை மறுபடியும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு உத்தரவு போட்டு, அப்படி பதிவு செய்து கொள்ளாதவர்களுடைய நிலங்களையெல்லாம் அரசாங்கத்தார் எடுத்துக் கொண்டனர். இதில் அரசாங்கத்தாரால் ஸ்வாதீனப்படுத்திக்கொண்ட காடுகளைப் பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. மேற்படி காடுகளில் பார்மோஸாவிலுள்ள சீனர்களுக்கு 100 வருஷகாலமாக இருந்த உரிமைகள் போய்விட்டன. ஆனால் சீனர்களுக்கிருந்த குத்தகை உரிமைகளின் ஆதாரத்தைக்கொண்டு, அங்கிருந்த ஆதி ஜாதியினருக்கு இல்லாக்கும் ஒரு பாத்தியமும் கிடையாதென்று ஜப்பானியர்களாக நிர்த்தாரணம் செய்துகொண்டனர்.

ஜப்பானிலேயே பொதுமக்களுக்கு, நிலங்களில் ஒரு ஸ்வதந்திரம் உண்டென்ற பழக்கமே இல்லாததிலிருந்து அவர்களின் பறிக்கக் கொள்ளைத்தொழில் மிகவும் வியக்தமாக தெரிகிறது.



## ஜப்பானும், பார்மோஸா வாசிகளும்.

பார்மோஸா புராதனவாசிகளை ஜப்பானியர் அடக்கிய விதம் ரொம்ப பரிதாபகரமான கதையாகும். பிராணிகளைப்போல் விரட்டிவேட்டையாடப்பட்டனர். மின்சார சக்திவாய்ந்த கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டு வருஷாவருஷம் துன்புறுத்தப் பட்டனர். இவ்விதமாக ஜப்பானின் குடியேற்ற நாட்டின் அரசாங்க முறையில் இவர்களை ஒழிப்பது என்பது ஒரு திட்டமாகும். 1902-ல் தான் பார்மோஸா வாசிகளை அடக்குமுறை ஆரம்பமாயிற்று. சீனர்கள் பார்மோஸா புராதன வாசிகளுடன், அவர்களுடன் அமைதியாக வாழ்ந்துவந்தனர். ஆனால் ஜப்பானியர் கள் யாவரையும் சக்ரவர்த்தியை வணங்குகிறவர்களாகச் செய்யும் நோக்கத்துடன் அதற்கிணங்காதவர்களெல்லாரையும் அழிக்கப்பார்க்கின்றனர். பார்மோஸா புராதன வாசிகள் மலேயா ஜாதியைச் சேர்ந்தவர்கள். வடக்கேயுள்ளவர்களுக்கு வேட்டையாடுவது தொழில். நாகரீகத்தின் மாறுதல்களை விரும்புவதில்லை. தெற்கிலுள்ளோருக்கு ஒரு தனியான பயிற்சியும், விவசாய முன்னேற்றமும் உண்டு. இவர்கள் யாவருக்கும் பொதுவான சட்ட திட்டங்கள் உண்டு. இவைகள் ஜப்பானியச் சட்ட திட்டங்களுக்கு விரோதமானது. ஆகவே ஜப்பானிய சமூக திட்டத்தை இவர்கள் மேல் கட்டாயப்படுத்துவது சிரமமாகிவிட்டது. விபசாரத் தொழிலுக்கு பார்மோஸா சட்டப்படிக்குக் கொலைதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஜப்பானியரால் அந்த ஸ்திரீகளை வசப்படுத்தவும் முடியாது. ஆனால், வெகுகாலம் கற்பூரக் காடுகளை வசப்படுத்தி வைத்துக்கொண்டதும், வேலைக்காரர்களாக வர மறுப்பது அவர்கள் விஷயத்தில் குற்றமென்று பாவிக்கப்படுகிறது. இப்படி பல வருஷங்களாகச் சச்சரவுகள் இருந்துவந்தன. 1909-ல் ஜெனரல் வைகவுண்ட் ஸகுமா கவர்னர் ஜெனரலாக வந்ததும், பார்மோஸா வாசிகளை அடக்குவதற்கு ஐந்து வருஷத்திட்டமொன்றைப் போட்டான். அதில் 10,000 துருப்புகளும், போலீஸ்காரர்களும் ஈடுபட்டனர். இந்த சிறு சண்டைக்கு “பார் மோஸா வாசிகளை அழிக்கும் சண்டை” என்று பெயர் கொடுக்கப்பட்டது. மின் சாரக் கம்பி வேலிகளுக்குள் அடைக்கும் வேலையை வைகவுண்ட் ஸகுமா தான் ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாக இக்கம்பிகள் நெருக்கப்பட்டு அதிலுள்ளோர் இறந்துவிடுவார்கள். 1915-ல் அடக்குமுறை பூரணமாக முடிந்தது. சில இடங்களில் அநேகமாகப் புருஷர்கள் இறந்துவிட்டனர். இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் அவர்கள் சண்டை செய்தனர். 1930-ல் மூஷா கலகம் ஏற்பட்டதும் 1,500 ஜப்பானியத் துருப்புகள் பழி வாங்கும் நோக்கத்துடன் 300 மைல் வேலிக்குள் புகுந்து அங்கிருந்தவர்களைத்தாக்கினர். ஒரு ஜப்பானியர்கள் வசிக்குமிடத்தில் பார்மோஸாவாசிகள் புகுந்து 140 ஜப்பானியர்களைக் கொன்றுவிட்டனராம். இதுதான் மூஷா கலகம்.

## குண்டுகள் போடுவதைப் பழகுமிடம்.

முன்புசொன்ன கலகத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு ஜப்பானியச் சைனியம் தனது சாமர்த்தியத்தையும், ஆயுதங்களின் பலத்தையும், பார்மோஸாவில் பழகிக்கொள்வதென்று தீர்மானித்துக்கொண்டது. 1913-லும், 1922-லும் விமானங்களிலிருந்து குண்டுகளைப் போட்டு பழகிக்கொள்ள பார்மோஸா உபயோகப்படுத்தப்பட்டது. 1930-ல் விஷப் புகை குண்டுகள் மூஷா ஜாதியினர் வசிக்குமிடத்திலேயே போடப்பட்டது. புதிய சிறு யந்திர பீரங்கிகளும் உபயோகிக்கப்பட்டன. இந்தப் பரீக்ஷைகளில் ஜப்பானியச் சைனியத்திற்கு அதிகப் பயிற்சி கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அடுத்த வருஷத்தில் ஸாமுராய் கத்திமுறை உபயோகிக்கப்பட்டது. இதன்படி வேகமாக முன்னேறும்பொழுது எதிரிகளை வெட்டி சாய்க்கலாம்.

சில சிறிய சண்டைகளுக்குப் பிறகு 1935-ல் மலைகளிலிருந்து 26,000 பார்மோஸா வாசிகளைப் பள்ளத்தாக்குகளுக்கு அழைத்து வருவதென ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்தது. “இப்படிச் செய்வதால் காடுகளையும், உலோக உற்பத்தியையும் வசப்படுத்திக்கொள்வதோடு மின்சாரக் கம்பி வேலியில் அடைப்பது, போலீஸ் பந்தோபஸ்து முதலிய சிரமங்கள் இருக்காது”.

நாம் கடைசியாக சொல்லப்பட்ட அபிப்பிராயம் ஜப்பானிய அரசாங்கத்தினுடையது. பார்மோஸா வாசிகள் காட்டுமிராண்டிகளாக இருக்கலாம். ஆனால், அந்த மலைகளில் தலைமுறைதத்துவமாக இருந்து வருகிறார்கள்.

### ஆழ்ந்த மௌனம்.

இவ்விதமாக ஜப்பானியரின் செய்கைகளை வர்ணிப்பது முடியாத காரியம். பார்மோஸாவின் உள்நாட்டில் யாவரும் பிரயாணம் செய்யமுடியாது. அநுமதி பெற்ற சிலரே செல்லலாம். சமீபத்தில் 1941 மார்ச்சு மாதத்தில் கூட ஒரு பெரிய கலகம் ஏற்பட்டது. அவைகளை அடக்குவதற்கு பெரிய சைனியங்கள் அனுப்பப்பட்டன. இதே விதமாக ஜப்பானியக் கொடிய ஆட்சியை எதிர்த்து அங்குள்ள சீனர்கள் செய்யும் கலகம் முதலியவைப்பற்றியும் நமக்கு சரியான விவரம் தெரிவதில்லை.

ஆனால் கலகத்திற்காக விசாரணை செய்வது, நூற்றுக்கணக்கான கைதிகள் விசாரணை ஸ்தலத்திற்கு அழைத்துவருவது முதலிய தகவல்கள் கிடைக்கும் போது மாத்திரம், ஜப்பானிய அரசாட்சி சரியானதல்ல என்று தெரிந்துகொள்ளலாம். ஜப்பானியருக்கும், ஜப்பானிய அரசாங்கத்தாருக்கும் திருப்தியில்லாமல் ஜப்பானிய குடியேற்ற நாடு அரசாங்கம் நடந்து கொள்ளுகிறதென்று நிரூபிக்கக் கூடிய சம்பவங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஜப்பானிய ஆக்கிரமணத்தின் 20-வது வருஷக் கொண்டாட்டத்தின் போது நடந்த கலகத்தில் 900 பேருக்கு கொலை தண்டனை விதிக்கப்பட்ட விஷயத்தைப்பற்றி ஜப்பானிய சபையில் கேள்வி கேட்கப்பட்டது. டபனி என்ற இடத்தில் போலீஸ் ஸ்டேஷனை 400 பேர் தாக்கினர். அப்போது 285 பேர் கொல்லப்பட்டனர். 58 பேர் கைது செய்யப்பட்டனர், இன்னும் எவ்வளவோ பேர்கள் அடிபட்டிருக்கின்றனர் என்று அறிந்துகொண்டு 900 பேர்களுக்குமாத்திரம் கொலை தண்டனை விதிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பேர்களுக்கு நீண்டகாலம் சிறை வாசம் விதிக்கப்பட்டது. ஆனால் ஜப்பானிய அரசாங்க அறிக்கையில் 96 பேர் தான் கொல்லப்பட்டதாக இருந்தது. மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டனராம். இதற்குமுன் 1914-ல் இதே மாதிரி ஒரு கலகம் நடந்து நூற்றுக்கணக்கான பேர் கொல்லப்பட்டு மற்றவர்களுக்கு ஆயுள் பரியந்தம் சிறை வாசம் விதிக்கப்பட்டது.

### ஜப்பானியர் அல்லாதவர் இறக்கவேண்டும்.

தற்போது கவர்னர் ஜெனரலாக இருக்கும் அட்மிரல் ஹாஸிகவா என்பவன் பின்வருமாறு சொன்னான் :—

"ஜாவாவும், ருலிபெஸும் ஜப்பானிய மயமான மாதிரி பார்மோஸாவும் ஆகவேண்டும்."

இவ்விதமான ஜப்பானிய அரசாங்க முறை பார்மோஸாவின் பழக்கம், பயிற்சி, மதம், பாஷை முதலியவைகளைக் கெடுத்துவிட்டது. ஜப்பானியருக்குப்பட்ட ஜாதியாராக நடை, உடை பாவனைகளில் செய்யப்பட்டனர். வெகுகாலமாக இருந்துவரும் விடாமுயற்சியினால் பேர்கள் மாத்திரம் உட்படவில்லை. ஜப்பானிய முறை அவர்கள் விஷயத்தில் பலிக்கவில்லை.

நாம் கொடுத்துள்ள விவரங்கள் எல்லாம் ஜப்பானியர் பிறருக்கு கொடுப்பதாகச் சொல்லிவரும் சமாதானம் க்ஷேமம் முன்னேற்றம் முதலிய அபிப்பிராயங்களுக்கு விரோதமாகத்தானிருக்கும். ஜெயிலில் அடைக்கப்பட்டவர்கள், கொலை செய்யப்பட்டவர்கள், முதலியவைகளைப் பார்த்தாலே, ஜப்பானியரின் விவரங்கள் பொய்யென்று தெரியவரும். சுயநலக்கருதியே ஜப்பான் பார்மோஸா விஷயத்தில் நடந்து கொண்டிருக்கிறது. சொத்துக்களைப்பறிப்பது, கொள்ளையிடுவது, அடக்குவது, பலாத்காரமாக வேலை வாங்குவது முதலியவைகளால் பார்மோஸாவின் மேன்மையைக்கெடுத்து ஆசியாவில் ஆதிக்கம் அடைய ஜப்பான் தன்னுடைய சைனியத்தைப் பலப்படுத்திக்கொண்டே வருகிறது.



## வார யுத்தச் செய்திகள்.

### 25—7—42-லிருந்து 31—7—42-வரை.

**ருஷ்யா.**—சென்ற வருஷத்தில் வான் ரன்ஸ்ட் துரத்தப்பட்ட இடமான ரோஸ்டவ் எதிரி வசமாயிற்று. இந்தத் தடவை ஜெர்மன் முன்னேற்றம் பூர்ணமாக இருந்தது. வேகமாயும் இருந்தது. ஒரு பகுதி டானெட்ஸ் வழியாக வோரோஷிலாவ் கிராட்டிலிருந்து முன்னேறியது. மற்றொன்று மில்லோரோவோவிலிருந்து முன்னேறி நோவோசெர்காஸ்கில் சேர்ந்துகொண்டது. நோவோசெர்காஸ்க் வீழ்ந்ததும் எல்லாம் ரோஸ்டவ்வை நோக்கி முன்வந்தது. இத்துடன் மூன்றாவதான படை டாகன்ராக்கிலிருந்து வந்தது. நான்காவதான படை டானில் புகுந்து ஸிம்லியான்ஸ்காயா (Tsymlyanskaya) வரை வந்தது. ரோஸ்டவ்விற்குக் கிழக்கில் 150 மைல் தூரத்திலிருக்கிறது. இந்த இடத்தில் எதிரி டானைக் கடந்து ஸ்டாலின் கிராட்டைத் தாக்கிவருகிறான். ஸ்டாலின்கிராட்டிற்கு இரண்டு பக்கங்களிலிருந்து ஆபத்து. ஒன்று டான் நதிப் பக்கத்திலும், மற்றொன்று ஸிம்லியான்ஸ்காயாவிலிருந்தும். முக்கிய முன்னேற்றம் குஷ்சோவ்ஸ்க் (Kushchovsk) கிலிருந்து கிராஸ்னோடார் வரை போகும் ரயில்வே ரஸ்தா வழியாகத்தான் ஏற்படுகிறது. இது குபான் பிரதேசத்திற்குத் தலைநகர். வால்கா வழியாகச் செல்லும் ருஷ்யக் கப்பல்களை ஜெர்மானியர் தாக்கிவருகின்றனர். டான் நதியின் பாலங்களெல்லாம் வட காகஸஸில் தான் இருக்கின்றன. ஆகவே காகஸஸைப் பிடிக்கச் சண்டை ஆரம்பமாயிற்று. ஆபத்து கெர்ச், ரோஸ்டவ், ஸிம்லியான்ஸ்க் பாகங்களிலிருந்து ஏற்பட்டிருக்கிறது.

ரோஸ்டவ்வோடு யூக்ரேன் பூரா எதிரி வசமாயிற்று. டானின் கரிசல் நிலங்களும் டானெட்ஸின் தொழிற்சாலைகளும் வசமாயின.

**வாரனேஷ்** தான் இந்த நிலைமையில் திருப்தியை அளிக்கிறது. இங்கேதான் ருஷ்யர்கள் தீவிர எதிர்ப்புச் செய்கின்றனர். இருந்தாலும் பிரத்தியேகமான, வெற்றியைத்தான் ருஷ்யர்கள் இங்கே அடைந்து எதிரியின் முன்னேற்றத்தைத் தடுத்திருக்கின்றனர். இங்கே ருஷ்யர்கள் எதிரியை விரட்டி இடது பக்கத்தில் தாக்கியிருக்கின்றனர். இதற்குத் தெற்கே 40 மைலில் ஸெமானிடேவிட்ஸ்கிற்கு அருகில் டான் நதியை ருஷ்யர்கள் பிடித்துள்ளனர்.

கலினின், பிரியவ், பிரயான்ஸ்க் லெனின்கிராட் முனைகளிலும் சண்டை நடக்கிறது.

பின்லாந்துக் கடலில் 16,000 டன் எதிரி கப்பலும் பாரென்டெஸ் கடலில் 10,000 டன்னுள்ள மற்றொரு எதிரிக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது.

**எகிப்து.**—ஆலின்லய்னின் சமீபத் தாக்குதலின் பயனாக எதிரிகள் நிலச்சுரங்க வெடிகளைப் பாவிக்கொண்டிருக்கிறார்கள். பிரிடிஷ்காரர்கள் அவைகளை எடுத்து வருகின்றனர். குறுகிய இடத்தில் ரோமலை அடக்கிய போதிலும் தற்காப்பு செய்து கொள்ளுவதற்கும், எதிரிக்குச் சாதகமாக இருக்கிறது. அங்கே சில டாங்கிகளையும் பீரங்கிகளையும் வைத்திருக்கிறான். இவ்வாரத்தில் எல்லாப்பகுதிகளிலும் சண்டை நிகழ்ந்தது. வடக்கே டெல்எலீஸா, எல்மகாட், மெஹிரியாவும், மத்தியில் ருவிஸெட்டிலும், டேயிரல்ஷீனிலும், தெற்கில் ஜெபல்கலாக், எல்டாகாவிலும் சண்டை நடந்தது. ஒரு வாரத்திற்கு முன்னிருந்த நிலைகளுக்குப் பிரிடிஷ் படைகள் பின்வாங்கின. மற்றபடி ஒரு மாறுதலும் இல்லை.

ஸீவா வெளிகளில் ஜராபப்பை இதாலியர் ஆக்கிரமித்துக் கொண்டனர்.

மெர்ஸாமெட்ரு, எல்டாபா, டொப்ருக் இங்கே பிரிடிஷ் விமானங்கள் தாக்கின.

**சைனா.**—மேற்கு செகியாங்கில் பிங்டேயை சீனர்கள் திரும்பப் பிடித்து லின்ச்வானை (Linchwan)த் தாக்கினார்கள். செகியாங்-கியாங்ஸி இருப்புப்பாதை

20 முதல் 50 மைல்வரை துரத்தப்பட்டது. குவான்டங், குவேஷி, இங்டன் இவைகள் ஒரே சமயத்தில் தாக்கப்பட்டன. மேற்கு செகியாங்கில் ஜப்பானியர் பின்வாங்கி ஓடுகின்றனர். ஆனால் ஹூபேயில் (Hupch) டபுங்கான் மலையில் சீனர்களைத் தாக்கிவருகின்றனர்.

பர்மா.—ஜூலை 23, 24 தேதிகளில் சித்துவின் தெற்கிலுள்ள கலேவாவும், லிங்குலாங்கும் தாக்கப்பட்டன. ஜூலை 27ட மத்திய பர்மாவில் ரயில்வே, நதி, ரஸ்தா முதலியவைகளில் போக்குவரவு தாக்கப்பட்டது. மாண்டலே ரெங்கூன் ரயில்வேயில் தாஸியில் (Thazi) இஞ்ஜின் ஷெட்டும், சாமான் வண்டிகளும் தாக்கப்பட்டன. மியிட்கியில் ரயில்வே ஒர்க்ஷாப்பும், மாண்டலேயில் சாமான் வண்டி தளமும் தாக்கப்பட்டன. அதே தினத்தில் அக்யாப்பில் மத்திய கப்பல் துறையும் தாக்கப்பட்டது.

ஏற்கனவேயே 'பொதுக்ஷேமத்தின் கொடுமைகள் பர்மாவில் உண்டாகி விட்டன. சாதாரண காலங்களில் உள்நாட்டுத் தேவைபோக வருஷம் 30,00,000 டன் அரிசி ஏற்றுமதிசெய்யப்படும். ஆனால் தற்சமயத்தில் எல்லா கிராமங்களிலும் வேலை நடத்தவேண்டும். கூலி செய்து வரி வித்தங்களைக் கொடுக்கவேண்டும். பர்மியா நாணயம் ஜப்பானிய நாணயமாக மாற்றப்பட்டுள்ளது. ஜப்பானிய ஆட்சி ஆரம்பமாயிற்று. மோல்மீனில் மாத்திரம் 700 ஜப்பானியர்கள் வந்திருக்கின்றனர். பர்மிய வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும் பதவி இழந்தனர். பர்மியருக்கும், ஜப்பானியருக்கும் சண்டை நடக்கிறது.

பஸிபிக்.—பிலிப்பைன்ஸ் மீண்டும் எதிர்க்கிறது. சில அமெரிக்கப் படைகள் மிஞ்சியிருக்கின்றன. மோரோ ஜாதியினர் சண்டை செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஜாஸானிலும், மின்டானோவேவிலும் கொரில்லாச் சண்டை நடக்கிறது.

டிமோரில் நேசதேச விமானப்படை எதிரியின் சேனைத் தளங்களைத் தாக்கியது. கோனோ (நியூ கினி)யில் ஸ்டோர்கள், கப்பல்கள் முதலியன தாக்கப்பட்டன. கோபாங், லேயி, அலெயியா, பூகா, லோறாகு முதலியன தாக்கப்பட்டன. கில்கா, பூகாவிற்கு இடையிலுள்ள இடமும் தாக்கப்பட்டது. கோனோவில் மூன்று ஜப்பானியப் போக்குவரத்துக் கப்பல்கள் அமுக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய கிழக்குக் கரையில் டௌன்ஸ்வில்லி, மோர்ஸ்பி, டார்வின், ரூபோ முதலியவைகளையும் எதிரி தாக்கினான். சேதம் அதிகமில்லை.

கிஸ்காவில் ஆறு வாரங்களுக்கு முன் இறங்கிய ஜப்பானியப்படை தளத்தை ஏற்படுத்திக்கொள்ளப் பார்க்கிறது. டச்சுத் துறைமுகத்திலுள்ள அமெரிக்க விமானங்கள் அதைத் தாக்கின.

இவ்வாரத்தில் ஒரு ஜப்பானிய நாசகாரியும், 4 மற்ற கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

விமானப் படையெடுப்புகள்.—இவ்வாரத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸ், ஹாலந்து, ரூர், ரைன்லாந்து, வேஸ்பர்க், மான்ஹீம், பிராங்பர்ட், டூயி, ஹாம்பர்க் முதலியவை பிரிடிஷ் விமானப்படையால் தாக்கப்பட்டன.

கோவிக்ஸ்பர்கை ருஷ்ய விமானப்படைத் தாக்கியது.

எதிரி இங்கிலாந்தில் மிட்லாந்து, கிழக்கு பாகம், பர்மிங்ஹாம் முதலியவைகளை தாக்கினான்.

அட்லான்டிக் யுத்தம்.—வட அட்லான்டிக்கில் நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. ஆனால் தெற்கே அப்படி இல்லை. அமெரிக்கா, கனடா, இவைகளின் கிழக்குப் பக்கத்தில் அவ்வளவு அதிகமான கப்பல் நஷ்டமில்லை. துணைக்கப்பல் ஏற்பாடு அப்படி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கரிபியன், மெக்ஸிகோ குடா இவைகே நிலைமை மோசமாக இருக்கிறது. எதிரி யூ படகுகளைப் பலவிதத்தில்



தாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. துணைக்கப்பல்களே தங்களைக் காத்துக் கொள்ளும். பிரிடிஷ் விமானப்படையும், கடற்கரைப்படையும் ஜெர்மன் பாக் வுல்ப்களைக் காட்டிலும் அதிக தீவிரமாய் சண்டை செய்யும்.

பலவகைப்பட்டவை.—1. பிரிடன், ருஷ்யா, சைனா செய்துகொண்ட ஒத்தகைக்கடன் மசோதாவைக் காட்டிலும் பெரிய உடன் படிக்கையை ஜூலை 24ட யூகோஸ்லாவியாவும் அமெரிக்காவும் செய்து கொண்டன. யுத்த காலத்திலும், பிறகும் உதவியளிக்கப்படும். யூகோஸ்லாவியா மன்னரான பீடரும், ரூஸ்வெல்ட்டும் பின் கண்ட அறிக்கையை விடுவித்திருக்கின்றனர் :—"மிஹலாடாவும் அவனது தரைப்படையினரும் அடைந்த லாபங்களைப்போல் வெற்றியை முன்னிட்டு தாறுகவே முன்வந்து எதிரியைத் தோற்கடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது."

2. நார்வே கலகக்காரர்களைக் கைது செய்யச்சென்ற இரண்டு ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டதால் டெலவாக் என்ற கிராமமே அழிக்கப்பட்டது. 120 மனிதர்கள் வெளியேற்றப்பட்டனர். 79 வீடுகள் கொளுத்தப்பட்டன. 150 ஸ்திரீகள் அடைக்கப்பட்டனர். எல்லாக் குழந்தைகளும் சீர்திருத்தப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டனர்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 20—7—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | நாலு விமான மிறங்கும் இடங்கள்—பூகா (Fuka). | பெருந் தீக்கள் கிளம்பின. | | 30 விமானங்கள் சேதமாயின. |
| | விமானச் சண்டைகள்—போர்முனையில். | | | இன்னும் ஒரு விமானம் சேதமாயிற்று. |
| | விரோதிப் படகுகள்—ஸிடிபாரனி (Sidibarrani)க்கு வடகிழக்கில். | | | |
| | டாங்கிகள், விமானங்கள், வண்டிகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | ராணுவக் கட்டடங்கள்—அக்கியாப் (Akyab). | | | |
| | சிறு நீராவிக் கப்பல்கள்—கியாக்பியூ (Kyaukpau) | | | |
| | சைனா (China)—பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்—பூச்சௌ (Foochow)வுக் கருகாமையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 21—7—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | சாயந்திரம்.—விரோதித் துருப்புகள், போக்குவரத்து, கடற்கரையோர ஜில்லாக்களில் பீரங்கி ஸ்தானங்கள்—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | | | |
| | லக்ஷியங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—ரூர் (Ruhr) பிரதேசத்தில் டூயிஸ்பர்க் (Duisberg) உள்பட. | | | |
| | வேவுபார்த்தல்—பிரான்ஸிலு (France)ம், பெல்ஜியத்தி (Belgium)லுமுள்ள எதிரி விமான நிலயங்களில். | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | சுமார் 1,000 வண்டிகள் அடங்கிய கட்டடம்—லிபியா (Libya)வில் மத்தியப் போர்முனையில். | | | |
| | வேவுபார்த்தல்—ஸிடிபர்ரானி (Sidibarrani). | | | |
| | **கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விரோதிக் கப்பல்கள்—ஸூடா (Suda) க்குடாவில். | ஒரு பெரிய கப்பல் தாக்குண்டது. | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானப் போர்கள்—கிழக்குப் போர் முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | நதிக் கரையோரம் செல்லும் படகு—(அக்கியாப் பிரதேசத்தில்) கலாடின் (Kaladin) நதியில். | | | |
| | கட்டடங்களும், கப்பற்சரக்கு இறக்குமிடம்—கியாக்பாயு (Kyaukpau), கலேவா (Kalewa), சின்ட்வின் (Chindwin) நதிக்கரையில். | | நஷ்டமில்லை. | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | புனு (Buna). | | | |
| 22—7—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விரோதி டாங்கிகள், மோட்டார் போக்குவரத்து—யுத்தப் பிரதேசத்தில்—டோப்ருக் (Tobruk). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 22—7—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya) (ஜெர்மன் விமானங்களால்)—தொடர்ச்சி.** | | | |
| | விமான மிறங்குமிடங்கள்—ஸொலூம் (Sollum), புகா (Fuka), கஸாலா (Gazala), மெர்ஸாமாட்ரு (Mersa Matruh). | | | |
| | வந்திறங்கும் துருப்புகள்—யுத்தப் பிரதேசத்தில். | | 12 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானப் போர்கள்—கிழக்குப் போர் முனையில். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | நதியில் செல்லும் படகு—அரக்கான் (Arakan) கடற்கரைப் பிரதேசத்தில். | | | |
| | நீராவிக்கப்பல்—கலாடின் (Kaladin) நதிக்கரையில். | | | |
| | இரண்டு கப்பல்கள்—மாயு (Mayu) நதியில். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விரோதி சைனிய வாசஸ்தலம்—டிமோர் (Timor). | | | |
| | **நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விரோதியின் சாமான்கள் வைக்குமிடங்களும், கட்டடங்களும்—கோனு-புனு (Gona-Buna) பிரதேசத்தில். | | | |
| | சிறு விரோதிக்கப்பல்—ஸலாமுவா (Salamaua)வுக்கு அருகாமையில். | | | |
| 23—7—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—விரோதித் துருப்புகள், பீரங்கி ஸ்தானங்கள், ரஸ்தாப்பாதை, இருப்புப் பாதை, சமுத்திரப் போக்குவரத்து—ஆக்கிரமித்த பிரான்ஸிலு (France)ம், ஹாலந்திலும், பெல்ஜியத்திலும் (Lowcountries) உள்ள கடற்கரை ஜில்லாக்கள். | | | |
| | விமான நிலயம் தரையிலுள்ள விமானங்கள்.—லானியான் (Lannion). | | 7 விமானங்கள். | 1 விமானம். |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr), ரீன்லாந்து (Rhineland). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 23—7—42. (வியாழக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகத்திலுள்ள கட்டடங்கள், யுத்த தளவாடங்கள் ஏற்றிய கப்பல்கள்.—மெர்ஸாமட்ரு (Mersa Matruh) துறைமுகத்தில். | | | |
| | விமானமிறங்கும் இடங்கள்.—எல்டாபா (Eldaba). | | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள், மருந்துகிடங்குகள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள்.—கிழக்குப் போர் முனையில். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிப் படகுகள், யுத்தப்பொருள் சேமிக்குமிடங்கள் கட்டடங்கள்.—கோனு (Gona)வுக் கருகாமையில். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி தளம்.—கலேவா (Kalewa). | | | |
| 24—7—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஜெர்மன் துருப்புகள், பீரங்கிகள் தளங்கள், சாமான் ஏற்றிய வண்டிகள் இன்னும் மற்ற லக்ஷியங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | | 2 விமானங்கள். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.—எல்டாபா (Eldaba). | 20 விமானங்கள் சேதமாயின. | | 5 விமானங்கள். |
| | விரோதி வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | ஐயோனியன் கடல் (Ionian Sea)—(அமெரிக்க பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு வியாபாரக் கப்பல்.—ஐயோனியன் (Ionian Sea)கடல். | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முகம் முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு-நியூ பிரிடன்(New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸப்ளைகள், விரோதி ஸ்தானங்கள்.—கோனு (Gona). | | 1 விமானம். | 2 விமானங்கள். |
| | விமான நிலயம்.—லே (Lae). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ரபால் (Rabaul). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 25—7—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்—மான்ஹீம் (Mannheim), பாங்க்பர்ட் (Frank Furt). | | | |
| | ரசாயன சாலை.—ஸ்லூஸ் (Sluis), ஹாலந்தில். | | | |
| | விமான எதிர்ப்புகள்.—பெல்ஜியத் (Belgium)தில். | | 4 விமானங்கள். | |
| | இரவில்.—நதியில் பெரிய துறைமுகம்—டூயிஸ்பர்க் (Duisberg). | | | |
| | விமான நிலயங்கள்.-ஹாலந்து,பெல்ஜியம் (Low countries). | | | |
| | இருப்புப் பாதைகள், மற்ற லக்ஷியங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸி (France)ல் | | | |
| | சுரங்கவெடி போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | கோனிக்ஸ் பர்க் (Konigs Burg)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | படகுகள்.—மெர்ஸா மாட்ரு (Mersa-Matruh). | | | |
| | விரோதி வண்டிகள், கவசம் பூண்ட வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்.—கிரீட்டு (Crete)க் கருகாமையில். | | | |
| | விமான நிலயம்.—ஹெராக்ளியான் (Heraklion). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள், தரையிலுள்ள விமானங்கள்.—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | ஜூலை 18 முதல் 25 வரை. | 137 விமானங்கள். | 299 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-பர்மா (Burma)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—ஸிங்காங் (Singaung). | | | |
| 26—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—கிராவெலின்ஸ் (Gravelines)க்கும் அபிவில்லி (Abbeville)க்கும் இடையேயுள்ள பிரெஞ்சுக் கடற்கரை. | | | |
| | 'இ' (E) படகு—கலே (Calais)க்கருகாமையில். | | | |
| | இரவில்.—பெரிய துறைமுகம், நீர்மூழ்கிகள் தங்குவதற்கான கட்டடமும்—ஹாம்பர்க் (Hamburg)கின் மத்திய பிரதேசத்தில். | 1,75,000 டன்கள் எரி குண்டுகள் போடப்பட்டன. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 26—7—42. (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்)—தொடர்ச்சி. | | | |
| | விமான நிலயம்—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | | |
| | சுரங்க வெடி போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | கோனிக்ஸ்பர்க் (Konigsburg)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | துறைமுகம்—டொப்ருக் (Tobruk). | | | |
| | கப்பல் துறைப் பிரதேசம், ராணுவக் கட்டடங்கள்—மெர்ஸாமாட்ரு (Mersa Matruh). | | | |
| | விரோதி டாங்கிகள், வண்டிகள் எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள், தரையிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஸலாமுவா (Salamaua), லே (Lae) டிமோர் (Timor). | | | |
| | விமான நிலயம்—தீவில். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 21—7—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடனி (Britain)ல் விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| 22—7—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 23—7—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரண்டு இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), மற்ற உள்நாட்டுப் பிரதேசங்களில். | சிலர் கொல்லப் பட்டனர். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 5 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | நஷ்ய ஸ்தானங்களும், துருப்புகளும்—டான் (Don) நதிக்கரையில். | | | |
| 24—7—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில். | சொற்பச் சேதம். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 25—7—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்கும், தென்கிழக்குக் கடற்கரைகளிலும். | | 3 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | அநேக விமானங்கள் சேதமாயின. | 4 விமானங்கள். | |
| | ஆஸ்திரேலியா (Australia)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டௌன்ஸ்வில்லி (Townsville). | | | |
| 26—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்குக் கடற்கரை. | | 2 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் (Darwin). | சொற்பச் சேதம். | | |

**நேசமும், ஐக்கியமும்.**

நேசநாடுகள் என்றிருந்ததை ஐக்கிய நாடுகள் என்று மாற்றப்பட்டிருக்கிறது. இதன் கருத்து ஜெர்மனிக்கு எதிரியாயுள்ள நாடுகள் ஒற்றுமைப்பட்டிருப்பதைத் தெரியப்படுத்துகிறது. இந்நாடுகளெல்லாம் பொதுவான சம்பத்துடனும் யுத்த தந்திரத்துடனும் ஒன்றுசேர்ந்திருக்கின்றன. இப்படி ஒன்றுசேர்ந்த நாடுகளில், 'ஒன்றுக்கு விரோதமாக நடந்துகொண்டாலும் எல்லா நாடுகளுக்கும் விரோதமாக நடந்துகொண்டமாதிரிதான்'.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் கிளம்பிய மொழிகள்.**

இவ்வாரத்தில் அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் அதிகார வர்க்கத்தினர்கள் ஒரேவிதமான அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கின்றனர். அதாவது, வெற்றியடையவேண்டுமென்பதே. எதிரியை எதிர்க்கமுன்னேறும்படி 'தேசாபிமானமுள்ள யாவரையும் அழைக்கிறோம். 13 மாதங்களாக நடக்கும் இந்த ருஷ்ய யுத்தத்தில் நினைக்கமுடியாதபடி 1,000 தீரச்செயல்கள் செய்யப்படுகின்றன. தேசாபிமான உணர்ச்சி இன்னும் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. அதை வெளிப்படையாகக் காட்ட தேசத்தின் க்ஷேமத்தை முன்விட்டு யாவரும் காரியம் செயலில் ஈடுபடவேண்டும். இது தேசாபிமானமுள்ளோருக்கு நன்கு தெரியும். எதிரி எப்படியாவது தடுக்கப்படுவான்'. இது ருஷ்யாவிலிருந்து ஸ்டாலின் சொன்னது.

"தாற்காலிகமான தோல்வியோ, பின்வாங்குவதோ, எதிரியை எதிர்த்துச் சண்டைசெய்யும் நமது தீர்மானத்தைக் குலைக்கமுடியாது. எதிரிகள் யாவரும் நிராயுதபாணிகளாக ஆகி, சக்தியில்லாமல் போகும்வரை நமது தீர்மானம் குறையாது.

இந்த யுத்தம் நீண்டகாலம் நடந்தாலும் சரி, சிறிதளவு நடந்தாலும் சரி, வெற்றிவரையில் முன்னிற்கும் என்று எதிரிகள் நிச்சயம் செய்துகொள்ளலாம்".

இது பிரிடனிலிருந்து ஈடன் சொல்லியது:—

"தாற்காலிகமாயுள்ள தோல்விகளைப்பற்றி பயப்படுவதற்குக் காரணமில்லை. ஆனால் உண்மையான சிப்பாயும், தேசாபிமானிகளும் எதிரியின் பலாத்காரத்திற்கு இணங்காதபடி அதிக பலமாக எதிரியை எதிர்த்தடிக்கக் காரணமாக வைத்துக்கொள்ளவேண்டும்."

"நமது வீர நேசதேசத்தினருக்கு எல்லா உதவியையும் அனுப்புகிறோம். எதிரி எந்தப் பாகத்திலிருந்தாலும் அவனைத் தாக்கித் தோற்கடிப்போம்". இது அமெரிக்காவிலிருந்து வெல்ஸ் சொல்லியது.

ருஷ்ய யுத்த தந்திரமென்பது கம்பீரமானதாயும், லகுவானதாயும் காணப்படுகிறது. ஜெர்மன் சைனியம் பல வருஷங்களாகத் தயாரிக்கப்பட்டுவந்ததால் பலமுள்ளதாகவே இருக்கிறது என்றும், ஆனால் அதன் பூரண பலத்தையும் அடைந்துவிட்டதென்றும் ருஷ்ய நிபுணர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே அது இனிமேல் விருத்தியடையமுடியாதென்றும், நவீன போக்குவரத்து சாதனங்களால் குறித்த இடத்தில் அதிகமாகச் சேகரிக்கமுடிகிறதென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் ருஷ்யச் சைனியம், ஜெர்மன் சைனியத்திற்குச் சமமாக இல்லாதிருந்து யாவரத்தான் பலம் பெற்றுவருகிறது. இருந்தாலும் பூரண பலத்தை அடையவில்லை. அதனால்தான் எதிரியின் முன்னேற்றத்தைத் தடுக்கவும் முடியவில்லை. மீண்டும் எதிரியின் அதிக நஷ்டம் எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும், ருஷ்யச் சைனியம் கலைபடாமல் காத்துக்கொண்டிருந்து, குறுக்கெதிர்ப்புகளைச் செய்யத் தயாராகிவருகிறது. டிமோஷென்கோவின் திட்டம் என்னவென்றால், ஒரு நகரம் காலி செய்யப்பட்டாலும், ஒரு பிரதேசத்தை விட்டுக்கொடுத்தாலும், எதிரியின் சைனியத்தை அழிக்கவேண்டும் என்பதுதான். மேலும் வாரனேஷ் போன்ற முக்கிய ஸ்தானங்களைக் கைவசப்படுத்திக்கொண்டு எதிரியைக் கலைக்கச் செய்வதும் ஒரு தந்திரம்தான்.



இவ்விதமாக எதிரியை முடிவாகத் தோற்கடிப்பது லக்ஷியம். இந்த தந்திரம் ஆடம்பரமுள்ளதாகக் காணப்படாதபோதிலும் வெற்றி நிச்சயம் கிடைக்கும். இந்தத் தந்திரத்தினால்தான் 19-வது நூற்றாண்டில் நெபோலியனும், கடந்த யுத்தத்தில் கெய்ஸரும், சென்ற வருஷத்தில் ஹிட்லரும் தோற்கடிக்கப்பட்டார்கள். சென்ற மாரிகாலத்தில் ரோஸ்டவுக்கு அருகில் வந்ததும் நாஸிகள் பின்வாங்க வேண்டிவந்ததைக் குறிப்பிடுகிறோம்.

வி வி வி வி வி வி

**யூரல் மலைச்சாரல்.**

டான், டானட்ஸ் பிரதேசங்கள் எதிரி வசமாவதால் நிலைமை மோசமாகி வந்தாலும் யூரல்லைக்கொண்டு சமாளித்து விடலாம். தீர்க்க திருஷ்டியுடன் 1930-லேயே ஸ்டாலின் யூரலுக்கு அப்பால் உலோக தளங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னார். இது சாதிக்கப்பட்டது. மாக்னிட்டோகோர்ஸ்க், (Magnitogorsak), ஷெலியாபின்ஸ்க் (Chelyabinsk) போன்ற நகரங்கள் 10 வருஷங்களுக்கு முன் உண்டாகவேயில்லை. தற்போது அந்த இடங்களில் விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள் எல்லாம் உண்டுபண்ணப்படுகின்றன. 1937 முதல் பாக்கு பிரதேசத்திற்கு அடுத்தபடியாக வால்கா—யூரல் எண்ணெய் தளங்கள் உண்டாக்கப்பட்டு 50,00,000 டன்களுக்கு அதிகமாகவே எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்படும் கலப்பு எண்ணெயைக் காட்டிலும் அதிகமாக யூரலில் உற்பத்தி செய்யப்படுகிறது. பல வருஷங்கள் வரை இவ்வுற்பத்தி குறையாது.

வி வி வி வி வி வி

**1941—1942.**

சென்ற வருஷத்தில் லெனின்கிராட், மாஸ்கோ கீவ் போன்ற மூன்று இடங்களில் எதிரி சண்டை செய்தும் இவ்வருஷம் ஒரு பிரதேசத்தில்தான் அவனால் சண்டை செய்ய முடிகிறது. மறுபடி மாரிகாலம் வந்துவிடுமோவென்று ஜெர்மானியர்கள் அவசரப்படும்பொழுது ருஷ்யர்கள் அவர்களைத் தடுக்கிறார்கள். வாரனேஷில் எதிரி நிறுத்தப்பட்டு ருஷுக்கு எதிர்ப்புகள் செய்யப்பட்டு பின் நோக்கி ஓடும்படியும் செய்யப்பட்டான். வாரனேஷ் எதிர்த்து நிற்கும் வரை ஜெர்மானியருக்குத் தோல்விதான். 1941-ம் வருஷத்திலேயே பூராபலம் கொண்டிருக்கும்பொழுது ஜெர்மனியால் ருஷ்யாவைப் பிடிக்க முடியாததால், 1942-ல் ருஷ்ய பலம் விருத்தியாகும்போது ஜெர்மனியின் பலம் குறையும்பொழுது ருஷ்யாவைப் பிடிக்க முடியவே முடியாது. ருஷ்யச் சைனியத்தைக் கலைத்தால்தான் ஒருக்கால் முடியலாம். ஆனால் அதுவும் முடியாத காரியம். ஒரு வருஷ காலமாகவே ருஷ்யச் சைனியம் கலையவில்லை. ஒருக்கால் ருஷ்யாவே தோற்கடிக்கப்பட்டாலும் யுத்தம் முடிந்துவிடாது. நேசநாடுகள் ஒன்றுசேர்ந்து யுத்தத்தை நடத்தும். ருஷ்யா படும்பாட்டை வைத்துக்கொண்டு நேசநாடுகள் அதிதீவிரமாகவே சண்டையிடும். ஆகவே ரோஸ்டவ் போய்விட்டதினால் யுத்தம் முடிந்துவிடவில்லை. இந்தச் சந்தர்ப்பங்களில் முடிவான வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை மெத்த அவசியமானது.

வி வி வி வி வி வி

**எகிப்து.**

தற்சமயத்தில் எகிப்தின் எல்லையில் அமைதி காணப்படுவதால் இந்த சந்தர்ப்பத்தில் அந்த நிலைமையைப் பரிசீலனை செய்வோம். எல் அலமீன் சண்டை மூன்று வாரங்களாக நடந்து வருகிறது. இரண்டு சைனியங்களும் தங்களது நிலயங்களைப் பலப்படுத்திக்கொண்டு புதிய தாக்குதல்களுக்கு ஏற்பாடு செய்துவருகின்றன. மே மீ 26உ முதல் இரண்டுமாத காலமாக நடந்த சண்டையில் இரு சைனியங்களும் களைத்திருக்கின்றன. ஆனால் சிரமப் பரிகாரம் செய்துகொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. ஆகின்லக்கின் அபிப்பிராயப்படி ரோமல் பள்ளத்தாக்குக்கு அருகில் இருக்கிறான். ரோமலின் நோக்கம் அலெக்ஸாண்டிரியாமீதுதான். இவ்வளவு அருகில் வந்தும் கைக்கு எட்டாதது வாய்க்கு எட்டவில்லையே என்ற கவலை ரோமலுக்கு ஏற்பட்டிருக்கிறது.

கிழக்கே ரோமலின் முன்னணி 20 மைல் டெல் எலேலாவிற்கும், குவாடாரா
விற்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. இது கடலுக்கும் மணல்
பிரதேசத்திற்கும் மத்தியில் இருக்கிறது. இதில் மூன்று பாகங்களிருக்கின்றன,
வடக்கு, மத்தியம், தெற்கு. வடக்கிலும் தெற்கிலுமுள்ள பாகங்கள் கைமாறி
மாறி வந்துகொண்டிருந்தாலும் தற்சமயம் பிரிட்டிஷாரின் கையில் இருக்கிறது.
மத்திய பாகத்தில் பிரிட்டிஷார் ஏழு மைல்கள் முன்னேறியிருக்கின்றனர். பிரிட்டிஷ்
8-வது படை மறுபடி புனருத்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது. தந்திரமான கடமாட்டங்
களால் ஜெனரல் ஆசின்லக் எதிரியைத் தடுத்துவிடுவார்.

ஆனால் வருங்காலத்தைப்பற்றி ஜோஸியம் சொல்லுவது வீண் பொழுது
போக்குதான். ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயம். எகிப்தைப் படையெடுக்கலா
மென்று நினைத்து ரோமல் முன்னேறியும் பாதி வழியிலேயே தடுக்கப்பட்டான்.
ஆனால் ஆரம்பத்திலேயே எகிப்தைப் படையெடுக்க வேண்டுமென்ற யோசனை
அவனுக்குக் கிடையாது. கிடைத்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு அதன்
பிறகு செய்த யோசனைதான். இதற்காக எல் அலமீனுக்கு, ஆசின்லக் பின்
வாங்கியது முன்பு டாரிஸ்வீட்ராஸ் அரண்களுக்கு வெல்லிங்டன், நெபோலியன்
சண்டையில் பின் வாங்கியதற்குச் சமமாகும். இதனால் பெரியதொரு ஆபத்து
தவிர்க்கப்பட்டது. எதிரியின் திட்டம் குலைந்தது. அடுத்தபடி திருப்தியளிக்கும்
விஷயம் என்னவென்றால் குறுகலான பாகத்தில் எதிரிகளை அடைத்ததுதான்.
மேலும் பலம் பெற்றவுடன் எதிரியை எதிர்த்தடிக்கும் சக்தியும் ஆசின்லக்கிற்கு
கிடைத்தது. இவ்வித மாறுதல்களால் ரோமல் முன்னேற்றப்போரைத் தற்
காப்புப் போராக மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. வெற்றி நிச்சயம்
கிடைக்குமென்ற இருமாப்பு இருக்கும் பக்ஷத்தில் ரோமலைப் போன்றவர்கள்
ஒரே இடத்தில் நிலைகொள்ளமாட்டார்கள். ஆனால் ஜூலை 10-ல் ஆசின்லக்தான்
முதலில் யுத்தத்தை ஆரம்பித்து டெல் எலேலாவிலிருந்து 7 மைல் முன்னேறி
னான். டைம்ஸ் பத்திரிகையின் செய்தி நிருபர் 'கடந்த சில வாரங்களாக
ஜெர்மன் படைகள் நேசதேச விமானங்களிலிருந்து தாக்கப்பட்ட மாதிரி வேறு
படைகள் ஒன்றும் தாக்கப்படவில்லை' என்று சொல்லியிருக்கிறார்.

இதற்கிடையில் அச்சுநாட்டு ஒலிபரப்புகள் இஷ்டப்படியான செய்திகளைப்
பரப்புகின்றன. அவைகளின் ரேடியோ நிலையங்கள் மத்தியதரைக்கடலுக்கு
நாலு பக்கங்களிலும் இருக்கின்றன. எகிப்து, எகிப்தினருக்குச் சொந்தமானது
என்பதான வாக்குறுதிகளைச் சொல்லுகின்றனர். அதாவது எகிப்திலிருந்து
ஆசின்லக் பின்வாங்கவேண்டுமாம். ரோமலுக்கு இடம் கொடுக்கவேண்டுமாம்.
சில சமயங்களில் பொய்க்கதைகளையும் கட்டிவருகின்றனர். எகிப்தில், பிரிட்டிஷ்
அட்டூழியங்கள் அதிகம் இருப்பதாயும், அலெக்ஸாண்டிரியாவிலிருந்து போர்ட்
ஸெய்டுக்கு எல்லா ஜனங்களும் அனுப்பப்பட்டனரென்றும் சொல்லுகின்றனர்.
கெய்ரோவைக் காலிசெய்ய வேண்டுமாம். உடனே ஹர்ட்டூம், பெல்கிரேட்
முதலியவைகளில் நடைபெற்ற மாதிரி இங்கும் உட்புகும் எண்ணம்தான்.

எகிப்தோ, மற்ற மத்தியகிழக்கு நாடுகளோ இதற்கு உட்படவில்லை.

1\. இராக் பிரிட்டனுடன் கொண்டுள்ள ஒற்றுமையால் ஸ்வதந்திரத்தைப்
பெற்றிருக்கிறது. கோசாக்குகளின் வெற்றிக்குப் பிறகு அரபிய நாடு
களின் ஒற்றுமை ஸ்தாபிக்கப்படும். (அரிஸட், ஜூன் 14).

2\. 'எகிப்தில் அச்சுநாட்டு பிரசாரத்தைக்கண்டு பலரும் வியப்படை
கின்றனர். எகிப்து பிரதம மந்திரி முதல், சாமான்யவரை பிரிட்டிஷாரின்
பேரிலுள்ள நம்பிக்கையில் கொஞ்சமும் மாறுதலில்லை. (ரேஷனல் ஜீடன்,
ஜூலை 13).

3\. 'சமீபத்தில் சில வாரங்களாக நடக்கும் சண்டை நிலைமையால்
எகிப்து மக்கள் கொஞ்சமும் கலங்கவில்லை. கலவரத்தின் அடையாளமே இல்லை.
அரசாங்கமும், பொதுஜனங்களும் பிரிட்டிஷ் துருப்புகள் போகும்போது வரவேற்
கின்றனர். ஆசிமொழிகளைக் கூறுகின்றனர். (டி அல் டாஸ்டர், ஜூலை 8).

4\. 'ஆசின்லக்கின் பேரிலுள்ள நம்பிக்கைதான் எங்கும் பரவியிருக்கிறது'
(டி அல் பலாக், எகிப்து, ஜூலை 13).'



**சைனு.** கிழக்கு சைனுவிலிருந்து சீனர்களை விரட்டி
விட்டதாக ஜப்பானியச் செய்தி ஒன்று
வெளியிடுகிறது. சுங்கிங்கிலுள்ள சீனத்துருப்புகளுக்கு ஸப்ளைகள் வராமல்
தடைபட்டதினாலும், அடிக்கடி தோல்விகள் ஏற்பட்டுவருவதாலும் அவர்கள்
நம்பிக்கை இழந்துவருவதாகவும் சொல்லப்படுகிறது. உண்மையில் இவ்
வதந்திகள் யாவும் ஜப்பானின் சூழ்ச்சியினால்தான் ஏற்பட்டது. உண்மையில்
விஷயங்கள் அவ்வாறில்லை. சென்ற ஒன்று இரண்டு வாரங்களாக லிஷுயன்,
ஸிங்டன் (Sington) என்ற இடங்களையும், சிகியாங்—கியாங்ஸி இருப்புப்பாதை
யிலுள்ள அநேக முக்கியமான இடங்களையும் சீனர்கள் திரும்பப் பிடித்துக்
கொண்டிருக்கிறார்கள். மேலும் ஜப்பானிய சைனியத்தின் தலைமை ஸ்தானமாகிய
லின்ச்வான் என்ற இடத்திற்கு 3 மைலுக்கு அருகாமையில் சீனர்கள் முன்னேறி
யிருக்கிறார்கள். ஜப்பானியரின் படையெடுப்புக்கு முக்கிய நோக்கம் கியாங்ஸி
யின் தலைநகரான நான்சங்கைப்பிடிப்பதுதான். இந்த அவகாசத்திற்குள் ஜப்
பானியர் அதை பிடித்துக்கொள்ள முடியவில்லை.

வி வி வி வி வி வி

**'1918'.** ஹிட்லருக்குத் தடங்கல்கள் ஒன்றன்பின் ஒன்
றாகக் கிளம்புகின்றன. மலைமேல் சஞ்சரிக்
கின்றவனுக்கு ஒரு மலைக்கப்பால் மற்றொரு மலை தோன்றுகிறதுபோல் இருக்
கிறது. ஹிட்லர் இவ்வளவையும் ஒவ்வொன்றாகத் தாண்டிச்செல்ல விரும்பு
கிறான். ஜெர்மனியின் உள்நாட்டிலும் தொந்தரவுகள் தொடர்ச்சியாகக் கிளம்பி
யிருக்கின்றன. முதலில் மத்திய வகுப்பினரை அடக்கினான். அதன் மூலம்
தொழிலாளர்களின் வகுப்பினரைத் தாக்கினான். சண்டையில் ஜயம் என்று
அவர்களுக்கு எடுத்துச் சொன்னான். ஆனால் சிலரே இந்தத் திட்டங்களால் பிர
யோஜனமடைந்தனர். க்ருப்ஸ் போன்ற ஆயுத சாலைகளின் சொந்தக்காரர்களும்
தொழிற்சாலை முதலாளிகளும்தான். வியாபாரச் சங்கங்களை ஸ்வாதீனப்படுத்திக்
கொண்டதால் வேலைக்காரர்களின் ஸ்வதந்திரம் போய்விட்டது.

இருந்தாலும், இரண்டு சத்துருக்கள் ஹிட்லருக்கு இருக்கின்றனர். பொது
ஜனங்களும், சைனியமும். '1918-ம் வருஷம் ஹிட்லரின் மனதில் இருக்கிறது.
அந்த சமயத்தில் சைனியத்திற்கு விரோதமாக பொதுஜனங்கள் கிளம்பினார்கள்.
கப்பற் படையும் கலகத்தில் சேர்ந்துகொண்டது. ஆகவே ஹிட்லர் தற்சமயத்
தில் தனியாக தனக்கு உட்பட்டதொரு சைனியத்தைத் தயாரித்து வருகிறான்.
இதைக்கொண்டு பொதுஜனங்களையும், சைனியத்தையும் அடக்க உத்தேசம்.

வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் உள்நாட்டு நிலை.** லிபியாவிலும், டான் நதி தீரத்திலும் ஜெர்மானி
யர் தாற்காலிகமாக அடைந்துவரும்
வெற்றிகள் உண்மை. டாக்டர் கோயபல்ஸை மயக்கிவிட்டது. அவன் வெளி
யிடும் டாஸ்ரீச் என்ற பத்திரிகையில் அவன் சர்ச்சிலையும், ரூஸ்வெல்ட்டையும் ஒரு
தத்துவ ஞானிக்கு ஒப்பிடுகிறான். அந்த சாஸ்திரிகள்தான் சாகும் வரையில்
"நான் வரவர குணமடைந்து வருகிறேன்" என்று ஒவ்வொரு நாளும் வெவ்வேறு
விதமாக சொல்லிவந்தான். 'நாம் இப்பொழுது அடைந்துவரும் சிறு தோல்வி
கள் தோல்விகளேயல்ல. அவைகள் சிறு குழந்தையின் விளையாட்டுக்குத்தான்
ஒப்பிடலாம். 'ஜெர்மனியின்' கதி திராக்ஷ முனையில் இருக்கிறது', என்று அதே பத்
திரிகையில் விவரித்திருக்கிறான். இதேவிதமாக அபிப்பிராயங்களையே மற்ற
ஜெர்மன் பத்திரிகைகளும் வெளியிடுகின்றன. டைவெல்ட்வூச் (Dio Welt
woche) என்ற பத்திரிகையில் பின்வருமாறு கண்டிருக்கிறது:—'ஏன் இந்த
யுத்தம்? என்று ஜனங்கள் சென்ற வருஷத்தைவிட இந்த வருஷத்தில் அதிக
மாகச் சொல்லிவருகிறார்கள்'. ஆனால் அவ்விதம் அபிப்பிராயப்படுகிறவர்களை
ஜெர்மன் ரகசியப் போலீஸ் கடுமையாக அடக்கிவருகிறது. ஹீட்ரிச் இறந்ததைப்
பற்றி பாராட்டின 100 ஆஸ்திரியா மக்கள் சுடப்பட்டார்கள். இது ஒரு திருஷ்
டாந்தம்தான். 'மேலும் ஜெர்மனியின் உள்நாட்டில் சமாதானம் என்பதைப்
பற்றியே பேசக்கூடாது, என்று டாஸ் ஷிவார்ஸ்கார்ப்ஸ் (Das Sch Warzo Karps)

பத்திரிகையில் இருந்தது. மேலும் 'ஜெர்மன் மக்கள் சமாதானம் என்பதைப்பற்றி நினைக்கக்கூட கூடாது என்றும், அவர்களுக்கு அலோசனை செய்யும் பழக்கத்தையே கொடுக்கக்கூடாது என்று டாக்டர் லீ (Dr. Ley) இன்னும் அடாரித்துச் சொல்லுகிறார். ஒரு குழந்தைக்கு கூர்மையான கத்தியோ, நெருப்புக் குச்சியோ, இன்னும் மற்ற ஆபத்து விளையக்கூடிய வஸ்துக்களோ கொடுக்கக்கூடாது. அரசாங்கத்தில் உத்தியோகம்பெற காலி கூலியைக் கேட்டுத் தான் ஆகவேண்டும்.

"யுத்தத்தினால் பலமக்கள் அழிந்துபோனதால் மட்டில் மற்றும் ஜெர்மன் உள்நாட்டு நிலைமை மோசமாய் போய்விடவில்லை. அதற்கு பல காரணங்களும் உண்டு. 1941-ல் ஜெர்மனி வெற்றியடைந்தால் அதைப்பற்றி ரொம்பவும் பாராட்டப்படும். ஆனால் இப்பொழுது வெற்றிகளை ஜெர்மானியர் அதிகமாகப்பாராட்டுவது கிடையாது. ஏனென்றால்—ஜெர்மனியின் ஆள்பலம், விவசாயம், போக்குவரத்து முதலியவை க்ஷீணிக்கத் தொடங்கிவிட்டன. வால்டர் டாரி என்பவர் இதற்கு முன் விவசாய இலாகாத் தலைவராக இருந்தவன். ஜெர்மனியில் இனிமேல் அதிகம் தானிய உற்பத்தி செய்யமுடியாது என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டதினால் அவனுக்குப் பிறகு ஹெர்பர்ட்பேக் என்பவன் தலைமை வகித்தான். '150 வருஷ காலமாக அடிக்கும் கடும்பனியில் 60 லக்ஷம் ஏக்கர் நிலங்களில் விளையக்கூடிய தானியமும், எண்ணெய் வித்தும் முற்றிலும் அழிந்துபோய்விட்டது. உணவுக்காகவும், வித்துக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த 120 லக்ஷம் டன் கிழங்குள்ள உருளைக்கிழங்கும், விதைக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏராளமான தானியமும் சென்ற மாரிகாலத்தில் அழிந்துபோய்விட்டது. சென்ற வருஷத்தில் விளைந்த விளைபொருள்களைக் கொண்டுதான் இப்பொழுது ஜெர்மானியர் சமாளித்து வருகிறார்கள், என்று ஹாக்ரேவில் ஜூன் 27-ல் விவசாயிகள் கூடின கூட்டத்தில் பேசினான். மேலும் அவைகளை வேறு இடங்களுக்கு ஏற்றி அனுப்புவதற்கு சாதனங்கள் மிகவும் குறைவு. 30,000 அல்லது 40,000 சாமான் ஏற்றும் வண்டிகளையும், பல மைல்கள் இருப்புப்பாதை போடுவதற்கு தண்டவாளமும் அனுப்பும்படி ஜெர்மனி விஷி ஸர்க்காரைக் கேட்டிருக்கிறது. ஆனால் விஷி அரசாங்கத்திலும் இதேமாதிரி குறைவு ஏற்பட்டு, அதன் நகரங்களுக்கே உணவுப் பொருள்களை அனுப்ப வசதியில்லாமல் இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியர் கொள்ளையடிப்பது.** ஜப்பான், ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள பொருள்களைக் கொள்ளையடிப்பதைக் காட்டியும். ஆங்காங்கு அதன் ஆட்களை குடியேறும்படி பிரசாரம் செய்து வருகிறது. மே மாதத்திலும், ஜூன் மாதத்திலும் டோக்கியோவிலிருந்து வரும் ஒலிபரப்புகளில், ஆசியாவில் ஆக்கிரமித்த நாடுகளில் போய் குடியேறும்படி ஜப்பான் தன் மக்களை வற்புறுத்தி வருகிறதாகச் சொல்லப்படுகிறது. உதாரணமாக, மே 31-ல், 'எங்கும் புதுதிட்டத்தை ஸ்தாபிப்பதாயிருந்தால் பதினாயிரக் கணக்கான ஜப்பானிய உத்தியோகஸ்தர்கள் ஆங்காங்கு அனுப்பப்படவேண்டும்'. ஜூன் 9—'தெற்குப் பாகத்திலுள்ள எதிரி நாடுகள் பூராவும் ஆக்கிரமிக்கப் பட்டுவிட்டது. அப்பிரதேசங்களில் ஜப்பானியர் வந்து குடியேறுவார்கள் என்று நாம் நம்புகிறோம்'. ஜூன் 22 "கிழக்குத் தீவுகளில் இன்னும் அநேக ஜப்பானியர் வந்து குடியேறி அத்தீவுகளை முன்னேற்றமடையச் செய்வார்கள் என்று ஜப்பானிய அரசாங்கம் எதிர் பார்க்கிறது". 'இப்பிரதேசங்களில் எந்த இடத்திற்கும் குடியேறிச் செல்லுகிறவர்களை அனுப்புவதற்கு ஜப்பான் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு' என்று டோஜோ சொல்லுகிறான்.

நாரக்கிழக்குச் சம்பந்தமாய் 1941-ம் வருஷத்தில் ஜப்பான் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் இதற்குமுன் பலநாடுகளில் குடியேறினவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது. கொரியாவில் 1911-ம் வருஷத்தில் 1,70,000 ஜப்பானியர் குடியேறியிருந்தார்கள். 1938-ம் வருஷத்தில் 6,00,000 பேர் மீண்டும் குடியேறியிருக்கிறார்கள். ஜப்பானியர் குடியேற்றம் படிப்படியாகிறது



வரவர அதிகரித்துவருகிறது. 1910-ம் வருஷத்தில் 10,00,000 பேர் ஜப்பானிலிருந்து குடியேறினவர்கள். 1938-ம் வருஷத்தில் 3,00,000 பேர் அதிகமாக உட் புகுந்தனர். அதே போலவே மஞ்சூரியாவிலும் 1932-ம் வருஷத்தில் ஜப்பானிலிருந்து குடியேறியவர்கள் ஒரு லக்ஷம் பேரிலிருந்து 1937-ம் வருஷக்குள் 3 லக்ஷம் பேர் களுக்கு அதிகரித்துவிட்டார்கள். வடகிழக்கு சைனாவில் 1938-ம் வருஷத்தில் 80,000 குடும்பங்கள் குடியேறி 1938—1941-ம் வருஷத்திற்குள் 2,00,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்தை வியாபித்துக் கொண்டனர்.

---

## ஜெர்மனியை அடியோடு அழிப்போம்.

"ஜெர்மன் ரீச்சை அடியோடு அழிப்பதற்கு அவசியமேற்படும்படி நீங்கள் செய்தால் நாங்கள் அழிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எங்களுடைய விமானங்கள் பூர்த்தியாக முடிவடைந்து, அமெரிக்க விமான உற்பத்தி இரட்டிப்பு மடங்கோ, மூன்று மடங்கோ ஆனவுடன் நாங்கள் செய்யப்போகும் சண்டையை நீங்கள் பார்த்தால் இதுவரை நடந்தது மிகச்சிறியது என்று தெரியும்.

"ஒரு அமெரிக்கத் தொழிற்சாலையில் மாத்திரம் இரண்டு மணிக்கு ஒரு தடவை நான்கு இஞ்ஜின்களுள்ள விமானங்கள் 4 டன் குண்டுகளை ஏற்றக்கூடியதாகச் செய்யப்பட்டு ஜெர்மனியை நோக்கிப் போகின்றன.

"அமெரிக்காவில் இதைப்போல் எத்தனையோ தொழிற்சாலைகளிருக்கின்றன. ஒவ்வொரு நாளும், நாங்களும் அமெரிக்கர்களும் மேல்மேல் பலமடைந்து வருகிறோம். நீங்களும் முடிந்தவரை இந்த யுத்தத்தையும், படையெடுப்பையும் தவிர்த்துக்கொள்ள முயல வேண்டும். அச்சுநாட்டுத் தலைவர்களை ஒழித்து சமாதானம் செய்து கொள்ளலாம்.

"பிரிடன்பேரில் சில விமானங்களைத்தான் ஜெர்மானியர் அனுப்புகின்றனர். ஜெர்மனியை நாங்கள் மிகக் கடுமையாகத் தாக்கி வருகிறோம். வார்ஸா, பெல்கிரேட், ராட்டர்டாம், லண்டன், பிளைமௌத், கவன்டிரி போன்ற நகரங்களை எதிரி தாக்கியது எங்களுக்கு ஞாபகத்தில் இருந்தாலும் பழிவாங்கும் நோக்கத்துடன் மாத்திரம் நாங்கள் தாக்கவில்லை.

### இன்னும் அதிக நகரங்கள் தாக்கப்படும்.

ஜெர்மனியில் ஒவ்வொரு நகரமாகத் தாக்கும் எண்ணமென்னவென்றால் உங்களுக்கும் யுத்தத்தில் ஒரு பங்கு இருக்கவேண்டுமென்றுதான். மீண்டும் நாங்கள் ஜெர்மன் நகரத்தைத் தாக்கத்தான் போகிறோம்.

"நாஜிகள் உங்களை ஆபத்திற்கு உட்படுத்தட்டும். இஷ்டமிருந்தால் நீங்கள் அதற்கு உட்படுங்கள். இதை நீங்களாகத்தான் தீர்மானித்துக்கொள்ளலாம்.

"ஐரோப்பிய யுத்தத்தில் தற்போதுதான் அமெரிக்கா ஈடுபட்டிருக்கிறது. அமெரிக்காவிலிருந்து முதல் விமானப்படை இங்கிலாந்திற்கு வந்து விட்டது.

"இவைகள் ஜெர்மனியைத் தாக்குவதென்றால் என்ன நேருமென்று உங்களுக்குத் தெரியும்.

### உங்கள் தலைவர்கள் வீணாசை பிடித்தவர்கள்.

1940-ல் ஆயுத பலமில்லாத காலத்தில் எங்களைத் தோற்கடிக்க முடியவில்லை. அந்த சமயத்தில் ருஷ்யாவையும், அமெரிக்காவையும், தாக்கும் எண்ணம் கொண்டிருந்தனர். இதாலியைத் தவிர மற்ற உலகம் பூரா இவ்விதம் தான் நினைக்கிறது.

"தற்போது பலமடைந்துவரும் காலத்திலும், ருஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியிருக்கும்போதும், நீங்கள் அசந்துபோன போதும் எவ்விதம் பயம் சேர்த்து தாங்கமுடியும்".

## அரசாங்க அறிக்கைகள்.

(அபிடின் டேவர் எழுதியது).

கார்கவ் பிரதேசத்தில் நடந்த சண்டையில் செஞ்சேனையின் நஷ்டத்தைப் பற்றி ஜெர்மானியர் பின்கண்ட விவரங்களைப் பிரசுரித்தனர்.

20 காலாட்படை பகுதி, 7 குதிரைப்படைப் பகுதி, 14 கவசமணித்தபடைகளடங்கிய 3 ருஷ்யச் சேனைகள் அழிக்கப்பட்டன. 2,40,000 ருஷ்யர்கள் கைதி செய்யப்பட்டனர். 1,249 டாங்கிகளும், 2,016 பீரங்கிகளும், 518 விமானங்களும் அழிக்கப்பட்டன.

அதே சண்டையில் ஜெர்மன் நஷ்டங்களைப்பற்றி ருஷ்யர்களும் சில விவரங்களைக் கொடுத்திருக்கின்றன.

90,000 ஜெர்மானியர் கைதி செய்யப்பட்டும் கொல்லவும் பட்டனர். 540 டாங்கிகளும், 1,511 பீரங்கிகளும், 200 விமானங்களும் அழிக்கப்பட்டன.

தங்களுடைய நஷ்டத்தைப்பற்றி ருஷ்யர்கள் 5,000 பேர் கொல்லப்பட்டதாயும், 66,000 விவரம் தெரியாமல் போனதாயும், 300 டாங்கிகள், 832 பீரங்கிகள், 124 விமானங்கள் அழிந்ததாயும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இவ்விதம் ஒரு நாளும் ஒத்துவராமல் அரசாங்க அறிக்கைகள் வெளிவருகின்றன. எதிரிகளுக்கு உண்டாக்கிய நஷ்டத்தைப்பற்றி யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகள் பலவிதமான விவரங்களைக் கொடுக்கின்றன. ஆனால் எந்த நாடு கொடுக்கும் விவரம் உண்மையானதென்று தெரிந்துகொள்ளவேண்டியதுதான்.

ருஷ்யர்கள் கொடுக்கும் கணக்கில் இறந்த ருஷ்யர்களைப் பற்றியும் விவரம் தெரியாத ருஷ்யர்களைப் பற்றியும் வெவ்வேறு கணக்குகளைக் கொடுத்தாலும், ஜெர்மானியர் பக்கத்தில் நேர்ந்த நஷ்டத்தைப் பற்றி ஒரேவிதமான கணக்கைத்தான் கொடுக்கின்றனர். பெரும் சேனைகள் பலநாள் சண்டை செய்யும்போது சரியானபடி நஷ்டத்தைக் கணக்கிடுவது சிரமமான காரியமாகும். காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிய விவரங்களை எதிரி கண்டுகொள்ள முடியாது. உண்மையைக் கொடுக்கும் நோக்கத்துடனேயே ருஷ்யர்கள் இரண்டுவிதமான விவரங்களையும் கொடுத்திருக்கின்றனர்.

2,40,000 ருஷ்யர்களைக் கைதி செய்ததாக ஜெர்மானியர் சொல்லுகின்றனர். ருஷ்யர்களோ 66,000 பேர்தான் என்று சொல்லுகின்றனர். இருவர் கொடுக்கும் கணக்குகளுக்கு நடுவில் 1,53,000 பேர்களாகிறது. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சராசரிக் கணக்குதான் சரியாகும்.

ஆனால் சரியான உண்மைகளைக் கொடுப்பது பிரிடிஷ் அரசாங்க அறிக்கைகள்தான். உதாரணமாக சமீபத்தில் கோலோன் மீது செய்யப்பட்ட விமானத்தாக்குதலில் தங்களுக்கு 44 விமானங்கள் நஷ்டமென்று பிரிடிஷ்காரர்கள் ஒப்புக்கொண்டனர். ஜெர்மானியர் வீழ்த்தியதாகச் சொன்னது 37 தான். பிரிடிஷாரைப் போல் சரியான விவரங்களை மற்ற எந்த நாடுகளும் கொடுக்கவில்லை. ஜூன் 22ஆ முதல் ஜெர்மானியரோ, ருஷ்யர்களோ, எதிரியைக் காட்டிலும் தங்களுக்கு அதிகமான விமான நஷ்டம் ஏற்பட்டதை ஒப்புக்கொள்ளவேயில்லை.

இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய அறிக்கைகளில் உண்மைகளையே பிரசுரிக்க வேண்டுமென்று நினைத்தனர். ஆனால் சேம்பர்லின் டலாடியருக்கு "எங்களைப்போல் நீங்களும் செய்யாதீர்கள். நஷ்டத்தை மாத்திரம் சொல்லாதீர்கள். பிரிடிஷாரைப் போல் பிரெஞ்சுக்காரர்கள் அமைதியுடனிருக்கமாட்டார்கள். சுலபமாக மனம் தளர்ந்து விடுவார்கள்" என்று இவர் சொன்னது உண்மையென்று கொஞ்சகாலம் கழித்தே நமக்குத் தெரியவந்தது. இவ்வருஷம் ஜூன் முதல் தங்களுடைய கப்பல் நஷ்டங்களைச்



சொல்ல பிரிடிஷார் பிரியப்படவில்லை. எதிரிக்கு இவ்விவரங்கள் தெரியக்கூடாதென்றே இம்மாதிரி செய்யப்பட்டது. இருந்தாலும், கப்பல் இலாகா நஷ்டத்தைக் குறைக்காமல் வெளிவிட்டுக் கொண்டுதானிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் ஜெர்மானியர்கள் தங்களுடைய நீர்மூழ்கிகளின் நஷ்டத்தைச் சொல்லாமல் நேசநாட்டுக்கப்பல் நஷ்டத்தை மாத்திரம் சொல்லிவருகிறார்கள்.

ஆகவே நேசநாட்டு விவரங்கள் உண்மையாக இருப்பதால் அவைகள் நம்பப்படுகின்றனர். இது நேசநாடுகளுக்கு ஒரு சாதகம்தான்.

---

## பிரிடன் பேசுகிறது.

---

### மாக்பெத் நாடகத்தின் கடைசி கட்டம்.

(மிஸ்டர் J. B. பிரீஸ்ட்லி பி. பி. ஸி-யில் பேசியது).

**படுகொலை நடந்த தினம்.**

எட்டு வருஷங்களுக்கு முன்னால், அதாவது 1934-ம் ஞு ஜூன் மீ 30ஆ அடால்ப் ஹிட்லர் தன்னுடைய நெருங்கிய சிநேகிதர்களைக் கொலைசெய்து இப்பெரும் பதவியை அடைந்தான். ஜூன் மீ 30ஆ இரவில் நடந்த சம்பவத்தை யாவரும் மறக்கமுடியாது. எவ்வளவோ நூற்றுக்கணக்கான நாஸித்தலைவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அவர்களில் ஹிட்லர் இப்பதவியையடைய உதவி செய்தவரான காப்டன் ரோயம் (Roehm) என்பவனும் சேர்ந்தவன். நாஸி இயக்கத்தில் ஈடுபட்டிருந்த கொடிய தலைவர்கள் யாவரும் போய்விட்டபடியால், இந்த கலகக்கூட்டம் ஒழிந்தது என்று நாஸிகள் அப்பொழுது சொல்லிவந்தார்கள். ஆனால் இவ்விதம் அகோரமான கொலைகள் ஏற்பட்டபடியால் உண்மையான கலகம் ஏற்பட்டுவிடும் என்றும், எஞ்சியிருக்கும் நாஸி இயக்கத்திற்கு வெகு துரிதத்தில் அழிவு காலம் ஏற்பட்டுவிடும் என்றும் ராஷ்நீக் குறிப்பிட்டுச் சொன்னார். வரவர நாஸி இயக்கத்தில் நல்ல அம்சங்கள் என்பதே இல்லாமல் போய்விட்டன. ஆனால் அது துரோகம், பலாத்காரம், கொடுமை முதலிய இழிவான நடவடிக்கைகளைச் செய்யத்துணிந்த பலமான கோஷ்டியாய் விட்டது. காப்டன் ரோயம் (Roehm) இன்னும் அவனுடைய சகாக்களும் ரொம்ப நல்லவர்கள் என்று சொல்லுவதற்கில்லை. அவர்கள் வெறும் காட்டுமிருண்டிகளே. வெறும் வீராப்பு பேசுகிறவர்களும், மிருகத்தன்மை வாய்ந்தவர்களும்தான். ஆனால் அவர்களைக் கொன்ற மனிதர்களோ இன்னும் மோசமானவர்கள்.

**ஜெர்மன் இளைஞர்களின் மிருகத்தன்மை.**

அவர்கள் மட்டில் கொடியவர்களாக இருக்கவில்லை. இன்னும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் கொடிய செய்கைகளைச் செய்யும்படி தூண்டிவந்தார்கள். இவ்விதமாக ஒரு தலைமுறையில் தோன்றின ஜெர்மன் இளைஞர்கள் யாவரும் தூண்டப்பட்டார்கள். அதனால் இந்தக் காலத்தில் திடுக்கிடும் சம்பவங்கள் அநேகம் நடந்திருக்கின்றன. நாம் அவற்றைப்பற்றி அதிகம் பாராட்டாமல் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறோம். அதன் கொடுமையை ஒப்பிட்டுப் பார்க்கிறோம். ஆனால் ஒரு பெரிய தேசத்திலுள்ள வாலிபர்களைப் பகிரங்கமாகவும் வேண்டுமென்றே கெடுத்துவருவதைப் பார்க்க நமக்கு அதிக பயத்தை உண்டாக்குகிறது. 1934-ம் ஞு ஜூன் மீ 30ஆயில் ஹிட்லர், கோயரிங், ஹிம்லர் இன்னும் மற்றவர்கள் அவர்களுடைய பழைய சகாக்களில் எவ்வளவோ நூற்றுக்கணக்கான பேர்களைக் கொலை புரிந்தார்கள். அது முதற்கொண்டு உள்நாட்டில் தோன்றின வாலிபர்களில் தங்களுக்கு அடங்காத அநேகம் பேர்களையும் கொலை செய்தார்கள். அவர் வசம் அகப்பட்டவர்களுக்கு மிகவும் கொடுஞ்செயல்களைப் புரியும்படி கற்றுக்கொடுக்கப்பட்டது. மனித வர்க்கத்தையே மரியாதையின்றி அநாகரீகமாக நடத்தும்படிக்கும், தூண்டப்பட்டார்கள். எவ்வளவு இழிவான காரியமோ அதையும் செய்யத் துணியும்படிக்கும், மேன்மையான உணர்ச்சி

களே இவ்வுலகத்தில் இல்லையென்றும் கற்றுக்கொடுக்கப்பட்டார்கள். நியாயம், பச்சாத்தாபம், அன்பு இவை யாவும் கோழைகளுக்குத்தான் உரித்தானவையே ஒழிய உயர்ந்தவர்களுக்குக் கிடையாது. ஆனால் துரோகம், மிருகத் தன்மையாக நடந்துகொள்ளுதல், கொடுமை முதலிய குணங்கள் யாவும் உயர்ந்த ஜாதியாருக்கு உண்டு என்று அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. 3,000 வருஷ காலமாக பிரக்யாதிபெற்ற புலவர்கள், போதகர்கள், ஞானிகள் தூரதிருஷ்டியுடனும், சாதுர்யமாகவும் சொல்லிவந்தவைகளெல்லாம் வீண்காலம் கழிப்பதற்கான விஷயங்கள்தான் என்று அவர்களுக்கு உறுதி கூறினார்கள். இவ்விதம் ஞானோபதேசம் செய்து பல லக்ஷக்கணக்கான இளைஞர்களைக் காட்டுமிராண்டிகளாகச் செய்துவிட்டார்கள். மேலும் அவர்களை நாகரீக வாழ்க்கையில் ஈடுபட விடாமல் செய்துவிட்டார்கள்.

## வெகுதுரிதமாக விரோதிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

இவ்விதம் தயாரிக்கப்பட்ட வாலிபர்கள் குறுகிய நோக்கத்துடனும், படிப்பின்மையுடனும், முரட்டுத்தனமாக தேசங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றிவருகிறார்கள். ஆர்டிக் சமுத்திரத்திலிருந்து மத்தியதரைக் கடல்வரையிலுமுள்ள பிரதேசங்களில் அவர்கள் அட்டூழியங்கள் செய்துவந்ததால் அங்குள்ள அமைதியும், நாணயமும் உள்ள ஜனங்களின் விரோதத்தை சம்பாதித்தனர். ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் எந்த தேசத்தில் நாஜிகள் வரவேற்கப்படுகிறார்கள்? பிரான்ஸ் தேசத்தில் ரொம்ப நாணயமாகவும், மரியாதையுடனும் நடந்துகொள்ளுவதாக பாவனைசெய்தபோதிலும், அவர்களுக்கு இங்குள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள் ஆதரவளித்து வந்தபோதிலும், அவர்களின் முட்டாள்தனத்தால் பிரெஞ்சு மக்களின் கோபத்தை சம்பாதித்துக்கொண்டார்கள். எதைக்கண்டாலும் கைப்பற்றவும், பிணையாளிகளையும், குற்றமற்றவர்களையும் கொலை செய்ய நோக்கங்கொண்டு மிருகத்தன்மையுடன் அவர்கள் நடந்துகொண்டார்கள். அதனால் அவர்கள் சென்ற இடங்களெல்லாம் அவர்களுக்கு விரோதிகள் திரள் திரளாகக் குவிந்தார்கள். உதாரணமாக நாஜிகள் ஒருவரைச் சுட்டால், சுமார் 50 பேர்கள் அவர்களை ஒழிக்கச் சங்கல்பம் கட்டிக்கொள்ளுகிறார்கள். இன்னும் 50 பேர்களைக் கொலை செய்தார்களானால், இன்னும் 2,500 பேர்கள் கடும் விரோதிகளாக மாறிவிடுகிறார்கள். இம்மாதிரி நாஜிகளின் அக்கிரமச் செய்கைகள் விருத்தியாக, விருத்தியாக அவர்களின் விரோதிகளும் பன்மடங்கு அதிகரிக்கின்றனர். இவ்விதமாக ஹிட்லரின் 'புதிய திட்டத்'தில் எங்கும் காவற்கூடமாகவும், கொலைக்களமாகவும் இருந்துவருகிறது.

## காமவெறி.

போலந்திலும், ஜெக்கோஸ்லாவியாவிலும் நாஜிகள் நடந்துகொண்ட மாதிரியுடன் பிரான்ஸில் அவர்கள் நடந்துகொண்டதை ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்கள் பிரான்ஸில் நடத்திய கொடுமைகள் யாவும் சிறு குழந்தைகளின் விஷமச் செய்கைகள்தான். ஜெகோஸ்லாவியாவில் லாடிஸ் என்னும் கிராமம் பூராவும் தலையோடு தரையாக ஆக்கப்பட்டு, அதன் ஜனங்கள் யாவரும் கொலை செய்யப்பட்டதைப்பற்றிய விவரங்கள் இப்பொழுது வெளிவந்திருக்கின்றன. இதைக்காட்டிலும் இன்னும் அதிகமாக யூகோஸ்லாவியாவில் நடைபெற்றது. எல்லாவற்றையும் அழித்தும், ஜனங்களைக் கூட்டம் கூட்டமாக சேர்த்துக் கொலை செய்தும் வந்தனர். எங்கு கண்டாலும் ஒரே கொலைக்களமாக விளங்கிற்று. ருஷ்யாவில் ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களில் என்ன நடந்ததென்று நமக்குத் தெரியும். அங்குள்ள நாஜிகள் சொத்துக்களைக் கொள்ளையடித்தும், ஸ்திரீகளைக் கற்பழித்தும், இன்னும் ஜனங்களைப் பலவிதமாக ஹிம்சித்தும் வந்தார்கள். போலந்தில் சமீபத்தில் ஏராளமாக ஸ்திரீகள் கொலை செய்யப்பட்டார்கள். இதைத் தவிர கைதிகளின் முகாம்களிலும், கோட்டைகளிலும், இன்னும் மற்ற இடங்களிலும் ரொம்ப அக்கிரமங்கள் நடைபெறுகின்றன. எங்கும் கொலையும், ஹிம்சையும் நடைபெறுகின்றன. குடிவெறியில் காம விகாரத்துடன் கொடிய நாஜிகள் ஸ்திரீகளைக் கற்பழித்து வருகிறார்கள். அவர்கள் செய்யும் அட்டூழியங்களைப்பற்றிய சுருக்கமான விவரங்களைக்கூட படிக்க சகிக்காது. உண்



மையில் நாம் இந்த நரக வேதனையிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நம்மனில் அநேகர் கருதுகிறோம். நமக்குள்ளாகவே பிரசாரம் ஒன்று இருப்பதாக முணுமுணுத்துக்கொள்ளுகிறோம். ஆனால் எப்பொழுதாவது உண்மையான நடப்பில் ஏதாவது ஒரு எண்ணிக்கை கூடுதலாக சொல்லப்பட்டிருக்கலாம்; அல்லது ஒரு சில முகாமில் நடக்கும் கொடிய செய்கைகள் தவறுதலாக வேறு முகாம்களில் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் இவைகள் நடப்பதில் சந்தேகமே இல்லை. இவற்றைப்பற்றி அதிகமாகச் சொன்னால் நமது மூளை குழம்பிவிடும். இப்பொழுது உலகம் எப்படியிருக்கிறதென்றும், ஹிட்லரும், அவன் சகாக்களும் எவ்வளவு தூரம் அவைகளுக்குப் பொறுப்பாளிகள் என்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

## துக்கநிலையடைந்தவர்கள்.

இத்தகைய கோரச் செய்கைகளுக்கு ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் சிறைபிடிக்கப்பட்டோ, பட்டினியாகக் கிடக்கும்படி செய்தோ, அடித்தோ, சுட்டுக் கொல்லப்பட்டோ உள்ள ஆண், பெண்கள் மாத்திரம் பலியாகவில்லை. இவர்களைச் சுற்றி வளைப்பதற்கும், பட்டினிபோட்டு ஹிம்சை செய்வதற்கும், அடிப்பதற்கும், சுடுவதற்கும் அதிகப்படியாகச் செய்வதற்குத் தயாரிக்கப்பட்ட வாலிப நாஜிப் படைகளும் இவற்றிற்குப் பலியாக இருக்கிறார்கள். அந்த வாலிபர்களை ஏமாற்றி அழைத்துக்கொண்டுபோய், மயக்கி, பயிற்சி அளித்து, நம்முடைய நாகரீகம் முற்றிலும் இல்லாமல் தயாரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் கொலை செய்கிறவர்களையும், கொலை செய்யப்படுகிறவர்களையும் சேர்க்கவேண்டும். 15 வருஷங்களுக்குமுன் இப்பொழுது ஐரோப்பாவில் சிற்றெறும்புகள்போல் சாரியாய்த் திரியும் வாலிப விஷமிகள் நோஞ்சியான ஜெர்மன் நகரங்களிலும், கிராமங்களிலும் தெருக்களில் காணப்பட்ட செம்பட்டை மயிரும், நீலக் கண்களும், புன்முறுவலும் கொண்ட குழந்தைகளாக இருந்தார்கள். அவர்கள் நாகரீகமாக இருக்கும்படி பயிற்சி அளிக்கப்படாதவர்கள் என்பதில்லை. நாகரீகம் இல்லாமல் இருக்கும்படி வெகு ஜாக்கிரதையாகப் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள். வருங்காலத்தில் அவர்கள் கதி என்ன?

## போலீஸ்காரன்தான்; அரசியல் நிபுணன் அல்ல.

உலகம் பூராவையும் அவர்களால் ஜயிக்கமுடியாது. உலகம் பூராவும் ஜயிக்காமல் போனால் வருங்காலத்தில் அவர்களுக்கு ஒரு கதியும் ஏற்படாது. இன்னும் சில நாடுகளை அவர்கள் ஆக்கிரமிக்கலாம். ஆனால் அவர்கள் ஆக்கிரமிக்கக்கூடுமென்று தோன்றவில்லை. அப்படி அவர்கள் ஆக்கிரமித்தால் இன்னும் 'அநேகம் பேர்கள் சிறைச்சாலைகள், புதைகுழிகள் நிறைந்த இடங்களில் நீண்ட காலம் சேவகம் புரிய நேரிடும். ஏற்கனவே ஆக்கிரமித்த நாடுகளுடன் அவர்களால் நியாயமான சமாதான நிபந்தனைகள் செய்துகொள்ளமுடியாது. எல்லா இடங்களிலும் அவர்களது நிலைமை அபிவிருத்தியடையவில்லை. ஆனால் எப்பொழுதும் கேவலமாகப் போய்க்கொண்டிருக்கிறது. 'பலாத்காரம் மட்டும் தாற்காலிகமாக உபயோகிக்கப்படும். அந்த சமயத்தில்தான் ஜனங்களைக் கீழ்படியச் செய்வது போலாகும். ஆனால் பலாத்காரம் மறுபடியும் கீழ்படியச் செய்யும் வேண்டிய அவசியத்தை நிவர்த்திசெய்து விடாது. சதா சர்வகாலமும் ஜயிக்கப்படவேண்டிய தேசத்தை ஆண்டுவந்ததாகச் சொல்ல முடியாது' என்று 150 வருஷங்களுக்குமுன் பர்க் என்பவர் சொல்லியிருக்கிறார். அப்படியே நாஜிகள் ஐரோப்பாவை ஆண்டு வருவதாக காணப்பட்டாலும் நடைமுறையில் பொழுதும் அவர்கள் அரசாங்க ஈடுபடவில்லை. அவர்களின் போலீஸ்காரன் வேலையாக இருக்கிற தவிர அரசியல் நிபுணன் வேலை இல்லை. மேலும் கௌரவமாக, உண்மையான போலீஸ்காரனைப்போலும் நீதிமன்றத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும், அமைதி ஏற்படுத்துவதற்காகவும் வேலை பார்த்துவரும் போலீஸ்காரனுடைய வேலையைப்போல் அவர்கள் வேலையில்லை. அவர்கள் வேலையோ கொள்ளைக்கூட்டத்தாரின் ஆட்சியைப்போல் இருக்கிறது. எப்பொழுதும் அவர்களைச் சுற்றியுள்ள ஜனங்களுக்கு அவர்கள் மேல் அதிகரித்துவரும் வெறுப்பானது, அவர்கள் இருப்பிடத்திற்குக் கீழ் பாறை, பாறை

யாக வெடிமருந்தை அடைத்து வைத்திருப்பதுபோல் இருக்கிறது. அதற்கு திரிவைக்கும் சமயத்தைத்தான் எதிர்பார்க்கப்படுகிறது.

### உள்நாட்டிலும் போலீஸ்காரர்கள்தான்.

வெளிநாட்டிலல்தான் அவர்கள் கதி இப்படியென்றால் உள்நாட்டிலும் இலைதக்காட்டிலும் அவர்களுக்கு நல்ல கதி இல்லை. ஆதியில் நாஸிகளின் கொடிய ஆட்சிக்குப் பலியானவர்கள் ஜெர்மானியர்கள் என்பதை இந்நாட்களில் நாம் மறக்கக்கூடாது. இப்பொழுது போலந்துகாரர்களுக்கும் செக்கர்களுக்கும் ஏற்பட்ட துன்பங்கள் ஏற்கனவே ஜெர்மானியர் இதைக் காட்டிலும் அதிகமாக அனுபவித்திருக்கிறார்கள். கைதிகளின் முகாம்கள் பூராவும் ஜெர்மானியர் நிரம்பியிருந்தார்கள். ஆயிரக்கணக்கான ஜெர்மானியர் திடீரென்று மறைந்தார்கள். அவர்களை எரித்த சாம்பல் அவர்கள் வீட்டு வாசல்களில் கொண்டு போடப்பட்டன. அவர்கள் பட்ட கஷ்டம் எங்கும் வியாபித்தது. அவர்கள் பெண்சாதி, பிள்ளைகளும், சகோதர சகோதரிகளும் ஜெர்மன் ரகசியப் போலீஸாருக்குப் பயந்து மௌனமாக ...ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் ...க் கொடிய செய்கைகளை மறந்து ...ல்லை. ஆஸ்திரேலியாவில் இந்த ...த்திலும் கூட ஒரு பெரிய ...ம் இருக்கிறது. வியன்னாவில் ...ம் கூட்டமாக ஜனங்கள் கைது ...ப்படுகின்றனர். ஜெர்மனியில் ...கப்பட்டவர்கள் இன்னும் ...வசப்படி கொஞ்சமாவது நடக் ...ய பேர்கள் இவர்களை ஜெர்மன் ...ய் போலீஸ் சுற்றி வளைத்துக் ...ளுகிறார்கள். பெரிய மனுஷர் .... சிறிய மனுஷர்களைப்போல் ...விடக்கூடும். பிரக்யாதி ...ற்ற தளகர்த்தர்கள் திடீரென்று ...சால்லவொட்டாத நோய்களால் ...டிக்கப்படுவார்கள். அதிகாரிகளும், ஜெர்மன் ரகசியப் போலீஸார் மோட்டார்களில் வருவதைப் பார்க்கலாம். பிற்பட்டு அவர்கள் இருப்பதைக் காண முடியாது.

### இன்றைக்கிருப்பார் நாளைக்கு மறைந்து விடுவார்

இந்த நீண்ட கத்திகள்கொண்ட கலகக்கூட்டம் தோன்றி எட்டு வருஷங்கள் ஆகின்றன. அதன் அக்கிரமங்கள் நடந்துகொண்டே வருகின்றன. அதற்கு வெடிகிற காலம் வரவில்லை. அநேக கொலைகள் செய்த இந்தக் கூட்டம் ஏராளமாகக் கொள்ளை பொருள்களை அடைந்திருக்கிறது. அநேக வருஷங்களாக இதே போயக்கொண்டேயிருக்கிறது. இப்பொழுது படு வேகமாகப்போகிறது. அதற்கு இதே பாதாளம்தான். இப்பேர்ப்பட்ட மனுஷர்களே 1,000 வருஷங்கள் நிலைநிற்கக்கூடிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போவதாக பெருமை பேசுகிறார்கள். அவர்கள் இப்படி கூக்குரல் போட்டுக்கொண்டிருந்த போதிலும் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாகியிருப்பதாக நடப்பில் ஒன்றும் தோன்றவில்லை. அவர்கள் சொல்லும் பைத்தியக்கார சாம்ராஜ்யம் 1,000 வாரங்களுக்குக் கூட இருக்குமென்றும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. எதிரிகளிடத்திலும் ஒருவருக்கொருவர் காட்டும் பித்தக் கொண்ட கொடுமையைப் பார்க்க, இன்றைக்கிருப்பது நாளைக்குப் போய் விடும் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் வீட்டை உடைத்துப் புகுந்து போலீஸ்காரர்கள் வருமுன் கொள்ளையடித்துப் போகிறவர்களைப்போல அரசியல் விஷயங்களில் புகுந்திருக்கிறார்கள்.

### கூட்டுக் கொள்ளைக்காரர்கள்.

அவர்கள் சிநேகிதர்களும் ஒருவகைப் பட்டவர்கள். அவர்கள் கூட்டுக் கொள்ளைக்காரர்கள்தான். அடுத்தபடி யாரைக் கொல்லலாம் என்று எதிர்பார்க்கிறவர்கள். அவர்களின் சிநேகிதின் தன்மை என்ன? அவர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் சிநேகம் முறிந்து விட்டது. நாஸி ஜாதியாரின் கோட்பாடுகள் எல்லாம் கேவலமானவை என்று ஜப்பானியர்களுக்குத் தோன்றுகிறது. இதாலியர்களும் அவர்களை வெறுக்கிறார்கள். இதே மாதிரியாக ஹங்கேரியர்கள், ருமேனியர்கள், பல்கேரியர்கள் இன்னும் பாக்கியுள்ள முக்கியமான நடுநிலை நாடுகளில் உள்ளவர்களுக்கு அவர்களில் அவநம்பிக்கையும், அருவெறுப்பும் உண்டாகி, அதிகரித்து வருகிறது. பரஸ்பர நம்பிக்கையும் இல்லை; பிரியமில்லை. ஹிம்லருக்காவது, கோயபல்ஸுக்காவது, ரிப்பன்ட்ராப்புக்காவது அந்த சபை அங்கத்தினர்களில் ஒரு சிநேகிதர்கூட இல்லை. அந்த நீண்ட கத்தியுள்ளவர்கள் செய்



திருக்கும் கொலைகளை நினைத்துப் பார்த்தால் எவ்வளவோ தலைவர்கள் பலியாகியிருப்பது தெரியவரும். இந்தக் கூட்டத்தார்களுக்கு எல்லா அதிகாரம் இருந்தபோதிலும் இமைப்பொழுது கூட அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. சில சமயங்களில் கடவுள் சைத்தானை ஏவிவிட்டு நாஸிக் கக்ஷியை உண்டாக்கச் செய்தார் என்றும், சில சமயம் அக்கக்ஷியை பிரகாசிக்கச் செய்தாரென்றும், சுயநலம் கொண்டிருக்கும் உலகத்தார்களுக்கு இது ஒரு மகத்தான எச்சரிக்கையாக இருக்கட்டுமென்று கடவுள் செய்திருக்கிறார் என்றும் நான் நினைக்கிறேன்.

### மாக்பெத் நாடகத்தின் கடைசி கட்டம்.

அதிகார விருப்பம் கொண்டவர்களுக்கு இதுதான் சம்பவிக்கும். இரக்கம் காட்டுவதைக் காட்டிலும் கொடுமைதான் நல்லதென்றும், உண்மை சொல்வதைக்காட்டிலும் பொய் சொல்வதுதான் மேலென்றும், எல்லா மனிதர்களும் கோழையான முட்டாள்கள், அல்லது அயோக்கியர்கள் என்றும் நிர்மாணித்தால் இவ்விதம்தான் சம்பவிக்கும். வஞ்சகத்திலும், துரோகத்திலும், கொடுமையிலும் உழலவேண்டிவரும். [illegible] பிசாசு கையில் அகப்பட்டுத் தவிக்க நேரிடும். இதெல்லாம் மாக்பெத் டிராமாவில் கடைசி பாகத்தில் கண்டிருக்கிறது. தன்னைத்தானே கொன்று கொள்ளும் அரசன் எல்லாப் பொருள்களையும் நல்லதற்கு அறிகுறிகள் இல்லையென்றும், எதைப்பார்த்தாலும் இருட்டாகவும் உண்மையில்லைபோல் கண்டதாக கோல்ரிட்ஜ் எடுத்துக்காட்டியிருக்கிறார். உயிர் இருந்தபோதிலும் அது நடைபிணம்தான். நடிக்கத் தெரியாதவன் நாடக மேடையில் இருமுறைக்கும் சென்று கோபம் அடைகிறான்; பிறகு தலைகாட்டாமல் போய்விடுகிறான். போவதற்கு வேறு இடமில்லை. இருக்கவும் முடியவில்லை. உயிர் வாழ்வதற்கும் பிடிக்கவில்லை. இம்மாதிரியான நிலைமையிலுள்ள உலகம் இப்பொழுதே அழிந்தால் நல்லது என்று பிரலாபித்துக் கத்துகிறான். அவனிடமும் நீண்ட கத்திகள்கொண்ட வீரர்கள் சேவித்தார்கள். எச்செலவிலும் அதிகாரம் பெற அவனும் விரும்பினான். ஆனால் இதெல்லாம் மனித வாழ்க்கையில் யாவருக்கும் தெரிந்த புராதனக் கதை. இப்பொழுது நடக்கும் நாடக மேடையோ மிகவும் விசாலமானது. யந்திரங்களும், ஆயுதங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஆகாயத்திலும் அதிக உயரம் பறக்கக்கூடிய விமானங்கள் சப்தமிட்டுச் செல்லுகின்றன. ஆகாய மார்க்கமாக ரேடியோச் செய்திகள் வருகின்றன. இவற்றைத் தவிர மற்ற பண்டை காலத்தில் எப்படி அநேக கொலைகள் செய்த மாக்பெத் கடைசிகாலத்தில் ரொம்பவும் அனுபவித்தானோ, அதாவது மாதிரி வாதிகளுடன் சேர்ந்து அதிகாரம் வகிப்பதற்கு இராக் காலங்களில் சதியாலோசனை செய்வது இருட்டில் கொலைகள் செய்வது, இவற்றையெல்லாம் செய்து முடித்து இறுதியில் அதிபாதாளத்தில் விழுந்தானோ அது போல்தான் ஹிட்லரின் கதியும் முடியும்.

---

## யுத்தம் ஆயுதங்களைப் பொறுத்திருக்கிறது.

(நார்மன் க்ரம்ப் என்பவரால்).

இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் சரியான ஆயுதங்களும், வெடி மருந்தும் சரியான காலத்தில், சரியான இடத்தில் இருப்பதுதான் வெற்றிக்கு முக்கிய காரணங்களில் ஒன்று. இப்படியில்லாமல்போனால் சென்ற மாதத்தில் லிபியாவில் சம்பவித்ததுபோல தாக்காலிகமாகத் தோல்விகள் ஏற்படலாம். அம்மாதிரித் தோல்விகள் அந்த சமயத்தில் பெரிதாகத் தோன்றினபோதிலும் சென்ற 2 வருஷ காலமாக லிபியாவில் நடந்த யுத்தத்தில் நமக்கு அடிக்கடி தெரிந்திருக்கிறபடி வெற்றியும், தோல்வியுமாகவேதான் இருக்கின்றன. இத்தகையத் தோல்விகள் நேசதேசத்தார்கள் உறுதிப்பாடு கொள்ளவேண்டிய அவசியத்தையும், பெரும்பாலான நோக்கம் கொள்ளவேண்டிய புத்திசாலித்தனத்தையும் காட்டுகின்றன.

இப்பொழுது கிரேட் பிரிடனில் அம்மாதிரி உறுதிப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு போதுமான அத்தாக்ஷி இருக்கிறது. ரோமல் எகிப்துக்குள் பிரவேசித்துக்

கொண்டிருக்கிறபொழுதே பிரிடிஷ் சுரங்க வேலைக்காரர்களின் சங்கம் கிரீன் கமிட்டி நிர்ணயித்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு, யுத்தத்தை நடத்தத் தேவையான நிலக்கரியை உற்பத்தி செய்யும்படி தேசத்தில் பூராவும் இருக்கும் பிரிடிஷ் நிலக்கரி சுரங்க வேலைக்காரர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஜூலை மீ 28உயில் வெடி மருந்து உற்பத்திச்சாலைகளிலிருக்கும் வாலிபர்களை எல்லாம் போர்ப்படைகளில் சேருவதற்கு அனுப்பும்படிக்கும், உற்பத்தியில் குறைவில்லாமல் செய்யவேண்டுமென்றும் எர்னெஸ்ட் பெவின் கட்டளையிட்டிருக்கிறார். வயதுமுதிர்ந்தவர்களைப் பொறுப்புவாய்ந்த வேலைகளுக்கு அமர்த்தியும் இன்னும் அநேக ஸ்திரீகளை ஒழிந்த சமயங்களில் வேலைக்கு அமர்த்தியும் உற்பத்தியில் குறைவுபடாமல் செய்யலாமென்பது அவருடைய நம்பிக்கை. அன்று தினமே எண்ணெய் மின்சார இலாகா புது மந்திரி மேஜர் லாயிட் ஜார்ஜ் என்பவர் தொழிற்சாலைகளையும், பொதுமக்களையும், நிலக்கரி, புகை, மின்சாரம் இவைகளை உபயோகிப்பதில் சிக்கனம் செய்யும்படியும் கேட்டுக்கொண்டிருக்கிறார். லிபியாவில் நடந்த சம்பவம் கிரேட் பிரிடனிலுள்ளவர்களுக்குக் கோபத்தை உண்டாக்கியிருக்கும். ஆனால் இத்தகைய கோபம்தான் மனவுறுதியையும், முழுப் பிரயத்தனத்தையும் உண்டாக்கும்.

## வாஷிங்டனில் விசேஷமான தீர்மானங்கள்.

வாஷிங்டனில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட், மிஸ்டர் சர்ச்சில், M. லிட்வினாவ், மிஸ்டர் T. V. ஸூங் இவர்கள் கூடி, முக்கியமான புதிய தீர்மானங்களை செய்து கொண்டார்கள். இந்தத் தீர்மானங்களின் தன்மை எப்படியென்பது காலடைவில் அச்சுநாடுகளுக்குத் தெரியும். ஆனால் அத்தீர்மானங்களெல்லாம் யுத்த தளவாடங்கள் செய்வதைக் குறித்தே இருக்கும். போர்ப்படையிலும், தொழிற்சாலையிலும் உள்ள மனிதபலம், ஆயுத உற்பத்தி, கப்பல்கள் கட்டுவது இவைகளைக் குறித்துத்தான் விவாதம் நடந்திருக்கும். இதே சமயத்தில் பிரிடிஷ் உற்பத்தி இலாகா மந்திரி ஆலிவர் லிட்லடன் என்பவர் யுனைடெட் ஸ்டேட்ஸ் உற்பத்தி இலாகாத் தலைவர் மிஸ்டர் டொனால்ட் நெல்ஸன் என்பவரைச் சந்திக்க நேரிட்டது பெரிய சாதகத்தைக் கொடுக்கும். தானும், மிஸ்டர் நெல்ஸனும் ஆகிய இரண்டே மெம்பர்கள் சேர்ந்து உற்பத்தியும், பொருளாதாரமும் இணைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கிரேட் பிரிடனுக்கு மிஸ்டர் லிட்லடன் திரும்பி வந்தவுடன் மந்திரி சபைக்குத் தெரியக்கொடுத்தார். ஐக்கிய நாடுகளுக்கு வேண்டிய யுத்தப் பொருள்களைத் தயாரிப்பதை இந்த இருவர்களும் கட்டளையிடவேண்டியது. இதனால் என்ன ஆகும்?

முதலாவதாக இது ஆமோதிக்கவோ, நிராகரிக்கவோ, காலதாமதம் செய்யவோ, புனராலோசனை செய்யவோ, அல்லது இரத்துவிடவோ கூடிய அலுவல்களைச் செய்யும் ஒரு பெரிய கமிட்டியல்ல. ஆனால் அதில் பரஸ்பர நம்பிக்கைகொண்ட இரண்டு பேர்கள்தானிருக்கிறார்கள். அபூர்வமான விளைபொருள்களையும், மற்ற இருப்புப் பொருள்களையும் அதிக பயன்தரக்கூடிய விதமாக உபயோகப்படுத்தக்கூடும். அந்த விளைபொருள்கள் எங்கிருந்து வருகின்றன என்பதையும் அவைகளை ஏற்றிச் செல்லுவதற்கு எவ்வளவு கப்பல் இடம் தேவையென்பதையும், அவைகளைத் தயாரிப்பதற்கு எவ்வளவு தொழிற்சாலைகள் தேவை என்பதையும் அவர்கள் நன்கு கவனிப்பார்கள். கிரேட்பிரிடனுக்கு அப்பொருள்களில் அதிகம் கிடைக்கிறதா, யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு அதிகம் கிடைக்கிறதா என்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படமாட்டார்கள்.

## உற்பத்தியை நிதானப்படுத்துவது.

இந்த இரண்டு நாடுகளிலும் அவர்களால் உற்பத்தியை நிதானப்படுத்தக் கூடும். பிரிடனில் தயாரிக்கப்பட்ட வெடிமருந்து அமெரிக்க பீரங்கிகளுக்குச் சேரக்கூடியதாகவும், முடிவில் இரண்டு சைனியங்களும் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளக்கூடிய ஆயுதங்களை வைத்துக்கொள்ளும்படிக்கும் அவர்கள் செய்வார்கள். சென்ற யுத்தத்தில் நேசதேசப்படைகளில் வேலைசெய்தவர்கள் யாவருக்கும் இதன் முக்கியம் தெரியும். ஆனால் இப்பொழுது இன்னும் 100 மடங்கு



அதிகம் முக்கியமாக இருக்கிறது. அவசியமானால் சில ஆயுதங்களைக் கிரேட் பிரிடனில் தயாரிப்பதையும், சிலவற்றை யுனைடெட் ஸ்டேட்ஸில் தயாரிப்பதையும் ஏற்பாடு செய்யலாம். இவ்வித ஏற்பாட்டில் மனித பலம், யந்திர சக்தி, விளைபொருள்கள், அவற்றை ஏற்றிச்செல்ல தேவையான கப்பல்கள் இவற்றை சிக்கனம் செய்துவிடலாம். இம்மாதிரியாக யுனைடெட் ஸ்டேட்ஸில் பாம்பர்கள் செய்யக்கூடும். ஏனென்றால் அவை அட்லாண்டிக் சமுத்திரத்தைத் தாண்டிப் பறக்கக்கூடும். கிரேட் பிரிடனில் பைடர்களைத் தயாரிக்கலாம். ஏனென்றால் போர்முனைக்கு அவற்றைக் கொண்டுசெல்லுவதற்கு கப்பல்கள் தயாராக இருக்கும். இருந்தபோதிலும் அமெரிக்க பாம்பர்களுக்கு தனிப்பட்ட உருப்புகளும், பாம்பர்களுக்கு தரையிலிருக்கவேண்டிய முஸ்திப்புகளும் கிரேட் பிரிடனில் செய்யக்கூடும்.

அமெரிக்க மந்திரி சபையில் டொனால்ட் நெல்ஸன் ஒரு திருப்திகரமான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அச்சுநாடுகளில் சேகரித்திருக்கும் யுத்தப் பொருள்கள் அளவுக்கு இப்பொழுது யுனைடெட் ஸ்டேட்ஸில் இல்லாமல் போனாலும் அச்சுநாடுகளைக்காட்டிலும் யுனைடெட் ஸ்டேட்ஸில் அதிகம் தயாரிப்பதாக அவர் சொன்னார். மேலும் "நாம் எவ்வளவு தயாரித்தபோதிலும் அது தற்போதுள்ள தேவைக்குப் போதாது" என்றும் சொன்னார். அவர் சொன்னதையும், மிஸ்டர் லிடில்டன் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் யுனைடெட் ஸ்டேட்ஸில் உற்பத்தியின் சக்திக்கு எல்லையே கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லியிருப்பதையும் சேர்த்துப் பார்க்கவேண்டும்.

இவற்றையெல்லாம் தொழில் முறையில் ஒன்றுசேர்த்துப் பார்த்தால் அச்சுநாடுகளுக்குக் காலம் நாள் கணக்கில்தான் இருக்கிறதென்று சொல்லிவிடலாம். கூடிய சீக்கிரத்தில் நேசநாடுகள் அவர்களுக்குத் தேவையான எல்லா ஆயுதங்களையும் தயாரித்துவிடுவார்கள். சமுத்திரத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு இருந்தபோதிலும் இந்த ஆயுதங்களை ஏற்றிச் செல்லவேண்டியதற்கான கப்பல்களையும் அவற்றை எங்கு தேவையோ அங்கு உபயோகிக்கத்தக்க மனிதர்களையும் சேகரித்துவிடுவார்கள். அச்சுநாடுகளின் முடிவு நாள் வருவதற்குள் அவைகள் என்ன செய்யக்கூடுமென்பதைப் பொருத்திருக்கிறது. இந்தக் குறுகிய காலத்திற்குள் அச்சுநாடுகள் சிறிதளவு வெற்றியை அடையலாம். இதனால்தான் ஹிட்லர் இப்பொழுது பெரிய பிரயத்தனத்தைச் செய்கிறான். அவன் பிரயத்தனத்தைச் சமாளித்துவரும் ஒவ்வொரு நாளிலும் அவனுடைய அழிவு சமீபித்துவருகிறது. அச்சுநாடுகளின் முடிவுநாள் வரும்பொழுது நேசநாடுகளின் உற்பத்தி, மனித பலம், கப்பல் போக்குவரத்து இவைகளெல்லாம் எதிரிகளை அழிக்கக்கூடிய ஒரு யந்திரமாகத் தயாரிக்கப்பட்டு, ஹாரி ஹாப்கின்ஸ் சொன்னபடி அச்சுநாடுகளின் யந்திரத்தை முறியடிக்கக்கூடியதாகவிருக்கும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

பிரஸங்கம் 106—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு ... | 1, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை | 6.45 |
| | 2, ஞாயிற்றுக்கிழமை, | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு ... | ,, | 6.30 |
| | 3, திங்கட்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 4, செவ்வாய்க்கிழமை, | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் ... | மாலை | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |

1942— மணி.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு மீ 5, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை ... | „ | 10.15 |
| | காலேஜ் தமிழ் (பிராஞ்ச ஸ்கூல்) | „ | 10.15 |
| | பொ. புதுப்பட்டி ... | மாலை | 6.00 |
| | வேந்தம்பட்டி ... | „ | 6.30 |
| 6, வியாழக்கிழமை ... | மலையூர் ... | „ | 6.00 |
| | காம்பக்குடி ... | „ | 6.30 |
| 7, வெள்ளிக்கிழமை ... | வாளரமாணிக்கம் ... | „ | 6.00 |
| | ஏம்பல் ... | „ | 6.30 |

பிரஸங்கம் 107—(4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 8, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 9, ஞாயிற்றுக்கிழமை. | கீரனூர் ... | „ | 6.00 |
| | காஞ்சூர் ... | „ | 6.30 |
| 10, திங்கட்கிழமை ... | காரையூர் ... | „ | 6.00 |
| | இடையாத்தூர் ... | „ | 6.30 |
| 11, செவ்வாய்க்கிழமை | அண்டக்குளம் ... | „ | 6.00 |
| | கிள்ளனூர் ... | „ | 6.30 |
| 12, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை ... | „ | 10.15 |
| | காலேஜ் தமிழ் பிராஞ்ச ஸ்கூல். | „ | 10.15 |
| | நார்த்தாமலை ... | மாலை | 6.00 |
| | உப்பிலியக்குடி ... | „ | 6.30 |
| 14, வெள்ளிக்கிழமை ... | கொன்னையூர் ... | „ | 6.00 |
| | மேலவேகுபட்டி ... | „ | 6.30 |

---

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | |
|---|---|---|
| சனிக்கிழமை ... | 1— 8—42 ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை ... | 2— 8—42 ... | மருதன்கோன்விடுதி. |
| திங்கட்கிழமை ... | 3— 8—42 ... | விராலிமலை. |
| செவ்வாய்க்கிழமை ... | 4— 8—42 ... | வடகாடு. |
| வியாழக்கிழமை ... | 6— 8—42 ... | கீழாநிலை. |
| வெள்ளிக்கிழமை ... | 7— 8—42 ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை ... | 8— 8—42 ... | வெட்டன்விடுதி. |
| ஞாயிற்றுக்கிழமை ... | 9— 8—42 ... | விராச்சிலை. |
| திங்கட்கிழமை ... | 10— 8—42 ... | கொன்னையூர். |
| செவ்வாய்க்கிழமை ... | 11— 8—42 ... | பேரம்பூர். |
| புதன்கிழமை ... | 12— 8—42 ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வெள்ளிக்கிழமை ... | 14— 8—42 ... | புதுக்கோட்டை. |

69407
JL
V2:1194:19(3m)...N34
N42

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—1-8-42.